ஓம் குஹப்ரஹ்மணே நம:

ஓம் குமரகுரு தாச குருப்யோ நம:

# திருப்பா

## இரண்டாம் புத்தகம்

5-ஆம் பத்து முதல் 110-ஆம் பத்தீறாகவுள்ள
திருப்பாட்டுக்களும் குறிப்புரை முதலியனவும்


பாம்பன்

**ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்**

அருளிச்செய்தது


**சற்குரு மானச செளரப மாருதம் எனும் உரையுடன் :**


உரையாசிரியர்

பேராசிரியர், **டாக்டர் S.P. சபாரத்தினம்**

இயக்குநர், இந்திய பண்பாட்டு ஆய்வு நிறுவனம், சென்னை.



**மகாதேஜா மண்டல வெளியீடு**

திருவான்மியூர், சென்னை - 600 041.

**2024**

# நூற்சிறப்பு

## நேரிசை வெண்பா

எழுத்திறைபோ லக்கலந்தெல் லாமியக்கா நிற்கு
முழுத்தலைவன் மார்க்க முழுதும் – வழுத்திக்
கருப்பா சயவல்ல கண்டக்கைப் போட்டுந்
திருப்பா வெனுமதுரத் தேன்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற் பதிப்பு | ... | 1899 | ... | 500 | பிரதிகள் |
| இரண்டாம் பதிப்பு | ... | 1920 | ... | 150 | பிரதிகள் |
| மூன்றாம் பதிப்பு | ... | 1974 | ... | 500 | பிரதிகள் |
| நான்காம் பதிப்பு | ... | 2000 | ... | 1000 | பிரதிகள் |
| ஐந்தாம் பதிப்பு | ... | 2018 | ... | 200 | பிரதிகள் |
| ஆறாம் பதிப்பு | - | 2024 | ... | 300 | பிரதிகள் |

**விலை : ரூ.300/-**

அச்சிட்டோர் : அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்,
9, அய்யா தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014
போன் : 98840 76145 / 98840 76148 E-mail : deepblues05@gmail.com

குருவருள்

# திருப்பா

## நூற்சிறப்பு முன்னுரை

மயவிஞ்ஞான கலாநிதி
**பேராசிரியர். Dr. S.P. சபாரத்தினம்**
இயக்குநர். இந்தியப்பண்பாட்டு ஆய்வுநிறுவனம். சென்னை.

உயர்ச்சியும் தனிச்சிறப்பும் வாய்ந்த ஆன்மிக விஞ்ஞானம் திருஞானசம்பந்தப் பெருமானால் 'திருநெறி' எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெறி எனப்படும் ஓர் உயர்தனிச் செந்நெறி, ஆகம சித்தாந்த நெறியே. ஆகம சித்தாந்தம் என்பதும் சைவசித்தாந்தம் என்பதும் ஒன்றேதான் எனினும் 'சைவசித்தாந்தம்' இன்றைய காலகட்டத்தில் பல பேத உணர்வுகளுக்கு இடம் கொடுத்துத் திசைமாறிச் சென்றுவிட்ட காரணத்தால், விஞ்ஞானக் கொள்கை சிதைவுறாமல் பொலிவும் மலர்ச்சியும் பொருந்தப் பெற்றதாக உள்ள தனித்தமிழ்மரபை நான் ஆகம சித்தாந்தம் என்ற பெயராலேயே குறிப்பிட விரும்புகிறேன். ஆகமசித்தாந்த நுட்பங்கள் அனைத்தையும் சித்தாந்த சாத்திரங்கள் முழுமையாக வெளிப் படுத்துகின்றன என்று கூறுவதற்கில்லை. இக்குறையை பூரணமாக நிவர்த்தி செய்த சிவபுண்ணியப் பெருமையும் சீர்த்தியும் சற்குரு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளையே சேரும். சுவாமிகள் அருளியுள்ள பரிபூரணானந்த போதம், தகராலயரகசியம், திருப்பா என்னும் மூன்று திருமுறைகளும் இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கும் சைவ உலகிற்கும் கிடைத்துள்ள மிகப்பெரிய வைரக் கிரீடங்கள் ஆகும். இம்மூன்றனுள் திருப்பா என்பது தன்னிகரில்லாத் தகவும் தரமும் வாய்க்கப் பெற்றது. ஒரு முழுமையான, மாசு கலவாத, சிவசுக மயமான ஆன்மிக வாழ்க்கைநிலையை அனுபவிக்க விரும்புவோர் வேறொன்றையும் பயிலாது திருப்பா என்னும் நூல் ஒன்றைமட்டும் பயின்று உணர்ந்து பக்குவமும் அனுபவமும் பெற்றாலே போதுமானது. இவ்வாறு கூறும்போது சுவாமிகளின் மற்றைய நூல்களைப் பயில வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறுவதாகக் கொள்ளக் கூடாது. திருப்பா எனும் நூல் ஒன்றை உணர்வதையே குறிக்கோளாகக் கொண்டு, சுவாமிகளின் ஏனைய நூல்களைப்பயின்று அதற்கேற்ற தகுதியும் மன வளமும் வாய்க்கப் பெற்றவராக நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

சிவபெருமானுக்குரிய ஆகமவடிவம், சைவாகம நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. காமிகம் முதலான இருபத்தெட்டு ஆகமங்களுள் எந்த எந்த ஆகமம்,சிவவடிவத்தில் எந்த எந்த அங்கமாக அமைந்துள்ளது என்பதை விளக்கமாக உணர்ந்து கொண்டு, ஆகமத்திருமேனி தாங்கிய சிவபரம்பொருளை வழிபடுதல் சிவவழிபாட்டின் இன்றியமையாத அங்கமாகும். இத்தகைய ஆகமத்திருமேனியில், மகுடம்

என்னும் ஆகமம் மணிமகுடமாக விளங்குகிறது எனப் பல ஆகமங்களும் கூறுகின்றன. சற்குரு பாம்பன் சுவாமிகளுக்குரிய திருமேனியையும் இவ்வாறு ஆறுமண்டலத் திருமுறைகளின் சொரூபமாக நாம் தியானிப்போமானால், அத்திருமேனிக்குரிய மணிமகுடமாகத் திருப்பா என்னும் செழுந்தமிழ்மறை சிறப்புறப் பொலிகின்றது என அனுபவபூர்வமாக உரைக்கலாம்.

இத்திருநூல்கள் சுவாமிகளால் அருளப்பட்டு, நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆகியும், தமிழ்மக்கள் குறிப்பாகத் தமிழ் அறிஞர்கள் இவற்றை உணர வேண்டிய அளவுக்கு உணர்ந்துள்ளனரா எனும் கேள்வி எழுமாயின், இல்லை என்றுதான் பதிலுரைக்க வேண்டிவருகின்றது. தனித்தமிழ் பற்றி வறட்டுக்கூச்சல் போடுவோர், இவற்றைத் தொட்டேனும் பார்த்திருப்பார்களா? சுவாமிகளின் நூல்களில் வாய்மைத்தமிழின் வளப்பசும் தென்றல் எந்த அளவுக்கு மணம் வீசி அலைபாய்கிறது என்பதை உணர ஓரளவேனும் முயன்றிருப்பார்களா?

ஆய்தல் என்பது வேறு, உணர்தல் என்பது வேறு. Analytical and research-oriented reading of a text is different from the actual and intuitional realisation of the message of that text. திருக்குறள், ஆராயப்பட்டுள்ள அளவுக்கு நன்கு உணரப்படவில்லை எனக் கூறலாம். ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமுன் வடமொழி-தென்மொழி இரண்டின் எல்லைகளையும் உணர்ந்திருந்த என் தீக்ஷா குருநாதர்,

"*மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்*
*உற்றார்க் குடம்பு மிகை*"

என்னும் திருக்குறளைப் பத்து விதங்களில் பிரித்துக்காட்டி தத்துவரூபம் முதல் சிவபோகம் வரை எண்ணப்படும் தசகாரியங்களை இந்தக் குறள் எவ்வாறு பிரதிபலித்துக் காட்டுகிறது என்பதை விளக்கினார். அந்த விளக்கவுரை, பரிமேலழகர் உரை முதலான வேறு எந்த உரைகளிலும் காணப்படாத ஒன்று. என் ஆசிரியர் பிரான் எடுத்துரைத்த அத்தனை விளக்கங்களும் இன்னும் என் உள்ளத்தின் ஆழ்தளத்தில் பதிந்துள்ளன. அவர் கூறிய உரை உணர்வுரை; ஆய்வுரை அன்று. ஆய்தலைக் காட்டிலும் உணர்தல் முக்கியம். சிவஞானபோதம் மொழிபெயர்ப்பா, மூலமா என ஆய்வதைக் காட்டிலும் சிவஞானபோதம் என்ன கூறுகிறது என்பதை உணர்தலே முக்கியம். இக்கருத்து சுவாமிகளின் நூல்களுக்கு மிகமிக நன்றாகப் பொருந்தும்.

இலக்கியச் செறிவு, தத்துவச் செறிவு, இறையருட் செறிவு முதலான அனைத்துவிதமான செறிவுகளும் நிரம்பப் பெற்றுள்ள சுவாமிகளின் திருநூல்கள், உணரவேண்டிய முறைப்படி அடியார் பெருமக்களால் உணரப்படவேண்டும். முழுமை முருகு அல்லது முருக முழுமை என்பதைச் சுவாமிகளின் அருள்வாசகங்கள் வாயிலாக நமக்குச் சொந்தப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு சொந்தப் படுத்திக் கொள்வதுதான் உண்மையிலேயே யோகம் அல்லது தவம் எனக் கூறவேண்டும். சொந்தப் படுத்திக் கொள்வதற்கு, குறுகிய மனப்பான்மையையும் பேத உணர்வுகளையும் களைந்தெறிந்துவிட்ட எல்லோர்க்கும் உரிமை உண்டு.

சுவாமிகள் அருளியுள்ள திருப்பா, சுவாமிகளின் ஆறுமண்டலம் எனப் பெயரிய நூல்மண்டலத்துள் ஐந்தாவது மண்டலமாகத் திகழ்வது. கடவுள் வணக்கப் பாடல்கள் மூன்று, 110 திருப்பதிகங்கள். கடவுள் வணக்கப் பாடல்களுக்கும் முதல் நான்கு திருப்பதிகங்களுக்கும் சுவாமிகளே வரைந்துள்ள வேதாகம சாரமயமான விரிவான விளக்க உரை, 109 ஆம் பதிகத்தின் ஏழாவது பாடலுக்குரிய விளக்கக்கட்டுரை, 108ஆம் பதிகத்தின் மூன்றாவது, நான்காவது பாடல்களுக்கு வரைந்துள்ள பெருமிறைக் கவியுரை, அரிதின் உணர்ந்து ஞானபோனகம் பெறக்கூடிய வகையில் சுவாமிகளே வரைந்துள்ள அரிய பெரிய குறிப்புரைகள், தனியே ஒருநூலாக அச்சிட்டு வெளியிடும் அளவுக்குத் தகவும் தரமும் செறிந்த சுவாமிகளின் நூன்முகம் - இவை அனைத்தையும் கொண்டு,

*"ஐவேறு உருவின் செய்வினை முற்றிய*
*முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி*
*மின்னுறழ் இமைப்பிற் சென்னிப்பொற்ப"*

என நக்கீரனார் காட்டும் அறுமுகப் பரமனின் திருமுடி போன்று தனிப்பெரும் நிலையில் தணியாப் பேரொளி கொண்டு விளங்குவது திருப்பா.

தாம் அருளிய நூன்முகத்தில் திருப்பா என்பது பற்றிச் சுவாமிகளே கூறும் விளக்கம் நன்கு உணரத்தக்கது.

"திருப்பா என்பது மேம்பட்ட பாக்களினால் ஆகிய நூலைக்குறித்தலால் அடையடுத்த கருவியாகுபெயராம்; 'பா' என்னும் முதற்கருவியின் பெயர் அதன் காரியமாகிய நூலிற்காதலின், அன்மொழித் தொகையாகக் கொண்டு மேம்பட்ட பாக்களை உடைய நூலென நுவலினுமாம். திருப்பா = மேன்மையாகிய பாட்டு எனிற் பண்புத்தொகையும் மேன்மையுடைய பாட்டு எனின் இரண்டனுருபும் பயனும் தொக்க தொகையுமாம். திரு+பா எனப்பிரிக்க, திரு=மேம்பாடு என்னும் பொருளைப்பயக்குமோ ரடைமொழி. அந்த மேம்பாடு அழகுடன் ஆக்கப்பட்டு முழுமுதற்கடவுள் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் சுடரும் தன்னை, ஓதுவார் உணர்தற்பொருட்டு, எல்லா எழுத்துக்களிலும் விராய்நிற்கும் அகரம்போல எப்பொருளிலும் கலந்துநின்று யாவையும் இயக்காநின்ற அக்கடவுள் என்னும் வத்து நிச்சயம் இவ்வாறு கோடற்பாலதன்றாம்; இவ்வாறு கோடற் பாலதாம்; ஆமதனை அடைதற்குரிய பூர்த்திமார்க்கமும் இன்னதாம் எனப்புகழ்ந்து தான் கூறுமதரானே, கருப்பப்பையுள்படும் கையாறு என்னும் கைப்பினைப் பாறச்செய் பேரின்பம் என்னும் தேறலை அளித்திடலாம்."

சுவாமிகள் இங்கே குறிப்பிடும் 'மேன்மை' என்பது, தத்துவமயமாகவும் தத்துவ எல்லையைக் கடந்தும் சர்வவியாபகப் பொருளாக விளங்கும் சண்முகத் திருவருள் விலாஸம்.

சுவாமிகள் இத்திருநூலை இயற்றும்போது எத்தகைய மனோ பாவனையோடு விளங்கி இருக்கக் கூடும் என்பதை ஓரளவு நன்கு உணரமுடிகிறது. வேதங்களின் முடிபான பொருள் இதுதான் என்பதை விளக்கிக் காட்டி வேதநெறியைச் செம்மைப்படுத்திய

**தென்னாட்டு முனிபுங்கவர்களால் இயற்றப்பட்ட 108 உபநிடதங்களின்** கருத்துக்களைப்பற்றிய தெளிவான சிந்தனை; ஸ்காந்தபுராணம் முதலான பெரிய புராணங்களில் இடம்பெற்றுள்ள ஞானமண மயமான அருள்நிகழ்ச்சிகள், கோட்பாடுகள் ஆகியவற்றைப்பற்றிய சிந்தனை; தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலானவற்றில் காணப்படும் கட்டுக் கோப்பான தமிழ் அமைப்பு முறை பற்றிய சிந்தனை; பன்னிரு திருமுறைகள், சித்தாந்த நூல்கள் முதலானவை வெளிப்படுத்தும் ஆன்ம விஞ்ஞானக் கோட்பாடுகளைப் பற்றிய சிந்தனை; என மெய்ஞ்ஞான சிந்தனாயோக மகாபாவனையில் தம்மை இருத்திக் கொண்டு சுவாமிகள் இந்நூலை இயற்றியருளியுள்ளார்கள்.

"புவனமீது பன்மரபினார்" எனும் 77 ஆம் பதிகத்தைப் பாடும் போதும்,

*"வண்மை இருக்கின் ஐதரேய மகாவாக்கியமம் பரப்பிரமம்*
*ஒண்மை ஞான சொருபமென்றே உணர்த்த அதற்கோர் முரணாக*
*வெண்மை எனுமஞ் ஞத்துவமும் மேவும் அதுவென் பதை மறுத்தவ்*
*வுண்மை யுடையெம் பெருமாற்கன் புறுவார் சரண்எம் சிரமேலே*
(49 ஆம் பதிகம். 1)

என்பது முதலான பாடல்களைப் பாடும் போதும் சுவாமிகள் வேத - உபநிடதங்களின் சாரம் பற்றிய சிந்தனையில் இருந்திருக்கிறார்கள்.

*'ஆரணத்தில் ஆகமத்தில் ஏனையருள் முறைகளிலோர்*
*அருவுருவு நாமநடு அந்தமாதி*
*நீரணவும் குறிநிறமொன் றில்லறிவு மயமாக*
*நிறைககன மேபிரமம் என்றல் போலச்*
*சீர்அவிரு மைப்படிந்த கண்ணாள் என் றெழுந்தவொரு*
*செய்யுள்; திரு மாலுமெனும் தூக்கிவற்றால்*
*பூரணஞ்சொல் கடவுளியா ததுநீயென் றிறைஞ்செனது*
*புகர்துமிக்க நினைதியொரு கருணைத் தேவே*

- என்னும் பாடலைப்பாடும் பொழுது சுவாமிகள் ஆரணம், ஆகமம் என்னும் இவற்றோடு திருமுறைகளைப்பற்றிய ஆழ்ந்த பாவனையிலும் இருந்துள்ளார். "மைப்படிந்த கண்ணாளும் எனத் தொடங்கும் தேவாரப்பாடலும் "திருமாலும்" எனத்தொடங்கும் திருவாசகப்பாடலும் சுவாமிகள் உள்ளத்தே தோன்றி பிரம்ம விளக்கம் தருவதை இங்கே காணலாம்.

*"சீரிய திருவிற் கோலவம் பதிகத் தேயிரு மூன்றினும் ஒற்றி*
*ஊரினப் பதிகம் பத்தினும் பொழிலோர் ஓங்குகோ கரணவாறினுமா*
*ஆரியன் ஞானப் பாலறா வாயன் ஆகமச் சிறப்பெடுத் ததிர்த்த*
*காரியம் தேரா துளறுநர்க் கியாது கழறுவேன் என்குரு மணியே"*

*"திருவிடை மருதூர்ப் பதிகநான் கதிலே தேசிக நாவர சுகளும்*
*மருவடர் கானப் பேர்திரு வாரூர் மண்டளி கயிலைகட்குரிய*
*துரிசறு பதிகம் எட்டொரா றெட்டிற் சுந்தர ரும்பதிநூலைப்*
*பொருளுற விதந்து சொனதறி யார்க்கென் புகலுவேன் என்குருமணியே''*

- குருமணி : 3,4

- இவ்வாறு சுவாமிகள் திருமுறைப் பொருள்மயமாகத் தம்மை இருத்திக்கொண்டு சைவ ஆகமங்களைப் பற்றி எந்த எந்தத் தேவாரப்பாடல்கள் கூறுகின்றன என்பதைப் பற்றிய கணிப்பினைக் காட்டுகின்றார்கள்.

திருப்பான்னும் ஒப்பிலாத் திருமுறையுள் 93 முதல் 110 வரை உள்ள 18 பதிகங்களும் பதினெட்டு சிவாகமங்களுக்கு நிகர் எனக் கூறலாம். சைவாகம யோகபாத ஞானபாதப் பொருள்மயமாகத் தம் சிந்தனையை நிறுத்திக் கொண்டு சுவாமிகள் இத்திருப்பதிகங்களை அருளியுள்ளார்கள். இந்தப்பதிகங்களின் பொருளை ஐயமற உணர்பவர்களே சைவசித்தாந்தம் பற்றிப் பேசத் தகுதி உடையோராவர். இந்தப் பதிகங்களை முறைப்படி வெளியிடுபவர்களே தமிழ்வளர்ச்சிக்கு உண்மையானதும் உரியதுமான தொண்டாற்றியவர்களாவர்.

மேலும் திருப்பா நூலின் சீர்த்தியுணர விழைவோர் அமைதிகாத்து, மனத்தையும் தேகத்தையும் தூய்மைப்படுத்திக்கொண்டு நூல் முழுவதையும் கருத்தூன்றிப் பயில்வாராக.

பதிநூல் எனப்படும் சைவாகமங்களின் யோக-ஞானப் பிழிவாக இத் திருநூல் விளங்குவதால் இது சைவாகமங்களைப் போன்றே பூஜிப்பதற்குத் தகுதிபெரிதும் உடையதாகிறது.

*"சிறந்த மேற்கோள் முதலிய நயப்போடும்கூடிய இந்நூலினைப்*
*படித்தலினால் முன்மொழிந்தவாறு உண்மை உணரப்பெறீஇ*
*உ ய்திபெறலாம். பாடல்களைப் பத்திமையிற் பாராயணம்*
*செய்தலினால் சண்முக சிவகிருபை சாரப் பெறலாம்.*
*காலிரண்டும் கையிரண்டும் கழீஇ ஆசமனமும் செய்தல் என்னும்*
*பஞ்சசுத்தி செய்துகொண்ட பின்னர்ப் பீடத்தில் இரீஇ*
*அலர்சார்த்திப் பூசித்தலினால் அவனைப்பூசித்த படி யாம்''*

எனச் சுவாமிகள் நூன்முகத்தில் கூறியுள்ளமை, அடியார் அனைவராலும் சிரத்தையுடனும் பக்தியுடனும் கடைப்பிடிக்கத் தக்கது. இவ்வாறு கடைப்பிடிப்பார்.

*"அனித்த மான ஊனாளும் இருப்பதாக வேநாசி*
*அடைத்து வாயு ஓடாத வகைசாதித்*

*தவத்தி லேகு வால்மூலி புசித்து வாடும் ஆயாச*
*அசட்டு யோகி யாகாமல் மலமாயை*

*செனித்த காரி யோபாதி யொழித்து ஞான ஆசார*
*சிரத்தை யாகி யான்வேறென் உடல் வேறு*

*செகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சி யாம னோதீத*
*சிவச்சொரூப மாயோகி என ஆள்வாய்"*

என, அருணகிரிப்பெருமான் விழைவுக்கு உகந்த வண்ணம் உத்தம சிவஞான யோகியாக வாழும் மாபெரும் பேற்றைப்பெறுவர்.

பதிநூற்கு நிகரான முதுநூல் இதற்கு, ஐந்தாம் திருப்பத்து முதல் உள்ள அனைத்துப் பதிகங்களுக்கும் உரிய கருத்துரையை எழுதும் அரும்பெரும் பேறு அடியேற்கு வாய்த்தமை, வற்றாக் கருணைவள்ளலான வடிவேற் பரமனின் திருவருள் விளைவேயாம். பரமனின் திருவருள் அடியார்கள் வழியன்றோ கிடைக்கும்! வணக்கத்திற்குரிய திரு. N. ஜெயராமன் அவர்களின் அன்புக் கட்டளையாக, அறுமுக வள்ளலின் கருணையானது வடிவம் கொண்டு வாய்த்தது. இவருக்கும் திரு. வி. திருஞானம் சகோதரர்கள், திரு. ப. வேணு கோபாலன், திரு. V. சத்குரு, திரு. த. ராஜரத்தினம், திரு. A. கதிர்வேலு, திரு. G.ஜானகிராமன் முதலான, அன்பர்களுக்கும் நன்றிப்பெருக்கும் அன்புப் பெருக்கும் விரவிப்பொங்கும் என் உள்ளத்துணர்வுகளைக் காணிக்கை ஆக்குகிறேன்.

மதுரை - திருப்பரங்கிரி ஸ்ரீமத்பாம்பன் சுவாமிகள் திருக்கோவிலை நிர்வகித்து வரும் ஸ்ரீலஸ்ரீ இராமச்சந்திர சுவாமிகள் இந்த ஞானநூல் வெளியீட்டில் பெரும்பங்கு கொண்டுள்ளார்கள். அவர்களுக்குக் குருவருளும் திருவருளும் சித்திக்குமாறு இறைஞ்சுகின்றேன்.

பல சைவாகமங்களை சமஸ்கிருத மொழியிலிருந்து ஆங்கில மொழியில் பெயர்த்துள்ள அடியேற்கு, சுவாமிகளின் இத்திருநூலுக்கு உரை வரைதல் என்பது துணிச்சலான செயலாகவே தோன்றியது. ஒரு நியாயமான அச்ச உணர்வுடன்தான் உரை எழுதும் பணியில் என்னை ஈடு படுத்திக்கொண்டேன். சுவாமிகளின் திருவுள்ளப் பாங்கு அறிந்து, சத்தியம் பிறழாது உரை எழுதுதல் எளிதான செயலன்று. இந்த அச்சத்தை நிவர்த்தித்துக்கொள்ள, நான் ஒவ்வொரு முறையும் உரை எழுதத் தொடங்கும் முன்னர், இந்நூலின் " 'தெய்வம்' எனும் திருப்பத்தையும் நான்காம் திருப்பத்தின் இறுதியில் சுவாமிகள், சந்தப்பிரவாகமாகத் தமிழில் அருளியுள்ள அதி உன்னதமான உரைச்செய்யுளையும் ஒரு முறை ஆழ்ந்து பயின்று, உரை எழுதக் கூடிய மனப்பாங்கையும், ஞான பலத்தையும் பெற்றுக் கொள்வது வழக்கமாகியது. சுவாமிகள் அருளியுள்ள முருகமுதன்மையாகிய பெருமணம் கமழும் முத்துத்தமிழ் வாசகக் கோவையை அன்பர்களும் நாடோறும் ஒதிப்பயன்பெறுவார்களாக:

'பூவெலாம் போற்றொரு பொருளாய், பொதுவெலாம் இலங்கொரு தெருளாய் தேவெலாம் ஏத்தொரு தேவாய் **சிவம்எனும் பெரும்பெயர் இயவுளாய்** தாவெலாம் தபுத்தருள் இறையாய், தனிச்சுகம் இசைத்தருள் விபுவாய், இதரமே யாதும் இலதாய், யாதினும் உடங்கியைந்துளதாய் விதரணப் புத்தேள் புணரியாய், விகிருத வினைக்கட்டிலாததாய்,

உதரமுற்றுதியா நலத்ததாய், ஒளிவெளி என்ன இருப்பதாய், மோனமாடுடையர்காண் திருவாய் மோகமால் உடையர்காண்பரிதாய், வானநாடுடையார் மாண்பிற்றாய், மனதுரைக் கடங்கா மகிமைத்தாய், ஞானமே தனாது வடிவிற்றாய், நடுவெளிக் குகையில் அவிர்முத்தாய், நாகுமூப் பணவா வாழ்விற்றாய், நசையுநர்ப் புரந்தருள் உண்மைத்தாய், பாகினும் இனிதாய் உளதாய், பரசெம தாசையின் அமுதாய், யோகிகள் குரங்கவுட் படுவதாய், யுகளமன் றொன்றெனப் படுவதாய் ஆமயம் இல்லோர் அணங்காய், அறிவினுக் காரோர் அறிவாய், ஓமெனும் ஒருசொற் பொருளாய்,உயிரினுக் காரோர் உயிராய், பாமரம் செகுக்கும் பரமாய், பவக்கடல் கடத்தும் கலமாய், நனவினர் அறியா நிலையிற்றாய், நாதநாதாந்தத் தகைமைத்தாய், கனவினர் காணாக் கரையிற்றாய், கருள்நிலைக் கெட்டாக் கதழ்விற்றாய், சினவு நீரே இல்லதாய், சிவாக்கிரம் எனவே உள்ளதாய் அன்பருக் கருளும் அன்பிற்றாய், அளப்பில் இயற்கை நிறைவிற்றாய், தன்பணை அறியாத் தனியாய், சகச சித்தாந்தக் கனியாய், இன்பருள் இயற்கை இன்பாய், எமைக்கொள் விழுப்ப அன்பாய் அன்னையாய் அணைத்தருள் செயற்கைத்தாய், அளிவலைப் படுமோர் இயற்கைத்தாய் கன்னலின் இனிக்கும் மாகண்டாய், கருத்தினைக் கவரு மாநன்காய் யாதினுமேயொரு வன்மைத்தாய், யாதினுமேயொரு பெருமைத்தாய் யாதினு மேயொரு நுண்மைத்தாய் என்றுமோர் படித்தெனப் படுவதாய், இரண்டினு மேம்பட்டிடுவதாய் மன்றிடை இயங்கி இயக்குவதாய் வரதசாகரமா யிருப்பதுமாய் நன்றினும் நலம்சால் ஒன்றாய், நகுமொளிப் பிழம்பா நன்றாய், மாதவர் மாமகத்துவமாய் மறைமுடி வோதுதத்துவமாய் ஆதரவாம் பரப் பிரமமாய் ஆபத்திற்குதவோம் பிரமமாய் தீதெலாம் சீத்தருள் முதலாய் திருப்புகழ்தெரித்தான் தெய்வமாய் வயங்கும் அவ்வொருதிரு முருகனாகிய செவ்வேள்பரமன் திருவருள் துணைகொண்டு ஒல்லுமாறு கடைப்பிடித்துய்க."

சைவாகமங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் மாபெரும் பணியில், மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்களின் ஆதரவால் என்னை ஈடுபடுத்திக்கொண்ட பிறகு, ஆகமங்களை விரிவாகவும் ஆழ்ந்தும் பயிலும் அரிய பேறு செவ்வனே வாய்த்தது. சில படலங்களை மொழிபெயர்க்கும் போது, "இந்த அரியபெரிய உண்மைகளைத் தமிழ்நாட்டுத் "தத்துவவித்தகர்கள்' எப்பொழுது உணர்ந்துகொள்ளப் போகின்றார்கள்' எனக் கவல்வதுண்டு. இதுகாறும் தமிழில் வெளிப்படுத்தப்படாத சித்தாந்தக் கோட்பாடுகள் ஆயிரக் கணக்கில் ஆகமங்களில் இடம்கொண்டு மிளிர்கின்றன. அந்தக் கோட்பாடுகளைப் பற்றிய தெளிவான சிந்தனை அடியேற்கு வாய்த்திருக்காவிட்டால், திருப்பா நூலின் பலபாடல்களுக்குரிய உண்மைப்பொருள் எனக்கு நன்கு விளங்கிஇருக்காது. ஆகமங்களைப் பற்றிய முழுமையான பயிற்சி வாய்த்துள்ள நிலையில் திருப்பா நூலுக்குக் கருத்துரை எழுதும் வாய்ப்பு கிடைத்துள்ளமை உண்மையிலேயே சுவாமிகளின் திருக்கருணை என்றே கருதுகிறேன்.

உரைக்குப் பொருத்தமான திருப்பெயரிட்டு வழங்குதல் சுவாமிகள் மேற்கொண்ட நெறி. இந்நெறி விலகாமல், திருப்பா எனும் திவ்விய ஆகமத் திருமுறைக்கு வரையப்பட்டுள்ள தெளிவுரைக்குப் பொருத்தமான பெயரொன்று வழங்க வேண்டும் என எண்ணிய போது மந்திரத் தொடர்போல் ஒரு வாக்கியம் இயல்பாக முகிழ்த்தது. "சற்குரு மானச சௌரப மாருதம்" என்ற தொடர் உள்ளத்தே பூத்தது. சற்குரு = பாம்பன் சுவாமிகள்;

மானசம் - திரு உள்ளத் தொடர்பானது; சௌரபம் = நறுமணம்; மாருதம் - தென்றல். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் திருவுள்ளப் பொலிவை, உள்ளது உள்ளவாறு காட்டி நறுமணம் மிகுந்த தென்றல் போன்று நம் உள்ளத்தில் வீசுவது என்பது இத்தொடரின் பொருள். சுருக்கமாகக் கூறவேண்டின் குருமானச சௌரபம் எனக் கூறலாம்.

திருப்பா முழுவதையும் பாராயணம் செய்தால், நம் சுவாமிகளின் திருவுள்ளமாக சுப்பிரமணியப் பிரமம் விளங்குகிறதா அல்லது சுப்பிரமணியப் பிரமமாக சுவாமிகளின் திருவுள்ளம் பொலிகின்றதா எனும் வியப்புணர்வு தோன்றும். சுவாமிகளின் திருவுள்ளம் எனும் செவ்விய ஆலயத்துள் தூய்மையுடன் பிரவேசிக்க சற்குரு மானச சௌரப மாருதம், ஒரு நல்ல துணையாக நின்று உதவும் எனும் நம்பிக்கை உண்டு. திருப்பா எனும் ஆகமத் திருமுறையிலிருந்து வீசுவதும் சுவாமிகளின் உள்ளப் பொலிவாகிய தென்றற் காற்றே. எனவே குருமானச சௌரபம் என்பது மூலநூலையும் குறிக்கிறது.

ஓர் ஆலயத்தைத் தூர இருந்துகொண்டு சுட்டிக்காட்டுவது போன்றது கருத்துரை. ஆலயத்துக்கு உள்ளே சென்று இறையனுபவம் பெறவேண்டியது அடியார் பொறுப்பு. கருத்துரை, பாடலின் மையக்கருத்தை மட்டுமே சுட்டிக்காட்டும். மற்றப்படி, சுவாமிகளின் திருவுள்ளக் கிடக்கையை, அவர் அருளியுள்ள பாடல்களை மீண்டும் மீண்டும் பயில்வதன் மூலம் நன்கு உணர்ந்து கொண்டு அந்த உள்ளத்தோடு ஐக்கியப்படுத்திக்கொள்ள வேண்டியது அடியார்களின் கடப்பாடு. வள்ளிப்பெருமாட்டியின் இதயம், முருகப்பெருமானின் திருமுகம் போன்று விளங்குவது என அருணகிரிப் பெருமான் கந்தர் அந்தாதியில் கூறுவார். அதுபோன்று முருகப்பரமனின் திரு உள்ளம் எதைப்போன்றது என்றால், சுவாமிகளின் இதயத்தைப் போன்றது எனக் கூறலாம். அந்த இதயக் கோயிலுக்கு உள்ளே அடியார்கள் பயபக்தியுடன் பிரவேசிக்க இந்தக் கருத்துரை துணைநிற்கும் எனக் கூறி, இப்பணியில் என்னை ஈடுபடுத்திய திருவருளுக்கும் அடியார் அனைவர்க்கும் என் நன்றியையும் கடப்பாட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்

**S.P. சபாரத்தினம்.**

ஓம்

# குருவருள்

## நான்காம் பதிப்பின் பதிப்புரை

திருப்பா எனும் அதியற்புத ஞான சாத்திரத்தை சுத்தாத் வைத வைதிக சைவ சித்தாந்த ஞான பானுவாம் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தேனீ பல மலர்களினின்றும் மதுரத் தேனைச் சேகரிப்பது போல வேதம், ஆகமம், சைவத் திருமுறைகள், ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் போன்ற அருள் நெறிச் செல்வர்கள் ஆக்கிய ஞான சாத்திரங்கள் அனைத்தையும் துல்லியமாக ஆராய்ந்து, சைவ நெறியாளர்கள் கொள்ள வேண்டியது சுத்த அத்வைத வைதிக சைவ சித்தாந்த மார்க்கம் தான் என்றும், ஏக தெய்வ - ஏக மூர்த்த வழிபாடே இதயார்ச்சனைக்கு உகந்தது என்றும், அறுமுகச்சிவ வழிபாடே மிகச் சிறந்த முறையென்றும், இவ்வழிச் செல்வோர் சிவசாயுச்சிய பதவியை இப்பிறவியிலேயே எளிதில் எய்தலாம் என்றும் சாதித்துள்ளார்கள்.

தமிழில் இந்நூல் போன்ற சைவ சாத்திரநூல் ஒன்று உலகம் தோன்றிய நாள் முதல் இதுகாறும் ஆக்கப் பட்டதில்லை எனலாம். ஸ்ரீமத் சுவாமிகள் அருளிச்செய்த அனைத்து நூல்களும் வேதமேயாகும். பரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம் ஆகிய நூல்களுக்கு பிறரைக் கொண்டு கருத்துரை பெற்று, விசேடவிளக்க உரை மட்டுமே தாங்கள் அருளிய ஸ்ரீமத் சுவாமிகள் இந்நூலின் முதல் 43 பாக்களுக்கு தாங்களே விசேடஉரையுடன் கருத்துரையும் வேதத் தமிழால் திட்பம் என்னும் பெயரில் அருளியது இந்நூலின் பெருமையை எடுத்துக் காட்டும். இது முதற்புத்தகமாகத் தனியே அச்சிடப்பட்டுள்ளது. மொத்தம் 1100 பாக்களைக் கொண்டது இந்நூல் மிகுதியுள்ள 1057 பாக்களுக்கு உரை இல்லாதது பெரும் குறையாக இருந்தது. இந்நூலின் தத்துவங்களையும், பொருளையும் உரையின்றிப் புரிந்து கொள்வது இயலாத ஒன்றாகும். நமது சுவாமிகள் மீது மிகவும் ஈடுபாடு கொண்டொழுகும் மயவிஞ்ஞான கலாநிதி பேராசிரியர் டாக்டர் S.P. சபாரத்தினம் அவர்கள் இந்த 1057 பாக்களுக்கும் மிக அழகிய முறையில் சற்குரு மானச செளரப மாருதம் என்னும் பெயரில் உரை எழுதி வழங்கியுள்ளார்கள். இது மாபெரும் சிவ புண்ணியமாகும்.

திருப்பரங்கிரி - பாம்பன் நகர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் ஆலய கர்த்தா ஸ்ரீலஸ்ரீ இராமச்சந்திர சுவாமிகள் இந்த ஞான நூலினை வெளியிடும் பணியில் பெரும் பங்கு கொண்டுள்ளார்கள். மற்றும் இந்நூல் வெளியீட்டில் ஆக்கமும் ஊக்கமும் அளித்த பேரன்பர்கள் திருவாளர்கள், V. திருஞானம், அவரது சோதரர்கள், ப. வேணுகோபாலன், த. இராஜரத்தினம், G. ஜானகிராமன், A. கதிர்வேலு ஆகியோர்களுக்கும் குருவருளும் திருவருளும் சித்திக்க விழைகிறேன். இந்நூல் வெளியிடும் பணியில் எனக்கு பெரிதும் உதவி செயத திரு சத்குரு அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியை செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆத்திக அன்பர்களும், அறுமுகப்பரமன் பக்தர்களும், ஸ்ரீமத்சுவாமிகள் அடியார்களும் இந்நூலின் பெருமையுணர்ந்து பக்தியோடு பூசித்துப் பொருள் உணர்ந்து படித்துப் பாரெல்லாம் போற்ற வாழ்ந்து பர முத்தி பெற்றுய்வார்களாக.

அடியார்க்கடியேன்
**N. ஜெயராமன்**

குமர குரு இல்லம்
27, புஷ்பாவதி அம்மாள் வீதி
சென்னை - 600 033.

# இரண்டாம்புத்தகம்

## இதனுளடங்கியவை.


| எண். | விடயம். | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | திருப்பா மூலமும் குறிப்புரையும் சற்குரு மானச சௌரப மாருதம் எனும் உரையும் | ... | 241 |
| 2. | சிவலிங்காகார படம் | ... | 607 |
| 3. | குழைத்த பத்துக் கூறுமா றிரண்டு முண்டென்பது பற்றி நிகழ் பொருள் | ... | 722 |
| 4. | பெருமிறைக் கவியுரை | ... | 727 |
| 5. | பெருமிறைக் கவியுரைச் சுருக்கம் | ... | 733 |
| 6. | திருப்பத் தகராதி | ... | 734 |
| 7. | திருப்பாட்டு முதற்குறிப்பகராதி | ... | 736 |

# குரு பஞ்சகம்

(திருப்பா வடிவாக விளங்கும் சற்குரு பாம்பன் சுவாமிகளின் திருப்பாதங்களில் பக்தியுடன் சமர்ப்பிக்கப்படும் பாமலர்கள்)

1

மங்களமாய் மந்திரமாய்ப் பொலிந்து தோன்றும்
மைதீர்ந்த நல்வடிவும் பெயரும் கொண்ட
செங்கதிர்சால் திருமேனி கொண்டும் அந்தச்
சீர்மைமிகும் பெயர் உருவை நீத்தும் உள்ள
பொங்கொளியாம் மூல இறை அருளை வேட்டுப்
பொலிவார்ந்த பாமாலை புனைந்த ஞானத்
துங்கமிகும் தூவடிவே! தத்துவா தீதத்
தூயநிலைப் பெருவெளியே! குருவே போற்றி!

2

கருப்பாசப் பிணிப்பகற்றி அடியார் உள்ளக்
கவலையெனும் நெருப்பினையும் தீய்த்தவித்து (தீய்த்து, அவித்து)
விருப்பாக ஓதுவோர்தம் புறத்தும் உள்ளும்
விஞ்சுசுவை அமிழ்தமென நிறைந்து மூல
இருப்பாக விளங்குபர ஒளியைக் காட்டி
இன்பறிவாம் நிலைகாட்டி உயர்த்தி வைக்கும்
திருப்பாவாம் உயர்வேதம் மொழிந்த ஞானத்
திருவுருவே! பெருவெளியே! குருவே போற்றி!

3

முறையாக நிகழ்கின்ற தீட்சை என்னும்
முதிர்ந்த நெறித் திருச்செயலின் விளைவால் நேரும்
குறையாத தூய்மைநிலைப் பேற்றுக் குள்ளே
குவிந்தமனத் தொண்டர்களை மலர்த்தி வைக்கும்
மறையாக மலர்கின்ற திருப்பா ஒன்றே
மறுவற்ற ஆலயங்கள் திருத்த லங்கள்
இறையாரும் மூர்த்தங்கள் அனைத்து மாக
இலங்க அருள் பெருவெளியே! குருவே போற்றி!

4

வேதாந்த சாரமெனும் ஆக மாந்த
விழுப் பொருளின் சாரத்தைத் தேர்ந்து கொண்டு
நாதாந்த மேல்நிலையில் இலயித் திருந்து
நற்பொருளுக் கெனஉள்ள தமிழில் அந்த
வேதாந்த சித்தாந்த இணக்கம் காட்டி
வெளியாகாப் பொருளனைத்தும் வெளிப்ப டுத்திப்
போதாந்த அமிழ்தமெனத் திருப்பா ஈந்த
பொலிவார்ந்த பெருவெளியே! குருவே போற்றி!

5

ஐவகையாய் மலர்கின்ற வடிவம் காட்டி
ஐவகையாய் நிகழ்கின்ற தொழிலும் காட்டி
ஐவகையாய் வெளிப்பட்டு வர்ணம் ஆதி
ஐந்நெறியும் கொண்டு நிற்கும் கலைகள் காட்டி
ஐவகையாய் முகிழ்க்கின்ற வாக்கும் காட்டி
ஐவகையாய் அனைத்தும் நிகழ் ஒழுங்கும் காட்டி
ஐவகையாம் தளையறுத்துத் தாளைக் காட்டும்
ஐவகையாம் பெருவெளியே! குருவே போற்றி!

-சபாரத்தினம்.

உ
சிவமயம்.
குஹப்ரஹ்மணே நம :
திருச்சிற்றம்பலம்.

# திருப்பாவும்

**குறிப்புரையும்**
**மற்றும்**
**சற்குரு மானச சௌரப மாருதம் எனும் உரையும்**

## 5. பரமபதி

*பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

**தி**ருவாத வூரடிகள் சொற்றவா றடிசிரசு
செப்பொணா ஞானவிண்ணாய்ச்
செறிநினக் கடிவினவி லேழ்பாத லங்களுஞ்
செல்லான நிலையிலெனவாம்
பொருளாரு முடிவினவி லுரையிறந் திடமேய
புலமாகு நிலையிலெனவாம்
பூதபௌ டியவர்த்த மானவுர னாலுநல
போதமறை மறைகளாலுந்
தெருளான வாகம புராணங்க ளாலுமணி
சேரேனை முறைகளாலுந்
திட்டப் படுத்தவொரு குணமுளனு மல்லையிச்
சிறியனேன் மனதுவாக்கால்
ஒருதாறு செய்தோத வமைவையோ வெனையாள
வுள்ளவா னந்தவிளைவே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. 1

---

*1. திருவாதவூரடிகள் சொற்றவாற்றினை,*

*“கீதமி னியகுயிலே கேட்டி யேலெங் கள்பெருமான்*
*பாதமிரண் டும்வினவிற் பாதாளமே ழினுக்கப்பால்*
*சோதிமணி முடிசொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை*
*ஆதிகுண மொன்றுமில்லா னந்தமிலான் வரக்கூவாய்.”*

*என்னுந் திருத்தூக்கா னறிக.*

*தாறு அளவு.*

இருள்வலி நிழற்போலு மறிவுமய மென்னநீ
யெங்குமொரு பூர்த்தியாக
இணையின் றிருந்தாலு மந்தவிருள் வலிதுணி
யிலங்குபடி கத்திலொளிர்தல்
பொருவவான் மாக்களில் விசேடமா நிகழ்வையெனல்
பொய்யன்றிவ் வுண்மையுணராப்
புல்லறிஞ ருனையறிய வல்லரல ரெனனிசம்
புன்னெஞ்ச முடையபேயேன்
திருவருட் குப்புறம் பாகநின் றோசொற்ற
தெளிவுகண் டெங்குநிறையோர்
செல்வப் பெரும்பே றுறப்பணிகி றேனுனது
திருவுள வுரித்தென்றுகூ
றொருகிருபை யென்பக்ஷ மாவதெக் கால்கொலோ
வொள்ளருட் பிரவாகமாய்
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (2)

பசுபாச மென்றறை யிரண்டுமவை களையருட்
பாங்கிற் றொழிற்படுத்தும்
பதியான தெய்வமு மனாதிநித் தியமெனும்
பழமைத் திறத்தினானும்
அசலவுல காரம்ப மின்னகா லென்னவோ
ரளவையில் லாமையானும்
அகிலத்தி லுள்ளவெவ் வனுபவமு மெண்ணிலா
வயனங்க டோறுமலைபோல்
விசனமுங் கடியுமா வந்ததொன் றாகுமிவ்
விதிநன் குணர்ந்தவென்றன்
விவேகமன மும்புதுமை யெனவின்னு முளுமெனின்
விவேகிக ணகைத்திடாரோ
உசிதவுள் ளினையுதவி யிருவினைச் சமநிலையி
லுறையவைத் தருளியணவே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (3)

---

*2. இருள்வலி = சூரியன். துணி = ஒளி.*

*3. அயனம் = வழி; ''அயனமே வழியி னாமம்'' என்பது யகரவெதுகை; ஈண்டுயிர்கள் கருக்களிற் சேறற்பொருட்டாகலிற் பிறவியென்னலாம். கதியென்பது மிதுவே.*

*'கடி' என்னும் பலபொரு ளொருசொல் ஈண்டின்பத்தை யுணர்த்தி நின்றது;*

*சூ - நிகண்டு. தொன்று = பழமை. அணவல் = தழுவல்; நகரவெதுகை.*

**போ**தல்வர லாயுள்ள தனுவா யனாதிப்
புணர்க்கையாய் மூலமலமாய்ப்
புகல்பாச மாகிய வசித்தையும் போதமுறு
புருடனா கியசித்தையும்
பேதப்படுத்திப் பிரிக்கின்ற வீரமும்
பேதமி லபேதமாகப்
பிறங்கவைக் கின்றவொர் சுபாவமும் பரமவுன்
பேரருளி னுக்கலாதி
யாதொரு பொருட்குள்ள தோவிந்த வூராண்மை
யாக்கைவிழு முன்னென்கணே
யாணரோ டெய்தநீ யருள்செயா யேலிங்கி
யாரையொரு தஞ்சமென்பேன்
ஓதரிய தேசோ மயானந்த மேயென்ற
னுள்ளுக்கு ணிமிருமன்பே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (4)

**பா**ச ஞானத்தினி லிருந்துகொண் டேயண்ட
பகிரண்ட மெங்குமலரும்
பதிஞான வுயிர்முத்தர் நாமென்று தம்மையும்
பதியையுந் தெரியாமலே
பேசியினி வரவுள்ள புதைநீக்க மரணமே
பெரிதெனும் விதேகமுத்திப்
பேறென்று கொன்னுறுதி கொண்டுதிரி பவரெனப்
பேரருட் பொலிவைநேடுந்
தாசனுங் கோடற்கெ னல்லுள்ள மொவ்வுமோ
சகசசன் மார்க்கநுவலுஞ்
சைவசித் தாந்தமு மிடங்கொடுக் குங்கொலோ
தண்ணளி புரிந்துமனமாம்
ஊசலி லிருக்குமெனை யுன்னருட் பீடிகையி
லுறையவைத் தணவியருளே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (5)

**அ**ரியவிர தச்சூர பதுமனை வலாரியை
யருச்சுனனை வெள்ளிபொன்னோன்
அலகைமுலை யுண்டோ னியாதோ ருபாயத்தி
னாலுளை மயக்கியதுபோல்

---

*4. ஊராண்மை = மிக்கசெயல்.*

விரிகருணை யதரையே நம்பிநிற் கின்றவென்
விவேகவுணர் வையுமயக்க
மேதினியி லொருவரா லாவதோ வாகாதுன்
மேதக வருட்பெருக்கால்
இரியுமல விருளின்மின் மினிபோ லிருக்குமென்
னிறையறிவை விண்ணின்மணிபோல்
இலகவனை யாமலும் பொருளையறி யாமலு
மிரண்டறப் புல்கலெனுமோ
ருரிமையடை யாமலும் போதலுண் டோகருணை
யுள்ளவா னந்தவிண்ணே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (6)

**எ**வ்வுயிர்த் திரளினு மெலாவுலோ கங்களினு
மேகநிறை வாயிருந்தே
இக்கால மக்கால மென்பதின் றெக்காலு
மியாவையு மறிந்துகொண்ணின்
செவ்விய பெருந்திரு வுளத்தினுக் கறியாது
செய்கரும மொன்றின்றெனாத்
திட்டமா யோர்ந்தவெ னுன்னமது தனையொத்த
சிற்றறிஞ ரறியாமலே
இவ்வுலகில் யாதோர் சழக்கிழைத் திடல்போல
வெம்பிரா னாமுனக்கும்
எட்டா திழைக்கவெணு மாயினிப் புன்மைக்கு
மேற்றமுள தியாதுண்டெனின்
ஒவ்வுமோ வையவிவ் வாறுன்ற னடிமைநா
னுறழ்வின்றி மருள்வதென்னே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (7)

**பூ**ர்வகா லத்துநன் முனைவரிறை முதலியோர்
போற்சொலுஞ் சொற்பலிதமும்
புனிதயஞ் ஞங்களிற் சேதன சிருட்டியும்
புணர்தினத் தேபெறுகையுஞ்
சீர்மல்கு மந்த்ரவலி யாற்சொல்லு மாறொரு
சிலீமுகம் புரிசமர்த்துந்

---

*6. இறையறிவு = சிற்றறிவு; இறை = சிறுமை, அற்பம்; சூடாமணி நிகண்டு.*

*7. யாதுண்டெனின் = யாது என்னுங் கடாவுக்கு உண்டென்பது விடையாயின்.*

திவ்யதவர் வாக்கொன்றி னாலட்ட சித்தியுந்
தெவ்வற நடக்குமணியும்
பார்மனுடர் முனிலையிற் றேவதைக ணாக்கீர்
பணிப்பதுவு மிந்தநாளிற்
பட்டப் பகற்சூனி யம்மென விருத்தலிற்
பாவியே னுக்கிங்ஙனே
ஓர்கிருபை பெரிதாக வருளவழி யில்லையோ
வொப்பிலா வாண்மையுடையோய்
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (8)

**பொ**ற்கலச முலைமினா ரின்பமே சுகமெனப்
புத்திசெய் கின்றபேரும்
புரிகரும மேநலந் தருவதா யுள்ளியப்
போக்கினின் றுழிதருநரும்
நற்களியை நல்குவது நற்கால மிக்கால
நாஞ்செய்வ தேதென்பரும்
நல்லுயி ரடக்கமெந் திரமந்த்ர மௌடத
நமக்குறுதி யெனநிற்பருஞ்
சிற்கடவு ளின்றென வரைந்திடா ரேனுமிவர்
தெருளற்ற வுலகாயதர்
செய்கரும வாதிமுத லோரெனு மனீச்சுரச்
செப்பவா திகளுளொருசார்
உற்சாக மாகப் பொருந்துபவ ரல்லா
லுனக்கன்ப ராவரலரே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (9)

---

*8. 'சொலுஞ்சொற்போற் பலிதமும்' எனவியையும்.*
*பெறுகை = மகவுயிர்த்தல்.*
*சிலீமுகம் = அம்பு.*
*அணி = பெருமை; பிங்கல நிகண்டு.*

*9. 'உலகாயதர்' கொள்கை - "முந்தைநாளிற் சாருவாக னுலகாயதன்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கண் உணரக்கிடக்கின்றது.*

*'கருமவாதி' என்றது - உலகந்தோன்றியழியா தெஞ்ஞான்று முளது; வேதத்தில் விதிக்கப்பட்ட வேள்வி முதலிய கருமங்களே சுவர்க்காதி பயன்களை நேரேயுதவுமென்பன முதலிய வியம்புஞ் சைமினியாரது பூருவ மீமாஞ்சைவழி நிற்பவனை; பரிபூரணானந்த போத வுரையாகிய சிவசூரியப்பிரகாசங் காண்க.*

*செப்பம் = வழி; சூ - நிகண்டு.*
*உற்சாகம் - உத்ஸாஹம் என்பதன் றிரிபு.*

**ச**ன்மநில னைத்துறந் தரியதே வைத்தலந்
தனில்வசித் திறைமைசாலுந்
தவவேட தாரியாய் விண்டுபத் திமையோடு
தண்டுழாய் கொண்டுநல்குங்
கன்மமுந லன்னம் படைக்கின்ற தன்மமுங்
கைக்கொண்டு நின்றவொருவர்
கடுவமன விடபேதி யான்மரித் தார்வண்மை
கழுமுதென் கேரளத்தே
நன்மவுனி யிவரொன்று முண்ணா ரெனப்பலர்
நவின்றிட விருந்தவொருவர்
நசித்தனர் விதைப்புளவை யாலாத லிற்றொடர்பு
நசியாது னருளில்லையேல்
உன்முருக னேனந்த வருளலா துய்வனோ
வுரவருண கிரியடிகளே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே. (10)

---

*10.* தேவைத்தலம் = திருவிராமேச்சுரமாகிய சிவக்ஷேத்திரம்.

தொடர்பு = செயற்கையாகிய பந்தம் ; அஃதிங்கே தீயவூழெனப்படும். இவ்வூழினை, நுகராது நுகர்ந்தொழித்தல் திருவருட்டுணை யுடையார்க் கேயன்றி யேனையோர்க் கியலாதென்பார், "தொடர்பு நசியாதுன் னருளில்லையேல்" என்றாரென்க,

இல்லையேல் = இல்லையாயின்,

"இளமையு நாற்றமுங் கள்ளும் விழாவும் - முருக வேளு மழகு முருகே." என்னும் பி-நிகண்டுச் சூத்திரத்தானே முருகனென்பது இளமை யென்னும் பொருளும் பயத்தலின் அவ்விளமை, சேய்க்குமாதலிற் றம்மாட்டுப் புத்திரமார்க்கத்தன்மை பாராட்டி "உன்முருகனேன்" என்றாரென்க. உன்முருகனேன் = உன்சேயாகிய யான் ; ஏன் - தன்மை யொருமை விகுதி.

"உரமென்ப வலியே ஞானம்" என ரகரவெதுகையில் வருமாறு உரம் = ஞானம். இஃது அருணகிரியார்க்கேற்ற அடைமொழி. என்னை ? பதியனுக்கிரக சம்பந்தமான பதிஞானமுடைய ராகலின். அந்தச் சம்பந்தானுபவம் -

"அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே"

'பேசா வனுபூ திபிறந் ததுவே' என்றருளிச் செய்யப்பட்டமையின், கயிற்றைப் பாம்பென்பதுபோலத் திரிவுகாட்சியா னொற்றுமைப் படல், கடாகாயமு மகாகாயமு மொன்றாதல்போல வொற்றுமைப்படல், நிறமுந் தாமரைமலரும் போலக் குணகுணித் தன்மையா னொற்றுமைப்படல், கலப்பில்லாப் பாலு நீரும்போலப் பிரிக்கொணாச் சையோ கத்தா னொற்றுமைப்படல், பேயும் பேயாற் பிடிக்கப்பட்டவனும் போல ஆவேசத்தா னொற்றுமைப்படல், பகற்கதிரொளிமுன் இராக்கதிரொளி போலச் சத்திமங்கி நிற்றலா னொற்றுமைப்படல், இந்தனத் தெரிபோல மிளிராதடங்கிக் கிடத்தலா னொற்றுமைப்படன் முதலியனவாகக் கூறப்படுவனவற்று ளெதுவு மினிது பொருந்தாதென்க. மோனத்தின் பின்னே ஞானானுபவமாமென்பது கொண்டும் இஃதியாப்புறுத்தப்படும்.

# 5. பரமபதி

1. என்னை ஆட்கொள்வதற்காகத் திருவுள்ளம் கொண்டுள்ள சிவானந்த விளைவுமயமாக விளங்குபவனே ! ஒவ்வோர் உயிரினுள்ளும் உயிர்ப்பாக விளங்கும் உயிராகவும். அறிவுக்கு அறிவாகவும் திகழ்கின்றவனே ! அனைத்தினுக்கும் மேலோங்கு உத்தம உன்னத நிலையில் விளங்கும் முழுமுதற் பொருளே ! மாணிக்க வாசக சுவாமிகள் கூறியருளிய வண்ணம், அடியும் முடியும் குறித்துக் காட்டமுடியாத ஞான ஆகாசமாகவே நீ விளங்குகின்றனை. உண்மையில் உனது திருவடி என்பது கீழே ஏழு பாதாளங்களையும் ஊடுருவி ஆழ்ந்து விளங்குவது; உனது திருமுடி என்பது சிந்தையும் மொழியும் எட்டாததும் அனைத்தையும் கடந்து மேலுயர்ந்து இருப்பதாகவும் திகழ்வது. இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம். எனும் மூன்று காலங்களிலும் தோன்றும் ஆற்றல்மிக்க கருவிகளாலும் நல்ல ஞானவளத்தைக் கொடுக்கும் வேதங்களாலும், ஆகமங்களாலும், புராணங்களாலும், மற்றுமுள்ள செவ்விய பல திருமுறைகளாலும் உறுதிப்படுத்தி உரைக்கத்தக்க குணங்கள் ஏதும் அற்றவனாகவும் நீ விளங்குகின்றாய். இப்படி இருக்கும் போது ஏதும் அறியாத இச்சிறுவனாகிய என் மனதாலும் வாக்காலும் அளவுபடுத்தி வரையறுத்துக் கூறும் வகையில் நீ பொருந்தி விளங்குவாயோ ? (வடிவுக்கு அப்பாற்பட்ட உன்னை நான் உணர்வதும் உரைப்பதும் எவ்வாறு ?)

2. உயிர் உணர்வுக்கு ஒளியூட்டும் அருள் வெள்ளமாகவும், உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் ஒளிரும் பரமபதியே ! சூரியனுடைய ஒளிபோன்று ஞானானந்த மயமாகவும் தேஜோ மயமாகவும் எங்கும் பரிபூரணமாக நீ வியாபித்துள்ளாய். எங்கும் படர்ந்து வியாபித்துள்ள சூரியப் பேரொளி, படிகத்தினுள்ளும் ஓர் அளவுக்கு உட்பட்டு விளங்குவது போன்று, நீ ஒவ்வொர் உயிர்க்குள்ளும் சிறப்பாக வெளிப்பட்டு விளங்குகின்றாய். இந்த உண்மையை உணராதவர்கள் உன் சொரூப இயல்பை உள்ளவாறு உணரமுடியாது. பரிபக்குவம் ஏதும் இல்லாதவனும் பேய் போன்றவனுமான, சிற்றறிவுச் சீவனாகிய யான் உனது திருவருள் விலாசத்துக்கு அயலாக இருந்து கொண்டோ, பரிபூரண வியாபகப் பேற்றைக் குறிக்கோளாகக் கொண்டு உன்னை வணங்கிக் கொண்டிருக்கிறேன் ? உனது திருவுளத்துக்கு மட்டுமே உரியதாகக் கூறப்படும் அவ்வியாஜ கருணை என்பது என்பக்கமாகப் பெருகுவது எப்போது ?

(அவ்வியாஜ கருணை – எந்தக் காரணமும் கருதாமல், எந்தத் தொடர்பும் கருதாமல் இயல்பாகப் பொங்கி எழும் கருணை.)

3. உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் ஒளிர்கின்ற பரமபதியே ! பசு (உயிர்கள்), பாசம் (பந்தங்கள்), இந்த இரண்டையும் தன் அருள்நெறிப்படி இயக்கிவைக்கும் பதி (இறைவன்) ஆகிய (பசு, பாசம், பதி என்னும்) மூன்றும் அனாதி நித்தியம் ஆகும். அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களுமாக உள்ள இவ்வுலகம் எப்பொழுது படைக்கப்பட்டது எனக் கணித்துக் கூறவும் முடியாது. இவ்வுலக விவகார நிலையில் எவ்வகைப்பட்ட அனுபவமும் நல்வினை, தீவினை ஆகியவற்றால் ஏற்படும் இன்பநிலை துன்பநிலை என இரண்டின் மயமாக உணரப்படும். இந்த நடைமுறையை அடியேன் நன்குணர்ந்துள்ளேன். இத்தகைய நிலையில் எனது உள்ளமும் இந்த நன்மை தீமை, இன்பம், துன்பம் என்பன இப்பொழுது புதியனவாகத் தோன்றுபவை எனக் கருதுமாயின், அறிஞர்கள் எள்ளி நகைத்திட மாட்டார்களா ? எனது உள்ளத்திற்குப் பரிபக்குவ நிலையை வழங்கி, இருவினை ஒப்பு எனும் உயர்ந்த நிலையில் எனது உள்ளநிலை இருக்குமாறு செய்து என்னோடு இரண்டறக் கலந்தருள்க.

**4.** இப்படிப்பட்டது என வருணிக்கமுடியாத பேரொளிமயமான ஆனந்தநிலையே ! என் உள்ளத்துக்குள்ளே முறுகிப்பொங்கி எழும் அன்புநிலையே! உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் ஒளிர்கின்ற பரமபதியே ! அசித்து என்பது பிறப்புக்கும் இறப்புக்கும் உட்படும் உடலாகவும், அனாதிகாலம் தொட்டே சகஜமாக (உடன்பிறந்ததாக)ச் சேர்ந்துள்ளதாகவும், மூலமலமாகவும் விளங்குவது. சித்து என்பது அறியும் நிலையிலுள்ள புருடன் எனும் சீவன். அசித்து எனவும் சித்து எனவும் இருவகைப்படுத்திப் பிரித்துக் காணும் ஞான தீர நிலையும், பேதம் என்பது இல்லாத அபேதநிலையில் இவற்றை விளங்கவைக்கும் இயல்பான ஆற்றலும் நினது பேரருட்சக்தியைத் தவிர வேறு எதற்குண்டு ? மேலான முழுமுதற்பொருளே ! இத்தகைய நினது பேரருட்சக்தியின் ஆற்றல் என் உடல் நீங்குமுன்னமேயே என்னிடம் விளங்குமாறு செய்க. இவ்வாறு நீ அருளவில்லை எனில், வேறு யாரை நான் பற்றுக்கோடாகக் கொள்வேன் ? எனக்கு உன்னைத் தவிர வேறு புகல் இல்லை அன்றோ !

**5.** உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் விளங்குகின்ற பரம முழுமுதற்பொருளே! பாச விளைவாகிய சிற்றறிவு நிலையில் இருந்துகொண்டே தம்மையும் தெரிந்து கொள்ளாமல், இறைவனையும் தெரிந்துகொள்ளாமல் "வெளி அண்டங்கள் எங்கும் வியாபித்துள்ள பதிஞானம் வாய்க்கப் பெற்றுள்ள ஜீவன் முக்தர்கள் நாங்கள்" என்று பிரகடனப்படுத்திவிட்டு, "இவ்வுடலை நீப்பதாகிய மரணமே பெருமைக்குரிய விதேக முக்திப்பேறு" என்று வீணே டம்பம் பேசித் திரிபவர் வறட்டு ஞானிகள். இவர்களைப் போன்று உன் அடியவனாகிய யானும் கருதுவேனோ ? அவ்வாறு கருத, உன் மீதே படிந்துள்ள எனது உள்ளம் இடம் கொடுக்குமோ ? ஒருவரால் உருவாக்கப் படாமல், இயல்பாகவே இறைநெறியாக மலர்ந்துள்ள சன்மார்க்க நெறிமுறைகளை உணர்த்தும் சைவசித்தாந்த மரபும் இவ்வாறு கருத இடம் கொடுக்குமோ ? எனது மனம் 'இதுவோ அதுவோ' எனும் ஐயமாகிய ஊசலில் ஆடிக்கொண்டிருக்கிறது. எனது மனத்தின் ஊசலாட்டத்தைத் தவிர்த்து, உனது திருவருளைக் காட்டி என் மனத்தை உனது அருண்மயமான பாதுகையில் நிலைத்து வசிக்குமாறு செய்து என்னோடு இரண்டறக் கலந்தருள்க.

**6.** வற்றாத கருணை தேங்கியுள்ள ஆனந்த வெளியே ! உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் விளங்குகின்ற பரமபதியே ! ஒவ்வோர் உபாயத்தாலும் சுக்கிராசாரியார் சூரபதுமனின் உள்ளத்தை மயக்கியது போலும், பிருகஸ்பதி இந்திரனின் உள்ளத்தை மயக்கியது போலும், கிருஷ்ணன் அருச்சுனனின் உள்ளத்தை மயக்கியது போலும் விவேக ஞானம் மிக்க எனது உள்ளத்தை ஒருவரால் மயக்க முடியுமோ! தங்கு தடையின்றி விரிந்து பெருகியுள்ள உனது கருணைமயமான நெறியிலேயே என் உள்ளம் பற்றுக் கொண்டுள்ளதால், என் உள்ளத்தை யாராலும் மயக்கமுடியாது. நினது மேன்மைக்குரிய திருவருட்பெருக்கால், ஆணவமலமாகிய பேரிருள்செறிவில் ஒரு மின்மினிப்பூச்சி போல் இருக்கும் எனது சிற்றறிவை சூரியன் போல் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்யாமலும், சத்து சித்து ஆனந்தம் எனத் திகழும் பொருளை அறிய முடியாமலும், இரண்டறக் கலத்தல் எனும் அத்துவிதப் பேற்றை உரிமைச் சொத்தாக அடையாமலும் நான் வீணே போக நேருமோ ? இம்மூன்றையும் நினது திருவருளால் அடைதல் என்பது உறுதியே.

**7.** உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் விளங்குகின்ற பரமபதியே ! செவ்வியதும் பெருமை மிக்கதுமாகிய நினது திருவுள்ளம் அனைத்து உயிர்க் கூட்டங்களிலும் அனைத்து உலகங்களிலும் நீக்கமற ஒரே நிறைவாக வியாபித்து எக்காலத்தையும் எவற்றையும் அறியும் ஆற்றல் உடையது. இத்தகைய நினது திருவுள்ளம் அறியாமல் செய்யக்கூடிய செயல் ஏதும் இல்லை என

எனதுள்ளம் உறுதியாக உணர்ந்துள்ளது. எனது உள்ளக்கருத்தை அறியாமல் புல்லறிவாளர் சிலர் பொறாமை கொண்டு எனக்கு வஞ்சகத் தீச் செயல் செய்துள்ளனர். எனக்குச் செய்வது போன்று அவர்கள், எம்பெருமானாகிய உனக்கும் சற்றேனும் சிந்தித்துப்பார்க்காமல் செய்ய எண்ணுவாராயின், இந்தக் கொடிய செயலினும் மேம்பட்ட கொடுஞ்செயல் ஒன்று உண்டோ ? உண்டு எனக் கூறுதல் பொருந்தாது. உனது அடியவனாகிய நான் இவ்வாறு ஞானப்பேறு இல்லாமல் மருட்சி கொள்ளலாமா ? நின் திருவுளத்துக் கேற்ற செயலைச் செய்யுமாறு அருள்புரிக.

8. ஒப்பற்ற ஆளுமைத் திறம் வாய்ந்த பெருமானே ! உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் விளங்குகின்ற பரமபதியே ! முற்காலத்தில் எத்தனையோ வியத்தகு செயல்களும் அற்புதச் செயல்களும் நிகழ்ந்துள்ளன. முழுமையான ஞானப்பேறு வாய்த்த முனீந்திரர்கள் வெகுண்டு கூறினும் மகிழ்ந்து கூறினும், சொன்ன சொல் உடனே பலித்தது; தூய்மையான யாகங்கள் செய்து. அவற்றின் மூலம் புதிய ஜீவன்களை உருவாக்கினர்; உடற்சேர்க்கை நிகழ்ந்த அன்றே இருடிகளுக்குப் பிள்ளைப் பேறு வாய்த்தது. மந்திர ஆற்றலால் தெய்வத் தன்மைமிக்க அம்புகளை (அஸ்திரங்களை)ச் செலுத்தமுடிந்தது; தவப்பேறு மிக்கோரின் ஒரே ஒரு வாக்குத் திறத்தால் எண்வகைச் சித்திகளையும் முறையாக வெளிப்படுத்த முடிந்தது. உலகவர்முன் தெய்வங்கள் ஆவேசம் மூலமாக வெளிப்பட்டு அருள்வாக்குகளை வெளியிட்டன. இவ்வாறு உள்ள சொன்னசொல் பலித்தல் முதலான அற்புதச் செயல்கள் எல்லாம் இந்தக் காலத்தில் மிகவும் அருகிவிட்டன; வெற்று வெளியாகிவிட்டன. இவற்றுள் ஏதும் நடைபெறுவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் பாவியாகிய எனக்கு நினது திருக்கருணையானது ஓர் அற்புதச் செயல் செய்தருள வழி ஏதும் இல்லையோ ?

9. உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் விளங்குகின்ற பரமபதியே ! பெண்ணோடு கூடுவதால் வரும் இன்பமே ஆனந்தநிலை என எண்ணுகின்றவர்களும், "செய்யப்படும் செயலே நலம் தரவல்லது'' எனக் கருதி கருமநெறியில் ஊடாடிக் கொண்டிருப்பவர்களும், "நல்ல இன்பநிலையைத் தருவது காலத்தின் ஆற்றலே. எனவே இப்பொழுது நம்மால் செய்யத் தக்கது யாதுளது'' எனக் கருதுபவர்களும், "மூச்சினை அடக்குதல், யந்திர வழிபாடு, மந்திரஜபம், ஔடதநெறி ஆகிய இவையே நமக்கு உறுதிநிலையைத் தரவல்லவை'' எனக் கருதி அந்நெறியில் நிற்போரும் ஆகிய இவர்கள், வெளிப்படையாகக் 'கடவுள் இல்லை' எனக் கூறாவிட்டாலும். ஆராய்ந்து பார்க்கும் போது இவர்கள் தெளிவான ஞானம் வாய்க்கப் பெறாத உலகாயதர், கருமவாதிகளான மீமாம்சகர் என உள்ள அனீசுவர வாதிகளுள் ஒருபிரிவினரேயாவர். இப்படியல்லாமல் அவர்கள் உன்னுடைய அடியார் கணங்களுள் அடங்குபவர்களாக ஆகமாட்டார்களே ! (இத்தகைய அனீசுவர நெறி நீங்குவதாக !)

10. சந்தமயமான வாக்குத்திறம் வாய்ந்த அருணகிரிப் பெருமானுக்குரிய சுவாமியே ! உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் விளங்குகின்ற பரமபதியே ! தான் பிறந்த ஊரைத் துறந்து, இராமேசுவரத்தில் வசிப்பவராய்த் தவவேடம் பூண்டு, திருமாலை வணங்கும் பக்தராய், துளசிப்பிரசாதம் கொடுத்து அன்னதானம் செய்து வாழ்ந்தவர் ஒருவர், கடுமையான வாந்தி பேதி நோயால் இறந்துபோனார்; வளம்செறிந்த மலையாள நாட்டில் "இவர் ஒரு மௌன சுவாமி, ஒன்றும் உட்கொள்ளாதவர்" எனப் பல்லோராலும் கூறப்பட ஒருவர் வாழ்ந்திருந்தார். அவரோ ஆண்குறிப் பிளவை நோயால் மாண்டு போனார். இவற்றை நோக்கும்போது நினது திருவருள் துணை இல்லையேல், பூர்வஜன்ம வினைப்பயன் ஒருசிறிதும் தொலையாது என விளங்குகிறது. வினைப்பயனை நீக்கவல்ல உனது கருணை இல்லாமல் உனது சிறுவனாகிய யான் உய்திபெற முடியுமோ ?

# 6. சுப்பிரமணியப்பரமம்

**கூ**டல்கோலு நிலையிலுன் கருணையொன் றுண்டெனிற்
காசும் பெறாததுகளுங்
கைலைவை குந்தமம ராவதியு மெச்சவே
கனமேரு வாகுமிலையேல்
தடமகா மேருபோ லுளதுஞ் சணத்திலே
தண்ணியவொர் திரணமாகுஞ்
சரதமுத வெந்தையே யிவ்வுண்மை யறியாது
தஞ்சத்தி கொண்டுழிதரும்
படருளா ரதரெனைப் பற்றா தகற்றிநற்
பரிவோ டுனக்குமெற்கும்
பற்றிருக் கும்படி புரிந்தவருண் முழுவதும்
பக்ஷம்வைத் தருள்செயாதோ
சுடர்களைச் சுடரவே செய்பரஞ் சுடரே
சுகாதீத முத்திமுதலே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (1)

**க**த்தாவை நாம்பிரிய விலையென் றியாதொரு
கணிப்புற்ற தைக்கழுத்திற்
கட்டியே தூங்கவைத் ததுபோல வுளபடி
கருத்திலே கட்டவறியார்
வித்தார ஞானநூ லைப்பெட்ட கத்துளே
மேன்மையா வைத்துமூடி
வீகமிட் டதுநேர வுட்பொருளை யுள்ளுளே
மெய்யாக வைக்கவறியார்
சத்தான தெய்வமொன் றுண்டென்று கூறுவார்
சந்தேக நீக்கமறியார்
தமியனே னிந்தவவ லங்களுக் கயலுறத்
தண்ணளி புரிந்தவுன்றன்
சொத்துவச் சித்தமெம் பாக்கிய மலால்வேறு
சொல்லவொரு சிறிதுமுண்டோ
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (2)

---

1. கோலல் = சூழ்தல்; சேந்தன் றிவாகரம். திரணம் = துரும்பு.

2. வீகம் = மோதிரம் போன்ற பூட்டு; சூ – நிகண்டு.
சொத்துவம் – 'ஸ்வதத்வம்' என்பதன் விகாரம்; (சொந்த) உரிமையென்னும் பொருளுடைத்து.

**பி**றர்நயன மறியாது துய்த்தலைப் புல்லர்நுகர்
பிழியூன் விலக்கியுணலைப்
பிரபாவ மணவுகண் மணிமாலை யேமம்
பெருக்கவணி நேமத்தினைச்
சிறுமையர் தமைப்பரி சனஞ்செயா வுழுவலைத்
திவ்வியசிவ சம்பந்தமாச்
செப்புநற் சைவசம யத்தாளி யென்றெணுஞ்
சிந்தையர் சிதாகாசமாய்
நிறுவுமுன் னோடுமல மற்றநல் லாவியது
நீநா னெனாமலொன்றாய்
நிகழ்தல்சிவ சம்பந்த மென்றுமது வேசைவ
நெறியந்த மென்றுமரிய
துறவரா லுணர்நிசா தனமறிதல் சுலபமோ
சுபவின்ப மாவுததியே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (3)

**சீ**வகா ருணியமின் றுயிர்வதைப் பவருந்
தெருட்சியா சாரமின்றித்
தீழ்ப்புடை யிலாகரி புலாலுண் சழக்கருஞ்
சிவமந்தி ரஞ்செபிக்கப்
பாவன விலிங்கதா ரணமென்ப தைக்கொளப்
பாத்திய மிலாதவரெனாப்
பகர்சைவ தந்திரந் தனைமீறு பவரும்
பசுந்துளவ மணிபவற்குக்
கோவுறு மிலாகரி புலால்படைத் துண்ணுங்
குணுங்குகளு மிறுதிநாளிற்
கொடியபூ தப்பிசா சின்கதியை யடைதல்சூர்
கூர்தல்கட் டென்றுமிக்க
தூவுடைய முதனூல் விளக்கல்பொய் யன்றரோ
துகளிலார் நெறியில்வருவோய்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (4)

---

*3. பிழி = கள். உழுவல் = குணம், முறை; சே – திவாகரம். ஆளி = நிரல்; சூ – நிகண்டு.*

*4. தீழ்ப்பு – தீட்பு என்பதன் விகாரம்; இழிவெனும் பொருட்டு; இதனிலக்கணம் பரிபூரணானந்த போதத்துப் பிற்படலத்து 29 – ன் உரையிலோருமாறுளது.*
*கோவுறுமிலாகரி = நீர்வடிவான இலாகரி; கள், சாராயம் முதலியன; கோ = நீர். குணுங்கு = பேய்; உரிச்சொல் நிகண்டு காண்க.*
*பிசிதம் = ஊன், இதனை யுண்ணுமுயிர் 'பிசாசம்' என்னும் பெயர்பெற்றதென்று பட்டோசி வியாகரணம் பகர்கின்றது.*

**அ**க்கநெரி வுழியெழுங் கானலைப் பார்வையா
லம்புலியை யாதித்தனை
அவிர்கின்ற தீபிகையை நோக்கியே பாவிக்கு
மகவினையி னான்மனத்தே
சொக்குறத் தோன்றொளிக ளைத்தெவுளு மசபையிற்
சுடரொளியை விந்துநாத
சோதியைச் சுத்தபர மாயையின் காந்தியைத்
துரியச் சுயஞ்சோதியாய்
எக்கணு மியங்குநீ யென்றெண்ணி மெய்ச்சோதி
யினையறிந் திலகுபெரியோர்
என்பர்நா மென்றகங் காரமுறு மூடமிவ்
வேழைக்கும் வருவதுண்டோ
துக்கமில் லாதபரி சுத்தசுக வாழ்வையென்
சொந்தப் படுத்துமரசே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (5)

**வெ**குசனத் தொறுவொன்று சேரநன் மாமக
விழாவங் குடந்தையின்கண்
வியப்பா நடக்கவருள் செய்தெனையு மாண்டுற
விதித்துநான் மீளுமமையந்
தகுதிசா லித்திருப் பாவெனும் புத்தகந்
தனின்முதற் செய்யுளெனவே
சாற்றுபா ராதிதொட் டக்கநெரி வென்றெழு
தனிப்பாடல் வரையைம்பதும்
மிகுமெட்டு முடையவொரு பிரதியையு னன்பினர்
விலோசனங் கட்குமறைவாய்
வேறொருவர் கைக்கொள வமைத்தையிங் னேயுனது
மேதைக் கருத்தென்கொலோ
சுகுணவரர் முதல்வவென் மனதுறுவல் கூராது
சொல்லியருள் புரியவேண்டுந்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (6)

---

*5. கானல் = ஒளி; பி – நிகண்டு காண்க. சொக்கு = அழகு.*
*தெவுளல் = பெருகல்; சே – திவாகரம்; 'தெவிளல்' எனவும் வழங்கப்படுகிறது.*

*6. வெகுசனம் – 'பஹுஜநம்' என்னும் வடமொழியின் விகாரம்.*
*உறுவல் = துக்கம்; பி – நிகண்டு.*

நின்பூர ணத்துவ வியாபகத் துண்மையை
நிரப்பின்றி யுற்றுநோக்கின்
நித்தமு மனித்தமுஞ் சுத்தமு மசுத்தமு
நிராகார வாகாரமும்
அன்போடு கடினமுஞ் சஞ்சல வசஞ்சலமு
மாண்பெண் ணெனும்பேதமும்
அந்தரமு மாதவமு மானந்த முந்துயரு
மாசையு நிராசைநிலையும்
என்போலு மிழுதையு மெலாந்தெரி விவேகியு
மிரண்டொன் றெனப்பிதற்றற்
கிசைந்தநூல் கற்றுளா ரோடுகல் லாதவரு
மின்னுமற் றுள்ளவெவையுந்
துன்பேது மற்றநீ யேயென்ன வாமிதிற்
சொல்லுமெற் கிடனெங்ஙனே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (7)

எல்லாஞ் சிவன்செய லெனுந்தகைமை தனையுணரி
னிரவுபக லற்றநிலயம்
எட்டாது போமோ பிராணசல மும்போத
மென்றகுடி லச்சலனமுஞ்
சொல்லாக ரங்கருதி யிருவினைக ளென்னுமலை
தொட்டிலி லிருந்துதுவளுஞ்
சூர்மனமு மம்மனஞ் சென்றுவரு மிந்தியத்
தொறுவுமவை பற்றிநிற்றற்
கில்லான படிவமு மப்படிவ வோம்பலா
னெழுகின்ற வபிமானமும்
இகலாய காமாதி யாறுபெற் றியுமா
யிராநின்ற சீவச்செயல்
சொல்லாம லோடுமல் லாதுபின் றொடருமோ
துரியவிவ் வுணர்வையருளே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (8)

---

7. அந்தரம் = இருள்.

8. சொல்லாகரம் = புகழும், உறைவிடமும்; சொல் = புகழ், தொறு = கூட்டம்.

**பை**யண்ட மண்கசிவு மானச மெனச்சொலைம்
பாலுழி யுதித்தவெல்லாப்
பசுக்களுக் கும்பிரா னென்பதை விளக்கிடப்
பசுபதிப் பெயருடையனாய்
மெய்கண்ட தேவர்முத லோருமரு ளாதிக்கிய
மெய்க்குரவர் நான்குபேரும்
மெய்யா விரித்ததிரு வாக்குகட் குண்ணிற்கு
மெய்வத்து வாய்விரியுமென்
ஐயநின் பெரியதிரு வருளையே முன்னிட்
டனாரதமு நிற்குமிந்த
அடிமைகா ரியமிநாண் மலைகல்லி யெலிபிடிப்
பதுபோ லிருப்பதென்னின்
தொய்யன்மரு வாதவுன் றொண்டர்க ளடைந்தவொரு
தொய்யலெவ் வாறுகுறுகுந்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (9)

**ப**ரமதா தாவாய நீயெனை யணைத்தருள்
பணிக்காது விடுவதென்னிற்
பாலித்து நல்லருள் புரப்பதா யருள்செய்த
பக்ஷமுடை யுன்றன்வசனந்
தரமிலா மற்பழுது படுமென்ற னெஞ்சுமதி
சஞ்சலப் படுமின்னணஞ்
சாருமே லென்னெண்ண மெவ்வண்ண முற்றுறுஞ்
சஞ்சிதத் தாலெடுத்த
புரமளவு முள்ளவா ணாளெப்ப டிச்செலும்
புகலுன்னை யன்றியிலையே
புங்கவர்கள் கடவுளே புரிவுடையர் செம்மலே
புனிறுமர பற்றபொருளே
சுரர்புகழ வுளவெந்தை யருணகிரி பிரசன்ன
சுவானுபூ திச்செல்வமே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. (10)

---

*9. தொய்யல் 2 – ல் முன்னையது துயரம்,*
*பின்னையது மகிழ்ச்சி; யகர வெதுகை.*

*10. பணித்தல் = தியாகம்; சே – திவாகரம்.*
*சஞ்சிதத்தா லெடுத்தபுரம் = சஞ்சிதகன்ம வழிவந்த பிராரத்த சரீரம்.*

# 6. சுப்பிரமணியப் பரமம்

1. என்றும் நிலைத்துள்ள உண்மைப் பொருளாகவும் ஆனந்தமயமாகவும் விளங்கும் எந்தையே! பிரபஞ்சத்திலுள்ள ஒளிப்பொருள்கள் அனைத்தும் சுடர்விட்டு ஒளிருமாறு செய்கின்ற மூல ஒளிச்சுடரே! மிக உன்னதமான, பரிபூரணமான, அகண்ட தத்துவப்பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே! இந்நிலவுலகில், நினது திருவருள்மட்டும் இருக்குமாயின் ஒருகாசு கூட விலைபொறாத சிறு துகளும் கைலை, வைகுண்டம், அமராவதி முதலான இறைநிலைத் தானங்களும் புகழும் அளவுக்குப் பெருமை மிகுந்திருக்கும் மேருமலை எனச் சொல்லுமாறு விளங்கும். நினது திருவருள் இல்லையேல் மேருமலை போன்று சிறப்பு நிலையில் உள்ள பொருள் கூட, ஒரு கணநேரத்தில் துரும்பு போல் ஆகிவிடும். இவ்வுண்மையை அறியமாட்டாமல் தன் அறிவாற்றலே பெரிதெனக் கருதி உழலும் துன்பமிக்கோரின் தீயநெறியில் நான் செல்லாத வண்ணம் நினது திருவருளின் ஒரு கூறானது விலக்கிவைத்து எனக்கும் உனக்கும் இடையே அன்புப்பிணைப்பு இருக்குமாறு செய்தது. இவ்வாறு செய்த உனது திருவருள், முழுவதுமாக எனக்குக் கிடைக்கும் வகை இல்லையோ ?

2. மிகவும் உயர்ந்த, பரிபூரணமான அகண்ட தத்துவப் பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே! "நாம் இறைவனை விட்டுப் பிரியவில்லை'' எனும் கருத்துத் தோன்ற இறைவடிவ லிங்கத்தைத் தம் கழுத்திலே கட்டிக்கொண்டவர்கள், அவ்வாறு கழுத்திலே கட்டிக்கொண்டது போல் கருத்திலே (உள்ளத்திலே) கட்டத் தவறிவிட்டனர். ஞானபூசை என்ற பெயரில் ஞான சாத்திரங்களைப் பெட்டியின் உள்ளே வைத்துப் பூட்டி வைத்திருப்போர், அதற்கேற்றவாறு ஞானநூல்களின் உட்பொருளை உள்ளத்துள்ளே வைத்துப் பாதுகாக்கத் தவறினர். சத்துப் பொருளாக (உண்மைப் பொருளாக) ஒரு தெய்வம் உண்டு என்று பொதுப்படக் கூறுவோர், அடியார்க்கு நேரும் சந்தேகங்களை நீக்கக்கூடிய வழி அறியாது உள்ளனர். இத்தகைய அவலநிலைகளுக்கு நான் ஆளாகாத வண்ணம் அருள்புரிந்த, உனக்கே உரித்தான இத்தகைய கருணை உள்ளம் எம் போன்றோர்க்கு வாய்த்த மிகப்பெரிய பாக்கியம் என்று கூறுவதல்லாமல் வேறு யாது கூறமுடியும் ? வேறுபடக் கூற ஒருசிறிதும் இடமில்லை அன்றோ!

3. மங்களகரமான, பேரானந்தப் பெருங்கடலே! மிகவும் உயர்ந்ததான, பரிபூரணமான அகண்ட தத்துவப் பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே ! மற்றவர் காணாதவகையில் புசித்தல், கீழோர் விரும்பிப் பருகும் கள், உண்ணும் மாமிசம் ஆகியவற்றை விலக்கி நல்லுணவுகொள்ளல், மகிமை பொருந்திய ருத்திராக்ஷமாலையையும் விபூதியையும் மிகுதியாக அணிந்து கொள்ளும் நியமம், பெண்களைத் தொடாமல் கண்ணியமாக இருக்கும் அன்பு ஆகிய இவற்றைச் சிவத்தொடர்பு உடையனவாகச் சைவசமய அனுட்டான நெறியானது கூறும் எனக் கருதும் பண்புடையோர் உண்மையிலேயே சிவத்தொடர்புடையது எது என உணர வேண்டும். "சிதாகாசமாகப் பொலியும் உன்னோடு, மலப்பிணிப்பு நீங்கித் தூய்மை பெற்றிருக்கும் ஆன்மா நீவேறு: நான் வேறு 'எனப்படாத வண்ணம் இரண்டறக் கலந்திருத்தலே உண்மையில் சிவசம்பந்தம் என்பது. இதுவே சைவசித்தாந்தத் துணிபு'' என்னும் உண்மையை ஞானத் துறவியர் நன்குணர்வர். சிவஞானத் துறவியரால் உணரப்படும் இவ்வுண்மை, புறச்சின்னங்கள் அளவில் சிந்தையைச் செலுத்துவோரால் அறியப்படுதல் என்பது எளிதோ ? (அவர்களால் இவ்வுண்மைப் பொருளை, உண்மையில் சிவசம்பந்தம் என்பது எது என்பதை எளிதில் அறியமுடியுமோ ?)

**4.** அனைத்து விதமான பேத உணர்வுகளிலிருந்து விடுபட்டுத் தூய்மை பெற்றிருக்கும் ஞானியர் நெறியில், தானாகவே வெளிப்பட்டு அருள்பவனே ! உன்னதமான, பரிபூரணமான, அகண்ட தத்துவப் பொருளான சுப்பிரமணியப் பரம்பொருளே! உடல் எடுத்துள்ள அனைத்து உயிர்களிடத்தும் அன்புணர்வு கொள்ளாமல் உயிர்க்கூட்டங்களை வதைத்துத் துன்புறுத்துவோரும், தெளிவான உள்ளம், ஆசாரம் ஆகியவை இல்லாமல் இழிவான கள், சாராயம், மாமிசம் முதலானவற்றை உண்ணும் கீழோரும் சிவமந்திரத்தைச் செபிப்பதற்கும் தூய்மை தரத்தக்க 'லிங்கதாரணம்' என்பதை மேற்கொள்வதற்கும் உரிமை இல்லாதவராவர் எனச் சைவ ஆகமங்கள் கூறும். இந்த ஆகமங்கள் கூறும் விதிமுறைகளை மீறுவோரும், திருமாலுக்குக் கள், சாராயம், மாமிசம் முதலானவற்றை நிவேதித்து உண்ணும் பேய்மனம் படைத்தவர்களும் தம் இறுதிநாளில் பூதம், பிசாசு ஆகியவற்றின் நிலையையும் அசுர, ராக்ஷஸ நிலையையும் அடைதல் உறுதி என, ஞானநூல்கள் அனைத்தினும் மேம்பட்டதும், இயல்பாகவே மலரகிதனான சிவனால் அருளப்பட்டதுமான முதல்நூலாகிய ஆகமம் கூறுவது முற்றிலும் உண்மையேயாம். (சைவ ஆசாரம் மிக்க நன்னெறிக்கண் ஈடுபாட்டை வழங்கி அருள்க).

**5.** ஒருசிறிதும் துன்பம் கலவாத, பரிசுத்தமான ஆனந்த வாழ்வை எனக்கு உரிமையாக்கும் அரசே! மிக உயர்ந்ததான, பரிபூரணமான, அகண்ட தத்துவப் பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே! கண்களைக் கையால் கசக்கும் போது சிலசமயம் தென்படும் ஒளி உருண்டை, சந்திரன், சூரியன், விளக்கு ஆகியவற்றை உற்றுப்பார்த்து பாவிக்கும் தியான பாவனையால் மனத்தே தோற்றம் கொள்ளும் ஒளிநிலைகள், அஜபா மந்திர ஜபத்தால் தோன்றிச் சுடரும் ஒளி, விந்து, நாத நிலைகளில் தோன்றும் ஒளி, சுத்தமாயைப் பரப்போடு தொடர்புடைய ஒளி–ஆகிய இவைகளை அனைத்துக்கும் மூலமான சோதியாகி எங்கும் வியாபித்திருக்கும் உன் வடிவங்களாகவே மயக்குறக் கண்டு "நாங்கள் பிரத்யட்சமாகவே பரஞ்ஜோதி தரிசனம் பெற்றுவிட்ட பெரியோர்கள்" எனச் சிலர் தருக்குற எண்ணிக் கொள்வர். இத்தகைய அகங்கார உணர்வுக்குக் காரணமான மூடத்தன்மை உனது அடியவனாகிய என்னையும் பொருந்துமோ ? இத்தகைய தருக்குணர்வு உன் அடியவர்களுக்கு வராது.

**6.** நற்குணப் பேறு பெற்றவர்களுள் சிறந்துவிளங்கும் முனிபுங்கவர்க்குரிய முதல்வனே! மிக உயர்ந்ததான, பரிபூரணமான, அகண்ட தத்துவப் பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே! மக்கள் பெருந்திரளாகக் கூடிவரக் குடந்தையில் மகாமக விழா யாவரும் வியக்கும் வண்ணம் நடந்துகொண்டிருக்க, என்னையும் அங்கு சேருமாறு நின் திருவருள் செய்தது. விழா நிறைவுற்றபின் நான் மீளும் சமயம் "பாராதி" எனத் தொடங்கும் செய்யுள் முதலாக ஐம்பத்தெட்டுப் பாடல்கள் வரையப்பட்டுள்ள திருப்பா எனும் நூலின் பிரதி உன் அன்பர்கள் காணாவகையில் வேறொருவர் கையில் சிக்குமாறு நீ செய்தனை. இது தொடர்பாக, உனது திருவுள்ளக் கருத்து இன்னதென என்னால் அறிய இயலவில்லை. இவ்வாறு மறைத்ததன் கருத்துதான் யாது ? எனது மனம் கவலையுறாத வண்ணம் நீ விளக்கம் கூறி அருள்புரிய வேண்டும்.

**7.** உன்னதமான, பரிபூரணமான, அகண்ட தத்துவப் பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே! குறுகிய கண்ணோட்டத்தை நீத்து, விரிவான சிந்தனையுடன் உனது பரிபூரணத்துவ வியாபகப் பெருநிலையை ஆழ்ந்து உணரின், அனைத்தும் உன் அருள்விலாசமாகவே புலப்படும். நிலைபேறு, நிலையாமை; சுத்தம், அசுத்தம்; அருவம், உருவம்; அன்பு, வன்பு; அசைவு, அசையாமை; ஆண்மை, பெண்மை; இருள், ஒளி; ஆனந்தம், துன்பம்; ஆசை, நிராசை; ஏதும் அறியா என்போன்ற

அறிவிலி, முழுதும் உணரவல்ல ஞானி; கற்றோர், கல்லாதோர் என உள்ள, மற்றும் இவை போன்றுள்ள முரண்பாட்டு நிலைகள் (துவந்துவங்கள்) அனைத்தும் ஆனந்தமே வடிவுகொண்டாற் போன்றுள்ள நீயேதான் என்று உறுதிப்பட உணரலாம். இந்த உனது வியாபக நிலையில் எனது நிலை எப்படிப்பட்டது ? நான் நல்லதன் பகுதியில் அடங்குவேனா, தீயதன் பகுதியில் அடங்குவேனா ?

8. உன்னதமான, பரிபூரணமான, அகண்ட தத்துவப் பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே ! அனைத்தும் சிவன் செயலே, என் செயல் ஏதுமில்லை எனக் கருதும் உணர்வு முதிர்ந்து இருக்குமாயின், இரவும் பகலும் அணுகாத இன்பவெளியாகிய ஆனந்தப் பேறு கிடைக்காமற் போகுமோ ? பிராணன் முதலான வாயுக்களின் அசைவு, சீவ போத அசைவு, புகழ், உறைவிடம் என்பனவற்றைப் பற்றுக் கோடாகக் கொண்டு இருவினை என்னும் தொட்டிலில் கிடந்து வாடும் மனம், மனத்தின் இயக்கத்துக்கு நிலைக்களமாக உள்ள இந்திரியக் கூட்டம், இந்திரியங்களின் பற்றுக்கு இடமாக உள்ள உருவங்கள், உருவங்களைப் பராமரிக்கத் தூண்டும் அபிமானம், காமம், மோகம் முதலான அறுவகைக் குற்றங்கள் என இவ்வாறு உள்ள சீவ விகற்பச் செயல்கள் அனைத்தும், முற்கூறிய 'எல்லாம் சிவன் செயல்' எனும் உணர்வு முதிரப் பெற்றோரிடமிருந்து விலகி விரைவில் ஓடிவிடுமே தவிரப் பின்தொடர்ந்து வருமோ ? மிகவும் உயர்வான உறுதிநிலையைத் தரவல்ல இந்த மேலான உணர்வுநிலையை எனக்குத் தந்து அருள்க.

9. உன்னதமான, பரிபூரணமான, அகண்ட தத்துவப்பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே ! கருப்பை, முட்டை, விதை, வேர்வை, மனம் என்னும் ஐந்து இடங்களிலிருந்து உடல்கொண்டு தோன்றும் அனைத்து வகையான உயிர்க்கூட்டங்களுக்கும் (பசுக்களுக்கும், தலைவன் (பதி) நீ என்னும் உண்மையை உணர்த்தப் 'பசுபதி' எனும் பெயர்க்கு உரியவனாகவும், மெய்கண்ட தேவர் முதலான சந்தான குரவர்களும், அருளாணையும் அருளாட்சியும் செலுத்திய திருஞானசம்பந்தர் முதலான சமய குரவர்களும் மொழிந்தருளிய திருவாக்குகளின் உட்பொருளாக விளங்குபவனாகவும் திகழும் என் ஐயனே ! உன் பெரும் திருவருளையே எப்பொழுதும் பற்றுக் கோடாகக் கொண்டு நிற்கும் அடியேனது செயல் இப்பொழுது மலையைக் கெல்லி (அகழ்ந்து) எலியைப் பிடிப்பது போன்று பிரயாசை மிகுந்ததாக இருக்குமாயின், துன்பநிலை சிறிதும் அணுகாத உன் தொண்டர்கள் அனுபவிக்கும் பேரின்பநிலை எனக்கு எவ்வாறு வாய்க்கும் ?

10. தேவர்களாலும் உயர்ந்த ஞானியராலும் தொழப்படும் கடவுளே ! அன்புள்ளம் வாய்ந்த அடியார்களின் தலைமைத் தெய்வமே ! இளமை, மூப்பு முதலான நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நிலைக்குரிய பொருளே (வஸ்துவே) ! தேவரும் புகழ்ந்து துதிக்க உள்ள எந்தையாகிய அருணகிரிப் பெருமானின் உள்ளத்துள் சுவானுபூதிச் செல்வமாகத் தெளிவுநிலை கொண்டு திகழ் அருட்செல்வமே ! உன்னதமான, பரிபூரணமான, அகண்ட தத்துவப் பொருளாக விளங்கும் சுப்பிரமணியப் பரம்பொருளே ! மிக உயர்ந்த, தன்னிகரற்ற கொடைவள்ளலாக விளங்கும் நீ என்னை அணைத்துக்கொண்டு அருளை எனக்கு உரிமையாக்காது விடுவாய் எனில் ''உனக்குக் கருணை பாலித்து உன்னைக் காப்பாற்றுவேன்'' என நீ முன்பு கூறியருளிய திருவாக்கு, சத்தியத் தன்மை இழந்து பழுதுபடுமோ என என் உள்ளம் மிகவும் சஞ்சலப்படுகிறது. இவ்வாறு சஞ்சலம் நேருமாயின் என் குறிக்கோள் எவ்வாறு நிறைவுறும் ? சஞ்சித வினைவழி வந்த எனது பிராரப்த சரீரம் இருக்கும்வரை என் வாழ்நாள் எவ்விதமாகக் கழியும் ? உன்னைத்தவிர வேறு யார் எனக்குப் பற்றுக்கோடு ? நின் திருவாக்குப் பழுதுபடாவண்ணம் என் நோக்கத்தை நிறைவேற்றி அருள்க.

# 7. இன்பப்பிரவாகசிவம்

**ச**ந்திர சடாகூட னாய்நின்று சனகாதி
தாபதர்க ணால்வருணரச்
சாற்றாது சாற்றிய சயக்குறிப் பும்பரா
சரன்மக்க ளாறுபேர்க்குச்
சுந்தர வயிற்கடவு ளாய்நின்றவ் வண்ணமே
சொல்லாது சொன்னபொருளுஞ்
சோமசே கரனையொரு சீடனா கக்கொண்டு
சொற்றவுப தேசவுணர்வும்
எந்தவகை யானும்விப ரீதப் படாதவொ
ரெதார்த்தமதி மார்க்கமுடிவாய்
எம்மதங் கட்குமெட் டாதவதி ரகசிய
மெனப்புகல வுளவல்லவோ
இந்தநிலை யைத்தா னியானெய்த நினைவது
ளிரங்கியருள் புரியவேண்டும்
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (1)

**சீ**வபோ தத்தரள முள்ளளவு நத்தந்
திவாப்போல மாறிமாறித்
தேய்ந்தெழு மறப்பொடு நினைப்புமறு மோபெரிது
சிறிதெனும் விகற்பும்விடுமோ
கேவல வபேக்ஷயு முபேக்ஷயு மொடுங்குமோ
கெழுவறங் கலுடமிறுமோ
கிரமமுறை யாயெய்து சனனமர ணங்களுங்
கிட்டாமல் விட்டொழியுமோ
பாவலர்க ளாலும்விவ ரிக்கரிய கைவல்ய
பரமசுக மதுவும்வருமோ
பரமகரு ணாகரப் பெரியதிரு வுளமெங்கள்
பக்ஷமா நின்றுகருதி
ஏவல்கொளு மாயினப் போதசல னங்கெடற்
கென்னதடை யென்னதடையே
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (2)

---

*1. சயக்குறிப்பு = சின்முத்திரை; சயம் = கை.*
*இன்பப்பிரவாக சிவம் – “ஆனந்தவெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்” என்னுந் திருவாசகம் இங்கே சிந்திக்கற்பாலது.*
*2. கலுடம் = பாவம்.*

இப்பியூ னிடைநல்ல முத்தமது பூத்தென்ன
விதரப் புலாலுடற்குள்
இயமான னைத்தங்க வைத்தந்த வுடலிலே
யிட்டபல தொளையிருந்தும்
ஒப்புற விதித்தவேல் வைக்குமுனம் விட்டேக
வொட்டாம லதிசூக்கும
உபாயபந் தம்புரிந் தவ்வுடம் போரில்லி
னுட்கிடந் தானுமாதன்
துப்புடை வியாபியா கிப்பல விடங்களிற்
றுரிதத்தி லெய்திமீட்டுந்
துவக்கிடை யடங்கிநின் றுணரவும் விதித்தவுன்
சூக்கும வருட்சத்துவம்
எப்படியு மெனையெனக் குக்கொடுத் தருளா
திருக்கவலி யற்றதன்றே
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (3)

கேட்டல்சிந் தித்தலா யுளவபர ஞானமது
கிட்டியுள் ளாருமதன்மேற்
கேடற்ற தெளிதல்பர நிட்டையா யுளநலங்
கெழுவுபர ஞானத்தருங்
காட்டுமு னருட்கடிமை யேயாவர் பந்தக்
கசட்டுநெஞ் சுடையநாயேன்
கனமுடைய வன்னோரி லொருவனா யவிர்வனோ
கருணைக் குரித்திலார்க்குங்
கோட்டமில் லாதநின் னடிமைப் பெயர்ப்பெருமை
கூறநடு வுண்டுகொல்லோ
கூறிய திருவருட் பாங்காக வேயெனது
கொள்கைநனி பெருகவடியார்
ஈட்டநடு வேயிருந் துய்யவொரு சித்தமு
மிருக்கவருள் புரியவேண்டும்
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (4)

---

*3. இதரம் = ஈனம்; வடசொல்.*
*ஏல்வை = காலம்; யகரவெதுகை.*
*ஆதன் = உயிர்.*

*4. ஈட்டம் = கூட்டம்; பி – நிகண்டு.*

**மோ**ட்டுவெம் பசிவந்த காலூண் விரும்பிநன்
மோடது புடைக்கமிக்க
மோகமுற் றுண்டவுட னவ்விருப் பின்விளரி
மூசியு ளடங்குமதுதான்
மீட்டும்வரி னவ்விருப் பானதுவு மெழுமிவ்
விதம்போல வுண்ணுமுணவான்
விளர்மேதை மீக்கொண்டு விந்தூறி னாலந்த
வேலைபெண் விழைவுவந்து
வாட்டுமது தீரினதில் வேண்டாமை யெய்துமது
மறுபடியு மூறினந்த
மயலது மெழூஉமிந்த வாதையறு மாறுண்டி
மட்டுப் படுத்தியுறழ்வே
ஈட்டுமடி யார்சங்க மதினா னிருக்கவுமொ
ரெண்ணமருள் புரிய வேண்டும்
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (5)

**வே**ண்டா வெனத்துறந் தவர்கணு மிளம்பிடியர்
வேட்கைமயன் மீண்டுமுண்டாய்
வெதுப்பலா னஃதுண்டி யாலுற்ற தென்பதும்
விருத்தரொடு பேடியர்க்கும்
நீண்டகுறி யோங்கலில் லாதிருந் தும்வஞ்ச
நியரைத் தழீஇமகிழ
நெஞ்சமுண் டாவதா லதுமன வகத்திலே
நின்றெழு விடாயென்பதுங்
காண்டகஞ் செறியிந்த மகியின்மிக வுறுதியிக்
காமநோ வாயதுன்பங்
கைதொடு புசிப்புமன துங்குறைந் தாலலது
கடுகளவு மிறுவதிலையால்
ஈண்டுநா னிற்கவுன் னின்னருட் பேருவகை
யெக்காலம் வாய்க்குமையே
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (6)

---

*5. கால் = பொழுது; பி –நிகண்டு.*
*விளரி = வேட்கைப்பெருக்கம்; ளகரவெதுகை.*
*விளர் = கொழுப்பு, மேதை = இறைச்சி.*

*6. வஞ்சநியர் = பெண்கள்; வடசொல்.*
*காண்டகம் = காடு.*

**இ**தயார விந்தத்தின் மனமது வியாபார
மிடுகால் குணக்கிலுள்ள
இந்த்ரதள மாதியா யீசான தளம்வரை
யியம்பெண் டளங்களினுமே
பதவாளி யாநல்ல சுகுர்தசிந் தனைகொடிய
பண்பாகு கடினசிந்தை
பாவசிந் தனைகெட்ட கோவசிந் தனைமாசு
படுசமு சயச்சிந்தனை
துதமாகு சலனசிந் தனைதரும சிந்தனை
துளக்கவயி ராகசிந்தை
சூழ்கருணி கைதனிற் கனவக்கிர நடுவே
சுழுத்தியென நிற்குமிதனை
இதமான நின்றகவி லார்வசஞ் செய்துய்ய
வெளிதோவெ னந்தாதியே
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (7)

**தோ**டுடைப் போதுபோல் யாதொரு சுகங்கண்டு
துண்டமா னதுமலர்வதுந்
துக்கமது கண்டது சுருங்குவது முண்டெனிற்
றுகளற்ற நிருவிகற்பங்
கூடுமோ கூடாத தேலசங் கதமான
குணரகித பரமவின்பங்
குறுகுவது மெப்படி யுனைத்தஞ்ச மென்பார்கள்
கொள்கைக் குவந்துநித்த
வீடருளு மடிகளே வேதவே தாந்தநெறி
மிளிரவரு பரமபதியே
விபுலமதி லேபணஞ் சோறெனு மிரண்டுமே
மெய்யென் றிருந்துவிளிவார்
ஏடலுக் கெட்டாத விராசிய விலாசமே
யாதினும் வல்லவிறலோய்
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (8)

---

*7. பதவாளி = வரிசைக்கிரமம். பதம் = வரிசை; தகரவெதுகை.*
*துதம் – ‘துரிதம்’ என்பதன்மரூஉ; கலக்கமெனும்பொருட்டு; சூ – நிகண்டு.*
*8. துண்டம் = முகம்.*
*ஏடல் = குறிப்பு, நினைவு சூ நிகண்டு.*

**பு**ண்ணியம் பொருளின்பம் வீடெனப் பெரியர்நூல்
புகலுநால் வகையுமோர்ந்து
புரணகுரு தந்திடொரு மொழிபெற் றதற்காய
போக்கில்விளை நன்னடைகளுந்
தண்ணிய சுகோதய விருத்தியுமொ ரற்பமுந்
தன்னையக லாமலங்ஙன்
தனைவிட் டகன்றதவ றெவ்வளவும் வந்துபின்
சாராம னிற்குமிக்கார்
கண்ணிலுள கடவுளே யிந்தமேன் மார்க்கமுங்
காசுடைய வென்போலறாக்
காமநோ யாளர்க்கும் வருமோ வரற்கொரு
களங்கமில் லுபலாளன
எண்ணம் பகுத்தந்த வெண்ணமு மிறக்குமோ
ரெல்லைதனி லென்னைவைத்தாள்
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (9)

**பி**தாவவ்வை மனைமகா ரிகுளைநட் பில்லமண்
பீதக மெலாம்வெறுத்துப்
பிரிதலுஞ் சுகமழகு வேண்டாமை கருதியுறு
பித்தையை நிமிர்த்துவெட்டி
மதாபிமா னஞ்சாதி பேதந் துறந்துவாய்
வாளாமை கொண்டுபசிநோய்
வரினைய மேற்றுண்டு மிருகரா சன்போல்
வலப்பார்வை யாய்நிற்றலுஞ்
சதாசாது சங்கத்தை நீங்கா திருத்தலுஞ்
சருகாதி யுண்டடவியிற்
சஞ்சரித் திடலுநல் லார்சலன மனமசஞ்
சலமாக நிறுவவன்றோ
இதாகிதமில் சுத்தவிந் நிலையையெற் கருளெந்தை
யெனுமருண கிரியடிகளே
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே. (10)

---

*9. உபலாளனம் = தூய்மைசெய்தல்; சூ – நிகண்டு.*

*10. பீதகம் = பொன். பித்தை = ஆண்மயிர்.*
*வலப்பார்வை = மேனோக்கம்.*

# 7. இன்பப்பிரவாக சிவம்

1. அனைத்துக் குறைபாடுகளிலிருந்தும் நீங்கிய மிகமேலான நிட்டைநிலையில் உதிக்கும் யோகானுபவங்களில் திளைக்கும் அருளாளர்களின் உள்ளத்தில் இன்ப வெள்ளமாகப் பெருக்கெடுக்கும் சிவப்பொருளே! சடைமுடியில் இளம்பிறை அணிந்த திருக்கோலத்துடன் வெளிப்பட்டுச் சிவபெருமான் சனக முனிவர் முதலான நால்வர்க்கும் கூறாமற்கூறியருளிய சின்முத்திரைப் பொருளும், பராசர முனிவரின் குமாரர்கள் ஆறுபேர்க்கு அழகிய வேற்கரப் பெருமானாக வெளிப்பட்டு நீ சொல்லாமற் சொல்லி உணர்த்திய பொருளும், சிவபெருமான் சிஷ்யபாவனையில் தன்னை நிறுத்திக்கொள்ள அவருக்கு நீ உபதேசித்த பிரணவ நுட்பப் பொருளும் ஆகிய இம்மூன்றும் முரண்பாடு சிறிதும் இல்லாது, உள்ளதை உள்ளவாறு காட்டும் நன்னெறி முடிபாகிய சித்தாந்தப் பொருளே ஆகும். வேறு எந்த மதங்களாலும் உணர இயலாத மறை நுட்பப் பொருளும் ஆகும். அவ்வாறு உணர்த்திய உண்மையையே நான் அடைய விரும்புகிறேன். மனம் இரங்கி நீ அருள்புரிய வேண்டும்.

2. அனைத்து மலினங்களிலிருந்தும் விடுபட்டுள்ள மிகமேலான நிட்டைநிலையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கின்ற அருளாளர்களின் உள்ளத்தில் ஆனந்த வெள்ளமாகப் பெருகி எழும் சிவப்பொருளே! ஜீவபோதம் எனப்படும் ஆன்ம சிற்றறிவின் ஊடாட்டம் இருக்கும் வரையிலும் இரவும் பகலும் போல மாறி மாறி மறப்பு, நினைப்பு; பெரியது, சிறியது; விழைவு, வெறுப்பு; புண்ணியம், பாவம்; வினைப்பயன் வழியே முறைப்பட வரும் சனனம் மரணம் – இவை முதலான இருமைநிலைகள் (துவந்துவங்கள், தொந்தங்கள்) அடியரை விட்டு நீங்குமோ? நாவன்மை மிக்க கவிஞர்களாலும் விளக்கிக்கூற முடியாத பரமானந்த நிலை அவர்களுக்குக் கிட்டுமோ? நினது மிகமேலான கருணைமயமான திருவுள்ளம் எம் பக்கமாக இயங்கி ஏவல்கொண்டு நெறிப்படுத்துமாயின், அப்பொழுது ஜீவபோதச் சலனம் அடங்கிவிடுவதற்கு என்ன தடை இருக்க முடியும்?

3. அனைத்துக் குறைபாடுகளிலிருந்தும் நீங்கியுள்ள மிக மேலான நிட்டைநிலையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கின்ற அருளாளர்களின் உள்ளத்தில் ஆனந்த வெள்ளமாகப் பெருகி எழும் சிவபரம் பொருளே! முத்துச் சிப்பியின் உள்ளே ஊன்திரளுக்குள் முத்து தோன்றுவது போன்று, இழிவான மாமிசப் பிண்டமாகிய உடலுக்குள் ஆன்மாவைப் புகுத்தி, உடலில் ஒன்பது துளைகள் இருந்தும் இமைப்பொழுதுக்குள் ஆன்மா யாதேனும் ஒரு துளை வழியே வெளியே சென்று விடாவகையில் அதிநுண்மையாக ஒரு கட்டுக் கோப்புக்குள் வைத்து உள்ளாய். இந்த ஆன்மா உடலுக்குள் இவ்வாறு கட்டுப்பட்டு இருந்தாலும் வியாபகத் தன்மை அடைந்து, மிகவிரைவில் பல இடங்களுக்குச் சென்று மீண்டும் தன் நிலைக்கு வருமாறும் செய்கிறாய். இவ்வாறு செயற்படுத்தும் உனது சூட்சுமமான அருளாட்சி மகிமையானது எந்த விதத்திலாவது என்னை எனக்குக் கொடுக்காமல் இருக்க வலிமை உடையதாகுமோ? எப்படியும் என்னை எனக்குக் கொடுத்துவிடும் என்பது உறுதி.

(என்னை எனக்குக் கொடுத்தல் என்பது, ஆன்மா தனக்கு
உரிய எண்குண நிறைவைப் பெற்று குகசாயுச்சிய நிலையில் திளைத்தல்)

4. குறை ஏதும் இல்லாமல் முழுமைபெற்றுள்ள பரம நிட்டைநிலையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கும் அருட்செல்வர்களின் உள்ளத்தில் சிவானந்தமாகப் பெருகி எழும்

சிவபரம்பொருளே! கேட்டல், சிந்தித்தல் எனும் இரண்டு பயிற்சிகளில் நிற்கும் அபர ஞானிகளும், இவ்விரண்டுடன் தெளிதல், நிட்டை என மேலும் இரண்டு, ஆக நான்கு பயிற்சிகளில் முதிர்ந்துள்ள பரஞானிகளும், அறிவிக்கும் அறிவாக உள்ள உனது திருவருளுக்கு ஆட்பட்டவர்களேயாவர். மலமாகிய பாசப்பிணிப்புக்கு உட்பட்டுள்ள அடியேன், பெருமைக்குரிய அவர்களுள் ஒருவனாக விளங்குவேனோ? நினது திருவருளுக்கு உரிமையாகாமல் அயலாக நிற்போரை 'குகதாசன்' எனும் நினது அடிமைப்பெயரால் அழைக்க நியாயம் உண்டோ? விளக்கிக் கூறுதற்கரிய நின் திருவருள் மயமாகவே எனது எண்ணக் குறிப்பு நன்கு முழுமையாக நிறைவுறவும் அடியார் நடுவுள் இருந்து உய்திபெற ஒரு தெய்விக எண்ணம் எனக்கு வாய்க்கவும் அருள்புரிவாயாக.

5. குறைவற்ற மேலான சிவநிட்டையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கும் அருளாளர்களின் உள்ளத்தில் ஆனந்த வெள்ளமாகப் பெருகி எழும் சிவபரம் பொருளே! வயிற்றுப்பசி வந்தவுடன் அதிக ஆவலோடு வயிறுபுடைக்க உண்பது; உண்டவுடன் பசியானது அடங்க, உணவு வேட்கையும் அடங்கும். மீண்டும் பசி வந்தவுடன் உணவு வேட்கை எழும். இவ்வாறு மீண்டும் மீண்டும் உண்பதால் உடம்பில் கொழுப்பும் மாமிசமும் பெருகும்; இவைபெருக, உயிர்ச்சத்தாகிய விந்தும் பெருகும். விந்துபெருக, மாதர்மீது வேட்கை எழுந்து உளத்தை வாட்டும். பெண் வேட்கை தணிந்ததும் பெண்டிர்மீது ஏற்படும் மோகமும் தணியும். மீண்டும் விந்து பெருக, மாதர்மயல் எழும். இந்த மயக்கமாகிய வாதை அற்றுப் போகுமாறு உண்டியை மட்டுப்படுத்தி, ஞான வேட்கையைப் பெருக்கிக் கொள்வோர்களே உன் அடியார்களாவர். இத்தகைய அடியார் திருக் கூட்டத்துள் நான் சேர்ந்திருக்கும் எண்ணம்பெற நீ திருவுள்ளம் கொள்வாயாக.

6. ஐயனே! குறைவற்ற, மேலான நிட்டைநிலையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கின்ற அருளாளர்களின் உள்ளத்தில் சிவானந்தமாகப் பெருகி எழும் சிவபரம் பொருளே! இந்த உலகியல் தொடர்பான எந்த விவகாரமும் வேண்டாம் எனத் துறந்துள்ள தவசியர்களிடத்தும் பெண்வேட்கையானது தோன்றி வெதுப்புவதால், இப் பெண்வேட்கை என்பது, உலகவிவகாரத்தால் அன்றி உணவாலேயே ஏற்படும் ஒன்று எனத் தெளிவாகும். மற்றும் வயது முதிர்ந்தோர்க்கும் அலிகளுக்கும் கூட இப்பெண்வேட்கை தோன்றுவதால், இவ்வேட்கை அவரவர் உள்ளத்திலேயே தோன்றி முதிர்வது என்பதும் இத்தகைய காமநோயானது உணவையும் மனத்தையும் கட்டுப்படுத்தினாலன்றிக் கடுகளவும் தொலையாது என்பதும் திண்ணம். எனவே இவ்வுலகில் என்சொரூபத்தைத் கண்டு எனக்குள் நான் நிலைக்க, உனது திருவருளால் வரும் ஆனந்தப் பேறானது எப்பொழுது வாய்க்கும்?

7. அனைத்துப் பொருள்களின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் மூல காரணமாக விளங்குபவனே! குறைவற்ற, பரம நிட்டைநிலையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கும் அருளாளர்களின் உள்ளத்தில் சிவானந்தமாகப் பெருகி எழும் சிவபரம் பொருளே! எட்டு இதழ்களை உடைய இதயமாகிய தாமரை மலரில், கீழ்த்திசை இதழ் தொடங்கி வரிசையாக, உள்ளம் பிரதக்ஷிணரீதியில் சஞ்சரிக்கும்போது மனம் ஒவ்வோர் உணர்வின் ஆதிக்கத்துக்கு உட்படுகிறது. கீழ்த்திசை இதழில் உள்ளம் சஞ்சரிக்கும் போது நற்செயல் செய்யும் சிந்தனை; தென்கிழக்கு இதழில் கடின சிந்தை; தென்திசை இதழில் பாவசிந்தனை; தென்மேற்கு இதழில் கோபசிந்தனை; மேற்குஇதழில் சந்தேக உணர்வு; வடமேற்கு இதழில் கலக்கம் தரும் சலன சிந்தை; வடக்கு இதழில் தரும சிந்தனை; வடகிழக்கு இதழில் வைராக்கிய சிந்தனை; தாமரையின் நடுப்பகுதியாகிய கர்ணிகையில், 51 எழுத்துக்களின் நடுவே சுழுத்திநிலை. இத்தகைய அமைப்புடன் திகழும் இதய

தாமரையில் நன்மை பெருகும் வகையில் மனம் சஞ்சரிக்க இந்தமனத்தை நினது பெருமைக்குரிய கருணை இல்லாதவர்கள் தம் வயப்படுத்தி உய்தல் என்பது எளிதாகுமோ ?

8. குறைவற்ற பரம நிட்டை நிலையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கும் அருளாளர்களின் உள்ளத்தில் இன்பப் பிரவாகமாகத் தோன்றும் சிவநிலைப் பொருளே! இன்பநிலை நேரும்போது முகம் பூவைப் போன்று மலர்ச்சி அடைவதும் துன்பநிலை நேரும் போது சுருங்கி வாட்டம் கொள்வதுமாக இருப்பின் மாசற்ற நிர்விகற்ப நிலையானது வாய்க்குமோ ? நிர்விகற்பநிலை வாய்க்கவில்லை எனில், மாயைத் தொடர்பற்ற குணங்களாகிய உபாதிகள் அற்ற மேலான சிவப்பேரின்பநிலை எப்படிப் பொருந்தும் ! உன்னைப் பற்றுக் கோடாகக் கொண்டுள்ள அடியார்களுக்கு அவர்களின் குறிக்கோளுக்கு மகிழ்ந்து, நித்தியமான கைவல்யப் பேற்றை அருளும் முழுமுதற் பொருளே! வேத–வேதாந்த நெறி, பயன்தரத் தக்கநிலையில் சுடர்விட்டு ஒளிருமாறு எழுந்தருளும் பரம பதியே! இவ்வுலகில் பணமும் சோறுமே முக்கியம் எனக் கருதி வீணே இறந்து போகும் அற்பர்களின் நினைவுக்கு எட்டாத, மிக விரிந்ததான அருள்மயமான சாம்ராஜ்ஜியமாகவும் அதன் அதிபதியாகவும் விளங்குபவனே! அனைத்து ஞான நெறிகளிலும் அனைத்து யோக நெறிகளிலும் வல்லமை வாய்ந்த வெற்றிச் செல்வமே! நான் நிர்விகற்ப நிலையைப் பொருந்தி விளங்குமாறு அருள் செய்க.

9. குறைவற்ற, பரமநிட்டைநிலையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கும் அருளாளர்களின் உள்ளத்தில் இன்பப்பிரவாகமாகப் பெருக்கெடுக்கும் சிவநிலைப்பொருளே! ஞானப்பெரியோர்களின் நூல்கள் கூறும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் ஆராய்ந்து, பரிபூரணமான ஞானயோக நிலை வாய்த்துள்ள குரு அருளும் உபதேச மொழியைப் பெற்று அந்த உபதேச நெறியில் நிற்பதால் தோன்றும் ஆன்மிக உயர்நிலைகள், சுகோதயப் பெருக்கம் ஆகியவை ஒருசிறிதும் தன்னைவிட்டு அகலாமல் நிற்கும் நிலையில் உறைந்து நிற்கவேண்டும். அவ்வாறு நிற்கும் போது, அகன்று போன தவற்றொழுக்கம், பிழைச்செயல் முதலானவை மீண்டும் தன்னை வந்து சாராமல் உன்னிப்புடன் இருக்கவேண்டும். இவ்வாறு ஞானநெறியில் முனைந்து நின்று மேம்படுவார் உள்ளத்துள் ஒளிரும் கடவுளே! இத்தகைய மேலான ஞான ஒழுக்கநெறி குற்றமும் காமநோயும் மிகுந்துள்ள என்போன்ற அற்பர்க்கும் வாய்க்குமோ! இத்தகைய நெறி எனக்கும் வாய்க்குமாறு, தூய்மைதரும் மேலான உளப்பக்குவம் வாய்க்கப் பெற்று 'இப்படி உள்ளோம்' என எண்ணும் எண்ணத்தையும் நீங்கி நிற்கக் கூடிய மேலான துரிய எல்லையில் என்னை வைத்து ஆட்கொள்க.

10. எந்தையாகிய அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்துள முழுமுதற் பரம் பொருளே! குறைவற்ற பரமநிட்டையில் தோன்றும் யோக அனுபவங்களில் திளைக்கும் அருளாளர்களின் உள்ளத்தில் இன்பப் பிரவாகமாகப் பெருகி எழும் சிவநிலைப் பொருளே! தந்தை, தாய், மனைவி, பிள்ளை, தோழியர், தோழர்கள், வீடு, நிலம், பொன்–இவற்றைத் துறந்து வெளியேறல், சுகமும் அழகும் வேண்டியதில்லை எனும் எண்ணத்தில் தலையை மழித்துக் கொள்ளல், மதாபிமானம், அனேக வகைப்பட்டுள்ள சாதிகளைப் பற்றிய பற்று ஆகியவற்றைத் துறந்து மௌனநிலையை ஏற்று, பசி ஏற்படின் பிச்சை ஏற்று உண்டு, சிங்கம் போன்று மேல் நோக்கிய பார்வையுடன் இருத்தல், சாதுக்கள் சேர்ந்துள்ள தெய்விக சங்கத்தை எப்பொழுதும் சார்ந்திருத்தல், சருகு முதலானவற்றை உண்டு தலம்தோறும் சஞ்சரித்தல்–இவை முதலானவற்றையெல்லாம் நல்லோர்கள் செய்வது ஓடி அலைபாய்ந்து, கொண்டிருக்கும் மனத்தை, அலையற்ற அசல நிலையில் வைத்துக் கொள்வதற்காக அன்றோ! இன்ப நிலை துன்பநிலை எனும் இரண்டும் அற்ற இத்தகைய சுத்த நிலையை எனக்கு அருள்வாயாக.

# 8. ஆனந்தமானபொருள்

**பொ**ன்போலு மேனிபிறழ் சித்தர்கட வுளர்பரவு
புனிதபதி யாகியெனது
புந்தியைக் கவர்கின்ற வன்பாகி யவ்வன்பு
பொதுளுமுதன் மூலமாகி
மின்போ லுதித்தழுங் கெப்பொருள் களுக்குமொர்
விழுப்பொருள் வியோமமாகி
மிளிர்பரஞ் சோதிமய மாயுள வுனக்கெங்கும்
விகலமில் கால்கரங்கள்
இன்பாய சங்கதந் தருநா வருஞ்செவிக
ளேதமில் லாதகண்க
ளென்பன விருத்தலி னென்னெண்ண மென்சொல்வினை
யெல்லா மறிந்தென்முனே
அன்போ டுரைப்பன வுரைத்துநல் குவநல்கி
யருளல்பிர யாசமன்றே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (1)

**து**ணிவுசான் முதனூல்க ளின்சம்ம தத்தையுந்
தொல்லறிஞர் வெகுதெள்ளிதிற்
சொற்றிடு நடுக்களையு மவமதித் துத்தனது
சொற்பவறி வுக்கிணங்கக்
கணிதமிட வுளநூத னக்கருத் தாலுனது
கணிதமில் லாதபெரிய
காரியந் தனினன்று தீதுபோ லப்பிறர்
கருத்திலே தோன்றியையப்
பிணிதரற் கானசில வற்றையின் னனவென்று
பேசிடத் துணிதல்சிதடர்
பெருமாவை யித்தகைய தென்றறுதி செய்யுமொரு
பெற்றியைச் சிவணுமல்லால்
அணிமல்கு தீர்வைக்கும் வருமோ வராதேயெ
னந்தரங் கச்செருக்கே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (2)

---

*1. அழுங்கல் = கேடு; ழகரவெதுகை.*

*2. சிதடர் = குருடர். பெருமா = யானை.*

**வெ**குமுந்தை யாமிந்த வுலகிலுண் டாகாத
விவகார மெதுவுமில்லை
விளைந்தவிவ காரங்க ளுக்குரிய ஞாயமும்
விளையாது போனதிலையென்
றகல்சிந்தை கொண்டுநன் கோராதிந் நாளோ
ரபூர்வவிவ காரமதுநம்
அகத்தே சனித்துள்ள தித்தைமுன் னோரெவரு
மறியார் வகுக்குநடுவுந்
தகவந்த தில்லையென் றெணுமஞ்ஞை போலுமித்
தரணியிலொ ரஞ்ஞை சொலவோ
சகலசந் தேகமு மிழந்துதெளி வுறுபரம
சாதுக்கள் சரதவன்பின்
அகவின்ப வமிர்தப்ர வாகமே யேழையே
னஞ்சலிக் குங்கடவுளே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (3)

**இ**த்தரையி லன்னையுத ரத்தினி லிருந்துதிக்
கின்றகா லத்திலேயே
எவருக்கு நுதலாதி தானங்க ளிற்றவள
மேமமுறு புண்டரம்பால்
ஒத்தம ணரத்தமுறு புண்டரந் தீட்டியு
முலோகித வுடுக்கையிட்டும்
உயர்சிலுவை யைக்கையி லேதந்து முடிமழித்
துறுகோச வுரியறுத்தும்
அத்தனெனு நீவிடுத் தனைகொலோ ஞெள்ளலிழி
வறைவதற் கெம்மதத்தில்
அம்புலியை யுறழ்துக்க சுகமில்லை யுண்டெலா
வவதியும் பொதுவாகவே
அத்துவித வாணைக்கு ளுளவென்ப துணரா
ரபேதவுணர் வுணர்வதுண்டோ
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (4)

---

*3. விவகாரம் = தருக்கித்துப்பேசுதல். இப்பொருள் விடுத்துப் பதார்த்த ஆராய்ச்சியெனல் கோடற்பாற்றன்று.*

*4. உலோகிதம் = சிவப்பு. உடுக்கை = ஆடை. இச்செவ்வாடை, பௌத்தர் தரிப்பது; திருஞானசம்பந்தசுவாமிகள் திருவாக்கு – (அகத்தியான் பள்ளித் தேவாரத்தில்) ‘‘செந்துவராடையினாரும் வெற்றரையேதிரி புந்தியிலார் களும்’’ எனவும், (ஆப்பனூர்த் தேவாரத்தில்) ‘‘செய்ய கலிங்கத்தார் சிறுதட்டுடையார்கள்’’ எனவும் வருவன கருதுக.*

**சு**தரிசனம் வண்டாதி குறிகளை யுடம்பிலே
சுட்டுவிட யக்கடற்கண்
தோய்பவர்கள் பானா மிறந்தவுட னற்பரம
சுகமண்ணு மென்றிருக்கும்
இதயங்க ளக்குறிக ளிட்டவுடல் விடுமென்னி
னெஙனவை தமக்குரிமையென்
றெண்ணாத தும்புனித ஞானமில் லாதுகதி
யின்றென்ற சுருதிமுடிவின்
விதியையுண ராததும் பேதைமை யெனற்கிந்த
விபுலமிசை யையமென்னை
மெய்ப்பொருள் விரும்புவார் பொய்ப்பொருள் விரும்பவுமோர்
விதியுண்டு கொல்லோவிதை
அதரிசனர் கண்ணறைந் தாவதென் பற்றிலா
ரரசேயெ னறிவினரசே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (5)

**மா**யா விகாரமா யுள்ளமத விவகார
மாயா திருப்பளவுமால்
மனமசங் கத்துவ மிலாதுசங் கேதமயன்
மருவியம் மாயையென்னும்
பேயா லலைப்புண்டு திரிமக்க ளும்விவித
பேதமில் சிவோதயத்தைப்
பெறுவதுண் டோவிவ் விபூதியுமு னடிமையைப்
பின்பற்றி நிற்பதுண்டோ
தேயாத செல்வமே தெள்ளமுதி னின்பத்
திரட்சியே சீனிநெய்பால்
சேர்ந்தமது ரக்குழம் பேகரும் பேநறுந்
தேனே யெனக்கயலதாய்
ஆயாம லென்னகத் தேவலிய வந்தநல்
லறிவேயெ னன்பின்விரிவே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (6)

5. *வண்டு = சங்கு.*

6. *விபூதி = செல்வம், ஐசுவரியம்.*

**உ**தித்தொடுங் கிடுபெற்றி யுடையபுன் மைப்பொருள்க
ளுலகிலுள் ளனவாயினவ்
வுபயவகை கட்குமுத லாயுள்ள மேன்பொருளு
முண்டென்ற லுறுதியதுவே
துதிக்கவுள பரதெய்வ மென்றுமற் றொருவனித்
தொல்லுகம் வனைந்ததெய்வந்
தோற்றாம லெங்கிருக் கிறதெனி னுனக்கெஙன்
றோன்றவிலை யோவங்கெனா
விதிக்கவுள தென்றுமுண ரறிவாளர் நெஞ்சிடை
விளங்குமறி வானநீயென்
மேல்வைத்த வன்பா லியானுமுன் மேலன்பு
மெய்யாக வைத்திஙஙனே
அதிர்க்கும்விண் ணப்பமெல் லாநன்ன ராமா
ரனுக்கிரகஞ் செய்தாளரோ
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (7)

**மெ**ய்யன்பி லாருன்னை நினையா தவாவென்னும்
வேழநுக ருங்கவளமாய்
மேதினி யிருத்தல்போ னானிரா திதுதாறு
மெய்யன்பை யானமட்டும்
பையுளில் லாதுநனி நாடிநா டிப்பெறும்
பவுள்சையெய் தாதிருக்கும்
பரிசையோ சிக்கிலுனை நாடாத வர்க்கிருட்
படலமா நாடியன்பு
செய்யடிய வர்க்குநற் றேசசாய் நின்றருட்
செல்வத்தை நல்குமுன்றன்
திவ்வியதிரு வருளெனுமொ ராதிசத் திக்குரிய
செயல்வலி பிறழ்ந்தவோவென்
றையமுறு கிறதெனது மனமைய நிற்பிரிந்
தடியேனும் வாழ்வதுண்டோ
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (8)

---

*7. உகம் = மண்ணுலகு; பி – நிகண்டு.*
*அதிர்த்தல் = சொல்லுதல்; பி – நிகண்டு.*

*8. தாறு = அளவு; பி – நிகண்டு.*
*பையுள் = அற்பம், நோய்; ணகரவெதுகை.*
*பவுள்சு = சம்பத்து; இச்சொல்லிலக்கணம், திட்பத்தில் (கருணைக் குகப்பிரமமென்னு முதற் பத்தின் 6 – ன் உரையில்) ஓர்க.*

**வ**லியவென் னாணவ மதாவளந் தன்னையுன்
வாளருட் சீயமறைய
வருதுங்க காலமெக் காலமக் காலமுள
மதிநனி துளங்கியென்றன்
சுலவலில் லாநிலையை யோர்ந்தங்க ணறிவித்த
சுத்தவரு ளையுமறிந்தோர்
துரிசற்ற பரையோகி லேநின்று நன்னகைச்
சுகமதுற் றந்நிலையின்மேல்
நலிவில்சிவ மெனுநினைத் தரிசனஞ் செய்துநீ
நானெனும் விகற்பிலாது
நற்சுகா தீதசிவ சாயுச்சி யமுறவோர்
நாட்டமா நிற்கநினையாய்
அலியணுகி டாதடிய வர்க்கென்று மருள்புரிந்
தாளுங் குகப்பிரமமே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (9)

**கே**வல மெனும்பெரிய வந்தகா ரத்தின்மதி
கெட்டுநித் திரைபுரிவதுங்
கிஞ்சின்மதி விளைசகல மென்னுந் திவாவிலக்
கேவலத் தைத்தணந்து
கூவதனை நோக்குநன வாய்விழிப் பதுமுள்ள
கொன்னளவு மறதிநினைவுங்
குறுகாந லத்துவித சுத்தசிவ யோகமுங்
குறுகா தெனுந்தீர்வையைச்
சீவனா கியயா னுணர்ந்ததற் கேற்பவென்
சீர்மதியு மொப்பியதிலோர்
சிறுகில்லை யாயினுமு னற்கருணை யன்றோ
சிறந்துகை கொடுக்கவேண்டும்
ஆவலோ டீரெண் சகச்சிரப் புகழ்சொற்ற
வருணகிரி யிதயமுதலே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே. (10)

---

*9. நகை = ஒளி; திருமுருகாற்றுப்படைக்கண் "நகைதாழ்பு துயல்வரூஉம்" எனவும், முல்லைப்பாட்டுழை "நகைதாழ் கண்ணி" எனவும் வருவன கருதுக. 'அல்லி' அலி – என எதுகைநோக்கிய விகாரம்; இருள்வடிவுடைச் சனிமேற்று.*

*10. 'கு' கூ – என நீண்டது; பூமி எனும் பொருட்டு. கொன் = காலம்; "கொன்பய னிலாமை காலம்" என்பது னகரவெதுகை. 'குறுகா' 'குறுகாது' என்னும் 2 – ல், முன்னையது குறையமாட்டாவெனும் பொருட்டு. பின்னையது எய்தமாட்டாதெனும் பொருட்டு.*

# 8. ஆனந்தமானபொருள்

**1.** இரண்டற்ற கலப்பு நிலையை அருள்வதும், என்றும் நிலைத்திருப்பதுமாகி ஞானப் பெருவெளியாக விளங்கும் ஆனந்தமயமான பொருளே! பொன்னைப் போன்ற உருவம் வாய்க்கப்பெற்ற சித்தர்களும் கடவுளர்களும் போற்றித் துதிக்கும் புனித இறைவனாகி – என் உள்ளத்தைக் கவர்கின்ற அன்புநிலையாகி – அன்பு செறிந்து திரண்டிருக்கும் மூலமுதற்பொருளாகி – மின்னல் போன்று தோன்றி அழியும் அனைத்துப்பொருள்களுக்கும் இடம்கொடுக்கும் சிறந்த ஆகாசவெளியாகி – நீ, மூல ஒளிமயமாக (பரஞ்ஜோதி மயமாக) நிட்கள நிலையில் விளங்குகிறாய். இவ்வாறு விளங்கும் உனக்கு எல்லா இடங்களிலும் பிரசன்னமாகும் ஸர்வலக்ஷணம் வாய்ந்த கால்கள், கைகள், சத்திய மொழிபேசும் நாக்குகள், காதுகள், கண்கள் எனும் அங்கங்களும் இருத்தலின், என் எண்ணம், சொல், செயல் அனைத்தையும் அறிந்து என் முன்னே வெளிப்பட்டுக் கூற வேண்டியதைக் கூறி, வழங்க வேண்டியதை வழங்கி எனக்கு அருள்புரிதல் என்பது உனக்கு ஒரு கடினமான செயல் இல்லையே! மிகவும் எளிதாகவே உன்னால் செயப்படும் செயலன்றோ இது!

**2.** அத்துவித வத்துவாகவும், சத்திய வத்துவாகவும் ஞானப் பெருவெளி வடிவில் விளங்கும் ஆனந்தமயமான பொருளே! 'முதல் நூல்கள்' எனப்படும் ஆகமங்கள் உறுதிப்படுத்திக் கூறும் முடிபுகளையும் உயர்ந்த ஞான குரவர்கள் தெளிவுகொண்டு நிலைநாட்டிய உறுதிக் கருத்துக்களையும் புறக்கணித்துவிட்டு, தமது சிற்றறிவின் அற்பத்தனத்துக்கு ஏற்றவாறு அரைகுறையாக ஆராய்ந்து கொள்ளப்பட்ட நூதனக் கருத்தின் அடிப்படையில் சிலர் மூடத்தனமான முடிபுகளைக் கூறுவர். கேட்போரின் உள்ளத்தில் ஐயப்பாடு முதலிய குற்றங்களைத் தோற்றுவிக்கும் வகையில் அவர்கள் உனது செயல்களுள் "இது நற்செயல்" என்றும் "இது தீய செயல்" என்றும் மனம்போன படி ஆய்ந்து உண்மைக்கு ஒவ்வாத முடிவுகளைக் கூறுவார்கள். அவர்கள் இவ்வாறு கூறுவது குருடர்கள் பெரிய யானையை 'இது இத்தகையது' என்று கணித்துக் கூறும் தன்மைக்கு நிகராகும் எனக் கூற முடியுமே தவிர தீர்க்கமான உறுதி முடிபு எனக் கூறப்படும் தகுதியைப் பெறுமோ? பெறாதே! என் இதய நடுவண் எழுந்துள்ள கம்பீரமும் பெருமிதமுமான தெய்விக உணர்வே! அன்னோர் முடிபு உறுதி முடிபாக ஆகாதே!

**3.** அனைத்து விதமான ஐயப்பாடுகளிலிருந்து நீங்கித் தெளிவு பெற்றிருக்கும் உயர்வான சாதுக்களின் உறுதிப்பாடான அன்புநிலையில் அவர்களின் இதயத்தே வெளிப்படும் ஆனந்தப் பெருவெள்ளமே! அடியேன் முக்கரணங்களாலும் வழிபட உள்ள கடவுளே! அத்துவிதமாகவும் சத்தியமாகவும் ஞானப்பெருவெளி வடிவில் விளங்கும் ஆனந்த மயமான பொருளே! மிகவும் பழைமையான இந்த உலகில் இதுவரை தோன்றாத தருக்க வாதம் எதுவும் இல்லை; தோன்றிய விவகாரங்களுக்குப் பொருத்தமான நியாயத் தீர்வையும் ஏற்படாமல் இருந்ததில்லை, இவ்வாறு விரிவான சிந்தனை கொண்டு ஆராயாமல் "இப்போது ஒரு புதிய தருக்கரீதியான விவகாரம், இதுவரை தோன்றாத விவகாரம் எம் உள்ளத்தே தோன்றியுள்ளது. இதனை முன்னோர்களுள் யாரும் அறிந்ததில்லை. அவர்கள் நியாயப்படுத்திக் கூறியுள்ள முடிவும் பொருந்துவதாகத் தெரியவில்லை" எனக்கூறும் அறிவிலியை நிகர்க்கும் அறிவிலியும் இந்த உலகில் இருக்க முடியுமோ? இருப்பதாகக் கூற முடியுமோ? (இன்னோர் கூறும் முடிபுகளில் என் சிந்தை படியாமல் இருப்பதாக!)

**4.** அத்துவித நிலையிலும் சத்திய நிலையிலும் சிதாகாச வடிவில் வெளிப்பட்டிருக்கும் ஆனந்தமயமான பொருளே! இந்நிலவுலகில், தாய் உதரத்திலிருந்து தோன்றும் பொழுதே நெற்றிமுதலான தானங்களில் திருநீற்றுப் புண்டரம் இட்டோ, வெண்கோடும் சிவப்புக் கோடும் கொண்டுள்ள நாமம் இட்டோ, செவ்வாடை (காவியாடை) உடுத்தியோ, சிலுவையைக் கையில் கொடுத்தோ, தலையை மழித்தோ, ஆண்குறியின் நுனித்தோலை நீக்கியோ யாரையாவது பிறக்கச் செய்திருக்கின்றாயா ? இவையெல்லாம் மதச்சார்பாக ஏற்பட்ட புறச்சின்னங்கள் அல்லவா ? மதங்களுக்குள்ளே உயர்வும் இழிவும் கற்பித்துக் கூற எண்ணினால், எந்த மதநெறியில் மாறிமாறி வரும் சுகங்களும் துக்கங்களும் இல்லை ? இவை அனைத்து மதநெறிகளிலும் உண்டன்றோ ? அனைத்து உணர்வு நிலைகளும் பொதுவாகவே அனைவர்க்கும் உன் இரண்டற்ற அருளாணைத்திறத்தால் உளவாகின்றன என்னும் உண்மையை உணராதார், அபேத உணர்வைப் பெற முடியுமோ ? (ஆனந்த அனுபவப் பேற்றுக்கு அபேத உணர்வுதானே முக்கியம்!)

**5.** துறவறச் செல்வர்க்குரிய அரசே! என் ஞானப் பேற்றுக்குரிய அரசே! அத்துவித, சத்திய, சிதாகாச வடிவில் வெளிப்பட்டிருக்கும் ஆனந்தமயமான பொருளே! சக்கரம், சங்கு முதலான அடையாளங்களை உடலில் சுட்டுக் கொண்டு விட்டு, (மெய்யுணர்வு சிறிதும் கொள்ளாமல்), உலக சுகங்களில் ஆழ்ந்து ஈடுபட்டுக் கொண்டே “நாம் இறந்த பிறகு பரமசுகம் அடைவோம்’ என எண்ணிக்கொண்டிருப்பார்கள். “உடல்நீத்த உடன் இந்தக் குறிகள் எவ்வாறு நமது ஆன்மாவுக்கு உரிமையாகும் ?’ என, இவர்கள் சற்றேனும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. மேலும் "தூய ஞானப்பேறு இல்லாமல் வீடுபேறு கிடையாது என வேத உபநிடதங்கள் கூறும் முடிபையும் இவர்கள் உணர்வதில்லை. இவ்வாறு சிந்திக்காமல் இருப்பதும் உணராமல் இருப்பதும் பேதைமையே எனக் கூறுவதற்கு என்ன ஐயப்பாடு ? மெய்ப்பொருள் நாட்டம் கொண்டோர் பொய்ப்பொருளை விரும்புவதற்கும் இடமுண்டோ ? இந்த உண்மையை ஞானக் கண் வாய்க்கப் பெறாத குருடர்களிடம் கூறி என்ன பயன் விளையப் போகிறது ?

**6.** என்றும் நிலைத்திருக்கும் செல்வப் பேறே! தெளிந்த அமுதத்தின் இன்பமயமான திரட்சியே! சர்க்கரை, நெய், பால் மூன்றும் சேர்ந்துள்ள மதுரக் குழம்பின் சுவைமயமே! கரும்பு போலும் தேன் போலும் உள்ளத்தே இனிக்கும் இறையுணர்வே! எனக்கு அந்நியமாக ஆகிவிடாமல், என் உள்ளத்தே, உன் அவ்வியாஜ கருணை காரணமாக வலிய நுழைந்துள்ள சிவஞானப்பேறே! என் அன்புநிலையின் விரிவே! அத்துவித, சத்திய, சிதாகாச வடிவில் வெளிப்பட்டிருக்கும் ஆனந்தமயமான பொருளே! மாயையின் மாறுபட்ட தோற்றங்களாகத் திகழும் மதவிவகாரங்கள் இருக்கும் வரையிலும், மயக்க அறிவுக்கு உட்பட்ட மனத்தில் கணக்கிற்கு உட்படாவகையில், புறத்தோற்றங்கள், மயல் ஆகியவற்றைக் கொண்டு, அந்த மாயை எனப்படும் பேயால் மக்கள் அலைக்கழிக்கப்படுவார்கள். இவ்வாறு அலையும் மக்கள் அனேகவகைப்பட்ட பேதங்களும் அற்றதாய் விளங்கும் சிவசூரியனின் உதயத்தைக் காணமுடியுமோ ? சிவ சூரிய உதயம் கண்டும் சிவானந்தப் பேறுபெறும் மேலான சிவ– ஐசுவரிய நிலை உன் அடியார்களைப் பின்தொடர்ந்து நிற்பதன்றோ!

**7.** அத்துவித, சத்திய, சிதாகாச வடிவில் வெளிப்பட்டு அருளும் ஆனந்த மயமான பொருளே! தோன்றி அழியும் தன்மை உடைய பொருள்கள் உலகில் உள்ளன எனில், தோற்றம், அழிவு எனும் இரண்டையும் செய்வதாகவும், இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டதாகவும் விளங்கி மேம்பட்டிருக்கும் ஒரு பொருளும் உள்ளது என்பது உறுதியே. இவ்வாறு உள்ளது எதுவோ அதுவே

பரதெய்வம்; மூலக்கடவுள். இவ்வாறு உணராமல், "இவ்வுலகைப் படைத்த தெய்வம் கண்களுக்கு வெளிப்படையாகத் தோன்றாமல் எங்கே உள்ளது ?'' என மற்றொருவன் கேட்பானாயின், ''உனக்கு எந்த இடத்தில் எவ்வாறு தோன்றாமல் இருக்கிறதோ அங்கு அவ்வாறு உள்ளது'' என விடை கூறும்படியாகவும் அம்மூலப்பொருள் உள்ளது. இவ்வாறு உணர்கின்ற ஞானியர் உள்ளத்தில் ஞானமயமாக வெளிப்பட்டிருக்கும் நீ, என்மேல் கொண்டுள்ள அன்புள்ளத்தால் யானும் உன்மேல் மெய்யான அன்புகொண்டு, இவ்வாறு நான் விடுக்கும் விண்ணப்பங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு அவை நன்கு பலிக்குமாறு அனுக்கிரகம் செய்து அருள்வாயாக.

8. அத்துவித, சத்திய, சிதாகாச வடிவத்தில் வெளிப்படும் ஆனந்த மயமான பொருளே! உன்னிடம் உண்மையான அன்பு இல்லாதவர்கள் அவா என்னும் யானையால் விழுங்கப்பட்ட கவளம் போன்று இருத்தலை ஒத்து நான் இந்நிலவுலகில் இருக்காமல், இந்நாள் அத்தகைய உண்மையான அன்பு நிலையைப் பெரிதும் மீண்டும் மீண்டும் வேண்டி, அதனால் பெறக்கூடிய அருளாகிய பெருஞ்சொத்தை நான் இன்னும் அடையாமல் இருக்கும் நிலை உள்ளது. இந்த நிலையை யோசித்துப் பார்க்கில், உன்னைத் தியானிக்காதவர்களிடத்து இருட்படலமாகவும் உன் திருவருளை நம்பி பக்தியும் தியானமும் செய்வோர்க்கு தேஜோமயமான அருட்செல்வத்தை வழங்குவதாகவும் இரண்டு வழிகளில் செயல்படும் உனது திருவருளாகிய ஆதிசக்தி தனது செயற்பாட்டுத் திறத்தில் ஆற்றல் குறைந்துள்ளதோ என என் நெஞ்சம் ஐயப்படுகின்றது. ஐயனே! நின்னைப் பிரிந்திருக்கும் நிலையில் அடியேன் வாழமுடியுமோ ? என்னுடன் இரண்டறக் கலந்து அருள்செய்க.

9. எட்டாமிடத்துச் சனித்துன்பம் வராதவகையில் அடியவர்கட்கு எப்பொழுதும் அருள்புரிந்து ஆட்கொள்ளும் குகபரம் பொருளே! அத்துவித, சத்திய, சிதாகாச வடிவில் வெளிப்படும் ஆனந்தமயமான பொருளே! மிகவும் வலியதான எனது ஆணவமாகிய யானையை நினது திருவருளாகிய சிங்கம் வீழ்த்தக் கூடிய உன்னதமான காலம் எப்பொழுது வரும் ? அந்தக் காலத்தில் என்மனம் அசைவற்று இருக்கும் நிலையைக் கருத்தில் கொண்டு, அந்நிலையில் நீ உணர்த்தும் தூய அருள் நிலையை அறிந்து, அதனால் குற்றமற்ற பரையோக நிலையில் நிற்கவேண்டும்; இவ்வாறு நிற்பதால் சிவப்பேரொளி மிகுந்த ஆனந்தப் பேற்றை அடைந்து, அதற்கும் மேல் சிவமாகிய உன்னைத் தரிசனம் செய்து "நீ'' ''நான்'' எனும் விகற்பமற்ற சுகாதீதமான சிவசாயுச்சியப் பேற்றை அடியேன் பெறும்வண்ணம் நீ திருவுளம் கொள்வாயாக.

10. மிகுந்த பேரார்வத்துடன் பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாக்களைப் பாடி அருளிய அருணகிரிப் பெருமானின் இதய தாமரை நடுவண் எழுந்தருளிய முழுமுதற் பொருளே! அத்துவித, சத்திய, சிதாகாச வடிவில் வெளிப்படும் ஆனந்தமயமான பொருளே! கேவலநிலை எனப்படும் பெரிய அந்தகாரத்தில் (இருள் நிலையில்) உயிர் அடியோடு செயலற்று நித்திரை புரிவது; ஓரளவு அறிவு மலர்ச்சி அடையும் சகலநிலை எனப்படும் பகற்பொழுதில், நித்திரை நீங்கி, உலகவிவகாரங்களைக் கருதிச் செயற்படும் நனவுநிலையாக விழித்திருப்பது; இவ்வாறு உறக்கம், விழிப்பு எனும் இரண்டும் உள்ள காலம் வரையிலும் மறப்பும் நினைப்பும் குறைவுபடாமல் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். இவ்வாறு வருவதால் சுத்த, அத்துவித சிவயோக நிலையையும் அடைய முடியாது. இதுதான் உயர்வான சித்தாந்த முடிபு. இந்த முடிபை, சிற்றறிவுச் சீவனாகிய யான் உணர்ந்து, அதற்கேற்ப என் கருத்தும் ஈடுபட்டுச் செல்வதில் ஒரு குற்றமும் இல்லை எனினும் உனது கருணையன்றோ என் எண்ணம் நிறைவுறக் கைகொடுக்க வேண்டும்!

# 9. ஆனந்தநடனசிவம்

**ப**ரிதியெனு மோர்சடப் பொருளிந்த வுலகெலாம்
பரவுவெயி லாய்விழியினாற்
பார்க்கவுள வெப்பொருள்க ளுக்குமதி விம்மிதப்
பண்டமா யுவமமிலதாய்ப்
பருவமோ ராறுக்கு முதலியா யுளதிதைப்
பண்ணிய நிமித்தமூல
பரனா யனாதியா யசடமா யறிவெனப்
பகரகண் டாகாசமாய்
இருளொளி யெனாவோ ரெதார்த்தவொளி மயமா
யிராநின்ற வுன்னைமனவாக்
கென்பவைக ளைக்கொண் டளப்பதெவ் வாறந்த
விருவகையு மாகநிகழும்
அருமுறைக ளறைகின்ற வுவமங்க ளும்போலி
யாமன்றி யணுவுமொவுமோ
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (1)

**ஏ**டாதவுட லில்லை நடாதநடை யில்லையுள்
ளெண்ணாத வெண்ணமில்லை
இழையாத தொழிலில்லை யேற்காத வேச்சில்லை
யீனாத தாயுமில்லை
படாதபா யில்லை யுடாதவோ ருடையில்லை
பாராத தேயமில்லை
பருகாத வுண்டியிலை யணியாத கலனில்லை
படியாத பாடையில்லை
தொடாதபகை யில்லை யடாதவுற வில்லை
தொடராத துன்புமில்லை
தூயருட் கடவுளே யினியேனு முன்னருட்
சுகநிலையில் வைத்தாளெனா

1. *பருவமோராறு = கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனி லென்பன. இவற்றுள் ஆவணி புரட்டாதி கார்; ஐப்பசி கார்த்திகை கூதிர்; மார்கழி தை முன்பனி; மாசி பங்குனி பின்பனி; சித்திரை வைகாசி இளவேனில்; ஆனி ஆடி முதுவேனி லென்னும் விவரமறிக. கார் = மழைபெய்த லுடைத்து. கூதிர் = குளிர்காற்றுடைத்து. முன்பனி = முன்னிராவிற் பனியுடைத்து. பின்பனி = பின்னிராவிற் பனியுடைத்து. இளவேனில் = இளவெயி லுடைத்து. முதுவேனில் = முதிர்வெயி லுடைத்து.*

அடாவெனது நெஞ்சமும் பரிவொடு மடங்கியழ
லானதே கொள்ளொணாதோ
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (2)

இருவினைத் தொடர்புமோ ரறுவகைக் குற்றமு
மிணக்கமி லைந்துபொறியும்
எழுகின்ற நான்குவகை வாக்கும்வலி குன்றாம
லெழுமும் மலச்செருக்கும்
ஒருசிறிது மில்லாத காலையன் றோமுதுக்
குறைவாகு முற்றுணர்வுதான்
ஒளிவீசு மக்கால முன்னையறி வேனங்க
ணுபயவா தமுமிறந்த
பெருவெளி மகானந்த மயமா யிருக்குமொரு
பேருற்று வாழ்வலெங்கள்
பெருமவுன் றிருவுள்ள மெக்கா லிரங்குமோ
பிழையுளே னறிகிலேனே
அருண்மௌன ஞானஞா னாதீத ககனமே
யமலவின் பப்பரப்பே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (3)

ஓதிநூல் சாமிமொழி சாதனை யெனச்சொல்ல
வுள்ளவொரு மூன்றின்கணும்
உண்மையாய் நின்றாதி யந்தநடு கீழ்மே
லுலப்போ டுதிப்புவிகிர்தஞ்
சாதியெழி லூழுருவ மருவநா மஞ்சலன
சங்காத மாற்றமேதுஞ்
சாராத தாய்வசன மானசந் தாண்டியொரு
சமமின்றி யறிவாகிய
சோதியா யானந்த மயமாக மலருமுன்
சுத்தவீ டடைதலென்போல்
தூயமதி யூற்றமில் லாரெந்த வாறடைவர்
தொண்டர்கம் பலைசீக்குமெம்

---

*4. ஓதிநூல் = ஞானசாத்திரம்; ஓதி = ஞானம்; சூ – நிகண்டு.*

*சாமிமொழி = குருபதேசம். குருவைப்பற்றிப் பிரமாணங்களோ டறியவேண்டிய மேம்பாடு முதலியன, பரிபூரணானந்தபோதத்துக் "காமிய மிலாதுகுரு" என்றற்றொடக்கத்துச் செய்யுளுரையி லுள்ளன.*

*சீத்தல் = தூய்தாக்கல்; சூ – நிகண்டு. ஆதரம் = ஆசை; சூ – நிகண்டு.*

ஆதர நிரந்தர முனக்கடிமை யல்லாம
லார்க்கடிமை யாங்களருளே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (4)

**ப**ச்சிலைக் கீடநடை போலோ ருடம்பினைப்
பற்றியிழி யாக்கைநீக்கும்
பண்பியிவ் வான்மா வெனப்பண்டை யோர்சொற்ற
பழமொழிக் குரியவர்த்தம்
இச்சையுடை யான்மவர்க் கத்துளிரு வினைநிலத்
தெய்தவுள பூதசாரம்
ஏற்காத சிலவந்த வாறுவினை யளவா
யெடுத்திடு முடம்பென்னவே
மச்சுறக் கொள்ளாது செத்தவுட னொருகாய
மருவுமத னான்மத்தியில்
வருமென்னு நரககற் பங்களில நமனென்ற
மறலியு மவத்தமென்றோ
ரச்சமில் லாதறையு மவிவேக ரதிநுட்ப
வறிவுநெறி யுந்தேர்வரோ
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (5)

**த**வமகிமை யான்மனுடர் சுரர்முனைவர் கட்குநற்
சத்யசா பானுக்ரக
சாமர்த்திய முளதென்று மதுசுத்த வறிவான
தடஞானி கட்கற்பமும்
எவனுமுண் டாவதின் றென்றுமொழி தந்துசில
ரிட்டநடு நனைநன்னறா
ஈந்தலரி யீயவிலை யென்பதை நிகர்க்குமீ
தெக்காலு மொவ்வாதெலாச்
சிவமும் பராக்கிரம செல்வமுந் திருவருட்
சிவஞானி கட்கெநாளுஞ்
சிங்காம லுண்டென்று மிச்செல்வ முன்னருட்
டிறநெறி யொரீ இநிற்கும்

---

5. *பூதசாரவிவரம் ‘தன்னையாள் சுவாமி’ என்னும் 21 – ஆம் பத்திலுண்டு. மஞ்சு எனற்பாலது மச்சு என எதுகைநோக்கி வலித்தவாறு. மஞ்சு = அழகு.*

6. *நனை = அரும்பு. அலரி = அலர்ந்த பூ.*
*சிங்கல் = குறைதல்; “சிறுகலே யீன மூனஞ் சிங்கலே” என்பது சூ – நிகண்டு.*

அவஞான வாய்ஞானி கட்கடா தென்றுமுர
சறையலா மெந்தநாளும்
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (6)

மண்ணின்மிசை யாதொரு நலத்தினைக் கருதியே
மனிதரை வணங்குமனிதன்
மகத்தாய நினைவணங் கொண்ணா தெனச்சொலன்
மலமுணுங் கிருமியமுதம்
உண்ணொணா தென்பதைப் பொருவுமுன் னடியர்தம்
முள்ளுக்கு ளனவரதநீ
உண்மையா லவர்வடிவ மெல்லாமு னிலயமென்
றுள்ளாது மனிதவடிவென்
றெண்ணியிகழ் பதகன்மதி வச்ரமுங் கஞ்சனமு
மேகமென் றெண்ணுமூட
ஈனமதி யேயா மெலாவும்பர் முனிவர்களு
மேத்திவந் திக்குமிறையார்
அண்ணலே நின்னடிய ருக்கடிமை யாதலே
யாசற்ற பூதிபூதி
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (7)

சடமாக வுளதத்வ ரூபமத னுடையதரி
சனம்வால் பெறுஞ்சுத்தியுஞ்
சைதன்னிய முடையான்ம ரூபமத னுடையதரி
சனமுமுயர் வுறுசுத்தியுந்
திடமான சிவரூப முந்தெருள் சிறந்தசிவ
தெரிசனமு மலைவிகந்த
சிவயோக முந்திவ்விய சிவபோக முங்கண்டு
சின்மய விலாசமாகச்

---

*7. வச்ரம் = வஜ்ரமென்னும் வைரம்.*

*கஞ்சனம் = கண்ணாடி.*

*8. "சொலின்மற்றையர்க் கொவ்வுமோ" என்பது மற்றையர்க்குச் சொலின் ஒவ்வுமோ என வியையும். சொல்லின் – சொலின் – எனத் தொகுத்தல் விகாரம்.*

*கருவூலம்= பொக்கிசம். கருகூலமென்றுங் கூறுப.*

*அகைத்தல் = அடித்தல்; "உம்ப லகைத்த வொண்முறி யாவும்" என்றார் (மலைபடு கடாத்திற்) பெருங்கௌசிகனாரும்.*

*ஒகரம் = மயில்; பி – நிகண்டு.*

சுடருமொரு பெரியபே றுன்னன்ப ருக்குளது
சொலின்மற்றை யர்க்கொவ்வுமோ
துரியவெளி மயசிதா காசசுக தெய்வமே
சுகவருட் கருவூலமே
அடமான வாணவ வராவைவிறல் கெடவே
யகைக்கவரு பேரொாகரமே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (8)

இருபத்து நான்காய வான்மதத் துவமா
யிராநின்ற வசுசிமாயை
என்னுமொரு பாழுமே ழாயவித் யாதத்வ
மெனவுள்ள வசுசிசுசியும்
மருவுற்ற மாயையெனு மொருபாழு மைந்தாகு
மாண்புந்து சிவதத்வமாய்
வழுத்துற்ற சுசிமாயை யென்னுமொரு பாழுமுறை
வரிசையா யகியிரசிதம்
முருகுற்ற பொன்போல வுளவேனு மங்ஙனே
மூன்றுமண் ணென்றுணர்தல்போன்
முப்பாழு மறிவற்ற சடமெனக் கண்டுதெளி
மூன்றற்கு மப்பாலிலே
அருவப் பெரும்பரம வானென் றளாவுபவ
ரலரோவு னாக்கமுள்ளார்
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (9)

மெய்யுடைமை யீதல்பகை யின்மையின் சொல்பொறுமை
மெய்யுடைய வெவ்வுயிரினும்
விலகாத காருணிய மனமொரு வழிப்படல்
விகாரமின் றுள்ளுக்குளே
தொய்யலா நிற்குமுட் கரணசங் கோசமதி
சுத்தவறி வென்றுசொல்லுந்
துணியின்மா னதீர்த்த மாடிநடு நின்றுள்ள
சுப்பிரதக ராலயத்துட்

---

*9. பாழ் = அபாவம், இல்பொருள். சருவேசுரபதி என்னும் 37 – ஆம் பத்தின் 6, 7– ஆந்திருப்பாட்டுக்களில் விவரமறிக.*
*அகி = இரும்பு; ககரவெதுகை காண்க. இரசிதம் = வெள்ளி.*

*10. தொய்யல் = இன்பம்; பி – நிகண்டு, தகரவெதுகை.*
*சுப்ரம் என்னும் வடசொல் விளக்கமுடைமை குறிக்கும்.*

பையுளில் லாதுனைக் கண்டுகளி கூருமோர்
பாக்கிய முளார்தம்மருட்
பார்வைக் கிலக்காகு நாளரோ நலநாள்
பரிந்துதயை குயிறல்வேண்டும்
ஐயனே யருணகிரி மெய்யனே யெனையாளு
மப்பனே யொப்பிலானே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே. (10)

# 9. ஆனந்தநடனசிவம்

**1.** கருணைமயமான பேரின்பநிலையாக அடியர்களுக்கு விளங்கும் பொருளே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம்பொருளே! சூரியன் எனும் சடப்பொருள், இவ்வுலகெங்கணும் பரவிஇருக்கும் வெய்யிலாகவும், கண்ணால் காணக்கூடிய ஒளிப்பொருள்கள் அனைத்திலும் மேம்பட்டு ஒளிரும் அதிவிம்மிதப் பொருளாகவும், உவமை அற்றதாகவும் இளவேனில் முதலான ஆறுபருவங்களும் முறையாகத் தோன்றுவதற்குரிய முதற்காரணமாகவும் திகழ்கிறது. இத்தகைய சூரியனையும் உருவாக்கிய நிமித்த காரணனாகவும் மேலான இறையாகவும், தோற்ற ஒடுக்கம் இல்லாததாகவும், சைதன்னிய வத்துவாகவும், அகண்ட சிதாகாசமாகவும், இருள், ஒளி எனும் இருநிலைகளையும் கடந்ததான தன்னியல்பான தேஜோமயமாகவும் நீ திகழ்கின்றனை. இத்தகைய உன்னை மனத்தாலும் வாக்காலும் எவ்வாறு அளக்கமுடியும்? இந்த மனம், வாக்கு எனும் இரண்டின் மயமாகவும் உள்ள ஞானநூல்கள் உன் தொடர்பாகக் கூறும் உவமானங்களும் போலியே ஆகுமன்றி, உண்மையில் அணு அளவுக்கேனும் பொருந்துமோ? (அனைத்துக்கும் அப்பாற் பட்டதான பரம்பொருள் நீயன்றோ!)

**2.** அடியார்களின் உள்ளத்தில் அன்பாக ஊற்றெடுக்கும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம் பொருளே! நான் இதுவரை எடுக்காத உடல் இல்லை. (அனைத்து ஜீவன்களாகவும் பிறவியெடுத்துள்ளேன்); மேற்கொள்ளாத நெறிகள் இல்லை; எண்ணாத எண்ணம் இல்லை; செய்யாத தொழிலும் இல்லை; எனக்கு ஏற்பட்டிராத இழிப்புரைகளும் இல்லை; என்னை ஈன்றெடுக்காத தாயும் இல்லை; என்னால் பயன்படுத்தப்படாத பாய், உடை முதலான உலகியல் வத்துக்களும் இல்லை; வாழ்ந்து பார்க்காத இடமும் இல்லை; உண்ணாத உணவும் இல்லை; அணியாத ஆபரணங்கள் இல்லை; படிக்காத மொழி இல்லை; என்னைத் துன்புறுத்தாத பகையும் இல்லை; என்னோடு பொருந்தாத உறவு முறையும் இல்லை; நான் அனுபவித்து அறியாத துன்பமும் இல்லை; "தூய அருள்மயமான கடவுளே! இனிமேலாயினும் நினது அருள்மயமான சுக நிலையில் என்னை வைத்து ஆட்கொள்க" என என் மனம் மிகவும் பரிவுடன் அடங்கி அழுகின்றதே! இப்பொழுதாவது என்னை ஏற்றுக்கொள்ளமாட்டாயோ!

**3.** அருள்மயமான, மௌனநிலைக்குரியதாகவும், ஞானமயமாகவும் ஞானநிலைக்கு அப்பாற்பட்டதாகவும் விளங்கும் வெளியே! மாசு மறுவற்ற பேரின்பப் பரப்பே! அடியார்களின் உள்ளத்தில் அன்பாக ஊற்றெடுக்கும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து

இயற்றும் சிவபரம் பொருளே! நல்வினை தீவினை ஆகிய இருவினைத் தொடர்ச்சி, காமம் முதலான அறுவகைக் குற்றம், இணக்கம் கொள்ளாத ஐம்பொறிகள், நால்வகை வாக்கு, இறுகி இருக்கும் மும்மலப் பிணிப்பு இவை அனைத்தும் முழுமையாக நீங்கிய போதன்றோ பேரறிவுநிலை எனப்படும் முற்றறிவுடைமை (சர்வக்ஞத்துவம்) வாய்க்கும்! அத்தகைய முற்றறிவு வாய்த்த நிலையில் சிவ ஒளிமயமாகத் திகழ்ந்து உன்னை அறிவேன்; அப்பொழுது "உண்டு" 'இல்லை' எனப் பேச உள்ள உபய வாதங்களும் நீங்கப் பெற்ற பேரானந்தப் பெருவெளிமயமாக இருக்கும் பெருமையை நான் அடைந்து வாழ்வேன். எங்கள் பெருமானே! இந்நிலையை யான் அடைய நின் திருவுள்ளம் எப்பொழுது இரங்கி அருளும்? குற்றங்கள் மலிந்துள்ள என்னால் அறிய முடியவில்லையே.

4. அடியார்களின் உள்ளத்தில் அன்பாக ஊற்றெடுக்கும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம் பொருளே! ஞான சாத்திரங்களை ஐயம்திரிபறப் பயிலுதல், குரு உபதேசம், தியானம் முதலான சாதனைநெறியில் நிற்றல் – எனும் மூன்றிலும் சிரத்தையாக ஈடுபட்டு, முதல்நிலை, இறுதிநிலை, நடு, கீழ், மேல், அழிவு, தோற்றம், மாறுபாடு, சாதி, வினைப்பற்று, உருவம், அருவம், பெயர், அசைவு, ஆகிய இத்தகைய விகற்ப உபாதிகள் (இடைச் சேர்க்கைகள்) ஏதும் பொருந்தாதாகவும், வாக்கு மனம் இரண்டையும் கடந்ததாகவும். தன்னிகரற்றதாகவும், ஞானமயமாகவும் ஜோதியாகவும், ஆனந்தமயமாகவும் விளங்கும் உனது அதி தூய்மையான பேரின்ப வீட்டு நிலையை அடைதல் என்பதை, தூய அறிவும் அன்பாகிய ஊற்றும் இல்லாது வறண்டிருக்கும் என்போன்ற கொடியோர் எவ்வாறு அடைவர்? அடியார்களின் மனக்கலக்கமாகிய இடர்ப்பாட்டை நீக்கித் தூய்மையும் தெளிவும் கொடுக்கும் அன்புப்பிழம்பே! நாங்கள் எப்பொழுதும் உனக்கு அடிமையேயன்றி வேறு யாருக்கு அடிமை? எமது உறுதிநிலை கண்டு அருள்புரிவாயாக.

5. அன்பர்களின் உள்ளத்தில் பேரன்பாக ஊற்றெடுக்கும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம் பொருளே! "பசுமையான இலையில் ஊர்ந்து செல்லும்புழு, ஓர் இலையைவிட்டு வேறோர் இலைக்குச் செல்வது போன்று, எடுத்துள்ள இழிவான உடம்பினை விட்டு வேறோர் உடம்பைப் பற்றும் பண்புடையது இந்த ஆன்மா" என்று முன்னோர் கூறிய பழைமையான உண்மைக் கூற்றின் உட்கருத்தை உணர வேண்டும். "இச்சை வயப்பட்டிருக்கும் உயிர்க்கூட்டங்களுள், பூதசார சரீரம் ஏற்காத சில உயிர்கள் தத்தம் வினை அளவுக்கு ஏற்றவாறு இருவினை நீக்கத்துக்குரிய இந்நிலவுலகில் உடல் எடுக்கும்" என்பதே அக்கூற்றின் உண்மைப் பொருளும் நுட்பக்கருத்துமாகும். இவ்வாறு செவ்விதாகப் பொருள் கொள்ளாமல், "இறந்தவுடன் இந்த ஆன்மா வேறோர் உடம்பைப் பெறுதல் இயல்பே; எனவே இடையிலே அது சேர்வதாகக் கூறப்படும் நரகம் முதலான உலகங்கள் இல்லை; யமன் என ஒருவன் உளன் எனக் கூறுவதும் அபத்தமானது' எனத் தெளிவில்லாமல் பேசும் விவேக ஞானமற்ற மூடர்கள், அதிநுட்பமான ஞானநெறியின் ஆற்றலை ஆய்ந்து உணர்வார்களோ?

6. அன்பர்களின் உள்ளத்தில் பேரன்புப் பெருக்காக விளங்கும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம் பொருளே! தவ வலிமையால், மானுடர், தேவர், முனிவரர்கள் முதலானோர் சாபம் கொடுக்கும் ஆற்றலும் சாப விமோசனம் கொடுக்கும் ஆற்றலும் உடையவர்களாக விளங்குவர் என்றும் இத்தகைய ஆற்றல் தூய, ஞானமயமாக விளங்கும் மகிமைமிக்க ஞானியர்க்கு ஒரு சிறிதளவேனும் எங்கும் உண்டானதில்லை என்றும்

சிலர் வரைந்துள்ள முடிபானது – அரும்பு தேனைக் கொடுத்தது; ஆனால் மலர்ந்த மலரைக் கொடுக்க வில்லை எனக் கூறுவதற்கு நிகராகும். அன்னார் கூற்று எப்பொழுதும் எள்ளளவும் பொருந்தாது. மங்களப் பேறுகள் அனைத்தும் பராக்கிரமச் செல்வமும், திருவருட் பேற்றுக்குரிய சிவஞானிகளுக்கு எப்பொழுதும் குறைவில்லாமல் நிறைந்திருக்கும் என்றும் இத்தகைய செல்வப் பேறு உன் திருவருள் ஆற்றலை நீங்கி நிற்கும் – வீணான பகட்டுரை கூறும் அபக்குவ ஞானிகட்கு ஒருபோதும் வாய்க்காது என்றும் எப்பொழுதும் முரசறைந்து முழங்கலாம்.

7. அடியார்களின் உள்ளத்தில் அன்புப்பெருக்காக எழும் இன்ப நிலையே, என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம் பொருளே! யாதேனும் ஒரு பயனைக் கருதி சாதாரண மனிதரை வணங்கும் மனிதன், அனைத்தினும் மேம்பட்ட பெருமைக்குரிய உன்னை வணங்கக்கூடாது எனக் கூறுதல், மலத்தை உண்ணும் கிருமி அமுதத்தை உண்ணக் கூடாது என்று கூறுவதோடு ஒக்கும். உன் அடியவர்தம் உள்ளத்துள் நீ எப்பொழுதும் பிரசன்னமாகி இருப்பதால் அவர்களது வடிவங்கள் உனது திருக்கோவிலேயாம் என்று கருதாமல் அவர்களைச் சாதாரண மனித வடிவங்களாகவே கருதி இகழும் அற்பனின் அறிவானது வைரமும் கண்ணாடியும் ஒன்றெனக் கருதும் மூடத்தனமான, கீழ்மையான அறிவாகும். தேவர்கள் அனைவரும் முனிவர்கள் அனைவரும் போற்றித்துதிக்கும் உன்னதமான இறைமை நிலைக்குரிய அண்ணலே! பெறற்கரிய செல்வத்துள் பெரும் செல்வம் என்பது உன் அடியவர்களுக்கு அடிமையாதலே. இந்தச் செல்வத்தை எனக்கு வழங்கி அருள்க.

8. துரிய வெளிமயமான சிதாகாச வடிவில் விளங்கும் குக தெய்வமே! பேரின்பமயமான அருட்கருவூலமே! நீங்குதற்கரிய ஆணவப் பாம்பை அதன் வலிகெடுமாறு வீசி அடிப்பதற்காக விரைந்துவரும் பெரிய மயிலே! அடியவர்களின் உள்ளத்தில் அன்புப்பெருக்காக எழும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம் பொருளே! சடத்தன்மையில் உள்ள தத்துவங்கள் தொடர்பாக நிகழும் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என உள்ள மூன்றும்; சைதன்யத் தன்மையில் உள்ள ஆன்மத் தொடர்பாக நிகழும் ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி – என உள்ள மூன்றும்; உறுதிப்பாடு உடைய சிவரூபம், தெளிவு நிலைக்குரிய சிவதரிசனம், முரண்பாடுகள் அனைத்தும் நீங்கிய சிவயோகம், திவ்வியமான சிவபோகம் – என உள்ள நான்கும் ஆகிய தசகாரிய அனுபவங்களையும் பெற்று சின்மயவிலாசமாகச் சுடர்விட்டு ஒளிரும் மகிமைமிக்க சிவப்பேறு உன் அடியார்களுக்கு மட்டுமே உரியதாகும். இது மற்றையோர்க்கும் வாய்க்கும் எனல் பொருந்துமோ ? இந்த உயரிய சிவப்பேற்றை எனக்கும் அருள்க.

9. அடியார்களின் உள்ளத்தில் பேரன்பாகப் பெருகி எழும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம் பொருளே! இருபத்து நான்கு தத்துவங்களை உள்ளடக்கிய ஆன்மதத்துவம் எனவிளங்கும் அசுத்த மாயை என்பது முதல் பாழ்; ஏழு தத்துவங்களை உள்ளடக்கிய வித்யா தத்துவம் என விளங்கும் சுத்த அசுத்தமாகிய மிசிரமாயை என்பது இரண்டாவது பாழ்; ஐந்து தத்துவங்களை உள்ளடக்கிய சிவதத்துவம் என விளங்கும் சுத்தமாயை என்பது மூன்றாவது பாழ். இம் மூன்றும் முறையே இரும்பு போன்றும், வெள்ளி போன்றும், பொன் போன்றும் திகழ்பவை; எனினும் இரும்பு, வெள்ளி, பொன் ஆகிய மூன்றுமே, அடிப்படையில் மண்ணேதான் என உணர்வது போன்று மூன்று பாழ்களும் அறிவற்ற சடப்பொருளே என்று தெளிவாக உணர்ந்துகொண்டு அவற்றை நீங்கி, முப்பாழுக்கும் அப்பாற்பட்ட

பெருவெளியில் நிஷ்களமான பரம ஆகாசம் போன்று விளங்குபவர் அல்லரோ உன் திருவருட்பேறு பெற்ற அருட்செல்வர்கள்! இவ்வாறு அடியேனும் விளங்க அருள்செய்.

10. ஐயனே! அருணகிரிப் பெருமானுக்குரிய மெய்ப்பொருளே! என்னை ஆட்கொள்ளும் தந்தையே! ஒப்பில்லாத பொருளே! அடியார்களின் உள்ளத்தில் பேரன்பாக முறுகி எழும் இன்பநிலையே! என் உள்ளத்தே ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் சிவபரம்பொருளே! மெய்யுடைமை, கொடை, பகையின்மை, இன்சொல் உடைமை, பொறுமை, உடம்பெடுத்துள்ள அனைத்து உயிர்களிடத்தும் எப்பொழுதும் கருணை பாலித்தல், மன அடக்கம், மாறுபாடு ஏதும் அற்றதாய் இன்பமயமாக விளங்கும் வகையில் அந்தக்கரணங்களைச் செம்மைப் படுத்துதல், பேதங்கள் அனைத்தையும் உதறிஎறிந்து தூய்மைபெற்றுள்ள சிவஞானம் எனச் சொல்லப்படும் ஒப்பற்ற மானச தீர்த்தங்களில் நீராடித் தூய்மை பெற்று, இதயநடுவண் உள்ள பேரொளி விளக்கம் மிகுந்த தகராலயத்துள் முழுமையாக உன்னைத் தரிசித்துப் பேரானந்தப் பெருநிலையில் திளைக்கும் சிவப்பேறு உடைய செல்வர்களின் திருப்பார்வைக்கு இலக்காகும் நாளன்றோ நல்லநாள்! இத்தகைய *நன்னாள் எனக்கு வாய்க்குமாறு மனமிரங்கி அருள்புரிய வேண்டும்.

---

# 10. நின்மலானந்தபரம்

**ஆ**டகந் தன்னிற் பதித்தமணி யணிகல
னலங்கார மாயியங்க
அதிநறா நாறுநறு மலர்மிலைந் தத்தர்முரு
காதிகள பங்கள்கமழ
நீடழகு மல்குநல் லுடையசைத் திளநகை
நிலாநிலவ வன்னமதனை
நேர்நடையு மஞ்ஞையின் சாயலுங் கோகில
நிகர்த்தவின் னோசைமதருந்
தோடமின் மலர்முகத் திலகுபசு மஞ்சளுந்
துத்திபடர் தனபாரமுஞ்
சுவர்ணமய மேனியு முடைப்பருவ நங்கைமுன்
றோன்றினும் பேரின்பமே
நேடறிவு ளார்கள்சிற் றின்பப் பொருட்டம்பர்
நெஞ்சைவிடு வாரோவெனும்
நிச்சய முணர்ந்துமதை நானச்ச னன்றோவெ
னின்மலா னந்தபரமே. (1)

**பொ**றையடக் கந்தயா வின்சொல்சிவ பத்திமைப்
புண்ணியம் புனிதமோக்க
பூரண மிவற்றைநச் சிடுமெனது நன்மனப்
புத்திக்கும் வக்ரம்வெகுளிக்

கறைவன்மை கொடுமொழி யதன்மமவ பத்திமைக்
கட்டுடைமை கண்டத்துவங்
கருதுமட மனசுக்கு முண்டாகு கலகக்
கலாங்களைக் காண்கின்றயான்
மிறையற்ற நடுவனா நின்றடிக் கடிஞாயம்
விவரிக்க வுள்ளவொழியா
வினைதனக் காற்றிலே னாற்றிலே னந்தோவென்
மெய்க்கடவு ளாயநீயோர்
நிறைகருணை செய்யினிவ் வண்ணமு மடுக்குமோ
நிகரிலா வாற்றலுடையோய்
நித்தபரி பூரணப் பரசுப்பிர மணியமே
நின்மலா னந்தபரமே. (2)

**எ**ன் * கருத் தறியா ரெனைப்பேத வாதியென்
றிழிமொழி தரற்கிங்ஙனே
எய்திற்றவ் வாறுமொழி தந்துளார் நந்தீர்வை
யேகான்ம வாதமான
தென்மலி யபேதவா தமெனப் பறைந்துசக
சீவபர மெக்காலமுஞ்
செத்தற்ற மித்தையவை சத்தான வத்துவைச்
சேர்ந்தன வரைந்துவேறு
சொன்மொழி பொருந்தாது பன்னுமொரு மூன்றெனத்
தோன்றித் திளைத்தொடுங்கு
சொபாவமா யுள்ளதுவு மப்பிரம மேயென்று
சொல்லியொரு போக்குவரவில்
நின்மலப் பொருளாய வுனையே விகாரமாய்
நெஞ்சமஞ் சாதுதீர்க்கும்
நெறிவழுவை யுஞ்சுத்த சன்மார்க்க மொப்புமோ
நின்மலா னந்தபரமே. (3)

**ச**த்திய சிவானுபவ வறிவாளர் திரிபுடி
தணந்தநன் னிலைதன்னிலே
தாமது வெனற்குமது நாமிலை யெனற்குமொரு
சார்பில்லை யிதுவேமனஞ்

---

*3. ★ இக்கருத்து – இதனடுத்த திருப்பாட்டிலுள தெனினும் **3** – ஆம் பத்தின் "முந்தை நாளிற் சாருவாக னுலகாயதன்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கண் "இத்தீர்வையே எமது முடிவான சித்தாந்தம்" என வரைந்தது கொடே இனிதறியக் கிடக்கின்றது. பின்னே வரூஉங் 'குகசம்பு' என்னும் **14** – ஆம் பத்தின் முதற்றிருப்பாட்டு மிப் பொருளுடைத்தே.*

*தென் = அழகு; "தென்னிசை வனப்பு" என்பது னகரவெதுகை.*

செத்தறிவு மயமான முத்தர்நிலை யாமிதைச்
சீவபர வைக்கியமென்று
செப்பரிய வாசா மகோசர மெனச்சுருதி
தெற்றெனச் சொனதையுணரா
மத்தர்மன வாக்கினா லொன்றிரண் டென்னுமொரு
வரையறை விதித்துநிற்கும்
மதங்கட் கிணங்கப் பிதற்றுதல் சதாசார
மார்க்கமுடி வுக்கொவ்வுமோ
நித்திய சிதானந்த வாரியே தமியனே
னெஞ்சிருளை யுண்ணுநிழலே
நிறைவான திருவருட் கருவூல மேயெங்க
ணின்மலா னந்தபரமே. (4)

**நோ**க்கின்ற நயனங்கண் மூடுற்ற காலந்த
நோக்கிலே நின்றதிட்ப
நுட்பங்க ளாயவுரு வெல்லா மறைந்தென்ன
நொய்யவுணர் வாயநெஞ்சம்
போக்கின்றி யிரிகின்ற துரியநித் திரையிலே
புவனமுந் தானென்பதும்
பொய்யென மறைந்தமையி னில்லாத பொய்யெனப்
போமோ சிவானுபூதி
ஆக்கமொன் றுள்ளார்கண் மட்டிலவை யழியாம
லழிவுற் றிருக்குமென்னும்
ஐயமில் லாதநடு வேநல்ல நடுவென்
றதிர்க்கலா மெக்காலமும்
நீக்கம்வம் பில்லரிய சிற்பர விலாசமே
நிகரிலின் பப்பிழம்பே
நிசாதிக்ய பரசுப்ர மண்யமே யென்னையா
ணின்மலா னந்தபரமே. (5)

**வி**காரமொன் றில்வாச னாக்ஷயம் பிரசன்ன
மீக்கொண்ட தத்வஞானம்
விலகாத நன்மனோ லயமென்னும் மூன்றுமே
வீடாகு மென்றனாதி

*5. அழியாமலழிதல் = பேரின்பமயமாதல்.*

*6. பிரசன்ன மீக்கொண்ட தத்வஞானம் = சொரூபசிவம் மறையாது காட்டும் பதிஞானம், பதியினனுக்கிரக ஞானம். "வாதத்தி லொன்றுமில்லை" என்றமையின், இங்குணர்த்துமொரு வீடு – மௌனநீத்த தருக்கமுடையார்க் கெய்தாதென்பதூஉம், மத்திய கற்பனா கௌரவ மதவாதச் சண்டைகளுள் எஃது மிந்நூற் குடம்பாடில்லை யென்பதூஉம் அறியக்கிடக்கின்றன; 3 – ஆம் பத்தின் "முந்தைநாளிற் சாருவாக னுலகாயதன்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரை கருதுக.*
*இந்தனம் = விறகு. நிகூடம் = ஆழம், மறைவு ; வடகிளவி.*

மகாமறையி னந்தநூ லெல்லாம் வழுத்துமிவ்
வகையுணர்ந் துள்ளநல்லோர்
வாதத்தி லொன்றுமிலை நாதத்தின் மேனிற்கும்
வழிபிடித் திந்தனத்தே
மிகாதுமறை வுற்றுக் கிடக்குமழ லேய்ப்பவே
விறன்மலத் துள்ளமிழ்ந்தி
மேதையில் லாதிருக் கின்றவுட் பொருளையவ்
விறகைக் கடைந்தறிதல்போல்
நிகூடமற் றுளதிரு வருட்டகவி னாற்பரம
நிட்டையிற் கண்டுகொளலே
நியாயமென நிற்பரே னோர்க்கிதனை யோதிலென்
நின்மலா னந்தபரமே. (6)

இந்தனத் துள்ளெரி மறைந்திருப் பளவுமதை
யிந்தன மெனப்புகல்வதன்
றெரியென் றியாருமறை யார்களது புரையமல
மென்றபா சத்தினிற்கும்
அந்தரங் காறுமறி யாதபசு வென்றுமே
லமலபர மென்றுமதுவே
அத்துவித வாழ்வென்று மறியாத பேதைகட்
கறிவிக்க முயலிலுற்ற
பந்தச் சழக்குடை மதாபிமா னச்சவம்
பற்றவொட் டாதகற்றிப்
பகைதந்து பொய்த்தநெறி யேமெய்த்த நெறியெனப்
பண்ணுவதி லென்னதடையோர்
நிந்தையின் றுய்யுநிலை தந்தென்னை யாளவுள
நிட்களா னந்தசிவமாய்
நிகழ்கின்ற திவ்வியதே சோமயா னந்தநிச
நின்மலா னந்தபரமே. (7)

அறிவுநடை யைப்பிரதி பாதிக்கு மறையென்னு
மாரணந் துவிதமுண்மை
யாலரோ வத்துவித நீத்தவசி பதகதியை
யத்துவித மென்னுமொழியால்
நெறியொடு விளக்கிற் றலாலொன் றெனுந்தன்மை
நிகழுமா றேகமென்றே
நிகழ்த்தா திராதென வியத்தமா கச்சுகுர்த
நெஞ்சுடையர் பக்ஷபாத

---

7. சவம் = பேய். 8. திவோதயம் = ஆகாய உதயம்; திவம் = ஆகாயம்.

வெறியின்றி நன்னடுவி னின்றறிந் திதுவேமெய்
வேதத்தி னுச்சியுணர்வாய்
மிளிர்சைவ நூன்முடிவு மென்றுணர்ந் தழியா
விழுத்தவந் தன்னிலுயர்வார்
நெறியிலா ரிதனையறி யாதுமுறை மாறியொரு
நிலையின்றி யுழல்வரந்தோ
நிச்சய திவோதய சிதாகாச தெய்வமே
நின்மலா னந்தபரமே. (8)

**தி**மிரங் கடுக்குமடர் பாசபல மெங்கணுஞ்
செறியிற் பெரும்பதியினைத்
தெரியவொட் டாதுதகை யாதோவொ ளொளியாய
தெய்வத்தின் முன்றிமிரமாம்
விமலமில் லாதமல பாசமு மிருக்குமோ
மிக்கசித் தாந்திகாண்மெய்
விளக்குவீ ரென்றொருவன் வினவில்வெரு குக்கண்ணை
விரியிருண் மறைத்திடாவா
றமலபதி தனையுமல மாவரிக் காதென்று
மறிவான வாத்துமாவை
அண்மிவள ராக்கைபோ லத்தெய்வ முன்பாச
மதுவுமுண் டென்றுமறிவு
நிமிருமெய் யாயவனு பூதிக்க ணப்பாச
நிகழ்பரிதி முன்னிருட்போல்
நீங்காம னீங்குமென் றும்பிறர்சொ லாரோவெ
னின்மலா னந்தபரமே. (9)

**ம**லசத்தி விட்டநற் சைதன்ய மெல்லாநி
மலசிவந் தன்னைமருவி
மடியா திருக்குமெனி னச்சிவ மதற்கீனம்
வாராதோ வென்பருணர
உலகத்தி லேபெத்த ராய்நிற்கு முயிர்தோறு
முபயமின் றேகமாக
உள்ளும் புறம்புநின் றுளசிவ மளப்பிலா
வுயிர்கடன் னைக்கூடுகால்

---

*9. கடுத்தல் = உவமை யாதல்.*

*10. பெத்தநிலையிலுஞ் சிவத்தினோடு அத்துவைதமாகக் கூடியிருக்குமுயிர், சுவானுபவ வாயிலாகவுமடையுங் காலமே ''கூடுகால்'' எனப்பட்டது.*
*கிறி = பொய்; ''கிறியுங் கீழ்மையும்'' என்றோதுந் திருவாசகத்து அற்புதப் பத்தும். சத்தாகிய சிவம், சித்தோடு ஆன்மாவையும், ஆனந்தமென்னும் மதர்ப்போடு பாசத்தையுங் கூட்டிச் சச்சிதானந்தமாக நிறுவுதன் முத்தி யென்பது சுருதியாதி பிரமாணவாயிலாகப் பெரிதுஞ் சாதிக்கப்படுதலைத் தகராலய ரகசியத்தே ''இனமும் பகிர்முகம்'' என்றற் றொடக்கத்துச் செய்யுளுரையின் இறுதிக்கண்ணே கண்டு தெளிக.*

கிலமுற்று நிற்கநடு வின்றுசத் தாகக்
கிளக்குமப் பொருடன்னுடைக்
கிறியற்ற சித்தொடான் மாவையு மதர்ப்போடு
கிளர்சுத்த பாசத்தையும்
நிலவுற்ற முத்தியிற் சச்சிதா னந்தமா
நிற்கவே கூட்டுமென்பார்
நிசநெறிய ரெந்தையரு ளருணகிரி யடிகளே
நின்மலா னந்தபரமே. (10)

ஆகப் பத்துப்பத்தினும் போந்த திருப்பா - 100
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 103**

# 10. நின்மலானந்தபரம்

**1.** இயல்பாகவே பாசப்பிணிப்பிலிருந்து நீங்கிய தூய்மையான ஆனந்தமயமான பரம்பொருளே! பொன்னில் பதித்துச் செய்யப்பட்ட மணி ஆபரணம், அணிகலன் இவை அலங்காரமாக விளங்கவும், அணியப்பெற்றுள்ள தேன்மணக்கும் நறுமலர்மாலை, அத்தர், மணப் பொடிகள், சந்தனக் கலவை முதலானவை மணம்கமழவும், அழகுமிக்க ஆடை அசையவும், புன்முறுவல் ஒளிவீசவும், அன்னநடையும், மயிலின் சாயலும், குயிலொத்த இனிய குரல்வளமும் கொண்டு, மஞ்சள் பூசப்பெற்றதாய் மலர் போன்றுள்ள முகமும் தேமல்படர்ந்துள்ள மார்பகங்களும், பொன்மயமான உடல்வனப்பும் கொண்டவர்களாய்ப் பருவமங்கையர்கள் கண்களுக்கெதிரே நேரே கவர்ச்சிகரமாகத் தோன்றினாலும் பேரின்பப் பேற்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள ஞானியர், இழிவான சிற்றின்பத்தின் பொருட்டாக அவர்களிடம் உள்ளத்தை இழப்பார்களோ? ஒருபோதும் இழக்கமாட்டார்கள். இந்த உறுதிநிலையை உணர்ந்திருந்தும் அதனை நான் விரும்புதல் நன்றோ?

**2.** நிகரற்ற இறையாற்றல் உடைய முழுமுதற் பொருளே! நித்திய வத்துவாகவும், பரிபூரணமாகவும் விளங்கும், பரமமான சுப்பிரமணியமே! இயல்பாகவே மலப்பிணிப்பிலிருந்து நீங்கியுள்ள ஆனந்தமயமான பரம்பொருளே! பொறுமை, அடக்கம் உடைமை, தயை, இன்சொல், சிவபக்தி, புண்ணியப்பேறு, தூய்மை நிலைக்குரிய பந்தவிடுதலை, பரிபூரணநிலை ஆகிய இவற்றை விரும்பிநிற்கும் எனது மனப்பரப்பில் இவற்றுக்கு நேர் எதிராக உள்ள பொறாமை,

*10. நிசநெறியர் = ஏற்புடைச் சற்காரிய சதாசார சைவர். இவரே யெவ் வாற்றானும் 'உண்மை பொருவா நெறிநின் றொழுகுநர்' என்றுங் கூறப்படுவார். இவர், ஒருவருடைய இயல்பு செயல்களி னுண்மையினை யினிது காண்புழியும் மிகைப்படுத்து மாற்றான் அவருடைய தேசபி மானத்தாலேனும், பாஷாபிமானத்தாலேனும், மதாபிமானத்தாலேனும், குலாபிமானத்தாலேனும், உறவெனு மபிமானத்தாலேனும், வேறு காரணங்களு ளெதனாலேனும் மனச்சான்றிற்கு மாறாகச் சங்கற்பித்தல், பேசுதல், எழுதுதன் முதலிய துரபிமானச் செய்கைகள்கொடு பொய்யை மெய்யென நிறுவத் துணிவோரது முகத்தை நோக்குதலுஞ் செய்யா திருப்பரன்றே. துரபி மானம் அறத்தையழிக்கும்; மறத்தை வளர்க்குமாகலின் அருட்டுணையு மாராதன்றே என்க.*

வெகுளி, கடினசிந்தை, கொடுஞ்சொல், அவபக்தி (கீழான பொருள்களில் இச்சை கொள்ளல், சிறுதெய்வ வழிபாடு முதலியன), பாவச்சேர்க்கை, பந்தப்பிணிப்பு, ஏகதேசப்பட்டிருக்கும் பிரிவுநிலை (கண்டிதநிலை) எனும் இவற்றைக் கருதும் மனத்தில் ஏற்படும் கலக்கநிலை களாலும் குழப்பநிலைகளாலும் ஏற்படும் இடர்ப்பாட்டு நிலையை நான் அனுபவிக்கிறேன். இவ்வாறுள்ள என்னால் பாரபட்சமற்ற நீதிபதியாக விளங்கி அடிக்கடி நியாயம் விவரித்துக் கூறவுள்ள இந்தத் தொடர்ச்சியான செயலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அந்தோ! என் சத்தியக் கடவுளாக விளங்கும் நீ, ஒப்பற்ற, நிறைவான கருணைபுரிந்தால் இவ்வண்ணம் நான் கலக்கம்கொள்ள நேருமோ ?

**3.** நின்மலமான, ஆனந்தமயமான பரம்பொருளே! எனது முடிபான கருத்து இன்னது என அறியாதவர்கள் என்னைப் பேதவாதி என்கின்றனர். இவ்வாறு இழிப்புரை கூறும்படியான பொல்லாக் காலமும் வந்து சேர்ந்தது. இவ்வாறு பழிகூறுவோர்கள் "நமது முடிபு, அழகு பொருந்திய ஏகான்மவாதம் எனும் அபேத வாதமாம்" என முழங்கி, ஒருசிறிதும் ஒவ்வாத கருத்தைக் கூறுவார்கள். ‘‘உலகம், உயிர், கடவுள் ஆகிய இவை எக்காலத்தும் பொய்யேயாம். அவை சத்துப்பொருளான பிரம்மத்தைச் சார்ந்து விளங்குபவை. இதற்குமாறாக வேறுவகையில் கூறும் கூற்று பொருந்தாது. உலகமாகவும் உயிராகவும் இறையாகவும் தோன்றி, இருந்து, ஒடுங்கும் இயல்புடையதாக இருப்பதும் அந்தப் பிரம்மமே" என, அவர்கள் பிரகடனப்படுத்துவர். தோற்றமும் ஒடுக்கமும் இல்லாத நின்மலப் பொருளான உன்னையே, ஒருசிறிதும் மனம் கூசாமல் இவர்கள் இவ்வாறு விகாரப்படுத்திக் கூறும் ஏகான்மவாத நெறியானது வழுவுடையது. இந்த வழுநெறியை சுத்த சன்மார்க்க நெறியான சைவசித்தாந்தமரபு ஒப்புக்கொள்ளுமோ ?

**4.** நித்தியமாகத் திகழும் ஞானானந்தக் கடலே! என் உள்ளத்துள்ள அறியாமையாகிய இருளை விழுங்கிநிற்கும் பேரொளிப்பரப்பே! என்றும் நிறைவு நிலையிலேயே இருக்கும் திருவருள் கருவூலமே! எம் போன்ற அடியார்க்குரிய நின்மலமான ஆனந்தமயமான பரம்பொருளே! சத்திய சிவானுபவச் செல்வர்களான சிவஞானியர் காண்பான், காட்சி, காணப்படு பொருள் என்னும் மும்முனை நிலை (திரிபுடி) நீங்கிய மேலான நிலையில் ‘‘தாம் அதுவே’’ எனக் கூறுதற்கும் "அதுவாக நாம் இல்லை’’ எனக் கூறுதற்கும் ஒருசிறிதும் இடமில்லை. இவ்வாறு இருக்கும் நிலையே, மனச்சலனம் முற்றும் நீங்கப்பெற்று ஞானமயமாகவே இருக்கும் ஜீவன்முத்தர் நிலையாம். இதனையே ‘‘சீவான்ம – பரமான்ம ஐக்கிய நிலை’’ என்றும் ‘‘விளக்கிக் கூறுதற்கரிய வாசா மகோசர நிலை’’ என்றும் வேதங்கள் தெளிவுபடுத்திக்கூறும். இவ்வாறு கூறியதன் நுட்பத்தை நன்கு உணராமல் வெறியர்கள் தம் மனத்தாலும் வாக்காலும் வரையறைப் படுத்தி ‘‘ஒன்று’’ என்றும் ‘‘இரண்டு’’ என்றும் மனம்போன போக்கில் விளக்கிக் கூறும் மதங்கள் உண்டு. இம் மதங்களுக்கு ஏற்பப் பிதற்றும் செயலானது சதாசார நெறியாகிய சைவசன்மார்க்க முடிபுக்குப் பொருந்துமோ ?

**5.** ஒடுக்கமும் தோற்றமும் இல்லாததாய், சிற்றறிவால் உணர்தற்கு அரியதாய் உள்ள ஞானமயமான பரம வெளியே! நிகரற்ற பேரின்பப்பிழம்பே! தன் இயல்பான நிலையில் என்றும் நிலைத்துள்ள பரமப் பொருளான சுப்பிரமணியமே! என்னை ஆட்கொள்ளும் நின்மலமான, ஆனந்தமயமான பரம்பொருளே! பார்க்கின்ற கண்களை மூடிக் கொள்ளும்போது, முன்னர்ப் பார்வையில் பட்ட தூலமும் சூக்குமமுமான பொருள்கள் அனைத்தும் மறைந்துவிடுதல் போன்று நுண்ணிய, உணர்வுமயமான மனம், சஞ்சலம் நீங்கப்பெற்று விகல்பங்கள் அனைத்தும் நீங்கப்பெற்றுத் திகழஉள்ள துரியமான நித்திரை நிலையில் புவனங்களும், ’காண்கிறோம்’ எனும் தானும் மறைந்துநிற்கும். இவ்வாறு மறைவதால் புவனமோ, ’தான்’ என்பதோ இல்லை எனுமாறு

பொய்யாகிவிடுமோ ? சிவானுபூதியாகிய அருட்பேற்றுச் செல்வம் பெற்றுள்ளார்களின் உண்மை அனுபவத்தில் புவனமும் தான் என்பதும் அழியாமல் அழிந்து, பேரின்பமயமாகவே விளங்கும். இவ்வாறு ஒருசிறிதும் ஐயத்துக்கு இடமின்றி உறுதிசெய்யப்பட்ட முடிவே நன்முடிவு; உண்மையான சித்தாந்தம் என எப்பொழுதும் முரசறைந்து கூறலாம். (நல்ல நடு = சைவசித்தாந்த முடிவு)

6. நின்மலமான, ஆனந்தமயமான பரம்பொருளே ! மாறுபாட்டு எண்ணங்கள் அனைத்தும் நீங்கிய நிலையான வாசனாக்ஷயம், மிகவும் தெளிவாக வாய்க்கப் பெற்றுள்ள தத்துவ ஞானம், திடமான மனோலயம் ஆகிய இம்மூன்றையும் உறுதியாகப் பெற்றுள்ள நிலையே வீடுபேற்றுநிலை என வேதத்தின் நிறைவுப்பகுதியான உபநிடதங்கள் அனைத்தும் தெளிவுபடக் கூறும். இந்த முடிபை நன்கு உணர்ந்துள்ள ஞானியர் "மதவாதத்தாலும் தருக்க வாதத்தாலும் ஒரு பயனும் இல்லை. நாதநிலைக்கும் மேற்பட்டுள்ள தானத்தை நோக்கியுள்ள வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும். விறகிலே மறைந்து கிடக்கும் தீயைப்போன்று, மறைப்பாற்றல் மிக்க மலத்துள் அமிழ்ந்து ஞானமலர்ச்சி இல்லாமல் இருப்பது ஆன்மா. விறகைக் கடைந்து தீயை வெளிப்படச் செய்து அறிதல் போன்று மறைவற்ற உனது திருவருள் ஆற்றலால் பரமநிட்டை நிலையைப் பொருந்தி, மலப்பிணிப்பிலிருந்து ஆன்மாவைப் பிரித்து அறிதலே ஞான நெறிக்கு ஒத்த செயலாகும்" என்று ஆய்ந்துணர்ந்து அந்நெறியில் நிற்பர். மற்றையோர்க்கு இதுபற்றிக் கூறினாலும் யாது பயன் ? அவர்களால் இந்த நுட்பத்தை உணர முடியுமோ ?

7. எந்த விதமான இழிப்புரைக்கும் ஆளாகாமல் உய்திபெறக் கூடிய உயர்நிலை தந்து என்னை ஆட்கொள்ள உள்ள நிட்களமான, ஆனந்தமயமான சிவமாகவும், நிலைத்து ஒளிரும் திவ்விய தேஜோமயானந்தமாகவும், தன் இயல்பான நின்மல நிலையில் ஒளிரும் ஆனந்தமயமாகவும் விளங்கும் பரம்பொருளே ! விறகிற்குள் தீ மறைந்திருக்கும் காலம் வரையிலும் அதனை விறகு எனக் கூறுவதன்றி யாரும் நெருப்பு எனக் கூறமாட்டார்கள். அதுபோன்று மலமாகிய பாசப்பிணிப்புக்குள் கட்டுப்பட்டு இருக்கும் வரையிலும் ஆன்மா, சிற்றறிவுப் பசு என்றுதான் கூறப்படும். மலப்பிணிப்பு நீங்கிய மேலான நிலையில் தூய, முற்றறிவுப் பரம ஆன்மா எனக் கூறப்படும். முற்றறிவு நிலையில் சிவத்தோடு இரண்டறக் கலந்துஇருக்கும் நிலையே அத்துவித வாழ்வு என்பதாகும். இவ்வாறு அறியாத பேதைகளுக்கு நாம் அறிவிக்க முற்பட்டால், பாசத்தளையாகிய பிணிப்புக்குள் ஆழ்த்தும் மதாபிமானம் எனப்படும் பேயானது, இந்த நுட்பங்களை உணராத வண்ணம் செய்து, நன்னெறியிலிருந்து நீக்கிப், பகையுணர்வு தந்து, பொய்ந் நெறியை மெய்ந்நெறியாகக் காணுமாறு செய்யும். இவ்வாறு மதாபிமானப் பேய் செய்வதில் தடை என்ன இருக்கமுடியும் ?

8. ஞானநெறியில் உறுதிப்பாடு உடையோர் உள்ளத்தில் தவறாமல் உதிக்கும் வெளிமயமே ! சிதாகாச வடிவில் வெளிப்படும் நிட்கள தெய்வமே ! நின்மலமான ஆனந்தமயமான பரம்பொருளே ! உலகியலில் ‘‘நான்’’ ‘‘அது’’ என்னும் இருமைநிலையும் காணப்படுவதால், அந்த இருமைநிலையை நீத்ததும் தத் த்வம் அசி என்பதில் ‘அசி’ எனும் பதத்தால் குறிக்கப்படுவதுமான இருமையற்ற நிலையை, ஞானநெறியை விளக்கிக் கூறும் வேதம் ‘அத்துவிதம்’ எனும் சொல்லால் விளக்கிக் காட்டியதே தவிர ‘ஒன்று’ எனும் பொருள்படக் கூறியதில்லை. ஒன்றே என உணர்த்த முற்பட்டிருக்குமாயின் ‘ஏகம்’ என்றே தெளிவுபடக் கூறி இருக்கும். இந்த உண்மையைப் புண்ணியப் பேறு மிக்க உள்ளமுடையோர் பாரபட்ச வெறித்தனம் இல்லாமல் நடுநிலையில் நின்று அறிந்து, ‘இந்த முடிபே, வேதாந்த நூல்களின் சாரமாகத் திகழும் ஆகமநூல்களின் முடிபுமாகும்’ என்று தெளிவாக உணர்ந்து உறுதிப்பாட்டுடன் சிறந்த தவநெறியில் தலைப்பட்டு உயர்வர்.

நடுநிலை இகந்த அற்பர்கள், இந்த நுட்பத்தை உணராமல், நெறி பிறழ்ந்து, ஒரு நிலையில் நில்லாமல், உலகியலில் உழன்று கொண்டிருப்பர். அந்தோ! அவர்தம் நிலை என்னே!

**9.** என்னை ஆட்கொள்ள உள்ள நின்மலமான ஆனந்தமயமான பரம்பொருளே! “இருளை ஒத்துச் செறிந்துள்ள மலமாகிய பாசத்தின் ஆற்றல் எங்கும் வியாபித்து இருக்குமாயின், பரம்பொருளாகிய இறைவனையும் அது மறைக்காதோ? ஒளிப்பொருள்களை ஒளிரச் செய்யும் மூல ஒளியாகிய தெய்வத்தின் சந்நிதியில், மலினம் மிகுந்த மலமாகிய பாச இருளும் இருக்க முடியுமோ? மேலான சித்தாந்த நெறியில் உள்ளோரே, விளக்கம் கூறுங்கள்” என ஒருவன் கேட்பானாயின் – பூனையின் கண்ணை இருள் மறைக்காதது போன்று, இயல்பாகவே தூய்மையாகிய இறைவனையும் மலமானது மறைக்காது. அறிவுமயமான ஆன்மாவை அறிவற்ற சடமான உடம்பானது பொருந்தி இருப்பது போன்று தெய்வ சன்னிதியில் பாசமும் இருக்கும். சூரியன்முன் இருள் நீங்காமல் நீங்கி இருத்தல் போன்று, பரிபூரண ஞானமலர்ச்சி பெற்றுள்ள சிவானுபூதி நிலையில் பாசமும் நீங்காமல் நீங்கி இருக்கும். இருள் சூரியனைப் பாதிக்காதது போன்று பாசமும் பூரண சைதன்ய நிலையைப் பாதிக்காது.” என இவ்வாறு பிறர் விடையளிக்க மாட்டார்களோ!

**10.** எந்தையாகிய அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்துள்ள முழுமுதற்பொருளே! நின்மலமான, ஆனந்தமயமான பரம்பொருளே! "மலத்தின் மறைப்பாற்றலிலிருந்து விடுபட்ட ஞானமயமான ஆன்மாக்கள் இயல்பாகவே நின்மலமாக உள்ள சிவத்தைப் பொருந்தி இருக்கும் எனில், பல ஆன்மாக்களால் பற்றப்படுவதால் சிவம் பலவாய்ப் பிரிவுபட்டு அழிவுறாதோ?” என்று கேட்போர் நன்கு உணர்ந்து கொள்ளுமாறு “உலகில் பாசப்பிணிப்புக்கு உட்பட்டிருப்பதாகிய பெத்த நிலையில் இருக்கும் உயிர்தோறும், இரண்டற்று, ஏகமாக, உள்ளும் புறம்பும் வியாபித்துள்ள சிவமானது, அளவற்ற உயிர்த்திரள்கள் சுவானுபவ வாயிலாகத் தன்னோடு கூடும்போது அழிந்து போக இடம் இல்லை. சத்து எனப்படும் பரம்பொருள் தனது பொய்ம்மையற்ற சித்து என்னும் அம்சத்தோடு ஆன்மாக்களையும், ஆனந்தம் எனும் அம்சத்தோடு பாசத்தையும் இணைத்துக்கொண்டு முத்திநிலையில் சத்து சித்து ஆனந்தமாக (சச்சிதானந்த வத்துவாக) விளங்குமாறு செய்யும்” என்று உண்மைநெறிச் செல்வோராகிய சைவசித்தாந்த நெறியாளர் கூறுவர்.

# 11. பேசாவாழ்வு

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பொ**ன்னுலகு மண்ணுலகும் போற்று ஞான
பூரணமே யாரணமே புகல வொண்ணா
நன்னிலையே யென்னினைவே நலியா வாதி
நாயகமே தாயனைய நட்பே யெற்கீண்
டுன்னிலையெல் லாமோர வுணர்வீந் தாய்மற்
றொருகுறையை நீத்தில்லை யுனையே யல்லாற்
பின்னொருவர் தமியேற்கு முளரோ வெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (1)

**கு**த்தியகத் துளநிட்சே பத்தைக் காணக்
கூரலகால் வெட்டுவதே வழியல் லால்வே
றுத்தியிலை யேயின்னே மலத்துண் ணாளும்
ஒளியின்றி நிற்பவனைக் காணற் குன்றன்
முத்தியருண் முயல்வலது பிறிதின் றென்னா
மொழியுமொழி பெட்டிலையே முன்னும் பின்னும்
பெத்தர்களுக் கருளிறையே யருளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (2)

**பொ**ருபிணிக்கு மெரிபசிக்கு முரிய பாழ்த்த
புலையுடம்பைச் சுமந்துதிரி புன்னெஞ் சேற்குன்
திருவருடா னில்லையெனிற் கணக்கா லேனுஞ்
சிந்தையொரு வழிப்படுமோ சீர்மை யாமோ
குருவடிவாய் வந்தினிய வமுதம் போலக்
குயின்றுவினா வியவாய்மை யெவ்வா றென்னைப்
பெருவெளியாச் செய்யுமருட் பேறே யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (3)

**உ**ன்னருளா லுனைக்கருதி யிருக்கு மிஞ்ஞான்
றுறுநோயுங் கலிப்பேயும் வருத்து மாயின்
என்னசுக மடைகுவலுன் பெரிய வீர
மெளியேன்பா லின்னணமோ விருந்த தச்சோ
சொன்னவண மருள்வையென்ற தீர்வை யொன்றே
தொழும்பன்வெளி மலையிலக்காக் கொண்ட தற்கோர்
பின்னமெய்தா தருள்பாலித் தாளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (4)

**பே**டிபெண்ணைக் காமுறல்போற் கல்வி யில்லான்
பெருங்கழகம் புகவெணல்போற் றிருவில் லாதான்
பாடிபுகழ் வள்ளலெனும் பெயரோன் றேற்கப்
படிமீது சூழ்வதுபோற் பதியா முன்னை
நேடிநிற்கும் பேரளியில் லாத நாயே
னீடருள்வாழ் வடையநினைக் கின்றே னின்பப்
பீடிகைமே னீவைத்தால் வாழ்வே னெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (5)

---

*2. குத்தி = மண், பூமி ; தகரவெதுகை. பெட்டு = பொய்; சூ – நிகண்டு.*
*3. புலை = புலால்.*
*4. நோய் – 'நொ' என்னும் பகுதியி னடியாப்பிறந்த தொழிற்பெயர்; நோ எனவும்படும்; நோவு எனப்படின் உ அல்லது வு – விகுதியாம்.*
*5. பாடி = நாடு, பேரளி = பெரிய அன்பு.*

**வீ**தலிலாப் பெருமவுன்னை யடைவே னாயின்
மிகுகுறளற் குயர்தருத்தே னெட்டல் போலும்
ஆதுலற்கு நிட்சேபம் வாய்த்தாற் போலு
மந்தகற்குக் கண்பிராத்தி யானாற் போலும்
ஏதமறக் குணிக்குவாக் குற்றாற் போலு
மெனவலிக்க யாதுதடை யெந்தா யெந்தாய்
பேதமிறக் கருணைசுரந் தருளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (6)

**மா**றின்றிப் பனித்திடுநின் கருணை வான
மாணடியா ராம்பைங்கூழ்க் கிரங்கா தாயின்
ஊறின்றித் தழைப்பதெங னக்கோ வக்கோ
வுன்னையலாற் புகல்சிறிதுந் தனியேற் குண்டோ
காறின்றிக் கசடுபல செய்தே னேனுங்
கருணையுளோய் நின்னடிமை யாகா நின்றேன்
பேறண்ணுந் தனியருள்செய் தாளா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (7)

**த**ரணிவதி புருடர்குண மேது மில்லாத்
தனிப்பிரமப் பொருளாய பெரியோ யுன்னைப்
புரணிபொலி புருடர்குணப் புல்லர் யாங்ஙன்
புகரறவே தானறிவார் பூர்த்தி யாய
கிரணவருள் கிடைத்தானான் வாழ்வே னல்லாற்
கிஞ்சித்தும் வாழேனென் கிழமைக் காய
பிரணவ சுவாமியருள் புரியா யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (8)

**அ**சைத்தாட்டு நின்செயலா லடியே னுன்ற
னருள்வேண்டி யேமுயலா விடினு மானா
முசுப்பிடியா முயலினுமுன் கிருபை யாங்கே
முன்னிருந்து முடிக்காதேற் பயனே னெந்தாய்
தசத்திசையுந் தொழுமாளிக் கெனைத்தா னாக்கிச்
சகசசுகம் பெறவுளத்தி னினைத்தல் வேண்டும்
பிசிப்போதஞ் செகுத்துணர்வார் பேறே யெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (9)

---

*6. ஆதுலன் = தரித்திரன், வலித்தல் = நினைத்தல்; சூ – நிகண்டு.*
*7. அக்கோ = அதிசயவிரக்க மொழி; பி – நிகண்டு.*
*8. புரணி = உடல், புறணியென்பதன் விகார மெனினுமாம்.*
*9. தசதிசை என நிற்கற்பாலது ஏனையடி முதற்சீரோசை நோக்கித் 'தசத்திசை' என வலி மிகுந்துற நிற்பதாயிற்று. பிசி = பொய்.*

நன்றில்லேன் றீதுள்ளே னசைமிக் குள்ளேன்
ஞானமில்லே னூனமுள்ளே னல்லார் கொள்கை
ஒன்றுமில்லே னுண்மையில்லே னின்மை யுள்ளே
னுனைநசைஇக் கறையிகந்து பரமா னந்தம்
என்றுமுறப் படர்ந்தேனிங் கெந்தா யெந்தா
யீரமிகுந் தருளனந்தம் புகழ்சொற் றாற்குப்
பின்றையெனா துடனளித்தாள் குகேசா வெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே. (10)

# 11.பேசாவாழ்வு

**1.** தேவலோகமும் பூலோகமும் போற்றித்துதிக்கும் முற்றறிவு மயமான நிறைவுப் பொருளே! உயிர்க்கூட்டங்களுக்குப் பாதுகாவலாக விளங்கும் இறையே! விவரிக்க இயலாத சிவநிலையே! எனது தியானப் பொருளே! என்றென்றும் நிலைத்துள்ள முதன்மையான நாயகமே! தாய் போன்று விளங்கும் அன்புநிலையே! உனது சொரூபநிலையை ஆய்ந்துணரும் ஞான உணர்வை எனக்கு நீ வழங்கியுள்ளாய். உன்னோடு கலந்து வெளிமயமாக இன்னும் ஆகவில்லை என்னும் ஒரு குறையைத் தவிர்த்து வேறு எந்தக் குறையும் எனக்கு இல்லை. உன்னைத் தவிர்த்து வேறொரு புகலாக எனக்கு யாரேனும் உளரோ ? எங்களைக் காத்து ஆளும் பேரரசே! பரி பூரணமாக எங்கும் நிறைந்துள்ள அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே!

**2.** பூமிக்கு உள்ளே உள்ள புதையலைக் காணவேண்டும் எனில் கூரிய கடப்பாறையால் பூமியை அகழ்வதைத் தவிர வேறு வழிஇல்லை. அதுபோன்று மல இருளில் அறிவு விளக்கம் சிறிதேனும் இல்லாது மறைப்புண்டு இருப்பவனை, உயர்நிலைக்கு உயர்த்த வீடுபேற்றை அருளவல்ல உனது திருவருள் செயற்பாட்டால் அன்றி வேறு வழி இல்லை எனக் கூறப்படும் கருத்து முற்றிலும் உண்மையே. உன்னை உணரும் நன்னெறியில் ஈடுபடுவதற்கு முன்பும், ஈடுபட்ட பின்பும், பாசப்பிணிப்புக்கு ஆட்பட்டுள்ள உயிர்களுக்கு அருள்வழங்கும் கருணைக் கடவுளே! எங்களைக் காத்து ஆளும் பேரரசே! பரிபூரண அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே!

**3.** நோய்க்கும் பசிக்கும் உரியதாக உள்ள இழிவான இந்தப் புலால் உடம்பைச் சுமந்து திரியும் அற்பநெஞ்சுடைய எனக்கு உன்திருவருள் துணை இல்லை எனில், ஒருகணப் பொழுதேனும் எனது சிந்தனை ஒருமுகப்பட்டு நிற்குமோ ? சீர்மைப் படுமோ ? குருவடிவில் எழுந்தருளி அமுதம் போன்று இனிக்கும் வண்ணம் நீ பேசிய உபதேச மெய்யுரையும், உனது திருவருள் வழிகாட்டவில்லை எனின் எவ்வாறு என்னைப் பெருவெளிமயமாக விளங்குமாறு செய்யும் ? அருட்பேறாக விளங்கும் நலமே! எங்களைக் காத்து ஆளும் பேரரசே! பூரணமாக நிறைந்துள்ள அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே!

**4.** உன் திருவருள் தூண்ட உன்னையே தியானித்துக் கொண்டிருக்கும் என்னை இப்பொழுது நோயும் வறுமையும் துன்புறுத்திக் கொண்டிருக்குமாயின் எந்தச் சுகத்தை என்னால் பெறமுடியும் ? நினது வற்றாத பெருங்கருணை எளியேனிடம் இவ்வாறுதான் செயல்பட உள்ளதோ ? அந்தோ! அன்று நீ கூறிய வண்ணம் நிச்சயம் அருள்வாய் என்னும் உறுதிப்பாடு

ஒன்றையே வெள்ளிடை மலைபோன்று தெளிந்த லட்சியமாகக் கொண்டுள்ளேன். இந்த உறுதிப்பாட்டுக்கு எந்தவிதமான பங்கமும் நேராவண்ணம் அருள்புரிந்து ஆட்கொள்க! எங்கட்கு வாய்த்துள்ள பேரரசே! நிறைவான அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே!

5. பேடி பெண்ணை விரும்புதல் போன்றும், சிறிதும் கல்வி அறிவு இல்லாதவன் அறிஞர் கூடியுள்ள பேரவையில் இடம்பெற்று இருக்க எண்ணுதல் போலும், செல்வவளம் இல்லாதவன் வள்ளல் எனும் பட்டப் பெயரைப் பெறப் பலவாறாக முயற்சி மேற்கொள்வது போலும் அனைத்துயிர்க்கும் தலைவனாகிய உன்னைப் பற்றுக் கோடாகக் கொள்ளும் பக்தி விழுப்பம் இல்லாத அடியேன் உனது பேரருள் மயமான வாழ்வைப் பெற எண்ணுகின்றேன். எனது எண்ணம் அறிந்து, அருள் இன்பமாகிய பீடத்தில் என்னை இருத்தினால் நான் உயிரோடு வாழ்பவனாவேன். எங்கட்கு வாய்த்துள்ள பேரரசே! நிறைவான அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே!

6. தனி முதன்மை நிலையிலிருந்து விலகாமலும் அழியாமலும் திகழும் பெரும! பெரிதுக்கும் பெரிதாய உன்னை, சிறியனாகிய யான் அடைவேன் ஆயின் குள்ளன் ஒருவனுக்கு மிக உயரமான மரத்தின் உச்சியில் உள்ள தேன் கிட்டியது போலும்; தரித்திரனுக்குப் புதையல் கிடைத்தது போலும்; குருடனுக்குக் கண் கிடைத்தது போலும்: ஊமைக்கு எவ்விதத் தடையும் இல்லாத பேச்சுத்திறம் வாய்த்தது போலும் ஓர் அதி அற்புதச் செயலே எனக்கூற யாது தடை? எந்தையே! துவித பாவனையும் பேத உணர்வுகளும் முழுவதுமாக நீங்க, நீ கருணை பொழிந்து ஆட்கொள்வாயாக! எங்கட்கு வாய்த்துள்ள பேரரசே! பூரணமான அமுதமே! மௌன நிலைப் பெருவாழ்வே!

7. முறைமை மாறாமல், பாரபட்சம் ஏதும் இன்றிப் பொழிந்திடும் நினது கருணையாகிய மேகம், உன் அடியார்களாகிய பசும்பயிர்களுக்காக அருள்மழையைப் பெய்யவில்லை எனின், அப்பயிர்கள், ஊறுபாடு ஏதும் இல்லாமல் தழைப்பது எப்படி? அந்தோ! உன்னைத் தவிர்த்து வேறொரு புகலும் எனக்கு உண்டோ? அளவில்லாமல் பலவகைக் குற்றங்களை நான் செய்திருந்தேன் ஆனாலும் நான் உனக்கு அடிமையாக அல்லவோ வாழ்கின்றேன்! கருணை உள்ளம் வாய்த்தோய்! ஒப்பற்ற சிவானந்தப் பேறு பொருந்திய தனித்த அருள்வழங்கி என்னை ஆட்கொள்க. எங்கட்கு வாய்த்துள்ள பேரரசே! நிறைவான அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே!

8. பூமியில் வாழும் சகலவர்க்க உயிர்களுக்குரிய குணங்களை நீத்ததாய் அதீதமான தனித்த பிரம்மப் பொருளாக விளங்கும் பெரியோய்! மாயைத் தொடர்பான உடலோடு கூடியுள்ளவர்களும் சிறுமைக் குணங்கள் உடையவர்களுமான சகலவர்க்க உயிர்கள் எவ்வாறு எவ்விதக் குறைபாடும் இன்றி முழுமையாக உன்னை அறிய முடியும்? எங்கும் நிறைந்துள்ள உனது ஒளிமயமான அருள் கிடைத்தால் நான் வாழ்வேன். உன் அருள் கிடைக்கவில்லை எனில் ஒருபொழுதும் வாழமாட்டேன். என் உறுதியான அன்பு நிலைக்குரிய பிரணவ முழுமுதலே! அருள்புரிக. எங்கட்கு வாய்த்துள்ள பேரரசே! நிறைவான அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே!

9. அனைத்து உயிர்களையும் அனைத்துப் பிரபஞ்சங்களையும் அசைத்து இயக்கிக் கொண்டிருந்தும் அசையாமல் நிற்கும் நினது அருட்செயல் தூண்ட உனது அருட்பேறு பெறவேண்டி முயலவில்லை எனினும் மர்க்கட நியாய ரீதியில் குரங்குக்குட்டி தாயை விடாது பற்றிக் கொள்வது போல் நான் உன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். இவ்வாறு இருந்தும் உன்

திருவருள் முன்னின்று என் குறிக்கோளை நிறைவேற்ற வில்லை எனின் யாது பயன் ? எந்தையே! பத்துத் திசைகளும் தொழ உள்ள முழுமுதல் அரசாய் விளங்கும் நீ, என்னை நீயாகச் செய்து உனக்கு இயல்பாக உள்ள ஆனந்த நிலையை நான் பெறுமாறு உன் திருவுளத்தில் நினைக்க வேண்டும். பொய்யையும், சீவபோதத்தையும் நீக்கி உண்மை நிலையை உணர்வோர் பெற உள்ள பெரும் பேறே! எங்கட்கு வாய்த்துள்ள பேரரசே! நிறைவான அமுதமே! மௌன நிலைப் பெருவாழ்வே!

10. நான் நற்குணங்கள் இல்லாதவன்; தீய குணங்கள் செறிந்தவன்; ஆசைமிகுந்தவன்; ஞானம் இல்லாதவன்; பல்வகைக் குறைபாடுகளும் உடையவன்; நல்லோர்க்குரிய அறக்கொள்கைகளுள் ஒன்றும் இல்லாதவன்; உண்மை நெறிச் செல்லாதவன்; பக்குவம் இன்மை முதலான இல்லாமை நிலைகளும், பொய்யும் உள்ளவன். இப்படி இருந்தாலும் உன்னையே விரும்பி, என் மாசுகளெல்லாம் நீங்கப்பெற்று, மேலான இன்பப் பேற்றை நிலையாகப் பெற எண்ணம் கொண்டுள்ளேன். எந்தையே! உலகவர் பால் கருணை மிகக் கொண்டு அருள்புரிந்து அளவற்ற சந்தத்திருப்புகழ் பாடிய அருணகிரிப் பெருமானுக்குப் "பிறகு பார்க்கலாம்" என்று கூறாமல் உடனே கருணை புரிந்து ஆட்கொண்ட குகேச! எங்கட்கு வாய்த்துள்ள பேரரசே! நிறைவான அமுதமே! மௌனநிலைப் பெருவாழ்வே! எனக்கும் பின்றை என்னாது உடனே அருள்புரிக.

# 12. குகப்பரமம்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். **

**வா**ர்சா லுகத்திலெனை மனுவாய் வகுத்தவருண் மதியா யிருக்கு நலருள்
சீர்சால வுற்றகரு வியெலா மசைக்குமருள் சிவநாட வைத்த மெயருள்
ஊர்பேர் குணத்திரய மணவாத சுத்தவரு ளொளியாக நிற்கு மொரருள்
பார்மீ தெனக்கருளு மருளாகு மித்தகைய பதியே குகப்ப ரமமே. (1)

**அ**டியார் தமக்குறுக ணுகா தளிக்குமிறை யடரூழ் வினைத்தொ டர்பினால்
மடியார் வெறுப்புறினு மினிதா யருத்துமிறை மறலூ ரிருத்து மறமே
குடியா யிழைத்திடினு நமனாணை பெற்றவர்கள் கொடுபோக விட்ட மிலிறை
படிமீ தெவர்க்குமிறை யெனவே யிருக்குமொரு பதியே குகப்ப ரமமே. (2)

**தே**வாதி கட்கரிய முதலா யரக்கர்நரர் செறிபூதர் மற்று முயிர்தாங்
காவா வெனச்சொலவ தரமா தரிக்கவுள கருணா கரக்க டவுளாய்
மூவாசை செற்றபொறை யுடையா ருளத்திலவிர் முழுமா மணிச்சு டரதாய்ப்
பாவால் வழுத்துமென தறிவா யிருக்குமொரு பதியே குகப்ப ரமமே. (3)

---

* *இவ் விருத்தவடிகளின் ஈற்றுச்சீர்களுள் யாதானுமொன்று தேமாங்கனி யென்னும் வாய் பாட்டிலே "யாளத்தனே" என வருவதுபோல வருதலுங் கூடும். அங்ஙனமாயின், இரண்டு மாஞ்சீர்களாகப் பிரிக்கக்கூடாமை நோக்கி அவ்வடி, அறுசீர்க்கழிநெடிலடி யெனவே கொள்ளப்படும்; திருவலங்கற்றிரட்டின் இரண்டாங்கண்டத்து ஆசிரியவியல் கருதுக.*

*2. மடி = நோய், மறலூர் = யமனுலகு.*

**நி**லனாள் பவர்க்குமதி மிடியோர் தமக்குமணி நிறைபாவ லர்க்கு மடமே
சொலுமூட ருக்குமுயர் குலமேதை யர்க்குமதி சுழல்பூரி யர்க்கும் விடலே
கலனா யுளர்க்குமற நலனே யுளர்க்குமலல் கடிவா னினைத்த வுடனாம்
பலனீ யருட்சலதி யெனநா னினைக்கவுள பதியே குகப்ப ரமமே. (4)

**பெ**ருவா னருட்குயினை நினைவேனை மத்தர்மருள் பிணிகோ ளரக்கர் நிலைநாள்
மிருகாதி பக்கிநகர் வனவேது மச்சவளர் மிடலோ டிழைப்பி னஙனம்
வெருவே லெனக்குரியை வெருவே லெனக்கருணை விளைவால் விலக்கி யருளும்
பரிவே சிறக்குநிறை பெரியோ னெனச்சொலொரு பதியே குகப்ப ரமமே. (5)

**அ**ணிநாய கந்துரிய மணிநாய கங்குசல ரவைநாய கங்கு றைவறு
திணிநாய கங்கவிஞர் புகழ்நாய கம்பெரிய திருநாய கங்க ருடெறு
துணிநாய கம்பரம குருநாய கம்பிரம சுபநாய கந்த மியனேன்
பணிநாய கம்பிரம மெனவே விளங்குமொரு பதியே குகப்ப ரமமே. (6)

**இ**கழ்பாவ மென்றவினை யதனால் விலங்ககம மெனவே தயங்கு யிர்களும்
புகழ்சீல மென்றவினை யதனா லுயர்ந்துளவி புதரா யிலங்கு யிர்களுந்
தொகையா மிரண்டும்விர வியகூவின் மைந்தருமொர் சுகமேவ வென்றி ருநடம்
பகமா யிடுங்கடவு ளெனநா னினைந்துதொழு பதியே குகப்ப ரமமே. (7)

**எ**ழிலா யியங்கும்விழி யிமைபோ லனந்தநசை யினர்தா மிருந்தி டினுமவ்
விழியாத வன்கிரண மிலதேல் விளங்குவதெவ் விதமாக லின்ப லுயிராய்
மொழிசேத னங்களுழி யொளியா யியங்கமுதன் முதவீர மங்கி னலனில்
பழியே பிறங்குமென நினைவா ரிறைஞ்செனொரு பதியே குகப்ப ரமமே. (8)

**க**னிஞேய வன்பரெனு முருகா ரருங்குழவி களெலா நினைந்த வமையம்
இனிதா யருந்துவண முலையா யிறங்குமரு ளெனுமா டனந்த முடைய
தனியீச னந்தநடு வடிபேத மென்பவைக டழுவாத வன்ற னியனேன்
பனியாவு மங்கவருள் புரிதேவ னென்றவொரு பதியே குகப்ப ரமமே. (9)

**ந**யமே கிளர்ந்துபர சடியாரை யெந்தநில நகமாதி கண்க ளினுமல்
வெயிலே விரிந்தபக லினுநா கருங்குமரம் வினைசோ ரிருஞ்ச ரையினுந்
தயவோ டகம்புறனு முறையே புரந்தருள்செய் தகையார் பெருங்க ருணையின்
பயனே விரும்பருண கிரியார் புகழ்ந்தவொரு பதியே குகப்ப ரமமே. (10)

---

*4. விடல் = விடப்படுங் குற்றம், கலன் = அணிகலன்.*
*5. மிடல் = வலி; பி – நிகண்டு.*
*7. அகமம் = விருக்கம் = மரம்; அமரஸிம்ஹ மெனும் வடமொழி நிகண்டும், பி – நிகண்டுங் காண்க.*
*'பாகம்' பகம் என வெதுகைநோக்கி விகாரப்பட்டது.*
*இத்திருப்பாட்டின் பொருள் – தகராலயரகசியத்தின் முதலாங் காண்டத்து 13, இரண்டாங் காண்டத்துப் 11 – ஆக வரூ உந் திருத் தூக்குக்களினுரை களில் இனிது விளங்கக் கிடக்கின்றது.*
*10. நகம் = மலை.*

# 12. குகப்பரமம்

**1.** மிகநீண்டுள்ள இவ்வுலகத்தில் என்னை மனிதப்பிறவி எடுக்குமாறு செய்த அருள்; பூரண ஞானமயமாக இருக்கும் நல்ல அருள்; சீர்மைமிகவும் பொருந்திய உடற்கருவிகள் தொகுதிகள் அனைத்தையும் அசைத்து இயக்கும் அருள்; சிவநிலையை நாடி நிற்குமாறு செய்த மெய்ம்மையான அருள்; ஊர், பெயர், முக்குணம் முதலிய உபாதிகள் ஏதும் பொருந்தாத தூய்மையான அருள்; மூல ஒளியாக நிலைத்துநிற்கும் அருள்; நிலவுலகில் எனக்கு விசேடமான அருள் வழங்கும் பேரருள். இத்தகைய அருள்மயமாக விளங்கும் இறையே நான் வணங்கும் குகப்பரமம்.

**2.** அடியார்களுக்குத் தீங்கு ஏதும் அணுகாமல் காக்கும் இறை; முறைமை பொருந்தியதும் நியதிப்படி வருவதுமாகிய வினைவயத்தால் நோயுற்று வருந்துவோர் வெறுப்படைந்தாலும், நன்மை விளையுமாறு வினைப்பயனை ஊட்டும் இறை; யமனுலகிலேயே வசிக்குமாறு செய்துவிடும் கொடிய செயல்களை வாழ்க்கையின் பொருட்டுச் செய்தாலும், யமன் ஆணையைப் பெற்றுள்ள காலதூதர்கள் அடியார்களை யமனுலகிற்குக் கொண்டு செல்ல உள்ளம் கொள்ளாத இறை; இவ்வுலகில் எல்லார்க்கும் வாய்த்துள்ள இறை. இப்படித் திகழும் பதியே எங்கள் குகப்பரமம்.

**3.** தேவர் முதலானோர்க்கு, நிகர் கூறுதற்கரிய முழுமுதல் இறையாகவும், அரக்கர்களும் மனிதர்களும் பூதகணங்களும் மற்றுமுள்ள உயிர்க் கூட்டங்களும் "எம்மைக் காத்து அருள்" என வேண்டும் பொழுதே அவர்களைக் காக்க விரையும் கருணைக்கடலான கடவுளாகவும், மூவாசைகளையும் நீக்கி சாந்தமயமாகவிளங்கும் முனிவர்களின் உள்ளத்தில் பிரகாசிக்கும் பின்னமற்ற மாணிக்கச் சுடராகவும், பாட்டுக்களால் துதிக்கும் எனது அறிவுமயமாகவும் விளங்கும் பதியே, குகப்பரமம் என ஒளிர்கிறது.

**4.** உலகம் முழுவதையும் ஆளும் திருவுடையோர், வறுமைப்பட்டிருப்போர், முறையாகப் பாடவல்ல கவிஞர்கள், அறியாமை வயப்பட்டுப் புன்சொல் பேசுவோர், மேதாவிகள், மனச்சலனம் மிக்க அற்பர்கள், நீக்கத்தக்க இழிகுணங்களையே அணியாகக் கொண்டுள்ளவர்கள், நற்குண நிறைவுடையோர் – இவர்கள் துன்பம் நீங்க வேண்டி உன்னை நினைத்தவுடனே இவர்களின் துன்பம் போக்கி அருட்பேறுகளை வழங்கும் அருட்கடல் – என நான் உணருமாறு உள்ள பதியே குகப்பரமம்.

**5.** ஞான வெளியாகிய பெரிய வானில் குழுமியுள்ள அருளாகிய மேகத்தைக் கருதி இருக்கும் எனக்கு, வெறி, மயக்கம், மருட்சி, நோய், கிரகங்கள், பொல்லாக் குணம் உடையோர், தீதுறும் நட்சத்திரங்கள், மிருகம் முதலானவை, பறவைகள், மற்றும் இயங்குநிலைப் பொருள்கள் முதலானவை பயத்தையும் இடையூறுகளையும் விளைக்குமாயின் "நீ இவ்வாறு பயப்பட வேண்டாம்; எனக்கு உரிய அன்பனே, பயப்பட வேண்டாம்'' என்று கருணைமிகுதியும் கொண்டு இவற்றை விலக்கி அருளும் பேரன்புநிலையே நிறைந்துள்ள பெரியோன் எனக் கூறுமாறு உள்ள பதியே குகப்பரமம் என்பது.

6. அணிகளுக்குள் தலைமை அணி (நாயகமணி); மணிகளுக்குள் ஒரு நாயகமணி; உயிர்க்கூட்டங்களுக்குத் தலைவன்; குறைவற எங்கும் நிறைந்திருக்கும் நாயகம்; தேவர்களாலும் பாவலர்களாலும் புகழப்படும் நாயகம்; பெரியனவற்றுள் பெரிதாக உள்ள அருட்செல்வ நாயகம்; அறியாமையாகிய இருளை விலக்கி அருளும் ஒளிமயமான நாயகம்; பரமகுருவாக விளங்கும் நாயகம்; பிரம்மமாகவும் சிவமாகவும் விளங்கும் நாயகம்; அடியேன் பணிந்து தொழ உள்ள நாயகம்; எனத் திகழ்ந்து, தத்துவ அதீதமான நிர்க்குணப் பொருள் என விளங்கும் ஒப்பற்ற பதியே குகப்பரமம்.

7. இகழ்ச்சிக்குரிய பாவமாகிய தீவினைப்பயனால் விளங்கும் விலங்கு, மரம் முதலான உயிர்க் கூட்டங்களும், புகழ்ச்சிக்குரிய புண்ணியமாகிய நல்வினைப் பயனால் விளங்கும் மேலான தேவகணங்களாகிய உயிர்க் கூட்டங்களும் நல்வினைப் பயனும் தீவினைப்பயனும் கலந்து நிலவுலகில் உள்ள மானுடரும் ஆனந்தநிலை அடைய வேண்டி 'ஊன நடம்' 'ஞான நடம்' என்னும் இரண்டு நடனங்களையும் அவ்வந்நிலைக்கு ஏற்றவாறு செய்யும் கடவுள் நான் உணர்ந்து வணங்கும் பதியே குகப்பரமம் என்பது.

8. முடிவற்ற வேட்கை உடைய உயிர்கள் கண்ணின் ஒளி போல் இருந்திட்டாலும் சூரியனின் ஒளி இன்றேல் விழியானது எவ்விதம் விளக்கம்பெறும்? அதுபோன்று பற்பலவகைப்பட்டுத் திகழும் உயிர்க் கூட்டங்களின் உள்ளுக்குள்ளே இருந்து இயக்கும் ஒளியாக முதலில் செயற்பட உள்ள உனது கருணை இன்றேல், உயிர்கள் செயலற்று இருக்கும் இழிநிலையே விளங்கும் என உள்ளவாறு உணரும் ஞானியர்கள் வணங்கும் பதியே குகப்பரமம் என்பது.

9. முதிர்ந்த அன்புப் பெருக்கம் உடைய அடியார்களாகிய குழந்தைகள் அனைத்தும், அவை நினைந்த உடனே இனிதாகப் பருகும் வகையில் தாய்ப்பாலாக வெளிப்படும் அருள் எனப்படும் அளவற்ற செல்வம் உடைய ஒப்பற்ற ஈசன்; முதலும் நடுவும் முடிவும் ஆகிய பேதங்கள் பொருந்தாதவன்; என் துயரங்கள் அனைத்தும் இரிந்தோடுமாறு அருள்புரியும் ஒளிமயமானவன் —எனச் சிறப்பித்துக் கூறப்படும் ஒப்பற்ற பதியே குகப்பரமம் என்பது.

10. பக்தியாகிய நலம் முதிரப்பெற்றுள்ளவராய்த் தன்னை வணங்கும் அடியார்கள் எந்த நிலத்தில் இருந்தாலும், மலை முதலான எந்த இடத்தில் இருந்தாலும் அவர்களை இரவிலும், பகலிலும் குழவிப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய நிலைகளிலும் உள்ளும் புறமும் தயவோடு வியாபித்துக் காக்கும் சீர்மைமிக்க பெருங்கருணைப் பயனையே விரும்பியவர் அருணகிரிப் பெருமான். இத்தகைய அருணகிரிப் பெருமான் புகழ்ந்து துதித்த ஒப்பற்ற பதிதான் குகப்பரமம் என்பது.

# 13. பரசுப்பிரமணியவாழ்வு

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருஞானந் தனையடையத் தவம்புரிக வென்னவுமத் திருஞா னத்தாற்
பெருஞானப் பிரமத்தை யறிந்திடலா மென்னவுநற் பெருமை வாய்ந்து
தெருளான தைத்திரிய வுபநிடத மறைந்திடுமத் தீர்வைக் கேனும்
மருளேனை விடுத்ததுண்டோ வெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. (1)

**உ**டம்புமுத லானந்தம் வரையொன்றற் கொன்றுள்ளே யுளவோ ரைந்து
சடங்களெனு மைங்கோசக் குகைக்கப்பா லுளகுகனைத் தரிசித் திட்டால்
அடங்கடந்த முத்தியெனத் தைத்திரிய வுபநிடத மதிர்க்கு மத்தை
மடஞ்செறிந்த யானடைவ தென்றெனையாள் பரசுப்பிர மணிய வாழ்வே. (2)

**எ**ம்மூர்த்தி களுமற்றை யெல்லாமும் பரசிவனே யிணையி லந்தப்
பெம்மானை யறிந்தவனே மிருத்துவினைத் தாண்டுகிறான் பெரிய வீட்டுக்
கிம்மார்க்க மலதில்லை யெனுமெசுவின் கைவலிய மிசைத்த வாறு
மம்மருளே னறிந்துய்வ தெக்காலென் பரசுப்பிர மணிய வாழ்வே. (3)

**சி**ரத்தையரும் பத்திதியா னம்யோகங் காரணமாச் சிவஞா னந்தான்
நிரப்பறவே வாய்க்குமெனா யசுவின்கை வலியோப நிடதங் கூறும்
உரப்பில்லே னுக்கவைதா மெந்தவா றமைவுறுமன் புடையர்க் கீநல்
வரத்தரசே யருள்புரியா யெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. (4)

**ஈ**ச்சுரசாட் சாற்காரத் தான்மோக்க மென்றதர்வ சிரசு கூறும்
பூச்சனன நீப்பாரெல் லார்க்குமிது பூர்த்திதரு பொருத்த மென்னாப்
பேச்சறையத் தடையாதீ தடியேற்குக் கிட்டாது பின்னிட் டக்கால்
மாச்சிரம மாமன்றோ வெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. (5)

**சி**த்தநிரோ தந்தானே சமாதியென்று மதுவேசாத் தியமா மென்றும்
மித்தைசொலா வமுதவிந்தா முபநிடதந் தெற்றெனவே விளக்கா நிற்கும்
அத்தையிந்தப் பேதைமையே னடையொழுங்கு நீபணித்தா லன்றோ மங்கா
மத்துடையோ னாயுய்வே னெனையாளும் பரசுப்பிர மணிய வாழ்வே. (6)

**இ**னியசமா திக்குரித்தா மேகாக்கிர சித்தமந்த வீச்சு ரன்றன்
கனிவுகிள ருபாசனையா லாமெனவைம் மூன்றுபிர கரணத் துள்ளே
நனிபகரத் திருத்தீ பங்கிளத்த லானுமந்நூ னடையுள் ளாரும்
வனமிதுவன் றென்னநடு வுளதோவென் பரசுப்பிர மணிய வாழ்வே. (7)

*3. கைவலியம் = கைவல்யோபநிஷத்.*
*6. மத்து = உள்ளக் களிப்பு.*
*7. ஐம்மூன்று பிரகரணம் = பஞ்சதசப்பிரகரணம்.*
*வனம் = வழி; ''பட்டமும் வனமுங் காலும் பதமும் – வட்டையும் ....... வழியெனல்'' என்பது பி – நிகண்டு.*

**ஏ**சில்சித்தி யார்சுபக்க மிரண்டாஞ்சூத் திரமிருபத் தெட்டி லென்றும்
ஆசில்சுத்த மானதமாம் பூசைமகத் தென்றுமணங் கான்றோர் வண்மை
பேசுபத்தில் யானெனதென் னுஞ்செருக்கை மாய்ப்போன்மால் பெறுமென்றுஞ்சொல்
மாசினித்த நெறியெற்கு மென்றுறுமென் பரசுப்பிர மணிய வாழ்வே. (8)

**கு**ன்மமுயர் யாகத்தும் புண்ணியமா நதிகண்முழுக் காதி யாய
தன்மதபோ யாகமுமவ் வியாகத்துஞ் சற்சபமுஞ் சபயா கத்தும்
புன்மையின்மா னசமாகுந் தியானயா கமுமுறையே புகலொண் ணாத
மன்னெனச்சை வபுராணஞ் சொலுமெனையாள் பரசுப்பிர மணிய வாழ்வே. (9)

**தி**ராவிடவோத் தேயுறுதெள் ளேணத்திற் சொனபோதச் சிதைவுஞ் சைவ
புராணவளிச் சங்கிதையின் ஞானநிலை யுரைத்தவயிற் புகன்ற வண்ணம்
அராகமல மாயைகெடிற் சிவனாவன் சீவனென்னு மமைவு மெற்கு
வராமலுமுய் வேனூற்றப் புதன்புகழென் பரசுப்பிர மணிய வாழ்வே. (10)

# 13. பரசுப்பிரமணிய வாழ்வு

**1.** வீடுபேற்றை அடையச் செய்யும் ஞானப்பேற்றைப் பெறவேண்டித் தவம் செய்க எனவும் இத்தகைய ஞானப் பேற்றால் ஞானப்பெருவெளியாகத் திகழும் பிரம்மப் பொருளை உள்ளவாறு அறிந்திடலாம் என்றும், மகத்துவமும் தெளிவும் மிகுந்த தைத்திரிய உபநிடதம் அறுதியிட்டுக் கூறும். இந்த முடிவுப்படி நடந்துகொள்வதற்காகவாவது, மருட்சிமிக்க அடியேனை வழிப்படுத்தினாயோ ? என்னை ஆட்கொள்ள உள்ள உன்னதமான சுப்பிரமணியமாகிய ஆனந்த வாழ்வே!

**2.** அன்னமயம் முதல் ஆனந்தமயம் வரை ஒன்றனக்குள் ஒன்றாக உள்ளனவும் சடங்களும் ஆன ஐந்து கோசங்களுக்கும் அப்பால் அந்தர்யாமியாக உள்ளே விளங்கும் குகனைத் தரிசிக்கும் பேறுபெறின், அதுவே அறிவு, அறியாமை இரண்டையும் கடந்த முத்திநிலையாம் எனத் தைத்திரிய உபநிடதம் கூறும். அறியாமை மிகுந்துள்ள நான் இந்த தரிசனப் பேற்றை எப்பொழுது பெறுவேன் ? என்னை ஆட்கொள்ள உள்ள பரமமான சுப்பிரமணிய வாழ்வே!

**3.** எவ்வகைத் தெய்வ வடிவங்களும் மற்றுமுள்ள அனைத்துப் பொருள்களும் பரசிவ வடிவமே. இணையற்ற அந்தச் சிவபெருமானை உள்ளபடி உணர்ந்தவனே மரணப்பிடியிலிருந்து, காலக்கட்டுப்பாட்டினின்று, விடுபடுகிறான். பெரியநிலையான வீடுபேற்றைப்பெற இந்த நெறியைத் தவிர வேறு நெறி இல்லை என யஜுர் வேதத்தைச் சார்ந்ததாகிய கைவல்லிய உபநிடதம் கூறும். இந்த உபநிடதம் கூறியவாறு உள்ளபடி உணர்ந்து நான் உய்திபெறுவது எப்பொழுது ? என்னை ஆட்கொள உள்ள உன்னதமான சுப்பிரமணிய வாழ்வே!

---

*8. அணங்கான்றோர் = தெய்வப் புலவர்.*
*9. சைவபுராணம் = சைவபுராணத்து ஞானசங்கிதை 26 – ஆம் அத்தியாயம்.*
*10. தெள்ளேணம் = தெள்ளேணத்து 4, 18. வளிச்சங்கிதை = வாயுசங்கிதை.*

**4.** சிரத்தை, பக்தி, தியானம், யோகம் – இவற்றை முறையாக மேற்கொண்டு சாதனை செய்தால் சிவஞானப் பேறு முழுமையாக வாய்க்கும் என யஜுர்வேதத்தைச் சார்ந்த கைவல்லிய உபநிடதம் கூறும். எந்தவிதமான ஆற்றலும் மனப்பக்குவமும் இல்லாத எனக்கு அவை எவ்வாறு பொருந்தும் ? அன்புடைய அடியார்க்கு அவர் வேண்டியவற்றை வழங்கும் வரதராசனே ! அருள்புரிக ! என்னை ஆட்கொள்ள உள்ள உன்னதமான சுப்பிரமணிய வாழ்வே !

(வரதன் = வரங்களை அருள்பவன்; ராசன் – பேரரசன்
வரங்களை அருளும் தெய்வங்களுள் பேரரசாக விளங்கும் குகப் பெருமான்)

**5.** ஈசுவரநிலைக்குரிய அத்தனை ஆற்றல்களையும் குணங்களையும் முழுமையாகப் பெறும் நிலையே ஈசுவர சாக்ஷாத்காரம் என்பது. ஈசுவர சாக்ஷாத்காரம் எனும் உயர்ந்த பேற்றால் வீடுபேறு கிட்டும் என அதர்வசிரசு எனும் உபநிடதம் கூறும். பூமியிற் பிறத்தல் என்பதை நீக்குதற்குரிய அனைவர்க்கும் முழுமையான பலன்தரும் பொருத்தமான வழி இதுதான் என உறுதியான தீர்ப்பு கூற யாது தடை ? இந்த ஸாக்ஷாத்காரம் அடியேனுக்குக் கிடைக்காது போனால் என் வாழ்வு இடர்ப்பாடு மிகுந்ததாக ஆகி விடுமல்லவா ! என்னை ஆட்கொள உள்ள உன்னதமான சுப்பிரமணிய வாழ்வே.

**6.** ‘‘மனச் சலனத்தை அடக்குதல் என்பதே சித்த நிரோதனம் எனப்படும். சித்தநிரோதனம் என்பதே சமாதி நிலையாம். அதுவே உறுதியாகச் சாதிக்கப்படும் நிலையுமாகும்.’’ எனப் பொய்யுரை புகலாத அமிர்தபிந்து என்னும் உபநிடதம் தெளிவாக விளக்கிக் கூறும். இந்த நிலையைப் பேதையேன் அடையக் கூடிய வழிமுறையை நீ உணர்த்தினால் அன்றோ, நான் அழியாத – குறைவுபடாத–இன்பக் களிப்பை உடையவனாகி உய்திபெறுவேன் ! என்னை ஆட்கொள உள்ள பரமமான சுப்பிரமணிய வாழ்வே !

**7.** இனிய சமாதிப் பேற்றுக்கு உரியதாகிய ஏகாக்கிரசித்தம் (ஒருமுகப்படுத்தப்பட்ட மனம்) என்பதை ஈசுவர வழிபாட்டால் பெறலாம் எனப் பஞ்சதசி என்னும் நூலின் ஏழாவது பிரகரணமான திருத்தி தீபிகை உறுதிப்படுத்துவதால், இந்நூல்வழி நிற்போரும் ‘‘ஈசுவர உபாசனை பொருத்தமான வழியன்று என்று கூற நியாயம் உண்டோ ?’’ எனை ஆட்கொள்ள உரிய பரமமான சுப்பிரமணிய வாழ்வே.

**8.** குற்றமற்ற சிவஞான சித்தியார் என்னும் நூலில் இரண்டாம் சூத்திரம் இருபத்தெட்டாம் செய்யுளில் "மாசு நீங்கிய தூய்மையான மானச பூஜையே மகத்துவம் வாய்ந்தது’’ என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. திருவள்ளுவர் துறவுப்பெருமை கூறும் அதிகாரத்தில் "யான், எனது என நிகழும் செருக்குணர்வுகளிலிருந்து விடுபடுவோன் மிக உயரிய பேற்றைப் பெறுவான்’’ என்று கூறியருள்கிறார். இவ்வாறு கூறப்படும் மாசில்லாத, நித்தியப் பேற்றுக்குரிய நெறி, அறிவில்லாத எனக்கு எப்பொழுது பொருந்தும் ? எனை ஆட்கொள்ள உரிய பரமமான சுப்பிரமணிய வாழ்வே !

**9.** புறச்செயல்கள் மிகுந்துள்ள வேள்வியைக் காட்டிலும் உயர்ந்தது புண்ணிய நதிகளில் நீராடல் முதலான புண்ணியச் செயலாகிய தவயாகம்; தவயாகத்தைக் காட்டிலும் உயர்ந்தது ஜபயாகம்; ஜபயாகத்தைக் காட்டிலும் உயர்ந்தது, மனவழிப்பட்ட தியானயாகம். இவ்வாறு இவை ஒன்றனுக்கொன்று அளவற்ற பெருமை உடையது எனச் சைவபுராணம் கூறுகிறது. இந்த உயர்ந்த

தியானயாகம் எனக்கு வாய்க்குமாறு அருள்புரிக. என்னை ஆட்கொள உள்ள பரமமான சுப்பிரமணிய வாழ்வே!

**10.** திராவிட வேதமாகிய திருவாசகத்தில் தெள்ளேணம் எனும் பகுதியில் கூறப்பட்டுள்ள ஜீவபோதச் சிதைவும், சைவபுராண வாயு சம்மிதையில் ஞானநிலை உரைத்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளவாறு அராகம், மலம், மாயை முதலான உபாதிகள் நீங்கப்பெற்று சீவன், சிவநிலையை அடையும் உன்னதப் பேறும் எனக்கு வாய்க்காமல் இருக்குமாயின் நான் உய்திபெற முடியுமோ? எனை ஆள உரிய அருணகிரிப் பெருமான் திருப்புகழ் பாடித் துதித்த, பரமமான சுப்பிரமணிய வாழ்வே!

# 14. குகசம்பு

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பு**கழ்மலி சண்பையி லும்பரும் புகழவி ருந்தரு ளுண்டவேள்
திகழ்மறை மந்திர வந்தரந் திரிபுடை யொன்றொடி ரண்டெனாப்
புகறலொ ழிந்துள டங்கிடும் பொறைமவு னம்பிடி யென்றுதந்
துகளறு தொண்டர்சு கம்பெறச் சொனதில்வை யென்குக சம்புவே. (1)

**வ**சுதைதொ டங்கிய ருஞ்சிவம் வரைசது வொன்பது மின்றியொண்
சுசிசுட ருஞ்சிவ நின்றிடுந் துவிதம கன்றதி லொன்றுதல்
உசிதவ ருஞ்சிவ மென்றுநன் குறுமரு ணந்திப கர்ந்ததிற்
கசிவுடை யென்றனை யென்றும்வை களிகிள ரென்குக சம்புவே. (2)

**அ**வதித ருந்தளை யைந்தையு மகலவ யர்ந்தவர் துன்பறு
சிவமென நின்றன ரென்றுரன் றெவுடிரு மந்திர வந்தணர்
நுவனிலை கொண்டுய வன்புசெய் நுழையில்சி தம்பர வங்கணன்
பவமற வன்றரு டந்ததண் பரிவுடை யென்குக சம்புவே. (3)

**ஏ**னதொழில் கொண்டுக றங்கினு மிறையரு ளின்பரு ளஞ்சிகாக்
கனமவு னந்தனி லென்றுபேய்க் கனன்மது ரந்தர வுண்டகோன்
சொனதுரி யந்தனி னின்றொரு சுகமடை யும்படி யின்றெனை
மனதுக னிந்துக லந்திடாய் வரர்பர சென்குக சம்புவே. (4)

---

*2. வசுதை = மண்ணுலகு; பி – நிகண்டு. இது, பிருதிவி தத்துவம்.*

*3. தெவுளல் = பெருகல்.*
*மந்திரவந்தணர் = திருமந்திரமுனிவர். (திருமூலநாயனார்)*
*நுழை = நுண்மை, ஈனம்.*

*4. ‘இன்பருளம்’ என்பதை, இன்பர் + உளம் எனப் பிரித்துகொள்க.*

**ம**லமழி வின்றிய ருந்திரு மறைபுக ழும்பதி யென்பதிற்
கலவலி கந்தவொர் தந்திர கதிவர லென்றென வஞ்சிர
மலையர னின்பெயர் கொண்டுளோன் மனதுக னிந்துமொ ழிந்தவந்
நலனுற வின்றுக லந்தரு ணவிலரு மென்குக சம்புவே. (5)

**உ**ருவெளி யாம்படி யோங்கிய வொருவனி ரந்தர வின்பினை
மருவியி மாண்பய னீண்டெவர் மருவுவ ரென்றுளி ரங்குதல்
பெருகிய வான்சுக வீங்கலிற் பிரிவற விங்கெனை நன்குவை
கருணையி னீண்டம காம்பரக் களிகிள ரென்குக சம்புவே. (6)

**நீ**யெனை நற்புரி வான்முனர் நிகழுரு வங்கொடு வந்துநல்
நேயம தர்ப்புற வேசொன நிலைநனி நின்றுப யன்பெறத்
தாயினு மிக்கத யாவினைத் தருவது முன்கட னுன்கடன்
தூயவ ருட்கரு வூலமே சுபகர வென்குக சம்புவே. (7)

**நா**ல்வர்ந டுப்படி நின்றிது நாள்வரை யின்புய ருஞ்சுகஞ்
சால்கதி பெற்றுள ரன்பது தாழ்வற விங்கெனை மண்டினுன்
பால்வதி யத்தடை யென்கொலென் பாலதை நெஞ்சமு கந்தருள்
நூல்கடு திக்கவ யங்குமோர் நூனமி லென்குக சம்புவே. (8)

**சி**ந்தையி றந்துசி றந்தவர் சென்றவ ரம்புணு ழைந்துவெம்
பந்தம கன்றிட வென்றுனும் பண்புடை நெஞ்சம டங்கலும்
எந்தைக ளென்றுகு ரங்குமன் பென்பதை யுந்தர லுன்கடன்
அந்தமி லந்தணர் சந்தத மன்புசெ யென்குக சம்புவே. (9)

**அ**சைவறு நன்மவு னந்தனி லமரென லும்பொரு ளொன்றுமா
திசையொட றிந்தில னென்றுசெந் திருவுள நம்பந டந்துளோன்
வசையற மண்டிய வின்புழை வழிபடு மென்றனை யுந்தளை
பசையருண் மைந்தர்க ளெங்கணும் பரவிடு மென்குக சம்புவே. (10)

# 14. குகசம்பு

1. என்னை ஆட்கொள்ள உள்ள குக சிவபரம் பொருளே! புகழ்மிக்க சீகாழிப் பதியில் தேவர்களும் புகழ்ந்து துதிக்கும் வண்ணம் இருந்து சிவஞானப் பாலமுதம் உண்ட திருஞானசம்பந்தர், "வேதங்களில் கூறப்பட்டுள்ள மந்திரங்களைத் தூலநிலையில் ஜபித்தல், காண்பான், காட்சி, காண்பொருள் எனும் முப்புடி, ஒன்று எனவும் இரண்டு எனவும் முரண்படக் கூறுதல் ஆகிய இவற்றையெல்லாம் நீத்து உள்ளம் சலனமற்று இருப்பதற்கு ஏதுவாகிய

*5. கலவல் = கலத்தல்; பி – நிகண்டு.*

மௌனநிலையைக் கடைப்பிடித்துச் சும்மா இரு'' என்று – தன் குற்றமற்ற அடியார்கள் பேரின்பநிலையைப் பெறுவதற்காகக் கூறியருளிய உபதேச மொழியில் என் கருத்து பதிந்து இருக்குமாறு செய்க.

**2.** "பிருதிவி தத்துவம் முதல் சிவதத்துவம் வரை உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் பிணிப்பிலிருந்து நீங்கி, சுத்தமாக சிவம் ஒளிரும். இதனோடு இரண்டறக் கலத்தலே, மிக மேலானதும் பெறுதற்கு அரியதுமான பேறாக உள்ள சிவநிலை'' என்று சிவஞானச் செல்வம் வாய்த்த அருணந்தி சிவம் உணர்த்தி அருளிய உயர்நிலையில், மனத்துயரம் மிகுந்துள்ள என்னை நிலையாக நிறுத்திவைத்து அருள்புரிக ! ஆனந்த நிலையிற் கிளர்ந்துள்ள, என் குகசம்புவே !

**3.** "பிறவித் துன்பத்தைத் தரும் ஐவகைப் பாசங்களும் தம்மைவிட்டு நீங்குமாறு தவம் செய்வோர், மலஇருளாகிய துன்பமற்ற சிவம் எனவே விளங்குவர்'' என்று, தவ ஆற்றல் மிகப்பெற்ற திருமந்திர முனிவராகிய திருமூலர் கூறும் உயர்நிலை கைவரப்பெற்று நான் உய்திபெறுமாறு அருள்செய்க ! குறைபாடு ஏதும் அற்ற சிதம்பர முனிவர் பாசப்பிணிப்பிலிருந்து நீங்குமாறு அன்று அருள்பாலித்த இறைவ ! குளிர்ந்த கருணை கொண்டுள்ள என் குகசம்புவே !

**4.** "எந்தச் செயலில் ஈடுபட்டு அலைந்து கொண்டிருந்தாலும், பரம்பொருளின் அருளானந்தம் துய்க்கும் பெரியோரின் உள்ளமானது, குன்றாத மகிமைக்குரிய மௌன நிலையிலேயே இருக்கும்." பேய்க்கரும்பை இனிக்க இனிக்க உண்ட பட்டினத்து அடிகள் இவ்வாறு கூறியுள்ள துரியநிலையில் நின்று நான் ஒப்பற்ற சுகம் அடையுமாறு நினது மனம் கனிந்து இப்பொழுது என்னுடன் இரண்டறக் கலந்து அருள்க ! எனை ஆட்கொள்ள உரிய குகசம்புவே !

**5.** விளக்கிக் கூறுதற்கரிய என் குகசம்புவே ! மலப்பிணிப்பானது அடியோடு நீங்காமல் வேதம்புகழும் நிர்க்குண இறை என்பதனோடு இரண்டறக் கலத்தல் என்பது இல்லை. மலப்பிணிப்பு முற்றும் நீங்கலே இறையோடு இரண்டறக் கலத்தல் என ஆகமங்களில் விதந்து கூறப்பட்டுள்ள மேலான கதி எப்பொழுது வாய்க்கும் ? – எனத் தாயுமான சுவாமிகள் மனம்கனிந்தும் கசிந்தும் கூறிய மேலான சிவப்பெருநிலையை நான் அடையுமாறு இப்பொழுது என்னுடன் கலந்தருள்க.

**6.** பரம ஆகாசமாகத் தனது வடிவம் விளங்கும்படி ஓங்கி உயர்ந்து வியாபித்துள்ள பரம்பொருளின் இடையீடுபடாத நிலையான அருளின்பப் பேற்றைப் பொருந்தியுள்ளோம். இத்தகைய மகிமைப் பேற்றை இவ்வுலகில் வேறு யார் பெறுவர் ? – என்னும் உண்மை மீக்கூர்ந்து உளம் குளிரும் பெரும்சுக மகிமைநிலையில் என்னைப் பிரிவற நன்கு வைத்தருள்க. கருணைமிகக் கொண்டு பரம ஆகாசமாக விளங்கும் ஆனந்தநிலையில் ஒளிரும் என் குகசம்புவே !

**7.** என்மீது கொண்ட பெருங்கருணையால் முன்பு என்முன் வடிவுடன் வெளிப்பட்டு அருளி, வளமான அன்பு பொருந்த நீ கூறியருளிய நெறிப்படி நின்றுள்ளேன். நான் உறுதிப்பயன் பெறும் வகையில் மேன்மேலும் உனது தாயினும் மேம்பட்ட கருணையை வழங்கி அருள்க. இவ்வாறு அருள வேண்டியது உனது தலையாய கடமையேயாகும். தூய்மையான அருட்கருவூலமே ! சுபமான பேறுகளை வழங்கும் என் குக சம்புவே !

8. நான்கு குரவர்களும் கூறியருளிய உறுதியான நெறிப்படி நின்று இந்நாள்வரை பேரின்பப் பெருநிலையை அடைந்துள்ள அருட்செல்வர்களின் உறுதியான அன்புநிலை எனக்கும் குறைவறப் பொருந்துமாயின் நினது திருவருள் விலாச ஆநந்த பூமியில் நான் நிரந்தரமாக வசிக்க என்ன தடையுளது ? என்னிடம் அத்தகைய அன்புநிலை பொருந்த நெஞ்சம் உவந்து அருள்க. எவ்விதக் குறைவும் அற்று, நூல்கள் துதிக்குமாறு விளங்கும் என் குகசம்புவே!

9. துவைத மனோபாவமயமான சித்த நிலையைக் கடந்து மேம்பட்ட ஞானிகள் சென்றடைந்துள்ள யோகபூமிக்குள் நுழைந்து, கொடிய பாதகங்களெல்லாம் கெட்டு அழியக் குறிக்கொள்ளும் இயல்புடைய நெஞ்சம் மிகவும் உயர்ந்தது. இத்தகைய நெஞ்சம் முழுவதுமாக வியாபித்துள்ள எந்தையாகிய நினது பூரண சான்னித்தியத்தை அனுபவ பூர்வமாகக் கண்டு வணங்கும் அன்புநிலையை எனக்குத் தருதலும் உனது கடனே! கற்பங்கள்தோறும் அழிவில்லாமல் இருக்கும் நித்திய சுத்தர்கள் இடையறாது அன்புடன் துதிக்க உள்ள என் குக சம்புவே!

10. “அசைவற்ற மௌனநிலையில் அமர்" (சும்மா இரு; சொல் அற) என ஆணைதந்ததும் பெரிய பிரபஞ்சப் பரப்போடு ஒருபொருளையும் நான் அறிந்திலேன். அனைத்தும் குகமயமாகவே தோன்றுகிறது" என்று நினது திருவுள்ளம் விரும்பத் தன்னை நெறிப்படுத்திக்கொண்டார் அருணகிரிப்பெருமான். இப்பெருமான் எய்திய இகழ்ச்சியற்ற பேரின்ப வெள்ளத்துள், உன்னை வழிபடும் என்னையும் பிணித்து வைத்தருள்க. எங்கெங்கும் உள்ள அருளாளர்களாகிய அடியார்கள் தொழுதுவணங்கும் என் குகசம்புவே!

# 15. பெரியசாமி

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**க**ங்கை வார்கிடைக் கடவுள் சேயெனுங் கந்த வேள்சய கீய சவ்விய
புங்கன் மாணவ கருளைம் பாதகம் புரிந்த வோர்மனு டற்கி ரங்கியப்
பங்கம் வீட்டிமுன் கொண்ட துண்டெனப் பகரன் மெய்யெனி லெளிய னேனமும்
மங்க மாய்த்தருள் புரிவை யேயருள் வரத சாகரப் பெரிய சாமியே. (1)

**சி**ந்திற் குந்தனு வாவிக் குந்தடச் சிகரிக் குஞ்சிறு திடருக் குங்கடத்
தந்திக் குங்குழைப் பன்றிக் கும்வியன் றாழ்வெம் மட்டம்மட் டெற்கு நின்னருள்
சிந்திக் கும்பெரி யர்க்கு முண்டிதிற் சிறிய னுய்யுமா றெங்ங னெற்கினி
வந்திக் கும்முனை யன்றித் திக்கிலை வரத சாகரப் பெரிய சாமியே. (2)

1. சயகீயசவ்வியன் என்பது “ஜைகீஷவ்யன்” என வாயுசங்கிதையின் உத்தர பாகத்தில் வருகின்றது. புங்கவன் = குரு; ‘புங்கன்’ என விகாரப்பட்டது. இது –“புங்கவன் றலைவன் சாமி” எனப் பி– நிகண்டிலும் “முநிபுங்கவ” என யோக குண்டல்யுபநிஷத்திலும் வருகின்றது. இரங்கியருளிய இடம், சீசைல மென்க.

2. தனுவாவி = சிறியகுளம்; தனு = சிறுமை; பி – நிகண்டு.
குழை = காடு.

**அ**னலிக் கும்மினும் புழுவுக் கும்மல யசத்துக் குங்குழை யளக்கர்க் குஞ்சுக
மனுவுக் கும்பிற மறைகட் கும்முள்ள மாற்ற மெம்மடங் கம்ம டங்கருட்
டனுவர்க் குஞ்சிறி யவனுக் குஞ்சொலத் தடையொரற்பமு மிலையு னைப்பணி
மனமுற் றுங்கொனுந் தளர்வுற் றோய்வன்கொல் வரத சாகரப் பெரிய சாமியே.(3)

**அ**ரிய புத்தியின் மிருக மொப்பவிங் கருந்த லும்பொருந் தலுமின் பாமெனத்
திரியுன் மத்தரைப் பொருவ நிற்பணி சிறிய னுந்திரிந் திடின ருட்டிறன்
விரிம தர்ப்பினர் பொலிவி யக்கமெவ் விதமு றுஞ்சுக முதவு நல்லருள்
வரிய ளித்தருள் புரிதி யொப்பிலென் வரத சாகரப் பெரிய சாமியே. (4)

**சு**டரின் மேலுமெ லுந்துப் பாச்சியஞ் சொரிய வஃதவிந் திடுவ துண்டெனின்
விடய மோகமுந் தமசு ளேற்கற விதியுண்டாமெனப் புகறலாமைய
கடவு ளாயநின் கருணை நோக்கமென் கண்ணி னுந்தடை யாகு மேற்றொடர்
மடமை வீடவு மிடனுண் டோசொல்லு வரத சாகரப் பெரிய சாமியே. (5)

**த**க்க னொத்தணங் கொழித்து ஞற்றுநற் சகல கன்மமுங் கவலை யேதரும்
பக்க மிக்குடைத் தண்டி போலரும் பரத்தை யேமுனிட் டுஞற்று பாவமும்
பொக்க மற்றதைத் தருமென் றாலருட் புரிவி யாதினும் பெரிது நல்லருள்
மக்க ளியாவர்க்கு முரிய வஃதளி வரத சாகரப் பெரிய சாமியே. (6)

**ச**குன மானெழின் மீன்மண் டூகமஞ் சலிகை போல்விணிற் சரித்துங் கானளிர்
மிகும றன்மகிப் புடைவ திந்துமுவ் வியத மாநித நான்று நிற்றலின்
தகுதி யாயநின் றனைய றிந்துயுஞ் சரத வின்பிலொ ரிறையு மெய்துமோ
மகுட வானவர் முதல்வ வென்னைய வரத சாகரப் பெரிய சாமியே. (7)

**ஊ**ன்பு ரத்தொரு வற்குன் மெய்யரு ளுறுமெ னிற்பிற வொருவ னைத்தொடல்
தேன்க டுக்குநன் மொழியு லோசனஞ் சிந்தை கொண்டிருள் போக்கி யாள்வலி
தான்பெ ருத்திடு மாயி னின்னொரு தரிச னந்தனிற்பாச நீக்கமும்
வான்க ளிப்புநன் கெய்தற் கையமென் வரத சாகரப் பெரிய சாமியே. (8)

---

*3. மின்னும்புழு = மின்மினிப்புழு.*
*மலயசம் = சந்தனம்; மலயஜம் – வடசொல் (மலயத்திற் பிறந்தது)*

*4. வரி = கடல்; "நெல்லுங் கடலும் ...... கடனும் வரியே" என்பது பி – நிகண்டு.*
*வாரி 'வரி' எனக் குறுகிற் றென்னலாம்.*

*6. பொக்கம் = பொய்.*

*7. சகுனம் = பறவை; வடசொல்.*
*கானளிர் – கான் + நளிர் எனப்பிரிக்க.*
*நளிர்மிகும் அறல் = குளிர்மிகுந்த நீர்.*
*உவ்வி = தலை; எல்லா நிகண்டுகளிலு முண்டு.*

*8. ஊன்புரம் = ஊனுடம்பு.*

**சோ**க மென்றசொற் சொலலினாலுடற் சுமையுளோனொரு வனருந் தேவுனோ
டேக மாங்கதி யெய்து வேனென வெணலி னுஞ்சம னிருணி லத்திடைப்
போக னீங்குதல் பெரிதெ னத்தனுட் புந்தி செய்தனன் கென்றிவ் வானியம்
மாக ரிப்புறு வேனைக் காவுதி வரத சாகரப் பெரிய சாமியே. (9)

**ஈ**ச போற்றிநன் னேச போற்றியெம் மிறைவ போற்றியெம் பெரும போற்றிசூர்
நாச போற்றிமெய்ப்போச போற்றியொர் நாத போற்றியென் றோதும் வாய்ப்புடைத்
தாச ரேத்தரு ணாச லப்பெயர்ச் சாது பாத்தலை வாவு னைப்புணர்
மாசி லாக்கதி வேண்டு மாண்டருள் வரத சாகரப் பெரிய சாமியே. (10)

# 15. பெரியசாமி

1. கங்கையைச் சடைமுடியிற் கொண்டுள்ள சிவபெருமானின் திருக்குமரன் எனப்படும் கந்தவேள் பெருமான், ஜைகீஷவ்வியர் எனும் முனிவரின் மாணாக்கர்களுள் ஒருவன் ஐம்பெரும் பாதகச் செயல்களையும் செய்துவிட, அவனுக்காக இரக்கப்பட்டு, அப் பாதகப்பயன் சிறிதும் அவனைப் பீடிக்காதவாறு தீவினைப்பயனை அழித்து அவனை ஆட்கொண்ட கருணைச் செயலும் உண்டு என நூல்களில் கூறப்பட்டுள்ளது உண்மை எனின் எளியேனின் தீவினைப்பயன்களும் தேய்ந்தழியும் வண்ணம் அருள்புரிய மாட்டாயோ ? அருள்மயமான வரங்களை மிகுதியாக வழங்கும் கருணைக்கடலாக உள்ள பெரும்பெயர் இறைவ !

2. பெரிய கடலை நோக்க, சிறுகுளத்துக்கும், பெரிய மலையை நோக்க, சிறிய மணல்மேட்டுக்கும், மதம் வாய்ந்த யானையை நோக்க இழிந்த பன்றிக்கும் இடையே எவ்வளவு தாழ்வு உண்டோ அவ்வளவு தாழ்வு, நின் கருணையையே சிந்திக்கும் பெரியோர்க்கும் எனக்கும் இடையே உள்ளது. இப்படி இருக்கும்போது யான் உய்யும் வகை எப்படி ? உலகெல்லாம் துதிக்கும் உன்னையன்றி எனக்கு இனி வேறு கதிஇல்லை. வரத சாகரப் பெரிய சாமியே !

3. சூரியனை நோக்க மின்மினிப் புழுவுக்கும், நறுமணம் மிகுந்த தென்றலை நோக்கத் தீநாற்றச் சேற்றுக்கும், சுகநிலைதரும் மகாமந்திரத்தை நோக்க, உலகியல் தொடர்பான பிறமந்திரங்களுக்கும் இடையே எவ்வளவு தாழ்வு உண்டோ அவ்வளவு தாழ்வு அருள்மயமான திருமேனி உடையவர்களை நோக்க, சிறியனாகிய எனக்கு உள்ளது. இவ்வாறு கூறத் தடை எள்ளளவும் இல்லை. உன்னையே பணியும் உள்ளம் எனக்கு வாய்த்தும் நான் வீணே தளர்ச்சியுற்று அழிந்து விடுவேனோ ? வரதசாகரப் பெரிய சாமியே.

4. பெறுதற்கரிய அறிவுப்பேறு சிறிதும் இல்லாத மிருகத்தைப் போன்று உணவு உண்பதும், உடற்சேர்க்கையுமே இன்பம் தருவனவாம் எனக் கருதித் திரியும் வெறியர்கள் உள்ளனர்.

*9. போகல் = போகுதல்.*
*ஆனியம் = நாள்; சூ–நிகண்டு.*
*கரிப்பு = அச்சம், "கரிப்பே தெருமரல்" என்பது சே. திவாகரம்.*

அவர்களைப் போன்று சிறியனாகிய யானும் திரிந்தால், உன் திருவருள் செல்வத்தைப் பெற்றுப் பேரின்பத்தில் திளைக்கும் அடியார்களின் சீலமும் நெறியும் எனக்கு எவ்வாறு வாய்க்கும்? ஆனந்தப் பேற்றைத் தரும் அருட்கடலை எனக்கு அளித்து அருள்புரிக. எனை ஆள உள்ள, ஈடிணையற்ற வரதசாகரப் பெரிய சாமியே!

**5.** சுடர்விட்டு எரியும் நெருப்பின்மேல் தூய நெய் சொரிந்தால் அந்நெருப்பு அவிந்து தணிவது உண்டு எனின், உலக விடயங்கள்பால் எனக்குள்ள மோகமும் அறியாமை மிக்க என்னிடமிருந்து அறவே விலகிநிற்க ஒரு நியாயம் உண்டு எனக் கூறலாம். ஐயனே! அனைத்துயிர்க்கும் உரிய கடவுளாகிய உனது கருணைநோக்கம் என்மீது படாமல் தடைபட்டு நிற்குமேயானால், தொடர்ந்து நிற்கும் என் அறியாமை இருள் அழிந்துபட இடமும் உண்டோ? வரத சாகரப் பெரிய சாமியே! கூறி அருள்.

**6.** தக்கனைப் போன்று தெய்வத்தை நீத்தும் நிந்தனை செய்தும் செய்யும் செயல்கள் அனைத்தும் துன்பத்தையே தரும். அன்புமிகவும் உடைய தண்டியடிகள் போன்று பரம்பொருளை முன்னிட்டுச் செய்யும் பாவச் செயல்களும் உண்மையும் உறுதியுமான பயனைத்தரும். நினது அருள் நெறியில் நடைமுறை இப்படி இருப்பதால் அன்பு நிலையே யாவற்றினும் பெருமை வாய்ந்தது என உணரலாம். மங்களகரமான அருள்பேறு பெற்றுள்ள பெரியோர் அனைவர்க்கும் உரிய தூய அன்புநிலையை எனக்கு அளித்தருள், என் வரத சாகரப் பெரியசாமியே!

**7.** வானத்தில் பறவையும் காட்டில் மானும் நீரில் மீனும் நிலப்பரப்பில் தவளையும் சஞ்சரிக்கின்றன. இவற்றைப் போன்று வானிலும், கானிலும், நீரிலும் பூமியிலும் அலைந்து திரிந்தும், வௌவாலைப் போன்று தலைகீழாகத் தொங்கி நின்றும் தவம் என்ற பெயரில் தம்மை வருத்திக் கொள்வோர் தகுதிமிக்க நின்னை உள்ளவாறு உணர்ந்து உண்மையான பேரின்பத்தில் சிறிதளவேனும் பெறமுடியுமோ? இப்படியெல்லாம் வருத்திக் கொள்வதால் இறையின்பம் பொருந்தாது. உன்னதமான தேவர்களுக்குரிய முதல்வனே! என் ஐயனே! வரத சாகரப் பெரிய சாமியே! உன்னை உணர்ந்து இன்பநிலையை அடைந்து உய்யச்செய்யும் அன்புநிலையைத் தந்தருள்.

**8.** பூத உடல் கொண்டுள்ள ஒருவனுக்கு நினது பூரணமான மெய்யருள் பொருந்தும் போது அவன் தனது பரிசத்தாலும் (தொடுதல் என்பதாலும்) உபதேசத்தாலும் பார்வையாலும் மனத்தாலும், சீடர்களின் அறியாமையைப் போக்கி ஆட்கொள்ளும் ஆற்றல் இயல்பாகவே அவனுக்கு வந்துவிடுகிறது எனில் உனது தரிசன மாத்திரத்தில், – உன் சந்நிதிக்கு வந்த அளவிலேயே – பாசநீக்கமும் பேரின்பப் பேறும் அடைவதற்கு ஐயப்பாடு என்ன? என் வரதசாகரப் பெரிய சாமியே.

**9.** அனுபவ பூர்வமான ஐக்கிய பாவனை இல்லாமல் "ஸோஹம்" (அவனே நான்) என்று சொல்வதால் மட்டுமே, பூத உடலோடு கூடியுள்ள ஒருவன் "அரிய தெய்வமாகிய உன்னோடு ஒன்றாகி, உனக்கு நிகராக விளங்கும் நிலையை அடைவேன்'' என விபரீதமாக எண்ணுவதைக் காட்டிலும் ''யமனுலகு சென்று மீளுதல் பெருமை உடையதாகும்'' என எண்ணுதல் பெரிதும் நன்றே. இந்நாளில் பெரிதும் அச்சம்கொண்டு வருந்தும் என்னைக் காத்தருள். அடியார் பொருட்டு வெளிப்பட்டு அருளும் வரதசாகரப் பெரிய சாமியே!

10. ஈசனே போற்றி! நேசனே போற்றி! எம் இறைவனே போற்றி! எம் பெருமானே போற்றி! அசுரர்குலத்தை அழித்தருள்பவனே போற்றி! உண்மையான பேரின்பமயமானவனே போற்றி! ஒப்பற்ற நாதனே போற்றி! – என்றெல்லாம் துதிக்கும் பேறு பெற்றுள்ள அடியார்களால் புகழப்படும் அருணகிரிநாத சுவாமிகள் பாடிய திருப்புகழ்ப் பாடல்களுக்குரிய தனித் தலைவ! உன்னுடன் இரண்டறக் கலந்திருக்கும் மாசற்ற பெருநிலையை வேண்டுகிறேன். ஆட்கொண்டு அருள்! வரத சாகரப் பெரிய சாமியே!

# 16. திருவருட்கடல்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**உ**லகடங் கலும்பணி யிறையவன் சேவைய
தொழிந்துளர் பணும்வினைப் பலனைத்
தலமிசை யனுபவித் தாயினும் பரிகரித்
தாயினுஞ் சரிசெய வேண்டும்
இலையெனி னதுபினைப் பவத்துறு மெனவிர
ணியன்முளை சொனநடுப் படியுன்
நலனுடைச் சேவை யிலாதுயும் வழியெங
னான்றொழுந் திருவருட் கடலே. (1)

**ந**ன்னெலைக் கவர்ந்துவைக் கோல்விடுத் திடலென
ஞானநூற் பொருளினைக் கிரகித்
தந்நெறி நூல்விடுத் தாரிய னுரைப்படி
யனுதினஞ் சாதனை புரிந்துன்
இன்னரு ளடைந்தன ரறிஞரெல் லாருமிங்
கிழிநசை சூழ்ந்துகெட் டேனான்
முன்னிய வணமினி முயங்கிநல் லருள்செயென்
முழுமுதற் றிருவருட் கடலே. (2)

**ஆ**ரிய னுவற்சிநம் பாதசந் தேகமு
மகிலமு மாக்கையு நாமென்
றோரிடை யூறற விழைவிப ரீதமு
முறழ்வுடைப் பொருண்மறைத் துளமா

1. *இரணியன்முளை சொன்னதாக வரூஉ நடு – சைவபுராண ஞானசங்கிதையிற் சொல்லப்பட்டுளது, முளை = மகன், நடு = நியாயம்.*

3. *இத்திருப்பாட்டிற் சந்தேகம், விபரீதம், அஞ்ஞானமென்னு மூன்று மொழிந்தக்காற் திருவருளின்பத்தை யடையும்வழி யுண்டாமென்பதும், அச்சந்தேகம் ஆசாரிய வசனத்தை நம்பாமையா மென்பதும், பௌதிகவுலகு முடம்புமே ஆன்மாவாகிய நாமென விழைதல் விபரீதமென்பதும், ஆன்மவறிவை மறைத்துள்ள விருளே அஞ்ஞான மென்பதும் வெளிப்பட்டன.*

காரிரு ளானது மிலையெனி னுனதருட்
  களியினை யடைவழி யுண்டாஞ்
சீரிய நடையிலெற் கெதுவரு மடியனைத்
  தெருட்டுநற் றிருவருட் கடலே. (3)

**த**ந்தைதாய் மனைமக வாதிய ரியாதொரு
  தருணமை விழிமறை வாயின்
சிந்தைதான் வருந்தியம் பகத்தலர் வடிப்பரித்
  திணைக்கொரு மூலமா யாதி
அந்தமே யில்சிவ மறைந்துள நிலைகுறித்
  தழுகிலர் நரரிதை யாயின்
நிந்தைசான் மடமையென் றாமிதைக் கடந்துய்ய
  நினைவுசெய் திருவருட் கடலே. (4)

**ஆ**ண்டைய ராயுளோர் நூற்றினு மேலிலை
  யதிலரைக் கூறுநித் திரைக்காங்
காண்டிற மதிற்பதி னைந்திள மையிற்போங்
  கதிகிளர் சரைக்குமவ் விதம்போந்
தூண்டுமற் றிருபதி னோய்முத லானவை
  தொடர்வுறு மிதற்குளெண் ணறுநூல்
ஏண்டர வுணர்வதெங் கறிவதெங் கடைவதெங்
  கெனைக்கொளுந் திருவருட் கடலே. (5)

**உ**ரியவ ரவைபுகுந் தமிழ்துறழ் கேள்வியி
  னுருசிநன் கறிந்துய்யு மேதைப்
பிரியமின் றளியென வாய்ருசி யறிந்துயிர்
  பிழைத்தலி னின்றுமெய் விடுதல்
பரிநல னாகலி னுரியவர் வதியொரு
  பதியிடை யனுதின மிருத்தி
அரியவு னருட்கெனை யீதிபின் கோடியென்
  னாதரத் திருவருட் கடலே. (6)

---

*3. சந்தேகம், உள்ளுறைவாகவு மிருத்தல்கூடு மாகலின் அத்தன்மையுடைச் சீடனை ஆசாரிய னேன்றுகோடல் கூடாது, ஆசாரியன் அடிக்கினும், உதைக்கினும், ஏசினும் பொறுத்துக்கோடல், நீங்காதுநிற்ற லென்னுஞ் சாந்தமும் பரிவு முடையானே உத்தமசீடனாவன். ஏசப்படன் முதலிய நிகழ்ச்சிக்குப் பின்னர்த்தான் சிலருடைய உண்மைக்குணம் வெளிப்படூஉ மென்பதும் இவ்வுலகமறிந்த வுண்மைகளுளொன்றாம், அறிந்துகொள்க.*

*4. அம்பகத்தலர் = கண்ணீர்.*

*5. ஆண்டையர் = மனுடர்; சூ – நிகண்டு.*

*6. ஆதரம் = ஆசை.*

**ஆ**ணவ திமிரமு மாயையந் தீபமு
மகவினை மலமயக் கறிவுங்
காணுயி ரெனும்விழிக் கொளியருள் சிவமெனுங்
கதிரவ னுதித்தவிர் காலங்
கீணமுற் றருளினி லடங்கிடு முயிர்நலங்
கிளர்சிவ மதையடைந் திடுமிவ்
வேணமெற் குறுவதென் றுனக்கருள் புரிதுமென்
றிசைத்துள திருவருட் கடலே. (7)

**கே**வல விருட்டினின் மாயையந் தீபமுங்
கிருத்திய மலமயக் குணர்வும்
மேவிநின் றிடுமிங்ன் குரம்பையம் மாயைசெய்
வினைகளொ ரிரண்டும்விண் ணுலகுந்
தீவிர வளறது மாமிவை களுமிருந்
திமிரமுங் கெடும்வண மருளை
ஈவிரை வென்றுறு முனையல தெவரரு
ளிகுக்குநர் திருவருட் கடலே. (8)

**உ**யிரினைக் கீழ்நிலை யரணிய தாகவு
முனதிருந் தாரக மனுவைச்
செயிரறு மேனிலை யரணிய தாகவுஞ்
சேர்த்துயர் மதன தியானம்
அயர்பொழு தெழுமறி வாகிய கனலியவ்
வரணிமு ழுதுமதன் மயமாக்
குயிலுமொ ரருந்தொழி லளிசொன வாறெனைக்
கொளுமொரு திருவருட் கடலே. (9)

**இ**ப்படி மிசைமிறை யேநித நான்புரிந்
திருப்பினு மென்னிறை யாமுற்
கெப்படி யேனுமென் றனைக்கொடுத் ததிலயிர்ப்
பிலையிலை யணைப்பதெப் படியோ
அப்படி யிழைப்பதுன் பாரமெந் தாயரு
ணாசலப் பெயரிய வொருவன்
செப்பருட் கவிப்பொரு ளேயெனை யாள்குக
தெய்வமே திருவருட் கடலே. (10)

---

*8. இருளே "இருட்டு" எனப்பட்டது; (வாதவூரடிகளுக் குபதேசித்த படலத்தில்) "பற்றிய விருட்டு மல பக்குவம்" என்றார் திருவிளையாடற் புராணத்தாரும். தீவிர அளறு = கட்டத்தைத் தரத்தக்க நரகம்.*

*9. அரணி = ஞெலிகோல் = தீக்கடை கோல்.*

*10. இப்படி = இப்பூமி. மிறை = குற்றம்.*

# 16. திருவருட்கடல்

**1.** நான் எப்பொழுதும் வணங்கித் துதிக்கும் திருவருள்மயமாகிய கடலே! உலகம் முழுவதும் தொழும் கடவுளை முன்னிறுத்தி அடியார்க்குச் செய்யும் சேவையைத் தவிர்த்துச் செய்யப்படும் மற்றைய செயல்களுக்குரிய பயனை நிலவுலகில் பிறந்து அனுபவித்தாவது, பிராயச்சித்தம் செய்தாவது சரிசெய்யவேண்டும். அவ்வாறு செய்யவில்லை எனில் மேன்மேலும் பிறவியெடுத்துத் துன்புற வேண்டும் என பிரகலாதன் கூறியுள்ள நன்னெறி முடிபுப்படி உனது அருட்பேற்றுக்குரிய சேவையைத் தவிர்த்து உய்யும்வழிதான் எவ்வாறு ?

**2.** நெல்மணிகளைத் திரட்டிக்கொண்டு வைக்கோலை எறிந்துவிடுதல் போன்று ஞானநூல்களில் கூறப்பட்டுள்ள சத்தான கருத்துக்களை நன்கு உணர்ந்து கொண்டு, அசத்தான நெறியைக் கூறும் நூல்களைப் புறக்கணித்து, குருவின் உபதேசப்படி நாள்தோறும் யோகசாதனை செய்து ஞானியரெல்லாம் உனது இனிய திருவருட்பேற்றை அடைந்தனர். நானோ, இழிவான உலகியல் விடயங்களுக்கு ஆட்பட்டுக் கெட்டொழிந்தேன். எனினும், நான் எண்ணியுள்ளவாறு என்னோடு இரண்டறக் கலந்து அருள்செய். எனக்குரிய முழுமுதற்பொருளாக விளங்கும் திருவருட்கடலே!

**3.** அடியேனைத் தெளிவித்து அருளும் திருவருட்கடலே! குருவின் வார்த்தைகளை நம்பாமல் இருப்பதாகிய சந்தேகம், கண்ணுக்குத் தெரியும் உலகும் உடம்புமே ஆன்மா; இவற்றைத் தவிர்த்து உயிர் எனத் தனியே ஒன்றும் இல்லை என எவ்விதமான கலக்கமும் இன்றி, பேதைமைக்குரிய துணிவுடன் கருதுவதாகிய விபரீதம், ஆன்ம அறிவை மறைத்துள்ள மூலப் பேரிருள் ஆகிய இம் மூன்றும் இல்லை எனில் உனது அருளின்பத்தை உறுதியாக அடையச்செய்யும் நல்வழி புலனாகும். சீரிய ஒழுக்கம் இல்லாத எனக்கு எந்த வழி பொருந்தும் ? எளியேனை நன்னெறிப் படுத்தி அருள்க.

**4.** திருவருட்கடலே! தந்தை, தாய், மனைவி, குழந்தை முதலானோர் ஒருகணம் பார்வையிலிருந்து அகல்வாராயினும் உடனே மனக்கலக்கம் உற்றுக் கண்ணீர் வடிப்பார்கள். இப்பிரபஞ்சத்திற்கே மூலமாகவும் தோற்றமும் முடிவும் இல்லாததுமாகிய சிவம் பார்வைக்கு அகப்படாமல் மறைந்துள்ள நிலையைக்கருதி யாரும் கண்ணீர் வடிப்பதில்லை. இந்த நிலையை ஆலோசித்தால், இகழ்ச்சிக்குரிய அறியாமையே இவ்வாறு இருப்பதற்குக் காரணம் எனக்கூறலாம். இத்தகைய அறியாமைப் பிணிப்பிலிருந்து நான் நீங்கி நிற்குமாறு திருவுளம் கொள்க.

**5.** என்னை ஆட்கொள்ள உள்ள திருவருட்கடலே! மானுடரின் வாழ்நாள் நூறு ஆண்டுகளுக்கு மேல் இல்லை. இதில் பாதிப்பகுதி உறக்கத்தில் கழிகிறது; பதினைந்து ஆண்டுகள் இளமைப்பருவநிலைக்கு; பதினைந்து ஆண்டுகள் நரைநிலைக்குரிய முதுமைப் பருவத்துக்கு; நோய் முதலானவற்றுக்கும் மற்றுமுள்ள துன்பங்களுக்கும் ஆட்பட்டிருக்கும் நிலைக்கு இருபது ஆண்டுகள். இவ்வாறு உள்ள நிலையில் எண்ணற்ற நூல்களை

உறுதிநிலை அடையுமாறு நன்கு உணர்ந்து கொள்வது எவ்வாறு? இப்படி இருந்து, எந்த உயர்கதியை அடைய முடியும்?

**6.** என் ஆசை முழுவதுக்கும் உரிய திருவருட்கடலே! அடியவர்களும் அறிஞர்களும் கூடியுள்ள சபைக்குச் சென்று அவர்கள் கூறும் அமிழ்த உரைகளைக் கேட்டு அவற்றின் ஞானச் சுவை அறிந்து உய்யும் ஞான வேட்கை ஒருசிறிதும் இல்லாமல், நாச்சுவை ஒன்றையே முக்கியமாகக் கருதி 'உணவு இடுக' என இரந்து உயிர்வாழ்தலைக் காட்டிலும் இறந்து ஒழிவது எவ்வளவோ மேல். ஆதலால் ஞானியர் வாழும் திவ்விய தலத்தில் நாள்தோறும் நான் இருக்குமாறு செய்து, உனது திருவருளுக்கு என்னை ஒப்புவித்து, அதன்பிறகு என்னை நீயே எடுத்துக்கொள்!

**7.** 'உனக்கு நிச்சயம் அருள்புரிவேன்' என உறுதியுரை கூறியுள்ள என் திருவருட்கடலே! ஆணவம் பேரிருள் என உள்ளது; மாயையோ சிறிய தீபம் போன்று உள்ளது; தீய கன்மமலமோ மயக்க அறிவை விளைவிப்பதாக உளது. இந்தச் சூழலில் உள்ள உயிர் எனப்படும் விழிக்கு, ஒளியை அருளும் சிவமாகிய சூரியன் உதயமாகும் பொழுது, இம்மலங்கள் தேய்ந்து அருளில் ஒடுக்கமுற்று விடும். அப்பொழுது, ஆணவம் முதலான மலப்பிணிப்பிலிருந்து விடுபட்ட உயிரானது ஆனந்தமயமான சிவநிலையை அடைந்துவிடும். இவ்வாறு சிவசூரியன் உதிக்கும் சிவப்பொழுது எனக்கு எப்பொழுது வாய்க்கும்?

**8.** திருவருட்கடலே! கேவலம் எனப்படும் இருள்நிலையில் மாயையாகிய தீபத்தையும் கன்மமல விளைவாகிய மயக்க அறிவையும் ஆன்மா பொருந்தி நிற்கும். உடலாகப் பரிணமிக்கும் மாயையும் உடம்பால் செய்யப்படும் இருவினைகளின் பயனாக ஏற்படும் விண்ணுலகப் பேறும் கொடிய நரக உலகப் பேறும் ஆகியவையும் கொடிய ஆணவ இருளும் நீங்கும் வண்ணம் நினது திருவருளை விரைந்து வழங்கும் அருள்நிகழ்ச்சி என்றைக்குப் பொருந்தும்? உன்னைத் தவிர வேறு யார் எனக்கு அருள் புரிய முடியும்?

**9.** வாக்கு அளித்தவாறு என்னை ஆட்கொள்ள உள்ள, ஒப்பற்ற திருவருட் கடலே! ஆன்மாவைக் கீழே உள்ள அரணிக் கட்டையாகவும் உனது பெரிய தாரக மந்திரத்தை, மேலே உள்ள அரணிக்கட்டையாகவும் கொண்டு, அரணியைக் கடைதல் என்பதாகிய தியானத்தைச் செய்யும் பொழுது, மெய்யறிவாகிய நெருப்பு எழுந்து, அரணிக்கட்டைகள் இரண்டையும் முழுமையாகத் தன்மயமாக்கிவிடும். இவ்வாறு கடைதல் என்பதாகிய அரிய தியானத் திறத்தை எனக்கு அளித்தருள்.

**10.** எந்தையாகிய அருணகிரிப் பெருமான் பாடியருளிய திருப்புகழ்ப் பாக்களின் பொருள்மயமாக விளங்குபவனே! என்னை ஆட்கொள்ள உள்ள குகதெய்வமே! திருவருட் கடலே! இந்நிலவுலகில் உள்ள நான் பெரும்குற்றங்களை நாள்தோறும் இழைத்திருந்தாலும், என் உயிர்க்கடவுளாக விளங்கும் உனக்கு எப்படியாவது என்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளேன். இதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. எந்த வழியில் எவ்வாறு நீ என்னுடன் இரண்டறக் கலக்க முடியுமோ அப்படிச் செயற்படுவது, இனி உன் பொறுப்பு.

# 17. பராபரம்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**மிசை யஃறிணை யாதனைப் போற்புரி யாதுயர் நோக்கமுடை
மாமனு வாய்வகுத் துள்ளநற் காத்திரம் வௌவியு மெந்நெறிக்கும்
ஓமெனுஞ் சைவசித் தாந்தசன் மார்க்கமுற் றுன்னினை வேபோந்தும்
ஏமுற லின்றெனி னென்னுறழ் தோஷிமற் றேவர் பராபரமே. (1)

**நி**ன்பரி வானுனக் கஞ்சு விவேகமென் னெஞ்சி லமர்ந்தமுதன்
மன்பதை பல்வகை யாக விறைஞ்சுதெய் வங்க ளெலாமுதலாம்
உன்பரி பூரணத் துள்ளவென் றேயுனை யுள்கெளி யேனையிந்நாள்
அன்பொடு நீயளி யாவிடி னார்துணை யாவர் பராபரமே. (2)

**பா**ரி மகாருற வாகர மாதிய பந்தமெல் லாமுயிர்த்துன்
பேரரு ளேதுணை யென்று திரிந்திடு பெற்றி யுளேனையணைத்
தோரரு ணீபுரி கில்லை யெனிற்புரி வோடெ னுளங்கருதி
ஆரரு ணல்குவ ரார்துணை யாகுவ ரைய பராபரமே. (3)

**தூ**ங்கி விழித்திட லொத்த வுலப்பொடு தோற்றர வுக்கெளியேன்
நீங்கி நிரந்தர முன்னொடு தோய்ந்துய நித்த முனைக்கருதென்
பாங்குணர் வாரெவர் பண்டை வினைக்கடை பைதலி னின்றுமெனைத்
தாங்குந ராருனை யன்றி யருட்பிர சாத பராபரமே. (4)

**ஒ**ன்று மறிந்தில னுக்குமெல் லாமறிந் தோற்கு மனந்தையுழை
நன்றிது தீதிது வென்றுணர் தன்மமெஞ் ஞான்றுமின் றுன்னடியான்
என்றுனு நானிடை யாதலி னுன்னரு ளின்றியெவ் வண்ணமுய்வேன்
அன்றறை தந்தவ ணம்புரி யென்னறி வாய பராபரமே. (5)

**நீ**யெனை யாண்முறை யாயளி காட்டியென் னெஞ்சையு முன்வயமாய்
ஈய வலித்திது காறு மனேகவெல் லென்னை மறந்ததனால்
தூயவ னலனிவன் றீயவ னென்றுது றந்தனை யோவெனவிங்
கேயக நைந்துக லங்குகின் றேன்புக லேது பராபரமே. (6)

**இ**ப்படி மற்றுரு வப்பொருள் கட்கெலா மெப்படி யாதரவோ
அப்படி யெப்பொரு ளுக்குநி யாதர வாமதி லின்புதரா
முப்புடி விட்டருள் பெற்றணை வார்க்கெலா முக்கிய வாதரவாய்
எப்பொழு துங்கிளர் நீயெனை நீங்குவ தென்னை பராபரமே. (7)

---

*3. அகரம் = 'ஆகரம்' என நீட்டல்விகாரம். அகரம் = ஊர்.*

இத்தரு ணத்தெனை யாண்டருள் செய்கிலை யேன்மன மிக்குலைவாய்
எத்துணை யுஞ்சுக மின்றி யழுங்கிட லெய்துவ தோடெனையே
ஒத்தவ ரும்பினி டும்படி யாமைய வோகை சிறந்தருளாம்
மத்தமு றும்படி செய்சிவ சுப்பிரமணிய பராபரமே. (8)

கேட்டனி னைத்த றெளிந்திட லென்பன கீணமின் ஞானமதை
ஈட்டிடு மார்க்கமன் னாகு மலாலுதிப் பென்ப தகற்றிடுமோ
தாட்டிக நிட்டையி னால தகன்றிடல் சத்திய மாதலினால்
வாட்டமி லந்நிலை தன்னில்வை சுப்பிர மணிய பராபரமே. (9)

நிட்டை நிமித்தம தாகமு னுற்றவென் னீர்மையெல் லாநழுவ
நட்ட நடுத்தக ராலய மானதி னாட்ட மிடும்படிநீ
இட்ட வணம்பணி நானுய்ய நல்லரு ளென்பதை யீதியருள்
வட்டை விளக்கு புகழ்க்கவி நன்னிரு வாண பராபரமே. (10)

# 17. பராபரம்

1. பரமும் அபரமும் ஆக (வடிவு தாங்கியவனாகவும் வடிவு நீங்கியவனாகவும்) விளங்கும் முழுமுதற் பொருளே! இந்நிலவுலகில் அஃறிணை வர்க்கத்துள் ஒன்றாகப் பிறவி எடுக்காமல் உயர்ந்த குறிக்கோள் வாய்த்த மானுடப்பிறவி எடுத்து நல்ல உடல் அமைப்பு வாய்க்கப் பெற்றும், எந்நெறிக்கும் மேலாகித் தலைமையாக விளங்கும் சைவசித்தாந்த மெய்ந்நெறி ஒழுக்கம் பொருந்தியும், எப்பொழுதும் உன்னைப்பற்றிய தியானமாகவே இருக்கும் நான் சுகநிலை அடையவில்லை எனின், உலகில் என்னைப் போன்று மலினங்களுக்கு உட்பட்டிருப்பார் வேறுயார்?

2. பராபரமாக விளங்கும் முழுமுதற் பொருளே! நினது கருணை காரணமாக உனக்கே ஆட்பட்டு உனக்கு அஞ்சி நடக்கும் விவேக உணர்வு எனக்குப் பொருந்திய நாளிலிருந்து, இவ்வுலகம் பலவாறாக வணங்கும் தெய்வங்கள் அனைத்தும் உனது பரிபூரண வியாபகத்துள் அடங்கியுள்ளன என உளப்பூர்வமாக உணர்ந்து, உன்னையே தியானித்திருக்கும் எளியேனுக்கு, இப்பொழுது நீ அன்புடன் அருள்புரிய வில்லை எனில் வேறு யார் துணையாவார்?

3. ஐயனே! பராபரமாக விளங்கும் முழுமுதற்பொருளே! மனைவி, பிள்ளை, உறவு, ஊர் முதலான பந்தங்களையெல்லாம் உதறி எறிந்து உனது பேரருளே எனக்குற்ற பெரும்துணை எனக்கருதித் தலம்தோறும் அலைந்திடும் என்னை உன்னோடு அணைத்துக்கொண்டு

*7. இப்படி = இப்பூமி. 'நீ' நி – எனக் குறுகிற்று.*

*9. தாட்டிகம் – 'தாஷ்டீகம்' என்னும் வடமொழியின் விகாரம்.*

*10. வட்டை = வழி; சூ – நிகண்டு.*

அருள்புரியவில்லை எனில், ஆதரவோடு எனது உளப்பாங்கு அறிந்து வேறு யார் அருள்புரிய முடியும் ? வேறு யார் துணையாவர் ?

4. நற்பேறுகளாகிய அருட்கொடை வழங்கும் பராபரமாகிய முழுமுதற் பொருளே! உறங்குவதும் விழிப்பதும் போன்றுள்ள மரணம், பிறப்பு என்னும் பெரும் சுழற்சியிலிருந்து நீங்கி நிரந்தரமாக உன்னோடு இரண்டறக் கலந்து உய்திபெற வேண்டி இடையறாது உன்னையே தியானித்திருக்கும் எனது உண்மையான நோக்கத்தை வேறு யார் அறிவார் ? தொடர்ந்து வரும் இருவினைத் துன்பம் என்பதிலிருந்து என்னை விடுவித்து ஆதரிப்பார், உன்னைத் தவிர வேறு யார் ?

5. என் அறிவுமயமாக விளங்கும் பராபரமே ! ஒன்றுமே அறியாமல் இருக்கும் மூடனுக்கும், அனைத்தையும் அறிந்துள்ள பெரிய ஞானிக்கும் இவ்வுலகில் 'நன்று இது' 'தீயது இது' எனப் பிரித்துப் பார்க்கும் உணர்வுநெறி எப்பொழுதும் கிடையாது. ''உன் அடியன் நான்'' எனக் கருதும் எளியேன், மூடனுமாக இல்லாமல் ஞானியுமாக இல்லாமல் இடைப்பட்டுள்ளேன். இப்படிப்பட்ட நான் உனது திருவருள் துணையின்றி எவ்வாறு உய்வேன் ? அன்று எனக்கு வாக்களித்த வண்ணம் விரைந்து அருள்புரி.

6. பராபரமாக விளங்கும் முழுமுதற் பொருளே ! நீ என்னை ஆட்கொள்ளும் முறையில் கருணைகாட்டி என் உள்ளத்தை உன்வயப்படுத்தி ஈர்த்தும் இதுவரை அனேக நாள்கள் என்னை மறந்து இருக்கின்றாய். 'இவன் தூயவன் அல்லன்; தீயவன்' என்று கருதி நீ என்னைப் புறக்கணித்து விட்டாயோ என்று எண்ணி நான் நைந்து போய் உளம் கலங்குகின்றேன். உன்னைத் தவிர எனக்கு வேறு புகல் ஏது ?

7. பராபரமாக விளங்கும் முழுமுதற் பொருளே! வடிவுடன் இருக்கும் அனைத்துப் பொருள்களுக்கும் இந்தப் பூமி எப்படி ஆதாரமாகத் திகழ்கின்றதோ அப்படியே, வடிவுடைப் பொருள், வடிவில்லாத பொருள் ஆகிய அனைத்துப் பொருள்களுக்கும் நீயே ஆதாரம். இவ்வாறே இன்பநிலைக்குத் தடையாக உள்ள திரிபுடி நீத்து, அருள் பேறு பெற்று உன்னோடு கலக்கும் அடியார்க்கெல்லாம், முதன்மையான ஆதாரமாக எப்பொழுதும் விளங்கும் நீ என்னைத் தனியே பிரிந்து இருக்கச் செய்து நீங்குவது எதற்கு ?

8. சிவமாக,சுப்பிரமணியமாக, பராபரமாக விளங்கும் முழுமுதற் பொருளே ! இச்சமயத்தில் என்னை ஆட்கொண்டு நீ அருளவில்லை எனில் நான் மனம் மிகவும் வருந்தி எள்ளளவேனும் ஆனந்தப் பேறு இல்லாமல் துன்பக்கடலுள் ஆழ்ந்திருக்கும் நிலை ஏற்பட்டுவிடும். இதுமட்டுமன்றி என்னைப் போன்றுள்ள அடியார்களும் "துன்பம்தான் மிஞ்சுகிறது'' எனத் தளர்ந்து அன்புநிலையிலிருந்து பின்னிடும் படியான துர்ப்பாக்கிய நிலை பொருந்தும். ஐயனே ! உள்ளக்களிப்பு மிகும் வண்ணம் உனது அருளாகிய இன்பக்கிளர்ச்சியை நான் பொருந்துமாறு செய்க !

9. சுப்பிரமணியமாகவும் பராபரமாகவும் விளங்கும் முழுமுதற் பொருளே! கேட்டல், நினைத்தல் (சிரவணம், மனனம்) ஆகிய இரண்டு பயிற்சிகளும் குறைவற்ற ஞானத்தைத்

தரும் தலைமை நெறிக்குரியவை எனக் கூறலாமே தவிர, அவை பிறப்பைத் தடுக்க வல்லவை ஆகுமோ ? தெளிதல் என்பதோடு திடமான நிட்டை நிலையைப்பொருந்தினால் பிறப்பு என்பது நீங்கும் எனக் கூறுதல், மாறாத உண்மையே. எனவே குறைவு படாத அந்த உயர்ந்த நிட்டைநிலையில் என்னை இருக்கச் செய்து அருள்.

**10.** அருள்நெறியை விளக்கும் திருப்புகழ்ப்பாக்களைப் பாடி அருளிய அருணகிரிப் பெருமானுக்கு பேரின்பப் பேற்றை அளித்தருளிய பராபர முழுமுதற்பொருளே! பரம நிட்டையின் பொருட்டு என்னிடம் முன்பு பொருந்தி இருந்த பாசக் குற்றங்களெல்லாம் நீங்கும்படி இதயநடுவண் உள்ள சிற்றம்பலம் என்பதில் என் சிந்தனை முழுவதும் லயிக்கும் படி நீ கட்டளை இட்டருளிய வண்ணம் நான் செய்து உயர்கதியைப் பெற, உனது திருவருளை வழங்குக!

# 18. பரம்பொருள்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**வா**ர்முந் நீர்வளை நிலனுழை நானன்
மனுவு டம்பெடுத் துங்கரி வலமாய்
ஆர்வ மல்கவந் துளநகர்க் கரிக்கு
மால வாய்க்கரிக் குருவிவெண் ணரைக்குஞ்
சீர்ம யேந்திரப் பள்ளியி னெலிக்குந்
திருவொ மாம்புலி யூர்ப்புலி தனக்கும்
பார்த னின்மிகக் கடையவ னானேன்
பரிவு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (1)

**ப**ண்டைப் புண்ணியத் தானர னாமெய்
படைத்து மாணவி நாசிநற் கொடிக்கும்
இண்டை நீர்நிலை மல்கு மடானை
யீரத் துள்ளலுக் குந்திரு வாவூர்
வண்டி றேனுவுக் கும்புலிப் பாறை
வல்லி யத்தினுக் குங்கடை யாயுன்
தொண்ட னேனுளன் மேம்படு வானீ
தொடர்பு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (2)

*1. கரிவலமாய் ஆர்வமல்கவந்துள நகர் = கரிவலம் வந்த நல்லூர்.*

*2. அடானை – ஆடானை. (திருவாடானை) துள்ளல் = யாடு.*

**எ**ம்பி ரானுனைக் கருத்துழி யிருத்தா
வேத்து நல்லுருப் படைத்துமிஞ் ஞான்றால்
உம்ப ரேத்தொரு கழுக்குவ டிருந்த
வுவணங் கட்கு நகேச்சுர வகிக்குஞ்
சம்பு கேச்சுரச் சிலம்பியும் பலுக்குந்
தகுதி ருந்து சுரன்குடி யசுவஞ்
செம்பொ னண்டினுக் குங்கடை யானேன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (3)

**அ**ளப்பி லாற்றனன் குடைச்சிவ மாமுன்
னடிமை யாப்புட லேற்றுநெல் வேலிக்
களிற்றுக் குங்கவி னண்டச மதற்குங்
கரிலி லாத்திரு வான்மியஞ் சுரைக்கும்
நளிப்பொன் வாவிபல் கியதிரு வருணை
நாவிப் பிள்ளையென் பதற்கு மனேகந்
தளர்ச்சி சாற்றிட வுறுகடை யானேன்
றகவு கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (4)

**தெ**ய்வ ரத்தின மாமுனைப் பழிச்சோர்
திடமெய் யேற்றுமங் குரங்கணின் முட்ட
மைவ ணப்பர பிருதமை யணிற்கும்
வண்மை வலிவலக் கரிக்குரு விக்கும்
மெய்வ ளர்க்கு மிராகவ சேது
விரத வானரத் தினுக்குமொண் டனுக்குங்
கைவ ழுத்திடு கடையவ னானேன்
கருணை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (5)

**க**ருணைச் சாகர மாமுனைக் கருதாக்
கதியொன் றேற்றுய்ய வுரியமெய் யேற்றுந்
தெருணட் பார்மயி லாடிடு துறையின்
சிந்து ரம்பரி கரங்குரங் கரவம்
இருணச் சாவிழிப் பூசைவள் ளொண்ட
னெருவை யங்கிளி யென்பவை கட்கோர்
திரணத் தாறுமொவ் வாக்கடை யானேன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (6)

---

*3. நகேச்சுரம் – நாகேச்சுரம்; அகி = பாம்பு. திருந்து சுரன்குடி = திருந்து தேவன்குடி; சுரன் = தேவன்.*
*4. வான்மி = வான்மியூர், சுரை = பசு.*
*5. பரபிருதம் = காகம்; வடசொல்; அமரஸிம்ஹங் காண்க. ஒண்டன் = நரி.*
*6. எருவை = கழுகு.*

**எ**ண்ணு வார்திற னோர்ந்தவவ் விதமா
யெழுஞ்சிந் தாமணி யாமுனை யூழ்த்தா
நண்ணு மானவ வுருவெனக் கேய்ந்து
நாரை யூரெழி னாரையொன் றனுக்குந்
திண்ண னாரருச் சித்தவொர் தலத்துச்
சிலம்பிக் குங்கரிக் கும்பண வகிக்கும்
மண்ணிற் கடையவ னாயிருக் கின்றேன்
மனது கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (7)

**ந**றுஞ்சு காகரத் திருவுள மாமுன்
னாட்ட மிற்றென வுணருரு வேற்றும்
எறும்பி யூரிடை நுணுகெறும் பினுக்கு
மோர்சி றந்த வளங்கெழு வாவி
இறும்பு பம்புபைஞ் ஞீலியங் கதலி
யென்ற தாவரங் களுக்குமிக் கால்வன்
குறும்ப றாவொரு நான்கடை யானேன்
கொள்கை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (8)

**ஆ**ர ணங்களு மளவிடற் கொண்ணா
வமல ஞானவிண் ணாய்விரிந் திடுமுன்
பூர ணந்தனை நேடொரு மதியைப்
பொருந்து மானுட யாக்கையை யேற்றும்
ஏரி ருந்தகொற் றவன்குடிக் கண்ணே
யிருந்த முள்ளியஞ் செடிக்குமிக் கானான்
சீரி றந்துள கடையவ னானேன்
சிந்தை கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (9)

**நி**ன்னை நாடவிஞ் ஞான்றக நீயே
நீட்ட வேற்றுள நான்முனர் வகுத்துச்
சொன்ன வல்விலங் கூர்வனம் பதகந்
துருமஞ் செடிகளுக் குங்கடை யாகி
இந்நி லத்திடை யிருக்குமென் கதியை
யென்னு ரைத்திட வெங்குக தேவே
வன்னி வெஞ்சிலைப் பெயரின னரசே
மனது கூர்ந்துகண் பார்பரம் பொருளே. (10)

---

*8. இறும்பு = தாமரைமலர். குறும்பு = பூசல் = போர்; சே – திவாகரம்.*

*10. பதகம் = பறவை. துருமம் = மரம்.*

# 18. பரம்பொருள்

1. பரம்பொருளே! கடல்சூழ்ந்த இந்நிலவுலகில் மனித உடல் எடுத்தும், இதுகாறும் உனது அருளின்பம் பெறாத நான், கரிவலம் வந்த நல்லூரில் இருந்த யானைக்கும், மதுரைத் தலத்துக் கரிக்குருவி, நாரை ஆகியவற்றுக்கும், மயேந்திரப் பள்ளியில் இருந்த எலிக்கும், திருவோமாம் புலியூரில் இருந்த புலிக்கும் மிகவும் கீழ்ப்பட்டவனாகி விட்டேன். திருவுளம் இரங்கி, எனது பாச இருள் நீங்குமாறு என்னை நோக்கி அருள்.

2. பரம்பொருளே! முற்பிறவிப் புண்ணிய வயத்தால் நான் மனிதனாகப் பிறந்தும் இதுவரை உனது அருள்இன்பம் பெறாததால் அவிநாசியில் இருந்த காக்கைக்கும், திருவாடானைத் தலத்து ஆட்டுக்கும், திரு ஆவூர்த் தலத்துப் பசுவுக்கும், புலிப்பாறைத் தலத்துப் புலிக்கும் மிகவும் கீழ்ப்பட்டவனாகி உனது தொண்டனாகிய யான் உள்ளேன். நான் அருளிற்சிறந்து மேம்பாடு அடையும் வகையில் என்மீது அன்பு கூர்ந்து பாச இருள் நீங்குமாறு என்னை நோக்கி அருள்.

3. பரம்பொருளே! எம்பிரானாகிய உன்னைக் கருத்தில் இருத்திப் புகழ்ந்து வணங்குதற்கு ஏற்ற நல்ல மானுட வடிவு வாய்க்கப் பெற்றும், இப்பொழுது திருக்கழுக்குன்றத்துக் கழுகுகளுக்கும், திருநாகேசுவரத்துப் பாம்புக்கும், திருவானைக்காவில் இருந்த சிலந்தி, யானை என்பனவற்றுக்கும் திருந்து தேவன் குடித் தலத்துக் குதிரை, நண்டு என்பனவற்றுக்கும் மிகவும் கீழ்ப்பட்டவனாகியுள்ளேன். திருவுளம் இரங்கி, பாச இருள் நீங்குமாறு என்னை நோக்கி அருள்.

4. பராபரமே! அளவிலா ஆற்றலை முழுமையாகப் பெற்றுள்ள சிவபரம் பொருளாகிய உனக்கு அடிமையாகும் நற்பேறு பெற்ற மானுட உடல் வாய்க்கப் பெற்றும், திருநெல்வேலித் தலத்துக் களிற்றுக்கும், பறவைக்கும், திருவான்மியூர்த் தலத்துப் பசுவுக்கும், அழகிய வாவிகள் சூழ்ந்த திருவண்ணாமலையில் இருந்த கத்தூரி மிருகமாகிய மானுக்கும் மிகவும் கீழ்ப்பட்டவனாகி, உலகோர் இழித்துக் கூறும்படியாக உள்ளேன். திருவுளம் இரங்கிப் பாச இருள் நீங்குமாறு என்னைப் பார்த்து அருள்புரி.

5. பரம்பொருளே! தெய்வங்களுக்குள் மாணிக்கமாக விளங்கும் உன்னைத் துதிப்பதற்கு ஏற்ற திடமான மானுட வடிவு தாங்கியும், திருக்குரங்கணில் முட்டம் எனும் தலத்தில் இருந்த காக்கை, அணில் என்பனவற்றுக்கும், திருவலிவலம் என்னும் தலத்தில் இருந்த கரிக்குருவிக்கும், திரு இராமேசுவரத்தே இருந்த குரங்கு, நரி என்பவைகளுக்கும் மிகவும் கீழ்ப்பட்டவனாகி, எல்லாராலும் கை உதறி ஒதுக்கப்படும் கடைநிலையில் உள்ளேன். கருணைகூர்ந்து எனது பாச இருள் நீங்குமாறு என்னைப் பார்த்து அருள்புரி.

**6.** பரம்பொருளே! கருணைக் கடலாகிய உன்னைத் தியானித்து உயர்கதியைப் பெற்றும், உய்யும் நற்பேறு வாய்ந்த மானிடவடிவு தாங்கப்பெற்றும், திருமயிலாடுதுறையில் இருந்த யானை, குதிரை, குரங்கு, பாம்பு, பூனை, நரி, கழுகு, கிளி, என்பனவற்றுக்குச் சிறிதளவேனும் ஒவ்வாதவனாகி மிகவும் கீழ்ப்பட்டுக் கடைநிலையில் உள்ளேன். திருவுளம் இரங்கி, எனது பாச இருள் நீங்குமாறு என்னைப் பார்த்து அருள்புரி.

**7.** பரம்பொருளே! யார் யார் எவ்விதம் கருதுகின்றார்களோ, அவ்வவ்வாறு தோற்றம் கொடுக்கும் சிந்தாமணி போன்று விளங்கும் உன்னை முறைப்படி தியானித்துப், பேறு பெறவல்ல மானுட வடிவு பொருந்தியும், திருநாரையூர்த் தலத்து நாரைக்கும், கண்ணப்ப நாயனார் வழிபட்ட திருக்காளத்தியில் இருந்த சிலந்தி, யானை, பாம்பு ஆகியவைகளுக்கும் மிகவும் கீழ்ப்பட்டவனாகி, இவ்வுலகில் உள்ளேன். திருவுளம் கூர்ந்து, எனது பாச இருள் இரிந்தோடுமாறு என்னைப் பார்த்து அருள்புரி.

**8.** பரம்பொருளே! வற்றாத கருணைக் கடலான உனது திருவுளம் இது என உணரவல்ல மானுட வடிவு தாங்கப்பெற்றும், திரு எறும்பியூர் எனும் தலத்து எறும்புக்கும், அழகும் வளமையும் வாய்ந்த தாமரைப் பொய்கை சூழ்ந்த திருப்பைஞ்ஞீலி எனும் தலத்து வாழை மரம் முதலான தாவரங்களுக்கும் மிகவும் கீழ்ப்பட்டவனாகி, இப்பொழுது கொடிய கலகம் விளைவிக்கும் கோபம் முதலான இழிகுணங்கள் நீங்காதவனாகிக் கடைப்பட்டு உள்ளேன். அடியாரிடம் கோபம் கொள்ளக்கூடாது எனும் கொள்கை மிக்குள்ள உனது திருவுளம் இரங்கி, எனது பாச இருள் நீங்குமாறு என்னைப் பார்த்தருள்!

**9.** பரம்பொருளே! ஆற்றல்மிக்க தெய்வங்களாலும் அளவிட முடியாத வண்ணம் தூய, சிதாகாசமாக விரிவடைந்திருக்கும் உனது பரிபூரண வியாபக நிலையை ஆய்ந்துணர வல்ல உள்ளம் வாய்ந்த மானுட வடிவு பொருந்தப் பெற்றும், கொற்றவன் குடி எனும் தலத்தில் இருந்த முள்ளிச் செடிக்கும் கீழ்ப்பட்டவனாகி இப்பொழுது அருள்நலத்தை அறவே இழந்துள்ள கடையவனாக உள்ளேன். திருவுள்ளம் இரங்கி, எனது பாச இருள் நீங்குமாறு என்னைப் பார்த்து அருள்புரி.

**10.** பரம்பொருளே! உன்னையே விழைந்து துதிக்கும் நல்ல உள்ளத்தை இப்பொழுது நீயே மனமுவந்து கொடுக்க, அதனை ஏற்றுக்கொண்ட நான், இதுகாறும் வகைப்படுத்திக் கூறிய விலங்குகள், ஊர்வனவாகிய ஜந்துக்கள், பறவைகள், மரங்கள், செடிகள் ஆகியவற்றுக்கு மிகவும் கீழ்ப்பட்டவனாகி இவ்வுலகில் வாழும் எனது இழிநிலையை என்ன வென்று கூறுவது ? எம் குகதேவே!. அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்த தெய்வ அரசே! திருவுளம் கூர்ந்து எனது பாச இருள் நீங்கி விடுமாறு என்னைப் பார்த்து அருள்புரி.

# 19. நினைத்தாலென்பிறப்பறுத்திடும்.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ச**கமெங் கணுமிகு புகழ்விஞ் சிடமதி சாலுந் தென்மலை யாளுமகான்
மகரங் குலவலை யினையுண் டதுமொரு மலைமண் டலிபுக வாடியதும்
இகலும் பரறவர் பணிகந் தவரையி னிருகோ டிருகர மேந்தியதும்
நிகரொன் றிலிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே(1)

**பொ**றைமிக் குளவொரு முனிதற் செவிவழி புரைத்தூய் வரநதி விடுத்ததுவுந்
திறைவிட் டகவுசி கனயற் பொருவவொர் திணியா ருயர்நிலை பணினதுவுங்
கறையற் றபெரிய மறையுச் சியிலுறு கருணா கரசிவப் பொருளெனவே
நிறைசிற் குகவிறை யருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. (2)

**ப**சுவொன் றுயர்சிவ சரணந் தொழுததி பள்ளி யயன்றொழில் பண்ணியதும்
முசுவொன் றரசினர் குடிவந் துரனொடு மூன்றா மொழியுல காண்டதுவுஞ்
சிசுவொன் றனைசினை தனில்வந் தவணொரு செய்தி விளம்பிய மெய்யுறழ்வும்
நிசவின் பவிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. (3)

**பி**லவங் கமெனுமொ ருயிர்தன் னொடுமுனை பிரயோ கிக்குநர் வலிபாதி
கிலமின் றுதனிட மடையுந் திடமொட கிலமே னெடுநா ளுலவியதும்
பலமிஞ் சியரிய வரிதங் கிடுமுயர் பரியா யொருகக நிலவியதும்
நிலவன் பரிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. (4)

**இ**தவெங் குருமுனி திரிகொண் டவயதி லின்பார் மதியமிழ் துண்டதுவும்
மிதமின் றுயர்திர மிடவங் கவிமறை மிழற்றா வொருதலப் பனிப்பிணிதீர்த்
ததிவன் முயலக மறவோர் மகளின தகமோ ரருளுகந் தருளியதும்
நிதவன் பரிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. (5)

**பு**கழம் புகலியன் விளிவுண் டுவடிவு பூமேற் போட்ட சிவேப்பியனை
இகழ்வின் றியுயிரொ டெழவன் றுசெய்தது மியம்போர் கவிதையிற் பெருங்கதவம்
மிகுசுந் தரமுட னணையும் படிசெய்த விறலுஞ் சததமு முரியார்பால்
நிகழ்துங் கவிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே. (6)

---

1. *ஆடல் = செய்தல்; "புரிதலுமாடலுஞ்செய்தலாகும்" என்பது பி – நிகண்டு. இருகோடு = இரண்டு கொடுமுடி. இவ்விரண்டுமே பழநிமாதலத்தின்கட் சிவகிரி, சத்தி கிரியென வுள்ளன. சிவகிரியிற் றண்டபாணி திருக்கோயிலுளது. அருண்மஞ்சு = அருள்வலிமை.*

4. *ககம் = பறவை; இது, கருடன்.*

6. *சிவ + இப்பியன் = சிவேப்பியன்; வடமொழி; நல்ல வைசியன் என்பது பொருள். இப்யன் = வைசியன்.*

**அ**ழகென் றுமருவி நிமிருங் கழுமல வறவோன் வழுதிவெஞ் சுரநோய்கூன்
கழியும் படிபணி னதுவுங் கனலிடு கையே டதுகரி யாதெழவே
இழிதண் புனலெதிர் செலவாண் பனைகள்பெண் ணெனவா கமுனரு ளினவிறலும்
நிகழ்விஞ் சிறையவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே.(7)

**அ**னகம் பெருகு கவுணியன் பழையவொள் ளங்கம்பெணுருவு கொண்டெழுவான்
கனவின் பவருள்ப ணினதுங் களிமலி கடிக்கே செறிந்துள மனுக்கூட்டந்
தனகென் றுமிகுமொ ரொளியுண் ணுழையுரை தந்தே யவரொடு சென்றதுவும்
நினையன் பரிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே.(8)

**சு**டுநீற் றறையிருந் திருமாப் பொடுகொனஞ் சுண்டெண் ணலர்விடு குஞ்சரமன்
பொடுபோற் றிடுவிய னதையேற் றலைகட லுழிக்கல் லெறுழ்மிதந் திடவேறிக்
கடுவாற் கழிவடைந் தவன்மீட் டுமெழமெய் காட்டோ ரரசுக டாட்டியமும்
நெடுமாட் சியிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே.(9)

**சு**பசுந் தரர்நினை வுறுவண் ணமுதலை தொல்லே விழுங்கிய பிள்ளைதனைச்
சபலஞ் சொலுயிரொ டுமிழும் படிசெய்த தகவும் பெரியகொற் றவன்குடியான்
அபயம் பெருபறை யனையாண் டவலியு மருணா சலப்பெய ரியனையெனும்
நிபமொன் றிலிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே.
(10)

# 19. நினைத்தாலென்பிறப்பறுத்திடும்

**1.** உலகமெங்கும் தமது புகழ் மேம்பட்டு விளங்க, ஞானவளம் மிகுந்த முனிவரும் பொதிகை மலையை ஆளும் பெரியோருமாகிய அகத்திய மாமுனி, மகரமீன்கள் முதலான உயிர்இனங்கள் செறிந்துள்ள பெருங்கடலை ஆசமனமாக உட்கொண்டது; விந்திய மலையைக் கீழே பூமிக்குள் அழுந்துமாறு செய்தது; தேவர்களும் அறவோரும் போற்றித்துதிக்கும் கந்தகிரியின் இரண்டு சிகரங்களையும் இரண்டு கரங்களில் எளிதாக ஏந்திநின்றமை ஆகிய இத்தகைய அருளற்புதச் செயல்கள் எல்லாம், தன்னிகரற்ற இறைவனாகிய எமது குகதெய்வத்தின் அருள் வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால், தொடர்ந்து வரும் என் பிறவி அறுபட்டுவிடும்.

**2.** பொறுமை மிகுந்த ஜஹ்னு எனும் முனிவர் மேன்மையும் தூய்மையும் பொருந்திய கங்கைநதியைத் தம் செவிவழியே விடுத்தது; இந்திரியங்களுக்கு வசப்பட்டிருத்தல்

*9. தாட்டியம் – 'தார்ட்யம்' என்னும் வடமொழி விகாரம்.*

*10. ஐயெனும் = கடவுளென்னும்; ஐ = கடவுள். நிபம் = உவமானம்; வடசொல்.*

என்பதாகிய அடிமைத் தன்மையிலிருந்து அறவே விடுபட்டுள்ள விசுவாமித்திரர், படைப்புக்கடவுளாகிய நான்முகனைப் போன்று, திண்மைசெறிந்த தனி உலகைப் படைத்தது – இவை மாசற்ற வேதங்களின் உச்சியில் எழுந்தருளும் கருணையே வடிவான சிவபரம்பொருளே எனத்திகழும் சின்மயமான குகேசனின் அருள்வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால், தொடர்ந்து வரும் எனது பிறவித்தொடர் அறுபட்டுவிடும்.

**3.** திருநனிபள்ளி எனும் தலத்தில் பசு ஒன்று சிவபெருமான் திருவடிகளை வழிபட்டு பிரம்மாவுக்குரிய படைப்புத் தொழிலைச் செய்தது; முசுக்குரங்கு ஒன்று அரசர்குலத்தில் வந்து பிறந்து மிகவும் பராக்கிரமத்தோடு மூன்று உலகங்களையும் ஆண்டது, கருவில் இருக்கும் சிசு தன் தாய்க்கு மெய்ப்பொருள் சாரமாக ஓர் உயர்ந்த மொழியை உரைத்துநின்ற ஞான பராக்கிரமம் – ஆகிய இவையெல்லாம், தன்மயமான ஆனந்த வெள்ளத்திலேயே இருக்கும் குகதெய்வத்தின் அருள்வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால், தொடர்ந்து வரும் என் பிறவித் தொடர் அறுபட்டுவிடும்.

**4.** வானரமாகப் பிறந்த ஒன்று தன்னை எதிர்த்துப் போரிடுவோரின் வலிமையில் பாதி அழிவுபடாது தன்னிடம் அடைந்துவிடக்கூடிய வரபலத்தோடு இந்தப்பூமியில் நீண்டகாலம் உலவி வாழ்ந்தமை; வலிமைமிக்க திருமால் ஊர்ந்து செல்லும் வாகனமாக ஒரு கருடன் திகழ்வது – இவை, மாறாத அன்புமயமான அடியவர்க்கு உரிய குகப்பரமனின் அருள் வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால் தொடர்ந்துவரும் என்பிறவித்தொடர் அறுபட்டுவிடும்.

**5.** சராசரங்களுக்குச் சிவப்பொலிவு கொடுக்கும் வெங்குரு (சீகாழி) முனியாகிய திருஞானசம்பந்தர் தம் மூன்றாம் வயதிலேயே சிவப்பேரின்பத் திரளான ஞானப்பால் அமிழ்தம் உண்டது, சிற்றறிவால் அளக்கமுடியாது உயரும் பெருமைக்குரிய தமிழ்க்கவி மறை (தேவாரம்) பாடித் திருச் செங்கோடு என்னும் தலத்தின் சூழலில் எழுந்த சுரநோய் தீர்த்தது, மிகக்கொடிய முயலக நோய் நீங்குமாறு மழவன் மகளுக்குத் தம் ஒப்பற்ற அருட்பேற்றை உளமுவந்து அருளியது – இவை நிலைபேற்றுக்குரிய அடியவர் இறைவனாம் குகப்பரமனின் அருள்வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால், தொடர்ந்து வரும் என்பிறவித் தொடர் அறுபட்டுவிடும்.

**6.** புகலி (சீகாழி) மன்னவனாகிய திருஞானசம்பந்தப்பெருமான் தன் உடலைப் பூமிமேல் கிடத்தி இறந்துபோன ஒருவணிகன் உயிர்பெற்று எழுமாறு செய்தமை, பாடும் ஒரு கவிதையாலே திருமறைக்காட்டு ஆலயத்தின் கதவு நியமப்படி மூடிக்கொள்ளச் செய்த வெற்றிப்பாடு, இவையெல்லாம் எப்பொழுதும் மாறாத பக்திகொண்டிருக்கும் அடியார்களின் தூய உள்ளத்தில் வெளிப்பட்டு அருளும் குகப்பரமனின் அருள்வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால், தொடர்ந்து வரும் என்பிறவித் தொடர் அறுபட்டுவிடும்.

7. எப்பொழுதும் சிவ அழகிற் சிறந்து பெருமிதம் கொண்டுள்ள கழுமலம் (சீகாழி) எனும் நகர்க்குரிய குருவான திருஞானசம்பந்தர், கூன்பாண்டியனுக்கு உற்ற வெப்பு நோயைத் தீர்த்தமை, தமிழ்ப்பதிக ஏட்டைத் தன் கையால் நெருப்பில் இட்டு அது கருகாமல் இருக்குமாறு செய்தமை, ஆற்றில் இட்ட திருப்பாசுர ஏடு, ஆற்றுநீரை எதிர்த்துச் செல்லுமாறு செய்தமை, ஆண்பனையைப் பெண்பனையாக ஆக்கி முன்னர் அருளிய வெற்றிப்பாடு – இவையெல்லாம் ஒளித்திறத்தால் வீறு கொள்ளும் குகப்பரமனின் அருள்வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால் தொடர்ந்து வரும் என்பிறவித் தொடர் அறுபட்டுவிடும்.

8. சிவபுண்ணியத்தைப் பெருக்குவிக்கும் திருஞானசம்பந்தப்பெருமான், பல ஆண்டுகளுக்கு முன்னால் சேமித்து வைக்கப்பட்ட சாம்பலிலிருந்து ஓர் அழகிய வடிவத்துடன் பூம்பாவையாகிய பெண் எழுந்துவரச் செய்து பெருமைக்குரிய சிவப்பேரின்பமயமான அருளைப் புரிந்தமை, ஆனந்தம் மிக்க தமது திருமணத்தைக் காணவந்த மனிதர் யாவரும் ஒளிமிக்கெழுந்த நெருப்புத் தூணுள் புகுந்து சிவநிலை பெறுமாறு அருளாணை இட்டுத் தாமும் அவர்களோடு சென்று ஒடுங்கியது – இவை. இடைவிடாத தியானத்துடன் இருக்கும் அடியவர் இறையான குகப்பரமனின் அருள் வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால், தொடர்ந்து வரும் என்பிறவித் தொடர் அறுபட்டு விடும்.

9. சுடப்படும் சுண்ணாம்புக் காளவாயாகிய நீற்றறையில் எவ்வித இடர்ப்பாடும் இன்றி மிடுக்கோடு இருந்ததும், அரசன் கொடுத்த கொடிய நஞ்சினை உண்டதும், பகைவர் விடுத்த மதயானை தன்னை அன்போடு பணிந்து போற்றி மீளும்வண்ணம் செய்ததும். அலைகடலில் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலைக்கடந்து கரை யேறியதும், நஞ்சால் மாய்ந்தவன் (அப்பூதி அடிகளின் புதல்வன்) மீண்டும் உயிர்பெற்று எழுமாறு செய்து மாறாத அருள்வலிமையைக் காட்டியதும் – ஆகிய இவற்றைச் செய்தருளிய திருநாவுக்கரசரின் உறுதிப்பாடுமிக்க அருளாற்றல், மிகப் பெரிய மாண்புக்குரிய குகப்பரமனின் அருள்வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால் தொடர்ந்துவரும் என்பிறவித் தொடர் அறுபட்டுவிடும்.

10. மங்களப் பேறுகளை அருளும் சுந்தர மூர்த்தி சுவாமிகள், பல ஆண்டுகளுக்கு முன்பு முதலையால் விழுங்கப்பட்ட பிள்ளை, உரிய உடல்வளர்ச்சியோடு உயிர்பெற்றுவர முதலை உமிழுமாறு செய்த பெருமை; உமாபதிசிவனார் பறையனாகிய பெற்றான் சாம்பானுக்கு முக்திப் பேறு கொடுத்து ஆட்கொண்ட வலிமை – இவை அருணகிரிப்பெருமானின் இதயக்கடவுளும் உவமானம் அற்றவனுமாகிய குகப்பரமனின் அருள்வல்லமையே. இதன் மகிமையைச் சிந்தித்தால் தொடர்ந்து வரும் என்பிறவித் தொடர் அறுபட்டுவிடும்.

# 20. தெய்வம்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**வெலாம் போற்றுந் தெய்வம் பொதுநடு நடிக்குந் தெய்வந்
தேவெலா மேத்துந் தெய்வஞ் சிவப்பொரு ளெனுமா தெய்வந்
தாவெலாந் தபுக்குந் தெய்வந் தனிச்சுக மிசைக்குந் தெய்வ
மாவதைப் பழிச்சி மாயா வயனமாய் வகற்று வேனே. (1)

**இ**தரமொன் றில்லாத் தெய்வ மியாதினுங் கிளரோர் தெய்வம்
விதரணக் கடலாந் தெய்வம் விகிர்தம தணவாத் தெய்வம்
உதரமுற் றுதியாத் தெய்வ மொளிவெளி மயமாந் தெய்வ
மதனையே பழிச்சி மாயா வயனமாய் வகற்று வேனே. (2)

**மோ**னமா டுடையார் தெய்வ மோகத்தார் தெரியாத் தெய்வம்
வானநா டுடையார் தெய்வ மனதுரைக் கடங்காத் தெய்வம்
ஞானமே வடிவாந் தெய்வ நடுவெளிக் குகனாந் தெய்வ
மானதைப் பழிச்சி மாயா வயனமாய் வகற்று வேனே. (3)

**நா**குழூப் பணையாத் தெய்வ நசையுநர்ப் புரந்தா டெய்வம்
பாகினு மினிதாந் தெய்வம் பரசுமெ னாசைத் தெய்வம்
யோகிகள் குரங்குந் தெய்வம் யுகளமன் றொன்றாந் தெய்வ
மாகுமோர் குகனை யேத்தி யயனமாய் வகற்று வேனே. (4)

**ஆ**மய மடையாத் தெய்வ மறிவினுக் கறிவாந் தெய்வம்
ஓமுரைப் பொருளாந் தெய்வ முயிரினுக் குயிராந் தெய்வம்
பாமரஞ் செகுக்குந் தெய்வம் பவக்கடல் கடத்துந் தெய்வ
மாமொரு குகனை யேத்தி யயனமாய் வகற்று வேனே. (5)

---

*1. பூ = பூமி.*
*பொதுநடு நடித்தல் = உயிரைநடாத்துங்காரியம்; தகராலயரகசியங் காண்க.*
*இசைத்தல் = பெருங்கொடை; பி–நிகண்டு. அயனம் = வழி; பிறக்கும் வழியென்க.*
*4. குரங்கல்= தாழ்தல்; "குரங்க லிறைஞ்சல் கூறுப தாழ்தல்" என்பது சே– திவாகரம்.*
*5. செகுத்தல் = கொல்லுதல்; "செகுத்தல் வதைத்தல் கொல்லுதல் செப்பும்" என்பது பி – நிகண்டு.*

**நு**னவினர் தெரியாத் தெய்வ நாதநா தாந்த தெய்வங்
கனவினர் காணாத் தெய்வங் கருணிலைக் கெட்டாத் தெய்வஞ்
சினமெது மணவாத் தெய்வஞ் சிவக்கொழுந் தாமா தெய்வம்
எனுமொரு பொருளைப் போற்றி யிகலிட ரகற்று வேனே. (6)

**அ**ன்பருக் கருளுந் தெய்வ மளப்பிலா வறிவு தெய்வந்
தன்பணை யறியாத் தெய்வஞ் சகசசித் தாந்த தெய்வம்
இன்பரு ளியற்கைத் தெய்வ மெனைக்கொளும் விழுப்பத் தெய்வம்
என்பதை யிறைஞ்சி யேத்தி யிகலிட ரகற்று வேனே. (7)

**அ**ன்னையா யணைத்தா டெய்வ மளிவலைப் படுமோர் தெய்வங்
கன்னலி னினிக்குந் தெய்வங் கருத்தினைக் கவருந் தெய்வம்
என்னுளே யிருக்குந் தெய்வ மியாதினும் வலதாந் தெய்வந்
தன்னையே யிறைஞ்சி யேத்திச் சனனமாய் வகற்று வேனே. (8)

**எ**ன்றுமோர் படித்தாந் தெய்வ மிரண்டினு மேலாந் தெய்வம்
மன்றிலே நடிக்குந் தெய்வம் வரதசா கரமா தெய்வம்
நன்றினு நலஞ்சா றெய்வ நகுமொளிப் பிழம்பாந் தெய்வம்
ஒன்றையே சூழ்ந்து கண்டென் னுறுகட்சூ ரகற்று வேனே. (9)

**மா**தவர் மகத்தாந் தெய்வ மறைமுடி வுரைத்தா டெய்வம்
ஆதர வாமா தெய்வ மாபத்துக் குதவோர் தெய்வந்
தீதெலாஞ் சீக்குந் தெய்வந் திருப்புகழ் தெரித்தான் றெய்வம்
யாததை யிறைஞ்சி யேத்தி யாப்பளு ரகற்று வேனே. (10)

---

*7. பணை = பெருமை.*

*10. சீத்தல் = தூய்தாக்கல்.*

ஆக இருபது பத்தினும் போந்த திருப்பா - 200
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 203**

# 20.தெய்வம்

1. தத்துவங்கள் தோறும் தோன்றியுள்ள (224) உலகங்கள் அனைத்தும் போற்றித் துதிக்கும் தெய்வம், ஒவ்வோர் உயிரின் இதயநடுவாகிய சிற்றம்பலத்திலும் விராட்புருட இருதயமாகிய பேரம்பலத்திலும் ஐந்தொழிற்கூத்தும் ஆனந்தக் கூத்தும் இயற்றும் தெய்வம்; தெய்வங்கள் அனைத்தும் போற்றும் தெய்வம்; சிவபரம்பொருளே எனத்திகழும் பெரும்தெய்வம்; துன்பங்கள் அனைத்தையும் நீக்கும் தெய்வம்; ஒப்பற்ற சிவானந்தப் பேற்றை அளிக்கும் தெய்வம்; இத்தகைய பெருமைகளுக்குரிய பரம்பொருளாகிய குகனைப் போற்றித் துதித்துத் தொடர்ந்துவரும் பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

2. தன்னைத்தவிர இரண்டாவது பொருள் வேறு இல்லை எனுமாறு அனைத்திலும் வியாபித்தும் அனைத்தாகவும் விளங்கும் தெய்வம்; அனைத்திலும் ஊடுருவி அந்தர்யாமியாக விளங்கும் தெய்வம்; வாரிவழங்கும் கொடைக்கடலாக விளங்கும் தெய்வம்; வேறுபாடு, மாற்றம் ஏதும் பொருந்தாத தெய்வம்; வினைவயப்பட்டு ஒரு தாயின் வயிற்றில் உதிக்காத தெய்வம்; பேரொளி மயமாகவும் சிதாகாசமாகவும் விளங்கும் தெய்வம்; இத்தகைய பெருமைகளுக்குரிய குகபரம் பொருளையே துதித்துத் தொடர்ந்துவரும் பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

3. மோனப் பெரும் செல்வம் வாய்க்கப் பெற்றோர்க்குரிய தெய்வம்; மோகவயப் பட்டுள்ளாரால் அறியமுடியாத தெய்வம்; தெய்வ உலகத்தார்க்கும் தகரோபாசனை செய்வார்க்கும் உரிய தெய்வம்; மனத்துக்கும் வாக்குக்கும் எட்டாததெய்வம்; ஞானமே வடிவாக விளங்கும் தெய்வம்; இதயநடுவண் உள்ள சிற்றம்பல வெளியில் எழுந்தருளும் குக தெய்வம்; இத்தகைய பெருமைக்குரிய குகபரம்பொருளைத் துதித்துத் தொடர்ந்துவரும் எனது பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

4. இளமை, மூப்பு முதலான காலவயப்பட்ட, தேகவயப்பட்ட அவத்தைகள் பொருந்தாத தெய்வம்; விரும்பித்துதிக்கும் அடியார்களைக் காத்து ஆட்கொள்ளும் தெய்வம்; தீம்பாகினும் இனிப்பாக விளங்கும் சுகதெய்வம்; தேர்ந்த நெறிப்பட்டுத் துதிக்கும் என் ஆசைக்குரிய தெய்வம்; யோகியர் தியானித்து வணங்கும் தெய்வம்; இருமைநிலையை நீத்ததாய் ஒன்றென விளங்கும் தெய்வம்; இத்தகைய பெருமைகளுக்குரிய குகபரம்பொருளைப் போற்றித் தொடர்ந்துவரும் எனது பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

5. அறியாமை, மோகம் முதலான பிணிகள் பொருந்தாத தெய்வம்; அறிவுக்கும் அறிவாக (உணரும் அறிவுக்கு உணர்த்தும் அறிவாக) விளங்கும் ஞானதெய்வம்; பிரணவத்தின் உட்பொருளாக விளங்கும் தெய்வம்; உயிருக்கும் உயிராக விளங்கும் தெய்வம்; அறியாமை, மூடத்தன்மை, முதலானவற்றைப் போக்கும் தெய்வம்; பிறவிக்கடலைக் கடத்துவிக்கும் தெய்வம்; இத்தகைய நிலைகளில் விளங்கும் ஒப்பற்ற குகபரம் பொருளைப் போற்றித் தொடர்ந்துவரும் பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

**6.** எப்பொழுதும் உலக விவகாரங்களிலேயே ஈடுபட்டுள்ளோரால் அறிய முடியாத தெய்வம்; நாதநிலைக்கும் மேற்பட்டு நாதாந்த நிலையில் விளங்கும் தெய்வம்; நிலையாப்பொருளை நிலையாகக் கருதும் அற்பர்களால் உணரமுடியாத தெய்வம்; அறியாமைத் தொடர்பான நிலைகளுக்கு எட்டாததாய் அப்பாற்பட்டு விளங்கும் தெய்வம்; கோபம் சிறிதளவும் கொள்ளாத தெய்வம்; சிவச்சுடரொளியாக விளங்கும் பெரும் தெய்வம்; இத்தகைய பெருநிலைகளில் விளங்கும் குகபரம்பொருளைத் துதித்துத் தொடர்ந்துவரும் பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

**7.** அன்பர்கள் அனைவருக்கும் வேண்டிய வேண்டியாங்கு அருளும் தெய்வம்; அளவுக்கு உட்படாத ஞானமயமான தெய்வம்; தன் பெருக்கம் இவ்வளவினது என்று தானே அறிய முடியாத அளவுக்கு விரிவுபட்டிருக்கும் தெய்வம்; சிவநிலையின் இயல்பான நிலைக்குரிய சித்தாந்த தெய்வம்; அனைத்துயிர்க்கும் ஆனந்தப் பேற்றை அளிக்கும் சுயம்புத் தெய்வம்: அடியேனையும் ஆட்கொண்டு அருளும் மிக மேலான தெய்வம்; இத்தகைய பெருமைகளுக்குரிய குகபரம் பொருளைத் துதித்துத் தொடர்ந்துவரும் என் பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

**8.** தாயாக விளங்கி அணைத்து ஆட்கொள்ளும் தெய்வம்; அன்பெனும் வலைக்குள் சிக்கித் தன்னை எளிமைப்படுத்திக் கொள்ளும் தெய்வம்; கரும்புச் சாற்றினும் மேலாக இனிக்கும் தெய்வம்; சிந்தையைக் கவர்ந்து ஒருமுகப்படுத்தும் தெய்வம்; என் இதயவெளியின் நடுவுள் எழுந்தருளும் தெய்வம்; யாவரினும், யாதினும் மேம்பட்ட வலிமையுடன் விளங்கும் தெய்வம்; இத்தகைய பெருமைகளுக்குரிய குகபரம்பொருள் ஒன்றையே துதித்துத் தொடர்ந்துவரும் பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

**9.** எப்பொழுதும் ஒரே தன்மையாய் இருக்கும் தெய்வம்; இகநிலை, பரநிலை, சகுணம், நிர்க்குணம் என இரண்டு இரண்டாக விளங்கும் நிலைகளில் தானே தலைமைச் சிறப்புடன் விளங்கும் தெய்வம்; பொன்னம்பலத்துள் நடிக்கும் தெய்வம்; வரங்களை மிகுதியாக வழங்கும் கொடைக்கடலாகும் தெய்வம்; நன்மைகளுக்கெல்லாம் மேம்பட்ட சிவப்பெரும் நலம் சார்ந்துள்ள தெய்வம்; அனைத்தையும் விளக்கும் ஒளிப்பிழம்பாக விளங்கும் தெய்வம்; இத்தகைய பெருமைகளுக்குரிய குகபரம் பொருள் ஒன்றையே விடாது தியானித்திருந்து, தொடர்ந்து வரும் பிறப்பையும் இறப்பையும் அகற்றிநிற்பேன்.

**10.** பெரும் தவச்செல்வர்களுக்கு வாய்க்கும் பெரிய தெய்வ ஆற்றலாக விளங்கும் தெய்வம்; வேதத்தின் முடிவுப்பொருளைத் தெளிவாக உரைத்து உணர்த்தி ஆட்கொள்ளும் தெய்வம்; எப்பொழுதும் எல்லார்க்கும் ஆதரவாக விளங்கும் பெரும் தெய்வம்; ஆபத்து நேரும் போதெல்லாம் விலக்கி அருளி அச்சம் தீர்க்கும் தெய்வம்; தீமைகள் அனைத்தையும் அழிக்கும் தெய்வம்; திருப்புகழ் பாடிய அருணகிரிப்பெருமானின் இதயதெய்வம்; இத்தகைய பெருமைகளையுடைய தெய்வம் யாது ? அதனையே வணங்கித்துதித்து, தேகபந்தத்தை (பிறப்பு இறப்பை) நான் அகற்றி நிற்பேன்.

# 21. தன்னையாள்சுவாமி

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பொ**ன்னு மீன்ற மைந்த ரும்பு லாலு டம்பு மிந்தியம்
பின்ன வுண்ம னாதி யுட்பி ராண னுந்தொல் லாதனுஞ்
சின்ன மின்றி யொன்றற் கொன்று சேட தாமவ் வாதனுன்
தன்னை நீத்து முய்யு மோவென் றன்னை யாள்சு வாமியே. (1)

**போ**க காண்ட போக்கிய காண்ட யாப்பி னைப்பொ ருந்திமேல்
ஊக மின்றி நிற்கு மாத னோச்சி டும்பி ரேரகம்
ஆக வோது காண்ட நீத்த டங்கி னால லாதஞர்ச்
சாக ரங்க டக்கு மோவென் றன்னை யாள்சு வாமியே. (2)

**சூ**க்க மாம சுத்த மாயை தன்னை மூலத் தொக்கதாய்
நீக்க மின்றி யேற்ற வாத னீக்கு மாற றிந்திருள்
வீக்கம் வீட வாற்றும் வன்மை வீடு முன்னு றாவிடின்
தாக்கும் வாதை நீக்கு மோவென் றன்னை யாள்சு வாமியே. (3)

**கி**ரண வாக மஞ்சொல் வண்ணங் கிரண சோமன் போன்றவோர்
கரண தேக முங்கி ளர்ந்த காரி யத்து வக்கதுந்
துரும வேரின் றழைவு நேரத் தோன்று தூல தேகமுஞ்
சரத வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. (4)

**தூ**ல பூத னாச ரீர முஞ்சி மிழ்த்த சூக்கமுங்
கோல மானு மோகி னிச்சொற் கொண்ட துங்கொன் விந்துவும்
மூல மாகு மொன்றற் கொன்றிம் மூல பந்த மெய்ம்மையே
சாலுன் னோக்கின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. (5)

**பூ**த னாச ரீரம் போய போது சூக்க யாக்கையாய்
ஓது டம்பொ டேயி ருந்தவ் வுற்ற சூக்கந் தன்னிலே
யாத னாச ரீரந் தோன்றி யாத னைக்கு ளாதலுன்
சாத வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. (6)

---

*1. சின்னம் = சிறுமை; சே – திவாகரம் – "இறையணு வஞ்சஞ்சிறிதுசின்னம்" என்று கூறுதலினறிக. சேடு = பெருமை; பி – நிகண்டு.*

*4. கிரண + ஆகமம் = கிரணவாகமம் ; தமிழ்நூன் முடிபு.*

**தோ**ன்றும் யாத னாச ரீரந் துக்க மாய வூழலும்
ஆன்ற சொர்க்க மும்பு சிக்க வாகும் பூத சாரமாம்
மான்றல் சாரு மவ்வி ரண்டு வல்வி லங்கு முன்னருட்
சான்று வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. (7)

**பூ**வி லேயு டம்பி ழந்த போதி யாதொர் தூலமெய்
மேவ லுங்கல் லொத்து விண்ணி லேகி டந்து வீழ்கதிக்
கேவ யங்கு பூத சார மேற்று மீண்டு திப்பதுந்
தாவில் வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. (8)

**ச**டத்தை நீத்த பின்க னாவைச் சார்ந்த தேய்ப்ப வாத்துமா
அடுத்து நிற்ப னென்று கார ணாக மம்ப கர்ந்தவா
றொடுக்க மான கனவை யொப்ப வுணர்வு மாறி மறிவதுந்
தடத்த வீடின் றோவு மோவென் றன்னை யாள்சு வாமியே. (9)

**ஓ**சை யாதி யைந்த கந்தை யுற்ற புத்தி நெஞ்செனாப்
பேசொ ரெட்டு மேநு ணங்கு பெற்றி யாகு சூக்கமீ
தேசு ளோர றிந்து நேட லெவ்வ ணம்பு கழ்க்கவித்
தாச னெந்தை தெய்வ மேயென் றன்னை யாள்சு வாமியே. (10)

---

# 21. தன்னையாள் சுவாமி

---

1. பொன் (செல்வ வளங்கள்), பெற்றெடுத்த புதல்வர்கள், தன் உடம்பு, இந்திரியங்கள், மனம் முதலான உட்கருவிகள், உள்ளே சஞ்சரிக்கும் பிராணன், அனாதியான ஆன்மா – இவைகள் வரிசையாக, ஒன்றற்கொன்று விசேடநிலையிலும் நுண்மை நிலையிலும் சிறப்புடையதாகிறது. மிகவும் விசேடித்த, மிகவும் நுட்பமான இந்த ஆன்மா, உன் அருளை நீத்தும் நன்னிலை அடையுமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள உள்ள முழுமுதல் தலைவனே !

2. போககாண்டமாகிய சுத்த – அசுத்தமாயை, போக்கிய காண்டமாகிய அசுத்தமாயை ஆகிய இரண்டாலும் ஏற்படும் பந்தங்களைப் பொருந்தி, இவ்விரண்டுக்கும் மேல் குறைவின்றி நிற்பதும், இரண்டையும் செலுத்தி இயக்குவதுமாகிய பிரேரக காண்டம் எனப்படும் சுத்தமாயையையும் கடந்து அடங்கினால் அன்றித் துன்பக்கடலைக் கடந்து உய்ய ஆன்மாவால் இயலுமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற்பொருளே !

---

*7. ஊழல் = நரகம்; சூ – நிகண்டு.*

*9. சடம் = அறிவில்பொருள்; ஈண்டுத் தூலதேகம்.*

*10. சூக்கம் = சூக்குமதேகம்; இது, புரியட்டகமெனப்படும். இதுபற்றி யறியவேண்டிய செய்திகள், தகராலயரகசியத்தின் முதலாங்காண்டத்துப் 13–ன் உரையி லுள்ளன.*

3. நுட்பமாக உள்ள அசுத்தமாயா பந்தத்தை மூலவினை காரணமாகக் குறைவின்றி முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ள ஆன்மா அப்பந்தத்தை நீக்கும் வழிஅறிந்து, ஆணவ இருளின் பெருக்கம் கெட்டொழியும் வகையில் செயற்படும் ஆற்றலை இறப்பதற்குள் பெறாவிட்டால், அடிக்கடி வந்து தாக்கும் வாசனாமலங்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் ஆன்மாவால் நீங்கிநிற்க முடியுமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற் பொருளே !

4. கிரணம் எனும் ஆகமநூல் வெளிப்படுத்திக் கூறுமாறு, ஒளிமிக்க நிலவுபோன்றதாகிய கரணசக்தி வாய்ந்த தேகம், கன்மபலனால் விளையும் பந்தம், மரத்தின் வேர்போன்று மேலும் மேலும் தழைத்துக் கிளைக்கும் தூலதேக பந்தம் ஆகிய இவை, நிலைத்துவிளங்குவதான வீட்டுநிலையை அடைந்தாலன்றி நீங்குமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற் பொருளே !

5. உயிர்க்கு உள்ளதாகக் கூறப்படும் தூலமாக உள்ள பூதனா சரீர பந்தம் என்பதும், சூக்கும தேக பந்தம் என்பதும் முறையே மான் என்றும் மோகினி என்றும் அழைக்கப்படும். மேம்பட்ட பெருமைக்குரிய விந்து என்பதும் மூன்றாவதாக எண்ணப்படும் ஒன்று. மான், மோகினி, விந்து என்பனவற்றுள் பின்னது, முன்னதற்கு மூலமாகும். மூலத்தால் ஏற்படும் பந்தமானது, மெய்ம்மை பொருந்தும் உன் திருநோக்கு இல்லாமல் நீங்குமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற் பொருளே !

6. பூதனாசரீரம் நீங்கியவுடன் ஆன்மா சூக்கும உடம்பைப் பொருந்திநிற்கும். யாதனாசரீரம் எனப்படும் உடல் தோன்றி அந்தச் சூக்கும உடலோடு நிற்கும் ஆன்மாவுக்குப் பொருந்தும். யாதனா சரீரச் சேர்க்கை பொருந்தியதும் ஆன்மா நரக உலகம் சென்று நரக உலகங்களுக்குரிய துன்பங்களை அனுபவிக்கும். இவ்வாறு நேர்வதெல்லாம், உன் அருளால் ஏற்பட்டுள்ள வீடு பேற்று நிலையை அடைந்தாலன்றி நீங்கிநிற்குமோ ! எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற் பொருளே !

7. தோன்றும் யாதனா சரீரம் என்பது துன்பமயமான நரகலோக அனுபவத்துக்கு உரியது. பூதசார சரீரமானது இன்பம் செறிந்த துறக்க (தேவ) லோக அனுபவத்துக்கு உரியது. பந்தத் தன்மை பொருந்தியுள்ள இவ்விரண்டு வலிய விலங்குகளும், உன் அருளுக்குச் சான்றாகி, பூரண அருள் மயமாகத் திகழும் வீடுபேறு அடையாமல் நீங்குமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற்பொருளே !

8. பூவுலகில் இந்த உடம்பினை இழந்த போது வேறு யாதேனும் ஒரு தூல உடம்பைப் பொருந்துவதும், கல்லைப் போன்று விண்ணிலே கிடந்து மீட்டும் பூமியில் வீழச்செய்யும் கதிக்காகவே பொருந்தியுள்ள பூதசார சரீரத்தை ஏற்று, துறக்க நுகர்ச்சி பெற்ற பிறகு மீண்டும் பூமியில் உதிப்பதும் ஆகிய இவை, நிலைபேறு உடையதாக விளங்கும் வீடுபேற்றைப் பெறாமல் நீங்குமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற் பொருளே !

**9.** தூல உடம்பை நீத்த பிறகு, கனவுநிலையில் இருப்பது போன்ற தோற்ற நிலையை ஆன்மா பொருந்தி நிற்கும் என்று காரணாகமம் கூறுகின்றவாறு, ஒடுக்கம் பெறுவதாகிய கனவை ஒத்து உணர்வும் மாறிமாறி அடங்கும். இவ்வாறு நேரும் விவகாரங்கள் எல்லாம், மிகவும் மேம்பட்டதும், முப்பாழுக்கும் அப்பாற் பட்டதுமாகிய வீடுபேறு இன்றி நீங்குமோ ? எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற் பொருளே!

**10.** ஓசை முதலாக உள்ள ஐந்து தன்மாத்திரைகள், அகங்காரம், புத்தி, சித்தம் எனப்படும் எட்டுமே நுண்மைப்பட்டிருக்கும் புரியட்டக தேகம் எனப்படும் சூக்கும தேகம். இதன் நுட்பங்களையும் செயல்திறத்தையும் பாசம் முதலான குற்றங்களுக்கு ஆட்பட்டிருப்போர் எவ்வாறு அறிந்து உன்னை எங்ஙனம் நாடக் கூடும் ? திருப்புகழ்பாடிய அருணகிரிப்பெருமானுக்கு வாய்த்த எந்தையாகிய தெய்வமே! எப்பொழுதும் என்னை ஆட்கொள்ள உள்ள முழுமுதற் பொருளே!

(குறிப்பு: தன்னையாள் சுவாமி என்பதற்குத் தனது அருள்விலாச வடிவாகவே விளங்கும் உலகையும் உயிரையும் ஆளும் தெய்வத்தலைவன் என்றும் பொருள் கொள்ளலாம்).

---

# 22. சதானந்தவுந்தி

*கட்டளைக்கலிப்பா.*

**பொ**ருளற் றார்பொரு ளுற்றவர் செய்பெரும்
புண்ணிய த்தைக்க ணுற்றிதி லென்பயன்
வருமி தைப்புரிந் தின்னும் பிறப்பையே
மண்ணின் மேவிடு வார்நமைப் போலொரு
கரும மேனுமின் ஞானம் பெறாரெனக்
கழறி யேயியை யாநடை கோடன்மெய்த்
தரும நீத்த பொறாமையன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (1)

**மு**ன்னை நல்வினை யாலிந்த ஞான்றுனை
முன்னித் தேம்ப லுறாச்சொல் லிலம்பகம்
என்னு மாலைக ணிற்கிடு வாரையவ்
வேசி னாவன்மை யில்லிகள் கண்டிதில்
என்னை யாகுமுன் னோர்பழம் பாட்டையே
யெடுத்தி யம்பல் பொதாதுகொ லென்றிகழ்
தன்னத் தாரழுக் காற்றிக லென்னெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (2)

---

*1. சத்தி = வலிமை.*

*2. தன்னத்தார் = அற்பர்; தன்னம் = அற்பம்; சூ – நிகண்டு.*

**உ**ணர்வு ளார்பண்டு வேத சிவாகம
வுண்மை யிற்றென வேவிரித் துள்ளநூல்
உணர்வி வேகந் தணைந்தவ ரந்தநூ
லுணர்வு ளாரைக் குறித்திவ ருண்மையை
அணவிக் கண்டதுண் டோவென வேயிகழ்ந்
தறிவி லாமடப் பேதைய ராவதுந்
தணிவு றாக்கொடுங் கூரமன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (3)

**நி**த்த மூர்த்தி தலந்திருத் தீர்த்தமா
னேடி யெய்துநற் புண்ணிய வாளரை
இத்த லத்திடைச் சோம்பு முலோபமு
மேறி னோர்கண் டிவர்க்குயர் வாகுநாம்
முத்தி ஞானத் துளோமென் றுயர்த்துதன்
மூட மும்பெரும் பாவமு மாமிறாச்
சத்து வக்கரு ணாநிதி யேயெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (4)

**நூ**லி லேவிதிக் கும்விர தாதிக
ணோற்கு மாள்வினை கொண்டுடல் வாட்டியிஞ்
ஞால மீதுய் தவத்தரை யுண்பதே
ஞான மாக்கொண்ட வுன்மத்தர் நோக்கியித்
தூலந் தேய விழைத்திடு மாத்துமத்
துரோகத் தாலென்னை யாமிது மூடமே
சாலு மென்ப தகந்தையன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (5)

**சு**ருதி யாகம தூணமில் லாமலுஞ்
சுருதி யாதிய விந்தியச் சேட்டைகள்
மருவுறாமலு நல்லிரை துய்ப்பரை
மச்ச மூன்புசிப் பார்நிர்வி கற்பர்போற்
பெருகுங் காதைபல் பேசி யிகழ்ந்திடல்
பேர கந்தையுந் தீமையும் பீழையுந்
தருமெ னத்தெளி யாரெளி யாரெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (6)

---

*3. கூரம் = அழுக்காறு.*

*6. தூணம் = பகை; த்வேஷணம் என்னும் வடசொல்லின் விகாரம்.*

**ஊ**ன ருந்துவர் சேறருந் தார்நற
வுண்பர் காயுநெய் யுண்கிலர் தம்முளே
கோனி ருந்தகண் கோட னினைப்பர்கீழ்
கொண்ட நீசர்கண் கோட னினைத்திடார்
ஊன நெஞ்சத்தின் னோர்நிர்வி காரச்சொல்
லோத லென்னடு வென்னடு வீதடத்
தான மென்றகண் மார்க்கமன் றோவெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (7)

**ப**ந்த வில்லந் துறந்துனை நாடிமெய்ப்
பாங்கி னிற்குமெய் யன்பரை யிக்கணே
எந்த ஞான்று மடந்தைமண் ணாடக
மென்னு நச்சொழி யார்கண்டிவ் வாறினோர்
வந்த தேனில் லகத்தின் றெனாவடம்
வழுத்த னன்னடை யாளரைப் பங்கிகழ்
சந்த மொக்குமன் றோதயை நாடெங்கள்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (8)

**அ**ந்த நாளின ராஞ்சுரு திப்பொரு
ளாவ தோர்ந்தணங் கோட்டிநின் றுய்ந்தனர்
இந்த நாளின ரவ்வரு நூலெனு
மேட்டைப் பல்பிர திக்குழு வாக்கியே
வந்த காசுக்கு விற்றுண் ணுழைப்பினின்
மல்கி வாசக ஞானமும் பேசுவார்
சந்த தப்பொருள் காண்பர்கொ லோவிவர்
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (9)

**உ**ண்மை நோக்குமிக் கார்நடை யிற்சதா
வொழுகத் தங்கட்கொல் லாதொழி வாயினும்
வண்மை கோணடை யாநெறி யெள்ளியே
மாப்ப வம்பெற னீத்துய்த னன்கெனா
வெண்மை மேவகில் லார்பகர் வாரன்றோ
வீடு பெற்றவண் ணாமலை நாதனின்
தண்மைத் தேமுகி லேகுக தெய்வமே
சத்தி ஞான சதானந்த வுந்தியே. (10)

---

*7. நறவு = கள். கண்மார்க்கம் = கள்ளமார்க்கம்; கள் + மார்க்கம் எனப்பிரிக்க.*

*8. வழுத்தல் = சொல்லல் ; இதுபற்றி யறிந்துகொண் முறையும், எடுத்துக் காட்டும் முதறப்பத்தின் "யாப்பூரினின்றுனடி" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கண் விளக்கப்பட்டுள, பங்கு = முடவன்.*

*9. அணங்கு = நோய்.*

# 22. சதானந்த உந்தி

1. செல்வம் இல்லாதவர்கள், செல்வவளம் பொருந்தியோர் செய்யும் பெரிய புண்ணியச் செயல்களைக் கண்டதும், "இவ்வாறு செய்வதால் என்ன பயன் ? இத்தகைய செயல்களைச் செய்து மேலும் மேலும் பிறவியைப் பெற்று இம்மண்ணுலக வாழ்க்கையிலேயே திளைப்பர், நம்மைப் போன்று கன்மபந்தம் சிறிதும் ஒட்டாத ஞானநிலையைப் பெறமாட்டார்கள்" என்று கூறி, அறநெறிக்குச் சிறிதும் பொருந்தாத நடைமுறைகளைக் கொள்வார்கள். இவர்கள் இவ்வாறு சொல்வதும் செய்வதும் உண்மையான தருமநெறியினின்று நீங்கியுள்ள பொறாமைக் குணத்தால் அன்றோ! எங்கள் தியானத்துக்குரிய, அறுகுண வல்லமை சான்ற சித்து – சத்து – ஆனந்தமயமான பெருங்கடலே!

2. முற்பிறவியில் செய்த நல்வினைப் பயனால் இப்பிறவியில் உன்னையே நினைந்து மனம்கசிந்து உருகி அழுது, தமது இனிமையான சொல்திறத்தால் இலம்பகம் முதலான கவிமாலைகளை உனக்குச் சூட்டுவார் அருளாளர்கள். இத்தகைய குற்றமற்ற நாவன்மை ஒருசிறிதும் இல்லாத மூடர்கள் இந்த அருளாளர்களைப் பார்த்ததும் "இவ்வாறு பாடுவதால், என்ன வந்துவிடப் போகிறது ? முன்னோர் பாடியுள்ள பாடல்களையே ஓதினால் போதாதோ'' என்று கூறி இகழ்வார்கள். இவ்வாறு கூறி இகழும் அற்பர்களின் அழுக்காற்று வலிமைதான் என்னே! எங்கள் தியானத்துக்குரிய, அறுகுணவல்லமைசான்ற, சித்து – சத்து – ஆனந்த மயமான பெருங்கடலே!

3. அருள் உணர்வு மிகுந்துள்ளோர் முன்னர் வேத சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள உண்மை இத்தன்மையது என விவரித்துக் கூறியுள்ள நூல்ளை ஐயம்திரிபற உணரக்கூடிய விவேக ஞானம் இல்லாதவர்கள், இத்தகைய நூல்களை நன்குணர்ந்துள்ள அந்தப் பெரியோரைப் பற்றி "இவர் இந்த உண்மைகளை நேரே அனுபவித்துப் பார்த்ததுண்டோ, வெறும் நூலறிவு என்ன செய்யும் ?'' என இகழ்ந்து அறிவற்ற, மடத்தன்மைமிக்க, பேதையர்களாக, விளங்குகின்றனர். இவர்கள் இவ்வாறு பேதையர்களாக விளங்குவது சற்றும் நீங்காதிருக்கும் கொடிய பொறாமையின் விளைவே அன்றோ! எங்கள் தியானத்துக்குரிய, அறுகுண வல்லமைமிக்க, சித்து–சத்து– ஆனந்தமயமான பெருங்கடலே!

4. சத்துவ நிலையில் குறைவுபடாதுள்ள கருணைப்பெரும் செல்வமே! எங்கள் தியானத்துக்குரிய, அறுகுணவல்லமை சான்ற, சித்து–சத்து–ஆனந்தமயமான பெருங்கடலே! நித்தமும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் இவற்றை முழுநம்பிக்கையுடனும் ஈடுபாட்டுடனும் நாடியும் கண்டும் மூழ்கியும் அருள்பெறும் சிவபுண்ணியச் சீலர்களை– இவ்வுலகில் சோம்பல், லோபம் முதலான இழிகுணங்கள் முதிரப்பெற்றுள்ள அற்பர்கள் கண்டு "இவர்களின் பேதமை என்னே! இவர்களின் நிலைக்கு மேம்பட்ட உயர்வான கைவல்ய ஞானப்பேற்றை நாம் அடைந்துள்ளோம். நாம் மூர்த்தி உபாசனைக்கு அப்பாற்பட்டவர்கள்'' என்று கூறித் தம்மைத் தாமே உயர்த்திக் கொள்ளுதல், மூடமும் பெரும் பாதகச் செயலுமே யாகும்.

**5.** புராணங்கள், கல்பசூத்திரங்கள் முதலானவை விதித்துக் கூறும் பல்வேறு விரதங்கள் முதலானவற்றை அனுட்டிக்கும் மனோவன்மை மிகுந்த செயல்களை மேற்கொண்டு உடலை வெதுப்பிப் பக்குவப்படுத்திக் கொண்டு இவ்வுலகில் உய்திபெறும் தவச்சீலர்கள் உள்ளனர். வயிறுபுடைக்க வேளைதவறாமல் உண்பதையே ஞானப் பேறாகக் கொண்டுள்ள வெறியர்கள் இவர்களின் செய்கைகளைப் பார்த்து ‘‘தூலதேகம் சிதைந்து போகுமாறு செய்து தனக்குத் தானே துரோகம் இழைத்துக் கொள்வதான ஆத்மதுரோகமான செயல்களால் என்னபயன் ஏற்படப் போகிறது? இது வெறும் மூடத்தனமாகவே கருதப்படும்’’என இகழ்ந்துரைப்பது அகந்தையின் விளைவே அன்றோ! எங்கள் தியானத்துக்குரிய, அறுகுண வல்லமை மிக்க, சித்து–சத்து– ஆனந்தமயமான பெருங்கடலே!

**6.** வேத ஆகம நிந்தை செய்யாமலும், புறம் சொல்லல், அதனைக் கேட்டல் முதலான இந்திரிய வெளிவிவகாரச் செயல்களைப் பொருந்தாமலும், மௌனம் சாதித்து, நல்ல சாத்துவிக உணவு உட்கொள்ளும் சிலரை, மீன், மாமிசம் முதலானவற்றைப் புசிக்கும் துராசாரம் உடையோர் பார்த்து நிர்விகல்ப சிந்தை வாய்த்த தூயோர் போன்று பாசாங்கு செய்துகொண்டு பல்வேறு கட்டுக்கதைகள் பேசி இகழ்ந்துரைத்தல் பெரிய அகந்தை உணர்வையும், தீமைகளையும் துன்பத்தையும் தரும் எனத் தெளிவாக உணராதோரே அறிவீனர்கள் எனப்படுவார்கள். எங்கள் தியானத்துக் குரிய, அறுகுண வல்லமை சான்ற, சித்து – சத்து – ஆனந்தமயமான பெருங்கடலே !

**7.** மாமிசம் புசிப்பார்கள் தமக்குள்ளேயே ஊறும் இனிப்புமிக்க மதி அமிழ்தம் உண்ணார்; கள் குடிப்பவர்கள், தம் அகத்தே யோகப் பயிற்சியால் எழும் அமிழ்த நெய்யை உண்ணமாட்டார்கள். என்ன பேதைமை! தமக்குள்ளேயே உள்ள, தெய்வம் எழுந்து விளங்கும் இதயத்தானம் முதலான தானங்களை உணர்வதில் கருத்து இருத்துவோர், கீழ்மை மிக்க இழிந்தோர்க்குரிய வெளி இடங்களை அடைவதில் சிந்தையைச் செலுத்த மாட்டாகள். இப்படி இருக்க, இவ்வாறு உயர்ந்ததை விரும்பாமல் இழிந்ததை விரும்பும் ஊனநெஞ்சத்தினர், நிர்விகார நிலையைப் பேசுதல் எந்த விதத்தில் நியாயம்? இத்தகையோர், அரிய நுட்பவிஷயமான நிர்விகாரம் பற்றிக் கூறுதல் அடாவடித்தனமான கள்ள மார்க்கம் அன்றோ! எங்கள் தியானத்துக்குரிய அறுகுண வல்லமை சான்ற, சித்து – சத்து – ஆனந்தமயமான பெருங்கடலே!

**8.** பந்தமயமான வீட்டைத்துறந்து, உன்னைநாடி, மெய்ந்நெறியில் உறைந்து நிற்கும் மெய்யடியார்களை, இவ்வுலகில் எப்பொழுதும் பெண், மண், பொன் ஆகியவற்றையே ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் இழிந்தோர் கண்டு "இவ்வாறு இவர்கள் வீட்டைவிட்டு வந்தது ஏன், இதுவோ தருமம்?’’ என்று ஒவ்வாப் புன்சொல் கூறுவது, நன்றாகப் பீடுநடை போடுவாரைப் பார்த்து முடவன் ’ஏன் இவ்வாறு நடக்க வேண்டும்?’ என இகழும் ஒழுங்கை ஒக்கும் அன்றோ! எப்பொழுதும் கருணைஉள்ளத்தையே காட்டிக் கொண்டிருக்கும் தெய்வமே! எங்கள் தியானத்துக்குரிய, அறுகுண வல்லமை பொருந்திய, சித்து – சத்து – ஆனந்த மயமான பெருங்கடலே!

**9.** அந்நாளில் இருந்தோர் அரிய வேத மந்திரங்களின் நுட்பம் உணர்ந்து, நோய்களை விலக்கிப் பல்லோர்க்கும் உபகாரமாக இருந்து உய்திபெற்றனர். இந்நாளில் உள்ளோர் அரிய வேத ஆகம நூல்களையும் அவற்றின் வழி எழுந்த அரிய நூல்களையும் பல பிரதிகளாகவும் கட்டுகளாகவும் வெளியிட்டு, வந்த காசுக்கு விற்று, அதைக் கொண்டு உண்டு வாழும் இழிதொழிலில் மிகுதியும் ஈடுபட்டு, அந்நூல்களின் நுட்பப்பொருள் உணராமல், வெறும் வாய் அளவில் ஞான உபதேசங்களைச் செய்துவருகின்றனர். இவர்கள், எப்பொழுதும் நிலைத்திருப்பதான மெய்ப்பொருள் தன்மையை உணர்வார்களோ? எங்கள் தியானத்துக்குரிய, அறுகுண வல்லமை பொருந்திய, சித்து – சத்து ஆனந்தமயமான பெருங்கடலே!

**10.** "உண்மையான மெய்ப்பொருள் நோக்கம் உடையோர் மேற்கொண்டுள்ள நன்னெறியையே எப்பொழுதும் கடைப்பிடித்து நடக்கத் தங்களால் முடியாமற் போனாலும், ஞானவளம் மிகுந்ததாகவும் குற்றம் பொருந்தாததாகவும் உள்ள நெறியை இகழ்ந்து, அதன் மூலம் நீங்காத பிறவித்துன்பத்தைப் பெற்று இடர்ப்படுதலினின்றும் நீங்கி உய்திபெறுதலே மேலான செயல்'' – இவ்வாறு அறியாமைக்குச் சிறிதும் இடம் கொடுக்காத ஞானியர் பேசுவர் அன்றோ! குகானந்த வீடுபெற்ற அருணகிரிப்பெருமானுக்கு வாய்த்த, குளிர்ச்சியான இன்பத்திரளான முகிலே! குகதெய்வமே! அறுகுண வல்லமை சான்ற சித்து – சத்து – ஆனந்தமயமான பெருங்கடலே!

# 23. கங்கையணிவேணி

*கலிவிருத்தம்.*

**க**ங்கையணி வேணியிறை காதலுடன் மாணார்
துங்கமலி யர்ச்சனை தொடுத்தகவி யென்னாச்
சங்கிலி பதிக்கருள்செய் தானவண நெஞ்சே
பங்கமில் குகேசனருள் பாடிநித மாடே. (1)

**ஆ**டுகிலை யன்பதிலை யாளிறையை நாடிப்
பாடுகிலை யென்றுரிய பண்ணவ னறைந்த
பீடுடைய நல்லுரை பிடித்துமன னேமா
வீடுதரு சாமியை விதந்து கவிபாடே. (2)

*1. இத்திருப்பாட்டின் பொருள், திருத்தொண்டர் புராணத்தே தடுத்தாட் கொண்ட புராணத்து 70 – ஆஞ் செய்யுளில் "அர்ச்சனைபாட்டே யாகும்" என வருவதாம்.*

*2. நல்லுரை : இது, திருவாசகத் திருச்சதகத்தே "ஆடுகின்றிலை" என்றற்றொடக்கத்துத் திருப்பாட லென்க. இதன் பொருட்கியைய ஸ்ரீமந் மாணிக்கவாசகனாரும் பாடுமாரம்பத்தி னினைத்தாரெனத் திருவாதவூரர் புராணத் திருவம்பலச் சருக்கத்தில்,*

*"வெண்பிறை முடித்த வேணி விண்ணவ னன்பி லாத*
*பண்பின ரெனினுந் தன்னைப் பாடினர்க் கிரங்கும்" என வருதலுங் காண்க.*

**பா**வபுணி யப்பெரு மருத்தைநல பற்றால்
ஆவியர்க ளுக்குண வருத்திமல மாரி
வீவுற விழைத்திடு மருத்துவனை மெய்யாக்
காவுதி யெனப்பரசி டாயுயர் கருத்தே. (3)

**அ**ண்டமது பார்ப்பென வலங்குமுறை போற்கோள்
கொண்டவொரு சூக்கமிசை கோடலுமொண் ணாகந்
துண்டுரி யுரிப்பதென நீக்கியுள சூக்கம்
மண்டுவது மாயவுடை யானைநினை நெஞ்சே. (4)

**அ**ந்தமுறு சாந்தோக்கி யத்தில்வெளி யாமா
பந்தமி லருந்தகர வுபாசனையை நேர
எந்தநெறி யுள்ளுமிலை யேசின்மன னேநீ
அந்தநிலை தன்னிலுடை யானைநினை யாயே. (5)

**நா**மமுரு வென்றசக லக்கண மகன்றோர்
ஏமமுறு வானினிய வீரமன னேநீ
ஏமமதி சத்தெனு மிலக்கணம தாமா
சாமியென வுள்ளபொரு டன்னைநினை யாயே. (6)

**ஆ**கமுத லானுவ லசித்தையறி சித்தாய்
ஊகமிட லுஞ்சக முரித்தெனலு நன்னாப்
பாகமி லிரும்பிரதி பந்தமிதை நூறி
ஏகவிறை தன்னைமன னேநினைதி யென்றும். (7)

**சி**ன்னமதி நானரிய தெய்வமதை யெவ்வா
றுன்னுவ லெனத்தளர் வுறாய்சிறிய கண்ணும்
பின்னமற மேவிய பெருந்திகையு நோக்கும்
என்னுமுறை கொண்டுகுக னெந்தையரு ணாடே. (8)

**கா**டுபுகு முன்னிறை கருத்துள்வரி னன்னோன்
பீடுபெற வாடுநிரல் காட்டியொர் பெருத்த
மாடுதரு வானது மதிக்கரிய தீம்பால்
நாடொறு மளிக்குமிடி நந்துமன னேயோ. (9)

---

*3. மல மாரி = மலநோய்.*

*4. "அண்டமது பார்ப்பு" – அண்டம் = முட்டை. பார்ப்பு = குஞ்சு.*

*5. "அந்தமுறு சாந்தோக்கியம்" என்றது, சாந்தோக்கியம் வேதாந்தத்துள தென்பதை யறிவுறுப்ப தாயிற்று. தகரோபாசனையைத் 'தகரவுபாசனை' என்றது தமிழ்நூன் முடிபு.*

*6. ஏமமதிசத் தெனுமிலக்கணம் = சச்சிதானந்தலக்ஷணம்; ஏமம் = ஆனந்தம்; மதி = சித்து.*

*8. சின்னமதி = சிறுமையுடையபுத்தி ; சின்னம் சிறுமைப்பொருளில் வருதலை 21 – ஆம் பத்தின் "பொன்னுமீன்ற" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரையி னுணர்க.*

மெய்யருள் விளக்கமிகு மெய்ப்புக ழுறைந்தோன்
தெய்வமெது வோவது சிறந்தபொரு ளத்தை
ஐயமற வுள்ளியவ னுக்கெளிய வுன்னைக்
கையடைசெய் துய்திநனி காமுறு கருத்தே. (10)

# 23. கங்கையணிவேணி

**1.** கங்கை அணியப் பெற்றுள்ள சடைமுடியை உடைய சிவபெருமான் "அன்புப் பெருக்குடன் கூடிய, பெருமையும் உயர்ச்சியும் மிகுந்த, அர்ச்சனை என்பது, பாடும் பாட்டே'' என்று சங்கிலி நாச்சியாரின் கணவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு உரைத்தருளினான். நெஞ்சே! அந்நெறி நின்று குறைவொன்றும் இல்லாத குகப்பரமனின் அருட்பெருமையை நாள்தோறும் அன்புடன் பாடி ஆடுக.

**2.** ‘‘ஆடவில்லை; அன்பில்லை; ஆட்கொள்ளும் இறைவனை நாடிப் பாடவும் இல்லை’’ என்று நெஞ்சை நோக்கிக் கடிந்துகொண்ட மாணிக்க வாசக சுவாமிகள் கூறியருளிய பெருமைசால் நல்லுரையை உறுதியாகக் கடைப்பிடித்து, என் நெஞ்சே! மிகவும் பெருமைக்குரிய ஆனந்தமயமான வீடுபேற்றைத் தரும் குகமுதல்வனை விதந்து கவிபாடித் துதிப்பாயாக.

**3.** எனது உயர்ந்த சித்தமே! பாவம், புண்ணியம் ஆகிய மருந்து உணவை, சிவநிலை அடையும் நோக்குடைய உயிர்க்கூட்டங்களுக்கு அருத்தி, ஆணவமலமான நோய் முழுவதுமாக நீங்கும் படிச் செய்யும் மருத்துவனை (பவரோக வைத்திய நாதனை) உள்ளூற ஆழ்ந்து ஈடுபட்டு வணங்கி ‘‘என்னைக் காத்தருள்க; எடுத்து அருள்க" எனவேண்டித் துதிப்பாயாக.

**4.** என் நெஞ்சே! முட்டையும் குஞ்சும் விளங்கும் முறைபோல் தத்துவச் செயற்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ள சூக்கும உடலையும் பாம்பு தன் தோலை உரிப்பது போன்று தத்துவத் தொடர்பு நீங்கியுள்ள சூக்கும நிலையையும் மாறிமாறிப் பொருந்தப்பெற்று அல்லலுக்குள்ளாகும் நிகழ்ச்சிகள் ஒடுங்கிப்போக உடையானாகிய குகமுதல்வனை ஆழ்ந்து நினைப்பாயாக..

**5.** சாமவேதத்தின் முடிவில் உள்ள சாந்தோக்கிய உபநிடதத்தில் வெளிப்படுத்துப் பட்டுள்ளதும், பந்தப் பிணைப்புகளை முற்றிலும் நீக்க வல்லதுமாகிய தகர உபாசனையை ஒத்து விளங்கும் உறுதியான முறை, உலகில் எந்தச் சமய நெறியிலும் இல்லை. இகழ்ச்சி பொருந்தாத, குற்றமற்ற என் மனமே! நீ தகரோபாசனை நெறியில், உடையானாகிய குகமுதல்வனை ஆழ்ந்து தியானித்து இருப்பாயாக.

**6.** இரக்கமும் கருணையும் கொண்டுள்ள மனமே! பெயர், வடிவம் எனப்படும், பிரபஞ்ச உபாதிகளை ஒதுக்கிவிட்டு, ஒப்பற்ற பேரின்ப நிலையை அடையும் பொருட்டு, நீ, ஆனந்த

மயமாக இருத்தல், ஞானமயமாக இருத்தல், உண்மை (சத்து) மயமாக இருத்தல் என்னும் முடிபான இலக்கணங்களாகத் திகழும் பெரு முதல்வன் என விளங்கும் குகபரம்பொருளை எப்பொழுதும் நினைத்து இருப்பாயாக.

7. மனமே! உடல், கரணம் முதலானவை ஜடநிலையில் உள்ள அசித்துப்பொருள்களே. இவை சித்துப்பொருள்களே எனப் போலி நியாயம் காட்டி நிறுவுதலும், உலகம் உயிர்க்கு என்றும் உரியதாக உள்ள உள்பொருளே எனக் கூறுதலும், நன்மைதரத்தக்க முதிர்ந்த ஞானநிலையை நீங்கச் செய்யும் பெரிய பிரதிபந்தங்களாகும். இவ்வாறு கருதுவதை அடியோடு விட்டொழித்து ஏக தெய்வமாக, முழுமுதல்வனாக உள்ள குகப்பரமனை எப்பொழுதும் நினைத்திரு.

8. மனமே! "நான் சிறுமைப்பட்டுள்ள சிற்றறிவு நிலையில் உள்ளவன். உணர்தற்கரிய பெரும்தெய்வத்தை எவ்வாறு தியானிக்க முடியும், எப்படி உணர முடியும்?'' என்று கருதித் தளர்வுற வேண்டாம். கண் சிறியதே எனினும், பின்னமற வியாபித்திருக்கும் பெரிய திசைப்பரப்பை நோக்கவில்லையா? இந்த நியாயம் கொண்டு குகமுதல்வனாகிய எந்தையின் அருள்நாடிப் பாடு.

9. துன்பத்தில் மிகுதியாக ஆழ்ந்துள்ள மனமே! இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் முன்னர் ஆழ்ந்த இறைதியானம் பொருந்தப்பெறின் அன்னோன் பெருமை பொருந்த ஆடும் லய ஒழுங்கை உனக்குக் காட்டி ஒப்பற்ற பெருஞ்செல்வத்தையும் தருவான். அவனது கூத்தும் திருவும் அளவிட்டுரைப்பதற்கு அரிய இனிய ஞான அருளமிழ்தத்தை நாள்தோறும் அளிக்கும்.

10. மிகவும் விருப்பம் கொண்டுள்ள சித்தமே! மெய்யருள்மயமான அற்புதச் செயல்களின் விளக்கங்கள் மிகுந்துள்ள திருப்புகழ்ப்பாக்களைப் பாடிய அருணகிரிப் பெருமானுக்குரிய தெய்வம் எதுவோ, அதுவே சிறந்த பொருள்; உயர்ந்த பொருள் (இறை). ஐயம் சிறிதும் கொள்ளாமல் அந்த உயர்ந்த இறையைத் தியானித்து, எளிமைப்பட்டிருக்கும் உன்னை அவனுக்கு அடைக்கலமாகக் கொடுத்துவிட்டு உய்திபெறு.

# 24. நட்புக்குகந்தநாயகம்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சொ**ல்லும் பொருளு மெனவிரண்டு தொகை ப்ப வஞ்சம் பற்றியுடம்
பெல்லை யுடைய வுயிரின்க ணெழும்பு மேக தேசவுணர்
வல்லன் மருவு பாசவுணர் வாகு மிதுவோ முத்திதரும்
நல்ல வுணர்வை யீதியெங்க ணட்புக் குகந்த நாயகமே. (1)

*1. எழும்பல் – எழல் ; ஒரு பொருளுடைத் தொழிற்பெயராகிய இவ்விரண்டனுள் எழலென்பதிற் பகுதி எழுவெனவும், எழும்பலென்பதிற் பகுதி எழும்பு எனவுங் கொளக் கிடத்தலின் எழலென்பதற்கு எழும்பல் வேறு முடிபி லுளதென்க.*

**இ**ரண்டு பிரபஞ் சமுநீக்கி யேற்ற நானென் றெழுசெருக்கால்
அரந்தை யிகந்த வனாதிமுத்த னாகும் பிரம மாவனெனாத்
திரங்கொ ளுயிர்தான் மதிக்கவருஞ் சிவசம வாதப் பசுஞான
நரன்சேர் மோக்க மடைவதுண்டோ நட்புக் குகந்த நாயகமே. (2)

**ஆ**சி றற்பி ரகாசமுமா யரிய பரப்பி ரகாசமுமாய்ப்
பேசு மெந்தப் பொருளினையும் பிறங்க வினிது விளக்கிடுமுன்
ஏசில் வண்மைப் பதிஞான மென்ப தொன்றே முத்திதரும்
நாச மிலதைக் கொடாயெங்க ணட்புக் குகந்த நாயகமே. (3)

**பூ**த வெளிக்கும் வெளியாகப் புகலு மூலப் பகுதிவெளிக்
கேது வாய கலைவெளிக்க ணிருந்து மதிற்றோ யாததன்மேல்
ஓது முபய மாயைகளி னொளிக்கப் பான்மின் னிறைவவெனை
நாத நிலைமே லேற்றலெந்நா ணட்புக் குகந்த நாயகமே. (4)

**க**லையி னொளிக்கு மேலெனவே கழறு மசுத்த மாயையொளி
நிலையை நிகழ்வித் தையினொளியை நீத்த மேல்விந் துவினொளியில்
தலையா யிருந்தைந் தொழிலயருந் தலைவ வுனதோர் சுத்தநிலை
நலம தெளியேற் குறுவதெந்நா ணட்புக் குகந்த நாயகமே. (5)

**தா**வி லருணந் திச்சிவனூல் சாற்று மாறெவ் வணமாகப்
பாவிக் கினுமவ் வணமருளும் பரிவுத் தேநீ யாதலினான்
மேவிக் கலவச் சூழ்வண்ணம் விரைவி லருள்செய் தாண்டுகொளாய்
நாவிற் பெரியா ரேத்துமெங்க ணட்புக் குகந்த நாயகமே. (6)

**எ**ண்ண மறியாத் தெய்வமொன்றை யாவ னொருவன் பரசிடினஃ
தெண்ணி யருள்வ தின்றநனே யிரங்கி நீயே யறிந்தருள்வை
கண்ணு மெனையுங் கருத்தடைத்துக் காவா காவா கனகமன்றை
நண்ணு மடியா ரிறைவவெங்க ணட்புக் குகந்த நாயகமே. (7)

**த**ந்தை தாயர் பசுப்பார்ப்பார் சமய குருவென் பவைகளையுட்
சிந்தை பொருந்த வணங்கிலவை தெரிந்தப் பலனைக் கொடாவஙனம்
அந்த மகன்ற வுனதருளே யளிக்கு மந்தப் பேரருளென்
நந்த லறுக்க வராதுகொலோ நட்புக் குகந்த நாயகமே. (8)

---

*2. ஏற்றம் = அதிகம். திரம் – ஸ்திரம் என்னும் வடசொல்லின் விகாரம்.*

*3. "உன் ஏசில் வண்மைப் பதிஞானம்" என்றமையின், பதி யனுக்கிரகிக்கு ஞானமே பதிஞானம், அஃதித் திருப்பாட்டிற் கூறியவா றுளதென்க.*

*7. கனகமன்று = இதயாம்பரம்; தகராலயரகசியங் காண்க.*

**க**ள்ளற் களித்த வன்னபலன் கனசி வயோகிக் களித்தபலற்
கெள்ளத் தனையு மொவாதந்நே ரேனைக் கடவுள் பூசனைநல்
உள்ளக் கடவு ளாயியங்கு முனது பூசைக் கொவாதுண்மை
நள்ளிப் பொருளே யருளெங்க ணட்புக் குகந்த நாயகமே. (9)

**எ**ன்ன துடலா ராவிபொரு ளென்னு மொருமூன் றேற்றுரிய
நின்னல் லடியார் பணியருணன் னிலைவீ டென்னு மூன்றனையுந்
தன்ன மறவே தமியேற்குத் தருவா யருண கிரிப்பெரியான்
நன்னாப் பதியே குகதேவே நட்புக் குகந்த நாயகமே. (10)

# 24. நட்புக்குகந்த நாயகம்

**1.** சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் எனப்படும் இரண்டு பிரபஞ்ச வகைகளையும் பற்றி, உடம்பைப் பற்றுக் கோடாகக் கொண்டு உயிரின்கண் தோன்றும் ஏகதேச உணர்வானது, துன்பநிலையைத்தரும் பாச உணர்வாகும். இந்தப் பாச உணர்வு முத்தியைத் தரவல்லதாகுமோ ? முத்தியைத் தரவல்ல உயர்ந்த, ஆற்றல்மிக்க நல்ல உணர்வை ஈந்தருள், எங்களின் மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

**2.** சொற்பிரபஞ்சம், பொருட்பிரபஞ்சம் எனும் இரண்டின் தொடர்பையும் நீங்கி, வரம்பின்றி எழும் "நான்" எனும் செருக்கால் "துன்பம் கலவாத இன்பமயமான அனாதி முத்தனாகிய பிரம்மப்பொருளாகவே ஆன்மா ஆகிவிடுகிறது" என, நிலைபெற்ற உயிரைக் கருதுவது சிவசமவாதமாகும். இத்தகைய வாதம் பசுஞானமாகும். இதனால் மனிதன் அடையத்தக்க உயர்ந்த வீடுபேற்று நிலையை அடையமுடியுமோ ? மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத்தெய்வமே!

**3.** குற்றமற்ற சுயம்பிரகாசமாகவும் (தானாகவே ஒளிர்வதாகவும்) அரிய பரப்பிரகாச மாகவும் (ஏனையவற்றையும் பிரகாசப்படுத்தி வெளிப்படுத்துவதாகவும்) விளங்கி, எந்த உலகிலும் எந்தப் பொருளையும் விளக்கிக் காட்டும் உனது பரிபூரணமான, செழுமைமிக்க பதிஞானம் என்பது ஒன்றே மேலான முத்தியைத் தரும். அழிவின்றி விளங்குவதான அந்தப் பதி ஞானத்தை வழங்கி அருள்! மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

**4.** பூத ஆகாசத்துக்கு மூலமாக உள்ளது மூலப்பிரகிருதி. மூலப்பிரகிருதி எனும் வெளிக்குக் காரணமாக இருப்பது கலை வெளி – இவ்விடங்களில் வெளிப்பட்டு விளங்கியும். இவற்றால் பாதிக்கப்படாமல் இவற்றுக்கும் மேற்பட்டுள்ளனவும் ஆகிய சுத்த – அசுத்தமாயை, சுத்தமாயை எனப்படும் இரண்டு மாயைகளின் ஒளிக்கும் அப்பால் தேஜோமயமாக விளங்கும் இறைவனே! அடியேனை நாத தத்துவ நிலைக்கும் மேலே உயர்த்தி வைப்பது என்றைக்கு ? மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

*9. நளி – நள்ளியென எதுகை நோக்கி விரித்தல்விகாரம்; நளி = பெருமை; பி – நிகண்டு.*

**5.** கலா தத்துவத்தின் ஒளிக்கும் மேம்பட்டதாகக் கூறப்படுவது சுத்தா சுத்தமாயை ஒளி. இந்த ஒளிநிலையையும், இதற்கு மேற்பட்டுள்ள சுத்த வித்யா தத்துவ ஒளிநிலையையும் கடந்து உயர்ந்து விளங்குவது விந்து தத்துவ ஒளி. இந்த ஒளித்தானத்தில், தலைமைச் சிறப்புடன் வீற்றிருந்து ஐந்தொழில் இயற்றும் தனித் தலைவனே! தத்துவக்கலப்பு நீங்கியுள்ள உனது சுத்த நிலைக்குரிய சிவ நலம் எளியேனுக்குப் பொருந்துவது என்றைக்கு ? மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

**6.** அழியாத பெருமைக்குரிய அருணந்தி சிவனாரின் சிவஞான சித்தியார் எனும் நூல் உரைக்குமாறு யாதொருவன் எவ்விதமாகப் பாவித்தாலும் அவ்விதமாகவே வெளிப்பட்டு அருளும் கருணைக்கடவுள் நீயே ஆதலின் உன்னோடு இரண்டறக் கலந்துவிளங்க நான் எண்ணும் வண்ணம் விரைவில் அருள் செய்து ஆண்டுகொள்க. இறைபுகழ் கூறும்திறத்தில் நாவன்மை மிக்க பெரியார் போற்றித்துதிக்கும் பெரும! எங்கள் மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

**7.** வேண்டித்துதிக்கும் அடியாரின் உள்ளக்கருத்து இன்னது என அறியமுடியாத எந்த ஒரு தெய்வத்தை யார் போற்றித் துதித்து வணங்கினாலும், அதுவே அவரது எண்ணத்தைப் பூர்த்திசெய்து அருள்வதில்லை. உண்மையில், கருணைகொண்டு இரங்கி, அந்த எண்ணம் அறிந்து, வேண்டுகோளை நீயே நிறைவேற்றி அருள்கிறாய். உன்னையே எண்ணி வணங்கும் என்னையும் உன் திருவுள்ளத்தில் ஒரு பொருட்டாக ஏற்றுக்கொண்டு பல்காலும் காத்தருள்வாயாக. இதயவெளியின் இயல்பை நாடி உணர்ந்து உன்னை வந்து அணுகும் அடியார்க்குரிய இறைவ! எங்களின் மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

**8.** தந்தை, தாய், பசு, அந்தணர், சமயகுரு – இவர்களை உள்ளம் ஒன்றி வணங்கி வழிபட்டால், வழிபடுவோரின் எண்ணம் உணர்ந்து இவர்களாகவே உரிய பயனை அளிக்கமாட்டார்கள், அவ்வாறு உணர்ந்து அவர்கள் மூலம் அருள்புரிந்து காப்பது, எல்லையற்ற உனது திருவருளேயாகும். அத்தகைய உனது பேரருள் எனது வாட்டத்தைத் தீர்க்க என்பக்கமாக வந்து உதிக்காதோ! மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

**9.** திருடன் ஒருவனுக்கு அன்னம் அளித்தால், அந்தப்பயன், பெருமைக்குரிய சிவயோகி ஒருவருக்கு அன்னம் அளித்த பயனில் ஓர் எள்ளின் அளவுக்குக் கூட நிகராகாது. அதுபோன்று மற்றைய எந்தக் கடவுளைப் பூசித்தாலும், ஒவ்வோர் உயிரின் இதயக்குகைக்குள் வெளிப்பட்டு இருக்கும் உன்னைப் பூசிப்பதற்கு நிகராகாது. என்றும் நிலைத்திருக்கும் தன்மையில் பெருமை வாய்ந்திருக்கும் மெய்ப்பொருளே! அருள்புரிவாயாக. எங்களின் மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

**10.** எனது உடல், உயிர், உடைமை என்னும் மூன்றையும் ஏற்றுக்கொண்டு உனது அருட்பேற்றுக்குரிய அடியார்க்குச் செய்யும்பணி, அருட்பேறு, வீடுபேறு எனப்படும் மூன்றையும் குறைவற அடியேனுக்குக் கொடுத்தருள்வாய். அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்துள்ள சிவபரம் பொருளே! குகதெய்வமே! மாறாத அன்புக்குச் சொந்தப்பட்டு உரிமையாகியுள்ள தலைமைத் தெய்வமே!

# 25. சருவபூரணசயம்பு

*பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**த**ரணி தன்னிலருள் பெற்று ஞானகதி சாரு யிர்க்குரிய யாக்கையாச்
சாற்று பொம்மையி லுயர்ந்த சுத்தசிவ தத்து வக்கயிறு கட்டியுன்
புரண சத்திநனி யாட்டு விக்குமிது புறம தத்தவர்க ளுணர்விலே
பொருள்ப டுந்தகைமை யாவதோ வொருவர் புகலி னுஞ்செவியு ணுழையுமோ
கரண நந்தலி லிருந்து சுத்தசிவ கரண முற்றவர்க ளறிவரென்
கவலை யத்தனையு நூறி முத்தியருள் காட்டு நல்லகிரு பாளுவே
சரண மென்பவரை யாத ரித்தருள்செய் சாமி யென்பர்குரு சாமியே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (1)

**மே**தை கூறுமுப நிடதம் யாவையினு மேல தாமதர்வ சிகையெனா
மிழற்ற வுள்ளவொரு சுருதி யானதயன் விண்டு ருத்திரர் வலாரியா
ஓதெ லாருமிங னுற்ப விக்கிறவ ரொண்மை யிந்திரிய முழுமையும்
ஓங்கு பூதமொடு தோன்று கின்றன வுரத்த காரணமு மதனையே
வாதை யேதுமிலி யாய்ப்ப டைத்தவனு மல்க வெண்ணுநனு முளனவன்
வழுவு றுஞ்சனன முறுவ தின்றென வழுத்து மக்கடவு ணீயரோ
தாதை யேயுனை விடுத்த மார்க்கிகளுஞ் சாம வேதமுடி வடைவரோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (2)

**மூ**ன்று மூர்த்திகளு ளொருவ னென்றுமொழி யுளவு ருத்திரனுக் குள்ளுளே
முக்கிய சத்துவமும் வெளியி லேதமசு முண்ட கக்கணனுக் குள்ளுளே
ஊன்று தாமசமும் வெளியிற் சத்துவமு மோதி மப்பறவை யூருவோற்
குபய பக்கமு மிராச சத்திறனு முண்டெ னத்தெளி வுரைத்திடும்
ஆன்ற சைவமுறை ஞான சங்கிதையி னணிசி றந்துறு மிரண்டினும்
அரிய காந்தமுறு சூத சங்கிதையி னறைத ரும்பரவிஞ் ஞானநேர்
தான்றெ ரிக்கிடனு மோது மித்தையுணர் தரமி லார்திரிபு சொல்வரே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (3)

---

*1. சயம்பு = சுயம்பு ; ஸ்வயம்பூ – வடசொல்.*

*3. மொழியுள – மொழியவுள்ள என்பதன் சிதைவு.*

*“சத்துவமும் வெளியிலேதமசும்” என்னுங் குணங்குறித்துத் “தோலுயர் தைத்திரியம்” என்றற்றொடக்கத்து 83 – ஆம் பத்து இனிது விளக்கும்; சைவசமய சரபமு நன்கு போதிக்கும்.*

*தமசு = இருள்; இது, திமிரமெனவும்படும். இத்தன்மைத்தே தாமசகுண மென்பது “திமிராந்தம் தாமஸமிதி” என்னுஞ் சாரீரகோபநிஷத் வாக்கியத் தறியக்கிடக்கின்றது.*

*சைவமுறை = சைவபுராணம்.*

*தெரிக்கிடனும் – தெரிக்குமிடனும் என்பதன் சிதைவு.*

**மா**ம யக்கிருளில் சுத்த மாயைதனை வடிவு கொண்டதிரு மேனியாய்
மருவி நின்றரிய வாக மத்தறையு மாறு முக்கரண வழியிலே
காம முற்றவினை யுயிர்கள் கண்ணில்விளை கரும முள்ளபடி யிருவினைக்
கதியை யவ்வுயிர் களுக்கி குத்தினிய கருணை கூர்ந்துபத முத்தியை
ஈமி டற்கடவு ளெனுமு ருத்திரனை யிணையி றன்னுடைய வாணையில்
என்றும் வைத்துமுத லாயி ருக்குமுனை யீர மற்றமத மார்க்கிகள்
தாம தித்துநனி யுய்வ ரோவெனொரு தஞ்ச மானகுக தெய்வமே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (4)

**சா**ர்பி ழந்தமிடி யாது லர்க்குரிய சாலை யாதிநிமிர் கன்னிகா
தான வந்தமுள வெட்டொ டெட்டில்விரி தரும மென்றபசு புண்ணியத்
தேர்பி னின்றுமர னால யப்பணிநொவ் வென்ப தைக்கடியு மூர்த்திமேல்
இடுக யிங்கரிய மாதி பல்வகை யியம்பு நல்லசிவ புணியமே
சீர்சி றந்தவிய னென்மர் கற்றவர்கள் செப்ப வந்தவிரு புணியமுஞ்
செய்யு நல்லவர்க ளுள்ளு ணர்ந்துரிமை சேரு மாறுபுரி யெந்தைநின்
சார்பெ னக்கனிய மாயி னுய்யும்வகை தரணி மேலுமுள தோசொலாய்
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (5)

**ஆ**சை கொண்டுபய புண்ணி யங்களை யயர்ந்த வர்க்கரிய சொர்க்கமும்
ஆச கன்றெழு நிராசை கொண்டவை யயர்ந்த வர்க்கரிய ஞானமே
பேசு கின்றவருண் மேனி கொண்டெழு பிரானை யுங்கருணை சாலுமப்
பிரானின் முன்னிலையில் வீடு மீயுமொரு பெரிய தெய்வமெனு மெந்தைநீ
மாசு கொண்டதமி யேன ரந்தைவலி மாற்றி நல்லருள் கொடாவிடின்
மனமு ணிற்குநசை யெந்த வாறகலு மறுபி றப்பினை யெணுந்தொறுந்
தாச னெஞ்சது கலங்கு கின்றதரு டந்த ணைப்பது புரிந்திடாய்
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (6)

---

*4. வடிவு = வண்ணம்.*

*சுத்தமாயைதனை வடிவுகொண்ட திருமேனியாய் மருவி நிற்பவன், மூவருளொருவனாக இங்குக் கூறப்பட்ட வுருத்திரனையுந் தன தாணைவழி நடாத்துந் தலைமைக்கடவுளாங் குகனேயென்க; "முதலாயிருக்கு முனை" "குகதெய்வமே" என்பன கருதுக. சுத்த மாயை திருமேனி யென்பது இனிது*

*நாட்டப்பட்டிருத்தல் – "தூர்த்தகுண முள்ள விபசாரிநடை" என்றற்றொடக்கத்துக் கடவுள் வணக்கத்துத் திருப்பாட்டுரை படித்துணர்க.*

*5. ஏர்பு = எழுச்சி.*

*"மூர்த்திமேலிடு கயிங்கரியமாதி பல்வகை" என்றமையின், சிவனடியார்க்குச் செய்யும் பணிகளும் பதிபுண்ணியமென இங்குக் கொளக்கிடக்கின்றன. இப்பதிபுண்ணியம், பசுபுண்ணியத்தினும் பயனான் மேம்பட்டதாகலின் அது "சீர்சிறந்த வியன்" எனப்பட்டது. இவ் வகையினை யிக்காலத்து மாந்தருட் சிலர், பலர் உணராது பசு புண்ணியமே விரும்புகின்றனர். பதிபுண்ணியஞ் சிவபுண்ணிய மெனப் பட்டது.*

**வ**ருண மெச்சுந லொழுக்க முண்மையெனும் வாய்மை யெவ்வுயி ரிடத்தினும்
வைக்கு நற்கிருபை யாக மஞ்சுருதி வழியி னிற்குநடை யுன்கணே
கருது மன்புணர் வொருங்கு பட்டுநிமிர் காசில் சீலம்விர தாதிசேர்
கரும மாயதவ நல்லொ ழுக்குடையர் கண்டு நல்குமுயர் தானமெப்
பொருளி னும்பிரிய வீன மென்னுமொரு புரையு மற்றதுற வென்பன
பூமி யின்கணுடை யுத்த மர்க்குரிய பொருளை யீயுமருள் வள்ளலே
தரும மேதுமறி யாத வெற்குனது தஞ்ச மன்றிவழி யுள்ளதோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (7)

**கு**லந்த வந்திரு மிகுந்த கல்விகள் குறித்தெ ழும்பல செருக்கினைக்
கொல்ல டக்கமு முயர்ந்த வர்க்கினிமை கொள்ளு நட்புமுப சாரமும்
அலங்கல் பொய்த்தபெரி யார்த்தொ ழுந்தெருளு மந்த மாகநுதி செய்தலும்
அன்பு வந்தனை செயற்கு ரித்துளரை யஞ்ச லித்தலுமெய் யாகமஞ்
சொலுந்து றைப்படி யுனைப்ப ழிச்சியொரு சோர்வ றத்தொழுத லாற்றலுஞ்
சொந்த மாகவுறு முத்த மர்க்குரிய சுபம ளித்தருளும் வள்ளலே
சலஞ்சி காதமன முடைய வெற்குனது தஞ்ச மன்றிவழி யுள்ளதோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (8)

**ஏ**த மற்றமுறை பன்னு தாவரம தென்னு மூர்த்தியொடு சங்கமம்
என்ற தாசரையு மஞ்ச லித்துநய னேற்க வேண்டுமென லுஞ்சிவத்
தாத ரச்சுகுண தாச ரைச்சிறிது மவம திக்கிலஙன் மூர்த்தியின்
அதிவ ணக்கமும் வியர்த்த மாமெனலு மாக மச்சமத மாகலின்
தோத கக்கழு தகந்தை தாமினிய தொண்டர் நம்மினுய ராரெனச்
சூழி னேத்துபர மூர்த்தி யுந்தொகு துருக்க வன்கலென வாமெனாச்
சாத முற்றவ ருணர்ந்து கொள்வரிது தாவு ளோர்மனசி லேறுமோ
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (9)

**இ**தய மென்றவிட னாத்து மாவையரு ளிறைவ னூன்மெயுரை கொண்டறா
திகலு மாயையி னுபாதி போக்கியெவ ரேச றத்தெரிந ரோவவர்க்
குதய மாகுமதி யின்ப மென்றுகரு துரைசெய் தார்களது சங்கையில்
உறுதி யென்றுபல சீடரும்பொரு ளுரைத்த வாவுமதர் நின்றனர்
முதியர் மெச்சுமொரு நீல கண்டர்நனி முன்னு மவ்விதய வெளியிலே
முதல ருட்சிவனை யறித லின்பென மொழிந்து நின்றனரிம் மாணெறி
சதத முந்தமிய னுறவெ ணாயருண சயில நாதர்பிர மணியமே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரண சயம்புவே. (10)

---

*8. அலங்கல் = அசைவு.*

*9. வியர்த்தம் – 'வ்யர்த்தம்' என்னும் வடமொழி விகாரம்; பயனின்மை யெனும் பொருட்டு.*
*தோதகம் = வஞ்சகம்; இச்சொல் "தோதகப்பெரும் பயோதரத்தியங்கு" என்னுந் திருப்புகழ்த் தொடரில் வருதலுங்காண்க.*

# 25. சருவபூரணசயம்பு

1. இந்நிலவுலகில் அருள்பேறு பெற்று ஞானகதியை அடையும் பொருட்டு உயிர்க்குப் பொருத்தமான உடல் எனப்படும் பொம்மையில், உயர்ந்த, தூய்மையான சிவதத்துவம் எனும் கயிற்றைக்கட்டி உனது ஒளிவிளக்கம் மிகுந்ததும் நிறைவுடையதுமான சக்தியானது ஆட்டுவிக்கும். இந்நுட்பக் கருத்து, புறமதத்தவர்களின் அறிவுக்கும் உணர்வுக்கும் புலனாகும் தன்மை உடையதோ ? ஒருவர் முறையாக எடுத்துரைத்து விளக்கினாலும் அவர்கள் காதில் விழுமோ ? சீவகரணங்களின் செயற்பாட்டிலிருந்து நீங்கி, தூய்மையான சிவகரணம் வாய்க்கப் பெற்றுள்ள ஞானியர்களே இந்நுட்பத்தை அறிவர். என் கவலைகள் அத்தனையையும் அழித்து, முத்திப்பேற்றுக்குரிய அருளைக்காட்டும் கருணைமயமான வடிவினனே ! ‘‘சுவாமியே, நீயே தஞ்சம் என்று அடைவோரை ஆதரித்து அருள்செய்" என வேண்டிக்கொள்ளும் அடியார்களுக்குரிய குருபரனே ! நிலைத்து விளங்குவதாகிய தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும், அனைத்திலும் உள்ளும் புறம்புமாக வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப்பொருளே !

2. ஞான சாரமயமான நுட்பங்களை விளக்கும் உபநிடதங்கள் அனைத்தினும் மேன்மை வாய்ந்ததாகத் திகழும்அதர்வசிகை எனப்படும் உபநிடதம் "திருமால், உருத்திரன், இந்திரன் முதலாக உரைக்கப்படும் அனைவரும் ஒருகாலத்தில் தோன்றுபவர்கள்; அறிவுவிளக்கத்துக்குத் துணைசெய்யும் இந்திரியங்கள் அனைத்தும் பூதங்களோடு ஒருகாலத்தில் தோன்றுபவை. தோன்றும் அனைத்துக்கும் வலிமைமிக்க காரணமாக விளங்குவது எதுவோ அதனையும் எவ்விதப் பிரயாசையும் இன்றித் தோற்றுவித்தவனும், படைக்கப்பட்ட அனைத்தும் வளம்பெறும் வகையில் திருவுள்ளம் கொள்பவனும் ஆகிய ஒருவன் உண்டு. அவன் மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருவதாகிய பிறப்பையும் இறப்பையும் பொருந்துவதில்லை’’ எனத் தெளிவாக உறுதிபடக் கூறும். இவ்வாறு அந்த உபநிடதம் உறுதிபட உணர்த்தும் ஆதிகாரண முழுமுதற் கடவுள் நீயே அன்றோ ! தந்தையே ! உன்னைப் புறக்கணிக்கும் வேறு நெறிகளில் செல்வோர்கள் சாமவேத முடிவாகிய தகரோபாசனைப் பேற்றையும் தத்துவமசி எனும் மகாவாக்கிய அனுபவத்தையும் பெறுவார்களோ ? நிலைத்துவிளங்கும் தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும் அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே !

3. ‘‘மும்மூர்த்திகளுள் ஒருவன் என உரைக்கப்படும் ருத்திரன் அகத்தே சத்துவகுணமும் புறத்தே தாமச குணமும் உடையவன்; தாமரைக் கண்ணனாகிய திருமால் அகத்தே தாமச குணமும் புறத்தே சத்துவ குணமும் உடையவன். அன்ன வாகனனாகிய பிரம்மன் உள்ளும் புறம்பும் ராசத குணம் பொருந்தப் பெற்றவன் – இவ்வாறு ஞான நுட்பங்களைத் தெளிவுபடக் கூறும் சைவமகா புராணத்தின் ஞானசம்மிதையின் இரண்டாவது படலத்திலும், கந்தபுராணத்தைச் சார்ந்ததான சூதசம்மிதை பரவிஞ்ஞான நன்னெறி முடிவைக் கூறும் இடத்திலும் மிகத் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது. இந்த நுட்பத்தை உணரும் ஆற்றல் இல்லாதார், இக்கருத்தைத் திரிவு படுத்தி ’ருத்திரன் தாமச குணம் உடையவன்’ என்றெல்லாம் உண்மைக்குப் புறம்பாக உரைப்பார்கள். நிலைத்துவிளங்கும் தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும் அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே !

**4.** பெரிய அளவில் எழும் விபரீத உணர்வு, அறியாமை இருள் ஆகியவற்றின் தொடர்பு ஒருசிறிதும் இல்லாததான சுத்தமாயையால் உருவாகும் வடிவத்தையே தன் திருமேனியாகக் கொண்டுள்ளது முழுமுதற்கடவுள். ஆகமநூல்களில் கூறப்பட்டுள்ளவாறு மனத்தாலும் வாக்காலும் உடம்பாலும் பொருந்தும் வினைப்பயன்களை அனுபவித்தற்குரிய உயிர்களுக்கு, அவ்வவ் வினைப்பயனை அனுசரித்து நல்வினைப்பயன், தீவினைப்பயன் ஆகிய இரண்டையும் உயிர்களுக்கு அருத்தி, கருணைகூர்ந்து, பதமுத்திப் பேற்றை வழங்கி அருளும் ஆற்றல் சான்ற ருத்திரப்பெருமானைத் தனது இணையற்ற அருளாணைப்படி நடத்திவைப்பது முழுமுதற்கடவுள். இத்தகைய முழுமுதற்கடவுளாக விளங்கும் உன்னை, சாரமான உண்மைப் பொருளை கிரகித்துக் கொள்ள மாட்டாமல் வறண்ட உள்ளம் கொண்டுள்ள ஏனைய மதநெறியினர் உள்ளவாறு நன்குணர்ந்து போற்றி உய்தி பெறுவார்களோ? எனக்கென உள்ள ஒப்பற்ற தஞ்சமே! குகதெய்வமே! நிலைத்து விளங்குவதாகிய தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும், அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமாகிய சுயம்புப் பொருளே!

**5.** ஆதரவு ஏதுமற்ற வறுமையாளர்க்காக அன்ன சத்திரம் அமைத்தல் முதலாக, உயர்ந்த கன்னிகாதானம் ஈறாகச் சொல்லப்படும் முப்பத்திரண்டு வகைப்பட்ட அறச்செயல்கள் அனைத்தும் பசுபுண்ணியம் எனப்படும். இந்தப் பசுபுண்ணியத்து எழுச்சிமிக்க பயனைக் காட்டிலும் சிவாலயப்பணி, பிறவிப்பிணியைத் தீர்க்கும் சிவனடியார்க்குச் செய்யும்பணி என்பன முதலாகச் சொல்லப்பட்ட சிவபுண்ணியப்பயன் பன்மடங்கு சீரும் சிறப்பும் வாய்ந்தது. சிவபுண்ணியமாகிய பதிபுண்ணியமே உயர்ச்சி வாய்ந்த புண்ணிய விசாலம். இவ்வாறு ஞானப்பெரியோர் கூறுவர். இவ்வாறு கூற உள்ள இருவகைப் புண்ணியங்களையும் செய்வோர்களின் நோக்கம் அறிந்து, அவற்றுக்குரிய பயனை அனுபவிக்குமாறு செய்யும் எந்தையாகிய உனது திருவருள்துணை எனக்கு அன்னியமாக விளங்குமாயின், நான் இந்தப் பூமியில் உய்யும் வகை வேறு உளதோ சொல் ! நிலைத்துள்ளதாகிய தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும்அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே!

**6.** ஆர்வத்துடன் பசுபுண்ணியம், பதிபுண்ணியம் ஆகிய இரண்டையும் செய்தவர்க்கு, கிடைப்பதற்கரிய சுவர்க்க லோக அனுபவத்தையும், குற்றமறத் தோன்றும் நிராசை உணர்வுடன் (பயனில் பற்றற்று நிஷ்காமியமாக) அவற்றைச் செய்தவர்க்கு, அரிய பெரிய ஞானநூல்கள் விவரித்துக் கூறும் அருள்மேனி கொண்டு தோன்றும் பிரானையும் (சாரூப நிலையையும்), கருணைமிகுந்த அவனது சிதாகாசமயமான சன்னிதானத்தில் பொலிவுடன் விளங்கும் வீடுபேற்றையும் (சாயுச்சிய நிலையையும்) தந்தருளும் பெரிய தெய்வம் நீ. எந்தையாகிய நீ, பல்வகைக் குறைபாடுகளைக் கொண்டிருக்கும் எனது துன்பங்களின் மிகுதியான சுமையை விலக்கி நல்லருள் புரியவில்லை எனில், எனது உள்ளத்தே எழுந்துள்ள சாயுச்சிய வேட்கை எவ்வாறு நிறைவுறும்? இதனைப் பெறாமல் நான் மறுபிறவியை அடைவேன் எனில், அம்மறுபிறவியை எண்ணும் தோறும் அடியனேன் நெஞ்சம் கலக்கம் அடைகின்றது. கருணை புரிந்து என்னை அணைத்துக் கொண்டு அருள். நிலைத்ததான தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும் அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே!

**7.** குலமரபுக்கேற்ற நல்ல ஒழுகலாறுகள், உண்மைநெறி நிற்றல், எல்லா உயிர்களிடத்தும் காட்டும் தயை, வேத ஆகமங்கள் கூறும் நெறியில் உறுதியாக நிற்றல், பொதுநீக்கி உன்னையே கருதும் உறுதியான அன்பு, ஒருமுகப்பட்ட மனத்துடன் ஐக்கிய பாவனை கொள்ளும் உயர்ந்த சீலம். விரதம் முதலான தவ ஒழுக்கச் செயல்களை மேற்கொண்டுள்ள பெரியோர்களுக்குத் தானம் இடல், எப்பொருளிடத்தும் யாவரிடத்தும் பற்றோ பகையோ, விழைவோ, வெறுப்போ கொள்ளாது இருத்தலாகிய குற்றமற்ற துறவொழுக்கம் ஆகிய இவற்றை இவ்வுலகில் மேற்கொண்டுள்ள உத்தமப் பெரியோர்க்குரிய பொருளை வழங்கும் அருள்வள்ளலே! ஒரு தருமநெறியும் அறியாத எனக்கு உனது அடைக்கலம் அன்றி வேறுவழி உண்டோ? நிலைத்துள்ளதான தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும், அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே!

**8.** குலம், தவம், செல்வம், மேம்பட்ட கல்வி – ஆகியவை தொடர்பாக எழும் பல்வகைச் செருக்கைக் கொல்வதாகிய அடக்க உணர்வு, உயர்வு பொருந்திய பெரியோர்களிடம் இனிமையான நட்புணர்வு கொண்டு அவர்களுக்கு உபகாரமும் சேவையும் செய்தல், சஞ்சல மனத்தை ஒழித்துவிட்ட பெரியோர்களைத் தொழும் தெளிவான உணர்வு, அவர்களை அடக்க உணர்வுடன் துதித்தல், அன்புவந்தனை செய்யத் தகுதி பெற்றுள்ள சீலர்களைக் கைகுவித்து வணங்கல், ஆகமநூல் கூறும் நெறிமுறைப்படி உன்னை போற்றி, ஆன்மச் சோர்வெலாம் நீங்கும் வகையில் தொழும் ஆற்றல் – ஆகிய அரும்பெரும் நடைமுறைகளைத் தமக்குச் சொந்தப்படுத்திக் கொண்டுள்ள உத்தமர்களுக்கு வேண்டிய சௌபாக்கியப் பேறுகளை அளித்தருளும் வள்ளலே! வஞ்சனை ஒருசிறிதும் அகலாத மனமுடைய எனக்கு உனது திருவடியே தஞ்சமல்லாமல் வேறு வழி உண்டோ? நிலைத்துள்ளதான தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும், அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே!

**9.** குற்றமற்ற சாத்திரங்கள் வகைப்படுத்திக் கூறும் முறையில் அசையாமல் பிரதிட்டை செய்யப்படும் தெய்வ வடிவத்தையும், நடமாடும் தெய்வ வடிவங்களாக உள்ள அடியார்களையும் வழிபட்டு நற்பயனைப் பெற வேண்டும் என்று கூறுதலும் – சிவனடியார், நற்குணப் பேறுடைய அடியார்களை ஒரு சிறிது அவமதித்தாலும் அவர்கள் செய்யும் தெய்வ (மூர்த்தி) வழிபாடும் பயனற்றுப் போய்விடும் என்று கூறுதலும் ஆகம நூல்களில் உடன்பட்டு உறுதிசெய்யப்பட்டுள்ளவையே. உண்மை இங்ஙனம் இருக்க, வஞ்சகம், பேய்த்தன்மை, அகந்தை முதலான இழிகுணங்களுக்கு இடம் கொடுத்துள்ளோர் "இந்த அடியார்கள் நம்மைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக ஆகமாட்டார்கள்' என எண்ணுவார்களாயின் அவர்களால் வணங்கப்படும் மேலான தெய்வ வடிவமும் வன்மையும் கடினமும் கொண்டுள்ள வெறும் கல் எனவே ஆகிவிடும். இந்த உண்மையைத் தெளிவான உணர்வுடையோர் நன்கு உணர்ந்து கொள்வார்கள். நீங்காத பிறவித் துன்பத்தில் சிக்குண்டுள்ளோரின் மனத்தில் இந்த உண்மைக்கருத்து பதியுமோ? நிலைத்துள்ளதான தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும் அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே!

**10.** அருள்மயமான இறைவன் அருளியுள்ள வேத ஆகம வசனங்களின் உட்கருத்தை உணர்ந்து கொண்டு, இதயத்தாமரையுள், வேறுபாட்டு உணர்வுக்கு இடம் கொடுப்பதாகிய மாயையின் காரணமாகத் தோன்றும் உபாதிகளைப் போக்கி, எவர்கள் ஆத்மாவின் இருப்பையும்

இயல்பையும் முழுமையாக உணர்கின்றார்களோ அவர்களுக்கே சிவ ஞானமயமான ஆனந்தப் பேறு உண்டாகும் என்று தியான பாவனைக் குரிய உரைகளை முன்னோர் கூறியுள்ளனர். அது ஐயத்துக்கு இடம் இல்லாத மெய் உறுதி உரை என்று சீடர்கள் பலரும் அவ்வாறே அவ்வசனங்களுக்குப் பொருள்கூறி, ஞானியர் விரும்பும் நல்வழியில் நின்றனர். அறிவிற்சிறந்த பெரியோர் போற்றுகின்ற நீலகண்ட சிவாசாரியாரும் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் "அந்த இதயவெளியில் முழுமுதற் பொருளாகிய சிவனை அறிதலே ஆனந்தமாம்" என உரைத்து அருளினர். இந்த மாட்சிமைப்பட்ட தகரோபாசனை நெறியில் எப்பொழுதும் அடியேனும் நிற்க நீ திருவுளம் கொள்வாயாக. அருணகிரிப் பெருமானின் வந்தனைக்குரிய சுப்பிரமணியப் பரம்பொருளே! நிலைத்துள்ளதான தகராலயம் எனப்படும் இதயச் சிறுவெளியில் விளங்குவதும் அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்து நிறைந்துள்ளதுமான சுயம்புப் பொருளே!

---

# 26. பரம்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பொ**ன்னுலகர் மண்ணுலகர் கிம்புருடர் பம்பதியர் பூதமொடி யக்கர் முனைவர்
கின்னரர்பி சாசர்பிசி தாசனர்நி சாசரர்கெ ழூஉவரவர் சித்தர் கருடர்
மின்னழகு விஞ்சையர்விண் வாசிகளெ னாவகைவி ளம்பரிய பல்லு யிர்களின்
மன்னவவெ னக்கருள்வ ழங்கியரு ளெங்குநிறை மாகருணை கொண்ட பரமே.
(1)

**சி**ந்துவைய னந்தநதி சேருவது போற்பல திறப்படு மதத்த வர்களும்
அந்தவொரு தேவையடை வாரென வதிர்ப்பதமை யாதுநதி யாவுமொரு பேர்
சொந்தமொடு மேவியுறல் போனவைக ளென்பன துறந்தசிவ ஞானியெனும் வாய்
வந்தவர்சி வத்தையடை வாரெனை யணைத்தருள்செய் மாகருணை கொண்ட பரமே.
(2)

**எ**ண்மையுல காயதர்பெணாசைமலி சாருவக ரென்பவர்கள் வாயு பதமும்
வெண்மைகெழு சோதிட ருடுப்பதமு மாதவனை வேண்டுபவர் பானு பதமும்
ஒண்மைவிது வாதிக ளதன்பதமு மங்கியினை யோம்புபவர் தேயு பதமும்
வண்மையொடு சேர்வரென வேபனுவல் கூறுமெனுண் மல்குமதி தந்த பரமே.
(3)

**மா**மறை விருத்தமுறு கொள்கையத னாலசுசி வாமரொடி யாமளருமே
தாமதம தார்கௌள ரென்பவரும் வண்மைகிளர் தட்சிணக ளாமு கருமே
மீமருவு வண்டுறு பிசாசபத மெய்தியிடன் மெய்யென மிழற்று முதுநூல்
தோமற வெனக்கருள்பு ரிந்துகொளு மன்புடைய சுத்தசிவ மான பரமே. (4)

---

*1. பம்பதியர் = நக்ஷத்திர பதவியினர்; பம் = நக்ஷத்திரம். கெழுவுதல் = பற்று; ழகரவெதுகை. அரவர் = உரகர்.*

*3. சாருவகர் – சாருவாகர்.*
*விதுவாதிகள் = சந்திரவாதிகள்; தத்தங் கொள்கைகளை நிறுத்திப் பேசுவோர் 'வாதிகள்' எனப்படுவர்.*

*4. களாமுகர் – காளாமுகர்; இவர்மதம், சடை எலும்பணிதன் முதலிய கொள்கைத்து என்ப.*
*மீமருவல் = ஆகாயத்தைப் பொருந்துதல்.*

**ஏ**ர்மிருதி வட்டையின டப்பவர்கள் கன்மநெறி யேற்றமென நிற்கு நடையர்
சார்மிக விளங்குபிர மாண்டமுத லென்றுயர்வு சாற்றிடுதன் மாத்திரை யுமால்
நீர்மைமிகு மிந்திரிய வாதிக ளதன்பதமு நேயமுட னெய்துவ ரெனாச்
சீர்மிக வணைந்தமுது நூனுவலு மென்னளி சிறந்தணைய னந்த பரமே. (5)

**செ**த்துறு நியாயமத வட்டையர் மனத்தையும்வை சேடிக ரகந்தை தனையும்
புத்தருறு புத்தியையு மாருகத ரங்குண புடத்தையு மிகுந்த புரிவான்
மத்தமுறு மைந்திரவு நூனடையர் மாலுடை மகானெனுமொர் மாயை யினையுஞ்
சித்திபெறு வாரென மிழற்றுமுது நூலெனது தெய்வமென வந்த பரமே. (6)

**வா**லருளில் சாங்கியர் பதஞ்சலியி னூனெறியர் மாயைகொள் விவர்த்த முடிவுக்
கோலநெறி யோர்புருட தத்துவமு மாவிரதர் கோணையறு வித்தை யினையும்
மாலணவு பாசுபதர் மாவசுசி மாயையு மரித்தபி னடுப்ப ரெனவே
நூலறையு மென்னறி விருந்தறிவ தாவிரியு நூனமி லதீத பரமே. (7)

**அ**ன்புறு கபாலிக ளசுத்தமுறு மாயையி னதோபுடமு மாசண வுறா
நன்கணவு வாமமத தந்திரர்கள் சத்தியையு நாரநிமிர் சைவ ரெவரும்
இன்பென மதித்தமுறை யாகநறு மாயைநிலை யேயொரு சிவத்து வமுமே
புன்கணற வெய்துவ ரெனும்பழைய நூனனி புரந்தெனை யளாவு பரமே. (8)

**செ**ப்பிய மதத்தவர்க ளவ்வவெலை காணினவை சேருவ ரலா ரடைகிலார்
அப்படி யடைந்தகதி சத்திய மிலாதயன மண்ணபர முத்தி யுணர்வாம்
முப்பதுமொ ராறுமிறை யன்றென வறிந்துதளி மூலமல முந்தளி யுனைத்
துப்புட னளாவுபர முத்திபெறு வாரருள் சுரந்தணவு வார்கள் பரமே. (9)

**த**த்துவம் விளக்குமத மத்தனையு முற்றசிவ தத்துவமொ ரைந்து மறையா
அத்தனரு ணூலறையு மாதலி னெலாருமவை யண்ணவத ரின்றி ழிவரால்
சித்தருள் விளக்கமுடனைந்தினு முயர்ந்துறுமொர் சித்தமுத முத்தி தருவாய்
முத்தனனு பூதிமுறை தந்தவனை யாளுமருண் மூலகுக கந்த பரமே. (10)

---

*6. நியாயமதவட்டையர் செத்து உறுமனத்தையும் எனக்கூட்டுக.*

*நியாயம் = தருக்கநூல்.*

*வட்டை = வழி.*

*7. கோணையறு வித்தை = அழிவுடைய வித்தை = சிறப்பில்லாத வித்தை. இஃது அசுத்த மாயையிலுள்ள வித்தியாதத்துவம். இதனைக் கதியாக வடையும் மாவிரதிகள், சடை எலும்பு தரித்தன் முதலிய கொள்கையினையுடைய ரென்ப. இம்மத நூலும், அடியில் வரு பாசுபத கபாலிக நூல்களும் போந்த வித்தை மாயை கால மென்னுந் தத்துவங்களில் வைகிய 3 – உருத்திரராற் சொல்லப்பட்டமையால் அம்மதத்தவர் அத்தத்துவங்களையே கதியாயடைபவராயினா ரென்ப. மற்றை வாதிகளும் அவரவர் நிறுவிக்கூறு முடிவு, எவ்வெத் தத்துவஞ் சார்கின்றதோ அதனை அதனையே கதியாக அடைவரென்பது இங்ஙனுணர்த்திய வாற்றானேயே அறியக்கிடக்கின்றது.*

*8. நறுமாயை = சுத்தமாயை.*

# 26. பரம்

**1.** தேவ லோகத்தினர், நில உலகத்தினர், கிம்புருடர், நக்ஷத்திர புவனங்களில் வாழ்வோர், பூதங்கள், இயக்கர்கள், இருடிகள், கின்னரர், பைசாசர், ராக்ஷஸர்கள், அரக்கர்கள், நாகர்கள், சித்தர்கள், கருடர்கள், வித்யாதரர்கள், ககனவாசிகள்–எனச் சொல்லப்படும் பல்வகைப்பட்ட ஆன்மவர்க்கத்தினர்க்குரிய தெய்வ அரசே! எங்கும் வியாபித்துப் பெருங்கருணை கொண்டுள்ள பரம்பொருளே! எனக்கு நினது பரிபூரண கிருபையை வழங்கியருள்.

**2.** என்னை அணைத்து அருள்செய்யும் பெருங்கருணை கொண்டுள்ள பரம்பொருளே! சமுத்திரத்தைப் பலநதிகளும் சேர்ந்து இரண்டறக் கலந்து விளங்குதல் போன்று, பலதிறப்பட்ட சமயநெறிகளில் உள்ளவர்களும், அதீதமான அந்தப் பரதெய்வத்தை அடைந்து விளங்குவார்கள் எனப் பொதுமைப்படுத்திக் கூறுவது பொருந்தாது. ஒவ்வொரு நதியும் தனக்கென ஒரு பெயரொடு பொருந்தி விளங்குதல் போன்று ஒவ்வொருமதமும் ஒரு சிறப்புப் பெயருடன் பொருந்தியுள்ளது. கடலின் ஒவ்வொருபகுதியை ஒவ்வொரு நதியும் அடைதல் போன்று ஒவ்வொரு சமயநெறியினரும் ஒரு குறிப்பிட்ட முத்தி நிலையை அடைகின்றனர். பந்தங்களாகிய அனைத்திலிருந்தும் நீங்கி, உண்மைத் தெளிவு வரப் பெற்றோர்களாகிய சிவஞானிகளே, மேலான சிவபரம் பொருளை அடைவார்கள்.

**3.** என்னுள் பெருகிவரும் ஞானப்பேற்றைத் தந்த பரம்பொருளே! "எளிமைப்பட்டுள்ள உலகாயதரும், பெண்ணாசையையே பெரிதும் கொண்டுள்ள சாருவாக மதத்தினரும் வாயுபதத்தை அடைவார்கள்; புறஞானம் மட்டும் பெற்றுள்ள சோதிடர் நக்ஷத்திர புவனத்தை அடைவர்; சூரிய மதத்தினர் சூரிய பதத்தையும், ஒளித்தொடர்புடைய சந்திர மதத்தினர் சந்திரபதத்தையும், அக்னிகாரியம் செய்வோர் தேயுபுதத்தையும் முழுமையாகச் சேர்வர்' என, முதல்நூல்கள் கூறும்.

**4.** "பெரிய வேதநெறிக்கு மாறுபட்டனவாக உள்ள கோட்பாடுகள் காரணமாகத் தூய்மையற்றுள்ள வாமாசார நெறியினரும், யாமள மதத்தினரும் தாமச குணம் மிகுந்துள்ள கௌளரும், தக்ஷிணாசார மரபினரும் காளாமுகர்களும் பூத ஆகாச பதத்தைப் பொருந்தி விளங்கும் பிசாச பதத்தைப் பொருந்துவர்; இது உண்மையே'' என முதுநூல்களாகிய வேதாகமங்கள் கூறும். எனது குற்றங்கள் அனைத்தும் அகல எனக்கு அருள்புரிந்து ஆட்கொள்ளும் அன்புள்ளம் கொண்டுள்ள சுத்த சிவமான பரம்பொருளே!

**5.** மிருதிநூல் வழி நடப்பவர்கள், வேள்வி செய்தல் முதலான கன்மநெறியே சிறப்புடையது எனக்கருதி அந்நெறிநிற்போர், தத்துவத்தைச் சார்ந்து பெரிதுபட்டு விளங்கும் பிரம்மாண்டத்திற்கு முதற்காரணம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் தன் மாத்திரைப் பதத்தைப் பெறுவர் என்றும் இந்திரியப் பிரம்ம வாதிகள் இந்திரியத் தொடர்புடைய பதத்தைப் பெறுவர் என்றும், மிகவும் சிறப்பு பொருந்திய முதியநூல்களாகிய வேதாகமங்கள் கூறும். என்னைப் பரநிலைக்கு உயர்த்த உள்ள பரம் பொருளே! அருள்மிகப் பொங்கிச் சிறப்புநிலையில் அணைத்தருளும் முடிவற்ற பரம் பொருளே!

**6.** கருத்துவளத்தை உடைய நையாயிக நெறியினர் மன–தத்துவ பதத்தையும், வைசேடிகர் அகந்தைத் தத்துவ பதத்தையும், புத்தர்கள் புத்தி தத்துவப் பதத்தையும் ஆருகதர் குணதத்துவம் சார்ந்துள்ள பதத்தையும், மிகுந்த ஆரவாரமும் களிப்பும் கொள்ளும் பாஞ்சராத்திர நூல் நெறியினர், பெருமானாகிய திருமாலுக்குரிய மாயை நிலையையும், இவ்வாறு தத்தமக்குச் சித்தித்துள்ள நிலையைப் பெறுவர் என முதியநூல்கள் உரைக்கும். எனது முழுமுதல் தெய்வம் என வெளிப்பட்டுள்ள பரம்பொருளே!

**7.** தூய அருட்பேறு இல்லாத சாங்கியர், பாதஞ்ஜல யோக நெறியினர், மாயைத் தொடர்புடைய விவர்த்த வாதக் கொள்கையினர் ஆகியோர் புருடதத்துவ பதத்தையும், மாவிரதர் என்போர் அசுத்தமாயை தொடர்பான வித்யா தத்துவ பதத்தையும், மயக்க உணர்வுடைய பாசுபதர் அசுத்தமாயைப் பதத்தையும், இறந்தபின் பொருந்துவார்கள் என முதிய நூல்கள் கூறும். என் சிற்றறிவின் கண் வெளிப்பட்டுப் பேரறிவாக விரிந்துள்ளதும், குறைநிலை ஏதும் பொருந்தாததுமான, தத்துவ அதீதமான பரம்பொருளே!

**8.** அன்புநெறிப்பட்ட காபாலிகள் அசுத்தமாயையின் கீழ்ப்பகுதியையும், குற்றம்ஏதும் பொருந்தப் பெறாமல் நன்மைகளே பொருந்தப் பெற்றுள்ள வாம தந்திர நெறியினர் சக்திதத்துவப் பதத்தையும், அன்பு மிகுதியும் உடைய சைவப்பிரிவினர் அனைவரும் இன்பநிலைக்கு உரியது என முறையாகக் கருதப்படும் சிவதத்துவ பதத்தையும் எவ்வித இடர்ப்பாடும் இன்றி அடைவார்கள் எனப் பழைய நூல்கள் கூறும். மிகுதியாக அருள்புரிந்து என்னைக் காத்து என்னுடன் இரண்டறக் கலக்கத் திருவுளம் கொண்டுள்ள பரம்பொருளே!

**9.** கூறப்பட்ட பல்வேறு மதநெறிப்பட்டவர்களும் அந்த அந்தத் தத்துவத் தொடர்பான நுட்பங்கள் செயற்பாடுகள் ஆகியவற்றின் இயல்பை உள்ளவாறு அறிந்தால் மட்டுமே அந்த அந்தப் பதநிலையைப் பெறமுடியும். அவ்வாறு அறியாதார் அடைய மாட்டார். அவர்கள் அடையும் முத்திப்பதமும் நிலையாக இருப்பதன்று. மீண்டும் பிறவியைக் கொடுக்க உள்ள அபரமுத்திக்குரிய தத்துவநிலையே அது. அருள் உணர்வு மிகப்பெற்று அதீத நிலையை உணர்ந்து சார்பவர்களே, முப்பத்தாறு தத்துவங்களும் இறைவன் அல்ல என்று அறிந்து அவற்றை நீத்து, மூலமல பந்தத்தையும் நீக்கி, சிவத் தூய்மை பெற்று உன்னுடன் இரண்டறக் கலந்து இருத்தலாகிய பரமுத்திப் பேற்றை அடைவார்கள். இவ்வாறு பரமுத்திப் பேற்றைப் பெற உரியார்க்கு வாய்த்துள்ள பரம்பொருளே! அருள்புரிக.

**10.** தத்துவநிலைகள் விளக்கும் மதநெறிகள் அத்தனையையும் தனக்குள் அடக்கிக் கொண்டு சிவதத்துவம் எனப்படும் ஐந்தையும் மறைபொருளாக, முழுமுதல் தலைவன் அருளிய ஆகமநூல்கள் கூறுகின்றன. இந்நுட்பத்தை உணர்தல் அரியது ஆதலின் எல்லா மதநெறியினரும், பொருத்தமான வழிதெரியாமல் இழிநிலைப்படுவோராக உள்ளனர். சித்திப் பேறு மிக்க அருள்விளக்கமுடன் ஐந்தினும் உயர்ந்து பொருந்தியுள்ள சிதாகாச அமிர்த முத்திப் பேற்றைத் தருவாயாக. முத்தனும், அனுபூதி வேதத் துதிப்பாட்டை அருளியவனுமான அருணகிரிப் பெருமானை ஆட்கொண்டருளும் அருள்மயமான மூலப்பொருளே!

குகனே! கந்தனே! பரம்பொருளே!

# 27. அயலாவதுமென்னே

*கலிவிருத்தம்.*

**சீ**ரிய வந்தணர் சிந்தையி னுள்கோர்
காரிய நன்னெறி காதன்ம லிந்துன்
பேரிய வெற்கும் வழங்கிய பின்னென்
ஆரிய வின்றய லாவது மென்னே. (1)

**ச**த்திய மேயுரை யென்றருள் சாரும்
புத்தி யுரைத்து மறைந்து புலங்கூர்
நித்திய வன்பி னிறீஇய பின்னென்
அத்த வெனக்கய லாவது மென்னே. (2)

**பீ**தி விளிந்து பெருந்தெரு ளூற்றோர்
கோதி லரும்பொறி கோட லெனக்கன்
றோதிய பின்பெனை யுண்குக னாமென்
ஆதி யெனக்கய லாவது மென்னே. (3)

**ம**மதை யவித்தருண் மல்கி விளங்கோர்
நிமல நெறிக்குறி நீட்டிய பின்றைப்
பிமர மறுப்பர் பிரானெனு மென்னார்
அமல வெனக்கய லாவது மென்னே. (4)

**மெ**ய்யென வுள்ளி விழைந்த வனைத்தும்
பொய்யென வுள்ளி யிகந்து புணர்ந்தே
உய்யும் வரம்பை யுகந்த பினேயென்
ஐய வெனக்கய லாவது மென்னே. (5)

**எ**ன்புரி வுன்புரி வென்று தெரிந்தாள்
உன்புரி வென்புரி வென்ப துணர்ந்தும்
இன்பரு ணன்னடை யென்ப தணைந்தும்
அன்பர வின்றய லாவது மென்னே. (6)

---

*2. சத்தியத்தையே சொல்வாயாக வென்று தெய்வங் கட்டளையிட்டருளிய திதன்கண் வெளிப்படல் கவனிக்கற்பால தாகலின், இந்நூலாசிரியர் பாடல்கள் சத்தியமே சாற்று மென்க.*

*4. பிரமரம் 'பிமரம்' என மரீஇயிற்று; பிரமரம் = அசைவு.*

*6. புரிவு = அன்பு. 7. அலர் = நீர்.*

**எ**ண்ணிடு மெண்ண மறிந்தரு ளின்பை
நண்ணி யிருந்து நறும்பய நாரால்
கண்ணொழு கும்மலர் கண்ட பினேயென்
அண்ண வெனக்கய லாவது மென்னே. (7)

**கோ**ளரி யத்தி குலைந்திற மோதா
மூளை புசித்த லுறழ்ந்திருண் மோதும்
வாளருள் வட்டை வழங்கிய பின்னே
ஆளிறை யெற்கய லாவது மென்னே. (8)

**வெ**ந்தழி வுற்றதும் வேத லிலாதும்
நந்திய சுத்த நறும்பத மொத்தோர்
உந்தியி னிற்க வுரைத்த பினேயென்
அந்தண வெற்கய லாவது மென்னே. (9)

**க**சடு துறந்துய் கருத்தை யிசைத்துன்
நிசநெறி யின்க ணிறுத்திய பின்பு
நசைமை யகன்ற வணாமலை நாதன்
அசல வெனக்கய லாவது மென்னே. (10)

# 27. அயலாவதும் என்னே!

**1.** எனக்கு வாய்த்துள்ள உத்தமப்பொருளே! சீர்மைமிகுந்த அந்தண முனிவர்கள் தம் சிந்தையுள் தியானிக்கும் செயல் பொருந்திய நன்னெறியில் நன்கு தழைக்கவேண்டும் என மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள நீ, உனது சொந்தப் பெயராகிய பெருஞ் செல்வப் பொலிவை (குமரகுருதாசன் எனும் பெயரை, அடியேனுக்கு வழங்கி அருளிய பின்னர், இன்று பாராமுகம் காட்டி எனக்கு அன்னியமாக இருப்பதும் எதற்கு ?

**2.** என் தலைவ! 'எந்த நிலையிலும் சத்தியத்தையே உரை' என, முன்னர் அருள் செறிந்த அறிவுரை கூறி மறைந்து, எனது ஐம்புலன்களையும் பொறிகளையும் மற்றைய கரணங்க– ளையும் மாறாத அன்பு நெறியில் நிறுத்தியபின் இன்று எனக்கு அன்னியமாக இருப்பதும் எதற்கு ?

**3.** என்னை முழுவதுமாக விழுங்கிக் கொண்டு 'எனது' 'யான்' எனும் உணர்வைப் போக்கிவிடும் குகப்பெருமானாகிய மூலகாரணப் பொருளே! பேதநிலை தொடர்பான

*7. அலர் = நீர்.*

*8. மோதா = மோதி; செய்யா என்னும்வாய்பாட்டிறந்தகால வினையெச்சம்.*

*9. வேத லிலாததும் என்பது 'வேத லிலாதும்' எனவேய்ந்தது.*
*உந்தி = தேர்த்தட்டு; இது மத்தியநிலை குறிப்பதாகலின், தகராலயத்தின் மேற்று.*

*10. கசடு = குற்றம், ஐயம்; பி – நிகண்டு. அசலன் = சலனமிலான், கடவுள்.*

அச்சமெல்லாம் ஒழிந்து போகப் பெரும் தெளிவு பொருந்தப் பெற்ற குற்றமற்ற, அரிய ஞானப் பேற்று நிலையைப் பெறுவதற்குரிய எனக்கு உபதேசித்து அருளியபின், இன்று எனக்கு அன்னியமாக இருப்பதும் எதற்கு ?

4. சஞ்சலத் தன்மையை நீக்கும், ஆன்ம நாயகன் எனப்படும் என் அன்புக்குரிய தூய சிவமே! என் அகந்தை உணர்வைப் போக்கி, அருள்மிகுந்து விளங்கும் ஒப்பற்ற தூய்மை நெறிக்குரிய உபாயங்களாகிய குறிகளை நன்றாகக் காட்டியபின், இன்று எனக்கு அன்னியமாக இருப்பதும் எதற்கு ?

5. என் ஐயனே! 'இவை நிலையானவை' என்னும் எண்ணத்துடன் என்னால் விரும்பப்பட்ட அனைத்தும் பொய்யே; அவை நிலைப்பவை அல்ல என உணர்ந்து, வீட்டைத் துறந்து, துறவு நெறியை மேற்கொண்டு நான் உய்திபெறும் கால எல்லையை ஆர்வத்துடன் நோக்கி இருந்த பின்னும், இன்று எனக்கு அன்னியமாக இருப்பதும் எதற்கு ?

6. அன்பே வடிவான சிவமே! என் அன்புநிலை உன் அன்புநிலைக்குள் வியாப்பியமாக அடங்கி நிற்கும் நிலையைத் தெரிந்து, அடியரை ஆட்கொள்ளும் உன் அன்புமயமான ஆனந்த பூரணமே எனது பரிபூரணத்துக்குரிய ஆதாரம் என உணர்ந்திருந்தும், இன்ப, அருள் மயமான நன்னெறியில் சிறந்த உபாசனை ஆகிய ஒழுக்க சீலத்தை மேற்கொண்டிருந்தும் இன்று எனக்கு அன்னியமாக இருப்பதும் எதற்கு ?

7. என் தலைவ! நான் கொண்டுள்ள உயர்ந்த குறிக்கோளை அறிந்து நீ அருளும் அருள்மயமான இன்பநிலையைப் பொருந்தி இருந்தும், மிகமேம்பட்டதான பூரண ஆனந்தப் பேறு மீதுள்ள தீவிரமான அன்பு காரணமாக என் கண்களிலிருந்து பெருகும் நீர்த்தாரைகளைக் கண்டபின்னரும், இன்று எனக்கு அன்னியமாக இருப்பதும் எதற்கு ?

8. பக்குவம் அறிந்து ஆட்கொள்ளும் இறைவ! யானை நடுநடுங்கிக் குலைந்து வீழும் வண்ணம் சிங்கமானது அதன்மீது பாய்ந்து அதன் மூளையைப் புசித்தல் போன்று, எனது ஆணவ மல இருளைப் பிளக்கக்கூடிய ஒளிமயமான அருளின் திரட்சியை எனக்கு வழங்கியருளிய பின்பும் இன்று எனக்கு அன்னியப்பட்டு இருப்பதும் எதற்கு ?

9. என்னை ஆள உள்ள அந்தண முனிவ! அதிகமாக வெந்து குழைந்து போன சோறு எனவோ, வேகாத சோறு எனவோ இல்லாமல், நன்கு பக்குவப்பட வெந்துள்ள தூய்மையான சோற்றின் பதம் போன்று நிலையில் இருந்து, முழுமையான அத்துவித பாவனையில் தகராலயத்துக்குள் நிற்குமாறு எனக்கு உபதேசம் செய்த பின், இன்று எனக்கு அன்னியப்பட்டு இருப்பதும் எதற்கு ?

10. பிரபஞ்ச நினைவு, தேகநினைவு ஆகியவற்றை நீத்துவிட்ட அருணகிரிப் பெருமானுக்குரிய கடவுளே! என் பசுத்தன்மைப்பட்ட, பாசத்தன்மைப்பட்ட அழுக்குகளை எல்லாம் துறந்து உய்தி பெறக்கூடிய எண்ணத்தைத் தோற்றுவித்து, உனக்குரிய இயல்பான ஞானானந்த நெறியில் என்னை ஆழமாக ஈடுபடுத்திய பிறகும் இன்று எனக்கு அன்னியப்பட்டு இருப்பதும் எதற்கு ?

# 28. பரதேவதை

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.★*

**உ**ரையான்மன சாலொரு தாறுபெறா
துயரும்பெரு வாழ்வினை யேகருதாக்
கரைகாணரும் வங்கம ரக்கொடிபோற்
கவலுந்தமி யேனைய ளித்தருளாய்
புரைதீர்குக னேயரு ளேபொருளே
புதுமாவமு தேகனி யேரசமே
சரைநாகணை யாவழ கேதனகே
தனிநாடக மாபர தேவதையே. (1)

**இ**துகாறும ணைந்தவ ரந்தையெலா
மெனைநீத்தொரு வும்படி செய்ததயா
அதுதானினு மென்னையு னக்குதவோ
ரருள்கூரவ ராதுகொ லோவழியாப்
புதுமாமது வேகழை யேசுளையே
புரிவார்சுவை யேபய மேநயமே
சதுமாமறை யோர்பதி யேகுகனே
தனிநாடக மாபர தேவதையே. (2)

**ஆ**ராரென சொல்லினு மென்னிறையுன்
னருளேகதி யென்றுது ணிந்தவெனைப்
பாராதுபு தைந்தது மென்னருளே
பரிசாயொளி ருன்கதழ் வுக்கிதுவும்
நேரோமொழி யாயழி யாநகையே
நிறைவேயறி வேயிர வோடுபகல்
சாராவெளி யேயொளி யேசிவமே
தனிநாடக மாபர தேவதையே. (3)

---

* *கனி விளம் விளங்காய், கனி விளம் விளங்காய் என்னும் வாய்பாடுகளைக் கொண்ட அடியுடைய இவ்விருத்தம், மாஞ்சீர்களாகப் பிரிக்கப்படின், எண்சீர்க் கழிநெடிலடியாசிரியவிருத்தமு மாம்.*

1. *கொடி – காகம்.*

*'ரசம்' என்றது வடநூன் முடிபாகலின் இகரம் பெற்றிலது; தலைக்குறை யெனினுமாம். தனகு = உள்ளக்களிப்பு; சூ– நிகண்டு; தன் + நகு = தன்னகு, தனகு; நகுதல் = களித்தல்.*

3. *நகை = இன்பம்; பி – நிகண்டு.*

**உ**னையேயடை வானுனை யேயிதுநா
ளுளமூரநி னைந்தலை யிங்கெனைநீ
நினையாமையை நெஞ்சுனி யங்கணநீர்
நேரத்தொழு தொண்டரி னின்றுமையோ
எனைநீயயல் பண்ணினை யோவெனவே
யெண்ணிக்கரை கின்றதி ரங்குதியால்
தனையேதுமி லாதகு கேசுரனே
தனிநாடக மாபர தேவதையே. (4)

**எ**ந்தாயொடு தந்தையு மாயுளநீ
யின்றாள்கிலை யேன்முடி வாயிடுநாள்
அந்தோவெளி யேனுயிர் தங்குபுலம்
யாதோவறி யேனறி யேனெனையாள்
கந்தாகுரு நாயக மேகருதார்
கருத்தேகரு ணாகர மேயடியார்
தந்தாபம தந்தெறு கோளரியே
தனிநாடக மாபர தேவதையே. (5)

**எ**ண்ணாவொரெ ணந்தரு வாய்பெறுவா
யெனவேநினை வேனையெ ணாவிடினான்
அண்ணாவெனை யாவரை யாவெனையா
ளப்பாவென வேயழு வேன்விழுவேன்
புண்ணாகும னாதியெ லாமடியார்
புரிவேயுறு நீயவை காண்பைகொலோ
தண்ணாரரு ளேவர தாசலமே
தனிநாடக மாபர தேவதையே. (6)

**கா**ணேனெனும் வாணியி றந்துமெய்யாய்க்
கண்டேனெனும் வாணிபி றந்திடநீ
மாணாரருள் கூர்கிலை யேலினியே
வருமாணையெ தோவென வஞ்செனுடை
வாணாளுனை நம்பியும் வீணெனும்வாய்
வரவோர்நடு வுண்டுகொ லோசிறியேன்
சாணேறமு ழங்கழி யாதருளே
தனிநாடக மாபர தேவதையே. (7)

---

*4. அங்கணநீர் = சலதாரை நீர். தனை = அளவு.*

*7. "மெய்யாய்க் கண்டேனெனும் வாணி பிறந்திட" என்றது, அதீதானுபவ சற்சமாதியிற் றலைப்பட்டே னென்னுஞ்சொற் றோன்றிட வென்னும் பொருள் பயக்கும்; "சாணேற முழங்கழியா தருளே" என்பது கருதுக. வாணி = சொல்.*

**எ**ளியேனெனும் வண்ணமெ னக்கெனையே
யீவாயெனி லென்னையு னக்கஙனே
களியோடுவ ழங்கிடு வேனிதிலுன்
கண்ணேயுள வெண்ணமு ணர்ந்திலனே
அளியாலுள ழுங்கிய னாரதமு
மயர்வேனுடை நெஞ்சம தாமுளமே
தளியாகநி னைந்துறை நாயகமே
தனிநாடக மாபர தேவதையே. (8)

**அ**ருவென்பதை யேயுரு வாக்குநுணு
கணுவுள்விரி வானைநு ழைத்திடுமுன்
பெருமொய்ம்பரு ளென்னைவி ழுங்கியது
பின்னஞ்சிக வென்னிலொர் மாத்திரைதான்
அருகும்படி யாற்றெறு ளற்றதுவோ
வருளாயரு ளாயடி யாரரசே
சருவுண்குநர் நாயக மேநலமே
தனிநாடக மாபர தேவதையே. (9)

**பொ**ய்யாயுர னேதுமி லாமடமாய்ப்
பொறிமூசிய புள்ளுவ ருக்கிதமாய்க்
கையாயுறு புன்கரு விக்கயலாய்க்
கருதோர்நிலை மேலெனை வைத்தளியாய்
மெய்யாகவி ரண்டின டுக்கணனி
மிளிருந்திரு வேயனு பூதிசொனோன்
சையோகசு கோதய மேசிவமே
தனிநாடக மாபர தேவதையே. (10)

# 28. பரதேவதை

1. வாக்காலும் மனத்தாலும் ஓர் அளவுபடுத்தி உரைக்கப்பட முடியாமல் உயர்ந்து விளங்கும் குகானந்தப் பெருவாழ்வையே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டு, கரைகாண்பதற்கரிய கடலின்நடுவில் உள்ள மரக்கலத்தில் இருக்கும் காக்கை போன்று துன்பத்துக்கு உள்ளாகி

---

*8. தளி = கோயில்.*

*9. அது என்னை விழுங்கி என மாறுக.*
*சரு = விண்ணோருண், அமிழ்து; சூ – நிகண்டு.*

*10. கை = சிறுமை; பி – நிகண்டு.*
*முதற்பத்தின் எழுமொரு குணக்கினும் என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டில் “இரண்டினகடாகநிமிரும் வேதாந்த சித்தாந்த சமரசசன் மார்க்கம்” எனப்பட்டதே இங்ஙனம் “இரண்டின் நடுக்கண்” எனப்பட்டது. அவ்வுரை கருதுக.*

இருக்கும் எளியேனைக் கருணை புரிந்து காத்தருள்க. இயல்பாகவே தூய்மைப்பட்டுள்ள குகனே! அருள்மயமே! பொருள்மயமே! புத்தம் புதிய பேரமிழ்தே! ஞானக்கனியே! அக்கனியின் ரசமே! மூப்பு, இளமை முதலான அவத்தைகளைப் பொருந்தாமல் காலாதீதப்பட்டு விளங்கும் பேரழகே! முனிவர்களின் உள்ளக்களிப்பே! ஒப்பற்ற வகையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப்பெரிய பரதெய்வமே!

**2.** இந்நாள்வரை என்னைச் சார்ந்திருந்த துன்பங்கள் அனைத்தும் என்னைவிட்டு நீங்கி விலகியொழியும் படிச் செய்த உன் கருணையாகிய அதுவே, இப்பொழுது என்னை உனக்கு அர்ப்பணிக்க (எனக்குரிய பரிபூரணநிலையைக் கொடுக்க) தயைகூர்ந்து வெளிப்பட்டு வாராதோ? புதுமையும் உயர்ச்சியும் பொருந்திய அழியாத மதுவே! கரும்பின் சுவையே! கனிச் சுளையின் இனிப்பே! விருப்பத்தை அதிகரிக்கும் சுவைமிக்க பாலமுதே! சிறப்புநிலையே! நால்வேத நெறிப்பட்டவர்க்குரிய தலைவனே! குகனே! ஒப்பற்றவகையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப் பெரிய ’பரதெய்வமே’ !

**3.** எனது நெறியைப்பற்றி யார் என்ன சொன்னாலும் அதைப் பொருட் படுத்தாமல், என் ஆன்ம நாயகனாகிய இறைவ, உனது திருவருளே கதி என்று தெளிவும் உறுதியும் கொண்டுள்ள என்னைப் பாராமல் மறைந்துள்ளது எதற்காக? அருளே பரிசுப்பேறாக விளங்கும் உனது பெருமைக்கு இது பொருந்துமோ? கூறியருள். அழியாத இன்பநிலையே! பரிபூரணப் பொருளே! அறிவின் வடிவே! இரவும் பகலும் அணுகாத, (கால – அதீதமான) சிதாகாசப் பெருவெளியே! மூல ஒளிப்பொருளே! சிவமே! ஒப்பற்ற முறையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப்பெரிய பரதெய்வமே!

**4.** உன்னை அடையும் பொருட்டாகவே இந்நாள்வரை உன்னையே உள்ளத்தில் ஆழ்ந்து நினைத்து இங்கே திரியும் என்னை நீ சற்றேனும் நினைந்து பார்க்காமல் இருப்பதைக் கருதி எந்நெஞ்சம் கலங்குகிறது; "கண்ணீர் மல்கக் கசிந்து உருகும் தொண்டரைப் போல் நான் நடந்துகொண்டிருந்தும் என்னை நீ அன்னியமாக்கி விட்டாயே!" என்று கருதி உள்ளமானது நைந்து கரைகின்றது. மனம் இரங்கி அருள்புரிவாய்! அளப்பதற்கரிய பெருமையும் வியாபகமும் உடைய குகேசுவரனே! ஒப்பற்றமுறையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப்பெரிய பரதெய்வமே!

**5.** எனக்கு உற்ற தாயாகவும் தந்தையாகவும் உள்ள நீ, இப்பொழுது ஆட்கொள்ள வில்லை எனில் நான் எனது இறுதிக் காலத்தை அடைந்து இறக்கின்ற அன்று எளியேனின் உயிர் அடையக்கூடிய இடமும் நிலையும் யாதாக இருக்குமோ? சற்றும் அறியேன். கந்தா! குரு நாயகமே! பந்தத் தொடர்பான உலகியல் விஷயங்களைக் கருதாத வைராக்கிய சீலர்களின் சிந்தனை மயமாக விளங்குபவனே! கருணையே வடிவாக உள்ளவனே! அடியார்களின் தாபமாகிய (மோகிக்கச்செய்யும் உலகசுகங்களாகிய) யானையைக் கொன்று எறியும் சிங்கமே! ஒப்பற்ற முறையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப்பெரிய பரதெய்வமே!

**6.** ‘‘எண்ணாமல் எண்ணும் (நினையாமல் நினைக்கும்) தியானசீலத்தைத் தந்தருள்; என்னையே பெற்றுக் கொள்," என இவ்வாறே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பவனாகிய என்னை நீ சற்றும் பொருட்படுத்தாமல் இருப்பின், நான் மேலும் மனம் நைந்துநைந்து ‘‘என் தலைவ!

என் ஐயனே! அனைத்துக்கும் எல்லையாக இருப்பவனே! என்னை ஆட்கொள்ள உள்ள அப்பா!'' என்றெல்லாம் அழுவேன்; மீண்டும் மீண்டும் உன் திருவடிகளிலேயே வீழ்வேன். அடியாரிடம் பெருவிருப்பம் கொண்டுள்ள நீ அடியார்கள் மனம் நொந்து புண்ணாகுமாயின் அப்படித் துன்பத்துக்கு ஆளாகிக் கலங்கும் மனம் முதலான கரணங்களை வறிதே பார்த்துக் கொண்டிருப்பாயோ ? தண்மை நிறைந்த அருள்மயமே! வரங்களை அருளும் பெரிய மலையே! ஒப்பற்ற முறையில் ஐந்தொழிற்கூத்து இயற்றும் மிகப்பெரிய பர தெய்வமே!

7. ''உன்னை நான் காணவில்லை'' எனும் பேச்சுக்கு இடமில்லாமல், ''நான் உன்னை உள்ளவாறு கண்டு கொண்டேன்; இரண்டறக் கலந்தேன்" எனும் வாக்குத் தோன்ற நீ உனது பெரிய திருவருளை வழங்கவில்லை எனில் இனிவரக்கூடிய ஆணை எதுவோ என அஞ்சுகிறேன். இவ்வாறு அஞ்சும் நான், எனது வாழ்நாள் முழுவதும் உன்னையே நம்பி இருந்தும் கூட, "இவ்வாறு நம்பியது வீண்'' எனும் பேச்சுப் பிறக்க ஒரு நியாயமும் உண்டோ! சாண் அளவுக்கு மேலே ஏறி முழம் அளவுக்குக் கீழே சறுக்கி விழுந்து, இவ்வாறே வீண்போய் விடாமல் நீ அருள்வாய். ஒப்பற்ற முறையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப் பெரிய பரதெய்வமே!

8. எளியேன் கருதும் வண்ணம் எனக்கு என்னைக் கொடுத்தாய் எனில் என்னையும் அவ்வாறே உனக்குக் களிப்போடு வழங்கிடுவேன். இது தொடர்பாக, உன்னிடம் உள்ள திருவுள்ளக் கருத்து இன்னதென நான் உணரவில்லை. நெகிழ்ந்த நிலையில் உள்ள உள்ளம் கலங்கப்பெற்று எப்பொழுதும் அயர்ச்சி கொண்டிருக்கும் எனது நெஞ்சத்தையே உனது திருக்கோயிலாகக் கருதி வாசம்செய்யும் தலைமைத் தெய்வமே! ஒப்பற்ற முறையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப்பெரிய பரதெய்வமே!

9. அருவநிலை என்பதையே உருவநிலை உடையதாகக் காட்டும் நுண்ணிய அணுவுக்குள், எங்கும் விரிந்திருக்கும் ஆகாச வெளியையே நுழைக்கும் உனது பெரிய அருளாற்றல் என்னை முழுவதுமாக விழுங்கிக்கொண்டு எனது கண்டித நிலைகள்எல்லாம் (ஏகதேசமாகவே உணரும் எனது கட்டுப்பட்ட நிலைகள் எல்லாம்) அற்றுப்போய், எனது சீவநிலையானது ஒரு மாத்திரை குறைந்து சிவநிலையாக ஆகுமாறு (சீவ என்பதில் சீ–இரண்டு மாத்திரை; சிவ என்பதில் சி–ஒரு மாத்திரை) செய்யக்கூடிய வலிமையை இழந்துவிட்டதா என்ன ? அருள்வாய், அருள்வாய்! அடியார்க்கு அரசே! அமிழ்து உண்ணும் தேவர்களின் நாயகமே! சிவத்துவப் பேறே! ஒப்பற்ற முறையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப்பெரிய பரதெய்வமே!

10. பொய்ந்நிலை உடையதாகவும் ஒரு சிறிதும் உண்மை உணர்த்தும் வலிமை அற்று அறியாமைக்கு உதவுவதாகவும், எப்பொழுதும் ஐம்பொறி புலன்களுக்குரிய விஷயங்களிலேயே ஆழ்ந்திருக்கும் இழிந்தோர்க்கு மிகவும் இதமாகச் செயற்படுவதாகவும் சிறுமைப் பட்டுள்ள அற்பமானகருவி கரணங்களுக்கு அன்னியப் பட்டுள்ளதாக ஆன்மாவைக் கருதும் தூய நிலையில் என்னை வைத்துக் காப்பாய். வேதாந்த சித்தாந்த சமரச நிலையில் உண்மையாகவே பெருவிளக்கத்துடன் திகழும் சிவப்பொலிவே! கந்தர் அனுபூதி பாடிய அருணகிரிப்பெருமானுக்கு வாய்த்துள்ளதான ''இரண்டறக் கலந்திருத்தல்" எனும் பேரானந்த விளைவே! சிவமே! ஒப்பற்ற முறையில் ஐந்தொழிற் கூத்து இயற்றும் மிகப்பெரிய பரதெய்வமே!

# 29. குகதேவு

*கலிவிருத்தம்.★*

**தி**ங்களணிநர் சேயோன் செம்பவளவை வாயால்
துங்கவிமல னார்பாற் சொன்னமுடிவு சேர்வார்
பங்கமொருவி மாணார் பாதநன்னிலை யார்வார்
சங்கரகுரு வேயா டாரககுக தேவே. (1)

**மா**யமென்றம லாதி மாளவென்றுக லாதி
ஆயவம்புட னீட்டுன் னாரருளையு ணாட்டுந்
தூய சிந்தைய ருய்வார் தூணமின்றருள் செய்வாய்
தாயவந்தணர் கோவே தாரககுக தேவே. (2)

**அ**ந்தகனடு வேலை யன்னியப்படும் யாவும்
இந்தமெய்யுள போதே யில்லெனத்தளி வாதே
உந்துறழ்வுகொ ளாதா ருன்றனைத்தொடர் வாரே
நந்தலிலிக ளானா நாப்புகழ்குக தேவே. (3)

**இ**ட்டமுற்றுனை நாடார்க் கெட்டிவித்தினு மேலாம்
புட்டமுற்றுனை யன்பாற் போற்றுநர்க்கதி யின்பாம்
கட்டறுத்தெனை யாளாய் கட்சுரர்க்கொரு மேலாய்
நட்டவித்தக மோவா ஞாட்புடைக்குக தேவே. (4)

**நி**ன்பரிவுடை யாரை நீள்சிறுமைகள் சாரா
வன்பரிவுக ணாடா மாமறவினை கூடா
என்புரிவரு ளேதா வேணருணிலை நாதா
அன்புடையவர் கோவே யாகமகுக தேவே. (5)

**வீ**டுதந்தரு ளுன்னை மேவுகின்றவர் தம்மை
சாடுமந்தகர் சாரார் சாவினம்பழி சேரா
ஆடுகண்டக ரண்ணா ராயுதங்கடு நண்ணா
மாடுமண்டரு டாதா மங்களகுக தேவே. (6)

★ *இவ்விருத்தத்தின் முதற்சீரையும் மூன்றாஞ்சீரையும் தேமா புளிமாவெனப் பிரிக்கின், அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தமுமாம்; ஒற்றொழித்து அலகிடுக; விதி, திருவலங்கற்றிரட்டின் இரண்டாங்கண்டத்தே காணலாம்.*

1. *அணியுநர் என்பது "அணிநர்" என மருவிற்று; "மொழிநரு முளரே" என்புழிப்போல (நன்னூல்).*

2. *நீட்டல் = கொடை; சூ – நிகண்டு. தூணம் = பகை; 'த்வேஷணம்' என்பதன் விகாரம்.*

4. *புட்டம் = நிறைவு; டகரவெதுகை.*

**நா**வினன்மனு வோதி நாளுமன்புரு வாகிக்
கேவலந்தனை நூறிக் கீழ்ச்சலந்தனை மாறி
ஆவிகண்டருள் சேர்வா ராகமென்பது மேவார்
தாவிலின்பரு டாராய் தாரககுக தேவே. (7)

**ச**க்கொளித்தக மூரித் தாமரைத்தவி சேறிச்
செக்கரவிரும் விண்போற் றேசுவிரியு முன்பால்
பொக்கமறவுள் ளாரே போதல்வரலு மேவார்
சொக்கமொடெனை யாளாய் சோபனகுக தேவே. (8)

**ஐ**ந்தனுளொரு மூன்று மந்தரமுறக் கண்டு
சந்தியுடையி ரண்டுஞ் சங்கமமுறக் கொண்டு
மந்திரகதி சாரு மங்களவரெ லாரும்
எந்தைகளென வாவா ரென்பரகுக தேவே. (9)

**கா**ணற்குரிய கண்ணாய்க் கண்ணற்கரிய விண்ணாய்
மாணற்புதவி ராட்டாய் மன்னுனைப்புகழ்ந் தோற்கோர்
நாணப்பரிவு போக்கா நன்னிலைக்கதி சேர்த்தாய்
ஆணப்பரிவு ளேனை யாண்டருள்குக தேவே. (10)

## 29.குகதேவு

**1.** அனைத்துலகுக்கும் அனைத்துயிர்க்கும் மங்களம் அருள்பவனான சிவபெருமானின் (சங்கரன்) குருவே! தஞ்சம் புகும் அடியரை ஆட்கொள்ளும் பிரணவப் பொருளான குகதேவே! இளம்பிறையைச் சடைமுடியில் அணிந்துள்ள சிவபெருமானின் திருக்குமரனாகிய குகப்பெருமான் தனது செம்பவழம் போன்று சிவந்துள்ள திருவாய் மலர்ந்து, இயல்பாகவே சுத்தநிலை அடைந்துள்ள சிவனிடம் சொன்ன முடிவானதும் உறுதிவாய்ந்ததுமான உபதேசப்பொருளை சிந்திப்பவர்கள் தமது பந்தங்களிலிருந்து நீங்கிப் பெருமைக்குரிய திருவடிப் பேறாகிய நன்னிலையைத் திடமாகப் பொருந்துவார்கள்.

**2.** உனது அருட்பேற்றுக்கு உரிமை படைத்துள்ள முனிவர்களின் அரசே! பிரணவப் பொருளாக விளங்கும் குகதேவே! மாயைத் தொடர்புடையதான மலம் முதலாக உள்ள மூன்று

*9. அந்தரம் = முடிவு.*

*10. புகழ்ந்தோன் = திருப்புகழ்ப்பாக்களாற் றுதித்தோன் = அருணகிரிநாதன்.*

*போக்கா = போக்கி; செய்யா என்னும் வாய்ப்பாட்டிறந்தகால வினையெச்சம். இதனை, ஆவீற்றுடன்பாட்டு வினையெச்சமென்றும், உடன் பாட்டெச்ச மென்றும், உடன்பாட்டிறந்தகால வினையெச்ச மென்றுங் கூறுப.*

*ஆணப்பரிவு= அன்பின்பம். ஆணம் = அன்பு; சூ– நிகண்டு.*

மலங்களும் நீங்கும்பொருட்டு, கலை முதலான தத்துவங்களாலான உடம்பை உயிர்களுக்கு வழங்கும் உனது திருவருளை உள்ளத்தே பதித்துச் சிந்திக்கும் தூய சிந்தனை கைவரப்பெற்றோர், பேத உணர்வுகள் நீங்கப்பெற்றவர்களாகி உய்திபெறுவார்கள். அருள்புரிவாயாக!

3. இடையறாது நாவினால் துதிப்பதற்குரிய புகழ்மயமான குகதேவே! கூற்றுவன் உடம்பிலிருந்து உயிரைப் பிரித்து எடுத்துக்கொண்டு போகும் சமயத்தில் சகலமும் அன்னியப்பட்டுவிடும். இதனை உணர்ந்துகொண்டு, இந்த உடம்பு உள்ள போதே அனைத்தையும் பொய்யென ஒதுக்கிவிட்டு, தருக்கவாதத்தில் ஈடுபடாமலும் பேத உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமலும் உன்னையே தொடர்ந்து வழிபடும் நெறியில் உள்ளவர்களே நற்கதியாகிய அழியாநிலைக்கு உள்ளாவார்கள்.

4. அமிழ்தப் பேறுடைய தேவர்களுக்கெல்லாம் மேம்பட்டு இருப்பவனே! ஐந்தொழில் திருக்கூத்து இயற்றும் வித்தக நிலையிலிருந்து ஒருபொழுதும் நீங்காதிருப்பவனே! தேவ சேனைகளை உடைய, பேராற்றல் வாய்ந்த குகதேவே! மாறாத அன்பும் ஈடுபாடும் கொண்டு உன்னை நாடாதவர்களை நோக்க, எட்டிமரத்து விதை எவ்வளவோ மேன்மை உடையதாகும். நிறைவான உணர்வு கொண்டு உன்னை அன்பால் போற்றித் துதிப்போர்க்கு எப்பொழுதும், மிக மேம்பாடு வாய்ந்த இன்பநிலையே வாய்க்கும். என் பந்தங்களையெல்லாம் அறுத்தெறிந்து என்னை ஆட்கொள்க.

5. நின்னிடம் மாறாத அன்புகொண்டுள்ள அடியார்கள், இகழ்ச்சிக்குரிய சிறுமைக் குணங்கள் பொருந்தார்; கொடிய துன்பங்கள் அடையப் பெறார். கொடிய தீவினைப் பயன்கள் அவர்களைச் சேரா. என் ஆனந்தப் பேற்றுக்குரிய அருளையே தருக! தணியாத விருப்பத்துக்குரிய அருள்நிலைக்குரிய தலைவனே! அன்புடைய அடியார்க்கு அரசே! ஆகமப்பொருள் மயமான குகதேவே!

6. வழிபடுவார்க்கு வீடுபேற்றைத் தந்தருளும் உன்னைத் தஞ்சமாக அடையும் அடியார் பெருமக்களை – உடலெடுத்துள்ள உயிர்களை அழிக்கும் காலர்கள் அணுக மாட்டார்கள்; இறக்கும் அளவு பழிதரக் கூடிய புன்மைகள் சேரா; தீயநெறிகளில் வீறு கொண்டுள்ள பகைவர்கள் நெருங்கமாட்டார்கள்; ஆயுதங்களோ, நஞ்சோ ஒன்றும் செய்யாது. அடியார்கள் பக்கமாகப் பொங்கிப் பெருகுவதும், செல்வத்தைப் பெருக்குவிப்பதுமாகிய நினது அருளை மேன்மேலும் தருவாய். மங்களப் பேறுகளை அருளும் குகதேவே!

7. நன்மை தரும் உனது மந்திரத்தை நாவால் முறைப்படி ஓதி, நாள்தோறும் அன்பே வடிவாக விளங்கி, அறியாமைக்கு முழுவதும் ஆட்பட்டிருக்கும் நிலையை அழித்து, இழிவான வஞ்சக குணங்களைப் போக்கி, ஆன்மாவின் உண்மையான தூயநிலையை உணர்ந்து உன்னை தியானிப்பவர்கள் நினது திருவருளை உறுதியாக அடைவர்; அவர்கள் இனிப் பிறவி எடுக்க மாட்டார்கள். கெடாத, இன்பமயமான அருளைத் தருவாய், பிரணவப் பொருளான குகதேவே!

8. விழிகளின் ஒளிக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டுத் தாமரை போன்ற இதய பீடத்தில் ஆரோகணித்து, செவ்வொளி படர்ந்த வானம் போன்று பேரொளியுடன் வெளிப்பட்டுள்ள உன்னிடம், பொய்ம்மைகள் யாவும் நீங்க, உண்மையான நாட்டமும் அன்பும் கொண்டவர்கள்,

பிறத்தல் – இறத்தல் என்பவைகளை இனிப் பொருந்தமாட்டார்கள். உனக்கே உரிய அழகிய நெறியில் என்னை ஆட்கொள்வாய்! மங்களகரமான யோகநிலைகளை அருளும் குகதேவே!

**9.** ஆணவம், கன்மம், மாயை, சீவன், சிவன் எனும் ஐந்தனுள் ஆணவம் முதலான மூன்றும் முடிவுறும் படியான உபாசனை வழிகளில் ஈடுபட்டு, இணையும் இயல்பை உடையனவாகிய சீவனும் சிவனும் இரண்டறக் கலந்திருக்கும் நிலையை அணைந்து, தகராலய நெறியைக் கடைப்பிடிப்பவர் அனைவரும் எம் தந்தையாகிய குகன் எனவே விளங்கும்படி சாயுச்சியப் பேறு அடைவர். எமக்கு உரிய, பரநிலைப்பட்ட குகதேவே!

**10.** காண்பதற்குரிய கண்ணாகவும், காண்பதற்கு அரிய விண்ணாகவும் மாட்சிமை மிக்க, அற்புதமான, விராட் புருடனாகவும் திகழும்உன் ஒருவனையே புகழ்ந்த பெரியோனான அருணகிரிப்பெருமானின், பந்த மிகுதிகளைப் போக்கி, குகானந்தப் பேற்றில் திளைத்திருக்குமாறு சேர்த்தாய். உன்னைக் கருதும் அன்பும் உன்னைத் தியானிக்கும் இன்பமும் உடைய என்னை ஆட்கொண்டு அருள்க! குகதேவே!

# 30. சிற்றுணர்வே

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**வெனு மித்திணைமே லேயுரு வுற்றவர்கள்
போவத ழற்புகைசார் காடென நித்தலுமுன்
கோவினி லெட்டியுமிவ் வூனுட லிச்சையிலே
கோளொடு நிற்பதெனோ மேனிலை விட்டிஙனே
ஆவிவி டுக்குமுனே யாவியர் கட்கமுதா
யாணம தர்ப்பினமா யாரும ருட்குகனைக்
காவென மெச்சியுளே நாடுந யப்பினையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (1)

**தோ**லைவி லக்கினையோ யாரும்வெ றுக்குமகா
சூதக முற்றபுலா னீர்முடை மச்சையொடே
பாலெச மத்திசெநீ ராயுள தொக்கினையே
பார்தனி னித்தியமா நீயெணி நிற்பதெனோ
மேலறி வுற்றவரீ தீனமெ னப்பறைவார்
வீயுமு னித்தமகா தேவவ ருட்குகனைக்
காலம றக்கருதா தேகரு திக்கொளவே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (2)

1. *கோ = விழி. கட்டணி = உறுதியான பெருமை.*
2. *எசம் = 'ஸ்நஸா' என்னும் வடமொழியின் விகாரம்; நரம்பெனும் பொருண்மைத்து.*

**உ**ணர்விலி கட்கிதமா யுணர்வுளி கட்கிகலா
யோதுமு டற்றிறநீ காணவெ னிற்படுகா
டணவிவெ டித்திடுமூ னுடலிலொ ழுக்குபுணீ
ராதிய சுத்தமெலா நேரின்ம தித்திடுவாய்
மணுளிய டைத்ததிலே புழுவொட சுத்தமெலாம்
வாழுமி தைச்சதமா நீகொளல் விட்டடியார்
கணம்வழி பட்டபிரா னெனுமொரு கத்தனையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (3)

**பூ**தமொ ரைந்துகொடே சேரவ னைந்ததுமா
பூதமி டந்துனியே கோடலி யைந்ததுநோ
வாதைகி ளர்ந்திடவோ ரேதுசி றந்ததுநீண்
மாயையி னந்தரமே தேனுமு ணர்ந்திடவொண்
ணாதவி தம்பணியே மூடின தும்புலையா
ராகமி தன்புலநீ மோகம லிந்ததெனோ
காதன்மி குந்தழியா தாள்சிவ கந்தனையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (4)

**நா**ய்நரி கங்கமுணா வேமுறு மிந்தமுடை
நாறுமு டற்சுமைமேன் மோகமி ருக்கெலையுந்
தாய்வயி றொன்றியசேய் போலவி ரும்பிணியே
சாருமு யர்ச்சியிலா வாசுறு சிற்றறிவாய்த்
தேய்தொழில் கொண்டதுவாய் மாழ்குறு நந்துமுனே
தீவிர நட்புடையார் பாசவி னைத்தளையைக்
காய்வுறு மண்டர்பிரா னாமொரு கந்தனையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (5)

**பா**டையில் வைக்குமுனே வீழிமு தற்பலசேர்
பாலத கத்தையுணா நானழி வற்றவனாய்
ஈடற நிற்பலெனா வோதினெ டுத்தபுலா
லீனவு றுப்பழியா தேநிலை பெற்றெவணம்
பீடைவி டுத்துயும்வீ வேயுறு மெப்படியும்
பேதைமை யுற்றழியா தேயிதை விட்டினிநீ
காடுறை முத்தரெலா நேடொரு கத்தனையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (6)

---

*3. இகல் = பகை. படுகாடு = சுடுகாடு.*
*5. கங்கம் = பருந்து. உணா = உண்டு.*
*6. அதகம் = மருந்து; “அதகமும் யோகமு மருந்தென லாகும்” என்பது பி – நிகண்டு.*

**நா**லுகு ழந்தையைநீ கோறியு ணென்றறைநூன்
ஞாயம தித்தறியார் சேய்கள்வ தைத்துயவே
சாலள றென்றகணே வீழ்வரி ரண்டெனுமா
சாரையு மெப்பொருளோ ரூகமி லற்பரடா
வேலையி னின்றழிவார் நீயிவர் நண்பினையோர்
வேளையு மிச்சைசெயா தாளிறை பத்திசதா
காலமும் விஞ்சவரு வாழ்வருள் கந்தனையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (7)

**த**னதறி விற்கறிவா யுளதைவி டுத்திழிவே
சாவுக டக்கவெனா வாதர முற்றிழிபீ
மனைவெளி விட்டிடுநீ ரிருவர்பு ணர்க்கையினீர்
மாமிச முட்டையெலா மேய்தல்கு டித்தல்பொலா
வினைநுகர் வுற்றிடலோ மடமன துத்தொழிலோ
வீணசு சிச்செயலீ தாருநர் நட்பினைநீ
கனவினு மிச்சைசெயா தெமரிய கர்த்தனையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (8)

**வா**யுவ டைத்தழியா வாழ்விலி ருப்பலெனும்
வாதைவ ழிச்செலலோர் போதுமு னக்குதவா
தோயம னத்தையுளே யாணைசெ யிற்றனியே
யோய்வுறு மக்கமுமீ தேயுறழ் வுற்றவர்தாம்
நேயமொ டொப்பறிவாம் யோகமி தற்கருளா
னீணல சித்தியெலா மேயுறு முத்தியுமாம்
காயமி ழக்குமுனே கூடவெ னத்தனையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (9)

---

*7. குழந்தை = இளமையுடைத்து; குழ – உரிச்சொற் பகுதி, தை – விகுதி, ந் – சந்திவிகாரம்.*

*கொல் + தி = கோறி என முதனீண்டு புணர்வதாயிற்று. கோறி = கொல்வாயாக. உண் = உண்பாயாக. “நீ நாலு குழந்தையைக் கொல்வாயாக. கொல்லப்பட்ட அந்நான்கையு முண்பாயாக” என்னுஞ் செய்தி சித்தர் நூல்களிலுண்டாகலின் அந்நூல்களையே “என்றறை நூல்” என்றும், அவற்றிற் கூறப்படூஉ மிச்செய்தி பரிபாடையா யிருத்தலின் அதன் பொருளையறியாது கொலைசெய்து நரகில்வீழ் மடவோரையே “ஞாயம் மதித்தறியார்” என்றும் ஆசிரியர் கூறினாரென்க.*

*உயவு = வருத்தம்; எல்லாநிகண்டுகளிலு முண்டு*

*இரண்டெனும் சாரை = வெண்சாரை, கருஞ்சாரை யென்ப.*

*8. இழிவுடையுயிர் “இழிவு” எனப்பட்டது ; ஆகுபெயர்.*

*மனைவெளி விட்டிடுநீர் = சிறுநீர் = மூத்திரம்.*

*மேய்தல் = உண்டொழில்; “மேய்த லயிறல் நுகர்த லருந்தல்” என்று சே–திவாகரம் (பல்பொருட் பெயர்த்தொகுதியிற்) கூறுதல் காண்க.*

*9. அக்கமும் = அவ்வாயுவும்: கம் = வாயு.*

**ஞா**னநெ றிக்குரியார் யோகிலி ருப்பரெலா
ஞானமி னெட்டுடன்மே லாதரம் வைக்கிலர்மேல்
ஆனவ ருட்டிறலால் யாதொரு சித்திபுலா
லாகம தற்குமெயா யாரினு முற்றுயர்வார்
நீநல புத்தியொடே மாவரு ணைப்பெயரா
னேயவ ருட்கிருபா நாதனெ னத்தனையே
கானம டுக்குமுனே நாடியி ருப்பதையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே. (10)

ஆக முப்பதுபத்திநும் போந்த திருப்பா - 300
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 303**

# 30. சிற்றுணர்வே

**1.** இங்கும் அங்குமாக ஓயாமல் உழன்று கொண்டிருந்து சிறுமைப் பட்டிருக்கும் உணர்வே (ஆன்மாவே)! பூமியாகிய இந்தப் பெரிய இடத்தில் உடல் எடுத்துள்ளோர் அனைவரும் இறுதியிற் சென்று ஒடுங்குவது தீப்புகை பொருந்திய சுடுகாடுதான் என நாள்தோறும் உனது விழிக்குப் புலனாகி இருந்தும், மாமிசப் பிண்டமான இந்த உடம்பின் மேல் ஆசை கொண்டிருத்தல் எதற்கு ? அடையவேண்டிய உயர்ந்த கதியைப் புறக்கணித்துவிட்டு உனது உயிரை விடுப்பதற்கு முன்பே அனைத்துயிர்க்கும் அமுதமாகவும், என்றும் புதிதாகத் தோன்றும் இளமைப் பொலிவாகவும், எங்கும் நிறைந்துள்ளவனாகவும் விளங்கும் குகப்பெருமானை ‘‘என்னைக் காத்தருள்’’ எனப் போற்றி இதயத்துக்கு உள்ளேயே நாடி உணரும் நயம்மிக்க நெறியை விரும்புதல் என்பதே உனக்கு வாய்த்துள்ள உறுதியும் பெருமையுமான நல்ல நெறி.

**2.** இங்குமங்குமாக ஓடி சஞ்சலப்படும் சிற்றுணர்வே! உடலை மூடியுள்ள தோல் விலக்கப்படின், யாவராலும் வெறுக்கப்படும் துர்நீர் பொருந்தியுள்ள மாமிசம், நிணம், மஜ்ஜை. நரம்புகள், எலும்பு, ரத்தம் என்பனவே காணப்படும். இவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு கட்டமைப்பு என விளங்கும் இந்த உடலையே, இவ்வுலகில் நித்தியமானது எனக் கருதி நிற்பது எதற்கு ? மேலான ஞானப் பேறு வாய்த்த பெரியோர்கள் இவ்வுடலை இழிவுடையது என்றே கூறுவர். இந்த உடல் அழியும் முன்பாகவே நித்தியனும் மகாதேவனுமான அருளாற்றல்மிக்க குகப்பெருமானை சதாசர்வ காலமும் நினையாமல் நினைந்து சொந்தமாக்கிக்கொள்ள விழைவுறுதலே உறுதியும் பெருமையும் வாய்ந்த செயல்முறை ஆகும்.

*10. ஞானநெறிக் குரியாரெலாம் யோகிலிருப்பர் எனவியையும்.*

**3.** ஓடி உழலும் சிற்றுணர்வே! ஆன்ம ஞானம் சிறிதும் இல்லாத அற்பர்களுக்கு இன்பம் தருவதாகத் தோன்றுவதும், ஆன்ம ஞானம் மிகப்பெற்ற ஞானப் பெரியோர்க்கு வெறுப்பினைத் தோற்றுவிப்பதாக உள்ளதுமான உடலின் உண்மையான தன்மையை நீ காணவேண்டும் எனில், சுடுகாட்டை அடைந்து இந்த உடல் நெருப்பிடப்பட்டு வெடித்துச் சிதறுவதற்கு முன், சீழ், இரத்தம் முதலான அசுத்தங்கள் எல்லாம் உடலிலிருந்து வெளிப்படும் போது உன்னால் அளவிட்டு அறியமுடியும். பூமிமுதலான ஐம்பூதங்களின் சாரங்கள் அடைக்கப்பட்டதாய், புழுவும் மற்ற அசுத்தங்களும் இடம் கொண்டிருப்பதாய் உள்ள இந்த உடல், நிலையானது என நீ கருத வேண்டாம். அவ்வாறு கருதுவதை விட்டு விட்டு அடியார் பெருமக்களால் வழிபடப்படும் பெருமானும், ஒப்பற்றவனுமான கந்தப் பெருமானை விரும்புதல் ஒன்றே உறுதியும் பெருமையும் வாய்ந்த செயலாகும்.

**4.** ஓடி உழலும் சிற்றுணர்வே! இந்த உடலானது ஐம்பூத சாரங்களும் ஒருசேர இணைக்கப்பெற்று உருவாக்கப்பட்டது; அப் பெரிய பூதங்களின் செயற்பாட்டால் துன்பமும் நோயும் பொருந்துவதற்கு ஏற்றது; துன்பமும் பிணிகளும் மேன்மேலும் அதிகரிப்பதற்கு ஒரு ஆதாரமாகச் சிறந்து விளங்குவது; பெரிய மாயையின் ரகசியத்தை ஒருசிறிதும் உணர இயலாத அளவுக்கு மறைப்புகளால் புனையப்பட்டுத் தோலால் மூடப்பட்டுள்ளது. மாமிச நாற்றம் மிகுந்த இந்த உடலிடம் நீ மோகப்பட்டுப் பற்றுக் கொண்டுள்ளது எதற்காக ? பெரிதும் அன்பு மிகப்பெற்று, அழியாத வகையில் அடியரை ஆட்கொள்ளும் சிவசொரூபமான கந்தப்பெருமானை விரும்பித்துதித்தலே உறுதியும் பெருமையும் வாய்ந்த செயலாகும்.

**5.** ஓயாமல் சஞ்சலப்படும் சிற்றுணர்வே! நாய், நரி, பருந்து முதலானவைகளால் உண்ணப்படுவதும், இடுகாட்டு நெருப்பில் வெந்து சாம்பலாவதும் ஆன, இந்த முடைநாற்றம் மிக்க உடலாகிய சுமைமேல் உனக்கு மோகம் இருக்கும் வரையிலும் தாயின் வயிற்றுக்குள் இருக்கும் குழந்தைக்கு வருவது போன்றே உனக்கும் பல்வகைப் பிணிகளும் பொருந்தும். பெருமைக்குத் தகுதி இல்லாததும் குற்றம் மலிந்துள்ளதுமான இது சிற்றறிவுக்கு மட்டுமே இடம் கொடுத்து நாளுக்குநாள் தேய்ந்து ஆற்றல் இழந்து குலைவுறும். இத்தகைய உடல் அழியும் முன்பாகவே, தீவிரமான ஆழ்ந்த பக்தி உடைய அடியார்களின் பந்தங்களையும் வினைப்பயன்களையும் நீக்குபவனும், தேவர்களின் தலைவனுமான ஒப்பற்ற கந்தப் பெருமானை விரும்பித்துதித்தலே உறுதியும் பெருமையும் வாய்ந்த செயலாகும்.

**6.** ஓடி உழன்று கொண்டிருக்கும் சிற்றுணர்வே! இந்த உடலைப் பாடையில் கிடத்துவதற்கு முன், விழுதி முதலான பல மூலிகைகள் சேர்க்கப்பட்ட பாலாகிய மருந்தை உண்டு நான் மரணம் இல்லாதவனாய், நிகரற்றவனாய் இருப்பேன் என மமதையுடன் கூறினால், இப்பொழுது எடுத்துள்ள ஐம்பூதமயமான இந்த உடலின் புலால் முதலான இழிவான அம்சங்களும் அங்கங்களும் அழியாமல் எவ்வாறு நிலைபெறும் ? எவ்வாறு உனது உடல் 'தேய்ந்து அழிதல்' எனும் துன்ப நிலையிலிருந்து நீங்கி உய்தி பெறும் ? நிச்சயம் இது அழிவையே பொருந்தும், பேதைமைக் குணம் மிகப்பெற்று வீணே அழிந்துவிடாமல் இந்த உடற்பற்றை நீத்துவிட்டு, இனிமேல், கானகத்தே தனித்து வாழும் சீவன் முத்திப் பேற்றுக்குரிய முனிவர்களால் தியானத்தில் உணரப்படும் கந்தப்பெருமானை விரும்பித் துதித்தலே உனக்கு உறுதியும் பெருமையும் வாய்ந்த செயலாகும்.

7. ஓடி உழன்று சஞ்சலப்படும் சிற்றுணர்வே! "நான்கு குழந்தைகளைக் கொல்; பிறகு அவற்றைச் சாப்பிடு" என, சித்தர்களின் மருத்துவ நூலில் கூறப்படுள்ள கூற்றின் உட்பொருளாகிய நியாயத்தை ஒருசிறிதும் சிந்தித்து அறியாதவர்கள், தாம் வாழவேண்டி, உண்மையாகவே குழந்தைகளைக் கொன்று நரகம் எனப்படும் சேற்றிலே வீழ்வார்கள். இவ்வாறே 'இரண்டு சாரைகளை உண்' எனக் கூறப்படுவதன் உண்மைப்பொருளை ஒருசிறிதும் ஊகித்து உணரமாட்டாத அற்பர்கள், சாரைப்பாம்புகளைக் கொல்லும் அடாத செயலில் ஈடுபட்டு இழிவான கதியை அடைவார்கள். இத்தகையவர்களின் நட்பினை நீ ஒருபோதும் விரும்பாமல், உயிர்களை ஆட்கொள்ளும் இறைவனிடமே எப்பொழுதும் பக்தி மேம்பட்டு விளங்க இருந்து, மேம்பட்ட நிலையில் இருக்குமாறு ஆனந்தவாழ்வை அருளும் கந்தப்பெருமானை விரும்பித் துதித்தல் என்பதே உனக்கு உறுதியும்பெருமையும் வாய்ந்த செயலாகும்.

8. ஓடி உழலும் சிற்றுணர்வே! தனதுஅறிவை இயக்கும் பேரறிவாக உள்ள ஒரு பொருளை விடுத்து, இழிவான இறப்பைத் தவிர்த்து மேம்பட விரும்பி, உடம்பிலிருந்து வெளிவரும் மலம், சிறுநீர், ஆண்பெண் புணர்ச்சி நீர், மாமிசம், முட்டை முதலானவற்றையெல்லாம் உண்டும் குடித்தும் சிலர் வாழ்நாள் கழிப்பர். இவர்கள் இவ்வாறு செய்வது, பொல்லாத வினைப்பயனை அனுபவிப்பதன் விளைவோ? அல்லது அறியாமை வயப்பட்ட மனத்தின் பேய்த்தனமான செயலோ? இவ்வாறு செய்வது பயனற்றதும், தூய்மையற்றதும், இழிசெயலுமாகும். இச்செயலை மேற்கொள்வாரின் நட்பினை நீ கனவிலும் விரும்பாமல், எமது அருமைத் தெய்வமான கந்தப்பெருமானையே முழுமுதல் கருத்தாவையே விரும்பித்துதித்தல், உனக்கு உறுதியும் பெருமையும் வாய்ந்த செயலாகும்.

9. ஓடி உழலும் சிற்றுணர்வே! பிராணவாயுவை வெளியே ஓடாமல் கட்டி மரணமில்லாத பெருவாழ்வில் நான் இருப்பேன் என்று கூறி மேலும் மேலும் துன்பத்தையே மிகுவிக்கும் வழியிலே செல்லுதல் ஒருபோதும் உனக்குப் பொருந்தாது. மனம் சஞ்சலமற்று நிற்க, அதனை உள்ளே ஒழுங்குபடுத்தி நிறுத்தினால், வாயுவும் அதன்வழியே இயங்கி, தனியே ஒழுங்குபட்டு நிற்கும். இதுவே சன்மார்க்கப் பெரியோர் மிக அன்போடும் ஈடுபாட்டோடும் சம்மதித்து ஏற்றுக்கொண்டுள்ள ஞானயோகநெறி. இந்நெறியில் நின்றால், அவனது அருளால் உறுதியான நல்ல சித்திப்பேறுகள் அனைத்தும் பொருந்தும்; முத்தியும் கிடைக்கும். இந்த உடலை இழப்பதற்கு முன், இந்நெறியில் பொருந்தி நின்று என் தலைவனாகிய கந்தப்பெருமானை விரும்பித் துதித்தலே உனக்கு உறுதியும் பெருமையும் வாய்ந்த செயலாகும்.

10. ஓடி உழலும் சிற்றுணர்வே! சன்மார்க்க நெறிக்கு உரியார் அனைவரும் ஞானயோக நெறியில் நிற்பர். ஞான உணர்வு சிறிதும் அற்ற, சடப்பொருளான இந்த வெற்றுடல்மேல் அவர்கள் பற்று வைக்க மாட்டார்கள். அத்தகையோர், அருள்திறத்தால் யாதொரு சித்தி, இந்தப் புலால் உடம்புக்கு இயன்றதாக வாய்க்குமேல், அதனைப் பொருத்து, அந்நிலைக்கும் மேலே உயர்வார்கள். நீ, நல்ல பக்குவப்பட்ட, உள்ளத்துடன், அருணகிரிப்பெருமானுக்கு அன்புநெறிப்பட்டு அருள்புரிந்த கருணைத் தலைவனும், என் தலைவனுமான கந்தப்பெருமானை, இடுகாட்டைச் சேர்வதற்கு முன் அவனது அருள் நாடித் துதித்திருத்தல் என்பதை விரும்புதலே உனக்கு உறுதியும் பெருமையும் வாய்ந்த செயலாகும்.

# 31. எம்பரன்*

*தரவுகொச்சகக்கலிப்பா.*

**தி**ருநிறைந்த பார்வையினாற் றேடரிய மோக்கமதை
உருநிறைந்த வொருசாம்பா னென்பாற்கு மோர்செடிக்கும்
அருணிறைந்தன் றீந்தவறா வருளாளன் றனையொருவன்
இருணிறைந்திங் கெள்ளியதூஉ மென்கொல்லோ வெம்பரனே. (1)

**பி**ணமாகிக் கழியுடம்பைப் பேரருளா லிலிங்கமெனப்
பணுந்தகையோ னுடையாவி யெப்பொருளாய்ப் பம்புமென
எணுந்தகையில் லாவொருவ னேசறுவெண் காடரையோர்
தணிந்தகல்லா யினரெனவே தாழ்த்த லென்னோ வெம்பரனே. (2)

**பு**விதனிற்சா தாரணமைந் தரையெளலும் புகரென்னில்
துவிதமிலாப் பேரருட்செல் வரையிகழுந் துரிதமரோ
அவியாத நிரயமதா யமையுமன்றோ வுயிராக்கஞ்
சவியுறவேண் டுவரிதையுஞ் சாருவரோ வெம்பரனே. (3)

**ந**யனமிலான் றானேகா னடப்பதற்கு மவன்பொருவும்
நயனமிலா னடத்துதற்கு மொண்ணாதொண் ணல்லொளிசால்
நயனமுளா னடத்திடுவா னென்னுமிந்த ஞாயத்தே
நயனமிலான் மாவுனையு நணாதுயுமோ வெம்பரனே. (4)

**தா**னடுத்த பொருளதனின் றன்மையையே தருமென்றோ
ரூனமற்ற தீர்வையுளோ ருயர்களப மிருக்கவுஙன்
ஈனமுற்ற வசுழமிசை யேறுவரோ விதைப்பாலர்
ஞானமுநன் கறியாதோ நம்புடைய வெம்பரனே. (5)

★ *இப்பத்தின் 1, 2 –ஆந் திருப்பாட்டுக்களிற் கூறப்பட்ட எள்ளலும், தாழ்த்தலும் ஆசிரியர், சென்னை: வைத்தியநாத முதலியார் தெருவின்கண் வசிக்குஞான்று அவர் முன்னிலை யிற்றானே, (அத்தெருவிற் கணித்தாயுள்ளவொரு தெருவில் ஏகான்மவாதியாய் வசித்திருந்த) ஒருவராற் செய்யப்பட்டனவா மென்க.*

3. *துரிதம் = கலக்கம், பிரமம்: **பி – நிகண்டுஞ் சூ–நிகண்டுங்** காண்க. சாதாரண மைந்தரை யெள்ளலும் புகரென்று புகன்று மேல், “பேரருட் செல்வரை யிகழுந் துரிதம்” எனவிங் கறிவுறுத்தினமை, ஆன்மலாபம் விரும்புவா ரெல்லாங் கவனிக்கற்பாலதொன்றாம். என்னை ? அத் துரிதம் – புரிவார்க்கு “அவியாத நிரயமதாயமையும்” என்று கதி கூறப்படுகின்றமையின். நிரயம் = நரகம். சவி = செவ்வை, ஒளி: வகரவெதுகை.*

4. *இத் திருப்பாட்டுப் பொருள்பற்றி, “குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார் – குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர் – குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக் – குருடுங் குருடுங் குழிவிழு மாறே.” என்னுந் **திருமந்திரஞ்** சிந்திக்கற்பாற்று.*

5. *களபம் = யானை. அசுழம் = நாய், **அருணகிரிநாதமுனீந்திரர்** பழநித் திருப்புக ழொன்றில் – “கருதசுழ மாமிந்த மட்டைதனை யாளவுன – தருடாராய்” என வருவதன்கண் இவ்வசுழம் பிரயோகிக்கப்பட்டிருத்தலு மறிக.*

**மி**ன்மினிமா விண்மணிபோன் மிளிரொளிநல் காததுபோற்
புன்மதியும் புன்றொழிலு முடையுயிரைப் பரமெனவே
தன்மனசிற் கணித்துள்ளோன் றனக்கொருபோழ் தும்பெரிதாம்
நன்மதிவந் தெய்தாதுன் னண்பருளு மெம்பரனே. (6)

**ம**றைப்பொருளை மாறுபடக் கிரகித்த மலரயன்முன்
இறைக்கடவு ணாமெனக்கொண் டதனாலே யிருஞ்சிரமும்
பொறைப்புவியிற் சினகரமும் போய்முருகாற் சிறையிருந்த
இறைத்தரமு மோர்ந்திலர்நா மென்பரந்தோ வெம்பரனே. (7)

**எ**த்தனைதாங் கற்றிடினு மெத்தனைதாங் கேட்டிடினுஞ்
சத்துவமேன் குணமருவித் தானடங்க லரிதிந்தச்
சித்திவந்தார்க் கிருமலமுந் தேயுமவ ரைத்தொழலாம்
சுத்தவியல் புக்குகனே சொந்தமுறு மெம்பரனே. (8)

**இ**ல்லியெதற் கிச்சைசெயா னென்றிடலா மதுபோலப்
புல்லியவா ணவப்பொலிவிற் பூவுழைமே லாத்தனையே
சொல்லநினைப் பவனெவரைத் தூடணஞ்செய் யானெனலாம்
நல்லவர்நண் புக்கினிதா நம்புடைய வெம்பரனே. (9)

**ம**றமெனுங்காழ் விதைக்கினந்த மறம்விளையு மென்பதையும்
அறமெனுங்காழ் விதைக்கினந்த வறம்விளையு மென்பதையுந்
திறமொடுணர்ந் திலர்தீமை செயற்கிறையு மஞ்சுவரோ
அறவரிறைஞ் சருணகிரி யாற்கினிய வெம்பரனே. (10)

# 31. எம்பரன்

**1.** அனைத்துக்கும் மேம்பட்டதாக விளங்கி, எம்மை ஆட்கொள்ள உரிய பரம்பொருளே! பல தவமுயற்சிகளாலும் தேடிப் பெறுவதற்கு அரிய வீடுபேற்றை, மானுடவடிவில் குறைவற்று இருந்த பெற்றான் சாம்பான் என்பவனுக்கும், கழிமுள்ளிச் செடி ஒன்றுக்கும், பெருங்கருணைகொண்டு சிவப்பொலிவும் ஒளியும் ததும்பும் தமது திருநோக்கால் அன்று வழங்கி அருளிய பேருளாளரான உமாபதிசிவனாரை, ஒருவன், உள்ளத்தில் அறியாமை இருள் சூழப்பெற்று இகழ்ந்துரைத்தல் என்ன காரணத்தாலோ ?

**2.** "எமக்கு உரிய பரம்பொருளே! பிணமாக மாறிச் சாம்பலாகக் கழியும் தனது உடலைத் தன் பேரருள் ஆற்றலால் சிவலிங்க வடிவமாக மாற்றிக் கொள்ளும் செயல்திறம் வாய்ந்த ஒருவரது உயிர் எந்த வடிவமாக மாறி இருக்கும், ?'' – இவ்வாறு, சற்றேனும் சிந்தித்துப் பார்க்க ஆற்றல் இல்லாத ஒருவன், மாசுமுழுதும் நீங்கித் தூய்மைபெற்ற பட்டினத்து அடிகளை விமரிசனம் செய்து உணர்வு நீங்கிய வெறும் கல்லாகவே அவர் ஆயினார் என்று இழித்துக் கூறுதல் எதற்காக ?

**3.** எம் பரனே! இந்த உலகத்தில் சாதாரண நிலையில் உள்ள ஒரு மானுடனை இகழ்ந்துரைத்தல் பாவச் செயலே எனில், அத்துவித ஆனந்தப் பேரருட் செல்வம் உடைய அடியாரை இகழ்ந்துரைக்கும் கொடிய தீச்செயலானது, என்றைக்கும் நீங்காத நரகத் துன்பத்தைத் கொடுப்பதாக அமையுமன்றோ? இந்த உயிரின் விளக்கமானது மேலும் தெளிவும் ஒளியும் மிகுந்ததாகத் திகழ விரும்புவோர் இத்தகைய தீச்செயலை மனத்தாலும் எண்ணுவார்களோ?

**4.** எம் பரனே! விழி இல்லாதான் ஒருவன், காலூன்றி நடந்து செல்வதற்கு, அவனைப் போன்றே விழிஇல்லாமல் இருக்கும் வேறொருவன் அவனுக்கு வழிகாட்டி நடத்திச் செல்ல இயலாது; ஒளியும், நல்ல வடிவ அமைப்பும் வாய்ந்த கண்களை உடைய ஒருவனே அவ்வாறு அவனை வழிநடத்திச் செல்லமுடியும். இந்த நியாய நெறிப்படியே அருள் ஞானமாகிய விழி இல்லாத சிறிய ஆன்மாவும் உன்னைப் பற்றுக் கோடாகக் கொள்ளாமல் உய்திபெறுமோ?

**5.** அடியரை ஆட்கொள்ள விருப்பம் கொண்டுள்ள எம்பரனே! படிகமானது, எந்தப்பொருளைச் சார்ந்துள்ளதோ அந்தப் பொருளின் வண்ணத்தையே வெளிப்படுத்தும் இயல்புடையது எனும் குற்றமற்ற உறுதி முடிபை உணர்ந்துள்ளோர், கம்பீரமான யானை இருக்க, இழிவான நாய்மீது ஏறுவார்களோ? இந்த யதார்த்த நிலையைச் சிறுவர்களின் மதியும் நன்கு அறியாதோ? தெளிவாக அறிந்திருக்குமே!

**6.** எப்பொழுதும் அடியார்க்குத் தோழமை உணர்வோடு அருளும் எம்பரனே! மின்மினிப் பூச்சி பெரிய சூரியன் போன்று, ஒருபோதும் பேரொளியைச் கொடுக்காது. அதுபோன்று அற்பமான அறிவும் அற்பமான தொழிலும் உடைய சீவான்மாவைப் பரம்பொருள் என்றே போலியான தருக்கவாதங்களால் தன் விபரீத மனத்தில் கருதிஇருப்போன் ஒருபோதும் நல்ல சிவஞானத்தைப் பெறமுடியாது. நல்ல சிவஞானம் வழங்குவது உனது அன்புமயமான பேரருளே.

**7.** எம் பரனே! வேதப் பொருளை விபரீதமாகப் புரிந்துகொண்ட தாமரை மலரோனாகிய பிரமன் முன்பொரு சமயம் "நாமே பெரிய தெய்வம்" என இறுமாப்புக் கொண்ட குற்றத்திற்காகத் தனது தலைகளில் ஒன்றை இழந்தான்; பொறுமைக்குப் பெயர்போன இந்தப் பூமிப்பரப்பில் எந்த இடத்திலும் தனக்கெனக் கோயில் கொண்டிருக்கும் பெருமையை இழந்தான்; முருகப்பெருமானால், சிறையில் இருக்கும் நிலைக்கு ஆளானான். பரம்பொருளின் உண்மையான இயல்பை ஒருசிறிதும் உணராதவர்களே “நாமே பிரம்மம்” என இறுமாப்புடன் கூறிக்கொள்வர். அந்தோ! அவர்களின் அறியாமைதான் என்னே!

**8.** இயல்பாகவே தூய்மைபெற்றுள்ள சிவ–இயல்புக்குரிய குகனே! அடியார்களுக்குச் சொந்தப்படுத்திக்கொள்ளும் எம் பரனே! எவ்வளவுதான் படித்தாலும் எவ்வளவுதான் கேட்டாலும் மேன்மைவாய்ந்த சத்துவகுணம் பொருந்தப் பெற்று, சலனமற்ற உள்ளத்துடன் இருத்தல் மிகவும் கடினம். இவ்வாறு இருக்கும் அற்புத சித்தி கைவரப் பெற்றோர்க்கு மாயை, கன்மம் ஆகிய இரண்டு மலங்களும், பெரிதான ஆணவமலமும் நீங்கும். இத்தகையோரைத் தொழுது வணங்கலாம்.

**9.** சிவப்பற்றுள்ள அடியார்களின் அன்புக்கு இனிதாக விளங்குபவனும், அடியாரிடம் விருப்பம் கொள்பவனுமான எம்பரனே! ஒருபொருளும் இல்லாத வறியவன் எந்தப்பொருளை அடைவதற்குத்தான் ஆசைப்படமாட்டான் ? இவ்வாறே புன்மையான ஆணவமலச் செறிவால் அறிவிழந்து இவ்வுலகில் மிகவும் மேம்பாடு உடையவனாகத் தன்னையே கருதிக் கொள்பவன், யாரைத்தான் இழிவாகப் பேசாமல் இருப்பான் ? மமதை மிகுந்து அனைவரையும் குறைகூறிக் கொண்டிருப்பான்.

**10.** அறநெறிப்பட்ட முனிவர்கள் வணங்கும் அருணகிரிப்பெருமானுக்கு மிகவும் இனிமையாக விளங்கிய எம்பரனே! மறம் எனப்படும் கடுமையான விதையை விதைத்தால் மறமே விளையும் எனவும் அறம் எனப்படும் தேர்ந்த, திடமான, விதையை விதைத்தால் அறமே விளையும் எனவும், தெளிவாகவும் உறுதியாகவும் காரண – காரியத் தொடர்பின் அடிப்படையில் நன்கு உணராதவர்கள் தீய செயல்களைச் செய்வதற்கு ஒரு சிறிதேனும் பயப்படுவார்களோ ?

# 32. கருத்து

*கலிநிலைத்துறை.*

**ம**ண்ணில் யாவொரு வன்சொல வறியொரு மனுடன்
எண்ணி லாதிமுற் காரண மியம்பரு மறையைப்
பண்ணி னானெனச் சொலவழி யின்றதைப் பரிவாற்
கண்ணி யங்கிள ரிறைசொன தெனறிடங் கருத்தே. (1)

**உ**லகி லெம்மத முறைக்குமுற் பவநிலை யுண்டெண்
விலக நின்றவன் றந்தவே தாகமங் கட்கோர்
நிலைய தின்றத னாலவை மேலென நிகழ்த்திக்
கலைக ணாயக மெனவயிர்ப் பில்லையென் கருத்தே. (2)

**மு**ட்டி லாதபுற் கலர்தமக் கந்தநன் முறைகள்
கிட்டு மேலவை மாறு படாப்பொருள் கிளக்கும்
துட்டு ளார்க்கவை கிடைப்பி னடாப்பொரு டோன்றக்
கட்டுங் காதைக்கு மாமிதை யோர்தியென் கருத்தே. (3)

---

*1. இத் திருப்பாட்டி னிகழ்த்தப்படு நியாயமும், இதனைத் தழுவிக் கூறப்படுவன சிலவும் எமது வேதவியாசத்தில் 8–ஆங் கடாவிடை முதலியன படித்து நன்குணரலாம் ; வேதம் அனாதியென்பதன் பொருள் 24 – ஆங் கடாவிடையி லறியலாம்.*

*யாவொருவன் – யா – அசை; "யாபன்னிருவர்" என்பதொக்கும்.*

*3. துஷ்டமென்னும் வடசொல் "துட்டு" எனப்பட்டது ; ஒழுங்கின்மை யெனும்பொருட்டு.*

**கா**ண்டல் கருதனல் லாகம மென்பவைக் கமையா
தீண்டி ருக்குமெந் நூலு மறைக்கய லென்றே
மாண்டக் கார்வரை யறுத்திடு வாரதை மதித்துக்
கோண்டி ருத்திமெய் கோடி குகற்றொழு கருத்தே. (4)

**நி**றைந்த ஞான மகேசனு நீளுட றோய்ந்து
குறைந்த ஞான வுறவியுநித் தியமெனக் கூறுஞ்
சிறந்த தருக்கமு மாதலி னுபயமுஞ் சேரக்
கறங்க லின்னிலை கழறுநூ றேற்றமென் கருத்தே. (5)

**சூ**த சங்கிதை தனிலற நூலொரு துகளில்
சாத பஞ்சலக் கணஞ்சிவ னாகமந் தருக்கம்
ஆதி நூல்களு மத்வைத மேசொலு மெனலாற்
காதை யோத்தரு மாகம நீப்பரோ கருத்தே. (6)

**ஆ**ல வாய்த்திரு மான்மிய நூலுளி யரனார்
கோல மாமறை யேநம தாசனங் குவளை
ஓல நூபுர முருவென வுரைத்ததி னாலோர்
காலுஞ் சைவரம் மறையினை நீப்பரோ கருத்தே. (7)

**சு**ருதி யின்கடைக் காண்டவொண் பொருளையே துலக்கிப்
பெருமை யாயுரை தருந்தெளி வாகமம் பிடியார்
அருமை யாமொரு பரகதி நெறியறி யாது
கருமமோகவுப் பாழ்வர்மெய் கருதுகென் கருத்தே. (8)

**ம**றையின் கூறொரு மூன்றனுட் கடைசியு மாறா
இறைவ னாகம பாதமொர் நான்கனு ளீறும்
நிறையு ஞானமென் றாதலி னாலிரு நிலைக்குங்
கறையி லந்தமெ னும்பெய ரெய்துமென் கருத்தே. (9)

---

*4. கோண் = கோணல்.*

*5. உறவி = உயிர். தருக்கம் – நியாயமும் வைசேடிகமுமென இருதிறப்படு தருக்கநூல்கள், நியாயம் நையாயிகமெனவும்படும்.*

*6. சூதசங்கிதை – ஸ்காந்தமஹாபுராணத்தைச் சேர்ந்த இச்சங்கிதையின் வேதா விரோத முரைத்த வத்தியாயத்து 8 – ஆஞ் செய்யுள்.*

*பஞ்சலக்கணம் = புராணம்; சரிதைத்தலைவர் பாரம்பரியம், பிரபஞ்சத் தோற்றம், பிரபஞ்ச வொடுக்கம், மனுக்களரசாட்சி, மனுவமிச வரலாறென்னு மைந்துறுப்புக்க ளுடைமையிற் பஞ்சலக்கண மென்னும் பெயர்த்து. இப்பெயருடைமையின் இது, வேத உபாங்கமெனவும், உபப்பிருங்கணமெனவுங் கூறப்படும். காதை = வாக்கு விசேடம்.*

*7. ஆலவாய்த் திருமான்மியநூல் = மதுரைத் திருவிளையாடற்புராணம். இதுனுழை. உலவாக்கிழியருளிய படலத்தே “மறையே நமது பீடிகையாம்” என்றற்றொடக்கத்துச் செய்யுள்.*

*9. வேதத்தும் ஆகமத்தும் அனாதியான தத்துவார்த்த ஞானபாகமே இந் நூலாசிரியர்க்கு உடம்பாடென்பதிங்ஙன மறியக்கிடப்பது; கருணைக் குகப்பிரம மென்னும் முதற்பத்தின் முதற்றிருப்பாட்டு முரையுங் கருதுக என்க.*

**ஆ**க மத்தின தந்தமிச் சைவசித் தாந்த
சாக ரஞ்சிவ ஞானபோ தாதிக ளதுவே
ஆகு மென்றறி வாயரு ணைப்பெய ரடிகள்
வாகு யர்ந்திட வாழ்த்தொரு வனைநினை கருத்தே. (10)

# 32. கருத்து

1. என் உள்ளத்தில் ஒளிரும் மெய்ப் பொருள் மயமே! இந்நிலவுலகில் ஒரு மனிதன், யாராவது ஒன்றைப்பற்றிச் சொல்வதாலேயே, அவன் அதைப்பற்றி அறிகிறான். அத்தகைய மனிதன், முற்பட்டுள்ள தோற்றக் காரணம் இன்னதென்று கூறுவதற்கரிய வேதத்தை இயற்றினான் எனக் கூற வழி ஏதும் இல்லை. உயிர்கள் மேலுள்ள கருணைகாரணமாக, பிரபஞ்சத்தை அருளாணை வழி நடத்தும் கண்ணியம் மிக்க இறைவனே அந்த வேதத்தைக் கூறினான் எனக் கொள்ளுதலே திடமாக ஏற்றுக்கொள்ளுதற்குரியது.

2. என் கருத்துமயமாக ஒளிரும் ஞானமே! உலகில் வேறு எந்த மதத்திற்கும் அடிப்படை நூலாக உள்ள மறைநூலுக்கு ஒரு குறிப்பிட்ட தோற்றக்காலம் உண்டு. சிந்தையையும் காலக்கணிப்பையும் கடந்து அதீதப்பட்டுள்ள இறைவன் தந்த வேத ஆகமங்களுக்குக் கணிக்கப்படக் கூடிய காலநிலை ஏதும் இல்லை. எனவே அத்தகைய வேத ஆகமங்களே மேம்பட்ட சிறப்புடையவை என உறுதிசெய்து, அவை, சாத்திரங்கள் அனைத்திற்கும் தலைமைத்தானத்தில் உள்ளவை எனக் கூறுவதில் தடை ஏதும் இல்லை.

3. என் சிந்தனைப் பொருளே! தமது அறிவுக்கு மறைப்பு ஏதும் இல்லாமல் இருக்கும் ஆன்மாக்களுக்கு அந்த வேத ஆகமங்கள் கிடைக்குமாயின் அவை, என்றைக்கும் முரண்படாத மெய்ப்பொருள் முடிபுகளையே புலப்படுத்தும். மறைக்கப்பட்ட அறிவும், அபக்குவநிலையும் உடையோர்க்கு அவை கிடைக்குமாயின் அவை பொருந்தாப் பொருள்களும் முரண்பாடுகளும் உடையனவாக மாறுபட்ட கருத்துக்களையே மிகநீண்ட வாதங்களால் எடுத்துரைக்கும். இதனை நன்கு சிந்தித்து உணர்க.

4. குகப்பெருமானையே தொழும் எனது சித்தமே! பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம் எனப்படும் பிரமாணங்களுக்கு உட்படாமல் இங்கே உள்ள எந்த நூல்களும் வேத ஆகமங்களுக்குப் புறம்பானவை என்றே மாட்சிமை பொருந்திய பெரியோர் வரையறை செய்து கூறியுள்ளனர். இந்தக் கூற்றை நன்கு மதித்து உணர்ந்து, முரண்பாடுகள் உடையவை போல் தோன்றுகின்றவற்றைச் சீர்செய்து உரியமுறையில் சொற்களை இணைத்து உண்மைப்பொருள்களையே கிரகித்துக் கொள்க.

*10. வாகு = அழகு; ககரவெதுகை.*

**5.** என் சிந்தனைப் பொருளே; முற்றறிவு எனப்படும் சர்வக்ஞுத்துவம் உடைய மகேசுவரனும், வினைக்கு ஈடாகத் தொடர்ந்து நீடிக்கும் உடலோடு கூடிச் சிறுமைப்பட்டிருக்கும் ஞானத்தை உடைய ஆன்மாவும் நித்தியமே என நியாய வைசேடிக நூல்களும் கூறும் ஆதலின் வேதநெறி, ஆகமநெறி ஆகிய இரண்டும் சேரப்பெற்று, மனச்சுழற்சி இல்லாத இனிய நிலையை எடுத்து விளக்கும் நூலே மிகவும் தெளிவைத் தருவதாகும். இதனை உணர்ந்து கொள்.

**6.** எனது சிந்தனைப் பொருளே! காந்த புராணத்தைச் சேர்ந்த சூதசம்மிதை எனும் நூலில் ''தருமசாத்திரங்களும், பஞ்சலக்கணம் கூறும் குற்றமற்ற புராணநூல்களும், சிவபெருமான் அருளிய ஆகமங்களும் மற்றும் தருக்கம் முதலான நூல்களும் அத்துவைத நிலையைப்பற்றியே பேசுகின்றன எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதால், வாக்குவிசேடம் உடைய வேத நெறிப்பட்டவர்களும் ஆகமநூல்களைப் புறக்கணிப்பார்களோ ?

**7.** எனது சிந்தனைப் பொருளே! மதுரைத் திருவிளையாடற் புராணம் எனப்படும் ஹாலாஸ்ய மான்மியம் எனும் நூலில் சிவபெருமான் "சொற்பொருள் அழகு மலிந்த வேதமே நமக்குப் பீடம்; வேதமே நமக்குக் கண்கள், வேதமே ஒலிசெய்யும் கழல்; வேதமே நமது வடிவம்'' என்று கூறியுள்ளதால், சைவர்கள் ஒரு போதேனும் அந்த வேதத்தைப் புறக்கணிப்பார்களோ ? தள்ளாமல் ஏற்றுக்கொள்வரன்றோ !

**8.** எனது சிந்தனைப் பொருளே ! வேதத்தின் இறுதிக் காண்டமான ஞானகாண்டத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையே விளக்கி, ஆகமநூல்கள் விரிவான அளவில் தெளிவுபடுத்தி உரைத்திடும். இத்தகைய ஆகமங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள், அரிய முயற்சிகளாலும் அடைவதற்கு அரிய பரகதிக்கு உரிய நெறியை அறியமுடியாமல், எப்பொழுதும் கருமநெறியாகிய மோகக்கடலிலேயே அறியாமை வயப்பட்டு ஆழ்ந்திருப்பார்கள்.

**9.** எனது சிந்தனைக்குரிய பொருள்மயமே ! வேதத்தின் மூன்று கூறுகளுள் இறுதியில் உள்ள கூறும் (அதாவது மூன்றாவது கூறும்), விகற்பம் அணுகாத இறைவன் அருளிய ஆகமத்தின் நான்கு பாதங்களுள் இறுதியான பாதமும், நிறைவான ஞானம் என்றே பெயர்பெற்றுள்ளன ஆதலின் வேதம் ஆகமம் எனப்படும் இரண்டு நெறிகளுமே இறுதியில், குற்றமற்ற, 'அந்தம்' என்னும் பெயர் பொருந்தப்பெறும் (வேதாந்தம் என்றும் ஆகமாந்தம் என்றும் அழைக்கப்பெறும்).

**10.** அருணகிரிப்பெருமானின் சிவாத்துமப் பொலிவு மேலும் சிறந்துவிளங்க அருள்புரிந்து வாழ்த்திய குகப்பெருமானையே எப்பொழுதும் சிந்திக்கும் எனது சித்தமே! சைவசித்தாந்தப் பெருங்கடல் என விளங்கும் இந்த நூலும், சிவஞான போத முதலான நூல்களும் ஆகமத்தின் அந்தம் (ஆகமாந்தம்) எனவே கருதப்படுபவை ஆகும்.

# 33. பயின்றறிபவன்

*பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**உ**ரையுயர் முதனூ லாகம மெனும்பே ருறுதலி னுதித்துள தெனவே
உறுபொரு ளாமஃ தெங்கிருந் துதித்த தெனிற்பர மாத்தரி னின்றும்
புரையற வுதித்த தென்னவா மினமும் புகன்றவவ் வாகம விசையிற்
பொருந்திய வொருமுப் பொறிகளு முறையே புரணபா சம்பசு பதியென்
றுரைதரு மலாமன் ஞானமொண் மோக்க முறுமல நாசமென் றாகும்
உன்னிடற் கரிதா மப்பர மாத்த ரெனுந்திரு வருட்சிவ னுரித்தால்
நிரைதர வுருத்தி ரர்க்கருள் புரிந்தா னிகரிலவ் வாகம மெனவந்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(1)

**அ**ச்சிவன் றனுடை நான்முக முதித்த வாரணங் களையனந் தரைக்கொண்
டயற்கருள் புரிந்தா னூர்த்துவ முகத்தா னருணெறிக் காமிக மாதி
உச்சித சிவாக மங்கணா லேழு முதித்திட வருளின னவற்றுள்
ஓங்குபத் தினைநற் பிரணவர் முதலா யுளபதின் மர்க்குமற் றவையை
மச்சறு குணருத் திரர்முதற் பதினெண் மர்க்குமா விருவகைப் பேதம்
வகுத்தரு ளினன்முன் னவைகளைச் சிறந்த மான்மிய வித்தியே சுரருள்
நிச்சய சிரேட்ட வனந்தருக் கருளா னிகழ்த்தின னென்னவே யுணர்ந்தந்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(2)

**அ**ந்தமா வனந்தர் நூற்றொடு பதினெட் டாமுருத் திரர்களுண் முதன்மை
அலங்கிடு சீகண் டருக்கருள் புரிந்தா ரவர்சிவ கணஞ்சுரர் களுக்கும்
அந்தணர் களுக்கு மாகுமா தம்மெய் யருட்டிரு வுளமது கனிந்தே
அருளின ரெனவு மாரண நான்கு மரன்குணக் காதியா நான்கு
செந்திரு வதனங் களிலுமா கமங்கள் சிறந்தவீ சானமேன் முகத்துஞ்
செனித்தன வெனமுற் காமிகா கமமே செப்பிடு மெனவுநன் குணர்ந்து
நிந்தையில் பரம சுகநிலை யதையே நிகழ்த்திடு மாகம வதராம்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(3)

---

1. *புராணம் "புரணம்" எனப்பொருந்திற்று, புராணம் = பழமை.*
2. *இருவகைப்பேதம் = சிவபேதம், உருத்திரபேதம்.*

**மு**தன்முறை யெனுமா கமங்களுக் கியைய மொழிவழி நூனர சிங்கம்
முதலிய விருநூற் றேழுள வவற்றின் முடிபுணர்ந் துக்கிரச் சோதி
கதிமதி நிமிருஞ் சத்தியச் சோதி கனபிரு கற்பதி முதலோர்
கழறிய போக காரிகை மோக்க காரிகை நிராசகா ரிகையே
இதமுறு பிரக ரணமெனும் புடைநூ லீட்டமு முண்டுகா மிகந்தான்
இயம்புமா றிலௌகி கஞ்சுரு தியத்தி யான்மிக மிகலதி மார்க்கம்
நிதநவின் மந்தி ரமெனுமோ ரைந்தா நின்றிடு மாகம மெனத்தேர்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(4)

**ப**றைந்தவை வகையு மாளியா யிகத்திற் பயன்றர லிறுதியிற் பயத்தல்
பகுத்தறிந் திடுமான் மப்பொருள் விசாரம் பாங்குடை யோகமெய் யருளோ
டுறைந்துயு மொருமெய்ஞ் ஞானமா மிவைதா மொன்றனுக் கொன்றுமே லெனவே
ஓங்கிடு முயர்ந்த மந்திரம் பிறநூ லுரைகளைப் பூருவப் படுத்திச்
சிறந்தசற் சிவசித் தாந்தமா விளங்கிச் செப்பிய வேனைய நான்குந்
தேற்றுறழ் வெனுந்தன் பாதம தன்கீழ்த் திகழுமுப் பாதமு ளடங்க
நிறைந்துமா வாக மாந்தமீ தென்ன நின்றிடு மெனநனி தேர்ந்தந்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(5)

**மோ**தமிக் குறுவான் சனகனா தியர்க்கு முப்பொரு ளிரகசிய மாமா
முக்கிய வாக மாந்தம தெனவே மொழிவழி நவின்றுகொண் டிருந்தான்
சீதவெண் பிறைசேர் சடாடவித் தலைமைத் தேவெனக் காந்தமுஞ் சிவனந்
திருவிடை முகற்குக் குருமர பிலங்கத் திவ்விய மறைசிவா கமங்கள்
ஏதமி னேச்ச னகாதிகட் குரைக்க வியம்பின னெனச்சிவ புராணம்
எழின்மதன் காதை யறையுழி யீரைந் தென்னுமத் தியாயமும் பனுமிந்
நீதமெய்த் துறையே வாதவூர் முனிக்கு நிகழ்த்தின னரனெனத் தேர்ந்தந்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(6)

**ம**றைபயின் மார்க்க விருத்தியி லார்க்கு மறைநெறி வழீஇய பெயர்க்கும்
வழுத்தின னரனா கமமெனக் கூர்மம் வாசிட்ட லிங்கநற் காந்தப்

---

*4. நரசிங்கம் = **மிருகேந்திர** மென்னும் உபாகமம். "காமிகந்தான் இயம்புமாறு" என்றதை,*

*(லௌகிகம்வைதிகஞ்சைவ ததாத்யாத்மிகமேவச |*
*அதிமார்க்கஞ்சமந்த்ராக்யம் தந்த்ரமேததநேகதா || )*

*"இலௌகிகமெனவும், வைதிகமெனவும், அத்தியான்மிகமெனவும், அதிமார்க்கமெனவும், மந்திரமெனவும் இத்தந்திரமானது அனேகவிதப் படும்" என்று **அக் காமிகாகம** தந்திராவதாரபடலங் கூறுதலினறிக.*

*5. உறழ்வெனுந் தன்பாதம் = ஞானபாதம்; உறழ்வு = ஞானம்*

*6. மோதமிக்குறுவான் = களிப்புமிகுந்துறும்பொருட்டு ; வான் – எதிர்கால வினையெச்சவிகுதி. விடைமுகன் = திருநந்திதேவர். நே = அன்பு. சிவபுராணம் = **சைவமஹாபுராண** தருமசங்கிதை.*

பறைகிளர் சூத சங்கிதை யாதி பனுவல்க ளிறுத்தலெற் றெனினோ
பாடண்ட வாம சோமலா குளம்வன் பைரவ முதலிய வெனுங்கீழ்
முறைகளை யவண மதிர்த்தன வாமேன் முறைகளாங் காமிகா திகளை
மொழிந்தில விதுபோற் கூரும மணஞ்சொன் முகக்கவி நாற்பதின் மேலே
நிறையுரை தருமப் பயருமிவ் வாறு நிகழ்த்தின ரெனநனி தேர்ந்தந்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(7)

**ஆ**த்தன துரையா யுள்ளநல் லாக மங்களி னின்றுமா ரணங்கள்
ஆயவை கீழ்மை யாமெனப் பழைய வாகம சாரமும் பரனை
ஏத்திடு சிலபு ராணமென் பனவு மிசைத்தலெற் றெனின்மறைப் பூர்வம்
என்றபங் கினையு ஞானபா கத்தி னிசைகணற் றெளிவிலா மவுனம்
பூத்தனே கார்த்த மதநுழை நீர்மை தன்னையு மெண்ணியன் னணமே
புகன்றன வெனலா முண்மையை யிகழ்ந்து புகன்றன வெனலடா தெனமால்
நீத்தவ ரறிவா ரவர்களுக் கிரண்டு நேத்திர மாமென வுணர்ந்தந்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(8)

**ச**துர்த்தச மெனும்வித் தையுளியா கமக்கீர் சார்ந்ததன் றெனச்சிலர் கீழ்மை
சாற்றினன் னவருக் கறிவுறுத் திடுவான் சைவரோ திடுவதெற் றெனினோ
அதிர்த்தவித் தையிலொன் றாயுள தருக்க மளவையி லாகம மெனவே
அறைந்திடு மலது வேதமென் றறையா தாகலின் வேதமொப் பன்றென்
றொதுக்கநே ரிடுமாண் டாகம மெனலே யோத்தெனி னந்தவித் தையினும்
உள்ளவோத் ததுவே யாகம மெனவு முரைத்தவித் தையிலுள புராணம்
நிதப்பதி நூலைப் புகழ்ந்திசைப் பதனா னீங்குறா தெனவுமிங் குணர்நீ
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(9)

---

*7.* ***கூர்மபுராணத்தே*** *திருக்கலியாணங் கூறுமிடத்தே –*

*"சாறு வாகங் காபாலஞ் சாற்றும் பாஞ்ச ராத்திரநூன்*
*மாறு செய்யும் வாமமுள்ள மயங்கச் செய்த நூலாகுந்*
*தேறி யிந்நூற் படி நின்றோ ரிவற்றை யுலகிற் செப்பிடுவோர்*
*பாறு தொடரு நரகத்தி லளப்பில் காலம் படிந்திடுவார்."*

*எனவருவது **41**–ஆஞ் செய்யுளா யிருத்தலினாற்*
*"கூருமம் நிறை மணஞ் சொன்முகக்கவி நாற்பதின் மேலே யுரைதரும்" என்று கூறினாரென்க.*

*அப்பயதீக்ஷிதர் நிகழ்த்தினதைச் சிவதத்துவ விவேகவிருத்தியிற் காண்க.*

*9. சதுர்த்தசவித்தை = வேதம்–**4**, வேதாங்கம்–**6**, மீமாஞ்சை –**1**, தருக்கம் –**1**, புராணமெல்லாம் – **1**, மிருதியெல்லாம் – **1**, ஆக **14**. தருக்கம் = அன்னம்பட்டீயமென்னுந் தருக்கசாத்திரம்.*

*புராணம் நிதப்பதிநூலைப் புகழ்ந்திசைப்பதை – சைவபுராண வாயுசங் கிதையின் பாசுபத யோகமு மெண்வகை நாமமு முரைத்தவத்தியாயத்து **28**–ஆஞ் செய்யுள், சிவபிரானு மாதேவிக்கருளிய வத்தியாயத்து **22** ஆஞ் செய்யுள், ஞானநிலைமையுரைத்த வத்தி யாயத்து **36**–ஆஞ் செய்யுள், தேவர்களுக்குச் சிவாகமமளித்த வத்தியாயம் ஆகிய இவைகளானுணர்க.*

இருவகைப் பனுவல் களுமர னறையா யிருத்தறொட் டாகம மெனவும்
இன்பமா மறிவை விளக்கலா னிரண்டு மேதமில் வேதம தெனவும்
பொருவிலாப் பெயர்கள் பெறுமிதை யறியாப் புல்லிய மாந்தரா கமத்தைப்
புறம்பெனன் மடஞ்சால் பித்துரை யெனவும் புகரறு பெரியவர்க் கபேதம்
அருமுறை யிரண்டநந் தங்களு மாமென் றருட்டிரு மூலரு மறைக்கும்
ஆகமத் தினுக்கும் வேற்றுமை யறியே மென்றரு ணீலகண் டருமே
நிருமல முறச்சொற் றாரென வுந்தோ் நீயரு ணைப்பெய ரறவோன்
நிசநெறி யடைந்தா ணிறையருட் குகன்பா னெஞ்சுசெய் பயின்றறி பவனே.
(10)

# 33. பயின்றறிபவன்

1. பெரியோரும் குருவும் காட்டும் நல்வழியில் திடம்பட நடந்து உண்மையை உணரவல்லோய்! புகழ் மலிந்த முதன்மை நூலானது 'ஆகமம்' எனும் திருப்பெயர் பொருந்தியுள்ளது. "உதித்துள்ளது" எனும் பொருளை உடையது ஆகமம் எனும் பெயர் ஆதலின் 'அது எங்கிருந்து உதித்தது' எனக் கேட்டால் பரம ஆப்தராகிய சிவபெருமானிடமிருந்து, குற்றமற உதித்தது எனக் கூறப்படும் (பரம ஆப்தர் = அனைத்தையும் தன் உடைமையாகப் பெற்று முழுநிறைவு பெற்றுள்ள முற்றறிவினன்).மேலே கூறப்பட்ட அந்த ஆகமத்தில் இணக்கமாகப் பொருந்தியுள்ள மூன்று பொருள்களும் முறையே நித்தியமான பாசம், பசு, பதி என்பனவாம். இதுவன்றியும் ஞானம் (ஆ), வீடுபேறு (க), மலநாசம் (ம), எனும் பொருளையும் அந்தப் பெயரிலுள்ள

*10. "பெரியவர்க்கபேதம் அருமுறை யிரண்டந்தங்களும்" என்று திருமூலர் கூறியருளின ரென்பதை – "வேதமொ டாகம மெய்யா மிறைவனூல்" என்றற்றொடக்கத் தவரது மந்திரத்தூக்கில் "இரண்டந்தம், பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே" என ஆறந்த மென்புழி வருதலினறிக. இப்படி வேதாகம அபேதம் இனிது கூறியிருக்க; யாதானு மோராகமம். வேதத்தை யிழித்துக்கூறித் தன்னையுயர்த்திக்கொள்ளு மெனின், – அஃதடாத காரியமாம். திட்பங் காண்க (முதற்பத்து, 2–ன் உரை).*

*நீலகண்ட சிவாசாரியரது பிரமசூத்திரபாடியத்தே பாஞ்சராத்திராதி கரணத்திற்கு முற்பட்டுள்ள பாசுபதாதிகரணத்தே "வேதத்திற்குஞ் சிவாகமத்திற்கும் பேதங்கண்டிலம்" என வருவதே –"மறைக்கு மாகமத்தினுக்கும் வேற்றுமை யறியேம்" எனவிங்கே கூறப்படுவதாயிற்று. பேதங்கண்டிலமென்பதை விளக்குவான் வேதத்திற்குஞ் சிவாக மத்திற்குஞ் சிவனே கருத்தாவென்பதும், பிரமம் பிரணவம் பஞ்சாக்கரம் பிராசாத முதலிய மந்திரம் பசுபதி பாசாதி வத்துவியவகாரம் பஸ்மோத்தூளன திரிபுண்டர தாரணம் இலிங்கார்ச்சனம் உருத்திராக்க தாரணாதி தருமங்க ளெல்லாம் அவ்விருதிற நூல்களிலுஞ் சமமாகக் காணப்படுகின்றன வென்பதும், சிவனுக்கு நிமித்தகாரண மொன்றே கூறொண்ணாது அக்காரணத்தோடு உபாதான காரணமுங் கூறல்வேண்டும், இதுவே அவ்வேதாகம சம்மதமென்பதும் அப்பாடியத்தே கூறப்பட்டுள. இவ்விவர முணர மாட்டாது 'பேதங்கண்டிலம்' என்றதற்குப் பொருள் – நிமித்த காரணமொன்றே கூறிக்கொள்ளுந் தங்கொள்கையினையே நீலகண்ட பாடியமு மொப்புகின்றதெனச் சைவருட் சிலர் எண்ணிக் கொள்வாராயினார். உபயகாரணம்பற்றி யுணரவேண்டிய நியாயம் – பரிபூரணானந்தபோதத்து முற்படலத்து 8–ன் உரையில் வரூஉம் ஊர்ண நாபிப்பூச்சி யுவமானவாயிலாக விளக்கினாம்; அது காண்க.*

*இங்ஙனறிவுறுத்தவாறு "அருணைப் பெயரறவோன"து நிசநெறியும் வேதாகம வுடம்பாடே யென்றற்கு அவரருளிய கந்தரலங்காரத்துப் 17–ல் "வேதாகம சித்ரவேலா" என வருவதூஉம் போதிய சான்றென்க.*

எழுத்துக்கள் குறியீடாக நின்று உணர்த்தும். வாக்காலும் மனத்தாலும் உணர்தற்கரிய அந்தப் பரம ஆப்தராகிய திருவருள் சிவனார், உபதேசம் கேட்பதற்குத் தகுதிபெற்றுள்ள உருத்திரர்களுக்கு அந்த ஒப்பற்ற ஆகமங்களை நிரல்பட உபதேசித்து அருளினார். இவ்வாறு வந்த ஆகமத்தில் கூறப்படும் தூய, உண்மையான நெறியைப் பற்றுக்கோடாக அடைந்து, அடியரை ஆட்கொள்ள உரியவனும் நிறைவான அருட்பேறு உடையவனுமான குகப்பெருமானிடம் உறுதியாக உன் உள்ளத்தை ஒப்படைத்திரு.

2. பயின்று அறியவல்லோய்! அந்தச் சிவபெருமான் தமது நான்கு முகங்களிலிருந்தும் தோன்றிய வேதங்களை அனந்தேசுவரர் மூலமாக பிரம்மனுக்கு உபதேசித்து அருள்புரிந்தார். தமது மேல்நோக்கிய ஊர்த்துவ முகத்தால் அருள்நெறிக்கு மிகவும் பொருத்தமான இருபத்தெட்டு சிவாகமங்களையும் தோற்றுவித்து அருளினார். அவற்றுள் சிவபேதம் எனும் பெயரால் உயர்ச்சி பெற்றுள்ள பத்து ஆகமங்களை பிரணவர் முதலான பத்து சிவான்மாக்களுக்கும் ஏனைய பதினெட்டு ஆகமங்களை மயக்கற உணரவல்ல குணருத்திரர்கள் பதினெட்டுப் பேர்களுக்கும் உபதேசித்து அருளினார். இவ்வாறு சிவபேதம் எனவும் ருத்திரபேதம் எனவும் உள்ள இருவகைப் பிரிவுகள் வகுத்து அருளினார். இருபிரிவையும் சார்ந்த இருபத்தெட்டு ஆகமங்களையும் மகிமைபொருந்திய வித்யேசுவரர்களுள் உறுதித் தன்மையும் மேலான சிறப்பும் பொருந்தியுள்ள அனந்தேசுவரர்க்கு அருளினார். இவ்வாறு ஆகமம் வந்த முறையை உணர்ந்து, தூய்மையும் மெய்ம்மையும் பொருந்திய நெறியை அடைந்து, அடியரை ஆட்கொள்ளும், நிறைவான அருள்மய குகப்பெருமானிடம் உனது உள்ளத்தைத் திடமாக ஒப்படைத்திரு.

3. பயின்று அறிய வல்லோய்! அந்த அனந்தேசுவரரும் நூற்றுப்பதினெட்டு ருத்திரர்களுள் முதன்மை பெற்றுவிளங்கும் ஸ்ரீகண்ட ருத்திரர்க்கு அந்த ஆகமங்கள் அனைத்தையும் உபதேசித்து அருளினார். ஸ்ரீகண்டருத்திரர், கேட்பதற்குரிய பக்குவம் பெற்ற சிவகணத்தவர்க்கும் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பொருத்தமாக விளங்குமாறு தமது மெய்யருள் மயமான திருவுளம் கனிந்து உபதேசித்தார். சிவபெருமானின் கிழக்கு நோக்கிய தத்புருஷம் தெற்குநோக்கிய அகோரம் முதலான நான்கு திருமுகங்களிலிருந்து வேதங்கள் வெளிப்பட்டன என்றும் மேல் நோக்கிய ஊர்த்துவ முகமான ஈசான முகத்திலிருந்து காமிகம் முதலான இருபத்தெட்டு ஆகமங்கள் வெளிப்பட்டன என்றும் முன்னர்க் கூறப்பட்ட காமிக ஆகமமே கூறும். இதனை நன்குணர்ந்து, இழிப்புரைக்கு இடம் கொடுக்காத, பரம ஆனந்தப் பேற்றை வெளிப்படுத்தி அடையச் செய்யும் ஆகமவழியாகிய மெய்ந் நெறியை அடைந்து. அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் உறுதியாக உனது உள்ளத்தை ஒப்படைத்திரு.

4. பயின்று அறிய வல்லோய்! முதன்மையான மறை எனப்படும் ஆகமங்களுக்கு முரண்படாத வகையில் மொழியக்கூடிய மிருகேந்திரம் முதலாக உள்ள வழிநூல்கள் எனப்படும் உபாகமங்கள் இருநூற்று ஏழு (207) உள்ளன. மூலாகமங்கள், உபாகமங்கள் ஆகியவற்றின் முடிவான சித்தாந்தத்தை உணர்ந்து உக்கிரஜோதி, சிவஞானப் பேறு மிக்க சத்யோஜோதி, பெருமைக்குரிய பிருகஸ்பதி முதலானோர் வரைந்துள்ள போககாரிகை, மோக்ஷ காரிகை, பரமோக்ஷ நிராச காரிகை என்பன முதலாக இனிமை மிகுந்த அட்டப்பிரகரணம் எனப்படும் சார்புநூல் தொகுதியும் உண்டு. காமிக ஆகமம் கூறுமாறு இலௌகிகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மந்திரம் எனப்படும் ஐந்து நெறிகளில் ஆகமப்பொருள் விளங்கும்

எனத் தேர்ந்துணர்ந்து, மெய்ந்நெறிநின்று, அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் உறுதிப்பட உனது உள்ளத்தை ஒப்படைத்திரு.

5. பயின்று அறியவல்லோய்! கூறப்பட்ட இலௌகிகம் முதலாக உள்ள ஐந்து பகுதிகளும் முறையே (1) இந்த உலகவாழ்க்கையில் இப்பிறவியில் பயன்தரல் (2) இறுதியில் பயன்தரல் (3) ஆத்மா, அனாத்மா எனப் பகுத்தறிய உதவும் ஆன்மப்பொருள் தொடர்பான விசாரம் (4) முறைமைப்பட்ட யோகம் (5) மெய்யருளோடு இணைந்து உய்தியைத் தரவல்ல மெய்ஞ்ஞானம் என்பன ஆகி, ஒன்றனுக்கு ஒன்று மேம்பாடு உடையதாகத் திகழும். இவ்வகையில் மிகவும் உயர்நிலையில் விளங்கும் மந்திரம் எனும்பகுதி, ஏனைய நூல்கள் கூறும் கருத்துக்களைப் பூருவபக்ஷப்படுத்திச் சிறப்பானதும் என்றைக்கும் மெய்ம்மைப்பட்டிருப்பதுமான சைவசித்தாந்தம் என விளங்கும். மேலும் ஞானபாதமாகிய தனது நிலைக்குக் கீழே உள்ள சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றுபாதங்களுள் மற்றைய லௌகிகம் முதலான நான்கும் அடங்கிநிற்கத் தான் முழுநிறைவு உடையதாய் ‘ஆகமாந்தம் இதுதான்’ எனத் தெளிவாக உரைக்குமாறு திகழும். இவ்வாறு நன்கு தெளிவாக உணர்ந்து, மெய்ந்நெறி நின்று, அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் உறுதிப்பட உனது உள்ளத்தை ஒப்படைத்திரு.

6. பயின்று அறியவல்லோய்! “குளிர்ந்த வெண்பிறை சேர்ந்துள்ள, அடர்ந்த காடுபோன்ற சடாபாரத்தை உடையவரும் தலைமைத் தெய்வமும் ஆன சிவபெருமான் சனகர் முதலான நான்கு முனிவர்களுக்கும் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களின் நுட்பத்தை, மிகவும் பெருமைக்குரிய ஆகமாந்தம் இதுதான் என்னுமாறு தனது திருவாக்கால் உபதேசித்துக் கொண்டிருந்தார்" என்று காந்தபுராணம் கூறுகிறது. குற்றம்தீர்ந்த மெய்யன்புடைய சனகர் முதலானோர்க்கு, குருமரபு தழைத்து விளங்கும் வகையில் நந்திதேவர் திவ்வியமான மறைகளையும் சிவாகமங்களையும் உபதேசிப்பதற்காகச் சிவபெருமான் அந்த நந்திதேவருக்கு அவற்றை உரைத்தருளினார் எனச் சைவமஹா புராணத்தின் தருமசம்மிதை அழகிய மன்மதன் தொடர்பான வரலாற்றைக் கூறுமிடத்துப் பத்தாம் அத்தியாயம் விவரிக்கின்றது. இந்த முறைப்பட்ட, மெய்ம்மையான ஆகமாந்தமான சைவசித்தாந்த மரபுப்பொருளையே சிவபெருமான் மாணிக்க வாசக சுவாமிகளுக்கு உபதேசித்து அருளினார். இந்த உண்மைகளையெல்லாம் நன்குணர்ந்து, மெய்ந்நெறி நின்று, அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் திடம்பட உனது நெஞ்சத்தை ஒப்படைத்திரு.

7. பயின்று அறிய வல்லோய்! வேதத்தை முறையாகப் பயிலும் உரிமை இல்லாதாவர்க்கும் வேதநெறி வழுவியவர்க்கும் பயன்படும் பொருட்டாகவே சிவன் ஆகமங்களைக் கூறினான் எனக் கூர்மபுரணம், வாசிட்டலிங்கம், காந்தபுராணத்தின் பகுதியான சூதசம்மிதை முதலான நூல்கள் கூறியுள்ளமை எதற்காக எனில் – பாஷண்ட நெறி, வாமம், சோமம், லாகுளம், கடினப் போக்குடைய பைரவம் முதலான தாழ்ந்த நெறிகளுக்குரிய ஆகமங்களைப் பற்றியே அவ்வாறு அவை கூறியுள்ளன; மிகவும் மேம்பட்ட சிறப்புடைய காமிகம் முதலான ஆகமங்களை அவ்வாறு அவை கூறவில்லை. இவ்வாறு கூர்மபுராணம், திருக்கலியாண வைபவம் கூறும் இடத்தில் நாற்பத்தோராம் பாடலில் நிறைவாக உணர்த்தியுள்ளது. அப்பைய தீக்ஷிதர் பெருமானும் தமது சிவதத்துவ விவேக விருத்தியுரையில் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். இவ்வாறு மிகவும் தெளிவாக உணர்ந்து

கொண்டு, மெய்ந்நெறி நின்று, அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் உறுதிப்பட உனது உள்ளத்தை ஒப்படைத்திரு.

8. பயின்று அறியவல்லோய்! பரம ஆப்தரது உரைகளாக உள்ள ஆகமங்களை நோக்க வேதங்கள் மிகவும் தாழ்ந்த நிலை உடையவை எனப் பழைய நூலாகிய ஆகமசாரம் எனும் நூலும், சிவபெருமானைப் புகழ்ந்துரைக்கும் சில புராணங்களும் கூறுதல் எதற்காக எனில், வேதத்தின் பூர்வபாகம் என்பதையும், சில இடங்கள் தெளிவு படாதவகையில் வறிதே விளங்கிப் பலபொருள் கொள்ள இடம் கொடுப்பதாகிய அனேகார்த்த வாதம் பொருந்தி இருப்பதையும் கருதியே அவை அவ்வாறு கூறுகின்றன எனலாம். வேதத்தின் முடிபான, மெய்ம்மையான பகுதிகளை அவை அவ்வாறு கீழ்நிலைப் படுத்தி உரைக்கின்றன எனக் கொள்ளுதல் பொருந்தாது. இவ்வாறு, மயக்கம் அற உண்மைநிலையை அறியவல்லோர்க்கு, வேதம் ஆகமம் எனும் இரண்டும் இரண்டு கண்களாகவே விளங்கும். இவ்வாறு மெய்ந்நிலை உணர்ந்து அந்த மெய்ந்நெறி நின்று, அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் உனது உள்ளத்தை ஒப்படைத்திரு.

9. பயின்று அறிய வல்லோய்! வேதம், வேதாங்கம் என்பன முதலாகப் பதினான்கு வித்தைகள் எனக் கூறப்படும் தொகுப்பில் ஆகமம் இடம் பெறவில்லையே எனச் சிலர் ஆகமத்தை இழித்துக் கூறின், அன்னவர்க்கு அறிவுறுத்தித் தெளிவு படுத்துதற்காகச் சைவர்கள் கூற உள்ளது எது ? என வினவில் – கூறப்பட்ட பதினான்கு வித்தைகளுள் ஒன்றாக உள்ள தருக்கம் என்பது அடிப்படைப் பிரமாணங்களுள் ஒன்றாக ஆகமத்தைக் கூறுகின்றதே தவிர வேதம் என்பதைக் கூறவில்லை. எனவே வேதம் பிரமாணமாக ஆகாது என ஒதுக்க நேரிடும். "அவ்வாறு ஒதுக்க வழிஇல்லை. ஏனெனில் ஆகமம் எனும் சொல்லே வேதத்தையும் குறிக்கும்" என வாதிட்டால், அந்தப் பதினான்கு வித்தைகளுள் ஒன்றாகிய வேதம் என்பதே ஆகமம் என்பதையும் குறிக்கும் என்றும், உரைக்கப்பட்ட வித்தைகளுள் ஒன்றான புராணம், நித்தியமான இறை நூலாகிய ஆகமத்தைச் சிறப்பித்துப் புகழ்ந்து கூறுதலால் ஆகமம் ஒதுக்கப்பட மாட்டாது எனவும், இங்கே நீ உணர்ந்து கொள்க. அந்த ஆகமம் கூறும் மெய்ந்நெறி நின்று அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் உறுதிப்பட உனது உள்ளத்தை ஒப்படைத்திரு.

10. பயின்று அறிய வல்லோய்! வேதம், ஆகமம், எனும் இருவகை முதல் நூல்களும் சிவனின் திருவாக்காக இருத்தலால் இரண்டுமே ஆகமம் என்றும், இன்பப் பேற்றுக்கு வழிவகுக்கும் ஞானத்தைப் பெருக்குவதால் இரண்டுமே குற்றமற்ற வேதங்கள்தாம் என்றும், இரண்டுமே இவ்வாறு வேதம், ஆகமம் எனும் ஒப்பற்ற திருப்பெயர்களைப் பொருந்தும். இவ்வுண்மையை உணராத அற்ப மானுடர் ஆகமத்தைப் புறநூல் என்று கூறுதல் அறியாமை செறிந்த பித்துப் பிதற்றல் என்றும், வேதாந்தம், ஆகமாந்தம் எனும் இரண்டுமே குற்றமற்ற பெரியோர்க்கு அபேதமாகவே விளங்கும் என அருள்மிகும் திருமூலர் பெருமானும், வேதத்துக்கும் ஆகமத்துக்கும் இடையே வேற்றுமை அறியோம் என நீலகண்ட சிவாசாரியாரும் தூய்மையும் உறுதியும் பொருந்தக் கூறியுள்ளனர் எனவும் நீ தேர்ந்துணர்க. அருணகிரிப் பெருமான் அனுட்டித்த மெய்ந்நெறி நின்று, அடியரை ஆட்கொள்ளும் நிறைவான அருள்மயமான குகப்பெருமானிடம் உறுதிப்பட உனது உள்ளத்தை ஒப்படைத்திரு.

# 34. குருமணி

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**னகர னிழலா லுலகெலாம் விளக்கோர் தேவனின் வாக்கதே முதனூல்
எனவிதி யிருப்ப விதிகடந் தொருவ ரீதிறை வாக்கென வறையுங்
கனமுடை யாக மந்தனை வழிநூல் கடைசிநூ லென்றிகழ்ந் திடினிங்
கெனுறுதி யறிவா ரெக்கதி பெறுவா ரேசறு மென்குரு மணியே. (1)

**வ**ரமுயர் சூர பன்மனுக் கரனார் மகனென நின்றுபே ருருவந்
திரமொடு காட்டி யருளிய காலஞ் செவ்விய நாவின்மந் திரமாப்
பரவொரு பதியி னாகம மனைத்தும் பாங்கொடு நின்றன வென்ற
தரமறி யாத பதடிகட் கியாது சாற்றுவே னென்குரு மணியே. (2)

**சீ**ரிய திருவிற் கோலவம் பதிகத் தேயிரு மூன்றினு மொற்றி
ஊரினப் பதிகம் பத்தினும் பொழிலே ரோங்குகோ கரணவா றினுமா
ஆரியன் ஞானப் பாலறா வாய னாகமச் சிறப்பெடுத் ததிர்த்த
காரியந் தேரா துளறுநர்க் கியாது கழறுவே னென்குரு மணியே. (3)

**தி**ருவிடை மருதூர்ப் பதிகநான் கதிலே தேசிக நாவர சுகளும்
மருவடர் கானப் பேர்திரு வாரூர் மண்டளி கயிலைகட் குரிய
துரிசறு பதிக மெட்டொரா றெட்டிற் சுந்தர ரும்பதி நூலைப்
பொருளுற விதந்து சொனதறி யார்க்கென் புகலுவே னென்குரு மணியே. (4)

**த**மிழ்மறை யதனிற் சிவபுரா ணத்துந் தாவறு பொருணய மலிந்தே
அமிழ்தென வொழுகுங் கீர்த்திநல் லகவ லதிலிரண் டிடத்தினும் வேதம்
உமிழ்திரு வாயால் வாதவூ ரடிக ளுடையவ னாகமச் சிறப்பை
இமிழ்தரச் சொன்ன தோர்கிலர்க் கென்னை யியம்புவே னென்குரு மணியே. (5)

---

*2. இங்கே, குமாரபிரானே "அரனார்மகன்" எனப்பட்டனன். இவ்விறைவன், சூரபன்மனுக்குக் காட்டியருளிய தனது பாரமேசுவர மாவிசுவரூபத்து நாவிலே சிவாகமங்கள் காணப்பட்டனவென்று இங்ஙனெடுத்து மொழிதலை – ஸ்ரீமத் – ஸ்காந்தமஹாபுராண யுத்தகாண்டத்து **35** – ஆம் அத்தியாயத்தில் (அக்ஷராணிசதந்தேஷு ஜிக்வாயாந்து சிவாகமா:|) "தந்தங்களில் எல்லா வெழுத்துக்களும், நாவிற் சிவாகமங்களும் என வருதல் கொண்டறியலாம். இதனாற் சிவாகமம் நவீனம், படைத்து மொழிதலென இந்நூலாசிரியர் கூறாது கொள்வரென்பதூஉம், அங்ஙனங் கோடல், பண்டைச் சிலவாகமங்களுள்ளே தத்துவார்த்த ஞான பாகமேயென்பதூஉம் இங்குச் சித்திக்கின்றன வென்க; கருணைக்குகப்பிரமமென்னு முதற்பத்தின் முதற்றிருப்பாட்டு முரையும் பிறவு நோக்குக.*

*5. இமிழ் = ஒலி, முழக்கம்; "தெரியிமிழ் கொண்டநூ மியம்போல்" என்றார் (மலைபடுகடாத்தில்) பெருங் கௌசிகனாரும்.*

**மு**த்தமிழ்க் கடலா ஞானசம் பந்த முனிவரன் றிருவிற்கோ லத்துப்
பத்திலோ ராறி னும்பல விடத்தும் பழமறை யாகம மரனார்
வித்தக வசன மென்னவுஞ் சித்தி விருத்தமு ளிரண்டுமே சிறந்த
புத்தக மெனவுஞ் சொனதுண ரார்க்கென் புகலுவே னென்குரு மணியே. (6)

**வா**லெசு கைவல் லியஞ்சுவே தாசு வதரங்கா லாக்கினி ருத்ரஞ்
சீலமிக் குடைய வதர்வணத் ததர்வ சிரசுட னதருவ சிகையென்
றோலமே பெருகப் பறையுமோ ரைந்து மோங்குறு பஞ்சருத் திரமென்
றாலமே வுலகி லறைகுவர் மிக்கோ ராண்டரு ளென்குரு மணியே. (7)

**ப**ஞ்சருத் திரமல் லாதபண் டேனைப் பாங்குப நிடதங்க ளங்கங்
கஞ்சுக சைவ வாகம முடிவி னறிவையே யிரகசி யமாகச்
செஞ்சொலால் விளக்கு மாகலி னரனூற் றீர்வையு மறையுஞ்சேர் மார்க்கந்
துஞ்சலில் லாத வைதிக சைவத் துறையதா மென்குரு மணியே. (8)

**அ**த்தியாச் சிரம மென்பதற் கருத்த மரும்பர மாங்கிசத் துறவென்
றுத்தியாச் சிலவர் சொற்றதன் றென்னற் குயரதர் வணசிர சுரைத்த
சுத்தவை திகபா சுபதநோன் பதுவாச் சொலுநெறி தன்னையே சுவேத
அத்தரா தியரு மடைந்தனர் மேனா ளாண்டரு ளென்குரு மணியே. (9)

**சு**வேதரை வழிபட் டொருகறைக் கண்ட சுவாமியுஞ் சைவபா டியமே
உவாவெனச் செய்தா ரதனிலே கான்ம வுரைவர வில்லையா தலினால்
தவாதவொர் வைதி கசைவசித் தாந்தஞ் சிறந்தது சிறந்தது நாளும்
அவாவறுத் துயர்ந்த திருப்புகழ்ப் பெருமா னடிகளே யென்குரு மணியே. (10)

# 34. குருமணி

**1.** நிர்மலமான பெரும்புகழ்க்கு உரிய குருமணியே! சூரியனின் ஒளியால் உலகம் அனைத்தையும் விளக்கிக்காட்டும் பேரொளி மயமான இறைவனின் திருவாக்குகளால் ஆகியதே முதல்நூல் என வரையறுக்கப்படும் விதி இருக்க, இந்த விதிமுறையை மீறி ஒருவர் இறைவாக்கு எனக் கூறப்படும் பெருமையுடைய ஆகமமாகிய இதனை 'வழிநூல்' என்றும் 'சார்பு நூல்' என்றும் கூறி இகழ்ந்தால், அவர் தாம் உய்திபெற எந்தவகையான உறுதிப்பட்டை அறிவார்? எந்த நரக கதியைப் பெறுவார்?

*6. சித்திவிருத்தம் = சிவஞானசித்தியார்; 8 – ஆஞ் சூத்திரத்துப் 15 – ஆம் விருத்தம்.*

*7. ஆலம் – பூ, நீர், ஆல், விடமெனும் பலபொருளொரு சொல்.*

*9. வைதிகபாசுபத நோன்பு இன்னவாறா மென்னும் விவரம், வாயுசங்கிதையின் பாசுபத விரதமுரைத்த வத்தியாயத்தே கண்ணுறலாம்.*

*10. கறைக்கண்ட சுவாமி = நீலகண்ட சிவாசாரியார். நீலகண்டபாடியமானது, தான் முடிவு படுத்தோதுஞ் சிவகதியில் முத்தான்மாவு முண்டென்பது பெறப்படுதலின் "அதனில் ஏகான்ம வுரைவரவில்லை" எனப்பட்டதென்க. உவா = பூரணை.*

**2.** என்னை ஆட்கொள உள்ள குருமணியே! அரிய வரங்களாகிய பெரும் பலத்தை உடைய சூரபதுமனுக்கு, சிவகுமாரனாக வெளிப்பட்ட முருகன், போர்க்களத்தே தமது பாரமேசுவர விசுவரூபத்தைக் காட்டி அருளியபோது அவரது நாக்கில் மந்திரமயமாக உள்ள சிவாகமங்கள் அனைத்தும் முறைப்பட விளங்கின எனக் கூறப்படும் உண்மையின் உறுதியை அறியாத பதகர்க்கு நான் என்ன கூறித் தெளிவுபடுத்த முடியும் ?

**3.** என்னை ஆட்கொள உள்ள குருமணியே! திருவிற்கோலம் என்னும் தலத்துக்குரிய திருப்பதிகத்தில் ஆறாவது பாடலிலும், திருவொற்றியூர்ப் பதிகத்தின் பத்தாவது பாட்டிலும், பொழில்சூழ்ந்த திருக்கோகரணம் என்னும் தலத்துக்குரிய பதிகத்தில் ஆறாவது பாடலிலும் – மிகவும் சிறந்த குருவரும், சிவஞானப்பாலின் மணம்மாறாத திருவாய் உடையவருமான திருஞானசம்பந்தப் பெருமான் ஆகமச் சிறப்பை எடுத்து முழக்கிய செயலின் அருமைப்பாட்டை ஆராய்ந்துணராமல் உளறுவோர்க்கு யான் என்ன கூறுவேன் ?

**4.** என்னை ஆட்கொள உள்ள குருமணியே! திருநாவுக்கரசு சுவாமிகள் திருவிடை மருதூர்ப் பதிகத்தின் நான்காவது பாடலிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கானப் பேரூர், திரு ஆரூர் மண்தளி, திருக்கயிலை ஆகிய தலங்களுக்குரிய பதிகங்களில் முறையே எட்டாவது, ஆறாவது, எட்டாவது பாடலிலும் இறைநூலாகிய சிவாகமத்தின் சிறப்பை ஆழ்ந்த பொருள் விளங்குமாறு கூறிய அருமைப்பாட்டை அறியாதார்க்கு யான் என்ன கூறுவேன் ?

**5.** என்னை ஆட்கொள உள்ள குருமணியே! தமிழ்மறையாகிய திருவாசகத்தில் சிவபுராணத்திலும், எப்பொழுதும் பொருந்தக் கூடிய பொருள்நயம் மிகுந்து அமிழ்தென விளங்கும் கீர்த்தித் திரு அகவலில் இரண்டு இடங்களிலும், வேதப்பொருளை வெளிப்படுத்தும் தமது திருவாயால் வாதவூர் அடிகள், உடையவனாகிய சிவன் அருளிய ஆகமங்களின் சிறப்பைப் பொருள்நயம் தோன்றக் கூறியுள்ளதை ஆராய்ந்துணரார்க்கு நான் என்ன கூறுவேன் ?

**6.** என்னை ஆட்கொள உள்ள குருமணியே! முத்தமிழ்க் கடலாகிய திருஞானசம்பந்த சுவாமிகள், திருவிற்கோலப் பதிகத்தின் ஆறாவது பாடலிலும், மற்றும் பல இடங்களிலும், பழைய வேதமும் ஆகமமும் சிவபெருமானின் ஞானமயமான – ஞானசாரமான திருவாக்குகளே என்று கூறுவதையும், சிவஞான சித்தியார் எனும் நூலுள் வேதம் ஆகமம் எனப்படும் இரண்டுதான், பிரமாணத்தில் சிறந்த முதன்மை நூல்கள் என்றும் கூறப்பட்டுள்ளதையும் உணராத அற்பர்களுக்கு நான் என்ன கூறுவேன் ?

**7.** ஆட்கொண்டு அருளும் என் குருமணியே! தூய்மைமிகுந்த யசுர் வேதத்தைச் சார்ந்த கைவல்லியம், சுவேதாசுவதரம், காலாக்னி ருத்ரம் எனப்படும் மூன்று உபநிடதங்களும், சீலநெறியை மிகுதியாக உணர்த்தும் அதர்வண வேதத்தைச் சார்ந்த அதர்வ சிரசு, அதர்வசிகை எனப்படும் இரண்டு உபநிடதங்களும் ஆக, சிவப்பேரன்பு பொங்கக் கூறப்படும் ஐந்து உபநிடதங்களுமே மேலோங்கிய சிறப்பை உடைய பஞ்சருத்ரம் எனப்படும் என நீரால் சூழப்பட்டுப் பொருள்கள் மலிந்துள்ள இவ்வுலகில், அறிவின்மிக்க பெரியோர் கூறுவர்.

8. என்னை ஆட்கொள உள்ள குருமணியே! மேற்கூறப்பட்ட பஞ்சருத்ர உபநிடதங்கள் அல்லாமலும், மற்றுமுள்ள, வேதமரபு சார்ந்த உபநிடதங்கள் அனைத்தும், ஆனந்த நிலையை அடையச்செய்யும் சைவாகமத்தின் அந்தமாகிய ஞானபாதத்தின் முடிபுகளையே அங்கங்கே மிக நுட்பமாகத் தெளிந்த சொற்களால் விளக்கிக் கூறுவதால், சிவன் அருளிய ஆகமத்தின் முடிபும், வேதத்தின் முடிபும் சமரசப்பட்டுப் பொருந்தியுள்ள நெறியே, எப்பொழுதும் நிலைத்திருப்பதாகிய வைதிக சைவசித்தாந்த நெறி எனப்படுவதாகும்.

9. ஆட்கொண்டருளும் என் குருமணியே! அத்தியாச்சிரமம் என்பதற்கு உரிய நேர்ப்பொருள் 'அடைந்து அனுட்டிப்பதற்கு அரிதான பரமஹம்ஸத் துறவுநிலை' என்பதாகும். இது சிலரால் ஊகமாகக் கூறப்பட்டுள்ள பொருளோ நெறியோ அன்று என உறுதிப்படுத்துவதற்கு, உயர்ந்ததான அதர்வண சிரசு எனும் உபநிடதம் கூறும் சுத்த வைதிக பாசுபத நோன்பு என்பதே சான்று. இதில் கூறப்பட்டுள்ள நெறியையே முற்காலத்தில் சுவேதாசாரியர் முதலானோர் மேற்கொண்டனர்.

10. உலக ஆசையை அறவே துறந்து, நாள் தோறும் சிவப்பொலிவார்ந்து மேம்பட்ட திருப்புகழ்ப் பெருமானான அருணகிரிப்பெருமானுக்கு வாய்த்த சுவாமியே! என் குருமணியே! சுவேதாசாரியாரை வழிபட்டு நீலகண்ட சிவாசாரியாரும் பிரம்மசூத்திரத்திற்கு சைவசம்பந்த மாபாடியத்தை நிறைவு பொருந்தச் செய்தார். அந்தப் பேருரையில் ஏகான்மவாதக் கருத்து இடம்பெறவில்லை. அதனால் என்றைக்கும் நிலைத்திருப்பது, என்றைக்கும் பொருந்துவதாகத் திகழ்வது வைதிகசைவ சித்தாந்தமே. இதுவே சிறந்தது; இதுவே சிறப்புடையது.

# 35. மெய்யான்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**த்திச் சருமம் போர்த்த வாத்த னளித்த மறைகண் மூன்று சாதி
உத்த மருக்கு மாக மப்பே ருடைய மறைக ணான்கு சாதிச்
சுத்தர் களுக்கு முரிய வாமித் தோலை நேர நீல கண்ட
அத்த னாரும் பாடி யத்தே யதிர்த்த துண்மை யாமெய் யானே. (1)

**உ**ரனில் பாச கோச மைந்து மொன்றற் கொன்று வியன தாய
பிரம மென்று தைத்திரி யந்தான் பேசி னமையும் பசுவ தாமிந்
திரனைப் பிரம மாயொ ரோத்துச் செப்பி னமையும் பதியென் றோது
பிரம வுண்மை யோவென் றாய்ந்தெம் பிரானைப் பரவி யுய்மெய் யானே. (2)

1. *இத்திருப்பாட்டின்கண் ஏன்றுகொள் சாதிக்கிரமம், தொழிலா லேற்படுமென்னு முண்மை பிடித்துரைத்ததாமென்க. பரிபூரணானந்த போதத்துத் துறவற விளக்கப்படலத்து 31, 37, தகராலயரகசியப் பாயிரத்து 3, இரண்டாங் காண்டத்து 70 – ஆகிய இச்செய்யுள்களினுரை கருதுக.*

*தோல் = சொல்; "தோலிபம் வனப்பு வார்த்தை" என்பது* ***லகரவெதுகை.***

2. *ஒரோத்து = ருக்வேத கௌஷீதகிப்ராஹ்மணோபநிஷத்.*

**வே**தஞ் சைவ நூலி ரண்டும் விசேட மாகப் பேசு புத்தேள்
மோதஞ் சான்ற சிவனென் றாமம் முடிவி னாலி ரண்டு மார்க்க
போத மூப்ப ரும்பி ரானைப் புந்தி செய்துய் வார்கள் செய்யார்க்
கோதந் நூலிற் பயனுண் டோவெம் முறழ்வு குகனைச் சூழ்மெய் யானே. (3)

**இ**ன்ப மீதல் சிவம லால்வே றின்று கன்ம காண்டத் திற்கூ
றன்ப ரன்மெய் யாகு பத்தி யருள்வன் ஞான காண்டத் தீசன்
துன்பின் ஞான மூல மாகத் துய்ய மோக்கங் கொடுப்ப னென்னா
அன்பர் சூத சங்கி தைக்கூ றரற்று தீர்வை மேன்மெய் யானே. (4)

**ப**டிவப் பூடா விருத்தா வென்பார் பரமன் மாற்ற மறுத்த மாசாற்
கடின மாய நிகமக் கோவிற் கழுக்கு ரம்பை யேற்று லாவும்
மிடிமை யுணர்ந ரீசன் வாக்கை மீற நெஞ்சுஞ் செய்வ ரோவிம்
முடிவைப் பேணி யுய்ய நீயு மோத குகனைச் சூழ்மெய் யானே. (5)

**உ**தகக் கிணறு மடுக்க ளுள்ளே யொன்றுப் பாயின் யாவு மாகா
அதையொத் தாரு நொடித்த நூலி லாதி நூற்கெஃ தேனு மாற்ற
மதமுற் றிருக்க நோக்கி னத்தை மட்டு நீக்கிக் கோட லேநல்
இதயத் தார்தங் கடனென் றோர்ந்தெம் மிறைவற் பரசி யுய்மெய் யானே. (6)

**த**குதித் தரும சங்கி தைதான் சாற்று மாறு கபில நீலம்
இகலில் கவுர வங்கி ருட்டி ணமெனு நான்கு தூய ரோடு
சுகுர்த யோக சாரி யாமொர் சுதையை யும்பெற் றொருவி யாசர்
மகனென் றோங்கு சுகர்கை கூப்பி வலித்த குகனைச் சூழ்மெய் யானே. (7)

---

*3. சைவநூல் = சைவாகமம். பயனுண்டோ – ஓ – பயனின்மையை விளக்கிற்றாகலின் எதிர்மறை.*

*4. **சூதசங்கிதைக்கூறு** = பிரமாணியவிசார அத்தியாயம் (6 – ஆஞ் செய்யுள்).*

*5. நிகமக்கோ = வேதகிரி ; கோ = கிரி.*

*6. யாதானுமொருபுத்தக மெவராற் செய்யப்பட்டிருப்பினும் அதன்கண், நல்லன காணப்படின் அவையற்றைக் கோடலும், அல்லன காணப்படின் அவையற்றை நீக்கலும் இந்நூலாசிரியர் கொள்கையிலுள்ளன வென்பதை யித்திருப்பாட்டு வெளியிடுவதாயிற்று. மேற்கோள் சாதிக்கு மிடந்தோறும் இக்கொள்கையினையே கருதிக்கோடல் வேண்டும்; மறவற்க வென்க. வஞ்சகமற்ற நடுவுநிலைமையி லொருசிறிதும் வழாநெறி முதலியனவே அந்நல்லனவாம்; தகராலய ரகசியத்துள்ள **நூலாசிரியதுரைப்பாயிரங்** கருதுக. காலையிலிருந்த யாதானுமோருடம்பாடு மாலையின் மாறுபடலுங் கூடும். ஒரு நிமிடத்தின் மாறினும் மாறும்; அஃதுண்மை யுணர்ந்தவழித் தாயினுமா மாகலின், ஒருவர், முன்மொழிந்த முடிவுக்குப் பின்மொழிந்த முடிவு திண்ணிதாகவே கொள்ளப்படும். அங்ஙனம், யாதானுமொரு நூலுரையினை மேற் கோளாகக் கொண்டு கூறப்பட்ட துளதேல் (விசாரணையில்) அம்மேற் கோளுண்மை எத்துணையிற்படுமோ அத்துணையே அக்கூறப்பட்ட தற்குங் கோடன் மரபாம். இவரருளாளர், இவரது மாற்றம், மேற்கோளில் வழியு முறுதித்தாகலாமென வஃதொன்றனையே சாதிக்கத் துணிதலு மேற்புடைத்தன்று. என்னை ? அவர், தொன்மைய வெழுத்துக்கள், கேள்விக ளென்பனகொண்டுங் கூறியிருத்தல் கூடுமாகலின். இங்ஙனமே யாங்கூறியனவு முள்ளனவால். சிவானுக்கிரக பூரணஞானமுஞ் சுவானுபவ மொன்றன் கண்ணேயே சிறப்பாகக் கிளக்கப்படும். அனைத்து மறிந்துரைக்குஞ் சித்தி, அங்ஙன மின்ரெனற்கும் அவ்வாறுரைக்கப்பட்ட விவரநூலொன்று மீங்கில்லாமையே தகு சான்றாமன்றே.*

*யாவும் ஆகா = எல்லாம் உப்பாகா; உப்பு = உப்புநீர். நொடித்தல் = சொல்லல்.*

*7. சிவ மஹாபுராணமெனுஞ் சைவபுராணத்துத் “தருமசங்கிதை” (மன்மதன் கதை; 12 – ஆம் அத்தியாயம்).*

**வெ**டிக்க ளுண்ட வோர்விப் பிரற்கு மிருதி சொன்ன வாவெந் நேயங்
குடிக்க விதித்த ஞான்று சாண்டி லியர்கொள் ளாம னீக்கி நெல்லைத்
தடத்தின் மூழ்க விழைத்துத் தூய தன்மை கண்ட தால்வல் லானை
அடுத்த புனித மேவெம் பாவ மழித்துத் தாங்கு மேமெய் யானே. (8)

**பூ**சிப் பார்தங் குலத்து மேதை பூக்க வந்த கருவைத் தேவர்
நேசிப் பாருள் கரங்க மாலை நினைத்து நேரில் விளித்திந் நேரந்
தேசிற் பூத்த மணிப்பொன் னாரந் தேவை யாமென் றதனை யேற்றோர்
தாசிக் கீந்த வலியு மேத்தெந் தாதை தகவன் றோமெய் யானே. (9)

**மு**டுகின் பாக்க டெரிக்கு மாறு முத்தைத் தருவெ னடியெ டுத்துக்
கொடுத்த கோவன் றொருவர் வாழ்த்தாக் கொள்கை யாளற் கணங்கு வீரங்
கெடுத்தி றாக்கை வலிய மீந்த கிருபைக் கோன்கு கேசன் மாட்டுள்
விடுத்துக் கூடி வாழி மோக்க வேட்கை வீக்க முறுமெய் யானே. (10)

# 35. மெய்யான்

1. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலைபேற்றுக்கு உரியோய்! யானைத்தோல் போர்த்துக் கொண்டிருக்கும் பரம ஆப்தராகிய சிவபெருமான் உரைத்தருளிய வேதங்கள் முதல் மூன்று வருணத்திலுள்ள உத்தமர்களுக்கும் அவர் அருளிய ஆகமப்பெயர் தாங்கிய நூல்கள் நான்கு வருணங்களிலும் உள்ள தூயோர்களுக்கும் உரியவை எனப்பட்டுள்ளது. இத்தகைய கருத்துரைக்கு ஏற்ப நீலகண்ட சிவாசாரியாரும் தமது பிரமசூத்திர மாபாடியத்தே உறுதிப்படுத்தியுள்ளதும் உண்மையே.

2. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலைபேற்றுக்கு உரியோய்! வலிமையற்ற, பாசப்பகுதியைச் சார்ந்ததான அன்னமய கோசம் முதலான ஐந்து கோசங்களும் ஒன்றனுக்கு ஒன்று நுண்மையும் மகத்துவமும் உடைய பிரம்மநிலையாம் என தைத்திரீய உபநிடதம் கூறியுள்ளமையும், பசுவாகிய இந்திரனை பிரம்மம் என்று ருக்வேத கௌஷீதகி பிராம்மண உபநிஷதம் கூறியுள்ளமையும் உண்மையிலேயே பதி எனப்படும் தத்துவ அதீதமான பிரம்மத் தொடர்புடையதோ என ஆய்ந்துணர்ந்து, எம்பெருமானாகிய குகனைப் போற்றி உய்திபெறுக.

3. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலை பேற்றுக்கு உரியோய்! வேதம், ஆகமம் எனும் இரண்டும் மிகவும் விசேடமாகப் போற்றி உரைக்கும் தெய்வம், ஆனந்த நிலையில் திளைக்கும் சிவன் என்றே கொள்ளத்தகும். அம் முடிபான கருத்துக்கு ஏற்பவே,

*8. வெடிக்கள் = அச்சந்தருவதான மது. நேயம் = நெய்.*

*9. கருவை = கருவூர். தேவை – கொளற்பொருட் டெய்துஞ்சொல்; “தெவுக்கொளற் பொருட்டே” என்னுந் தொல்காப்பியச் சூத்திரமோர்க.*

*10. அணங்குவீரம் = நோயின் வீறுபாடு.*

வேத நெறி ஆகமநெறி ஆகிய இரண்டு நெறிகளையும் கடைப்பிடிக்கும் ஞானத்திற் சிறந்த பெரியோர்களும் சிவபெருமானையே தியானம் செய்து உய்தி பெறுவார்கள்; அவ்வாறு சமரசநிலையுணர்ந்து தியானம் செய்யாதார்க்கு அந்த வேத ஆகமங்களால் பயன் உண்டோ? எம்மை ஆட்கொள்ளும் ஞானமே வடிவாகிய குகனையே தியானித்து உய்க.

4. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலைபேற்றுக்கு உரியோய்! ஆன்மாவுக்கு ஆனந்தத்தை வழங்குபவன் சிவனே அன்றி வேறுயாரும் அல்லர். "கன்ம காண்டத்தில்பிரதிபாதிக்கப்படும் அன்புமயமான சிவன் திடமான உண்மைப்பக்தியை அருள்வான்; ஞானகாண்டத்தில் பிரதிபாதிக்கப்படும் ஈசன், முரண்பாடற்ற முழுமை ஞானம் மூலமாகத் தூய்மையான முத்திப் பேற்றைக் கொடுப்பான்" இவ்வாறு அடியார் பயில்வதற்குரிய சூதசம்மிதையின் பிரமாணவிசார அத்தியாயம் உறுதிப்படுத்திக் கூறும் தீர்மானமான முடிபு மேம்பாடு உடையதேயாகும்.

5. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைந்து நிற்போய்! நிலைபேற்றுக்கு உரியோய்! உருவச்சிறப்பு வாய்ந்த பூஷா, விருத்தா எனப்படும் முனிவர்கள் சிவபெருமானின் உரையை மறுத்துரைத்த பாவச் செயலால், கழுகுகளின் வடிவம் ஏற்று, திரண்டெழுந்துள்ள வேதகிரியில் (திருக்கழுக்குன்றத்தில்) வாழ்ந்து இளைக்கும் உண்மை வரலாற்றை உணர்பவர்கள், ஈசனாரின் திருவாக்கை மீறிநடக்க மனத்தாலும் எண்ணுவார்களோ? இம் முடிபையே ஏற்றுப் போற்றி உய்திபெற, நீயும் ஆனந்த வடிவமான குகனைத் தியானித்து இரு.

6. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைந்துநிற்போய்! நிலைபேற்றுக்கு உரியோய்! நீர்நிறைந்துள்ள கிணறுகள், மடுக்கள் என்பனவற்றுள், யாதேனும் ஒன்றில் உள்ளது உப்புநீராக இருக்குமாயின், அனைத்துமே உப்புநீராக இருக்குமோ! அதைப்போன்று, பலராலும் சொல்லப்பட்ட நூல்களில், முதல் நூல்களாகிய வேத ஆகமங்களுக்கு மாறுபட்ட கருத்தாக ஏதேனும் ஒன்று பொருந்தி இருக்குமாயின் அக்கருத்தை மட்டும் ஒதுக்கிவிட்டு, ஏனைய நல்ல பகுதிகளை உவந்து ஏற்றுக்கொள்ளல், நல்லுள்ளம் கொண்டுள்ளோரின் கடமையாகும். இதனை ஓர்ந்துணர்ந்து, எம் இறைவனாகிய குகனை வழிபட்டு உய்திபெறு.

7. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலைபேற்றுக்கு உரியோய்! சைவ மஹாபுராணத்தின் பகுதியான தருமசம்மிதை கூறுமாறு, கபிலன், நீலன், மாறுபாடற்ற கௌரவன், அழகிய கிருட்டிணன் எனப்படும் நான்கு புதல்வர்களையும், புண்ணியப் பேறு மிகுந்த யோகாசார்யை எனப்படும் மகளையும் பெற்று, ஒப்பற்ற வியாசபுத்திரன் என்னும் பெருமை பெற்றுயர்ந்தவர் சுகமுனி. இத்தகைய சுகமுனிவர் கைகூப்பி வணங்கித் தொழுத குகப்பெருமானையே எப்பொழுதும் தியானித்து இரு.

8. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலை பேற்றுக்கு உரியோய்! மயக்கம் தரும் கள்ளைக் குடித்த பிராம்மணன் ஒருவனுக்கு, மிருதி நூல்களில் விதிக்கப்பட்டுள்ள பிராயச்சித்தப்படி, மிகவும் சூடான ஆகுதி நெய்யைக் குடிக்கக் கட்டளையிட்டபோது, அவனால் தஞ்சம் என வேண்டப்பட்ட சாண்டில்லியர் எனும் முனிவர் அந்தவிதியைப் புறக்கணித்துவிட்டு, திருநெல்வேலித் தலத்துத் திருக்குளத்தில் அவனை

மூழ்குமாறு பணித்துத் தூய்மை அடையச் செய்தார். இதனால், அருட்பேராற்றல் வாய்ந்த ஒருவரைத் தஞ்சமாக அடையும் தூய்மைச் செயலே, கொடிய பாவத்தை விலக்கிக் காப்பாற்றும் என அறியலாமே!

9. மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலைபேற்றுக்கு உரியோய்! சிவபெருமானை வழிபடும் குலத்தின் அருட்பெருமையை விளக்கத் தோன்றிய கருவூர்த் தேவர், புறவழிபாட்டையே விரும்புவோரின் உள்ளம் நாண, திருமாலை நேரில் தோன்றுமாறு அழைத்து "ஒளியிற் சிறந்த மணிகள் வைத்து இழைக்கப்பட்ட பொன்னாரம் ஒன்று இப்பொழுதே தேவை; கொடு'' என்று கேட்க, திருமாலும் அவ்வாறே கொடுக்க, அதனைப்பெற்று ஒரு தேவதாசிக்குக் கொடுத்த அருள்வல்லமையானது, உண்மையிலேயே, நான் போற்றிவணங்கும் என் அப்பனாகிய குகப்பெருமானின் அருள்வல்லமையே அன்றோ ?

10. முத்திப்பேற்று வேட்கையானது மேன்மேலும் அதிகரிக்கும் வகையில் மெய்ப்பொருளையே எப்பொழுதும் விழைவோய்! நிலைபேற்றுக்கு உரியோய்! அரிய, சந்தமணம் கமழும் திருப்புகழ்ப்பாக்களைப் பாடுமாறு 'முத்தைத்தரு' என அடியெடுத்துக்கொடுத்த குகப்பெருமானைத் தவிர வேறு ஒரு தெய்வத்தையும் வாழ்த்தாத உறுதிப்பாடான கொள்கை அருணகிரிப்பெருமானுக்கு உற்ற நோயின் வீரியத்தைப் போக்கி, அழியாமல் என்றைக்கும் நிலைத்திருக்கும் குகானந்த முத்திப்பேற்றை வழங்கிய கருணைவள்ளலாகிய குகேசனிடம் உனது உள்ளத்தை முழுமையாக ஒப்படைத்து, அவனோடு இரண்டறக் கலந்து என்றும் வாழ்ந்திரு!

## 36. மாவிண்*

*பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சொ**ல்லேறு முபநிடதங் களிலான்மா வொன்றெனவுந் தூய வஃதே
சொச்சவறி வாயகண்டா காரமென விருக்குமென்றுந் துணிவு கூறல்
எல்லாருந் தொழுங்கடவு ளாம்பதியைக் குறிப்பதா மிழுக்கு ஞான
இயமான வுயிர்த்தொகையைக் குறியாதா மென்றுபொரு ளியையக் கொள்ளும்
நல்லார்க ளெல்லார்க்கு நானிறைஞ்ச லாற்றிடுவே னன்றில் லாத
நானெனதென் னுஞ்செருக்குற் றருளிழந்து பொருளிழந்து நாம்பி நின்ற
பொல்லேனை யாட்கொண்ட பூரணமா மானந்தப் பொருளே யென்றன்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(1)

★ *இப்பத்திலும், பொறியெனும்பத்திலும், வேறு சில பத்துக்களிலும் வெளிப்படு வேதார்த்தங்களைப் புராணேதிகாசங்களிலும், அவற்றுள் வைக்கப்பட்ட கீதைகளிலுமுள்ள உபநிடத வசனங்கட்குங் கொள்க.*

**பி**ரமமெனுஞ் சிவத்தினுக்கும் பிந்துமுதன் மாயைக்கும் பிணிச்சீ வற்கும்
பிரமமெனும் பெயரிருப்ப தாப்பனுவல் பேசிடலாற் பெருவே தத்துட்
பிரமமென வருவாயிற் சந்தர்ப்ப மதுகணித்துப் பிராந்தி நீத்த
பிரசன்னப் பொருளினையே கொளல்வேண்டு மென்றுமங்ன் பிரமந் தன்னில்
உரனுணர்வில் லாவுலக முதித்ததெனி னறிவாக வுளதெய் வத்தே
உணர்வொழிந்த சடமுதியா ததுமாயை யாம்பிரமத் துதித்த தென்றும்
புரணமுறு பொருள்கொள்ளுந் தேர்ச்சியின ரேத்துபரம் பொருளே யென்றன்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(2)

**பே**ரறிவா யுள்ளசிவஞ் சிற்றறிவா முயிராகிப் பிறங்கு ஞானப்
பெற்றியிலாச் சடசகமா விருந்துமொன்றாய் நிற்குமெனப் பேசா நின்ற
ஆரணமா வுரைகளுக்கு மிருநிலனா யென்றுதொடங் கருட்பா வுக்கும்
அதுபோலே னோரறைந்த வறைகளுக்கு மேய்பொருடா னகர சீவன்
ஏரணவும் பிறவுயிர்மெய் யக்கரங்க டோறுநிறைந் திருத்த லேய்ப்ப
ஏசணுகாப் பிரமஞ்சித் தசித்தெங்கு நிறைந்தவகை யெனவா மென்றோர்
பூரணமா யுணர்மிக்கார் புகழ்சுப்பி ரமணியவொண் பொருளே யென்றன்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(3)

**அ**றிவாய பரப்பிரம மதிலிருந்தெல் லாம்வந்த தாக வேதம்
அறையிடத்து மண்கடமே யாயதுபோற் பரிணாம வருத்தங் கொள்ளா
திறையவன்ற னருட்சத்தி யான்மாயை யென்பதையே யியமா னற்கால்
இயையுமுடம் பாகவுமைம் பூதவுல காகவுநன் கிழைத்த தென்றோர்
குறைவில்லாப் பொருள்கொளலும் பரனையன்றொன் றின்றெனவே கூறுங் கண்ணே
கோனன்றிக் குடியில்லை யெனனோர முதற்பெருமை கூறிற் றென்னாப்
பொறிசிறந்த பொருள்கொளலு முடைநல்லா ரேத்துபரம் பொருளே யென்றன்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(4)

---

*2. பிந்துமுதன் மாயைக்கும் பிணிச்சீவற்கும் பிரமமெனும் பெயரிருப்பது – (ஓமென்னுமிப் பிரணவாக்ஷரமே பிரமம் =) "ஓமித்யேதத், ஏதத்யே வாக்ஷரம் ப்ரஹ்ம" என்று **முண்டகோப நிஷத்தும்,** (இவ்விதப் பிரமமாக வெது விளங்கு கிறதோ அஃதவித்தியோபாதிக்குட்பட்டதுந் துவம்பதத்தினாற் சொல்லப்படுவது மாய பிரத்தியகான்மா=) "ப்ரஹ்மயதவபாஸதே ததவித்யோபாதிகம் த்வம்பதார்த் தஸ் ஸப்ரத்யகாத்மா" என்று **ஸர்வஸாரோபநிஷத்துங்** கூறுதல் கொண்டறிய லாம், போந்த மெய்யான் என்னும் பத்தின் 2 – ற் குயிலப் பட்ட **தைத்திரியோப நிஷத்துங்** காண்க. **பரிபூரணானந்த போதத்துப்** பிற்படலத்து 27 – ன் உரையும், முற்படலத்து 110 – ன் உரையும் கருதுக. ஓம் = சுத்தமாயை.*

*4. எல்லாம் வந்தது – "இரண்டுகண்ணுஞ் சிவந்தது" என்பதுபோன்ற பன்மை யினொருமை வழுவமைதி.*

*எனா என நிற்கற்பாலது 'என்னா' என விரித்தல் விகார மெய்திற்று. ஆவீற்றுடன்பாட்டு வினையெச்சமாய் 'என்று' எனவாமிது, வினைப்பொருளில் வரூஉம் என்று என்னும் இடைச்சொல்லாகவுங் கொளப்படும்.*

*"விதிதவ றினையெனா விளம்பன் மேயினான்"*

*என்று **சித்தாந்த சிகாமணி** (இரேணுகர்காதை) யிலும் இந்த 'எனா' வருதல் காண்க. இன்னன பல.*

**அ**ற்பவுறழ் வான்மாவிற் சகசீவ பரமுதித்தே யடங்கு மென்னா
ஆரணஞ்சொல் லிடத்துவிழி யுலகமதைக் காண்டலென வாத்து மாவின்
தற்போத நிகழ்ச்சியிலம் மூன்றும்வெளி யாயுநிமை சாத்துஞ் செவ்வி
சகமொளித்த வாளியெனத் தற்போத விளிவிலவை தாங்கா ணாமே
நிற்கமறை வாயுமுள்ள வகைவிளக்கிற் றெனவோர்வார் நிகம மாங்கே
நிகழான்மா வென்னினது சீவான்மா வன்றுசிவ நிலையே யந்தப்
பொற்பிறையை யான்மனெனப் பனும்பிரம கீதையுமென் றோர்வார் போற்றென்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(5)

**நி**கமமெனூ லற்பவுரத் தான்மாவென் பதைநோக்கி ஞெள்ள லோங்கு
நீசிவமே சிவநீயே யென்புழியுள் ளறிவில்லா நெட்டங் கம்போல்
இகழவொரா றின்றியறி விக்கக்காண் கண்கடுப்ப வேசொன் றில்லா
இருஞ்சித்த தறிவித்தா லறியுமொரு சித்தாயு மீச னென்றே
பகருரையா ரகணியந்த ரான்மாவோ டேய்ந்துநிற்கும் பண்பி யாயும்
பாசமகன் றகண்டபதிப் பொருளை யடைந் துய்யுமருட் பாங்கனாயும்
புகலவுள்ள தருமத்தா லிவ்வாறு புகன்றதெனத் தேர்வார் போற்றென்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(6)

**கொ**ச்சையிலா வான்மாவைப் பிரமத்தின் பிம்பமெனக் கோதில் வேதங்
கூறுமிடத் துயிர்க்குயிரா நிற்குமுள்ளான் மாவேயக் கூற்றா மென்றும்
நிச்சயமாய்ச் சிவன்சீவ னெனவிரண்டின் றொன்றெனவே நிகழ்த்தும் பாங்கர்
நீலமல நீங்கிப்பே ரறிவாகிச் சிவக்கலப்பி னிறைந்தா னந்தம்
எச்சமிற நுகருநிலைக் கூற்றென்று மந்நிலைக்கண் ணேபெத் தத்தே
எய்துசுழுத் தியைநேர வேதுமின்றிப் பரவொளியே யாமென் றுந்தேர்
பொச்சைமிசை யேறியருட் டேனுண்பார் நோக்குமரும் பொருளே யென்றன்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(7)

**கூ**டசலத்தி னிற்குமொரு பரிதிவிம்ப மச்சலமில் காலத் தந்தக்
கதிரவனா நிற்பதுறழ்ந் துயிர்மலக்கட் டோவுமொரு காலந் தன்னில்
திடமுறவே பிரிப்பில்லா துளசீவன் றன்முதலைச் சேர வாண்டுச்
சிவமாகத் தேசெனுமுள் ளான்மாவு மாமிதனாற் சீவன் பொய்யாத்

---

*5. சூதசங்கிதையிலுள்ள “பிரமகீதை” (ஐதரேயவுபநிடதார்த்த முரைக்கு மத்தியாயத்து 2 – ஆஞ் செய்யுள்)*

*6. அகணி = உள் ; **பி – நிகண்டு.***

*7. கொச்சை = குறைவு; கொச்சகமெனப் படுவதொன்றும் இச்சொற் பொருண்மைத்தே என்ப. பொச்சை = மலை; “இலங்கிய வரையே பொச்சை” என்பது சூ – நிகண்டு.*

*8. தன்முதல் = பிரமதேசசெனப்படும் அந்தரான்மா.*

துடைபடற்கு வழியிலையச் சேர்க்கையுடம் புயிர்நாவின் சுவையோ மென்னாச்
சொல்வதுழை முத்தாரஞ் சீவனிலா ணவம்போலுந் தோயு மென்றே
புடவியிற்சன் மார்க்கிகளா னனிதுணியப் படுமவரைப் புரந்தா ளென்றன்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(8)

**ந**ன்மணிவா சகப்பெரியோ னாமொழிந்து சிவமான வாறென் றற்காம்
நறும்பொருடான் றற்போதக் கேடென்னுஞ் சீவத்துவ நலிவின் மேலே
சின்மயமா சிவத்தொடணைந் துளசீவன் முத்தியெனத் தெரிவ தோடே
சிவமெனுநப் பேரின்ப மான்மாவுக் கலதந்தச் சிவனுக் கென்னாச்
சொன்முறையெவ் வாற்றானும் பொருந்தாமை யுறலானுஞ் சுருதி யெல்லாஞ்
சுகமுத்தி யானந்த நித்தமெனச் சொலலானு மதனைத் துய்க்கப்
புன்மையிலா வான்மாவங் குண்டெனவு மோர்வாரைப் புரந்தா ளென்றன்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(9)

**சி**வன்சீவன் பாசமென முப்பொருண்மெய் யாயுளவேற் சிவனுக் கெங்கே
செறிநிறைவுண் டாமெனினஃ துடலிலணுப் போலுமுயர் சிவனார் மாறன்
தவஞ்சிறந்த பார்த்தனிவ ரடியுண்ட போதவைசித் தசித்துக் கெல்லாஞ்
சார்ந்த்தனா லிறைநிறைவுக் கிழுக்கில்லை யெனவுணருந் தகைமை யோர்க்கும்
நவம்பெருகு வயிந்தவமா மாயைக்கும் பிரமமென்னு நாம மாதி
நனிவிளக்குஞ் சுருதிதத்து வப்பிரகா சங்காந்த நன்னூ லென்றிப்
புவனஞ்சார்ந் தோர்ந்துயுநல் லார்க்குமருள் புரியருணைப் புலவ னேத்தென்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை பொழிமா விண்ணே.
(10)

## 36. மாவிண்

**1.** திருவாக்குகள் மலிந்துள்ள உபநிடதங்களில் ஆன்மா ஒன்றே என்றும், தூய்மையான அந்த ஆன்மாவே தெளிவும் ஒளியும் உடையதாய், அறிவாய், அகண்டாகாரமாக (பிரிவுபடாது எங்கும் வியாபித்துள்ளதாக)த் திகழும் என்றும் தெளிவுபடுத்திக் கூறப்படுதலானது – யாவராலும் தொழப்படும் முழுமுதற் கடவுளாகிய பதிப்பொருளையே குறிக்கும். கண்டிதப்பட்டு, சிறுமை அடைந்து, சிற்றறிவு உடையதாய் விளங்கிப் பசு எனும் சொல்லுக்குரிய உயிர்வர்க்கத்தைக்

*8. முத்தாரம் = அ, உ, ம என்னு மூன்று பிரணவம். புடவி = பூமி;* ***பி - நிகண்டு.***

*9. "முத்தியானந்தம் நித்தம்" என்று சுருதி சொல்லுதலைத் திட்பத்திற் காட்டினாம் (3 - ஆம் பத்தின் ஆரணத்துபநிடதம் என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரை) ; ஆங்குக்காண்க.*

*10. பிந்துவாகிய முதன்மாயைக்கும் பிரமமெனும் பெயரிருப்பதாகப் பனுவல் பேசுமென்று இப்பத்தின் 2 - ல் இயம்பிய ஆசிரியர், இவ்வீற்றுத் திருப்பாட்டில் அப்பனுவல் விவரம், சுருதி தத்துவப்பிரகாசம் காந்தமென வெடுத்துரைத்தா ராகலிற் கூறியது கூறலென்னுங் குற்றமில்லையென்க. அச்சுருதி வாக்கியங்கள் அந்த 2-ன் குறிப்புரைக்கண்ணேயே காட்டப்பட்டன. காந்த நன்னூல் = கந்த புராண உபதேசகாண்டம் (சரியையாதி மான்மியச் சருக்கத்துப் 19 - ஆஞ் செய்யுள்).*

குறிக்காது – என இவ்வாறு உண்மைப்பொருளைப் பொருத்தமுறக் கொள்ளும் நல்ல உள்ளம் வாய்த்துள்ளார் அனைவரையும் நான் வணங்கிடுவேன். நல்லது இது என ஒருசிறிதும் உணராமல், 'நான்' 'எனது' எனும் அகந்தை உணர்வு கொண்டு, அருட்பேறும் பொருட்பேறும் இழந்து வாடி இளைக்கும் தீயோனாகிய என்னையும் ஆட்கொண்டு கருணைகாட்டும் பூரணமான ஆனந்தப்பொருளே! எனது சீவபோதம் என்பதைக் கவர்ந்து சிவபோதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து, அருள்மழை பொழியும் பெரிய முகிலே! (விண் என்பது, இங்கே, ஆகாசத்தைக் குறிக்காமல் ஆகுபெயராக, மேகத்தையே குறிக்கும். "அண்டத்து அரும்பெறல் மேகன்" என்பார் மாணிக்க வாசக சுவாமிகளும்).

2. பிரம்மம் (பெரியபொருள்) எனப்படும் சிவத்துக்கும், விந்துவை முதல்நிலையாகக் கொண்டுள்ள மாயைக்கும், தளைக்கு உட்பட்டுள்ள சீவனுக்கும் (ஆன்மாவுக்கும்) பிரம்மம் எனும் பெயர் பொருந்தி இருப்பதாக உபநிடதங்கள் முதலான நூல்களில் கூறப்பட்டுள்ளதால், பெரிய வேத வாக்கியங்களில் 'பிரம்மம்' எனும் சொல் வரும் இடங்களில் எல்லாம், சந்தர்ப்பம் நோக்கி உண்மையான பொருளை ஆய்ந்து கணித்து உறுதிசெய்து மயக்க உணர்வு நீத்த தெளிவான பொருளையே கொள்ள வேண்டும். அங்ஙனம் பொருந்தும் பிரம்மம் என்பதிலிருந்து, சைதன்னியம் அற்ற, நினைக்கும் வலிமையற்ற உலகம் தோன்றியது எனில், அறிவுமயமான பிரம்மப் பொருளிலிருந்து அறிவற்ற சடப்பொருள் ஒரு போதும் தோன்றாது எனும் நியாயத்தால் இந்த இடத்தில், 'மாயையாகிய பிரம்மத்திலிருந்து உலகம் தோன்றியது' என நல்ல விளக்கம் பொருந்திய அர்த்தத்தைக் கொள்ளும் ஞானத் தேர்ச்சிமிக்கோர் போற்றித் துதிக்கும் பொருளே! எனது சீவபோதத்தைக் கவர்ந்து சிவபோதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள்மழை பொழியும் பெரிய முகிலே!

3. "பேரறிவு மயமாக உள்ள சிவமே சிற்றறிவுடைய சீவான்மாவாகவும் விளக்கம் மிக்க ஞானத்தன்மையை முழுதும் நீங்கியுள்ள சடமயமான உலகாகவும் வெளிப்பட்டு ஒன்றாக விளங்கும்" எனத் தெரிவிக்கும் உபநிடத வாக்கியங்களுக்கும், "இருநிலனாய்" எனத் தொடங்கும் தேவாரப் பாட்டிற்கும், அவைபோன்று மற்றும் அருளாளர் பலராலும் கூறப்பட்டுள்ள கூற்றுக்களுக்கும் உள்ள பொருத்தமான அர்த்தம் யாதெனில் – அகரமாகிய உயிரெழுத்து ஒன்றே, அழகுபொருந்திய மற்றைய உயிர்மெய் எழுத்துக்கள் தோறும் நிறைந்து வியாபித்திருத்தலைப் போன்று சிறிதேனும் அழுக்கற்ற, இயல்பாகவே தூய்மையாக உள்ள பிரம்மப்பொருள் சித்துப் பொருள், அசித்துப்பொருள் ஆகிய அனைத்திலும் வியாபித்து எங்கும் நிறைந்திருக்கும் ஒப்பற்ற ஒழுங்கினையே அக்கூற்றுக்கள் புலப்படுத்துகின்றன. இவ்வாறு பூரணமாக உணரும் ஞானப்பேறு மிக்கோர் புகழும் சுப்பிரமணிய, ஞானவடிவே! எனது சீவபோதத்தைத் கவர்ந்து சிவபோதமாக்கும் ஒப்பற்ற பெருவெளியாகி நின்று, அருள்மழை பொழிகின்ற பெரிய முகிலே!

4. சித்தான பரப்பிரம்மத்திடமிருந்தே அனைத்தும் தோன்றின என்று வேதம் கூறுமிடத்தும், மண்ணானது கடமாக (பானையாக) மாறுவதைத் குறிக்கும் பரிணாமப் பொருளைக் கொள்ளாமல் இறைவன் தனது அருட்சத்தியால் மாயை என்பதையே உயிர்களுக்கேற்ற உடம்பாகவும் ஐம்பூதமயமான உலகாகவும் நன்கு உருவாக்கிக் கொடுத்த செயலாகும் அது எனக் குறைவொன்றும் இல்லாத வகையில் நிறைவான பொருளைக் கொள்ள வேண்டும். 'பரம்பொருளைத் தவிர்த்து வேறொன்றும் இல்லை' எனக் கூறும் இடத்தும் 'கோனன்றிக் குடியில்லை' எனக் கூறுதல் போன்று, முதன்மையான, சர்வ ஆதாரமான பெருமைநிலையை அது

உணர்த்துகிறது என, ஞானத்தெளிவு மிக்க நற்பொருளைக் கொள்ள வேண்டும். இவ்வாறு நயமான உட்பொருள் கொள்ளும் நல்ல செயல்திறத்தை உடையவர்கள் போற்றித் துதிக்க உள்ள பரம்பொருளே! எனது சீவபோதத்தைத் கவர்ந்து கொண்டு சிவபோதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள்மழை பொழிகின்ற பெரிய முகிலே!

5. சிற்றறிவுடைய ஆன்மாவிடம் உலகம், சீவன், பரம் (சிவம்) ஆகிய மூன்றும் உதித்து ஒடுங்கும் என வேதம் கூறும் இடத்தே கொள்ள வேண்டிய நற்பொருளாவது – கண் திறந்து உலகத்தைப் பார்த்தல் போன்று, சீவான்மாவின் சீவபோதச் செயற்பாட்டால் மூன்றும் வெளிப்பட்டும், இமையானது கண்ணை மூடிக்கொள்ளும் அச்சமயத்தில் உலகம் மறைபட்டு இருத்தல் போன்று, சீவபோதம் செயல்இன்றி ஓய்ந்திருக்கும்போது இம்மூன்றும் காணப்படாமல் மறைவாக உள்ள நிலையையும் அக்கூற்று விளக்கிக் காட்டுவதாகக் கொள்ள வேண்டும். மேலும், வேதமானது அங்கே 'நித்தியமாக விளங்கும் ஆன்மா' எனக் கூறும் இடத்து, "ஆன்மா என்பது சீவான்மா அன்று; சிவபரம்பொருளே; தத்துவப் பொலிவுள்ள சிவமாகிய அந்த இறையை பிரம்மகீதை எனும் நூலும் ஆன்மா எனவே கூறும்'' என உரைக்கப்படும் இக்கருத்துக்களை நன்கு சிந்தித்து உணர்வோர் போற்றித் துதிக்கும் குகபரமே! எனது சீவபோதத்தைக் கவர்ந்து சிவ போதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள்மழை பொழிகின்ற பெரிய முகிலே!

6. வேதமானது சிறிய செயல்திறனும் சிறிய அறிவும் உடைய ஆன்மாவை நோக்கி "பெருமை மிகப்பெற்றுள்ள நீ சிவமே, சிவம் நீயே" எனக் கூறும் இடத்தும், தெளிவான பொருள் யாதெனில் – உள்ளே அறிவு ஒரு சிறிதும் இன்றி நீண்டுயர்ந்த சடமான உடலம் என இகழ்ந்துரைக்க ஒருவழியும் இன்றி, உள்ளே உள்ள அறிவானது இயக்க அதனால் காணும் ஆற்றல் வாய்த்துள்ள கண்போன்று, இகழ்ச்சி சிறிதும் இல்லாத பெரிய ஞானமயமான பிரம்மம் உள்நின்று அறிவித்தால் அறியக்கூடிய சித்துப்பொருளாகவும், உள்ளே அந்தர்யாமியாக வெளிப்பட்டுள்ள அந்த ஈசனோடு பொருந்தி விளங்கும் பண்புடைய பொருளாகவும், பாசப்பிணிப்பிலிருந்து முழுவதுமாக நீங்கி, அகண்டாகாரமான பதிப்பொருளாகிய சிவத்தை அடைந்து உய்வதற்கு அருள்உரிமை பெற்றுள்ள தன்மை உடையதாகவும் ஆன்மா திகழ்வதால் வேதமானது "பெருமைக்குரிய நீ சிவம்'' என்று உணர்த்தியது. இவ்வாறு தெளிவாக உணரவல்லோர் போற்றித் துதிக்கும் குகதெய்வமே! எனது சீவபோதத்தைக் கவர்ந்து சிவ போதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள்மழை பொழிகின்ற பெரிய முகிலே!

7. அழுக்கற்றுத் தூய்மையாக உள்ள ஆன்மாவைப் பிரம்மத்தின் பிம்பம் என, குற்றமற்ற வேதம் கூறும் இடத்தே, உட்பொருள் யாதெனில் – அக்கூற்றில் வரும் ஆன்மா என்பது உயிர்க்கும் உயிராகத் திகழும் அந்தரான்மாவையே உணர்த்துவதாகக் கொள்ள வேண்டும். ''சிவன் – சீவன் என இரண்டில்லை; ஒன்றேதான்'' என, வேதம் உறுதிப்படுத்திக் கூறும் இடத்தும், தாமிரக் களிம்பு போன்றதான ஆணவமலம் நீங்கப்பெற்றுப் பேரறிவு மயமாகி, சிவத்தோடு இரண்டறக் கலந்து விளங்கும் நிலையில், சிவானந்தத்தைக் குறைவற அனுபவிக்கும் அத்துவித நிலையை உணர்த்த வந்த கூற்று அதுவாகும் – என்றும், அத்தகைய இரண்டற்ற நிலையில், பாசப்பிணிப்பு நீங்காத பந்தநிலையில் ஏற்படும் சுழுத்தி அவத்தையைப் போன்று, வேறே எதுவும் தோன்றாமல் பரவெளியே எங்கும் தோன்றும் என்றும் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். இவ்வாறு தெளிவாக உணர்ந்து, பிரம்மரந்திர மலைமேல் ஏறி, அருளானந்தமாகிய தேனை உண்பார் காணக்கூடிய

பரம்பொருளே! எனது சீவ போதத்தைக் கவர்ந்து சிவபோதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள்மழை பொழிகின்ற பெரிய முகிலே!

8. கடத்துள் (பானையுள்) இருக்கும் நீரில் விளங்கும் சூரியனின் பிம்பமானது, அந்த நீர் இல்லாத சமயத்தில் பிம்பம் மறைந்து சூரியனாகவே விளங்குதல் போன்று, பாசப்பிணிப்புகளிலிருந்து முழுவதுமாக நீங்கும் சமயத்தில் பிரிவுபடாமல், அகண்டிதமாகி, திடப்பட்டு நிலைக்கும் சீவன், தன் அருள் முதலான பரம்பொருளைச் சேர்ந்து விளங்க, அந்தரான்மாவாகிய உள் ஒளியும் சிவமாகவே ஆகிவிடும். இதனால் சீவன் என்பது பொய்யாகி, அடியோடு அழிந்து படுவதற்கு வழிஇல்லை. சீவன், சிவத்தோடு சேர்ந்திருக்கும் அச்சேர்க்கை நிலையானது உடலும் உயிரும், நாவும் சுவையும், சமஷ்டிப் பிரணவமான ஓம் ஒன்றும் வியஷ்டிப் பிரணவமான ஓம் ஒன்றும், சீவனும் ஆணவமலமும் சேர்ந்திருத்தல்போன்று அத்துவிதக் கலப்பு நிலையில் திகழும். இவ்வாறு, உலகில், சன்மார்க்கிகள் எனப்படும் வைதிக சைவ சித்தாந்த நெறியினரால் நன்கு தெளிவாக உணரப்படும். அத்தகையோரைக் காத்து ஆட்கொள்ளும் பரம்பொருளே! எனது சீவபோதத்தைக் கவர்ந்து சிவ போதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள் மழை பொழிகின்ற பெரிய முகிலே!

9. சிவப்பொலிவார்ந்த மாணிக்க வாசக சுவாமிகள் "நாம் எனும் உணர்வுகெட்டு சிவமாகவே ஆகிய பேறு" என்று கூறியருளியதற்குரிய உட்பொருளாவது: தற்போத அழிவு எனப்படும் சீவத்துவம் அழிந்துபடும் நிலையைத் தொடர்ந்து சின்மயமான சிவத்தோடு இரண்டறக் கலந்து விளங்கும் சீவன்முத்தி நிலையே அது என உணரவேண்டும். மேலும் சிவநிலை எனப்படும் தூய பேரின்பம் ஆன்மாவுக்கே தவிர, ஆனந்தம் அந்தச் சிவனுக்கே எனக் கூறுவது எவ்விதத்திலும் பொருந்தாததாக விளங்குவதாலும், வேத ஆகம நூல்கள் அனைத்தும் சுகமான முத்திப்பேற்று இன்பம் நித்தியமானது எனக் கூறுவதாலும், நித்தியமான அந்த ஆனந்தத்தை அனுபவிப்பதற்குரிய தூய ஆன்மாவும் அங்கு உண்டு என்றும் நன்குணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஆய்ந்து உணர்வாரைக் காத்து ஆட்கொள்ளும் பரம்பொருளே! எனது சீவபோதத்தைக் கவர்ந்து சிவபோதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள்மழை பொழிகின்ற பெரிய முகிலே!

10. சிவன் (பதி), சீவன் (பசு), பாசம் எனும் முப்பொருள்களும் எப்பொழுதும் நிலைத்திருப்பவையே எனக் கூறப்படுமாயின், சிவனுக்கு எவ்வாறு எங்கும் செறிந்து வியாபித்து நிறைந்திருக்கும் நிலை பொருந்தும் என்று கேட்டால் – உடலில் உயிர் வியாபித்திருப்பது போன்று, பரநிலைக்குரிய சிவன் பாண்டியமன்னனாலும், தவ ஆற்றல் மிகுந்த அருச்சுனனாலும் அடியுண்டபோது, அந்த அடி எங்கெங்கும் உள்ள சித்துப்பொருள் அசித்துப் பொருள் ஆகிய அனைத்தையும் சார்ந்தது என்பதால் சிவன் எங்கும் வியாபித்துள்ளான் என்றும், அவனது வியாபக நிலைக்கு இழுக்கு ஏதும் இல்லை என்றும் உணரலாம். இவ்வாறு உணரும் அறிவுக் கூர்மை உடையோர்க்கும், புதிது புதிதாகப் பெருக்கம் அடையும் பிந்துசம்பந்தமான மாயைக்கும் பிரமம் எனும் பெயர் உண்டு என்பது முதலான கருத்துக்களை வேதநூல்கள், தத்துவப்பிரகாசம் எனும் நூல், காந்தபுராணம் முதலான நூல்களும் நன்கு விளக்குகின்றன என்பதை இவ்வுலகில் பற்றற்று வாழ்ந்து, ஓர்ந்துணர்ந்து உய்திபெறும் நல்லோர்க்கும் அருள்புரியும் பரம்பொருளே! அருணகிரிப்பெருமான் புகழ்ந்து துதித்த குகதெய்வமே! எனது சீவபோதத்தைக் கவர்ந்து கொண்டு சிவபோதமாக்கும் பெருவெளியாகத் திகழ்ந்து அருள்மழை பொழிகின்ற பெரிய முகிலே!

# 37. சருவேசுரபதி

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ச**கசீவப ரம்பொய்யென வேமாமறை சாற்றுஞ்
சாரிற்சிறு போதச்சிதை வதிலேகுறி சாரும்
அகமேதுமி லாதம்பர மதுவேதெரி தலினா
லவையங்ஙன மிலையென்னவு மதுதான்விழி யில்லான்
உகமென்பதை யறியாமுறை போலென்னவு மோதவ்
வொண்மைப்பரம் வடிவுக்கட வுள்காரிய மெனவுந்
தகவார்பொரு ளுணர்வாருணர் தனிநாடக வெளியைத்
தாதாவெனை யாணார்மலி சருவேசுர பதியே. (1)

**உ**றுகண்கெடு மமுதந்தனி லுயிரின்றொடர் பாக
வுளபோதமு முறுபாசவி திதகாரிய கருவித்
தொறுவுந்தலை மதிமானவ ழிந்தோவுதல் சொல்லாத்
தொல்காரண மதுநின்றிடு மென்றாகம சுருதி
அறைகின்றது போற்றர்க்கமு மறையுஞ்சொன வழிவை
யலகைக்குய வாயின்புடை யருணந்திசொ னூலுந்
தறுகாதணி நவசூத்திர மதின்மஞ்சொடு சாற்றுந்
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (2)

**பா**ங்கேறிடு சாந்தோக்கியம் பரயோகசி காமா
பஞ்சப்பிர மங்காரண மதுவேபொருள் பறைதற்
காங்காரியஞ் சொன்மாத்திரை யென்றோதிய வளவு
மருளார்நிலை தனிலேமுத லழியாதழி வாமோர்
ஊங்கார்முடி வாமீதுச தாசாரந னூலி
லுறுமந்தர மேயாவதி னுழையொன்றுந ணாதூழ்
சாங்காரண மாகத்தவர் தாழுங்குக தேவே
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (3)

---

*1. உகம் = உலகம்; "உகம்பார் தரணி" என்பது பி – நிகண்டு.*

*2. மதி = சந்திரன்; அட்ட மூர்த்த மா விசுவவடிவினன் றலையி லிருத்தலி னால், "தலை மதி" எனப்பட்டது. அதனாலே தலை ஆகாயமெனப்படு கிறது. "தலை யிடந் தலைவிண்" என்பது லகரவெதுகை.*
*அலகைக் குயவு = பேய்த்தேர்; இக் கானனீர். காண்பார்க்கு விரைந்து சேறல் காணப்படுதலின், தேரெனவும், காண்பார் நெருங்க நெருங்க மறைந்து போதலின் அது பேய்த் தேரெனவும் வழங்கப்படுவதாயிற் றென்க. தறுகல் = தடைப்படல்; இது, கிராமியமொழி.*

*3. நுழை = நுண்மை; குறைவெனும் பொருள்பட நின்றது.*

**இ**ருகாரண முதலாயுள விறையாமொரு நிமித்த
னேணாரரு ளென்னுந்துணை மூலங்கொடு நீள
முருகாருல காங்காரியம் வனையத்தலை மூல
முதலாயுள பிரமப்பெய ரிருமாயையை மொழியின்
அருவாகவு முருவாகவு நனிநின்றிடு மதிலே
யகமத்தழை வதையொத்துள தழிகாரிய மாகும்
தருமூலம துறமூங்கெட லில்லாதது சததந்
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (4)

**அ**னன்மேலிடு விறகானதி னதிசாரமெ மூந்தே
யருகேமணம் வீசிச்செல வறிதல்பிர சன்னம்
இனவாநிமிர் மாயாமய மெல்லாமழி வேலை
யிருரூபமி றந்தேபர வணுரூபம தென்னப்
பினமாநித நிற்கும்மிது போன்ஞாயமும் பேசும்
பின்னம்புக லணுவிற்குமொர் மூலஞ்சொலு மரனூல்
தனையோர்பவர் சற்காரிய நெறியாரென வாவர்
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (5)

**பொ**றியாலறி யொண்ணாதவுள் பொருளேபர மாணுப்
பொருளாமது வேயில்பொரு ளென்றோர்பவர் பெரிய
மறைகூறும பாவப்பத மீயர்த்தமு மிதுவே
மற்றொன்றில தென்றோதவ ழக்கின்றெனை யென்னிற்
பொறையாநில மீதோர்பொரு ளில்லாதது பொருளாப்
புகறற்கிசை யாதென்றுரை தருவார்நனி போற்றித்
தறைமேனனி யுய்யும்படி சந்தோடமி சைப்போய்
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (6)

**அ**பாவத்தினை முன்னில்லது பின்னில்லதொ ரங்க
மறைதற்கமை வற்றேமுழு தும்மில்லதி ரண்டு
சுபாவப்பட வேயொன்றனி லொன்றில்லது சொற்ற
தொகைநாலென வேகோடலின் முதன்மேவுமி ரண்டும்

---

*4. இருமாயை = பெரியமாயை.*

*5. அணுரூபமனேகமாகவின், அவற்றிற்கும் பரமகாரணம் மாயையென் றறிவுறுத்துவான் “மூலம்” என்றாரென்க.*

*6. இல்பொருள் = ஒன்று மற்றொன்றாக மாறி அதி நுட்பத்தன்மை யடைந்த பொருள்.*
*வழக்கின்று = எதிர்வியாச்சிய மொன்றுமில்லை. தரை யென்பது எதுகைநோக்கித் “தறை” எனவாயிற்று.*

*7. முன்னில்லது, பின்னில்லது, முழுதுமில்லது, ஒன்றிலொன்றில்லது என்பவற்றை முறையே பிராகபாவம், பிரதித்துவமிசாபாவம், அத்தியந்தாபாவம், அன்னியோன்னியா பாவமெனத் தருக்கநூலார் சாற்றுப. அபாவம் = இன்மை.*

உபாயத்தொவு மூன்றாவதொவ் வாதித்தையு ணர்ந்தே
யுயிருக்குயி ராய்நின்றொளி ருனைநாடிய னேக
தபாதிக்கிய முறுதாபதர் தாழுங்குக தேவே
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (7)

**சி**ட்டிக்குமு னில்லாதசெ கம்பின்வரு மென்றல்
செல்லாதுபி னேயுள்ளது பாழாமுரை செப்பற்
கொட்டாதுமு யற்கோடுவெ ளித்தாமரை யோடே
யுதரப்பய னில்வந்தியின் மகவென்னவு மோதல்
முட்டாவிபு லப்பூமியின் முக்காலமு மிலையே
முதலற்றவெ றுஞ்சொல்லென முடியுந்தெளி வாலே
தட்டேதுமில் சற்காரிய நெறியாரிவை யறிவார்
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (8)

**ஈ**சன்றனை வினைசேருவ தின்றீசனு மதனை
யெய்தானென லேயொன்றனி லொன்றின்மைய தென்றல்
தோசஞ்சொல வமையாநிச மாமீதொரு சுருதி
தொன்மைப்பிர மத்திற்கொரு தூவற்றவி ருட்டு
மூசும்பரி சாவந்தது மூலஞ்சொலொ ணாவா
முன்னேயுள தென்னும்மது முதல்வற்கில தென்றோர்
தாசன்றளை யுயிரிற்குள தென்றோதுதல் கசடோ
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (9)

**உ**யிரோடுட லுளதேனுமவ் வுடலவ்வுயி ராகா
துயிரும்முட லாகாதென வுணருந்திற மேபோல்
செயிரேதுமி லாவோரிறை சீவப்பொரு ளாகான்
சீவப்பொரு ளந்தப்பர தெய்வப்பொரு ளாகா
தயர்வேதுமி லாதின்னண மறியும்படி யருணூ
லாகுஞ்சிவ போதஞ்சொன தறிவார்பிழை போகார்
தயவேறிய வருணைப்பெயர் நாதற்கரு டந்தோய்
தகவோடெனை யாணார்மலி சருவேசுர பதியே. (10)

---

*7. உபாயத்தொவ்வும் = சிற்றளவையிலொவ்வும் ; என்னை ? உலகம், சிருட்டிக்கு முன்னுஞ் சங்காரத்திற்குப் பின்னும் மாயாகாரணத்தில் வியத்தமின்றி அதிசூக்குமமாக வடங்கியிருக்கு மென்னு மருத்தத்தா லொப்பத்தக்க தாகலின்.*

*8. இச் செய்யுட் பொருண்முடிபாகவே மிருகேந்திராகம ஞான பாதத்தின் மாயாப் பிரகரணத்துக் கடைச்சுலோகமுங் கழறுகின்றது. விபுலப்பூமி = விசாலமான பூமி, விபுலம் = விசாலம்; ணகரவெதுகை.*

*9. ஒருசுருதி = சீர்த்தியுடைத்தெள்ளறிவென்னும் 43 – ஆம் பத்தின் 2 – ல் எடுத்துக் கொள்ளப்பட்ட நிராலம்போபநிஷத். அத்திருப்பாட்டிற்றானே ஈங்குணர்த்து விடயம், விரிவாயெடுத்தோதிப் பசுவுண்டென்பதூஉம் நிறுவப்படுகின்றது.*

*‘ஒணாவா’ என்பதில் ஆ – ஆறு என்பதன் விகாரம்.*

# 37. சருவேசுரபதி

1. உலகம், சீவன், பரம் (பாசம், பசு, பதி) எனும் மூன்றும் பொய்யே எனப் பெரிய வேதம் கூறும் முடிபில் – சீவான்மாவின் தற்போதச் சிதைவு நேரும் பொழுது, நாமம், உருமுதலான அடையாளம் ஏற்கும் கண்டித நிலை இல்லாமல், அழகிய ஆகாச வெளியே புலனாவதால் வேதவாக்கியங்கள் அம்மூன்றும் இல்லை எனக் கூறின என்பது பொருள். விழிஇல்லாத ஒருவன் உலகத்தைக் காணாமல் இருக்கும் நிலையில் உள்ளது போன்றது அந்நிலை என்பதாகும். ஓதப்படும் ஒளிமயமான பரம் என்பது காரணம் எனவும், நாமமும் வடிவும் உடைய கடவுளர் நிலை காரியம் எனவும், தத்துவ மரபுக்கேற்ற பொருளை அறியும் ஞானியர்களால் உணரப்படும் ஒப்பற்ற ஆனந்தத்திருக்கூத்து நிகழும் இடமாகிய சிதாகாசத்தை எனக்கு இப்பொழுதே வழங்கி அருள்க. என்னை ஆட்கொள்ளும் அன்பு செறிந்துள்ள தலைவ! பல்வேறு உலகங்களையும் அங்கங்கே பரிபாலிக்கின்ற கடவுளர்க்குரிய தலைமைத் தெய்வமே!

2. "அமுதத் தானத்தை அடையும் பொழுது தேகசம்பந்தமான துன்பங்கள் நீங்கிவிடுதல் போன்று, சிவபோத நிலையை அடையும் போது ஆன்மத் தொடர்பாக உள்ள சீவபோதமும் பாசத்தொடர்பான நானாவித காரிய – கருவிக் கூட்டங்களும் நீங்கி, தேய்ந்தும் தேயாதிருக்கும் சந்திரனைப் போன்று, அடியோடு அழிந்துநீங்கும் நிலை பொருந்தியுள்ளதாகச் சொல்ல முடியாத முதன்மைக் காரணத்தில் ஒடுங்கி நிற்கும்" என ஆகமமும் வேதமும் கூறுகின்றமை போன்று தருக்கநூல்களும் கூறும். கூறப்பட்ட மறைவு என்பதாகிய அழிவைப் பேய்த்தேரின் மறைவுக்கு ஒப்பாக, சிவானந்தப் பேறுடைய அருணந்தி சிவாசாரியாரின் சிவஞானசித்தியார் எனும் நூல், தடையேதும் இன்றி, ஒன்பதாவது சூத்திர விளக்கத்தில் நயம்படக் கூறும். உனக்குரிய மகத்துவ நிலைக்கு ஏற்றவாறு என்னை ஆட்கொள்ளும் அன்பு செறிந்துள்ள சருவேசுவர பதியே!

3. ஞான நயப்பாடு மிகுந்துள்ள சாந்தோக்கியம், மேலான யோகசிகை, பெருமைமிகு பஞ்சப்பிரம்மம் எனும் உபநிடதங்கள் "காரணமாகிய அதுவே பொருள்; விவரித்துக் கூற உள்ள காரியம் என்பது வெறும் சொன்மாத்திரை மட்டுமே,'' என்று கூறும் முடிபுநிலையிலும் உட்பொருள் எது எனில், அருள்நிலையில் முதலானது அழியாமல் அழிந்திருக்கும் முடிவுநிலையாம். இது சதாசார நூலிலும் கூறப்பட்டுள்ள பொருத்தமான முடிபாகும். இந்த முடிபில் பொருந்தக் கூடிய குறைவு ஏதும் இல்லை. வினைப்பயன்கள் நீங்கும் பொருட்டுத் தவமுனிவர்கள் தொழுது வணங்கும் தெய்வப் பெருமானே! உனக்குரிய மகத்துவ நிலைக்கு ஏற்ப என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்த சருவேசுவர பதியே!

4. மூன்று காரணங்களுள், மிகப்பெரிய காரண முதற்பொருளாக உள்ள இறை எனப்படும் நிமித்த காரணன்; அவனது இன்பம் நிறைந்த அருட்சக்தி எனப்படும் துணைக்காரணத்தைக் கொண்டு, நீளம் முதலான அழகிய வடிவக் கூறுகள் நிறைந்துள்ள உலகமாகிய காரியத்தை முறைப்படி வெளிப்படுத்துவதற்கு மூலமுதற் காரணமாக உள்ளது எது எனில் பிரம்மப் பெயர் தாங்கியுள்ள பெரிய மாயை என்பதே. மாயை என்பதன் தன்மையைக் கூறில், அது அருவமாயை எனவும் உருவமாயை எனவும் விளங்கும். மரத்தின் இலைகளும் கிளைகளும் தழைப்பதை ஒத்து விளங்குவது அழிகாரியம்; அந்த மரத்தின் மூலவேர் போன்று திகழ்வது அழியாத காரியம்.

எப்பொழுதும் உனக்குரிய மகத்துவ நிலைக்கு ஏற்ப என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்துள்ள சருவேசுர பதியே!

5. நெருப்பில் விறகு இடப்படும் பொழுது விறகில் உள்ள சாரம் கொப்புளமாக வெளிப்பட்டு மணம்வீசி நிற்றலைக் கண்கூடாகக் காணலாம்; இது தெளிவாக உணரப்படுவதே. பற்பல உலக, உலகப்பொருள் தொகுதிகளாக வெளிப்பட்டுள்ள மாயை தொடர்பான அனைத்தும் அழியும் சமயம், தனது பெரிய உருவமானது ஒடுங்கப்பெற்றுப் பரமாணுரூபம் எனச் சொல்லும்படி மாயையானது வேறுபட்ட நுட்பவடிவம்தாங்கி நித்தியத்தன்மை வாய்ந்ததாகவே விளங்கும். இது போன்ற பிரபஞ்சகாரிய – காரண முறையைப் பேசும் பதிநூலாகிய ஆகமநூலும் கூறுபட்டு விளங்குவதாகப் பின்னப்படுவதாகக் கூறப்படும் அணுவுக்கும் மூலகாரணமாக ஒன்றைக் கூறும். இந்த நெறியை ஆராய்ந்து உணர்வோர் சற்காரிய வாதம் எனப்படும் நெறியை ஏற்றுக்கொள்வோராவர். உனக்குரிய மகத்துவ நிலைக்கு ஏற்ப என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்துள்ள சருவேசுர பதியே!

6. புறக்கண் முதலான கருவிகளால் அறிய முடியாமல் உள்ள பொருளே பரமாணு என்பது. அது இல்லை என்று சொல்லத்தகும் முறையில் உள்ள அதி நுட்பமான தன்மையை அடைந்திருக்கும் உள்பொருளே. இவ்வாறு இல்பொருள் என்பதன் நுட்பப்பொருளை உணர்பவர்கள், "பெருமைக்குரிய வேதம் கூறும் 'அபாவம்' என்னும் சொல் உணர்த்தும் அர்த்தமும் இதுவேயாம், வேறு அர்த்தம் இல்லை" என்று கூறலாம். இதற்கு எதிராக எழும் வாதம் ஒன்றும் இல்லை. ஏனெனில், பொறுமையே வடிவாக உள்ள இப்பூமியில் இல்லாத ஒருபொருளைப் பொருள் என்று கூறுதற்கு வழிஇல்லை. இவ்வாறு உட்பொருள் உணர்ந்து கூறுவோர் மிகவும் போற்றித் துதிக்க, அவர்கள் நிலவுலகில் நன்கு உய்திபெற்று வாழும்வகையில் அவர்களுக்கு ஆனந்த மிகுதியை அளிப்பவனே! உனக்குரிய மகத்துவ நிலைக்கு ஏற்ப என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்துள்ள சருவேசுவர பதியே!

7. அபாவம் (இன்மை) என்பதில், முன்னில்லது, பின்னில்லது, ஒரு பகுதியிலாவது ஓர் உறுப்பு உள்ளது எனக் கூற முடியாத வகையில் முழுவதும் இல்லாதது, இரண்டுபொருள்கள் அதனதன் இயல்புகுன்றாது தனித்தனியே இருக்க, ஒருபொருளில் மற்றொரு பொருள் இல்லாதது என நான்குவகையாகக் கொள்ளப்படும் அபாவத் தொகுதிகள் உள்ளன. இவற்றுள் முதலில் உள்ள இரண்டும் (முன்னில்லதும், பின்னில்லதும்) அளவை முறைப்படிப் பொருந்தும்; மூன்றாவதான அபாவவகை பொருந்தவே பொருந்தாது. இந்த அபாவத் தன்மையை நன்குணர்ந்து உயிருக்கு உயிராக விளங்கும் உன்னை நாடி, பல்வகைப்பட்ட தவ முயற்சிகளில் முதன்மை பெற்றுயர்ந்துள்ள தபோதனர்கள் வணங்கித் துதிக்கும் குக தேவனே! உனக்குரிய மகத்துவ நிலைக்கு ஏற்ப என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்துள்ள சருவேசுவர பதியே!

8. படைப்புக்கு முன்னர் இல்லாத உலகம் பின்னர்த் தோன்றிவரும் எனில், பொருந்தாது. (இல்லாத ஒன்று தோன்றாது); அழிக்கப்பட்ட பின்பும், காரணநிலையில் ஒடுங்கியுள்ளது எதுவோ, அது அழிவுக்கு உட்பட்டுவிட்டது எனக் கூறுதலும் பொருந்தாது (உள்ளது போகாது). முயற்கொம்பு, ஆகாசத் தாமரை, வயிறுவாய்ப்பதற்கு வாய்ப்பு இல்லாத மலடியின் மகன் – என்றெல்லாம் கூறப்படுபவை, தடைபடாத இந்த விசாலமான பூமியில் மூன்று காலங்களிலும் இல்லை. இவை முதன்மையான மூலகாரணமற்று வெறும் சொல்மாத்திரை நிலையில் இருப்பவை எனத் தெளிவாக

உறுதிசெய்யப்படும். தடையாக இருக்கும் விபரீத உணர்வற்ற சற்காரிய நெறியார், தெளிவான மதித்திறத்தால் இவ்வுண்மைகளை நன்கு அறிவர். உனது மகத்துவ நிலைக்கு ஏற்ப என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்துள்ள சருவேசுவர பதியே!

**9.** இறைவனை வினைப்பயன் சேராது; இறைவனும் வினைப்பயனைப் பொருந்தி விளங்குவதில்லை – இவ்வாறு கூறுதலே ஒன்றில் ஒன்று இன்மை என்பதாகிய அபாவம். இவ்வாறு கூறுதல், குற்றம் ஏதும் சொல்ல முடியாத தீர்மானமான உண்மையாகும். நிராலம்போபநிஷதம் என்னும் நூல், "நித்தியமான பிரம்மத்துக்கு, தூய்மையற்ற இருள் என்பது அதனை மறைக்கும் காரணத்தால் வந்து பொருந்தியது; மூல காரணம் சொல்ல முடியாத வகையில் முன்னமேயே உள்ளது அது" என்று கூறும். அந்த மூசும் இருள் முதல்வனாகிய இறைவனுக்கு இல்லை என ஓர்ந்துணரும் தாசனாகிய நான், பாசப்பிணிப்புக்கு உட்பட்டுள்ள ஆன்மாவாகிய பிரம்மத்துக்கே அந்த இருள்மறைப்பு உள்ளது எனக் கூறுதல் குற்றமாகுமோ? உனது மகத்துவ நிலைக்கு ஏற்றவகையில் என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்துள்ள சருவேசுவர பதியே!

**10.** உயிருடன் கூடி உடல் உள்ளது எனினும் அந்த உடல் உயிராகாது; உயிரும் உடலாகாது – என உணரும் நியாயத்திறம் போன்று, பந்தம், மறைப்பு முதலான குற்றங்களுள் ஒன்றேனும் இல்லாத ஒப்பற்ற இறைவனும் சீவான்மாவாக ஆகான்; சீவான்மாவும் பரதெய்வ வத்துவாக ஆகாது. தயக்கம் ஒருசிறிதும் இன்றி இவ்வாறு உணர்ந்து கொள்ளும்படி, அருள்நூலாகிய சிவஞானபோதம் கூறியுள்ள நற்கருத்தை உள்ளவாறு அறிவோர், உண்மைக்கு ஒவ்வாத கருத்தைக் கூறும் தவறான நெறியில் செல்லமாட்டார்கள். கருணைக்குப் புகழ்பெற்ற அருணகிரிப் பெருமானுக்கு அருள்புரிந்த குகனே! உனக்கு உரிய மகத்துவ நிலைக்கு ஏற்ப என்னை ஆட்கொள்ளும் அன்புள்ளம் செறிந்துள்ள சருவேசுவர பதியே!

# 38. சுப்பிரமணியவிலாசம்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**உ**லக மாகிய வுருவ மாயையின் காரி யத்தையொ டுக்கிடுந்
தலைவர் காரிய மேலி டிற்சட சகமெ லாமங நழிவுகொண்
டிலையெ னாவண மருவ காரண மெனவி ருந்திடு மெனுமரன்
தொலைவி லாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (1)

**ச**ருவ சங்கர வேலை யிற்றுணை சாற்றொ ணாதப லாயிர
உருவ வண்டம டங்க லுங்கெட லுறுத லின்றி யுதித்தவா
றருகி யேகெடு மதுவொ ரைந்தென வாகு மென்றுணர் வார்கள்காண்
துரிசி லாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (2)

1. *வேதம் ஆகமமென்னும் இருவகைப் பனுவல்களும் ஆகமமென்னும் பெயர் பெறுதலின், "ஆகமமுத்தி" என்றது அவ்விரண்டிலுங் கூறப்படு விடுதலையேயாமென்க. பயின்றறிபவன் என்னும் 33 – ஆம் பத்தின் ஈற்றுத் திருப்பாட்டு இங்கே சிந்திக்கற்பாலது.*

2. *ஐந்து. இவ்வைந்தையும் பூப்புகழ்ப்பிரமனென்னும் 100 – ஆம் பத்தில் 5 – முதல் 8 – வரையிலுள்ள திருப்பாட்டுக்களா னறிக.*

**பி**ண்ட மொன்றழி வாயி னங்ஙனொர் பிண்ட சருவசங் காரமாம்
அண்ட மொன்றழி வாயி னங்ஙன மண்ட சருவசங் காரமாம்
அண்ட நாதனும் பிண்ட நாதனு மழிவி லாரென வறிவர்காண்
தொண்டை யாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (3)

**கா**ய நேருயி ரைக்க ருத்தர் படைத்த தாக நினைத்திடிற்
காய நீங்கி யழிந்து தேய்வுறு காலு யிர்க்கு மரிட்டமாம்
ஆயி னவ்வுயிர் முத்தி நாடுவ தவமெ னத்துணி வார்கள்காண்
தூய வாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (4)

**உ**யிரை மித்தை யெனப்பி தற்றினு முயிரை யேபர மென்னினும்
அயர்வி லவ்வுயிர் முத்தி நேடி யகஞ்செ யற்கிட னில்லையீ
தியவை கெட்டிழி நாத்தி கத்துறை யேயு மென்றுணர் வார்கள்காண்
துயரி லாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (5)

**தீ**யின் றன்மை யுருப்ப மல்லது சீத மன்றென வோருநேர்
ஆயு யிர்க்குண மறிவெ னத்தெரி வார னாதி மலத்தினை
நோயு யிர்க்குறு குற்ற மல்லது நோக்கு றுங்குண மென்பரோ
தோயு மாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (6)

**ம**லத்தி னைக்குண மென்னி லின்குட மதுர நற்குண மோவுகால்
உலப்பு றுந்திற னொப்ப வம்மல மொழிப தத்துயி ருங்கெடற்
கிலக்க தாமத னான்ம லங்கச டென்ப தேதுணி பென்பர்காண்
துலக்க வாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (7)

**பி**றவி யந்தகன் குருடு நீக்க முறாத தொப்ப வபின்னமாய்
உறவி யோடுறு குற்ற மாமல மொழிவ தேதெனி லுமிதவி
டிறையு மின்றரி தன்னை நீங்குவ தென்ன முத்தியி னீங்குமெய்த்
துறைசொ லாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (8)

**ச**கச மென்பது குணிகு ணத்தமை சயமி னிப்பொரு வகையரோ
உகள நற்பொரு ணவையி லாரரி யுமிய ணுத்தவி டொருவகை
புகல வாமிவை கருது வார்தளை பொன்றி டாதென நுவல்வரோ
துகளி லாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (9)

---

3. *தொண்டு = பழமை; "தொண்டென்ப பழமை யொன்பான்" என்பது ணகரவெதுகை.*

4. *அரிட்டம் = கேடு. அரிஷ்டம் = அசுபமென்பது அமரஸிம்ஹம்.*

5. *இயவை = வழி.*

9. *சயம் = சருக்கரை; யகரவெதுகை. 'நற்பொருள் அரியில் உகளநவை ஆர் உமி அணுத்தவிடொருவகை' என வியையும்.*
*பொருள் :– 'நல்ல பொருளாம் அரிசியின்கண் இரட்டைக் குற்றமாய்ப் பொருந்தும் உமியும் நுண்ணிய தவிடும் ஒருவகை யியற்கையாம்' என்க.*
*அரி = அரிசி. தளை = ஆணவமாகிய பந்தம். இதுவே வருஞ்செய்யுளின் மலமெனப்படுவது.*

மலமு டம்பென வந்து வீவுறு மாயை யன்றிகன் மாயையும்
மலம தன்றென வுணர்வு றுந்திற மருவு வார்தொழு தெய்வமே
அலமு றாவரு ணாச லப்பெய ரண்ண னாடிய சொன்னமே
சொலரு மாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே. (10)

# 38. சுப்பிரமணியவிலாசம்

**1.** எங்கும் எதிலும் எப்பொழுதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் தன்னொளிமயமே (சுப்பிரமணிய விலாசமே! தன்னொளி – சுயஞ்ஜோதி). அருவமாயை உருவமாயை என்னும் இரண்டனுள் உருவமாயையின் காரியமே உலகங்கள். உருவமாயா காரியமான உலகங்களை அனந்தேசுவரர் தனக்குரிய ஒடுக்குதலாகிய செயலைச் செய்யும்பொழுது சடமயமான உலகமனைத்தும் அழிந்து 'ஒன்றுமே இல்லை' எனக் கருதும் அளவுக்கு மாயையாகிய காரணத்துள் அதிநுட்பமாக இருக்கும். இவ்வாறு விளக்கம் கூறுவனவும் சிவனால் அருளப்பட்டனவும், அழியாதவையுமான வேத – ஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

**2.** சுப்பிரமணிய விலாசமே! தோன்றிய அனைத்தும் தத்தம் காரணத்துள் ஒடுக்கப்படுவதாகிய சர்வசங்காரம் நிகழும் சமயத்தில் பல்லாயிரக் கணக்கான அண்டங்கள் அனைத்தும், உண்மையில் அழிவு என்பதை அடையாமல், தாம் எங்கிருந்து உதித்தனவோ அங்கே ஒடுங்கி நுண்மைப்பட்டிருக்கும். இவ்வாறு நிகழும் சர்வசங்காரங்கள் ஐந்து ஆகும் (நிவிருத்தி நிலையில் நிகழும் பிரளயம்; பிரதிட்டாகலை நிலையில் நிகழும் பிரளயம்; வித்யாகலை நிலையில் நிகழும் பிரளயம்; சாந்திகலை நிலையில் நிகழும் பிரளயம்; சாந்தியதீத கலைநிலையில் நிகழும் பிரளயம். இவை முறையே பிரமாண்டப் பிரளயம், பிராகிருதப் பிரளயம்; மத்திமப் பிரளயம்; மாப்பிரளயம்; பிரதம மாப்பிரளயம் எனப்பெறும்). இவ்வாறு உணர்வோர்களால் மூலப்பிரமாண நூல்களாகக் கண்டு போற்றப்படும் குற்றமற்ற வேத – ஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

**3.** தேகம் எனப்படும் பிண்டம் அழியுமாகில், பிண்டம் என்ற நிலையில் அங்கே நிகழ்வது பிண்ட சர்வசங்காரம்; அவ்வாறே அண்டம் ஒன்று அழியுமாகில், அண்டம் என்ற அளவில் அங்கே நிகழ்வது அண்ட சர்வசங்காரம். அண்டத்தை நடத்தும் கருத்தாவும், பிண்டத்தை இயக்கும் கருத்தாவும், அழிதலுக்கு உட்படாமல் நிலைத்து இருப்பார்கள் எனத் தெளிவாக உணரும் பெரியோர்களால் மூலப்பிரமாண நூல்களாகக் காணப்படும், தொன்மையான வேத – ஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

**4.** உடம்போடு இணைந்து உடம்பே எனக் கூறும்படி ஐக்கியப்பட்டுள்ள உயிரை, சர்வகர்த்தாவகிய இறைவனால் படைக்கப்பட்டதாகக் கருதினால், உடலானது,

*10. அவலம் 'அலம்' என விகாரப்பட்டது.*

உயிர்த்தொடர்பிலிருந்து நீங்கி அழிந்து தூளியாகும் பொழுது உயிருக்கும் அத்தகைய அழிவாகிய கெடுதி சேரும். அவ்வாறு உயிருக்கு அழிவு நேர்வதாயின், அந்த உயிர் முத்திப்பேற்றை நாடி மேற்கொள்ளும் செயல் அனைத்தும் வீணே எனத் தெளிவாக உணரும் பெரியோர்களால் மூலப்பிரமாண நூல்களாகக் காணப்படும், தூய்மையான வேத–ஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

5. உயிர் என ஒன்று இல்லை; அதுபொய்யே எனப் பிதற்றினாலும், 'இந்த உயிரே பரம்பொருள்' (உயிரும் பரம்பொருளும் வேறல்ல) எனக் கூறினாலும், அழியாத அந்த உயிர் முத்திப்பேற்றைக் கருத்தில் கொண்டு, தியானம் முதலான செயல்களைச் செய்வதற்கு வழிஇல்லை. இவ்வாறு உயிரைப் பற்றிக் கூறுவது, வழிமுறைகெட்டு இழிந்திருக்கும் நாத்திகவாதத்தையே சாரும் என்று தெளிவாக உணர்வோர்களால் மூலப் பிரமாண நூல்களாகக் காணப்படுவனவும், துன்பத்தை நீக்குவனவுமான வேத–ஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

6. நெருப்பின் தன்மை வெப்பமே அன்றிக் குளிர்ச்சி என்பதில்லை என உணர்வது போன்று, நுண்மையான உயிரின் குணம் அறிவே என உணர்வோர், அனாதியாகவே உள்ள ஆணவமலம் உயிருக்குப் பொருந்தியுள்ள குற்றமாகுமே தவிர அனுமானமாக நோக்கி அது உயிரின் குணமன்று என்று கூறுவார்களோ? தெளிவான நுட்பங்களைக் கூறும் வேதஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

7. ஆணவமலம் உயிரின் குணமே எனக் கூறில், கரும்புக்கட்டியாகிய வெல்லத்தின் இனிப்புச்சுவையாகிய குணம் நீங்கும்போது குணியாகிய வெல்லமும் அழிந்துபடல் போன்று, அந்த ஆணவமலம் நீங்கும் நிலையில் உயிரும் அழிவு அடைவதற்குரிய சூழ்நிலை உண்டாகிவிடும். அதனால் ஆணவமலம் உயிரின் குணம் அல்ல, அது உயிரின் குற்றமே எனத் தெளிவாக உணரும் பெரியோர்களால் அடிப்படை மூல நூல்களாகக் காணப்படும், விளக்கம் மிக்கனவாகிய வேத– ஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

8. பிறவியிலேயே குருடாக இருப்பவனின் குருட்டுத்தன்மை நீக்கப்பட முடியாமல் இருப்பதைப் போன்று, ஞானமயமான உயிரோடு அதன் உடன் தோன்றியதாக உள்ள ஆணவமலம் எவ்வாறு ஒழியும் எனில் அரிசியோடு உடன் தோன்றிய உமியும் தவிடும் ஒருசிறிதும் ஒட்டிக் கொண்டிருக்காமல், பக்குவமான அரிசியினின்று நீங்கிவிடுவது போன்று, முத்திநிலையில் உயிரினின்று ஆணவமலம் முழுவதுமாக நீங்கிவிடும். இவ்வாறு மெய்ப்பொருள் நெறிகளைக் கூறும் வேத–ஆகமங்கள் புலப்படுத்தும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

9. 'உடன்பிறந்தது' எனப்பொருள்படும் சகசம் என்பது, குணி – குணத்தொடர்பில் சருக்கரையும் அதன் இனிப்பும் போன்று விளங்கி இருப்பது ஒருவகை. நல்ல அரிசியில் இரண்டு குற்றங்களாகப் பொருந்தியுள்ள உமியும் தவிடும்போன்று விளங்கி இருப்பது மற்றொருவகை. (உயிருக்கும் ஆணவமலத்துக்கும் உள்ள தொடர்பானது, இரண்டாவதாகிய சகசவகை; முதல்வகையான சகசம் அன்று. சருக்கரையைவிட்டு இனிப்பு நீங்காது; ஆனால்

அரிசியைவிட்டு உமியும் தவிடும் நீங்கும்) இவ்வாறு கூற உள்ள இக்கருத்துக்களைச் சிந்திப்போர் ஆணவ மலம் நீங்காது; அழியாது எனக் கூறுவரோ ? ஒருகுற்றமும் இல்லாத வேத–ஆகமங்கள் கூறும் முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

**10.** “ஆணவமலமானது, உடல், உலகம் என உருப்பெற்றுப் பின்னர் ஒடுங்கும் மாயை என்பதாக ஆகாது, மாயையும் ஆணவமலமாக ஆகாது," எனத் தெளிவாக உணரும் ஆற்றல் வாய்ந்த பெரியோர்களால் தொழப்படும் குகதெய்வமே! பந்தங்களால் துன்பப்படுதல் என்பது இல்லாத அருணகிரிப் பெருமான் விரும்பித் துதித்த சொக்கத் தங்கமே! கூறுதற்கரிய பெருமை வாய்ந்த வேத– ஆகமங்கள் புலப்படுத்தும் உயர்ந்த முத்திநிலையில் என்னை வைத்து அருள்.

# 39. கதிசேர்மின்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பு**கழ்கி ளர்ந்தகுண வன்பர் காளுவகை பொன்றி டாதகதி வேண்டுநீர்
திகழ்கி ளர்ந்தபர நாமெ னச்சொனெறி சேரி லுள்ளசிவ பத்தியும்
இகழ்வி கந்தவொர்தி யானமுங்கெடுமு ளெழும கந்தையத னாலதிற்
புகலொ ழிந்துகரு ணாநி திக்கடவுள் புரிவு கொண்டுகதி சேர்மினே. (1)

**பெ**ருத்த காரியம கேச னாருடைய பெரிய மாயைதனை யறிவிலே
தரித்ர மானவுயி ரவன்வி லாசவரு டானி லாதுவெல லெவ்விதம்
பொருத்த மாயகுண சீலர் காளுறழ்வு பொன்றி டாதிதையு ணர்ந்திறா
நிருத்த னாரருளை வேண்டி யுள்ளகுறை நீங்கி நல்லகதி சேர்மினே. (2)

**க**மட முட்டைதனை நோக்கு நேரெமது கருத்தி னாங்கடவு ளென்னவே
நிமிர நோக்கியது வாக்கு வேமெனினு நிகழ்த்து மக்கமடம் வேறதாய்
அமல வன்மையுள தாயி ருப்பதுபொ லறையு நீவிரிலை முட்டையே
நுமது தானமத னாலொவ் வாதிறையை நோக்கி நல்லகதி சேர்மினே. (3)

**மு**ட்டை யாயநுமை யாமை யாயகுரு முன்னி நோக்கியருள் வடிவமாய்த்
தட்டி லாதுசெய வெய்து மட்டுமிறை தஞ்ச மாகவரு ணெறியிலே
பெட்டி லாதுநித நின்று பொய்க்குரவர் பேசு கண்ணடை யிலாதவா
விட்டு லாவுமன மோய வுள்ளுணர்வை மேவி நல்லகதி சேர்மினே. (4)

*3. கமடம் = ஆமை.*

*4. பெட்டு = பொய்.*

**ம**ருளி லுள்ளநுமை மருளி லுள்ளகுரு மருள றுப்பதிலை யவர்நுமை
இருளி லாதபர மென்று கூவியது விதுவெ னக்கருத வைப்பதைப்
பொருளெ னக்கொளுவி ரேல கந்தையது பொருத நின்றவவ மாமிதைக்
கருத னீத்திறையின் மனுவை யேற்றரிய கருணை கொண்டுகதி சேர்மினே. (5)

**பா**சம் வெல்லிறைவ னில்லை யேலுரிய பண்ண வன்கணிறை மனுவையே
நேச மோடுகொடு நிற்கி னந்தவிறை நேரி லம்மலம கைத்திடும்
நாச யாக்கைவிடு மெல்லை யுந்தலைவ னண்ணு றானெனினு மிறுதியில்
மோச மின்றியருள் புரிவ னீவிரிது முறையி னின்றுகதி சேர்மினே. (6)

**சொ**க்க வத்துவித ஞான மோதரிய சுருதி யென்னுமறை சோகம்பா
விக்க வென்புழியெ னிறைவ னாயவுனை விட்டு நானிலையு னிறைவிலே
பக்க மின்றியுட னாமெ னச்செயல்ப துங்க நிற்கவுரை தந்ததாய்த்
துக்க மற்றபொருள் கொண்டு முற்சொலிய துங்க மானகதி சேர்மினே. (7)

---

*5. இத்திருப்பாட்டின் பொருள்பற்றி 31 – ஆம் பத்தின் "நயனமிலான்" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுங் குறிப்புரையுங் கருதிக்கொள்ளத்தக்கன. கூவி = அழைத்து.*

*6. அகைத்தல் = அடித்தல்; "உம்ப லகைத்த வொண்முறி யாவும்" என்றார் (மலைபடுகடாத்திற்)* ***பெருங் கௌசிகனாரும்.***

*"மோசம்" என்பதன் பொருளைத் திட்பத்தில் ஓர்க. (3 – ஆம் பத்தாகிய திவ்விய சுப்பிரமணியம் 1 – ன் உரை).*

*7. அவன் நானெனப் பாவிப்பது சோகம்பாவனை; அவன் = அவ்விறைவன். இதனா லேற்படுவதியாதெனின், என் கடவுளாகிய வுன்னைவிட்டு நானொரு தனிப்பொருளாக வில்லை யாகலின் எனக்கொரு சுதந்திரமுமின்று; எல்லா நின்செயலிலுளவென்று சம்பூரண சிவச்செயலையே பாவிக்கு நிலையிற் சீவச்செயலென்ப தெழாமே தற்போதமடங்கும்; அங்ஙனமே பாவனை செய்தோனுக்குச் சிவசமத்துவ கதியாமென்பதே. இதனை, இத்திருப் பாட் டியம்ப வெழுந்த காரியப்பாட்டில் இது வேதமும் ஆகமமுஞ் சொல்லுமுபாய மென்பதையு முணர்த்துவான் "சுருதியென்னுமறை சோகம்பாவிக்க வென்புழி" என்று மியம்பிற்றென்க. இங்குப் பாவனை, இலட்சியமின்றி நிகழ்வதின் றெனப்படுமாயின் உருவனைச் சிந்திப்பது தான் அப்பாவனை யெனலாம். இது, "கருட னுருவங் கருது மளவிற் – பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோற் – குருவி னுருவங் குறித்தவப் போதே – திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே." என்னுந்* ***திருமந்திரத்*** *தொடர்பின்கண்ணும் பெறப்படுதல் காண்க.*

*உருவன் = அனுக்கிரக அருளுருவுடைக் குரு; குமரகுருவு மவனாவானென்க; இப்பத்தினீற்றுத் திருப்பாட்டு மிதனையே யுணர்த்துகின்றது.* ***திருவருட்பய*** *னென்னு நூலில் –*

*"விடநகுல மேவினுமெய்ப் பாவகனின் மீளும்*

*கடனிலிருள் போவதெவன் கண்."*

*என்னுங்குறள், "கீரி தானேவந்து தீண்டினும் விடம் மீளாது : அக்கீரி வடிவினைப் பாவிப்பானொருவனால் அது மீளுமாறு போலவே குருவின தருணோக்கினால் ஆணவவிரு ணீங்கும்; சொரூபசிவத்தோடு கூடியிருந்தும் அவ்விருணீங்கப் பெறாத தினக்கு." என்னும்பொருள் பயத்தலிற் சோகம்பாவனை செய்வோன் சீடனல்லன், அச்சித்தியினைப் பெற்ற குருவேயென்பதும் பெறப்படுகின்றது, கருடோகம் பாவனைக்கு மிதுவே பொருளெனக்கோட லேற்புடைத்து. இதுபற்றிப் பரிபூரணானந்த போதத்தின் முற்படலத்து 110–ன் உரையில் யாமுரைத்தது மோர்க. எவ்வாற்றானுஞ் சோகம்பாவனையாகிய நிரகங்கார அத்துவைத உபாசனை, சார்ந்ததன் வண்ணமாய் நிற்கு முயிர்க்குச் சிவசம்பந்தத்தாலே நலம் புரிவதாம். இங்ஙனமே மார்ச்சால நியாயமும், மார்க்கட நியாயமுஞ் சித்திக்கின்றமை காண்க. இப்பத்தின் 4–ல் இறைதஞ்சமாக அருணெறி யிலே நிற்கவேண்டுமென் றறிவுறுத்தவாறு இனிது கருதத் தக்கதன்றோ.*

**எ**ண்ணும் வண்ணமுடி வாகு மென்னுமறை யிற்கவ் வீசனொவ நானுமோர்
திண்ண வீசனென வாக வென்றுமுனல் செயினு மாகுமென வுரைகொளா
தெண்ணும் வண்ணமிறை பெத்த முத்தியினு மேற்ற வாறுசெயு மென்றுநீர்
வண்ண மாயபொருள் கொண்டவ் வீசனருண் மருவி நல்லகதி சேர்மினே. (8)

**நே**ய மிக்குடைய வன்ப ரேயரிய நிகம ஞாபகவை நயிகரே
தூய சிற்கதியை யாவ ருங்கொளவொர் துறைவி ளக்கியுள பாலறா
வாய ராதிபெரி யோர்க ணின்றசிவ வாஞ்சை யோடவர்கள் பெற்றபே
றாய வின்புமுயர் வாகு மந்தநெறி யண்மி நல்லகதி சேர்மினே. (9)

**உ**ள்ளி லோர்நடையும் வெளியி லோர்நடையு முற்றெ மன்புடைய ரேநிலா
தொள்ள ருட்கடலை ஞான வெள்ளிடையை யுவமை யற்றவொர் குகேசனைத்
தெள்ளி யோனருண கிரியை யாண்டவொரு செல்வ மானகுரு மணியினை
உள்ளு மற்றதினு மொத்தி றைஞ்சியுணர் வோங்கி நல்லகதி சேர்மினே. (10)

# 39. கதிசேர்மின்

**1.** நற்புகழைப் பெருகச் செய்யும் சீல குணம் சான்ற அன்பர்களே! பேரின்பம் நீங்காமல் இருக்கும் சிறந்த கதியை விரும்பும் நீங்கள் "ஒளிமிகுந்த பரம்பொருள் நாமே" எனக்கூறும் (ஏகான்ம வாத) நெறியை ஏற்று நடந்தால், ஏற்கெனவே உள்ள உமது சிவபக்தியும், உங்களின் இகழ்ச்சியற்றதாகிய உயர்ந்த தியானநெறியும் அழிந்துபோகும். அதுமட்டுமன்று; அகந்தை உணர்வும் உள்ளத்தில் மிகுதியாகத் தோன்றும். எனவே அந்நெறியில் செல்வதைத் தவிர்த்துக் கருணைச்செல்வமாகிய குகபரம்பொருளின் அருட்பேற்றைத் துணையாகக் கொண்டு நல்லகதியை அடையுங்கள்.

**2.** சொல்லொணாத பேராற்றலால் செய்யப்படும் பிரபஞ்சகாரியத்தைச் செய்யும் மகேசுவரனின் பரிக்கிரக சக்தியான பெரிய மாயையின் ஆற்றலை, அறிவிலே வறுமை அடைந்திருக்கும் உயிர், அவனது பன்முகப்பட்ட அருளின் துணையில்லாமல் எவ்வாறு வெல்லமுடியும்? அருள்நெறிக்குப் பொருத்தமாக உள்ள நற்குணம் மிகுந்த சீலர்களே! உமது ஞானநிலை குறைந்து போகாத வகையில் இதனை நன்குணர்ந்து நித்தியமான ஆனந்தக் கூத்து இயற்றும் குகப்பெருமானின் அருட்பேறு வேண்டிப்பெற்று, உம்மிடமுள்ள குறைகளெல்லாம் நீங்கப் பெற்று நற்கதியைச் சேருங்கள்.

---

*8. எண்ணும்வண்ணம் முடிவாகுமென்னும் மறை = யஜுர்வேத பிருஹதா ரண்யகோபநிஷத் (யதாகாரீயதாசாரீததாபவதி=) "யாரெதனைச் செய்கின்றனரோ, யாரெதனை யாசரிக்கின்றனரோ அவரவ்வா றாகின்றனர்" என வியம்புவதாம். இதனால், முயற்சியின்வலி வெளிப்படுகின்றது. இதனை, நாம் பிரமமென வாளா உழிதருவா ருணரகில்லார்.*

*9. வைநயிகர் = உலகபுத்தி, குரு, சாத்திரமாகிய முத்திற வேதுக்களானுஞ் சுடரும் பெற்றிமையர்.*

**3.** நீருக்குள் இருக்கும் ஆமை, கரையில் இருக்கும் முட்டையை நினைத்திருப்பது போன்று, எமது பாவனையாகிய கருத்தால் ‘‘நாமே கடவுள்’’ என உயர்ந்த நோக்குடன் தியானித்துக் கடவுள்நிலையை உண்டாக்கிக் கொள்வோம் என நீங்கள் கூறினாலும், கூறப்பட்ட அந்த ஆமையானது, தன் முட்டையை அடைகாப்பதில் குற்றமற்ற, முழுமையான ஆற்றல் உடையதாய் விளங்கிஇருப்பது போன்று நீங்கள் இல்லை; அதுமட்டுமல்லாமல் நீங்கள் ஆமைத் தானத்தில் இல்லை; முட்டைத் தானத்திலேயே உள்ளீர்கள். எனவே உமது கருத்து ஒவ்வாது. பேராற்றல் வாய்ந்த இறைவனையே தியானித்து நல்ல கதியை அடையுங்கள்.

**4.** முட்டைத் தானத்தில் இருக்கும் உங்களை ஆமைத்தானத்தில் இருப்பவராகிய குரு, தமது சிந்தையால் கருதியோ, கண்ணால் பார்த்தோ உம்மை அருள்வடிவமாகத் தடையேதுமின்றிச் செய்யும் பொருட்டாக நீங்கள் குருவைப் புகலாக அடையும் வரையில் (தகுந்த குரு, உங்களுக்கு கிடைக்கும் வரை) இறைவனையே பற்றுக் கோடாகக் கொண்டு பொய்ம்மைக்கு இடம் கொடுக்காமல் அருள்நெறியில் திடம்பட நிலைத்துநின்று பொய்ந்நெறியில் செல்லும் போலி குருமார்கள் கூறும் பொய்யான கருத்துக்கள், பொய்யான நெறி ஆகியவற்றைப் பொருந்தாமல், ஆசையை நீத்து, எப்பொழுதும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனமானது சஞ்சலமற்றுக் குவிந்து நிற்கும் வகையில் உள்ளுணர்வைப் பொருந்தி நல்ல கதியை அடையுங்கள் (உள்ளுணர்வு – உள்வெளியாகிய குகனின் திருவருள்).

**5.** மருட்சியில் (மலத்தின் மறைப்பில்) உள்ள உங்களை, அவ்வாறே மருட்சியில் உள்ள குருவானவர், அந்த மருட்சிநிலையை நீக்க வழிஏதும் இல்லை. அவர் உங்களை அழைத்து, "இருளற்று ஒளியாகவே உள்ள பரம்பொருளாகிய அது, நீங்களே’’ என்று முழங்கி, "அதுவே இது எனக் கருதுமாறு செய்வதைப் பொருட்படுத்தி அந்நெறியில் நின்றால், அகந்தை உணர்வே மிகுதியாகக் கிளர்ந்து எழுந்து, மற்றை நல்ல உணர்வுகளையும் பாதிக்கும்; உங்களது செயல்களும் வீணாகும். இவ்வாறு "பரம்பொருள் நாமே’’ எனக் கருதுவதை விட்டுவிட்டு, இறைவனுக்குரிய மகாமந்திரத்தை உபதேசமாகப் பெற்று, அவனது பெறற்கரிய கருணையையே பற்றுக்கோடாகக் கொண்டு, நல்ல கதியை அடையுங்கள்.

**6.** உங்களது பாசமாகிய தளையை நீக்கவல்ல இறைவனே உமக்கு நேரில் தோன்றி அருள விதி இல்லையேல், தகுதிமிக்க ஆசான் ஒருவரிடமிருந்து இறைவனுக்குரிய மகாமந்திரத்தை உபதேசமாக அன்புடன் பெற்றுக்கொண்டு இடைவிடாது உச்சரிக்கும் அருள்நெறியில் நின்றால், அந்தஇறைவன் நேரில் தோன்றி உமது மலபந்தத்தை அழித்து அருள்வான். ஒருகால், அழிந்து போகும் இந்த உடலை நீத்துவிடும் இறுதிநாள் வரையிலும் இறைவன் உமக்கு நேரே தோன்றி அருள்புரிய வில்லை எனினும், இறுதிக் காலத்தில் எவ்வித வஞ்சனையும் இல்லாமல் இறைவன் உமக்கு அருள்புரிவான். நீங்கள் இந்த நெறிமுறையில் நின்று நல்ல கதியை அடையுங்கள்.

**7.** மிக நேர்த்தியான அத்துவித ஞானத்தைப் பற்றிப் பேசும் அரிய சுருதிகளாகும் வேதமும் ஆகமமும் "நீ, அவனே நான் என்பதாகிய ஸோஹம் பாவனையைப் பழகுக" என்று கூறுமிடத்து "அவனே நானாகிவிட்டேன்" என்று அகந்தையாகக் கருதுவது பொருளன்று. அதன் உட்கருத்து என்ன எனில். ‘‘ என் இறைவனாகிய உன்னை விட்டு நான் தனியே

இல்லை. உனது பரிபூரணமான நிறைவிலே, என் செயல் ஏதுமின்றி அனைத்தும் உன்செயலாகவே உள்ளேன்'' என்று கருதும் செயலே உட்பொருளாக விளங்க, அவை அவ்வாறு கூறின. இவ்வாறு துன்பம் தீர்ந்த இன்பப் பொருளைக் கொண்டு, முன்னே கூறப்பட்ட உயர்வான கதியை அடைந்து உய்திபெறுக.

8.. "யார் எவ்வாறு எதனை எண்ணுகின்றாரோ, அந்த எண்ணப்படியே ஆகின்றனர் என, யஜுர்வேத பிருகதாரணியகம் கூறுவதற்கு "அந்த இறைவனைப் போன்றே நான் ஓர் இறைவன் என உறுதியாக ஆவேன்" எனப் பொருளாகக் கருதுதலும் ஆகும் என்று பொருள் கொள்ளக் கூடாது.

'எண்ணும் எண்ணப்படியே இறைவன் கட்டுக்கு உட்பட்டுள்ள நிலை (பெத்தநிலை) கட்டினின்று நீங்கியநிலை (முத்திநிலை) ஆகிய இரண்டிலும் எண்ணத்துக்கு ஏற்றவாறு செய்தருள்வான்' என்று நீங்கள் செவ்விய முறையில் அர்த்தம் கொண்டு, அத்தகைய இறைவனின் அருளைப் பொருந்தி நல்லகதியை அடையுங்கள்.

9. பக்தியுணர்வு மிகப்பெற்றுள்ள அன்பர்களே! அரிய வேதார்த்த சிந்தனை மிகப்பெற்றுள்ள வைநயிகரே! தூய்மையான ஞானநெறியை யாவரும் கைக்கொள்ளும் பொருட்டாக ஒப்பற்ற திருநெறியை விளக்கியுள்ள திருஞானசம்பந்தர் முதலான பெரியோர்கள் மேற்கொண்டிருந்த சிவபக்தியுடன், அவர்கள் பெற்ற அருட்பேறாகிய சிவானந்த அனுபவநிலையும் மிக உயர்வாக உங்களுக்கு வாய்க்கச் செய்யும் அத்தகைய மேலான அருள்நெறியையே பொருந்தி நல்ல கதியை அடையுங்கள்.

10. உள்ளே ஒருவிதமான நடையையும் புறம்பே மற்றொரு விதமான போக்கையும் கொண்டு இருக்காமல், எம் அன்பர்களே!, தொன்மையான (ஆதி அந்தமற்ற) அருட்கடல் எனவும், ஞான ஆகாசம் எனவும் உவமையற்று விளங்கும் ஒப்பற்ற குகப்பெருமானை, தெளிந்த சிவஞானம் வாய்க்கப் பெற்ற அருணகிரிப்பெருமானை ஆட்கொண்ட ஒப்பற்ற அருள்நிதியான குருமணியை, உடலாலும், உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் ஒரு சேர வணங்கி ஞான உணர்வு மிகப்பெற்று நல்லகதியை அடையுங்கள்.

# 40. துயர்தீர்வதெவ்வாறு

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ஏ**ம வம்பல மென்பதி லோவா வேம நாடக மாடிமெய் யாமா
சேம வின்பினை யேயடி யார்க்குந் தீழ்ப்பு மாயையி னாடக மாடிக்
காம கன்மப லத்தினை யன்பே கருதி டார்க்கும ளித்திடு மெம்மான்
தூமல் கோருப காரம தின்றேற் றொடர்பு ளீர்துயர் தீர்வதெவ் வாறே. (1)

1. *தீழ்ப்பு – தீட்பு என்பதன் விகாரம்; இழிவெனும் பொருட்டு; இதனிலக்கணம் பரிபூரணானந்தபோதத்துப் பிற்படலத்து 29 – ன் உரையினோர்க.*

**ஏ**ம்மு ளன்புடை யீர்நுமை யாதோ ரேசு கண்டு முனிந்திடு காலன்
செம்மன் மன்னனு மீசன தாணைத் தீர்வை நீத்து நடக்கவொண் ணாதேல்
அம்ம கேசுர னாட்டிட வாடு மாணை நாந்தள லெவ்வித மென்னாத்
தம்மு ளேயறி வீரவ னேயந் தள்ளி னீர்துயர் தீர்வதெவ் வாறே. (2)

**ஈ**ச னெங்ஙன மாட்டின னெம்மை யென்பி ரேன்மிகு பள்ளியின் ஞான
நாச முந்தொழி லின்மையு மாமஞ் ஞான்று நுஞ்செய லேது மிலாதால்
ஊசல் கொள்ள வசைத்ததவ் வீச னோர ருட்பர தம்மென வோர்வீர்
நேச வொல்லுந ரேயவ னேய நீத்து நீர்துயர் தீர்வதெவ் வாறே. (3)

**ப**ள்ளி கொள்ளுயி ரேயொரு காறாய்ப் பள்ளி விட்டெழு மென்பிரே லங்கங்
குள்ள கால மளந்திடு பானு வொன்றி ருப்பது போலுயிர் மேலுந்
தெள்ளி தாமொரு தத்துவம் வேண்டுஞ் செப்பு மஃதுள தேலதைத் தூண்டு
மள்ள லீசனு முண்டவ னேய மங்கி னுந்துயர் தீர்வதெவ் வாறே. (4)

**மு**த்தி வேண்டுந ரீசுர வாத மோக மீதுள நாடலொ ணாதோர்
உத்தி யாய்ப்பிர மத்தை விசாரித் துய்க வென்றிடி னாரண மங்ஙன்
அத்த னாய சதாசிவந் தன்னை யாண ரம்பத மூர்த்திக ணீக்கிச்
சுத்த மாய்ச்சொன தாமவ னேயஞ் சோரி னுந்துயர் தீர்வதெவ் வாறே. (5)

**பி**ரம தத்வ விசார மரம்பைப் பேர்ம ரத்தை யுரித்தொரு தண்டைத்
தெரிதல் போல வுடற்கண நீக்கிச் செயிர்ம லக்கருண் மாற்றி யறிந்த
உரமு டைத்தன துள்ளொளி மன்னு முண்மை யாய குகேசனை யன்னோன்
கருணை காட்ட வறிந்திட லாமேற் கருதி னீர்துயர் தீர்வதெவ் வாறே. (6)

**யோ**க மற்றைய கன்ம மெலாமு மொண்மை யீசப் பிராந்தி யெனாவோத்
தூக மோதுமஃ தம்பர மோக்க முதவி டாப்பத மூர்த்திக ளோடே
தேக யோககன் மங்களைக் கீழ்மை செப்பு செப்பென்க செப்பினு மேலாம்
யோக நாயக முண்டத னேய மொருவி னுந்துயர் தீர்வதெவ் வாறே. (7)

**ஈ**ட்டு கன்ம பவத்தினை மண்ணோ ரீட்டு மோர்பரி காரகன் மத்தால்
ஓட்டு வாரது கன்மம தாகா தொப்ப மும்மல மோவுறு மாறே
ஆட்டு வானைமுன் னிட்டு வயாவின் றாற்று கன்மமெ லாஞ்சன னத்தை
மூட்டு கன்ம விலாசமன் றாது முட்டி னுந்துயர் தீர்வதெவ் வாறே. (8)

---

*2. 'நீர் அவன் நேயந் தள்ளின்' என மாறுக.*

*3. ஏதுமில்லாததனால் என்பது "ஏதுமிலாதால்" எனப் பொருந்திற்று.*

*5. மீதுள முத்தி = மேலான வீடுபேறு.*

*8. வயா – ஆசை, வேட்கைப்பெருக்கம்; எல்லா நிகண்டுகளிலுமுளது.*
*வயாவின்றி என்பது 'வயாவின்று' என உகரவீறாய் நின்றது; செய்யுளாகலின். அது – ஆது வென நீண்டது.*

**த**ம்பி ரானை யணைந்திடு மாறு சாத்தி ரங்குரு தேவையர் சேவை
பம்பு பாடலொ டாட றியானம் பத்தி யாதிய கன்மமெ லாமும்
எம்பி ரானரு ளீந்திடு மூல மென்று ஞற்றிநல் லோர்கதி சேர்ந்தார்
நம்பு நண்புடை யீரிவை யோவி னாட்டி னுந்துயர் தீர்வதெவ் வாறே. (9)

**எ**ந்தை யாமரு ணைப்பெயர் நாத னேத்து பாத்தலை வன்றனை நாடிச்
சிந்தை தூங்கொரு துங்க சமாதி சேரும் வேலை யொழிந்துள காலை
முந்தை யோதிய சாத்திர மாதி முக்கிய கன்ம மியன்றள வாக
அந்த மெய்தெல்லை யும்புரி யீரே லன்பு ளீர்துயர் தீர்வதெவ் வாறே. (10)

ஆக நாற்பதுபத்திநும் போந்த திருப்பா - 400
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 403**

# 40. துயர்தீர்வெதெவ்வாறு

1. கனக அம்பலமாகிய சிற்சபையில் எப்பொழுதும் ஞானநாடகம் என்பதை இயற்றி, என்றைக்கும் நிலைத்திருக்கும் மகிமைபொருந்திய சிவானந்தப் பேற்றை அடியார்களுக்கும், இழிவான பந்தத்தைக் கொடுக்கும் மாயை தொடர்பான ஊனநாடகம் என்பதை இயற்றி, ஆசையைப் பெருக்கும் வினைப்பயனை, இறைவனிடம் அன்புகொள்ளாதவர்க்கும் அளித்தருளும் எம்தலைவனாகிய குகப்பெருமானின் தூய்மைமிகுந்த அருள் உபகாரச் செயல் இன்றேல், உலகத்தொடர்பு உள்ளோரே! உங்கள் துன்பநிலையிலிருந்து நீங்கி உய்வது எவ்வாறு ?

2. எம்மிடம் அன்புடையோரே! பாவச்செயலாகிய யாதோ ஒரு குற்றத்தை உம்மிடம் கண்டு, கோபம் கொண்டு உம்மைத் தண்டிக்கும் ஆற்றல் வாய்ந்த காலனுக்குத் தலைவானகிய தருமராசனாலும் இறைவனின் அருள் ஆணையாகிய உறுதிமுடிபை மீறி நடக்க முடியாது எனில்; அத்தகைய மிகப் பெரிய இறைவன் நடத்திவைக்க இயங்கும் அருளாணையை நாம் மீறி நடத்தல் எவ்விதம் ? – இவ்வாறு உள்ளத்துள்ளே ஆய்ந்து உணர்வோரே! அவனது அருள்துணையைப் புறக்கணித்தால் நீங்கள் உங்களது துன்ப நிலையிலிருந்து நீங்கி உய்வது எவ்வாறு ?

*10. முந்தையோதிய சாத்திரமாதி = 9 – ஆந் திருப்பாட்டிற் கூறப்பட்ட சாத்திரம், குரு, தெய்வம் பெரியோராகிய இவர்கள் சேவை, தோத்திரப் பாடல், ஆடல், தியானம், பத்தி முதலியன. இவைகள் பயனான் மேம்பட்டன வாகலின், சமாதிநிலை நீங்கியகாலங்களின் முடிவடையுங் காறும் இயன்றவளவு புரியத்தக்க "முக்கிய கன்மம்" எனப்பட்டன. 8 – ஆந் திருப்பாட்டையு நோக்குக.*

**3.** இறைவன் எவ்வாறு நம்மை ஆட்டுவித்தான் எனக் கேட்பீரேல் – கேவல அவத்தையில் அந்தகாரவயப்பட்டு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது அறிவு என்பதும் செயல் என்பதும் அடியோடு இல்லாமல் ஆன்மாவானது அசைவற்று இருந்த சமயத்தில் உம்முடைய செயல் ஏதும் இல்லையாதலால் அந்தப் பேருறக்கத்தில் இருந்த உயிர் ஓர் அசைவைக் கொள்ள வைத்தது இறைவனின் அருட்கூத்தே என ஆய்ந்து உணர்வீர்களாக! அன்புகொள்ளத் தகுதி உடையீரே! அவனது திருவருளை நீத்து இருப்பின் நீங்கள் உங்கள் துன்பநிலையிலிருந்து நீங்கி உய்திபெறுவது எங்ஙனம்?

**4.** செயலும் அறிவும் அடியோடு அற்று ஆழ்ந்த பேருறக்கத்தில் இருந்த உயிரே, ஒரு குறிப்பிட்ட காலத்தில் தானே அசைவு கொண்டு உறக்கத்திலிருந்து எழும் என்று கூறுவீரேல், அங்கங்கே உரிய காலத்தை அளந்து காட்டும் சூரியன் ஒன்று அங்கு அங்கே இருப்பது போன்று, உயிருக்கும் மேம்பட்டதாய்த் தெளிவாக உணரப்படுவதாய் உள்ள ஒரு தத்துவம் அங்கே இருக்கவேண்டும். அவ்வாறு ஒரு தத்துவம் உள்ளதேல், அத்தத்துவம் தானே செயற்படாது. ஆகையால், அதனைச் செயற்படுத்தும் ஆற்றல்மிகுந்த இறைவனும் உண்டு. அத்தகைய இறைவனின் அருளை நீத்து நீங்கள் உங்கள் துன்பத்திலிருந்து நீங்கி உய்திபெறுவது எவ்வாறு?

**5.** "மிகமேலானதான முத்திப்பேற்றை வேண்டுவோர், மோகத்தின் வயப்பட்டு ஈசுவர வாதத்தை நாடக்கூடாது; அன்னோர், தகுந்த யுக்தியால் பிரம்மத்தின் இயல்பைப் பற்றி விசாரம் செய்து உய்தி பெறுக" என வேதம் கூறின், அங்ஙனம் வேதம் கூறியதன் உட்பொருள் எதுவெனில் – அந்த அந்தத் தத்துவநிலையில் உள்ள அபர தெய்வங்களை விலக்கித் தத்துவ அதீதமான சுத்த நிலையில் நம் தலைவனாகிய சிவபெருமானை வைத்து வேதம் கூறியதாகும். அத்தகைய சிவபெருமானின் அருள் விலகுமாயின், நீவிர் உமது துன்ப நிலையிலிருந்து நீங்கி உய்தி பெறுதல் எவ்வாறு? (அபரதெய்வ விசாரமே ஈசுவரவாதம்; பிரம்மம் என்பதே தத்துவ அதீத சிவம்)

**6.** பிரம்மதத்துவ விசாரமானது, வாழைமரத்தின் பட்டைகளை ஒவ்வொன்றாக உரித்தெறிந்து, இறுதியில் வாழைத் தண்டைக் காண்பது போன்று, உடல், உடல்தொடர்பான கருவிக்கூட்டம் ஆகியவற்றை நீக்கி, தளையாகிய ஆணவமல இருட்டைப் போக்கி, அதன்பின்னர் உணரப்பட்ட தனது தகராலயத்தின் உள்ளே தேஜோமயமாக ஒளிர்கின்ற சத்துப்பொருள் என அறிதலாகும். இவ்வாறு ஒளிரும் குகேசனை, அவனது கருணையானது வழிகாட்டி நடத்திச் செல்வதால் மட்டுமே நன்கு அறியலாம். இதைவிடுத்து வேறு ஒன்றைக் கருதினால், நீவிர் உமது துன்பநிலையிலிருந்து நீங்கி உய்திபெறுதல் எவ்வாறு?

**7.** யோகம், மற்றுமுள்ள கன்மம் முதலாய அனைத்தும், ஒளிமிக்க இறைவனைக் காணவொட்டாத பிரதிபந்தங்களாகிய மயக்க நெறிகளாம் என வேதம், ஊகமாக உரைக்கும். அது மேலான வீடுபேற்று நிலையை வழங்க இயலாத அபரதெய்வங்களுடன், தேகத்தொடர்பான யோகத்தையும் கன்மத்தையும் சேர்த்து, மேன்மையற்றதான அபரநிலையில் வைத்து வேதம் கூறிய கூற்றாகும். அவ்வாறு கூறினாலும், மேலான யோக நெறியை உணர்த்தும் யோக நாயகனாகிய பரம்பொருளும் உண்டு. அந்தப் பரம்பொருளின் அருள் விலகினால், நீவிர் உங்கள் துன்பநிலையிலிருந்து விலகி உய்தி பெறுவது எவ்வாறு?

**8.** இப்பிறவியில் ஈட்டக்கூடிய கன்ம பலத்தால் இனிவர உள்ள பிறவியை யாதேனும் ஒரு பரிகாரச் செயலால் உலகினர் நீக்கிவிடுவார்கள். அவ்வாறு செய்யப்படும் பரிகாரச் செயல், பிறவியைத்தரும் கன்மமலமாக ஆகாது. அதுபோன்று, மும்மலங்களும் நீங்குமாறு ஆட்டுவிக்கும் இறைவனை முன்னிறுத்தி, கன்மபலனில் பற்றில்லாமல், நிஷ்காமியமாகச் செய்யப்படும் செயல்களெல்லாம், மேலும் பிறவியைக் கொடுக்கக் கூடிய செயல்களாக ஆகாது. பற்றற்றுச் செய்யப்படும் செயல்களை நீவிர் செய்யவில்லை எனின், நீங்கள் உங்களது துன்பநிலையிலிருந்து நீங்கி உய்திபெறுதல் எவ்வாறு ?

**9.** உயிர்நாயகனாகிய இறைவனை அடையும் வகையில் அமைந்துள்ள சாத்திரம் ஓதுதல், குருசேவை, தெய்வ சேவை, அடியார் சேவை, இறைவன் புகழ்நிறைந்த பாடல்களைப்பாடல், ஆடல், தியானம், பக்தி முதலான செயல்கள் அனைத்துமே, எம்பெருமானாகிய இறைவனின் திருவருளை வரையாது வழங்கும் அடிப்படையான செயல்கள் என்று உணர்ந்து கொண்டு, இத்தகைய செயல்களைச் செவ்வனே செய்து நல்லோர்கள் உயர்கதி அடைந்தனர். உறுதியான அன்புடையோரே ! இத்தகைய செயல்களைப் புறக்கணித்தால், இவ்வுலகில் உங்களது துன்பநிலையிலிருந்து நீங்கி நீங்கள் உய்திபெறுதல் எவ்வாறு ?

**10.** எந்தையாகிய அருணகிரிப் பெருமான் புகழ்ந்து பாடிய திருப்புகழ்ப் பாக்களின் தலைவனாகிய குகேசனை விரும்பி, சித்தம் ஒன்றிச் செயலற்று இருப்பதாகிய சமாதிநிலையைச் சேர்ந்திருக்கும் வேளை தவிர்த்து மற்றைய பொழுதில் எல்லாம், முன்னே கூறப்பட்ட சாத்திரம் ஓதுதல் முதலான அடிப்படைச் செயல்களை இயன்ற அளவில் நன்முறையில் உடலைவிட்டுப் பிரியும் இறுதிக்காலம் வரையிலும் செய்யவில்லை எனில், அன்புடையோரே ! உங்களது துன்ப நிலையிலிருந்து விலகி உய்தி அடைதல் எவ்வாறு ?

# 41. ஆனந்தவெயில்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**நி**லையமண் ணேகலச மானமுறை போற்பிரம நீள்சகம தாயதென்று
நலநூ லியம்பகத் தப்பிரம மறிவான ஞானமின் மாயையெனவும்
இலகீச னகிலம்பல் வனையவஃ துபாதான மெனவென்று முள்ளதெனவும்
பொலவர்த்த மதுகொள்வ ருனலன்ப ரெனைமேவு புரணவா னந்தவெயிலே. (1)

**ம**ண்ணுமறி வற்றசட மதுபோல வேகடமு மன்னுணர்வில் சடமதெனவே
எண்ணவுள தாலிந்த வுவமான மறிவாய விறைவற்கு மறிவிலாத
மண்ணுலகி னுக்குமொவ் வாதுமு னிசைத்தபடி மாயைக்கு முலகிற்குமே
ஒண்ணுமென வுணர்வுறுவ ருனலன்ப ரெனைமேவ வொளிருமா னந்தவெயிலே. (2)

2. கடம் = (1 – ல் சொல்லப்பட்ட) கலசம்.

**ஏ**சுர்வேத நவிலூர்ண நாபிதன் னூலிற் கிரண்டுகா ரணமுமொன்றாய்
வசுதைமே லுளதொப்ப வுலகினுக் கிறையுமெனின் வனையந்த வூர்ணநாபிப்
பசுவங் னிமித்தமு முடம்புபா தானமும் பகரவுள தென்றுமதுதான்
நிசசைவ நெறியெனவு மறைவரரு ளன்பரெ னின்மலா னந்தவெயிலே. (3)

**ஊ**ர்ணநா பியையொப்ப விறைசித் தசித்தெங்கு மூறின்றி மல்கிவிபுலச்
சார்மாயை யிற்செய்யு முலகெனவு மதுசருவ சாரோப நிடதமதிலே
நேர்தர வுரைத்தபடி முதலேது மாயையவ ணித்தமவ ளேயுலகமாய்ச்
சீர்தரப் பரிணமித் துளளெனவு முணர்வருவர் சின்மயா னந்தவெயிலே. (4)

**அ**றிவாய சிவன்வடிவு கொண்டதுண் டதுபோல வமலபர முஞ்சடசகக்
குறியாய தென்னினச் சிவன்மேனி பிணமெனக் குத்தியில் விழுந்ததாயோர்
மறையுமின் றுயர்சுத்த மாயையி லுருக்கொள்ளு வதுமுண் டெனத்தெரிதலால்
அறையந்த வுவமையு மொவாதென்ப ருனலன்ப ரமலவா னந்தவெயிலே. (5)

**து**ணிவானம் வாயுமுத னான்காய வாளிபோற் சுடர்பரப் பிரமமதுவுங்
கணமான பேருலக மாயதென வெனினுமக் ககனமுஞ் சடமாகுமால்
உணர்வாய பிரமமது சடமான தற்கிவணொ ருவமான மேவரானும்
இணையுமா காட்டொணா தெனவறைவ ருனலன்ப ரிணையிலா னந்தவெயிலே. (6)

**தோ**ன்றிவமு வுறுவிகா ரத்தொடறி வில்சகந் தொக்குநிச தெய்வமதிலே
தோன்றுமெனி னப்பெரிய தெய்வமது மறிவற்ற துகள்வத்து வாகுமதையோர்
ஞான்றும்வா லமலமென வறையநெறி யின்றெனவு ஞானமில் லாதவெல்லாம்
ஆன்றசட மாயையென வுஞ்சொலுவ ருனலன்ப ரமலவா னந்தவெயிலே. (7)

**உ**யிர்கருப் புகுதாது தன்கணே யுடல்விரித் துய்ந்தொடுக் கிடுவதுண்டேல்
செயிரில்பிர மப்பொருளு மந்தவா றுளதென்று தீர்க்கலா மன்மையாமேல்
குயிலரிய வறிவான பிரமம்வே றறியாமை கொண்டசட மாயைவேறென்
றயிலுடைய வுனலன்பர் தீர்க்கலா மென்பவெ னமலவா னந்தவெயிலே. (8)

**ச**த்தான தெய்வமே மாயையா யுளதென்பர் சரதவத் தெய்வமதனைச்
சுத்தஞா னப்பிழம் பெனினுமது வெற்றெனச் சொற்றவுரை யாகிமாயை
வத்துவே முதலென்னு மார்க்கமாய் முடியுமெனும் வண்மையினை நனிவிளக்கி
முத்திநெறி நின்னன்பர் காட்டுவ ரெனாதுறுகண் மூசுமா னந்தவெயிலே. (9)

---

*3. எசுர்வேதம் = யஜுர்வேத பிரஹ்மோபநிஷத். இவ்வுபநிஷத்தி னவிலப்பட்ட ஊர்ண நாபிப்பூச்சி, நிமித்த முபாதானமென்னும் இரண்டு காரணங்கட்கு முவமிக்கப்படுதல் முண்டகோபஷத்திலு முளதென்பது முதலிய விவரமெல்லாம் பரிபூரணானந்த போதத்து முற்படலத்து 8 – ன் உரையாலு மறியலாம்.*

*5. குத்தி = மண்.*

*6. ஆளி = ஒழுங்கு.*

*9. உறுகண் மூசுதல் = துன்பத்தை யெழவொட்டாது மொய்த்துக்கொளல்.*

கட்டைகா ரணமாக வேபெட்டி வனைவர்மண் காரணம தாகவந்தப்
பெட்டிவனை யாராத லாற்சித் தசித்தெனப் பேசுவன வேறுவேறு
கட்டுடைய வேதுவுங் காரியமு மாமென்று கழறுவா ருனதன்பினார்
துட்டிலா வருணகிரி தெய்வமே யென்னையாள் சுத்தவா னந்தவெயிலே. (10)

# 41. ஆனந்தவெயில்

1. 'கவசப் பான்மையோடு என்னைப் பொருந்திக் கொள்ளும் ஆனந்த மயமான சூரிய ஒளியே! பூமியிலுள்ள மண்ணே கடமாக (பானையாக) வடிவெடுக்கும் முறைபோல், பிரம்மப்பொருளே பெரிய உலகமாக உருவெடுத்துள்ளது' என்று நன்மைதரும் வேதநூல் கூறுமிடத்தே, பிரம்மம் எனப்படுவது, சைதன்னிய மயமான ஞானம் என்பதற்ற மாயையையே குறிக்கும் எனவும், ஞானமயமாக விளங்கும் இறைவன் பல உலகங்களை உருவாக்குவதற்கு அந்த மாயை உபாதான காரணமாக எப்பொழுதும் நிலைத்து இருப்பது எனவும் பொலிவார்ந்த பொருளை உன் நல் அன்பர்கள் கொள்வர்.

2. என்னுடன் இரண்டறப் பொருந்திக் கொள்ள ஒளிர்கின்ற ஆனந்தமயமான சூரிய ஒளியே! மண்ணும் அறிவென்பதை நீத்துள்ள சடப்பொருள்; அவ்வாறே பானையும் ஞான உணர்வற்ற சடப்பொருள் – இவ்வாறு தெளிவாக உணரப்படுவதாக உள்ளதால் 'மண்ணே கலசமாகிறது' எனும் உவமானம் அறிவுமயமான இறைவனுக்கும் அறிவில்லாதனவான மண்ணுலகு முதலான பல உலகங்களுக்கும் பொருந்தாது. பின், என் எனில் மண் என்பது மாயைக்கும், கலசம் என்பது உலகத்துக்குமே நன்கு பொருந்தும் – என உன் நல் அன்பர்கள் தெளிவாக விளங்கிக் கொள்வர்.

3. என்னை ஆட்கொள்ள உரிய, நின்மல, ஆனந்தமயமான சிவ சூரிய ஒளியே! யசுர்வேத பிரம்மோபநிடதம் கூறும் சிலந்திப்பூச்சியும் அதன் நூலும் என்ற உவமையில் சிலந்திப்பூச்சியிடத்தேயே நிமித்த காரணம், உபாதான காரணம் ஆகிய இரண்டும் ஒன்றாக இம்மண்ணுலகில் விளங்குவதைப் போன்று உலகை உருவாக்கும் திறத்தில் இறைவனிடத்திலேயே – வலையைப் பின்னும் சிலந்தி அந்த இரண்டு காரணங்களும் ஒருங்கே உள்ளன எனக் கூறில் உயிர்வகை (சித்துப்பொருள்); அங்கே நிமித்த காரணம்; அதன் உடல், (சடப்பொருள்) உபாதான காரணம் என விளக்கம் கொள்ள உள்ளது. இவ்வாறு கொள்வதுதான் மெய்ம்மையான சைவநெறி என அருட்பேறுமிக்க உன் அடியார் கூறுவர்.

4. சின்மயமான, ஆனந்த மயமான சிவ சூரிய ஒளியே! சிலந்திப் பூச்சியைப் போன்றே இறைவன் சித்துப் பொருள்வகை, அசித்துப்பொருள்வகை ஆகிய இரண்டிலும் நீக்கமின்றி வியாபித்து, மிக விரிவாகப் படர்ந்துள்ள மாயையிலிருந்து உலகைப் படைப்பான் என்றும், சருவசாரோபநிடதத்தில் பொருத்தமுறக் கூறப்பட்டுள்ள வண்ணம் மாயையே முதற்காரணம்

*10. "பேசுவன" என்பதிற் படுசொற் றொக்கது; பிறவுமன்ன.*

*துட்டு = ஒழுங்கின்மை; துஷ்டம் என்பதன் விகாரம்.*

(உபாதானகாரணம்) அவள் நித்தியமானவள்; அவளே, அருட்சக்தி தூண்ட, தத்துவம் தோறும் உலகமாகப் பரிணமிக்கின்றாள் எனவும் உன் அன்பர்கள் நன்கு உணர்ந்து கொள்வர்.

5. நின்மலமான, ஆனந்தமயமான சிவசூரிய ஒளியே! சின்மயமான சிவபெருமான் தியான நிமித்தம் வடிவுகொண்டுள்ளது போன்று அமலமான பரம்பொருளும் சடமயமான உலகமாகி நாம ரூபம் எனும் அடையாளங்களை ஏற்றுக்கொள்கிறது எனக்கூறினால் – அவ்வாறு கொள்ளப்பட்ட சிவவடிவம், யாதேனும் ஒரு காலத்தில் உயிரற்ற வெற்றுடலாகி மண்ணுக்குள் ஒடுங்கியதாக ஒரு வரலாறும் வேதத்தில் கூறப்படவில்லை; அந்தவடிவம் சடவடிவமன்று; வடிவமற்ற சிவன், அவ்வப்போது சுத்தமாயை தொடர்பான வடிவத்தை ஏற்றுக் கொள்வதும் உண்டு. (அது சடவடிவாக ஆகாது). எனவே, கூறப்பட்ட அந்த உவமையும் பொருந்தாது என உன் நல் அன்பர்கள் கூறுவர்.

6. இணையற்ற, ஆனந்தமயமான சிவசூரிய ஒளியே! வடிவற்ற, தெளிவான ஆகாசமே காற்று முதலான பூதங்களாக ஆகி இருக்கும் பரிணாம ஒழுங்கைப் போன்று தேஜோமயமான பிரம்மப் பொருளும் கூட்டமாகத் தொகுந்துள்ள பேருலகங்களாக ஆகியுள்ளது என்று கூறினாலும், அந்த வடிவற்ற ஆகாசமும், உண்மையில் சடப்பொருளே. சைதன்ய மயமான பரம்பொருள் சடப்பொருளாக ஆகுவதற்கு ஏற்ற உவமானத்தை இங்கே எவராலும் பொருத்தமுறக் காட்ட முடியாது என உன் நல் அன்பர்கள் கூறுவர்.

7. தூய்மையான, ஆனந்தமயமான சிவசூரிய ஒளியே! ஒருகாலத்தே தோன்றுவதும், தேய்வு, அழிவு முதலான மாறுபாடுகளை உடையதும், அறிவில்லாததுமான உலகங்கள் அனைத்தும் ஒரே தொகுதியாகி, சத்துப் பொருளான இறைவனிடமிருந்தே தோன்றும் எனக் கூறின், அப்பொழுது அந்தப் பெரிய பிரம்மப் பொருளாகிய தெய்வம் அறிவற்ற சடப்பொருளாகவே கருதப்படுவதாகும்; அத்தகைய பிரம்மம் தூய, நிர்மல ஞானமயமானது என்று கூற ஒருபோதும் நியாயம் இல்லை; ஞானமற்றுள்ள அனைத்தும், செறிவான, சடமயமான மாயையே என்று உன் நல் அன்பர்கள் கூறுவர்.

8. என்னை ஆட்கொள்ள உள்ள, தூய்மையான, ஆனந்தமயமான சிவசூரிய ஒளியே! ஓர் உயிரானது தாயின் கருப்பைக்குள் நுழையாமல் தன்னிடத்திலிருந்தே உடலை விரித்து எடுத்து வாழ்ந்திருந்து பின் தன்னிடத்தே ஒடுக்கிக்கொள்ளும் நடைமுறை உலகில் இருக்குமாயின், குற்றமற்ற பிரம்மப் பொருளும் அவ்வாறு தன்னிடத்திருந்தே உலகைத் தோற்றுவித்துத் தன்னிடத்தேயே ஒடுக்கித் கொள்கிறது என உறுதிபடக் கூறலாம். அங்ஙனம் உயிர் இல்லை ஆதலால் விளக்கிக் கூற முடியாத ஞானமயமான பிரம்மம் வேறு, அசேதனமாக உள்ள, ஜடமயமான மாயை வேறு என அறிவுக்கூர்மை உடைய உன் நல் அன்பர்கள் உறுதிபடக் கூறலாம் என்பர்.

9. எனது துன்பத்தை எழவொட்டாமல் என்னைக் கவசம் போல் மூடிக்கொள்ளும் ஆனந்தமயமான சிவசூரிய ஒளியே! சத்துப்பொருளாக உள்ள பரம்பொருளே மாயையாகத் திகழ்கிறது எனக் கூறுவர். அங்ஙனமாயின், நிலைத்துள்ள உண்மைப்பொருளான அப்பரம்பொருள் தூய ஞானப்பிழம்பாகத் திகழ்கிறது என்று கூறினாலும் அது பொருளற்ற

வெற்றுச் சொல்லாகி, மாயையாகிய பொருளே தனிமுதற் பரம்பொருள் எனக் கொள்ளும் மாயாப்பிரம்மவாதிகளின் நெறியாக முடியும். இந்த நியாயமான முடிபை, நித்தியமான உட்பொருளை நன்கு விளக்கி நின் அன்பர்கள் உயர்ந்த முத்திப் பேற்றுக்குரிய நெறியைக் காட்டுவார்கள்.

**10.** என்னை ஆட்கொள்ள உள்ள தூய்மையான, ஆனந்தமயமான, சிவசூரிய ஒளியே! அருளொழுக்க நெறிக்கு மாறுபட்ட குற்றம் எதுவும் அணுகப் பெறாத அருணகிரிப் பெருமானின் மூலதெய்வமே! மரத்தை முதற்காரணமாகக் கொண்டே பெட்டியை உருவாக்குவர், மண்ணை முதற்காரணமாகக் கொண்டு அந்தப் பெட்டியை உருவாக்க மாட்டார்கள். சித்துப் பொருள் எனவும், அசித்துப் பொருள் எனவும் கூறப்படுபவை அனைத்தும் வெவ்வேறுபட்ட இலக்கண வரம்புக்கு உட்பட்ட காரணமும் காரியமும் ஆகத் திகழும். (மரம், மண் இரண்டுமே அசித்து எனினும் மரத்திலிருந்து பானையையோ, மண்ணிலிருந்து பெட்டியையோ உருவாக்க முடியாது. மரம் – காரணம்; பெட்டி – உரிய காரியம்; மண் – காரணம்; பானை – உரியகாரியம். பெட்டிக்குரிய இலக்கணம் வேறு; பானைக்குரிய இலக்கணம்வேறு. எனவே வெவ்வேறுபட்ட இலக்கண வரம்புக்கு உட்பட்ட காரண காரியங்களின் தொகுதிகளாக இவ்வுலகம் உள்ளது) – இவ்வாறு உன் அன்பர்கள் தெளிவாகக் கூறுவார்கள்.

---

# 42. ஞானதெய்வம்

*பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**உ**லக மென்ப தொருசி வத்தி லிப்பி வெள்ளி யென்னவே
உறுவி வர்த்த மாகு மித்தை யாக வுள்ள தென்றுதான்
சொலினவ் வெள்ளி கண்ட கண்ண னிப்பி வெள்ளி கட்கஙன்
துண்டு பட்டு நிற்ப னித்த சுத்த வத்து மித்தையாய்
அலகி லாத பல்வி கார மாய தெத்தி னாலதற்
காதி யுண்டு கொல்லென் பார்க்கி யற்கை யென்னின் முற்றுமே
நலமி லாத தீர்வை யாகு மென்று ணர்ந்து னருளையே
நாடு மெய்யர் வாழ்வை யெற்கு மீதி ஞான தெய்வமே. (1)

**சி**வத்தி லோங்கன் மித்தை யேனு மஃத தற்கி யற்கையாய்ச்
செப்பி டத்தம் மித்தை யான்வி ளைந்த துன்பஞ் சீவருக்
கவத்தை யாகு முண்மை யாயி ருத்த லாலவ் வுண்மையு
மதிலெ ழும்பொ லாவி காதம் யாவை யும்மத் தெய்வமே
உவப்பி னாலி ழைக்குஞ் செய்கைத் தாயு மங்ஙன் மூலமா
யுள்ள தாக வும்ப குக்க நேரு நேரு மேற்கெடாச்
சிவத்து நீதி செல்வ தில்லை யீத டாச்சொ லென்றுனைச்
சிந்தை செய்வர் வாழ்வை யெற்கு மீதி ஞான தெய்வமே. (2)

**சூ**க்க மான மோகி னிக்குந் தூல மூலப் பகுதிக்குந்
துகளி லேற்றஞ் சொல்ல வுள்ள வைந்து சுத்த தத்துவம்
ஆக்க ஞான சத்தி ரூப மாயி ருத்த லாலதை
யானந் தப்ப ரஞ்சை தன்னி யம்மென் றோத லாமிவா
றூக்க ஞான மோது சித்தி யாரொன் றற்கு மேலெனா
வோது சூத்தி ரங்கி ளத்து மீது மல்லி கைக்குநல்
நோக்க தான தீபி கைச்சொல் வாய்த்த தொக்கு மென்றுதேர்
நுண்ணி யோர்கொள் வாழ்வை யெற்கு மீதி ஞான தெய்வமே. (3)

**வி**ரிப வஞ்ச வீட்ட மூல கார ணஞ்சித் தில்லதாய்
விளம்பு மாயை யெனலொ ழிந்து தெய்வ மென்று பன்னுவோர்
உரிய வத்தெய் வத்தி னுக்கொ ரளவி றந்த பெருமைதா
மோதி லெவ்வி தத்துங் கீழ்மை மேவு மத்தை யேசதாத்
திரிபு கொண்ட போலி ஞானம் போலிச் சுத்த மென்பதாய்ச்
செப்ப நேரு மிஃதி கந்து சுத்த ஞான வத்துவாக்
கருது மார்க்கம் வண்மை யென்று கண்டு னைப்ப டர்ந்துகாண்
கருணை யாளர் வாழ்வை யெற்கு மீதி ஞான தெய்வமே. (4)

**மு**த்தொ ழிற்கு முதல்வ னாய வீசன் றன்க ணுளமகா
முதுச கத்தை யுயிர்கள் கன்ம வசத்தி னாற்சு ருட்டிய
சித்தி ரப்ப டாம்வி ரித்தல் போலத் தோற்று வித்தனன்
சீவர் கன்ம வொழிவி லத்தை மீள வுஞ்சு ருட்டுவான்
சத்த னான வந்த வீச னென்று வேத பைங்களத்
தலைமை யத்தி யாயம் பேசு மாத றொட்டம் மாயையை
மித்தை யென்றல் போலி யாகு முயிரும் வேற தென்னவே
விளக்கி வாழ்வர் வாழ்வை யெற்கு மீதி ஞான தெய்வமே. (5)

**க**ண்ட வண்ட மேதை வன்னி யாலெ ரிக்கப் பட்டபின்
கார ணங்க ளோட கண்ட வாத்து மாவி லேலயங்
கொண்டி டும்பொய் யில்லை யென்று பைங்க ளத்து மூன்றிலே
கூறக் காண லாமு ரைத்த லயம்வி லாசப் பேரருட்

---

*3. மல்லிகை = விளக்குத்தண்டு; பி–நிகண்டு. தீபிகை = தீபம். விளக்குத் தண்டையுந் தீபமென்பது தானியாகுபெயர்.*

*4. மூலகாரணம் = முதற்காரணமென்னும் உபாதானம்; குடத்திற்கு மண் போல்வ தென்ப.*

*6. மேதைவன்னி = ஞானாக்கினி. அகண்டவாத்துமா = பரமாத்துமா; சந்தி, தமிழ் நூன் முடிபு.*
*பைங்களத்து மூன்றில் =* ***பைங்கலோபநிஷத்தின் 3 –*** *ஆம் அத்தியாயத்தில்,*

டொண்டு விண்ணி லேயொ டுங்க லென்று மிந்தச் சுருதியால்
　　தொல்லை மாயைத் தோற்றங் கெட்டுக் கார ணங்கெ டாததாய்க்
கண்டு கொள்ளல் வண்மை யென்று முணர்க லாவ லோர்கடாங்
　　கருது கின்ற வாழ்வை யெற்கு மீதி ஞான தெய்வமே. (6)

**இ**ப்பி யின்கண் வெள்ளி யுங்க யிற்றின் கண்வி யாளமு
　　மிரவிற் குற்றி யின்கண்மான வனும்வெண் டேரும் போலவே
செப்ப மான பிரமத் தின்கட் செகமி ருப்ப தாய்முனூல்
　　செப்பி னாது சீவன் றெய்வ நோக்கு போது மாயையின்
துப்பி லாத காரி யம்பு தைந்து கார ணங்கெடாச்
　　சுத்தங் கண்ட தாமிவ் வாறு காசி காண்டங் கானலென்
றொப்பு டன்றொ டங்கு பாட்ட கத்து முண்டெ னத்தெளிந்
　　துனைப்பு கழ்வர் வாழ்வை யெற்கு முதவு ஞான தெய்வமே. (7)

**சு**ட்டி றந்து ணிற்கு நிட்டை தன்னிற் றானும் பாசமுந்
　　தோற்று மின்றித் தொடலு மின்றி நோக்கு மின்றி யாகவே
பெட்டி லாத சிவசொ ரூப மேசி றந்து நின்றிடும்
　　பேசு மித்தை யேய கண்ட சித்தெ னும்பெ ருத்தநூல்
கட்ட தாக விந்த வாறு தத்து வஞ்சொல் கோசமுங்
　　கழறு நல்ல சிவசொ ரூபங் கூற கத்தி லென்றுளே
திட்ட மாயு ணர்ந்து னோடு சேரு மன்ப ரின்பமே
　　சிந்தை செய்யு னன்ப னெற்கு மீதி ஞான தெய்வமே. (8)

**க**னவு நேர மாயை பொய்ம்மை யென்னி னக்க னாவுமுன்
　　கன்ம போக மாகு தூல சூக்கு மப்ப வஞ்சமாம்
இனம்வ குத்தி யம்ப வற்றுட் சாக்கி ரங்க னாவிலே
　　யெந்த வாறொ ளித்த தோநன் கந்த வாறு சாக்கிரத்
தினுமொ ளித்த தன்றிப் பொய்ம்மை யாவ தில்லை யக்கனா
　　வென்ப தூக சாக்கி ரத்தி லேம றைந்த தென்னவே
அனக வத்து தரிச னத்து மகில மாயை மறையுமென்
　　றறிவி வேகர் வாழ்வை யெற்கு மருடி ஞான தெய்வமே. (9)

---

*6. தொண்டு = பழமை; ணகரவெதுகை.*

*7. குற்றி = தறி; இதனை, ஸ்தாணுவென்பர் வடநூலார். காசிகாண்டங் கானலென்று தொடங்கு பாட்டு = **காசிகாண்டத்தே** சிவசன்மா தெய்வ லோகங்கண்ட அத்தியாயத்து 47 – ஆஞ் செய்யுள்.*

*9. கனவினுண்மையோ டதுபற்றிய சுருதிமேற்கோளெல்லாம் எமது செக்கர்வேள் செம்மாப்பின் இரண்டாங்காண்டத்துக் **கனவதிகாரத்திற்** கண்டு தெளியலாம். கனவு பொய்யன்று மெய்யென்றே **அவிரோதவுந்தி யாரிற்** சாந்தலிங்க சுவாமிகள் தாபித்தவாறுங் காணலாம். ஆனந்தபூர்த்தியுர மெனும் 2 – ஆம் பத்தின் 7 – ன் உரையுங்கருதுக.*

**ந**ற்ப ரானு பூதி யின்கண் மாயை யைப்பி ழம்பென
நாடி நோக்க வேனு மின்மை யென்றி யம்ப வேனுமோர்
அற்ப மேனு மிசைவு றாத கார ணத்தி னாலரோ
வதனை யனிர்வ சனமெ னச்சொல் வதுமுண் டஃது மாமெனாக்
கற்பு யர்ந்த விழுமி யோர்க ளுணர்வ ரவ்வர் காமுறுங்
கருணை வாழ்வை யெற்கு மீதி திருவ குப்பு நாவலன்
பொற்பு வந்த னைக்கு வந்த புரண சுப்ர மண்யமே
புகழு மேழை யேனை யாண்டு கொண்ட ஞான தெய்வமே. (10)

# 42.ஞானதெய்வம்

1. பூரண ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! இந்த உலகம் என்பது சிவமாகிய பரம்பொருளிடத்தே, முத்துச்சிப்பியானது வெள்ளியாகக் காட்சியளிப்பது போன்றதாகிய விவர்த்தம் எனப்படும் பொய்க்காட்சியாகவே உள்ளது எனக் கூறப்படுமானால்; அவ்வாறு வெள்ளியாகக் காண்பவன் ஒருவன், கூறப்பட்ட முத்துச்சிப்பி, வெள்ளி ஆகியவற்றுக்கு அன்னியமாக வேறுபட்டிருப்பான்; நித்தியமாகவும் தூய்மையாகவும் உள்ள சிவபரம் பொருள் நிலையற்ற பொய்க் காட்சியே எனப்படும்; அதுமட்டுமன்றி, அளவில்லாத பல மாறுபாடுகளை எதனால் அப்பொருள் அடைந்துள்ளது ? அம்மாற்றங்களுக்குக் காரணம் உண்டோ ? எப்பொழுது அவை தோன்றின ? எனக் கேட்பார்க்கு இந்த மாற்றங்கள் பரம்பொருளுக்கு இயல்பாக உள்ளவையே" என விடை கூறப்படுமாயின், இக்கூற்று ஒருசிறிதும் உறுதி பயக்காத, உண்மையைப் புலப்படுத்தாத முடிபாகும். இவ்வாறு உணர்ந்து, உன் திருவருளை நாடி நிற்கும் சத்திய சீலர்கள் பெற உள்ள சிவவாழ்வுப் பேற்றை எனக்கும் வழங்கி அருள்க.

2. பூரண ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! சிவத்தில் உலகம் வெளிப்பட்டுத் தோன்றல் ஒரு பொய்க்காட்சியே எனினும், அப்பொய்க்காட்சி அப்பரம்பொருளின் இயல்பாகவே உள்ளது எனக் கூறும்பொழுது, உணரக் கூடிய பொருள் எது எனில் – அப்பொய்க் காட்சியால் தோன்றும் பல்வகைத் துன்பங்களும் உயிர்வர்க்கத்துக்குரிய பல்வேறு அவத்தைகளாக உண்மையாகவே விளைகின்ற நிலையைக் கண்கூடாகப் பார்த்தலாலும், அவ்வாறு உண்மையாகத் தோன்றும் அவத்தைகளும், அவற்றால் தோன்றும் பல்வேறு இடையூறுகளும் விரோதங்களும் ஆகியவற்றை அப்பரம்பொருளே மகிழ்ச்சியாக உண்டாக்குகின்றது எனக் கொள்ள வேண்டிவரும். எனவே, பொய்க்காட்சியாகத் தோன்றிய அது உண்மையிலேயே மூலகாரணமாக உள்ளது எனப் பகுத்துணர்ந்து கொள்ள நேரிடும். இவ்வாறு நேரிட்டால், நித்தியமான சிவபரம் பொருளின் இடத்தே ஓர் ஒழுங்குமுறையும் ஒரு நியாயமும் பொருந்தி இருப்பதாகத் தெரியவில்லை. எனவே சிவத்திடமிருந்து உலகம் பொய்க்காட்சியாகத் தோன்றுகிறது எனக் கூறுவது ஒருசிறிதும் ஒவ்வாத போலியுரையாகும். இவ்வாறு உணர்ந்து உன்னையே தியானித்திருப்பார் பெறக் கூடிய வாழ்வுநிலையை எனக்கும் ஈந்து அருள்க.

3. பரிபூரணமான ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! நுண்மையான நிலையில் உள்ள மோகினி (மிசிரமாயை, சுத்தாசுத்த மாயை) என்பதற்கும் பருமை நிலையில் உள்ள மான்

என்பதாகிய மூலப்பிரகிருதிக்கும் மேம்பட்டதாய்க் குற்றமற உள்ளது எனக் கூற உள்ளதும், ஐந்து சுத்த தத்துவங்களை உடையதுமான விந்து எனப்படும் சுத்தமாயை, உயிர்க்கு ஆக்கம் தரவல்ல ஞானசக்தி ரூபமாகவே திகழ்வதால், அதனை ஆனந்தமயமானது என்றும், பரமமானது என்றும் சைதன்னியம் என்றும் கூறலாம். இவ்வாறே, சிந்தைத் தூய்மையைத் தரவல்ல சிவஞானசித்தியார் எனும் நூல் இரண்டாவது சூத்திர விளக்கத்தில் தெளிவாகக் கூறுகிறது. சுத்தமாயையைச் சைதன்னியம் எனக் கூறுவது, விளக்குத் தண்டு என்பதற்கு, நல்ல ஒளி எனும் பொருளைத்தரும் தீபிகை (தீபம்) எனும் பெயர் வாய்த்துள்ளது போலாம். இவ்வாறு ஆய்ந்துணரும் நுட்பமான ஞானமுடையோர் பெற உள்ள சிவவாழ்வுப் பேற்றை எனக்கும் ஈந்தருள்க.

4. பரிபூரணமான ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! மிகவும் விரிந்து படர்ந்துள்ள பிரபஞ்சக் கூட்டத்துக்கு முதற்காரணமாக, – சைதன்னியம் அற்றது எனக்கூற உள்ள மாயையே திகழ்கிறது எனக் கூறுவதைத் தவிர்த்து, முதற்காரணமாகப் பரம் பொருளாகிய தெய்வமே திகழ்கிறது எனக் கூறுவோர், அவ்வாறு உள்ள அத்தெய்வத்துக்கு அளவற்ற மகத்துவம் உள்ளது எனக் கூறில், எல்லாவிதத்திலும் அத்தெய்வம் இழிவையே பொருந்தும்; மேலும் அதனையே, எப்பொழுதும் மாறுபாட்டுக்கு உட்படுவதாகிய போலிஞானம், போலிச்சுத்தம் என்று கூறவேண்டிவரும். எனவே இவ்வாறு கூறுவதைத் தவிர்த்துவிட்டு, தெய்வத்தை நிமித்த காரணத்தில் வைத்து அதனைச் சுத்தமான ஞானமயப் பொருளாகக் கருதும் தத்துவ நெறி, ஞானவளப்பம் வாய்ந்தது என்றுணர்ந்து, உன்னையே தியானித்துப் பார்க்கும் கருணை உள்ளப் பெரியோர் பெற உள்ள சிவவாழ்வுப் பேற்றை எனக்கும் ஈந்தருள்க.

5. பரிபூரணமான ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! படைத்தல் முதலான மூன்று தொழில்களையும் செய்யும் மூல கருத்தா ஆகிய இறைவன், தன்னிடம் ஒடுங்கியுள்ள பெரிய, தொன்மையான உலகத்தை, உயிர்களின் வினைப்பயனுக்கு ஏற்ப, சித்திரம் வரையப்பட்டுச் சுருட்டப்பட்டுள்ள துணியை விரித்துவைப்பதைப் போன்று தோற்றுவித்தான். பின்னர், தூயோனான அந்த இறைவனே, உயிர்களின் வினைப்பயன் தீர்ந்த நிலையில், மீண்டும் அந்தத்துணியைச் சுருட்டிக் கொள்ளுதலைப்போன்று, உலகத்தைத் தன்னிடமே ஒடுக்கிவைத்துக் கொள்வான் – இவ்வாறு வேதத்தைச் சார்ந்த பைங்கல உபநிஷத்தின் முதல் அத்தியாயம் தெளிவுபடக் கூறுவதால், அந்த மாயையை மித்தை (பொய்க்காட்சி) எனக் கூறல் போலியேயாகும். உயிர் என்பதும், இறைவனுக்கும் மாயைக்கும் வேறாக உள்ளது. இவ்வாறு உண்மையை விளக்கிக் கூறும் மெய்ந்நெறிசார் அருளாளர்கள் பெற உள்ள சிவவாழ்வுப் பேற்றை எனக்கும் ஈந்து அருள்.

6. பரிபூரணமான ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! தூலமாகக் காணப்படும் பிரபஞ்சம், (பாவனை வழியே) ஞானாக்னியால் எரிக்கப்பட்டபின், உலகங்கள் தத்தம் காரணத்தில் ஒடுங்கிநிற்க, அக்காரணங்களோடு அவை ஆத்மாவில் லயம் அடைந்து நிற்கும்; எனவே பிரபஞ்சம் என்பது பொய்யானதன்று என்று பைங்கல உபநிடதம் மூன்றாவது பகுதியில் கூறுவதைக் காணலாம். "மேலே கூறப்பட்ட லயம் என்பது, தோன்றிய அனைத்தும், விரிவானதும் பேரருள்மயமானதும், தொன்மையானதுமான பரமாகாசத்தில் ஒடுங்கி இருத்தலாகும்" என்பதை இந்தப் பைங்கல உபநிடதம் வாயிலாகவே அறிந்து தொன்மையான மாயை என்பதானது, தோற்றங்களாகிய காரியப்பாடுகள் ஒடுங்கக் காரணம் மட்டும் கெடாமல் இருப்பது என உணர்ந்துகொள்வதே ஞான வளம் சான்ற நெறி என்று கொள்வர் வேத–ஆகமப் பயிற்சி வல்லுநர். இத்தகையோர் விழைந்து நிற்கும் சிவவாழ்வுப் பேற்றையே எனக்கும் ஈந்தருள்க.

7. பரிபூரணமான ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! முத்துச்சிப்பியில் வெள்ளியும், கயிற்றில் பாம்பும், இரவுப் பொழுதில் கட்டையில் மானுடவடிவமும், மருபூமியில் சாரமற்ற பேய்த்தேரும் தோன்றுவதைப் போன்று சத்து – சித்து – ஆனந்த லட்சணங்களுடன் திகழும் பரம்பொருளிடத்தே உலகம் உள்ளது என வேதநூல்கள் கூறின், அதன் கருத்து யாதெனில் சீவனானவன் தெய்வதரிசனம் பெறும் பொழுது, மாயையின் தூய்மையற்ற காரியப்பாடுகள் அனைத்தும் காரணநிலையில் ஒடுங்க, காரணம் கெடாது இருத்தலாகிய தூய்மைநிலையே அவ்வாறு வேதத்தால் உணர்த்தப்படுகிறது. இவ்வாறு (கந்தபுராணத்துக்) காசிகாண்டம் என்னும் நூலில் 'கானல்' எனத் தொடங்கும் பாட்டினுள் உணர்த்தப்பட்டுள்ளது. இதன் நுட்பத்தைத் தெளிவாக உணர்ந்து உன்னைத் துதிப்போர் பெற உள்ள சிவவாழ்வுப் பேற்றை எனக்கும் ஈந்து அருள்க.

8. பரிபூரணமான ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! வெளிமுகப் பார்வை முழுவதும் தவிர்க்கப்பட்டு, உள்ளுக்குள்ளே ஒடுங்கி நிற்பதாகிய நிட்டைநிலையில் தான் என்பதாகிய சீவனும், பாசமும் தோற்றமும் இன்றி, பாதித்தல் என்பதும் இன்றி, காண்பது காணப்படுதல் என்பதும் இன்றி, மாயை சிறிதும் கலவாத சிவசொரூபமே மேம்பட்டு விளங்கிநிற்கும். கூறப்படும் இந்தச் சிவசொரூபம் அகண்டமயமான சித்து எனப் பெரிய நூல்களாகிய வேதாகமங்கள் கூறும். மிகவும் உறுதிப்பட இவ்வாறு தத்துவ உண்மைகளைக் கூறும் சுருதிகளும் விளக்கிக்காட்டும் சிவசொரூபமானது உள்ளுக்குள்ளே விளங்கும் ஒன்று எனத் தம் உள்ளத்துள் திட்டவட்டமாக உணர்ந்துகொண்டு உன்னோடு இரண்டறக் கலக்கும் அன்பர்கள் பெறஉள்ள ஆனந்தப் பேற்றையே, உன்னையே தியானித்திருக்கும் அன்பனாகிய எனக்கும் ஈந்தருள்க.

9. பரிபூரணமான ஞானமே வடிவாக உள்ள மூலதெய்வமே! மாயை என்பது கனவைப் போன்று பொய்க்காட்சியே எனில், கூறப்பட்ட கனவு என்பது முன்னர் அனுபவித்த வினைப்பயனின் விளைவேயாகும். தூலப்பிரபஞ்சம் என்றும் சூக்குமப் பிரபஞ்சம் என்றும் வேறு படுத்தி வகைப்படுத்திக் கூறப்படும் அத்தொகுதிக்கு உட்பட்டது, விழிப்புநிலையானது எவ்வாறு கனவுநிலையில் நன்கு ஒளிகின்றதோ, அவ்வாறே ஞானிகட்கு விழிப்புநிலையிலும் ஒளிந்து நிற்கின்றதே அன்றிப் பொய்யாகி விடுவதில்லை. அந்தக் கனவு என்பதும் செயற்பாட்டுநிலைக்கு உரிய விழிப்பு நிலையில் மறைந்திருப்பது போன்று தூய்மைமிக்கதான பரம்பொருளைத் தரிசிக்கும் நிலையில் மாயையும் மறைந்து திகழும். இவ்வாறு தெளிவாக உணரும் விவேக ஞானம் மிக்க அன்பர்கள் பெற உள்ள சிவவாழ்வுப் பேற்றை எனக்கும் ஈந்து அருள்க.

10. திருவகுப்பு எனும் திருமுறை அருளிய நாவன்மைமிக்க அருணகிரிப்பெருமானின் பொலிவார்ந்த தோத்திரத்துக்கு உள்ளம் களித்துள்ள பேரொளிமயமான சுப்பிரமணியமே! உனையே புகழ்ந்து துதிக்கும் எளியேனை ஆட்கொண்ட பரிபூரணமான ஞானவடிவான மூலதெய்வமே! சிவவிளக்கம் வாய்ந்த பரமமான அனுபூதிநிலையில் மாயையானது ஒருவடிவம் வாய்ந்துள்ளது என நோக்குவதற்காவது, அடியோடு இல்லை எனக் கூறுவதற்காவது ஓரளவேனும் பொருத்தம் இல்லாத காரணத்தால் அதனை 'அநிர்வசனீயம்' (இப்படிப்பட்டதென நிர்ணயித்துச் சொல்லப்பட முடியாதது) என்று கூறுவதும் வழக்கத்தில் உள்ளது. அவ்வாறு கூறுவதும் பொருத்தமே – இவ்வாறு உண்மை ஒன்றையே நாடிநிற்கும் உறுதிப்பாடு மிக்க சிறந்த ஞானியர் உணர்வர். இத்தகைய ஞானியர் விழையும் கருணைமயமான சிவவாழ்வுப் பேற்றையே எனக்கும் ஈந்து அருள்க.

# 43. சீர்த்தியுடைத்தெள்ளறிவு

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சீ**ர்த்தியுடைத் தெள்ளறிவின் றழிவுபடா துங்காட்
சியிலவிருந் தொடர்பான்மா வின்சனிதிக் கண்கார்
போர்த்ததெனச் சந்ததமுங் காண்பதுதா னேமாப்
போதமிலஞ் ஞானமென வேசருவ சாரம்
வார்த்தைதரு மதுபரமான் மாவினுக்கென் றாலோ
வழுவாகு மாதலினாற் சீவான்மா விற்கே
பூர்த்தியதா யுள்ளதென்ப ரெம்பெருமா னாமோர்
பொருளினையே நேடுநறும் புண்ணியமுள் ளாரே. (1)

**ம**றையினிரா லம்பமுமற் றுள்ளனவுட் சிலவும்
வழுத்துவது போல்வாசு தேவமன னப்பேர்
பறைசுவடிக் கண்ணாறாம் வர்ணகமுந் தானே
பகருமா வஞ்ஞான மான்மனுக்கெவ் வாறாக்
குறுகினதென் றோதவொணா தென்பதனாற் பதிநூல்
கூறிடுமா றாணவத்திற் சகசபந்த மாய
கறையுயிர்தான் றெய்வத்தின்வே றுண்டெனல்கட் டென்பார்
கருத்தனையே நேடுநறுங் கண்ணியமுள் ளாரே. (2)

**ஆ**கமசித் தாந்தமதற் கேபகைமைத் தாயவ்
வஞ்ஞானந் தான்சிவனைப் பல்பிரிவா யாற்றி
ஊகமதைத் தேய்த்துநெடும் பந்தனமுஞ் செய்தே
ஊறனந்தந் தந்ததெனிற் சீரிறந்த வதுவே
ஏகவன்மைப் பொருளாமந் தோபரிவுள் ளாரும்
இன்னணமுங் கூறவிசைந் திடுவர்கொலோ மாலோர்
தோகமுமில் வைதிகசித் தாந்தமதைப் போன்றோர்
துறையுளதோ வென்பநறுந் தூயருளுள் ளாரே. (3)

1. சருவசாரம் = யஜுர்வேத **ஸர்வஸாரோபநிஷத்.**
2. நிராலம்பம் = **நிராலம்போபநிஷத்;** "அநாத் யவித்யா" என வருவது காண்க.
3. இத்திருப்பாட்டிற் கூறப்படுமாறு மாயை, கடவுளைப் பந்தனஞ் செய்த தாகப் பிரபோத சந்திரோதய மென்னுமொரு புத்தக மொப்புக்கொள்ளும்.

தோகம் = அற்பம்; சூ – நிகண்டு. வைதிக சித்தாந்தம் = வைதிக சைவம்.

**சு**ருதிதனிற் சீவான்மா பரமான்மா வென்றே
சொல்பொருள்கட் கெத்தனைநா மங்கள்விரித் தானுங்
குருநிமிரும் பைங்களமொன் றின்மேலாம் பங்கிற்
கூறுவணந் தெய்வமுயிர் சகமெனுமோர் மூன்றே
மருளறவிங் காராய்தற் குள்ளனவப் பொருள்கள்
மன்னுமிறை தொழில்பசுபா சம்மெனவா சில்லா
அருளரனார் பெருநூலுஞ் சொன்னதெனத் தேர்ந்தே
ஆளிறைவாழ் வுள்ளுவர்மெய் யன்புணர்வுள் ளாரே. (4)

**ஈ**ச்சுவரன் சீவனென்பார் தோற்றமிலா ராவார்
இவருளொருத் தன்குசலன் மற்றொருவன் பேதைப்
பேச்சுடையஞ் ஞானியென நாரதற்கெண் கண்ணான்
பேசியவோ ருபநிடதத் தொன்பதுப தேசங்
கூச்சமறக் கூறுமிதைத் தேரினிரண் டான்மாக்
குறைவறவுண் டென்பதுதப் பாதெனவே கண்டு
மூச்சறவுண் ணின்றுசிவா னந்தமுதற் றேவை
முயங்கிடுவார் முன்னையமா புண்ணியமுள்ளாரே. (5)

**அ**ணுவினுமோ ரணுவாயும் பேழினும்பே ழாயும்
அமர்ந்துளனான் மாவவனிச் செந்துவினெஞ் சாகக்
கணுமிதய குகையிலுளா னென்றிருநாற் கண்ணான்
கலமுனிக்கோ துபநிடதங் கூறிடுமக் கூற்றால்
அணுவெனுமோ ருயிர்க்குயிரா யுள்ளுளதும் பேழாம்
அண்டமெலா முள்ளடங்க நிற்பதுமென் றாமால்
எணுமிஙனே சீவான்மா வுள்ளான்மா பரமாய்
இயம்பான்மா வுண்டெனவுங் காண்பருள்ளு ளாரே. (6)

---

*4. ஒன்றின் மேலாம்பங்கு = இரண்டாமத்தியாயம். இவ்வத்தியாய இறுதியில் இங்குக் கூறப்படுவது கண்ணுறலாம்.*

*இறைதொழில் = பரமான்மாவின்செயல்.*

*5. தோற்றமிலார் = உற்பத்தியில்லாதார், அனாதியாயுள்ளார்.*

*இதன்கட் கூறப்பட்ட உபநிடதம், அதர்வண வேத **நாரதபரிவ்ராஜகமாம்;** இதன் 9 – ஆம் உபதேசத்தில் இங்கோதிய செய்தி யுளது; இதுவே **சுவேதாச்வதரோபநிஷத்திலு** முளது; திட்பங் கருதுக **(திவ்விய சுப்பிரமணியமெனும்** 3–ஆம் பத்தின் 4–ன் உரை).*

*6. இதன்கட் கூறப்பட்ட உபநிடதமும் **நாரதபரிவ்ராஜகமே** ; இதன் 9 – ஆம் உபதேசத் திற்றானே இங்கோதிய செய்தியுமுளது. இதுவே, தைத்திரீயாருணசாகை நாராயணத்திலும், சரபம், கடம், சுவேதச்வதர மென்னும் உபநிஷதங்களிலு முளதென்பதைச் **சதானந்த சாகரத்தினறிக.** (தகராலயரகசியப் பாயிரத்து 3 – ன் உரை). பேழ் = பெரிது. உள்ளுளார் = உணர்வுடையார்.*

பரமான்மா வின்சுடரே யகவான்மா வென்று
பகர்முறையா லவையொன்றே யாமுயிரிற் குள்ளே
விரவிநடுக் குகையிலிருந் துள்ளவதைத் தானே
வேதமதுன் னான்மாவைக் கண்டதிலே சேர்ந்து
பரமானந் தப்பெருவாழ் வைக்கொளுவா யென்னாப்
பணித்ததெனத் தேராதா ரேகான்மன் பேசிப்
பரநாமென் றுயிர்நிலையைத் தானேகொண் டதையே
பற்றினரென் றோர்ந்தருணோக் குவரருளுள் ளாரே. (7)

ஒன்றிரண்டென் றோதுகணக் கற்றவனாய் நெஞ்சாம்
உட்கமலப் பூநடுவே நானுளனென் றோவா
நன்றுடைமா தேவன்மைத்தி ரேயருக்கு மேனாள்
நவின்றமுறை தன்னையிரண் டிகந்தவத்தி யாயம்
குன்றலறக் கூறிடுமஃ தாலுயிரிற் குள்ளே
கோளறவே யுள்ளபொரு ளவ்வுயிரா காதஃ
தென்றுமருந் தேவெனவே யாகுமதைக் கண்டே
ஏசில்கதி சேர்வதெனா வெண்ணுவர்கண் ணாரே. (8)

கீதமறைத் தத்துவம சிச்சொலிரண் டான்மாக்
கேடறவே காண்டலினா னும்புணர்மா மோக்க
சாதனத்திற் கெவ்வாற்றா னும்மிரண்டில் லாமே
சதுர்யுகத்து மொவ்வுவதின் றென்றறித லானும்
ஏதமிலாச் சைவசித்தாந் தஞ்சொலுமா றான்மா
இரண்டெனலே தீர்வையென்றுந் தன்னிதயத் துள்ளே
ஆதரவா யுள்ளகுகே சன்றகவால் வீட்டை
அடைவதுதா னேரெனவுங் கண்ணுவர்கண் ணாரே. (9)

அசிபதத்தின் பொருள்பரமா கின்றனையென் றாமஃ
தக்கினிவெப் பேறறலை யக்கினியா யிற்றென்
றுசிதமுடைச் சொல்லாலே சொல்வதுபோ லென்றும்
உற்றவெப்பந் நீருமன்றி நீரதுவு மன்றி
இசைதலினா லத்துவித மாமதுபோற் றேவும்
இயமான சீவனுமே கூடினமை யென்றும்
வசையறவே யுய்த்துணர்வா ரருணகிரிப் பேரான்
மன்னிதய கந்தனையே கண்ணுணர்வுள் ளாரே. (10)

---

*7. அகவான்மா = உள்ளான்மாவாகிய அந்தரான்மா.*

*8. மாதேவன் மைத்திரேயருக்கு மேனாள் நவின்றமுறை தன்னைக் கூறுவது = ஸாமவேத* ***மைத்ரேயோபநிஷத்;*** *இதன் 3 – ஆம் அத்தியாயத்தில் இங்கறிவுறுத்துஞ் செய்தியுளது. இவ்வத்தியாயமே "இரண்டி கந்தவத்தி யாயம்" எனப்பட்டது. மாதேவன் = கைலாசபதி.*

*10. வெப்பேறறல் = வெந்நீர்; அறல் = நீர்.*

# 43. சீர்த்தியுடைத் தெள்ளறிவு

**1.** சிறப்புநிலைக்குரிய, தெளிந்த அறிவு என்பது இல்லாததும், அழிவில்லாததும் என விளங்கி. புத்தியில் விளங்கும் விருப்பு வெறுப்பு என ஆகி, ஆன்மாவின் முன்னிலையில் மேகம்சூழ்ந்து கொண்டிருப்பது போன்று எப்பொழுதும் ஒரு மறைப்பாகத் திகழ்ந்து கொண்டிருப்பது எதுவோ அதுவே, ஞானம் என்பதற்கு ஒரு சிறிதும் இடம் இல்லாததான அஞ்ஞான பந்தம் என சருவசார உபநிடதம் கூறும். இந்த அஞ்ஞானபந்தம் பரம்பொருளுக்கு உள்ளது எனக் கூறினாலோ பெருங்குற்றமாகும். எனவே இது ஆன்மாவுக்கே நிச்சயமாக உள்ளது. எம்பெருமானாகிய நித்தியப் பொருளாகிய உன்னையே தம் உள்ளத்துள் நாடி உணரும் சிவபுண்ணியம் வாய்த்துள்ள ஞானியர் இவ்வாறு கருதுவர்.

**2.** வேதத்தைச் சார்ந்ததான நிராலம்ப உபநிடதமும், மற்றுமுள்ள உபநிடதங்களுள் சிலவும் முடிவாகக் கூறுவது போன்று, வாசுதேவ மனனம் எனப் பெயர்பெற்றுள்ள நூலின் ஆறாவது பகுதியும் “இன்னதென விளக்கிக் கூறுதற்கு அரிய அஞ்ஞானமானது ஆத்மாவோடு எவ்வாறு பொருந்தியது என்று கூற இயலாது” எனக் கூறுவதனால், பதிநூலாகிய ஆகமம் தெளிவாகக் கூறுவது போன்று ஆணவத்தால் ஆகும் சகசபந்தம் எனும் குற்றம் சார்ந்துள்ள சீவன் என்பது, தெய்வத்தின் வேறுபட்டதாக உள்ளது (சீவனே தெய்வமாகாது) என உரைத்தல், மாறாத உண்மையேயாம். முழுமுதல் இறைவனான உன்னையே உள்ளத்துள் தேடிக் காணும் சீலஒழுக்கம் உடைய பெரியோர் இவ்வாறு கூறுவர்.

**3.** “அந்த மூல அவித்தையாகிய அஞ்ஞானம் சிவமாகிய ஏகத்தைப் பல பிரிவுகளாகப் பகுத்து வேறுபடுத்தி, ஞானநிலையை மறைத்து, இறுக்கமான ஆவரண பந்தத்தையும் செய்து, அளவற்ற துன்பங்களைக் கொடுக்கிறது” – இவ்வாறு, ஆகம சித்தாந்தக் கொள்கைக்கு முரணாக விளங்குமாறு கூறினால், சீர்மையற்ற அந்த அஞ்ஞானம் கொடுமையாக விளங்குவதில் தன்னிகரற்று இருக்கும் பொருளாகும். அந்தோ! கருணை உள்ளம் உடையோர் இவ்வாறு கூற இசைவார்களோ! விபரீத அறிவுக்கு ஒருசிறிதும் இடம் கொடுக்காத வைதிக சைவசித்தாந்தம் போன்று, ஆன்மவிஞ்ஞான நீதியான ஒரு துறை உண்டோ? – ஞானமணம் கமழும் தூய அருள் உள்ளம் வாய்க்கப் பெற்றுள்ள பெரியோர் இவ்வாறு கூறுவர்.

**4.** வேத ஆகமங்களில் சீவான்மா எனவும் பரமான்மா எனவும் கூறப்படும் நித்திய வத்துக்களுக்கு எத்தனையோ பெயர்கள் இட்டு விரித்துரைத்தாலும், ஞானவளம் மிகுந்த பைங்கல உபநிஷத்தின் இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்படும் வண்ணம், இறை, உயிர், உலகம் எனப்படும் மூன்றே, மயக்கமற இங்கு ஆராய்ந்து உணரப்பட உள்ளன. கூறப்பட்ட மூன்றும், நிலைபெற்றுள்ள பரமான்மாவின் செயல், பசு, பாசம் என, குற்றமற்ற அருள்மயமான சிவனார் அருளிய ஆகமமும் கூறியுள்ளது. இவ்வாறு ஆய்ந்துணர்ந்து, உன்னிடம் மெய்யன்பும் உயிர்களிடம் அருள் உணர்வும் கொண்டுள்ள பெரியோர், அனைத்தையும் ஆட்கொள்ளும் மூல இறைவனின் ஆனந்தப் பேற்றையே கருதி இருப்பர்.

5. ""பரமான்மாவும் சீவான்மாவும் தோற்றம் இல்லாதவர்கள் (ஆதி அந்தம் அற்றவர்கள்) இவ்விருவருள் ஒருவன் பூரண ஞானமும் பூரணச்செயலும் உடையவன்; மற்றொருவன் பேதை எனக் கூறப்படுமாறு அஞ்ஞானியாக உள்ளவன்.'' – இவ்வாறு நாரத முனிவருக்கு பிரம்மன் உபதேசித்த ஓர் உபநிடதத்தே (நாரத பரிவ்ராஜகம் எனும் உபநிடதத்தே) ஒன்பதாவது உபதேசப்பகுதி, தயக்கமும் குழப்பமும் இன்றித் தெளிவாகக் கூறியுள்ளது. இதனை ஆய்ந்து நோக்கினால், ஐயத்துக்கு இடமின்றி இரண்டு ஆன்மாக்கள் உள்ளன என்று உறுதியாகக் கூறுவதிலிருந்து ஒருவரால் விலகமுடியாது. இவ்வாறு ஆய்ந்து தெளிவாக உணர்ந்துள்ள முற்பிறவிப் பெரும்புண்ணியப் பேறு மிகுந்த சீலர்கள், மூச்சுக்காற்றின் இயக்கத்தை ஒழுங்குபடுத்தி, தம் உள்ளத்துள்ளேயே நிலைபெற்று, சிவானந்த மயமான முழுமுதற் பொருளோடு ஐக்கியப்பட்டிருக்கும் அனுபவம் பெறுவர்.

6. ''அணுவைக் காட்டிலும் அணுவாகச் சிறிதுபட்டும், மிகப் பெரியதாக உள்ளதைக் காட்டிலும் மிகவும் பெரிதுபட்டும் நிலைபெற்று விளங்கும் ஆன்மா எனப்படுபவன், இந்த ஆன்மாவின் நெஞ்சாகக் கருதப்படும் இதய குகையில் உள்ளான்'' என்று பிரம்மன் நாரத முனிவருக்கு உபதேசித்தருளிய உபநிடதம் (நாரதபரிவ்ராஜகம்) கூறும். இக்கூற்றால் அணு எனப்படும் சீவான்மாவின் இதயத்துள், சீவனுக்கும் உயிராக உள்ளதும், மிகப்பெரிய அண்டங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டு மிகவும் பெரிய பொருளாக நிலைபெற்றுள்ளதும் பரமான்மாவே என ஆகின்றது. இவ்வாறு சீவான்மாவுக்குள்ளே பரமமாக இயம்பப்படும் ஆன்மா தனியே வேறு உள்ளது என உறுதியாக உணர்பவர்களே, அருள் உணர்வும் இறையுணர்வும் உடைய பெரியோர்களாவர்.

7. பரமான்மாவின் ஒருசுடரே, உள்ளான்மாவாகிய அந்தரான்மா எனக் கூறப்படும் முறையால், பரமான்மாவும் அந்தரான்மாவும் ஒன்றே. சீவான்மாவுக்குள் அபேதமாக விளங்கி, நடுஇடமாகிய இதயகுகையில் இருக்கும் அந்த அந்தரான்மாவைக் கருத்தில் கொண்டே வேதமானது "உன் ஆன்மாவைக் கண்டு, அதனோடு கலந்து பரமானந்தப் பெருவாழ்வை அடைவாய்" என்று கட்டளை இட்டுள்ளது. இவ்வாறு இந்த உண்மைப் பொருளை ஆய்ந்து உணர இயலாதார் ஏகான்ம வாதம் பேசி, ''பரமான்மாவே நாம்'' என்று தன் ஆத்மாவையே கருதிக்கொண்டு, அந்தக் கருத்தையே முடிபான தத்துவமாகக் கொண்டு விட்டனர். இவ்வாறு ஏகான்மவாத நிலையை உணர்ந்து, அதைத் தவிர்த்துவிட்டு, பெரிய பொருளாகிய பரசிவத்தின் அருட்பேற்றை விழைந்து நிற்போரே, அருள்– இறை உணர்வு உடையோராவர்.

8. "ஒன்று எனவும் இரண்டு எனவும் ஓதப்படும் கணக்கு அற்றவனாகி நடுஇடமாகி இதயம் எனப்படும் உட்கமலப் பூவின் நடுவே நான் உள்ளேன். இவ்வாறு, எப்பொழுதும் சிவப்பேறுகளை வழங்க உரியவனான மகாதேவனாகிய சதாசிவப்பெருமான், மைத்திரேய முனிவருக்கு, முன்பு உபதேசித்தருளிய முறையை மைத்திரேய உபநிடதத்தின் மூன்றாம் அத்தியாயம் பூரணமாகவும் உறுதியாகவும் கூறியுள்ளது. அதனால் உயிருக்குள்ளே எவ்விதக் குறைவும் அழுக்கும் இன்றி, இதய நடுவே உள்ள பொருளானது, சீவான்மாவாக எப்பொழுதுமே ஆகாது; அது, உணர்தற்கரிய பரம்பொருளே ஆகும். இத்தகையை பரம்பொருளை உள்ளுக்குள்ளே தரிசனம் செய்து, மாசற்ற கதியை அடைவதே வாழ்வின்

பயன் என்று கருதுவோரே ஞானவிழி பெற்றுள்ளோர் ஆவர் (கண்ணார் என்பதற்கு மேலான தியான யோகம் கைவரப் பெற்றோர் என்றும் பொருள் கொள்ளலாம்; கண் – கண்ணுதல் – கருதுதல் – தியானித்தல்).

**9.** சந்த இசைநயம் பொருந்திய வேதம் கூறும் தத்துவமசி எனும் மகாவாக்கியத்தில் இரண்டு ஆன்மாக்களைப் பற்றிய உண்மை திடமாக உணரப்படுவதாலும், பக்குவ ஆன்மாக்களுக்குப் பொருந்தும் பெரிய வீடுபேற்றை அடைவதற்குரிய பயிற்சி முறைகளுக்கு இரண்டு ஆன்மாக்கள் (சீவான்மா, பரமான்மா) இல்லாமல் எவ்வாற்றாலும் நான்கு யுகங்களிலும் வழியே இல்லை என அறிய உள்ளதாலும், குற்றம் தீர்ந்துள்ள சைவசித்தாந்த நன்னெறி கூறுமாறு ஆன்மாக்கள் இரண்டு எனக் கூறுதலே உறுதியான முடிபாகும். இதனையும், தன் இதய நடுவண் கருணைமயமாக உள்ள குகேசனின் திருவருள் துணையால் வீடுபேறு அடைவதே சீவனுக்கு விதிக்கப்பட்டுள்ள நல் வழி என்பதையும் நன்கு சிந்தித்து உணர்பவர்களே மேலான தியான சீலர்கள்.

**10.** தத்துவமசி எனும் மகாவாக்கியத்தில் வரும் 'அசி' என்னும் சொல்லுக்குரிய பொருளாவது, "நீ பரம்பொருளாக ஆகின்றாய்" என்பதாகும். இவ்வாறு கூறுவது, நெருப்பின் சூடு ஏறப்பெற்றுள்ள நீரை "இது சூடாயிற்று" எனப் பொருத்தமான சொற்களால் சொல்வது போலாகும். நீரில் ஏறியுள்ள சூடானது நீரும் அன்று; நீர், சூடும் அன்று; சூடும் நீரும் அத்துவிதமாகப் பொருந்தி விரவியுள்ளமை போன்று, அசி என்பது பரம்பொருளும், இயமானன் (வழிபடுவோன்) எனப்படும் சீவான்மாவும் அத்துவிதமாக விரவியுள்ளமையைக் குறிப்பதாகும்–என இவ்வாறு, குற்றமற்ற வகையில் சிந்தித்து ஆய்ந்து உணரவல்லோர், அருணகிரிப் பொருமானின் இதய கமலத்துள் எப்பொழுதும் வெளிப்பட்டிருந்த கந்தப் பெருமானையே தியானித்திருக்கும் அருள் உணர்வு உள்ளோராவர்.

# 44. ஆரணம்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ஆ**ரண மதுதான் சீவ னானவன் றான்வே றேவுங்
காரணன் வேறென் றெண்ணிக் கனமுடன் பிரமிக் கின்றான்
நேரறி யாம லென்று நிகழ்த்தினா லதற்கா மர்த்தம்
பூரண மாயென் னெஞ்சே புகன்றிடக் கேட்டி யாலோ. (1)

**ஈ**சுரன் றனக்குட் டானே யிருந்தத்து விதமாய் மோகத்
தாசறு காறு மாட்டு கின்றன னெனத்தே றாது
நாசமின் றெங்னோ வேறா யிருக்கிறா னவனை நானோர்
தேசொடெங் கறிவே னென்னுந் திறத்தனை யதுதான் சாரும். (2)

**இ**ன்னணம் பொருள்கொள் ளாதவ் வீசனே சீவ னாகித்
தன்னைத்தா னறியா திந்தச் சகத்தினிற் கிறதென் றாலஃ
தென்னகா ரணத்தாற் கேட்டா லிப்படி யாமென் பார்க்குப்
பன்னவோர் வாயில் லாதாற் பகுத்துமுற் சொனதே யர்த்தம். (3)

**தெ**ய்வமே சீவ னாகித் தியங்கிட லியற்கை யென்றால்
தெய்வமென் றதனைக் கூறத் தேவையின் றறிவு மாழ்கிக்
கைதவப் படுஞ்சீ வர்க்கு ளதுவுமொன் றெனவாங் கற்றோர்
ஐயவிப் படியுங் கூறற் ககமொருப் படுவார் கொல்லோ. (4)

**ஏ**கமா மாத்து மாவிற் கிதுநிச மிதுபொய் யென்னும்
ஊகமாம் விசார மில்லா தான்மய லோங்கிற் றென்றால்
ஊகவவ் விசார மெஞ்ஞான் றொழிந்ததே னொழியு நீதான்
பாகமாய் விளக்கென் பார்க்குப் பகர்விடை யுண்டோ வன்றே. (5)

**தே**வனை யன்றிச் சீவ னிலையெனி னுபயஞ் சேருந்
தூவருண் மோக்கஞ் சேர்வா ரில்லையாந் தொலைவில் லாத
சீவனை யன்றித் தேவ னிலையெனி னதுவுந் தீழ்ப்புக்
கேவல நாத்தி கப்போக் காமெனக் கிளப்பார் நல்லோர். (6)

**மு**த்தியிற் பேதா பேத மொழிவதின் றைக்கி யத்தால்
அத்துவி தந்தான் சித்தாந் தமுறைக ளதிர்த்தல் போலச்
சுத்தசா தகப்பேர் சூட்டித் துலக்கிய வொருநூற் கண்ணே
முத்தியிற் சிவமு மென்னுந் தூக்கினு மொழிந்தார் தேவர். (7)

**வி**ரதரோர் நால்வர்க் கந்நாண் மிளிர்வட விருக்கத் தின்கீழ்
விரலினை யொன்றா யேனும் விரித்துமற் றிரண்டா யேனும்
அரமுனி காட்டி டாம லங்குலி யிரண்டு சேர்த்துத்
திரிபறக் காட்டி னானஃ தேதெளி மோக்கத் தீர்வை. (8)

---

*4. கைதவம் = வஞ்சகம் = தாமதகுணம்; வடசொல்.*

*6. தீழ்ப்பு – தீட்பு என்பதன் விகாரம்; இழிவெனும் பொருண்மைத்து.*

*7. தேவர் = குமாரதேவர். இவர், முத்தியில் முத்தான்மா விருக்கத்தான் வேண்டுமென் றொப்புவாராயினாரென்பது இத்திருப்பாட்டிற் போதருங் கருத்து. அஃதவரது* ***சுத்த சாதகமெனும்*** *பெயரிய நூலில் "முத்தியிற் சிவமும்" என்றற்றொடக்கத் தொரு தூக்கினாலறியப்படுகின்ற தென்பதூஉம் ஈங்கெடுத்துரைக்கப்பட்டது.*

*8. கல்லால மரமே "வடவிருக்கம்" எனப்பட்டது. "மன்று ளாடிய வானந்த வடிவமும் வடவால் – ஒன்றி நால்வருக் கசைவற வுணர்த்திய வுருவும்" என்றார்* ***திருவிளையாடற் புராணத்தாரும்*** *(வாதவூரடிகளுக்குபதேசித்த படலத்தில்). வடம் = ஆல்.*

இந்தநற் றீர்வை யாலே யிருமுத்தி தனிலொன் றென்னும்
அந்தமி லபேத வாத மாவது மிரண்டாய் வேறாய்ப்
பந்தமாய்ப் பேசு பேத வாதமும் பயன்ப டாவென்
றெந்துனி செகுத்தாள் சாமிக் கினித்தவ ரறிவார் மன்னோ. (9)

இதைவிடுத் தெவித மாக வெவருனக் கியம்பி னானும்
அதனைமெய் யாக்கொ ளாதை யருணெறித் தெளிவு ஞானச்
சுதைமடுத் தருணைப் பேரான் சொனதுமித் தீர்வை கண்டாய்
சிதைவவித் தாள்கு கேசன் றிருவரு ணேடு நெஞ்சே. (10)

# 44. ஆரணம்

**1.** சீவனாக உள்ளவன் வேறு; சீவனைச் செலுத்தும் காரண முதலாக உள்ள பரமான்மா வேறு என எண்ணிக் கொண்டு, உண்மையை உள்ளவாறு அறியாமல், மனிதன் மிகவும் விபரீத உணர்வுகொண்டு பிரமித்துள்ளான் – என இவ்வாறு வேதம் கூறினால். அக்கூற்றுக்குரிய உண்மையான பொருளை முழுமையாக எடுத்துக் கூறுவேன். என் நெஞ்சமே! நன்கு கேட்டுணர்க.

**2.** இறைவன், சீவனாகிய தனக்குள் தனது கருணையால் தானே அந்தரான்மாவாக வெளிப்பட்டு அத்துவிதமாகக் கலந்திருந்து சீவனின் மோகத் தளைகள் அடியோடு அறுபட்டு நீங்கும் வகையில் ஆட்டுவிக்கின்றான் என்பதே உண்மை. இந்த உண்மையை உணராமல் இறைவன் அழிவின்றி எங்கோ வேறாக இருக்கின்றான்; அவனை நான், அவனுக்குரிய ஒளிவடிவத்தோடு தெளிவாக எங்கே எவ்வாறு அறிவேன் என மனக்கவலை கொண்டு அலைவதையே வேதம் அவ்வாறு உணர்த்தியது.

**3.** இவ்வாறு உரிய உட்பொருளை உணர்ந்து கொள்ளாமல், "அந்தப் பரம்பொருளே சீவான்மாவாக ஆகித் தன்னைத்தான் அறிந்து கொள்ளாமல் இவ்வுலகில் மயங்கி நிற்கிறது" என்று கூறப்படுகிறது. இவ்வாறு கூறுவோரைப் பார்த்து "அந்தப் பரம்பொருள் எந்தக் காரணத்தால் இப்படி ஆகிறது ?" என்று கேட்டால் அது இன்ன காரணத்தால் இப்படி ஆகின்றது எனத் தெளிவாக எடுத்துரைக்க வழியே இல்லை. எனவே தெளிவாகப் பகுத்துணர்ந்து முன் கூறப்பட்ட பொருளே உண்மையான அர்த்தம்.

**4.** 'சீவான்மாவாக ஆகி விளங்குதல் என்பது அந்தப்பரம்பொருளின் இயல்பான குணமே; அதன் இயற்கையே' எனக் கூறினால் அதனைப் பரம்பொருள் என உயர்த்திக் கூறத் தேவை இல்லை. மெய்யறிவு மழுங்கப் பெற்று மயக்க உணர்வு கொண்டு மோகமாகிய வஞ்சனைக்குள் அகப்படும் உயிர்வர்க்கத்துள் அத் தெய்வமும் ஒன்று எனக் கூற

*9. 'இந்தநற்றீர்வை' என்பது, "முந்தைநாளிற் சாருவாகனுலகாயதன்" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுரைக்கண் இனிதறியக் கிடக்கின்றது. அங்ஙனே, "இத்தீர்வையே எமது முடிவான சித்தாந்தம்" என்றுளது யாதனைக் குறிக்கின்றதோ அதுதான் ஒன்றென்னும் அபேதவாதமும் இரண்டாய் வேறாய்ப்பேசு பேதவாதமும் பயன்படா வென்றதற்கும் பொருளெனவறிக. துனி = துக்கம்;* ***பி – நிகண்டு.***

வேண்டிவரும். ஐயனே! கற்றுணர்ந்த ஞானியர் இவ்வாறு கூறுவதற்கும் உள்ளம் ஒருப்படுவார்களோ?

5. "ஒன்றாகவே உள்ள ஆத்மாவில் இது உண்மை; இதுபொய் எனத் தருக்க ரீதியான ஆய்வு நிகழும் நிலை இல்லாது நீங்கிவிட்டதால் இத்தகைய மயக்கம் பரம்பொருளிடத்தே எழுந்துள்ளது'' எனக்கூறப்படின், ''தருக்க ரீதியான விசார நிகழ்வு எப்பொழுது அதனிடமிருந்து நீங்கியது! ஏன் நீங்கியது? தெளிவாக ஆய்ந்து நீயே விளக்கிக் கூறு'' எனக் கேட்பார்க்கு, அன்னோர் உரிய முறையில் கூற உள்ள விடைதான் உண்டோ? இல்லையே.

6. பரம்பொருள் மட்டுமே உண்டு; அதனைத் தவிர்த்து வேறாக சீவன் என்பது இல்லை எனில், இரண்டின் சேர்க்கைக்கு இடமாகிய தூய, அருள்மயமான வீடுபேற்றை அடைவார் யாரும் இல்லை. அழியாததாகிய சீவனே உண்டு; பரமான்மா இல்லை என்று கூறினால், அது இழிவாகிய, தனித்து நிற்பதாகிய, நாத்திக வாத முடிபாகிவிடும். அருளும் ஞானமும் வாய்த்துள்ள நல்லோர் இவ்வாறு கூறுவார்களோ?

7. பரமமான முக்திநிலையில் பேதமோ, அபேதமோ உள்ளது எனக் கூற வழிஇல்லை. இரண்டறக் கலந்திருத்தலாகிய அத்துவிதமே உள்ளது. இவ்வாறு, சைவசித்தாந்த நூல்கள் விளக்கிக் கூறுவது போன்று, சுத்த சாதகம் எனப் பெயர் சூட்டப் பட்டுள்ள ஒப்பற்ற நூலின் ஆசிரியர் குமாரதேவரும் 'முத்தியில் சிவமும்' எனத் தொடங்கும் பாட்டில் நன்கு விளக்கிக் கூறியுள்ளார்.

8. விரதிகளாகிய சனகர் முதலான நால்வர்க்கும், முன்பொருசமயம் கல்லால மரத்தின் கீழே குருவடிவம் கொண்டு வெளிப்பட்ட சிவனார் ஒருவிரலை உயர்த்தி 'ஒன்றே' என்றோ, இரண்டு விரல்களை உயர்த்தி விரித்து 'இரண்டே' என்றோ, முத்திரைமூலம் விளக்காமல், பெருவிரல், சுட்டுவிரல் ஆகிய இரண்டு விரல்களையும் சேர்த்து ஐயமும் திரிபும் அற, சின்முத்திரை காட்டி அருளினார். சின்முத்திரைக் குறிப்பே மிகவும் தெளிவான முத்திநிலைபற்றிய முடிபாகும்.

9. இந்த உறுதியான சின்முத்திரை முடிபாலே பெருமைக்குரிய முத்தி நிலையில் 'ஒன்றே' எனக் கூறிநிற்கும் அருள்நெறிக்கு ஒவ்வாத அபேதவாதமும், இரண்டே எனவும் வேறு வேறு எனவும் கூறி பந்தப்பிணிப்புக்கு வழிவகுத்துக் காட்டும் பேதவாதமும், ஆன்ம ஒழுக்கத்திற்குச் சிறிதும் பயன்படாதவை ஆகும். எமக்கு நேரும் துன்பங்களையெல்லாம் நீக்கி அருளும் குகப்பெருமானின் அன்புக்கு இனிய உரிமை படைத்துள்ள ஞானியர் இவ்வாறு நிச்சயப்படுத்தி உணர்வர்.

10. அழிவைத் தடுத்து நிறுத்தி ஆட்கொள்ளும் குகேசனின் திருவருளை நாடிநிற்கும் என் நெஞ்சே! இவ்வாறு உறுதிப் பொருளை உணர்வதை விடுத்து யார் உனக்கு எவ்விதமாக எதைக் கூறினாலும் அதனை உண்மை எனக் கொள்ள வேண்டாம். அருள்நெறித் தெளிவு பெற்று, பதி ஞானமாகிய அருளமிழ்தத்தை உட்கொண்டு களித்த அருணகிரிப் பெருமான் உணர்த்தி அருளியதும் இம்முடிபே என உணர்க.

# 45. அலர்நான்முகனார்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**லர்நான் முகனா ருணர்வா னிறையோ னருளா லருள்செய் துளமா மறையின்
சொலனே கபயன் றரமால் வெருள்சேர் துறைவா திகளின் மதபே தமெலாம்
நிலமேன் மிகமூ லமதா யுளதா னிறைமா னவிலா மறைவார் பொதுவாம்
இலகா கமமே யதனோர் தெளிவா மெனவே யுணர்வார் நெறிதா னுளரே. (1)

**அ**னுமா னநனா வெனுமுண் மைவிடா தணியாய் நவிலா கமவந் தரமே
வனமா மறையோய் வெனவொண் பொருடோ் வதுமே தையுளோர் கடனா மெனவுஞ்
சொனவா கமமீ சுரனா ருடனே சொனமுன் முறையா யொருநால் வருமா
கனமோ தியதா யுளதா லிதுவுங் கதிநூ லெனவும் பயில்வார் நலரே. (2)

**ப**சிநூ றிடுபோ சனமோ டதையீ பதமா கியகா லதையுங் குறைவார்
பசுவா னதையும் பரமாய் நிகமம் பரிவா ருமுபா சனைசெய் திடவும்
பசுநா யகசம் புவையுந் தொழவும் பனுமா கமமு மயன்மால் பலரைக்
கசிவோ டுபணிந் திடவுஞ் சிவன்மா கழனா டவுமோ தடைவும் பலவே. (3)

**ம**றைகூ றியவா றுணவா னியமான் மனதீ டில்பரா பரமென் பனநேர்
முறையே பெரிதா யுளவா லரனூன் மொழியோர் முடிவின் படிகீழ் மையெனா
அறைபா சவிறைஞ் சணுவந் தனைமே லணவா நிலையா மெனவும் பதியாம்
இறையோ னதுவந் தனைமே னிலையா மெனவுந் தெளிவா யுணர்வார் நலரே.
(4)

---

1. *நிறைமானவு = நிறைந்த தெளிவு; 'மானவு' தெளிவெனப்படுதலை – "தெருளும் மானவும் – தெளிவின் றிறத்த." என்னும் பி = **நிகண்டு**ச் சூத்திரத்தானறிக. 'மாநனவு' மானவு என மரீஇயிற் றென்னலாம்.*
2. *நனா = பிரத்தியக்ஷம். வனம் = வழி; **பி – நிகண்டு**.*

   *மறையோய்வு = மறைமுடிவு= வேதாந்தம்.*

   *ஈசுரனார் – ஈசுரன் + நார் எனப்பிரிக்க; நார் = அன்பு.*
3. *(போசனம் =) அன்னம், காலம், சீவன், சீவநாயக சம்பு ஆகிய இப்பொருள் களைப் பிரமமாக வுபாசிக்க வேண்டுமென்று நிகமம் பன்னுமென விங்குக் கூறப்பட்டது. – (காலோந்நம் ப்ரஹ்மநீட மாத்மாசேத்யேவம் ஹ்யாஹ =) "காலம் அன்னமென்பன பிரமமாக வுபாசிக்க யோக்கிய மானவை" (த்யாநமந்த : பரேதத்வே லக்ஷ்யேஷு சநிதீயதே|=) "உடம்பு மனம் மனமடங்குமிடமாகிய இலக்ஷியங்களையும், ஆன்மாவுக்குட் புலத்தே அந்தரியாமியாயுள்ள பரம்பொருளையுந் தியானிக்க வேண்டும்" என **மைத்ராயண்யுபநிஷத் 6**–ஆம் பிரபாடகத் தோதுதலின் அறியலாம். சிவபெருமானது திருவடி நாட்டத்தைப் பலவாறாக விதிக்கவந்த ஆகமமும் இம் மறைபோல அயன் மால் முதலிய பலதேவ வழிபாடுகளை விதிக்குமென் றிங்குணர்த்தப்பட்டது – தகராலயரகசிய வுரையிலே நூலாசிரியர துரைப்பாயிரம் என்பதி லெடுத்துக்காட்டப்பட்ட ஆகம வாக்கியங்களின றியலாம். கால் = காலம்.*
4. *ஆனியம் = காலம்; னகரவெதுகை. சீவன் 'மனது' எனப்பட்டது.*

   *பாசவிறைஞ்சு = பாசவந்தனை, வந்தனை = வழிபாடு.*

**ப**சுபா சமெனும் வழிபா டுடையார் பதிபூ சனையே யுயர்வென் றெணவோர்
கசுமா லமிலா வுணர்வெய் திடினுங் கவினந் தியமுக் கறைசெய் வினைபோல்
விசுவா சமிலா தடைநண் பரையு மிகைமே வியதம் மெனவே கெடுவான்
இசைவாய் மொழிவா ரிவரோ டுறுநண் பிடரா மெனவே கியுய்வார் நலரே. (5)

**அ**ருண்ஞா னமிலா துரைசெய் பவர்தா மமலே சனெனா வறையெம் பெருமான்
ஒருபூ ரணமா னதையோ துவதின் றுயரா லயவன் கரிகண் டுளகண்
டெரியார் கதைபோ லவதோ முகமே திகழான் மனையுஞ் சடமா யையையும்
பொருளா நுவலும் படிநே ருமெனும் பொருளோர் வரகோ சரநா டுநரே. (6)

**ப**திஞா னமிலா திழிஞா னமுளார் பதிநூ லினையவ் விழிநூ னெறியில்
விதிமீ றிவெறும் பொருள்கோ டலும்வல் வினைநூ றுமகே சுரசின் னமணிந்
ததிகா ரவரம் பிலதீ தநியா சவியன் சொலலுந் தினையே னுமொவா
மதிகே டெனவா மெனநன் குணர்வார் மறைநா யககந் தனையுள் குநரே. (7)

**தெ**ருண்ஞா னியெனும் படியா டியருஞ் சிவவாழ் வருண்மெய்ந் நெறியென் பதையே
கருதா துலகா சையினின் றலைவார் கதியா யதைநல் லவராய் வுறின்மா
நிருவா ணமெனுங் கதியென் பதிலே நிகழா விபொயா மெனவோ துமுறாக்
குருவோ துரைகொண் டதனா லதனைக் கொளலா னலமென் னெனுமோய்
வெனவாம். (8)

**உ**ணர்வா யவரும் பொருள்சூ னியமென் றுயர்வே தநவின் றிடுமே லதுதான்
கணமா கியமா யைவிகா ரமின்மா கனனா மொருதே வனையுந் தனுளே
துணியா யுளவந் தரவான் மனையுஞ் சொனதென் றும்வழு தெனினா ருயிரின்
குணபே தகபோ தமதா மெனவுங் குறையா தபொருள் கொளுவார் நலரே. (9)

**உ**களம் பனலொன் றெனலின் றருளா லுரமா கியொருங் குபடுங் கதிதான்
பகர்செம் மறையா ரியருள் கிடுமா பதியென் சிவனீ ருயிர்வீ டுறவே
தகவம் பகமென் பதனா லருள்செய் தனனன் னணமே வருமா டிலரான்
மிகமே லவர்நூ னெறியென் றறிவார் வெயின்மா திரநா மனையன் பினரே. (10)

---

*5. முக்கறை – மூக்கறை; மூக்கறுப்புண்டவ னெனும்பொருளது.*

*6. கரிகண்டுள கண்டெரியார் = யானைகண்ட குருடர்.*

*7. அதீதநியாசம் = அதீத சன்னியாசம்.*

*8. எனுமோய்வு = என்னு முடிவு.*

*9. துணி = ஒளி; பி – நிகண்டு.*
*வழுதெனின் = சீவான்மா வென்பது பொய்யென்று வேதஞ் சொன்னால். வழுது = பொய்.*

*10. நாமனை – நாமன் + ஐ எனப்பிரிக்க; ஐ = கடவுள்.*

# 45. அலர்நான்முகனார்

1. தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன் உணரும்பொருட்டாக, இறையோன் அருள்கூர்ந்து உபதேசித்து அருளிய பெருமைமிக்க வேத மந்திரங்கள் அனேக அர்த்தங்களைத் தருவனவாக இருத்தலால், மயக்கமும் மருட்சியும் பொருந்தப் பெற்றுள்ள பல துறைப்பட்ட தருக்க, மதவாதங்களில் ஈடுபட்டோர்களால் பலவேறு மதநெறிகளும் உலகில் உருவாக்கப் படுவதற்கு வேதமானது மூலகாரணமாக அமைந்துள்ளது. எனவே நிறைவான தெளிவு இல்லாததாகவும், மறை பொருள்களை உள்ளடக்கியதாகவும் உள்ள வேதமானது பொதுநூலாகும். பதிநூல் எனும் சிறப்புக்கு உரியதாக விளங்கும் ஆகமம் வேதத்தின் தெளிவாக அமைந்துள்ளதாகும் என நன்கு உணர்வோரே, மேலான இறைநெறியிற் செல்வோராவர்.

2. அனுமானம், காட்சி என்னும் பிரமாணங்களை விட்டு அகலாமல் நேர்த்தியாக உள்ளது எனக் கூறப்படும் ஆகமத்தின் இறுதிப்பகுதியே பல்வகை நற்சிறப்புகளும் தொகுந்துள்ள வேதத்தின் இறுதிப்பகுதியாக விளங்குகிறது எனும் உண்மையைத் தெளிவாக ஆய்ந்துணர்தலே அறிவுக்கூர்மை உடையாரின் செயலாகும். கூறப்பட்ட ஆகமமானது இறைவன் அன்புடன் கூறியருளிய முறைப்படியே, சனகர் முதலான நால்வரும், அனந்தர் முதலான நால்வரும், பெருமைக்குரிய ஆனந்தப் பேற்று நிலையை உணர்த்தி ஏனையோர்க்கும் உபதேசித்தருளிய பெருமையை உடையது. நற்கதியை அடைவதற்குரிய உயர்ந்த வழியைக் காட்டும் நூலே ஆகமம் என அனுபவம் வாயிலாக அறிவோரே சிவபாக்கியம் மிகுந்துள்ளோர் ஆவர்.

3. பசியைப் போக்கும் அன்னத்தையும். அன்னத்தை விளைவித்துக் கொடுக்க உரிய பக்குவமான காலத்தையும், தளைக்கு உட்பட்டுச் சிறுமை அடைந்துள்ள சீவனையும், தளைக்கு உட்பட்டுள்ள சீவராசிகளுக்கெல்லாம் தனித்தலைவனாக உள்ள சிவபெருமானையும் பரம்பொருளாகவே கருதிப் பரிவோடு உபாசனை செய்ய வேண்டும் என வேதம் கூறும். இவ்வாறே ஆகமமும் பிரம்மன், திருமால் முதலான கடவுளர்களை உள்ளுருக்கத்தோடு பணிந்திடுவதற்கும், சிவபெருமானின் திருவடியை முறைப்படி தியானிப்பதற்கும் கூறும் உரிய வழிமுறைகளும் பலவாகும்.

4. வேதம் கூறியவாறு உணவு, காலம், மயங்கிய அறிவுடைய ஆன்மா, இணையற்றுள்ள பரம்பொருள் என்பன நிரலே ஒன்றனுக்கு ஒன்று பெரிதுபட்டிருப்பதாகக் கருதப்படுவதால், சிவநூலாகிய ஆகமம் கூறும் முடிபின்படி, கீழான நிலையில் உள்ளது எனக் கூறப்படும் பாசவழிபாடு, பசுவழிபாடு ஆகியவை மேன்மை பொருந்தாத வழிபாட்டு நிலையாம் என்றும், பதியாகிய சிவபெருமானை வழிபடும் செயலே மேன்மை உடையதாம் என்றும் தெளிவாக உணர்பவர்களே, சிவவிளக்கம் பொருந்தியவர்களாவர்.

5. பசுவழிபாடு, பாசவழிபாடு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோரிடம் 'பதி வழிபாடே உயர்வுடையது' எனக் கருதவைக்கும் ஒரு தூய உணர்வு ஒருசமயம் தோன்றினாலும்,

அன்னோர் பசு, பாச வழிபாட்டிலேயே ஊன்றிநிற்பர். அழகினை இழந்திருக்கும் மூக்கறுபட்டவன், பிறரையும் அவ்வாறு மூக்கறுந்தோராக ஆக்குவதற்குச் செய்யும் செயலைப் போன்றே, அவர்களும், தம்மைவந்து அடையும் நண்பர்களையும், உள்ளத்தில் அன்போ நட்போ இல்லாமல், பொல்லாங்கில் விஞ்சியுள்ள தம்மைப் போன்றே கெட்டு அழியும் வகையில் பசு, பாச வழிபாட்டை மேற்கொள்ள நயமாகக் கூறி நிற்பர். இத்தகையாரோடு கொள்ளும் நட்பு துன்பம் தருவதாகவே இருக்கும் என அறிந்து, அவர்களிடமிருந்து விலகி, நல்லோர் உய்திபெறுவர்.

**6.** அருள்ஞானப் பேறு வாய்க்கப் பெறாமல் தம்மனம் போனவாறே பேசுவோர், இயல்பாகவே மலங்களிலிருந்து நீங்கியுள்ள, தூய ஈசன் எனப்படும் எம்பெருமானின் பரிபூரண வியாபகத்துவ நிலையைக் கூற இயலாது. மிடுக்குடன் உயர்ந்துள்ள, ஆற்றல்மிக்க கோயில் யானையைக் கண்ட குருடர்களைப் பற்றிய கதையைப் போன்று, கீழ்முகப்பட்டுப் பிறவியிலே உழலும் ஆன்மாவையும் சடமாகிய மாயையையும் அன்னோர் பரம்பொருளாகவே கூறும்படி நேரும் என இவ்வாறு உண்மைப் பொருளை ஓர்ந்து உணர வல்லோரே, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத பரம்பொருளை நாடவல்லவராவர்.

**7.** பதிஞானப்பேறு இல்லாமல், இழிவாகிய உலகியல் ஞானம் மட்டும் உள்ளோர் பதிநூல்களாகிய வேத ஆகமங்களுக்கு, வேறு இழிவான நூல்கள் கூறும் தகாதநெறியைக் கடைப்பிடித்து, விதிகளை மீறி, சாரமற்ற, உண்மையற்ற பொருள்களைக் கொள்ளுதலும், கொடிய வினைப்பயனை அழித்தருளும் மகேசுவரனின் சின்னமாகிய விபூதியையும் ருத்திராக்கத்தையும் அணிந்துகொண்டு, ஏனைய ஆசிரமங்களுக்குரிய செயல்முறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டு மேலோங்கியுள்ளதாகிய அதீதமான துறவு நிலையின் பெருமையைப்பற்றிப் பேசுதலும் தினையளவுக்கேனும் பொருந்தாதன; அதுமட்டுமன்றி, மிகவும் கேடு பயப்பனவாம். வேத ஆகம நாயகனாகிய கந்தப் பெருமானைத் தியானித்திருப்போர் இவ்வாறு நன்குணர்வர்.

**8.** தெளிவு பெற்றுள்ள ஞானியே இவர் எனக் காண்போர் கருதும்படி வார்த்தை ஜாலங்களால் உரையாடியும், போலித்தனமான தவச் செயல்கள் மேற்கொண்டும், சிவமயமான வாழ்வை அருளும் மெய்ந்நெறியின் தன்மை இன்னதென ஒருசிறிதும் நினைத்துப் பார்க்காமல் உலகத்தொடர்பான விடயங்களிலேயே ஆசைகொண்டு அலையும் போலி ஞானியரின் கதியைப்பற்றி நல்லோர் ஆய்ந்துணர முற்படின் – "பெருமைக்குரிய முத்திப் பேற்று நிலையில் ஆன்மாவானது பொய்யாகி விடுகிறது'' என, ஆன்மபக்குவம் சிறிதேனும் அடையாத போலிக்குரு கூறிய கருத்தைக் கேட்டு, அதனையே உண்மை எனக் கொண்டு ‘ஆன்மா பொய்யாகிவிடும் முத்தியைப் பெறுவதால் என்ன நலன் விளையப் போகிறது? ஒன்றும் இல்லை, எனவே உலகியல் வாழ்க்கையிலேயே திளைத்திருக்கலாம்,’ என அவர்கள் கொண்டுவிட்ட முடிபாக இருக்க வேண்டும்.

**9.** ‘உணர்வு மயமாக விளங்கும் அரிய பிரம்மப்பொருள் சூனியமாக உள்ளது’ என உயர்ந்த வேதம் கூறின், அதன் உட்பொருள்யாதெனின் – பல்வேறு உலகத் தொகுதிகளாக

விரிவுபடும் மாயை தொடர்பான விகாரம் ஏதும் இல்லாதவனாகவும், மிகவும் உயர்ந்த புகழ் உடையோனாகவும் ஒப்பற்றுள்ள சிவபெருமான், ஆன்மாவாகிய தனக்குள் ஒளியாக வெளிப்பட்டு நுண்மையாக விளங்கும் அந்தரான்மாவைப் பற்றியே அவ்வாறு கூறப்பட்டுள்ளது. 'சீவான்மா பொய்' என வேதம் கூறின், சத்துவம் முதலான குணபேதங்களால் உருவாகும் ஏகதேச அறிவே அவ்வாறு பொய்யெனக் கூறப்படுகிறது; ஆன்மா அன்று என நல்லோர் உண்மை நிலையிலிருந்து சிறிதும் குறையாத நற்பொருளைக்கொள்வர்.

**10.** இரண்டு எனக் கூறுதலும் இன்றி, ஒன்று எனக் கூறுதலும் இன்றி, அருளால் சிவத்துவம் வாய்க்கப்பெற்று உயர்வடைந்து சிவத்துடன் ஐக்கியப்படுவதற்குரிய நற்கதியைப்பற்றிக் கூறும் செம்மையான வேதங்களை உணர்ந்துள்ள பெரியோர்களால் தியானிக்கப்படும் பதிப்பொருளாகிய சிவபெருமான், முன்பொரு காலத்தில் நற்குணம் வாய்க்கப் பெற்றுள்ள உயிர் முத்திப்பேறு அடையும் பொருட்டாகத் தனது, தகுதிசான்ற நெற்றிக்கண்வழியே தன்னையே குகனாக வெளிப்படுத்திக் கொண்டு அருளினான். இவ்வாறு வேறு எந்தக் கடவுளரும் அருட்செயலைச் செய்யவில்லை. அருணகிரிப் பெருமானின் இதயக்கடவுளாக விளங்கிய குகப்பெருமானை வழிபடும் அன்பர்கள், இவ்வாறு வழிபடும் நெறியே, மிகவும் உயர்ந்த ஞானப் பேறு வாய்த்துள்ளோர் போற்றும் வேத ஆகம நன்னெறி என நன்கு உணர்வர்.

# 46. சீருயர்ந்த வான்மா

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சீ**ருயர்ந்த வான்மாவுந் தேவனென்ற வான்மாவுந்
திறத்தமுத்தி தனிலுளவென் றுரைத்தன்மறுத் திடச்சிலவர்
நேரிரண்டா யோதுநித்த மேன்பொருள்க ளென்று மொன்றாய்
நிகழுமைக்க மாகாவங் கொருபொருட்கே நித்தமொழி
சேருமென்று வாதமிடற் கோதிரண்டான் மாக்களுமோர்
தெளிவுறவே சேர்வதையும் தெளிவுறச்சே ராததையும்
நேரினின்று பார்த்தவருஞ் சேர்ந்தவர்சொற் கேட்டவரும்
நெடுநிலத்தில் லாவொழிவே யிடமெனக்காண் பாய்மகனே. (1)

**நீ**ணிலத்தின் ஞானிகளென் றிருந்தவருள் ளேசிலவர்
நிசமுரைத்த வாசிரிய ருரைபிடித்தொன் றேயெனவுங்
கோணைவறுத் துள்ளசில பேர்களிரண் டேயெனவுங்
குயிலவிட னாயதனான் முனநுவன்ற வாறுபெருந்

2. *நிசமுரைத்த வாசிரியர் = சுவானுபவத்தில் ஒன்றெனக்கண்டபடியே கூறிய குருக்கள் :* ***திட்பங் கருதுக.*** ***(திவ்வியசுப்பிரமணிய மென்னும் 3–ஆம் பத்தின் 8–ன் உரை).***

*தூணம் = பகை; த்வேஷணம் என்பதன் விகாரம்.*

தூணமுற்ற வேகான்ம வாதமிடற் குஞ்சிலவர்
துணிந்தனரா லவர்பரவி வரும்பறைகண் முடிவவர்க்கே
காணுதற்கொண் ணாதநெடுங் காதைகளென் றோர்தியருட்
களைகணையே நினையுமொரு கருணைநகை கெழுமகனே.(2)

**நி**த்தியமா மேகாத்து மாவிலிருந் தேயனித்த
நிலமுயிர்க ளுதித்தவெனப் புகலுவதெவ் விதத்துமொவாப்
பித்துரையென் றாகுமது காரணகா ரியமுரணும்
பெறுமஙன மனத்திலொரு சடவுருவ முதிப்பதுபோற்
சித்திலிருந் தேயுலகந் தோன்றியதென் றாலம்மனந்
தெளிந்தசித்தல் லாதசட மெனுந்திறத்தை யோர்ந்துளர்தாஞ்
சித்தெனுமு தாரணத்திற் கம்மனத்தைக் கொள்ளுவரோ
தினமுமெனை யருட்குகனை நினையுநெறி யுடைச்சுதனே. (3)

**அ**ந்தமன சாகியவோர் சூக்கசடத் தேயான்மா
அணவியதி லேசடமா முருவரவுண் டாக்கலொவ்வ
விந்துமுத லாயவிரி மாயைகளிற் றெய்வவருள்
விரவியசே தனவுலகு பணுமெனவுஞ் சொனமனசான்
வந்தபிர மாணமொரு வானேனைப் பூதங்களாய்
வருதலையுஞ் சிலம்பியினூல் விளைதலையும் பொருந்துமலால்
எந்தளவு மேலாகா தெனவுமிது காரணகா
ரியவிசைவா யுளதெனவு மறிதிநல மதிமகனே. (4)

**நீ**லகண்ட பாடியத்தி லேசிலம்பி போன்முதலும்
நிமித்தமுமெய்ப் பரமனென வழுத்தொழுங்கு சிவதத்துவம்
மேலிருக்கு நிட்களமா மெய்ப்பொருளைக் கூறாது
விளங்குசிவ தத்துவத்தி லிலங்குநிட்க ளப்பொருளைச்
சீலமிஞ்சு தன்னடைவுக் கேற்பவது சொன்னதென்றாந்
தெரித்தவிது சித்தாந்த முடிவிற்சிறி தொழிவெனினுஞ்
சாலவுநன் றாயுரைத்த வேனையதீர் வெல்லாமுஞ்
சகசசித்தாந் தத்துணிபா மவைதளவொண் ணாமகனே. (5)

---

4. *வானம், ஏனைப்பூதங்க ளாதல்பற்றியும், சிலம்பிப்பூச்சியில் நூல் விளைதல் பற்றியும் இங்கெடுத்துக்கொண்ட அளவை யெவ்வாறா மெனக் கோடல், ஆனந்தவெயிலென்னும் **41–** ஆம் பத்தின் **6,3,4–**ஆந் திருப்பாட்டுக்களி லினிதறியலாம். அம்மூன்றின் குறிப்புரையுங் கருதுக.*

5. *முதலும் நிமித்தமும் = முதற்காரணமும், நிமித்தகாரணமும்.*
*தன்னடைவு = தனது வழி, அஃதாவது நீலகண்டபாடிய மார்க்கம். இதனைச் ''சிவாத் வைதசைவம்'' என்ப.*
*''தள்ளவொண்ணா'' என்றற்குரிய நியாயத்தை மெய்யான் என்னும் **35–**ஆம் பத்தின் **6–**ஆந் திருப்பாட்டானு மறிக.*

**மா**தவப்ப தஞ்சலியார் யோகநுவ னூலுமருள்
வழிவிளக்கு மாகமம்போ லொருநிமித்த மேபரமற்
கோதுமித்தை யோரார்செய் வாதும்வெற்ற தாகுமுயிர்
உணர்விறந்த பிரகிருதி தனையுயர்ந்த பொருளெனக்கொண்
டாதியத்த னில்லையெனுஞ் சாங்கியத்தை யாத்துமனே
அவனெனக்கொள் வார்களொப்பி லவருரைத்த நூல்களையும்
பூதருக்கு நாயகனைப் போற்றுநரு மொப்பிடுவார்
புகன்றதுபோ லவருமொப்பார் பிறருமொப்பா ரெனவுணரே. (6)

**மு**ன்னூல்கள் கூறுமைக்க மென்னுமொழி யாயதையோர்
முதலினுக்கே யுபயோகித் திடுவதற்கொண் ணாதஙனம்
முந்நீரும் புற்புதமு மென்னவற்ப மாயவுயிர்
முதலிடத்துச் சேருவதே விரவுமைக்க மாமெனிலச்
சின்னவுயிர் பொய்த்திடலா னன்னர்முத்திக் காமான்மாச்
சிறுவரையு மில்லையென முடியுமந்த வணமாமேற்
பன்னரிய முத்தியின்ப மென்னுமது நித்தமென்று
பகர்சுருதி பொய்யெனவா மிதுசெலுமோ நன்மகனே. (7)

**ஆ**தலின்மா முத்தியின்ப வத்துவுமின் பத்தைநுகர்
அறிவுயிரு நித்தியமா யஙனிருக்க வேவேண்டும்
ஏதமிலா விந்நடுவா லோர்பொருட்கே நித்தமொழி
இயம்பல்கட னென்பருரை பொருந்தவழி யின்றெனவும்
போதமறா வான்மாவில் வேதபர மான்மாவோர்
புரையறவே யுண்டெனமா மறைபரவு கின்றமையின்
பேதமிலார் முத்தியிலி ரண்டுமரு வாவெனறான்
பெரிதுமறி யாமையென்று மறைதலெவ்வா றோயுமரோ. (8)

**ஒ**ற்றுமையே சால்சூரன் பன்மனெனு மான்மாக்கள்
ஒருதனுவிற் சூரபன்ம னெனவியைந்து நின்றதுவும்
பற்றுயிரில் யாதொருசூர் புக்கிருந்த தென்பதுவும்
பரமபுங்க வன்பணிசீ டனுணுழைந்து மேன்றீக்கை
தெற்றெனச்செய் தானெனலு நற்றமிழச்சம் பந்தமுனி
திருமுறையி லவனெனுளம் புகுந்தவத னாலெனமுற்
சொற்றதுவு முண்மையெனி னித்தியவி ரண்டுசித்துத்
துகளறுசம் பந்தமுறா தெனுமொழியென் னாஞ்சுதனே. (9)

---

*6. சாங்கியம் = கபிலர்செய்த நிரீச்சுவர* ***சாங்கியசாத்திரம்.***

*7. முத்தியின்ப நித்தமென்னுஞ் சுருதிவாக்கியங்களை 'ஆரணத்துபநிடதம்' என்றற்றொடக் கத்துத் திருப்பாட்டுரைக்கட் காண்க. (3–ஆம் பத்தின் 4–ன் உரை)*

*9. தெற்றன = விரைய ; "தெற்றெனச் செலவு கடைக்கூட்டுதிராயின்" என்றார் முடத் தாமக்கண்ணியாரும் (பொருநராற்றுப்படையில்).*

**சீ**வபர சங்கமத்திற் கேற்றவுவ மானமொரு
        செகத்தினுமின் றாயினுமுன் றிருத்திகுறித் தோதலெற்றேல்
சீவனது போதமுங்கண் ணானதுமொன் றாமருவுந்
        திறமேபோற் சீவபரம் விரவுமது வாய்மனத்தால்
ஏவருமொன் றென்றுமிரண் டென்றுங்குறிக் கொண்ணாத
        இருமவுன மாமிதைநீ யடையவெனோ ராவியெனுந்
தேவனையெட் டாதகிரிப் பேரனர சாமமுதைத்
        தினமுமுன்னி நடுநிலையி லமரெனொரு திருமகனே. (10)

# 46. சீருயர்ந்த வான்மா

**1.** சற்சீடனே! பூரணநிலையைப் பெறும் பொருட்டுச் சீரான கருவிகரணங்கள் வாய்க்கப் பெற்றுள்ள சீவான்மா, ஒளிமயமான பரமான்மா ஆகிய இரண்டும் மேம்பட்ட தன்மையை உடைய முத்திநிலையில் உள்ளனவே எனக் கூறப்படும் உண்மையை மறுப்பதற்காக வேண்டிச் சிலர் "இரண்டாகவும் நித்தியமாகவும் திகழ்பவை எனக் கூறப்படும் சீவான்மாவும் பரமான்மாவும், எப்பொழுதும் இரண்டறக் கலந்திருக்கும் மேம்பட்ட ஐக்கிய நிலையைப் பொருந்தா. இவற்றுக்குள் ஒன்றுக்குத்தான் நித்தியத்தன்மை என்பது பொருந்தும்." என வாதிடுவர். இரண்டு ஆன்மாக்களும் தெளிவான நிலையில் ஐக்கியப் பட்டிருத்தலையும், தெளிவு பொருந்தாமல் சேராது இருப்பதையும் நேரே பார்த்தவர்களும், ஐக்கியப்பட்டோர் தம் அனுபவத்தை நேரே கூறக் கேட்டவர்களும் இப்பெரிய உலகில் இல்லாமல் நீங்கி இருக்கும் நிலையே விஞ்சி இருப்பதால், அன்னோர் இவ்வாறு மறுத்துக்கூற வழி ஏற்பட்டு விடுகிறது.

**2.** திருவருளாகிய பற்றுக் கோட்டையே சிந்தித்து இருக்கும், கருணையும் தெளிவும் கொண்டுள்ள சற்சீடனே! இப்பேருலகில் ஞானிகளாக இருந்த பெருமக்களுள் சிலர் சுவானுபவத்தில் ஒன்றே எனக் கண்டுணர்ந்தபடிக் கூறிய ஆசானின் உபதேச உரையைக் கடைப்பிடித்து ஒன்றே என்றும், பேதங்களாகிய கசடுகளையெல்லாம் நீத்துள்ள சிலர் 'இரண்டே' என்றும் கூற நேரிட்டதனால், முன்னே கூறப்பட்டவாறு பெரிதும் பகையும் முரணும் பொருந்திய ஏகான்ம வாதம் பேசுவதற்குச் சிலர் மனம் துணிந்தனர். அன்னோர் கூறிவரும் கூற்றுக்களின் முடிபுகள், அவர்களாலேயே நல்லவை என ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் பெரிதுபட்டுள்ள புனைந்துரைகளே ஆகும் என நன்கு சிந்தித்து உணர்க.

**3.** நாள்தோறும் எனக்கு அருள்புரிந்து காக்கும் குகப்பெருமானையே தியானிக்கும் நன்னெறியில் நடக்கும் சற்சீடனே! நித்தியமாகவும் ஒன்றாகவும் உள்ள ஆன்மாவிலிருந்து, அநித்தியமாகவும் பலவாகவும் உள்ள உலகங்களும் உயிர்களும் தோன்றின எனக் கூறுவது எவ்விதத்திலும் பொருந்தாத பொருளற்ற உரையாகும். அவ்வாறு கூறுவது காரண காரியத் தொடர்பான இலக்கண வரம்போடு மாறுபடும். மனத்திலிருந்து சடமயமான வடிவம் தோன்றுவது போல் சித்துப்பொருளிலிருந்து அசித்தாய உலகம் தோன்றியது எனக் கூறினால்,

கூறப்படும் மனம் தெளிவான சித்துப்பொருளன்று; அது சடமே எனும் உண்மையை நன்கு உணர்ந்தவர்கள் சித்து எனும் பொருள்வகைக்கு உதாரணமாக மனத்தைக் கொள்வார்களோ ?

**4.** நல்லறிவு சான்ற சற்சீடனே ! அந்த மனம் எனப்படும் நுண்மையான சடப்பொருளில் ஆன்மா சேர்ந்து பொருந்தும் போது சடமயமான வடிவம் தோற்றம் கொண்டு வெளிப்படுதல் போன்று, விந்து முதலாக உள்ள விரிவுபட்ட மாயைப் பரப்புகளில் தெய்வ அருளாகிய சைதன்யம் கலந்து அசேதனமான உலகுகளை உருவாக்கும் எனவும், கூறப்பட்ட மனம் என்பதால் நிறுவப்படும் பிரமாணம், ஆகாசம் மற்ற வாயு முதலான பூதங்களாக மாறுதலையும், சிலந்திப் பூச்சியிலிருந்து நூல்தோன்றுதலையும் ஒக்குமே அல்லாமல் ஒரு சிறிதளவேனும் சித்திலிருந்து சடம் தோன்றும் என்பதை நிறுவ உதவாது. சித்திலிருந்து சித்தும் சடத்திலிருந்து சடமும் தோன்றும் எனக் கூறுவது, காரண – காரிய இணக்கத் தொடர்பான விதியாக உள்ளது. இவற்றை நீ நன்கு உணர்க.

**5.** சற்சீடனே ! பிரம்மசூத்திர நூலுக்கு அமைந்துள்ள நீலகண்ட பாடியத்தில் சிலந்திப்பூச்சியைப் போன்றே பரம்பொருளும் முதற்காரணமாகவும், நிமித்த காரணமாகவும் விளங்குகிறது என நிறுவப்படும் விளக்கமுறையில், சிவதத்துவம் என்பது அதீதப்பட்டு இருக்கும் நிட்களமான சிவபரம் பொருளைக் குறிக்காமல், விந்துமாயையில் வெளிப்படும் சிவதத்துவ நிலையில் விளங்கும் நிட்கள சிவத்தையே குறிக்கும். தத்துவநெறிமுறையில் தன் முடிபுக்கு ஏற்றவாறு நீலகண்டசிவனார் கூறியுள்ள விளக்க முறை அதுவாகும். அவரது கூற்று, சைவசித்தாந்த முடிபுக்கு ஓரளவு பொருந்தாமல் திகழ்கிறது எனினும்; ஞானநுட்பம் பொருந்திய விளக்கம் இது எனவும், இவ்வாறு அந்நூலில், மிக நன்றாக உரைக்கப்படும் ஏனைய உண்மை முடிபுகளும், இயல்பாக வெளிப்பட்டுள்ள சைவசித்தாந்தத் துணிபுகளே எனவும் உணர்க. அவை ஒதுக்கப்பட வேண்டிய கருத்துக்கள் அல்ல.

**6.** சற்சீடனே ! பெரிய தவ ஆற்றல் மிகுந்துள்ள பதஞ்சலிமுனிவரின் யோகசூத்திர நூல், அருள்நெறியை விளக்கும் சைவ ஆகமம் போன்று, நிமித்த காரணம் ஒன்றையே பரம்பொருளுக்குக் கூறும். இதனை உணராதார் கூறும் வாதமும் பொருளற்றதாகும். உணர்வற்ற பிரகிருதி, புருடன் எனும் இரண்டையுமே உயர்ந்த பொருள்கள் எனக்கொண்டு மூலகாரணமான தெய்வம் என ஒன்றும் இல்லை எனக் கூறும் சாங்கிய நெறியை சீவான்மாவே பரமான்மா ஆகும் எனக் கூறுவோர் ஏற்றுக் கொண்டால், அன்னோர் உரைத்த நூல்களையும், தோற்றம் கொள்ளும் அனைத்துக்கும் தலைவனாகிய சிவனைத் துதிப்போரும் நல்லன என ஏற்றுக் கொள்வர். ஆனால் கூறியுள்ளது போன்று, ஏகான்மவாதிகளும் அவற்றை ஏற்றுக்கொள்ளார்; பிறரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். இதனை நன்கு உணர்க.

**7.** நன்மைக்குரிய சற்சீடனே ! முதல் நூல்களாகிய வேதமும் ஆகமமும் கூறும் ஐக்கியம் என்பதை முதற்பொருள் ஒன்றுக்கு மட்டுமே உபயோகித்தல் எவ்விதத்திலும் பொருந்தாது.

கடல்நீரும், நீர்ப்பரப்பில் தோன்றும் குமிழியும் போன்று சிறிய உயிர், பெரிய முதலாகிய ஆன்மாவினிடத்தில் சேர்வதே ஐக்கியம் எனக் கூறினால் அப்பொழுது அந்தச் சிறிய ஆன்மா அடியோடு இல்லை என ஆகிப் பொய்த்துவிடுவதால், மேம்பட்ட முத்தியின்பத்தை அனுபவிப்பதற்கு உரிமை படைத்துள்ள சீவான்மா, ஓரளவுக்கேனும் இல்லை எனக் கூறவேண்டி வரும். அவ்வாறு ஆகுமேல், சொற்களால் விளக்கிக் கூற இயலாத முத்தி இன்பம் நித்தியமாக இருக்கும் ஒன்று எனக் கூறும் சுருதி வாக்கியங்களும் பொய்யாகி விடும். எனவே, முத்திநிலையில் ஆன்மா ஒன்றே எனக் கூறுதல் பொருந்துமோ ?

**8.** ஆதலால், பெருமைமிக்க முத்தி இன்பத்தை வழங்கும் பொருளும், இன்பத்தை அனுபவிக்கும் ஞானமயமாகிய ஆன்மாவும், நித்தியமான முத்திநிலையில் இருப்பனவாக வேண்டும். குற்றமற்ற இந்த நியாயமான முடிபால், இரண்டு பொருள்களுள் ஒன்றனுக்கே நித்தியத்தன்மை கூறுதல் அவசியமே என்போரின் கூற்று பொருத்தமுடையதாகத் திகழ வழி இல்லை எனவும் சேதனத்தன்மையிலிருந்து நீங்காத சீவான்மாவுக்குள் ஞானமயமான பரமான்மா அந்தர்யாமியாக நிச்சயம் உண்டு என வேதம் உறுதிப்படுத்துவதால், பேதமற்ற முத்திநிலையில் இரண்டும் ஐக்கியப்பட்டுப் பொருந்தா எனக் கூறின், அவ்வாறு கூறுதல் பெருத்த அறியாமையே என்றும் உறுதியாகக் கூறுதல் எவ்வாறு பொருந்தாமற் போகும் ?

**9.** சற்சீடனே ! தமக்குள் ஒற்றுமை கொண்டிருந்த சூரன், பதுமன் எனும் இரண்டு ஆன்மாக்களும் ஒரே உடம்பிலேயே இடம் கொண்டு சூரபதுமன் எனப் பெயர்பெற்று விளங்கி இருந்தமை; உடம்பைப் பற்றி வாழும் ஓர் உயிர்க்குள் யாதேனும் ஓர் அலகை நுழைந்து ஆட்டுவிக்கிறது எனக் கூறப்படுவது; உயர்ச்சி பொருந்திய ஆசாரியன் தன்னை வழிபட்டு அடைந்த சீடனுக்குள் நுழைந்து மேலான சிவதீக்கையை விரைவில் நிகழ்த்தினான் எனக் கூறப்படுவது; நற்றமிழ்வல்ல திருஞானசம்பந்தப் பெருமான் தமது திருப்பதிகத்தே "இறைவன் என்னுள்ளத்துள் புகுந்து இருந்த அதனால்" எனப் புலப்படுத்திக் கூறியருளினமை – ஆகிய இவை அனைத்தும் உண்மை எனில், சித்துப்பொருள்கள் இரண்டும் குற்றமற்றதான அத்துவித சம்பந்தம் பெறா எனக் கூறப்படும் கூற்று, எப்படிப் பொருந்தும் ?

**10.** நிகரற்று விளங்கும் சற்சீடனே ! சீவான்ம – பரமான்ம ஐக்கிய நிலைக்கு முழுவதுமாகப் பொருந்தக் கூடிய உவமானம் ஓர் உலகத்தும் இல்லை. ஆயினும், உனது திருப்திக்காகக் கூற உள்ளது எது எனில் – சீவான்மாவின் அறிவும் கண்ணின் ஒளியும் ஒன்றாகப் பொருந்தும் திறத்தைப் போன்று சீவான்மாவும் பரமான்மாவும் ஐக்கியப்பட்டு விளங்கும். இது சொல்லாலும் மனத்தாலும் யாவராலும் ஒன்று எனவோ இரண்டு எனவோ குறித்துக் கூற இயலாத வகையில் திகழும் பெரிய மௌனப் பேற்று நிலையாகும். இந்தப் பெரிய பேற்றை நீ அடைய, என் உயிரே எனத்திகழும் குகதேவனை, அருணகிரிப் பெருமானின் அரசாகத் திகழ்ந்த தெய்வ அமுதத்தை நாள்தோறும் தியானித்து, உன் இதயமாகிய தகராலயத்துள் ஒடுங்கி இருப்பாயாக.

# 47. உலகமெலாம்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**உ**லகமெலா மீசுரனா லேசூழப் பட்டுளவென் றுறுதி காட்டி
அலறுகின்ற வீசாவா சியம்போல ஞானசங்கி தையும ரற்றும்
பலமுடையிச் சுருதிகளா லெல்லாமும் பகவனுடை யுடைமை யென்னாப்
புலவருநன் குரைத்திடுவ ரிதுதானே யிறைவனது பூர்த்தி மன்னோ. (1)

**ச**டமூலப் பகுதியினிற் றோன்றியவா காயமதே சதுர்ப்பூ தத்தும்
இடையின்றி நிறைந்துளதுண் டெனிற்சிதா காசமதா யிலங்கோர் தெய்வம்
தடையற்ற வியாபகமா யாதினுநின் றிடுமென்று சாற்றற் கையம்
உடைமையணுத் துணையேனு முண்டோமுக் காலுமிலை யுறுதி யீதே. (2)

**வா**னமதே னைப்பூதங் களிற்கலவி யிருந்தானு மாசே றாமல்
தானிருத்தன் மானவிறை யிருபொருட்க ணிருந்தானுந் தன்னீ ராலே
ஞானவெளி யாய்த்தானே தானாக விருந்திடுமிஞ் ஞாயத் தாலோர்
ஈனமிலா முதல்வற்கெவ் வாற்றானும் வியாபகத்தி லிழுக்கின் றன்றே. (3)

**போ**தமிலா வசித்தினுக்குத் தெய்வம்வே றென்றக்காற் பூர்த்தி யில்லை
ஆதலினா லசித்துமது வெனல்வேண்டு மெனினசித்த திருக்கும் பாங்கர்
ஏதமிலாத் தெய்வமிலை யெனல்வேண்டு மிருக்குமெனி னிழுக்க மாமிக்
காதைசொல வேண்டியதின் றதையேசம் பூரணமாக் கருத லாமால். (4)

**பு**ணரியிடை யுப்புமலர்க் கண்ணாற்ற மணியிலொளி போலெஞ் ஞான்றும்
இணையில்சிவன் பிரிவற்றோ னெனஞான சங்கிதையி னெழுபத் தெட்டாக்
கணனமிட வுளபகுதி கூறினது மிறைவனது கலப்பு நீர்மை
உணருமுறை குறித்தன்றோ விதைவிடுத்துத் திரிபுரைப்பா ருரையொப் பன்றே. (5)

**பி**ன்னுமந்தப் பகுதியது காரியநா னாவிதமாய்ப் பிறங்கிற் றேனும்
பின்னர்விதை யொன்றுமே யெஞ்சிநிற்ற லிற்காரி யம்பீ சத்தே
உன்னியெழுந் திடுமாயை விதையென்றுங் காரியமே யுலக மென்றும்
முன்னியறிந் திடல்வேண்டு மென்பதனாற் சகற்பீச முதல்வ னாகான். (6)

---

*1. ஈசாவாசியம் = **ஈசாவாஸ்யோபநிஷத்** ; யஜுர்வேதத்தது.*
*ஞானசங்கிதை = **சைவபுராணத்து** ஞானசங்கிதை ; 76–ஆம் அத்தியாயம்.*

*5. புணரி = கடல் ; ணகரவெதுகை.*

**நி**ர்க்குணனாம் பரமபதி சிருட்டிக்கு முனும்பின்னு நிதனங் கேதம்
புற்கலமின் மையினாலப் பதிக்கொரு சதாசிவப்பேர் போந்த தென்னா
முற்குயின்ற சங்கிதைதா னெழுபத்தே ழாம்பங்கின் முழக்கு மாற்றாற்
சிற்கடவு ளீறில்லா நித்தசுசி வத்துவென றேற்ற மாமால். (7)

**அ**ந்தவெழு பத்தேழாம் பங்குதுழா யரிபிரமர் போன்ற ரன்றான்
நந்தலுறா திறுதியிலச் சதாசிவன்கட் சேர்வனென நவிலு மாற்றால்
அந்தவர மூர்த்தியையே பரமசிவ னென்றுபிதற் றறிவில் லாதார்
நிந்தனையவ் விறைக்கேறா திதுபோல வேயோத்து நிகழ்த்து மன்றே. (8)

**வி**யாபகமா யுளவந்தப் பதிப்பொருளின் பூசனையான் மிழற்றொண் ணாத
தயாநிதியா மதன்பிராத்தி வாய்க்குமென விதன்முன்னர்ச் சாற்றி யுள்ள
நியாயநுவல் சங்கிதையேழ் பத்தாறாம் பங்கினனி நிகழ்த்து மாறு
செயாரெவரும் பயன்பெறுவர் கொல்லோநல் லன்புடைமை சிறந்துள்ளீரே. (9)

**த**ன்னுடைய மகிமைக்குக் காரணமா யுளகுகனைத் தனக்கா தார
மன்னவனா ரருளாலே கன்மமிலி காண்கின்றான் மமரில் லாமல்
என்னுமறைக் கடமிரண்டாம் வல்லியிதை யறியாதா ரெவ்வா றுய்வார்
சொன்னபடி யருணைப்பே ரானிறையைத் தொழுதுய்வீர் தொடர்புள் ளீரே. (10)

# 47. உலகமெலாம்

1. தத்துவங்களில் தோன்றியுள்ள புவனங்கள் அனைத்தும் ஈசுவரனால் சூழப்பட்டுள்ளன எனத் தெளிவும் உறுதியும் பொருந்த முழங்கும் ஈசாவாசிய உபநிடதத்தைப் போன்றே சைவபுராண ஞானசம்மிதையும் விளம்பும். பிரமாண ஆற்றல் வாய்ந்த இந்த சுருதிகளின் வாக்கியங்களால் ‘அனைத்தும் இறைவனுடைய உடைமை’ என ஞானியரும் அடியார்களும் நன்கு தெளிவுறுத்துவர். அனைத்தையும் தன் உடைமையாகக் கொண்டு வியாபித்துச் சூழ்ந்துள்ள நிலையே இறைவனது முழுநிறைவுநிலை என்பதாகும்.

2. சடமயமான பிரகிருதியின் அகங்காரப் பகுதியிலிருந்து தோன்றிய ஆகாயமே மற்றுமுள்ள காற்று முதலான நான்கு பூதங்களிலும் நீக்கமற வியாபித்து நிறைந்துள்ளது உண்மையே எனில் சிதாகாசமாக விளங்கும் ஒப்பற்ற தெய்வமும் தடைபடாத வியாபகப்

---

*7. நிதனம் = அழிவு ; வடகிளவி. கேதம் = துன்பம். புற்கலம் = உடல் ; ஈண்டு, உடல்வேதனை மேற்று.*

*10. மறைக்கட மிரண்டாம் வல்லி = யஜுர்வேத **கடோபநிஷத்தின் 2–**ஆம் வல்லி. இவ்வல்லியில் “தமக்ரதும் பச்யதி” என்று கூறிச்செல்லுமிடத்தே இங்குணர்த்தப்பட்ட விடயமுளது. இதுதானே தைத்திரீயாருணசாகை நாராயணத்திலும், சுவேதாச்வதரம் சரபம் நாரதபரிவ்ராஜகமென்னும் உபநிஷதங்களிலும் வருவதாயிற்றென்பதும், விவரமும் பரி பூரணானந்த போதத்து முற்படலத்து **26–**ன் உரையினறிக.*

பொருளாக விளங்கி அனைத்திலும் ஊடுருவி நிற்கிறது எனக் கூறுவதற்கு அணுவளவேனும் ஐயம் நிகழ வழி உண்டோ ? இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் மூன்று காலங்களிலும் வழி இல்லை. இதுவே உறுதி செய்யப்படும் உண்மையாகும்.

3. ஆகாசம் மற்ற பூதங்களில் கலந்து இருந்தாலும், மாசு கலக்கப் பெறாமல் தூய்மையாக விளங்குதல் போன்று இறைவனும் சேதனம் அசேதனம் ஆகிய இருவகைப் பொருள்களிலும் ஊடுருவி வியாபித்து இருந்தாலும் தனக்கேயுரிய ஆற்றலால் ஞான வெளியாகத் தானே தானாக விளங்கித் தூய்மையுடன் திகழ்வான். இந்த நியாயத்தால், மாசில்லாத இறைவனுக்கு எந்த வழியாலேனும் அவனது வியாபகத்தன்மையில் குற்றம் ஏதும் இல்லை.

4. அறிவற்ற அசித்துப் பொருளுக்கு எனத் தனியே தெய்வம் வேறு ஒன்று என்று கூறினால், தெய்வத்துக்கு அதன் வியாபகத் தன்மையில் முழுமை இல்லாமற் போய்விடும். அங்ஙனமாயின் தெய்வம் அசித்தாகவும் விளங்குகிறது என்றே கூறவேண்டும் என வாதிட்டால், அசித்து உள்ள இடத்தில், அசேதனம் எனும் குற்றம் இல்லாததாகிய தெய்வம் இல்லை எனக் கூற வேண்டிவரும். அல்லது தெய்வம் உள்ளது என்றாலும், அசேதனத்துவம் எனும் குற்றம் வரும். எனவே இவ்வாறு வீணே கட்டுரைக்க வேண்டியதில்லை. தெய்வமானது சித்து, அசித்து ஆகிய அனைத்திலும் பரிபூரணமாக வியாபித்துள்ளதாகத் தடையின்றிக் கருதலாம்.

5. "கடல்நீரில் உப்பு; மலரில் மணம்; மணியில் ஒளி – இவை போன்று எப்பொழுதும் இணையற்றுள்ள சிவபரம்பொருள் பிரிவற்றுள்ளவனாவன்'' என சைவபுராண ஞானசம்மிதையின் 78 ஆவது படலம் கூறியுள்ளது. இது இவ்வாறு கூறுவதும், இறைவனது பரிபூரண வியாபகத் தன்மையை நன்கு உணரும் முறையைக் குறித்து எழுந்துள்ள கூற்றே ஆகும். இதைவிடுத்து, மாறுபட உரைப்போர் கூற்று ஒருசிறிதும் பொருந்தாது.

6. மேலும் அந்தப் பிரகிருதியின் காரியமானது பல்வேறு விதங்களாக வெளிப்பட்டுக் காண உள்ளது எனினும், தோற்றக் காரணமாகிய விதை ஒன்றே இறுதியில் எஞ்சி நிற்கிறது ஆதலின் காரியம் என்பது விதை என்பதிலிருந்து முறையாகத் தோன்றி வெளிப்படுவதாகும். இந்த ஒழுங்கு முறையில் மாயை விதை என்றும் உலகங்களே காரியம் என்றும் நன்கு சிந்தித்து உணர வேண்டும். இவ்வாறு தத்துவ நெறிப்படியும் நியாயப்படியும் கூறப்படுவதால் உலகத்துக்கு விதையாக (முதற்காரணமாக) இறைவன் ஆகான்.

7. ''நிர்க்குணனாக விளங்கும் பரமபதியாகிய சிவன் உலகப்படைப்புக்கு முன்னரும் உலக ஒடுக்கத்துக்குப் பின்னரும், அழிவு, துன்பம், உடல்தொடர்பான விடய ஞானங்கள் முதலான அவத்தைகள் அனைத்தும் அற்றவனாகவே விளங்குவதால், அவனுக்கு 'சதாசிவம்' எனும் பெயர் பொருந்தியுள்ளது'' என முற்கூறப்பட்ட ஞானசம்மிதையின் 77ஆம் படலம் தெளிவாக விளம்புவதால், அழிவில்லாததான, நித்தியமான தூயபொருளே சின்மயமான சிவன் எனக் கூறுதல் தெளிவுரையேயாம்.

8. ஞானசம்மிதையின் 77ஆம் படலம் "திருமால், பிரமன் எனும் இவர்களைப் போன்றே அரனாகிய ருத்திரனும் ஒடுக்ககாலத்தில் அழிவடையாமல் சதாசிவ வடிவத்தில் சேர்ந்து ஒன்றி இருப்பான்" எனக் கூறுவதால், அரன் எனப்படும் ருத்திரனையே பரமசிவன் என்று கூறும் அறிவிலிகளின் நிந்தனைப் பேச்சு ஒருசிறிதும் அப்பரம சிவத்தைச் சாராது. இவ்வாறே வேதங்களும் கூறும்.

9. "உறுதியான அன்புடைமையில் சிறந்து விளங்குவோர்களே! சித்து, அசித்து ஆகிய அனைத்திலும் வியாபித்துப் பரிபூரணமாக உள்ள அந்தப் பரமபதியை முறையாக வழிபடுவதால், வருணிக்க முடியாத கருணைக் கருவூலமாகிய அப்பரம் பொருளின் முழுமையான அருட்பேறு வாய்க்கும்" என, முன்னர்க் கூறப்பட்ட ஞான சம்மிதையின்76ஆம் படலத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளவண்ணம், அப்பரம்பொருளை முறையாக வழிபடாதார் எவரும் உறுதிப்பயனை அடைவார்களோ ?

10. சிவபுண்ணியத் தொடர்புள்ள சீலர்களே! "தனது மகிமைக்குக் காரணமாகத் திகழும் குகப்பெருமானைத் தனக்கு மூல ஆதாரமாக விளங்கும், அப்பரம்பொருளின் அருளாலே இருவினைத் தொடர்பற்றுள்ள சீவனானவன் எவ்வித பந்தமும் மயக்கமும் அற்றவனாய்த் தனக்குள்ளே காண்கிறான் –இவ்வாறு வேதத்தைச் சார்ந்த கடோபநிஷத்தின் இரண்டாம் வல்லியானது கூறும். இவ்வுண்மையைஅறியாதோர் எவ்வாறு உய்திபெறுவார்கள் ? இங்கே விளக்கிக் காட்டியுள்ளபடி, அருணகிரிப் பெருமானின் பரமநாயகனாகிய குகப்பெருமானைத் தொழுது நற்கதி அடைவீர்களாக!

---

# 48. அமிர்ததயா

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**மிர்தத யாவினுக் கிருப்பிட மாம்பர மாத்தும சுவரூபன்
நிமிருமிச் சேதன னிருதய குகையுழை நீக்கமின் றுளனெனவே
இமிழ்தரு மோர்க்கடத் துவிவல்லி யிருபதி லேயிதை மதித்தாயின்
திமிரமி லாப்பர மாத்தும னன்றியொர் சீவனு முளனாமே. (1)

**அ**றிவுளன் வாக்கினை மனத்தினு மனத்தினை யாத்தும ஞானத்தினும்
வெறியடை யாவதை யாத்தும னிலுமதை மேம்படு சாந்தமதே
செறிபர மாத்தும னிலுமடை யும்படி செய்திடக் கடவனெனா
நெறிபறை மேற்சொன கடத்திரி வல்லிபன் மூன்றுழி நிகழ்த்திடுமே. (2)

**க**ருமநு கர்ந்திடு மிவ்வுயி ரினையுமிக் கருமிக்கண் மையனாகிச்
சருவப தார்த்தசு தந்திர னாயுறு சாமியி னையுந்தெரியும்
புருடனென் பானெவ னோவவன் மேலெனப் புகன்றிடு முனமொழிந்த
சுருதியி னான்கெனும் வல்லியைந் துழியருள் சுரக்குநள் ளுநர்காளோ. (3)

**அ**த்தனென் றாமொரு தேவனெவ் வுயிரிற்கு மந்தர வான்மாவாய்ச்
சத்திய மாயகம் புறத்தும்வி யாபகஞ் சாற்றவு ளானெனமேற்
புத்தக மானதைந் தாம்வல்லி யொன்பதிற் புகலுமிச் சுருதிகளான்
முத்திகொ ளுயிர்பர மெனுமிரண் டாத்தும முதலுள வெனலாமே. (4)

**அ**ந்தமெய் யாகிய வந்தர வாத்தும னகக்குகை யிருக்குமல
பந்தமா கியபசு வாங்குக னலனறை பசுவிரு தயகுகையுட்
சொந்தமா யுளனவ னேகுக னுயிர்க்குயிர் சூக்கவந் தரியாமி
நிந்தையி லாச்சிவம் பிரமமென் றருமறை நிகழ்த்துநள் ளுநர்காளோ. (5)

**அ**கமெனு மார்ப்பினில் விளங்கொரு தொம்பத வணுவெனுங் கூடத்தன்
அகமறுத் துய்திகொள் பிரத்திய காத்தும னாவனவ் வாத்துமன்றான்
குகனெனு மார்ப்பினில் விளங்கிடு தற்பத சிவத்தினைக் கூடியருந்
தகவுடை யசிபத விழுச்சுகம் பெறுவது சாயுச்சிய கதியாமே. (6)

**சி**ற்றுணர் வேயியல் பாகிய வான்மனுட் டிகழ்குகன் றனைநாடி
முற்றுணர் வாயவ னிசமறி யாமலு முயங்கிம காசுகப்பே
றுற்றுநில் லாமலு மொன்றிரண் டெனுமம ருஞற்றுபு நாட்கழித்தல்
கற்றுவல் லார்க்கொரு சிறிதுநன் கிலைநெறி கருதுநள் ளுநர்காளோ. (7)

**கு**கனையு பாசனை செய்வது தகரவு பாசனை குறைவிலதைத்
தகுகடை யாரணப் பிரச்சினம் பிருகதா ரண்ணியஞ் சாந்தோக்கியம்
உகவைசொல் கைவலி யம்மெனும் பேருடை யுபநிட தங்கள்சொலுந்
துகளற வேயிதன் மேலொரு நெறியிலை சுகுர்தநள் ளுநர்காளோ. (8)

---

*4. அந்தரவான்மா – தமிழ் நூன் முடிபு.*

*"இரண்டாத்தும முதலுள வெனலாமே" என்னு நிருணயத்தை.*

*(குஹாம்ப்ரவிஷ்டாவாத்மாநௌஹிதத்தர்சநாத்) "குகையின்கட் பிரவேசித்தவை யிரண்டான்மாக்களே ; அங்ஙனங் காணப்படலான்." என்னும் **பிரஹ்மஸூத்ரத்தும்** பெறுக.*

*6. இதன்கட் சொல்லப்பட்ட "அசிபதம்" சிரவண மா வாக்கியமாகிய தத்துவமசி (=அது நீ ஆகின்றனை) என்பதிலுள்ளதேயாயினும் சமாதி யுபதேசமாந் துவந் ததசி (=நீ அது வாகின்றனை) என்பதைப் பொருந்துவதாம். இத்திற மா வாக்கியப் பிரயோகம், **பைங்கலோபநிஷ**த்தின் 3–ஆம் அத்தியாய ஆரம்பத்திலே "தத்த்வமஸி த்வம்ததஸி த்வம்ப்ரஹ்மாஸி அகம்ப்ரஹ்மாஸ்மி" என வருதலினும் பெறப்படுகின்றது. நீ அது வாகின்றனை யென்பதற்குச் சிவபரம் பொரு ளோடு அனாதி அத்துவைத சம்பந்தியாயுள்ள நீ, இனிச் சுவானுபூதி ஞானத்தால் அப்பொருட்டன்மையினை யடையவிருக்கின்றனை யென்னும்பொருள் கோடல், விளக்கமுடைத்தாம். இந்நூலுள் அனுபூதி பற்றி 'அசிபதம்' வருந்தோறும் இப்பொருள் கோடலே மரபு.*

*கூடத்தன், பிரத்தியகாத்து மன் என்பனபற்றி யுணர்ந்துகொள்ளப்படுவன **சதானந்த சாகரத்துள** (தகராலயரகசியத்து முதலாங்காண்டத்து 30–ன் உரை).*

*8. தகர வுபாசனை – தமிழ்நூன் முடிபு.*

**பி**ருகதா ரண்ணிய தகரவித் தியாப்பிர கரணமெய் பேசிடல்போல்
சுரர்புகழ் மேலுரஞ் சாற்றுசந் தோக்கியச் சுருதியுஞ் சீவனுக்கும்
பிரமம தாமருட் குகற்கும றாதுள்ள பிணைவினைச் சொலுமதனாற்
பரசிவ ஞானமுள் ளவர்களுக் கெக்கணும் பலித்திடு நினைத்ததரோ. (9)

**உ**யரிய வானிழற் கீழர னுரைத்தது மோதெனக் கிறைசொனதும்
பயிலவொண் ணாதவித் தகரவித் தையின்முடி பாமது தகரமெனும்
அயிர்மலி புண்டரி கவுறையு ளோங்குவித் தையெனுமொ ரறிவுவெளிப்
பெயர்நப மென்றுணர்ந் தொளிவரைப் பெயரினன் சாமியைப் பேணுமினே. 10

# 48. அமிர்ததயா

**1.** அமிழ்த மயமாகிய கருணைக்கு இருப்பிடமாகிய, பரம ஆன்ம சொரூபனாகிய இறைவன், இன்பப்பேற்றுக்கு உரியவகையில் பக்குவம் கொள்ளும் ஆன்மாவின் இருதய குகையில் நீக்கமறத் திகழ்கிறான் என, – உயர்வு பொருந்திய கடோபநிடதத்தின் இரண்டாம் வல்லியின் இருபதாவது மந்திரம் இனிமைபொருந்தக் கூறுகிறது. இந்த உண்மையை உணர்ந்தாய் ஆயின், இயல்பாகவே அஞ்ஞான இருளற்று விளங்கும் அந்தப் பரமாத்மா மட்டுமன்றி, ஒரு சீவான்மாவும் உளது எனவே பொருத்தம்.

**2.** யோக ஞானம் கைவரப் பெற்றோன் வாக்கை மனத்திலும் மனத்தை ஆத்ம ஞானத்திலும், மயக்கமற்றுத் தெளிந்துள்ள ஆத்ம ஞானத்தை ஆத்மாவிலும், ஆத்மாவை மேம்பட்ட சாந்தநிலை பொருந்தியுள்ள பரமாத்மாவிலும் லயிக்கும்படிச் செய்யக் கடவன் என்று கூறப்பட உள்ள லயயோகப் பயிற்சி முறையை முற்கூறப்பட்ட கடோபநிடதத்தின் மூன்றாவது வல்லி பதின் மூன்றாவது மந்திரத்தில் நன்கு விளக்கிக் கூறுகிறது.

**3.** கருணை செறியப்பெற்று, சிந்தையில் தியானச் செறிவு கொண்டுள்ள அன்பர்களே! வினைப்பயனை அனுபவிக்கும் இவ்வுயிரையும், வினைப்பயனை நுகரும் சீவனுக்கு மிகநெருங்கியுள்ளவனாகி அனைத்துப் பொருள்களையும் தன் ஆளுகைக்கு உட்பட்ட உடைமைகளாகக் கொண்டு, இயல்பாகவே பூரண உரிமை கொண்டுள்ள பரமான்மாவையும் பிரித்து அறியும் புருடன் எவனோ அவனே மேலான பிறவி எடுத்தவனாவன் என முற்கூறப்பட்ட கடோபநிடதத்தின் நான்காவது வல்லி, ஐந்தாவது மந்திரத்தில் விளக்கிக் கூறும்.

**4.** அனைத்திற்கும் தலைவன் என விளங்கும் ஒரு தேவன், அனைத்து உயிர்களுக்குள்ளும் அந்தரான்மாவாக விளங்குவதுடன், எப்பொழுதும் அனைத்திலும் உள்ளும் புறம்பும் வியாபித்துள்ளான் எனச் சத்தியமாகவே கூறும் வகையில் விளங்குகிறான் என முற்கூறப்பட்ட கடோபநிடதத்தின் ஐந்தாவது வல்லி ஒன்பதாவது மந்திரத்தில் கூறும்.

*9. சந்தோக்கியச்சுருதி = சாந்தோக்யோபநிஷத்.*

*10. அயிர் = நுண்மை ; **யகரவெதுகை** காண்க. நுண்மை, தகராலயரகசியத் தறியவுளது.*

இவ்வாறு வரும் சுருதிவாக்கியங்களால் முத்திப்பேற்றை அடைவதற்குரிய சீவான்மா, அதை வழங்க உள்ள பரமான்மா என இரண்டு ஆன்மாக்கள் நித்தியப் பொருள்களாகவே உள்ளன என அவசியம் கூற வேண்டும்.

5. கருவி கரணங்களை ஒடுக்கிச் சிந்தையில் தியானச் செறிவு கொண்டுள்ள அன்பர்களே! அத்தகைய சத்தியப்பொருளாகிய அந்தராத்மா என்பவன், இதயக்குகையைக் கொண்டுள்ள, பந்தங்களுக்கு ஆட்பட்டுள்ள பசுவாகிய சீவான்மா அல்லன்; கூறப்பட்ட பசுவாகிய சீவான்மாவின் இதயகுகைக்குள் இருந்துகொண்டு, சீவனைச் செலுத்தும் உரிமை படைத்துள்ள பரமாத்மாவே அவன்; அவனே குகன்; உயிர்க்கும் உயிராகிச் சூக்குமமாக உள்ள அந்தர்யாமி; நிந்தனையை நீத்துள்ள சிவபரம்பொருள்; பிரம்மம் எனப் பல்வேறு பெயர்களால் அரிய வேதங்கள் கூறும்.

6. ‘நான்’ எனப்பொருள்படும் அகம் என்னும் சொல்லால் உணர்த்தப்பட்டு விளங்கி, துவம் எனும் சொல்லால் குறிக்கப்படும் கூடத்தன் என்பவனே, வினைப்பயன்களாகிய கட்டுகளை அறுத்து உய்திபெற உள்ள பிரத்தியகாத்மா என்பவன். இத்தகைய சீவன், குகன் என்னும் சிறப்புச் சொல்லால் உணர்த்தப்படுபவனும் ’தத்’ எனும் பதத்தால் குறிக்கப்படுபவனுமான சிவத்தைக் கூடி அரியபெரிய ஐக்கிய நிலையைக் குறிக்கும் ’அசி’ எனும் பதத்தால் விளக்கப்படும் பேரின்பமயமான அத்துவிதக் கலப்பைப் பெறுவதே சாயுச்சியம் என்பதாகும்.

7. நல்ல உறுதி நெறியைக் கருதும் தியானச் செறிவு மிக்க சீலர்களே! சிற்றறிவு நிலையையே தனக்குரிய இயல்பு நிலையாகக் கொண்டுள்ள சீவான்மாவுக்குள் திகழும் குகனை நாடி, முற்றுணர்வு மயமாகிய அவனது இயல்பான ஆனந்த நிலையை அறியாமலும், குகனோடு இரண்டறக் கலந்து பேரின்பப் பேற்றை அடையாமலும் ’ஒன்றோ, இரண்டோ’ என வீணான மயக்க வாதத்தில் ஈடுபட்டுக் காலத்தை வீணே கழித்தல், கற்றுவல்ல ஞானியர்க்கு ஒரு சிறிதும் நன்றாக இருக்காது.

8. சிவபுண்ணியப் பேறு மிகப்பெற்று, தியானச் செறிவு கொண்டுள்ள சீலர்களே! குகப்பெருமானை முறைப்படி தியானிக்கும் நெறியே தகரோபாசனை என்பது. குறைவற்ற அந்த உபாசனை முறையை, அதர்வண வேதத்தைச்சார்ந்த பிரசினம், மற்றும் யஜுர்வேத பிருகதாரண்ணியகம், சாமவேத சாந்தோக்கியம், ஆனந்தநிலையை விளக்கும் கைவல்லியம் எனும் பெயர்களைக் கொண்டுள்ள உபநிடதங்கள் நன்கு விளக்கிக் கூறும். இந்தத் தகர உபாசனையின் மேம்பட்டதாய்த் துகளற்று விளங்கும் உபாசனைநெறி வேறு எதுவும் இல்லை.

9. பிருகதாரணியக உபநிடதத்தின் தகரவித்யா பிரகரணம் எனும் பகுதி உண்மையை உணர்த்துவது போன்றே, தேவர்கள் புகழும் மேன்மையான பிரம்மநிலையை விளக்கும் சாந்தோக்கிய உபநிடதமும், சீவான்மாவுக்கும் பரப்பிரம்மமாகவும் அருள்மயமாகவும் உள்ள குகப்பெருமானுக்கும் இடையே நீங்காமல் நிலைபெற்றுள்ள அத்துவிதத் தொடர்பை விளக்கிக் கூறுகிறது. அதனால், இவை கூறும் நெறிப்படி மேலான சிவஞானப் பேறு வாய்த்துள்ள செல்வர்களுக்கு, எல்லாவிதங்களாலும் அன்னார் எண்ணியது எண்ணியபடி நடக்கும்.

**10.** விழுமிய கல்லால மரத்தின் கீழ்த் தென்முகக் கடவுளாக வெளிப்பட்டு சிவன் உரைத்ததும், குகப்புகழ் ஓதும் எனக்கு அக் குகப்பெருமான் உபதேசித்ததும், எளியோர்களால் பயிலவோ, கடைப்பிடிக்கவோ இயலாத இந்தத் தகரவித்தையின் முடிபே ஆகும். "**தகரம் எனக் கூறப்படும், மிக நுண்மை பொருந்தியதான இதய தாமரைக்குள் வெளிப்பட்டு ஓங்கும் வித்தை எனப்படுவதாகிய ஞானவெளி எனும் சிதாகாசம்**" – இவ்வாறு தகரவித்தை என்பதன் பொருள் உணர்ந்த, அருணகிரிப் பெருமானின் முழுமுதற் கடவுளான குகப்பெருமானைத் தொழுவீர்களாக!

# 49. வண்மை

## வேதாந்த யதார்த்த பிரசன்னம்.

இருக்குவேத மாவாக்கியார்த்தம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**வ**ண்மை யிருக்கி னைதரேய மாவாக் கியமம் பரப்பிரமம்
ஒண்மை ஞான சொருபமென்றே யுணர்த்த வதற்கோர் முரணாக
வெண்மை யெனுமஞ் ஞுத்துவமு மேவு மதுவென் பதைமறுத்தவ்
வுண்மை யுடையெம் பெருமாற்கன் புறுவார் சரணெஞ் சிரமேலே. (1)

**அ**ந்த மாவாக் கியத்துமுன்ன தாய பிரஞ்ஞா னந்தானே
அந்த மடியில் சிவசத்தி யாகும் பின்ன தாம்பிரமம்
அந்த வருட்சத் தியின்முதலா யவிருஞ் சிவம தாகுமென்றவ்
வந்த மயன மிலாவெம்மாற் காட்பட் டவருக் காணாமே. (2)

**ப**ரிதிக் கொளிபோ லபின்னமதாய்ப் பரம சிவத்தி லருட்சத்தி
விரிசித் தொளியா யுள்ளதனான் விமல சிவத்தைக் குணியாயும்
அரிய வருளைக் குணமாயு மறிந்தப் பொருளா மெம்பெருமாற்
குரிய புரிவா லாட்படுவா ருபய வடிகட் காணாமே. (3)

**கு**ணமா கியவச் சத்தியைநிர்க் குணைநிட் களையென் றரியமறைக்
கணமோ துதலிற் சடமாயைக் கண்ணே யுளமுக் குணமின்றெண்
குணமா மகண்ட வைசுரியங் குன்றா துளதே யதுவென்றோர்
உணருள் ளுளரா யெம்பெருமாற் குயரன் புறுவர்க் காணாமே. (4)

---

*3. இத்திருப்பாட்டால், சிவத்திற்குச் சத்தி வேறென்பார் மதத்தை மறுத்து, அங்ஙனம் பரிதி விடயங்களை விளக்குழிக் கதிரெனவும், தன்னை விளக்குழிக் கதிரோனெனவு நிற்றல் போலச் சிவனும் புறப்பொருளை நோக்கு நிலையிற் சத்தியெனவு நோக்காது ஞான மாத்திரையாய் நிற்குநிலையிற் சிவமெனவுந் தாதான்மியத்தா லிருதிறப்பட்டு இயைந்து நிற்பனெனச் சித்தாந்தந் தாபிக்கப்பட்டவா றறிக.*

*பரிதி = சூரியன்.*

*4. இன்றியென்னும் வினையெச்சம் "இன்று" எனநின்றது செய்யுளாகலின், எண்குணவிவரம், திருநிறைந்தசிற்சத்தியென்னும் 50–ஆம் பத்தின் 2–ஆந் திருப்பாட்டி லுண்டு.*

எசுர்வேத மாவாக்கியார்த்தம்.

**எ**சுவின் பிருக தாரணியத் திசையா மகம்பி ரமாசிமிக்காம்
உசிதப் பொருடே கத்துளநா னோங்கு பிரமத் தொடுதோய்ந்து
சுசியுற் றதுவா யுளனெனவாஞ் சொலிய விதுவா லுயிர்முத்தன்
நிசநன் னிலையா மெனவோர்ந்தந் நிமலற் கருது வாருரியோர். (5)

**கு**யின்ற வகமென் னுந்தொனியாற் குறிக்கப் படுயிர்க் கவ்வசனம்
பயன்கொ ளணுவி னகக்கண்ணே பரமாய் நிலவுள் ளான்மனொடே
இயைந்த பின்ன மாயுளதா லேய்ந்த தெனநன் குணர்ந்தகத்தே
முயன்றக் கடவு ளாங்குகன்மேன் மோக மிகுப்பர்க் காணாமே. (6)

சாமவேத மாவாக்கியார்த்தம்.

**சா**ம சாந்தோக் கியவாக்காந் தத்து வமசி தனிற்பதமூன்
றாமுன் னுளதஃ தெனவாகு மிடையி லுளது நீயெனவாஞ்
சேமக் கடையி லுளவசிதான் சேர்க்கை யாலா கின்றையென
ஆமென் றுணர்ந்தஃ தாங்குகனுக் காட்பட் டவருக் காணாமே. (7)

அதர்வணவேத மாவாக்கியார்த்தம்.

**அ**தர்வ மாண்டூக் கியவாக்கே யயமான் மாப்பி ரமமாமால்
அதன்க ணயமான் மாசீவற் கருளு மிந்தப் பரமாகும்
அதுவே பிரம மெனநல்ல வருத்த முணர்ந்தப் பரம்பொருளாம்
முதல்வற் றொழுவா ரெவரவர்தா முன்னித் தொழுநங் கடவுளரே. (8)

**அ**யமென் றெழுந்த பதமதுதா னண்மைச் சுட்டே யாமெனவும்
நயவம் பரமற் குறிக்குமென்று நல்லா ரியத்தி னிலக்கணநூல்
இயலு மருத்தந் தருதலினா லிந்த வுயிரிற் குயிராகக்
குயிலு மந்தத் தேவினையே குறிக்கு மெனமிக் காருணர்வோர். (9)

நான்கு மாவாக்கியார்த்த சங்கிரகம்.

**வே**த மாவாக் கியநான்கும் விளங்கு முபயான் மாக்களுடைப்
பேத முணரத் துலக்கிமுதிர் பேறுஞ் சொனவா நனிதேர்ந்துள்
ஏத மறுத்த வருணகிரி யிதயப் பொருளாய் நிலவெம்மான்
சீத வருளைப் பேணியுய்யுந் தெருண்மே தையர்கட் காணாமே. (10)

---

*6. ஆன்மா, அந்தரான்மாவோ டியைந்து அபின்னமா யிருக்கின்றமையின் 'அஹம்' என்னுந் தொனியால் அது குறிக்கப்படுவ தாயிற்றென்னும் பொருள் இங்குப் பெறப்படுகின்றமையின் அந்த அஹமென்பது கடவுளுக்கே யுண்மையாகவுள தெனலுங் குறிப்பாகக் கொளக் கிடக்கின்ற தென்க.*

*7. "அசிதான் சேர்க்கையால் ஆகின்றை" என்பது குறித்துச் சீர்த்தியுடைத் தெள்ளறிவு என்னும் 43–ஆம் பத்தின் 10–ஆந் திருப்பாட்டுச் சிந்திக்கற்பாலது.*

# 49. வண்மை

**1.** மந்திரவளம் வாய்ந்த இருக்கு வேதத்தின் ஐதரேய உபநிடதம் கூறும் மகாவாக்கியம் "பரப்பிரம்மமானது, ஒளிவிளக்கம் மிகுந்த ஞானசொரூபமாகவே உள்ளது'' எனும் பொருளைத் தரும் **பிரக்ஞானம் பிரம்ம** என்பதாகும். ஐதரேயம் இவ்வாறு உணர்த்த, இதற்கு முரண்பாடானவகையில் உட்பொருளற்றதும் மறைப்பதும் ஆகிய அஞ்ஞத்துவம் (அறியாமை வயப்பட்டிருக்கும் தன்மை) என்பதையும் அப்பரம்பொருள் பொருந்தும் எனக் கூறப்படுவதை மறுத்து, அந்த ஞானமயமான சத்தியநிலையை உடைய எம்பெருமானிடம் மாறாத அன்பு கொண்டிருப்போரின் திருவடிகளை எம் சிரத்தில் தாங்கிக் கொள்கிறோம்.

**2.** அந்த மகாவாக்கியத்தில் முதலில் உள்ள பிரக்ஞானம் என்பது தொடக்கமும் முடிவும் அற்ற சிவசக்தியைக் குறிப்பதாகும். பிரம்மம் என்பது அந்த அருட்சக்தியை உடைமையாகக் கொண்ட காரண முதலாக விளங்கும் சிவம் என்பதைக் குறிக்கும். இவ்வாறு உணர்ந்து கொண்டு, பிறப்பும் இறப்பும் இல்லாதவனான எம் பெருமானுக்கு ஆட்பட்டுள்ளார் அனைவர்க்கும் நாம் ஆட்பட்டுள்ளோம்.

**3.** சூரியனின் ஒளி, அந்தச் சூரியனோடு அபின்னமாய்ப் பிரிவின்றி விளங்குதல் போன்று, அருட்சக்தியும், விரிவடையும் பூரண ஞான ஒளியாகி அப்பரசிவத்தோடு அபின்னமாய் இரண்டற்று விளங்குவதால், இயல்பாகவே தூய்மையாக உள்ள சிவத்தைக் குணி (குணத்தை உடையது) என்றும், அருட்சக்தியைக் குணம் என்றும் அறிந்து கொண்டு அச்சிவபரம் பொருளாகிய எம் குகப் பெருமானுக்கு ஏகாக்கிர சித்தத்துடன் ஆட்பட்டுநிற்பாரின் இரண்டு திருவடிகளுக்கும் நாம் ஆட்பட்டுள்ளோம்.

**4.** குணமாக விளங்கும் அந்தச் சிவசக்தியை நிர்க்குணை என்றும் நிட்களை என்றும் அரிய வேதத் தொகுதிகள் விவரித்துக் கூறுவதால் அசேதனமான மாயையின் காரியமாக உள்ள சத்துவம் முதலான முக்குணங்களும் அற்றது சிவசக்தி என்றும், அவ்வாறு இருப்பினும் முற்றறிவுடைமை முதலான எண்குணங்களாகிய அகண்ட சிவ ஐசுவரியம் குன்றப் பெறாமல் சிவசக்தி உள்ளது என்றும் ஆய்ந்து உணரும் உள்ளம் உடையவர்களாய் எம்பெருமானாகிய குகனுக்கு உயர்ந்த அன்பு பூண்டு ஒழுகுவோர்க்கு நாம் ஆட்பட்டுள்ளோம்.

**5.** யசுர்வேதத்தின் பிருகதாரணியக உபநிடதத்தே கூறப்படும் மகாவாக்கியமானது 'அகம் பிரம்மாஸ்மி' என்பதாகும். இந்த மகாவாக்கியத்துக்கு உசிதமான உட்பொருள் யாதெனில் "தேகத்தோடு கூடியுள்ள நான் பிரம்மத்தோடு இயைந்து தூய்மை அடைந்து பிரம்மாகவே உள்ளேன்'' என்பதாகும். இவ்வாறு கூறப்பட்ட மகாவாக்கியமானது உயர்ந்த ஜீவன்முத்தனின் இயல்பான பிரம்மநிலையைக் குறிப்பதாகும் என ஓர்ந்துணர்ந்து, மேலான சிவானந்தப் பேற்றுக்கு உரிமை படைத்துள்ள சீலர்கள், நிமலனாகிய குகேசனையே எப்பொழுதும் தியானித்து இருப்பார்கள்.

**6.** இந்த மகாவாக்கியத்தில் வரும் அகம் எனும் சொல்லால் குறிக்கப்படும் சீவான்மாவுக்கு, அந்த அகம் என்னும் பதமானது ஏன் பொருந்தியது எனில், வினைப்பயனைக் கொள்ளும் உயிரின் உள்ளிடத்தே, அந்த வினைப்பயனால் தீண்டப்படாமல் பரமமாக உள்ள அந்தரான்மாவாகிய பரம்பொருளோடு இயைந்து அபின்னமாக விளங்குவதால் அகம் எனும் சொல்லால் குறிக்கப்படுவதாயிற்று. இவ்வாறு நன்கு உணர்ந்து, உள்ளிடமாகிய தகராலயத்துள் உரிய நெறிப்படி முழுமுதற் கடவுளாகும் குகனிடம் தணியாத பக்திகொண்டு அவனையே உபாசித்து உயரும் அன்பர்களுக்கு நாம் எப்பொழுதும் ஆட்பட்டிருப்போம்.

**7.** சாமவேதத்தைச் சார்ந்த சாந்தோக்கிய உபநிடதம் கூறும் மகாவாக்கியம் '**தத்துவமசி**' என்பதாகும். இம்மகாவாக்கியத்திலுள்ள மூன்று சொற்களில் முதலில் உள்ள 'தத்' என்பது 'அந்தப் பரம்பொருளாகிய அது' எனும் பொருளைத் தரும்; அடுத்து இடையில் உள்ள 'த்வம்' எனும் சொல் 'நீ' எனும் பொருளைத்தரும். இறுதியில் உள்ள 'அசி' எனும் சொல் 'நீ' இரண்டறக் கலந்து விளங்குவதால், ஆகின்றாய் எனும் பொருளைத்தரும். இவ்வாறு உட்பொருளை உரிய முறையில் உணர்ந்து, அந்தக் கலப்புநிலையை அருளவல்ல குகப்பெருமானுக்கு ஆட்பட்டிருப்பார் அனைவர்க்கும் நாம் ஆட்பட்டுள்ளோம்.

**8.** அதர்வண வேதத்தைச் சார்ந்த மாண்டுக்கிய உபநிடத மகாவாக்கியம் 'அயமாத்மா பிரம்ம' என்பதாகும். இதிலுள்ள அயமாத்மா என்பது "சீவான்மாவுக்கு அருள்புரிவதாகிய இந்தப் பரமான்மா'' எனும் பொருள் உடையது. இந்தப் பரமான்மா பிரம்மமே என உரியமுறையில் நற்பொருள் உணர்ந்து, அந்தப் பரம்பொருளாகிய குக முதல்வனை வணங்குவார் எவர்களோ, அவர்களே நாம் தியானித்து வணங்கும் கடவுளராவர்.

**9.** இந்த மகாவாக்கியத்தில் 'அயம்' என வந்துள்ள பதம், மிகநெருக்கத்தில் உள்ளதைக் குறிப்பதாகிய அண்மைச் சுட்டாகும் என்றும், அது ஆனந்தம் மிகுந்துள்ள பரம்பொருளையே குறிக்கும் என்றும், நன்மைமிக்க வடமொழி இலக்கண நூற்படி, உரிய இயல்பான உட்பொருளைத் தருவதால், இந்த உயிருக்கும் உயிராக விளங்குவதாகக் கூறப்படும் அந்தக் குகப்பெருமானையே அச்சொல் குறிக்கும் என ஞான அருள் உணர்வு மிக்கோர் நன்கு உணர்வர்.

**10.** பிரக்ஞானம் பிரம்மா, என்பது முதலாக உள்ள வேதமகாவாக்கியங்கள் நான்கும் நித்தியமாக விளங்கும் சீவான்மா, பரமான்மா எனப்படும் இரண்டு ஆன்மாக்களின் பேதத்தை நன்கு உணருமாறு புலப்படுத்தி, சீவான்மா பரமான்மாவோடு கலந்து பெறஉள்ள முதிர்ந்த ஆனந்தப் பேற்றையும் நன்கு விளக்குவனவாக உள்ளன எனும் உண்மையை நன்கு ஆய்ந்துணர்ந்து, சீவான்மக் குற்றங்கள் அனைத்தையும் அறுத்தெறிந்து தூய்மையுற்ற அருணகிரிப் பெருமானின் இதயக் கடவுளாக விளங்கும் எமது குகப்பெருமானின் தண்ணிய அருளையே பற்றுக்கோடாகக் கொண்டு உய்தி பெறும் தெளிந்த ஞானப் பேறுடையார் அனைவர்க்கும் நாம் ஆட்பட்டிருப்போம்.

# 50. திருநிறைந்தசிற்சத்தி

***கட்டளைக்கலிப்பா.***

**தி**ருநி றைந்தசிற் சத்திம கானுடைத்
    திரிகு ணஞ்சிறி தேனுமின் மங்கல
குருநி றைந்துள தானித்த சுத்தநிர்க்
    குணையென் றாமத னோடுறு நிட்களப்
பொருளு நிர்க்குணப் பேர்கொளு மென்னவே
    போத மாமறை கூறலு மப்பிரான்
அருக லின்முழு வெண்குண னாமெனா
    வாக மஞ்சொல லுந்திரி பில்லையே. (1)

**ச**ருவ ஞானஞ்சொ லாகமம் யோகமே
    சாற்று ஞாங்கரி லேயுள்ள பேரருள்
சருவஞ் ஞத்தந்தி ருத்திய னாதிபோ
    தஞ்சு தந்திரந் தூவுடம் பாயிடல்
சருவ சத்திநி ராமய வாத்துமத்
    தன்மை யென்னுமொ ரெண்குண முள்ளவோர்
சருவ மங்கள சாமியை யுள்கிடார்
    சார்வ தில்லைச தானந்த வாக்கமே. (2)

**இ**ழுக்கி லட்டகல் யாணகு ணங்களு
    மிறைவற் குண்டெனக் காட்டுநி மித்தமாச்
சழக்கி லாநிச மோததர் வச்சிகை
    சருவ வைச்வர்ய சம்பன்ன னென்னவே
வழுத்திற் றென்றறி வாரிக்கு ணங்களா
    மாட்சி யற்பமு மின்றியி ராநின்ற
கொழிப்புச் சேதனக் கூடத்த நாமனைக்
    கோளி லத்தெய்வ மென்பர்கொ லோவன்றே. (3)

**இ**ந்த நன்னெறி தன்னைவி யாசரு
    மேசில் சூதரு பம்மன்யர் காலயன்
நொந்தி டாதசு வேதரென் பார்முத
    னூற்று நாற்பது பேர்மணி கண்டருந்

*2. இதன்கட் கூறப்பட்ட எண்குணங்களும் ஆறாதல், மூன்றாதல், இரண்டாதல், ஒன்றாதலென்னும் விவரமும், பிறவுஞ் **சதானந்தசாகரத்தால்** அதிசயமா யறியற் பாலன (தகராலயரகசியத்து இரண்டாங் காண்டத்து 57–ன் உரை). ஞாங்கர் = இடம்; **பி – நிகண்டு.***

தொந்த மில்லர தத்த ரகோரருந்
    தொண்ட ராறுபத் தோடுறு மூவரும்
நந்த லின்மணி வாசக ரொன்பதா
    நாயன் மார்களு மொப்பிநின் றார்களே. (4)

**மா**சி லிப்பெரு வைதிக சைவசன்
    மார்க்க மேபிடித் தச்சுத னாதிநல்
தேச றாமுக தேவர் முனீந்திரர்
    சித்தர் மாமனு வாதிய செம்மல்கள்
காசி லாதவெண் காடர்தி ருப்புகழ்க்
    கவிஞ ராதிமிக் கார்சித்தி முத்தியே
மோச மேதுமி லாதுபெற் றாரெனா
    மொழிதல் சத்திய மாகுமெக் காலுமே. (5)

---

*4. கால் = வாயு = வாயுபகவான்.*

*தொந்தம் – த்வந்த்வம் என்னும் வட சொல்லின் விகாரம் ; கலஹமென்னும் பொருட்டு ; அமரஸிம்ஹங் காண்க.*

*“நூற்றுநாற்பதுபேர்” விவரம், பரிபூரணானந்தபோதப் பாயிரத்துப் 13–ஆஞ் செய்யுளுரைக்கட் காணலாம்.*

*5. முனீந்திரர் = முனித்தலைவர். அத்திரி, விசுவாமித்திரர், புலத்தியர், புலகர், கிரது, வசிட்டர், மரீசியென்னும் எழுவரையுங் காமிகாகம பூர்வபாக ஸ்நாநவிதிபடலம், முனிவரென்று மொழிகின்றது.*

*‘சித்தர்’ – மனிதர், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், கபிலர், பிருகு, பஞ்சசிகர், சிவன், உருத்திரன், பவானி, பிரமன், விட்டுணு, அக்கினி, வாயு, யமன், சூரியன், சந்திரனென்னும் பதினெண்மருஞ் சித்தர்களென்று “ததோமநுஷ்யாஸ்ஸ நக:” என்றெழீஇச் செல்லுஞ் சுலோகங்களின் வாயிலாக மேலைப்படலமே விளம்புகின்றது; உண்மை யெப்படியோ ? இப்படலத்திலே திரிபுண்டர தாரண அங்குலம் அந்தணர்க்கு 6, அரசர்க்கு 4, வைசியர்க்கு 2, சூத்திரர்க்கும் பெண்களுக்கும் 1 – என விதிக்கப் பட்டமையானும் ; இந்நால்வருணத்திற்கும் வேறாய சாதியார்க்கு, அவ்வொன்றுமின் றென்றமையானும் ; அந்தணர் உத்தரீயம் (=மேல்வேஷ்டி) அணியலாம் ; சூத்திரர் அஃதணியொண்ணா தென்றமையானும் ; **சாலாலக்ஷணவிதிபடலத்தில்** அந்தணர் முதலிய மூவருணத்தார் வீடுகள் இரட்டைத்தூண் நிறுவியும் மற்றையர்வீடு ஒற்றைத் தூண் நிறுவியுங் கட்டல் கடப்பாடாம் ; அந்தணர்க்குப் 11–அடுக்கும் அரசர்க்கு 5– அல்லது 7–அடுக்கும் வைசியர் சூத்திரர்கட்கு 3– அடுக்குமுள்ள வீடுகளுரியன வென்றமையானும்; **பூகர்ஷணவிதி படலத்திற்** பயிரிடற்குரிய வுழவுமுறை – அந்தணர்க்கும் அரசர்க்கும் 32, வைசியர்க்குப் 15, சூத்திரர்க்கு 7– என்றமையானும் ; ஆலயங்களிலுங் கிராமங்களிலுஞ் சிவத்துவிசரே (ஆதிசைவரென்னும் பிராமணர்) சிறந்தவர் ; தக்ஷிணை பெறற்குரியோ ரென்றமையானும் ; **தந்த்ராவதார படலத்தில்** ஆதிசைவவிப்பிரர்களாய ஆசாரிய பரம்பரையில் இவ்வாகமங்களை ஓதலும் ஓதுவித்தலும் இவ்வுலகஞ் செய்யத்தக்கன ; மற்றையரைக் கொண்டு அவை செய்யத் தக்கனவல்ல : சூத்திரர் சவருணர் முதலினோருஞ் சிற்பிகளுஞ் சித்திரந்தீட்டு வோரும் படிப்பது பாவமென்றமை யானும்; பூபரிக்ரஹவிதிபடலத்தில் அவ்வாதிசைவ ஆசாரியர் முதலினோரைப் பூசித்து, அவருக்குத் தக்ஷிணை கொடுத்திடுக வென்றும், **பூகர்ஷணவிதிபடலத்தில்** நிலத்தை யுழுபடைகொண்டு ழும்போதும் அவ்வாசாரியர்க்குத் தக்ஷிணையாக 5– (நிஷ்கம்) வராகனெடைப் பொன்னும், உபகாரமாகப் பசு எருது முதலியனவும் ஈந்திடுகவென்றும், **கர்ப்பந்யாஸவிதிபடலத்தில்** வத்திரமும், பொன்னும், மோதிர முதலிய அணிகளுமாகிய இவற்றால் அவரை யழகுட்படுத்துப் பூசித்து, உத்தமமாகப் 15–வராகனும், மத்திமமாகப் 10– வராகனும், அதமமாக 5–வராகனும் அவருக்குத் தக்ஷிணையாகக் கொடுத்திடுக: பசு, பூமி, தானியம் ; அடிமைகண் முதலியவற்றை இல்லத்திற்கு வேண்டுமளவாக அவருக்களித்திடுகவென்றும், **பாலஸ்தாபநவிதி படலத்தில்** முன்னர் மொழிந்தவாறு வத்திர முதலியவற்றால் அவரையழகுட்படுத்துப் பூசித்து, அவ்வுத்தம முதலிய மூவகைத் தக்ஷிணைகளையும் அவருக்குதவுக வென்றும், **வாஸ்துசாந்திவிதிபடலத்தில்** அவ்வாசாரிய தக்ஷிணை அம்மூவகையுமாமென்றுங் கூறினமையானும் ; இன்னும் பலவேதுக் களானுங் கல்வி, அறிவு, திரு, ஒழுக்கங்களோடு கூடினவரும் அவை கூடாதாருமாகிய பலரும் வைகியுள்ள இப்புடவியின்கண் ஒரு*

**வ**டவண் ணோக்கநி ழற்கணி ருந்துமெய்ம்
    மார்க்கங் காட்டிய தேசிகன் றண்ணளித்
தடமு டைத்திரு நந்தியம் பண்ணவன்
    சனற்கு மாரன்மெய்ஞ் ஞானவொண் காட்சியன்
திடமு டைப்பரஞ் சோதிமெய் கண்டவன்
    றீர்க்க வாழ்வரு ணந்தியொர் சம்பந்தன்
படரி லாதவு மாபதி கண்டதும்
    பண்டை வைதிக சைவசன் மார்க்கமே. (6)

**பொ**திய மாமுனி மேதைத்த தீசிமெய்ப்
    போதஞ் சாலுப மன்னிய னல்லருள்
மதிய றாருரு வென்னொரு நால்வரும்
    வண்மைச் சைவமெய்ஞ் ஞானமு ளோரினோர்
நுதிகொண் மாணவர் நூற்றுவ ராயிர
    ரென்ன வேபல்கி னாரெனச் செந்நெறிக்
கதிசொல் வாயுவின் சங்கிதைப் பூருவ
    காண்ட மோரிரு பத்தெட்டிற் பன்னுமே. (7)

**க**ல்வி கேள்விக ளானிச மோர்ந்துநற்
    கதிவ னத்திடை நிற்கவ வாவுநர்க்
கல்க லற்றவிம் மார்க்கநல் லோர்சொனா
    லங்ங னேபய னாமற்ற கந்தையாற்
பல்வி வாதம்வி ளைத்துண்மை காணினும்
    பக்க பாதத்திற் றம்மொழி மேலெனும்
புல்வி வேகர்க்கெவ் வாறெடுத் தோதினும்
    பொலிவ தென்பதெண் மானமு மில்லையே. (8)

---

*கூட்டத்தாரையே ஒரு சிலரையே பெரிது முயர்த்தலும் அவரைப்போல ஏனையோர் இனிது வாழொண்ணாதென்றலுமாம் அதருமங்கொண்டு படலம்படலமாக அவ்வொரு சிலர் சீவனோபாயத்தோடு பலகருமங்களை யும் விதிக்கவந்த புத்தகமே அவ்வாகம பூர்வபாகமெனவும், சிமார்த்தர் பெரிதுந் தஞ் சுயநலங்கருதி யெழுதியுள்ள மிருதிகளையொத்த இப்பாகபடல மியாவையும் அவற்றிலுள்ள விடயமனைத்தையுஞ் சிவபெருமான் கூறியருளினனென்பது, அருளவா மெல்லாரு மினிதுய்தி பெறவேண்டுமெனுந் திருவுளப் பெருங்கருணைத் தடங்கடலாய்த் தருமதேவதைமீ தெழுதரு தலைமைப் பொருளாய் வயங்குமவனது கடவுட்டிறத்தை யிழுக்கத்துட்படுத்து வதா மாகலின் அது சால்பிற்றன்றெனவு நடுவுநிலை யோம்புநர் பலரு நவில்கின்றனர். நடுவுநிலை யோம்பல் எமக்குங் கடன்மையே. போந்த நியதிகளை யெவரெவ ரெவ்வாறு கொள்ளினுங் கொள்ளட்டும் ; இவை, ஈசன் கட்டளையென்று கூறற்கே யெமது நெஞ்சம் பெரிது மஞ்சுகின்றது. போந்த தந்த்ராவதாரபடலத்தில் ''இல்லறத்து ஆதிசைவரே எல்லாக் காரியங்களிலும் அதிகாரமுடையர்'' என்றதூஉம் பேராசங்கைக் கிடனாயிருத்தல் உய்த்துணரத் தக்கதாம்.*

7. *இருபத்தெட்டு = இருபத்தெட்டாம் அத்தியாயம்*

8. *அல்கல் = குறைதல் ; ''ஆடுமே ழகம்வெற் றிப்பே ரல்கனாள் சுருங்கல் வைகல்'' என்று டகரவெதுகை கூறுதலிற் காண்க. எண்மானமும் = எள்ளளவும்*

**ஆ**த லாலிந்தப் புல்லறி வாளர்க்கு
மகில மீதுமுற் சன்மம்வி லங்குடைப்
பூத தேகத்துட் புக்கிருந் திப்பவம்
புதிய மானவ யாக்கையுற் றோர்களுக்
கேத மாயமுற் சன்மத்தின் வாசனை
யேய்ந்து மந்தநெஞ் சாநிற்கு மக்கருட்
போதர்க் குந்தெருட் சைவசித் தாந்தநேர்
போதிக் கத்துணி யாரறி வாளரே. (9)

**ச**ரத வைதிக சைவசித் தாந்தமா
சாத்தி ரங்கள்பு ராணங்க ளைச்சித
சுரதம் போலலை சூனிய வாதிக
டுவித தந்திரந் தந்திர மென்றடம்
பரவ முந்துவ ரேலங னன்புளார்
பாழ்த்த நுந்துறை மோசமென் றேகடிந்
திரத வாக்கவண் ணாமலைப் பேரினா
னீச னாங்குக னைத்தொழ னீதமே. (10)

ஆக ஐம்பதுபத்தினும் போந்த திருப்பா - 500
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 503**

## 50. திருநிறைந்தசிற்சத்தி

**1.** அருள்வளமும் ஆனந்தவளமும் நிறைந்துள்ள சிற்சத்தி, பெரிய மாயையின் காரியப்பாடாகிய முக்குணங்கள் சிறிதளவும் பொருந்தப் பெறாமல், மங்களமான சிவப்பொலிவு மிகப்பெற்று விளங்குவதால் அது நிர்க்குணை எனக் கூறப்படும் என்றும், அதனோடு அபின்னமாக விளங்கும் நிட்கள சிவமும் நிர்க்குணவத்து எனப் பெயர் பெறும் என்றும் ஞானநுட்பங்களைப் புலப்படுத்தும் பெரிய வேதம் கூறுவதும் – அந்த நிட்களப் பொருளாகிய சிவன் எவ்விதக் குறைவுமற்று முழுமையாகப் பொருந்தியுள்ள எண்குணங்களை உடையவன் என ஆகமம் கூறுவதும், மாறுபட்ட கருத்துக்கள் அல்ல.

*10. சிதசுரதம் = வெண்ணிறத்த பாதரசம். சிதம் = வெண்மை.*

**2.** சருவஞானோத்தரம் எனப்படும் ஆகமம் சிவயோகத்தைப் பற்றிக் கூறும் இடத்தில் விளக்கப்பட்டுள்ள பேரருள் உடைமை, முற்றறிவுடைமை, திருப்தி, அனாதிபோதம், சுதந்திரம், தூய உடம்பினன் ஆதல், முடிவில் ஆற்றல் உடைமை, நிராமயத்துவம் எனும் எட்டுக் குணங்களையும் உடைய சர்வமங்கள மயமான முழுமுதற்பொருளை தியானிக்காதவர்களால், நிலைத்ததான சிவ ஆனந்த வளத்தை எப்பொழுதுமே அடைய முடியாது.

**3.** குற்றமற்றவையான சுபமங்களகரமான எண் குணங்களும் இறைவனுக்கு உண்டு என்பதை நன்கு புலப்படுத்துவதற்காகவே, முரண்பாட்டுக்கு இடமளிக்காமல் உறுதிப்பொருளை உணர்த்தும் அதர்வசிகை எனும் உபநிடதம் ''அனைத்து ஐசுவரியங்களும் பரிபூரணமாக நிரம்பப் பெற்றுள்ளவன்'' (சர்வைசுவரிய சம்பன்னன்) என்று சிவபரம்பொருளைத் துதித்தது. இவ்வுண்மையை அறிபவர்கள் பெருமைக்குரிய எண்குணங்களில் எதுவும் சிறிதளவும் பொருந்தப் பெறாமல், பிறப்புக்கும் இறப்புக்கும் வழிகொடுக்கும் வினைப்பயனையே மிகுவித்துக் கொண்டிருக்கும் சேதனனாகிய கூடத்தன் எனப்படும் சீவான்மாவைக் குற்றமற்ற முழுமுதற்பரம்பொருள் எனக் கூறுவரோ ? ஒருபோதும் கூறமாட்டார்கள்.

**4.** எண்குண இறைவனைத் தியானிக்கும் இந்த நன்னெறியாகிய வைதிக சைவ சித்தாந்த மார்க்கத்தையே வியாசர், குற்றமற்ற சூதர், உபமன்யுமுனிவர், வாயுபகவான், பிரம்மன், பிரபஞ்சநெறியால் பாதிக்கப்படாத சுவேதாசாரியர் முதலாக உள்ள நூற்றுநாற்பது முனிவர்கள், (யோகாசாரியர்கள்) நீலகண்டர், பேத உணர்வற்ற அரதத்தர், அகோர சிவம், அறுபத்துமூன்று நாயன்மார்கள், ஆனந்த அனுபவம் நீங்கப்பெறாத மாணிக்க வாசகர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆகியோர் உயர்நெறி என ஒப்பி ஏற்றுக் கொண்டு விளங்கினர் அன்றோ !

**5.** குற்றமற்ற இந்தப் பெரிய வைதிக சைவசன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்தே திருமால் முதலானோர், சிவ ஒளி நிலைக்கப்பெற்றுள்ள வாம தேவர், அத்திரி முதலான முனிவர் எழுவர், பதினெண் சித்தர்கள், மனு முதலான சக்ரவர்த்திகள், பந்தமற்ற திருவெண்காடர், திருப்புகழ் பாடிய அருணகிரிப் பெருமான் முதலாக உள்ள பெரியோர்கள் அனைவரும் அத்துவித ஆனந்தப் பேற்றுக்குரிய முத்தி நிலையை எவ்விதக் குறைபாடும் இன்றிப் பெற்றனர் எனக் கூறுதல் எப்பொழுதும் பொருந்தக்கூடிய சத்திய வாக்கே ஆகும்.

**6.** கல்லாலமரத்தின் நிழற்கீழ் இருந்து மெய்ந்நெறி விளக்கத்தைச் சின்முத்திரையால் காட்டிய தென்முகக் கடவுளின் கருணைப்பெருக்கு வாய்த்த நந்திபகவான், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசனிகள், உறுதிப்பாடு மிக்க பரஞ்சோதி முனிவர், மெய்கண்டார், நீண்ட வாழ்நாள் அருளும் அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், துன்பநிலை அற்ற உமாபதி

சிவம் – ஆகியோர் உறுதிநெறி இதுவே எனக் கண்டு தெளிந்ததும் பழைமையான வைதிக சைவ சன்மார்க்கமே ஆகும்.

7. "அகத்திய மாமுனிவர், ஞானப்பேறு மிக்க ததீசி முனிவர், மெய்ஞ்ஞானம் மிகுந்த உபமன்யு முனிவர், அருள்நிலையும் ஞானநிலையும் நீங்கப் பெறாத ருரு – ஆகிய நால்வர்களும், மற்றும் வளமைமிக்க சைவ மெய்ஞ்ஞானப் பேறுவாய்த்த முனிவர்களும் ஆகிய இவர்களின் அறிவுக் கூர்மைமிக்க மாணவர்கள் நூற்றுவர் எனவும் ஆயிரவர் எனவும் பெருகித் திகழ்ந்தனர்'' என செவ்விய சைவநெறியின் சிறப்பைக் கூறும் வாயுசம்மிதையின் பூர்வபாகமானது, இருபத்தெட்டாம் அத்தியாயத்தில் எடுத்துரைக்கும்.

8. ஆழ்ந்து கற்பதாலும் உரியாரிடம் கேட்பதாலும் உண்மை உணர்ந்து நன்னெறியாகிய செம்மை நிலையில் நிலைத்துநிற்க விரும்புவோர்க்கு, அருளாளர்கள் குறைவற்ற இந்த வைதிக சைவ சன்மார்க்கத்தையே உபதேசித்ததால், அந்நெறிநின்று எண்ணிய பயன்பெறலாம். இதை விடுத்து, அகந்தை உணர்வால் பல்வேறு வாதங்களை விளைவித்து, உண்மையைக் காணும் போது கூட நடுநிலை தவறி பக்ஷ பாதத்தால் தமது கொள்கையே மேலானது எனச் சாதித்து நிற்கும் அற்ப ஞானியர்களுக்கு, எவ்வாறு எடுத்துக்கூறி விளக்கினாலும் பயன்விளைவு என்பது ஓர் எள்ளின் அளவுக்கும் இருக்காது.

9. ஆகையால் இத்தகைய அற்ப அறிவாளர்களுக்கும், இவ்வுலகில் முற்பிறவியில் விலங்கினத்துக்குரிய பூத தேகம் தாங்கும் இழிபிறவி எடுத்து, இப்பிறவியில் முதன்முதலாக மானுட தேகம் எடுத்துள்ளவர்களுக்கும், துன்பமயமாகிய முற்பிறவி வாசனை மிகுதியாகப் பொருந்தப் பெற்று மந்தமான உள்ளம் வாய்த்துள்ள வஞ்சக ஞானிகளுக்கும், நல்லறிவு சான்ற பெரியோர், வேத ஆகமத் தெளிவாக விளங்கும் சைவசித்தாந்த நெறியைப் போதிக்கத் துணிய மாட்டார்கள்.

10. கீழே சிந்திய வெண்மையான பாதரசம் விரைவாகச் சிதறி ஓடுதல்போன்று அலைந்துகொண்டிருக்கும் சூனியவாதிகள், மெய்ந்நெறியான வைதிக சைவசித்தாந்தத்தை விளக்கும் பெரிய சாத்திரங்கள் (ஆகமங்கள்), புராணங்கள் ஆகியவற்றை ''துவைதம்பேசும் நூல்கள்; மயக்குறுத்தும் நூல்கள்'' என முரண்டு பிடித்து நிலைநாட்ட முற்படுவரேல், அன்புநெறிக்குரிய சைவர்கள் ''பாழ்பட்டுள்ள உங்களின் நெறிதான் மோசமானது" என்று கூறிப் புறக்கணித்து விட்டு, தேனமிழ்து மயமான வாக்கு வளம் சான்ற அருணகிரிப் பெருமானின் முழுமுதற் கடவுளாகிய குகப்பெருமானைத் தொழுதுநிற்றலே, நீதிநெறிப்பட்ட செயலாகும்.

# 51. பூந்தொடையல்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**ந்தொடையன் மிலைதிண்டோட் சசிம ணாளன்
பொறிசிறந்த வாரீத முனிநா னென்னும்
பாந்தளொழித் துயர்பரத்து வாச ராதி
பதரிகாச் சிரமமுனித் தலைவ ரேனோர்
போந்தநெறி யீதெனக்கொ ளெஞ்சித் தாந்தப்
பொருளேநற் பசுவைக்கொன் றுண்டு பெய்யாச்
சேந்தவழு மிப்பசுவு முனக்கூ ணாகச்
சேருநல்ல நாளென்றோ தெரிகி லேனே. (1)

**ப**ந்தத்து மோக்கத்து மிரண்டுண் டென்னாப்
பகர்சுருதி களைக்கேட்கச் செவிடா னாலும்
ஐந்திற்கி ரண்டுபழு தில்லை யென்றிவ்
வகிலத்தில் வழங்கொருதொல் லுரையை யேனுஞ்
சிந்தித்து னருள்விழையா ரினநா னல்லேன்
றிருவருளை மனத்தானும் பாக்க ளானும்
வந்தித்து வாழ்த்தியருச் சிப்போ னாவேன்
வருதியென்று விளித்தணையெங் கருணைக் கண்ணே. (2)

**ஆ**ன்மாவுக் காணவமின் றெனப்பி தற்று
மான்மாவுக் காணவமொன் றன்றி ரண்டென்
றேன்கூறா ருண்மைதெரிந் தாரென் பார்மே
லெரிந்துவிழு வார்காணாத் தத்து வங்கள்
தேன்போல நூனுவன்ற வாக தைத்துத்
தெரியமுய லாதிருப்பா ரினநா னல்லேன்
நான்மாண்டு நான்மாளா திருப்ப நோக்கு
நடையுடைய னாவேனீ விழுங்கிக் கொள்ளே. (3)

**ப**சுஞானத் தாலிம்பர்ப் பசுநூ லெல்லாம்
பகர்ந்தமுனி வோர்க்காத்து மாவின் கண்ணே
கசுமால வாணவமா மலமுண் டென்று
கடுகளவுந் தெரியாதென் றாக மந்தான்

*1. ஏனோர் = மற்றை நால்வரும் ; அடுத்துவரு சந்திரமௌலிப்பத்து 1–ஆந் திருப்பாட லோர்க.*

*2. சிவதரிசனமாங் காட்சியனுபவமே இங்கே "மோக்கம்" எனப்பட்டது. அதன்கட் காண்பானுங் காட்சிப்பொருளுமே இரண்டென்க.*

**சி**சுவறிவு மறியவெளிப் படையாச் சொல்லுந்
தீர்வறியா துளறுபவர்க் கயனா னெஞ்சு
முசுவாட்ட மொழிந்துசும்மா விருக்க நீதான்
முன்னாயோ வென்னாசைக்கியைந்த கண்ணே. (4)

**அ**ருவெனுநிட் களத்தினுக்கு மப்பா லாய
வதேகசிதா காசவின்பத் திரளா முன்னைப்
பெருநிலத்தோர் கண்காணா தேனு மிந்தப்
பேருலகே நினைக்காட்டுங் காட்டென் றோர்ந்து
கருதுநயப் புள்ளாரெல் லார்க்கு மீண்டென்
கரமுகிழ்த்து வாழ்த்திடுவேன் கவலு மாறு
பெருவிரலு மாட்காட்டு விரலுங் கூடிப்
பிரிவறவே நிற்குநிலைக் கிசையெந் தாயே. (5)

**க**ட்டுடைய வியற்கையருண் முதாலுன் னேயங்
கருதார்க்குப் பாசமறா தச்சொல் லாதி
கெட்டபதப் பொருண்மையறுங் கருணை தானுங்
கிளராதக் கருணையெனுங் கூற்றி னந்தம்
பட்டபதப் பயன்கிளரும் வந்தை தேயும்
பணித்தவத னடுப்போய பதனே யேறும்
எட்டுடனிங் குனைச்சூழு மடியேற் கன்மை
யின்மையுற நடுவுண்டோ வியம்பென் கோவே. (6)

**இ**டைநீத்தெங் கணுமுளவோர் பரமென் றுன்னை
யெண்ணாதார்க் கின்பாகா தந்தத் தோலின்
உடையதலை வரைந்துதுச் சேர்க்கி னங்ங
னுறுபயனா மாகதிதான் வாரா தச்சொற்
கடைநீக்கி றேயயலைச் சேர்க்கி னங்ஙன்
காண்பயனே வருமறிவு பெருகா தக்கீ
ரிடைநீக்கி ழாகாரத் தயலைச் சேர்க்கி
னெழும்பயனே பெருகுமிவை யெனக்கு முண்டோ. (7)

---

4. *ஆகமம் = **மிருகேந்த்ரமெனும்** ஆகமம் ; இதன், பாசலக்ஷண ப்ரகரணத்தே (ததாவரண மஸ்யாணோ : பஞ்சஸ்ரோதஸிசாங்கரே | பர்ய்யாயைர் பஹுபி: ப்ரோக்த மத்ருஷ்டம் பசுபிஸ் ஸதா ||) "இவ் வான்மாவிற்கு ஆவரணமாகிய அம்மலம், சைவசாத்திரத்திற் பல பரியாயநாம முடைத்தெனச் சொல்லப்பட்டுளது; அதனைப் பசுசாத்திரஞ் செய்தா ரறிந்ததில்லை." எனவரு முடிபே இத் திருப்பாட்டகத்துங் கூறப்பட்டது.*

6. *வந்தை = பெருமை ; "வந்தை கலந்தை பரிபணை யழுவம்" என்பது **சே—திவாகரம்**.*

*எட்டுதல் = தாவுதல், வீழ்தல் ; விரும்பற்பொருட்டு, எட்டு – முதனிலைத் தொழிற்பெயர்.*

7. *தோல் = சொல்; "தோலிபம் வனப்பு வார்த்தை" என லகரவெதுகையில் வருதல் காண்க. கீர் = சொல்.*

**உ**ற்பூத வனுற்பூத மாகக் காணிவ்
வுலகிடையா சாரத்தாற் குலத்தை யும்வாய்ச்
சொற்பாடை யாற்கல்வி யினையும் பூழ்தித்
தோலுடம்பா லுண்டியையும் பார்வை யாலே
முற்காட்டாக் குறியினையு மேனைச் செய்கை
முதலியவற் றாலுள்ளு முள்ள மெல்லாந்
தற்போதத் தாலறிய லாமுன் றன்மை
சார்ந்திறந்தார் தமையறிதற் கேது வின்றே. (8)

**பொ**ய்யுலக வாழ்க்கையினிற் பிணிப்புண் டெண்ணில்
பொய்நினைந்து பொய்பேசிப் பொய்க ளாற்றிப்
பொய்நுகர்ந்து பொய்யினிடைப் புரண்டு துஞ்சிப்
பொய்யினும்பொய் யாமுடம்பை மெய்யென் றுள்கிப்
பொய்யின்மடிந் திடுவாரொத் திருந்த வெற்குப்
பொய்யிவையென் றறிவித்து மெய்யைச் சுட்டிப்
பொய்விழிக்கெட் டாதுமறைந் துளவுன் னன்பு
பொய்த்திடுமோ முழுதுமெனைப் புரந்தா ளாதே. (9)

**ப**ன்னிரண்டு முக்காலுட் பத்தின் மேலே
பகரொருமுக் காலினையுங் கடந்து மீப்போய்
நின்னமிச மாமுக்கா றனிலே நின்று
நிகழுமந்த முக்காலு மறுமோர் கண்ணே
என்னையினி தாகவைத்தா லன்றோ வென்ற
னெண்ணநிறை வேறுமந்த வாறே யாற்றாய்
இன்னமுத மெனப்புகழ்கள் சொற்றா னுள்ளே
யினித்திருந்த தேனேயென் றனையாள் வானே. (10)

# 51. பூந்தொடையல்

**1.** பூமாலை அணியப்பெற்றுள்ள உறுதியான தோள்களை உடையவனும், இந்திராணியின் கணவனுமான இந்திரன், தவநெறிக்கு ஏற்றவாறு சிறந்துள்ள கருவிகரணங்களை உடைய ஆரிதர் எனும் முனிவர், நான் எனும் அகந்தையை ஒழித்து உயர்ந்துள்ளவரும் பதரிகாசிரமத்தில் இருந்த முனிவர்க்குத் தலைவரும் ஆன பாரத்வாஜர், மற்றும் உள்ள அகத்தியர், கௌசிகர், காசியபர், கௌதமர் எனும் நால்வர்கள் – ஆகிய இவர்கள் தாம் கடைப்பிடித்து உயர்ந்து உய்வதற்குரிய நெறி இதுவே என உணர்ந்து கொண்டு வைதிக சைவ சன்மார்க்கத்தை மேற்கொண்டனர். இத்தகைய எமது சைவசித்தாந்தம்

*8. உற்பூதம் = காணப்படுவது. அனுற்பூதம் = காணப்படாதது.*
*பூழ்தி = தசை;* ***பி–நிகண்டு.***

நிறுவிக்காட்டும் மெய்ப்பரம் பொருளே! பசுவைக் கொன்று புசித்து நீங்காத பாவப்பயன் சேர்ந்துள்ள இந்தப் பசுவாகிய நான் உனக்கு உணவாக அமைவதற்குரிய பொருத்தமான நல்ல நாள் என்றைக்கு வருமோ ? என்னால் அறிய இயல வில்லையே.

2. பந்தங்களுக்கு ஆட்பட்டுள்ள நிலை, முத்திநிலை ஆகிய இரண்டு நிலைகளிலும் சீவான்மா, பரமான்மா எனும் இரண்டும் உண்டு எனக்கூறும் வேத ஆகம வசனங்களைக் கேட்பதற்குக் காது செவிடுபட்டிருந்தாலும், 'ஐந்துக்கு இரண்டு பழுதில்லை' என இவ்வுலகில் வழங்கிவரும் பேச்சுவழக்கையாவது சிந்தித்து உணர்ந்து உனது திருவருளை அடையும் வழியை மேற்கொள்ள விரும்பாமல் அலையும் வீணர்களுள் ஒருவனாக நான் இல்லை. உனது திருவருட் பேற்றையே கருதி மனத்தாலும் பாட்டுக்களாலும் உன்னைப் போற்றியும் வாழ்த்தியும் வழிபடும் தூய அடியார்களுள் நானும் ஒருவன். என் கருணைக் கண்ணே! வருக என என்னை அழைத்து அணைத்துக்கொள்க.

3. ஆன்மாவுக்கு ஆணவம் எனப்படும் மலம்இல்லை எனப்பிதற்றும் இழிவான மாந்தனைப் பார்த்து "ஆணவம் ஒன்றல்ல, உன்னை நோக்க ஆணவம் இரண்டு உண்டு" என, உண்மை உணர்ந்த ஞானியர் ஏன் கூறாமல் உள்ளனர் எனக் கேட்பார்மேல் எரிந்து விழுவார்கள்; காணாத, கேளாத தத்துவங்களைப் பற்றி வேதாகமங்கள் கூறியுள்ளனவாகத் தேன்போல இனிமைபொருந்தக் கட்டுக்கதைகள் கூறி உண்மையான தத்துவ நிலையைத் தெரிந்து கொள்ள முயலாமல் இருப்பார்கள். இத்தகை மூடர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன் நான் அல்லன். 'நான்' எனும் உணர்வு அடியோடு நீங்கி நான் எனும் எனது ஆன்மா உன்னோடு இரண்டறக் கலந்து நிலைத்திருத்தலையே உயர்ந்த பேறாக எண்ணும் ஆன்ம ஒழுக்கம் உடையவன் அடியேன். இத்தகைய என்னை முழுதுமாக விழுங்கிக்கொண்டு அருள்.

4. என் அத்துவித வேட்கைக்கு இணங்கி அருளும் அருட்கண்ணே! பசுஞானம் ஒன்றைமட்டுமே பெற்று, இவ்வுலகில் பசுத்தொடர்பான (பந்த ஆன்மத் தொடர்பான) நூல்களைக் கூறிய முனிவோர்க்கு "ஆன்மாவோடு கலந்துள்ள அழுக்குமயமான ஆணவம் எனப்படும் மலம் ஒன்று உண்டு" எனும் உண்மை கடுகளவுக்கும் தெரியாது என மிருகேந்திர ஆகமம், சாதாரண ஒரு குழந்தையின் அறிவும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மிக வெளிப்படையாகக் கூறியுள்ள உறுதியான முடிபை அறியாமல் மனம்போன போக்கில் உளறுபவர்களுக்கு நான் என்றைக்கும் அயலாகவே உள்ளேன். எனது மனம், தனது குரங்காட்டத்திலிருந்து நீங்கி சும்மா இருத்தல் எனும் மௌனநிலையில் நான் இருக்க நீ திருவுள்ளம் கொள்ளமாட்டாயோ ?

5. அருவம் எனப்படும் நிட்கள நிலைக்கு அப்பாற்பட்டுள்ளதும் காரண தேகத் தொடர்பற்றதுமான சிதாகாச ஆனந்தத் திரட்சியாக விளங்கும் உன்னை, இப்பெரிய உலகத்துள்ளாரின் கண்கள் நேரே காண இயலாது எனினும், இந்தப் பெரிய உலகமே உனது இருப்பை உணர்த்திக் காட்டும் பிரத்தியட்ச எடுத்துக்காட்டாக உள்ளது என ஆய்ந்துணர்ந்து சிதாகாசமான உன்னையே தியானிக்கும் பேரன்புநிலையை உடைய அடியார் அனைவரையும் நான் இருகரம் கூப்பி வணங்கிடுவேன். எந்தையே! அத்துவிதானந்த வேட்கையால் கவலை கொண்டிருக்கும் எனது எண்ணம் ஈடேறும்வகையில் பெருவிரலும் ஆட்காட்டிவிரலும்

இணைந்து பிரிவற்று நிற்கும் சின்முத்திரை உணர்த்தும் அத்துவிதக் கலப்பு நிலை அடியேனுக்கு வாய்க்கத் திருவுள்ளம் இசைந்தருள்க.

6. பந்தப்பிணிப்புக்கு உட்பட்டிருப்பதை இயல்பாகக் கொண்டுள்ள உயிர்க்கூட்டம் அனைத்துக்கும் முதல்வனே! உனது திருவருட் பேற்றை விரும்பாமல் புறமே போவார்க்குப் பாசம் என்பது நீங்காது; பாசம் எனும் சொல்லின் முதலெழுத்து நீங்க அமையும் சம் எனும் சொல்லுக்குரிய பொருள் (இன்பப்பேறு; மங்களப் பேறு) என்பதே நீங்கிநிற்கும்; உனது கருணை கிடைக்காது; கருணை எனும் சொல்லின் ஈற்றெழுத்து நீங்க அமையும் சொல்லுக்குரிய (கரு எனும் சொல்லின்) பயன்தான் (பிறவிதான்) மிகுதியாகக் கிடைக்கும்; அவர்களது பெருமை பாழ்படும்; வந்தை எனும் சொல்லின் நடுவெழுத்து நீங்க அமையும் சொல்லுக்குரிய பயனே (வதை; துன்பம்) மிகுதியாகும். என் அரசே! பெருவிருப்பத்துடன் உனைத் தியானிக்கும் அடியேனுக்கு 'நீவேறு; நான்வேறு அற்று இருத்தல்' என்பது இல்லை என ஆகிவிடுமோ? அவ்வாறு ஆக ஒரு நியாயமும் உண்டோ? கூறி அருள்.

7. இடையீடு இல்லாமல் எங்கும் நீக்கமற வியாபித்துள்ள ஒப்பற்ற பரம்பொருள் நீயே என உன்னைக் கருதாதார்க்கு இன்பம் வாய்க்காது; இன்பம் எனும் சொல்லின் முதலெழுத்தை நீக்கித் 'து' எனும் எழுத்தைச் சேர்த்தால் அமையும் சொல்லின் பயன்தான் (துன்பம்தான்) கிடைக்கும்; மாகதி (பெருமைமிக்க சாயுச்சியநிலை) என்பது வாய்க்காது; மாகதி என்னும் சொல்லின் இறுதி எழுத்தை நீக்கி 'றை' எனும் எழுத்தைச் சேர்த்தால் அமையும் சொல்லின் (மாகறை என்பதன்) பொருளான பெரும்பாதகமே வந்து பொருந்தும்; அறிவு நிலை பெருகி நிற்காது; அறிவு என்ற சொல்லின் இடை எழுத்தை நீக்கி 'ழி' எனும் எழுத்தைச் சேர்த்தால் அமையும் சொல்லின் பயனே (அழிவு என்பதே) மிகுதியாக வாய்க்கும். இத்தகைய துன்பநிலைகள் எனக்கும் வாய்க்க எங்கேனும் இடமுண்டோ?

8. காணப்படும் பொருள்மயமாகவும் காணப்படாத பொருள் மயமாகவும் தோன்றும் இவ்வுலகில் ஒருவரது ஆசாரத்தால் அவரது குலத்தையும், பேசும் சொல்லின் தரத்தால் கல்வித் தரத்தையும், சாம்பலாகும் இந்தப் பூத உடலின் அமைப்பால் உணவின் தரத்தையும், பார்வையால் உள்ளக் குறிப்பையும், மற்றும் பற்பல செய்கைகளால் உள்ளத்தின் பல்வேறு இயல்புகளையும் தற்போதமாகிய சீவ அறிவால் அறிந்து கொள்ளலாம். ஆனால் உனது எண்குண வளம் வாய்க்கப்பெற்று, எண்குண நிறைவில் தம்மைக் கரைத்துக் கொண்டவர்களுடைய இயல்பை அறிவதற்கு மூலமாக (வழியாக) ஒரு கருவியும் இல்லையே!

9. பொய்ம்மை மயமான இவ்வுலக வாழ்க்கையில் மாறாத ஈடுபாடும் பிணைப்பும் கொண்டு, எண்ணற்ற பொய்களைச் சிந்தித்து, பொய்யுரையையே பேசி, பொய்ம்மையான போலிச் செயல்களைச் செய்து, பொய்ப்பயனையே அனுபவித்து, பொய்களின் ஊடே புரண்டு அலைந்து தூங்கி, பொய்யிலேயே கொடிய பொய்யாக விளங்கும் இந்தத் தூல தேகத்தையே மெய்யென நினைத்து பொய்த்தன்மையிலேயே மாண்டு போகும் பொய்யர்களைப் போன்று இருந்த எனக்கு இவை இவை பொய் என அறிவித்து மெய் இது என உணர்த்திய உனது பேரன்பு, பொய் விழிகள் காணாத வகையில் கூடகமாக மறைந்துள்ளது. இத்தகைய உனது மெய்யன்பு, முழுவதுமாக என்னைக் காத்து ஆட்கொள்ளாமல், எப்பொழுதேனும் பொய்த்து விடுமோ!

**10.** இனிய தேனமுதம் போன்று இனிக்கும் திருப்புகழ்ப்பாக்கள் பாடிய அருணகிரிப் பெருமானின் இதயத்துள்ளே ஆனந்தமயமாக வெளிப்பட்டிருந்த அருள் தேனே! என்னை ஆட்கொண்டு அருள்பவனே! முப்பத்தாறு தத்துவப் படிகளுள், முப்பது படிகளுக்கும் மேலே உள்ள மூன்று படிகளையும் கடந்து (ஈசுவரதத்துவத்தையும் கடந்து) மேலேசென்று, அந்நிலையில் உனது அமிசமாக உள்ள சதாசிவ தத்துவம் முதலான மூன்று படிகளிலும் லயிக்கச் செய்து, பின்னர் அம் மூன்று படிகளும் நீங்கும்வண்ணம், அவற்றையும் கடந்துள்ள அதீதத் தானத்தில் என்னைச் சிவமாக இனிதாக்கி வைத்தால் அல்லவா எனது எண்ணம் நன்கு நிறைவேறினதாக ஆகும்?

# 52. சந்திரமௌலி

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ச**ந்திர மௌலியி லங்கவி ளங்கொரு தக்கிண முகனருளால்
மந்திர சீகண்டர் பாலுதித் துளதுரு வாசரு மகத்தியரும்
பந்தமில் கௌதமர் காசிபர் கௌசிகர் பரத்துவ சரும்விரும்பி
வந்தசித் தாந்தமு தாலுனை நீத்துய்யு மார்க்கமு முளதாமோ. (1)

**த**கைச்சனற் குமரருஞ் சனகர்ச னாதனர் சனந்தன ரென்பவரும்
மகச்சிறப் புடையகொ தாவரிக் கரையினின் மந்திர காளியெனுஞ்
சகச்சிறப் புடைநக ரெங்குமி ருந்துள சைவரு மணைந்துநின்ற
மிகச்சிறப் புடையசித் தாந்தமு தாலுனை விட்டுய்யு நெறியுமுண்டோ. (2)

**ஒ**ன்றெனு மாத்தும வாதிசொற் போன்மிக வுரைத்திடும் ரிபுகீதை
என்றவொர் சுவடியும் விடுதலைக் காமறி வென்பது சிவனருளால்
அன்றிவ ராதென வலியுறுத் தறைகின்ற தவ்வுரை பிடித்தேனும்
உன்றயை கருதலின் றவனிவ னெனுமசத் துரையின ரடைவதென்னே. (3)

**பு**ண்ணிய வினைப்பரி பாகம தால்வெகு புதைகளின் மேன்மோக்க
எண்ணமுண் டாகுமக் கானெடு நாளிறைக் கேவனன் கிழைத்தலினால்
மண்ணினை நீத்தெவ னோவொரு வன்சிவ மருவுவ னெனின்வேதங்
கண்ணிழந் தச்சிவ நாமெனுங் குழுக்களின் கருத்துநுட் பமுஞ்சொலவோ. (4)

---

*1. தக்கிணமுகன் – தமிழ்நூன் முடிபு. அகத்தியர்முதலிய ஐவரும் பஞ்சருஷிகளெனப் படுவர் : இவர்களே ஆதிசைவர்களென்றுங் கழறுப : உண்மை யாதாயினுமாக. இருடிகட்கோர் குறைவுமின்று.*

*4. இதன்கட்போந்த "வேதம்" **பைங்கலோபநிஷத்தின்** 2–ஆம் அத்தியாயம். இதனிறுதி – "ஸத்கர் மபரிபாகதோபஹூநாம் ஜந்மநாமந்தேந்ருணாம் மோக்ஷேச்சா ஜாயதே" என்று கூறிச் சேறலின் இத்திருப்பாட்டுப் பொருளை யறியலாம். புதை = உடம்பு ; ஈண்டு, பிறப்பின் மேற்று.*

**ப**ங்கய விலைச்சல மெயிறுபி டுங்குண்ட பணம்புளி யம்பழமோர்
தங்கிய வேசியி னுறவுற முயிர்ச்சிவ தசைமலத் தளையினுக்குந்
துங்கவி தேககை வல்லியத் தினுக்குநன் னடுவெனச் சொலவுளதாற்
பொங்கறி விலிகளு மந்நடு வுளரொவ்வப் புலம்பவுந் துணிந்தனரே. (5)

**வி**த்தைய னானவன் றான்பர மன்றென விவகரிக் கொண்ணாதென்
றுத்தம வாரண மறையினஃ தைந்தென வுரைத்திடு மவத்தைகடாம்
எத்துணை யேனுமின் றிருக்கமுன் னிலைக்குறி யென்பதை விடச்சொனதென்
அர்த்தநல் கும்மது நணுகொரு நிலையென வறிவின ரரற்றுவரே. (6)

**யா**தொரு நடுவினை யானறிந் துளதிது வெனினதற் கிசையாதார்
கோதது வென்மரங் ஙனம்பழை யுரையெனிற் கூற்றொழிந் திருப்பர்சிலர்
ஏதமென் றதனையு மறுத்திட முயலுவ ரித்தகை யபுவியிலே
வேதவுன் றாசரும் வசித்துமெய் விருப்புற விதித்தது முனதருளே. (7)

**அ**ன்னிய ரெனதுரை போனெறி யாகினு மாகுக மலத்தடிப்பாற்
பின்னெது கூறினுங் கூறுக வவர்விதி பிடித்தெதில் விடினும்விட
மன்னத னாலெதை நுகரினு நுகருக மதிமலி நின்னடியார்
இன்னமிழ் திதுவென வெனதுரை யேற்றுய்ய விறையுமை யமதிலையே. (8)

**அ**ளப்பறு விறகுக ளானும னேகநல் லாறுக ளானுமசை
உளப்பசு வெவ்வள வானுமொர் திருத்தியு றாவெரி கடலியமன்
வளர்ப்புரம் போலுள மோகுளம் யாதினு மாதிருத் தியடையுமோ
களிப்பரு ளேயதைத் திருத்திசெ யுமமுத கனகச பாபதியே. (9)

**தா**ய்கருப் பாசய வாசவெந் துயரினுந் தையலின் பமுடிவினும்
வாய்மையு ளார்நலம் வழுத்தெழி னூற்சிர வணத்தினும் பிணவனத்துந்
தூய்மணி யெனவெழு ஞானமிங் கொருவனுட் டொலைவின்றி யிருந்திடுமேல்
தேய்வறு கதிபெறற் கையமுண் டோபுகழ் தெரித்தவற் கருள்குகனே. (10)

---

*5. உயிர்ச்சிவம் = சீவன்முத்தி,*

*6. அரற்றல் = ஒலித்தல் ; ஈண்டு உரைத்தற்பொருட்டு.*

*9. "கனக சபாபதி" என்னும் பெயர்ப்பொருளைத் தகராலயரகசியவுரையிற் கண்டு தெளிக.*

# 52. சந்திரமௌலி

1. பிறைநிலவு அணியப்பெற்ற சடாமகுடம் பொலிவுடன் விளங்க ஒளியுடன் திகழும் தென்முகக் கடவுளின் அருளால் மந்திரமயமான திருமேனி தாங்கிய ஸ்ரீகண்ட ருத்திரரிடமிருந்து தோன்றிய துருவாச முனிவரும், அகத்தியமுனிவரும், மும்மலத் தளை அற்ற கௌதமர், காசியபர், கௌசிகர், பாரத்துவாசர் என்னும் முனிவர்களும் உளமுவந்து ஏற்றுக் கொண்ட சித்தாந்த நெறிக்குரிய முழுமுதற் பொருளே! உன்னை நீத்து, மக்களை உய்திபெறச் செய்யும் ஒரு மார்க்கமும் இவ்வுலகில் உண்டோ ?

2. தகுதிசான்ற சனற்குமாரர், சனகர், சனாதனர், சனந்தனர் என்போரும் வேள்விச் சிறப்புடைய கோதாவரி நதிக்கரையில் வளம்பெற்றிருந்த மந்திரகாளி என்னும் உலகப்புகழ்பெற்ற திருத்தலத்தில் வாழ்ந்திருந்த சிவவேதியர்களும் ஈடுபாட்டுடன் மேற்கொண்டிருந்ததும், மிகவும் சிறப்புடையதுமான சைவசித்தாந்த நெறிக்குரிய முழுமுதற் பொருளே! உன்னை நீத்து, மக்களை உய்திபெறச் செய்யக் கூடிய நன்னெறியும் இவ்வுலகில் உளதோ ?

3. ஆன்மா ஒன்றே எனும் ஏகான்மவாதம் கூறுவது போன்று, ஏகான்மக் கொள்கையை அதிகமாக வற்புறுத்தும் ரிபுகீதை என்னும் நூலும் முத்திப் பேற்றை நல்கும் ஞானம் என்பது சிவனருளால் அன்றி மற்ற எந்த வழியாலும் வராது என அறுதியிட்டு முழங்குகின்றது. அவ்வுரையைக் கடைப்பிடித்தாவது உனது திருவருளை நாடாமல் ‘அந்தப் பரமான்மாவே இந்தச் சீவான்மா’ எனப் பொருளற்ற தத்துவம் பேசுவோர் அடையக் கூடிய பயன் யாது ?

4. பற்பல பிறவிகளை எடுத்த பிறகு, புண்ணியவினை, பாபவினை ஆகியவற்றுக் குரிய பயன்களால் தாக்குண்ணாமல் மனக்கலக்க மற்று இருக்கும் பரிபக்குவ நிலையில் – மலபரிபாகம் வந்த அளவில் – முத்திப்பேற்றைப் பற்றிய எண்ணம் உண்டாகும். அப்பொழுது இறைவனுக்கு (குருவுக்கு) மனத்தூய்மையுடன் பற்பல சேவைகளைச் செய்வதால் இவ்வுலகில் பிறவி எடுப்பதைத் தவிர்த்துப் பல்லாயிரக் கணக்கானவர்களுள் எவனோ ஒருவனே சிவநிலையை அடைவான் என வேதம் கூறுகிறது எனின், அருள்ஞானத்தையும் உளப்பக்குவத்தையும் இழந்து ’சிவமே நாம்’ எனும் கூட்டத்தினர் கூறும் கருத்துக்களின் நுட்பத்தை எம்மால் சொல்லவும் முடியுமோ ?

5. சீவன் முத்தி நிலையானது, மும்மல பந்தங்களுக்கு உட்பட்டிருக்கும் நிலை, விதேக கைவல்லிய முக்திநிலை ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்டுள்ள ஒருநிலை; இது தாமரை இலைத் தண்ணீர், பல்நீக்கப்பட்ட பாம்பு, புளியம்பழம், அழகிற்சிறந்த வேசியின் உறவு என்பனவற்றோடு உவமிக்க உள்ள ஒருநிலையாகும். பெருகி எழும் ஞான உணர்வு இல்லாதோரும் அத்தகைய சீவன் முத்தி நிலையைப் பெற்றுவிட்டவர் போன்று புலம்பவும் உள்ளம் துணிந்தனரே! அந்தோ!

**6.** பிரம்மத்தை உபாசிப்பவன் தான் பரம் அன்று என விசாரணையும் ஆலோசனையும் செய்து கொண்டிருப்பது பொருந்தாது என உத்தமமான வேதம் கூறுகின்றதால், இதன் உட்பொருள் யாதெனில், சாக்கிரம் முதல் துரீயாதீதம் வரை உள்ள ஐந்து அவத்தைகளும் அறவே நீங்கப் பெற்றுத் தான்மட்டும் தனித்து இருக்கும் பொருட்டு முன்னிலைக் குறியாக (எதிரே ஒரு சுட்டுப் பொருளாக) உள்ளதை விடவேண்டும் என உணர்த்துவதாகும் அக்கூற்று. இந்த உட்பொருளையே அவ்வேதக் கூற்று கொண்டுள்ளது. அது உபாசகன் அடையக்கூடிய உயர்ந்த நிலை என அறிஞர் கூறுவர்.

**7.** வேதப்பொருள் மயமான இறைவ! எந்த ஒரு நியாயமான மெய்ப்பொருள் முடிபையும் 'நான் எனது அனுபவத்தில் அறிந்துணர்ந்துள்ளது இது' எனக் கூறினால், அதனை ஏற்றுக் கொள்ள விருப்பம் இல்லாதோர் 'இது குற்றம் பொருந்திய கோட்பாடு' எனக் கூறுவர்; அன்றேல், இது வழிவழியாக வரும் பழைய நூலில் கூறப்பட்டுள்ள கருத்தே என்றால், எதுவுமே பேசாது இருப்பர்; அல்லது, மற்றும் சிலர் "பழைய நூலின் கருத்தாக இருந்தாலும், அது குற்றம் வாய்ந்ததே" என்ற பழைய வசனமாகிய அதனையும் மறுத்துக் கூற முயல்வர். இவ்வாறு முரண்பாடு மிகுந்துள்ள இந்த உலகில் உன் அடியார்கள் வாழுமாறு செய்து, அவர்கள் எவ்வாற்றாலும் மெய்ப்பொருளையே விரும்பி நிற்குமாறு செய்தது உனது திருவருளே ஆகும்.

**8.** நான்கூறும் கருத்துப் போன்று, அயலவர் மேற்கொள்ளும் நெறி யாதாயினும் ஆகுக; பொருந்தினாலும் பொருந்துக. ஆணவமலத்தால் அமையும் செறிந்த மறைப்பு காரணமாக, வேறொன்று கூறினும் கூறுக; பிரமாண நூல்களில் கூறப்பட்டுள்ளனவற்றுள் சில விதிகளைப் பின்பற்றி, மனம்போன போக்கில் விடவேண்டியவற்றை விடுக; அவ்வாறு ஒழுகுவதன் மூலம் எதனை அனுபவிக்க வேண்டி இருந்தாலும் அதனை அனுபவித்திடுக. ஆனால், ஞானவளம் மிகுந்துள்ள நின் அடியார்கள் எனது கருத்துரையை இனிய அமிழ்தம் என ஏற்று உய்தி பெறுவதற்குச் சிறிதளவும் ஐயம் இல்லை.

**9.** அமுதமயமான பொன்னம்பலத்துக்குரிய தனித்தலைவனே! எப்பொழுதும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கும் உள்ளத்தை உடைய சிற்றறிவுச் சீவன். அளவற்ற உபாயங்களாலும் சரி, அளவற்ற நெறிமுறைகளாலும் சரி, ஓரளவுக்கும் திருப்தி என்பதை அடையான். மோகத்தின் வயப்பட்டுள்ள உள்ளமானது, நெருப்பு, கடல், யமதருமராசனின் பட்டினம் என்பவை போன்று எதிலும் எப்போதேனும் திருப்தியை அடையுமோ? அந்தத் திருப்தியைத் தருவது, களிப்பை மிகுவிக்கும் உனது திருவருள் ஒன்றே.

**10.** திருப்புகழ் அருளிய அருணகிரிப் பெருமானுக்கு அருள்புரிந்த குகப்பெருமானே! தாயின் கருப்பைக்குள் வாசம் செய்யும் துயரமான காலத்திலும், பெண்ணின்ப நுகர்ச்சியின் முடிவிலும், சத்திய நெறியிற் செல்லும் சன்மார்க்கிகளின் பெருமையைக் கூறும் அரிய நூலின் கருத்துக்களை ஆசான் வழியே கேட்கும் போதும், இடுகாட்டைக் காணும் போதும், தெளிந்த தூயமணி போல தோன்றிமலரும் ஆன்மஞானம் ஒருவன் உள்ளத்தில் நீங்காமல் நின்று மேன்மேலும் வளர்ந்திடுமேல், அவன் அழியாததாகிய முத்திப் பேற்றைப் பெறுவதற்கு ஐயம் சிறிதும் உண்டோ!

# 53. கடல்

## அந்தாதி.

*கலி விருத்தம்.*

**க**டல்வ ளைந்துல கத்துழை யென்கோள்
இடர்க ளைந்தரு ளீட்டிடு முன்னை
விடவ கங்கொளு வேன்கொலு றங்காத்
திடவ ரம்பர ணங்குசெய் தேனே. (1)

**தே**னி னுஞ்சுவை தெவுளொரு தேனே
வானி னும்பெரி தாமொரு வானே
நானி றந்தொரு நலநனி நண்ண
நீநி னைந்தது நிகரறு மன்பே. (2)

**அ**ன்பி லன்பென நின்றரு ளன்பே
இன்பி லின்பென நின்றிடு மின்பே
உன்பெ ருந்துணை யோங்கிவ ளைந்தால்
என்பெ ருந்துனி யென்பது முண்டோ. (3)

**உ**ண்ட நீரினை யேசுடு மொளியைக்
கொண்ட வன்கருங் கொல்விட லுண்டோ
கொண்ட பின்னெனை யன்னியங் கூறற்
கண்ட னேநடு வுண்டுகொ லரசே. (4)

**அ**ரச ருக்கர சாமுத லரசே
விரவு முத்தியின் மேவிய மேலோர்
தரணி யிற்றிரி தருபவ ராமேல்
தரணி பொய்யெனச் சாற்றுரை யென்னாம். (5)

**எ**ன்னை யாண்முத லேமுத மேமாச்
சொன்ன மேமணி யேதுணி யேயுன்
தன்னை மேவிடு தான்பிசி யாமேல்
உன்னை மெய்யென வோதுரை யாதாம். (6)

---

*1. வளைந்துலகத்துழை – வளைந்தவுலகத்துழை என்பதன் விகாரம்.*
*அணங்கு = ஆசை ; ணகரவெதுகை.*

*4. கருங்கொல் = இரும்பு ; **பி – நிகண்டுஞ் சூ – நிகண்டுங்** காண்க.*

*6. பிசி = பொய்.*

**யா**து முன்னை யலாதிலை யென்றே
ஓது மெய்ம்மொழி யுள்ளினு மந்த
யாது மென்னுஞ் சொ லானது முண்டே
தீது கொன்றருள் செய்குக தேவே. (7)

**தே**வ ரெவ்வரு மேத்தொரு தேவே
தாவி றுப்புறு சாம வசிச்சொல்
ஆவ தற்குரை யைக்கிய மொன்றென்
றேவர் சொல்லினு மொவ்வுவ தின்றே. (8)

**இ**ன்று நாளை யெனாநிலை யெந்தாய்
ஒன்றோ டொன்றுற லேயது வோவா
நன்ற சிப்பொரு ணல்ல புணர்க்கை
என்று சொற்றிட லாமதை யீந்தாள். (9)

**ஆ**ளு மன்ப ரகத்துளி யெந்த
நாளு முள்ள நலந்தரு வாயோர்
கோளு மில்லனு பூதி குயின்றோன்
கேளு கந்தவொர் கேள்கெழு கடலே. (10)

# 53. கடல்

**1.** கடலால் சூழப்பட்டுள்ள இந்த உலகில் எனது குற்றங்களையும் துன்பங்களையும் நீக்கி அருளை வழங்கும் உன்னை விட்டு விலக நான் ஒருபோதேனும் எண்ணம் கொள்வேனோ? ஞான உறுதி நிலையில் நீங்காது, திடநெஞ்சம் வாய்ந்துள்ள முனிவரர்கள் ஆசைப்பட்டு வணங்கும் அருள் ஆனந்த மயமான தேனே!

**2.** தேனைக் காட்டிலும் தனிச்சுவை மிகுந்துள்ள, அதீதமாகிய தெளிவான தேனே! பூதாகாசத்தையும் தோற்றுவித்துப் பெரிதுபட்டிருக்கும் ஒப்பற்ற பரம ஆகாசமே! 'நான்' என்னும் நிலையைக் கடந்து, ஒப்பற்ற அருள்நலனை மிகுதியாகப் பொருந்த நீ திருவுள்ளம் கொண்டுள்ளது உனது எல்லையற்ற கருணைநிலைக்கு எடுத்துக்காட்டாம்.

**3.** அன்புத்திறத்தில் மிகமேம்பட்டு விளங்கும் அன்பு மயமாக விளங்கிநின்று அடியார்க்கு அருளும் பேரன்பு நிலையே! இன்பத்திறத்தில் மிகமேம்பட்டு விளங்கும்

*9. 8–ஆந் திருப்பாட்டின்கணியம்பப்பட்ட ஐக்கியந்தானே இத்திருப்பாட்டின் கண் "அது" என அனுவாதஞ் செய்துகொள்ளப்பட்டது ; அதனையே "ஓவாநன்று" எனவும், "அசிப்பொருள்" எனவும், "நல்ல புணர்க்கை" எனவுங் கூறியவா றுணர்க. அசிப் பொருளை 49–ஆம் பத்தின் 7–ன் குறிப்புரையி னோர்க. புணர்க்கை = ஐக்கியம் எனவாம். இஃதெத்திறத்த தென்பது, சிவசூரியப் பிரகாசத் தினிதுணரக் கிடக்கின்றது (பரிபூரணானந்த போதமுற்படலத்து 106–ன் உரை).*

இன்பமயமாக விளங்கித் திகழ்ந்திடும் பேரின்பநிலையே! உனது பெரிய அருள்துணையாகிய கவசம் ஓங்கி எழுந்து என்னைச் சூழ்ந்து கொண்டால் எனக்கு ஏற்பட்டுள்ள பெரிய துன்பம் என்பது இனியும் இருப்பதற்கு இடமுண்டோ?

4. பிரபஞ்சக் கூட்டத்தைத் திருமேனியில் கொண்டிருப்பவனே! என் அரசே! சுடும் நெருப்பொளியை ஏற்றுக்கொண்டு நெருப்புமயமாக உள்ள வலிய இரும்பானது தான் உட்கொண்ட நீரை எப்போதாவது மீட்டும் வெளியே உமிழ்ந்துவிட இடமும் உண்டோ? அவ்வாறே, நீ என்னை முழுவதுமாக ஆட்கொண்டுவிட்ட பிறகு, என்னை உனக்கு அன்னியமாகக் கூறுவதற்கு ஒரு நியாயமும் உண்டோ?

5. அரசர்க்கெல்லாம் அரசாக முதன்மைத் தானத்தில் விளங்கும் தெய்வச் சக்கிரவர்த்திப் பெருமாளே! இரண்டறக் கலக்கும் முத்திப்பேற்றைப் பெற விழையும் மேலோர், இப்பூமிப்பரப்பில் திரிபவர்களே. அவர்கள் தமக்கு ஆதாரமாக உள்ள பூமியையே பொய் எனக் கூறும் உரை எங்ஙனம் பொருந்துவதாகும்?

6. என்னை ஆட்கொள்ளும் முழுமுதற் பொருளே! ஆனந்தமயமே! பெருமை மிக்க, மாற்றுயர்ந்த பொன்னே! அனைத்திலும் மேம்பட்டுத் தெளிந்துள்ள பேரொளியே! உன்னோடு இரண்டறக் கலக்கும் ஆன்மாவாகிய தான் பொய்யாகி விடுமேல், சத்து எனப்படும் மெய்ப்பொருள் என உன்னைக் கூறும் உரை யாதாகும்? (எவ்வாறு பொருந்துவதாகும்).

7. உன்னைத் தவிர்த்து வேறு பொருள் யாதும் உலகில் இல்லை எனக் கூறப்படும் மெய்யுரைக்கு உள்ளேயும் அந்த 'யாதும்' எனும் சொல்லும் அடங்கித் திகழ்கிறது அன்றோ! உனது பரிபூரண வியாபகத்துள் அடங்காத பொருளோ, ஒலியோ எதுவும் இல்லை. குகதெய்வமே! எனது தீமைகளையெல்லாம் அடியோடு அழித்து அருள்புரிக.

8. தேவர்கள் அனைவரும் போற்றித் துதிக்கும் மகா தேவ! அழிவில்லாததும் தூய்மை மிக்கதும் ஆகிய சாம வேதத்தில் வரும் 'அசி' எனும் பதத்துக்கு உரிய பொருள் (தத்துவம் அசி என்பதில்வரும் அசி எனும் சொல்லுக்கு உரிய அர்த்தம்) இருபொருள்களின் ஐக்கியமே. அசி என்பது ஒன்றாக உள்ள ஒருபொருளையே குறிக்கும் என யார் சொன்னாலும் அது பொருந்தாது.

9. 'இன்று' எனவும் 'நாளை' எனவும், ('நேற்று' எனவும்) பிரிவுபட்டுள்ள கால நிலைகளால் சுட்டப்பட முடியாமல், காலாதீதமான நிலைக்குரிய எந்தையே! அந்த ஐக்கியம் என்பது ஒன்றுடன் மற்றொன்று இரண்டறக் கலந்து நிற்பதே. அந்த ஐக்கியநிலையே, எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும் சிவநிலை; அதுவே 'அசி' என்பதன் பொருள்; அதுவே ஆனந்தப் பேறாகிய நன்மை பொருந்தியுள்ள சேர்க்கை நிலை என உறுதிபடக் கூறலாம். அத்தகைய ஐக்கிய நிலையைத் தந்தருள்க.

10. உன்னால் ஆட்கொள்ளப்பட உரிய அன்பர்களின் உள்ளத்துள் விளங்கி எப்பொழுதும் நிலைத்துள்ளதாகிய அருள்நலனைத் தருபவனே! ஒரு குற்றமும் அற்று, அருளாற்றல் மிகுந்துள்ள கந்தர் அனுபூதி பாடிய அருணகிரிப் பெருமானின் நட்பை உகந்து ஏற்றுக் கொண்ட ஒப்பற்ற கருணைபொருந்தியுள்ள அருட்கடலே!

# 54. அகண்டபரம்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*தனதான தந்த தனதான தந்த, தனதான தந்த தனன.*

**தி**ருவேசி றந்து வளர்வாழ்வ டைந்து சிவமேவு கின்ற வெவரும்
அருளேசி றந்து துதிபாட விஞ்சு மருளான திந்த மடவோன்
மருளேறு பந்த மதிலேபொ ருந்து மனதீய நெஞ்சு செயுமோ
தெருளேறு கந்த விறையேய னந்த சிவமேய கண்ட பரமே. (1)

**இ**னிதாக விம்ப ரிதுகாறு மென்ற னிடர்நூறி வந்த கருணை
தனியேயி ருந்து விழிமூடி நெஞ்சு தடுமாற லின்றி மலருந்
தனிஞான வின்பு தருமோவ ரந்தை தருமோவெ னன்பின் மலியுங்
கனியேசி றந்த மணியேசு கஞ்செய் கரமேய கண்ட பரமே. (2)

**நி**றைவாய வின்ப வருளேவி ரும்பி நிலமீத லைந்து திரிவேற்
கிறையாய வுன்ற னழியாத சொந்த வெழிலாமொ ரன்ப திலையேல்
மறையாத வின்பும் வருமோவெ னன்பின் மலிவாயெ மும்ப முதமே
குறையாவ சங்க சுகமேசி றந்த குணமேய கண்ட பரமே. (3)

**ம**னமான வஞ்ச விகலோனை வென்ற மதியோர்பொ ருந்து கதியை
எனதாசை நெஞ்ச மிதுநாள்வி ரும்பி யிதமான வன்பு வலையை
வனமாக நின்று நனிவீசி னெங்கு மறைவாய்தொ மும்பர் துணையே
தனகேம லிந்த நிறைவேயுள் கெங்க டவமேய கண்ட பரமே. (4)

**ப**கமேகி ளர்ந்த பெரியாரு கந்த பரிவாமொ ரஞ்ச னமதை
மகனான்வி ளங்க விடினீயு மெங்கு மறைவாய்சொ லெங்க ளுறவே
உகவாத ரங்கள் பொருதாம லன்ப ருடனேதி ரிந்து திதிகூர்
இகலேயுள் கெங்கண் முதலேயு யர்ந்த விழுதேய கண்ட பரமே. (5)

**சு**சிவாய வன்ப தெனுமாசில் சும்ப கமதாயு னன்ப னுளனேல்
வசியாமி ரும்ப தெனுநீயு மெங்கு மறைவாய்சொ லன்பர் விழிவாய்
பொசிநீரி னன்கு நனைநீர்மை கொண்ட பொருளேயெ னெஞ்சி னினைவே
சுசியாயி யங்கு மறிவேசி றந்த சுகமேய கண்ட பரமே. (6)

---

*1. மடவோன் – 'மடவோற்கு' என நான்காவது விரிக்க.*

*4. வனம் = மிகுதி; **னகரவெதுகை.** வனமாகநின்று = நன்றாக நின்று கொண்டு. "எங்கள் தவமே"என்றது, அடியவரனைவரும் உய்திபெறவேண்டு மென்னும் ஆசிரியர் கருணைக் கருத்தை வெளியிடுகின்ற தென்க.*

*5. பகம் = ஐசுவரியம்; "பகச்ஸ்ரீ" என அமரஸிம்ஹத்தே வருமாறறிக.*

*உகம் = உலகம். இழுது = நெய்; ஈண்டுச் சாரமாம் இனிமை மேற்று.*

**ள**ளியேன்வி யந்து புகழ்நீயு மந்த ணிலவாவ தின்றி வனுமோர்
கிளியாவ தின்று மனமேகு விந்து கெழுமேதை யின்ப மதிலே
களிகூர வெங்க ளருளீதி தொண்டர் களையாள வந்த வரசே
உளிநாம மொன்றி லறிவாநி றைந்த வுரமேய கண்ட பரமே. (7)

**உ**லையாவு ரஞ்சொல் யசுர்வேத மொன்றி லுளமேதை யங்கை வலியம்
சொலுமாறு கண்ட மிலதாநி றைந்து சுடர்ஞான மென்ற னறிவாய்
இலகாணை கண்டு கொளினேது பந்த மெனையாளு மின்ப விளைவே
விலகாத சொந்த முளரோடி ருந்தவிபுவேய கண்ட பரமே. (8)

**த**வராசர் வண்டில் கவிராச ரண்டர் சகராசர் சிந்தை செயுமுன்
அவிநாச வன்பு கருதாத வஞ்ச மடையீன நெஞ்சொ டிஙனே
எவர்தாமி ருந்தெ னெவர்தாமி றந்தெ னெமைநானி னைந்த வணமே
சிவமேவ வன்பு புரிவாய னந்த சிவமேய கண்ட பரமே. (9)

**அ**துநானெ னுஞ்சொ லெணினாலு மங்க ணதுவே றெனுஞ்சொ லெணினும்
அதிரேக நெஞ்ச முளதாமு யர்ந்த வசியோக வின்பு மணுகா
ததனாலி ரண்டு மணவாத துங்க வனுபூதி தந்து கொளுவாய்
இதமான கந்த ரனுபூதி நம்பி யிறையேய கண்ட பரமே. (10)

---

# 54. அகண்டபரம்

**1.** மாறுபாடு, வளர்ச்சி, தேய்வு முதலான விகாரங்களற்று மிகத் தெளிந்ததான அதீத நிலையில் உள்ள கந்தப் பெருமானாகிய இறைவனே! முடிவற்றுத் திகழும் சிவநிலையே! பிரிவற்று எங்கும் வியாபித்து நிறைந்துள்ள பரம்பொருளே அருட்செல்வமும் பொருட்செல்வமும் சிறக்க வாய்க்கப் பெற்று வளரும் ஞானவாழ்வை அடைந்து சிவநிலையைப் பொருந்துகின்ற அருளாளர் அனைவரும், அருள் உணர்வு சிறக்கப்பெற்று அருட்பாடல்களைப் பாடித் துதிக்க, அதனால் மேன்மேலும் பெருகி எழும் அருட்பெருக்கானதை, மயக்க அறிவு அதிகரிக்கச் செய்யும் பந்தங்களுக்கு உட்பட்டுள்ள பொல்லாத மனத்தை உடைய மடவோனாகிய எனக்கும் வழங்கி அருளத் திருவுளம் கொள்வாயோ?

**2.** என் அன்பு நிலையில் நிறைவுகொள்ளும் அருட்கனியே! தலைமைச் சிறப்புடைய ரத்தினமே! ஆனந்தம் வழங்கும் பேரொளியே! அகண்டமயமான பரம்பொருளே! இவ்வுலகில் இந்நாள்வரை என் துன்பங்களை யெல்லாம் நன்றாக அழித்துவந்துள்ள நினது

---

*6. சும்பகம் = இரும்புவாங்கு காந்தம்.*

*7. வியந்து = ஆச்சரியமடைந்து.*

*10. 'அசி' என்பதன்பொருளை, 49–ஆம் பத்தின் 7–ன் குறிப்புரையி னோர்க.*

கருணையானது, நான் ஏகாந்தமாக இருந்துகொண்டு கண்களை மூடிக்கொண்டு, உளத்தடுமாற்றம் சிறிதும் இல்லாமல் தியானிப்பதால் தோன்றும் ஒப்பற்ற ஞான ஆனந்தத்தை எனக்கு வழங்கிடுமோ ? அல்லது, இனியும்துன்பத்தைத் தருமோ ? கூறியருள்.

**3.** என் அன்புநிலையில் நிறைவாக வெளிப்படும் ஞான அமுதமே! எவ்வித உபாதியும் அற்றுக் குறையாமல் இருக்கும் பேரானந்த நிலையே! தலைமைச் சிறப்புடைய எண்குணங்களின் வடிவே! அகண்டமயமான பரம்பொருளே! பரிபூரணமாக நிறைந்து ததும்பும் ஞான ஆனந்த அருட்பேற்றை விரும்பி இவ்வுலகில் அலைந்து திரியும் எனக்கு முழுமுதற்கடவுளாகிய உனக்கே உரியதும் அழியாததும் காட்சிப் பொலிவு மிக்கதுமாகிய உனது கருணை என்பது இல்லையேல் அழியாத இன்பநிலை எனக்கு வாய்க்குமோ ?

**4.** தொழுதுவணங்கும் அடியார்களுக்கு வாய்த்துள்ள பெருந்துணையே! ஆனந்தநிலை மிகுந்துள்ள வியாபகப் பெருக்கே! தியானிக்கும் எங்களின் தவப்பயனே! அகண்டமயமான பரம்பொருளே! வஞ்சனைத் தன்மை மிகுந்துள்ள மனம் என்னும் பகைவனை வென்று மேம்பட்டிருக்கும் ஞானியர் அடையக் கூடிய நற்கதியைப் பெற ஆர்வம் மலிந்துள்ள எனது நெஞ்சம் இந்நாள் வரையிலும் விரும்பி உனக்கு மிகவும் இசைவாக உள்ள அன்பெனும் வலையை நன்றாக நின்றுகொண்டு, விரிவாக விழுமாறு எறிந்தால் நீ எவ்விடம் மறைந்து கொள்வாய் ?

**5.** எங்களின் மேன்மைக்காக விளங்கும் உறவே! உலகத் தொடர்பான ஆசைகள் அலைக்கழிக்காமல், அடியாருடனே கூடிக் கலந்து உலாவி உன்னால் காக்கப்படும் பெருநிலையையே கருதி இருக்கும் எங்களின் முழுமுதற் பொருளே! உயர்ந்ததான இன்பப் பேறே! அகண்டமயமான பரம்பொருளே! ஐசுவரியம் முதலான ஆறுசெல்வங்களை மிகப் பெற்று விளங்கும் அருட்பெரியோர் விரும்பி மேற்கொள்ளும் "பேரன்புமயமாக இருத்தல்" எனப்படும் கரிய மையை, நினது மகனாகிய அடியேன் நன்கு விளக்கம் பொருந்த இட்டுக்கொண்டால், அதீதமான நீயும் எவ்விடம் மறைந்து கொள்வாய் ?

**6.** அடியார்களின் கண்களிலிருந்து பெருகும் நீரில் நன்கு நனைந்திருக்கும் தன்மை கொண்டுள்ள, எளிமையும் கருணையும் வாய்ந்த பொருளே! என் உள்ளத்தில் எழும் மெய்ப்பொருள் பற்றிய சிந்தனைமயமே! எப்பொழுதும் தூய்மையுடன் வெளிப்பட்டுச் செயற்படும் ஞானவடிவே! சிறப்புநிலையில் உள்ள பேரானந்தப் பேறே! அகண்டமயமான பரம்பொருளே! உள்ளம் உருகி நிற்றல் எனப்படும் காந்தக்கல்லின் தன்மையுடன் அன்பனாகிய நான் இருப்பேனாகில், அனைத்தையும் உனது ஆளுமைக்குள் கொண்டிருக்கும் நீ, இரும்பு நிலையில் இருப்பாய் எனில், நீ எவ்விடம் மறைந்து கொள்வாய் ?

**7.** தொண்டர்களை ஆட்கொள்ள எழுந்தருளி இருக்கும் அரசே! உருவமோ பெயரோ ஒன்றும் இல்லாமல், அறிவுமயமாக எங்கும் நிறைந்திருக்கும் சிவத்துவ ஆற்றலே! அகண்டமயமான பரம்பொருளே! எளியேன் மிகவும் ஆச்சரியமடைந்து துதிக்க உள்ள நீயும் அழகியதும் குளிர்ச்சி பொருந்தியுள்ளதுமாகிய இலவுக் கனியாக இல்லை; எளியேனாகிய இவனும் கிளியாக இல்லை. (இலவு காத்த கிளி போன்று நான் ஏமாற மாட்டேன்) மனம்

ஒருமுகப் பட்டுக் குவிந்து அடங்குவதால் வரும் ஞான ஆனந்தத்தில் மேன்மேலும் திளைத்திருக்க, எங்களுக்குத் தகுதியான வகையில் அருள்புரிக.

**8.** என்னை ஆட்கொள்ளும் இன்ப விளைவே! உன்னைவிட்டு விலகாமல் உனக்கே சொந்தப்பட்டுள்ள வழிவழி அடியார்களோடு கலந்துவிளங்கும் ஞான வெளியே! அகண்டமயமான பரம்பொருளே! முரண்பாடற்று எப்பொழுதும் பொருந்தக் கூடிய வகையில் ஆன்ம ஆற்றலைப் பற்றிக் கூறும், யசுர் வேதத்தைச் சார்ந்துள்ள உபநிடதங்களுள் ஒன்றான கைவல்லிய உபநிடதம் கூறுமாறு, கண்டிதப்பட்டு ஏகதேசமாக விளங்காமல் பரிபூரண நிறைவாகி ஒளிரும் அகண்ட ஞானம், எளியேனது அறிவுநிலையாக விளங்கக் கூடிய ஒழுங்குமுறையை அனுபவ பூர்வமாக உணர்ந்தால் பந்தம் என்பது ஏது ?

**9.** முடிவற்று வியாபித்துள்ள சிவத்துவ நிலையே! அகண்டமயமான பரம்பொருளே! பொய்யொழுக்கம் கலவாத தவராசர்கள் (முனீந்திரர்கள்), கவியரசர்கள், தேவர்கள், உலகை அரசாளும் சக்ரவர்த்திகள் முதலானோர் தியானித்து வணங்கும் உனது அழியாததாகிய பேரின்பத் திறத்தைச் சற்றேனும் எண்ணிப்பார்க்காமல், வஞ்சனைக் குணம் செறிந்துள்ள இழிவான உள்ளத்தோடு இவ்வுலகில் யார்தான் உயிரோடு இருந்தென்ன ? யார்தான் இறந்து என்ன ? இவ்வாறு இருப்பது அர்த்தமற்ற வாழ்க்கை அன்றோ ? நான் எண்ணியது எண்ணியபடி எம்மைச் சிவநிலையில் ஐக்கியப் படுத்தி அருள்க !

**10.** அனைவர்க்கும் இதமான நிலையில் இனித்து, அருளைப்பெறச் செய்யும் கந்தர் அனுபூதி பாடிய எம் தலைவனான அருணகிரிப் பெருமானின் முழுமுதல் இறைவனே! அகண்ட மயமான பரம்பொருளே! 'பிரம்மமாகிய அதுவே நான்' எனும் வாக்கியப் பொருளைச் சிந்தித்தாலும் 'பிரம்மம் வேறு நான்வேறு'' எனும் கூற்றின் பொருளைச் சிந்தித்தாலும், இரண்டு நிலைகளிலும் சுகத்தை விரும்பும் இயல்புடைய நெஞ்சத்தின் செயற்பாடு உண்டு; அதனால் தத்துவம் அசி என்பதில் உள்ள ''அசி'' எனும் பதத்தால் பெறக்கூடிய யோகநெறியால் விளையும் பேரானந்தம் கிட்டாது. அதனால் அபேத நிலை, பேதநிலை ஆகிய இரண்டும் அற்ற மேலான அனுபூதி நிலையைத் தந்து என்னை உன்னோடு ஐக்கியப் படுத்திக் கொள்க.

# 55. பொன்

*கலிவிருத்தம்.*

**பொ**ன்னே மணியே பொருளே யருளே
மன்னே மதியே மதிவான் மணியே
என்னா ருயிரே யினியே னுமெனை
உன்னோ டுறுவா னுளமே னினையே. (1)

**ஈ**ரந் தருநீ ரிலையேற் சகுலி
ஆரின் புடனே யுயுமோ வதுபோற்
சாருன் றிருவார் தகவொன் றிலையேற்
பாரின் புலம்வா ழுவலோ பதியே. (2)

**ந**ல்லார் சனனம் பயனே நணமெய்
வில்லார் நிலைமேன் மிளிர்வார் நலமொன்
றில்லேன் சனனம் பயனெய் திடுமோ
சொல்லா யெனையாள் சுகசா கரமே. (3)

**ஆ**ளா ளெனவே யறைவே னவணோர்
கோளா றுவரா நெறியைக் குறியேன்
நாளா தலெணா நலிவே னழுவேன்
மாளா வதர்தந் தருண்மா மதியே. (4)

**பொ**ய்யா தெனைநீ புணரா விடினான்
ஐயோ வெனவே யழுவேன் விழுவேன்
நையா வணமோர் நலநல் குவையேற்
கைம்மா றுளதோ கருணா கரமே. (5)

**அ**திநுட் பமதா யழிமெய்க் குளெனை
வதியப் பணியுண் மறைபட் டுளவுன்
நிதிநட் பருடா னினிமீட் டருளக்
கதியற் றதுகொல் கரைசிற் பரமே. (6)

**க**ள்ளார் மனமா கியபுல் லுருவிக்
குள்ளா யுழனா னொருவீட் டலர்மேற்
புள்ளா யுறையுந் தரமோ புரிவீ
வள்ளா லுனையன் றிலையோர் வகையே. (7)

**உ**யரா நினைவா கியபுல் லுருவிக்
கயலா முறையொன் றருள்செய் கலையேல்
துயரே வருமை யவஙன் சொலுநான்
உயுமா றுளதோ வுயிர்நா யகமே. (8)

---

*2. சகுலி = மீன் ; வடகிளவி.*

*4. எணா = எண்ணி ; ஆவீற்றுடன்பாட்டு வினையெச்சம்.*

*7. புள் = வண்டு.*

**ந**ந்தா நடுவே நலியா தமரற்
கெந்தா யருடா னிசையா விடினிங்
கந்தோ கெடுவேன் கெடுவே னருள்கூர்
கந்தா குகனே கருணா கரனே. (9)

**வே**ண்டே னுலகம் விதிநூ னெறியைத்
தாண்டே னருளா லுனையே சதமாய்க்
காண்டே சணைவே னடியார் களிவாழ்
வாண்டே யனுபூ திசொனா னரசே. (10)

# 55. பொன்

**1.** பொற்சபைக்குரிய பொன்னே! ரத்தினமே! பொருள்வடிவே! அருள்வடிவே! அருளாட்சிக்குரிய மன்னவனே! அருள்மய நிலவே! மதிக்கப்படும் சூரியனே! எனது அரிய உயிரே! இனியாவது நான் உன்னோடு இரண்டறக் கலந்து விளங்கும் வகையில் நினது திருவுள்ளத்தில் எண்ணம் கொள்க.

**2.** முழுமுதல் தலைவ! குளிர்ச்சி பொருந்திய தண்ணீர் இல்லையேல் மீனானது தனக்குப் பொருந்துவதான இன்பம் கொண்டு உய்திபெற வல்லதோ? அதுபோன்றே, அனைத்திலும் உள்ளீடாகச் சாரும் உனது பொலிவுமிக்க கருணைப் பெருக்கு இல்லையேல் இந்தப் பரந்த உலகில் நான் உயிரோடு வாழ முடியுமோ?

**3.** என்னை ஆட்கொள்ள உள்ள ஆனந்தக் கடலே! சன்மார்க்க நெறியிற் செல்லும் அருட்பெரியோர் தாம் எடுத்த பிறவியின் பயனைப் பொருந்த என்றும் நிலைத்துள்ளதும் ஒளிப்பொலிவு பொருந்தியதுமான மேம்பட்ட தத்துவாதீத நிலையில் ஆத்மசுகம் பெற்று விளங்குவர். ஆனால் நன்மை ஒருசிறிதும் இல்லாத எனது பிறவியும் அவ்வாறு விழுமிய பயன்பெற்று விளங்குமோ? கூறி அருள்.

**4.** பெருமை மிக்க அருள் நிலவே! என்னை ஆட்கொண்டருள், ஆட்கொண்டருள் என மீண்டும் மீண்டும் கூறி அரற்றுவேன்; ஆனால் அதற்கேற்ற வகையில், குற்றம் ஏதும் பொருந்தாத நன்னெறியில் செல்வதை ஒருசிறிதும் கருதவில்லை. என் வாழ்நாள் வீணே கழிகின்றதே என எண்ணி மனம் கவல்வேன்; அழுவேன். அழியாதிருக்கும் நன்நெறியை எனக்கு உணர்த்தி அருள்.

**5.** தூய கருணையே வடிவாகக் கொண்டுள்ளவனே! பொய்த்துப் போகாத வகையில் நீ என்னுடன் இரண்டறக் கலந்துகொள்ள வில்லை எனில், ஐயோ, யார்துணை, என்செய்வேன் என்றெல்லாம் மனம் கலங்கி அழுவேன்; பூமியில் வீழ்ந்து அலறுவேன். நான் இப்படியெல்லாம் வருந்தாத வகையில் உனது ஒப்பற்ற அருள்நலத்தை வழங்குவாய் எனில் உனக்குச் செய்யக் கூடிய கைம்மாறும் உள்ளதோ?

*9. கந்தன் = நிகரிலா நிகழ்ச்சியுடையோன்.*

**6.** ஞானமயமான பரம்பொருளே! அழிந்து போகக் கூடிய பஞ்சபூதமயமான உடலுக்குள் மிகவும் நுட்பமான நிலையில் எனது உயிரை வசிக்கச் செய்து, அவ்வுயிருக்குள் உயிராக மறைபட்டு விளங்கும் உனது செல்வக் குவியலை ஒத்த அன்புமயமான பேரருளை இனி மீண்டும் எனக்கு வழங்கி அருள ஒருவழியும் இல்லாமற் போய்விட்டதோ ? கூறி அருள்.

**7.** கள்ளத்தனம் பொருந்தியுள்ள மனம் எனப்படும் புல்லுருவியின் (மரத்தின் மீது படர்ந்து, மரத்தையே அழித்துவிடும் பாசைக்கொடியே புல்லுருவி) கொடுஞ்செயலுக்கு உள்ளாகி அலைந்து திரியும் நான், ஒப்பற்ற முத்தி நிலை எனும் தாமரைப் பூவுள் ஒரு வண்டாக உறையும் நிலையைப் பெறுவதற்குக் தகுதி உடையவன் ஆவேனோ ? வணங்கும் அடியார்க்கு அருட்பேறுகளை வழங்கும் வள்ளலே! உனது திருவருளாகிய துணையைத் தவிர்த்து வேறொரு வழிமுறையும் எனக்கு இல்லை.

**8.** என் ஆன்ம நாயகமே! உயர்ச்சி சிறிதும் பொருந்தாத வஞ்சக நினைவு எனப்படும் புல்லுருவியின் செயற்பாட்டுக்கு அயலாக விளங்கும் வகையில் எனக்கு ஒரு வழியை நீ அருளவில்லை எனில் ஐயனே! துன்பமே மேன்மேலும் பெருகும். அந்நிலையில், இவ்வாறு என்நிலை பற்றிக் கூறும் அடியேன் உய்திபெறும் வழியும் உள்ளதோ ?

**9.** அருள்கொழிக்கும் நிகரிலா நிகழ்ச்சி உடையோய்! குகப்பெருமானே! கருணையே வடிவாக உள்ளவனே! தோற்ற ஒடுக்கம் இல்லாமல் அழியாது உள்ள, பகலும் இரவுமற்ற நடுநிலையில் துன்பம் ஒரு சிறிதும் அணுகாமல் பேரின்பநிலையில் நான் அமர்ந்துவிளங்க, எந்தையே, உனது திருவருளை வழங்கவில்லை எனில், இந்நிலவுலகில் மிகவும் கெட்டு அலைவேன்.

**10.** அடியார்களின் களிப்புநிலையில் வெளிப்பட்டுப் பொலியும் ஆண்டவனே! கந்தர் அனுபூதி பாடியருளிய அருணகிரிப் பெருமானின் அரசே! நான் இவ்வுலக வாழ்க்கையை விரும்பேன். உரிய விதிகளைக் கூறி வழிகாட்டிக் காக்கும் பதிநூல்களின் ஆணைகளை மீறமாட்டேன். உன்னையே நிலைபேற்றுக்குரிய பரம்பொருளாகக் காணும் அருள் ஒளியை நான் உறுதியாகப் பெற்று நிற்பேன்.

---

# 56. பெரியசுப்பிரமணியம்*

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருவ ருட்செய றனைம திக்குநர் திருநெ றிப்படி யொழுகியே
குருவ ருட்டிற வொருமொ ழிப்படி குவவு நிட்டையி னிமிருவார்
அருவ ருப்புடை நசைம திக்குந ரளறு புக்கிட ரடைவரென்
பெருவ ருத்தம தறவ ணைத்தளி பெரிய சுப்பிர மணியமே. (1)

---

★ *அணுசுப்பிரமணியரெனும் அபரசுப்பிரமணியர் அனேகரிருக்கின்றனர் ; அன்னோர்க்கும் பதியாம் பரசுப்பிரமணியமே இங்குக் கூறப்படுவதென்பார் "பெரியசுப்பிரமணியம்" என்றனரென்க. 4–ஆம் பத்தின் முதற்றிருப் பாட்டுரைப் பிரமாணங் காண்க.*

**கு**ழைமு னிக்கரன் வினைவ யப்படு கவலை மிக்குளர் கருணைவான்
மழைம டுத்துய முடிவ தெப்படி மறல்வ யப்பட நேருமே
குழையு மெற்கதை யகல்வு றச்செயொர் குறையி னிட்டையை யீதியென்
பிழைபொ றுத்தரு டரநி னைப்புறு பெரிய சுப்பிர மணியமே. (2)

**சு**சிர தத்தினை மழையெ னக்கரு துளமி குத்தலை மானென
நிசமி னிட்டைகள் கருத வத்தொழி னெறிபி டித்தலை யேன்மகா
விசன முற்றொரு நடுநி லைச்சம வெளியி னிற்றொழு வேனவண்
பிசகி னித்தவு னுதவி யைப்புரி பெரிய சுப்பிர மணியமே. (3)

**நு**னிவி ளக்கொரு பதிந யக்கவி நவைகொள் சித்துவி யாபகம்
எனவ தைத்தனு வணுவெ னச்சொல லெனையெ னிற்கலை மேவிடு
மனநி கழ்ச்சியில் வறிது முத்தியின் மலர்வி புத்தமு மாமெனாப்
பினமில் விச்சைய ரறைவ ரெற்கருள் பெரிய சுப்பிர மணியமே. (4)

**ம**ணிமு டிச்சுரர் பரச ருட்சுடர் மணியெ னப்படு நீயுமால்
பணியு ருக்கமொ டுனைவ ழுத்திடு பரிசு டைச்சிறி யேனுநூற்
றுணிவு ரைப்படி பொருள்வி கற்பம துறினும் விச்சைநி லாவினோர்
பிணியி லத்துவி தமுறு மெற்கருள் பெரிய சுப்பிர மணியமே. (5)

**அ**றிவு மங்குற நிறையு மஞ்சன மணுவி லின்றென வறைவதே
சிறிய கும்பமு ளுலக மெங்குமொர் செறிவு கொண்டுள விருளையே
மறிய வென்றுசெய் வதுபொ ருந்துநன் மறைக டந்துசொல் விதியுமாம்
பிறழு மிந்தம லமற வந்தருள் பெரிய சுப்பிர மணியமே. (6)

**இ**ரவு மங்குலில் விழிதெ ரிந்துல விடுபெ ரும்புளை நேரவே
புரமி ருந்தெழு கலைநி ரம்பிடு பொழுது கொஞ்சவு ளேறியே
உரந வின்றிடு முயிரு ளின்பரு ளொருவி யிந்தியை மானுநாம்
பிரம மென்றிடி னுறுவ தென்கதி பெரிய சுப்பிர மணியமே. (7)

**ச**டச கத்திரு ளகில மப்பெரி தழலு யிர்ப்பென மொழிவன
விடவி லக்கது சொலவி ருக்குமொர் விதமெ னச்சிறை யுயிரிலே
மடம லக்கரு ளுளதெ னத்தெளி மதியி னர்க்குன தருளெனும்
பெடம தர்ப்புறு மதையெ னக்கருள் பெரிய சுப்பிர மணியமே. (8)

---

*2. மறல் = காலன்.*
*3. சுசிரதம் = வெண்டேர் = கானனீர்.*
*4. வறிதும் = அற்பமும்.*
*6. பிறழ்தல் = வேறுபடுதல் ; அதாவது, முத்தியிற்றன்னீர்மை மாறிநிற்றல்.*
*7. மங்குல் = இருள் ; "மங்குல்கா ரிருள்விண்" என்பது நகரவெதுகை. பெரும்புள் = கூகை.*
*இந்தி = பூனை ; "உந்துருத்வீபீ" என்னும் வடசொல்லின் விகாரம் ; எலிப்புலி யென்பது பொருள், த்வீபீ = புலி, அமரஸிம்ஹங் காண்க.*
*8. பெடம் – "ப்ரௌடம்" என்னும் வடசொல்லின் விகாரம்; விருத்தியின் பாற்று.*

**அ**யலெ னும்படம் விழியெ னுங்கணை யறம றைக்கினு மேயெரி
வெயிலி னந்தொரு பொருள தென்பது விதிய தற்கிணை யாயுலாம்
உயிர்ம லம்பிறி தெனந வின்றிட லுறுதி யொப்பென வுணருநர்
பெயர்த லின்றியு ளுறவ ணங்கொரு பெரிய சுப்பிர மணியமே. (9)

**சூ**ரிய வன்மல வொழிவ ரும்பர கதிசெய் முற்றறி வுடைமையீ
தரிய வுன்கரு ணையிலர் கண்டிட லரிது னைத்தொழு பெருமையே
உரியர் கண்டன ரருணை யின்பெய ருடையெ னத்தனுள் கிறைவமா
பிரிய வின்புட னெனுளெ ழுந்தருள் பெரிய சுப்பிர மணியமே. (10)

# 56. பெரியசுப்பிரமணியம்

1. பெரிதினுக்கெல்லாம் பெரிதாக ஒளிரும் சுப்பிரமணியப் பரம்பொருளே! நினது திருவருளால் நிகழும் செயலின் மகத்துவத்தை உணர்ந்து போற்றுவோர்கள், ஞானியர் மேற்கொள்ளும் சைவசன்மார்க்க நெறிப்படி நடந்து, குருவின் அருள் திரட்சியைச் செறிவாக அடக்கியுள்ள உபதேசமாகிய ஒருவாசகத்தின்படி ஒருமுகப்பட்டுத் திரளும் நிட்டை நிலையில் மேலோங்கி விளங்குவார்கள். ஆனால் அதிக வெறுப்பைத்தரும் உலக விடயங்களில் ஆசைப்படுதலையே பெரிதென எண்ணுவோர் நரகமாகிய சேற்றில் விழுந்து துன்பம் அடைவார்கள். எனது கொடிய துன்பங்கள் அனைத்தும் நீங்குமாறு என்னை அணைத்தருள்க.

2. என் பிழைகளைப் பொறுத்து, அருள்புரியத் திருவுள்ளம் கொள்ளும் பெரிய சுப்பிரமணியமே! கரும்புவில்லோனாகிய மன்மதனின் செயற்பாட்டுக்கு ஆளாகும் துன்பம் மிகப் பெற்றுள்ளோர், நினது கருணையாகிய மேகம் பொழியும் அருள்மழையை ஏற்றுப் பயன்படுத்தி உய்திபெறுவது என்பது எப்படி முடியும்? அன்னோர் காலனின் வசமே சிக்கி நிற்பர் அன்றோ? மனம் நெகிழ்ந்து துதிக்கும் என்னிடமிருந்து அத்தகைய துன்பநிலை நீங்கி நிற்குமாறு செய்தருள்க; ஒரு குறைவுமற்ற பரிபூரணமான மகாநிட்டைநிலையை வழங்குக.

3. பெரிய சுப்பிரமணியமே! கானல்நீரை நல்ல நீரோடை எனக் கருதி நீரைப்பருகும் ஆர்வத்தோடு அலையும் மானைப் போன்று சாரமற்ற, பொய்யான நிட்டை நிலைகளைக் கைக்கொள்ளும் வீணான நெறியை ஏற்று அலையமாட்டேன். பெரிதும் பிரயாசைப் பட்டு, இரவுபகலற்ற நடுவெளியில் என்னை இருத்திக் கொண்டு உன்னைத் தொழுவேன். அவ்வாறு தொழும்போது யாதேனும் பிழை நேர்ந்தால், நித்தியமாகிய உனது திருவருளாகிய துணையைத் தரவேண்டும்.

4. எளியேனுக்கும் இரங்கி அருளும் பெரிய சுப்பிரமணியமே! ஞான நுட்பங்களை மிகவும் நன்றாக விளக்கிக் கூறும் ஆகமப் பாடல்கள் "பந்தத்துக்கு உட்பட்டுள்ள சிற்றறிவினனாகிய ஆன்மா வியாபகத் தன்மை உடையது'' எனத் தெளிவாக உரைத்து நிற்க, 'அந்த ஆன்மா உடலுடன் கூடிச் சிறுமைப்பட்டுள்ள அணு' எனக் கூறுவதன் காரணம் என்ன எனில் – ''கலை முதலான தத்துவங்களின் சேர்க்கைக்கும் செயற்பாட்டுக்கும் உள்ளாகி

ஏகதேசமாக அறியும் மனத்தின் தொழிற்பாடு காரணமாக அது அற்பமாக உள்ளது. ஆனால் முத்தி நிலையில். தத்துவச் சேர்க்கையிலிருந்து விடுபட்டு, விரிவடைந்து பெருகும் வியாபகத் தன்மை உடையது" எனப் பேதமற்ற பூரண ஞானம் வாய்ந்துள்ள அறிஞர்கள் கூறுவர்.

5. எளியேனுக்கு அருளும் பெரிய சுப்பிரமணியமே! இரத்தின கிரீடம் அணிந்துள்ள தேவர்கள் போற்றித் துதிக்கும் அருட்சுடர்மணி என விளங்கும் நீயும், பெரிதும் ஆர்வத்துடன் பணிந்து மன உருக்கத்துடன் உன்னைத் துதிக்கும் தன்மை உடைய சிறியனாகிய யானும், ஆகமநூல்கள் தெளிவாகக் கூறும் உறுதியுரைப்படி, பொருள்நிலையில் நீ பதிப்பொருள் எனவும் நான் பசுப்பொருள் எனவும் வேறுபாடு பொருந்தி இருந்தாலும் பூரண ஞானமாகிய முழுநிலவின் ஒளியில், பந்தப்பிணிப்பு அறவே நீங்கி இருக்கும் அத்துவிதக் கலப்புற்று இருப்போம்.

6. பெரிய சுப்பிரமணியமே! அறிவானது மங்கிக் குறைந்து விளங்கும் படி, நிறைந்துவிளங்கும் கரிய இருளாகிய அறியாமை ஆன்மாவில் கிடையாது எனக் கூறுவது, ஒரு சிறிய பானைக்குள் உலகெங்கும் பரவிச் செறிந்துள்ள இருள் முழுவதையும் மடக்கிச் சுருட்டி அடக்கிவிடும் செயலைப் போன்றதாகும். மேலும் இவ்வாறு கூறுவது வேதங்களின் உறுதிவாக்கியங்களை மீறிச் சொல்லும் கோட்பாடு ஆகும். ஆன்ம அறிவை மறைத்துவிளங்கும் ஆணவமல இருள் நீங்கிடும் வகையில் என் முன் எழுந்தருள்க.

7. பெரிய சுப்பிரமணியமே! இரவு நேரத்தில் நெருங்கி அடர்ந்துள்ள இருளில் கண்கள் மிகவும் தெளிவாக விளங்கப் பெற்று உலவும் கூகையைப் போன்று, இவ்வுடலாகிய கட்டுக்குள் கலை முதலான தத்துவங்கள் முறைப்படிப் பொருந்திச் செயற்படும் பொழுது சிறிதே அறிவும் செயலும் விளக்கமுறப் பெற்று, ஆன்மாவானது ஓரளவு ஆற்றல் பெற்று நிற்கும். இன்பமயமாகிய நினது திருவருளை நீத்துப் பூனையை ஒத்துள்ள நாம் பிரம்மமே என்று கூறின், இவ்வாறுகூறும் அவர்கள் பெற உள்ள கதிதான் யாது ?

8. பெரிய சுப்பிரமணியமே! "சடமயமான உலகிலுள்ள இருள், உலகம், நீர், நெருப்பு, காற்று எனக் கூறப்பட உள்ள அனைத்தும் அல்லாததாயும் இவற்றுக்கு அப்பாற்பட்டதாகவும் விளங்குவது எனக் கூறும் வகையில் இருக்கும் ஒருவகை மறைப்பு" என்னுமாறு பந்தப்பிணிப்புக்கு உட்பட்டுள்ள ஆன்மாவில், அறியாமையைத் தோற்றுவிப்பதாகிய மல இருள் உள்ளது. இவ்வாறு தெளிவாக உணரும் அறிவினர்க்கு உனது திருவருள் எனும் மகத்துவமானது மேன்மேலும் வளர்ந்து செழித்து நிற்கும். அத்தகைய திருவருளை எனக்கு வழங்கி அருள்க.

9. அண்டமும் பிண்டமும் சமன்பாடு உடையதே என உணருவோர் மனச் சஞ்சலமின்றி உள்ளூற வணங்கி வழிபடும் பெரிய சுப்பிரமணியமே! கண்ணின் வேறாக உள்ள படலமானது கண்ணை முழுவதுமாக மறைத்து விளங்கினாலும், பிரகாசம் மிக்க சூரிய ஒளியில் விளக்கம் பெற்றுத் திகழும் பொருள் உறுதியாக உள்ளது என்பது பிரத்தியட்ச நிகழ்ச்சியேயாம். அதுபோன்றே, உடலோடு கூடியுள்ள உயிர் வேறு; உயிரின் அறிவை மறைத்திருக்கும் மலம்வேறு எனக் கூறுதல், ஐயத்தின் நீங்கிய உறுதி உரையாகும்.

**10.** அருணகிரிப் பெருமானாகிய என் தலைவன் எப்பொழுதும் தியானித்து வணங்கிய இறைவ! மிகவும் பேரன்புடனும் பேரின்பத்துடனும் என்னுள் வெளிப்பட்டு அருளும் பெரிய சுப்பிரமணியமே! கரிய, கொடிய இருள் ஒத்த ஆணவமல நீக்கமே பெறுதற்கரிய முத்திநிலையில் வெளிப்படும் முற்றறிவுடைமை எனும் நிலையாம். இதனை, அரிய உனது திருவருளைப் பெறாதார் உணரமாட்டார்கள். உன்னையே தொழுதுவணங்கும் பெருமையையே பெற்றுள்ள ஞான அடியார்களே இவ்வுண்மையை நன்கு உணர்ந்தனர்.

---

# 57. கருணைத்தேவு

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

**ஆ**ரணத்தி லாகமத்தி லேனையருண் முறைகளிலோ
ரருவுருவு நாமநடு வந்த மாதி
நீரணவுங் குறிநிறமொன் றில்லறிவு மயமாக
நிறைககன மேபிரம மென்றல் போலச்
சீரவிரு மைப்படிந்த கண்ணாளென் றெழுந்தவொரு
செய்யுடிரு மாலுமெனுந் தூக்கி வற்றாற்
பூரணஞ்சொல் கடவுளியா ததுநீயென் றிறைஞ்செனது
புகர்துமிக்க நினைதியொரு கருணைத் தேவே. (1)

**பி**ரகிருதி மாயைவடி வஞ்ஞான மென்றுமறை
பேசுமதை யிருட்டுமல மென்றே கூறின்
உரனுடைய சித்தாந்த முரணாகு மாகலினவ்
வுரைக்குரிய வருத்தமந்த மாயை ரூபஞ்
சரதமுடை ஞானமற்ற சடமென்று தெளிவுடையர்
தாமுணர்வ ரதுதானே சகலர்க் கெல்லாம்
புரமாக வமைந்துள்ள திதிலிருக்கு மெனையெக்காற்
புல்லியஞர் போக்குவையின் கருணைத் தேவே. (2)

**மா**யையெனு மொளிமுன்னே மலவிருளுண் டோவென்னின்
மலர்கலையில் கேவலத்தே குகுத்திங் கள்போல்
மேயவிரு ளாஞ்சகல மதிற்பூர்வம் விளங்கிவரு
விதுநேர வொளியாமவ் விருளா லோனுந்
தூயநின தருட்பானு வுதிக்கிலில வெனவறைவர்
சுருதிநிச மறிந்தவர்கள் சொனவோர் பானு
நேயமுட னுதிக்கவருள் செயவேண்டு நான்வணங்கு
நிரதிசய வானந்த கருணைத் தேவே. (3)

---

*1. ‘மைப்படிந்த கண்ணாள்’ என்றெழுந்தவொருசெய்யுள் – **திருநாவுக்கரசுகளது** தமிழ்மறையுளுளது. ‘திருமாலும்’ எனுந்தூக்கு – மாணிக்கவாசகனார் தமிழ்மறைத் திருத்தெள்ளேணத் துளது.*

*3. குகுத்திங்கள் = அமாவாசியைச்சந்திரன் ; கலைகாட்டாதிருக்கும் ஆலோன். நிரதிசய வானந்த – தமிழ் நூூன் முடிபு.*

**ப**திபசுபா சம்மெனமூன் றுரைத்துமல மொன்றுசொலிற்
பதார்த்தநான் காகாவோ வென்னி னாகா
அதிமாய வம்மலமுஞ் சடமாமப் பாசம்போ
லருண்மோக்க மதுநீங்கு நீர்மைத் தென்று
விதிமிழற்று மாதலினான் மலம்பாச மெனவாமிம்
மெய்ம்மையாற் பொருண்மூன்றே யாகு மிந்த
நிதரிசன முணர்ந்துன்னை யடையவருள் செயவேண்டு
நிருமலசம் பூரணமா கருணைத் தேவே. (4)

**அ**க்கினியிந் தனத்தினையுஞ் சடப்பொருள்கள் பூமியையு
மாதார மாமருவி யிருத்தல் போலத்
துக்கமல புற்கலனு மாயையின்மூ லத்தனுவைத்
தொடரிருக்கை யாமருவி யிருக்கு மென்றும்
மிக்கவுயிர் முத்திதனி லத்தனுவு மலப்போத
விளைவுகளும் பகற்றீப மெனவே யாகிச்
சொக்கமுடை யருளையே தாரகமா யுறுமென்றுஞ்
சொலும்பனுவ லதையருடி கருணைத் தேவே. (5)

**ஆ**ணவமா மலத்தினது காரியமாங் கேவலமு
மசுத்தமா யாகாரி யப்பார் நோக்குங்
கீணமுறு காலெழுமொள் வயிந்தவத்தின் காரியமே
கேடில்சுத்த மென்பதது வேமா நிட்டை
யாணர்நிலை யாகுமதன் மேற்கிளரு மென்னையுநல்
லருளொடுனை யுந்தெரிந்தே யழுந்தி யங்கண்
மாணலஞ்சால் வீடுபெறற் கருள்கூர வேண்டுமினி
மாறாவோர் பேரியல்புக் கருணைத் தேவே. (6)

**இ**ருமலத்திற் கிடமாக விருக்குமொரு மூலமல
மிரியுமெனி லிருமலமு மிலவே யாகுங்
கருமலக்கட்ட டொழிவிலிரண் டொன்றெனவே சொல்லவொணாக்
கனமௌன மோக்கமதா மிதனை ஞானப்
பெருநலத்தை விளக்கிடுசித் தாந்தமுறை யெல்லாமும்
பேசுவதை யுணராத பேதை நானோ
அருணலத்தை யளித்திடினா னதைமேவ விடனுண்டா
மருள்புரிவை யெனையாளுங் கருணைத் தேவே. (7)

---

*5. மூலத்தனுவைத் தொடரிருக்கையாமருவி யிருத்தலினாலேயே சீவான்மா “சேத்திரஞ்ஞன்” எனப்பட்டனன். மூலத்தனு = காரணதேகம் ; வடநூன் முடிபன்று.*

**நா**ங்கடவு ளெனுங்கொள்கை யபத்தமென வேபூத
லயமொருபன் முகமென்ற கவிகட் குள்ளே
பாங்கொடுரை தந்தசிர கிரிச்சிவனின் பெயரானும்
பரகதியொன் றிரண்டெனவே பகரொண் ணாதென்
றோங்குகவி மருமலரொன் றிரண்டென்று முன்னாம
லொன்றிரண்டும் போனகமு மென்ற தாதி
ஞாங்கர்களி லோதினனீ தறியாதந் நூற்பயிலு
நரர்கட்கென் றெளிவுண்டாங் கருணைத் தேவே. (8)

**சி**வானுபவத் துயர்ந்தாருட் சில்லவரொன் றெனநூல்க
டெரித்தநடு வேதெனவே சங்கிப் பார்க்குத்
திவாகரனை நனிகூர்ந்து நோக்கியகண் ணம்மயமாத்
திகழ்ந்தேதுங் காணாது திளைக்கு மாபோற்
சுவானுபவப் பேரொளியின் கவர்ச்சியா லிரண்டுவகைச்
சொருபமறி யாதிருந்த நிலையா மென்று
விவாதமறத் தேர்ந்தார்நன் குரைப்பாரந் நிலையிலெனை
விலகாது வைத்தருளோர் கருணைத் தேவே. (9)

**நி**கழ்பகலு மதைக்கூர்ந்து நோக்கியதன் வயமாக
நின்றகண்ணு மில்லாமற் போகா வந்நேர்
திகழ்பதியி னிட்டையினு முபயமா ஞானங்கள்
சேர்தலுள பொய்யாகா வெனுமோர் தீர்வை
துகளிழிவொன் றில்லாத தீர்வாகு மிதையுனது
துரியவுள முவந்தெனக்கிங் களிக்க வேண்டும்
இகழ்குறைக ளேதுமிலா வெந்தையரு ளருணகிரி
யிறைவகுகக் கடவுளாங் கருணைத் தேவே. (10)

---

*8. **தாயுமானசுவாமிகள்** (=சிரகிரிச்சிவனின்பெயரான்) திருப்பாடலுள், பூதலயம் என்றற் றொடக்கத்துப் பாட்டில் ''நாமென்பர் சிலர்'' எனவும், பன்முகம் என்றற்றொடக்கத்துப் பாட்டில் ''யாங்களே கடவுளென்றிடும் பாதகத்தவர்''எனவும் வருவன காண்க. இவை கருதியே ''நாங் கடவுளெனுங்கொள்கை அபத்தம்'' என்பதெடுத்துக் கொள்ளப்பட்டது.*

***அபத்தம்** = பயனற்றது; வடகிளவி.*

***மருமலர் –** மருமலரென்னுந் தொடக்கத்துப்பாடல். – ''ஒன்றோடிரண்டெ னாச் சமரச சொரூபசுகம்''*

*ஒன்றிரண்டென்று – ஒன்றிரண்டென்னுந் தொடக்கத்துப்பாடல். – ''ஒன்றிரண்டென்னா வுணர்வு கொடுத்து''*

*உன்னாமல் – உன்னாமலென்னுந் தொடக்கத்துப்பாடல். – ''ஒன்றிரண்டென் றோராமல் வீட்டுநெறி சொன்னான்'' ஒன்றிரண்டு*

*ஒன்றிரண்டென்னுந் தொடக்கத்துப்பாடல், – ''ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரம் கடந்தேழாம் யோகபூமி''*

*போனகம் – போனகமென்னும் தொடக்கத்துப்பாடல், – ''இரண்டொன் றென்னுமோர் மானதவிகற்பமறவென்று நிற்பது நமது மரபு''*

*10. உபயஞானங்கள் – காட்சியனுபவத்தன ; பூந்தொடையலெனும் 51–ஆம் பத்தின் 2–ன் குறிப்புரை, இங்கே சிந்திக்கற்பாற்று.*

# 57. கருணைத்தேவு

1. ஒப்பற்ற கருணைத் தெய்வமே! வேதங்களிலும் ஆகமங்களிலும் மற்றும் திருவருள் வெளிப்பாடாக உள்ள திருமுறைகளிலும் "அருவம், உருவம், பெயர், முடி, நடு, கடை, இயல்பை வெளிப்படுத்தும் குறி, நிறம் ஆகிய இவற்றுள் ஒன்றும் அற்று, ஞானமயமாக எங்கும் வியாபித்துள்ள சிதாகாசமே பிரம்மம்'' என்று விளக்கப்பட்டிருத்தல் போன்று திருநாவுக்கரசர் பாடிய சீர்மை விளங்கும் ''மைப்படிந்த கண்ணாளும்" எனத்தொடங்கும் தேவாரப்பாட்டு, மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய 'திருமாலும்' எனத்தொடங்கும் பாட்டு ஆகியவற்றால் பூரணத்தன்மை உடையதாகச் சொல்லப்படும் கடவுள் எதுவோ அது நீயே எனும் கருத்தைத் திடமாகக் கொண்டு வழிபடும் எனது பந்தக் குற்றங்களை அகற்றி அருளத் திருவுளம் கொள்க.

2. இன்பமயமான கருணைத்தேவே! பிரகிருதி மாயையின் வடிவம் அஞ்ஞானம் என்று வேதம் கூறும். அந்த மாயையையே ஆணவ இருளாகிய மூலமலம் என்று கூறினால், உண்மை ஒளிமிக்க தத்துவவளம் செறிந்துள்ள சைவ சித்தாந்த நெறிக்கு முரணாகும். எனவே வேதம் அவ்வாறு கூறியதன் உட்பொருள் அந்த மாயையானது மெய்ம்மைமிக்க ஞானம் அற்றதாய் சடம் என விளங்கும் எனத் தெளிவுமிக்க அருளாளர் அனைவரும் உணர்வர். அந்த மாயையே சகலவர்க்கத்து உயிர்க்கெல்லாம் உடலாக அமைந்துள்ளது. இந்த மாயையின் விளைவாக உள்ள உடற்கட்டுக்குள் இருக்கும் என்னுடன் எப்போது நீ இரண்டறக் கலந்து கொண்டு என் துன்பத்தைப் போக்கி அருள்வாய்?

3. நான் வணங்க உள்ள, நிரதிசய ஆனந்தமயமான கருணைத் தேவே! மாயை எனப்படும் ஒளிப்பொருளுக்கு முன்னால் ஆணவமலம் எனும் ஒன்று இருக்க வழியுண்டோ? எனக் கேட்டால் – ஓரளவுக்கு உயிரின் செயற்பாட்டை மலர்த்தும் கலையின் சேர்க்கை இல்லாதிருக்கும் கேவலநிலையில், மாயை அமாவாசைச் சந்திரன் போன்று இருளாகவும், கலைத்தத்துவத்தின் சேர்க்கை பொருந்தும் சகலநிலையில் பிரதமை முதலான நாள்களில் ஒவ்வொரு கலையாக ஒளிமிகுந்து வரும் சந்திரன் போன்று ஒளியாகவும் திகழும். அந்த இருளில், கலைகாட்டாதிருக்கும் சந்திரனும் தூய்மைமிக்க நினது அருளாகிய சூரியன் உதிக்கவில்லை எனில், இல்லை எனவே ஆகும். இவ்வாறு வேதத்தின் உண்மைப் பொருளை அறிந்தோர் கூறுவர். கூறப்பட்ட உனது அருளாகிய சூரியன் என்பக்கம் நேயமுடன் உதித்தெழுமாறு கருணைகாட்ட வேண்டும்.

4. மிகத்தூய்மையுடன், பரிபூரண நிறைவாக விளங்கும் பெரிய கருணைத்தெய்வமே! பதி, பசு, பாசம் என மூன்று நித்தியப்பொருள்களைக் கூறி, மேலும் மலம் எனும் ஒன்றையும் கூறினால், நித்தியப்பொருள்கள் நான்கு என ஆகாதோ எனின், ஆகாதாம். தீவிரமான மாயைத் தன்மையைக் கொண்டுள்ள அந்த மலமும், பாசம் போன்று சடமே; அது, அருளால் பொருந்தும் முத்தி நிலையில் ஆன்மாவிலிருந்து நீங்கிநிற்கும் தன்மை உடையது என, மெய்ப்பொருளை விதிக்கும் நூல்கள் கூறும். அதனால் அந்த மலம் என்பதும் பாசம் எனவே

கருத உள்ளது. இவ்வாறுள்ள உண்மைத் திறத்தால் நித்தப்பொருள்கள் மூன்றே. ஆன்ம அனுபவத்தால் இந்த மெய்ப்பொருளை உணர்ந்து உன்னை அடைய அருள்செய்ய வேண்டும்.

5. கருணைமயமான மூலதெய்வமே! நெருப்பு என்பது விறகையும், சடப்பொருள்கள் பூமியையும் ஆதாரமாகப் பொருந்தி விளங்குதல் போன்று, துன்பத்தைக் கொடுக்கும் மலப்பிணிப்புடைய ஆன்மாவும் மாயையால் உருவாகும் காரண தேகத்தைப் பிறவிதோறும் தொடர்ந்து வரும் ஆதாரமாகப் பொருந்தி விளங்கும் என்றும்; பரிபக்குவம் பெற்று ஞானப்பேறு அடைந்த உயிர் முத்திப்பேற்றை அடையும் போது அந்தக் காரண தேகமும், மலப்பிணிப்பால் எழும் பாச ஞான பசுஞான விளைவுகளும், பகற்பொழுதில் சூரியன் முன் உள்ள தீபம் போன்று விளக்கமும் செயலும் அற்று விளங்கும்; அப்பொழுது, உயிரானது, பொலிவுமிக்க அருளையே தனக்கு ஆதாரமாகப் பொருந்தி விளங்கும் என்றும் ஞானசாத்திரங்கள் கூறும். எனவே, அந்த மூல ஆதாரமாகிய அருளை வழங்குக.

6. காலபேதத்தாலும் இடபேதத்தாலும் மாறுபடாமல் விளங்கும் பேரியல்புடைய கருணைத் தேவே! உயிருக்கு உள்ள ஆணவப் பெருமலத்தின் காரியமாகத் திகழும் கேவலநிலையும் அசுத்த மாயையின் காரியமாகத் திகழும் தனு, கரண, புவனத் தொடர்புடைய சகலநிலையும் தேய்ந்து நீங்கும் பொழுது ஒளிமிக்க சுத்தமாயைத் தொடர்பான காரியமே உயிர் பொருந்திநிற்கும். இதுவே அழிவில்லாத சுத்தநிலை என்பதாகும். இந்நிலைக்கும் மேலே பெருமையும் புதுமைப்பொலிவும் உடைய நிட்டைநிலை வாய்க்கும். அந்த நிட்டைநிலைக்கு மேற்பட்டு, என்னையும், அருளோடு விளங்கும் உன்னையும் தெரிந்து, அந்நிலையிலேயே ஆழ்ந்து, மகத்துவமான சிவவளம் சான்ற முத்திநிலையைப் பெறுவதற்கு, இனியாவது நீ அருள்புரிய வேண்டும்.

7. எளியேனை ஆட்கொள்ளும் கருணைத்தேவே! கன்மம், மாயை எனும் இரண்டு மலப்பிணிப்புகளும் ஏற்படக் காரணமாக இருக்கும் மூலமலமானது உயிரைப்பிணித்திருக்கும் நிலையிலிருந்து நீங்கிநிற்கும் எனில், அந்த இரண்டு மலங்களும் இல்லாமலேயே போகும். கரிய ஆணவமலப் பிணிப்பானது அழிந்துபடும் போது, இரண்டு எனவோ ஒன்று எனவோ சொல்ல இயலாத வகையில் திகழும் திடமான மௌனப் பெருக்க நிலையானது முத்திப்பேறாக வாய்க்கும். ஞானநெறியின் தனிப்பயனை விளக்கிக்கூறும் சைவசித்தாந்த நூல்கள் அனைத்தும் இந்த உண்மையையே எடுத்துரைப்பதை உணராதிருக்கும் பேதையோ நான்! உனது அருள்நலத்தை நீ வழங்கிடின் அந்த மௌனப்பெருநிலையை நான் பொருந்திநிற்க வழியுண்டாகும். வழங்கி அருள்.

8. கருணைத்தேவே! 'நாமே பிரம்மம்' எனும் கோட்பாடு, பயனற்ற வெற்றுக் கொள்கையே என்று 'பூதலயம்' எனத் தொடங்கும் பாட்டிலும், 'பன்முகம்' எனத் தொடங்கும் பாட்டிலும், மிகவும் பொருத்தமாகவும் அழகாகவும் தாயுமான சுவாமிகள் கூறியுள்ளார். மேலும் அவ்வாறு கூறிய அப்பெருமானே, "மேலான கதியான முத்தி நிலையானது ஒன்று எனவோ இரண்டு எனவோ கூற முடியாதவகையில் சமரசப்பட்டிருப்பது'' எனும் பொருளில் 'மருமலர்' எனத் தொடங்கும் பாட்டிலும் ''ஒன்றிரண்டென்று'' எனத் தொடங்கும் பாட்டிலும், 'உன்னாமல்'

எனத் தொடங்கும் பாட்டிலும் 'ஒன்றிரண்டு' எனத் தொடங்கும் பாட்டிலும், 'போனகம்' எனத் தொடங்கும் பாட்டிலும் நன்கு கூறியுள்ளார். அந்த உண்மைகளையெல்லாம் ஆய்ந்து உணராமல் அந்நூலைப் பயிலும் மாந்தர்க்கு, எவ்விதமாகத் தெளிவு பிறக்கும் ?

**9.** ஒப்பற்ற கருணைத்தேவே! சிவானுபவத்தில் திளைத்து அனுபூதிமான்களாக இருந்தசிலர் 'ஒன்று' எனவே கூறியுள்ளனர் எனச் சில நூல்கள் தெரிவித்துள்ள கருத்துக்கு, என்ன காரணம் – என சந்தேகம் கொண்டு கேட்பார்க்குக் கூற உள்ளது யாதெனில் – சூரியனை நன்கு விழித்து நோக்கிய கண்ணானது பேரொளிமயமாகவே திகழ்ந்து வேறொன்றையும் காணாது நிற்றல் போன்று, சுவானுபவப் பேரொளி மேலீட்டால் இருவகை ஆன்மாக்களின் சொரூபநிலை தோன்றாதிருந்த நிலையில் அவ்வாறு கூறப்பட்டதாகும். இவ்வாறே, விவாதம் அறும் வகையில் நன்கு ஆய்ந்துணர்ந்தோர் பொருத்தமுற விளக்கம் கூறுவர். அந்த சுவானுபவநிலையில் என்னை விலகாமல் வைத்து அருள்புரிக.

**10.** இகழ்ச்சிக்குரிய குறைகள் அனைத்தும் இல்லாமல் உயர்ந்திருந்த எந்தை அருணகிரிப் பெருமானின் இறைவ! குகக் கடவுளாக விளங்கும் கருணைத் தெய்வமே! ஒளி மிக்க சூரியனும், அந்தச் சூரியனைக் கூர்ந்து நோக்கி அதன்வயப்பட்டு ஒளிமயமாக நின்ற கண்ணும் இல்லாமற்போக வில்லை. அதுபோன்று பதிநிலை தொடர்பான நிட்டைநிலையிலும் இரட்டை ஞானங்களாகிய 'காண்பான் – காட்சிப்பொருள்' என்பவை உண்டு. அவை பொய்த்து விடவில்லை. இவ்வாறு கூறும் முடிபு குற்றமோ இழிவோ இல்லாத நல்ல முடிபு ஆகும். அதீதப்பட்டுள்ள உனது திருவுள்ளம் உவந்து, அந்த உயர்ந்த நிட்டைநிலை அனுபூதியை அளிக்க வேண்டும்.

---

# 58. நெஞ்சம்

---

*கலிவிருத்தம்.*

**ஆ**னை யேறிநி லத்தினை யாளினும்
வானை யாளினு மாச்சிறு கோவுமோ
தேனை யெள்கொரு தேனையுண் டுய்யநங்
கோனை நாடிக்கு ரங்கிநின் னெஞ்சமே. (1)

**பெ**ருமை வேண்டிப் பெரும்பொய் பிதற்றினீ
இருமைக் கண்ணுமை யோவதை யெய்துறாய்
கருமை நீத்தவில் லோர்கள் கடுப்பநின்
றருமைத் தெய்வத்தை யண்ணியுய் நெஞ்சமே. (2)

---

*2. இல்லோர்கள் = தரித்திரர். கடுப்ப = போல. கருமைநீத்த இல்லோர்கள் கடுப்ப நிற்க வேண்டுமென்ற அறநிலையினை, இக்காசினிப்பெருமை கருதி நிற்பாரு முணர்புண்ணியம் படைப்பரோ ?*

**மா**னி லத்தொரு மானுட மாம்விதை
தானி டுந்தல மாயுள்ள தையலார்
மேனி மேலொர் விருப்புனக் கின்னமும்
ஏனி ருங்குக னின்புகொ ணெஞ்சமே. (3)

**இ**யற்கைக் குற்ற மிகுந்துய்ய வெண்ணுநீ
செயற்கைக் குற்றங்கள் சேர்க்கிலந் தோவெநாள்
மயற்கை போக்கியெம் மானலஞ் சேர்வது
கயக்கி லாதுரை செய்கடி நெஞ்சமே. (4)

**ப**ன்றி யோடு பசுக்கன்றுங் கூடிப்பீ
தின்ற செய்கையொத் துன்னொடு சேர்ந்தநான்
சென்று மீளஞர் கொண்டு திகைத்திடல்
நன்று கூறுதி நண்புடை நெஞ்சமே. (5)

**எ**ன்பி ரான்சொன வேசற்ற கூற்றைநான்
நன்கி யோசிக்க நாடுமுன் னாலந்த
இன்பம் வாய்க்குமென் றாகின்ற திங்ஙனீ
வன்கண் காட்டிலென் வாழ்க்கையென் னெஞ்சமே. (6)

**ஐ**ய னாகிய வென்னரு ளத்தனுன்
கையி லேயெனைக் கையடை செய்தனன்
பைய வேநழு விற்பட்ட பாடெலாம்
பொய்மை யாமிது வோபுல னெஞ்சமே. (7)

**நே**ச மாகவென் னோடுள நீயெனை
மோசஞ் செய்து முரண்பட னீதியன்
றீசன் சொன்ன குறிக்குனின் றீனவன்
பாச நீத்துய்யப் பார்நல நெஞ்சமே. (8)

**எ**ன்னையென்றனக் கீயிறை யின்புறற்
குன்னை யன்றிநல் லூற்றமொன் றுண்டுகொல்
அன்னை தந்தைமற் றாரினு மேற்றமாய்
உன்னு வேனுனை யுற்றுநின் னெஞ்சமே. (9)

**மே**லுக் குச்சொல வில்லைமெய் யாகநின்
காலுக் குச்சர ணஞ்செய்யக் காண்டிமெய்ந்
நூலுக் குச்சரி சொல்புகழ் நூற்கவி
மாலுக் குட்படு வாற்பிடி நெஞ்சமே. (10)

---

*4. கயக்கு = சோர்வு.*

*5. அஞர் = வருத்தம் ; "வார வுண்டு பேரஞர் போக்கி" என்பது* ***பொருநராற்றுப்படை.***

# 58. நெஞ்சம்

**1.** என் நெஞ்சமே! பட்டத்து யானையின் மேல்ஏறி நிலவுலகத்தையே ஆண்டாலும், வானுலகையே ஆண்டாலும், மிகவும் இகழ்ச்சிக்கு உரிய சிறுமைநிலை (பசுத்துவம் உடைய சீவநிலை) என்பது நீங்குமோ ? தேனின் சுவையையும் விஞ்சிநிற்கும் அருள்தேனை உண்டு உய்திபெற, நமது உரிமை அரசனாகிய குகனை நாடி வணங்கி நில்.

**2.** பெருமை வேண்டி மகத்தான பொய்களைக் கூறினால், நீ இம்மை மறுமை ஆகிய இரண்டு நிலைகளிலும், அந்தோ! நீ விரும்பும் பெருமைநிலையை அடையமாட்டாய். வஞ்சனையை விலக்கியுள்ள வறியவரைப் போன்று நடந்துகொண்டு, அருமைத் தெய்வமாகிய குகனைத் தஞ்சம் அடைந்து உய்திபெறு.

**3.** அனைத்துக்கும் அப்பாற்பட்டு விளங்கும் குகப்பெருமானின் அருள் இன்பத்தைக் கொள்ளவுள்ள நெஞ்சமே! உலகவிடய மயக்கம் எனும் பெரிய நிலப்பரப்பில் மானுடம் எனும் விதையை விதைப்பதற்கு உரிய வயலாகத் திகழும் பெண்களின் உடல்வனப்பின் மேல் உனக்கு இன்னமும் விருப்பம் ஏன் உள்ளது ?

**4.** விதிமுறைகளை அனுசரித்து நடக்க உள்ள நெஞ்சமே! பிறவியிலேயே உடன் தோன்றிய குற்றங்களை விலக்கி உய்தி பெற எண்ணும் நீ, உனது அடாத செயல்களால், மேலும் மேலும் குற்றங்களைச் செயற்கையாகச் சேர்த்துக் கொண்டிருப்பாயானால் அந்தோ! நீ எப்பொழுது மயக்க நிலையைப் போக்கி எம்மானாகிய இறைவனின் அருள் நலத்தை அடையப் போகிறாய் ? சோர்வுபடாது கூறு.

**5.** நட்புடைய நெஞ்சமே! பன்றியோடு சேர்ந்துகொண்டு பசுங்கன்றும் மலத்தை உண்டுநிற்கும் இழிசெயல் போன்று உன்னோடு சேர்ந்து நானும் மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்பு எனும் தொடர்ச்சியான துன்பத்துள் ஆழ்ந்துகொண்டு திகைத்து நிற்றல் நன்றோ ? கூறு.

**6.** நெஞ்சமே! என் தலைவனாகிய குகப்பெருமான் முன்பு கூறியருளிய தாழ்வற்ற உபதேச மொழியை நான் நன்கு ஆலோசிக்க, நான் நாடி நிற்கும் உன்னால், அவனது அருளாகிய இன்பம் எனக்கு வாய்க்கும் என தெளிவாகப் புலனாகின்றது. ஆனால் நீ இவ்வாறு கடிய நிலையை என்பக்கம் காட்டினால், என் வாழ்க்கை என்னாவது ?

**7.** என் நெஞ்சமே! ஐயனாகிய என் அருள்தலைவன் உனது கையகத்தே எனை அடைக்கலப் பொருளாகக் கொடுத்தான். நீ மெல்ல மெல்ல என்னிடமிருந்து நழுவிப் புறமே போனால், இதுவரை நான் பட்டுள்ள பாடுகள் எல்லாம் வீணாகப் போய்விடுமே! இதுவோ அழகு ?

**8.** நன்மைதரத்தக்க நெறியிலேயே செல்லக் கடமைப்பட்டுள்ள நெஞ்சமே! அன்பாக என்னோடு இருக்கும் நீ, எனக்கு மோசம் செய்து, என்போக்குக்கு மாறாக முரண்பாடு

கொண்டு நிற்றல் நீதியாகாது. முன்பு, ஈசனாகிய குகப்பெருமான் உபதேசித்த வாசகமாகிய குறிக்குள் நின்று, இழிவானதும் கொடியதுமான பாச பந்தங்களை நீத்து உய்திஅடைய முயற்சி செய்.

**9.** நெஞ்சமே! என்னை எனக்கு உறுதியாகக் கொடுக்கும் குகப்பெருமானின் அருள் இன்பத்தை அடைவதற்கு, உன்னைத் தவிர்த்து நல்ல துணை வேறொன்று உள்ளதோ? என் அன்னை, தந்தை, மற்றும் உள்ள அன்பினர் ஆகிய அனைவரிலும் மேலாக உன்னை நான் கருதுவேன். கொண்ட குறிக்கோளிலிருந்து விலகாமல் நில்.

**10.** நெஞ்சமே! வறிதே ஒப்புக்காக நான் கூறவில்லை. உண்மையாகவே நான் நின் திருவடிக்கு வணக்கம் செய்துநிற்பதைக் காண்க. வேதத்துக்கு நிகர் எனச் சொல்லக் கூடிய திருப்புகழ்ப்பாடல்களைப் பாடிய சந்தக் கவிஞர் அருணகிரிப் பெருமானின் அன்புக்குள் எளிவந்து சிக்கிக்கொண்ட குகப்பெருமானை உறுதியாகப் பிடித்துக்கொள்!

# 59. திருவளரனந்தர்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருவள ரனந்த ராலே திடமுடை யசுத்த மாயைப்
பொருளினி லதனோர் காரி யக்கலை பொற்பத் தோன்றி
இருளினைச் சிறிது நீக்க வியங்கணுப் பொருளுக் காங்கே
கருதொளி யுண்டா மென்று கழறுமெங் கடவு ளூலே. (1)

**சா**ற்றிய நீக்கந் தானே சகலமந் நீக்க நீர்மை
மாற்றிய மூட றானே மதியில்கே வலமா மீது
சேற்றணீர் மருவு பாசி சிறுசிலை யெறியா னீங்கி
மாற்றமாய்க் கவிதல் போலா மதித்திதை யுணர்வாய் நெஞ்சே. (2)

**ஏ**கதே சமதா மிந்த நீக்கமவ் விறைசெய் வாறென்
மோகமா லெல்லா மோட முழுதுநீக் கொண்ணா தோவென்
றூகநீ பேசு வாயே லொருசத்தி பரிசத் தாலே
ஏகவன் னணமே செய்யு மிதற்கொரு தடைதா னுண்டே. (3)

**து**யிலுறு சீடன் றன்னைத் துகளிலா சாரி யற்கு
மயலறப் பரிசஞ் செய்யு மார்க்கம தில்லா தேய்ப்ப
அயர்வறு மோகத் தூக்க வணுவையவ் வருடான் றீண்டற்
கியலுடை யோக்கி யந்தா னிலையென வுணர்வாய் நெஞ்சே. (4)

1. *அணுப்பொருள் – அணுவாகிய பொருள் ; இருபெயரொட்டு ; அணு = உயிர்.*

**க**ண்டுயில் வானைத் தீர்த்தன் கரத்தடி யாலே தட்டி
மண்டனி லெழுப்ப னேர மாமய லுயிரைத் தானவ்
வண்டறு பரனார் சத்தி வாட்கலை யாலே தூண்டி
உண்டுறு பருவங் காறு மோச்சிடும் வினைக்கான் மேலே. (5)

**நி**த்திரை பராமு கந்தா னீங்கியே வசமா நிற்கும்
புத்திரன் றனையா சான்மெய்ப் புந்தியாற் பரிசத் தாலே
சுத்திசெய் தருளு மாறு சொனவிரண் டவத்தை நீத்த
சித்திசேர் நிலைமே னிற்போன் றனைப்பர னருளுந் தீண்டும். (6)

**கே**வலஞ் சகல நீத்துக் கெழுமுமப் பருவந் தன்னை
ஓவுறா ததுவே யிஞ்ஞான் றுதவொணா தோவென் றக்கால்
ஆவியா முயிர்ச்சு தந்தி ரத்தினை யதனுக் கீந்தால்
தாவிலா ததனை யீயு மென்றல்சால் விடையா நெஞ்சே. (7)

**நா**னென தென்ப தேயந் நவையுயிர்ச் சுதந்தி ரங்காண்
ஈனவீ துளநாண் மட்டு மெம்பிரா னருளு மேவா
தூனமாம் பிறப்பும் வீவு மொழிந்திடா விதுதா னாவால்
நானென தலவென் றோதி நசைகொளு நடையு மன்றே. (8)

**த**ன்னது சுதந்தி ரத்தைத் தலைவனுக் கீந்து விட்டால்
என்னது நானென் றொன்றை யெண்ணவோர் மனமு மில்லை
உன்னுமம் மனமின் றாயி னுடலினுக் கசைவு மில்லை
பன்னவோ வாக்கு மில்லை பகவனைப் படரு நெஞ்சே. (9)

**வ**ழுத்துமந் நிலையைத் தானே மாவருண் மவுன மென்னாப்
பழுத்தமெய் யறிஞர் சொல்வார் பரிவுடை நெஞ்சே யத்தை
விழுத்தவர் சூழு மெம்மான் வியன்றிருப் புகழ்ப்பா மூத்தோன்
வழுக்கறத் துதித்த தேவ மணிதனைப் படர்ந்து கூடே. (10)

---

*9. "உடலினுக் கசைவுமில்லை" என்றதுகொண்டு முத்தராயிருந்த ஞான சம்பந்தர் முதலிய திருவருட் பெருஞ்செல்வர் எப்படி யுலகிற் சஞ்சரித்தா ரென்னுஞ் சங்கை யெழுமாயின் அதனை, சந்திரமௌலி யெனும் 52–ஆம் பத்தின் 5–லும், ஞாலமெனும் 106–ம் பத்தின் 4–லும் விளக்கி யுள்ளபடி பெத்தருக்கும் பரமுத்தருக்கும் இடையிலுள்ள ஞானிகள், பிரபஞ்சத்தோடு கூடியுங் கூடாமலுஞ் சஞ்சரிப்பர் ; பரநிட்டையி லசைவற்று மிருப்பரெனு மாற்றானே தீர்த்துக் கொள்க.*

*10. வழுக்கு = மறத்தல் ; சூ – நிகண்டு.*

# 59. திருவளரனந்தர்

1. சிவசக்தியின் அருளால் வளர்ச்சிபெறும் அனந்தேசுவரர், திடமான அசுத்தமாயை எனப்படும் பெரும்பரப்புடைப் பொருளில் ஓர் அசைவைத் தோற்றுவித்து, அதனால் கலை என்னும் தத்துவத்தைத் தோற்றுவித்து ஆன்மாவுடன் சேர்க்க, அதுகாறும் அசைவற்றிருந்த உயிரை மறைத்துள்ள ஆணவ இருள் அதனால் சிறிதளவு நீங்கி நிற்கும். அதன்மேல் உயிர் மெல்லமெல்ல இயக்கம் கொள்ளத் தொடங்கும்; அந்த உயிரின் ஞானசக்தியில் ஒரு மலர்ச்சி உண்டாகும் இவ்வாறு சிவபெருமான் அருளிய ஆகமநூல் கூறும்.

2. கூறப்பட்ட சிறிதளவான இருள்நீக்கம் என்பதே சகலநிலை. அது நீங்கியிருக்கும் தன்மையை மாற்றும் முகமாக, மீண்டும் இருள்வந்து மூடி மறைத்துக் கொள்ளுதலானது, அறிவுசிறிதும் அற்ற கேவலநிலை ஆகும். இது, சேறுபொருந்தியுள்ள தண்ணீரில் படர்ந்துள்ள பாசியானது, சிறிய கல்லை எறியும்போது ஓரளவு நீங்கிப் பின்னர், அந்த நீக்கம் என்பது அறவே இல்லையாகும் வகையில் மீண்டும் பாசிவந்து மூடிக்கொள்வது போலாகும். நெஞ்சே! இந்தச் செயற்பாட்டை நன்கு சிந்தித்து உணர்ந்துகொள்.

3. கூறப்பட்ட சிறிதளவு இருள்நீக்கம் என்பது ஏகதேசமாக நிகழ்வது. இந்த ஏகதேசமாகிய நீக்கத்தை இவ்வாறு இறைவன் ஏன் செய்யவேண்டும்? மோகம், மயக்கம் முதலான குற்றங்கள் அனைத்தும் நீங்கும் வகையில், ஆணவ இருளை முழுவதுமாக நீக்கக் கூடாதோ? என தருக்கரீதியில் நீ கேட்பாயானால் – ஒப்பற்ற சிவசக்தி, தன் தீண்டுதலாகிய செயல்திறத்தால், அவ்வாறே இருள்முழுவதும் நீங்கும் வண்ணம் செய்யும். ஆனால் அவ்வாறு செய்வதற்கு ஆன்மாவிலேயே தடைஒன்று உள்ளது.

4. தூங்கிக் கொண்டிருக்கும் தன் சீடனை, அவனது தூக்கம் முழுவதுமாகச் சடிதியில் நீங்கிட, தட்டியோ, தீண்டியோ எழுப்பும் மார்க்கமானது, பூரணஞானம் பெற்றுக் குற்றமற்றுள்ள குருவுக்கு இல்லை. அதுபோன்று அயர்வை நீக்கும் மோகத்தூக்கத்துள் ஆழ்ந்திருக்கும் ஆன்மாவை, அந்த அருட்சத்தியானது தீண்டுதற்குரிய பொருத்தமான தகுதி (பக்குவநிலை) அந்த ஆன்மாவுக்கு இல்லை. (இருள் முழுவதையும் நீங்கிநிற்கும் சூழ்நிலை ஆன்மாவுக்கு வரவில்லை). நெஞ்சே, இந்த உண்மையை நீ உணர்ந்துகொள்.

5. கண்ணுறங்கும் சீடனை, புனித குருவானவர் தனது கையிலுள்ள தடியாலே தட்டித் தூக்கத்தினின்று எழுப்புதல் போல, பெரிதும் மயக்கத்தில் ஆழ்ந்து உறங்கும் உயிரை, பொய்ம்மை சிறிதும் அற்ற பரசிவத்தின் அருட்சத்தியானது, ஒளி பொருந்திய கலை என்னும் தத்துவத்தால் தூண்டி எழுப்பும்; வினைப்பயனை நுகரவேண்டிய காலம் வரையிலும் அருட்சத்தியானது அந்த உயிரை வினையாகிய சக்கரத்தால் செலுத்திக் கொண்டிருக்கும்.

6. தூக்கம், கவனக் குறைவாகவும் உதாசீனமாகவும் இருத்தல் முதலான குற்றச் செயல்களிலிருந்து நீங்கித் தன் வயத்தில் உடல் கருவி கரணங்களை வைத்துள்ள சீடனை, குருவானவர் தமது சிந்தனையாலும், பரிசத்தாலும் தூய்மை செய்து அருள்வார்.

அதைப்போன்றே, முற்கூறப்பட்ட கேவலநிலை, சகலநிலை ஆகிய இரண்டு அவத்தைகளையும் நீத்து, சித்திபொருந்தியுள்ள உயர்ந்தநிலையில் தன்னை இருத்திக் கொண்டிருக்கும் ஆன்மாவைப் பரசிவத்தின் திருவருட்சக்தியானது தீண்டிநிற்கும்.

7. கேவல அவத்தையையும் சகல அவத்தையையும் நீ கடந்து மேம்பட்டுப் பொருந்தும் சித்திசேர் மேல்நிலையைத் தங்குதடை இன்றி, அந்த அருட்சக்தியானது இப்பொழுதே வழங்கக் கூடாதோ எனக் கேட்பின், ஆன்மாவானது தனது சுதந்திரத் தன்மையை அதனுக்கு அர்ப்பணித்துவிட்டால் சிவசக்தியானது ஒரு தடையும் இன்றி அந்த மேல்நிலையைக் கொடுத்துவிடும். நெஞ்சே! இவ்வாறு கூறலே, அதற்குப் பொருத்தமான விடை.

8. பந்தக் குற்றம் பொருந்தியுள்ள உயிருக்குச் சுதந்திரம் என்பது "நான்' 'எனது' எனும் உணர்வொடு நிற்றலேயாகும். இழிவான இந்த உணர்வு இருக்கும் நாள்வரையிலும் எம்பிரானின் அருளும் உயிருக்குக் கிட்டாது. இழிவுநிலையாகிய பிறப்பு – இறப்புத் தொடர்ச்சி இருந்துகொண்டே இருக்கும். இது, நாவால் "நான் அல்லன்" "எனதன்று" என்று, அனைத்தையும் விடுத்து இருக்கும் மனோபாவத்தை விரும்பி மேற்கொள்ளும் நன்னெறியும் அன்று.

9. ஐசுவரியம் முதலான அறுவகைச் செல்வம் உடைய இறைவனைத் தியானிக்கும் நெஞ்சே! தனது சுதந்திரத்தைத் தலைவனாகிய இறைவனுக்கு அர்ப்பணித்து விட்டால் 'என்னுடையது' எனவோ 'நான்' எனவோ கருதக்கூடிய மனம் எனும் கருவி இல்லை. அவ்வாறு கருதும் மனம் இல்லையாயின் உடலினுக்குத் தற்சுதந்திர இயக்கம் என்பது கிடையாது; தனது நிலையை விளக்கிக் கூற வாக்கும் கிடையாது.

10. ஞானியர் போற்ற உள்ள அந்த தற்சுதந்தரமறும் நிலையே பெரிய திருவருளால் வாய்க்கும் மௌனசுகம் என்று சிவானுபவத்தில் ஆழ்ந்து முதிர்ந்த அருளாளர்கள் கூறுவர். என்பால் அன்புடை நெஞ்சமே! சிறந்த தவச்சீலர்கள் விரும்பித் துதிக்கும் எம்மானும், பெருமைக்குரிய திருப்புகழ்ப் பாக்களை அருளியவனுமான எம் தலைவன் அருணகிரிப் பெருமான் ஒருபோதும் மறவாமல் துதித்த தெய்வரத்தினத்தை முறைப்படி உபாசித்து, அந்த மௌன சுக நிலையைப் பொருந்தி இருப்பாயாக.

# 60. சிவத்திரு

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சி**வத்திரு வடைவதற் குரியவொர் மூவகைச்
சீவருண் ணின்றுள சகசமலம்
அவித்தையா விருதிருக் கசுத்திநி ரோதமொ
கம்பட லம்பசு நீகாரம்

கவித்திடு பந்தன மூர்ச்சையஞ் சனஞ்சயங்
கறைதடை மாதம சிடர்மூலம்
எவத்திடு பசுத்துவ மிருத்தியு கேவல
மென்றபல் பேர்பெறு மெனுமரனூல். (1)

அம்மல மின்னுங்கி லானிய ருஞ்சட
மாச்சா தனமல மஞ்ஞானம்
வெம்மைசெய் பாசமி ருந்திரை யெனும்பெயர்
மேவுமிஃ தேமல்க ராகாதி
தொம்முறு கருவிகண் மேவிநின் றரிஷம்வெஞ்
சோஷம ராகம்வி ஷாதமதம்
விம்மித மோகம்வை சித்திரி யம்மெனு
மேழ்வகை செயுமென நூல்சொலுமே. (2)

மனைமுதல் வளங்களை நோக்கிம கிழ்ந்தினு
மகிமிசை யெமக்கெது குறையெனவே
நினைவுற லரிஷம வலமன வேதனை
நீட்சியி னாலுண வெடுப்பதின்றி
வினையுடம் புலரனின் றிடுவது சோஷமை
மேவற நூனுழை யாச்செவியோர்க்
கனையரன் பொருள்கவர் நினைவென நிற்பத
ராகமென் றறியென தளிமனமே. (3)

புல்லிய மகளிரைப் பிரிந்தபின் பழுதுளம்
புண்படு நிலைமைவி ஷாதம்விலை
மெல்லியன் மாதரைப் புவியர சியரென
வேமதித் திவரினும் வியன்பேறொன்
றில்லையெ னத்துணிதன் மதங்குரு சொனநெறி
யிகந்ததி பாதகஞ் செயறானே
அல்லகண் டமுதவு மோகமென் றறிதியெ
னருட்குக னருளினை நினைமனமே. (4)

தன்மைமுன் னிலையொடு படர்க்கையு மாய்ப்பரன்
றான்புரி யிருவினைப் பலனளிப்பான்
என்மதி மறந்துசெய் தேன்பிறர் செய்தன
ரெனநினைந் துழிதரு மிழிமதியே

---

*1. எவ்வம் 'எவம்' என இடைக்குறை விகாரமாயிற்று. எவ்வம் = துன்பம் ; **சூ – நிகண்டு.***

*3. மகி = மண்ணுலகு ; பி – நிகண்டு.*

நன்மையி லாதவை சித்திரி யம்மிது
நலிவுறின் மேலொரு வினையுமிலை
புன்மைய மனத்தொடு வாக்கும டங்கிடும்
பொறியுறு நன்மன மேயறியே. (5)

**மோ**கினி யென்றவொர் காரண மாயையின்
முளைக்கும ராகதத் துவமாதி
மாகிருத் தியவொரு மலத்துவித் தேசரை
மருவுத லிலையத னாலரிஷம்
ஆகிய குணமுத லேழுமி லவர்களுக்
ககிலமும் மலத்தவ ரவையடைந்த
தேகிக ளாகலி னவர்க்கந்த வெழுவகைத்
தீழ்ப்பியல் பும்முள வெனுமரனூல். (6)

**மா**ளிகை தொறுமுறு மாயிரு ளனைத்துமொர்
மரபென வாவது போல்வடுவிற்
காளித மெனவுயிர் தோறுமி ருந்துமெங்
கணுஞ்சொல வுள்ளது முயிர்ப்போதக்
கூளிய தாகவி ராயது முணர்ச்சியங்
கொன்னுடை யறிவொடு தொழிலிச்சை
மீளியெ லாமறைத் துளதுமுன் னேசொன
விடமல மென்றறி திடமனமே. (7)

**அ**கிலநி ரம்பிருள் பிறவுருக் களைநனி
யாவரித் திடினுமொர் தனைக்காட்டும்
முகிலினு மிருண்டபொல் லாமல மிருவகை
முதலையுந் தன்னையுங் காட்டாதீ
தகலுமந் தரம்வரை யாத்துமன் பசுவென
வாவனம் பரமென வாகானால்
இகலிதை வென்றினி வாழவென் னீசனை
யேகரு தாயுணர் வார்மனமே. (8)

---

*7. வடு = செம்பு. கூளி = ஆசெனுங் குற்றம் ; "கூளிபேய் தமரே றாசு குறள்படைத் தலைவன் கூட்டம்" என்பது **ளகரவெதுகை.***

*8. 'ஆத்மந்' என்னும் வடமாற்றம் தமிழ்நூன் முடி புக்கியைய "ஆத்துமன்" எனவுரைக்கப்படுவ தாயிற்று.*

**வ**யிந்தவ மாயையைக் காரண வுடம்பென
மருவொரு மலத்தரொ டிருமலர்க்கும்
உயர்ந்தவல் லிருளெனச் செறிதலில் லாதுர
னோவுமிவ் வாணவஞ் சகலருக்கே
நயந்தரு மோக்கப ரியந்தமு மதியிரு
ளாகவி ருந்திடு மிதையுடையார்
இயங்கொரு முதுக்குறை வுடையவ ராதலின்
றெனவுணர்ந் திறைவனை நினைமனமே. (9)

**சொ**ற்றிடு திரிமல சகலருக் கேயருள்
சுரந்துக லாதிதத் துவநாமம்
பெற்றுள மாயையென் மலத்தினைக் கூட்டியொர்
பெருங்கிரி யாசத்தி யாலமுக்காய்ப்
பற்றிய மலத்தினைத் துடைத்தருள் வானருட்
பதியவ னேயரு ணாசலப்பேர்
நற்றவற் கருளிய குகனவன் றன்னையெந்
நாளுமென் னறுமன மேநினையே. (10)

ஆக அறுபதுபத்தினும் போந்த திருப்பா - 600
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 603**

# 60. சிவத்திரு

**1.** அனைத்தையும் அறிதல் (சருவஞ்ஞத்துவம்), அனைத்தையும் செய்தல் (சர்வ கர்த்திருத்துவம்) எனப்படும் சிவத்துவமாகிய பெரும்செல்வத்தை அடைவதற்கு உரிமையுள்ள மூவகை உயிர்களிடத்தும் இருக்கும் சகசமலம் எனப்படும் ஆணவமலமானது – அவித்தை, ஆவ்ருதி, திருக், அசுத்தி, நிரோதம், மோகம், படலம், பசுநீகாரம், பந்தனம், மூர்ச்சை, அஞ்சனம், சயம், கறை, தடை, தமசு, மூலம், பசுத்துவம், மிருத்தியு, கேவலம் எனக் கூறப்பட்டுள்ள பல பெயர்களையும் பெற்றுநிற்கும் என அரனார் அருளிய ஆகமநூல் கூறும்.

*9. வைந்தவமென்னுஞ் சொல் "வயிந்தவம்" என முதற்போலி யாயிற்று. விந்துவின் சம்பந்தம் வைந்தவமாதலின் விந்து (பிந்து) தத்துவ சுத்தமாயை "வைந்தவ மாயை" எனப்பட்டது.*

*முதுக்குறைவு = பேரறிவு.*

*10. "கலாதி தத்துவநாமம் பெற்றுள மாயை" அசுத்தமாயை யாதலின், ஈண்டு "மாயையென் மலம்" என்றதற்கு அவ்வசுத்த மாயாமலமெனப் பொருள் கொள்க. மாயைகளின் விவரம் 96–ஆம் பத்துழை யறியற்பாற்று.*

**2.** மேலும் அம்மலமானது கிலானி, சடம், ஆச்சாதனம், மலம், அஞ்ஞானம், பாசம், திரை எனவும் வேறு பல பெயர்களையும் பொருந்தும். இந்த மலமே, அராகம் முதலான தத்துவங்களுடன் இணைந்து நின்று அரிஷம், சோஷம், அராகம், விஷாதம், மதம், மோகம், வைசித்திரியம் என உள்ள ஏழுவகைப்பட்ட குற்றங்களையும் தோற்றுவிக்கும் என ஆகம நூல் கூறும் (இந்த ஏழும் மலத்தின் காரியங்களாகும்).

**3.** மேற்கூறப்பட்ட ஏழுவகை மலகாரியங்களுள் அரிஷம் என்பது ஒருவன் தனக்குள்ள வீடு முதலான வளங்களை மீண்டும் மீண்டும் பார்த்து மகிழ்ந்து, இறும்பூது அடைந்து 'இந்தப் பூமியில் இனி எனக்கு என்ன குறை உள்ளது ?' எனக் கருதுதலாகும்; துன்புறும் மனவேதனை மிகுவதால், உணவு முதலியன உட்கொள்ளாமல், வினைப்பயனால் வாய்த்த இந்த உடல் உலர்ந்து வற்றுமாறு நிற்பது சோஷம் எனப்படும். ஐயம் பொருந்தப் பெற்று, சிறந்த நூற்கருத்துக்களை உரியோர் கூறவும், கேட்காமல் இருக்கும் தன்மை உடையோரிடம் இறைவனின் உடைமைகளையும் பொருள்களையும் கவர்ந்து கொள்ள எழும் நினைவு என விளங்குவது அராகம். எனது கருணை கூர் மனமே! இவ்வாறு இவற்றின் இயல்புகளை அறிந்துகொள்.

**4.** தம்மால் தழுவப்பட்ட மகளிரைப் பிரிந்த பின்பு, பிரிவால் அழுது உள்ளம் புண்பட்டிருக்கும் நிலையே விஷாதம் என்பது; விலைமகளிரைப் பட்ட மகிஷியர் என மதித்துப் புகழ்ந்து இவர்களை அடைந்திருப்பதே பெரிய பேறு என மனம் துணிந்து இருப்பது மதம் எனப்படும்; குரு உபதேசித்த நெறியை மீறி, மா பாதகச் செயல்களைச் செய்தலே, பெருந்துன்பம் கொடுக்க உள்ள மோகம் என்பது. அடியார்க்கு அருளும் குகப்பெருமானின் திருவருட் பேற்றை நினைந்திருக்கும் மனமே! இவ்வாறு விஷாதம் முதலானவற்றை அறிந்துகொள்.

**5.** தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று நிலைகளிலும் நின்று, பரமபதியாகிய இறைவன், ஆன்மாவாகிய தான் செய்யும் இருவினைகளின் பயன்களை மாறாமல் அருள்வான் என்னும் கருத்தை மறந்து 'இதை நான் செய்தேன்' 'இதைப் பிறர் செய்தனர்' எனக் கருதிச் சஞ்சலப் படும் இழிவான மனோபாவமே, நன்மை சிறிதுமற்ற வைசித்திரியம் என்பது. இந்த வைசித்திரியம் என்பது நீங்கினால், அதன்மேல் ஒருவன் அனுபவிக்கக் கூடிய வினைப்பயன் ஏதும் இல்லை; அற்பத்தனமான மனமும் வாக்கும் நன்கு அடங்கிநிற்கும். நுண்ணறிவு பொருந்தியுள்ள நல்ல மனமே! இவ்வுண்மையை நன்கு அறிந்துகொள்.

**6.** மோகினி எனப்படும் காரண மாயையில் (மிசிர மாயையில்) தோன்றும் அராக தத்துவம் முதலானவை, மிகவும் கொடுஞ்செயல் புரியும் ஆணவம் என்னும் ஒரு மலம் மட்டும் உடைய வித்யேசுவரர்களை (விஞ்ஞானகலர்களை)ப் பொருந்துவதில்லை. அதனால் அரிஷம் முதலான ஏழுவகை மலகாரியங்களாகிய தீய இயல்புகள் அவர்களுக்கு இல்லை. ஆனால்

மூன்று மலங்களையும் உடைய சகலவர்க்கத்தவர், அராகம் முதலான தத்துவங்களின் சேர்க்கை பொருந்தியுள்ள தேகங்களோடு கூடியுள்ளவர்கள் ஆதலின் சகலவர்க்கத்து உயிர்களுக்கே அந்த ஏழுவகைப்பட்ட அசுத்த குணங்கள் உள்ளன என ஆகமநூல் கூறும்.

7. வீடுதோறும் தனித்தனியே இருள் இருந்தாலும், அந்த இருள் அனைத்தும் ஒரு தனி வகை என விளங்குவதுபோன்று செம்பில் களிம்பு இருப்பதுபோல் உயிர்தோறும் இருந்தும், எவ்விடத்தும் உள்ளது எனக் கூறுமாறு திகழ்வதும், உயிரின் அறிவுநிலையில் ஏற்பட்டுள்ள ஒரு குற்றமாக உயிருடன் கலந்து இருப்பதும், ஆன்மாவின் உணர்வு, அறிவு, தொழில், இச்சை, பலம் ஆகியவற்றையெல்லாம் மறைத்திருப்பதும் முன்னர்க் கூறப்பட்ட, நஞ்சு போன்றதான ஆணவமலம் என்று, உறுதிசான்ற மனமே, நீ நன்கு அறிந்துகொள்.

8. உலகம் முழுவதும் பரவியுள்ள இருளானது, மற்றைய பொருள் வடிவங்கள் அனைத்தையும் நன்கு மறைத்திருந்தாலும் தனது கரிய வடிவத்தைக் காட்டி நிற்கும். ஆனால், கரிய மேகத்தைக் காட்டிலும் கருத்துள்ளதும் கொடியதுமான ஆணவமலம், மற்றைய வடிவங்கள், தன் வடிவம் ஆகிய இரண்டு வகைகளையுமே காட்டாது. இத்தகைய கொடிய ஆணவமலம் நீங்கும் வரையிலும் ஆன்மா பசு என்னும் பெயரால் குறிக்கப்படுவான்; இந்த ஆன்மா பரமான்மாவாக ஆகான். நல்ல அருள் உணர்வு நிரம்பப் பெற்றுள்ள மனமே! மிகக் கொடியதாய், மாறுபட்டு நிற்கும் இந்த ஆணவமலத்தை இனி வென்று, முத்திநிலையில் வாழ, என் ஈசனாகிய குகனையே எப்பொழுதும் தியானித்து இரு.

9. வைந்தவ மாயை எனப்படும் சுத்தமாயையைத் தமக்குரிய காரண தேகமாகப் பொருந்தி இருக்கும் ஒருமல வர்க்கத்தினர்க்கும் இருமல வர்க்கத்தினர்க்கும், இந்த ஆணவமலமானது கொடிய இருள் என அடர்ந்து செறிந்து இருக்காமல் தனது ஆற்றல் குறைந்திருக்கும். இந்த ஆணவமலமானது சகலவர்க்கத்து உயிர்களுக்கே இன்பம் மிகுந்த முத்திப் பேறு பெறும் வரையிலும் கொடிய இருளாக விளங்கி இருக்கும். இந்த ஆணவமலமாகிய மூலபந்தம் உடையார், புகழ்ச்சிக்குரிய பேரறிவுமிக்க ஞானியர்களாக ஆவதில்லை. மனமே! இவ்வாறு ஆணவமலத்தின் இயல்பை அறிந்து, அதனின்று நீங்கி விடுபட, குகனாகிய இறைவனைத் தியானித்திரு.

10. கூறப்படும் மும்மலப் பிணிப்புடைய சகலர்க்கே திருவருள் மயமான கடவுள் மிகவும் கருணைகூர்ந்து, கலை முதலான தத்துவப் பெயர் பெற்றுள்ள அசுத்தமாயை எனும் மலத்தைச் சேர்த்து, தனது கிரியா சக்தியால் உயிரின் அழுக்காகப் படர்ந்து செறிந்துள்ள ஆணவமலத்தைப் போக்கி அருள்வான். அத்தகைய கடவுளே அருணகிரிப்பெருமான் எனும் நல்ல தவ முனிவருக்குப் பேர் அருள் வழங்கிய குகப்பெருமான் ஆவன். அருள் உணர்வு வாய்த்துள்ள மனமே! அந்தக் குகப்பெருமானையே எந்நாளும் தியானித்து இரு.

# 61. மலைமகள்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ம**லைமகளுக் கிடப்பாக மீந்தோ னீந்த
வண்மைநுவல் சிந்தியநூல் கூறு மாறு
தொலைவிலுயிர்க் குறுகரும மலந்தா னாதி
சொலவிசையாச் சகசமதா யறிவி லாதாய்
நிலையிகந்த பிரவாகா னாதி போன்ற
நீருடைத்தாய்த் திரிகரண வாயே யேறி
உலைவுபடு மிருவினையா யவித்தைச் சார்பா
யுளதெனவே யோர்திகுகற் படரு நெஞ்சே. (1)

**ம**னம்வாக்குக் காயமெனு மூன்றி னாலும்
வருவிருப்பு வெறுப்பினுழி விளைவா மிந்தக்
கனமாய கன்மமத னாதி யென்றே
கழறுநிர லியாதெனினம் மலமில் லாது
வினையுடம்ப தில்லையந்த வுடம்பில் லாது
வினையாமம் மலமுமிலை யதனா லீது
முனைகுறிக்கொ ணாதபீ சாங்கு ரப்பேர்
மொழிஞாய மாகுமென வோர்தி நெஞ்சே. (2)

**அ**ந்தவொரு பீசாங்கு ரத்து ஞாய
மாவதுவித் திடமரமு மரத்தே வித்துந்
தொந்தமதா யொன்றனுக்கொன் றேது வாகச்
சொலக்கிடக்கு முறையான்முன் னேதுக் கூறற்
கெந்தவகை யானுமியை யாத தென்று
மிதுபோலக் கருமமல வுடம்பு ஞாயத்
தந்தரமு மென்றுமறிந் தறிவாம் விண்ணா
யாருமெம்மா ணடிகளையுண் ணினையாய் நெஞ்சே. (3)

---

*1. ‘கருமமலம் ஆதிசொல்லவிசையாச் சகசம்’ என்றலின், அம்மலம் அனாதியென்றவாறு. அனாதியென்பது (நகர்மாவிபாகாதிதி சேந்நாநாதித் வாத் –உபபத்யதேசாப்யுபலப்யதேச) “கன்மம் பாகுபாடின்மையான் இன்றெனின், அன்று : அனாதிக்கண்ணதாகலின் அது முழுதும் பொருந்தும் : அனுபவத்துமறியப்படுகின்றது.” எனப் பிரஹ்மஸூத்ரங்கிளத்து மாற்றானு மறியப்படுகின்றது. உரையிற்கோடலென்னும் உத்தியால் இஃதுங்கொள்க. இம்மல விசாரம் பெரிதாகலிற் **சிவசூரியப்பிரகாசம், சதானந்தசாகரம், திட்ப**மென்பனவும் படித்துணர்க.*

**ஆ**ணவத்தாற் சிமிழ்ப்புண்ட சீவ போத
    மாவதுவுங் காரணயாக் கையும னாதி
காணொழுங்கா லவற்றுடனுங் கூடா நிற்குங்
    கருமமலஞ் சகசமெனல் கட்டே யாகுந்
தூணமுடை யீதுபிரா ரத்த மாகா
    மியந்தொல்லைச் சஞ்சிதம தெனவே நின்று
நீணிலமோர் மூன்றனுளும் விவித ரூப
    நிலையளித்தே யலைக்குமொரு கொடிதா மன்னோ. (4)

**தொ**ண்டாய பிராரத்தம் புசிக்கத் தெய்வஞ்
    சூக்குமதூ லங்கொடுக்கு நுகருங் காலத்
துண்டாகு விருப்பினா காமி யந்தா
    னோங்கியது பின்னுறுசஞ் சிதமா நின்று
பண்டேபோற் பிராரத்த மாக மேவும்
    பணித்தவடை வாகமுத்தி வரையு மக்கோ
கொண்டாவி யலைக்குமிது பைங்கூழ் செய்வான்
    கொள்கைபோற் றொலைவில்லாத் தொடர்பா மன்னோ. (5)

**ச**ககரும மலத்தாலே யாதி தன்னைத்
    தலையிற்கொ ளாத்துமிகம் பௌதி கந்தை
விகமாகு தாபத்தி ரயமோர் மூன்று
    மேவுமவை விளக்கினோய் மனுடர் மண்ணை
ககமிருக முதலாய வுயிர்க ளாலே
    காணுறுநோ வேயாதி யான்மி கங்கால்
உகமின்ன லிடிகளாற் கொடிய தாப
    முறலாதி பௌதிகமே யெனவா மன்னோ. (6)

**உ**திப்பிறப்பு நிரயத்தான் வருமா தாப
    முயர்வாய வாதிதைவி கங்கா ணிந்த
விதிக்குரிய வனாதிகன்மஞ் சங்கா ரத்தே
    விளிவில்லா முதற்றனுவா மாயை யின்பால்
ஒதுக்கமென நின்றுசிட்டி யாங்கா லத்தே
    யுறுபுத்தி யினையடைந்து நிகழு மேயீ
தெதற்குமுத லாங்கடவு ளாணை யாலே
    யிழைத்தவர்கட் டவறாது மருவு மன்னோ. (7)

---

*5. 'பண்டேபோற் பிராரத்தமாக மேவும்' என்னு முறைமையால், இருவினையாகிய ஆகாமியத்தைத் தூலகன்மமென்றும், இருவினைப் பயனாய் நிற்கும் புண்ணிய பாவங்களெனுஞ் சஞ்சிதத்தைச் சூக்குமகன்மமென்றும், புண்ணியபாவங்கட்குப் பலனாக வரூஉம் இன்பமும் துன்பமுமாம் பிராரத்தத்தை அதிசூக்குமகன்மமென்றுங் கழறுப.*

*6. மண்ணை = பேய், ககம் = பறவை.*

**சீ**வசுதந் திரபோத விரிவாம் புத்தி
    சேர்ந்தகன்ம வயப்பட்டே சுலவ வங்ஙன்
மேவுமந்தப் போதமன மோகத் தாலே
    விளைத்திடுமே நூதனவா காமி யத்தைத்
தாவுடைய பிறவிச்சூ ரறுப்போ ரத்தைச்
    சாராது காப்பரது சாரா மற்றான்
தூவுடைய வமுதசிவ மனுவை யுள்ளே
    சோராது கொண்டுநிற்பா ரோர்தி நெஞ்சே. (8)

**அ**ம்மனுத்தான் வறுத்தபரற் போலே யந்த
    வாகாமி யத்தையற வுஞற்று மேனைக்
கொம்மையுறு கருமமெலாம் பதிஞா னத்தாற்
    குன்றிவிடுங் கருமமலஞ் சகச மாமேல்
எம்மையற வொருவுவதெவ் வாறே யென்றா
    லெழிலரிசி தனின்முளையொத் திருக்கு மஃதைத்
தம்மையெனும் பதியருடான் புய்க்கு மென்றே
    சரதமுடி வுணர்ந்தருளை யூழ்த்தாய் நெஞ்சே. (9)

**வி**ஞ்ஞான கலரொழிந்த வேனோர் யார்க்கு
    மேவியவிக் கருமத்தான் விளையா நின்ற
அஞ்ஞான வினைப்பயனைச் சிவனே யூட்டி
    யருள்வனெனச் சொயம்பாக மந்தா றோதும்
பொய்ஞ்ஞான நூறியவ னருட்பே றெய்தப்
    புகழ்த்தாயு மானவன்செய் துதிபெற் றானும்
மெய்ஞ்ஞானப் புகழ்க்கவிசொன் னானு மான
    மிக்கானி னடிகளையே நினையாய் நெஞ்சே. (10)

# 61. மலைமகள்

**1.** குகனை நினைந்திருக்கும் நெஞ்சே! இமவான் மகளாகிய பார்வதிக்குத் தன் இடப்பாகத்தை அளித்த சிவனார் அருளியதும், தத்துவ வளம் பற்றிக் கூறுவதுமான சிந்தியம் எனும் ஆகமம் கூறுமாறு, அழிவில்லாத உயிர்களுக்குப் பொருந்தியுள்ள கன்ம மலம் என்பது, இன்ன காலத்தில் தோன்றியது எனத் தொடக்கம் கூற முடியாததாகவும், ஆன்மாவுடன் உடன் தோன்றியதாகவும், சடமாகவும், ஒரு நிலையான தன்மைக்கு உட்படாத பிரவாக அனாதி

*9.* *கொம்மை = வலி ; **பி – நிகண்டு.***
*புய்த்தல் = பிடுங்குதல் ; **பி – நிகண்டு.***

*10.* *விஞ்ஞானகலர் – விஞ்ஞானாகல ரென்பதன் மரூஉ.*
*துதி = “கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன எந்தையரு ணாடி யிருக்குநா ளெந்நாளோ.” என்னுந் திருவாக்கேயாம்.*

நியாயத்தால் விளங்குவதாக உள்ளதாகவும், மனம், வாக்கு, உடல் எனும் மூன்றாலும் வளர்ச்சி அடைந்து சுழற்சியுறும் இருவினை மயமாகவும், அஞ்ஞான இருப்பைச்சார்ந்துள்ளதாகவும் விளங்குவது எனக் கன்மலமலத்தின் இயல்பைப்பற்றி உணர்ந்து கொள்க.

2. மனம் வாக்கு உடல் எனப்படும் மூன்றாலும் கொள்ளப்படும் விருப்பு, வெறுப்பு எனும் இரண்டையும் சார்ந்து கிளைத்துப் பெருகும் மிகுதிப்பாடு உடைய இந்தக் கன்மமலம் என்பது அனாதி எனக் கூறப்படுவதன் கருத்து யாதெனில் – வினை இல்லாது உடல் தோற்றம் இல்லை; உடல் தொடர்பு இல்லாமல் கன்மமலம் இல்லை. அதனால் இந்தக் கன்மமலம் முன்னது இது; பின்னது இது எனக் குறித்தற்கு இயலாத பீஜாங்குரம் எனக்கூறப்படும் (வித்தும் முளையும் எனும்) நியாயத்தைப் பொருந்தி விளங்கும் – எனக் கன்மமல இயல்பைப்பற்றி ஆய்ந்துணர்க.

3. கூறப்பட்ட அந்த பீஜாங்குர நியாயமானது விதையைக் காரணமாகக் கொண்டு அதிலிருந்து மரமும், அம்மரத்திலிருந்து விதையும் தொடர்ப்பாடு உடையதாகவும் ஒன்றனுக்கொன்று காரணமாகவும் உள்ளது எனக் கூறத்திகழும் முறையால், முற்பட்ட காரணம் இதுதான் எனக் கூறுவதற்கு எப்பொழுதும் எந்தவிதத்தாலும் இயலாததாகும். அதுபோலவே கன்மமலமும் உடம்பும் எனும் நியாயத்திலும் உள்ள தொடர்ப்பாடு என அறிந்து, நெஞ்சே! சின்மயமாகவும், ஞானவெளியாகவும் பொருந்தியுள்ள எம்மானாகிய குகனின் திருவடிகளை உள்ளுக்குள்ளே தியானித்துக் கொண்டிரு.

4. ஆணவமலத்தால் பந்தப்படுத்தப்பட்டிருக்கும் சீவபோதம் என்பதற்கும் காரணதேகம் என்பதற்கும் அனாதிதன்மை உண்டு என உணரப்படும் நியாயத்தால், அவற்றொடு பொருந்திநிற்கும் கன்மமலமும் சகசமலமே எனக்கூறல் திடமான உறுதிமுடிவே ஆகும். முரண்பட்டு இயங்கும் அது பிராரப்தம், ஆகாமியம், பழைமையான சஞ்சிதம் என மூவகைகளாக வெளிப்பட்டுப் பாதாளம், பூமி, சுவர்க்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் ஆன்மாக்கள் இடம்கொண்டிருப்பதற்குரிய பல்வேறு வடிவ பேதங்களைக் கொடுத்து ஆன்மாவை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் ஒரு கொடியதான பந்தமாகும் என அறிக.

5. மிகவும் பழைமையாகிப் பயன்கொடுக்க ஆரம்பித்துள்ள பிராரப்த வினையை அனுபவிக்கும் பொருட்டாகத் தெய்வமானது சூக்கும தேகத்தையும், தூலதேகத்தையும் வினைப்பயனுக்கேற்றவாறு கொடுக்கும். இந்த வினையை அனுபவிக்கும் காலத்தில் உண்டாகும் வினைப்பற்றால் ஆகாமியம் எனப்படும் ஏறுவினை பெருகிநிற்கும். அனுபவித்தது போக எஞ்சியுள்ள வினை சஞ்சிதம் எனும் வினையாகி, உரிய காலத்தில் முன்பு போலவே பிராரப்த வினையாகப் பொருந்தும். இவ்வாறு கூறப்பட்ட முறையில், ஐயோ, கன்மமலமானது ஆன்மாவைப் பற்றிக் கொண்டு அலைக்கழிக்கும். இது பசுமையான பயிர் செய்வோன் செயல்போன்று 'விதைத்தல், விதைத்ததை அறுவடை செய்யல்' என்ற முறையில், நீங்காத பந்தத் தொடர்ச்சியாக விளங்கும்.

6. உடன்தோன்றி உடன் இயங்கும் கன்ம மலத்தால், ஆதியாத்துமிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என உள்ள தாபத்திரயம் எனப்படும் வெதுப்பும் துன்பங்கள்

மூன்றும் ஆன்மாவைப் பொருந்தும். இவற்றை விளக்க முயன்றால், நோய் என்பதாலும், மானுடர், பேய், பறவை, விலங்கு முதலான உயிர்களாலும் ஏற்படும் துன்பங்கள் ஆதியாத்துமிகம் எனப்படும். காற்று, நிலநடுக்கம், மின்னல், இடி முதலானவற்றால் ஏற்படும் கொடிதான துன்பம் ஆதிபௌதிகம் ஆகும்.

**7.** பிறப்பு, இறப்பு, நரகத்துன்பம் முதலான கொடிய துன்பவகைகள் ஏனைய இரண்டினும் மேம்பட்டுள்ள ஆதிதைவிகம் என்பதாகும். இத்தகைய ஒழுங்கு முறைக்குரிய அனாதி கன்மமானது, சங்காரகாலத்தே அழிவடையாமல் முதற்காரணமாகப் பொருந்தியுள்ள மாயையின் ஒருபுறத்தே ஒதுங்கிக் கிடந்து, பிறகு மீண்டும் படைப்புக் காலத்தே வெளிப்பட்டு புத்தி தத்துவச் சார்புடையதாய் இயக்கம் கொள்ளும். இந்தக் கன்மமானது, அனைத்திற்கும் முழுமுதற் கடவுளாகத் திகழ்பவனின் ஆணைப்படி, தன்னைச் செய்தவரையே தவறாமல் பொருந்திநிற்கும்.

**8.** சீவசுதந்திரமாகிய 'நான்' 'எனது' என நிகழும் போதமானது விரிவாகிய புத்திதத்துவத்தைச் சார்ந்து இயங்கும் கன்மத்தின் வயப்பட்டுச் சுழன்று அலைய அந்தப் போதமயமான மனமானது மோகத்தின் வயப்பட்டுப் பல்வேறு கன்மங்களைப் புதிதாகச் செய்து ஆகாமிய வினையைப் பெருகச் செய்யும். வருத்தம் தரும் கொடிய பிறவித் துன்பத்தை நீக்குதற்கு உரியோர் ஆகாமியவினை தம்மைச் சாராத வண்ணம் தடுத்துக் கொள்வர். ஆகாமியவினை சாராமல் இருக்கும் வகையில், தூய்மையான, அமுதமயமான சிவமந்திரத்தை உள்ளத்தால் ஓதும் நன்னெறியிலேயே அயராது நிற்பார்கள். நெஞ்சே! இவ்வுண்மைகளை நன்கு உணர்ந்துகொள்.

**9.** ஓதப்படும் அந்தத் தூய சிவமந்திரமானது. ஆகாமியவினையை வறுக்கப்பட்ட விதையைப் போன்று பயன்தராது இருக்குமாறு செய்து அறவே நீக்கிவிடும். மற்றுள்ள, வலிமைமிக்க சஞ்சிதம், முதலான வினைகள் எல்லாம், பதிஞான பலத்தால் குன்றிவிடும். "கன்மமலம் சகசமலமாக இருக்குமாயின், அது எம்மிடமிருந்து அறவே எவ்வாறு நீங்கிநிற்கும்?" எனக் கேட்டால், அரிசியில், அதனோடு தோன்றிய முளையை ஒத்துவிளங்கும் கன்மத்தை, ஆன்மாக்களின் முழுமுதல்தலைவனான பதியின் திருவருளானது அடியோடு பிடுங்கி எறிந்துவிடும். (அரிசியிலிருந்து முளை நீங்குவது போன்று ஆன்மாவிலிருந்து கன்மம் நீங்கிவிடும்) எனக் கூற உள்ள உண்மையான முடிபை உணர்ந்து, நெஞ்சே! அவனது அருளை முறைப்படித் துதித்து நில்.

**10.** மூவகை ஆன்மவர்க்கத்துள் விஞ்ஞானகலர் எனும் வர்க்கத்தைத் தவிர்த்து எஞ்சியுள்ள இருவகை ஆன்மவர்க்கத்தார்க்குப் பொருந்தியுள்ள இந்தக் கன்மமலத்தால் தோன்றிய அஞ்ஞானமாகிய வினைப்பயனைச் சிவபெருமானே நியதிப்படிச் சேர்த்து ஊட்டி அருள்வான் என்று சுவாயம்புவம் எனும் ஆகமம், ஓர் ஒழுங்கு முறையைக் கூறும். நெஞ்சே! புகழ்மிக்க தாயுமான சுவாமிகளின் தோத்திரப்பாடலைப் பெற்றவனும் மெய்ஞ்ஞானத்தைத் தோற்றுவிக்கும் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியவனுமான அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்திருந்த குகப்பெருமானின் திருவடிகளையே, பொய்ஞ்ஞானத்தை அழித்து, இறைவனின் அருட்பேற்றைப் பெற வேண்டி எப்பொழுதும் தியானித்திரு.

# 62. இறை

*கலிவிருத்தம்.*

**சீ**ர்சி றந்ததிரு மகளது திருவும்
நீர்சி றந்தகலை மகளது நிழலும்
நார்சி றந்தவுனை வுனியவொர் நயனென்
றேர்சி றந்தவர ரறிவரெ னிறையே. (1)

**சூ**ழலு றழ்ந்துநுழை சொன்னில நசையால்
உழலு நெஞ்சிலொரு தெய்வமு முளதோ
கழறு மென்புனசை கண்டன முறநீ
எழலெ னெஞ்சுமிசை யென்றரு ளிறையே. (2)

**கா**சு கண்டவர்கள் களிகொள லெனவுன்
தேசு கண்டுகளி செறிநல மெதுநாள்
ஓர்சு கந்தருமொ ருவமையி லுணர்வே
ஏசு கொண்டவெனை யுடையபொ னிறையே. (3)

**நீ**க்க மின்றிவிரி நின்மல நிலையாம்
மோக்கம் வேண்டியிவ ணானுமென் முனமும்
ஊக்க மின்றியஞ ரோங்குற வுழலுள்
ஏக்க மென்றிரியு மெங்குக விறையே. (4)

**வா**டு கின்றவெனுண் மன்னிரு டனக்கோர்
கேடு வந்திரித லென்றெலை கிளத்தா
வீடு தந்தருள லென்றொரு விதியால்
ஈடு கண்டறைய வின்மதி யிறையே. (5)

**பெ**ரிய விப்புடவி பேயரி யெனவே
தெரிய மெய்க்கருணை சேரொரு வினைநீ
புரிவ தெப்பொழுது பேசுதி பொருசூர்
இரிய வெற்கருளு மீரவு ளிறையே. (6)

---

*1. நிழல் = ஒளி = கலைஞானம்.*

*2. நுழை = ஈனம்.*

*3. ஓர்சு = ரகரவொற் றாசாக இடைவந்தமையின் ஆசெதுகையாம். மூன்றாமெழுத் தொன் றெதுகையுமாம். திருவலங்கற்றிரட்டின் 2–ஆங் கண்டத்துக் கலியியல் காண்க.*

*6. புடவி = மண்ணுலகு ; "புவனி புடவி பூதலம் பூமி" என்பது பி–நிகண்டு. பேயரி = பேய்த்தேர்.*

**ஓ**கை முத்திநல னேடிடு மொருநான்
கூகை யொத்தநிலை நூறிந குதலில்
தோகை யிற்புலியி னாகொளி தொடலென்
றீகை மிக்குடையெ னாதர விறையே. (7)

**கா**ன்ற துப்பெனவு கநசைகள் கெடுவான்
ஆன்ற வர்க்குரிய வருணசை விரிவாய்த்
தோன்ற லெப்பொழுது சொலியரு ணினையிங்
கீன்ற வப்பனென வருகுக விறையே. (8)

**வே**ட்டன் மிக்குடைய வினையுடை யெனைநீ
காட்ட லெப்பொழுது கதியருள் விரிவான்
ஆட்ட லெப்பொழுது கரையடி யவராம்
ஈட்ட நச்சுபொதி நடையுடை யிறையே. (9)

**த**ருக்கு நப்புகழ்கள் சாற்றிய முனியை
இருக்க வைத்தகணி லேத்திடு மெனையும்
பொருக்கெ னத்திருகி யேற்றுதி புகர்மால்
எருக்கு புட்கர பராக்கிர விறையே. (10)

# 62.இறை

**1.** என் முழுமுதல் இறைவ! சீர்மை சிறந்துள்ள திருமகளின் செல்வச் செழிப்பும், ஞான ஆற்றல் சிறந்து விளங்கும் கலைமகளின் ஞான ஒளிப்பெருக்கும், அடியாரிடம் அன்பிற் சிறந்திருக்கும் உன்னைத் தியானித்து வணங்கியதன் நற்பயனே என, காரண – காரியத் தொடர்பால் உட்பொருள் காணும் நுட்பத்திறன் சிறந்துள்ள மேலான ஞானியர் நன்கு அறிவார்கள்.

**2.** அருள்மயமான இறைவ! இழிவாக உரைக்கப்படும் மண் ஆசையால் சூறாவளிக் காற்றுப் போன்று சுற்றிச் சுற்றி அலையும் நெஞ்சில் ஒரு தெய்வ உணர்வும் வெளிப்பட்டிருக்குமோ? துதிகூறும் எனது அற்பமான மண்ணாசை முதலான குற்றங்கள் பிளவுபட்டுச் சிதைந்து இல்லாமற்போக, நீ என் உள்ளத்துள் வெளிப்பட்டுத் தோன்றுவது எப்பொழுது?

**3.** ஒப்பற்ற ஆனந்தப் பேற்றை வழங்கும், உவமையற்ற அருள் உணர்வுமயமே! உலகத்தாரின் இகழ்ச்சியை ஏற்றிருக்கும் என்னை அடிமையாகக் கொண்டுள்ள, தகராலயமான இதயவெளிக்கு இறைவ! பொற்காசுகளைக் கண்டவர்கள் மிகவும் மகிழ்ச்சி

*7. நகுதலில் = இகழ்தலில்லாத. ஈண்டு, நல்லவெனும் பொருட்டு. தோகையிற்புலி = வாலுடைப் பூனை.*

*8. துப்பு = உணவு ; “துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை” என்றார் திருவள்ளுவ தேவரும்.*

*10. எருக்கல் = கொல்லல், வெட்டல்;* ***சூ–நிகண்டும், முல்லைப்பாட்டுங்*** *காண்க.*

அடைந்து நிற்பது போன்று, உனது தெய்வ ஒளியை நேரிற்கண்டு ஆனந்தம்பொங்க நிற்கும் நல்லநாள் எந்தநாளில் பொருந்தும்!

4. எமது குகப்பெருமானாம் முழுமுதல் இறைவ! நீக்கமின்றி விரிந்திருக்கும் நின்மலமான தத்துவாதீத நிலை எனப்படும் முத்திப் பேற்று வெளியை வேண்டி, இவ்வுலகில் நானும் எனது சிந்தனையும், ஊக்கமற்று, துன்பம் மிகுந்து அடைய வருந்தும் எனது உள்ளத்தின் ஏக்கமானது எந்த நாளில் நீங்கும் ?

5. எந்த ஒரு நெறியாலும் உனக்கு நிகர்கண்டு கூற எதுவுமே இல்லாத வகையில் ஒப்பற்று உயர்ந்துள்ள எனது ஞானமயமான முழுமுதலே! புறநிலை அகநிலை ஆகிய இரண்டாலும் வாடும் எனது உள்ளத்துள் அடர்ந்திருக்கும் அஞ்ஞானமாகிய இருளுக்கு ஒரு கேடுவந்து, அடியோடு அற்றுப்போதல் என்றைக்கு ? எல்லை சொல்ல முடியாத வீடுபேற்றைத் தந்தருளல் என்றைக்கு ?

6. என்னுள் போரிட்டுக் கொண்டிருக்கும் ஆணவமாகிய அச்சம் இரிந்து ஓட, எனக்கு அருளும் கருணைமயமான திருவுள்ளம் கொண்டுள்ள இறைவ! பெரிதுபட்டுள்ள இப்பேருலகம் முழுவதும் ஒரு கானல் நீர்மயமாகக் கண்டு மனம் தெளிந்து நிற்க, உனது மெய்க்கருணையை என்மேல் பதியச்செய்தல் என்னும் சத்திநிபாதச் செயலை நீ செய்தருள்வது எப்பொழுது ? கூறியருள்.

7. வேண்டுநர்க்கு வேண்டிய வழங்கும் என் அன்புக்குரிய இறைவ! பேரானந்த மயமாகிய முத்திப் பேற்று நலனை விழையும் நான் கோட்டானின் கண்ணை ஒத்திருக்கும் எனது இழிநிலையை அழித்து இகழ்ச்சியற்று உயர்ந்துள்ள பூனையின் கண்ணை ஒத்திருக்கும் அறிவு நிலையை எட்டுதல் என்றைக்கு ?

8. இங்கே உன்னை நான், என்னை ஈன்ற தந்தை எனவே கருதிஇருக்க என்முன் எழுந்தருளும் குகனாகிய முழுமுதல் இறைவ! என்னுள் மண்டி இருக்கும் உலக ஆசைகளெல்லாம், வெளியே கக்கப்பட்டுவிட்ட உணவு போன்று கெட்டுப்போகும்படி ஞானம் நிரம்பப் பெற்றுள்ளோர் பெறுதற்குரிய ஆனந்த அருளை அடையவேண்டும் எனும் நல்ல ஆசை, என்னுள் விரிந்து பெருகி எழுவது எப்போது ? கூறியருள்.

9. துதிக்கும் அடியவர்களின் திருக்கூட்டமானது மாறாத விருப்பம் கொண்டிருக்கும், சிற்றம்பலத் திருக்கூத்துடைய இறைவ! வேட்கை, விருப்பம் முதலானவற்றையே மிகுதியாகச் செய்து கொண்டிருக்கும் எனக்கு, நீ, என் சொரூபத்தை உள்ளவாறு உணர்த்தி அருள்வது எப்போது ? முத்திப் பேறாகிய நற்பேற்றை அருளும் விரிவான சிதாகாசத்தில் என்னை இருத்தி நுகர்வித்தல் எப்பொழுது ?

10. ஆன்மக்குற்றமாகிய மயக்கத்தை வெட்டி எறியும் வாட்படையே! வீரதீர ஆற்றலில் மேம்பட்டு விளங்கும் இறைவ! மிகவும் கம்பீரமான, முடுகு நடையுடைய நல்ல திருப்புகழ்ப் பாடல்களைப் பாடிய அருணகிரிப் பெருமானை உனது ஆனந்த நிலையில் இருக்க வைத்திருக்கும் இடத்தில், உன்னையே துதித்துக் கொண்டிருக்கும் என்னைச், சடிதியில் பந்தநிலையிலிருந்து பிரித்து எடுத்து உயர்த்திச் சேர்த்து வைத்தருள்!

# 63. சொல்லுவேனீதி

அந்தாதி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சொ**ல்லுவே னீதி யெல்லாஞ் சொனவண நடக்க மாட்டேன்
கல்லினும் வலிய நெஞ்சக் கள்வனா யுள்ளேன் பின்னும்
நல்லவுன் வாழ்க்கைப் பேறு நணுகிட விலையே யென்று
புல்லிய குணப்பேய் போலப் புலம்பவு மிருக்கின் றேனே. (1)

**இ**ருக்கிறே னெதற்கா கப்பே யென்னவெம் பிரானு னன்பைப்
பெருக்குவா ருறவைக் காட்டிப் பேதைமை யெல்லாம் வீட்டிக்
கருக்குகை புகுதா வண்ணங் காப்பதுன் கடனா மென்னோ
வெருக்கொள வெழீஇ நோக்கும் விமலசிற் ககனக் கண்ணே. (2)

**க**ண்ணினாற் காணாக் காட்சி காண்வருங் கால மொன்று
நண்ணினா னாயேன் பாவ நசைக்கலி தாண்டி மீக்கொண்
டெண்ணினா லளக்க வொண்ணா வெந்தைநின் னோடு முய்வேன்
தண்ணினா ருடையா யந்தத் தருணந்தா னென்றோ கூறாய். (3)

**கூ**றருங் கருணை யானீ கூறிய நிலையி னில்லா
ஊறுளேன் ஞான மெல்லா மோதியிங் குழல்வ தென்னே
பேறுளோர் நகைப்பா ரந்தோ பெரியைநீ யெனதுள் ளேயாய்
வேறுறா நிலையில் வைத்தாள் விமலமெய்ஞ் ஞான வாழ்வே. (4)

**வா**ழ்வெனக் குனையே யல்லான் மற்றெதுங் காணே னீண்டுத்
தாழ்வெனக் கிருப்ப தெல்லாந் தாயருள் காணா தொன்றே
ஊழ்வினை யகைக்கு மெந்தா யுரைத்தவவ் வருட்பூ மிக்கண்
சூழ்தரு மெனைநீ வைத்தாற் சொலுநிரப் பேது மின்றே. (5)

**இ**ன்றயா மலரு மெம்மா னெனுங்குகப் பிரம மேயன்
றென்றுரால் களைந்த நன்றி யாவையு மறவே னின்னும்
வன்றிவா விரவு மில்லா வானிலைக் கண்ணே யென்னைப்
பொன்றிடா வணமே பொன்றப் புரிவையேற் றனியே னுய்வேன். (6)

---

*5. காணாததொன்றே என்பது "காணாதொன்றே" எனப் பொருந்திற்று. அகைத்தல் = அறுத்தல்;* ***ககரவெதுகை.***

*6. துரால் = துக்கம் ; "துரிசு மல்ல கண்டமுந் துராலும்" என்பது* ***பி – நிகண்டு.***

**உ**ய்திபெற் றியங்க வோரா றுரியவ ருரனார் நந்தி
மெய்திகழ் தமிழோன் வீணை மெய்யனி ராமன் றூய
வைதிக சுகர பேத வாமதே வாதி நல்லோர்க்
கைதிகழ் தீக்கை செய்தா யாளரு ளெனைக்கொ ளாதோ. (7)

**கொ**ள்ளுதி யெனவே நாவாற் குரைக்கினுங் குரையா தோய்ந்தே
உள்ளினு நீதான் வாரா யுபயமு மில்லாக் கண்ணே
ஒள்ளொளிப் பிழம்பாய் வந்தே யொளிருமுன் றரம்யா தாகும்
தெள்ளருட் கடலே ஞானச் செல்வமே சிறியேன் றேட்டே. (8)

**தே**ட்கடுப் பேறி னாலுந் தீட்டுமை விழியார் நோக்கு
வாட்கடுப் பேறி னாலு மாற்றமுண் டிருட்டு மூலக்
கோட்கடுப் பேறில் யாது கொண்டுமாற் றிடலா முற்கிங்
காட்படு மருந்தே யத்தை யவிக்குமென் றறிந்தே னெந்தாய். (9)

**எ**ந்தையே யெளியே னுன்மாட் டிருக்குமா றருணைப் பேராற்
கந்தநா ளீந்த தூய வாக்கமே வேண்டு மஃதை
அந்தமீ றில்லா நீதா னளிப்பதெஞ் ஞான்றோ வென்றென்
சிந்தைதான் கலுழ்ந் தோவாதோர் தீர்வையாய் விளக்கிச் சொல்லே. (10)

# 63. சொல்லுவேனீதி

**1.** நீதி நெறிகளையெல்லாம் பிறர்க்கு உபதேசிப்பேன்; ஆனால் உபதேசித்த வண்ணம் நான் நன்னெறியில் நடந்துகொள்ள மாட்டேன். கல்லைக் காட்டிலும் கடின சித்தம் கொண்டவனாய் ஒரு திருடன் போல் வாழ்கிறேன். சிவமயமான உனது அருள்மயமான வாழ்க்கைப் பேறு எனக்குக் கிட்டவில்லையே என்று இழிகுணம் வாய்ந்த பேயைப் போன்று மீண்டும் மீண்டும் புலம்புபவனாக இந்த உலகில் வீணே வாழ்கிறேனே!

**2.** என் மடமைக் குணங்களெல்லாம் மருட்சிகொண்டு நீங்கி ஓட, என்னை எழுப்பி நோக்கும், தூய சிதாகாச ஞான பானுவே! பேய்போன்று இவ்வுலகில் எதற்காக உள்ளேன்? எம் பெருமானாகிய உன்மீது கொண்டுள்ள அன்பை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளும் அடியவர்களுடன் உறவை ஏற்படுத்தி என் பேதைமைக் குணங்களை யெல்லாம் அறவே போக்கி, இனியாவது நான் ஒரு தாயின் கருப்பைக்குள் புகாத வகையில் என்னைக் காத்து அருள்வது உனது கடமையே அன்றோ?

---

*7. ஒராறுரியவர் = பராசரர் புத்திரர்களாய தத்தர் முதலிய சண்முனிவர். தமிழோன் = அகத்தியமாமுனிவர். வீணைமெய்யன் = நாரதமாமுனிவர். வாமதேவ முனிவரற்குச் சுப்பிரமணியங் குருவாயிற்றென்பதைச் சைவ மஹாபுராணத்துக் கைலாசசங்கிதையின் 7–ஆம் அத்தியாய மெடுத்தோதும். வாமதேவ முனிவரனுடைய சீடர்களான அகத்தியனார், புலத்தியனார், புலகனார், கிரது என்னு நால்வருஞ் சைவ ஞானிகளே என்றுங் கூறுப.*

**3.** ஊனக் கண்ணால் காண முடியாமல் ஞான உணர்வால் மட்டுமே காணக் கூடிய அருட்காட்சியை நான் காண நேரும் காலம் ஒன்று எனக்குக் கிட்டுமாயின், அடியேன், பாவமயமாகிய ஆசை எனும் சேற்றைத் தாண்டி, மேல்நிலைக்கு உயர்ந்து, சிந்தையால் அளக்க முடியாத சீர்மை உடைய எந்தையாகிய உன்னோடு இரண்டறக் கலந்து உய்திபெறுவேன்! குளிர்ந்த, இன்பமயமான பேரன்பு உடையோய்! அத்தகைய நற்காலம் எனக்கு வாய்ப்பது எப்பொழுதோ ? கூறி அருள்.

**4.** தூய, மெய்ஞ்ஞான வாழ்வு மயமாக ஒளிர்பவனே! சொல்லால் விளக்குவதற்கு அரிய உனது கருணைத் திறத்தால் நீ எனக்குக் கூறியருளிய யோக நிலையில் நில்லாத பொல்லாக் குற்றம் உடையவனாகிய யான், ஒன்றுக் கொன்று மாறுபடும் சாத்திரங்களைப் பயின்று உழல்வது எதற்காக ? அந்தோ! உனது அருட்பேறு வாய்க்கப் பெற்றுள்ள அடியார்கள் நகைத்து இகழ்வார்களே! பெரியோய்! நீ எனக்குள்ளே முழுவதுமாக வெளிப்பட்டு உன்னிடமிருந்து நான் வேறு ஆகாத நிலையில் விளங்குவதாகிய அத்துவித நிலையில் என்னை இருத்தி ஆட்கொள்க.

**5.** எனது ஞான வாழ்வுக்கு உன்னைத் தவிர்த்து வேறொரு துணையையும் நான் காணவில்லை. இவ்வுலகில் எனக்கு ஏற்பட்டிருக்கும் தளர்ச்சி நிலை என்பது தாய்போன்ற உனது தண்ணிய அருளை அடையாதிருப்பது ஒன்றே. ஊழ்வினையால் நேரும் விளைவுகளையெல்லாம் அறுத்தெறியும் அருள் தந்தையே! கூறப்பட்ட உனது அருளாகிய பேருலகத்துள் உன்னைத் தியானித்திருக்கும் என்னை நீ இருத்திவைப்பாய் எனில் எனக்கு ஏற்படக்கூடிய குறைவோ தளர்வோ ஏதும் இல்லையே!

**6.** இனிய கருணையானது பெருமலர்ச்சி கொண்டு விளங்க உள்ள எம்தலைவனாகிய குகப்பிரம்மமே! எனக்கு நேர்ந்திருந்த துன்பநிலைகளையெல்லாம் அன்று களைந்தெறிந்த உனது அருட்செயல்களையெல்லாம் நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். மேலும், பகலும் இரவும் இல்லாத சிதாகாச நிலையில் நான் அழிவின்றி விளங்க, பந்தப்பட்டுள்ள எனது இன்றைய நிலை அழியுமாறு செய்தருள்வாய் எனில் நான் உய்தி பெற்றுயர்வேனாவேன்.

**7.** பராசர முனிவரின் புத்திரர்களாகிய தத்தர் முதலான அறுமுனிவர், ஞானபலம் மிகுந்த நந்தி, உண்மையுணர்ந்த அகத்திய முனிவர், நாரதர், இராமன், தூய வேதநெறியை விளக்கிய சுகமுனிவர், அபேத நிலை அடைந்த வாமதேவர் முதலானோர், உய்திபெற்று விளங்கும் வகையில், அன்னோர்க்கு வியப்புமிகும் தீக்கை செய்து அருளினாய்! அடியரை ஆட்கொள்ளும் அத்தகைய உனது திருவருள், இன்று என்னையும் ஆட்கொள்ள வெளிப்படாதோ ?

**8.** தெளிவுமிக்க அருட்கடலே! ஞானச் செல்வமே! சிறியனாகிய அடியேன் தேடும் விழுமிய அருட் செல்வவளமே! நீ என்னை ஆட்கொள் என, எனது நாவால் அடிக்கடி உரத்து வேண்டிக் கொண்டாலும், எதுவும் கூறாமல், சொல் அற்று, மௌன நிலையில் நின்று உன்னைத் தியானித்தாலும், நீயோ, இதுகாறும் வெளிப்பட்டுத் தோன்றவில்லை. இரவு, பகல் என முதலாக உள்ள துவந்துவங்கள் (இருமை நிலைகள்) அற்றுப் போயிருக்கும் தூய

வெளியில், பேரொளிப் பிழம்பாக வெளிப்பட்டுப் பிரகாசிக்கும் உனது மேன்மையான பரத்துவநிலை, நீ இவ்வாறு அருளவில்லை எனில், என்னவாகும் ?

9. தேள் கொட்டியதால் விடக் கடுப்பு மிகுந்து வருத்தினாலும், மைதீட்டிய கண்களை உடைய பெண்களின் கண்களாகிய ஒளியின் மிகுதி அதிகமாக வாட்டினாலும், இவற்றுக்குப் பரிகாரம் கண்டுகொள்ளலாம். மூல பந்தமாகிய இருள் எனப்படும் மூலமலமான ஆணவத்தின் பிணிப்புநிலை மிகுதிப்படுமாயின் எதனைக் கொண்டு அந்த நிலையை மாற்ற இயலும் ? எந்தையே ! உனக்கு ஆட்பட்டிருப்பதாகிய மருந்து ஒன்றுதான், அந்த மலப்பிணியை அடியோடு போக்கக் கூடியது என நன்கு அறிந்து கொண்டேன்.

10. எந்தையே ! அடியேன், உன்னிடமேயே நிலைத்து இருக்குமாறு, அருணகிரிப் பெருமானுக்கு அன்று நீ வழங்கி அருளிய தூய அருட்செல்வத்தையே நான் வேண்டுகிறேன். முடிவும் அழிவும் இல்லாதிருக்கும் முழுமுதல்வனாகிய நீ அந்த அருட்செல்வத்தை எனக்கு வழங்கி அருள்வது எப்போதோ ! எனது சிந்தை கலங்கி வருந்தாதவகையில் ஓர் உறுதியான முடிபாக அதனை நீ விளக்கிச் சொல்ல வேண்டும்.

# 64. தேரிலூர்

*கலிநிலைத்துறை.*

**தே**ரி லூரினுங் கானடை கொள்ளினுந் தெளிவாற்
பீரி னல்லக மாகவு மவ்வக பீடச்
சாரி லுன்னைய ணைந்தவ னாகவுந் தமியேன்
ஆரியத் தொட லங்கிடு மாறரு ளரசே. (1)

**அ**ண்ட கோடிக ளனைத்தையுந் தன்னுடை யாற்றல்
கொண்ட கர்ப்பமுள் வைத்தது விதுவெனக் கூறுங்
கண்ட மில்விபு வாயிருந் துளபடி காக்கும்
பண்ட மாமுன தருளெனைப் பரிந்துகொள் ளாதோ. (2)

**நி**னது நீக்கமி னின்மல பூரண சித்தாம்
அனக சத்திசு தந்திர வீனருக் கருளுந்
தனது தன்மையி னாலரு ளென்றுள ததுதான்
எனது நெஞ்சறிந் தருள்புரி யாதுகொ லெந்தாய். (3)

---

*1. பீரில் = பீரில்லாத ; பீர் = அச்சம் ; **பி – நிகண்டு.***
*ஆரியம் = நலம், வடமொழி. ஆர் + இயம் எனப்பிரித்துப் பொருள்கோடலுமாம்.*
*இயம்=சொல்; யகரவெதுகை.*

**உ**ன்சு தந்திர வொளியுறழ் வசைவினி லுள்ள
என்சு தந்திர முன்னருள் வயப்பட லென்றோ
புன்சு தந்திர வுயிர்க்கருள் புரிவிழுப் பொருளே
என்சு தந்திர வுயிர்த்துணை யேயரு ளிறையே. (4)

**ம**ன்ப தைக்கொரு மன்னுள னென்னவெவ் வுயிர்க்கும்
அன்பு டைத்தனி யிறையென வுள்ளவுன் னாணை
என்ப தைப்பெற வாற்றிடற் குன்றனக் கென்னால்
என்பு ரப்பதி யம்புதி யென்குக தேவே. (5)

**ஆ**த்து மாக்குழு நிமித்தம தாயுறு கருணைக்
கூத்து நல்லருட் கூத்தென வுன்றனைக் குரங்கும்
பாத்தி யச்சிறி யேனையு மஃதுறப் பணுமேல்
ஊத்தை மேனியு ளேன்செயு மாறெனை யுரையே. (6)

**ஆ**ட்டுக் காரனு நீயரு ளன்பர வாவும்
மாட்டுக் காரனு நீநிலை பேறென வழுத்தோர்
வீட்டுக் காரனு நீமற வாதுனை விரும்பென்
கூட்டுக் காரனு நீயெனைக் கோடிகொள் குகனே. (7)

**உ**ன்னைத் தஞ்சமென் றுள்கிடு வார்களுய் பாக்கால்
அன்னைக் கன்னையெ னாவுள வொள்ளரு ளாக்கந்
தன்னைத் தந்திடு மென்னொரு தற்கொடை வள்ளால்
என்னைக் கொண்டொரு தன்னையி சைத்திட விசையே. (8)

**வி**த்தை யேதுமி லாதமும் மலமருள் விரிவாஞ்
சத்தி லாச்சல மானச மில்லொரு சாங்குச்
சித்த மானதை யீந்தெனை யாளுதி சிறியேன்
கத்த னேகரு ணாநிதி யேகளை கண்ணே. (9)

**ச**ந்த தக்கலி யாண குணங்களைச் சார்ந்தே
எந்த ஞான்றுமு னின்னரு ளேற்றுய்ய விணையில்
சந்த மாலைக டெரித்தவன் றனக்குவ கையுடன்
தந்த பேறெனக் குந்தரு வாய்நிரஞ் சனனே. (10)

---

*9. மருள் = மயக்கம்.*

*சல மானசம் = அசைவோடுங்கூடிய சிந்தனை.*

# 64. தேரிலூர்

1. தெய்வங்களுக் கெல்லாம் அரசே! தேர் முதலான வாகனங்களில் ஊர்ந்து சென்றாலும், அவ்வாறன்றிக் காலால் நடந்து சென்றாலும் எந்த நிலையிலும் தெளிவுமிகுந்தும் அச்சமற்றும் உள்ள நல்ல உள்ளம் பொருந்தியவனாகவும் அந்த உள்ளமாகிய பீடத்தில் எழுந்தருளும் உன்னோடு ஐக்கிய பாவனை கொண்டுள்ளவனாகவும் அடியேன் உயர்நலத்தோடு விளங்குமாறு அருள்புரிவாய் (அடியேன் உனைத்துதிக்கத் தக்க சொல்வளம் வாய்ந்து விளங்குமாறு அருள்புரிவாய்).

2. கோடானு கோடி அண்டங்கள் அனைத்தையும் தனது சக்தி மிகுந்த கருப்பைக்குள் வைத்துக் கொண்டு, 'அது' 'இது' எனச் சுட்டிக் கூறுதற்குரிய கண்டிதப் பட்ட பொருளாக அல்லாமல் அகண்டமாய், எங்கும்வியாபித்துள்ள வெளியாய் விளங்கி, அங்கங்கு உள்ளனவற்றை அவ்வவற்றின் இயல்புக் கேற்றவாறு காத்தருளும் பெரிய வத்துவாகிய உனது பேரருள் என்னைப் பரிவுடன் தழுவிக்கொள்ளாதோ!

3. எந்தையே! நின்னோடு நீக்கமின்றி அபின்னமாக உள்ளதும் நின்மலமானதும், பூரண ஞானமயமானதும், இருவினைத் தொடர்பின்றி அழுக்கற்றுத் தூய்மையுடன் விளங்குவதுமான நினது சக்தியானது தற்சுதந்திரமற்ற ஆன்மாக்களுக்கு இயல்பாகவே, தானாகவே அருள்புரியும் தன்மையுடையது. இத்தகைய இயல்பாலேயே அது ‘அருள் சக்தி’ என அழைக்கப்பட உள்ளது. அந்த அருட்சக்திதான் எனது உள்ளத்தின் தன்மை அறிந்து அருள்புரியாதோ ?

4. மிகவும் அற்பமான சுதந்திர நிலையைப் பெற்றுள்ள உயிர்களுக்குத் தானாகவே முற்பட்டு அருளும் விழுமிய பொருளே! எனது சுதந்திர நிலையைப் பரிணமிக்கச் செய்யும் எனது உயிர்த்துணையே! அருளாற்றல் மிக்க இறையே! உனது பூரண சுதந்திர ஆற்றலின் ஒளிமயமான அசைவுக்குள் உள்ள எனது சுதந்திரமானது முழுவதுமாக நினது திருவருள் வயப்பட்டு நிற்பது என்றைக்கு ?

5. என்னுயிர்க்குரிய குகதேவே! இவ்வுலகத்தை முறைப்படி ஒழுங்குபடுத்தி ஆள்வதற்கு ஒரு மன்னன் இருப்பது போன்று, உயிர்க்கூட்டம் அனைத்திற்கும் அன்புவாய்த்துள்ள ஒப்பற்ற ஓர் இறைவன் நீயே என விளங்கும் உனது அருளாணையைப் பெறவும், ஆணைப்படி நடக்கவும் என்னைச் செய்த உனக்கு, என்னால் செய்யக்கூடிய கைம்மாறு யாது உளது ? கூறி அருள்.

6. பலகோடி ஆன்மக் கூட்டங்களின் பொருட்டாக நிகழும் உனது கருணைமயமான அருட்கூத்தானது, அந்த அருட்கூத்தின் பயன் உன்னை வணங்கி நிற்க முழு உரிமை படைத்துள்ள அடியேனுக்கும் கிடைக்குமாறு செய்து நிற்குமாயின், ஊன உடல் தொடர்புடைய அடியேன் செய்யும் கைம்மாறு என்ன உள்ளது ? கூறி அருள்.

**7.** ஞானக்கூத்து, ஊனக்கூத்து முதலான ஆடல்களை நிகழ்த்துபவனும், அருள் உணர்வுள்ள அடியார்கள் விரும்பி வேண்டும் செல்வ வளங்களை உடையவனும், மாறாத நிலைபேறுடையது எனப் போற்றப்படும் பெரிய முத்திநிலையாகிய வீட்டுக்கு உரியவனும் ஆன நீ, ஒருபோதும் மறவாமல் உன்னை விரும்பிநிற்கும் என்னோடு இரண்டறக் கலந்துகொள்வதற்கு உரியவனும் ஆவாய். குகப்பெரும! அடியேனை விரும்பி ஏற்றுக்கொள்க.

**8.** உன்னையே புகலிடம் என்று அடைந்து, உன்னையே கருதிக் கொண்டிருக்கும் அடியார்கள் உய்திபெறும் வகையில் அன்னைக்கும் அன்னையாய்த் திகழும் உனது ஒண்மையான அருளாக்கத்தை வழங்கிடும் ஒப்பற்ற தற்கொடை வள்ளலே! எளியேனையும் ஏற்றுக்கொண்டு, உன்னை எனக்குக் கொடுத்தருளத் திருவுளம் கொள்வாயாக.

**9.** சிறியவனாகிய எனக்குரிய உரிமைத் தலைவனே! கருணைச் செல்வமே! ஒரே பற்றுக் கோடாகத் திகழ்பவனே! ஞானம் ஒரு சிறிதும் இல்லாமல், மும்மலமாகிய மயக்கப்பரப்பில் ஆழ்ந்து, சாரமற்றுத் திகழும் சஞ்சலமான சிந்தனை என்பது இல்லாமல், சாமுசித்திகம் எனப்படும் பெருநிலையை வழங்கி என்னை ஆட்கொண்டருள்க.

**10.** இயல்பாகவே மலப்பிணிப்பற்றுள்ள தூயோய்! பேரழகுபொருந்திய மங்களகரமான எண்குணங்களை அடையப்பெற்று, எப்பொழுதும் உனது இனிய அருட்பேற்றை ஏற்று உய்திபெறும் வண்ணம், இணையற்ற திருப்புகழ்ப் பாடல்களை 'மாத்ருகா புஷ்ப மாலைகளை' – அருளிய அருணகிரிப் பெருமானுக்கு உவகையுடன் நீ அன்று வழங்கிய ஆனந்தப் பேற்றை எளியேனுக்கும் வழங்கி அருள்.

# 65. உலகநோக்கினார்

*வஞ்சிவிருத்தம்.*

**உ**லக நோக்கினா ருன்னையே
விலகி நோக்கல்போன் மெய்ம்மையால்
உலக நோக்குறா துன்னையே
இலகி நோக்குவ தென்றையே. (1)

**உ**ன்னைப் புல்லியின் புற்றிடார்
மின்னைப் புல்லியுண் மெச்சல்போல்
என்னைக் கொள்ளுனை யேகலந்
தின்னிக் கென்றிட லென்றையே. (2)

*2. மின் = பெண் ; ஆகுபெயர் ; மின்போன் மிளிர்தலின், இடையுடைமையின்.*
*இக்கு = கரும்பு. என்று = எஞ்ஞான்று.*

**கா**ய மெய்யெனக் காமுறு
தீய நெஞ்சது தீந்துசேய்
பேயர் பிச்சர்கள் பெற்றிநான்
ஏயு மாறரு ளெந்தையே. (3)

**நா**க வள்ளுமந் நயனமும்
ஏக மோவதை யியையவே
பாக யானுமொர் பரிசுறற்
கேக னேயெனு ளிலகியாள். (4)

**உ**ணரு மாதனு முடலுமே
புணரு நேரெனப் புரிவினால்
உணரு நானுனொ டுறழ்வினாற்
புணரு மாறருள் புரிவையே. (5)

**அ**வனி யுண்மன மாதனிற்
சிவணி யுள்ளதொத் தேசிகாக்
கவன யானுனைக் காதலாய்ச்
சிவணு மாறருள் செய்வையே. (6)

**ம**துவுண் மாமலர் மந்திபோல்
மதுர மாமது மாந்திநான்
அதுல வம்மல ரல்கவோர்
புதுவ தீதியென் பொன்னையே. (7)

**இ**டரி லென்குக னேயுனோ
டுடற லைப்பத மொப்பவே
தொடரு நானனி தோயுமா
படரு நீயருள் பாலியே. (8)

**உ**யிர்க ளேத்துயர் வொப்பிலோய்
அயிருந் தாலுவு மார்தல்போற்
செயிரி லுன்னொடு சேர்ந்துநான்
அயிலு மின்பளி யாயரோ. (9)

---

*4. வள் = காது ; "வள்ளென்ப காது கூர்மை" என்பது **ளகரவெதுகை.***

*7. மந்தி = வண்டு **; ணகரவெதுகை.***

*அதுலன் = ஒப்பிலி : "அதுல போற்றி" என்றார் **சிவதருமோத்தராகமம்** ஆசிரியரும். அல்கல் = தங்கல்.*

**அ**கியு மங்கியு மென்னவே
திகழ்ச மத்துவ சித்தியீ
புகழெ னுங்கவிப் புந்தியோன்
பகவ னேகிரு பாளுவே. (10)

## 65. உலகநோக்கினார்

1. ஐயனே! உலகியல் தொடர்பான சிந்தனையையே எப்பொழுதும் கொண்டிருப்போர், உன்னை விட்டு விலகியும், உன்னை உலகத்திலிருந்து பிரித்தும் உன்னைக் கருதுதல் போன்று, உண்மையான தத்துவ உணர்வு மேலீட்டால், உலகநோக்கம் நீங்கப்பெற்று உன்னையே எங்கும் எதிலும் கண்டுகொண்டிருக்கும் பக்குவ உணர்வு எனக்கு எந்நாளில் வாய்க்கும்?

2. ஐயனே! உன்னோடு இரண்டறக் கலக்கும் ஐக்கியபாவம் கொண்டு ஆனந்தம் அடையாதவர்கள் பெண்ணைத் தழுவும் இன்பம் உற்று அதனையே உள்ளத்துள்ளே புகழ்ந்திருத்தல் போன்று, என்னை விழுங்கிக் கொண்டுள்ள உன்னோடு இரண்டறக் கலந்து, அந்த இறையனுபவமானது இனிய கரும்பின் ரசத்தைக் காட்டிலும் உயர்வுடையது எனப் புகழும் நிலையானது எனக்கு எந்தநாள் வாய்க்கும்?

3. எந்தையே, இந்த உடலே நிலையானது எனக் கருதி, அதனை வளர்க்கவும் வளமாக்கவும் ஆசைப்பட்டு நிற்கும் தீயநெஞ்சமானது அடியோடு அழிந்து, குழந்தை, பேய்பிடியுண்டோர், பித்தர்கள் ஆகியோரின் சுபாவத்தை நான் அடையுமாறு அருள்புரிக.

4. ஏகதெய்வம் எனத் தனித்துவம் பெற்றுள்ள முழுமுதலே! பாம்புக்குக் காதும் கண்ணும் ஒன்றே; ஒன்றாகப் பொருந்தியுள்ள அவற்றைப் போன்று பரிபக்குவம் உற்றுள்ள அடியேனுக்கு, ஒருவழிச் செல்லும் ஒழுங்குமிக்கு புலன்கள் அமைந்து விளங்க தனித்த அருள் தன்மை அடைந்து விளங்கும் வகையில், என்னுள் எழுந்து விளங்கி என்னை ஆட்கொள்.

5. அறியும் தன்மையுள்ள ஆன்மா ஓர் உடலைப் பொருந்தி இருக்கும் ஒழுங்கு முறையைப் போன்று, அன்பு மேலீட்டால் உன்னையே உணரும் அடியேன் உன்னோடு ஞான உணர்வு மேலீட்டால் இரண்டறக் கலந்து விளங்குமாறு அருள்புரிவாய்.

6. இவ்வுலக நடைமுறையில் மனமானது ஆன்மாவுடன் பொருந்தி உள்ளது போன்று, உன்மீது சற்றும் குறையாத திடமான பக்தியைக் கொண்டுள்ள யான், உன்னுடன் பேரன்பு மயமாக நின்று இரண்டறக் கலந்திருக்கமாறு அருள் செய்வாய்.

---

*10. அகியும் அங்கியும் = இரும்புந் தீயும்.*

**7.** ஒப்பற்று விளங்குபவனே! என்னை ஆள உள்ள பொன்னம்பல முதல்வ! சிறந்த மணம்மிக்க மலரின் தேனை உண்டு அம்மலரிலேயே தன்னைமறந்து உறைந்திருக்கும் வண்டைப் போன்று, நானும் இனிமைமிகுந்த உனது திருவடியின் அருள் தேனைக் குடித்து அத் திருவடியாகிய மலரிலேயே லயித்து உறைந்திருக்க, என்றும் புதிதாக உள்ள ஓர் அருட்பேற்றை வழங்குக.

**8.** ஒருசிறிதும் துன்பமற்றுள்ள இன்பமயமான எனது குகப்பெருமானே! உடலுக்குரிய தாள், தலை என்னும் இரண்டு சொற்களும் சேர்ந்து அமையும் 'தாடலை' எனும் சொல்லமைப்பைப் போன்று உன்னையே பிறவிதோறும் தொடர்ந்துவரும் நான் உன்னுடன் இரண்டெனவும் ஒன்றெனவும் கூற இயலாத வகையில் ஐக்கியப்பட்டு விளங்க, அடியாரிடம் அன்பு செலுத்தும் நீ திருவருள் பாலிப்பாயாக.

**9.** அனைத்து உயிர்க்கூட்டங்களும் போற்றித் துதிக்கும் ஒப்பில்லாதோய்! சர்க்கரையும் நாவும் சேர்ந்திருத்தல் போன்று, குற்றமற்ற உன்னுடன் இரண்டறக் கலந்து, நிலையாகத் துய்க்க உள்ள பேரின்பத்தை நான் அனுபவிக்குமாறு உனது திருவருளை வழங்குக.

**10.** திருப்புகழ் எனப்படும் பாடல்களை அருளவல்ல செவ்விய திருவுள்ளம் வாய்க்கப் பெற்ற அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்த பகவனே! அருட் செல்வம் உடையோய்! இரும்பும் தீயும் போன்று, ஐக்கியம் திகழும் சமத்துவமாகிய சித்திப் பேற்றை எனக்கு வழங்கி அருள்!

---

# 66. பரஞ்சுடர்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**முடிப் புலவர் புகழ்ந்திடு காஞ்சிப் புராணமெக் கலைக்குமென் றூக்கில்
ஓமெனுஞ் சொருபஞ் சதாசிவன் செவ்வேட் குரியதென் றணிவிழுச் சுருதி
ஏமுறச் சொலுமென் றோர்ந்திட விளக்கு மியம்புமவ் வோஞ்சொரு பந்தான்
தோமுயிர்க் கருள வுள்ளதன் றோவென் றோத்திரங் கொள்பரஞ் சுடரே. (1)

**த**மனியன் றிருமா லுருத்திர னீசன் சதாசிவ னாகுமம் மும்மம்
தமமறு விந்து நாதமாம் வியட்டி சாற்றிடு தாரமுள் ளடங்க
அமலவோஞ் சமட்டி தாரக மாயு மதீதம தாயுநின் றிடுமுன்
விமலவாழ் விந்த வாக்கையி லெனையு மேவுமோ சொல்பரஞ் சுடரே. (2)

---

*1. இதன்கண் உறு சுருதி – "ஸதாசிவோம்" – "ஸுப்ரஹ்மண்யோம்" என முழங்கும் ஸாமவேதப் பகுதியே.*

*2. "இந்த ஆக்கை" – இப்பிறப்பெனும் பொருளில் வந்தது. இப்பத்தின் 4–ல் "இப்பிறவி" என வருதலுங் கருதுக. பிறவுமன்ன. ஆக்கை – யாக்கையென்பதன் மரூஉ; உடம்பெனும் பொருட்டு.*

**ஏ**ளிதென விழைக்குங் காரணங் கருதி யிலீலையென் றாரண மியம்பும்
அளிகொணின் றொழிலோ ரைந்தனுட் கடையா ரனுக்கிர கந்தமி யேற்காங்
களிதர விந்த வுடலிடை யுறுமோ கழறுதி யென்னுயிர்த் துணையாந்
தெளிவுடைப் பரம சுகமெனு மறிவு செல்வமே சிவபரஞ் சுடரே. (3)

**உ**தயனின் சனிதி தனின்மரைப் பூக்க ளொன்றலர்ந் தொன்றுசாம் பிடல்போற்
சததமு முனக்கொர் விகாரமில் லாதுன் சன்னிதி யருட்டொழி லாலே
இதமுடை யுயிர்க ளுதித்திருந் தொடுங்கு மென்பதி னான்விடு தலையாம்
பதமதிப் பிறவி யிடையுறு மோவென் படரறுத் திடுபரஞ் சுடரே. (4)

**நி**ன்னையே கருதி யுருகலி லென்பாழ் நெஞ்சுருக் கோவுழப் பிரும்போ
வன்னக நரைக்கல் லோகருங் கல்லோ வச்சிர மோதுவர்ச் சிலையோ
கன்னக மோகற் கிட்டமோ வயிரக் கட்டையோ பாறையோ வென்னப்
பன்னிட வமையா வன்மைகாட் டிடுமேற் பார்ப்பதெங் குனைப்பரஞ் சுடரே. (5)

**பு**கர்முக மோவன் கடுவனோ கறங்கோ புனற்சுழல் கீடமோ குயவன்
திகிரியோ காற்றோ தெண்டிரைக் கடலின் சீகர மோவெனப் புகலப்
பகிர்முகத் தேசென் றலைந்துழி தருமென் பாழ்த்தநெஞ் சோவுனை நேடும்
விகிர்தமில் கருணை யாற்றடுத் துள்ளே விரவிலுய் வேன்பரஞ் சுடரே. (6)

**ம**னமெனுங் கருவி வாய்த்தநா டொட்டு மகிநடை வாஞ்சையிற் பழகிக்
கனமரு ளடைந்த நெஞ்சினுக் கியாது கழறினு முனையனு பவத்தை
நினைவுறு பாச வாசனை நீத்து நிற்பது மிகவரி தன்றோ
அனகநின் னருட்பே றண்ணிடி னதுவீ வாமதை யளிபரஞ் சுடரே. (7)

**ஓ**ர்பொழு தோங்கு முயர்நினை வான தோர்பொழு தின்மைய தாயின்
நேர்படு ஞான நிட்டையி லெவண நிலைத்துனைக் கூடிடு வேனீ
சீர்பணி யாளத் திருவுளஞ் செய்யாய் சிதம்பரப் பெயரிய வெம்மான்
நார்பணித் துதித்த வோர்குக தேவே ஞானமா யவிர்பரஞ் சுடரே. (8)

**நி**தனமும் பிறப்புங் கொண்டுழி தருநா னின்னது பூரணப் பேறு
சததமு மிந்த வுடம்பிடை யுறநின் றனியருட் செயலிழைக் காதேல்
சிதடனா யினமுங் கருமபா சத்தாற் சிமிழ்ப்புற வாவனோ வென்று
பதறினா லவண மிலையென நீதான் பணிக்கொணா தோபரஞ் சுடரே. (9)

**உ**ன்னையு மறியே னுன்னையே யறிந்தா ருறவையு மறிகிலே னுறவோர்
மன்னிட னதையு மறிகிலே னறிந்த மைந்தர்சொல் வசனமு மறியேன்
என்னநா னிருக்க வைப்பையே லெளியே னென்செய மாட்டுவ லெங்கோன்
என்னுமெய் யருணைப் பேருளோ னகக்க ணிலங்குசன் மயபரஞ் சுடரே. (10)

---

*8. சிதம்பரப்பெயரிய எம்மான் = திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள்.*

# 66. பரஞ்சுடர்

**1.** எனது பாடல்களாகிய தோத்திரங்களை விரும்பி ஏற்றுக்கொள்ளும் மேலான ஒளிப்பொருளே! சொற்களாகிய பூக்களை அன்பாகிய நாரில் தொடுக்கும் புலவர்கள் போற்றி மதிக்கும் காஞ்சிப்புராணம் என்னும் நூலில் 'எக்கலைக்கும்' எனத் தொடங்கும் செய்யுள் "ஓம் எனும் பிரணவத்தின் சொரூபமானது சதாசிவ வடிவத்துக்கும் செவ்வேள் பரமனுக்கும் உரியது என மேலான சிறப்புக்குரிய சாமவேதம் உறுதிபடக் கூறும்" என்று அனைவரும் உணரும் வண்ணம் விளக்கிக் கூறும். இவ்வாறு கூறப்பட்டுள்ள ஓம் என்பதன் சொரூபம் என்பது, பந்தப்பட்டுள்ள உயிர் அனைத்திற்கும், உரிய காலம் வரும்போது அருளப்பட உள்ளதன்றோ!

**2.** பரஞ்சுடரே! பிரமன், திருமால், ருத்திரன், ஈசன், சதாசிவன் என்பவர்களைக் குறிப்பவையாக விளங்கும் அ, உ, ம, இருளை விலக்கும் விந்து, நாதம் என உள்ள வியட்டிப் பிரணவத்தை உள்ளடக்கிய, குற்றமற்ற சமட்டிப் பிரணவமாகவும், இதற்கும் மேம்பட்டு அதீதமாகவும் விளங்கும் உனது தூய்மைமயமான இறைநிலை வாழ்க்கை, இந்தப் பிறவியிலேயே என்னைப் பொருந்தி விளங்குமோ? கூறி அருள்.

**3.** எனது உயிர்த்துணையாக விளங்கும், தத்துவம் கடந்த தெளிவுநிலையில் உள்ளதான பரம சுகம் எனப்படும் ஞானநிதியே! சிவமயமான பரஞ்சுடரே! பிரபஞ்சப் படைப்பு முதலான செயல்களை மிகவும் எளிதாகச் செய்யும் காரணத்தைக் கருதியே, வேதமானது உனது பிரபஞ்சப் படைப்பு முதலான செயல்களை 'விளையாட்டு' எனக் கூறும். வரிசைப்பட முறையாக நிகழும் உனது ஐந்தொழில்களுள் இறுதியில் உள்ள அனுக்கிரகம் என்பது, எனக்கு உரிய ஆனந்தக் களிப்பைத் தர, இப்பிறவியிலேயே எனக்கு வாய்த்திடுமோ? கூறி அருள்.

**4.** எனது துன்பங்களையெல்லாம் அகற்றிடும் பரஞ்சுடரே! எவ்வித மாறுபாடும் இன்றி விளங்கும் சூரியனின் சன்னிதியில், தாமரைப் பூக்கள் பலவற்றுள்ளும் ஒன்று மலர்ந்தும் மற்றொன்று வாடியும் விளங்குதல் போன்று எப்பொழுதும் உனக்கு ஒருவித மாறுபாடும் நேராமல் உனது சன்னித மாத்திரத்தாலேயே, உனது அருள்மயமான செயல்களால் இன்பம் பொருந்த உயிர்கள் பிறந்து வாழ்ந்து ஒடுங்கும் என்பது உண்மையே ஆதலின், முத்திப் பேறாகிய உயர்ந்த நிலை இப்பிறவியிலேயே எனக்கு வாய்க்குமோ?

**5.** பரஞ்சுடரே! வேறு தெய்வம் எதையும் கொள்ளாமல் உன்னையே எப்பொழுதும் தியானித்து உருக்கம் கொள்ளாத எனது பாழ்த்த நெஞ்சம், கடினமாக்கப்பட்ட எஃகோ, இரும்போ, காலத்தால் மிகவும் பழைமையான மலையின் கல்லோ, கருங்கல்லோ, வச்சிரமோ, உறுதிப்பாடுமிக்க அரக்குச் சிலையோ, கன்னக் கோலோ, இரும்புக் கருவி அடிக்கப்படும் குமிடக் கல்லோ (கிட்டமோ), வயிரம் பாய்ந்த மரக் கட்டையோ – இவ்வாறு ஒத்துள்ளதாகவும் கூற இயலாமல் மிகவும் கடினமான நிலையைக் காட்டி நிற்குமாயின், உன்னை நான் எவ்வாறு எங்கே காணமுடியும்?

**6.** பரஞ்சுடரே ! யானையோ, குரங்கோ, காற்றாடியோ, நீர்ச்சுழியோ, புழுவோ, குயவன் சுற்றும் சக்கரமோ, காற்றோ, தெளிந்த அலைகள்வீசும் கடலின் நீர்த்துளிகளோ என்று கூறுமாறு, எப்பொழுதும் வெளிமுகப்பட்டு அலைந்து திரியும் எனது பாழ்த்த நெஞ்சோ உன்னைத் தேடிக் காண வல்லதாகும் ? மாறுபாடற்ற உனது கருணையால் அவ்வுள்ளத்தைத் தடுத்து அகமுகப்பட்டு ஓய்ந்து அடங்கி இருக்கச் செய்தால், அவ்வாறு செய்து என் உள்ளத்துள்ளே நீ வெளிப்பட்டு எழுந்தால், நான் உய்திபெறுவேன்.

**7.** பரஞ்சுடரே ! மனம் எனும் உட்கருவி எனக்கு வாய்த்த நாள் தொடங்கி, உலகியல் தொடர்பான செயல்களிலேயே ஆர்வத்துடன் ஈடுபட்டு, மிகவும் அதிகமாக மயக்கமும் மருட்சியும் அடைந்துள்ள நெஞ்சுக்கு, எவ்வளவுதான் அறிவுரை கூறினாலும், முன் அனுபவத்தையே நினைத்திருப்பதாகிய பாச வாசனையை நீத்து நிற்றல் என்பது அதற்கு மிகவும் அரிதான செயலன்றோ ? வினைப்பற்று நீங்கியுள்ள தூயோய் ! உனது அருட்பேறு வாய்க்குமாயின் அந்தப் பாசவாசனையானது அழிந்து போகும். அந்த அருட்பேற்றை வழங்குக.

**8.** திருப்போரூர்ச் சிதம்பர முனிவர் பெரிதும் அன்புகொண்டு துதித்த ஒப்பற்ற குகப் பெருமானே ! ஞானமயமாக விளங்கும் பரஞ்சுடரே ! ஒருபொழுது ஞானயோக நிலையில் உயர்ந்து நிற்கும் எண்ணமானது, மற்றொரு பொழுது இல்லாமற் போகிறது. இவ்வாறு இருப்பதானால் நேர்படப் பொருந்தும் உயர்ந்த ஞானநிட்டையில் எவ்வாறு நிலைத்து நின்று உன்னைக் கூடமுடியும் ? எனது சிந்தனையைச் சீர்மைப்படுத்தி ஆட்கொள்ளத் திருவுள்ளம் கொண்டருள்வாய் !

**9.** பரஞ்சுடரே ! இறப்பும் பிறப்பும் கொண்டு உழலும் நான் உனது பூரண அருட்பேற்றை நிலையாக இப்பிறவியிலேயே அடைந்து விளங்கும் வண்ணம் உனது அருட்செயல் செய்யவில்லை எனில், நான் பெரிதும் அச்சமுற்றுக் குருடனாகி ‘‘இன்னமும் நான் கன்ம பந்தத்தால் கட்டப்பட்டே நிற்பேனோ’’ என்று கருதிப் பதறிநிற்பேன். அவ்வாறு பதறும் போது நீ என்முன் வெளிப்பட்டு ‘‘அவ்வாறு இல்லை, அஞ்சற்க, உன் எண்ணம் நிறைவேறும்’’ என நீதான் கூறமாட்டாயோ ?

**10.** எம் குரு அரசாகிய, மெய்ம்மைமயமான அருணகிரிப் பெருமானின் உள்ளத்துள் விளங்கிய சன்மயமான (சத்துப்பொருள் மயமான) பரஞ்சுடரே ! நான் உன்னையும் அறியேன்; உன்னை அறிந்துள்ள ஞானியர் உறவைப் பெறவும் அறியவில்லை; அவ்வாறு அந்த உறவைப் பெறுவதற்குரியதாகப் பொருந்தியுள்ள இடத்தையும் அறியேன்; அந்த இடத்தை அறிந்த அருளாளர்கள் கூறியுள்ள அருளுரைகளையும் அறியேன் என்று என்னைப்பற்றிக் கூற இவ்வுலகில் இருக்கும் வகையில் இழிநிலையில் என்னை நீ வைத்திருப்பாய் ஆனால், எளியேனால் என்ன செய்ய முடியும் ?

# 67. மதியுங்கருளும்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*தனனந் தனனந் தனனா தனனா, தனனந் தனதனனா.*

**ம**தியுங் கருளுந் தெரியா வணமே மறையும் படிகருணா
நிதியென் றுளவெம் பெருமான் வரநீ நினைநின் செயல்விடினான்
மதியென் றுளவுன் பெயரோ டிடவே மடநெஞ் சுடைமருளார்
சதியென் றுநவின் றிடுவே னிதயா சனனண் புறுமனனே. (1)

*தனனந் தனனந் தனனந் தனனந், தனனந் தனதனனா.*

**உ**யிர்நண் பனெனும் படியென் புடையன் பொடுநின் றிடுமனனே
செயிர்கொண் டசடஞ் சலமென் றறையுஞ் சிறுபுன் கிழமையுறா
துயர்வண் டிடவென் றெணிலெங் குநிறைந் தொளிரெங் கடவுளையே
அயர்வின் றுனலின் றுனுமொண் டலமென் பதினின் றெணுதியரோ. (2)

*தானத் தனனத் தானத் தனனத், தானத் தனதனனா.*

**தே**சுக் குகனை காணற் கெனமெய்த் தீரத் தொடுகருதாக்
காசுற் றலையிற் சீர்கெட் டழிதுர்க் காமக் கழுதையெனாப்
பாசத் தளைகெட் டோடக் கணுநப் பாகொத் தவுனையெனால்
ஏசுற் றவசைக் கீருக் குணுழைத் தேசுத் திகளெழுமே. (3)

*தானத் தனனத் தானத் தனனத், தனனத் தனதனனா.*

**பூ**சிக் குநர்கட் கேகட் டுடைநற் பொருளைக் கடியுறவே
ஈசிற் பரமெய்த் தேவைக் கொளவெற் கிசையப் பணும்வகைநீ
பாசத் தொடிழைக் காதற் பநசைப் படுகர்க் குழிவிழினோர்
காசுக் குமதிக் கேனிப் புவியிற் கருதிக் கொளுமனனே. (4)

*தனனந் தனனந் தனனந் தனன, தனனந் தனதனனா.*

**ம**றலென் பவனின் செயன்மங் குறவென் வழிவந் துளமனனே
விறனந் திழிவுஞ் சொலுமென் பகையும் வினையுந் தெருளுடைநீ
உறலின் றுயவென் றிடிலெம் பரமெ னொருகந் தனையுளுளே
பிறழும் படியுந் தியினின் றசைவு பிசகுஞ் சிகநினையே. (5)

---

*1. கருள் = கறுப்பு;* ***சூ –நிகண்டு*** *; ஈண்டு, இரவின்மேற்று.*

*3. ஏசுத்திகள் – ஏசு + உத்திகள் எனப்பிரிக்க.*

*4. படுகர் = பள்ளம்.*

*5. பிறழ்தல் = ஒளிசெயல்.  சிகல் – சிறுகல், அல்லது ‘சிங்கல்’ என்பதன் விகாரம்.*

*தானந் தனனந் தானந் தனன; தனனந் தனதனனா.*

**வீ**டென் றநலங் காணும் படிமண் மிசையன் புடையரெலாம்
ஈடொன் றிலிருந் தேவென் றுளவெ னிறைவன் றனைவிதியாய்
நேடுந் தொழில்கொண் டேநின் றிடவெ னினைவென் றுளவொருநீ
நாடின் றிவெறுஞ் சோர்வுந் துயிலு நணனன் றுபறையே. (6)

*தனனத் தனனத் தனனத் தனனா, தனனா தனதனனா.*

**உ**லகிற் சபலத் தொழில்பொய்த் துளர்யா ருளரோ வவர்வறிதே
அலையற் பரெனப் பனல்கட் டுரையீ தறநீ யருளிறையாய்
இலகொப் பிலறக் குகன்மத் தமுறா திழியா தரமுறினான்
சொலிழுக் குகளுற் றவியத் தடையோ துணிவா யறைமனனே. (7)

*தானந் தானந் தானந் தானந், தானந் தனதனனா.*

**நீ**யென் போதன் றானென் றேநன் கேகஞ் செயுமெனைநீ
தோயின் பீயென் பேரன் பாகுந் தூவிண் டலைவனையே
காயம் போமுன் பேமஞ் சோடுங் காணும் படிபுரியா
தோய்வும் பீருஞ் சார்தந் தானஞ் சூருந் தெரிமனனே. (8)

*தனனத் தனனத் தனனத் தனனா, தனனத் தனதனனா.*

**எ**னலிட் டமுடைப் பிரமப் பொருளோ டெனையொட் டிடவிநனே
கனநிட் டையினத் துவிதத் தொழினீ கருதிச் செலும்வரைநான்
நினதெட் டுநடைக் குனையொட் டவிடே னெறிவிட் டுழிதருவேன்
எனினத் தனுரைப் புரியிற் றொடர்வே னிதுகட் டறிமனனே. (9)

*தனனத் தனனத் தனனத் தனனா, தனனந் தனதனனா.*

**தெ**ருளுற் றொருமுத் தியினைப் பெறவே தினமும் படர்மனனே
அருணைப் பெயரற் கிதயப் பொருளா யணியும் பரினிறையாய்
அருணட் புடையர்க் கருடற் பரமா யவிரெம் பரமனையே
இருளுட் கநினைத் திடுபொற் பிலர்யா ரெனினும் பதரறியே. (10)

---

*8. பீர் = அச்சம் ; **பி – நிகண்டு.***

# 67. மதியுங்கருளும்

**1.** இதயதாமரையை ஆசனமாகக் கொண்டு எழுந்தருளும் முருகப் பெருமானிடம் அன்பு செலுத்தும் மனமே! கருணைப் பெரும் செல்வம் எனத்திகழும் எம்பெருமானாகிய இறைவன் பூத ஒளியும் பூதஇருளும் புலனாகாமல் மறைந்துவிடும்படி என்முன் எழுந்தருளிவர ஆழ்ந்து தியானிக்கும் நினது செயலை நீ விட்டுவிட்டால், 'மதி' என அழகாக உனக்கு ஏற்பட்டுள்ள பெயர், அடியோடு விரைந்து நீங்கும்படியாக மடமைமிக்க நெஞ்சானது மருள் கொண்டு செய்யும் சதிச் செயல் என்றே நான் கூறுவேன்.

**2.** உயிர் நண்பன் எனக் கூறத்தகும் வகையில் என்னிடம் மிக்க அன்பு பூண்டுள்ள மனமே! குற்றம் பொருந்திய சடத்தன்மை, வஞ்சனைத்தன்மை எனக் கூறப்படும் அற்பமான குணங்கள் பொருந்தப் பெறாமல் உயர்ச்சியைப் பெற நீ எண்ணினால், எங்கும் பூரணமாக வியாபித்து ஒளிரும் எம் கடவுளாகிய குகப்பெருமானை, மறத்தல், நினைத்தல் எனும் இருமையைக் கடந்து, நிலைத்த தியான பாவனைக்குரிய ஒளிமிக்க யோக நிலையில் உன்னை இருத்திக் கொண்டு ஆழ்ந்து சிந்தித்து இரு.

**3.** மனமே! எனது பாசத் தளைகளெல்லாம் கெட்டு ஓடும் வகையில் சன்மார்க்கத்தையே கருதுகின்ற நீ, நல்ல தேன்பாகு போன்று இனிதாக உள்ளாய். இவ்வாறு உள்ள நீ, ஒளிமயமான குகப்பெருமானைக் காண்பதற்கு உண்மையான திடநிலை பொருந்தப் பெற்று தியானிக்காமல் இருப்பதாகிய குற்றம் பொருந்தப் பெற்று அலைந்து திரிந்தால் 'சீர்குலைந்து அழிந்துபோகும் தூர்த்த குணம் வாய்ந்த காமக் கழுதை' என இழிவினைப் புலப்படுத்தும் பழிப்புரைக்குள் உட்படுத்தி உன்னை இகழ்ந்துரைக்கும் பேச்சுக்கள் என்னால் மிகுதியாகத் தோற்றுவிக்கப்படும்.

**4.** மனமே! எனக்கு ஏற்றவாறு செயற்படும் நீ, உள்ளன்போடு பூசித்து வழிபடுவார்களுக்கே உறுதியான நற்பொருளாகிய ஆனந்தப் பேற்றை அவர்கள் பெருமைப்படும் வண்ணம் அருள்புரியும் சின்மயமான, பரம்பொருளான மெய்க்கடவுளைக் கருதிக் கொள்ள ஆர்வத்துடன் ஈடுபட்டுச் செய்யாமல் அற்பமான ஆசை எனும் பாழ்ங்குழிக்குள் வீழ்ந்தால், இவ்வுலகில் உன்னை ஒரு காசுக்கும் மதிக்கமாட்டேன். இதனை நன்கு கவனத்துடன் கேட்டுக் கொள்.

**5.** என் வழியே வந்து இயங்கும் மனமே! மறதி எனும் ஒருவன் நினது செயல் பாழ்படும் வகையில், உறுதியாகவும் திடமாகவும் விளங்கும் வகையில் உனக்கு இழிநிலையைக் கூறிநிற்பான். தெளிவு வாய்ந்துள்ள நீ, எனது பகைமை, (பகைமை = பாசபந்தம்) வினைப்பயன் முதலானவை பொருந்தப் பெறாமல் உய்திபெற்று உயர்வுற எண்ணினால், எமது பரம்பொருளாகிய ஒப்பற்ற கந்தப்பெருமானையே அவன் உள்ளுக்குள்ளே ஒளிமிகுந்து

விளங்கும்படி, இதயத்துள் ஒடுங்கி இருந்து நினை; மேலும் நினைத்தல் எனும் நிலையிலிருந்து நீங்கி நிற்பதாகிய குற்றமானது சிறுத்துப் போகும்படியும் நீ கருத வேண்டும்.

**6.** முத்திப்பேறு எனும் பெரும்பயனைத் தடையின்றி அடைய, இவ்வுலகில் அன்புடை அடியரெல்லாம் ஈடிணையற்று உயர்ந்துள்ள பெருங்கடவுள் என விளங்கும் என் இறைவனாகிய குகப்பெருமானையே விதிமுறைப்படி ஆழ்ந்து தியானிக்கும் நற்செயலில் ஈடுபட்டுத் திகழ, எனது நினைவு எனத் திகழும் நீ, அவனை நாடுதல் என்பது இல்லாமல் வறிதே சோர்வையும் தூக்கத்தையும் பொருந்தி இருத்தல் நன்றாக உள்ளதோ ? கூறு.

**7.** இவ்வுலகத்தில் நற்பயனோடு கூடியுள்ள சிவபுண்ணியச் செயலை நீத்து யார்யார் உள்ளனரோ அவர்கள் வீணாக அலைந்துதிரியும் அற்பர்களே யாவர் எனக் கூறுதல், உறுதிவாய்ந்த கருத்தேயாகும். இவ்வித நற்செயலை நீத்திருக்கும் இழிநிலை நீங்கும் வண்ணம் நீ அருள்மயமான கடவுள் எனவிளங்கும் ஒப்பில்லாத அறவோனான குகப்பெருமான் அருளும் ஆனந்தநிலையை அடையாமல், இழிவான ஆசைவயப்பட்டு நின்றால், நான் கூறும் குற்றநிலைகள் பொருந்தப் பெற்று அழிந்து நிற்கத் தடையேதும் உள்ளதோ ? மனமே, துணிவான ஒன்றைக் கூறு.

**8.** நீ எனது சைதன்யமயமானவனே என்று நான் நன்கு உன்னோடு ஏகீபாவம் (ஒன்றெனக் கருதும் ஐக்கியபாவம்) செய்திருக்கும் என்னை, அமுதெனத் தோயும் இன்பத்தை வழங்கும் எனது பேரன்பு மயமான தூய ஞானவெளித் தலைவனை என் உடல் நீங்குமுன்னமேயே, இப்பிறவியிலேயே அழகோடு காணும்படியாகச் செய்யாமல் நீ சோர்வும் அச்சமும் பொருந்தி இருந்தால், நச்சுத் தன்மையே பரவிநிற்கும். மனமே ! தெரிந்துகொள்.

**9.** எனது நல்ல பெருவிருப்பத்துக்குரிய பிரம்மப்பொருளோடு என்னைச் சேர்த்துவைக்க, இப்பொழுது பெருமைக்குரிய நிட்டைநிலையில் அத்துவிதம் உற்று இருக்கும் செயலைக்கருதிச் செயற்படும் வரையிலும், நான் நினது வஞ்சனைத் தனமான போக்கில் உன்னைப் பொருந்தவிடமாட்டேன். அவ்வாறின்றி ‘நெறிவிட்டு அலைவேன்’ என்று நீ கூறினால் உன்னை எனது தலைவனின் ஆணையாகிய கயிற்றால் கட்டுவேன். இது உறுதியே. மனமே ! அறிந்துகொள்.

**10.** தெளிவு பொருந்திய ஒப்பற்ற முத்திப்பேற்றைப் பெறுவதற்கே நாள்தோறும் நினைத்திருக்கும் மனமே ! அருணகிரிப் பெருமானின் இதயத்துக்கு உகந்த பிரம்மப்பொருளாகவும் அருளன்புடைய அடியார்களுக்கு நல்லருள்புரியும் சுயம்புப் பிரம்மமாகவும் விளங்கும் எமது பரமனையே, இருளெல்லாம் கெட்டு ஓட தியானித்து இருக்கும் பொற்பு இல்லாதவர்கள் யாவராக இருந்தாலும் அவர்கள் பதர்களேயாவர். இதனை நன்கு அறிந்துகொள்.

# 68. காங்கேயம்

***கலிநிலைத்துறை.***

*தாந்தான தனதந்த தனதந்த தனதான தனதந்தனா.*

**கா**ங்கேய மெனவெங்கு மொளிர்கந்த குகதேவ கருதென்கணே
நீங்காத வுயிருன்கண் மருவுங்க ரணமாக நிதநொந்துளே
ஏங்காத வணம்வந்து நலவின்பு தரவேயு னிருநெஞ்சிலே
ஓங்காணை கொளுகெஞ்சு மனனென்ற வெனதாண வுரைகொண்டரோ. (1)

*தனதந்த தனதந்த தனதந்த தனதந்த தனதந்தனா.*

**ச**ரதஞ்சொ லவியங்கு மறைசந்த தமிறைஞ்சு சவிமன்றிலே
பரதஞ்செ யுமனந்த வருளின்ற லைவவெங்கள் பதியென்றுளோய்
இரவும்ப கலுமென்ற னுயிருன்ற னைவிரும்பு கிறதந்தவா
றுரனன்பு புரிகிஞ்சின் மனனென்ற வெனதின்ப வுரைகொண்டரோ. (2)

**கி**லமொன்று மிலகண்ட பரகந்த வருண்மஞ்சு கிளர்சம்புவே
கலகஞ்செ யெமன்வன்சி லதர்வந்து விடுமுன்சு கமடைந்துனோ
டிலகுங்க திவிரும்பு யிரைவந்து கொளவுன்ற னிருநெஞ்சிலே
மலரன்பு புரிகிஞ்சின் மனனென்ற வெனதன்பு மறைகொண்டரோ. (3)

*தனதந்த தனதந்த தனதந்த தனதான தனதந்தனா.*

**அ**ளவஞ்ச னமிலம்ப ரமெனும்பெ ரியதேவ வளிகொண்டுநீ
தளரென்ற லைவன்முன்பு சொனதுங்க நெறிகூடு தலையிங்கணே
எளியன்சி ரமமின்றி முடியும்ப டியபேத விருநெஞ்சிலே
வளரன்பு புரிகிஞ்சின் மனனென்ற வெனதாண மறைகொண்டரோ. (4)

*தந்தான தனதந்த தனதந்த தனதான தனதந்தனா.*

**து**ன்போட வளிகொண்டு தொழுதொண்டர் முதலேமெய் சொலுமெந்தையே
என்போலி நினைவுன்கொ னறிகின்ற திலையேனு மெனதன்பையே
நன்காக வுனியென்ற னுயிரின்பு பெறுமாறு நகைவிஞ்சு நீ
அன்போடு நினைகெஞ்சு மனனென்ற வெனதாண வறைகொண்டரோ. (5)

*1. ஆணவுரை = அன்புமொழி ; "ஆணமே குழம்போ டன்பாம்" என்பது* ***ணகரவெதுகை.***
*3. சிலதர் = ஏவல்செய்வோர் ;* ***சே–திவாகரம்.*** *மறை=இயம்பல்;* ***பி–நிகண்டு.***

*தனதான தனதான தனதான தனதான தனதந்தனா.*

**வி**யனான சுகஞான நடராச மகதேவ விபுவென்றவாள்
மயவேம குகதேவ வெனதாவி யுனைமேவ மயல்கொண்டதால்
நயமாய வணமாள விதுநேர மருளாமு னலநெஞ்சிலே
உயராணை கொளுநேய மனமாய வெனதாண வுரைகொண்டரோ. (6)

**தொ**ழுநாரர் குறைவீட நடமாடு குகதேவ சுகவுந்தியே
அழுமேழை யினதாவி நினைமேவ வெனையேவி யதிதுன்பமே
எழுமாறு செயநீயு மிகமோன மடையாம லினிநெஞ்சிலே
முழுநீழல் கொளுநேய மனமான வெனதாண மொழிகொண்டரோ. (7)

**ப**தியாய குருராய நடராய வழுபாலர் பயசுண்டல்போல்
நிதநேய முடனேவு னைவிடாது நினைநேசர் நிசவின்பமே
இதமோடு மடைவார்க ளதனாலெ னுடைநாத னிடர்மஞ்செலாம்
அதமாக வருளீதி மனனாய வெனதாண வறைகொண்டரோ. (8)

*தனதான தனதான தனதான தனதான தனதையனா.*

**ச**ருவேச பரமேச மகதேவ குகதேவ தரையெள்ளலே
பெருகேழை யுளுமாறு புரியாது விடினாவி பினும்வையுநீ
தருமாணை யதும்வேதை தருமாயி டையெனாது தரமல்குமோ
அருளோடு மருளீதி மனனாய வெனதாண வறையுள்ளியே. (9)

*தானான தனதந்த தனதந்த தனதான தனதன்னனா.*

**நா**னேய மொடுசந்த தமிறைஞ்சு பரமேச நயநின்னையே
தோனாத னெனநெஞ்சு ணனிகொண்டி னனுபூதி சொனசெம்மையோன்
ஆனாவெ னவெழுந்த செயுளின்க ணுறுபேறெ னணுமுன்னுமே
தானாக வருள்கிஞ்சின் மனனென்ற வெனையாளொர் தயைமுன்னியே. (10)

---

7. *நிழல் "நீழல்" என நீண்டது. நிழல்=குளிர்ச்சி; ஈண்டு, கிருபையின் பாற்று; "நிழல் செல்வங் குளிர்ச்சி சாயை" என்பது* ***ஞகரவெதுகை.***

8. *பயசு = பால்.*

9. *மல்குமோ—ஓ—எதிர்மறை.*

# 68. காங்கேயம்

1. பொன்னின் ஒளிபோன்று எங்கும் பிரகாசித்து விளங்கும் கந்தப் பெருமானே! குகதேவ! உன்னைக்கருதும் என்னிடத்து நீங்காதுள்ள உயிரானது உன்னிடம் பொருந்தி விளங்கக் கூடிய அந்தக்கரணமாக விளங்க, நாள்தோறும் மனம்நைந்து உள்ளுக்குள் ஏங்காமல் இருக்கும் வண்ணம் என்முன் எழுந்தருளி, எப்பொழுதும் குறையிரந்து வேண்டும் மனத்தினன் எனப்படும் எனது அன்பு மொழியை ஏற்றுக் கொண்டு, நன்மைமிகும் ஆனந்தப் பேற்றை அளித்தருள, பெருமைக்குரிய உன்நெஞ்சில் யாராலும் மீறமுடியாத ஆணையைக் கொண்டு. அருள்!

2. உண்மைப் பொருளை விளக்குவதற்காக வெளிப்பட்டுள்ள மறையானது எப்பொழுதும் துதிக்கும் பெருமை வாய்ந்ததும் தெளிவான ஒளிப்பொலிவு உடையதுமான பொன்னம்பலத்தில் பரதக்கூத்து நிகழ்த்தும், முடிவற்ற அருட்சக்தியின் தலைவ! எங்கட்கெல்லாம் முழுமுதற் கடவுளாக உள்ளோய்! இரவு பகல் ஆகிய எந்நேரத்திலும் இடையீடின்றி எனது உயிர் உன்னையே விரும்பிக் கொண்டிருக்கிறது. அதே போன்று, சிற்றறிவுடைய மனத்தினன் எனப்படும் எனது இனிய உரையை ஏற்றுக்கொண்டு, நீயும் என்பால் என்றும் நீங்காதுள்ள இன்ப அன்பைச் செலுத்துவாயாக.

3. துண்டுபடுதலும் பிரிவுபடுதலும் இல்லாமல் அகண்டமயமாக வியாபித்து விளங்கும் பரம்பொருளாம் கந்தப்பெருமானே! அருள்மயமான மேகங்கள் பொங்கிச் சூழ்ந்திருக்கும் சிவசம்புவே! கலகம் விளைவிக்கும் யமனின் கொடிய தூதர்கள் என்னிடம் வந்துவிடுவதற்கு முன்னமேயே, சிற்றறிவுடைய மனத்தினன் எனப்படும் எனது அன்பு மொழியை ஏற்றுக்கொண்டு, நான் உனது ஆனந்தப்பேற்றை அடைந்து உன்னோடு பிரிவற விளங்கும் நற்கதியை விரும்பும் எனது உயிரை நீ என்முன் வந்து ஏற்றுக் கொள். (அவர்கள் கொண்டு போய்விட்டால், பிறகு உனக்குக் கிடைக்காது).

4. சேர்ந்து கலந்துள்ள கருமை (மலம்) என்பது இல்லாத தூயவெளி எனத் திகழும் பெரிய தேவனே! முன்பு தளர்ந்திருந்த எனக்கு, என் தலைவன் உபதேசித்து அருளிய உயர்ந்த நெறியில் ஆழ்ந்து ஈடுபட்டிருத்தல் என்பதை எளியேன் சிரமம் ஏதும் இன்றி நிறைவேற்றும் வண்ணம், சிற்றறிவுடைய மனத்தினன் எனப்படும் எனது அன்பு மொழியை ஏற்றுக் கொண்டு, நீ கருணைகூர்ந்து உனது அபேதமான திருவுள்ளத்திலே எப்பொழுதும் வளரக் கூடிய அன்புணர்வைக் கொண்டருள்க.

5. துன்பங்களானவை அடியோடு விரைவில் நீங்குமாறு பக்தியுடன் தொழும் அடியார்களுக்கு வாய்த்துள்ள முழுமுதற் பொருளே! சத்தியவாக்கு அருளும் எந்தையே! எனது பொய்ம்மை மயமான நெஞ்சம் உனது பெருமையை அறியவில்லை எனினும் எனது அன்புணர்வையே மேலும் நன்றாகப் பண்படுத்தித் திருவுள்ளம் கொண்டு, எனது உயிர் ஆனந்தம் அடையுமாறு, பேரொளிப் பிழம்பாக மிடுக்குடன் திகழும் நீ, கெஞ்சி இரக்கும்

மனத்தினன் எனப்படும் எனது அன்பு மொழியை ஏற்றுக் கொண்டு, அன்போடு சங்கல்பித்து அருள்க.

**6.** சிதாகாசமயமாகவும் ஆனந்தமயமாகவும் விளங்கும் ஞான நடத்து அரசே! மகாதேவ! ஞானாகாசம் எனப்படும் பேரொளிமயமான இன்பநிலைக் குகதேவ! எனது உயிர் உன்னுடன் கலந்திருக்க விருப்பம் கொண்டுள்ளது. அதனால், பொருத்தமான நயமான வழியில் என்னை ஆட்கொள்ள, நேயம்மிக்க மனதுடைய எனது அன்பு மொழியை ஏற்றுக்கொண்டு, இப்பொழுது அருள்மயமான உனது நெஞ்சத்தில் யாவராலும் மீறமுடியாத உயர்ந்த ஆணையைக் கொண்டு அருள்.

**7.** தொழுகின்ற அன்பர்களின் குறைகளெல்லாம் நீங்குமாறு அருள்மயக் கூத்து நிகழ்த்தும் குகதேவ! ஆனந்தக் கடலே! மனம் கலங்கி அழும் எளியேனின் உயிர் உன்னோடு இரண்டறக் கலந்து விளங்குமாறு என்னைச் செலுத்தி, அதிகத் துன்பமே மிகுந்து எழுமாறு நீயும் அதிமௌன நிலையைக் கொண்டிருக்காமல், நேயம்மிக்க மனத்தை உடைய எனது அன்புமொழியை ஏற்றுக்கொண்டு, நினது திருவுள்ளத்தில் பூரணமான கிருபையைக் கொண்டு அருள்.

**8.** பிரபஞ்ச முழுமுதற் கடவுளான குருராச! நடராச! பசியால் அழுகின்ற குழந்தைகளே பால் உண்டு பசிதீர்ந்து மகிழ்ந்து விளங்குதல் போன்று, நாள் தோறும் ஆழ்ந்த அன்புடன் உன்னை இடைவிடாது தியானிக்கும் அடியார்களே உனக்கே இயல்பாக உரிய பேரானந்த நிலையை இனிமையாக அடைந்து விளங்குவார்கள். அதனால், என் உயிர்த்தலைவ! நல்ல மனமுடைய எனது அன்புமொழியை ஏற்றுக்கொண்டு, துன்பங்களாகிய மேகங்களெல்லாம் சிதறி அழிய உனது திருவருளை வழங்கு.

**9.** அனைத்திற்கும் ஈசனே! பரமேசுவரனே! மகாதேவ! குகதேவ! இவ்வுலகில் இகழ்ச்சி மிகும் வகையில், நான் எண்ணியபடி நீ செய்யாது விட்டுவிட்டால், எனது உயிர் மேலும் வாடி உலர்ந்து நிற்கும். நீ வழங்கும் ஆணையானது மேலும் மேலும் எனக்குத் துன்பத்தைத் தருவதாக இருந்தால், அப்பொழுது எனது உயிரின் தன்மை உயர்ச்சி பெற்று விளங்குமோ? நேயம்மிக்க மனமுடைய எனது அன்பு மொழியைக் கருதி, நீ பூரண கிருபை கொண்டு அருள் வழங்கு!

**10.** அடி யேன் மிகவும் அன்புடன் எப்பொழுதும் வணங்கித்தொழ உள்ள பரமேசுவர! ஆனந்த மயமான நின்னையே அழகுக்கும் வாக்குக்கும் உரிய தனித்தலைவன் என இதயத்துள் உறுதிபடக் கருதிக்கொண்டு இனிய அனுபூதி பாடியருளிய சீலமாமுனிவனாகிய அருணகிரிப் பெருமான் “ஆனா அமுதே” எனத் தொடங்கும் செய்யுளில் வெளிப்படுத்தி அருளிய உயர்ந்த பேற்றை எனது உயிரும் பெற எண்ணுகின்றது. அப் பேறு மயமாக நான் ஆவதற்கு, சிற்றறிவுடைய மனத்தினன் எனப்படும் என்னை முன்பு ஆட்கொண்டு அருளிய கருணையைக் கருதி, இப்பொழுது மீண்டும் அருள்!

# 69. வேதா

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**இ**ந்துவதி கிடைக்கடவுட் குபதேசஞ் செய்தவரு ளிருங்கோ லத்தைப்
பந்திரமார் திருக்காட்டா வூரகத்து ரோமனென்பான் பரிந்து நோக்க
வந்துதரி சனந்தந்த பெருங்கருணை யென்னையுமோர் வழியன் பாக்கிச்
சந்ததவின் பூட்டாதோ நான்வணங்கும் பெரியநிரந் தரவே தாவே. (1)

**பூ**சுரப்பிர மேந்திரற்கு மரையநித்த நாதனுக்கும் புகழ்த்தா ளாளத்
தேசுடைய சொன்னகுத்த னொடுகறைதீர் வசுமந்தன் சேரா் கோற்கும்
பேசருமா வினன்குடிக்க ணனுக்கிரகஞ் செய்தவருட் பெருக்கந் தானந்
தாசனென வென்னையுமிங் கெண்ணாதோ நான்வணங்குந் தனிவே தாவே. (2)

**உ**திப்பிருக்கை வளர்க்கைதிரிந் திடல்குறுக னசித்தலென வுரைக்கு மாறு
விதிப்படுவி காரமின்றி யிருக்குநினைச் சிவணாதம் மிகையா மாறும்
மதிக்கவுறு முடலுடையேன் வாழ்வதெவ்வா றுன்றயைப்பேழ் மருவா தாரை
வெதிர்க்குமுயிர்க் குத்தகையோர் விடுவார்கொ னான்வணங்கு வியன்வே தாவே. (3)

**க**ண்ணெதிராம் விடயத்தே கருத்தழுந்து வதுபோலக் கடவு ளாமுன்
கண்ணமுந்தி லெந்தவுயிர் புரியறுத்தின் பெய்தாதக் கருத்தை நாயேன்
நண்ணுவது மெஞ்ஞான்றோ பசிதாகஞ் சோகமுட னவையார் மோகம்
அண்ணுசரா மரணமெனுஞ் சடூர்மியற வுய்வதென்றோ வருள்வே தாவே. (4)

**எ**ங்களுடை யாக்கமதற் குரியபொரு ணின்னுடைய விணையே சில்லாத்
துங்கவித யப்பேழைக் கண்ணுளதஃ தெய்தாதேற் சுகவாழ் வோங்கற்
கெங்கிடனுண் டாமாலவ் விரும்பேழை யெனதன்புத் திறவு கோற்கீண்
டங்குலவத் திறக்காது மிருப்பதுண்டோ நான்வணங்கு மருள்வே தாவே. (5)

---

1. *பத்திரம் 'பந்திரம்' என எதுகைநோக்கி மெலிந்தது. பத்திரம் = அழகு.*
*வேதா – வேதஸ். வேதஸ் = புலவன் ; நிகண்டு – **பரியாயார்ணவங்** காண்க. நிரந்தர வேதா = எஞ்ஞான்றுமுள்ள புலவன் ; அவனிறைவ னென்க.*

3. *வெதிர்த்தல் = சினக் குறிப்பு; "வியர்ப்பும் வெதிர்ப்பும் புழுங்கலும் கொதித்தலும்" என்னும் பி– நிகண்டுச் சூத்திர முணர்க. உயிர்க்குத்தகையோர் = யமலோக அதிகாரிகள்.*

4. *புரி = கட்டு ; **ரகரவெதுகை.***

5. *பேழை = மஞ்சிகம், மஞ்சிகையென்னும் பெட்டி; "மஞ்சிக மஞ்சிகை பேழையென் றிசைப்பர்." என்பது சே–**திவாகரம்.***

**இ**ன்னிதயப் பெரும்பேழைக் கென்னதன்புத் திறவுகோ லியையா தாயின்
நன்னருற வியையவனை நறுங்கருமா னின்னையன்றிந் நகர்மீ துண்டோ
பன்னுதியப் படிவனையுந் தொழிற்குரிய கூலிதரும் பவுள்சு மில்லா
என்னெளிமை யறிந்துதவு வாரிஙனார் நான்வணங்கு மிடவே தாவே. (6)

**மெ**ய்யிதயப் பேழைதிறந் தரும்பொருளை யேற்றானும் விருதா புத்தி
செய்தழிக்கா தோம்பியனு பவிக்குமுயர் புத்தியையுந் திடமா யீந்தே
உய்தியென நீபணித்தா லன்றோநா னுய்யுநிலை யுண்டா மஃதைப்
பொய்யுடையே னேற்பதெந்த ஞான்றாமோ நான்வணங்கும் பொருள்வே தாவே.
(7)

**இ**வ்வுகத்தின் மனுப்பதடி யெனையன்றிப் பிறவொருவ ரிருப்பா ரென்றே
எவ்விதத்துஞ் சொலலிசையா தானாலு முனதருள்வாழ் வினையே முன்னுங்
கவ்வுடைமை யொன்றிதுநா ளெய்தியதா லுய்திபெற்றுக் களிப்பே னென்று
செவ்விதினுண் மகிழ்கின்றேன் றிருவுளத்தே யெப்படியோ தெருள்வே தாவே.(8)

**ந**லிவிலருஞ் சித்தாந்த மரத்திலிலை கொய்வேனோ நனைகொய் வேனோ
கலிகையலர் கொய்வேனோ விளவடுவைக் கொய்வேனோ காய்கொய் வேனோ
பலிதமுறு பழத்தினையே கொய்வேனோ வருளாலப் பழம்வாய்த் தானும்
பொலிவுகண்டு மகிழ்வேனோ கனியவுண்டு மகிழ்வேனோ புகல்வே தாவே. (9)

**பொ**ருணயமும் பதநயமும் பொலியவரும் புகழ்ப்பாக்கள் பொழிந்த வெம்மான்
அருணகிரி தனைச்சும்மா விருத்தியவொர் புலத்தெனையு மமரு மாறீண்
டருணலநல் குதியடிய ரருந்திருவே பெருங்குகனே யமல யோகத்
தெருணகையே யிருள்பிளக்கும் பருமணியே நான்வணங்குஞ் சிவவே தாவே.
(10)

---

*6. பவுள்சு = சம்பத்து, இச்சொல்லிலக்கணந் **திட்பத்தில் ஓர்க** (கருணைக்குகப் பிரமமென்னும் முதறப்பத்தின் 6–ன் உரை).*

*இடம் = செல்வம்; "இடஞ்செல்வம் விசாலம் வாமம்" என்பது **ரகரவெதுகை.***

*8. 'இருப்பாரென்றே சொலல் எவ்விதத்தும் இசையாது' என வியையும். கவ்வு – 'கயவு' என்பதன் விகாரம். கயவு=பெருமை; **சூ–நிகண்டு.***

*தெருள்=அறிவு, தெளிவு; **பி–நிகண்டு.***

*9. கலிகை = இள அரும்பு; "நனை" என்னு மரும்புக்கு இது வேறு. கொய்வேனோ என்பதைக் கலிகை யென்பதனோடுங் கூட்டுக.*

# 69. வேதா

1. எளியேன் அன்புடன் வணங்கஉள்ள பெரியபொருளான சிவமயமானவரும், காலாதீதமாய் எப்பொழுதும் உள்ளவருமான இறைப் புலவ! பிறைநிலவு அணிசெய்யும் சடைமுடியை உடைய சிவபெருமானுக்குப் பிரணவப் பொருள் உபதேசம் செய்தருளிய அருள்மயமான, பெருமைக்குரிய குருவடிவத்தை அழகிய காட்டாவூர் என்னும் திருத்தலத்தில் வாழ்ந்த உரோம முனிவர் என்பார் அன்போடு காண எழுந்தருளி தரிசனம் தந்த உனது பெரும்கருணை எளியேனையும் ஏதாவது ஒருவழியில் அன்பு மயமாக்கி, எனக்கு நிலையான ஆனந்தம் வழங்காதோ ?

2. பிரம்மேந்திரன் எனும் அந்தணருக்கும், அரசனாகிய நித்திய நாதனுக்கும், புகழ்மிக்க வணிகர் குலத்தவரும் ஒளிமிக்கவருமான சொன்ன குத்தனுக்கும், மற்றும் குற்றம் அற்றுள்ள வசுமந்தனுக்கும் சேரர் கோனுக்கும், சொல்லரும் புகழ்வாய்ந்த திருவாவினன்குடியில் அனுக்கிரகம் செய்தருளிய உனது கருணைப் பெருக்கம், எளியேனையும், உனக்குப் பொருத்தமாக உள்ள அடியவன் எனக் கருதிக் கொள்ளாதோ ? எளியேன் வணங்க உள்ள ஒப்பற்ற இறைப்புலவ!

3. எளியேன் வணங்க உள்ள சிதாகாச மயமான இறைப்புலவ! பிறத்தல், இருத்தல், வளர்தல், மாறுபடல், குறுகல், அழிதல் எனக் கூறப்படும் ஆறுவகைப்பட்ட விகாரங்களும் நீத்து மாறாத இளமைப் பொலிவுடன் விளங்கும் உன்னோடு பொருந்தாமல், அந்த விகாரக் குற்றங்களாகிய ஆறும் தடையின்றிப் பொருந்தப் பெற்றுள்ள பௌதிக உடலம் வாய்த்துள்ள நான் எவ்வாறு வாழமுடியும் ? உனது கருணையாகிய செல்வத்தைப் பொருந்தாதவர்களை, சினந்துவரும் யமலோக அதிகாரிகள் விட்டுவைப்பார்களோ ?

4. அருள் மயமான இறைப்புலவ! கண்ணுக்கு நேர் எதிரே பிரத்தியட்சமாக உள்ள பொருளில், கருத்து அழுந்தித் தோய்ந்து இருப்பது போன்று, மூலக் கடவுளாகிய உன்னிடம் நினைவானது அழுந்தி நின்றால், எந்த உயிர்தான் பாசத்தளைகளை அறுத்துவிட்டுப் பேரின்பம் எய்தாது ? அவ்வாறு அழுந்திநிற்கும் நினைவை நான் பொருந்தி நிற்பது எப்போது ? பசி, தாகம், சோகம், நவைமிகும் மோகம், ஜரை, மரணம் எனும் அறுவகை அலைகளும் பொருந்தாமல் நீங்கி நிற்க நான் உய்தி பெற்று உயர்வது எப்போது ?

5. எளியேன் வணங்க உள்ள அருள்மயமான இறைப் புலவ! அடியார்களாகிய எங்களின் அருளாக்கத்திற்குரிய மூல காரணமாக உள்ள பொருள், நினது ஒப்பும் இகழ்வும் அற்ற இதயமாகிய பெட்டியின் உள்ளே உள்ளது. அந்தப் பொருளை அடையவில்லை எனில் எங்களுக்கு குக ஆனந்தமயமான அருள்வாழ்வு உயர்வுடன் வாய்க்க எங்கே இடமுண்டாகும்! அந்தப் பெரிய பெட்டியானது, எனது அன்பாகிய திறவுகோலால் அழகு பொருந்தத் திறக்காமல் இருப்பதற்கும் இடமுண்டோ ?.

6. எளியேன் வணங்க உள்ள, அருட்செல்வமயமான இறைப்புலவ! நினது இனிய இதயப் பெரும் பெட்டிக்கு எனது அன்பாகிய திறவுகோல் பொருந்த வில்லை எனில், திறவுகோல் பெட்டிக்கு ஏற்றவாறு பொருந்தும் வண்ணம் அதனைச் செம்மைப்படுத்தும் திறன்வாய்ந்த கருமான், உன்னை அன்றி யாரேனும் இவ்வுலகில் உள்ளனரோ ? கூறி அருள். அவ்வாறு திறவுகோலைச் செம்மைப்படுத்தும் செயலுக்குரிய கூலியைத் தரும் தகுதி ஒருசிறிதும் இல்லாத எனது எளிமைநிலையை உணர்ந்து எனக்கு உதவிசெய்வார் இங்கே யார் உளர் ?

7. நான் வணங்க உள்ள மெய்ப்பொருளான இறைப்புலவ! நினது மெய்ம்மையான இதயப் பெட்டியைத் திறந்து, பெறற்கரிய பொருளை எடுத்துக் கொண்டாலும், எனது புத்தி அதனை வீணாக்கி அழித்துவிடாத வகையில் அதனைக் கவனத்துடன் பாதுகாத்து நிலையாக அனுபவிக்கத்தக்க உயர்ந்த புத்தியையும் திடமாகத் தந்தருளி "உய்திபெறு" என நீ கட்டளை இட்டாலன்றோ நான் உய்தி பெற்று உயரும் நன்னிலை உண்டாகும் ? அந்தக் கட்டளையைப், பொய்ந் நெறி உடைய எளியேன் ஏற்றுக் கொண்டு உய்வது எந்த நாள் வாய்க்குமோ ?

8. தெளிவார்ந்த ஞான மயமான இறைப்புலவ! இவ்வுலகில் மானிடப்பதர் என என்னைத் தவிர்த்து வேறொருவர் இருப்பார் என எவ்விதத்திலும் சொல்ல இயலாது. எனினும் உனது அருள்மயமான ஆனந்த வாழ்வையே எப்பொழுதும் கருதி இருக்கும் பெருமையுடைய நிலை ஒன்றை இப்பொழுது நான் பெற்றுள்ளதால் "நான் எப்படியும் உய்திபெற்று உனது ஆனந்தப் பேறு அடைவேன்" என எண்ணிச் செவ்விதாய் உள்ளம் மகிழ்ந்து இருக்கின்றேன். நினது திருவுள்ளக் கருத்து எப்படி உள்ளதோ ?

9. இறைப்புலவ! காலத்தால் அழியாது நிலைத்துள்ளதான சைவ சித்தாந்தம் எனும் மரத்திலிருந்து நான் இலையைப் பறிப்பேனோ ? இள அரும்பைப் பறிப்பேனோ ? முதிர்ந்த அரும்பைப் பறிப்பேனோ ? பிஞ்சுக் காயைப் பறிப்பேனோ ? முதிர்ந்த காயைப் பறிப்பேனோ ? நன்கு கனிந்துவரும் பழத்தைப் பறிப்பேனோ ? அருளின் துணையால் அப்பழத்தைக் கொய்தாலும் அதனது தோற்றப் பொலிவையே பார்த்து மகிழ்வேனோ ? நன்கு கனிந்த பழத்தையே உண்டு மகிழ்வேனோ ? கூறி அருள்.

10. அடியார்க்கு வாய்த்துள்ள பெறற்கரும் செல்வமே! பெரும்பெயர்க் குகனே! குற்றமற்ற யோகநெறியில் தெளிவு கொண்டு ஒளிரும் ஒளியே! அறியாமை இருளைப் பிளந்து எறியும் பருமையான வைரமணியே! எளியேன் வணங்க உள்ள சிவமயமான இறைப்புலவ! பொருள்நலமும் சொல்நலமும் பொலிவு பெற்று விளங்க, அரிய சந்தத் திருப்புகழ்ப் பாடல்களைப் பெருமழை எனப் பொழிந்த எம்மானாகிய அருணகிரிப்பெருமானை மௌனநிலையில் இருத்திவைத்த உயர்ந்த அனுபவ பூமியில் எளியேனும் அமர்ந்து விளங்குமாறு இப்பொழுது உனது திருவருளாகிய நலத்தை வழங்கி அருள்.

# 70. மாணிக்கவாசகர்

*கலிவிருத்தம்.*

**மா**ணிக்க வாசகர் போற்றிசொல் லகவலிற்
கோணிற்கு மாயையின் வாதியைக் குறைகுயின்
றாணட்பு மார்க்கமிஃ தாமெனக் காட்டிய
மாணத்தெள் ளாறெற்கும் வாய்த்ததுன் னருளே. (1)

**ச**ரியையின் றாசருங் கிரியையி னன்பரும்
பரியுடை யோகவம் பலத்தரு மேனிலை
அரியசித் தருமெனை யாண்டரு டேவவுன்
பெரியசித் தானறும் பேறுறு பவரே. (2)

**த**கவுடைச் சைவபு ராணவொண் சங்கிதை
துகளுடைச் செம்புற ழாத்துமன் றூச்சிவ
விகலமில் பூசையின் மேன்பொரு ளாவனென்
றிகலறப் பேசுமவ் வாறரு ளிறையே. (3)

**ச**ண்டக னாயினுஞ் சிவவெனச் சாற்றொரு
பண்டமு ளானெனி னவனொடு பறைகுக
ஒண்டகை யாரவ னுடனுறை குகவென
முண்டக மோதிய முதமெனக் கிலையோ. (4)

**சோ**தனை மேலெழிற் சொன்னம துபுனிதம்
ஆதலுண் டேயெனை யல்லகண் டநிமிரும்
பேதம தாற்பரிட் சிக்கினும் பிறகருண்
மோதம தாமெனச் சூழ்வதென் முடிவே. (5)

---

*3. ஒண்சங்கிதை = **ஞானசங்கிதை** 28–ஆம் அத்தியாயம்.*
*விகலம் = குறைபாடு ; பி – நிகண்டு.*

*4. முண்டகம் = அதர்வணவேத **முண்டகோபநிஷத்**. இவ்வுபநிஷத், இத் திருப்பாட்டின்படியே கூறுமென்பதை வேதவியாசத்து **26**–ஆம் வினா விடைக் குறிப்பாலறியலாம். உரிய வடமொழிகளும் அங்ஙனங் கண்ணுறலாம்.*

*5. சொன்னம் = பொன். இறைவனன்பி லீடுபடுவார் இத் திருப்பாட்டின் பொருளை யுய்த்துணரல் இனிது வேண்டற் பாலதாம். பொருள்:– "தேவனே! அழகிய பொன்னானது நெருப்பி லிடப்பட்டுப் புடஞ்செய்யப்படு மாயின், தூய்மையாய் மாற்றுயர் வெய்தலு முண்டன்றோ அது போலத் துன்பு பெருகும் படியாம் பேத கருமத்தினாலே நீ என்னைப் பரிட்சிக்கினும் பின்பு திருவரு ளானந்த முண்டாமென நின்னை விடாது தியானிப்பதூஉம் எனது சித்தாந்தமே." எனவாம்.*

**மா**மையில் காமமும் வெகுளியு மயக்கமும்
ஆமொரு மூவகை யாசகைத் துனதருட்
கேமனஞ் செய்குநர்க் கூழிய மிழைப்பினுந்
தேமுதம் வாய்க்குமன் றோபர சிவமே. (6)

**மி**ழற்றுமுக் காசெனும் வேட்கையு முவர்த்தலும்
இழுக்குறு மாக்கையை யேணுயி ரெனக்கொளுங்
கொழிப்புரை கூறிடு மயக்கமுங் கூடினர்
விழுத்திரு மேவலெவ் வாறருள் விளைவே. (7)

**மா**ழைகொள் ளாதமெய் வாலுறழ் வோரொரு
பீழைகொள் ளாதநின் பேறடை வார்வெறுங்
கோழையி னாலருட் கோலமி லென்னுறழ்
ஏழைக ளேதுசெய் வாரரு ளிறையே. (8)

**அ**ழகிய வாமைக ளாசையி லேநிதம்
பழகினர் போலருட் பாங்கினின் றாடொரு
கிழமையெற் கீயொரு கேண்மைகொண் டாளுதி
நிழன்மலி மாக்குக னேயரு ணிதியே. (9)

**வி**ல்லிபுத் தூர்ப்பெய ரானது வீறிறக்
கல்வியி னால்வென்று காதளித் தானுடை
நல்லருட் பாப்பொரு ளேயரு ணாயக
அல்லவை மாய்த்துயு மாறெனக் கருளே. (10)

ஆக எழுபதுபத்திறும் போந்த திருப்பா - 700
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 703**

---

*6. மாமை = அழகு ; ஈண்டு, நலத்தின்மேற்று.*

*7. கொழிப்பு = குற்றம்;* ***சே–திவாகரமும், சூ–நிகண்டுங்*** *காண்க.*

*8. மாழை – “மாழைபொன் னுலோகக் கட்டி மடமையோர் புளிமா வோலை” என* ***ழகர வெதுகையில்*** *வருமாறு பல்பொரு ளொருசொல்லாம்; ஈண்டு, மடமை (=அறிவின்மை) என்னும் பொருள்பட நின்றது. மெய்வாலுறழ்வோர் = சுத்த மெய்ஞ்ஞானிகள். கோழை = குறைவு, நாணம் ; இது, கிராமியமொழி,*

*9. வாமைகள் = பெண்கள் ; வாமா = வடசொல்.*

# 70. மாணிக்கவாசகர்

1. மாணிக்க வாசக சுவாமிகள் தாம் அருளிய (திருவாசகத்துப்) போற்றி அகவலில் மாயாவாதியின் குற்ற நெறியை எடுத்துக்காட்டி, சேமம்மிக்க அன்பு நெறி இதுவே என்று உணர்த்தி யருளிய மாட்சிமை பொருந்திய அந்தத் தெளிவான நெறி, எளியேனும் மேற்கொள்ள வாய்த்திருப்பது, உனது திருவருட்பயனே ஆகும்.

2. என்னை ஆட்கொண்டு அருளும் தேவே! சரியை நெறியைப் பின்பற்றும் அடியார்களும், கிரியைநெறியைப் பின்பற்றும் அடியார்களும், படிப்படியாக ஓங்கச் செய்யும் யோக நெறியின் பயனைத் தூய்க்கும் அடியவர்களும், மேம்பட்ட நிலை அடைந்திருக்கும் அருள் பெரும் சித்தர்களும், உனது பெருமைக்குரிய அருட்சக்தி இழைக்கும் சித்தியின் திறத்தால் பெறுதற்கரிய பேறு அடைபவர்களேயாவர்.

3. இறைவ! பெருமையுடைய சைவபுராண ஞானசம்மிதை "காளிதமாகிய குற்றம் பொருந்தியுள்ள செம்பை ஒத்துள்ள ஆத்மா, குறைவொன்றும் இல்லாத தூய சிவவழிபாட்டின் திறத்தால் துகள்தீர்ந்து, தூய்மையாகி மேன்மைமிக்க சிவான்மாவாக ஆவன்'' என்று, மாறுபாடு ஏதும் இன்றித் தெளிவாக எடுத்தியம்பும். (உனது வழிபாட்டில் யானும் உள்ளேன் ஆதலின்) எனக்கும் அத்தகைய தூய ஆன்மநிலையை அருள்க.

4. இழிந்த சண்டாளனாக இருப்பினும் அவன் சிவசிவ எனச் சொல்லும் பெரும்பேறு பெற்றவனாக இருப்பான் எனில், அவனோடு உறையாடுக; ஒண்மையும் பெருமையும் பொருந்திய அவனுடனே வசித்திடுக என, முண்டகோபநிடதம் விதந்து கூறிய தூய சிவானந்தப் பேறு எனக்கு இல்லையோ ?

5. பொன்னானது நெருப்பில் இடப்பட்டுப் புடம் செய்யப்படுமாயின் அது தூய்மை அடைந்து மாற்றுயர்ந்து விளங்குதலும் உண்டன்றோ! அவ்வாறே, துன்பத்தை. மிகுவிக்கும் இருமை உணர்வுக்கு இடம் கொடுக்கும் பேத காரியத்தால் என்னைச் சோதித்தாலும், பின்னர் எனக்கு முடிவில்லாத அருளானந்தப் பேறே வாய்க்கும் எனக் கருதி, அன்பில் மாறாது உறுதியாக இருப்பதே எனது தீர்மானமான முடிபாகும்.

6. பரசிவ இறையே! நலன் விளைவிக்காத காமம், வெகுளி, மயக்கம் எனப்படும் மூன்று குற்றங்களையும் அறவே போக்கி, உனது திருவருட் பேற்றை பெறுவதற்காகவே மனத்தை அர்ப்பணித்திருக்கும் அடியார்களுக்கு, அன்னார் ஏவிடும் செயலைச் செய்வதாகிய ஊழியம் செய்து நின்றாலும், இனிய ஆனந்தநிலை உறுதியாக வாய்த்து நிற்கும் அன்றோ!

7. அருள் விளைவாக விளங்குவோய்! கூறப்பட்ட முக்குற்றங்கள் எனப்படும் வேட்கை என்பதும், வெறுத்தல் என்பதும், அழிதலாகிய இழிந்த இயல்புடைய உடம்பையே இன்பம்பெற உள்ள உயிராகக் கருதிக்கொண்டு குற்றம்பொருந்திய கோட்பாட்டைக் கூறுதலாகிய மயக்க அறிவு என்பதும் பொருந்தப் பெற்றுள்ளோர், நினது விழுப்பம் மிக்க திருவருட் செல்வத்தைப் பொருந்தி இருத்தல் என்பது எவ்வாறு நிகழும் ?

**8.** அருள்மயமான இறைவ! அறிவின்மை என்பதை அறவே நீத்துள்ள சுத்த மெய்ஞ்ஞானிகள் ஒரு துன்பமும் அணுகப் பெறாத நினது ஆனந்தப் பேற்றை அடைவார்கள். பயனற்றுள்ள பல்வேறு குறைநிலைகளால் அருள் உணர்வை முற்றிலும் இழந்துள்ள என்போன்ற அறிவிலிகள் என்ன செய்வார்கள் ?

**9.** பேரொளி பொருந்தியுள்ள பெருமைக்குரிய குகதேவ! அருட் செல்வமே! அழகிய பெண்கள் மேல் கொள்ளும் ஆசையிலே நாள்தோறும் ஆழ்ந்து ஈடுபாடு கொள்வாரைப் போன்று, உனது திருவருட் சார்பிலேயே மனம் அழுந்திநின்று செயல்களை மேற்கொள்ளும் ஓர் அன்புரிமையை எனக்கு வழங்கி அருளும் நட்புரிமை கொண்டு என்னை ஆட்கொண்டருள்க.

**10.** வில்லிபுத்தூர் ஆழ்வாரின் அகந்தை அடியோடு அழியத் தமது கல்வித்திறத்தால் வென்று, அரிய வேண்டிய செவியை அரியாமல் அவருக்குச் 'செவி' அளித்த கருணைமுனிவரான அருணகிரிப் பெருமானின் நல்லருள்மயமான திருப்புகழ்ப் பாடல்களின் பொருள் மயமாக விளங்குபவனே! அருட்சக்தியின் தலைவ! தீயவற்றை அறவே அழித்து உய்திபெறுமாறு எனக்கு அருள்புரிக!

# 71. அறியேன்

*கலிநிலைத்துறை.*

**தே**சிக மன்றி லேநித நின்று தேயாது
பாசிக ளின்ப மேகொள வென்றன் பாலாடும்
மாசில கண்ட தேவெனு மென்றன் வாலீசன்
ஆசிற வென்கண் மேவுவ தென்றோ வறியேனே. (1)

**கோ**ளறு நெஞ்ச மேகிள ரன்பர் குறைபோயெந்
நாளுந லின்ப மேகொள வென்றின் னடமாடு
தாளிறை யெங்கு மாநிறை வென்றன் சருவேசன்
ஆளுகை யென்கண் மேவுவ தென்றோ வறியேனே. (2)

**தோ**லுமெ லும்பு மேதைந ரம்புந் துவர்நீருங்
காலுமன் முண்ட மாயபொ யங்கங் கழிவாமுன்
காலுட னெஞ்ச மோய்வுற வொண்செங் கதிரோனன்
பாலுளு மென்கண் மேவுவ தென்றோ வறியேனே. (3)

1. *என்றன்பாலாடும் – என்று + அன்பால் + ஆடும் எனப்பிரிக்க.*

**ம**ருளுடை நெஞ்ச மதுகொடி யம்பென் மறையாவுந்
தெருளுடை யின்சொ லெனநனி கொண்டொர் சிவமேவ
வருதியெ மன்ப வெனவுரை தந்தென் மதிநாதன்
அருளுட னென்கண் மருவுவ தென்றோ வறியேனே. (4)

**எ**ளிமையு மின்றி யிருமையு மின்றி யிடையாகிப்
புளிஞரொ ரைந்து பெயர்பொரு புன்கண் பொலிநோயேன்
களிகொள வென்று நிதநினை கின்ற கதிரீசன்
அளியுட னென்கண் மருவுவ தென்றோ வறியேனே. (5)

**வே**ர்மல நீங்க வேவினை நீங்கும் வினையேகப்
பேர்நிலை நீங்கு மேயது நீங்கப் பிணியாய
சூர்விடு மாண்டின் பாமென வோங்கெந் துறையீசன்
நார்மன மார்ந்தென் னோடணை ஞான்றெஃ தறியேனே. (6)

**மா**ணல நச்சா வீனவி னைப்பேய் மதிபோலே
வீணசை யைப்பே ழாகம தித்தே விழைசேயேன்
கோணனி மிர்த்தோ வாவுளி சைத்தாள் குகதேவன்
ஆணம துற்றே மேவுவ தெக்கா லறியேனே. (7)

**த**வநிலை கட்கு நவநிலை கட்குந் தலையாமோர்
சிவநிலை புக்கின் னமுதுண நச்சுஞ் சிறியேன்பல்
பவநிலை யெற்றும் விறலுடை யத்தன் பரமேசன்
அவநிலை வெட்டு மிறைவர லெக்கா லறியேனே. (8)

**பா**சமி லூச லானது மூரிப் படிமீதோ
ரூசலி லாம லேயுறல் போலென் னுழல்போதம்
நாசம தாயொர் தாரக மாக நடுநாதன்
ஆசற வேயெ னோடணை நாளெஃ தறியேனே. (9)

**பி**சியில தீதம் பெறவரு ளாலெம் பெருமான்மேல்
உசிதம தாகும் புகழ்சொன நாநன் குடையானின்
சுசியுள மேலன் றொளிரிய தூவிண் சுடர்சோதி
அசிபத மேவென் றணைவதெ நாளோ வறியேனே. (10)

---

*9. பாசமில் ஊசல் = கயிறறுந்துவிட்ட ஊசல். ஊசல், ஊஞ்சலெனவும், உஞ்ச லெனவும்படும். ஊசல் = அசைவு: "பூங்குழை யூசல்" என்றார் பொருநராற்றுப் படையினரும்.*

*10. அசிபதப்பொருளை, வண்மை யென்னும் 49–ஆம் பத்தின் 7–ன் குறிப்புரையி லோர்க.*

# 71. அறியேன்

**1.** பொன்னொளிமயமான அம்பலத்தில் எப்பொழுதும் நீக்கமின்றி, ஓய்வின்றி, பாசப்பிணிப்புக்குள் அகப்பட்டிருக்கும் உயிர்கள் இன்பம் பெற வேண்டித் தன் கருணை காரணமாக அருட்கூத்து இயற்றும் மாசற்ற, அகண்டமயமான கடவுள் எனப்படும் தூய அறிவுமயமாகிய ஈசனாகிய குகன், எனது குற்றங்களெல்லாம் அகல என்னிடம் வெளிப்பட்டு விளங்குவது என்றைக்கோ! என்னால் அறிய இயலவில்லையே.

**2.** குற்றங்களை நீத்திருக்கும் நெஞ்சே! அன்புமிகும் தொண்டர்கள் தம் குறைகளெல்லாம் நீங்கப் பெற்று எப்பொழுதும் ஆனந்தப் பேற்றை அடைய வேண்டி இன்பமயமான அருட்கூத்து இயற்றும் திருச்செயலை உடைய இறைவன், அகண்டமயமாய் எங்கும் வியாபித்து நிறைந்து இருக்கும் ஞானவெளியாக இருப்பவன். எனக்குரிய சர்வேசுவரன் என்னை ஆட்கொண்டிருக்கும் அன்புரிமையானது என்னிடம் பொருந்துவது என்றோ! அறியேன்.

**3.** தோல், எலும்பு, கொழுப்பு, நரம்பு, இரத்தம், வாயுக்கள் ஆகிய இவை பொருந்தப் பெற்றுள்ள முண்டம் எனத்திகழும் இந்தப் பொய்யான உடலம் என்னைவிட்டு நீங்கும் முன்னர், அலைந்து திரியும் கால்களும் நெஞ்சும் அலையாமல் ஓரிடத்தேயே தணிந்து அடங்கி இருக்க, செவ்வொளிச் சூரியன் எனவிளங்கும் குகன், மாறாத அன்பால் அவனைக்கருதும் என்னிடம் மேவி நிற்பது என்றோ ? அறியேனே.

**4.** மருட்சி கொண்டுள்ள நெஞ்சம் கொண்டு நான்பாடும் திருப்பாடல்கள் அனைத்தையும் தெளிந்த இனிய சொற்பொருள் நிறைந்தவை என ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு, "எமது அன்பனே! ஒப்பற்ற சிவநிலை பொருந்த நீ என்னிடம் வருக" என அருளுரை வழங்கி, என் ஞானப் பேற்றுக்குரிய தலைவன் அருளோடு என்னிடம் பொருந்தி நிற்பது என்றோ ? அறியேனே ?

**5.** எதுவும் அற்று எளிமைப்பட்டிருக்கும் நிலையும் இல்லாமல், எழுத்தறிவு இல்லாத ஏழைநிலை, நூல்கள் முற்றும் உணர்ந்துள்ள ஞானியர் நிலை ஆகிய இரண்டையும் நீத்துக் கல்லாதவனாகவும் கற்றவனாகவும் விளங்கும் இடைப்பட்ட நிலை வாய்த்தவனாகி, ஐம்புல வேடர்கள் சதாசர்வ காலமும் என்னுடன் போரிட, துன்பமுற்று வருந்தும் நோய் உடையேனாகிய நான் அருளானந்தம் அடைவதற்காக நாள் தோறும் தியானித்துவரும் ஒளிமயமான ஈசன் கருணையுடன் என்னிடம் பொருந்தி விளங்குவது என்றோ ? அறியேனே.

**6.** வேராக (மூல பந்தமாக) உள்ள மலம் நீங்க, வினைப்பயன் நீங்கும், வினைப்பயன் நீங்கிவிட, பெயரும் உருவும் பொருந்திய நிலையைக் கொடுக்கும் (பிறவியைக் கொடுக்கும் மாயை அகலும். மாயாமலம் நீங்கிவிட, கொடிய பந்தப்பிணிப்புகள் அனைத்தும் நீங்கிவிடும்; அப்பொழுது பேரின்பநிலை வாய்க்கும். இத்தகைய பேரின்பமாக ஓங்கி ஒளிரும் எமது துறையாகிய ஈசன் கருணையுள்ளத்துடன் என்னோடு பொருந்தி நிற்கும் காலம் என்றைக்கு வாய்க்கும் ? அறியேனே ! (துறை = வைதிக சைவசித்தாந்த ஞானத் துறை; துரை, தலைவன் எனவும் பொருள் கொள்ளலாம்).

**7.** பெருமைக்குரிய தெய்வநலத்தை விழையாமல், இழிவான செய்கைகளை உடைய பேயின் உள்ளத்தைப் போன்று வீணானவற்றை ஆசைப் படுதலையே பெருமையாகக் கருதிக்கொண்டு அவற்றையே விரும்பும் எளியேனின் மனக் கோணலை நிமிர்த்தி, என்றும் அகலாத திடமான உள்ளத்தைப் பொருந்தச் செய்து ஆட்கொள்ளும் குகதேவன் அருளும் ஆனந்தப் பேற்றை அடைந்து சிவநிலையைப் பொருந்துதல் எப்பொழுது ? அறியேனே.

**8.** உயர்ந்த தவநிலைகளுக்கும் புதிது புதிதாகப் பொருந்தும் யோகநிலைகளுக்கும் மேம்பட்டதாய்த் தலைமைச் சிறப்புடன் விளங்கும் சிவநிலையை அடைந்து, இனிய அமுதத்தை உண்ண விழையும் எளியேனுக்கு இனிவர உள்ள பலபிறவிகளையும் தடுத்துநிறுத்தவல்ல ஆற்றல் வாய்ந்துள்ள எனது தலைவன், பரமேசுவரன், எனது வீணான மனோபாவங்களை அழித்துவிடும் இறைவன் என் முன் எழுந்தருளி வருதல் எப்போது ? அறியேனே.

**9.** கயிறு அறுந்துவிட்ட ஊசலானது, ஆதாரமாகும் ஆற்றல் வாய்ந்த தரைமீது எவ்வித அசைவும் அற்ற ஒரு நிலையில் பதிந்து இருப்பது போன்று எப்பொழுதும் அலைந்து கொண்டிருக்கும் எனது சீவபோதம் தனது சஞ்சலத்தன்மை அழியப்பெற்று ஓர் ஆதாரமாக விளங்கிநிற்க, அங்கே எனது இதயநாயகனான குகன், என் குற்றங்களெல்லாம் அகன்றுவிட, என்னோடு அணைந்து நிற்கும்நாள் எது ? அறியேனே !

**10.** பொய்த்தன்மை இல்லாத அதீதமான பெருநிலையைப் பெற வேண்டித் திருவருளால் எம்பெருமான் குகன்மேல், மிகவும் பொருத்தமான திருப்புகழ்பாடல்களைப் பாடும் நாநலம் நன்குவாய்க்கப் பெற்றிருந்த அருணகிரிப் பெருமானின் தூய உள்ளத்தில் சுடர்விட்டு ஒளிர்ந்த தூய்மையான சிதாகாசப் பேரொளி, என்முன் தோன்றி, "நீ அசிபத நிலையைப் பொருந்துக" என்று கூறி என்னுடன் அணைந்து நிற்றல் எந்நாளோ ? அறியேன்.

# 72. வியோமபிரான்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ப**ரிமுழக் கனிழைத்த சிசுவதைப் பாதகம்
பாற்றிய தயையுடை யானெவ னருளாம்
பெரியவ ளெவனவர் சுதரெவ னேனைய
பிராணிக டொறுமிருந் தசைப்பவ னேவன்
பரிவுட னெனக்கருள் புரிகுது மென்றருட்
பறைபகர்ந் துளவவ னேயென வுணரென்
கரிசற வணைத்தருள் பகுக்குதி யிருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே. (1)

**ம**னக்குசை பூட்டிய விந்தியக் குதிரைகள்
வாகுபொ ருந்திடத் தொடுத்தொரு புத்தி
எனப்படு சாரதி விடயம தாந்தடத்
திடைநடத் திடுமுடற் றேரினி லுள்ளார்
உனைக்கரு திடலரி தாகுமந் நேர்க்கெனை
யொருசிறி தேனுமொட் டாமலுன் முகமாங்
கனத்தட மேனடத் தாயென திருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே. (2)

**பா**ற்கடற் பிறந்ததன் வந்திரி தனையுடல்
படைத்துளர் யாவரு மருத்துவ னாக
ஏற்கமுன் னேர்ந்தது போன்மலப் பிணியின
ரெவ்வரு மாமருத் துவனெனு முன்றன்
பாற்கனி வாமொரு தயயினை யேற்றுயும்
பாங்குள ராகலி னஞருடை யேனைக்
காற்கடி யேனும்வி டாதளி யிருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே. (3)

**ப**யக்கடற் பிறந்துள வரம்பையர் தோளணை
பரிவினைக் கருதலின் றமுதினைக் கருதி
நயப்படைந் தனர்சுரர் தைத்திய ரவர்நல
நாடிநன் கிழந்தன ரவர்நிகர்த் தறிஞர்

1. *பரிமுழக்கன் = பிறந்தவுடன் குதிரைபோற் கனைத்தவன் = அசுவத்தாமன். குதிரை வயிற்றிலிருந்து பிறந்தவனென்பதும், குதிரைமுகத்தினனென்பதுந் தவறு; வடமொழி யிலுள்ள வியாஸபாரதங் காண்க.*

2. *குசை –குச: குசா என்னும் வடமொழி விகாரம்; கடிவாளமென்னும் பொருண்மைத்து.*

*தடம் = வழி; டகரவெதுகை.*

துயர்ச்சகம் வேண்டலின் றருட்சுகம் வேண்டுவர்
    சூக்கமி லாதமற் றையர்சக முகப்பர்
கயக்கதி கருதெனைக் காத்தரு ளிருதய
    கமலசிற் பரமவி யோமபி ரானே. (4)

**ப**ற்றழி வானுவல் வாசனைச் சயமுநற்
    பரவுணர் வாம்பர ஞானமு மடங்கி
நிற்றலென் றோதிடு முண்மன நாசமு
    நிலைத்தவர் மீண்டுதி யாரென வோத்துச்
சொற்றது போல்பவ ரெவரவ ரேநினைச்
    சோர்வற வடைபவ ரிதையறை யாளி
கற்றவெற் குறுவதி யாதென திருதய
    கமலசிற் பரமவி யோமபி ரானே. (5)

**யா**தொரு பொருளினை யனுசரித் திருப்பது
    மியாதொரு நினைவினுக் கேதுவா யுளதும்
யாதது வேதொடர் வாசனை யாமது
    வேநல தூயது மலினமு மெனவாம்
ஏதமி றூயது வீட்டுநிட் டையதா
    மேசுறு மலினம துதிப்பிறப் பாகும்
காதலித் துளநல தீதியெ னிருதய
    கமலசிற் பரமவி யோமபி ரானே. (6)

**பி**ராணன தசைவொடு வாசனை மலினமும்
    பீசம தாமதின் முளைத்திடு சித்தம்
அராகவ ணோக்கம தாமிதை யெசுமறை
    யதிர்த்திடு முறைமைபி சாங்குர மெனவாம்
பராவிய விரண்டனு ளொன்றவிந் திடுமெனிற்
    படுத்திடு மந்தவி ரண்டுமென் றறியென்
கராளமெ லாமறுத் தருள்புரி யிருதய
    கமலசிற் பரமவி யோமபி ரானே. (7)

**அ**கமன நாசன முருவமு மருவமு
    மாமிகு தமசொடி ராசச நசித்த
புகழுடை ஞானியி னிடத்துள துருவெனப்
    புகலொரு நாசமற் றொன்றுவி தேக

---

*5. வாசனைச்சயம் – வாஸநாக்ஷயம் ; க்ஷயம் = கேடு.*
*யஜுர்வேத முக்திகோபநிஷத்தே இங்கு ‘ஒத்து’ எனப்பட்டது.*

*7. அணோக்கம் = மரம்; மேனோக்கிவளருந் தன்மைத்து எனக் காரணம் விரிக்க;*
*அண் = மேல். யஜுர்வேத முக்திகோபநிஷத்தே இங்கு ‘எசுமறை’ எனப்பட்டது.*

சுகனிடத் திலிங்கவு டம்பொடுங் கிடுகையிற்
றூயசத் துவநசித் திடலிதை ஞான
ககனெனு நீயெளி யேற்களி யிருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே. (8)

**ம**னச்சுழ லெவணம டங்குமென் றடிக்கடி
மகிமிசை வினவுந ரறிந்துயு மாறு
பனிச்சமு சாரம தாந்தரு வினுக்கொரு
பருஞ்சிவை யாமனந் தலைப்படு போழ்தே
சனிக்கவொ ணாத்தடை புரிகென வாரணஞ்
சாற்றொழுங் கையுமறி வேனின தருளாங்
கனிச்சுவை நுகர்ந்துய வருள்கவெ னிருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே. (9)

**ஒ**ள்ளிய வெயிற்றினை யெயிறுகொ டேகடித்
தொண்டுக ளாக்கிட லுறுப்பினை யுறுப்பாற்
கிள்ளிய லந்தலை யயர்வது போன்முனங்
கிளத்திய மனத்தினை மனங்கொடு தடுக்குந்
தெள்ளிய மதியினர் பெறுநல மிவனையுஞ்
சேரவொ ரருள்புரி திருப்புக ழெம்மான்
கள்ளிறத் துதித்தகு கேசவெ னிருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே. (10)

# 72. வியோமபிரான்

**1.** இதய தாமரைக்குள் விளங்கும் சின்மயமான, பரம வெளியில் ஒளிரும் பெருமானே! அசுவத்தாமன் என்பான் இழைத்த சிசுவதையாகிய பாதகத்தின் கொடிய பயனை நீக்கியருளிய கருணைஉடையோன் யார்? அவனது அருட்சக்தியாகிய பெரியவன் யார்? அவர்களின் திருக்குமாரன் எனவிளங்குபவன் எவன்? மற்றுமுள்ள பிராணிகளின் இதய குகை தோறும் விளங்கி அவற்றை இயக்குபவன் எவன்? "மிகவும் விருப்பத்துடன் உனக்கு அருள் புரிவோம்'' என, எனக்கு அருளுரை கூறியவனே அவன் எனத் தெளிவாக உணரும் எனது குற்றமெல்லாம் நீங்க என்னை அணைத்துக் கொண்டு அருள் வழங்குக.

**2.** எனது இதயதாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரமவெளியில் ஒளிரும் பெருமானே! மனமாகிய கடிவாளம் பூட்டப்பட்ட இந்திரியங்களாகிய குதிரைகளை அழகுபொருந்தப் பூட்டி, புத்தி எனும் தேரோட்டியானவன் உலக விடயங்களாகிய வழியில்

*9. சிவை = வேர். ஆரணம் = போந்த* ***முக்திகோபநிஷத்தே.***

*10. அலந்தலை = துக்கம் ;* ***பி – நிகண்டு.***

செலுத்திக் கொண்டிருக்கும் உடலாகிய தேரில் அமர்ந்திருப்பவர்கள் உன்னை உணர்ந்து தியானித்தல் என்பது அரிதாகும். அந்த ரீதியில், (அந்த நெறியில்) என்னை ஒரு சிறிதும் உட்படுத்தாமல் உன்னை அடையச்செய்யும் உன்முகமாக உள்ள பெருமைக்குரிய வழியிலேயே அத்தேரை நடத்துவிக்க.

3. இதயதாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரம வெளியில் ஒளிரும் பெருமானே! பாற்கடலில் தோன்றிய தன்வந்திரியை, உடலோடு கூடி வாழும் உயிர்கள் அனைத்தும் (அதாவது, பிறவியெடுத்துள்ளார் அனைவரும்) இணையற்ற தலைமை மருத்துவனாக ஏற்றுக்கொள்ள முன்பு நேர்ந்தது போன்று, மும்மலப் பிணிப்புக்கு ஆட்பட்டுள்ள அனைவரும், மா மருத்துவன் (பவரோக வைத்தியநாதன்) என உள்ள உன்னிடமிருந்து பெருகும் கனிவான கருணைப்பேற்றை அடைந்து உய்திபெற வேண்டிய உறுதி நிலையில் உள்ளனர் ஆதலின், துன்பம் மிகுந்துள்ள என்னைக் கால்நாழிகை யேனும் இடையீடு இன்றிக் காத்தருள்.

4. இதயதாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரமவெளியில் ஒளிரும் பெருமானே! பாற்கடலிலே தோன்றிய அரம்பையர்களின் தோள்களை அணைந்து இன்பம் கொள்வதை நினைக்காமல் (விரும்பாமல்) அமுதம் பெறுவதையே முக்கியமாகக் கருதிய தேவர்கள் மேலான நன்மை அடைந்தனர். ஆனால் அசுரர்களோ அரம்பையரைத் தழுவும் இன்பத்தைக் கருதி அமுதப்பேற்றை இழந்தனர். அவர்களைப் போன்று, ஞானியர், துன்பமயமான உலகியல் நெறியையும் வாழ்வையும் விரும்பாமல் உனது அருளானந்தப் பேற்றையே விரும்புவர். ஞான நுட்பம் வாய்க்காத ஏனையோர் உலகியல் வாழ்வையே பெரிதென விரும்பி, இருப்பர். பெருமைக்குரிய உனது ஆனந்தப் பேற்றைக் கருதும் என்னைக் காத்தருள்.

5. எனது இதயதாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரமவெளியில் ஒளிரும் பெருமானே! உலகப்பற்றின் அழிவு எனப்படும் வாசனைக்கேடு (வாசனாக்ஷயம்) என்பதும், நல்ல மேலான உணர்வாகும் பரஞானம் என்பதும், சஞ்சலமற்று அடங்கி ஒய்ந்திருத்தல் என்பதாகிய உள்மன அழிவு என்பதும் ஆகிய இவற்றில் நிலைத்திருப்பவர்கள், மீண்டும் பிறப்பதில்லை என யஜுர்வேத முக்திகோபநிஷதம் கூறியுள்ளது போன்று, தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டுள்ளார். இதனை விளக்கும் ஒழுங்குமுறையைக் கற்றுள்ள எனக்கு நேர உள்ள கதி யாது ? கூறி அருள்.

6. எனது இதய தாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரமவெளியில் ஒளிரும் பெருமானே! யாதேனும் ஒருபொருளை ஆதாரமாகச் சார்ந்து இருப்பதும், எத்தகையதொரு நினைவுக்கும் காரணமாக உள்ளதும் எதுவோ, அதுவே நிலையாகத் தொடர்ந்திருக்கும் வாசனை எனப்படும். அது நன்மையைத்தரும் தூயவாசனை எனவும், அழுக்குற்ற வாசனை மலினவாசனை) எனவும் இருவகைப்படும். இவற்றுள் குற்றமற்றுள்ள தூயவாசனை வீடுபேற்றைத் தரும் நிட்டைநிலையில் நிறுத்தும். குற்றம்பொருந்தியுள்ள மலினவாசனை மீண்டும் மீண்டும் பிறப்பையும் இறப்பையும் கொடுக்கும். நான் மிகவும் விரும்பியுள்ள நன்மை மிக்க தூயவாசனையை அருள்க.

7. இதயதாமரையுள் விளங்கும் சின்மயமான பரமவெளியில் ஒளிரும் பெருமானே!

பிராணவாயுவின் போக்குவரவு, மலின வாசனை ஆகிய இரண்டும் விதையாகும்; இந்த விதையிலிருந்து முளைத்துத் தோன்றுவது அராகம் எனப்படும் ஆசையாகிய மரமாகும். இதனை யசுர்வேத முக்திகோபநிடதம் கூறும் முறையானது பீஜாங்குர நியாயம் எனப்படும். கூறப்பட்ட இரண்டனுள் (விதை, மரம்) ஒன்று ஆற்றல் இழந்து நிற்குமாயின், இரண்டுமே அழிந்துவிடும் என அறிந்துள்ள எனது நஞ்சுபோன்ற கொடிய குற்றத்தை அறவே நீக்கி அருள்க.

**8.** இதய தாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரமவெளியில் ஒளிரும் பெருமானே! உள்மன அழிவு என்பது உருவநிலை எனவும் அருவநிலை எனவும் இருவகைப்படும். இவற்றுள், தாமசம், ராஜஸம் இரண்டும் நீங்கப்பெற்றுள்ள சாந்தகுணப் புகழுடைய ஞானியின் இடத்தே காணப்பட உள்ளது உருவம் எனக் கூறப்பட உள்ள அகமன அழிவு நிலையாகும். மற்றொன்று விதேக முத்தி பெற்றோன் இடத்தே லிங்கசரீரம் ஒடுங்கிநிற்கும்போது, தூய சத்துவ குணமும் அழிந்து நிற்கும் அருவம் எனப்படும் அகமன அழிவுநிலை. இந்த அருவ அகமன அழிவை ஞானவெளி என விளங்கும் நீ எளியேனுக்கு அளித்தருள்.

**9.** எனது இதய தாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரம வெளியில் ஒளிரும் பெருமானே! மனச் சுழற்சியானது எவ்வாறு அடங்கும் என அடிக்கடி இவ்வுலகில் கேட்டு நிற்போர் உணர்ந்து உய்திபெறுமாறு ‘துன்பத்தைத் தரக்கூடிய பிறப்பு – இறப்பு நிலையாகிய தொடர்ச்சி எனப்படும் மரத்துக்கு ஒரு பெரிய வேர் என உள்ள மனமானது முனைந்து நிற்கத் தலைப்படும் போது, அந்த மனம் எழாதவகையில் தடுத்து நிறுத்துக’ என யசுர்வேத முக்திகோபநிடதம் கூறும் ஒழுங்கு முறையையும் நான் உணர்ந்துள்ளேன். உனது அருளாகிய கனியின் சுவையைத் துய்த்து உய்திபெற அருள்புரிவாய்.

**10.** திருப்புகழ் பாடிய எம்மானாகிய அருணகிரிப்பெருமான், வணங்குவோரின் வஞ்சனை பொய் முதலான குற்றங்கள் எல்லாம் அற்றுப்போகத் துதித்து மகிழ்ந்த குகேசனே! எனது இதய தாமரைக்குள் விளங்கும் சின்மயமான பரமவெளியில் ஒளிரும் பெருமானே! ஒளிபொருந்திய பல்லை வேறொரு பல்லால் கடித்து நுண்ணிய பொடியாக்குதல், ஓர் உறுப்பை மற்ற உறுப்பால் கிள்ளிக் கொண்டு துன்பம் அனுபவித்தல் – ஆகிய இச் செயல்களைப் போன்று முற்கூறப்பட்ட மனத்தை மனத்தால் தடுத்து நிறுத்தும் தெளிவான ஞானநிலை வாய்த்துள்ளார் பெறும் அருள்நலம் எளியேனையும் பொருந்தி இருக்குமாறு ஓர் அருள்புரிக!

# 73. பொன்னவை

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்*

**பொ**ன்னவை யானரு ளாலே புறஞ்செலு நெஞ்சமு ளேகி
மன்னிடப் பூரக மாக்கி மறித்துவி டுத்திடு காறுந்
தன்னிடம் வைப்பது தானே தனியகக் கும்பக மாமீ
துன்னரு மோனமெய் யோகி லுறுகணி லாச்சிவ யோகே. (1)

**கு**ம்பக மானதை நீக்கிக் குணமொடு விட்டவன் மீட்டும்
அம்பக மோவுற வாங்கு மளவுமி ருந்தசு பாவம்
அம்புறக் கும்பக மாகு மண்ணிதி லாதவர்க் கோங்குட்
கும்பக மானது மாற்றக் கூடுவ தன்றடி யானே. (2)

**பா**ண்டிலி லாடிடு கூத்தன் பண்பென வெத்தொழிற் போதும்
ஆண்டவன் ஞாபகந் தானே யப்புறக் கும்பக மாகும்
ஈண்டிதை மேயவர் யாரு மிருவினை யொப்புள ராகி
மாண்டுதி யாநிலை கூடி மாணுடை மாக்கதி சேர்வார். (3)

**இ**யலுமுட் கும்பக மாமே லிருதயக் கண்ணிருந் தேநன்
குயர்பிர மத்தொளை காறு மோடுவ தாயுயிர்க் காலை
இயக்குவ தாயிரு நாடிக் கிடைதனி லுள்ளவொர் தீயும்
அயர்வற வுள்ளமை வாகு மங்ஙனம் வாயுவு மோயும். (4)

**வா**யுவ யப்படு மாயின் வளருயிர்க் குட்டிண மோங்குங்
காயத னாலுண வாதி கரிசறு சீரண மாகும்
மேயவ தால்ரச மூறு மீண்டத னானல தாது
ஆயது விர்த்திய தாகு மங்ஙன முள்ளறி வேறும். (5)

**அ**ப்பொழு தேணரு ளாலே யளப்பறு சென்மவெம் பாவம்
துப்புற வேமடி வாகுஞ் சொற்றிடு கும்பகத் தேநல்
ஒப்புட னின்றிடு போதங் கொடுங்கிய நெஞ்சது தானே
துப்பரு வாயரு ணோக்காய்ச் சுலவலி லாவியல் பாமால். (6)

**சு**லவலி னெஞ்சில தாமேற் றுயிலுறு கேவல மாகுஞ்
சுலவிடு நெஞ்சுள தாமேற் றுனிநன வாமது தானே
கலையுரு வன்மன மாகுங் கழறுமி ரண்டுமி லாது
நிலவிடல் சுத்தச மாதி நிட்டைவி ரும்பிடு வோனே. (7)

**எ**ண்ணமி றந்திட வேண்டு மென்பதிவ் வாறென வோரா
துண்ணினை வற்றகல் லேய்ப்ப வொன்றுமி லாநிலை யென்னின்
எண்ணமி னித்திரை மூர்ச்சை யென்பன வுஞ்சிவ யோகாய்
அண்ணிட வேண்டுமிஃ தேபா டாணம தம்விடு வாயே. (8)

---

*3. பாண்டில் = மூங்கில்; சே – திவாகரம். இருவினையொப்பு விசாரம் மாணப் பெரிதாயிருத்தலைச் சிவசூரியப்பிரகாசத்தே காண்க.*

*4. உயிர்க்கால் = பிராணவாயு.*

*6. துப்பு = தூய்மை.*

*8. பாடாணம் = கல்.*

**நி**னைவற வோர்நினை வாகி நிற்கும தைச்சிவ ணாது
தனதறி வேதுமில் பாழ்த்த சயனமு ளான்வெளி நோக்காய்
அனககு கேசனைப் போற்று வானினு மிக்கெனத் தாழ்ந்தோன்
எனவறி வாயிறை யோக மேற்கவி ரும்பிடு வோனே. (9)

**உ**ருமன மோய்ந்திடு தாறு முளநடு வேயிறை யோனை
உருவம தாநனி நாடி யுட்செபி தாரக மேலே
அருமன மோங்குறு மேலஃ தருவென நாடுதி யான்ற
அருணையம் பேருடை யானி னடிகளி னல்லடி யானே. (10)

# 73. பொன்னவை

**1.** வெளிமுகப்பட்டுச் செல்லும் மனத்தைப் பொற்சபைக் கடவுளின் அருளால் உள்புறமாக இழுத்துப் பூரகமாக்கி, அம்மனத்தை மீண்டும் வெளிமுகப்பட்டுச் செல்லுமாறு விடுக்கும் வரையிலும் தனக்குள்ளேயே மனம் அடங்கி லயித்து இருக்குமாறு செய்வதே தனித்த நிலையுடைய அகக்கும்பகம் ஆகும். இது நினைப்பதற்கரிய, உண்மையான மௌன யோக நெறிகளுள், துன்பமேதும் இல்லாத சிவயோக நெறியாம்.

**2.** குகன்திருவடியை தியானித்திருக்கும் அன்பனே! உள்ளே கும்பகப்பட்டு இருந்த மனத்தை, அக்கும்பக நிலையிலிருந்து நீக்கி, முறைப்படி வெளியே விடுத்து, வெளிவிடும் நிலை ஓய்வடையுமாறு மீண்டும் மனத்தை உள்ளே இழுக்கும் வரையிலும் நிலவும் நிலை, அழகிய புறக்கும்பகம் ஆகும். பொருந்தக்கூடிய இந்தப் புறக்கும்பக நிலை இல்லாதவர்க்கு அகக்கும்பக நிலையானது மாற்றி அமைக்கக் கூடியதன்று.

**3.** மூங்கிற் கழியில் ஆடுகின்ற கூத்தன் தனது செயலில் ஒருமுகப்பட்டு நிற்கும் செயல்போன்று, எந்தத் தொழிலைச் செய்யும் போதும் இறைவனைப்பற்றிய நினைவு நீங்காது இருத்தலே அந்தப் புறக் கும்பகமாகும். இங்கே இந்தப் புறக்கும்பக நிலையைப் பொருந்தியவர் யாவரேயாயினும் அவர்கள், இருவினை ஒப்பு வாய்க்கப் பெற்றவர்களாகி, இறவாமலும்பிறவாமலும் இருக்கும் நிலையைப் பொருந்தி, மாட்சிமை உடைய பெரிய முத்திப்பேற்று நிலையை அடைவார்கள்.

**4.** இயல்பாக நிகழும் அகக்கும்பக நிலை பொருந்தும் போது, இருதயத்திலிருந்து பிரம்மரந்திரம் எனும் உச்சித்தொளை வரையிலும் உயர்ந்து செல்வதாகவும், பிராணவாயுவை

---

*9. இத் திருப்பாட்டின் பொருள் –*

*‘எனக்கு நற்றமி ழீந்த சேயருள்*
*நினைக்கு நெஞ்சுடை யோய்தள் ளாடிடின்*
*தனக்கி லாபமெய் தாது தாழ்வெளி*
*மனக்கு மீனம தாமம் மானசம்.’*

*எனத் திருவலங்கற்றிரட்டின் 2–ஆங் கண்டத்தே வருசெய்யுளானும் வலியுறுகின்றதென்க.*

இயக்குவதாகவும், இடை, பிங்கலை ஆகிய இரண்டு நாடிகளுக்கு இடையே உள்ள ஒரு தீப்பிழம்பு, அயர்ச்சி இன்றி, உள்ளே திடப்பட்டு நிற்கும். அப்பொழுது பிராணனும் சலனமற்று ஓய்ந்துநிற்கும்.

5. வாயு வசப்பட்டு நிற்குமாயின், வளரும் சீவனுக்கு வெப்பம் அதிகரிக்கும், அதன் பயனாக, உட்கொள்ளும் உணவு முதலானவை முழுமையாகச் சீரணமாகும்; சீரணத்தால் அன்னரசம் திரளும்; அன்னரசத்தால் நல்ல தாது விருத்தி உண்டாகும். தாது விருத்தியால் ஆன்ம ஞானமும் ஒளியும் மிகும்.

6. அப்பொழுது, இறைவனின் காப்பாக உள்ள திருவருளால், அளவற்ற பிறவிகளில் செய்த கொடிய பாவங்களின் பயனானது தன் செயலற்று விடும்படி அழிந்துவிடும். கூறப்பட்ட அகக் கும்பக நிலையில் ஆழ்ந்து லயித்து இருக்கும்போது, அங்கே ஒடுங்கிய நெஞ்சமானது தூய்மைநிலைக்குரிய அருவாகவும், அருள்நோக்கு வாய்ந்ததாகவும் ஆகி, தனது சஞ்சலத்தன்மை அடியோடு நீங்கப் பெற்றுத் தனக்குரிய இயல்பான அமைதிநிலையில் இருக்கும்.

7. நிட்டைநிலையை விரும்பி நிற்போய்! சஞ்சலமற்ற நெஞ்சு இலதாயின், மோகத் தூக்கநிலை பொருந்தியுள்ள கேவலநிலையாகும். சுழற்சியோடு கூடிய நெஞ்சு உளதாயின், ஞானியர் வெறுக்கும் நனவு நிலையாகும். அந்த நனவு நிலையே உருவநிலைக்குரிய கடின மனமாகும். கூறப்படும் கேவலம், நனவு ஆகிய இரண்டும் இல்லாமல் தன் இயல்பான நிலையில் பொருந்தி இருத்தலே சுத்தசமாதி நிலையாகும்.

8. எண்ணமானது அடியோடு நீங்கி இருக்க வேண்டும் எனக் கூறப்படுவதன் நுட்பம் இவ்வாறு என ஆய்ந்துணராமல் உள் நினைவு ஒருசிறிதும் இல்லாத கல்லைப்போன்று, உள்ளே ஒன்றும் இல்லாதிருக்கும் நிலை எனில், நினைவு என்பது அற்றுள்ள தூக்கநிலை, மூர்ச்சைநிலை ஆகியவைகளும் உயர்ந்த சிவயோக நிலைகளாகப் பொருந்தி விடுமே! மேலும், இவ்வாறு கூறுவது பாடாண வாதத்தின் பாற்படும். இதனை விட்டுவிடு.

9. நினைவு நீங்கிநிற்கும் வண்ணம் ஒரு நினைவு மயமாகி நிற்கும் உயர்ந்த நிலையைப் பொருந்தாமல், தனது அறிவின் செயற்பாடு ஒருசிறிதும் இல்லாத பாழ்த்த உறக்கத்தில் உள்ளவன், பகிர்முகப்பட்டு, வினைப்பற்று இயல்பாகவே நீங்கியுள்ள தூய்மை உடைய குகப்பெருமானை வழிபடுவோன் மேம்பட்டவனே எனக் கூறிடுமாறு, தாழ்ந்தநிலையில் உள்ளவனாவன். சிவயோக நெறியை ஏற்று மேம்பட விருப்பம் கொள்வோய்! இவ்வாறு உள்முகப்பட்ட யோக நுட்பத்தை அறிந்துகொள்.

10. சிவநலம் சான்ற அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்த கடவுளின், இனிய அடியானாக விளங்குவோய்! உருமனம் ஓய்ந்து அடங்கும் நிலை வாய்க்கும் வரையிலும் இதயத்தின் நடுவே இறைவனை ஒரு வடிவத்திலே நன்கு தியானித்து, பிரணவ ஜபத்தை உள்ளுக்குள்ளே செய்து கொண்டிரு. இந்தப் பயிற்சியால் அருவமனநிலை சித்திக்குமாயின், இறைவனும் அருவநிலையிலேயேஉணரப் படுவான் என அறிந்து கொள்.

# 74. சீர்சான்ற பஞ்சருத்திரம்

அந்தாதி.

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சீ**ர்சான்ற பஞ்சருத்தி ரமைத ரேயஞ்
சிறப்புடைமாண் டூக்கியமே மைத்ரா யண்ணி
ஏர்சான்ற சாந்தோக்யந் தைத்தி ரீய
மீசாவா சியமுண்ட கஞ்சா பாலம்
நேர்சான்ற பிருகதா ரணியங் கேன
நிகழ்பிருகச் சாபாலம் பிரச்சி னந்தே
நார்சான்ற கடமாதி சுருதி யெல்லா
நவிலுண்மை யேயெனக்கு நல்கெந் தாயே. (1)

**தா**யருளைப் பேணிநிற்கு மெளியேற் குன்றன்
றண்ணளியொன் றில்லாமற் போமே யாயின்
தீயவருட் டீயவனை யார்தா நேடிச்
சிந்தைகலுழ்ந் துலையாதிங் காத ரிப்பார்
நேயமுளார்க் கெளிவருநல் லன்பே யின்பே
நினைக்குநரைக் கடைக்கணித்து நிறுவுந் தேவே
பேயனைய பேதைமைகொண் டலையா தன்பாற்
பிடித்துவளைத் தடக்குதியென் பிரியா நட்பே. (2)

**ந**ட்புநய முறுதொல்காப் பியனார் மாண்பு
நற்றத்தர் துராலிங்கர் செம்பூட் சேயர்
தெட்புற்ற பனம்பார ரதங்கோட் டத்தர்
சிறந்தகழா ரம்பரவி நயத்தர் வாய்ப்பர்
பெட்புற்ற காக்கைபா டினியார் வையா
பிகர்வாம னத்தரெனுஞ் சீட ரேத்தும்
ஒட்பவத்த னெனுங்கும்ப னிறையே யென்றன்
உறுகணொழித் துள்ளொடுக்கி யளாவிக் கொள்ளே. (3)

1. *பஞ்சருத்திரம் = கைவல்யம், சுவேதாச்வதரம், காலாக்நிருத்ரம், அதர்வசிரம், அதர்வசிகா வென்னும் பஞ்சருத்ரோபநிஷதம் ; குருமணியென்னும் 34–ஆம் பத்தின் 7–காண்க.*

2. *பேயனைய = பேய்த்தன்மை போன்ற.*

3. *ஆத்திக சிரேட்ட சிரோமணிக ளனைவரும் போற்றத்தக்க அகத்தியனா ரென்னுங் கும்பமுனிவருடைய சீடரென இங்குக் கூறப்பட்ட பன்னிரு வருள்ளே தொல்காப்பியனாருடை யிலக்கண நூலாய தொல்காப்பியம், கடவுள் வணக்கமின்றி*
*"எழுத்தெனப்படுப, அகரமுத னகரவிறுவாய் முப்பஃ தென்ப*
*சார்ந்து வரன்மரபின் மூன்றலங் கடையே." என்னுஞ் சூத்திரத்தாற் றொடங்கப்பட்டமை வியப்பினும் வியப்பாமாகலின் அந்நூலுடை யார் மதம் யாதோ ?*

**கொ**ள்ளுதியென் றேசெய்யென் மனுவைக் கேட்டுக்
கொண்டருளா திருத்தலைநா னூகிக் குங்கா
லுள்ளபடி திரிகரண மொத்துச் செய்யா
வுலோபமோ வெனவையப் படுகின் றேனம்
மள்ளமின்மை யிருந்தாற்றா னென்செய் கேனுன்
மாண்டுணையே யாதிற்குந் தஞ்சந் தஞ்சம்
பொள்ளௌனநின் பேரருளிற் புணர்த்திக் கோடி
பொருவில்லாப் பரசுப்பிர மணிய தேவே. (4)

**தே**வதைகட் கெல்லாமோர் தேவே நீத்தார்
தேட்டமுதே வீட்டமுதே தேனே பாலே
பாவனவொண் சர்க்கரையே பாகே கண்டே
பரமசுவைக் கனியேமுக் கனியே யன்பர்
நாவிலிருந் தினிக்குமதி மதுர வட்டே
நலிவற்ற வுன்னுணர்வா லுணர்வாக் காணிச்
சீவனுக்குஞ் சுதந்திரமாய்ச் சித்தென் னுங்கீர்
சேர்வதுண்டோ வுரைத்தியருட் செல்வக் குன்றே. (5)

**கு**ன்றாத பரங்கிரியி னின்னைத் தானே
குரங்கிநின்ற வறுமுனைவர்க் காசா னாய்நீ
நன்றாய கரமலராற் காட்டி யாண்ட
நலனிற்றென் றோர்ந்தாரு ஞாலச் சூரில்
நின்றாடு வார்கொல்லோ வடியேற் கந்த
நினைவேறா தளித்தருளெ னகம்பு றத்தும்
ஒன்றாக நின்றென்னிற் கலந்து முள்ள
வொண்பொருளே யுயிர்த்துணையே யுறுதிப் பேறே. (6)

**பே**றுடையார் பரவுமருட் பிழம்பே யெங்கள்
பேரரசே யாரமுதப் பெருக்கே பேயேன்
ஊறுபல புரிந்தானுங் கழிக்கு நீதி
யுண்டோமுன் னெத்தனையோ கான்மா பாவங்
காறமிக் கயர்ந்தார்க்குங் கருணை கூர்ந்து
கரிசகைத்து மதர்வீந்தா யெனத்தொன் னூல்கள்
கூறுதலின் றோவிந்த யாண்டு மாக்கள்
குறைதீர்த்த தில்லைகொலோ கூறெந் தாயே. (7)

---

*4. மனுதருமத்தி னின்று செய்யப்படு விண்ணப்பம் "மனு." மனு = மந்திரமாகலின் அது போன் மதிக்கத்தக்க சன்னிதிவிண்ணப்ப மெனினுமாம். பொள்ளெனல் = விரைவுக் குறிப்பு.*

*5. தலைவனது சிறப்புநோக்கிச் சிற்றறிவான சீவசுதந்திரத்தையும் இழித்துரைப்பார் "சீவனுக்குஞ் சுதந்திரமாய்ச் சித்தென்னுங்கீர் சேர்வதுண்டோ" என்றாரென்க. கீர் = சொல்.*

*7. யாண்டு = காலம்; சே – திவாகரம்.*

**ஏ**ந்தவிதம் பார்த்தானுந் தீர்வை யொன்றே
யெழுகின்ற ததுதானீ யில்லா தென்போற்
சிந்தையுடைச் சீவர்களு மில்லை யந்தச்
சீவர்கடா மில்லாமற் றலைவ னென்னுஞ்
சொந்தமுறு நீயுமில்லை யிந்தத் தீர்விற்
றுகளற்ற வுனையறியா மடமை யொன்றே
பந்தமெனும் பீழையதாய்ப் பெருகிற் றந்தோ
பாழ்த்தமடம் பாறவுநீ பார்ப்ப தென்றோ. (8)

**ஏ**ன்றுமொற்க வென்னிலத்து விதமா நின்றே
யெனைநடத்துங் குகதேவே யேத மில்லா
நின்றகைக்குப் பொருந்துவண நானல் வாழ்க்கை
நீப்பின்றி யுறல்வேண்டு மின்றேற் காலன்
தன்றிணிய புயத்தூத ரென்பா லெய்தித்
தாவுடையோய் நீயெம்மா ளென்னுஞ் செவ்வி
அன்றிவனெம் மாளெனவே தடுத்தா ளன்புக்
கணுத்துணையு மொற்கமின்றிக் கருதிக் காவே. (9)

**கா**ப்பையெனு முறுதியென்றன் கருத்தை நீங்காக்
கட்டாகு நீயுமந்த வாறே செய்வை
மாப்புரிவின் றொருகானீ கைவிட் டானும்
வழுத்தெங்கள் பாக்கியமே நின்மேற் றோடம்
யாப்புடையேன் சொலத்துணியே னிதுதா னேயென்
யாணர்நிலைத் தீர்வாகுந் தகரக் கூட்ட
யாப்பொன்று தெரித்தானி னிதயக் கண்ணே
யாமினியெல் லற்றிருந்த செல்வச் சீரே. (10)

# 74. சீர்சான்ற பஞ்சருத்திரம்

**1.** எந்தையே! சீர்மை நிறைந்த பஞ்சருத்திரோபநிடதங்கள் ஆகிய கைவல்யம், சுவேதாசுவதரம், காலாக்னிருத்ரம், அதர்வசிரம், அதர்வசிகை என்பவையும் மற்றும் சிறப்பு வாய்ந்துள்ள ஐதரேயம், மாண்டுக்கியம், மைத்திராயணீ, சாந்தோக்கியம், தைத்திரீயம், ஈசாவாசியம், முண்டகம், ஜாபாலம், பிருகதாரணியகம், கேனம், பிருகஜ்ஜாபாலம், பிரசினம், கடம் முதலான உபநிடதங்களும் வெளிப்படுத்திக் கூறும் சத்தியமான பரம்பொருளே! எனக்கு நின் திருவருள் வழங்கிடுக. (வெளிப்படுத்திக்கூறும் சத்திய ஆனந்த நிலையை எனக்கு வழங்குக)

*9. ஒற்கம் = வறுமை. ஒற்கமிரண்டனுள், முன்னையது அறிவின்சிறுமைப் பொருட்டு ; பின்னையது குறைதற்பொருட்டு.*

**2.** நினது தாயொத்த திருவருட்பேற்றை விரும்பிநிற்கும் எளியேனுக்கு உனது தண்ணிய திருவருள் கிடைக்காமற் போமாயின், கொடியவர்களுள் மிகக் கொடியவனாக விளங்கும் என்னை யார்தான் விரும்பி ஏற்று, நான் சிந்தைகலங்கி வருந்தாமல் இருக்கும் வகையில் ஆதரித்து நிற்பார் ? ஒருமுகப்பட்ட அன்புடையார்க்கு எளிமைப்பட்டு, வேண்டியது அருளி ஆதரிக்கும் தூய அன்பே! இன்பமே! அன்பால் தியானிப்போர்க்குக் கடைக்கண்ணால் அருள்பாலித்துத் தன்னிகரற்ற நிலையில் நிறுத்தும் தேவ! எப்பொழுதும் என்னைவிட்டு அகலாதுள்ள நட்புநிலையே! பேயொத்த பேதைமைக்குணம் கொண்டு நான் இவ்வுலகில் அலையாத வண்ணம் நினது அன்பால் தடுத்துச் சூழ்ந்து, என் பேய்க் குணத்தை அடக்கி அருள்!

**3.** நட்புநயம் மிகுந்த தொல்காப்பியனார், மாண்புடைய தத்தர், துராலிங்கர், செம்பூட்சேஎய், தெளிவுவாய்ந்த பனம்பாரனார், அதங்கோட்டாசான், கழாரம்பர், அவிநயர், வாய்ப்பியர், காக்கைபாடினியார், வையாபிகர், வாமனர் எனப்படும் பன்னிரண்டு சீடர்களும் போற்றித்துதித்த, அருள்ஒளிமிக்க ஆசான் எனும் கும்பமுனியாகிய அகத்திய முனிவர்க்கு வாய்த்த மூல இறைவ! எனது துன்பங்களையெல்லாம் ஒழித்து, உள்ளத்தை இதயப்புள்ளியில் ஒடுக்கி என்னுடன் இரண்டறக் கலந்து அருள்.

**4.** ஈடுஇணையற்ற பர சுப்பிரமணியப் பெருமானே! 'ஆட்கொண்டு அருள்' என்று நான் இடைவிடாமல் செய்துகொண்டிருக்கும் விண்ணப்பத்தைக் கேட்டு ஏற்றுக்கொண்டு நீ இதுகாறும் அருளாமல் இருப்பதை யோசித்துப் பார்க்கும் போது, உண்மை நிலைபொருந்த மனமும் வாக்கும் உடலும் தூய்மையுடன் ஒன்றுபட்டு விளங்கச் செய்யாத உலோப குணத்தின் விளைவோ என ஐயப்படுகிறேன். அத்தகைய கொடிய மலினத்தன்மை என்னிடம் இருக்குமாயின் நான் என்செய்வேன் ? உனது மாட்சிமைமிக்க திருவருளாகிய துணையே அனைத்திற்கும் உள்ள ஒரே புகலிடம். (மாண்புடை உனது திருவடிகளே அனைத்திற்கும் தஞ்சம்). விரைவில் நினது பேரருள்நிலையில் என்னை ஐக்கியப்படுத்திக்கொள்க.

**5.** அருட்செல்வமாகிய மலையே! தெய்வங்களெல்லாம் தொழத்தகு மூல தெய்வமாய் விளங்கும் ஒரு தேவ! துறவியர்க்கு வாய்த்துள்ள அருட்செல்வப் பேறாகிய அமுதே! முத்தி நிலையின் அமுதமயமாகத் திகழ்பவனே! தேனே! பாலே! தூய்மையைக் கொடுக்கும் ஒள்ளிய சர்க்கரையே! தேம் பாகே! கற்கண்டே! பரமசுவை திரண்டுள்ள கனியே! அருட்கனி, பொருட்கனி, முக்திக்கனி ஆகிய மூன்று கனிகளாக விளங்குபவனே! அன்பர்களின் நாவில் கரைந்துவிடாமல் நிலையாக இருந்து இனிக்கின்ற இன்சுவை பொருந்திய தேன்பண்டமே! அழியாத உனது அறிவு தூண்ட, அறிவு கொண்டு காணும் இந்தச் சீவனுக்கு, இயல்பாகவே, அதாவது தன் ஆற்றலாலேயே சுதந்திரத்தன்மை வாய்ந்ததான 'சித்து' என்னும் சொல் பொருத்தமுற வாய்ப்பதுண்டோ ? கூறியருள்.

**6.** குன்றாத வளம் பொருந்திய திருப்பரங்கிரியில் உன்னையே குருவாகக் கருதி வணங்கிநின்ற பராசரன் புத்திரர்களாகிய அறுவர்க்கும் நீ குருவடிவில் (தக்ஷிணா மூர்த்தியாக) எழுந்தருளி, நன்மை அளிக்க வல்லதாகிய உனது கைம் மலரால் சின்முத்திரை காட்டி ஆட்கொண்ட அருட்செயலின் உட்பொருளை இன்னதென உணர்ந்துள்ளோரும்

உலகமயக்கமாகிய மருட்சிநிலையில் நின்று தடுமாறுவார்களோ! அடியேனுக்கு அந்த உலகவிடயங்களாகிய நினைவு ஓங்குறாத வகையில் நினது திருவருளை அளிப்பாய்! அகத்தேயும் புறத்தேயும் நீக்கமற ஒரே சின்மயமாய் வியாபித்தும் என்னுள் கலந்தும் உள்ள ஒள்ளிய பொருளே! உயிர்த்துணையே! உறுதிவாய்ந்த சிவப்பேறே!

7. ஞானப்பேறு வாய்த்துள்ளோர் தொழுது வணங்கும் அருட்பிழம்பே! அடியார்களாகிய எங்களின் பேரரசே! சுவைநிறைந்த அமுதப் பெருக்கே! பேய்த்தன்மை உடைய அடியேன் தீங்குகள் பல செய்தாலும், அந்தத் தீமைகளின் பயனைப் போக்கியருள்வதற்கு நியாயமான வழிதானும் உண்டோ ? முன்னர் எத்தனையோ மாபாதகங்களாகிய பாவச்செயல்களை அளவறச் செய்தவர்களுக்கு, நீ கருணை கூர்ந்து அப்பாதகச் செயல்களின் தீய விளைவைப் போக்கி, வளமையான அருட்பேறு வழங்கியுள்ளாய் எனப் பழைய புராணநூல்கள் கூறுவதில்லையோ ? அது ஒருபுறம் இருக்க, இந்தக் காலத்திலும், அடியார்களின் குறைகளை நீ தீர்த்து அருளியது இல்லையா! எந்தையே, கூறி அருள்.

8. எப்படி நோக்கினாலும், எவ்வாறு ஆய்ந்தாலும் ஒரே ஒரு முடிவுதான் தோன்றுகிறது. ''அதுதான் நீ இன்றி என்போன்ற சிந்தனையுடைய உயிர்களும் இல்லை; அந்தச் சிந்திக்கும் ஆன்மாக்கள் இன்றி, அவர்களுக்குத் தலைவன் என உரிமைபெற்றுள்ள நீயும் இல்லை" என்பதாகும். இந்த முடிவுநிலையில், அழுக்கற்று இருக்கும் உன்னை உணராமல் இருக்கின்ற மடமைக்குணம் மட்டும்தான், ஆன்மாவைப் பந்திக்கும் துன்பமாகப் பெருக்கம் அடைந்துள்ளது. அந்தோ! பாழ்படுத்தும் இந்த மடமைக்குணம் முழுவதுமாக நீங்கிவிட நீ உனது அருட்கண்ணால் என்னை நோக்குவது என்றைக்கு ?

9. சிற்றறிவுடைய எனது உள்ளத்துள் எப்பொழுதும் அத்துவிதமாக விளங்கி என்னை இயக்கிக் கொண்டிருக்கும் குகதேவனே! குற்றம் ஏதும் இல்லாத நினது தகவுசால் பெருமைக்குப் பொருந்தும் வகையில் நான் இறைமயமான அருள்வாழ்க்கையை இடையீடின்றி அடைந்திருக்க வேண்டும். அங்ஙனம் இல்லையாயின் காலதேவனின் திண்ணிய தோள்கள் பெற்றுள்ள தூதுவர்கள் என்னிடம் வந்து "எப்பொழுதும் துன்பத்தில் இருப்போனே! நீ எமக்கு உரியவன். எம்மிடம் வந்துவிடு" என்று கூறிடும் சமயத்தில் ''அன்றன்று; இவன் நம்முடைய சீவன்,'' என்று கூறி நீ தடுத்து நிறுத்தி உனது அன்புத்திறத்துக்கு அணுவளவேனும் குறைவில்லாமல் என்னை உனது கருத்துள் இருத்திக் காக்க வேண்டும்.

10. நீ இவ்வாறு காப்பாய் எனும் உறுதிப்பாடு எனது கருத்தைவிட்டு அகலாதிருக்கும் தீர்வையான முடிபாகும். திண்ணமாக, நீயும் அவ்வாறுதான் செய்வாய். பெருமைக்குரிய உனது அன்பின்றி ஒரு வேளை நீ கைவிட்டு விட்டாலும், அதுவும் உன்னைப் போற்றும் எங்களது பாக்கியப் பேறேயாகும். அப்பொழுதும், உறுதிப்பாடான நிலைத்த அன்பு கொண்டுள்ள நான் உன்மீது பழியோ குற்றமோ சொல்ல மனம்துணியமாட்டேன். இதுதான் எனது என்றும் மாறாதுள்ள நிலையான மனோபாவம் ஆகும். தகராலய நடுவண் அத்துவிதக் கலப்புற்றுள்ள நிலையை உணர்த்தும் திருப்புகழைப் பாடிய அருணகிரிப் பெருமானின் இதயத்துள்ளே, இரவும் பகலும் அற்ற தனிநிலைப் பெருநிலையில் வெளிப்பட்டிருந்த ஆனந்தப் பேறாகிய அருட்செல்வத்தின் சீர்மைநிலையே!

# 75. நிலத்திற் பன்மதசாத்திரம்

*கலிவிருத்தம்.*

**நி**லத்திற் பன்மத சாத்திர நீதிபோல்
வலத்துந் தத்தம தத்துணி வாகலிற்
பலத்த முத்திய வாவுநர் பாழ்படா
நலத்த கால்கொள நற்கல்வி கற்பரால். (1)

**க**ல்வி யில்லிசித் தாந்தமெய் கண்டருட்
செல்வங் கோடற்கொண் ணாதறி தீர்த்தன்பால்
நல்வி வேகர்கற் றாய்ந்திருண் ஞாட்பினை
வெல்வ ரெம்பெரு மான்றுணை மேவியே. (2)

**க**ண்ணி ருந்து மிலாரெனக் காதிரண்
டெண்ணி ருந்து மிலாரெனக் கல்வியும்
வண்ணி ரம்புநற் கேள்வியு மங்கினார்
மண்ணி லாவர் மனமிருந் தென்பயன். (3)

**க**ல்லா நெஞ்சினிற் கர்த்தனெ னீசுரன்
நில்லா னென்றருட் பிள்ளை நிகழ்த்தலின்
எல்லா ருங்கல்வி கற்றுய்ம்மி னென்றுநாஞ்
சொல்லு ஞாயந் தொகாமறை மானமே. (4)

**பி**ன்னு வார்சடை யானெனும் பேற்றுப்பாத்
தன்னி லீசனைச் சாற்றகி லார்நர
கின்ன நீர்ந்திட வேர்மறை யோதுவார்
என்ன லாலிடர் கல்விகல் லாமையே. (5)

*1. வலத்தல் = கட்டல், யாத்தல். ஈண்டு, யாத்துக் கூறற்பொருட்டு ; "வலை வலந் தன்ன" "நூலின் வலவா நுணங்கின் மாலை" என்றார் பொருநராற்றுப்படையினரும். கால் = வழி ; பி – நிகண்டு.*

*4. இத் திருப்பாட்டுறு மேற்கோள் –*
*"கல்லா நெஞ்சில்*
*நில்லா னீசன்*
*சொல்லா தாரோ*
*டல்லோ நாமே." என்னுந் திருஞானசம்பந்தசுவாமிகளது திருவாக்கு.*

*5. இத் திருப்பாட்டுறு மேற்கோள் –*
*"பின்னுவார் சடையான் றன்னைப் பிதற்றிலாப் பேதை மார்கள்*
*துன்னுவார் நரகந் தன்னு டொல்வினை தீர வேண்டில்*
*மன்னுவான் மறைக ளோதி மனத்தினுள் விளக்கொன் றேற்றி*
*உன்னுவா ருள்ளத் துள்ளா ரொற்றியூ ருடைய கோவே."*
*என்னுந் திருநாவுக்கரசுகளது திருவாக்கு.*
*சாற்றகிலார் = பேசமாட்டாதார் ; கில் – ஆற்றற்பொருளுணர்த்தும் இடைநிலை; அ – சாரியை.*
*'கல்விகல்லாமை யிடரே' எனவியைக்க.*

**அ**ற்ப வித்தையும் புத்தியு மாயுளார்
பொற்பு றாப்பிற நூற்சவை புக்குறிற்
சற்ப ரானந்த மெய்திடத் தாங்கொண்ட
ஒற்க மற்றசித் தாந்தமு மோவுமால். (6)

**ஆ**த லாலிவ ரன்னிய நூலுரைப்
போத கம்விரும் பாதரும் பொற்பிர
சாத மாக்கொண்ட தந்நெறி நூலுரைப்
போத கங்களை யேகொளப் போந்தவர். (7)

**த**ரையி லாரமும் பொன்னுமொர் சாயலாத்
தெரித லென்னநுண் ணூல்களுஞ் செப்பினால்
விரியும் பந்தமும் வீடுமென் றுள்ளவென்
றரிய போத ரறிந்துண்மை பற்றுவார். (8)

**உ**ண்மைச் சாத்திர மொவ்வொன்று மந்தந்த
உண்மைத் தீர்த்த ருரைத்தசெப் பாகலின்
உண்மை காண வவற்றைநன் கோதிலவ்
வுண்மைத் தீர்த்தர்மன் றுற்றது போலுமால். (9)

**க**ற்ற தாற்பய னென்பரன் காறொழாப்
பற்ற ரென்றொரு வன்சொன பண்டுரை
அற்ற மன்றது போற்கலை யாளரும்
பற்று வார்புக ழத்தன் பரத்தையே. (10)

# 75. நிலத்திற் பன்மதசாத்திரம்

**1.** இந்நிலவுலகில் பல்வேறு மதங்களுக்குரிய நூல்களும், முறைப்படி உணரப்பட்ட தத்துவம் போல் கோர்வையாக இயற்றிக் கூறும் தம்தம் மதத்தின் தெளிவான முடிபை உணர்த்துவன ஆகலின், பெரும் பேற்றுக்குரியதாகிய முத்திநிலையை விரும்புவோர், என்றைக்கும் பாழ்படாது உறுதியாக உள்ள நல்வழியை ஏற்றுக் கடைப்பிடிக்க நற்கல்வியைக் கற்பார்கள்.

**2.** கல்வி அறிவு இல்லாதவன் சைவசித்தாந்த உண்மையை உணர்ந்து திருவருட் செல்வத்தை அடைய இயலாது. சித்தாந்த உண்மையை நன்கு அறிந்துள்ள ஆசானிடம் நல்ல விவேக ஞானம் உடையோர் எம்பெருமானின் திருவருள் துணை பொருந்தப்பெற்று,

*8. பித்தளையின் பெயராகிய ஆரகூடம் "ஆரம்" எனக் கடைக்குறையாய் நின்றது.*

நூற்பொருள்களை முறைப்படிக் கற்றுணர்ந்து மூலஇருளாகிய மறைப்பினை வென்று விடுவார்கள்.

**3.** கண்கள் இருந்தும் இல்லாதவர் போலவும், காதுகள் இரண்டு எனும் எண்ணிக்கையில் இருந்தும் இல்லாதவர் போலவும் கல்விச் செல்வமும், அறிவுக் கூர்மையை மிகுவிக்கும் நல்ல கேள்விச் செல்வமும் இழந்துள்ளோர் உளர்; நிலவுலகில் அன்னோர்க்கு மனம் என ஒன்று இருந்து என்னபயன் ?

**4.** 'கல்லாதார் உள்ளத்தில் அனைத்திற்கும் அனைவர்க்கும் கருத்தா எனத் திகழும் ஈசுவரன் விளங்கமாட்டான், என ஆளுடைப்பிள்ளையார் (திருஞான சம்பந்தர்) கூறுதலின், அனைவரும் கல்விகற்று உய்தி பெறுவீர்களாக' என நாம் கூறும் நியாய போதனை, பிரமாண ஆற்றலில் குன்றாத வேதத்தோடு ஒத்த பெருமை உடையதாம்.

**5.** "பின்னுவார் சடையான்" எனத் தொடங்கும் திருவொற்றியூர்த் திருப்பதிகத்தில் திருநாவுக்கரசர் ஈசனின் புகழைக் கூறாதவர்கள் நரகத்தை அடைவர்; தமக்குற்ற துன்பங்கள் தீர விரும்புவோர் ஆற்றல் மிக்க மறைகளை ஓதும் செயலை மேற்கொள்வர் எனக் கூறுதலின், துன்பத்துள் துன்பமானது கல்வியைக் கல்லாதிருத்தலே.

**6.** சிற்றளவில் வாய்த்துள்ள கல்வியும் சிற்றளவு அறிவும் கொண்டுள்ளோர் உண்மைப் பொலிவற்ற பிறநூல்கள் ஓதப்படும் அரங்கில் புகுந்தால், என்றும் நிலைத்திருப்பதான மேலான ஆனந்தப் பேற்றை அடையத் தாம் மேற்கொண்டுள்ள சைவசித்தாந்த நெறியும் தன் பெருமையில் குன்றிவிடும்.

**7.** எனவே அன்னிய மதங்களின் நூல்களும் உரைகளும் கூறும் தத்துவ உபதேசங்களை விரும்பாமல், பெறுதற்கரிய, உண்மைப் பொலிவார்ந்த திருவருட் பேறு (பிரசாதம்) எனத் தாம் மேற்கொண்ட தமது சித்தாந்த நூல்களும் உரைகளும் புலப்படுத்தும் உண்மைத் தத்துவ விளக்கங்களையே, நன்னெறி நிற்கப் பிறந்துள்ளோர்களாகிய இவர்கள் கொள்வார்களாக.

**8.** நிலவுலகில் பித்தளையும் பொன்னும் ஒன்றுபோலவே தோற்றம் அளித்திடுதல் போன்று தத்துவ நுட்பம் உணர்த்தும் நூல்களும் போலியாகவும் உண்மையாகவும் விளங்கும்வகையில் கருத்துக்களைக் கூறினால் விரிவுபட்டுள்ள பந்தப்பிணிப்பும், பந்தத்திலிருந்து நீங்கிநிற்கும் விடுதலையும் என இருநிலைகள் உள்ளன என்று, அரிய ஞானநுட்பம் வாய்ந்துள்ளோர் முறைப்படி அறிந்து உண்மையையே ஏற்றுக்கொள்வர்.

**9.** உண்மையான பொருள் உரைக்கும் சாத்திரம் ஒவ்வொன்றும் அந்தந்தப் பொருளின் உண்மை அறிந்த ஞான ஆசிரியர்கள் கூறியுள்ள கூற்றே ஆதலால், உண்மைப்பொருளைக் காணவேண்டி அந்த நூல்களை முறைப்படிப் பயின்றால், அந்த உண்மை அறிந்த ஞான ஆசிரியர்கள் குழுமியுள்ள அவைக்குள்ளே சென்றுள்ளது போலாம்.

**10.** என் பரம்பெருளாகிய இறைவனின் திருவடிகளை வணங்காத உலகப்பற்றுமிக்கோர், தாம் கற்ற கல்வியால் காணும் பயன் என்ன ? என்று முன்னர் ஒருவன் கூறியுள்ள கருத்து (திருவள்ளுவர் கூறிய கருத்து), பொய்யன்று. அந்நெறி நின்று, கல்வியின் பயன் இன்னது என உணர்ந்து, கலைஞானம் மிகப்பெற்றுள்ளோர், திருப்புகழ் பாடிய எம் தலைவன் அருணகிரிப் பெருமானின் பரம்பொருளாகிய குகனின் திருவடியை உறுதியாகப் பற்றிக் கொள்வர்.

# 76. புயல்வாழ் தென்மலை

வஞ்சித்துறை

**பு**யல்வாழ் தென்மலை
உயுமா சின்முனி
பயின்மா தண்டமிழ்
உயர்பா டையரோ. (1)

**அ**ருளின் முதலரன்
முருகன் முதமுடன்
மருளில் குடமுனிக்
கருள்செய் ததுதமிழ். (2)

**தி**ருவார் திரமிடம்
பெருமான் கொடையெனத்
திருமூ லரறையுந்
தெருளா யுரைதரும். (3)

**எ**ல்லா மொழியினும்
இல்லா வெழிலுள
வல்லா னருளிய
நல்லா ரியமியல். (4)

**வி**ழிபோ லிலகுதென்
மொழியா ரியநிலை
யெழுவா யெதுவெனின்
மொழிவா யிலையரோ. (5)

*3. திருமந்திரமே "திருமூலரறை" எனப்பட்டது. அதன்கண் ஆகமச்சிறப்புழை இங் குணர்த்தப்பட்ட செய்தி "மாரியுங் கோடையும்" "அவிழ்க்கின்ற" என்றற்றொடக்கத் தனவற் றுளது.*

**ம**டஞ்ஞா ளிமனுடர்
இடனூ ளையிடுநேர்
வடபா டையர்திர
மிடபா டையையெளல். (6)

**மூ**ன்றா நுவலவை
ஆன்றோர் களறிவுந்
தேன்றூக் கணிகளும்
மேன்றோ லுறுதமிழ். (7)

**பு**கழ்கொண் ணால்வர்தம்
மகிமைப் பாவெழில்
திகழ்தென் பாடையிஃ
துகம்விண் மேலெவன். (8)

**தெ**ற்றங் கிளர்தமிழ்
கற்றின் கவிசொலி
நற்றை வதவருள்
பெற்றுய் வருரியர். (9)

**பெ**ற்றான் பறையனுக்
கற்றான் வரைதமிழ்
கற்றோங் கிடுபுகழ்
சொற்றா னையெணே. (10)

---

8. *உகம் = மண்ணுலகு; "உகம்பார் தரணி யுலோகந் தாரணி" என்பது* ***பி – நிகண்டு.***

9. *தெய்வத்திருவருட் பேறுபெறற்குத் தோத்திரவடிவான இனிய கவிகளும் வேண்டற்பாலன வென்னுங்கருத்து இத்திருப்பாட்டுழைப் பெறப்படுகின்றது. என்னை? பிருதிவி சம்பந்தமான உபசாரம் நைவேத்தியமெனவும், அப்பு சம்பந்தமான உபசாரம் பானீயம் அபிடேகமெனவும், தேயுசம்பந்தமான உபசாரங் கண்ணாடி தீபமெனவும், வாயுசம்பந்தமான உபசாரம் விசிறியெனவும், ஆகாயசம்பந்தமான உபசாரந் தோத்திரமெனவுங் கொளக்கிடத்தலின். ஐம்பெரும் பூதங்களுள் ஆகாயம் முதன்மைபடைத்துள தாகலின், தேவாராதனையில் நறிய பொருளோடுங்கூடிய தோத்திரமே மேம்பட்டதென வறிக. தோத்திரம் நாதசொரூபமாகலின் அது நாதாதீத பரம்பொருளை வயப்படுத்துமொரு மாண்புடைத்தென்பதூஉம், அந்நாதந் தீபச்சுவாலைபோன்று சருவ பிராணிகளுடைய சரீர நடுவண் "ஹம்ஸம்" என விருக்கின்ற தென்பதூஉம், செவிகளை விரல்கொண்டு பொத்தினாற் றொனிக்கு நாதம் அத்தீபச் சுவாலைபோன் றெழுமென்பதூஉம் இங்ங னுணர்ந்துகொளக் கிடக்கின்றன.*

***தைவதம்*** *= தெய்வம் ; வடசொல்.*

# 76. புயல்வாழ் தென்மலை

**1.** மேகங்கள் எப்பொழுதும் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் தென்மலையாகிய பொதிகை மலையில், நிலைத்து விளங்கும் மாசற்ற அகத்திய மாமுனிவர் முருகன் அருளால் பயின்ற பெருமைக்குரிய தண் தமிழ், உண்மையிலேயே மிகவும் உயர்ந்த மொழியாகும்.

**2.** அருட்செல்வத்துக்கு ஒரு முதலாகத் திகழும் சிவபெருமானும், முருகனும் பெருமகிழ்வுடன், மருட்சியற்ற அகத்தியமா முனிவருக்கு உபதேசித்து அருளிய பெருமையுடையது தமிழ்

**3.** தெய்வப் பொலிவு நிறைந்துள்ள திராவிடமொழியான தமிழ் சிவபெருமானின் அருட்கொடையாகும் என்று, திருமூலர் அருளிய திருமந்திர நூலும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கும்.

**4.** அனைத்தும் வல்லவனான இறைவன் அருளிய நல்ல, உயர்ந்த கூறுகளை உடைய இயல்தமிழில், உலகிலுள்ள மற்றைய அனைத்து மொழிகளிலும் காணமுடியாத சொற்பொருள் அழகு உண்டு.

**5.** கண்போன்று விளங்கும் தென்மொழியாகிய உயர்ந்த தமிழின் நிலைக்குத் தோற்றுவாய்க் காலம் எது எனக் கேட்டால், உரிய விடையைக் கூற வாய்ப்பு ஏதும் இல்லை அன்றோ ?

**6.** வடமொழியை மட்டுமே கற்றுள்ளோர், தமிழ்மொழியை இகழ்ந்து கூறுதல், மடமைக்குணம் கொண்ட நாய், நல்ல மானுடரைப் பார்த்துக் குரைப்பதை நிகர்க்கும்.

**7.** இயல், இசை, நடம் என மூன்றாகக் கூறப்படுவனவற்றில் நிறைவான புலமை பெற்றுள்ளோரின் அறிவுவளத்தைப் புலப்படுத்தும் உரைகளும், இனிமை மிக்க பாடல்களும், அணி நயங்களும், மேன்மைமிக்க தோல் எனும்வனப்பும் பொருந்தப் பெற்றுள்ளது தமிழ்.

**8.** அருட்புகழ் நிரம்பக்கொண்ட சமயகுரவர் நால்வர்களின் மகிமை பொருந்திய திருமுறைப் பாடல்களின் தெய்விக அழகு திகழும் தென்மொழியாகிய தமிழ் எனும் இதற்கு மேலாக மண்ணுலகிலும் விண்ணுலகிலும் என்ன உள்ளது ?

**9.** அருட்பேற்றை உறுதியாகப் பெறுதற்கு உரிமை படைத்துள்ளோர் தெளிவாகிய நலன் சிறந்து விளங்கும் தமிழைக் கற்று, அதில் உள்ள இனிய பாடல்களை ஓதி, மங்களப் பேறுகளை அருளவல்ல தெய்வத்தின் திருவருளைப் பெற்று உய்தி அடைவார்களாக.

**10.** பெற்றான் சாம்பான் என்பானுக்காக சிவபெருமான் பாடல் எழுதிக்கொடுத்த மகாபெருமை வாய்ந்த தமிழைக் கற்று, அருளாற்றலில் விஞ்சி மேம்படும் திருப்புகழ்ப் பாடல்களைப் பாடிய அருணகிரிப் பெருமானின் தலைவனாகிய குகனைத் தியானித்து இருப்பாயாக.

# 77. புவனமீது பன்மரபினார்

சாமவேத வச்சிரசூசிகோபநிடதம்.

*பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பு**வன மீதுபன் மரபி னார்முறை புகலு நால்வரு ணங்களுள்
புகரி லாதபி ராம ணன்றனை முக்கிய மென்றுபு ராதனச்
சுவடி யாகிய மிருதி மாமறை சொல்லு மந்தவொர் முக்கியத்
தோற்கு நிற்பது சீவ னோவுடம் போதொ டுப்புறு சாதியோ
நுவணை ஞானமொய் கன்ம மோவற னோவெ னத்தெளி யுங்கடன்
நுண்ணி யோர்க்குள தென்று மோருயிர் நுழைந்த தேகமு நுழைவதாந்
துவக்கு மெண்ணில வாத றொட்டொரு சொருப சீவனம் முக்கியத்
தோற்கு நிற்பவ னல்ல னென்றுமெய் சொல்லும் வச்சிர சூசியே. (1)

**தே**க மைந்துறு பூத மேகொடு சேர்த்த தாய்ப்பிர கிருதியின்
செலவு நேரிடு மளவு மானுட தேக மியாவுமொ ரேவடி
வாக வுள்ளன வாய்வ யோதிக மழிவு நல்வினை தீவினை
ஆதி பெற்றிகள் பொதுமை யாய்முத லவர்மு தற்சதுர் வருணரின்
ஆகம் வெண்மை சிவப்பி யாமள மஞ்ச ளக்கரு ளெனும்வரை
வறவி ருத்தலி னாலு மீன்றவ ராக்கை மைந்தர் கனற்றுகால்
சோக மேதரு பிரம கத்தியை தொடர்ந்த தின்றத னாலுமெய்
தொழுபி ராமண னாவ தின்றெனச் சொல்லும் வச்சிர சூசியே. (2)

**சா**தி யொன்று ளனேக பேதக சங்க முண்மையி னாலருந்
தவமு டைக்கலைக் கொம்பன் மானினுஞ் சம்பு கன்சுர நரியினுங்
கோதில் கௌசிக னவிர்கு சத்தினுங் கோத மன்முய லின்கணுங்
கும்ப மாமுனி கும்ப வாயினுங் குசல வான்மிகி புற்றினும்
ஓதி மீக்கொள் வியாத மாமுனி யொண்ணு ளைச்சி வயிற்றினும்
உறுக ணற்ற வசிட்ட மாமுனி யூர்வ சிப்பெ ணிடத்தினுஞ்
சோதி ஞானம் விளக்க வந்தமை போன்ற னேகவர் தோன்றலால்
தோற்று சாதியு முக்கிய மன்றெனச் சொல்லும் வச்சிர சூசியே. (3)

---

1. *'ஞானமோ' என்னும் ஒகாரம் விகாரத்தாற் றொக்கது.*
*வச்சிரசூசி = வைரவூசி.*

2. *'சேர்த்ததாய்' என்புழிப் படுசொற் றொக்குநின்றது ; பிறவுமன்ன.*
*பிரமகத்தியை – ப்ரஹ்மஹத்யா என்னும் வடகிளவியின் விகாரம்; பிராமணக் கொலையெனும் பொருளுடைத்து. மெய் = உடம்பு.*

3. *'முயலின்கண்' என்றதற்கு முயலின் பிருட்டபாகத்திலென்று பொருள் கோடல் வேண்டும். என்னை ? உபநிஷத்தில் "சசப்ருஷ்டாத்கௌதம": என விருத்தலின். சசம் = முயல். கோதமன் = கௌதமன். கண் = இடம்.*

**அ**ரச ராதிய சாதி யாருளு மற்ற மற்றவொ ருண்மையை
 ஆய்ந்து ளார்களும் வித்து வான்களு மலகி றந்தவர் காண்டலின்
பரவு ஞானமு மப்பி ராமண னன்று லாவுப சுக்களைப்
 பற்று முக்கரு மங்க ளுஞ்சொன பாசர் கண்டொறு முண்டெனத்
தெரித லானவை யான டந்திடு சீவ ரவ்வழி யாற்றிடு
 செய்கை யாகிய கன்ம முங்கறை தீர்பி ராமண னன்றுபொன்
சுரரும் விம்மித மார நல்குநர் தொகையி றந்தவ ருண்மையிற்
 சுகுர்த தன்மமு முக்கிய மன்றெனச் சொல்லும் வச்சிர சூசியே. (4)

**ஆ**சி லத்துவி தச்சொ லின்பொரு ளாய்க்கு லஞ்செயன் முக்குணம்
 ஆறெ னச்சொல் விகார மூர்மிக ளற்ற தாய்நிச ஞானமின்
பேசி லாத வனந்த மென்பன வாயெ லாவுயிர் கட்குமுள்
 இருக்கு மந்தரி யாமி யாயகன் புறத்தும் விண்ணென வுள்ளதாய்த்
தேசி லங்கிட வனுப விப்பவர் தெரியு மெய்ப்பொரு ளாயுள
 தெய்வ மானதை யங்கை யாமல கங்க டுப்ப வயர்ந்தவாத்
தோசி டம்ப மகந்தை நீத்தொளிர் சுத்த சாந்த விலாசனே
 தொழுபி ராமண னென்று சத்தியஞ் சொல்லும் வச்சிர சூசியே. (5)

**இ**ன்ன கூறிய நேரி லாது பிராம ணத்துவ மெக்கணும்
 இல்லை யென்று மறத்து நூன்மறை யெவ்வ மற்ற புராணமா
நன்ன ரோதிதி காச மென்பன நவில்க ருத்து மிதேசொன
 ஞான தெய்வம தைக்க ளங்க மிலாநி சம்புல னின்பமாய்
மன்னு மத்துவி தீய மாயதி மாண்பு சால்பரப் பிரமமாய்
 மனது செய்திட வென்று மந்தவொர் வச்சிர சூசி வழுத்தலான்
உன்னு நெஞ்சுடை யாவ ருங்கதி யுற்று வாழவொர் தடையின்றென்
 றொருகு கப்பிர மத்தை யேதொழ வுவந்து வாருமெய் யன்பரே. (6)

நாகராச தருமராச சம்பாடணை.

**மெ**ய்ப்பி ராமண னியாவ னென்று வினாய நாக விராசனை
 மெய்த்த தன்ம விராச னோக்குபு மெய்ம்மை யீகை நறுந்தயை
பொய்ப்பி லாதகொல் லாமை நோன்புயர் பொறுமை சீல மெவன்கணே
 பொருந்து மோவவ னேபி ராமண னென்று நூல்கள் புகன்றிடும்

---

*5. இதன்கட் சொல்லப்படுகிற ஆறுவிகாரம், ஆறு ஊர்மிகளின் விவரம் வேதா வென்னும் **69**–ஆம் பத்தின் **3, 4,** ஆந் திருப்பாட்டுக்களா லறியலாம்.*

*7. நாகவிராசன், தன்மவிராசன் – தமிழ் நூன் முடிபு.*
*பனவன் = பிராமணன், பார்ப்பான், "பையுள் கொண்டவப் பனவன்" என்றார் திருவிளையாடற் புராணத்தாரும்.*

*8. உபதேசகாண்டம் = கந்தபுராண உபதேச காண்டம். "புனிதமான்மிய மோதுழி" என்றமையின், அக்காண்டத்துச் சிவபுண்ணிய மான்மியச் சருக்கத்துப் **15, 16, 17** –ஆஞ் செய்யுள்களென்க.*

பைப்பு விக்க ணதிர்த்த பெற்றிகள் பனவ னுக்கிலை யேலவன்
 பணிபி ராமண னலனந் நீர்மைகள் பரவு சூத்திரற் குண்மையேல்
எய்த்த சூத்திர னலனெ னாவிடை யிறுத்த தாலிவ ணெவ்வரும்
 எம்பி ரானருள் கொண்டுய் வாரென வீண்டு வாருமெய் யன்பரே. (7)

கந்தபுராண தாற்பரியம்.

**மெ**ய்ம்மை யாதியவ் வேழ்கு ணங்களு மேதை வச்சிர சூசிதான்
 விளக்கி யுள்ள பிராம ணற்கொரு விகல மின்றி நிலாவுமா
தெய்வ நோக்கிலர்க் கந்த வேழிலொர் திறனு மல்க விராததாற்
 செப்பி ரண்டு மொரேமு டிப்பென றெரிவர் நுண்டெளி வேறினார்
பொய்ம்மை போக்குப தேச காண்டமொர் புனித மான்மிய மோதுழிப்
 புகல ருஞ்சிவ னைச்ச துர்த்தர்கள் புன்மைச் சங்கர வருணர்கள்
கைம்மி குத்துள மற்று யர்ந்தவர் கருதி யாட்பட லுண்டனோர்
 கடவு ளாய்த்தொழ வுளரெ னும்பதி கருது மன்புடை யோர்களே. (8)

சிதம்பரபுராண தாற்பரிய முதலியன.

**ச**ம்பு மெய்யரு ளுண்டெ னிற்சர்வ சாதி யாகிய விருதிணைச்
 சட்ட கத்துயிர் கட்கு மந்தவொர் சம்பு ஞான முறூஉமெனச்
செம்பொ னம்பல மான்மி யந்நனி செப்பன் மான வளப்பிலாச்
 சீவர் மாகதி பெற்ற தும்பர மேசற் கன்பிலர் செல்வநாம்
உம்ப ராக மதிக்கி லோங்குறை யுறுக ணுற்றவ ராய்ப்பசு
 உரித்த ருந்திடு புலைய ரேனுமவ் வுரிமை யன்பினர் நாந்தொழுந்
தம்பி ரானென வப்பர் சொற்றது மேசில் சுந்தர ரிழிகுல
 தாச ருக்குமொர் தாச னென்றுரை தந்த தும்பழு தில்லையே. (9)

அபிப்பிராய சங்கிரகம்.

**இ**ந்தச் சான்றுக ளாலு யிர்க்கண மியாவு முத்தி யடைந்துயும்
 என்ப தாணை யிதற்கு மாற்ற மெழப்பி ராமண சாதியன்
றெந்தச் சாதியு முத்தி சேருவ தின்றெ னச்சில விப்பிரர்
 ஏற்றி யெள்ளல் செலாது சாதியி லேற்ற மோது மனோர்வெரு
வந்தை நூறிய வேனை நற்குடி வந்து ளோரையு மேன்கதி
 மருவ வில்லையெ னக்கு றைப்பது மாற்ற ரும்பவ மாமெனச்
சிந்தை கொண்டரு ணாச லத்தொரு செம்மல் கண்ட குகேசனைத்
 தேடி யோய்ந்து சுகிக்கு மின்பது சேர வாருமெய் யன்பரே. (10)

---

*9. சட்டகம் = வடிவம், மேனி. செம்பொனம்பல மான்மியம் = சிதம்பரபுராணம் ; இதன், மான்மியச் சருக்கம் 51–ஆஞ் செய்யுள், இங்குணர்த்துஞ் செய்தியுடைத்து. அப்பர் சொற்றது = சங்கநிதி என்றற்றொடக்கத்துத் திருத்தூக்கு.*

*10. வெரு வந்தை நூறிய = (பிறப்பிறப்பென்னும்) அச்சப்பெருமையை யழித்த. வெரு – வெருவு என்பதன் விகாரம் ; முதனிலைத் தொழிற் பெயர் ; அச்சமெனும் பொருண்மைத்து. வந்தை = பெருமை ; சே – திவாகரம்.*

# 77. புவனமீது பன்மரபினார்

**1.** இந்நிலவுலகில் பல மரபுகளைச் சார்ந்துள்ளோர் முறைப்படுத்திக் கூறும் நான்கு வருணங்களுள் குற்றமில்லாத பிராமணன் முக்கியத்துவம் வாய்ந்தவன் என்று பழைய சாத்திரங்களாகிய மிருதிகளும் வேதவழிப்பட்ட நூல்களும் கூறும். அந்த முக்கியத்துவம் வாய்ந்த பிராமணன் என்பானின் பிராமணத்தன்மையாகக் கருதுமாறு விளங்குவது சீவனா (உயிரா), உடம்பா, பொருந்தியுள்ள சாதியோ, பெருமைக்குரிய ஞானமோ, மொய்த்து விளங்கும் கன்மமோ, தருமச்செயலோ என ஆய்ந்து தெளிவு பெறும் கடமை நுண்ணறிவாளர்க்கு உள்ளது. ஓர் உயிர் இதுவரை எடுத்துள்ள உடம்புகளும் இனி எடுக்க உள்ள உடம்புகளும் கணக்கிற்கு அடங்காதவையாக இருத்தாலால், எப்பொழுதும் ஒரே படித்தாக இருக்கும் சீவன், அந்த முக்கியத்துவம் வாய்ந்த பிராம்மணனின் பிராமணத்துவமாக விளங்கவில்லை என வச்சிரசூசிகோபநிடதம் உண்மைக் கருத்தைக்கூறும்.

**2.** பொதுவாகத் தேகமானது பிருதிவி முதலான பஞ்ச பூதங்களைச் சேர்த்து உருவாக்கப்படுவதாக உள்ளதாலும். பிரகிருதி லயம் அடையும் காலம் வரையிலும் மானுட தேகங்கள் அனைத்தும் சாதிவேறுபாடு இன்றி ஒரே தோற்றம் வாய்ந்தனவாக இருத்தலாலும், மூப்பு, மரணம், நல்வினை, தீவினை முதலான தன்மைகள் அனைவர்க்கும் பொதுவாக வாய்த்துள்ளன ஆதலாலும், பிராம்மணன் முதலாக உள்ள நான்கு வருணத்தவர்களின் உடல்கள் முறையே வெண்மை, சிவப்பு, நீலம், கருமை என்னும் நிறங்களைக் கொண்டிருப்பவை என்பதற்கு ஒரு நியமம் இல்லாதிருத்தலாலும், பெற்றெடுத்த தந்தையின் உடலையோ, தாயின் உடலையோ, மைந்தர்கள் தீ மூட்டி எரிக்கும் செயலால், துன்பத்தைத் தரும் பிரம்மகத்தி தோஷம் அவர்களைப் பீடிக்காமல் இருத்தலாலும், உடலானது பிராம்மணத்துவம் என்பதற்கு அறிகுறியாக ஆவதில்லை என வச்சிர சூசிகை உபநிடதம் கூறும்.

**3.** ஒரே சாதியில் அனேகவகைப் பேதங்களின் சேர்க்கை இருத்தலாலும், தவ ஆற்றல் வாய்ந்த கலைக்கோட்டு முனிவர் மானிலிருந்தும், சம்புகமுனிவர் சம்பு எனப்படும் நரியிலிருந்தும், குற்றமற்ற கௌசிகமுனிவர் தருப்பைப் புல்லினின்றும். கோதம முனிவர் முயலின் பின்பாகத்திலிருந்தும், அகத்திய முனிவர் குடத்திலிருந்தும், திறமைசான்ற வான்மீகி முனிவர் புற்றிலிருந்தும், ஞான மிகுதியை உடைய வியாசமுனிவர் செம்படவப் பெண்ணின் வயிற்றிலிருந்தும், தீங்கற்ற வசிட்ட முனிவர் ஊர்வசி என்னும் பெண்ணிடத்திருந்தும், பிரகாசம் மிக்க ஞானநுட்பங்களை விளக்கப் பிறந்தருளியது போன்று மேலும் அனேகர் பிறந்திருத்தலாலும், சாதி என்பதும் பிராமணத்துவம் என்பதைப் புலப்படுத்துவதாக ஆகாது என வச்சிர சூசிகை எனும் உபநிடதம் கூறும்.

**4.** க்ஷத்திரியர் முதலான மூன்று வருணங்களைச் சார்ந்தவர்களிடையேயும் ஒவ்வொரு ஞானநுட்ப உண்மையை ஆய்ந்து உணர்த்தியவர்களும், புலவர்களும் எண்ணற்றவர்களாக

இருக்கக் காண்பதால், உயர்வாகக் கூறப்படும் ஞானம் என்பதும் பிராம்மணத்துவமாக ஆகாது. உடலெடுத்துள்ள உயிர்களைப் பந்திக்கும் பிராரத்தம் முதலான மூன்று கருமங்களும் முற்கூறப்பட்ட உயிர்கள் தோறும் உண்டு என உணரப்படுதலாலும், முக்கரும வழி இயங்கும் உயிர்கள், அவ்வழியே செய்யும் செயல்களாகிய கருமம் என்பதும், குற்றம் தீர்ந்த பிராம்மண நிலையைக் குறிப்பதாக ஆகாது. தேவர்களும் கண்டு விம்மிதம் கொள்ளும் வகையில் சுவர்ணதானம் செய்தவர்கள் எல்லா வருணங்களிலும் எண்ணில் அடங்காதோர் உள்ளதால், நற்செயலாகிய தருமம் என்பதும் முக்கிய பிராம்மண நிலையைக் குறிக்கும் அறிகுறியாக ஆவதன்று என வச்சிர சூசிகை உபநிடதம் கூறும்.

**5.** குற்றமற்ற அத்துவிதம் எனுஞ் சொல்லின் பொருளாகவும், குலம், கன்மம், முக்குணம் அறுவகைப்பட்ட விகாரங்களாகிய அலைகள் ஆகியவை நீங்கப்பெற்றதாகவும், சுபாவ ஞானம், இன்பம், அனந்தம் (முடிவற்று உள்ள தன்மை) எனப்படும் தன்மைகளாகவும், அனைத்துயிர்களுக்கும் உள்ளே இருக்கும் அந்தர்யாமியாகவும், உள்ளும் புறம்பும் ஆகாசம் என நிறைந்து வியாபித்துஇருப்பதாகவும், ஆன்மப்பிரகாசம் மிகுந்துவிளங்க சுவானுபூதியாய்த் துய்ப்போர் உணரும் மெய்ப் பொருளாகவும் விளங்கும் பரம்பொருளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நேரிடையாகத் தன்னனுபவத்தில் உணர்ந்து, அவா, மோகம் முதலான குற்றம், இடம்பம், அகந்தை முதலான தீயகுணங்களை நீத்து விளங்கும் தூய, சாந்தமயமான ஆன்மமலர்ச்சியை உடையவனே, அனைவராலும் தொழத்தகும் பிராமணன் ஆவன் என்று வச்சிர சூசிகை உபநிடதம், சத்தியமான கருத்தைக் கூறும்.

**6.** இவ்வாறு கூறப்பட்ட சற்குணங்கள் பொருந்தப் பெறாமல் பிராமணத்துவம் என்பது எவ்விடத்தும் இல்லை என, பிறப்பால் மட்டும் கொள்ளப்படும் பிராமணநிலையை மறுத்து, "வேதநூல்கள், பொய்யுரை அற்ற புராணங்கள், பெருமைக்குரிய நன்னிலைகளை இனிதாக விளக்கும் இதிகாசங்கள் முதலாயின வெளிப்படுத்தும் கருத்தும் இதுவே. கூறப்பட்ட ஞானமயமான தெய்வத்தை களங்கமற்றதாய், தன் அனுபூதியில் வரும் இன்பமாய். அத்துவிதமாய் மிகவும் மாட்சிமை பொருந்திய பரம்பொருளாக உயர்ந்த பாவனை செய்வீராக'' என்றும் அந்த வச்சிர சூசிகை அழுந்தக் கூறுதலால், தியானிக்கும் ஆற்றல்வாய்ந்த உள்ளம் உடையார் யாவரும் பெறுதற்கரிய முத்திநிலையைப் பெற்று வாழ யாதொரு தடையும் இல்லை. எனவே, மெய்யன்பர்களே, ஒப்பற்ற குகபரம் பொருள் ஒன்றையே தொழுது உய்திபெற மன எழுச்சியோடு வாருங்கள்.

**7.** "உண்மையான பிராமணன் யாவன் ?" என்று கேட்ட நாகராசனை நோக்கி, சத்தியம் தவறாத தருமராசன் "மெய்ம்மை, கொடை, தயை, கொல்லாமை, நோன்பு, பொறுமை, சீலம் ஆகியவை எவனிடம் நன்கு பொருந்தியுள்ளனவோ அவனே பிராமணன் என்று வேதம், மிருதிகள் முதலான நூல்கள் கூறும். பசுமையான இந்தப் பூமியில், கூறப்பட்ட இத்தன்மைகள் பிறப்பால் பிராமணன் என உள்ளவனிடம் இல்லையேல், அவன் தொழத்தகுந்த பிராமணன் அல்லன். இந்த உயர்குணங்கள், கூறப்படும் சூத்திரனுக்கு உள்ளதேல், அவன் எளிமைநிலைக்குரிய சூத்திரனாகவும் ஆகான்'' என நல்ல விடை கூறியுள்ளதால்,

இவ்வுலகில் எக்குலத்தில் பிறந்தவர்களும் எம்பெருமானின் திருவருள் பெற்று நிச்சயமாக உய்திபெறுவார்கள் என திடமாக நம்பி, மெய்யன்பர்களே, இங்குக் குழுமி வாருங்கள்.

**8.** மெய்ம்மை முதலான ஏழுகுணங்களும், ஞானநுட்பம் மிகுந்துள்ள வச்சிர சூசிகை உபநிடதம் விளக்கிக் காட்டியுள்ள பிராமணனுக்கு ஒரு குறைவுமின்றி விளங்கும்; பெருமைக்குரிய தெய்வநோக்கு இல்லாதார்க்கு அந்த ஏழு குணங்களுள் ஒன்றுகூட விளக்கம் பெற்றிருக்காது; ஆதலால் வச்சிரசூசிகை கூறும் கருத்தும், தருமராசன் கூறும் கருத்தும் ஒரே முடிபுடையன என்று, நுட்பமான ஞானத் தெளிவு வாய்த்திருக்கும் நல்லோர் உணர்வர். பொய்ம்மையைப் போக்குவதாகிய காந்த புராணத்து உபதேச காண்டத்தில் சிவபுண்ணிய மான்மியச் சருக்கம், சிவபுண்ணியப் பெருமையைக் கூறும் போது "புகலுதற்கரிய சிவபெருமானை நான்காம் வருணத்தவர்களும், இழிந்த நிலையுடைய சங்கர வருணத்தினரும், மற்றும் நியமமும் ஒழுக்கமும் மிகுந்துள்ள உயர்ந்தவர்களும், தஞ்சம் எனக் கருதி ஆட்படுதல் நடைமுறையில் உண்டு. அத்தகையோர் கடவுள் எனக் கருதி வணங்கும்படி உள்ளனர்'' என்றுகூறும். முழுமுதற் பொருளாகிய இறைவனைக் கருதும் அன்புடையோரே, இவ்வுண்மையை உணர்வீர்களாக.

**9.** சிவபெருமானின் மெய்யருள் உளதேல், அனைத்து சாதிகளையும் சார்ந்துள்ள உயர்திணை அஃறிணை எனும் இரண்டு வர்க்கத்திலும் உரிய உடல்தோற்றம் வாய்ந்துள்ள உயிர்களுக்குச் சிவஞானம் உண்டாகும் என்று சிதம்பர புராணம் தெளிவாகக் கூறுவதற்கேற்ப அளவற்ற உயிர்கள் பெரிய முத்திப்பேற்றை அடைந்தமை உண்மையன்றோ! பரமேசுவரனிடம் அன்பு இல்லாதவர்களின் செல்வத்தையும், அவ்வாறு இல்லாத தேவர்களையும் நாம் மதிக்க மாட்டோம். குறைகளும் துன்பங்களும் உடையவராகி, பசுவை உரித்துத்தின்னும் புலையர்களாக இருப்பினும், அவர்கள் சிவபெருமானுக்குரிய அன்பர்கள் எனில், அவர்களே நாம் வணங்கும் கடவுளராவர் எனத் திருநாவுக்கரசர் கூறியுள்ளதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் "இழிந்த குலத்து அடியார்க்கும் நான் அடியேன்'' என்று கூறியுள்ளதும் குற்றமில்லையே!

**10.** கூறப்பட்ட இந்தச் சான்றுகளால் உயிர்கள் அனைத்தும் முத்திப்பேறு அடைந்து உய்திபெறும் உரிமை உடையன என்பது இறைவன் விதித்துள்ள ஆணையே என்பது தெளிவாகும். இந்தவிதிக்கு மாறாக ‘‘பிராமண வருணம் தவிர்த்து எந்த வருணத்தவரும் முத்திப்பேற்றை அடைவதில்லை'' எனப் பிராமணர் சிலர் தாமாக ஒரு பேதைமைக் கருத்தை வலித்துக்கூறி ஏனைய சாதியினரை இகழ்தல் பொருந்தாததாகும். சாதியையே உயர்வாகக் கருதும் அன்னோர், பிறப்பும் இறப்பும் ஆகிய பெரிய அச்சநிலையை நீத்துள்ள மற்றைய நற்குடியில் தோன்றியுள்ள நல்லோர் மேன்மையான கதியை அடையவில்லை எனப் பொருளற்ற வார்த்தைகளைக் கூறுவது பரிகாரம் காணமுடியாத பாதகமாகும். இவ்வாறு இதனைச் சிந்தையில் கொண்டு, அருணகிரிப் பெருமான் கண்ட குகேசனை நாடி, மனமும் வாக்கும் ஒயப்பெற்று, நிலையாகத் துய்க்கும் ஆனந்தம் அடைய, மெய்யன்பரே! திரண்டு வாருங்கள்!

# 78. துறவு

*கலிநிலைத்துறை.*

**நீ**ர வஞ்சிவதி யஞ்சடை நிருத்தன் வடவாற்
பேர ணைந்ததரு நீழலி லிருந்து பெரிதாம்
ஈர வந்தணர்க ளுக்கருள் புரிந்த வெழிறான்
பீர கன்றசுக மென்பது பிறங்கு துறவே. (1)

**த**னது பக்கவனு போகமுற வென்று தரைமேல்
வினையி ழைத்திட நணாதொரு வியன்கு கனையே
இனிது நச்சிமுழு வன்புட னிடுந்தொ ழிலெலாம்
அனக முற்றசுக வாழ்வென வமைந்த துறவே. (2)

**தோ**ன்று பொய்ப்பொரு ளனைத்தையு மிகழ்ந்து துணிபே
சான்ற மெய்ப்பொரு ளெனப்புகல் சயம்பு வினையே
ஈன்ற வத்தனனை சற்குரு வெனும்பு ரிவினால்
ஊன்று பத்தியு மதர்ப்புடை யுயர்ந்த துறவே. (3)

**ஞா**ன மெய்க்குர வனுக்குட னறும்பொ ருளுயிர்
ஆன முப்பொருளு நட்புட னளித்த முறையும்
ஈன முப்பதையு மாறையு மிகந்த நிலையாம்
மோன முத்திறமு முற்பவ முடிந்த துறவே. (4)

**உ**யிரு டம்பென விளம்புமபி மானவொழிவும்
உயவெ மும்பல்வரு ணாச்சிரம மோவு துறையும்
மயலு யர்ந்தமல மாயையை வதைக்கு மறமுஞ்
செயிரி கந்தசுக வாழ்வது சிறந்த துறவே. (5)

**கோ**ண னெஞ்சினலை வானது குவிந்தி டுதலும்
ஆண வங்கரும மாயைக ளழிந்தி டுதலுந்
தூண நுங்கிய பராபரை சுகம்பெ றுதலும்
ஆணர் விஞ்சிடு மனாமய ரடைந்த துறவே. (6)

---

*5. உயவு = வருத்தம்*

*6. தூணம் = பகை ; த்வேஷணம் என்பதன் விகாரம்.*

**ஆ**ர ணக்கடையு மாகம வணிக்க டையுமோர்
நேரெ னப்படு நிராசையவி கார நிலையாந்
தார கப்பிரம ஞானசிவ சங்க மமுமா
வீர மற்றநசை யாளரை வெருட்டு துறவே. (7)

**சா**க ரப்புணரி யொத்தசன னத்த ளைவினை
ஏக நிற்குநெறி யித்தையல தின்று தனியாம்
ஓகை யைப்பெறுநர் கட்குரிமை யுற்ற திதுவென்
றாக மத்தெளி வதிர்ப்பது மகன்ற துறவே. (8)

**தா**ல நச்சுளிக ளுக்கதி தரித்தி ரமதாய்த்
தால நச்சிலிக ளுக்கதி தவப்பெ ருமையாய்த்
தால நச்சொழிவர் பொற்பொடு சரிக்கு நிலையாய்த்
தால வட்டமிசை யுள்ளது தனித்த துறவே. (9)

**கா**ம மென்றநெடு வாரிதி கடந்த ருணைமா
நாம மொன்றுள னனாரத நயந்து புகழ்தே
ஆமெ னன்பிறை யெனக்கருள வந்த வருளாம்
மாம லிந்தவொரு கோலமும் வரம்பி றுறவே. (10)

# 78. துறவு

**1.** கங்கைப் பெண்ணாள் வாழும் திருச்சடாபாரத்தை உடைய கூத்தப் பெருமான் வடவிருக்ஷம் எனப்படும் கல்ஆல மரத்தின் நிழலில் குருவடிவம் கொண்டு வெளிப்பட்டு அமர்ந்து பேரன்பும் உள்ளக்கசிவும் கொண்டிருந்த சனகர் முதலான நான்கு முனிவர்களுக்கு அருள்புரிந்த தெய்வப் பொலிவானது அச்சமற்று உயர்ந்துள்ள பேரானந்தநிலை ஆகும். இந்தப் பேரானந்த நிலை விளங்குமாறு திகழ்வது துறவுநிலை.

**2.** உலகியல் சார்பாக உள்ள தனது அனுபவங்கள், போகங்கள் அனைத்தையும் அடைவதற்காகப் பூமியில் பல்வேறு செயல்களைச் செய்வதை மேற்கொள்ளாமல், அகண்ட வெளிமயமாகத் திகழும் குகப்பெருமானை இனிதாக விரும்பி, பூரணமான அன்புத்திறத்தால் செய்யப்படும் தொழில்கள் அனைத்தும் தூய்மை நிறைந்த சுகவாழ்வு மயமாக விளங்குமாறு நடைபெறுவது துறவுநிலையாகும்.

**3.** தோற்றம் கொள்ளுகின்ற நிலையற்ற பொருள்கள் அனைத்தையும் அசத்து எனப் புறக்கணித்துவிட்டு, என்றும் நிலைத்திருப்பதாகிய உறுதிப்பாடு நிறைந்து விளங்கும்

*7. வெருட்டுதல் = அச்சுறுத்தல்.*

*8. புணரி = கடற்றிரை ; ணகரவெதுகை.*

*9. தாலம் = பூமி.*

மெய்ப்பொருள் இதுவே எனக் கூறப்பட உள்ள சுயம்புப் பெருமானையே தம்மை ஈன்றெடுத்த தந்தை, தாய் மற்றும் குரு எனும் பாவனைத்திறம் மிக்க அன்புணர்வால் ஆழ்ந்த பக்தியும் அருட்செழிப்பும் கொண்டு விளங்குவது உயர்ந்த துறவுநிலையாகும்.

**4.** ஞான நுட்பங்களை உபதேசிக்கும் மெய்ம்மை நெறிக் குருவுக்கு உடல், பொருள், உயிர் ஆகிய மூன்றையும் தூய்மையான அன்புடன் அர்ப்பணித்திருக்கும் முறைமையும், பந்தப்படுத்து வதாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்துள்ள அதீத நிலையாகிய, மௌனப் பெருநிலைக்குரிய முப்பாழ் நிலையும், விளங்க இருப்பது, இனிவரக் கூடிய பிறவிகள் அறவே நீங்கிநிற்குமாறு இயலும் துறவுநிலையாகும்.

**5.** எனது உயிர், எனது உடல் எனக் கருதிக்கூறும் அபிமானம் நீங்கி இருக்கும் நிலையாகவும், உய்திபெறத் தோன்றியுள்ள பல்வேறு வருண ஆசிரம நெறிமுறைகளைக் கடந்து மேம்பட்டுள்ள அருள்துறையாகவும், மயக்குறுத்தும் செயலில் சிறந்துள்ள மலமாகிய மாயையை வருத்தி அழிக்கும் வீரநிலையாகவும் ஆக விளங்கிக் குற்றம் தீர்ந்துள்ள சுகவாழ்வு மயமாகப் பொலிவது, சிறந்த துறவு நிலையாகும்.

**6.** ஒழுங்கற்றுள்ள நெஞ்சின் சஞ்சலமானது நீங்கப்பெற்று, தகராலயத்துள் குவிந்து அடங்கி நிற்கும் நிலை; ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலப் பிணிப்பு அறவே நீங்கி நிற்கும் நிலை; மாறுபாட்டுணர்வு அறவே நீங்கப்பெற்று பரைநிலை, அபரைநிலை தொடர்பான இன்பத்தைத் துய்க்கும் நிலை – ஆகிய இவைகளாகத் திகழ்வது, நற்பேறுகளை மிகுதியாகக் கொடுப்பதும், பிறவிப்பிணி நீத்துள்ள பெரியோர் மேற்கொண்டுள்ளதுமாகிய துறவுநிலையாகும்.

**7.** வேதத்தின் அந்தமும் ஆகமத்தின் அந்தமும் சமரசப்பட்டு விளங்கும் நிலை, ஆசையற்ற நிலை, விகாரமற்ற நிலை என விளங்கித் தாரகப் பொருளான பரப்பிரம்மத்தின் பரிபூரண ஞானமயமான சிவத்துவப் பேறு இதுதான் எனத் திகழ்வது – பெருமைக்குரிய அன்புணர்வை நீத்துள்ள பேராசைப் பிணியாளர்களை வெருட்டி நிற்கும் துறவுநிலையாகும்.

**8.** ‘‘கடலின் அலைகளை ஒத்த பிறவியாகிய தளை, அதனைக் கொடுக்கும் கன்மமலம் ஆகிய இவை அடியோடு நீங்கிநிற்குமாறு விளங்கும் நெறி இதனைத் தவிர்த்து வேறு இல்லை; தன்னிகரற்ற, தனித்துவம் வாய்ந்த பேரானந்தப் பெருநிலையைப் பெற இருப்போர்க்கு உரிமை உடைய நெறி இது’’ என, ஆகமத்தெளிவாகிய ஞானபாதம் உறுதிப்பட உயர்த்திக் கூறுவதும், பந்தங்கள் அனைத்தும் நீங்கிநிற்க உள்ள துறவுநிலையேயாம்.

**9.** மண்ணாசை முதலான ஆசைகளைக் கொண்டுள்ளோர்க்கு "மிகவும் வறுமைப்பட்டுள்ள நிலைக்கு உரியது இது’’ என விளங்குவதாகவும், மண்ணாசை முதலானவற்றை நீத்துள்ள குணசீலர்க்கு "மிகவும் தவப்பெருமை வாய்ந்துள்ள நெறி இது’’ என விளங்குவதாகவும் மண்ணாசை முதலானவற்றை நீத்துள்ளோர் ஈடுபாட்டுடனும் பெருமிதத்துடனும் அனுட்டிக்கும் தூய நெறி என விளங்குவதாகவும் இப்பூமிப்பரப்பில் மேம்பட்டுப் பொலிந்துள்ளது துறவுநிலையே.

**10.** காமம் எனும் பெருங்கடலைக் கடந்த அருணகிரிப் பெருமான் எப்பொழுதும் விரும்பிப் புகழ்ந்த முழுமுதல் தெய்வமாகிய எனது அன்புக்குரிய இறைவன், எனக்கு அருள் புரிவதற்காக அன்போடும் எழுந்தருளி வந்த திருவருட் பொலிவு மிகுந்த தனிக் கோலம், எல்லையற்ற பெருமைக்குரியதும், வருணாசிரம வரம்புகளைக் கடந்ததுமாகிய துறவு நிலைக்குரிய கோலமே.

# 79. சுருதி பணித்தபடி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

**சு**ருதி பணித்தபடிக் கென்னிறையைத் தோயு நலனுறுவான் சுகர்சனகர்
மிருதி யுதிப்பறுநற் சடபரதர் மேதை யிடபர்தத் தாத்திரயர்
மருளில் வடசித்தர் சனற்சுசதர் வாமர் துருவாசர் ரிபுநிதகர்
இருளில் சுவேதகே துரைவதக ரென்பார் துறவறம்புக் கிருந்துளரே. (1)

**நா**வுக் கிறைமூர்த்தி மூலருயர் ஞானத் திருவாத வூர்முதல்
தேவத் தகையுடையார் மறைப்போதஞ் சேர்சம் பந்தருமா பதிசிவனார்
பாவிற் பரசிடுபட் டினத்தடிகள் பத்தி ரச்சிலம்பர் புகழ்ப்புலவர்
மாவித் தகத்தாயு மானவர்சூர் மாற்று துறவறம்புக் கிருந்துளரே. (2)

**கை**வல் லியப்பெயர்சா ருபநிடதங் கரிசி றுறவறமொன் றாலேயே
பொய்யி லமிர்தத்துவ மெனுமோக்கம் பொருந்தி னாருரியோ ரென்பதொடு
மெய்சொன் னாரதருக் கயன்பகரோர் மேதை மறையுஞ்சன் னியாசமெனுந்
துய்ய வுபநிடமுந் துறவதனைத் துலக்கிப் புகன்றினிது புகழுமரோ. (3)

**இ**சைத்த துறவறத்தை மைத்திரேய மென்னு முபநிடமுஞ் சீகண்டர்
வசைச்சொ லறவதிர்த்த பாடியமும் வண்மைத் திருமந்தி ரங்குறளும்
பசைச்சொ னிரம்பொழிவி லொடுக்கமதும் பகையா தொருங்கொப்பி யுரைதரல்போல்
நசைத்தா வகற்றுணர்வு நூல்பலவு நவிலும் வியனுணர்வார் கற்றுவலோர். (4)

---

*1. மிருதி = சாவு; “ம்ருதி” என்னும் வடமொழியின் விகாரம்.*

*சனற்சுசதர் – சனற்சுசாதர். நிதகர் – நிதாகர்.*

*3. கைவல்லியோபநிடதங் கூறுதலை, (நகர்மணாநப்ரஜயாதநேந த்யா கேநைகே அம்ருதத்வ மாநசு : | ) “முத்தி கன்மத்தினாலு மில்லை; சந்ததிகளா லுமில்லை; தனத்தினாலுமில்லை; இவற்றைத்துறக்குஞ் சன்னியாச மொன்றினாலேயே பெரியோர் அமிருதத்துவ மடைந்தனர்” என்னு மவ்வுபநிடதக் கூற்றுக்களி னறிக. மறை = நாரதபரிவ்ராஜகோபநிஷத்; அதர்வணவேதத்தது.*

*துய்ய – தூய்மையென்னும் பண்பினடியாகப்பிறந்த பெயரெச்சம்.*

**பு**றப்பற் றகப்பற்றெ னாவுணர்விற் புகலுஞ் சிவஞான சித்தியெனுஞ்
சிறப்புப் பனுவல்சாக் கிரத்தேயென் றெழுமோர் செய்யுணனி தெரித்தலினால்
ஒறுப்பென் பற்றழிவ தெனுந்துறவு முபய வகைத்தாகு மவற்றொன்று
விறப்பின் மனைதனயர் கிளைஞர் முதல் விடுத்தல் புறத்துறவென் றாமாலோ.(5)

**இ**ந்தத் துறவுடையா ரகக்கரண மிகந்து நிற்குமகத் துறவதனைச்
சொந்த முடனடையா ரெனின்மீண்டுந் தோன்று வாரதையிங் குளர்மனையோ
டந்த மளவுமிருந் தானுமன்னோ ரற்றா ரேயெனவக் கவிசொலலான்
முந்தை யுறல்புறமாந் துறவும்பின் முயல லகத்துறவு மெனவாமால். (6)

**இ**துவே முறையெனற்குப் பொதுமறையு ளேசி றுறவதிகா ரஞ்சொனபின்
மதிமெய் யுணர்தலவா வறுத்தலென வைத்த நிரலுமுற்ற வுதாரணமாங்
கதியா நிலையாறு விரும்பிடுவார் கட்கெல் லாமீதொப் பெனவென்கோன்
பதியென் றுளகுகனைப் பரசுநரும் பணித்தல் சாலவனப் புடைத்தன்றே. (7)

**நா**ன்கு குலத்தினருந் துறவிகளாய் நன்னர்ப் பயிக்கமெடுத் துணுமுறையைத்
தேன்சொன் மலிதத்து வவொளிமுறை செப்பும் பூசைமுடிந் தாலெனுமோர்
மேன்மைக் கவிதைமைத் திராயண்ணி யெனுமோ ருபநிடதம் வீடுபெறக்
கான்புக் கடக்கியறி யெனுமிவையாற் கழறு புறத்துறவுண் டெனறுணிபே. (8)

**கு**ற்ற மொருமூன்று முளர்க்கெல்லாங் குயின்ற புறத்துறவன் றகத்துறவோர்
சற்றும் வருவதிலை யிதையறியாச் சழக்கு மிகுமூவே டணையுடையார்
உற்ற வகத்ததுகை வந்தார்போ லோதிப் புறத்துறவை யிகழ்வரிங்ன்
கற்ற கெடுதந்தி ரம்மவருட் கண்ணை யொழித்துளதோ பிறர்சொலவே. (9)

**அ**சுவ மேதமுத லியவற்றோ டகன்ற தேகலியிற் றுறவறமென்
றிசைநல் கிடுமிருதிக் குரியபொரு ளிணைகோ வணமுமிலா விரத்திநடை
அசிசெய் கலியுகத்தில் விலக்குண்டதென் றாகு மிதைமறுத்தோ துவதென்றாற்
பிசியி லனுபவத்திற் கிகலென்பார் பேமி லருணகிரிக் கன்புடையீர். (10)

---

*5. ஒறுத்தல் = வெறுத்தல் ; பி – நிகண்டு.*
*விறப்பு = வலிமை ; நகரவெதுகை.*

*8. மைத்திராயண்ணி உபநிடதங் கூறுதலை, அதன் 6–ஆம் பிரபாடகத்தே ஆரண்யங் கத்வாதபஹி: க்ருத்வேந்த்ரியார்த்தாந் ஸ்வாஞ்சரீராது பலபேதைநமிதி = ''கானகம்புகுந்து இந்திரிய விடயங்களை நீக்கித் தனது சரீரத்துள்ளேயே பரம் பொருளையறி'' என வருதலா னறிக.*

*9. குற்றமொருமூன்று = காமம், வெகுளி, மயக்கம். அன்றி – 'அன்று' என நின்றது.*

*10. அசி = அவமதிச்சிரிப்பு. பேம் = அச்சம்.*

# 79. சுருதி பணித்தபடி

1. வேத ஆகமங்கள் விதித்துக் கூறும் வண்ணம், என் இறைவனுடன் அத்துவிதக் கலப்பினை உறும் இன்பநிலையைப் பெறவேண்டி சுகர், சனகர், பிறப்பும் இறப்பும் அற்ற சடபரதர், ஞானம்மிக்க இடபர், தத்தாத்திரேயர், மருளற்ற வடசித்தர், சனற்சுசாதர், வாமர், துருவாசர், ரிபு, நிதாகர், அஞ்ஞானமறைப்பை நீத்த சுவேதகேது, புகழ்வாய்ந்த வதகர் எனப்படும் முனிவரர்கள் துறவறம் மேற்கொண்டு சிறந்திருந்தனர் அன்றோ!

2. திருநாவுக்கரசர், மூர்த்தியார், திருமூலர், உயர்ந்த சிவஞானப் பேறு வாய்த்த மாணிக்கவாசகர் முதலான தெய்வநலப் பெருமையையுடையோர், மறை ஞானசம்பந்தர், உமாபதிசிவம், பாட்டுக்களால் இறைவனைத் துதித்த பட்டினத்து அடிகள், பத்திரகிரியார், திருப்புகழ் பாடிய அருணகிரியார், வித்தகம் வாய்ந்த தாயுமானவர் என்னும் இவர்கள், பிறப்பும் இறப்புமாகிய அச்சத்தைப் போக்கும் துறவறம் மேற்கொண்டு சிறந்திருந்தனர் அன்றோ!

3. கைவல்லியம் எனும் பெயருடைய உபநிடதம் "குற்றமற்ற துறவறம் ஒன்றினாலேயே, என்றும் நிலைத்திருப்பதான அமிழ்தத்துவம் எனப்படும் முக்திநிலையை, உரிய பெரியோர் அடைந்துள்ளனர்'' என்று கூறுகிறது. அதுமட்டுமன்றி, சத்தியமே கூறும் நாரதருக்குப் பிரமன் உபதேசித்தாக உள்ள நாரத பரிவராஜகம் எனும் உபநிடதமும், சாமவேதத்தைச் சார்ந்த சன்னியாசம் எனும் பெயர்பெற்ற தூய உபநிடதமும் துறவறத்தை விளக்கிக் கூறி நன்கு புகழ்ந்துரைக்கும்.

4. கூறப்பட்ட துறவறத்தைப்பற்றி மைத்திரேயம் என்னும் உபநிடதமும், சீகண்டர், வழுச்சொல் எதுவும் பொருந்தாத வகையில் சிறப்புற வரைந்த பிரம்மசூத்திர பாடியமும், வண்மைமிக்க திருமந்திரமும், திருக்குறளும், பயில்வார் உளத்தோடு ஒன்றிவிடும் சொற்சிறப்புடைய ஒழிவிலொடுக்கம் என்னும் நூலும், ஒன்றனுக்கொன்று மாறுபாடு கொள்ளாமல் அனைத்தும் ஒருமித்துத் துறவறப் பெருமையை விளக்கிக் கூறுதல் போன்று ஆசையாகிய குற்றத்தை நீக்கும் ஞான நூல்கள் பலவும் கூறிநிற்கும் துறவறப் பெருமையைக் கல்விஞானம் வல்லோர் நன்கு உணர்வார்கள்.

5. ஞானநிலையில் சிறந்து நின்று மெய்ப்பொருள் கூறும் சிவஞான சித்தியார் எனும் சிறப்பான நூல் 'சாக்கிரத்தே' எனத் தொடங்கும் செய்யுளில் 'புறப்பற்று' எனவும் 'அகப்பற்று' எனவும் உள்ள நிலைகளை நன்கு விளக்கிக் கூறுவதால், 'வெறுத்தல்' அதாவது நீத்துவிடுதல் என்பதாகிய பற்றழிவு எனப்படும் துறவும் இரண்டுவகைப்படும். அவற்றுள் ஒன்று, நிலைபேறு என்னும் வலிமையற்ற மனைவி, பிள்ளைகள் முதலானோரைத் துறத்தல் ஆகிய புறத்துறவு என்பதாகும்.

6. கூறப்பட்ட இந்தப் புறத்துறவு உடையார், அகக்கருவி முதலான உட்கருவிகளின் தொடர்பையும் நீத்துநிற்பதாகிய அகத்துறவு என்பதை உரிமையுடன் (அதாவது அவசியமாக)

அடையாதவர்கள் எனின் அன்னோர் மீளவும் பிறவிஎடுப்பர். ஆனால், அந்த அகத்துறவு என்பதை இங்கு வாய்க்கப் பெற்றுள்ளோர், மனைவியோடு வீட்டில் தன் ஆயுள் முடிவடையும் வரையிலும் இருந்தாலும் அவர்கள், அனைத்தையும் நீத்துள்ள துறவியரே ஆவர் என்று ‘‘சாக்கிரத்தே’’ எனத் தொடங்கும் அந்தச் செய்யுள் கூறுவதால், முதலில் மேற் கொள்ளப்படுவது புறத்துறவு என்றும், அடுத்து மேற்கொள்ளப் படுவது அகத்துறவு என்பதும் ஆகும்.

7. இவ்வாறு மேற்கொள்வதே முறையாகும் என்பதற்குத் திருக்குறளில், துறவு எனும் அதிகாரத்திற்குப் பிறகு "மெய்யுணர்தல்’’ ‘‘அவா அறுத்தல்" எனும் அதிகாரங்களை அமைத்துள்ள வரிசை முறையும் பொருத்தமான உதாரணமாக விளங்கும். பேரானந்தப் பேற்றுக்குரிய நல்வழியை விரும்புவோர்க்கெல்லாம் இது ஒருமித்துக் கொள்ளப்பட்ட முடிபு ஆகும் என உணர்ந்து, என் அரசனும் முழுமுதற் பொருளுமாக உள்ள குகப்பெருமானைப் போற்றும் அருளாளர்களும் அறுதியிட்டுக் கூறியுள்ளமை பெரிதும் அழகுடையதன்றோ!

8. நான்கு குலங்களைச் சார்ந்தவர்களும் துறவு நெறியை மேற்கொண்டு சன்னியாசியராகி, பிக்ஷை எடுத்து உண்ணும் முறையை, இனிய சொல்வளம் மிகுந்துள்ள தத்துவப் பிரகாசம் எனும் நூலானது ‘‘பூசைமுடிந்தால்" எனத்தொடங்கும் செய்யுளில் கூறும்; மைத்திராயணி எனும் உபநிடதமும் "வீடு பெறும் பொருட்டுக் கானகம் புகுந்து இந்திரியங்களை அடக்கித் தனது சரீரத்துள்ளேயே பரம்பொருளை அறி" என்று கூறும். எனவே, "கூறப்படும் புறத்துறவு என்பதும் நடைமுறையில் உண்டு’’ என்று சொல்லுதல் உறுதியான முடிபே ஆகும்.

9. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களும் உடையார்க்கெல்லாம், மேலே கூறப்பட்ட புறத்துறவு மட்டும் பொருந்துமே அன்றி ஒருசிறிதும் அகத்துறவானது பொருந்துவதில்லை. இதை அறியாத, வஞ்சனைக் குணம் கொண்டுள்ள, மண்ணாசை முதலான மூன்று ஆசைகளை உடையோர், அகத்துறவு நன்கு கைவரப் பெற்ற பெரியோர் போலக் கூறிக்கொண்டு புறத்துறவு என்பதை இகழ்ந்து கூறுவார்கள். பிறர்சொல்ல இவர்கள் பயின்றுள்ள கெடுதிமிக்க தந்திரங்கள் (போலிநூல்கள்) இன்னாரது அகக்கண்ணை அழித்துவிட்டனவோ ?

10. "அசுவமேதம் முதலான புற வேள்விகளையும் நீத்து, இத்தகைய செயல்களிலிருந்து விடுபட்டிருப்பதே கலியுகத்துக்குப் பொருத்தமான துறவறம்" என, மிருதி கூறும் கூற்றுக்குரிய பொருள் பொருந்த அணியும் கோவணமும் இல்லாமல் இருப்பதாகிய அவதூத நடை, ஏளனச் சிரிப்பைச் செய்யும் கலியுகத்தில் விலக்கப்படுவதாகிறது" என்பதாகும். அச்சமற்று, ஆனந்தப் பெருநிலையில் உள்ள அருணகிரிப் பெருமானிடம் அன்பு கொண்டிருப்போரே! இக்கருத்தை மறுத்துக் கூறுவது எனில், அது, அருளாளர் அடையும் பொய்யற்ற ஆன்ம—இறை அனுபவத்துக்கு மாறு பட்டுநிற்பதாகும் எனப் பெரியோர் கூறுவர்.

# 80. மகியிரேயமுளர்

அதர்வணவேத நாரதபரிவிராசகோபநிடதம்

மூன்றாமுபதேசம்.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ம**கியி னேயமுளர் பால றத்தினையு மறலு ளார்புடைம றத்தையும்
புகவி டுத்துநடு நிற்க வுள்ளவொரு புந்தி யந்துறவி யழிவிலாச்
சுகவி லாசபர மபதி சூத்திரம னற்கொ ழுந்தியைய வேசுடர்
புகரின் ஞானமது சிகையெ னத்துணிவு புகலு நீப்புநவில் சுருதியே. (1)

நான்காமுபதேசம்.

**இ**ச்சை வஞ்சனை யுலோபம் யுத்திசின மிதம்வெ றுப்பற விருப்பகம்
விச்சை யாயபிர சங்கம் யாசகம் வினோத சிற்பமுறை மந்திரம்
மெச்சு சித்திபரி காரம் வெம்பிணி விலக்கு கன்மநகர் வாசமற்
றிச்சை யேதும்யதி கொள்ளொ ணாதென விசைக்கு நீப்புநவில் சுருதியே. (2)

ஐந்தாமுபதேசம்.

**அ**மல ஞானமிலி யாய்ம ரத்தினி தமைத்த தண்டது பிடித்துமால்
நிமிர வெக்கணும் வரம்பி லாதக நினைத்த வாறெதையு முண்குநன்
ஞமன தாணைவலி யாலு யர்ந்தரௌவு ரவமெ னுங்கொடிய நரகெலாம்
அமரு வானென முழங்க லானிகம மறிஞு ரிப்பிழை செயார்களே. (3)

ஆறாமுபதேசம்.

**இ**தயம் வாக்குவினை யென்னு மூன்றையு மெழாது தண்டநனி செய்தலே
யதித னக்குரிய மூன்று தண்டமகி லாச்ர மத்தையு மிகந்துதன்
பதியெ னப்படு குகன்க ணேயுள பவித்ர னாவனெவ னோவனோன்
அதிவர் ணாச்சிரமி யென்ற ரற்றிடு மதீத நீப்புநவில் சுருதியே. (4)

ஏழாமுபதேசம்.

**சா**ர்ப றுத்துள னொருத்த னாய்நனி தனித்தி ருந்திடுக விருவர்தாஞ்
சேரொ ணாதஙன மூவர் சேரினது சிறுகி ராமமொரு நால்வர்தாஞ்
சேரின் மாநகர மாமெ னச்சுருதி செப்ப லாலிதை யுணர்ந்திடுங்
கூரு ளத்துறுவர் தவறு றாதநடை கொண்ட கண்டகதி யடைவரால். (5)

---

*1. மறல் = பிணக்கு. 'துறவிக்கு' என்னு நான்கனுருபு விகாரத்தாற் றொக்கது.*
*'சூத்திரமாம்' 'சிகையாம்' என 'ஆம்' வருவிக்க சூத்திரம் = உபவீத மென்னும் பூணூல்.*

**மு**டிவு முத்தியடை தற்கு நான்குமதி முன்ன தாகுமதி யெட்டிலே
மிடிய னொத்ததனின் வேறு காணவுறு விடய மத்தனையு நீத்தெழில்
வடிவு தேம்பிட வுணாச்சி றுத்துணும் வழக்க மேகொடு கொழுப்பினைப்
படர்வு றாதுதுற வினனி ழைக்கநனி பகரு நீப்புநவில் சுருதியே. (6)

**இ**ரத நெய்யினை யிரத்த மொப்பவு மிராப்பு சிப்பைமுடை யொப்பவும்
விரைசெய் சந்துவை யமேத்ய மொப்பவும் விருப்பை யாப்புளித மொப்பவும்
சிரசி லிட்டுமுழு கெண்ணெ யைத்தொடிகொள் செங்கை மாதர்குழு வொப்பவும்
உரனல் குப்பையிழி யசட னொப்பவு மொறுப்ப னெண்ணமறை யறையுமே. (7)

**மி**த்தி ரக்களிதுர் மூத்தி ரத்தையும் விலோச னங்கொடு தெரிந்தமா
நத்த மாயது முசுண்டர் சேரியையு நாரி நாட்புரக நஞ்சையும்
வத்தி ரஞ்சுசியில் பாச னத்தையும் வயங்குசொன் னமர வத்தையும்
ஒத்த வாகுமென வுறுவ னுள்கிட வுணர்த்து நீப்புநவில் சுருதியே. (8)

**ஓ**ங்கல் வாழுநகர் கும்பி பாகமதை யுஞ்ச வைத்தல மழன்சுடும்
பாங்க ரென்பதையு மொக்கு மென்றுசெறி பற்றி லாதவன் வலித்துயிர்
தாங்கு டம்புபிண நேர மிக்கிழிவு சாற்ற வுள்ளதென வோர்ந்துதுன்
போங்கு றாதவண மண்மை யில்புடவி யுழிவ சிக்கவெனு நிகமமே. (9)

சாமவேத மைத்ரேயோபநிடதத்து இரண்டாமத்தியாயம்.

**ப**ணய முண்டியுடை கீர்த்தி யென்பவைகள் பற்றி யேதுறவு கொள்ளுவோன்
திணைகொ ணாட்டுழை யிரண்டு மற்றவதி தீன னாவனவ னன்னர்வீ
டணவி டானென வரற்றும் வேதமிதை யறிவி வேகிக ளனாதுகண்
உணர்வு ளாயவரு ணைப்பெ யர்ப்பெரிய னோதொ ருத்தனிழல் சேர்வரே. (10)

ஆக எண்பதுபத்தினும் போந்த திருப்பா - 800
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 803**

---

*7. சந்து = சந்தனம். அமேத்யம் = அசுத்தம் ; வடநூன்முடிபு.*

*ஆப்புளிதம் = கோமாமிசம். உப்போடு புளி, துவர்ப்பு, இனிப்பு, உறைப்பு, சுரைக்காய் என்பனவு நீக்க வேண்டுமென்று உபதேசகாண்டத்துச் சரியை யாதிமான்மியச் சருக்கம், 11–ஆம் யாப்பினுணர்த்துகின்றது. இழிய சடன் = இழிவுடைக் கீழ் மகன் ; ஈண்டு, சண்டாள னென்பதன் மேற்று ; "அசட ரதன்மா" என்னும் பி–நிகண்டு.*

*8. நத்தம் = ஊர். சுசியில் பாசனம் = எச்சிற்கலம். பாசனம் உண்கலமென்பதைச் சூ–நிகண்டிற் காண்க.*

*9. அண்மையில் புடவி = தூரதேயம்.*

*10. துறவுகொள்ளுவோன் = துறவிபோற் காணப்படுவோன். இங்ஙனங் காணப்படுவோரே இஞ்ஞான்று மல்கியுள்ளார்.*

# 80. மகியிரேனயமுளர்

**1.** நிலவுலகில் அன்புநெறிப்பட்டவர்களிடம் தனது அறத்தையும், மாறுபட்டுப் பிணங்கும் உள்ளம் உடையவர்களிடம் தனது மறத்தையும் சேரச் செய்து, நடுநிலைப்பட்டுநிற்கும் புத்திவாய்ந்த சிறந்த துறவிக்கு அழிவற்றதாய், ஆனந்த மலர்ச்சி மயமாகத் திகழும் பரமபதியே உபவீதமாகும்; தீயின்கொழுந்து போன்று சுடரும் குற்றமற்ற பூரண ஞானமே சிகையாகும். இவ்வாறு தெளிவார்ந்த நுட்பத்தைத் துறவுநெறி பற்றிப் பேசும் நாரதபரிவ்ராஜகம் எனும் உபநிடதம் கூறும்.

**2.** இச்சை, வஞ்சனை, உலோபம், ஊகம், சினம், விருப்புக்கும் வெறுப்புக்கும் ஆட்பட்டிருக்கும் உள்ளம், சாத்திரப்பயிற்சியால் செய்யும் வியாக்கியானம், யாசகம், வியப்புறுத்தும் இசை முதலான நுண்கலைகள், முறைமைப்பட்டுள்ள மந்திரஜபம். வியந்துபுகழக்கூடிய சித்திகள், பரிகாரச் செயல்கள், நோயினை விலக்கும் செயல், நகரத்திலே வசித்தல், மற்றும் விருப்பத்தை மிகுவிக்கும் பல்வேறு பொருள்கள் – இவற்றுள் ஒன்றேனும் துறவி தன்னிடம் பொருந்தி விளங்காமல் கவனத்துடன் இருக்க வேண்டும் எனத் துறவறதர்மத்தை விளக்கும் நாரதபரிவ்ராஜகம் கூறும்.

**3.** குற்றமற்ற பிரம்மஞானம் இல்லாதவனாய், மரத்தால் நன்கு செய்யப்பட்ட தண்டத்தை ஏந்திக்கொண்டு தனது மயக்க ஆசை வெளிப்படையாக விளங்க, எவ்விடத்தும் வரம்பில்லாமல் தன் உள்ளம் ஆசைப்பட்டுநிற்கும் எதையும் உண்டு களிப்போன், யமனின் கண்டிப்பான ஆணையால் பிரசித்தி பெற்ற ரௌரவம் எனும் கொடிய நரகத்தில் அளவற்ற காலமாக வீழ்ந்து கிடப்பான் என நாரதபரிவ்ராஜகம் உறுதிபடக் கூறுவதால், துறவறம் மேற்கொள்ளும் ஞானியர் இத்தகைய பிழைகளை ஒருபோதும் செய்யார்.

**4.** மனம், வாக்கு, வினைசெய்யும் உடல் எனப்படும் மூன்றையும் செயற்பட வொட்டாமல் அடக்குதல் என்பதைச் செம்மையாகச் செய்தலே துறவிக்குரிய முக்கோல் என்பதாகும். வருண ஆசிரம தருமங்கள் அனைத்தையும் கடந்து தன் முழுமுதற்கடவுளான குகப்பொருமானின் திருவடியிலேயே தனது சிந்தனையைத் தன் பாவவனையால் நிலைத்திருக்கச் செய்யும் தூய்மையாளன் எவனோ அவனே அதிவர்ணாசிரமி எனப்படுவான் என்று பரிவ்ராஜக சன்னியாச நிலையை விளக்கும் நாரதபரிவ்ராஜக உபநிடதம் வரையறுத்துக் கூறும்.

**5.** தன் சார்பாக உள்ள பந்தங்கள் அனைத்தையும் நீத்துள்ள துறவி தான் ஒருவனாகவே ஏகாந்தமான இடத்தில் மிகவும் தனித்து இருப்பானாக. இரு துறவியர் ஒரே இடத்தில் சேர்ந்து இருக்கக் கூடாது. துறவியர் மூவர் சேர்ந்தால் அச்சேர்க்கை கிராமத்துக்கு நிகராகும். அவ்வாறே துறவியர் நால்வர் சேர்ந்தால் மாநகரமாகிவிடும் என, அதர்வண வேத நாரத பரிவ்ராஜகம் கூறுவதால். இந்த உபதேசத்தை உணரும் கூர்மையான ஞானநுட்பம் வாய்த்துள்ள துறவியர், சிறிதும் பிழை பொருந்தாத வகையில் துறவுநெறியில் நின்று அகண்டமயமாகத் திகழும் பேற்றை அடைவார்களாக.

**6.** இறுதிப்பேறாகிய முத்தியை அடைவதற்கு சாதுர்மாசியம் எனப்படும் அனுட்டிப்புக்கு உரிய நான்கு மாதங்களுக்கு முன்னர்ப் பொருந்தும் எட்டு மாதங்களிலும் வறியவனைப் போன்று இருந்து, தனக்கு அன்னியமாகக் காணப்பட உள்ள இந்திரியங்கள் முதலான விடயங்கள் அனைத்தையும் நீத்துத் தனது அழகிய தேகம் வாடி வற்றும் வகையில் உணவைச் சிறிதளவாகவே உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டு, கொழுப்பை மிகுவிக்கும் பண்டங்களை மனத்தாலும் நினைக்காமல் துறவி தனது துறவறநெறியைப் பிழைபடாமல் காக்க வேண்டும் என நாரதபரிவ்ராஜகம் ஏழாம் உபதேசம் கூறும்.

**7.** ரசமாகத் திரண்டுள்ள நெய்யை இரத்தத்துக்கு நிகராகவும் இரவில் புசிக்கப்படும் உணவு மாமிசத்துக்கு நிகராகவும், மணம் பொருந்துமாறு செய்யும் சந்தனம் அசுத்தமான மலத்துக்கு நிகராகவும், விழைவு என்பதை பசுமாமிசத்துக்கு நிகராகவும், தலையில் எண்ணெய்விட்டுத் தேய்த்து முழுகுவதை வளையல் அணிந்து சிவந்த கைகளை உடைய பெண்களோடு கொள்ளும் கூட்டம் எனவும் வலிமை தரும் உப்பைச் சண்டாளனுக்கு நிகராகவும் கருதும் தூய துறவியின் மனோபாவத்தை நாரத பரிவ்ராஜகத்தின் ஏழாம் உபதேசம் கூறும்.

**8.** நண்பர்களோடு அளவளாவிக் களித்தல் தீநாற்றம் வாய்ந்த சிறுநீருக்கு நிகர் என்றும், தன் கண்களால் முன்னர் நேரே பார்த்துப் பழகி இருந்த பெரிய ஊர், கீழ்மக்கள் வசிக்கும் சேரிக்கு நிகர் என்றும், பெண்ணுடன் கொள்ளும் நட்பு பாம்பின் விடத்தை நிகர்க்கும் எனவும், ஆடை, தூய்மையற்ற எச்சிற்கலனுக்கு நிகர் எனவும், ஒளிமிகும் பொன் கொடிய நஞ்சுக்கு நிகர் எனவும் துறவி கருத வேண்டும் என நாரத பரிவ்ராஜகத்தின் ஏழாம் உபதேசம் உணர்த்தும்.

**9.** அனைவர்க்கும் உயர்ந்து விளங்கும் அரசன் வாழும் தலைநகரம் கும்பிபாகம் எனும் நரகத்துக்கு நிகர் எனவும், பொதுமன்று எனப்படும் சபைத் தலம், உடலை நெருப்பானது தகிக்க உள்ள சுடுகாடு என்பதை ஒக்கும் எனவும், அடர்ந்து செறியும் பற்றுக்களை அறவே நீத்துள்ள துறவி திடமாகப் பாவித்துத் தன் உயிருக்குப் பற்றுக்கோடாக உள்ள இந்த உடல், பிணத்தை ஒத்து இருப்பதாய் மிகவும் இழித்துக் கூறப்பட உள்ளது என நன்குணர்ந்து துறவியானவன், தனக்குத் துன்பம் மிகாத வகையில் மிகவும் சேய்மையில் உள்ள இடத்தில் வசித்து இருப்பானாக என நாரத பரிவ்ராஜகம் ஏழாம் உபதேசம் கூறும்.

**10.** செல்வம், உணவு, உடை, கீர்த்தி முதலானவை (தனக்கு அதிகமாகக் கிடைக்க வில்லை என்பது) மட்டும் பற்றி, வெறுப்பு காரணமாகக் துறவறம் மேற்கொள்ளும் ஒருவன், பல்வகை ஒழுகலாறுகளுக்கு இடமாக உள்ள இந்த உலகில் இம்மைப்பயன், மறுமைப்பயன் ஆகிய இரண்டையும் இழந்துள்ள மிகவும் கீழான வறியவன் ஆவன்; அவன் வீடுபேற்றை அடையமாட்டான் என்று சாமவேத மைத்திரேய உபநிடதம் உறுதிபட வற்புறுத்திக் கூறும். இதனை அறியும் விவேக ஞானியர், என்னுள் அருள் உணர்வாக விளங்கும் அருணகிரிப் பெருமான் புகழ்ந்து துதித்த ஒப்பற்ற குகக்கடவுளின் தாள் நிழலை உறுதியாகச் சேர்வர்.

# 81. கந்தசாமி

ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியா சிரியவிருத்தம்.

*தனதனன தந்த தந்த தனதனன தந்த தந்த*
*தனதனன தந்த தானனா ★*

**அ**மிர்தமதி னுஞ்சி றந்த வமிர்தநினை கின்ற வின்ப
வறிவுடைய துங்கர் நானெனா
இமிழ்தலையும் வஞ்ச நெஞ்சி லெனதெனவெ ழும்பு கின்ற
தையுமலம்வி ழும்பு னீரெனா
நிமிருளினி னைந்து கண்டு கழுவுவது யர்ந்த துங்க
நிகழ்சவுச மென்ப ராலனோர்
அமருநிலை யென்று நன்கு தருவையென தன்பி லென்று
மணவுமொரு கந்த சாமியே. (1)

*தாத்ததன தத்த தானா தாத்ததன தத்த தானா*
*தாத்ததன தந்த தானனா.*

**ஆ**ட்டுனைநி னைப்ப தாலே யூத்தைமதி சுத்த மாமா
வாத்தபர தந்த்ர வேழையேன்
நாட்டநடு நிற்கு நாதா நீக்கமிறி ருக்கு கேசா
ஞாட்பனக வென்று கூவியே
பாட்டொடுது திப்ப தாலே வாக்கதுப வித்ர மாமூ
னாக்கைமெய்வ ணங்க லானுமா
சோட்டுபரி சுத்த மாமோர் மேத்தியமு மற்ற நாயே
னூற்றமெது கந்த சாமியே. (2)

*தனதனன தந்த தந்தா தனதனன தந்த தந்தா*
*தனதனன தந்த தானனா.*

**ம**னைமனையு டன்பி றந்தோர் மகவிவைது றந்து வந்தோன்
மனசினிலெ ழும்பன் மோகமாம்
அனையையும ணங்கெ னும்பா ரியையும ரும்பொ னென்சோ
தரனையும கந்தை யாயசே

★ *இச் சந்தத்திற்பாடுகவெனக் கனவிற் கூறியருளியவாறு ஆசிரியர், பத்து வகைப் பேதமுற இப்பத்தைப்பாடினா ரென்க.*

1. *இமிழ்தல் = ஒலித்தல் ; "தெரியிமிழ் கொண்டது மியம்போ லின்னிசை" என்றார் மலைபடு கடாத்தினரும்.*

யினையுமுடை யன்பி னும்பே தெழவுளகு டும்பி யென்றே
யெணவுளனெ னுஞ்செ மோனர்சீர்
தனையறிய வென்று நன்கா ரருள்புரிவை யென்ற னெஞ்சா
சனமருவு கந்த சாமியே. (3)

*தானதன தந்த தந்த தானதன தந்த தந்த*
*தானதன தந்த தானனா.*

**பே**முயர்கு டும்ப மங்கை சேயெனவி ளம்பு கின்ற
பேர்களைம றந்து சார்பிலான்
மாமலியு மன்ப தென்ற காதலியை யுஞ்சி றந்த
வானவறி வென்ற சேயுமே
பூமிசைம றந்த கன்றி டாதுரிய வென்று கொண்டு
பூரணம ணைந்து வாழ்கமா
சேமமுட னென்றி யம்பு வோர்விழும மென்க ணென்று
சேருநவில் கந்த சாமியே. (4)

*தனதனன தத்த தந்தா தனதனன தத்த தந்தா*
*தனதனன தந்த தானனா.*

**இ**ழிவறுமு முட்சு வென்பா னுரியவிரு பத்தொ டொன்றா
மினமுறையை யுந்தெ ணீரனாய்
மொழிபிரம வித்த னென்பா னொருசதமொ டொட்டுமொன்றா
முதுகுலனை யும்பொ யாமலே
கழிகரைக டத்து கின்றா ரெனமறை யிசைக்கு மென்றோர்
கலைவலர்து றந்துய் வேமெனா
வழிபடுந ரைத்த கைந்தே னுழல்வரெனு முத்த ரின்பே
மருவவருள் கந்த சாமியே. (5)

*தத்ததன தத்த தந்தா தத்ததன தத்த தந்தா*
*தத்ததன தந்த தானனா.*

**ந**ற்பிரம வித்த னென்பா னுத்தமவி ழிப்பி னின்றோர்
நச்சரவு தங்கு லோகமே
அற்புதமி குத்த விண்பா லுப்புடையு டுத்த மண்பா
லச்சுடனி யங்கெ லாருமேல்

---

3. *அணங்கு = ஆசை;* ***ணகரவெதுகை.***

5. ***பைங்கலோபநிஷத்தின் 6–****ஆம் அத்தியாயமே இங்கு "மறை" எனப்பட்டது.*

6. *செடி = பாவம்.* ***வராஹோபநிஷத்தின் 4–****ஆம் அத்தியாயமே இங்கு "வேதம்" எனப்பட்டது.*

உற்பவம னைத்தி னுஞ்சூழ் வுற்றசெடி யைக்க டந்தே
ணொப்புறுவ ரென்று வேதமே
பொற்புடன ரற்று மென்றோர் விற்பனர்ம திக்கு நன்கார்
புத்திகொடு கந்த சாமியே. (6)

*தனதனன தந்த தான தனதனன தந்த தான*
*தனதனன தந்த தானனா.*

**எ**வனுயிரொ டுங்கு காலை யெவரைமன சின்க ணாசை
யெழநுதல்வ ரம்ப னோவனோன்
அவருருவ மென்ப தாமெ யணவுநனு யர்ந்த யோக
வறிஞனக மெங்கு மாயவோர்
சிவமருவ லன்றி வேறு வினைகளில னென்று தூய
திருமறையி யம்பு தீர்விலே
உவமையில கண்ட சோதி யெனுமுனில டங்கி வாழு
முறழ்வையருள் கந்த சாமியே. (7)

*தனதனன தான தத்த தனதனன தான தத்த*
*தனதனன தந்த தானனா.*

**அ**றிவனலி னாலெ ரித்த வறிஞனுட லான தைச்செ
வனலிடைவ ழங்கொ ணாதுமா
சறுபுடவி யான தற்கு ளமரவிட லாகு மக்க
ணசுசியிலை யந்த மேவினார்
சிறுவரளி யாலி யற்று கிரியையிலை யாமெ னச்சொ
றிருமறையி னின்ப வாணிதான்
வெறிதுசெறி வாய வெற்கு முரிமையுள தாயி ருக்க
விரவியருள் கந்த சாமியே. (8)

*தந்ததன தந்த தந்த தந்ததன தந்த தந்த*
*தந்ததன தந்த தானனா.*

**ச**ந்ததமு நின்ற னன்பு தஞ்சமென நின்ற நண்பர்
தங்கணடை துன்பு மாலெலாம்
நந்தமுன யர்ந்த வுன்ற னன்பனெனு மென்பு னெஞ்சு
நம்பொடுபு ரிந்த தீதெலாம்

---

*7. அடங்கல் = சீவபோத வொடுக்கம்.*

*8. அசுசியிலை = சூதகமில்லை. கிரியை = அபரக்கிரியை.*
*பைங்கலோபநிஷத்தின் 4–ஆம் அத்தியாயமே "திருமறை" எனப்பட்டது.*

வெந்தொழிய வந்தெ மன்ப புன்கணிலை யென்ற ணைந்து
விண்சுரர்ப்பு கழ்ந்த வாழ்வையே
தந்திடுவை நம்பு மெங்கள் சிந்தைகுடி கொண்ட துங்க
சம்புசிவ கந்த சாமியே. (9)

*தனதனன தான தந்த தனதனன தான தந்த*
*தனதனன தந்த தானனா.*

**அ**மரருடை யாதி யென்ற வுனிலுமுயர் தேவ ருஞ்சொ
லணிமறையி றைஞ்சு னோடுதான்
சமமுடைய பேரு மெங்கு மிலையெனவு சாவ விஞ்சு
தனியுணர்வு தந்த வீசுரா
எமனுடைய வூறொழிந்த வருணகிரி நாதர் சொந்த
விறைவநவ வன்பர் நாயகா
குமரகுரு தாச னென்று நவிலெனைவி டாது வந்து
கொளுதிசிவ கந்த சாமியே. (10)

# 81. கந்தசாமி

1. எனது பக்திப்பெருக்கில் எப்பொழுதும் பொருந்தி விளங்கும் ஒப்பற்ற பெருமைவாய்ந்த கந்தப் பெருமானே! அமிழ்தத்தின் சுவையைக் காட்டிலும் மேம்பட்ட ஆனந்தச் சுவையுடைய அமிழ்தமயமான சண்முகப் பெருமானை தியானிக்கின்ற பேரின்பமயமான அருள்ஞானம் வாய்க்கப்பெற்றுள்ள உயர்ந்த முனிவர்கள் 'நான்' என அகங்காரத்துடன் கூறுவதையும் வஞ்சனைக் குணம் வாய்ந்த உள்ளத்தில் ' எனது' எனத் தோன்றும் மமகார நினைவையும் மிகவும் இழிந்த மலமாகவும் சிறுநீராகவும் விவேக உள்ளத்தால் சிந்தித்து உணர்ந்து, கூறப்பட்ட அகங்காரத்தையும் மமகாரத்தையும் அறவே நீத்து விடுவதுதான் மிகவும் உயர்ச்சி பொருந்திய தூய்மை நிலை எனக் கூறுவார்கள். அத்தகைய தூய்மைநிலைவாய்ந்த ஞானியர்கள் அடையக்கூடிய நிட்டைநிலையை நீ எனக்கு நன்றாக என்றைக்குத் தரப் போகிறாய்?

2. கந்தப்பெருமானே! அனைத்தையும் இயக்குகின்ற உன்னைக் தியானிப்பதன் மூலம் அகங்கார மமகார அழுக்குடைய உள்ளமானது தூய்மை அடையும். பல்வகைப்பட்ட தீயநினைவுகளாகிய விலங்குகள் சேர்ந்திருப்பதால் மற்றவற்றிற்கு அடிமைப்பட்டுவிட்ட அறிவிலியாகிய எனது ஒருமுகப்பட்ட தியானத்தின் நடுவில் எழுந்தருளும் தலைவனே! எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அருட்செல்வம் மிக்க குகப்பெருமானே! பெருமையும் தூய்மையும் இயல்பாக வாய்க்கப் பெற்றுள்ளோய்! என இவ்வாறு ஓயாமல் உன்னைப் பாட்டுக்கள் மூலம் துதிப்பதால் நாம் சொல்லும் சொற்களானவை தூய்மை அடையும்.

*9. புன்கண் = துன்பம்.*

உண்மையான பக்தியுடன் இறைவனை வணங்குவதன் மூலம் தசையும் நரம்பும் பொருந்திய உடல், அனைத்து விதமான அழுக்குகளும் நீங்கப் பெற்றிருக்கும் மேலான தூய்மை நிலையை அடையும். எந்தவிதமான அறிவும் இல்லாத அடியேனுக்குப் பொருந்தியுள்ள வழியாக அல்லது பற்றுக் கோடாக உள்ளது எது ? கூறி அருள்.

**3.** என் மனமாகிய தாமரைப் பீடத்தில் எழுந்தருளும் கந்தப் பெருமானே ! வீடு, மனைவி, உடன்பிறந்தோர், பிள்ளைகள் ஆகிய இவைகளைத் துறந்து புறத்துறவு கொண்டு வெளியே வந்தவனின் உள்ளத்தில் தோன்றுகின்ற பல்வகையாய்க் கிளைக்கும் மோகம் எனும் தாயையும், ஆசை எனப்படும் மனைவியையும், பொன்னாசை எனப்படும் சகோதரனையும், அகந்தை எனப்படும் மகனையும் உடையவனாக இருப்போன் ஆனால், அவன் வீட்டைத்துறந்து வெளியே வந்த பின்னரும், அச்சத்தைத் தரத்தக்கதான குடும்பபாரம் உடையவனே ஆவன் என்று கூறும் செம்மையான மோன ஞானியரின் சிறப்புநிலையை உணர்ந்து கொள்ள, நன்மை நிறைந்த நினது அருட்செல்வத்தை நீ எனக்கு எப்பொழுது அருள்புரிய உள்ளாய் ?

**4.** கந்தப்பெருமானே ! “அச்சம்தரும் குடும்ப பாரத்திற்குக் காரணமான மனைவி, பிள்ளை எனச் சொல்லப்படும் இவர்களையெல்லாம் மறந்து, தன்னைச் சார்ந்துள்ள பந்தங்கள் அனைத்தையும் துறந்தவனான பெரியோன் பெருமை நிறைந்த இறையன்பு (பக்தி) எனப்படும் காதலியையும், சிறந்து மேம்பட்டுள்ள பதிஞானம் எனப்படும் மகனையுமே (இவ்வுலகில் ஒருபொழுதும் மறக்காமல் அன்பெனும் காதலியுடனும் அறிவு எனும் பிள்ளையுடனும் எப்பொழுதும் சேர்ந்திருந்து, இவையே நிலையான துணையாவதற்கு உரியவை என உணர்ந்து கொண்டு, பெருநலத்துடன் முழுநிறைவு பெற்று வாழ்க” என்று வாழ்த்தி அருளும் ஞானப் பெரியோர்களின் சிறப்புநிலை எனக்கு எப்பொழுது வாய்க்கும் ? கூறி அருள். (துறந்தவனான பெரியோன் வாழ்க என வாழ்த்தும் ஞானப் பெரியோர்)

**5.** கந்தப்பெருமானே ! "வீடுபேற்றை விரும்பி அதற்குரிய வழியில் நிற்போனாகிய இழிவற்ற முமுட்சு என்போன் தனக்கு முற்பட்டும் பிற்பட்டும் உள்ள இருபத்தோரு தலைமுறையினரையும், நல்ல நிலைக்கு உயர்த்துபவனாகவும், புகழப்படும் பிரம்மவித்தன் எனப்படும் உயர்ஞானி தனக்கு முற்பட்டும் பிற்பட்டும் உள்ள நூற்று ஒரு தலைமுறையினரையும் உண்மையிலேயே முத்திக்கரையில் சேருமாறு செய்கின்றான் என வேதம் கூறும்” என ஆராய்ந்துணர்கின்ற ஞானிகள், துறவு நெறியை மேற்கொண்டு உய்தி பெறுவோம் எனக் கருதி அந்நெறியில் செல்ல விரும்புபவர்களை, அவ்வாறு செல்ல வொட்டாது தடுத்து ஏன் வருந்துவார்கள் ? – இவ்வாறு உறுதியாகக் கருதும் சீவன் முத்தர்களின் பேரின்ப நிலையை நானும் பொருந்தி விளங்க அருள்புரிவாய்.

**6.** கந்தப்பெருமானே, “முழுதும் உணர்ந்த பிரம்ம ஞானி எனப்படுவோனின் உத்தமமான அருட்பார்வையில் அகப்பட்டோர்கள், ஆதிசேடனால் தாங்கப்பெறும் உலகிலும், அற்புதம் மிகுந்த ஆகாயத்தின் கண்ணும் உவர்க்கடலை ஆடையாகக் கொண்டுள்ள நிலவுலகத்திலும் பற்பல வடிவங்களுடன் இயங்கிக் கொண்டிருக்கும் எல்லோர்க்கும் மேம்பட்டவர்களாகிப்

பிறவிகள் தோறும் தொடர்ந்துவரும் தீவினைப் பயனிலிருந்து நீங்கிப் பேரின்பத்தை ஒருமிக்கப் பெறுவார்கள்.'' என வேதமானது (வராக உபநிடதம்) மிகவும் நயமாக வலியுறுத்திக் கூறும். இவ்வாறு வரும் வேதமொழியை ஆய்ந்து சிந்திக்கின்ற ஞானப்பெரியோர்களால் மிகவும் உயர்வாகக் கருதப்படும் நன்மைமிகுந்த மனோலய நிலையை எனக்குக் கொடுத்தருள்க.

7. கந்தப்பெருமானே! ''எவன் ஒருவன் தன் உயிர் நீங்கும் சமயத்தில் யாரை மனத்தில் நினைத்து ஜெபிக்கும் நிலையில் இருந்தானோ அவன், அவனால் நினைக்கப்பட்ட அவரது வடிவமே எனத்தக்க உடலைப் பொருந்தியவனாய், சிறந்த சிவயோக ஞானியின் திருவுள்ளமயமாகத் திகழ்கின்ற மங்களகரமான நிலையைப் பொருந்துவான்; அவன் மற்றுள்ள பல்வேறு வினைப் பயன்களால் துன்பம் அடையமாட்டான்'' எனத் தூய வேதம் கூறும் கோட்பாட்டை உணர்ந்தவனாகி, உவமை இல்லாததாய் எங்கும் பூரணமாக வியாபித்துள்ள பேரொளிமயமான உனது வடிவத்துள் சீவ போத ஒடுக்கமுற்று வாழும் ஞானப்பெருநிலையை எனக்குக் கொடுத்தருள்க.

8. ''கந்தப்பெருமானே! மெய்ஞ்ஞானமாகிய நெருப்பினால் எரிக்கப்பட்ட ஞானியின் உடலை, செந்நெருப்பில் இட்டு எரிக்கக் கூடாது. புரைதீர்ந்த புனித மண்ணுக்குள்ளே அடக்கம் செய்வதே தகுதியான செயலாகும். அவன் இறக்கும்போது, பொதுவாக இறப்பு நேர்வதால் ஏற்படும் தீட்டு (சூதகம்) இல்லை, இறப்பு அடைந்தவர்களின் மக்கள், அந்த ஞானி மீது கொண்டுள்ள அன்பால் செய்ய வேண்டிய சடங்குகளும் இல்லை." எனக் கூறும், பைங்கல உபநிடதத்தின் இன்பமயமான வாசகம். வீணே உடலெடுத்துள்ள எனக்கும் உரிமையோடு பொருந்தி இருக்கும் வண்ணம், என் உயிருக்குள் உயிராகக் கலந்திருந்து அருள் புரிவாயாக.

9. விரும்பித் துதிக்கும் எங்களின் உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு உயர்வுடன் விளங்கும் பேரின்பமயமான சம்புவே! (சம்பு = உயிர்களுக்கு இன்பம் விளைவிப்போன்), சிவசொரூபமாகக் காட்சி அளிக்கும் கந்தப்பெருமானே! எப்பொழுதும் உனது திருவருளே பற்றுக்கோடு எனக் கருதிவாழும் அன்பர்களுக்கு நேர்கின்ற துன்பம், அறியாமை, மோகம் முதலானவை யெல்லாம் கெட்டு ஒழியுமாறு முன்னர்த் திருவருள் புரிந்த உனது அடியானாகிய எனது அற்பநெஞ்சம், பெரிதும் ஈடுபாட்டுடன் செய்த தீமைகள் அனைத்தும் அடியோடு நீங்குமாறு என் முன்னர் எழுந்தருளிவந்து "எம் அன்பனே! உனக்கு இனி ஒரு போதும் துன்பம் இல்லை" என அருள்வார்த்தை கூறி, என்னுள் இரண்டறக் கலந்து கொண்டு, விண்ணுலகத்துள்ள தேவர்களும் புகழ்ந்து துதிக்கும் படியான உன் அருளானந்த மயமான வாழ்வுப்பேற்றையே எனக்குத் தந்தருள்வாய்!

10. சிவ சொரூபமாகக் காட்சி யளிக்கும் கந்தப் பெருமானே! தேவர்களுக்கெல்லாம் பெருந்தலைவனாக விளங்கும் உன்னைக் காட்டிலும் உயர்ந்து விளங்கும் கடவுளரும், நாதமயமான வேதங்களும் போற்றித் துதிக்கும் உனக்குச் சமமாக விளங்கும் கடவுளரும் எங்கும் இல்லை, எப்பொழுதும் இல்லை என ஆய்ந்து தெளிந்துணர, மிகவும் மேம்பட்டதான ஒப்பற்ற ஞானப் பேற்றைத் தந்தருளிய ஈசுவரனே! உனது திருவருளால் கூற்றுவனின்

அதிகாரத்தையும் கடந்து மேம்பட்ட அருணகிரிநாதப் பெருமானுக்கு உரியவனாய் விளங்கிய இறைவ! வீரவாகு முதலான நவவீரர்களுக்கும் வாய்த்துள்ள தனித்தலைவனே! குமரகுருதாசன் என அழைக்கப்படும் என்னைவிட்டு எப்பொழுதும் நீங்காமல் என்னோடு இரண்டறக் கலந்து அருள்க.

## 82. புகழ்மருவு மறைகள்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பு**கழ்மருவு மறைகளெலாம் புகழ்பிரம மென்பதற்குப் பொருடான் வேள்வி
இகழ்வில்வே தம்பெரிய தெனவாகு மப்பிரம மென்னு மாற்றந்
தகுமுரிமை யாயேனைத் தேவதைகட் குரைத்தலுப சார முற்கஃ
தகலாது சுப்பிரம ணியமெனவஃ தேமுழக்கு மாளெந் தாயே. (1)

**பி**ரமபதந் தனைச்சொந்த மாகவுறு நாமத்தோய் பிறங்கு மர்த்த
உரிமைவழி வேள்விமுதல் வேதமுத லுலகமுத லெனவா வாயென்
றிரிபறநன் குணர்பவர்க ளுலகமது சித்தசித்தா யிருத்தல் பற்றிப்
பெரியவுனைப் பாசபதி பசுபதியென் றுந்தெளிவார் பிணக்கில் லாரே. (2)

**சு**திவிளக்குந் தைத்திரியம் பசுபதியின் பொருட்டுநமற் கார மென்றும்
பதிவிளக்கு மமரசிம்மஞ் சம்புவென்பார் பசுபதியா மென்றுஞ் சொற்ற
விதியிருக்கும் பரம்பொருணீ யென்றறிநல் விதியுடையா ரிதயத் தென்றும்
பதிவிருக்குங் குகதேவே யென்னரந்தை பாற்றியருள் பகுத்தா ளன்றே. (3)

**ப**சுவினகத் தந்தரியா மித்துவமா யுளகுகனே பதியன் னோனே
பசுபதியென் றாவானிப் பெயர்கொண்டே யரும்பூத பதியே யென்றும்
விசுவமிசை நயப்புளரா லேயழைக்கப் படுவனெனா மெய்காண் மெய்யர்
பசியறியா துய்யவருள் பாலிக்கும் பெரியோயென் பற்றெற் றாயே. (4)

**சு**கத்தையிசைப் பவன்சம்பு வெனவருத்தங் கண்டவணஞ் சுகத்தை யீவோன்
மிகப்பெரிய வவனேசங் கரன்சிவன்மா மிருடனெனும் பெயர்கண் மேவி
மகத்துக்க ளேத்தவுள னவன்றானே பசுபதிப்பேர் வயங்கு நீயென்
றகத்தெளிவு கொளும்விழுமி யோர்பகவ பழிச்செனையு மாண்டு கொள்ளே. (5)

---

*2. "உன்னைப் பாசபதி பசுபதியென்றுந் தெளிவார்" என்றதை, "ப்ரதாந க்ஷேத்ரஜ்ஞபதி:" என்னுஞ் **சுவேதாச்வதரோபநிஷத்** மொழிகளினும் பெறுக. பிரதானம் = பிரகிருதி. க்ஷேத்திரஞ்ஞன் = சீவன். சுப்பிரமணிய மென்னுந்திருநாமம், இங்குரைத்தவாறே பொருள் பயந்து நிற்பதன்றி வேறு பொருள்களும் பயந்து நிற்றலைச் **சதானந்தசாகரத்** தறியலாம்.*

**பெ**ருமையுடைச் சுவேதாசு வதரமொழி யுருத்திரனே பிறப்பி லானென்
றுரைதருமன் னணமதர்வ சிகைமூர்த்தி மூவர்களு முதிப்ப ரன்னோர்
சருவகா ரணராக மாட்டார்கள் சம்புவெனு மொருவன் றானே
சருவகா ரணனயன மீறில்லி யெனுமந்தச் சாமி நீயே. (6)

**தி**யானிக்கப் படுபவனென் றருத்தமறி தற்காய தியேய னென்னுந்
தயாவுற்ற சம்புவினைத் தியானிப்போ னெனவருத்தஞ் சாற்ற வுள்ள
தியாதாவென் றுருத்திரனை யதர்வசிகை சொலல்சைவத் தீர்வா மந்த
வியாபகசற் சம்புநினை வழிபடுவோர் சாம்பவரே மெய்யர் மெய்யே. (7)

**சி**வனொருவ னென்பானே தியானிக்கற் பாலனவன் சிவத்தைச் செய்யும்
பவுள்சுடையோ னெனுமதர்வ சிகைவசன வண்மைவளம் பார்த்த கண்ணார்
அவனொருவ னல்லாது பிறிதொருதே வெற்றினுக்கென் றடங்கி டாரோ
எவருமிறைஞ் சச்சிவமா யவிர்குகனே யடிமையிட ரெருக்கி யாளே. (8)

**ஆ**ன்மாவி லிருந்ததனை யியக்குமந்த ரியாமியா மருளா என்றான்
ஆன்மாவுக் கான்மாவென் றறைபிருக தாரணிய வறையி னானே
ஆன்மாவை யசைத்தாட்டு மைந்துதொழி னடராயன் குகனா வானென்
றான்மாவி லுனையறியும் பேறுடையார் காண்பரெனை யாளெம் மானே. (9)

**கை**வல்லி யோபநிட முறவியுளத் துளகுகனைக் கடவு ளாய
துய்யசிவ னாப்பன்னு மல்லாது வேறுபுத்தேள் சொலவே மாட்டா
தையமிலம் முடிபாலே குகன்சிவனுஞ் சிவன்குகனு மாமா றோர்வார்
தெய்வதமே யருணகிரி யுண்முதமே யென்விழைவு தீரச் சேரே. (10)

---

***6.*** *சிவன் பிறப்பிறப்பிலானென் றோது* ***சுவேதாசுவதரம், அதர்வசிகை*** *யென்னும் உபநிடதங்களின் வடமொழிகளைச்* ***சைவசமயசரபத்தின்*** *கைவல்லியகாண்டத்துப் 13–ஆம் அத்தியாயத்திற் காண்க. அங்ஙனமே வேறு பிரபலப்பிரமாணங்களு முள; அவையற்றையும் உரையிற் கோடலென்னும் உத்தியால் இங்குக்கொள்க.*

***8.*** *பவுள்சு = சம்பத்து; இச்சொல்லிலக்கணம்,* ***திட்பத்தில்*** *(கருணைக்குகப் பிரமம் 6–ன் உரை) ஓர்க. எருக்கல் = கொல்லுதல்;* ***சூ–நிகண்டு.***

***9.*** *பிருகதாரணிய அறை = பிருகதாரணிய கோபநிஷத்தின் 5ஆம் அத்தியாயத்து 7ஆம் பிராஹ்மணத்தில் – (ஏஷத ஆத்மாந்தர்யாம் யம்ருத: =) "இவனே (=அவனே) ஆன்மாவின் அந்தரியாமி, அமிருதன்" என வருவதேயாம். ஆன்மாவிலிருந் ததனையியக்கு வோனே அந்தரியாமி யாகலின் அவன், ஆன்மாவுக் கான்மா வெனப்படுவ னென்க.*

***10.*** *தெய்வதம் = தெய்வம்; "சூரே யணங்கு கடவு டெய்வதம் – தேவுபுத் தேளியவு டெய்வ மாகும்" என்றார்* ***பிங்கலநி****கண்டி னரும்.*

# 82. புகழ்மருவு மறைகள்

1. உலக நன்மைக்காக வேள்விகளை விதிக்கும் இகழ்வற்ற வேதமானது, பிரசித்திபெற்ற மறைகள் அனைத்தும் புகழும் 'பிரமம்' என்பதற்குப் பெரியது எனும் பொருள் கூறுவதாகும். அந்தப் பிரமம் என்னும் பெயரை உரிமையுடையதாய் மற்றைய தெய்வங்களுக்கும் பொருத்திக் கூறுதல் வெறும் உபசாரமே. ஆனால் உனக்கு அப்பெயர் உபசாரமாக ஆகாமல் உரிமை இயற்கைப் பெயராக வாய்த்துள்ளதால், அந்த வேதமே 'சுப்பிரமணியம்' என மும்முறை முழங்கிக் கூறுகிறது. அந்த பிரம்மப்பொருளாக உள்ள எந்தையே! என்னை ஆட்கொண்டருள்.

2. பிரமம் என்னும் சொல்லை உனக்கே உரிமையாகப் பெற்றுள்ள திருப்பெயர் உடையோய்! முறைப்படி விளங்கும் உரிமையான அருத்தப்படி நீ 'வேள்விக்கு முதல்வன்' எனவும் வேதத்துக்கு முதல்வன் எனவும் உலகிற்கு முதல்வன் எனவும் ஆவாய் என்று விபரீதமும் மயக்கமும் இல்லாமல் உரியபொருளை நன்கு உணர்பவர்கள், பகைமையும் முரண்பாடும் இல்லாதவர்களாகி, உலகமானது சித்து–அசித்து மயமாக இருத்தலால், பெரிய பொருளாகிய உன்னை பாச பதி என்றும் பசுபதி என்றும் தெளிவாக அறிபவர்களாவர்.

3. நற்கதிப் பெருமையை விளக்கும் தைத்திரிய உபநிடதம் 'பசுபதியின் பொருட்டு வணக்கம்' (பசுபதயே நம:) என்றும், பதி என்னும் சொல்லின் பொருளை விளக்கும் அமரசிம்மம் என்னும் நிகண்டு "சம்பு எனப்படும் சிவன் பசுபதி ஆவான், என்றும்'' கூறும் விதிமுறை நன்கு பொருந்தியிருக்கும் பரம்பொருள் நீயே ஆவாய் என நன்கு அறியும் ஞானநெறிமுறை வாய்த்துள்ள பெரியோரின் இதயத்தே எப்பொழுதும் ஆழப்பதிந்து விளங்கும் குகதேவே! எனது துன்பத்தை அறவே அகற்றி, நினது திருவருட் பேற்றை எளியேனுக்கும் உரிமையாக்கி ஆட்கொண்டருள்!

4. பந்தப்பட்டுள்ள ஆன்மாவின் உள்ளே அந்தர்யாமித்துவ மயமாக விளங்கும் குகப்பெருமானே பதி எனப்படுபவன். அவனே பசுபதி என அழைக்கப்படுவோன் ஆவன். இப்பெயராலேயே அரிய முறையில் ''பூதபதி'' என்றும், இந்நிலவுலகில் அன்பு நெறிப்பட்டுள்ளார் அனைவராலும் அழைக்கப்படுகின்றான் என, உண்மையை உள்ளவாறு காணும் சத்தியஞானிகள், பசி என்பது அறியாமல் உய்திபெற்று விளங்கத் திருவருளை வழங்கும் பெரியோய்! என் பந்தமாகிய உபாதிகளை முழுவதுமாக விலக்கி அருள்!

5. அனைத்துயிர்க்கும் சுகத்தைக் கொடுப்பதால் சம்பு எனப்படுகிறான் என உண்மையான அர்த்தம் வேதாகமத்தில் காணப்பட்டுள்ளது போன்று சுகத்தை வழங்குவோனாகிய மிகப்பெரிய பொருளாக உள்ள அவனே சங்கரன், சிவன், மிருடன் என்னும் திருப்பெயர்கள் பொருந்தப் பெற்றுப் பெரிய ஞானியரும் முனிவர்களும் புகழுமாறு உள்ளான். அத்தகைய சிவனே, பசுபதி என்னும் நியாயகாரணப் பெயர் விளங்குமாறு உள்ள நீதான் எனும் உள்ளத்தெளிவு கொண்டிருக்கும் சிறந்த அருளாளர்களின் இறைவ! துதிக்கும் எளியேனையும் ஆட்கொண்டருள்.

**6.** பெருமைவாய்ந்த சுவேதாசுவதரம் எனும் உபநிடத வாக்கியமானது ’ருத்திரனே பிறப்பும் இறப்பும் இல்லாதவன்’ என உரைக்கிறது. அவ்வாறே அதர்வணசிகை எனும் உபநிடதமும் ’வடிவுடைய பிரம்மன் முதலான மூவரும் ஒவ்வொரு காலத்தில் உதிப்பவர்கள் ஆவர். அவர்கள் அனைத்திற்கும் மூலகாரணமாக ஆகமாட்டார்கள். சம்பு எனப்படும் ஒருவனே அத்தகைய சர்வ மூல காரணன். அவனே பிறப்பும் இறப்பும் இல்லாதவன்’ எனக்கூறும். அவ்வாறு உணர்த்தப்படும் மூலகாரண சிவபரம் பொருள் நீயே!

**7.** தியானிக்கப்படுவோன் எனும் பொருளை அறிந்துணருமாறு உள்ள தியேயன் எனும் சொல்லால் குறிக்கப்படும், தயைநிறைந்த சம்புவாகிய சிவபெருமானைத் தியானிப்போன் எனும் பொருளைக் கூறுமாறு உள்ள தியாதா எனும் சொல்லால் அதர்வசிகை எனும் உபநிடதம் ருத்திரனைக் கூறுதல் பிழைதீர்ந்த சைவநெறி முடிபாகும். சத்தியம் உணர்ந்த மெய்ஞ்ஞானியர்கள் போற்றும் மெய்ப்பொருளே! வியாபகமாக உள்ள அந்த சற் சம்புப் பெருமானாகிய உன்னை வழிபடுவோர் அனைவரும் சாம்பவர் என அழைக்கப்படுபவர்களாவர்.

**8.** சிவன் எனப்படும் ஒருவனே தியானிக்கப்படுவதற்கு உரியவன். அவனே பரம மங்களமாகிய சிவத்துவ நிலையை அருளும் பேரருட் செல்வம் உடையவன் எனக்கூறும் அதர்வசிகை வாக்கியத்தின் வண்மையையும் வளத்தையும் நன்குணரும் அருட்கண் உடைய பெரியோர் “அவன் ஒருவனைத் தவிர்த்து வேறொரு தெய்வம் எதற்காக” எனத் தீர்மானித்து அவனிடத்தேயே உள்ளம் ஒன்றி அடங்கி இருக்க மாட்டார்களோ! அனைவரும் வணங்கித் துதிக்குமாறு சிவபரம்பொருளாகவே விளங்கும் குகப்பெருமானே! உன் அடியவனாகிய எனது துன்பங்களையெல்லாம் அறவே அழித்தருளி ஆட்கொள்க.

**9.** ஆன்மாவுக்குள்ளேயே இருந்து, அதனை இயக்கும் அந்தர்யாமியாக விளங்கும் அருளாளனாகிய முதல்வனே ஆன்மாவுக்கும் ஆன்மாவாக விளங்குகிறான் என பிருகதாரணியக உபநிடதம் கூறும் கூற்றால், ஆன்மாவைச் செயல்களில் ஈடுபடச் செய்து இயக்குவிக்கும், படைப்பு முதலான ஐந்து தொழில்களைச் செய்யும் நடராசப்பெருமான், குகப்பெருமானே ஆவான் என, ஆன்மாவுக்குள்ளேயே உன்னை உணரும் அருட்பேறு வாய்த்த ஞானியர்களே உறுதியாக உணர்வார்கள். என் தலைவ! எளியேனை ஆட்கொண்டருள்.

**10.** கைவல்லியம் எனும் உபநிடதம் ஆன்மாவுக்குள் ஆன்மாவாக உள்ள குகப்பெருமானை, முழுமுதற் கடவுளான, தூய சிவபரம்பொருளாகவே கூறுமே அல்லாது வேறு தெய்வத்தைக் கூறவே கூறாது. ஐயமற்ற அந்த முடிவான கருத்தால் குகனே சிவனாகிறான்; சிவனே குகனாகிறான். இவ்வாறு விளங்குவதை அருளால் உறுதியாக உணர்வோர்க்குரிய மூலதெய்வமே! அருணகிரிநாதப் பெருமானின் இதயத்துள் எழுந்த ஆனந்தப் பேறே! என் வேட்கை நிறைவுற என்னுடன் ஐக்கியப்பட்டு இருப்பாயாக.

# 83. தோலுயர் தயித்திரியம்

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தோ**லுயர்த யித்திரியம் பர்க்கனடு வோயோர்
சோதிவடி வாயொளிரி ரண்மயம தாய
வாலுயரி ரண்யபதி மாவிரண்ய வாகு
மாசிலம்பி காபதியு மாபதிபொ ருட்டென்
றோலிடுதௌ வுத்தியம தற்குரிய வீச
னுண்மையுறு கந்தனுநி ருத்தனெனு நாமுங்
காலமெதி னும்பேத மின்றெனுமொர் காந்தக்
கட்டுரையு ணர்ந்துளுநர் கெட்டலைவ தின்றே. (1)

**த**வமருவு மீசுரருண் மேம்படும கேசன்
றன்னைநய தேவதைக ளுட்பரம தேவைப்
பவமறுபெ ரும்பதிக ளுட்பரம மாமோர்
பதியையறி வோமெனவி ளம்பிடுசு வேதா
சுவதரவி ளம்புகளி லுள்ளவிறை கந்த
சுவாமிநினை வோர்க்குரிய சீரறிவும் வீடும்
அவதியற நல்கவல னென்றுசொன காந்த
வறையறிநர் வேறுபர நேடுவர்கொ லன்றே. (2)

**வ**டிவமில்வி சுத்தநிலை தன்னிலொரு சத்தே
மாசறுச தாசிவம கண்டகன சித்தே
இடரறுப ராபரைய னந்தசுக மேநல்
லின்பமய மாகமிளிர் கந்தனென வாகும்

1. *தைத்திரீயம் என்ற வடகிளவி. ‘தயித்திரியம்’ என மொழிமுதற்போலியும், விகாரமு மாயிற்று. இது,* ***தைத்திரீயாருணசாகை நாராயணமெனப்படும்.***
*காந்தக் கட்டுரை =* ***கந்தபுராணத்து*** *உறுதிமொழி; அது, திருவிளை யாட்டுப் படலத்தில் –*
*“ஆதலி னமது சத்தி யறுமுக னவனும் யாமும்*
*பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்*
*ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்*
*போதமு மழிவில் வீடும் போற்றினர்க் கருள வல்லான்.”*
*என வரு திருவிருத்தமே.*

2. *ஈசுரர் = உலகத்தை நியமிப்பவர்கள்.*
*தேவதைகள் = உலகத்தாரால் ஆராதிக்கப்படுவோர்கள்.*
*பதிகள் = உலகத்தைப் பரிபாலிப்பவர்கள். “சுவேதாச்வதர விளம்புகள்” என்றது,* ***யஜுர்வேத சுவேதாச்வதரோப நிஷத்தின் 6–*** *ஆம் அத்தியாயத்து “தமீச்வராணாம்” என்றற்றொடக்கத்து மந்திரங்கள்.*
***காந்தஅறை*** *= மேலே கூறிப்போந்த ‘ஆதலினமது சத்தி’ என்றற்றொடக்கத்துத் திருவிருத்தமே.*

மடிவுபிரி வற்றுளவிம் மூன்றுமரு ளாக
மல்குவடி வுற்றநிலை தன்னினிக ரற்ற
கடிபெருகு தேவருரி யோர்கடொழு சோமாற்
கந்தமென வாமெனவ றிந்துளுவர் மேலோர். (3)

**பொ**ற்புடைய சாந்தோக்கி யத்திலிதி காச
புராணமுறை பஞ்சமமெ னப்படும ருத்தம்
விற்பொருள்வி ரிக்குநிர லாகவமை யைந்தாம்
வேதமென வாமிதைய றிந்தவறி வாளர்
கற்பனைபு ராணேதி காசமென வாடுங்
கண்ணிலிகள் போலுளறு வார்கொலவ ரெங்கள்
அற்புதகு கேசனைம கேசுரனை யேநா
டத்துவித மேவியணை யாட்டியர்க ளாவார். (4)

**பே**தகவி ருத்திபொய் மறத்துநடை மேதைப்
பிரமமுர ணாத்திகமு ளாரமர ரேனுங்
கோதில்சிவ னைத்தரிச னஞ்செயவொ ணாது
குத்திநர ரேனுமதி சற்சனவி ருத்தி
ஏதமதொ ழிந்தசுக மேயசிவ பத்தி
யேறியபி ராமணவொ ழுக்கமுளர் காண்பர்
சாதமிது வென்றறைது ரோணபரு வங்காண்
சம்பவமு ளார்கள் சிவ நிந்தைபுரி வாரோ. (5)

**ஏ**சறும கேசுவர னேசிவனெ னுஞ்சொல்
லீயமர சிம்மவுரை யின்படி யவன்றன்
தாசரும கேசுவர ராவர்பிற ராகார்
சத்தியமிஃ தென்றுணரு முத்தமர்க ளந்த
ஈசனெனு மோர்சிவன றுஞ்சுபநி னைப்போ
டேநமையி சைத்தருள்க வென்னுமெசுர் வேத
வாசகம றிந்தளவின் மங்களசு வாமி
மற்றொருவ னுண்டெனவ லிக்கவிசை வாரோ. (6)

---

*4. **சாந்தோக்கியோபநிடதத்திற்** சொல்லப்பட்டவசனம் – "இதிஹாஸ புராணம்பஞ்சமம்" என்பதே. ஆட்டியர்கள் = செல்வர்கள்; '**ஆட்ய:**' என்பது வடசொல்.*

*5. சாதம் = மெய். துரோணபருவம்; இது, வடமொழி **வியாசபாரதத்** துளது.*

*6. "எசுர்வேதவாசகம்" என்பது **தைத்திரீயாருணசாகை** நாராயணத்துளதே; இது, **சைவசமயசரப கைவல்லிய** காண்டத்துப் 13–ஆம் அத்தியாயத்திற் பிரமாணிக்கப் பட்டதாம்.*

**க**வலைகளி லாதசுக சத்வபிர வர்த்த
கன்சிவனெ னத்தெளிவு சொல்லிடுசு வேதா
சுவதரமொ ழிக்கிசைய வேயிறுதி நாளிற்
சோர்வறவு ஞற்றுதொழி லின்றுணைமை யாலே
கவுரவத மோகுணமு நாளுமதி சுத்தங்
காணுமுழு ஞானபல முஞ்சிவனுக் குண்டென்
அவமில்பிர மாண்டமும ரற்றுமிதை யாய்ந்தோ
ரண்ணலர னைத்தமச னென்னவிசை வாரோ. (7)

**பா**சவிரி வாயகரு விக்கணமு மாசும்
பங்கமுற வேபணிய ரும்பரம முத்தி
நேசவுயிர் கட்குதவு மாக்கருணை வேலை
நிச்சயம தாகவெவ னுக்குளத னோனே
நாசமிலி பாசமிலி யாமிறைவ னாவா
னண்ணரிய வவ்விறைய ழிப்புநிலை நிற்போன்
ஈசனவ னேசிவனெ னத்தெளிய வல்லா
ரின்பணைய வின்னொருதெய் வந்தொழுவ துண்டோ. (8)

**ஓ**திமமு யர்த்தவயன் வைசியனு ரஞ்சா
லொண்டிகிரி யேந்துமரி சத்திரிய னொண்மைச்
சோதிமலி கண்ணுதல்பி ராமணனெ னச்செஞ்
சொற்சுவைகொள் கந்தசரி தம்பகரு மாறு
கோதிலியெ னுஞ்சுரபி ராமணனெ னும்பேர்
கொண்டவர னுக்குமிறை யாமொருசி வற்குஞ்
சாதிகுண மென்பனவி ளம்புவர்கொல் கற்றோர்
சந்ததப ரானந்த சாமியென னீத்தே. (9)

---

*7. கௌரவம் – 'கவுரவம்' என மொழிமுதற் போலியாயிற்று.*

*பிரமாண்டம் = பிரமாண்டபுராணம்; ஈண்டறிவுறுக்குஞ் செய்தி, அப்புராணத்து மத்தியபாக இளோபாக்கியானத் துளது.*

***8.*** *இத் திருப்பாட்டின் முடிபானே உலகநன்மையினையே மற்றைத் தேவர்கள் கொடுப்பரென்பதூஉம், அதனோடு அரிதினுமரிதாய பரமுத்தியினையுஞ் சிவனொருவனே கொடுக்க வல்லுந னென்பதூஉம் இனிது பெற்றாமன்றே. ஆதலினன்றே "விடுதலைக்கு வேறுவழியின்று" என்று சுருதியுங் கூறுவதாயிற்று. உரிய வடமொழி,* ***திட்பத்திற்*** *காட்டினாம் (கடவுள் வணக்கத்து 3–ன் உரை).*
*"இன்னொரு தெய்வந் தொழுவதுண்டோ" இது, தொழாரெனப் பொருள் படுதலின் ஓகாரம் – எதிர்மறை.*

***9.*** *கந்தசரிதம் = கந்தபுராணம்; அதன்கணுற்ற ததீசிப் படலத்தில் –*
*"அந்தணர்க் காதி யீச னேனையோர்க் கரியே வேதா*
*இந்திர னென்று வேத மியம்பிய மறையோர் தங்கள்*
*முந்தையின் முதலை நீத்து முறையகன் றொழுகல் பெற்ற*
*தந்தையை விலக்கி வேறு தேடுவான் றன்மை யன்றே."*
*என வரு திருவிருத்தப் பொருளே இத்திருப்பாட்டிற் கூறப்பட்டதென்க. இன்னுமிதுபற்றிய வுறுதி பலவுஞ்* ***சைவசமயசரபத்துக் கைவல்லிய*** *காண்டத்து 22–ஆம் அத்தியாயத்திற் கண்டு கொளலாம்.*

**ஆ**க்கையெனு மாலயமு ளேயுறவி யென்னு
மம்படிக மூர்த்தியிட மம்மூர்த்தி மானாந்
தேக்கருணை யஞ்சிவனை நாட்டுபிர திட்டை
செய்தவதி புண்ணியமு ளாரவனுக் கின்பாம்
மாக்கருணை யாலினிது கண்டுகதி சேர்வார்
மற்றையர்தி யங்கியலை வார்சொலிய தெய்வம்
வாக்குவலி கொண்டவரு ணைப்பெயர னெஞ்சுண்
மன்னிய சுவாமியென முன்னுநர்கெ டாரே. (10)

# 83. தோலுயர் தயித்திரியம்

**1.** சொல்வளத்தால் சிறந்துள்ள தைத்திரீய உபநிடதம் "சூரியன் நடுவில் விளங்கி இருப்போய்! ஒப்பற்ற சோதிவடிவமாகவும் ஒளிரும் பொன்வண்ண மயமாகவும் திகழும் தூய்மைசிறந்த இரணியபதி, இரணியவாகு, குற்றமற்ற அம்பிகாபதி, உமாபதி என விளங்கும் உன் பொருட்டு வணக்கம்” என முழங்கும் மந்திரமயமாகிய தோத்திரத்துக்குரிய ஈசன் என எப்பொழுதும் நிலைத்துள்ள கந்தனும், கூத்தப் பெருமானாகிய நாமும் எந்தக் காலத்திலும் பேதப்பட்டு விளங்குவதில்லை. இருவரும் ஒருவரே எனக் கூறும் கந்தபுராணத்து உறுதிமொழியின் உட்பொருளை நன்கு உணர்வோர் மூவகைத் துன்பங்களாலும் கெடுதி அடைந்து அலைவுறமாட்டார்கள்.

**2.** "தவப்பேராற்றலை மிகுதியாகப் பொருந்தியுள்ள உலகநியமன கர்த்தாக்களாகிய ஈசுவரர்களுள் மேம்பட்டு விளங்கும் மகேசுவரனை, உலகத்தாரால் ஆராதிக்கப்படும் நயம்மிக்க தெய்வங்களுள் மேலான தெய்வத்தை, பிறவியை அறுக்கும் பெருமானை உலகத்தைப் பரிபாலிக்கும் கடவுளருள் மிகவும் மேம்பட்டுள்ள கடவுளை (பதிப்பொருளை) அறிவோமாக" எனக் கூறும் சுவேதாசுவதர உபநிடதத்து மந்திரங்களில் பிரதிபாதிக்கப்பட்டுள்ள மூல இறைவனாகிய கந்தசுவாமி, தன்னை நினைந்து வழிபடும் அடியார்களுக்குரிய பதி ஞானத்தையும் வீடுபேற்றையும் எல்லையற வழங்கவல்லவன் ஆவன் என்று கூறிய கந்தபுராணப் பாடலின் கருத்தை உள்ளவாறு அறிபவர்கள் வேறு தெய்வத்தைப் பரம் என நாடுவார்களோ ?

**3.** வடிவமற்று நிஷ்களமாக இருக்கும் அதீதமான தூயநிலையில் சச்சிதானந்த பிரம்மம் என்பதன் சத்–அம்சமே, குற்றமற்ற சதாசிவம்; அகண்டமயமாய்த் திரண்டுள்ள சித்– அம்சமே, துன்பங்களை நீக்கும் பராபரையாகிய சக்தி (உமை); முடிவற்றுள்ள ஆனந்த அம்சமே பேரின்பமயமாக விளங்கும் கந்தன் – என விளங்கும். முரணும் பிரிவும் அற்றுள்ள சத்து, சித்து, ஆனந்தம் என்னும் இம் மூன்றுமே அருள் பெருகி வெளிப்படும்படியாக வடிவுகொண்டுள்ள நிலையில், தன்னிகரற்று விளங்குவதாகவும் இன்பம் பெருகத் திகழ்வதாகவும் விளங்குவதாகி தேவர்களும், அருட்பேற்றுக்குரிய அடியார்களும் தொழ உள்ள சோமாஸ்கந்த வடிவமாகும் என உணரும் மேம்பட்ட ஞானியர் அவ்வடிவத்தைத் தியானித்திருப்பர்.

*10. தேங்கருணை, ‘தேக்கருணை’ என வெதுகை நோக்கி வலித்தல் விகாரப்பட்டது.*

**4.** பொலிவார்ந்த சாந்தோக்கியம் எனும் உபநிடதத்தில் 'இதிகாசம் புராணம் ஆகிய நூல்கள், ஐந்தாவது' எனக் கூறப்படுவதன் பொருள் ஞானபாகப் பொருள்களை விவரித்துக் கூறும் நூல்கள் வரிசையில், பொருந்தியுள்ள ஐந்தாவது "வேதம்" என்பதாகும். இக்கருத்தை அறிந்துள்ள ஞானியர்களும், பார்க்கும் திறனற்று வாடும் குருடர்கள்போன்று, புராணம் இதிகாசம் ஆகியவை வெறும் கற்பனையே என உளறுவார்களோ? அந்த ஞானியர், எங்கள் அற்புதமான குகேசனும் மகேசுவரனுமான கந்தனையே நாடி, அவனோடு அத்துவிதமாக அணைந்திருக்கும் பெருஞ்செல்வத்துக்கு உரியவர்களாவர்.

**5.** "பேத உணர்வை மிகுவிக்கும் மனோவிருத்திகள், பொய், தீயநெறியில் செல்லுதல், ஞானமயமான பிரம்மத்திற்கு முரண்பட்டதாக நிகழும் நாத்திக உணர்வு–இவற்றை உடையோர் தேவர்களே ஆயினும் குற்றமற்ற சிவபெருமானைத் தரிசனம் செய்தல் என்பது இயலாது. மண்ணுலகில் வாழும் மனிதர்களே ஆயினும் சாதுக்களின் கூட்டத்தில் கலந்திருத்தல், துன்பச்சாயல் அற்றுள்ள தூய ஆனந்தப்பேறு ஆகியவை பொருந்தப்பெற்றுள்ளோராய் சிவபக்தி முதிரப்பெற்று பிராமணத்துவ நிலைக்குரிய நல்ல ஒழுக்கம் உடையோர் சிவபெருமானைக் காண்பர். இது மெய்ம்மையே எனக் கூறும் மகாபாரத துரோணபருவத்தைக் காணும் அருள்வாய்ப்பு உள்ளோர், சிவநிந்தனை புரிவார்களோ?

**6.** இகழ்ச்சியற்று உயர்ந்துள்ள மகேசுவரன் என்னும் பொருளையே சிவன் எனும் சொல்லானது தரும் என அமரசிம்ம நிகண்டின் வாசகத்தின்படி, சிவனை வணங்கும் அடியார்களும் மகேசுவரர்கள் ஆவர்; வேறுபிறர் அவ்வாறு மகேசுவரர் எனும் சொல்லால் குறிக்கப்பட மாட்டார்கள். இது சத்தியமே, என உணரும் உத்தம ஞானியர்கள் ''அந்த ஈசனாகிய ஒப்பற்ற சிவன் தூயமங்களப் பேற்றையே கருதும் உயர்ந்த சங்கல்பம் என்பதோடு நம்மைச் சேர்த்தருள்க'' எனக் கூறும் யசுர்வேத வாக்கியத்தின் உட்பொருளை நன்கு உணர்ந்து. அளவற்ற மங்களப் பேறுகளை அருளும் தலைமைத் தெய்வமாக மற்றொருவனும் உண்டு என வலிந்து பொருள் கூற ஒருப்பட்டு நிற்பார்களோ?

**7.** ''துன்பநிலைகளை நீத்துள்ள, சுகமயமான சத்வ குணத்தை வளமுறச் செய்பவன் சிவன்'' எனத் தெளிவான பொருளைக் கூறும் சுவேதாசுவதர உபநிடதத்துக்கு இயைபுற, உறுதிப்பயன்தரும் பிரம்மாண்ட புராணமும் ''மகாசங்கார காலத்தில், அண்டங்கள் அனைத்தையும் எஞ்சாமல் அதனதன் காரணத்தில் லயிக்கச் செய்யும் தொழிற்பாடு காரணமாகப் பெருமைமிக்க தெய்வநிலைத் தொடர்பான தமோகுணமும், மற்றும் சதாசர்வகாலத்திலும் மிகவும் தூய்மைபொருந்திய பூரணமான ஞான வலிமையும் சிவனுக்கு உண்டு'' என்று தெளிவுபடுத்திக் கூறும். இக்கூற்றை ஆய்ந்துணர்வோர், நம் தலைவனாகிய சிவபெருமான் தாமச குணம் உடையவன் எனக் கூற ஒருப்படுவார்களோ?

**8.** ''பாசத்தின் விரிவு நிலைகளாகத்தோன்றும் இந்திரியங்கள் முதலான கருவிக்கூட்டமும் ஆன்ம அழுக்கும் வன்மையற்று அழியுமாறு செய்து பெறுதற்கரிய மேலான முத்திப்பேற்றை அன்புத்திறம் வாய்ந்த உயிர்களுக்கு வழங்கும் பெருங்கருணை மயமான செயல் எவனுக்கு உள்ளதோ அவனே அழிவில்லாதவனும் பாசப் பிணிப்பு இல்லாதவனுமாகிய

முழுமுதல் இறைவனாவான்; அபக்குவர்களால் அணுகுதற்கரிய அந்த இறைவன் சங்காரத் தானமாகிய முடிபுநிலையில் இருப்போன்; அவனே ஈசன்; அவனே சிவன்'' என இவ்வாறு தெளிவாக உணரவல்லோர் பேரின்பத்தை அடைவதற்காக வேறொரு தெய்வத்தையும் தொழுது நிற்பதுண்டோ ?

9. "அன்னக் கொடியை உயர்த்தியுள்ள நான்முகன் வைசியன்; வலிமைமிகுந்த ஒளிமயமான சக்கரப்படையை ஏந்தியுள்ள திருமால் க்ஷத்திரியன்; பேரொளி மலிந்த நெற்றிக்கண்ணை உடைய ருத்திரன் பிராமணன்'' என்று, சொற்சுவை செறிந்த கந்தபுராணம் கூறுமாறு, ஞானியர்கள் ஒரு குற்றமும் அற்றவன் எனப்படும் தேவப்பிராம்மணன் எனும் பெயர் கொண்ட அரனுக்கும், முழுமுதல் இறைவனாகிய சிவனுக்கும், சாதி, குணம் முதலான உபாதி பேதங்களைப் பொறுத்திக் கூறுவார்களோ ? ‘‘அழியாத பரம ஆனந்தப் பெருக்குடைய சுவாமியே, சிவன் ஆவன்'' என்று கூறுவதைத் தவிர்த்து அன்னோர் அவ்வாறு சாதிகுணம் பற்றிக் கூறுவார்களோ !

10. "உடம்பு எனப்படும் ஆலயத்துள் ஆன்மா எனும் படிகலிங்கம் உண்டு; அந்தப் படிக மூர்த்தியில், வடிவத்தில் இடம் கொண்டிருப்போன் (மூர்த்திமான்) எனப்படும், இனிய கருணைமயமான சிவனை நிலைநிறுத்துத லாகிய பிரதிட்டையைச் செய்த மேலான சிவபுண்ணியம் வாய்க்கப் பெற்றுள்ளோர், அவனுக்கு உகந்த பெருங்கருணைத்திறத்தால் அவனை நேருறத் தரிசித்து முத்திப் பெருநிலையை அடைவர். ஏனையோர் மீண்டுமீண்டும் பிறவியுள் சிக்கி அலைவர். கூறப்பட்ட தெய்வம், வாக்குத்திறம் நன்கு வாய்ந்த அருணகிரிப் பெருமானின் இதயத்துள் நிலைபெற்றிருந்த கந்தசுவாமியே எனக் கருதிநிற்போர், அழியாநிலையில் இருப்பர்.

# 84. முத்தணிகொங்கை

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

மங்கைவிடு தூது.

**மு**த்தணி கொங்கை மங்காய் மூதறி வாளர் சூழுஞ்
சித்தனைச் சிவக்கொ ழுந்தைச் சிவபரஞ் சுடரை யெங்கள்
கத்தனைப் பைப்ப லாதங் கழறுமா றயனை மாலைப்
புத்தியொ டளித்துக் காக்கும் புனிதனை வரப்பே சாயே. (1)

தோழிவிடு தூது.

**பெ**ரும்பொரு டுலக்கு பஞ்சப் பிரமமா முபநி டந்தான்
தரும்பறைப் படிமால் கஞ்சன் சததமுஞ் சேவிக் கின்ற
அரும்பரப் பிரமந் தன்னை யானந்தப் பொருளை நாங்கள்
விரும்பொரு குகனைத் தோழீ விரைந்துசென் றழைத்து வாவே. (2)

1. *பைப்பலாதம் = **அதர்வணவேத சரபோபநிஷத்.***

கிள்ளைவிடு தூது.

**ஆ**தியோத் ததிர்க்கு மாறோ ராயிர மாண்டு மாலும்
ஊதியத் தயனுந் தேடி யொளிரடி முடிகா ணாத
சோதியை யறிவா னந்த சுவாமியைத் துரிதம் போழும்
ஏதியைத் தேடினேனென் றெழிற்கிள்ளா யவற்கோ தாயே. (3)

குயில் விடு தூது.

**அ**கலலை நீர்க்கு மாலா மனற்குருத் திரனா மென்று
திகழெசுர் வேத யோக சிகையெனு முபநி டந்தான்
பகருமவ் வுருத்தி ரற்கும் பதியென விருக்குந் தேவைக்
குகனையெங் கோனை யென்னைக் கொளும்வணங் குயிலே கூவாய். (4)

மஞ்ஞைவிடு தூது.

**பா**ரலர் முளரி காற்றம் பரமெனு மோரைந் திற்கும்
ஆரண னரிய ரன்றா னருண்மகே சுரன்ச தாவென்
கீரணை சிவனென் றாளி கிளக்குமே யோக தத்வஞ்
சீரணை யிவர்க்கு மேலாஞ் சிவனையின் றழையாய் மஞ்ஞாய். (5)

அன்னவிடு தூது.

**சி**வமத்து விதமா சாந்தஞ் சதுர்த்தமென் றுறுதித் தீர்வை
தவறற வுதவி ராம தாபினி வாக்கின் வண்ணந்
தவசுடை மூவர் மேலாய்ச் சதுர்த்தமாஞ் சிவத்தை யிஞ்ஞான்
றவலமி லனமே யென்பா லழைக்கநீ போதி யன்றே. (6)

---

*3. ஆதியோத்து =* ***ருக்வேதம்.*** *இதன் ஸம்ஹிதாவில் – "விட்டுணு வராகமாகிப் பூமியை யகழ்ந்து கொண்டு செல்வுழி ஆயிர வருடங்களாயின : சிவனுடைய திருவடிகளைத் தேடுங் காரியத்தில் அவாவுடைய விட்டுணு, நீயே தாய், நீயே தந்தை, நீயே யுடன்பிறந்தார், நீயே மூத்தோர், நீயே யுயர்ந்தோ ரென்று துதித்தனன்." என்று கூறப்பட்ட செய்திகளே இத்திருப்பாட்டில், திருமால் தேடிக் காணா வடியுடைச் "சோதி" என்றதற்குக் கொளத்தக்கன. உரிய வடமொழி மாற்றங்களை எமது நாலாயிரப்பிரபந்த விசாரத்து 6–ஆம் அதிகாரத்தில் "விஷ்ணுவேர் வாராஹம் ரூபமாஸ்தாய பூமிந் விதாரயந் ஸஹஸ்ரஸமா ஆசந் பாதாந் வேஷண பரோபூத்வா|" என்று கூறிச் செல்வுழிக் காண்க. சைவசமயசரப கைவல்லிய காண்டத்துப் 13–ஆம் அத்தியாயமுங் கருதுக.*

*துரிதம் = கலக்கம். ஏதி=வாள்.*

*5. யோகதத்வம் = யோகதத்வோபநிஷத் ; யஜுர்வேதத்தது.*

*6. இராமதாபினி = ராமதாபிந்யுபநிஷத் ; அதர்வண வேதத்தது; இத் திருப்பாட்டின் பொருட்குரிய இந்த உபநிஷத்தின் வடமொழிகளையும், இம்மொழிகளையே வெளியிடு மாண்டூக்யம், நிருஸிம்ஹதாபிநி, நாரதபரிவ்ராஜகம், பஸ்மஜாபாலமென்னும் உபநிஷத வாக்கியங்களையும் எமது சைவசமயசரபத்துத் திரிமூர்த்திகட்கு மேலாய நான்காவது தெய்வம் சிவபிரான் என்னும் அத்தியாயத்திற் கண்டுகொள்க.*

நாரைவிடு தூது.

**நெ**ட்டுடற் குழக நாராய் நிகழ்பற்ப சாபா லத்தின்
கட்டுரை போற்கா சிக்கீழ்க் ககுபத்தில் விதியுந் தென்பால்
விட்டுணு மூர்த்தி யுந்தான் விதியொடு பாசிக் கின்ற
மட்டிலம் பரனை யென்னை மருவுமா றழைக்கச் செல்லே. (7)

வண்டுவிடு தூது.

**ந**ன்மகோ பநிட தந்தா னாரண னென்பான் றோன்றிப்
பின்மரித் தனனென் றுண்மை பேசுவ தாலன் னோனே
முன்முத லாகா னன்னோன் முதல்வர்க்கு முதல்வ னாய
என்மதி நாதற் கென்ற னிதயச்சூ ரோதாய் வண்டே. (8)

கார்விடு தூது.

**நீ**தநா ராய ணோப நிடதவா சகத்தின் வண்ணம்
நாததி யாதா வாய நாரண னிருத யத்திற்
கோதற வசியா நின்ற குகனெனும் பரமான் மாமேற்
காதலாக் கவலு மென்றன் கருத்ததற் கறையாய் காரே. (9)

நெஞ்சுவிடு தூது.

**அ**ருணையம் பெயரெம் மானுள் ளரவிந்த மமர்ந்த தேவை
மருளறு சேது மாத வனெனுமா மறையோ னென்கண்
அருளொடு பொருளு மீதென் றளித்தசன் மார்க்க வேந்தைக்
கருணையொ டழைக்க வென்முன் கதுமெனப் போதி நெஞ்சே. (10)

---

*7. பற்பசாபாலம் = **பஸ்மஜாபாலோபநிஷத்;** அதர்வ வேதத்தது.*

*8. மகோபநிடதம் = **ஸாமவேத மஹோபநிஷத்.***

*9. நாராயணோபநிடதம் = **தைத்திரீயாருணசாகை. நாராயணம்.***

*10. இத் திருப்பாட்டு, இந்நூலாசிரியர் இளமையிற்றானே "கங்கையைச் சடையிற் பரித்து" என்றற் றொடக்கத்தது எழுவாயாக "என்னை நீ பணியென்று" என்றற் றொடக்கத்தது இறுவாயாகவுள்ள 100 பாடல் பாடிய பின்றை, **முழுமுதற்** பரம்பொருளான முருகவேளின் கருணையிருந்த வாறு, அவர்பால் வலிய வந்து அவரை யழைத்துக்கொண்டு சென்று தேவை – அக்கினிதீர்த்தக்கரையெய்தி அவண், அவர்க்காறெழுத்தாகிய மகாமந்தி ரத்தையும் அதனுண்மையையும் விதிவழி யுபதேசித்தருளிய நல்லாசிரியன், ஆரியப் பிராமண குலோத்தமர்களுள் இன்னோனென்பதை "மருளறு சேதுமாதவ னெனு மாமறையோன்" என்று விளக்குவதுமாயிற் றென்க.*

# 84. முத்தணிகொங்கை

1. முத்துமாலை அணியப் பெற்ற அழகிய மார்பகத்தை உடைய மங்கையே! பேரறிவாளர்களாகிய மெய்ஞ்ஞானியர் இடைவிடாதுதியானிக்கும் சித்தேசுவரன், சிவமாகிய தீயின் கொழுந்து போன்றவன், சிவமாகிய பரஞ்சுடர், எங்கள் முழுமுதல் தலைவன், சரபோபநிஷதம் கூறுமாறு பிரம்மனையும் திருமாலையும் அவரவர் தொழிலுக் கேற்ற ஞானக்கிரியா சக்தியை அளித்துக் காக்கும் தூயோன் – எனவிளங்கும் குகப்பெருமான் யானிருக்கும் இடம்வருமாறு என்எண்ணத்தை அவனிடம் தெரிவிப்பாய்!

2. பெரியபொருளாகிய சிவ பிரம்மத்தின் இயல்பை விளக்கும் பஞ்சப்பிரம்மோபநிடதம் கூறும் கூற்றுப்படி திருமாலும் பிரம்மனும் எப்பொழுதும் சேவித்து வணங்கும், அணுகுதற்கரிய பரப்பிரம்மத்தை, ஆனந்தமயமாகிய வத்துவை, எம்மையொத்த அடியார்கள் பெரிதும் விரும்பும் குகப்பெருமானை, தோழீ! நீ விரைந்து சென்று என்னிடம் அழைத்து வா.

3. அழகிய கிளியே! முதல்வேதமாகிய இருக்கு வேதம் கூறுமாறு ஆயிரம் ஆண்டு காலம் திருமாலும், பிரபஞ்ச அதிகாரமாகிய ஊதியம் நாடும் பிரம்மனும் தேடியும் அவர்களால் ஒளிமிகுந்த திருவடியும் திருமுடியும் காண முடியாதவண்ணம் நெருப்புத்தூணாக ஒளிர்ந்த சோதிப் பொருளை, ஞானமயமாகவும் ஆனந்தமயமாகவும் விளங்கும் சுவாமியை, வணங்குவாரின் கலக்கநிலையைப் பிளக்கும் வாட்படையை நான் நெடுங்காலமாகத் தேடிவருகின்றேன் என்று குகப்பெருமானுக்கு எடுத்துச் சொல்வாய்.

4. அகன்ற அலைகளை உடைய நீருக்குத் திருமால் அதிதெய்வம் என்றும் நெருப்புக்கு ருத்திரன் அதிதெய்வம் என்றும் யசுர்வேத யோகசிகை எனும் உபநிடதம் கூறும். கூறப்பட்ட அந்த ருத்திரனுக்கும் தலைவன் என விளங்கி இருக்கும் தேவதேவனை, குகப்பெருமானை, எம் போன்ற அடியார்களுக்கு அரசனை, குயிலே! என்னை இங்குவந்து ஆட்கொள்ளும் வண்ணம் கூவி அழைப்பாய்.

5. பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப்படும் ஐம்பெரும் பூதங்களுக்கும் முறையே பிரம்மன், திருமால், ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்போர் அதிதெய்வங்கள் என்று யசுர்வேத யோகதத்வ உபநிடதம் கூறும். சீர்மைபொருந்தியுள்ள இந்தப் பிரம்மன் முதலான ஐவர்க்கும் மேம்பட்டுத் திகழும் சிவனாகிய குகப்பெருமானை, மயிலே! இன்று என்னிடம் வருமாறு அழைப்பாய்.

6. துன்பம் என்பது அற்று, என்றும் இன்பமாக உள்ள அன்னமே! சிவம், அத்துவிதம், சாந்தம், சதுர்த்தம் என, உறுதியான முடிபைத் தவறேதும்இன்றிப் புலப்படுத்தும் ராமதாபினி என்னும் உபநிடதம் கூறும் வாசகத்தின்படி தவ ஆற்றல் பொருந்தியுள்ள பிரம்மன், திருமால், ருத்திரன் என்னும் மூவர்க்கும் மேம்பட்டிருக்கும் நான்காவது அதீதப் பொருளாகிய சிவம் என ஒளிரும் குகப்பெருமானை என்னிடம் அழைத்துவரும் பொருட்டு இப்பொழுதே செல்க.

7. நீண்ட உடற்கட்டும் இளமையும் வாய்த்துள்ள நாரையே! அதர்வ வேதத்தைச் சார்ந்து விளங்கும் பஸ்மஜாபால உபநிடதம் கூறும் உறுதிக் கருத்தைப் போன்று, காசிமாநகரில் கீழ்த்திசையில் பிரம்மனும், தெற்குத் திசையில் திருமாலும் முறைப்படி உபாசித்து வழிபட்டிருந்த, பிரமாணங்களுக்கு உட்படாத அழகிய பரம்பொருள் எனத்திகழும் குகப்பெருமானை, என்னுடன் இரண்டறக் கலந்துகொள்ள அழைத்துவருவதற்காக இப்பொழுதே செல்வாய்!

8. வண்டே! நற்பொருள் கூறும் மகோபநிடதம் என்பது "நாராயணன் என்பான் ஒரு காலகட்டத்தில் தோன்றிப் பின் இறந்தனன்" என்னும் உண்மையைத் தெரிவித்துக் கூறுவதால், அந்த நாராயணன் முழுமுதல் இறைவனாக ஆகான். அவனுக்கு முதல்வர்களாக உள்ளோர்க்கும் முழுமுதற் பொருளாக விளங்கும், என் ஞானமயமான இதயத் தலைவனாகிய குகப்பெருமானுக்கு என் இதயத்தில் கவிந்துள்ள துன்பங்களையெல்லாம் எடுத்துக் கூறுவாய்.

9. நீதிநெறிப்பட்ட கருத்துக்களைக் கூறும் நாராயணோபநிடதம் கூறும் வாசகத்தின்படி, தியானிக்கும் தலைவனாக விளங்கிய நாராயணனின் இதயமலருள், தியானிக்கப்படுவதற்குரிய வகையில் குற்றமற வசித்து இருந்த குகப்பெருமானாகிய பரமாத்மாவிடம் தீராக் காதல் கொண்டு, அந்தக் காதலால் வருந்தும் என்றன் உள்ளக்கருத்தை, மேகமே! அப்பரம்பொருளிடம் எடுத்துக் கூறு.

10. அருணகிரிப் பெருமானின் உள்ளமாகிய தாமரைமலர்ப்பீடத்தில் மகிழ்வோடு அமர்ந்திருந்த தேவனை, மயக்கத்தை நீக்கும் சேதுமாதவன் எனும் பெருமைமிக்க மறையோன் எனக்கு அருள் மயமான மந்திரத்தோடு அதன் உட்பொருளையும் இதுதான் என்று கருணையோடு அளிக்க, அதனால் நான் உணர்ந்த சன்மார்க்க தெய்வத்தை, நெஞ்சே! என்முன்னர்க் கருணையோடு அழைத்துவருவதற்காக விரைந்து செல்க.

# 85. நீர்வேந்தயன்

*கலிவிருத்தம்.*

**நீ**ர்வேந்தய னாகண்டல னென்பாருழை நெஞ்ச
வார்வீங்கவ ரம்பெற்றது மாதேவன தருளாற்
சார்சான்றபி தாவைத்தரி சனஞ்செய்தது மலைமுந்
நீர்தாண்டிய நீசொல்கெனச் சொன்னோனிறை சிவனே. (1)

*1. நீர்வேந்து = வருணன். அயன் = பிரமன். ஆகண்டலன் = இந்திரன். இத் திருப்பாட்டி லுறீஇய மொழிகள், இராமசந்திரர் அனுமானைப் பரதன்பால் விடுக்கு ஞான்று சொல்லப் பட்டனவாம். இம்மொழிகட்கும் 2–ஆந் திருப்பாட்டி லுறு செய்திகட்குமுரிய வால்மீக ராமாயண வடமொழிகள் சைவசமயசரபத்தின் கைவல்லியகாண்டத்துப் 12–ஆம் அத்தியாயத்துழைக் கண்டுகௌளாம்.*

*நெஞ்சவார் = நெஞ்சத்தின் நீட்சி; அவாவின் மேற்று,*

*சார் = சார்தல்; ஈண்டுச் சுவர்க்கநலந் துய்த்தற் பொருட்டு.*

**சொ**னராகவன் சொற்கண்ணுள மாதேவ மொழிக்குப்
புனல்வேந்தனை யர்த்தம்பணு புன்மைப்புல வோர்சொல்
தினையேனு மொவாதோதிய செப்புட்புனல் வேந்தாம்
மனன்வேறுள னாலவ்வுரை மாதேவொரு சிவனே. (2)

**சி**வகீதையின் மாதேவ னெனப்பேருறு சிவனுங்
குவடாகிய தணிகைத்தல நூலிற்சிவ குருவுஞ்
சிவஞான மிராமற்கரு ளினரென்றுரை செயலால்
துவரேறுகை யிராமன்சிவ னடியானென றுணிபே. (3)

**ந**ற்சைவ புராணத்துறு சிற்சங்கிதை நலியாப்
பொற்புற்ற விராமன்சிவ புசிதந்தன தணைமேற்
சற்சித்தமொ டேசெய்தன னென்றேயுரை தரலான்
முற்சொற்றது போல்ராகவன் முன்னும்பொருள் சிவமே. (4)

**ச**துரச்சரி தப்பாரத வுரைபோற்பிர தத்தன்
முதன்மற்றைய ரொடுராமனு முன்னாணம னூரில்
மதர்வுற்றகை நமனைத்தனுள் வழிபட்டன னாமேல்
நிதருத்திர சிவனைத்தொழு நியமந்தவிர் வானோ. (5)

**இ**ராமப்பெயர் சார்தாபினி யெனுமோருப நிடதம்
இராமப்பெயர் சொற்றுச்சிவ சின்னஞ்சொலு மெழிலால்
இராமப்பெயர் மாதேவன தாமத்தை யெடுத்தே
இராமற்கினி திட்டார்பெரி யாரென்றிட லியைபே. (6)

**அ**ருமைச்சிவ னைக்கண்ண னனேகம்புகழ் கூறிச்
செருவர்ச்சுன னோடங்கயி லாயத்தளி சிறுகா
ஒருநட்பொடு தாழ்ந்தானெனு மொண்சொற்க டுரோண
பருவத்துண்மை யாற்கண்ணனு மரனைப்பணி பவனே. (7)

---

*3. சிவகீதை = பாத்மபுராணத்தது.*

*4. சிற்சங்கிதை = ஞானசங்கிதை; ஈண்டுரைக்கப்பட்ட செய்தி **57, 38**–ஆம் அத்தி யாயங்களி லுள்ளன.*

*5. இதன்கட் சொல்லப்பட்ட பாரதவுரை, ஸபாபர்வத் துளது.*

*6. ஹர: என்னுஞ் சிவநாமத்தின் ஈற்றெழுத்தையும், உமா என்னுந் தேவி நாமத்தின் ஈற்றெழுத்தையும் இயையச் சேர்த்து 'ராம': என்று இராகவனுக்குப் பெயரிட்டவர் வசிட்டரென்பதாகப் **பக்தவிஜய** மென்னும் புத்தகம் – துளசிதாசர் சரித்திரத்திற் பகர்கின்றது.*

*7. கைலாயம் – 'கயிலாயம்' எனப் போலியாயிற்று.*

*துரோணபருவம் = பாரதத் துளது.*

**நே**ராயரி வஞ்சஞ்சொன படிவல்ல நிகும்பப்
பேரானொடு யுத்தஞ்செய வாற்றாது பிரிந்து
சீரேறுதன் வில்வோதக சிவனைத்தன துள்ளே
ஆராதனை பண்ணிக்கண னமர்செய்தது முண்டே. (8)

**அ**கமற்றவர் மெச்சுந்தரு மச்சங்கிதை யதர்வ
சிகரச்சிவ வஞ்சக்கர முபமன்னியு செப்ப
இகமெச்சுல குண்டோனினி தேற்றானென லாலே
மிகவற்புத வவன்மேலுள விமலற்கடி மையரோ. (9)

**இ**ந்தப்பிர மாணங்களி னான்மாதவ னென்னும்
அந்தச்சிலை வலிராமனு மலகைக்குய முணியும்
புந்திச்சிவ னடியாரென வவரைத்தொழல் புரிவார்
கந்தற்குயர் புகழ்சொற்றவர் கருணைக்குரி யாரே. (10)

# 85. நீர்வேந்தயன்

**1.** "வருணன், பிரம்மன், இந்திரன் என்பவர்களிடமிருந்து உள்ளத்தின் வேட்கை நிறைவுற வரங்கள் பல பெற்ற நிகழ்ச்சி, மகாதேவனின் அருளால், துறக்க இன்பம் துய்த்திருந்த தன் தந்தையாகிய தசரதனைத் தரிசனம் செய்த நிகழ்ச்சி – ஆகியவற்றை அலைகளைஉடைய பெருங்கடலைத் தாண்டிச் சென்ற நீ பரதனிடம் கூறுவாயாக'' என அனுமனிடம் உரைத்த இராமனின் முழுமுதல் இறைவன் சிவபெருமானே.

**2.** கூறப்பட்ட இராமனின் கூற்றில் உள்ள மகாதேவன் என்னும் சொல்லுக்கு நீரின் அதிதெய்வமாகிய வருணன் என்பவனைப் பொருளாகக் கொள்ளும் அற்பகுணம் வாய்ந்த புலவோரின் கூற்று தினையளவேனும் பொருந்தாது. கூறப்பட்ட கூற்றில் நீர்வேந்தன் என்பவனாகிய அரசன் வேறாகக் குறிக்கப்பட்டுள்ளவன் ஆவான். அதனால் அக்கூற்றில் வரும் மகாதேவன் எனும் சொல்லால் குறிக்கப்படுபவன் சிவபெருமானே.

**3.** சிவகீதை என்னும் நூலில், மகாதேவன் எனும் திருப்பெயர் பொருந்தியுள்ள சிவபெருமானும், சிறந்த மலையாகிய தணிகையின் பெருமையை உரைக்கும் தணிகைப் புராணநூலில், சிவகுருவாகிய குகனும் சிவஞானத்தை இராமனுக்கு உபதேசித்து அருளினர் என்பது விரிவாகக் கூறப்பட்டிருத்தலால், பவளம்போற் சிவந்த கைத்தலத்தை உடைய இராமன் ஒரு சிவனடியாரே எனக் கூறுதல் தெளிவார்ந்த முடிபே ஆகும்.

---

*8. அரிவஞ்சம் = ஹரிவம்சமெனும் புத்தகம்.*

*9. தருமசங்கிதை = **சைவபுராணத்தது**. இங்கோதப்பட்ட விடயம், அச்சங்கிதையிற் சிவமாகான்மிய முரைத்த 2–ஆம் அத்தியாயத்துளது.*

**4.** நன்மைதரும் சைவமகாபுராணத்தைச் சார்ந்த ஞானசம்மிதை என்னும் நூலானது அழியாப் பொலிவுடைய இராமன் என்பான் சிவவழிபாட்டைத் தனது அணையின் மேலேயே தூய்மையான சித்தம் உடையவனாய் நன்கு செய்தனன் என்று விளக்கிக் கூறுவதால், முன்னர்க் கூறப்பட்டது போன்று இராமன் தியானிக்கும் முழுமுதற் பொருளாக விளங்கியவன் சிவனே.

**5.** முழுமையும் விரிவும் பொருந்திய சரிதங்களைக் கூறும் மகாபாரதம் கூறுவது போன்று, பிரதத்தன் முதலான மற்றையோருடன் சேர்ந்து இராமன், யமபட்டினத்தில் செழிப்பான அருட் கையை உடைய நமக்கு உரியவனாகிய சிவனைத் தனது உள்ளத்துள் வழிபட்டவனாவான். இங்ஙனம் எனில், பிறவா இறவாருத்திரனாகிய சிவபெருமானை வழிபடும் நல்ல நியமத்திலிருந்து அவன் விலகி இருந்திருப்பானோ ?

**6.** இராமதாபினி என்னும் உபநிடதம், இராமன் எனும் திருப்பெயரைக் கூறி, உடன் சிவ சின்னங்களாகிய விபூதி முதலானவற்றைத் தெரிவிக்கும் நேர்த்தியால், இராமன் எனும் திருப்பெயர், மகாதேவனாகிய சிவனது திருப்பெயரேயாகும். அத்திருப்பெயரையே பெரியோர் தசரத குமாரனாகிய இராமனுக்கு சூட்டினர் எனக் கூறுதல் பெரிதும் பொருத்த முடையதேயாம்.

**7.** அறிவதற்கும் அணுகுதற்கும் அரிய சிவபெருமானைக் கண்ணன் அனேக தோத்திரங்களால் புகழ்ந்து, போராற்றல் வாய்ந்த அருச்சுனனோடு அழகிய திருக்கைலைக் கோயிலை அணுகி உள்ளார்ந்த பக்தியுடன் வணங்கி நின்றான் எனத் தெரிவிக்கும் ஒண்மையான வாசகங்கள், மகாபாரத துரோண பருவத்தில் காணப்படுமாறு உள்ளதால், கண்ணனும் சிவபெருமானை வழிபடுபவனே ஆவன்.

**8.** நடுநிலைப்படி ஒழுங்குறக் கூறும் ஹரிவம்சம் எனும் நூல் விவரித்துக் கூறியுள்ளவாறு, கண்ணன், போராற்றலும் தவ ஆற்றலும் மிக்க நிகும்பன் என்பானோடு போர் செய்ய இயலாது, பின்னடைந்து, தன் இடம் மீண்டு, சீர்மை மிகுந்த பில்வநீர்ப் பிரியனான சிவபெருமானைத் தனது உள்ளத்துள்ளே வித்தாரமாக வழிபட்டு, அருள்பெற்ற பிறகு, துணிவுடன் நிகும்பனோடு போரிட்ட நிகழ்ச்சியும் உண்டன்றோ!

**9.** வினைப்பயன் அற்றுத் தூய்மை மிகுந்துள்ள பெரியோர் போற்றும் சைவமகாபுராண தருமசம்மிதை என்னும் நூல், அதர்வசிகை உபநிடதம் 'தியேயன்' என உறுதிப்படுத்தும் சிவனுக்குரிய திருவைந்தெழுத்தை உபமன்யு முனிவர் உபதேசம் செய்ய, உலகினை உண்டு, உலகம் புகழ உள்ள கண்ணன், சிஷ்யபாவத்தில் நின்று இனிதாக ஏற்றுக்கொண்டான் எனக் கூறுவதால், மிகவும் அற்புதச் செயல்களைச் செய்த கண்ணன், தனக்கு மேம்பட்ட தூய பரம்பொருளாகிய சிவபெருமானுக்கு அடிமைப்பட்டிருப்பவனே ஆவன்.

**10.** கூறப்பட்ட இந்தப் பிரமாணங்களால், மாதவன் என அழைக்கப்படும் விற்படை ஏந்திய இராமனும், பேயின் முலையை உண்ட கண்ணனும், பக்திமிகும் சித்தத்துடன் கூடிய சிவனடியார்களே ஆவர் எனக் கருதி அவர்களை வணங்குவோர், கந்தப்பெருமானுக்கு உகந்த உயர்ந்த திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி அருளிய அருணகிரிப் பெருமானின் கருணைக்கு உரியோர் ஆவர்.

# 86. சீர்பூத்தவிராமரகசியம்

*தரவுகொச்சகக்கலிப்பா.*

**சீ**ர்பூத்த விராமரக சியவுபநி டஞ்சொலுமா
றோர்பூத்த வொண்டிருநீற் றினையுடலெங் குந்திமிர்ந்த
நார்பூத்த விராமனுடை நல்லிதயக் கடவுடனைத்
தார்பூத்த தனத்தோழீ சார்ந்துழனான் வாழ்வதென்றோ. (1)

**க**ரனென்னுஞ் செருவரக்கன் கண்டுகலக் குற்றுநிற்க
அரிணவுழை யதள்போர்த்தே ரங்கமுழு துந்தவளத்
திருநீறு மணிந்திருந்த சீராம னுளத்தேவாம்
பரமனைநான் மருவநெடும் பொழுதாமோ பகர்தோழீ. (2)

**ப**ழுதற்ற பசுமச்சா பாலஞ்சா பாலியொடு
வழுதற்ற பிருகச்சா பாலமதர் வணசிரசும்
செழுமைக்கா லாக்கினிருத் திரமெசுவின் றைத்தியமும்
மொழிசுத்த நீறணிவார் முதலென்று கொளுந்தோழீ. (3)

**க**வுணியர்கோன் றிருவாயாற் கழறியவோர் பதிகத்தும்
நுவணைநுவல் சாதாத பமிருதியென் றுளநூலுஞ்
சிவமுடைய தெனவிதந்து செப்புதிருப் பூதிதிமிர்
தவர்சுரர்கை கூப்பிறையென் றனையென்று கொளுந்தோழீ. (4)

**2.** *இத் திருப்பாட்டியம்புமாறு இராமசந்திரரைக் கண்ணுற்ற கரன், இவர் சிவனாரோவென் றஞ்சினனென்பது வால்மீகராமாயணத் துளது.*

**3.** *இதன்கட்போந்த உடபநிடதங்களேயன்றி, யோகதத்வம், ஸந்நியாஸம், வாசுதேவம், நாரத பரிவ்ராஜகம், ராமரஹஸ்யம், சாண்டில்யம், திரிபுரா தாபிநி முதலிய உபநிடதங்களும் விபூதி வைபவத்தை விளம்பவுள்ளன வென்பதைச் **சைவசமயசரபத்துக்** கைவல்லிய காண்டத்தினறிக. தைத்தியம் – தைத்திரீய மென்பதன் விகாரம். இத் தைத்திரீ யோபநிடதம் – (பூத்யை நப்ரமதிதவ்யம்=) "விபூதி தாரணத்தினின்றுந் தவறலாகாது" என்று கூறுகின்றது. இக்கூற்றினை யெடுத்துப் பிரமாணித்துக் கூறுதலும் –*

*"அதாதோத்விஜாதீநாம் த்ரிபுண்ட்ர**தாரணவிதிம்** வ்யாக்யாஸ்யாம:*
*பூத்யைநப்ரமதிதவ்யமிதிஹ்யாம்நாயதே" என்னும் **போதாயந க்ருஹ்யஸூத்ரத்** துளதன்றோ.*

*விட்டுணுவும், மற்றைத் தேவர்களுந் திருநீறணி திருமேனியரே யென்னுஞ் செய்தி, **பிருஹஜ்ஜா பாலோபநிஷத்திலும்** வேறு பிரமாணங் களிலுங் காணப்படுதலினால் "நீறணிவார் முதல்" என்றது விட்டுணு முதலிய தேவர்க்குந் தலைமைக்கடவுள் சிவபெருமானே யென்பதைக் காட்டுவதாயிற் றென்க. வழுது = பொய்.*

**4.** ***சாதாதபமிருதி** செப்புதலை –*
*(ஸத்யம் சௌசம்தபோ ஹோமஸ் தீர்த்தம் தேவாதி பூஜநம் |*
*தஸ்யவ்யர்த்தமிதம் ஸர்வம் யஸ்த்ரி புண்ட்ரம் நதாரயேத் ||)*
*"திரிபுண்டரதாரணஞ் செய்துகொள்ளாதவன் யாவனோ அவனுடைய ஆசாரம், தவம், ஓமம், புண்ணியதீர்த்த ஸ்நானம், தேவபூஜை முதலிய வெல்லாம் பயனற்றனவாம்." என்னு மதன்மொழிகளா னறிக.*

**ம**றையாக மங்களுடை மதத்திலுள தாகியுயிர்க்
கறைதீர்த்துய் விக்குமருட் காப்பென்னும் விபூதியினை
முறைமாறிச் சுடுகாட்டுச் சாம்பரெனு முழுமடவோர்
இறையுமறி யாவிறையை யென்றணைவே னென்றோழீ. (5)

**த**ம்மேலன் புடையவனுச் சாலங்கட் கின்பிசைப்பான்
மும்மாயைக் கணமெல்லா முருக்கியறி வெனுந்தீயாற்
சம்மார முறத்தகிக்குந் தனிச்சுடுகாட் டிடைநடிக்கும்
எம்மானென் னுயிர்தோழீ யென்றணையு மியம்புதியால். (6)

**உ**ருத்திராக்க சாபால முரைத்திடுகண் மணிமலைந்து
திருத்தகுமெய் யுணர்வுடையார் தினமுமிறைஞ் சொருதேவைப்
பெருத்தவுறழ் வில்லேனும் பேதடங்கப் புல்லுவலோ
பருத்துநிமிர் முகைத்தோழீ பரிவினெனக் கறையாயே. (7)

**சா**ன்றோர்செந் நெறிவிரிவாச் சாற்றுசிவ ரகசியத்தின்
மூன்றாமங் கிசமொழிமா மொய்ம்புவலிச் சனகமன்னன்
மேன்றீக்கை யாக்கொண்ட சிவஞான மெய்ப்பொருளை
நான்றாவின் றணைவதெந்நா ணற்றோழி யேநவிலாய். (8)

**நீ**றுதிமிர் வார்குழுமு நெல்வேலித் தலநூலின்
ஆறுகிளர் திருச்செந்தூர்ச் சருக்கத்தி லகத்தியர்க்கு
வேறுநெறி கூறாதெஞ் சித்தாந்த மேவிளக்கிக்
கூறுகுக னென்மனம்போற் கொள்வதெந்நா ணவிறோழீ. (9)

**அ**ச்சுதனு மந்தணனு மடிமுடிதே டிக்காணாச்
சொச்சவொளி வரைப்பெயரான் றோமுருக்கி யாட்கொண்ட
மிச்சையிலா வெம்பெருமான் மேலாசை கொளுமென்றன்
இச்சையெங்ன் றீருமென்னா ரிதத்தோழீ சொல்லுவையே. (10)

---

*6. அணுச்சாலம் = உயிர்க்கூட்டம்; கூட்டம் = குழு.*

*7. உருத்திராக்கசாபாலம் = **ருத்ராக்ஷஜாபாலோபநிஷத்** : ஸாமவேதத்துளது.*

*9. இத் திருப்பாட்டகத்துற்ற செய்திதானே கந்தபுராணத்தின் உற்பத்தி காண்டத்து, அயனைச் சிறைநீக்கு படலத்து 42–ஆந் தூக்கின்கண்ணும் வருகின்றது.*

*10. அந்தணன் = பிரமன்; பி – நிகண்டு. ஸ்வச்ச : என்னும் வடசொல்லின் விகாரமே "சொச்சம்"; சுத்தம், தெளிவென்னும் பொருளுடைத்து.*

# 86. சீர்பூத்தவிராமரகசியம்

1. மாலைகள் பொலிவுபெற்றுள்ள மார்பகத்தை உடைய தோழீ! பந்தப்பிணிப்பைச் சார்ந்து வருந்திக் கொண்டிருக்கும் நான், ஞானநுட்பவிளக்கமாகிய சீர்மை பொலிந்துள்ள ராமரகசிய உபநிடதம் கூறுமாறு, தெய்வப்பொலிவு மிகுந்த ஒண்மைத் திருநீற்றைத் தனது உடலெங்கும் உத்தூளனம் செய்துகொண்டிருந்து, அன்புநெறிப்பட்ட இராமனின் இதய தெய்வமாகிய சிவமயக் குகப்பெருமானைச் சார்ந்து அருளில் வாழ்வது எப்போது ?

2. தோழி ! போராற்றல் வாய்ந்த கரன் எனும் அரக்கன் கண்ணெதிரே கண்டு, நெஞ்சம் துணுக்குற்றுக் கலக்கம் கொண்டு நிற்கும் வண்ணம் தனது உடலில் மான்தோல் போர்த்துக் கொண்டு உடல் முழுவதும் வெண்மைத் திருநீற்றையும் அணிந்திருந்த திருவார்ந்த இராமனின் இதயதெய்வமாகிய பரமேசுவரனை நான் கூடிநிற்க நீண்ட காலம் ஆகுமோ ? கூறு.

3. தோழி ! குற்றமற்றுச் சிறந்துள்ள பஸ்ம ஜாபாலம், ஜாபாலம், பொய்யற்றுச் சிறந்துள்ள பிருகஜ்ஜாபாலம், அதர்வசிரசு, சிவவளம் மலிந்துள்ள காலாக்னிருத்ரம், யசுர்வேத தைத்திரியம் முதலான உபநிடதங்கள் பெருமைப்படுத்திக் கூறும் தூய்மையான திருநீற்றை அணிவோர்க் கெல்லாம் முழுமுதற் பொருளாக உள்ள இறைவன் என்னை எப்பொழுது ஆட்கொள்வான் ?

4. தோழி ! கவுணிய வேந்தனாகிய திருஞானசம்பந்தர் தமது திருவாய் மலர்ந்து கூறிய திருநீற்றுப் பதிகத்திலும், சாதாதபஸ்மிருதி எனும் நூலிலும் அனைத்து மங்களநிலைகளையும் உடையது எனப் புகழ்ந்து கூறப்பட்ட திருநீற்றைத் தமது மேனியில் பூசியுள்ள தவச்செல்வர்களும் தேவர்களும் கைகூப்பி வணங்கித் தொழும் முழுமுதல் இறைவனாம் குகன் என்னை எப்பொழுது ஆட்கொண்டு அருள்வான் ?

5. என் தோழி! வேதங்களையும் ஆகமங்களையும் மூலநூல்களாகக் கொண்டுள்ள சமய நெறியில் உள்ளதாகி, உயிர்க்கூட்டங்களின் பாவத்தைப் போக்கி உய்விக்க வல்ல அருட்கவசம் (ரக்ஷை) என உள்ள விபூதியை, அறநெறி முறையைப் புறக்கணித்து ‘‘இது சுடுகாட்டுச் சாம்பல்'' என இகழும் முழுமை அறிவிலிகளால் ஒருசிறிதும் உணரப்பட முடியாமல் இருக்கும் முழுமுதல் இறைவனாகிய குகனை நான் எப்பொழுது அணைவேன் ?

6. தம்மிடம் தூய அன்பு செலுத்தும் உயிர்க்கூட்டங்களுக்கு அழியாத இன்பத்தைத் தரவேண்டி, மூவகைப்பட்ட மாயைகளால் பொருந்தும் பந்தப்பிணைப்புக் கூட்டத்தை அடியோடு தூளாக்கி ஞானம் என்னும் நெருப்பால் முழுவதுமாக அழிவுறுமாறு தகிக்கும் இடமாகிய ஒப்பற்ற சுடுகாட்டில் திருக்கூத்து இயற்றும் எம் தலைவன் என்னுடன் எப்பொழுது சேர்வான் ? என உயிர்த்தோழியே, கூறு.

7. பருத்துயர்ந்திருக்கும் கொங்கையுடைய தோழியே! ருத்திராக்ஷ ஜாபாலம் என்னும் உபநிடதம் மேம்படுத்திக் கூறும் ருத்திராக்ஷத்தைச் சூடிக்கொண்டு, அருட்செல்வப் பேற்றுக்குரிய மெய்ஞ்ஞானம் மிகுந்துள்ள பெரியோர் நாள்தோறும் வணங்கித் துதிக்கும் தெய்வத்தை, மிகுதியான ஞானப்பேறு இல்லாத அடியேனும் என் பேதைமை பாழ்படுமாறு தழுவிக்கொள்வேனோ ? என்மீதுள்ள பரிவால் நீ எனக்குக் கூறு.

**8.** சிவத்துவம் நிறைந்துள்ள பெரியோர்க்குரிய செந்நெறியை விரிவாக எடுத்துரைக்கும் சிவரகசியம் எனும் மகா இதிகாசத்தின் மூன்றாவது அம்சம் கூறும் பெரும் தோளாற்றலும் அருள்வன்மையும் உடைய சனக மன்னன் மேன்மையான தீக்கை என ஏற்றுக்கொண்ட சிவஞானத்தால் உணரப்படும் மெய்ப்பொருளாகிய குகனை நான் கெடுதல் ஏதும் இன்றி அணைவது எப்பொழுது ? என் நன்மைக்குரிய தோழியே! கூறு.

**9.** திருநீற்றை ஆரப்பூசிக் கொள்வோர் திரண்டிருக்கும் 'திருநெல்வேலியின் பெருமை உரைக்கும் திருநெல்வேலித் தலபுராணத்தின், நல்வழிமிக்க திருச்செந்தூர்ச் சருக்கத்தில் அகத்தியமாமுனிவருக்கு வேறு எந்த நெறியைப் பற்றியும் கூறாமல். எமது சைவசித்தாந்த நெறியையே விளக்கி உபதேசித்த குகப்பெருமான், எனது எண்ணப்படியே என்னை அத்துவிதமாகக் கலந்துகொள்வது எப்பொழுது ? தோழியே! கூறு.

**10.** திருமாலும் பிரமனும் முறையே அடியையும் முடியையும் தேடிக் காண இயலாத தூய்மைநிறைப் பேரொளி மலை எனப்படும் அருணாசலத்தின் பெயரை உடையவனின் (அருணகிரிப் பெருமானின்) மலக் குற்றத்தை அறவே அழித்து ஆட்கொண்ட, பொய்ம்மைநீத்துள்ள எம்பெருமானாகிய குகன்மேல் ஆசைகொண்டிருக்கும் எனது வேட்கையானது எவ்வாறு நிறைவுறும் ? என் அன்புக்குரிய நன்மைமிக்க தோழியே! கூறு.

# 87. திருமலிந்தவிருக்கு

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருமலிந்த விருக்கெனுமா மறையைச் சார்ந்த
சிவச்சோதி யெனும்பாகந் தெள்ளி தாக
அருமலிந்த வாதியந்த ரகித விண்ணா
யசத்தியமில் லாதபர மிருந்த தத்திற்
பொருவறவுண் டாயதன்றோ தாணு ரூபம்
புகலருமஃ தேபூதங் களுக்கு மாத்ரு
சருவசச்சி தானந்த மிலிங்கா காரஞ்
சத்தியமா யிருப்பதெனச் சாற்று மன்றே. (1)

**பூ**மணம்போ லிரண்டுதன்மை யொன்றாய் நின்று
பொதுளும்ரூ பாரூப சதாசி வந்தான்
தூமிகுந்த சிவலிங்க மாம தன்கட்
டுலங்குருவ மெழுந்தருளு மூர்த்தி யாகும்

*1. இலிங்காகாரமே தம்பாகாரமெனப்படும். இவ்வாகாரமே – அரிபிரமர்கட் கிடையிலும் அடி முடி காட்டாது அழற்பிழம்பாய் நின்றதும், 89–ஆம் பத்திலுள்ள "எழுந்த சோதியைப் பரசிவலிங்கம்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டின்படி அடியவரைத் தன் மயமாக்கிக்கொள்வான் அழற்பிழம்பா யெழுந்ததுமா மாகலிற் பரம்பொருள் சோதித்தம்ப வடிவுமுடைத்தென வுலகமறிந்து கொண்டதென்க.*

மாமிகுந்த வருவமது சிவயோ கத்தார்
வழிபடுவ தாந்தெரித்த விலிங்க மூர்த்தி
ஏமவன்பர் சுரர்முனைவ ரிறைஞ்சு தேவா
மெனமகுடஞ் சுப்பிரபேத மியம்பு மாலோ. (2)

**சி**வலிங்க மயன்விண்டு சிவான்ம மென்றே
செப்பிடுமே யக்கினியின் புராண மந்தச்
சிவலிங்கஞ் சாட்சாது மகேச னென்றே
தெரித்திடுமே யிலிங்கமெனும் புராண மந்தச்
சிவலிங்கம் பரானந்தான் மகமா மென்றே
தெரிவிக்குங் கூர்மமெனும் புராண மந்தச்
சிவலிங்க மகிமைபல வாய்க்கி ளத்துந்
தெற்றெனவே மச்சமெனும் புராண மாதோ. (3)

**எ**ச்சுரருஞ் சிவலிங்க வழிபாட் டாலே
யெய்தினர்க டங்கள்சிறப் புகளை யங்ஙன்
சச்சிதவிண் டுவுமடைந்தா னெனவி ருக்கு
சங்கிதைசொல் லிடுந்துறக்கர் புத்தே ளாகி
அச்சுதனென் றுளவரிதான் சிவனைச் சர்வா
தாரவடி வினனென்றாய்ந் திலிங்கத் தின்பால்
துச்சமற வாராதிக் கின்றா னென்றே
துரோணபரு வங்கழறல் கண்கூ டாமே. (4)

---

2. *சிவலிங்கம் என்பது சிவமாகிய லிங்கமெனவும், சிவமாகிய நன்மையை நல்கும் லிங்க மெனவும் பொருள்படும். லிங்கமென்னுஞ் சத்தார்த்தம் முதலியவற்றைச் சதானந்த சாகரத்திற் கண்டுகொள்க.*

3. ***அக்கினியின்புராணம்*** *= ஆக்நேயம்; இங்குக்கூறப்படுவது அதன் 53–ஆம் அத்தியாயத்து 3–ஆஞ் சுலோகத்துளது.*
***இலிங்கபுராணந்*** *தெரிக்குமென்பது, அதன் முற்பாகத்துப் 19–ஆம் அத்தியாயத்துப் 15–ஆஞ் சுலோகத்துளது.*
***கூர்மபுராணந்*** *தெரிவிக்குமென்பது, அதன் 2–ஆம் பாகத்துப் 11–ஆம் அத்தியாயத்துத் 94–ஆஞ் சுலோகத்துளது.*
***மச்சபுராணங்*** *கிளத்துமென்பது, அதன் 261–ஆம் அத்தியாயத்துப் 16, 17–ஆஞ்சுலோகங்களிலுளது.*

4. *"**இருக்குசங்கிதை சொல்லும்**" என்றதை, "உருத்திர! மருத்துக்கள் (= தேவர்கள்) நினது செல்வத்தினை யெய்துமாறு நினது அழகிய சித்திரரூப இலிங்க மூர்த்தியினை அபிடேகாதி ஆராதனை புரிந்தனர்: இலக்குமியோடு கூடிய விட்டுணுவும் அது புரிந்து பரமபதவாழ் வடைந்தனன்." என்னும் பொருளில் –*
*"தவச்ரியேமருதோமர்ஜயந்தருத்ரயத்தேஜநிம சாருசித்ரம் |*
*பதம்யத்விஷ்ணோருபமந்யதாயிதேந பாஸிகுஹ்யம் நாமகோநாம் ||"*
*எனவரு அவ்வவேத வாக்கியங்களா லறிக. இச்செய்திபற்றி வரூஉம் உபப்பிருங்கண சுலோகத்தைச் சதானந்தசாகரத்தின் (ஆசிலாச்சிவ புண்ணிய என்றற்றொடக்கத்துச் செய்யுளுரை) அறிக.*
***துரோணபருவங்*** *கழறுதலை, "சிவபிரான் விசுவரூபனாயிருத்தலை யறிந்து பிரபுவாகிய இலிங்க மூர்த்தியை (நரநாராயணராயுள்ள) அவர்கள் அருச்சிக்கிறார்கள்: அதனால், இடபக்கொடி யுடையோன் இக்கிருட்டிணர் பால் அதிகப்பிரீதி செய்கின்றனன்." என்னும் பொருளில் –*
*"ஸர்வரூபம்பவம்ஜ்ஞாத்வா லிங்கமர்ச்சயதிப்ரபும் |*
*தஸ்மிந்நப்யதிகோப்ரீதிம் கரோதிவ்ருஷபத்வஜ : ||"*
*எனவரும் அப்பருவ சுலோகத்தா லறிக. துச்சம் = நலமிலது; வடசொல்.*

இந்தவிதஞ் சுருதிசிவா கமபு ராண
விதிகாச வழியாகச் சிவலிங் கந்தான்
அந்தமிடை யாதியிலாப் பரமா யார்க்கு
மருள்புரியும் பெருங்கருணை யாயி ருக்கச்
சந்தமிகு முமையின்பெண் குறியு முக்கட்
சங்கரனாண் குறியுமந்த விலிங்க மென்ன
நிந்தைபுரி பொய்ச்சரிதந் தீட்டி யஃதை
நிகழ்த்துபெருஞ் சிதடரடை கதியென் னாமே. (5)

---

***5.*** *"பொய்ச்சரிதந் தீட்டியஃதை நிகழ்த்து பெருஞ் சிதடர்" என்பது–முற்காலத்துச் சிவ நிந்தகருட் சிலர், பண்டைச் சைவசாத்திரங்க ளுள்ளும், வேறு சில புத்தகங்களுள்ளுந் தங்கருத்துப் பொருந்த நுழைத்தெழுதியவை களையே இக்காலத்துள்ளோருட் சிவத்துவேஷ புத்தியுடைச் சிலரும் இது நமக்கனுகூலமெனத் தம்முடைய புத்தகங்களில் வரைந்து பொருள் விளக்கும் பெரிய அறிவிலிகளா யுளாரெனும் பொருளைப் பயக்கும்.*

> ***"அச்செலாம் இலிங்காங்க பகாங்க*** *மாம்படி சிவமுஞ் சத்தியுங்*
> *கொண்டருளிய இம்முறை"*


*எனச்* ***சிவஞானசித்தியாரில்*** *வரைந்துள்ள இவ்வுரையினையும்,*

> *"மச்ச ரங்கமு மலரவ னங்கமும்*
> *வச்சி ராங்கமு மில்லைமண் மீதிலே*
> *அச்செ லாமிலிங் காங்க பகாங்கமே*
> *பிச்சர் காளெம் பிரானல்ல தில்லையே."*

*என்னுஞ் சைவர்செய்யுட் செய்தியையும், இதுபோல ஆகமங்களுள்ளும் வேறு வடநூல்களுள்ளும் வருவனவற்றையும் யாம் விரும்பவில்லை. என்னை? போந்த சுருதியாதி பிரமாணங்களுக்கு அவை விரோதப்படுதலின். சிவாலயங்களின் மூலத்தானங் கரசரணாதி அவயவ வடிவினைக் கொண்டிராது தம்பாகாரமான ஓரடையாளத்தைக் கொண்டிருத்தலின் அஃதுருவிலாக் கடவுள் வழி பாட்டிற் குரியதேயென ஐரோப்பியர்களு நன்கு மதித்துளதைக் கருதிப் பார்த்த இப்பரதகண்டத்தாருட் சிலர், தாங்கற்றுள்ள ஆங்கில பாடையிற் றானே சிவலிங்கம் ஆண்குறியே யென்றும், இந் நிச்சயத்திற்குச் சைவசாத்திரங்களிலும் பிரமாணங்க ளுளவென்றும் அவையற்றை யெடுத்துக்காட்டி வரையப்பட்ட இலிகிதங்களைப்படித்த ஐரோப்பியர் பலருஞ் சைவ மூல மிப்படிப்பட்டதா? என எள்ளி நகையாடுதலையும், அப்பாடை கற்றுவரூஉம் இப்பரதகண்டத்தாருட் பலர் அவ்வாறே நகையாடு முறைமையில் இயம்பற்கும் யோக்கியமற்றதாய் இப்படியுமொரு தெய்வ நிருணய மிருக்கலாமோ! எந்நலம் எத்தூய்மை கருதி யிதனைக் கும்பிடல் வேண்டும்! ஆஅ! அருவருப்பின்பாற்படுத் தொழிக்கத்தக்கதேயென்று சிவபத்தியினின்று விலகுதலையும் பல்லோருங் கண்ணுறுகின்றார். ஈனலிகிதங்களை யேன்று கொள்ளுஞ் சைவர், இங்ஙனம் யாது செய்ய வுள்ளார்! இனியேனும் இத்திற ஆபாசக் கூற்றெல்லாங் களைந்து சைவநூல்களைச் சுத்தமாக வைத்துக்கோடல் நலமு நாகரிகமு மாமென வெண்ணுவரோ? கூர்த்த வுணர்வுடையார் கவனிப்பாராக. இங்குக்காட்டப்பட்ட இலிங்காங்க பகாங்க சைவர் செய்யுட்கண் மறுப்புக்குரியனவாய்க் கொண்ட மூன்றேதுக்களும், நிறுப்புக்குரியனவாய்க் கொண்ட இரண்டேதுக்களுந் தம்முட் பொருத்தமுடையனவுமல்ல; உய்த்துணர்க. இச்செய்யுளின் மூன்றாமடியே போந்த சிவஞான சித்தியா ருரையி லெழுதப்பட்டிருத்தலு மோர்க. இச்செய்யுள் ஞான சித்தியாகமத்தின தென்று ஒரு சைவரா லெடுத்துக்காட்டப்பட்ட –*

> *"நவஜ்ராங்கம்நபத்மாங்கம் நசக்ராங்கஞ்சகுத்ரசித் |*
> *லிங்காங்கஞ்சபகாங்கஞ்ச தஸ்மாந்மாஹேச்வரம்ஜகத் ||"*

*என்னுஞ் சுலோகப் பொரு ளாகவே யிருத்தலு மோர்க. பகம் = பெண்குறி – இலிங்கம் = ஆண்குறி என்ப.*




ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடும் திருவடியி லேநகரங் - கூடு
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார். (உண்மைவிளக்கம்)

**இதனானும், தமிழெழுத்துக்களை யமைத்த முனிவரது புத்திவிசாலம் உணரப்படுகிறது.**

**ம**ருட்டறிவு கொடுதக்கன் முனரே செய்த
மாதேவ தூடணங்கேட் டிருந்த தோமாற்
கருட்டுளவ மணிமால்பங் கயத்த னாதி
கடவுள்க ளனைவருமுக் கிரனென் பானால்
வெருட்டல்வருத் திடலடைந்து பட்ட பாட்டை
விசாரித்து நனிதேறா விகலத் தாலே
குருட்டறிவு கொண்டுசிவ தூட ணந்தான்
குயில்பவருக் கெமலோகங் குடியா காதோ. (6)

**மே**ற்கோளா காரலிங்க மதுவே வானம்
விருத்தவடி வாவிடையே யகன்ற பூமி
தோற்பிண்ட மதிற்றோளின் மேற்பா கந்தான்
றூய்தாய வவ்விலிங்க மாகு மேனைப்
பாற்பாகம் பரையெனுமா விடைதா னாகும்
பணித்தவிது தூலார்த்தஞ் சூக்க மென்று
மேற்கொளொரு பொருளிதய கமலம் பீடம்
விமலசிதா காசமதே யிலிங்க மாகும். (7)

**அ**வ்விமல சிதாகாச மான்மா வாகு
மதனிதய கமலமதே பீட மாகுஞ்
செவ்வியவங் குள்ளமகா சிதாகா சந்தான்
சேதனற்குச் சேதனனா மிலிங்க மாகும்
கவ்வுடைய வீததிசூக் குமார்த்த மாகும்
கழறியவப் பீடமுத லருளா மஃதைத்
திவ்வியதே வடியென்ப வதனா லாட்சி
செயப்படுயி ரெலாமடிமை யென்ப வான்றோர். (8)

**சொ**ற்றவிலிங் கந்தானே சிகார மந்தத்
துகளிலருட் பீடமதே வகார மங்ஙன்
ஒற்றுமையா நிற்குநிலை சிவமா மன்றோ
வோதருமத் திருவடியைச் சார்ந்த வான்மா

---

*7. வானம் ஞானசத்தியின் காரியமும், பூமி கிரியாசத்தியின் காரியமுமாம். ஆகவே சிவலிங்கம் ஞானக் கிரியாரூப மென்பது மாயிற்று. ஆவிடை யென்பது பீடமெனும் பொருண்மைத்து; ஆ=இருப்பு; நாநார்த்தரத்நமாலை, சப்தரத்நாகரங் காண்க; இடை = இடம்.*

*இன்னதன்மையது "தூலார்த்தம்" என்றதுபற்றி, "மானுட ராக்கை வடிவு சிவலிங்கம் – மானுட ராக்கை வடிவு சிதம்பரம்" என்னுந் திருமந்திர வாக்கியங்களுஞ் சிந்திக்கற் பாலன. சூக்குமார்த்தத்திற் குரியவை, இதயகமலமுஞ் சிதாகாசமுமா மென்பது பெறப் படுதலின் இது பற்றிப் பெரிது முணரத்தக்கநூல், தகராலயரகசியமாம். மற்றும்பொருள் பலவு மதனுரைமாட் டுணரக்கிடக்கின்றன வென்க.*

*8. கவ்வு – கயவு என்பதன் விகாரம்; கயவு = பெருமை.*

அற்றமிலாச் சிவத்துடனுங் கூடி நிற்கு
மானந்தஞ் சிவலிங்க மயம தாகுங்
குற்றமிலா விந்தமுத்தி திருவெண் காடர்
கொண்டதுபோ லெண்ணிறந்தோர் கொண்டுய்ந் தாரே. (9)

இந்தநிலை யைத்தானே சிவத்திற் கங்க
மெனவிருத்தன் முத்தியென்றுஞ் சொற்றார் சைவர்
அந்தமுடி வுஞ்சைவ சித்தாந் தத்திற்
கயலன்று சொற்றவிலிங் கத்தின் நீர்வை
எந்தவிதம் பார்த்தானு மகண்ட சச்சி
தானந்த மெனச்சிறக்கு மிதனை யென்றன்
பந்தமெலா மெருக்கியரு ளருணைப் பேரான்
பரமென்னுங் குகனருளா லறிகற் போனே. (10)

# 87. திருமலிந்தவிருக்கு

**1.** ஞானச்செல்வம் நிறைவுற உள்ள இருக்கு வேதத்தைச் சார்ந்த சிவச்சோதி எனப்படும் பிரிவானது மிகவும் தெளிவாக, “அருவநிலையில் சிறந்துள்ளதாய், ஆதியும் அந்தமும் அற்றதாய், பரமவெளியாய், எப்பொழுதும் பொய்ம்மை அற்று இருப்பதாய்த் திகழும் பரம்பொருள் ஒன்று இருந்தது. அதனின்று, ஒப்பில்லாத வகையில் வெளிப்பட்டதன்றோ தூண்வடிவமான தோற்றம்! விளக்கிக்கூற முடியாத அதுவே, தோற்றம் கொள்ளும் அனைத்திற்கும் தோற்றுவாய்த் தானம்; அதுவே அனைத்துமாய் சத்து சித்து ஆனந்தமாய் உள்ளது; அதுவே லிங்க வடிவமாய்த் திகழ்வது. அது எப்பொழுதும் நித்தியமாக உள்ளது" எனக் கூறுமன்றோ!

**2.** பூவும் மணமும் போன்று இரண்டு தன்மை ஒருங்கிணைந்து நின்று செறிவாய்த் திகழ உள்ள, அருவமும் உருவமும் ஆன, சதாசிவனே தூய்மை மிகுந்துள்ள சிவலிங்கமாகும். சிவலிங்க வடிவத்தில் திகழும் உருவநிலை என்பது, அந்த வடிவத்தில் எழுந்தருளும் சிவவடிவம் ஆகும். பெருமை மிகும் அருவநிலை என்பது சிவயோகநெறியில் சிறந்துள்ள ஞானியரால் வழிபடப் படுவது. கூறப்பட்ட லிங்கவடிவமானது இன்பப்பேற்றுக்குரிய அன்பர்களும் தேவர்களும் இருடிகளும் ஞானியரும் வணங்கும் தெய்வமாகும் என மகுடாகமமும் சுப்பிரபேதம் எனும் ஆகமமும் கூறும்.

*9. எண்ணிறந்தோருள், சிற்றம்பலநாடி கண் முதலினோருஞ் சேரற்பாலரென்ப.*

*10. வீரசைவரே இங்குச் “சைவர்” எனப்பட்டனர். சைவத்திற் பிருதிவியும், அப்புவும், தேயுவும், வாயுவும், ஆகாயமும், சூரியனும், சந்திரனும், ஆன்மாவுமாகிய இவ்வெட்டுஞ் சிவனுடைய மூர்த்தமெனப்படுதலின், எட்டனுள்ளுஞ் சின்மூர்த்தமாகிய ஆன்மாவொன்றுமே சிறந்து நிற்றலின், அதுவே சூக்குமார்த்தத்தில் இதய தாமரைக்கண் இலிங்க வடிவிற்றா யிருத்தலின், அந்நிலையுஞ் சுவானுபவத்தி லடையப்படுதலுண்மையின் ஆன்மா சிவத்திற் கங்கமென விருத்தன் முத்தி யென்னும்* ***வீரசைவசித்தாந்தமுஞ்*** *சால்புடைத்தேயாகலின் “அந்தமுடிவுஞ் சைவசித்தாந்தத்திற்கு அயலன்று” என்பது கூறப்பட்டதென்க. கன்ம பேதங்க ளிங்குக் கருதப்படுவனவல்ல.*

3. சிவலிங்கமானது பிரம்மன், விஷ்ணு, சிவன் எனும் மூவர்மயமாகத் திகழ்வது என்று அக்னிபுராணம் கூறும்; சிவலிங்கம், நேர்படத் தோன்றும் மகேசுவரனே என்று இலிங்கபுராணம் புலப்படுத்தும். கூர்மபுராணம் என்பது சிவலிங்கம் பரமானந்த சொரூபமாகவே விளங்குவது எனத் தெரிவிக்கும். மற்றும் மச்சபுராணம் என்பதும் சிவலிங்கத்தின் மகத்துவத்தைப் பல்வேறு நிலைகளில் தெளிவாக விளக்கிக் காட்டும்.

4. "தேவர்கள் அனைவரும் சிவலிங்கத்தை முறைப்படி வழிபட்டதன் பயனாலேயே தத்தம் சிறப்புக்களை அடைந்தனர்; அவ்வாறே உண்மையாகவும் அறிவாகவும் விளங்கும் திருமாலும் சிவலிங்கவழிபாட்டாலே மேன்மை அடைந்தனன்" என இருக்கு வேத சம்மிதை கூறும். ''வானுலகத் தேவர்களின் தெய்வமாகிய அச்சுதன் எனப்படும் திருமால், சிவனே அனைத்திற்கும் ஆதாரவடிவாக விளங்குகின்றான் என ஆய்ந்துணர்ந்து, சிவலிங்க வடிவத்தில் அவனைத் தியானித்து சிறுமை அறும் வண்ணமும் நன்மை பெருகும் வண்ணமும் ஆராதிக்கின்றான்'' என்று மகாபாரத துரோணபருவம் கூறுதல் கண்கூடாகக் காணப்படுமன்றோ!

5. இவ்வாறு சுருதிகள், சிவாகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவற்றின் மூலம் சிவலிங்கமே, அடி, நடு, முதல் என்பவை யற்று, அனைத்திற்கு பரமமாக விளங்கி அனைவர்க்கும் அருள்புரியும் கருணைவடிவாகவே இருக்கும்போது அந்த சிவலிங்கம் என்பது அழகிய உமையின் குறியும் முக்கண் கடவுளாகிய சங்கரனின் குறியும் ஆக விளங்குவது என்று நிந்தையைச் செய்யும் பொய்வரலாறு எழுதி, அந்தத் தீய உரையையே உண்மை எனக் குதர்க்க வாதங்களால் நிலைநாட்டும் பெருங் குருடர்கள் அடையக் கூடிய தீய கதிதான் யாதாக இருக்குமோ?

6. மருட்சி மிக்க மயக்க அறிவுகொண்டு முன்பு தக்கன் என்பான் செய்த சிவ நிந்தையைக் கேட்டு வாளா இருந்த குற்றத்தால் கரிய துளசிமாலை அணியும் திருமால், பிரம்மன் முதலான கடவுள்கள் அனைவரும் உக்கிரன் எனப்படும் சிவகணத் தலைவனால் வெருட்டப்பட்டும், வருத்தம் உறுத்தப்பட்டும், அடைந்து பட்ட கொடும்துன்பங்களை விசாரித்து நன்கு தெளிவு பெறாத குறைபாட்டால், குருட்டு ஞானம் கொண்டு சிவநிந்தையைச் செய்பவர்களுக்கு யமலோகமே எப்பொழுதும் வாசத்தானமாக விளங்காதோ!

7. சிவலிங்க வடிவத்தில் மேலே உள்ள கோள வடிவ லிங்கமே வானம் என்பதாகும்; கீழே வட்ட வடிவத்தில் உள்ள ஆவிடைப்பகுதியே பூமி என்பதாகும். தோலால் வேயப்பட்ட பூத உடம்பில், தோளுக்கு மேற்பட்டுள்ள பாகமே, தூய்மை உடையதான கோளவடிவ லிங்கமாகும்; தோளுக்குக் கீழே உள்ள மற்ற பகுதி பரை (உமை) எனப்படும் ஆவிடை வடிவமாகும். இவ்வாறு கூறப்படும் இந்தப் பொருள் தூலப் பொருள் ஆகும். இதன் சூக்குமப் பொருள் என ஏற்கத் தகும் உட்பொருளில் கீழே உள்ள பீடப்பகுதி (ஆவிடை) இதய தாமரை; மேலே உள்ள லிங்கப்பகுதி, தூய்மையான ஞானவெளியாகும்.

8. அந்தத் தூய்மையான சிதாகாசமே ஆன்மாவாகத் திகழும்; ஆன்மாவின் இதய கமலமே பீடம் என்பதாகும். அந்தப் பீடத்தின் நடுவில் வெளிப்பட்டுள்ள மகா ஞானவெளியே

ஆன்மாவுக்கும் ஆன்மாவாகத் திகழும் லிங்கமாகும். மிகவும் பெருமை பொருந்தியுள்ள இந்தப் பொருள், அதி நுட்பமான அர்த்தமாகும். கூறப்பட்ட அந்தப் பீடம் முதன்மையான அருட்சக்தியாகும். அதனைப் பேரொளிமயமான தெய்வத்தின் திருவடி எனக்கூறுவர். அதனால் ஆட்சி செய்யப்பட்டிருக்கும் உயிர்க் கூட்டம் அனைத்தும் அடிமை எனும் சொல்லால் குறிக்கப்படும் என ஆன்றோர் கூறுவர். (அடியின் தன்மைக்கு உட்பட்டிருப்பது அடிமை)

**9.** கூறப்பட்ட லிங்கபாகம் 'சி' எனும் எழுத்தாகும். துகளற்ற அருள்மயமான அந்தப் பீடம் 'வ' எனும் எழுத்தாகும். லிங்கமும் பீடமும் ஒன்று பட்டு நிற்கும் நிலை (சிகாரமும் வகாரமும் சேர்ந்துள்ள நிலை) சிவம் என ஆகுமன்றோ! சொல்லால் விளக்குதற்கரிய அந்தத் திருவடியைச் சார்ந்துள்ள தூய ஆன்மா, மறைப்புக்கு உட்படாத சிவத்துடன் ஐக்கியப்பட்டு விளங்கும் பேரானந்தநிலையே சிவலிங்க மயமாகத்திகழ்வதாகும். குற்றமற்ற இந்த ஐக்கியப் பேறாகிய சிவசாயுச்சிய முத்தி நிலையை திருவெண்காடர் அடைந்து விளங்கியது போல், எண்ணற்ற அருட் பெரியோர்களும் அடைந்து உய்தி பெற்றுள்ளனரே!

**10.** இவ்வாறு உள்ள நிலையையே "சிவத்துக்கு அங்கம் என இருத்தல் என்பதே முத்திநிலை'' எனவும் வேறுபட வீரசைவர் கூறியுள்ளனர். அவ்வாறு கூறப்படும் உறுதிக் கருத்தும் சைவ சித்தாந்தத்துக்கு அயலாக விளங்குவதன்று. கூறப்பட்ட சிவலிங்கம் பற்றித் தெரிவிக்க உள்ள முடிவான கருத்து, எப்படி நோக்கினாலும், அகண்டமயமாய் விளங்கும் சச்சிதானந்த நிலையே எனச் சிறந்து விளங்கும். சிவஞானமெய்ப்பொருளைக் கற்கும் நல்லோய்! இந்நுட்பக் கருத்தை, எனது பந்தங்களையெல்லாம் அறவே நீக்கி அருளும் அருணகிரிப் பெருமானின் பரமதெய்வம் எனப்படும் குகனின் திருவருளால் நன்கு அறிந்துகொள்.

# 88. விலகுவர்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*
*சதாக்கரம். (நூறெழுத்து)*

*தனதன தனதன தனதன தனதன, தனதன தனதனன.*

**ப**ரிதிய விருமதி யெரியிவை களையொளி பணுதிரு வருண்முதலாய்ப்
பெரியவொ ளிவெளிடை யெனவொளிர் பரவரர் பெருமவு னருள்கருதாக்
கரிசின ரிடையெனை விடுவதை யொழியவர் கரம்விசி யெதிர்வரலும்
விரிசின வரவினு முயர்வென நினைநினை விழைவினர் விலகுவரே. (1)

1. *வரர்=தேவர்; பி – நிகண்டு. கரம்வீசி என்பது 'கரம்விசி' எனப் பொருந்திற்று.*

**நி**றைமுக ரிமையெனு நினதொரு சுடலையி னினையுமெ னுருமுழுதுங்
கறையற வெரியவொ ரருள்புரி திறநிறை கருணையி னிறைவவுனை
இறையென முனுமுள மிலிகளி னுழியெனை யினிவிடு வதையொழியந்
நறையின ருரைசெவி நுழையினு மறமென நலனுள் விலகுவரே. (2)

**த**வநிறை வுடையவ ரிருதய மிசைமிளிர் தருணகு கவெனுடைய
கவலைக டெறுசுக நடனச வையமல கதியரு ணினைமுனியே
சிவசிவ வெனுநல னிலிகளி குளையொழி திருவறு மவருடலின்
பவனம துபடினு மசுசியெ னவுனல பரிவினர் விலகுவரே. (3)

**ந**டுவுடை யரையனை யுறழமி குகடவை நசையொடு புரிகொடிய
ருடைவலி கடியர னெனுமிறை யிறையென வொளிரொரு குகநினையே
படருள மிலிகளி னிடையெனை விடலொழி பறையவர் விழிபடினுங்
கொடுவிட வனலினு முயர்வென நினைநினை குணமுளர் விலகுவரே. (4)

**ச**னனமு நிதனமு மறவெனை யணையொரு தலையரு டருகுகனே
உனையறி கிலரிவ ணெனையும றிவதிலை யொழியவ ரிகுளையெலாம்
கனவினி லவரெதிர் வரினுமி தெமதுயிர் கவர்கொடு வரியெனவே
தினமுநி னைநினையு மளிமன துயரிய திருவுளர் விலகுவரே. (5)

**அ**யிருமி ரசனையு மனையவெ னறிவினி லனுதின முளபெரியோய்
உயிரின துடலின தெனவறி திடமில ருனைநினை வதுமிலையே
செயிருறு மவர்புடை யெனைவிட லொழியவர் சிலதர்க ளெதிர்வரினும்
வயிரம னமுடைய வெமபடர் வரவென மதியினர் விலகுவரே. (6)

**வி**டுதலை யெனுமுயர் நலனொடு வினைவிளை விபுலைந லனுநுகர
நடுவறு பெருநசை கொளுநசை யினரிழி நடையிவ னையுநணுகாத்
தடைபணி யருள்குக வுனைநினை பரிவிலர் சதியுற வொழியவர்போம்
நடைவழி யிவரினு மிடரென நினைநினை நலனுளர் விலகுவரே. (7)

---

*2. நறை = குற்றமாகலின் அஃதுடையரு நறையரெனப்பட்டனர்; "நறையும் வண்டுங் கடவையு நவையும்" என்பது பி – நிகண்டு. 'நறை' கள்ளின் பெயருமாகலிற் கள்வெறியர் போல்வார் "நறையினர்" எனப்பட்டன ரென்பதுமாம்.*

*3. இகுளை = சுற்றம்; நட்பின்மே னின்றது. பவனம் = காற்று.*

*4. கடவை = குற்றம்.*

*5. நிதனம் = அழிவு. "உனையறிகிலர் இவண் எனையு மறிவதிலை" என நிச்சயித்த செய்தி, ஆத்திகரனைவருங் கோடற்பாலதேயாயினும் ஈண்டுக் குறிப்பாக வெடுத்துக் கூறுவது "குமரகுருவை" மதியா இறுமாப்புடைக் குமதிகளைப் பற்றியதேயாம். ஆசிரியர், துறவறநிலை புக்கபின்றை இனையரோடுங் கூடிநிற்க நேர்ந்தவிடத்து உற்றவுறுகண் கருதியே இத்திருப்பத்துப் பாடி நின்றா ரென்பதை, முதற்றிருப்பாட்டே "பெரு மவுனருள் கருதாக் கரிசிந ரிடையெனை விடுவதை யொழி" என்னும் பிரார்த் தனையைக் காட்டியதுபோல ஏனைப்பாட்டுக் களுங் காட்டினமையே வலியுறுத்துமென்க. "முன்னவன் பாத மேத்தி, அகநெகா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே" என்னும் திருவாசகமும் இங்கே சிந்திக்கற்பாற்று.*

*6. அயிர் = கரும்பின் தேங்கட்டி; யகரவெதுகை. இரசனை = நா. அனைய என்னும் பெயரெச்சம் பெரியோய் என்னும் விளியுருபேற்ற பெயரைக் கொள்ளும்.*

**அ**றிவறி வதுபொரு ளெனவரன் முனநுவ லமலகு மரகுருவே
சிறியவெ னஞரடு பெருமவு னருளையொர் சிறுவரை யுநினைகிலாப்
பொறியிலி களிகுளை யறவொழி யவர்மிகு பொருளுள ரெனினுமிறா
வறியவ ரவரக முகடியி னுறையென மதியுள் விலகுவரே. (8)

*தனந்தன தனதன தனந்தன தனதன, தனந்தன தனதனன*

**பெ**ருந்துயர் கருவிடை நுழைந்திட லெனவெடி பிறங்கிய தவியவென
விரும்பெனி மலநினை யிகழ்ந்தழி மடவரை விலங்கியு யவருளவர்
இருந்தவி டனருகி லிருந்திடி னுமதுவெய் தெழும்பலெ ரிநரகென
அருந்தவ ரறிவினி லலங்குன தருளினி தறிந்தவர் விலகுவரே. (9)

*தனத்தன தனதன தனத்தன தனதன, தனத்தன தனதனனா*

**து**றக்கவி புதர்துய ரெருக்கிய ருளிறைவ துதிக்குநர் துனிகடிவோய்
பிறக்கமி லருணைகொள் பெயர்க்கவி முதலவ பிறப்பிலு னருள்கருதா
மறக்கல திகளுற வினைக்கெடு கெடுவவர் மனைத்தெரு வழிவரினும்
அறக்கொடி தெனவுனை வலித்துல குணர்வற வடக்குநர் விலகுவரே. (10)

# 88. விலகுவர்

**1.** சூரியன், சந்திரன், நெருப்பு, ஆகிய மூன்று ஒளிப்பொருள்களையும் ஒளிரச்செய்யும் திருவருள்மயமான முழுமுதற் பொருளே! பெரிய ஒளிவடிவம் எனவும் வெளி வடிவம் எனவும் திகழும் பெருமானே! மேலான தேவர்களின் தலைவனே, உன் திருவருளை நினைக்காத பெரும் குற்றம் உடையோரிடையே என்னை இருக்கவைப்பதை இனியேனும் தவிர்த்துவிடு. அன்னோர் தம் கைகளை வீசி எதிரே வருதலானது பெரும் சினத்தை உடைய பாம்பைக் காட்டிலும் அதிகக் கொடுமையானது என்று கருதி. உன்னை நினைக்கும் அன்புப் பெருக்கம் உடைய அடியார், அவர்களிடமிருந்து விலகியே நிற்பர்.

**2.** பூரண ஞானம் எனப்படும் உனது சுடலையில், உன்னை நினைத்திருக்கும் என் வடிவம் முழுவதையும் அதன் குற்றமனைத்தும் கழியும் வண்ணம் எரிப்பதற்காகப் பேரருள் புரியும் ஆற்றல் நிறைந்துள்ள கருணை மயமான இறைவ! உன்னை முழுமுதல் இறைவன் எனக் கருதும் உள்ளம் இல்லாதவர்களிடையே என்னை இருக்கவைப்பதை இனியேனும்

---

*9. வெடி = அச்சம். "விலங்கல்" நீங்கல், விடல் என்னும் பொருள் பயக்கும். விலக்கி யென்பது சந்தநோக்கி "விலங்கி" என மெலித்தல் விகாரப்பட்டதெனினுமாம். உய – உய்ய என்பதன் விகாரம். வெய்து – வெம்மையென்னும் பண்பினடியாய்ப்பிறந்த ஒன்றன்பாற் குறிப்பு வினை யாலணை பெயர்.*

*அலங்குதல் = ஒளிசெயல்; சூ–நிகண்டு, பி–நிகண்டு, **சே–திவாகரங்** காண்க.*

*10. பிறக்கு = வழு; சே–**திவாகரங்** காண்க; அம்முச் சாரியைப் பெற்றுப் "பிறக்கும்"என வாயிற்று. கலதி = மூதேவி.*

தவிர்த்துவிடு. பெரிதும் குற்றம் உடைய அன்னோர் கூறும் சொற்கள் செவியில் நுழைந்தாலும் பெரும்பாவமாகும் எனக்கருதி, உனது அருள்நலன் வாய்க்கப் பெற்றுள்ள அடியார் அவர்களிடமிருந்து விலகியே நிற்பர்.

**3.** தவ ஆற்றல் நிறைந்துள்ள பெரியோர்களின் இதய பீடத்தில் வெளிப்பட்டு விளங்கும் இளமைநலம் சான்ற குகப்பெருமானே! எனது கவலைகளையெல்லாம் அழிக்கும் ஆனந்தத் திருக்கூத்தனே! பொற்சபையில் விளங்கும் தூயோனே! பெரும் பேறுகளை அருளும் உன்னை அன்போடு நினைந்து "சிவசிவ" என்று கூறும் நற்பேறு இல்லாதவர்களின் நட்பை விலக்கிவிடு. அருள் அற்ற அன்னோர்தம் உடல்மீது படிந்த காற்று தம்மேலே பட்டாலும் தூய்மை இழப்பு (தீட்டு)நேர்ந்துவிடும் என, உன்மேல் நல்லன்பு கொண்டுள்ள அடியோர் கருதி, அவர்களிடமிருந்து விலகியே நிற்பர்.

**4.** நடுநிலை நெறிப்பட்ட யமதருமராசனை நிகர்த்து விளங்குமாறு மிகப் பெரிய குற்றங்களையும் பெரிதும் விருப்பத்துடன் செய்யும் கொடியோரின் ஆற்றலை அழிக்கும் ருத்திரன் எனப்படும் கடவுளுக்கும் இறைவன் எனத் திகழும் ஒப்பற்ற குகப்பெருமானே! உன்னை அன்புடன் தியானிக்கும் உள்ளம் இல்லாத கொடியோரிடையே என்னை இருத்திவைப்பதைத் தவிர்த்துவிடு. கூறப்பட்ட அன்னோரின் பார்வை பட்டாலும், அது கொடிய விஷத்தின் சுவாலையைக் காட்டிலும் அதிகக் கொடுமையானது எனக் கருதி, உன்னைக் கருதும் நற்குணம் மிக்க அடியார் அவர்களிடமிருந்து விலகியே நிற்பர்.

**5.** பிறப்பதும் இறப்பதுமாகிய பந்தநிலை என்னைவிட்டு நீங்க என்னுடன் அணைந்திருப்பதாகிய ஒப்பற்ற தலையளியை வழங்கும் குகப்பெருமானே! இவ்வுலகில் உன்னை நன்கு உணராதவர்கள் என்னையும் நன்கு உணர வாய்ப்பில்லை ஆதலால் அவர்களின் நட்பை முழுவதுமாகத் தவிர்த்துவிடுக. "அன்னோர் கனவில் எதிர்வந்தாலும் அந்த வரவு, எமது உயிரைக் கவர்ந்துகொள்ளும் கொடிய புலியே" எனக் கருதி, நாள்தோறும் உன்னை நினைக்கும் கனிந்த மனப்பாங்கு முதிரப்பெற்றுள்ள அருட் செல்வம் உடைய அடியார், அவர்களிடமிருந்து விலகியே நிற்பர்.

**6.** கரும்பின் இனிய கட்டியும் நாக்கும் என்னுமாறு என் அறிவில் இரண்டற்று எப்பொழுதும் வெளிப்பட்டிருக்கும் பெரியோய்! இது உயிருக்கு உரியது; இது உடலுக்கு உரியது எனப் பிரித்தறியும் விவேகஞான பலம் இல்லாதார் உன்னை ஒருபோதும் நினைக்கமாட்டார்கள்; தீவினையாகிய குற்றம் செறிந்துள்ள அன்னோர்களின் சார்பில் என்னை இருத்திவைப்பதைத் தவிர்த்திடுக. அன்னோரின் பணியாட்கள் எதிரே வந்தாலும் அந்த வரவு, வைரம் போன்ற உறுதியான மனம் வாய்த்துள்ள யம தூதர்களின் வரவாகும் எனக் கருதி, விவேக ஞானம் உள்ள அடியார் அவர்களிடமிருந்து விலகியே நிற்பர்.

**7.** முத்திப்பேறு எனப்படும் உயர்ந்த நற்பேற்றுடன் வினைப்பயன் விளைதற்கு ஆதாரமாக உள்ள இவ்வுலகில் நிலைத்து வாழ்ந்து உலக இன்பங்களையும் அனுபவிக்க, நியாயமற்ற பேராசையைக் கொள்ள விரும்பு வோரின் இழிவார்ந்த நடை எளியேனையும் நணுகாதவாறு தடைசெய்தருள்வாய். குகப்பெருமானே! உன்னை நினைந்திருக்கும்

கனிவார்ந்த உள்ளம் இல்லாதாரின் வஞ்சனைத் தன்மை மிக்க உறவை நீக்கிவிடு. அன்னோர் செல்லும் வழியிலே செல்வது கூடப் பெருந் தீங்கு விளைவிப்பதாகும் எனக் கருதி உன்னை நினைக்கும் அருட்பேறுள்ள அடியார் அவர்களிடமிருந்து விலகியே நிற்பர்.

**8.** "அறிவை அறிவதே அர்த்தமுள்ள ஞான வாழ்வு" என முன்பு சிவனுக்கு உபதேசித்து அருளிய, இயல்பாகவே மலமற்றுள்ள குமர குருப் பெருமானே! சிறியோனாகிய எனது துன்பங்களைப் போக்கி அருளும் பெரும! உனது அருள்திறத்தை ஒருசிறிதும் நினைத்துப் பார்க்காத அறிவிலிகளின் நட்பை அடியோடு தவிர்த்துவிடு. அன்னோர் பொருட்செல்வம் மிகுதியாக உடையவரே ஆயினும் அவர்கள் நீங்காத வறுமைநிலைக்கு ஆட்பட்டிருப்போரே ஆவர். அவர்களின் வீடும் மூதேவியின் உறைவிடமாகும் எனக் கருதி, ஞானப் பேறு வாய்த்துள்ள நின் அடியார் அவர்களிடமிருந்து விலகியே இருப்பர்.

**9.** பெருந்துன்பம் என்பது மீண்டும் மீண்டும் பிறப்புக்கு உள்ளாதல் எனக் கருதி அச்சம் மிகுந்தெழுந்துள்ளது. அந்த அச்சம் நீங்க வேண்டி உன்னை விரும்பி நிற்கும் எனக்குரிய மாசற்ற பெரும! உன்னை இகழ்ந்து வீணே அழிந்துபோகும் அறிவிலிகளை ஒதுக்கி விட்டு, நான் உய்திபெறுமாறு அருள் புரிக. அன்னோர் வசிக்கும்இடம் அருகில் இருந்தாலும், அது கொடுந்துன்பங்கள் பெருகும் பல எரிவாய் நரகமே எனக்கருதி, அரிய தவச்செல்வர்களின் ஞானநிலையில் ஒளிவிட்டுத் திகழும் உனது அருளாற்றலை இனிது அறிந்திருக்கும் அடியார். அவர்களிடமிருந்து விலகியே இருப்பர்.

**10.** துறக்க உலகில் வாழும் தேவர்களின் துன்பத்தை அறவே நீக்கிய அருளாற்றல் மிகுந்த இறைவ! துதிப்போர்களின் கலக்கங்களை நீக்கி அருள்வோய்! குற்றமற்ற அருணகிரிப் பெருமான் பாடிய திருப்புகழ்க்குரிய முதற்பொருளே! உதிப்பதும் மறிப்பதும் இல்லாத உனது அருள் குணத்தைச் சிறிதளவும் சிந்திக்காத கொடிய மூதேவிகளின் உறவை நீக்கிவிடு. கேடு அடையும் அன்னோர் வீடுகள் உள்ள தெருவழியே வந்தாலும், அது மிகமிகக் கொடிதான பயனைத் தரும் எனக் கருதி, உன்னைப் பற்றிய நினைவை ஏற்றுக்கொண்டு உலகத்தொடர்பான பற்றுணர்வு அடியோடு நீங்க உள்ளத்தை அடக்கி இருக்கும் அடியார்கள் அவர்களிடமிருந்து விலகியே இருப்பர்.

# 89. பொன்னினான்மறை

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பொ**ன்னி னான்மறை முதலிய விதப்பாய்ப் புகல ரும்பிர மங்குகன் சம்பு
என்னும் வாச்சியங் களுக்குரி யவனா யிருந்து ளோனெவ னோவவ னென்றன்
மன்ன னாவனென் பதிற்சிறு வரையு மாற்ற முண்டுகொ லோவளி யாலே
என்னை யாளொரு கருணையங் கடலே யெங்கு மாயப ராபர வெளியே. (1)

**தெ**ளிவு வாயுசங் கிதைமொழி போலச் சிவன்ம கேசுர னுருத்திரன் விண்டு
ஒளிர்பி தாமகன் மருத்துவ னெல்லா முணரு மோர்சரு வஞ்ஞனெ லார்க்குங்
களித ரும்பர மாத்தும னென்று கழறு மெண்வகைப் பெயர்களுக் குரிய
விளிவி லாச்சிவ மென்பதுநீ யே வினைக ணுறு பராபர வெளியே. (2)

**இ**தய தாமரைக் கருணிகை தன்னி லினனு மவ்வினனடுவணின்மதியும்
மதியி னாப்பணிற் கனலுமக்கனலுண் மகேசன் றூயச தாசிவன் சிவனுங்
கதழ்வொ டேயுள ரெனுநிசுவாச காரி கைச்சொலின் முடிவினிற் கின்ற பதியெ
னுஞ்சிவ னேகுக னென்றோர் பவர்க்கும் பிறப்புள தோபசு பதியே. (3)

**தூ**மிக் கோங்கறி வாயுத மேந்தித் தொல்லையு யிர்ப்பரி யுகைக்குமென் பதியே
சாமிக் கன்புடை யோருமச் சாமித் தன்மை வாய்ந்தகண் ணாளருந் தகவாய்ச்
சாமிச் சொல்லினைச் சாருவ ரேனோர் சார்கி லாரவர் சார்வது தமக்குப்
பூமிக் குட்சிறப் பின்பொருட் டென்னும் புந்தி யோரையும் யான்றொழல் கடனே.
(4)

**உ**த்த மோத்தமர்க் கருங்கையு மொன்றே யுலாவு காலுமொன் றேகணு மொன்றே
சத்த மார்செவி யாவது மொன்றே சாற்று நாவுமொன் றேயுளு மொன்றே
மத்தமாய்த்தொழு தெய்வமு மொன்றே மருவு வீடுமொன் றேயென வறிந்தேன்
முத்த வாதிமுத் தரையும னாதி முத்த னாமுனை யும்புகழ் நானே. (5)

**தோ**ணி யூர்முனி பங்கமென் மொழியாற் றொடங்கு மோர்பதி கத்துறு நான்கும்
வாணி வாக்கர சின் றிரு வாரூர் வண்மை யம்பதி கத்துறு மூன்றும்
பாணிச் சுந்தரர் நன்னிலக் கோவிற் பதிகத் தொன்பதும் பறைந்தசை வருக்குங்
கோணில் பாசுப தருக்குமிக் குரிய கோவென் றுனையறிந் தேன்பர சிவமே. (6)

**ச**மண சிங்கமு மடிய ரெண் ணிலருந் தயங்கு சோதியுட் புகுந்தது போலப் பமன
மீனுறை கங்கையங் கரையிற் பாசு பத விர தத்தரெண் ணிலர்தாம்
அமல சோதியுட் புகுந்ததை யினிதா யறையும் வாயுசங் கிதையிது நேரச்
சமயம் யாதினு நிகழ்ந்ததுண் டோவெஞ் சைவ சமயசித் தாந்தமு தாலே. (7)

---

*2. "வாயுசங்கிதை மொழி" என்றது – அச்சங்கிதையின் பூருவகாண்டத்து 28–ஆம் அத்தியாயத்து "உணருமா" என்றற் றொடக்கத்துச் செய்யுள்.*

*விண்டு – விட்டுணு = பூதமுதல் நாதபரியந்தம் வியாபித்திருப்போன்.*

*பிதாமகன் = தென்புலத்தார்க்குத் தந்தையாயுளோன்.*

*மருத்துவன் = ஆன்மாக்களின் மலப்பிணி தீர்ப்போன்.*

*6. பங்கமென்மொழியாற் றொடங்குமோர் பதிகம் = திருச்சண்பைநகர்த் திருப்பதிகம்.*

*பாணி = பாட்டு; "விருந்திற் **பாணி** கழிப்பி" என்றார் **(மலை படுகடாத்திற்)** பெருங் கௌசிகனாரும்.*

*நன்னிலக் கோவில் = நன்னிலத்துப் பெருங்கோயில்.*

*7. பமன – பம்+அன எனப்பிரிக்க. பம்=விண்மீன். அன–அன்ன என்பதன் விகாரம்; உவமவுருபு. **வாயுசங்கிதை** யறைதல் – அதன் உத்தரகாண்டத்து இருடிகள் காசியிற் கதியடைந்த வத்தியாயத் துளது.*

**எ**ழுந்த சோதியைப் பரசிவ லிங்க மென்று நான்முகன் சாற்றிய சாற்றாற்
கொழுந்துபோற்சிவ ஞானமு ளாரைக் குசல வான்கதி யடைந்திடுமாறு
விழுங்க வுள்ளது வேசிவ லிங்கமேனி யென்றறி யாதவர் போக்கில்
விழுந்து நானுழ லாவணங் காத்தி விமல யோகசி தம்பர வெளியே. (8)

**பி**ண்டத் தேசிவ லிங்கசித் தியினைப் பெற்று ளோர்கெழு பிழம்புரு வாய
அண்ட கோடிகள் யாவையுந் தனக்கு ளடங்க வைத்துள பெருவெளி யொளியாப்
பண்டு மாமறை புகழறி வுளதாப் பகரோர் பரசிவலிங்கவைக் கியமுங்
கொண்டு வாழ்வரென் றறிநரை நான்கை கூப்புங் கடன்மை யுளேனரு ணிதியே. (9)

**கோ**ணம் வாசனை களைக்கிர கிக்குங் கொள்கை போலவைம் புலனையுங் கிரகித்
தாண ரருளிடைப் போதமுங் கொடுத்தவ் வருளின்வயத் தமர்ந்தம்மய மாகிக்
காணல் கருதலொ ழிந்திருப் பதுவே கனக லிங்கசித் தியெனவு முணர்வார்
பேண வுளதிருப் புகழ்க்கவி யெம்மான் பெரும நானுமுன் சரண்புகுந் தேனே. (10)

# 89. பொன்னினான்மறை

**1.** கருணையால் என்னை ஆட்கொள்ளும் ஏகநாயகமான கருணைக் கடலே! எங்கும் வியாபித்து நிறைந்துள்ள பரமும் அபரமும் ஆன ஞானவெளியே! சத்தியமாய் என்றைக்கும் உள்ளனவாய்த் திகழும் நான்மறை முதலான மூல நூல்கள் நிறுவிக்காட்டும் மேம்பட்ட பொருளாய், விளக்கிக் கூறுவதற்கரிய பிரம்மம், குகன், சம்பு என்னும் சொற்களின் உட்பொருளுக்கு உரியவனாய்த் திகழ்ந்திருப்போன் எவனோ அவனே என் உயிர்நாயகன் என்பதில் சிறிதளவேனும் மாற்றம் உண்டோ? இது எனது உறுதிக் கருத்து அன்றோ!

**2.** தெளிவான முறையில் நுட்பங்களை விளக்கும் வாயுசம்மிதை கூறியுள்ளது போன்று, சிவன், மகேசுவரன், ருத்திரன், விண்டு, பிதாமகன், மருத்துவன், அனைத்தையும் உணரவல்ல சருவஞ்ஞன், அனைவர்க்கும் ஆனந்தம் வழங்கும் பரமாத்துமன் எனக் கூறப்படும் எண்வகைப் பெயர்களுக்குரிய, அழிவிலாச் சிவபரம் பொருள் என்பதும் நீயே அன்றோ! வினைப்பயன்களை விலக்கி வைக்கும் பராபர வெளியே!

**3.** பந்தப்பட்டுள்ள ஆன்மாக்களுக்குரிய தலைவ! இதயம் எனப்படும் தாமரைப் பூவின் கர்ணிகையில் சூரியனும், சூரியனின் நடுவில் சந்திரனும், சந்திரனின் நடுவில் தீயும், தீயின் நடுவண் மகேசனும் சதாசிவனும் தத்தமக்குரிய ஆற்றலோடு திகழ்ந்துள்ளனர் எனக் கூறும் நிசுவாச காரிகை எனும் ஆகமத்தில் வரும் கூற்றின் முடிவில் புலப்படுத்தப்பட்டுள்ள பதி எனப்படும் சிவபரம் பொருளே குகன் ஆவன் என ஆய்வாலும் அனுபூதியாலும் உணரும் அடியார்க்கும் இனிவரக்கூடிய பிறவியும் உள்ளதோ?

*8. இதனில், நான்முகன் சாற்றியதாக வுற்றசெய்தியும் மேலை வாயுசங்கிதையிற் போந்த வத்தியாயத் துளதே.*

*10. கோணம் = மூக்கு.*

**4.** தூய்மை மிகுந்து ஓங்கும் ஞானசக்தியாகிய ஆயுதம் ஏந்தி, அனாதியாய உயிர்க்கூட்டமாகிய மயிலைச் செலுத்திக் கொண்டிருக்கும் என் தலைவ! சுவாமி எனும் சிறப்புச் சொல்லுக்குரிய குகனுக்கு அன்புடையவர்களும், அப்பெருமானின் எண்வகைக் குணங்களை ஏற்றுக்கொண்டுள்ள அருளாளர்களும், பெறுதற்கரிய பெருமை விளங்க, சுவாமி என்னும் திருப்பெயரைப் பொருந்திநிற்பர். இவர்களல்லாத ஏனையோர் 'சுவாமி' எனும் திருப்பெயரைப் பொருந்த மாட்டார். அவர்கள் தம்மை 'சுவாமி' என அழைத்துக் கொள்வது, உலகில் தாம் சிறப்படைந்து இருப்பதற்காகவே – என இவ்வாறு உணரும் ஞான உணர்வுடையோரையும் தொழுது நிற்றல் எனது கடமையே ஆகும்.

**5.** வீடுபேறு அடைந்துள்ள ஆதிமுத்தரையும், அனாதிமுத்தனாகிய உன்னையும் புகழும் அடியேன் "தனிச் சிறப்புடன் விளங்கும் உத்தம ஞானியருள் மிகவும் உத்தமமான அருட்பெரியோர்க்குக் கையும் ஒன்றுதான்; நடக்கும் காலும் ஒன்றே; கண்ணும் ஒன்றே; தூய்மையான காதும் ஒன்றே; கூறும் நாக்கும் ஒன்றே; உள்ளமும் ஒன்றே; உள்ள மதர்ப்புடன் தொழும் தெய்வமும் ஒன்றே; அன்னோர் பொருந்தும் முத்திநிலையும் ஒன்றே" என அனுபூதியால் தெளிவாக அறிந்துகொண்டேன்.

**6.** பரசிவ வடிவாய் விளங்குவோய்! சீகாழி முனிவரனாகிய திருஞானசம்பந்தர் பாடிய 'பங்கம்' எனத் தொடங்கும் சண்பைநகர்த் திருப்பதிகத்து நான்காவது பாடலும், திருநாவுக்கரசர் பாடிய ‘‘காண்டலே கருத்தாய்'' எனத் தொடங்கும் திருவாரூர்ப் பதிகத்தின் மூன்றாவது பாடலும், தாள இசைப்பாடல் பாடும் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடிய நன்னிலத்துப் பெருங்கோயிலுக்கு உரியதாய்த் "தண்ணியல்'' எனத் தொடங்கும் பதிகத்தின் ஒன்பதாவது பாடலும் புலப்படுத்தும் பலபிரிவினராய சைவர்களுக்கும், குற்றமற்ற பாசுபத சைவர்க்கும், மிகவும் உரிமைப்பட்டுள்ள தனி முதல் நாயகனாக உன்னை நான் அனுபூதியால் உணர்ந்துகொண்டேன்.

**7.** எமது சைவ சமயத்து சித்தாந்த நெறிக்கு உரிய முழுமுதற் பொருளே! திருஞானசம்பந்தரும், மற்றும் அவரது திருமணத்தைக் காணவந்த எண்ணற்ற அடியார்களும் பேரொளியுடன் திகழ்ந்த சோதி வடிவத்துள் நுழைந்து ஐக்கியப்பட்டது போன்று விண்மீன் போன்ற மீன்கள் வசிக்கும் கங்கையாற்றின் கரையில் எண்ணற்ற பாசுபத விரதியர்கள் குற்றமற்ற தூய நெருப்புமயமான சோதி வடிவத்துள் புகுந்து ஐக்கியப்பட்டதை வாயுசம்மிதை எனும் நூலானது இனிதாக எடுத்துரைக்கின்றது. இத்தகைய ஐக்கிய நிகழ்ச்சி போன்று, வேறு சமயங்களுள் யாதேனும் ஒன்றில் நிகழ்ந்தது உண்டோ?

**8.** மிகவும் தூய்மை வாய்ந்த சிவயோக நெறியால் உணரப்படக் கூடிய சிதம்பர வெளியே! காசிநகர்க் கங்கைக் கரையில் எழுந்த சோதிவடிவத்தைக் காட்டி "இது பர சிவலிங்க வடிவமே'' என்று பிரம்மன் கூறிய கூற்றால் ‘‘தீயின் கொழுந்து போன்ற சிவஞானம் வாய்க்கப் பெற்றுள்ளவர்களை, அவர்கள் மிகவும் சிறப்பும் நேர்த்தியும் வாய்ந்த மேலான சிவகதியை அடையுமாறு, தன்னுள் விழுங்கி ஐக்கியப்படுத்திக் கொள்ள உள்ளதே சிவலிங்க வடிவாகும்'' என உணரலாம். இவ்வாறு அறிய இயலாதவர் செல்லும் தீயநெறியில் விழுந்து நான் துன்புறாத வகையில் என்னைக் காத்து அருள்!

**9.** அருள் நிதியே! தேகத்துடன் கூடி இருக்கும் காலத்திலேயே சிவலிங்க சித்தியைப் பெற்றுள்ள பெரியோர்கள், பொருந்தும் நெருப்புமயமான வடிவுடையதாய், கோடிக்கணக்கான அண்டங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள பெருவெளியாய், ஒளி மயமாய், தொன்மையான பெரு மறைகள் புகழும் ஞானத்திரட்சியை உடையதாய்த் திகழ்வது எனக் கூறப்படும் பர சிவலிங்கத் திருவுருவில் ஐக்கியப்பட்டு நிற்கும் உயர்ந்த பேற்றையும் பெற்று வாழ்வார்கள் என உணரவல்ல அருளாளர்களை நான் கை கூப்பி வணங்கும் கடப்பாடு உடையேன் ஆவேன்.

**10.** "மூக்கானது வாசனையைக் கிரகித்துக்கொள்ளும் செயல்போன்று ஐம்புலன்களையும் தம்மிடம் கிரகித்துக் கொண்டு, அவற்றுக்கு நித்தியமாய், என்றும் புதியதாய் உள்ள அருட்பேற்றால் சிவஞானத்தையும் ஏற்றி, அந்த அருளின் வயப்பட்டு அமர்ந்து, அருள்மயமாகி, காண்டல், சிந்தித்தல் முதலானவற்றை நீத்து இருப்பதே கனகலிங்க சித்தி எனும் பெருநிலையாகும்''. இவ்வாறு உணரக் கூடிய திருவுடையோர் போற்றித் துதிக்க உள்ள திருப்புகழ்க் கவிஞனாகிய எம்மான் அருணகிரிப் பெருமானுக்குரிய நாயகனே! எளியேனும் நினது திருவடியைப் புகலாக அடைந்து உள்ளேன்.

# 90. சிதம்பரசிவம்

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருவுநா மகளு மவர்பதி களுமுன் றிருவுளத் தானுமுன் னருளாற்
பெருகிய மகிமைப் பாவல ரானும் பிறர்க்கருள் வரங்களின் வண்ணம்
உரியசீ ரிடவுன் னாணையி லிருக்கு முண்மைநன் குணருவ ருரியோர்
இருளர்க ளுணரா ரிருதய குகனே யெனக்கருள் சிதம்பர சிவமே. (1)

**வா**யுசங் கிதைதான் வழுத்திடு மாறு மகேசுர னிடத்துதித் தவருள்
தீயவிர் மேனி யுருத்திர னொருகாற் றிருவரி யயனையு மொருகால்
மாயனவ் விருவர் தமையுமற் றொருகான் மலரயன் மற்றிரு வரையுந்
தூயநின் னருளாற் படைத்ததுண் டாமேற் சுயம்பெது சிதம்பர சிவமே. (2)

**க**ந்தபு ராணங் கழறுமா றிதழார் கமலநான் முகன்சுர ரேத்தச்
செந்திலிற் கொலுவிருந் தவனுமா லேனஞ் சிதைத்தவேற் படையனு மாய
கந்தனுக் கயிலுஞ் சிவற்குயர் சூலுங் கரியமா லளித்தன னென்று
முந்தைநூ லியைபின் றறைதலக் கதைமா மோசமே சிதம்பர சிவமே. (3)

---

*1. சிதம்பரம் = ஞானவெளி; இதுபற்றி யறியவேண்டுவ பலவும் தகராலய ரகசியத்தும், அதனுரையாகிய சதானந்தசாகரத்து முள.*

*2. வாயுசங்கிதை = வாயுசங்கிதையிற் பிரமவிட்டுணு வுற்பத்தியத்தியாயம்.*

*3. ஏனம் = பன்றி. இவ்வரலாறு கந்தபுராண உபதேசகாண்டத்து வராகாவதாரச் சருக்கத்துளது.*

**க**ள்ளமின் மறையா கமங்களிற் காணாக் கதைகளை வியாசரு மவர்சொற்
பிள்ளையுஞ் சொலின ரவைமுனி வோரும் பெட்புறக் கேட்டன ரெனக்கோள்
வெள்ளமாப் பொலியப் பொறித்தவர் பொறிக்கும் வினையின ரெவர்க்குமாங் கூலி
மள்ளலந் தகனன் றெவரளித் திடுவார் மாசறு சிதம்பர சிவமே. (4)

**மு**றைகெட முரணிக் கூறிய வேடு மொழிந்தபண் டிதருமொல் லையெனும்
பறையுள தேலங னுயர்த்தலு நெறியாப் பகர்ந்தநூல் புதிதெனு மொழியும்
உறைநிலத் துளரக் குருவெனும் பேச்சு முள்ளவே லஙனிகழ் தலுமால்
இறையுல கினர்க்குச் சகசமென் றாலென் னிசைப்பெனாஞ் சிதம்பர சிவமே. (5)

**போ**னகான் முயலே பெரிதெனப் பேசிப் புலம்புதல் போலமுன் னாளில்
மானமின் றெழுதி வைத்தபுத் தகக்கோ மான்களே பெரியரென் றுயர்த்தி
ஏனைவல் லவரை யிகழுமிந் நாளி லேழையே னறைகடொன் னூலில்
தேனென வினிக்கு முடிபென வுனக்கே தெரியுமெஞ் சிதம்பர சிவமே. (6)

**ம**தத்தினாற் சொற்போர் விளைக்குந ரெவரும் வழுத்துதங் கடவுளைக் கண்டு
பிதற்றலெத் துணையு மின்றுபுத் தகக்கீர் பிடித்துவா திடுவரப் படியேல்
மதர்ப்பறை வேத மாகமம் புராண மாண்படி யாரவர் வாக்குப்
பதத்தல மெண்ணான் மிகுசைவ சமயம் பலமன்றோ சிதம்பர சிவமே. (7)

**சா**தக வபர ஞானமு முதிர்ந்த சாத்திய மாம்பர வறிவும்
போதகஞ் சிறந்த வொருசம யிக்கே பொருத்தமென் றாமிதை யொழித்து
வாதுறு துவித வாதமத் துவித வாதமென் றிருமத மிலவென்
றேதமி லறிஞ ரறிவரன் றோவென் னிருதய சிதம்பர சிவமே. (8)

**தி**னம்பிணஞ் சுமந்து பிழைத்திடு பவனுஞ் செத்தவ ரூழறுந் திறந்தார்
இனநெடு நாணா மிருப்பமென் றுழப்பா யெணியெணி மாளுவ தியற்கை
அனகனே யிதனை யாய்ந்தகண் ணாள ராணவ மலவிசித் திரமா
வினைவலி யென்பா ரிதைவெலும் வகையெவ் விதநுவல் சிதம்பர சிவமே. (9)

**கா**ரிய வுலகங் காரணத் தடங்கோர் காரணங் குறித்துமா வெனவுஞ்
சீரிய சிருட்டி தனின்முனம் போலத் திரும்புதல் குறித்தியா வெனவும்
நேரிய வருத்தங் கொளவுள மாயை நினையடை வரைச்சிறை செயுமோ
ஆரிய னருணைப் பெயரியற் கிறையென் றாயவெஞ் சிதம்பர சிவமே. (10)

---

*5. ஒல்லை = பழமை.*

*8. அபரஞான பரஞான விவரம், 7–ஆம் பத்திலே "கேட்டல் சிந்தித்தலாய்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டானறிக.*

*9. உழப்பு = வலி, உற்சாகம்; "உழப்பென்ப வலியுற்சாகம்" என்பது ளகரவெதுகை.*

*10. காரியவுலகங் காரணத்தடங்கலென்பதைச் சத்திரூபமாகச் சுருங்கிநிற்ற லென்றும், சிருட்டியில் முன்னம்போலத் திரும்புதல்குறித் தென்பதை வியத்திரூபமாகப் பெருகிநிற்ற லென்றும் விளம்புப. இத்திருப்பாட்டு (மாயா) மாயையென்னுஞ் சொற்குப் பொருள்கூறி, அதன் செயலையுந் தெரிப்பதாயிற்று.*

ஆகத் தொண்ணூறுபத்தினும் போந்த திருப்பா - 900
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 903**

# 90. சிதம்பரசிவம்

1. ஒவ்வோர் உயிரின் இதயமாகிய பீடத்திலும் எழுந்தருளும் குகனே! எனக்கு அருள்புரிய உள்ள ஞானவெளி மயமான சிவபரம் பொருளே! திருமகளும் கலைமகளும், இவர்களின் கணவர்களும் ஆகிய இவர்கள், உன் திருவருளாலும், உன் அருளாற்றலால் மகிமை பெருகிஇருக்கும் கவிஞர்களாலும் பிறர்க்கு அருளக்கூடிய வரங்களுக்கு ஏற்ப, அவ்வரங்களால் பெறுதற்குரிய சீரிய செல்வங்களை அளித்தருள உனது அருளாணைப்படி செயற்பட இருக்கும் உண்மையை, உன் அருட்பேற்றுக்கு உரியோர் நன்கு உணர்வார்கள்; இருளடைந்த உள்ளத்தினர் ஒரு போதும் உணரமாட்டார்கள்.

2. சிதம்பர சிவமே! வாயுசம்மிதை எனும் நூல் மகிமைபொருந்த உரைத்திடும் வண்ணம் மகேசுவரனிடம் தோன்றியவர்களுள், தீப்போன்ற மேனியை உடைய ருத்திரன் ஒரு சமயத்தில் திருமகள் நாயகனாகிய திருமால், பிரம்மன் என்னும் இருவரையும், மற்றொரு சமயத்தில் திருமால் என்பவர் பிரம்மன் ருத்திரன் ஆகிய இருவரையும், பிறிதொரு சமயத்தில் பிரம்மன் என்பான் திருமாலையும் ருத்திரனையும் தூய்மைமிக்க நினது திருவருள் தந்த ஆற்றலால் படைத்துள்ளனர் என்பதும் உண்மையில் நிகழ்ந்துள்ளதே எனில், சுயம்புப்பொருள் (தானே தோன்றி நிலைத்திருக்கும் பொருள்) என்பது உண்மையில் எது ? (நீயே யன்றோ).

3. சிதம்பர சிவமே! கந்தபுராணம் விளக்கிக் கூறும் வண்ணம், இதழ்கள் மிகுந்த தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும், மற்றுமுள்ள தேவர்களும் புகழுமாறு திருச்செந்திலம்பதியில் கொலுவீற்றிருந்தவனும், பன்றியைச் சிதைத்த வேற்படையை ஏந்தியவனுமான கந்தப் பெருமானுக்குக் கூர்மைமிக்க வேற்படையையும், சிவபெருமானுக்கு சூலப்படையையும் கரியநிறத் திருமால் அளித்தனன் என, முன்னாள் எழுந்த மூல நூலுக்குச் சிறிதும் இயைபே இல்லாமல் கூறும் தலபுராணக் கதை பெரிதும் மோசமேயாகும்.

4. குற்றமற்றுள்ள தூய சிதம்பரசிவமே! பொய்யுரையும் வஞ்சகக் கருத்தும் இல்லாத வேதங்களிலும் ஆகமங்களிலும் காணமுடியாத கதைகளை "வியாசரும், அவரது பிள்ளையாகிய சுகரும் கூறினார்கள்; அவற்றை முனிவர்களும் பேரார்வத்துடன் கேட்டனர்" எனப் பொய்யுரைகளை, மிக மிக அதிகமாகத் திரண்டு செறிய எழுதிவைத்தவர்கள் எழுதிவைக்கத் தூண்டிய செயலினை உடையவர் ஆகிய அனைவர்க்கும் உரிய கூலியை, பேராற்றல் வாய்ந்த யமதருமன் அன்றி வேறு யார் அளித்திடுவார்கள் ?

5. சிதம்பர சிவமே! முறைமை கெடுமாறு மாறுபடக் கூறும் நூலும் பழைமையானது, அதனை மொழிந்த புலவரும் பண்டைக் காலத்தவர் என்னும் நிலைமை இருக்குமாயின் உயர்த்திக் கூறுதலும், முறைமைப்படியும் முரண்படாமலும் கூறும் நூல் புதியது, அதனை

அளித்த குருவாகிய ஆசிரியரும் நிலவுலகத்து நிகழ்காலத்தில் வாழ்பவரே என்னும் பேச்சுஎழும் நிலைமை இருக்குமாயின் இகழ்ந்து கூறுதலும், மயக்க அறிவு குடிகொண்டுள்ள இவ்வுலகினர்க்கு இயல்பாகவே நிகழும் செய்கைகளாயின், என் கூற்றுக்கள் எந்நிலைக்கு உள்ளாகும் ?

6. எம் சிதம்பர சிவமே ஒரு கால் நீங்கி மூன்றுகால்களே கொண்டுள்ள முயலே பெரியது எனப் பேசிப்புலம்புதல் போன்று, முற்காலத்தே எவ்வித நெறிமுறையும் இல்லாமல் எழுதிவைத்துள்ள நூலாசிரியக் கோமான்களே மிகவும் பெரியோராவர் என உயர்த்திக்கூறி அறிவிற்சிறந்துள்ள ஏனையோரை இகழ்ந்து கூறும் இந்நாளில் அடியேன் கூறும் கட்டுரைகள் அனைத்தும், தொன்னூல்களாகிய வேதாகமங்களில் தேன் போன்று இனிக்குமாறு உள்ள உறுதியான முடிபுகளுக்கு ஒத்துவிளங்குபவை என உனக்கே நன்கு தெரியும்.

7. சிதம்பர சிவமே! மதங்கள் அளவில் நின்று சொற்போர் விளைப்போர் அனைவரும் போற்றப்படும் தத்தம் கடவுளை நேரில் கண்டு பிதற்றிக் கூறுதல் என்பது எந்த அளவுக்கும் இல்லை; வெறும் புத்தகச் சொற்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வாதம் செய்துகொள்வர். அங்ஙனமாயின், வளமையான கருத்துக்களைக் கூறும் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், பெருமைக்குரிய அடியார்களின் வாக்குகள், – ஆகியவற்றின் உயர்வான சிறப்புக்களைக் கொண்டு பல எண்ணிக்கையாக மிகுந்திருக்கும் சைவசமயமானது பெரிதும் பலம் உடையதன்றோ.

8. என் இதயநடுவண் வெளிப்பட்டுள்ள சிதம்பர சிவமே! பின்பற்றுவதற்கு உரியதாக, (சாதகம் என்பதாக) உள்ள அபரஞானமும், முதிர்ந்த சாத்தியமாக (முடிவான நிலையில் அடையப்படுவதாக) உள்ள பரஞானமும், ஞானவளம் சிறந்துள்ள சமயநெறிப்பட்டுள்ள ஒருவனுக்கே பொருத்தமாகத் திகழ்வனவாகும். இதைத்தவிர்த்து, வாதப்போர் செய்யும் துவிதவாதம், அத்துவித வாதம் எனக் கூறப்பட உள்ள இரண்டு மதநெறிகள் இல்லை – என இவ்வாறு, குற்றமற்றுள்ள நல் அறிஞர்கள் தெளிவாக அறிவார்களன்றோ!

9. நாள்தோறும் பிணத்தைச் சுமந்து ஊதியம்பெற்று சீவனம் செய்வோனும் “இப்பொழுது இறந்து போனவர், காலகதிப்படி வாழ்நாளின் எல்லை கழிந்துவிட அதனால் மாண்டார். ஆனால் நாம் இன்னமும் நீண்டநாள் வாழ்ந்திருப்போம்" என உற்சாகமாக எண்ணி எண்ணி இறுதியில் அவனும் மாண்டுபோவது உலகத்து இயற்கை. தூய்மையே வடிவாக விளங்குவோய்! சிதம்பர சிவமே! இதனை ஆய்ந்து பார்க்கும் ஞானியர் **ஆணவ மலத்தின் விசித்திரமான செயற்பாட்டின் ஆற்றலே இது**” எனக் கூறுவர். இதனை வென்று மேம்படும் வகை எவ்வாறு ? கூறி அருள்.

10. காரியமாக உள்ள உலகம், சங்காரகாலத்தில் காரணத்தே அடங்கிநிற்கும் முறைமை பற்றி ‘மா’ என்றும், சீர்மையான படைப்புக் காலத்தே முன்போன்றே, காரணத்திலிருந்து காரியமாக மீளத் தோன்றும் முறைமை பற்றி ‘யா’ என்றும் நேர்மைப்பட்ட பொருள் கொள்ளுமாறு திகழும் மாயை என்பது, உன்னைத் தஞ்சமாக அடைவோரையும் பந்தப்படுத்தி நிற்குமோ ? மிகவும் உயர்ந்து சிறந்திருந்த அருணகிரிப்பெருமானுக்கு முழுமுதல் இறைவன் எனத் திகழ்ந்திருந்த எமது சிதம்பர சிவமே!

# 91. வித்தவொளி

*பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*தத்த தனதனன தந்தன தத்த தனதனன தந்தன*
*தத்த தனதனன தந்தன தனந்தானா.*

**வி**த்த வொளிசுடரு மம்பல நிர்த்த னபசுபதி யென்றுள
மெய்க்கு ணநிதிபொழு தென்பதி லடங்காதான்
நித்த னிடனதில டங்குவ தற்ற நிறைவுள்விபு விந்திய
நெட்டை யசலவுல கென்பன சுணங்காதோர்
சத்த மெழுவதன்மு னுண்டுசெய் சித்தி யிலதிசய மென்றவொர்
சத்தி யையுடையவ னென்றுனை விலங்காள்கோன்
கத்து முறுதியுணர் நெஞ்சினர் நச்சு மெனமலவ ணங்கரி
கட்க மளிபெரிய வின்பரு ணிதந்தாவே. (1)

*தான தனதனன தந்தன தான தனதனன தந்தன*
*தான தனதனன தந்தன தனதானா.*

**மா**ச றுபுளியெதிர் கண்டதும் வாயி லினியபுனல் வந்திடன்
மான வுனருணடை கண்டது முளமீதோ
ராச றுமமுதமெ னுங்களி யூறி டுமளமள வென்றதி
னார்வ மொடெனுளும்வி ளைந்திட நடியாயோ
தேசு றுமமலசி தம்பர நாத குகனெனுநி ரந்தர
தேவ வெனறிவினி னின்றவிர் பெரியோய்நான்
நேச முடனறைய லங்கலை யாசை யுடனணியு மன்பந
னீரர் சததமுமி றைஞ்சொரு பெருமானே. (2)

*தனன தனதனன தந்தன தனன தனதனன தந்தன*
*தனன தனதனன தந்தன தனத்தானா.*

**அ**ரிய வறிவெனவி ளம்புமு னுடைய சுடுநிலம தன்கணெ
னசுசி மலமுழுதும் வெந்தற விழைப்பேனோ
இரியு முலகிலெனு டம்புக ளிடுகு ழிசுடலைய டைந்தவெ
ணிவள வெனவிதிய னுந்தொகை கணிப்பானோ

1. வித்தவொளி = பொன்னொளி.
விலங்காள்கோன் = மிருகராசன் = சிங்கம்: ஈண்டு, நாரசிங்கமென்னும் மிருகேந்திராகமத்தின் மேற்று; பதிலக்ஷண பரீக்ஷாப்ரகரணத்து 2–ஆஞ் சுலோகம்.
அணங்கரி கட்கம் = நோயை யரியும் வாள்.
2. நடை = நடனம்.

பெரிய திருவுளமு வந்தினி யெனுமு னிடனதைய ணைந்தருள்
பெறவெ ளியவெனைநி னைந்தரு ளருட்டேசே
விரியு நடனசவை கண்டவ ரடையு மகணிதநி ரந்தர
வெளியில் வெளியெனநி றைந்துள தனித்தேவே. (3)

*தாத்த தனதனன தந்தன தாத்த தனதனன தந்தன*
*தாத்த தனதனன தந்தன தனந்தானா.*

**ஆ**ற்ற லுணர்வுதொழி லென்பன வாய்த்தி கழுருவுயிர் வன்றளை
யாற்ப லமுறுபிணி யுண்டதஃ தருஞ்சீர்நாள்
தோற்று மளவுமல மொன்றுமி லாப்பெ ருநலமுள னென்றவொர்
தூப்ப சுபதிவச நின்றிடு மெனும்பீடார்
மாற்ற முடையநர சிங்கமி வாக்கை யிகழ்வுபுரி வஞ்சகர்
மார்க்க மெனையடைவ தின்றுனை நயந்தேநான்
ஊற்ற முடையமுத வின்பினை யேற்று யுமொருநெறி கொண்டன
னூக்க மிகவருள்வை யெம்படர் தெறுந்தேவே. (4)

*தந்த தனதனன தந்தன தந்த தனதனன தந்தன*
*தந்த தனதனன தந்தன தனதானா.*

**ம**ந்த மதியுடைய ருந்தெரு ளந்த ணர்களுமுய வன்புசெய்
மங்க ளமுழுமுத லென்றுள பரமேசா
பந்த மறுநெறியை யன்பொடு தந்த பரமசிவ புங்கவ
பஞ்ச தையுதயமில் கந்தவு னருளாலே
எந்த விதமுமுனை யந்தர மன்றின் மருவியுப யங்கெட
வெங்கு முறையவுளு மென்றனை யவமாமா
றிந்த நிலையில்விட நின்றயை பொங்கு திருவுளிசை யுங்கொன
லின்ப வெளியையடை யும்படி யருள்வாயே. (5)

*தந்த தனதனன தத்தன தந்த தனதனன தத்தன*
*தந்த தனதனன தத்தன தனத்தானா.*

**இ**ஞ்சி யுடையவதி யற்புத வஞ்சி வசினகர நற்குள
மென்ப னவளிகொ டிழைத்தந லறப்பாலார்
துஞ்சி யபினுமிகு சுத்தந னெஞ்சொ டுமிலகுவர் சிற்றுயிர்
துன்றி யவகிலமு திக்கினு மழுக்கேறா

---

*3. இனியேனும் எனற்பாலது “இனியெனும்” எனப்பொருந்திற்று.*

*5.* பஞ்சதை – ‘பஞ்சதா’ என்னும் வடசொல்லின் விகாரம்; சாவு என்னும் பொருண்மைத்து; அமரஸிம்ஹங் காண்க.

நெஞ்ச முடனிலவி முத்தியி னின்ப நுகருவர வர்க்கொரு
நிந்தை வரினதுத னக்கென நினைப்போய்நான்
அஞ்ச வருநடலை கெட்டற நின்றி ருவருளைநி னைத்திடி
னந்த வணமருள்வை சிற்சவை நடக்கோவே. (6)

*தான தனதனன தத்தனா தான தனதனன தத்தனா*
*தான தனதனன தத்தனா தனதானா.*

**ஆ**யு நிலைமையுறு புத்தியா லோதி யவிர்குருமு கத்தினா
லாசி லருமறைவி ளக்கினா லொருநேராய்
மேய வயிநயிக வித்தையார் நாடு மருணடநி ருத்தமேல்
வீடு பெறுமளவு னட்பிலே யெனைமாறா
தேயும் வகைபணிய வச்சுதா தாயி னுமினியவ ருட்கணா
வீர வடியவர்வி ருத்திசால் குருநாதா
மாய வுலகிலிழி புத்தியா னானெ துகலுடமி ழைப்பினு
மாசு ளனிவனென விட்டிடா தருள்வாயே. (7)

*தனன தனதனன தத்தன தனன தனதனன தத்தன*
*தனன தனதனன தத்தன தனதானா.*

**அ**றிவு வினைகளைம றைத்துள மலவ லிவிலகிய சித்தனு
ளமல சிவனுடைய சத்திமெ யருளாயே
சிறுமை யறவளரு முத்தியு மதுவெ னுமுரையைம திக்கிலர்
சிவம டையுமுறைமை யெப்படி நவினாயேன்

---

*6.* *“அவர்க்கொரு நிந்தைவரின் அது தனக்கென நினைப்போய்” என்று விளித்தது–*

*மாமாச்ரிதாநாம்லோகேஸ்மிந் குதோபீதி : த்வசக்ஷதி: |*
*பக்தாநாஞ்சஜகத்யஸ்மிந் க்வாரய : க்வசவாகத: ||*

*மத்பக்தம்த்வேஷ்டியோமோஹாத் ஸமாம்த்வேஷ்டி நராதம: |*
*நஸஹேஹந்துராத்மாநம் ஸேஹேமய்யபராதிநம் ||*

*வத்த்யோமமஜகத்யஸ்மிந் நபிசக்ராபிரக்ஷித : |*
*மத்பக்தபோஷகாநேவ புஷ்ணாமிப்ருதிவீதலே ||*

*“உலகில் எம்மைச்சரணமடைந்தார்க்கு அச்சம்யாது ? இச்சகத்தே எம்மடியார்க்குப் பகைஞர் யாவர் ? பிணியு முளதோ ? மனிதப்பதடியாயுள்ள வொருவன், அறிவீனத்தால் எம்மடியாரைப் பகைப்பானாயின் அவன் எம்மையே பகைத்தவனாவன்: எமக்கபராதஞ் செய்தானது செய்கையை யாம் மன்னிப்போம்: அந்தத் துராத்துமாவின் செய்கையை யொருபோதும் மன்னியோம்: இந்திரனா லாதரிக்கப்படினும் அவனைக் கண்டனஞ்செய்து விடுவோம்: ஞாலத்தில் எம்பத்தர்களை யாதரிப்போரையே யாம் ஆதரிப்பாம்: இரக்ஷிப்பாம்” என நாரதரை நோக்கிக் கந்தபிரான் கழறியருளினன் என்று ஸ்காந்தமஹாபுராண மெனும் முதல்வன் புராணத்துச் சம்பவகாண்டத்து 41–ஆம் அத்தியாயத்தே வரு பிரமாணத்தைக் கொண்டிருத்தல் காண்க. இக்கடவுண் மொழி கருதி நடக்க வுலகங் கடமைப்பட்டிருக்கிறது.*

வறிது கெடவுனது நித்திய வருளொ டுவளரவி தித்தருண்
மனசி னலைவறவொ டுக்கொரு நிலைமேலோர்
குறியி லவிருமொரு நிர்த்தன வெளியெ னினைவிலுள முத்தைய
குடில முடிமுனிவர் பத்திகொள் குகதேவே. (8)

*தாந்த தனதனன தத்தன தாந்த தனதனன தத்தன*
*தாந்த தனதனன தத்தன தனதானா.*

**கா**ண்டல் பெருகடிய வர்க்கினி தாங்கு ருபரகடி யைத்தரு
காந்தி மிகவுடைய பொற்பதி நடராசா
வேண்டு னவுதவொரு கற்பக மாங்கு கனெனுமொரு முத்தைய
மீன்ப டுமலைவளை குத்தியி லுனைநாடா
ஆண்டை யருமுவகை பெற்றிலர் வேண்டு நருமதனை விட்டில
ராம்பி யெழவமுமெ னக்குமஃ தயராமே
தூண்டி யருள்வதுமொ டுக்குறு ஞான்று நனியருண யப்பொடு
சூழ்ந்து கொளுவதுமு னக்கொரு கடனாமே. (9)

*தத்த தனதனன தத்தன தத்த தனதனன தத்தன*
*தத்த தனதனன தத்தன தனதானா.*

**நு**ச்சு மலவொழிவி னித்திய சுத்த பரசிவச மத்துவ
நட்ட மறவருமெ னச்சொலும் விதியாலே
விச்சை யுருவுடைய புற்கலன் வித்தை நிறைவுளனெ னப்பனு
மிக்க புகழுடையொர் புத்தக மதுபோலே
அச்ச னிமலமற வொப்பிலு னட்ட மருள்புரிக மெத்தவு
மச்ச முடையவெனை நற்கதி மலையாமோ
ருச்சி யடையளவி ரட்சியெ னப்ப னெனுமமல முத்தைய
வுத்த மவருணகி ரிக்கவி யிறையோனே. (10)

---

*8. உரை = (ம்ருகேந்த்ரம்) **மிருகேந்திராகம** பாசலக்ஷணப்ரகரணத்து 21–ஆஞ் சுலோகம்.*

*9. வேண்டுவன என்னுங் கிளவி "வேண்டுன" எனத்தொகுத்தல் விகாரமாயிற்று. ஆம்பி = ஒலி.*

*10. "புத்தகம்" என்றது **மிருகேந்திராகமத்தை**; அதன் பசுலக்ஷண ப்ரகரணத்தின் இறுதிச் சுலோகம், இங்கறிவுறுத்தப்பட்ட செய்தியாயுளது.*

# 91. வித்தவொளி

1. "பொன்னொளி சுடர்விட்டு விளங்கும் சிற்சபையில் திருக்கூத்து இயற்றும் பசுபதி எனப்படுகின்ற இறைவனாகி, மெய்ம்மையான எண்குணங்களையும் நிதியாகப் பெற்றுள்ளவன்; கால எல்லைக்குள் கட்டுப்படாதவன்; நித்தியன்; இடமாகிய தேச எல்லைக்குள் அடங்காத பூரண நிறைவினைக் கொண்டுள்ள சர்வவியாபி; இந்திரியம், உடல், உயர்ந்த மலைகள் மிகுந்துள்ள உலகம் முதலானவற்றை, எவ்விதக் குறைவும் இல்லாமல், ஓர் ஒலி எழுவதற்குள் ஒரேசமயத்திலும், வரிசைப்படியும் தோற்றுவிக்கக் கூடிய அதிசயமான சித்தி எனப்படும் அருட்சக்தியை உடையவன்'' என இவ்வாறு நரசிம்ம வடிவத்தில் இருந்த இந்திரன் முழக்கிக் கூறிய உறுதிக் கருத்துக்களை உணரவல்ல நல்லுள்ளம் உடையோர் ஆர்வத்துடன் விரும்பித்துதிக்கும் எனது தூய தெய்வமே! எனது நோய்களைக் களைந்தெறியும் வாட்படையை எனக்குக் கொடு; பேரின்பமாகிய அருட்பேற்றை நாள்தோறும் வழங்கி அருள்.

2. மாசற்ற புளியம்பழத்தைக் கண்ணெதிரே கண்டதும் நாவினில் இனிய நீர் சுரந்திடல் போன்று, உனது அருட்கூத்தைத் தரிசனம் செய்கையில், உள்ளத்தில் குற்றமற்ற அமிழ்தமயமான களிப்புநிலை அதிவிரைவாக ஊற்றெடுக்கும். அத்தகைய களிப்புநிலை எனது உள்ளத்துள்ளேயும் தோன்றிடுமாறு நீ எனக்குள் உனது அருள்நடனத்தைச் செய்யாயோ? ஒளிபொருந்திய, தூய்மையான சிதம்பர நாதனே! குகன் எனும் அரியதிருப்பெயர் ஏற்றுள்ள, இடையீடற்று நிறைந்துள்ள தேவனே! என் அறிவுள் அறிவாய் நின்று விளங்கும் பெரியோய்! எளியேன் அன்போடு பாடும் சொன்மாலைகளை மிகவும் விருப்பத்துடன் ஏற்று அணிந்து கொள்ளும் அன்புநிறைந்தோய்! நற்குணப் பெரியோர்கள் எப்பொழுதும் வணங்கித் துதிக்க உள்ள ஒப்பற்ற பெருமானே!

3. பெறுதற்கரிய நிறை ஞானம் எனக் கூறப்படும் உனது சுடலைத்தலத்தில் எனது தூய்மையற்ற மலப்பிணிப்பு முழுவதும் வெந்து நீறாகுமாறு செய்யேனோ? அழியும் தன்மைவாய்ந்த இவ்வுலகில் இதுகாறும் நான் எடுத்துள்ள உடலங்கள் இடப்பட்ட சுடலைக் குழிகளின் எண்ணிக்கை இவ்வளவு என நான்முகனும் கணித்துக்கூற வல்லவனோ? அருள் ஒளியே! விரிவார்ந்த நடன சபையை நேருறக் கண்ட அருளாளர்கள் அடையும், கணிப்புக்கு அப்பாற்பட்ட, இடையீடற்ற வெளியையும் வியாபிக்கும் பெருவெளி என எங்கும் நிறைந்துள்ள தனிப்பெரும் தெய்வமே! நினது பெரிய திருவுளம் மகிழ்ந்து, இனியாவது நான் உனக்குரிய இடத்தை அடைந்து அருள்பெற, மிகவும் எளிமைப்பட்டுள்ள என்னையும் பொருளாகக் கருதி அருள்புரி.

4. ''ஆற்றல், உணர்வு, தொழில் (ஞானம், இச்சை, கிரியை) எனும் மூன்றன் மயமாகிய வடிவுடைய உயிரானது, வன்மைமிக்க மலம் எனும் தளையால் மிகவும் இறுக்கமாகப் பிணிக்கப்பட்டுள்ளது. அது, அடைதற்கரிய சீரிய நன்னாள் வரும் வரையிலும், மலப்பிணிப்பு

என்பது இயல்பாகவே சிறிதளவும் இல்லாத பேரின்ப நலத்தை உடையவன் எனப்படும் ஒப்பற்ற தூய பசுபதியாகிய முதல்வனின் வசப்பட்டு நிற்கும்" எனப் பெருமைமிக்க வாசகங்களை உடைய மிருகேந்திர ஆகமம் கூறும். இக்கூற்றை இகழும் வஞ்சகர் செல்லும் நெறியானது என்னை ஒருசிறிதும் பொருந்தாது. எப்பொழுதும் உன்னையே நயந்து, ஊற்றம் மிக்க அமுதமயமான பேரின்பநலத்தை அடைந்து உய்திபெறக் கூடிய நன்னெறியையே நான் மேற்கொண்டுள்ளேன். எம் துன்பங்களையெல்லாம் போக்கி அருளும் தெய்வமே! இந்த நன்னெறியில் ஈடுபட்டுச் செல்வதற்குரிய மன ஊக்கத்தை மிகுதியாக வழங்கி அருள்.

5. மந்தமான அறிவுவாய்க்கப் பெற்றுள்ளோரும், தெளிந்த அறிவுசான்ற முனிவர்களும் தாம் உய்ய வேண்டி அன்பு செய்து வணங்கும் மங்களகரமான முழுமுதற் பொருள் எனத் திகழும் பரமேசுவர! பந்தங்களை அறுத்து உய்திபெறச்செய்யும் நல்ல நெறியை அன்போடு உணர்த்தி அருளிய பரமமான சிவ புங்கவ! (புங்கவன் – உயர்ந்தோன்). இறப்பும் பிறப்பும் அற்றுள்ள கந்தனே! உனது திருவருள்துணையால் எவ்விதத்தும் இடையீடின்றி உன்னோடு இரடண்டறக் கலந்து இன்பத்தைப் பொருந்தி இருமைநிலை, ஒருமைநிலை என்னும் இரண்டும் கெட, எங்கெங்கும் வியாபித்து நிற்கக் கருதும் என்னை, வீண்போகுமாறு இந்த பந்தநிலையிலேயே என்னை விட்டுவைப்பதற்கு, கருணை பொங்கித் ததும்பும் உனது திருவுள்ளமும் இசையுமோ? நான் உனது சிவானந்த மயமான சிதாகாச நிலையை அடையும்படி அருள்புரிவாய்.

6. சிற்சபையில் ஒளிரும் நடராசப் பெருமானே! மதிலால் சூழப்பட்ட அதி அற்புதமான அழகிய சிவத்திருக்கோயில், நல்ல குளம் முதலானவற்றை, உயிர்களிடம் கருணைகொண்டு அமைக்கும் சிவபுண்ணியச் செயல்களைச் செய்த நல்ல அறச் செல்வர்கள், பூத உடலை விடுத்த பின்பும் நல்ல உள்ளத்துடனேயே விளங்குவர். சிறிய உயிர்க்கூட்டங்கள் பல்கியுள்ள உலகத்தே அன்னோர் மீண்டும் பிறந்தாலும் அவர்களின் உள்ளத்தே அழுக்குப்படியாது. தூய்மையான உள்ளம் வாய்க்கப் பெற்று முத்திப் பேரின்பத்தை அனுபவிப்பர். அன்னோர்க்கு ஒரு நிந்தை நேர்ந்தால், அந்த நிந்தை தனக்கு நேர்ந்ததாகும் எனப் பெரிய அன்புரிமை யோடு நினைக்கும் கருணை உடையோய்! நான் அஞ்சிக் கலங்குமாறு நேரும் துன்பங்கள் முழுவதும் நீங்கிட நினது திருவருளாகிய துணையை நினைத்தால், அவ்வாறே அக்கணமே அருள்புரிந்திடுக.

7. ஆய்ந்துணரும் ஆற்றல் வாய்ந்த புத்தியின் திறத்தாலும், முதிர்ந்த ஞானம் விளங்கும் குரு முகத்தாலும். குற்றமற்ற அரிய வேதாகம நுட்ப விளக்கங்களாலும் நேரிய சிந்தை வாய்க்கப் பெற்றுள்ள வைநயிகர் எனப்படும் ஞானியர் நாடித்தொழும் அருள்மய ஆனந்த நிருத்தனே! இனி முத்திப்பேறு பெறும் நாள் வரையிலும் உனையே தொழும் அன்புத்திறத்தில் நான் மாறாது இருக்கும் வண்ணம் என்னைச் செய்தருளும் அச்சுதனே! (அச்சுதன் – தன் நிலையிலிருந்து நழுவாதவன்). தாயினும் மேம்பட்ட இனிய அருட்பேறு உடையவனே! எத்தகைய சூழ்நிலையிலும் உறுதி மாறாமல் உள்ள வீரத்திறத்து அடியவர்க்குரிய அருட்கொடை வளம் நிறைந்துள்ள குருநாதா! மாயைத்திறம் மலிந்துள்ள இவ்வுலகில்,

இழிவான புத்திகொண்டு நான் ஏதாவது பாவச் செயல் செய்தாலும் "இவன் குற்றமுள்ளவன்'' எனக் கருதி என்னைப் புறக்கணித்து விடாமல் அருள்புரிவாயாக.

8. அறிவையும் செயல்திறத்தையும் மறைத்துள்ள ஆணவ மலத்தின் வன்மையான பிணிப்பு முழுவதுமாக நீங்கப் பெற்றுள்ள சித்தப் பெரியோனுள், குற்றமற்றுள்ள சிவனது சக்தி, மெய்யருள் மயமாய், சிறுமைநிலை அடியோடு நீங்க வளர்ந்து நிறைந்திருக்கும். இதுவே முத்தி நிலையுமாகும் எனக் கூறும் மிருகேந்திர ஆகமக் கூற்றைச் சிந்தித்து உணராதவர்கள், சிவத்துவ நிலையை அடையும் முறைமைதான் எவ்வாறு ? கூறியருள். எளியேனின் சிறுமைநிலை கெட்டழிய, உனது நித்தியமான அருட்பேற்றுடன் வளர்ச்சி பெறுமாறு நீ ஆணையிட்டருள். மனத்தின் சஞ்சலம் நீங்குமாறு அதனை அடக்கி இருக்கும் மௌன நிலைக்கு மேல் பொருந்தும் ஒருமுகப்பட்ட நிட்டைநிலையில் விளங்கும் ஒப்பற்ற அருட்கூத்து நிகழ உள்ள சிதாகாசமே! எனது நினைவில் நிலைபெற்றிருக்கும் முத்தையனே! நினது திருமுன் வளைந்து தாழும் திருமுடியை உடைய முனிவர்கள் பத்தி செய்து தியானிக்க உள்ள குகதேவனே!

9. யோகக் காட்சி முதலானவற்றால் உன்னை நேருறக் காணும் வேட்கை பெருகியுள்ள அடியவர்க்கு இனிதாக அருளும் குருபரனே! மணமும் அழகும் வாய்ந்து பேரொளி மிக்கிருக்கும் இதயமாகிய தலத்தின் நடுவண் வெளிப்படும் நடராசனே! (பொற்பதி – இதயத்தலம்) அடியார்கள் வேண்டுவன வேண்டியாங்கு வழங்கும் கற்பகத் தருவாகிய குகன் எனப்படும் முத்தையனே! மீன்கள் செறியும் அலைகடல் சூழ்ந்துள்ள இந்நிலவுலகில் உன்னை நாடாது இருப்பவர்களாகிய அரசர்களும் மேலான உவகையை அடையவில்லை; உன்னை விரும்பித் துதிப்போரும் அந்த உவகை நிலையிலிருந்து விலகுவதில்லை. சத்தம் எழுமாறு கூவி அழும் எளியேனுக்கும் உன்னை விரும்பாதிருத்தலாகிய குற்றம் பொருந்த வொட்டாது எனக்குள் ஆர்வத்தைத் தூண்டி அருள்வதும், நான் பூத உடலை நீங்கும் சமயத்தில் பெரிதுபட்ட அருட்பற்றுடன் என்னுடன் இரண்டறச் சூழ்ந்து கொள்வதும் உனக்குரிய இன்றியமையாத கடமைகளாகும்.

10. விடம் போன்றதாகிய ஆணவமலத்தில் நீக்கத்தில் நித்திய, தூய, பரசிவ சமத்துவப் பேறானது ஒருகுறைவுமின்றி ஆன்மாவுக்குப் பொருந்தும் எனக் கூறப்பட்டிருக்கும் விதியால் ஞான வடிவுடைய ஆன்மா, பூரண ஞான நிறைவில் மலர்ந்திருப்பான் என்று மிகவும் புகழ்வாய்ந்த மிருகேந்திர ஆகமம் கூறும். அக்கூற்றுக்கேற்ப, அந்தச் சனியனை நிகர்த்த மலமானது முழுவதுமாய் நீங்கிநிற்க ஒப்பற்ற உனது அருட்கூத்தை நிகழ்த்தி அருள்புரிக. மிகவும் அச்சப்பட்டிருக்கும் என்னை நற்கதி எனப்படும் ஆனந்தப் பேறாகிய மலையின் உச்சியில் ஏற்றிச் சேர்த்து ரட்சித்தருள்க! என் தந்தை என விளங்கும் பரிசுத்தமான முத்தையனே! உத்தம சித்தராகிய அருணகிரிப் பெருமான் பாடிய திருப்புகழின் பொருள் மயமாக விளங்கும் இறைவனே!

# 92. பொன்மஞ்சள்

*கலிநிலைத்துறை.*

**பொ**ன்மஞ் சளும்வெண் சுணமுங் கலவும் பொழுதோர்
சின்னம் புதிதா யெழல்போல் வளிநீர் சிகிமண்
என்னும் பொருள்கள் விரவும் பொழுதுள் ளமெழும்
மன்னிம் முடிபா லுயிர்பொய் யெனன்மா மடமே. (1)

**ஏ**னென் னிலசித் தெனுமச் சுணமஞ் சளிலோர்
ஞானம் பகர்சித் துதியா ததுபோ னவினால்
மானம் பெறுபூ தவிரா வலினும் வளமார்
ஞானம் பிறவா தெனமா கவிஞர் நவில்வார். (2)

**அ**தனா லறிவா முயிர்வே றெனவா மதுதான்
சிதடா யுளதா லதனோர் முதன்மா தெளிவாய்ச்
சதமாய் வலியா யுளதென் றிகல்போழ் தகைசால்
புதர்தேர் வரதே சிவமென் றருணூல் புகலும். (3)

**இ**வர்வுற் றவியா பகநித் தியமா யிலகுஞ்
சிவசத் தியையொத் துளகர்த் திருசத் தியுடைக்
கவனத் துயிர்மைச் சிறைபெற் றமையிற் கடவுள்
கவினற் றயையின் றுயரா தெனுமா கமமால். (4)

**சி**வமின் றெனும்வா திகள்புன் பசுவா திகளா
முவர்கண் மொழிவெள் ளலைவீ சினுநல் லுரனோர்
தவநெஞ் சசலஞ் சிறிதுஞ் சலனந் தருமோ
அவர்சிந் தையிலென் றுமிருந் துளதண் ணளியே. (5)

**மு**னநா னதுவென் றறியென் றவயன் முழுதுந்
தனையே பொருளென் பதுதோ மெனவெண் டலையேந்
தினனீ டிலுளந் தனிலெண் ணினனென் றெழினூல்
பனுமா ணைமறந் தறைவார் கொலருட் பவுள்சோர். (6)

---

*2. நால்மானம் = நாற்றிற அளவை.*

*4. இவர்வுற்ற வியாபகம் = மேவுதலுற்ற வியாபகம்: இவர்தல் = மேவுதல்: வகரவெதுகை. ஆகமம் = மிருகேந்திராகமம்: இங்குணர்த்திய செய்தி, அதன் கலாதிப்ரகரணத்து 3–ஆஞ் சுலோகத்தது.*

*5. உவர் = கடல்.*

*6. ''நூல் பன்னும் ஆணை'' என்றதைக் கந்தபுராண தக்ஷகாண்டத்து அடிமுடி தேடு படலத் தறிக. பவுள் சோர் = சம்பத்துடையோர்; பவுள்செனுஞ் சொல்லிலக்கணம், திட்பத்தில் (முதற்பத்து 6–ன் உரை) ஓர்க.*

**து**னியே சுவிகா ரமிலா தபரஞ் சுடருக்
கனியா யமெழப் பரிணா மமறைந் திடவும்
பனியே துமிலா வருளுக் குமதே பனவுங்
கனிவா யவுளந் துணியுங் கொலருட் கடலே. (7)

**தூ**க்கா லுடலான் மனசா லுனையே தொழுதோர்
மாக்கா யநலம் விழையா திழிதே வதைபால்
மீக்கூ றியதை விழையுஞ் செயன்மின் மினிமுன்
தீக்கேட் பதுபோ லுமரோ வெனையாள் சிவமே. (8)

**ஒ**ப்பொன் றுமிலா வுனைவிட் டயனின் றுனுவோர்
தப்பொன் றுமிலா வமுதா வதையெந் தளர்வாம்
வெப்பஞ் சிகவே நுகர்வே மெனறான் வெறுவாய்
சப்புந் திறமே யெனையா ளருணோ தயமே. (9)

**கூ**ட்டச் சுரர்சூழ் திருமாற் கருள்செய் குமர
கோட்டத் தடிகட் கினிதா கவெழுங் குரல்சால்
பாட்டுக் குருவென் பவனெஞ் சுருகிப் படருண்
ணாட்டக் குகனே யெனையுங் கொளவுண் ணடியே. (10)

# 92. பொன்மஞ்சள்

**1.** பொன்னிறம் உடைய மஞ்சளும் வெண்மை நிறமுடைய சுண்ணாம்பும் கலந்து நிற்கும் பொழுது, செவ்வண்ணம் புதிதாக உண்டாதல் போன்று, காற்று, நீர், நெருப்பு, மண் எனப்படும் நான்கு பூதப்பொருள்களும் கலக்கும் பொழுது, ஆன்மா உண்டாகும் எனக்கூறப்படும் இந்த முடிபைக் கருத்தில் கொண்டு, ஆன்மா என ஒன்று இல்லை; ஆன்மா பொய்யே எனக் கூறுதல் பெருத்த அறியாமையே ஆகும்.

**2.** ஆன்மா பொய் எனல் அறியாமையே. ஏனெனில் அசித்து வகையின்பாற்பட்ட சுண்ணாம்பு, மஞ்சள் என்பனவற்றின் சேர்க்கையிலிருந்து, ஞானமயமானது எனக் கூறப்படும் சித்துப் பொருள் தோன்றாதது போன்று, நான்குவித அளவைக்கு உட்படும் பூதங்களின் சேர்க்கையினாலும், முற்றறிவு முதலான குணவளம் சான்ற சித்துப் பொருளான ஆன்மா தோன்றாது என முதிர்ந்த ஞானப் பேறு வாய்த்தோர் கூறுவார்கள்.

---

*7. பனி = நோய்.*

*8. மாக்காய நலம் = மானுடவுடலெடுத்த பயன் = வீடுபேறு.*

*10. திருமாலானவர், குமரகோட்டத்தடிகளின் றிருவருள்பெற் றங்குறைந்தன ரென்பதைக் காஞ்சிப்புராணக் குமரகோட்டப்படலத்திற் "கோநிரைகள் காத்த குரிசிலு மன்றல் வெட்சி மாலையா னருளினங்கண் வைகினான்" என வருவதா னறிக.*

*குரல்சால் பாட்டு = சந்தஞ்சிறந்த **திருப்புகழ்.***

**3.** எனவே, ஞானமயமான உயிர் என்பது வேறு என ஆகும். அந்த உயிரானது, குருட்டுத்தன்மைக்கு நிகரான அறியாமையின் வயப்பட்டு உள்ளதால், அந்த உயிரின் முதன்மைக் கருத்தாவாகிய முதற்பொருள், மிகவும் தெளிவானதாகவும், நிலைபேறு உடையதாகவும், சர்வ வல்லமை வாய்ந்ததாகவும் உள்ளது என்றும் அத்தகைய முதற்பொருள் மாறுபாட்டுணர்வைப் போக்க வல்ல ஆற்றல் சான்ற முனிவர்களும் தேவர்களும் நேடிக் காணும் தெய்வமாகிய சிவம் என்றும், அருள்நூல்களாகிய ஆகமங்கள் கூறும்.

**4.** வியாபகத்தன்மை பொருந்தப் பெற்றும், நித்தியமாகவும் விளங்கும் சிவசக்தியைப் போன்றே ஆற்றல்மிக்க கர்த்துரு சக்தியை உடைய, ஞானவிழிப்புடைய உயிரானது, மறைப்பாகிய ஆணவம் என்பதால் தகைக்கப்பட்டுள்ள காரணத்தால் முழுமுதற் கடவுளின் அழகிய திருக்கருணை இல்லாமல் தனது பந்தம் நீங்கப் பெற்று உயர்வடையாது என ஆகமம் கூறும்.

**5.** சிவம் எனப்படும் தெய்வம் இல்லை எனக் கூறும் மத வாதிகள், புன்மைமிக்க உயிரைத்தவிர வேறொன்றும் தெய்வம் இல்லை எனக் கூறும் வாதிகள் ஆகிய கடல்களின் கூற்றுக்களாகிய அலைகள் வீசி மோதினாலும், நல்ல ஞானவன்மை மிகுந்துள்ளவர்களின் தவ ஆற்றல் மிக்க நெஞ்சம் எனப்படும் மலையானது சிறிதளவேனும் அசைந்து நிற்குமோ ? அத்தகையோரின் சிந்தையில் எப்பொழுதும் வெளிப்பட்டு நிற்கும் தண்ணிய கருணை நிலையே !

**6.** முன்பொரு முறை "நான் அப்பரம்பொருள் என அறிக" என்று கூறிய பிரம்மன் அகந்தை கொண்டு, பின்னர்த் தன்னையே அனைத்தினும் மேம்பட்ட முழுமுதற் பரம்பொருள் எனக் கூறிக் கொள்வது பெரும் குற்றமாகும் என பிரம்மனின் வெண்ணிறக் கபாலத்தை ஏந்தியவனாகிய ருத்திரசிவன் தனது நிகரற்ற திருவுள்ளத்தில் கருதினான் என்று கந்தபுராணம் கூறும் உறுதியுரையை மறந்து, திருவருட்செல்வத்தை உடைய பெரியோர் வேறு கருத்தைக் கூறுவரோ ?

**7.** திருவருட் கடலே ! விருப்பு, வெறுப்பு, இழிவு, மாறுபாடு முதலான குற்றங்களற்ற பரஞ்சுடரான பரம்பொருளுக்கு, நியாயமற்ற முறையில் பரிணாமம் எனும் குற்றத்தை ஏற்றிக் கூறவும், பாரபட்சமற்ற திருவருட் சக்திக்கும் அதே குற்றத்தை ஏற்றிக் கூறவும், அருட்கசிவார்ந்த உள்ளமும் ஒருப்படுமோ ?

**8.** என்னை ஆட்கொண்டருளும் சிவபரம் பொருளே ! சொல்லாலும், உடலாலும், மனத்தாலும் உன் ஒருவனையே தொழுது, மானுட உடம்பு எடுத்ததால் பெறக்கூடிய பெரியபயனாகிய வீடுபேற்றைப் பெற விரும்பாமல், நிலையிலும் செயலிலும் தரம் குறைந்துள்ள சிறுதேவதையைப் புகழ்ந்து, அதன் மூலம் வீடுபேற்றைப் பெற விரும்பும் செயலானது, மின்மினிப் பூச்சியிடம் நெருப்புக் கேட்டு நிற்பதை ஒக்குமன்றோ ?

**9.** என்னை ஆட்கொண்டருளும் ஞானபானுவின் உதயத் தோற்றமே ! ஒப்பேதும் இல்லாத உன்னைப் புறக்கணித்து, அன்னிய நெறிநின்று வேறு தெய்வத்தைக் கருதுவோர்

"உறுதிபடக் கிடைக்கும் அமுதம் என்பதை, எமது தளர்வாகிய வெப்பம் நீங்குமாறு உண்டு அனுபவிப்போம்" எனக் கூறுவது, கற்கண்டைச் சுவைப்பதாகக் கருதி வெறுவாயைச் சப்புக் கொட்டி நிற்றல் போலாகும்.

**10.** கூட்டமாகக் கூடியுள்ள தேவர்கள் சூழ்ந்து நிற்கும் திருமாலுக்கு சாரூப கதியாகிய அருள் புரிந்த குமர கோட்டப் பெருமானுக்கு மிகவும் இனிதாக, மிடுக்காக ஒலிக்கும் சந்தப்பாக்கள் பாடிய திருப்புகழ்க் குருவாகிய அருணகிரிப் பெருமான் உள்ளம் கசிந்து உருகித் தியானித்திருந்த, தகராலயக் குகபரம்பொருளே! என்னையும் உன்னுடன் அணைத்துக் கொள்ள எனது இதய நடுவண் ஞானநடனம் செய்தருள்!

# 93. ஒல்லுநர்

*எண்சீர்க்கழிநெடி லடி யாசிரியவிருத்தம்.*

**சீ**ர்த்தி பொங்குவி யாசனென் முனிவன் செய்த சூத்திர மதைத்திரு முறையுட்
சேர்த்த ருங்கலை யெளவையங் கிழவி தெரித்த வோர்செயு டலத்துள தானுங்
கீர்த்தி பொங்கதற் கருள்விட கண்டர் கேடில் பாடிய மொன்றுள தானும்
பூர்த்தி கொண்டவிர் சைவசமயச்செம் பொருட்டு மதுவிசை வாயதொல்லுநரே.
(1)

**பு**னித மேயப ராசரன் முளைசெய் புராண மும்மொரு பசுபதி யருளாற்
சொனதென் றேதமில் காந்தபு ராணஞ் சொல்வ தாலுமக் காந்தம னேக
இனிமை யோடு புராணங்கட் கெல்லா மேற்ற மாயொரு நியுதவெண் ணுடைத்தாய்
முனிவர் வியப்புற விருத்தலி னாலு முழங்கம் முறைகளு முறுதியொல் லுநரே.
(2)

*1. திருமுறை – ஞானசம்பந்தர் முறை 3, நாவுக்கரயைர் முறை 3, நம்பியாரூரர் முறை 1, திருவாசகம் 1, திருவிசைப்பாவுந் திருப்பல்லாண்டும் 1, திருமந்திரம் 1, திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான்பெருமாள், நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள், திருவெண்காட்டடிகள், நம்பியாண்டார் நம்பி ஆகியவிவர்கள் பாடியருளிய சைவப்பிரபந்தங்கள் 1, திருத்தொண்டர் புராணம் 1–ஆகப் பன்னிரண்டென்ப*
*ஒளவையங்கிழவி தெரித்தவோர் செய்யுள் –*

*"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்*
*மூவர் தமிழு முனிமொழியுங் – கோவை*
*திருவா சகமுந் திருமூலர் சொல்லும்*
*ஒருவா சகமென் றுணர்."*

*என்னும் வெண்பாவே. இது, நல்வழி யீற்றிலே 40–ஆஞ் செய்யுளாக வுளது. "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ – னற்றா டொழா அ ரெனின்." என்றபடி வாலறிவனென்பதும், பிரமம் சிவனென்பனவும் ஒரு பொருட் பெயர்களாய் நின்று அசைக்கொணா ஆத்திகந்தாபித்து அவ்வறிவனடி தொழலே பந்தவிடு தலையெனச் சாதிப்பதுதான் 'ஒருவாசகம்' என்றதற்குப் பொருளாமெனல் சாலும், திருக்கோவை, இதன்கட் கொளப்பட்டதுபோலத் திருமுறை கண்ட புராணத்துட் கொளப்படவில்லை.*
*அதற்கு = அந்த வியாசசூத்திரத்திற்கு. விடகண்டர் = நீலகண்டசிவாசாரியார்.*

**சு**குர்த மாஞ்சிவ புராண வியாசஞ் சுருதி யாகமங் களிலெழ லானும்
புகழு நால்வரின் றிருமுறை களிலே புராண ரசநனி வெளிப்பட லானும்
இகழ்வில் கீரரின் கோபப்பிர சாதத் திடையப் புராணச ரிதம்வர லானுந்
துகளில் சுருதிபஞ் சமமென லானுஞ் சொனபு ராணமிக் குறுதியொல் லுநரே.(3)

**பி**ள்ளை யார்முத னால்வர்தம் முறைகள் பெரிது முறுதியென் பதற்கவை பெருமான்
வள்ளி லமுதென வேறியனேக மகிமை விளைத்தன விளைத்தவம் மகிமை
உள்ள ரவரெனற் கம்முறைப் பாக்க ளொழிவின் றீண்டுள வெனுமுயர் சான்றுங்
கொள்ளு மின்னெமை யாண்டருள் குகனைக் குரங்கு மின்பினி தூறுமொல் லுநரே.
(4)

**தெ**ய்வ சமய சிகாமணி யாய சைவச மயவி வேகமித் திணையில்
துய்ய நடையுடைப் பெரியபத் தியமாய்த் துலங்க லானுமச் சமயசித் தாந்தம்
பையுண் மனத்தின ரினைத்தென வறிந்து பற்றொணாவி யனாயுள தானும்
வைய மிசையிவை யொழுக்கமு முணர்வு மழுங்கி னார்க்கய லாகுமொல் லுநரே.
(5)

**தி**ரிபு றாதவொர் சைவந னெறியிற் சித்தி யடைந்துளன் பதிகளின் மேலாய்
உரிய மாவணி மாதியெட் டுளனா யொளிர்வ னிதிலுயர் முத்தியை யடைந்தோன்
பெரிய சிருட்டிதொ டங்கிடு போழ்தும் பேத நீத்திறை யாயினி திருப்பான்
இரிபி லாதவித் தீர்வையை மிருகேந் திரமுங் கூறுநல்லிதயவொல் லுநரே. (6)

**சி**ருட்டி ஞான்று நிடூதன ஞான்றுந் தேவ னாரருளனுக்கிர கத்தார்
இருட்டு மலபரி பாகமென் பதனுக் கேற்ப வேயதி காரம தொழிந்த
தெருட்டி ருப்பத முத்தியை யேனுஞ் செம்மை சேர்பதித் தன்மையை யேனும்
அரிட்ட மின்றடை வார்துடைப் பின்பி னடைவ ருடன்சிவ முறுவரொல் லுநரே.
(7)

**தி**டத்த சிவமென நவில்பர மோக்கச் செல்வர் சருவகர்த் திருத்துவ ஞானம்
படைத்து ளாரெனி னுஞ்சிவ நிட்டா பரர்க ளாய்ச்செயுங் கிருத்திய மனைத்துந்
துடைத்தசூனிய ராயிருத் தலினாற் சுவாமி கிருத்திய மெதுமியற் றாது
கிடைத்த பெருங்களி நுகர்ந்திறை புரையக் கிளர்ந்து விளங்குவ ரூரிய வொல்லு
நரே. (8)

---

*3. கீரர் = கடைச்சங்கத் தலைமைப்புலவராகிய நக்கீரர். இவர், சுந்தரப் பெருமானருளிய திருத்தொண்டத்தொகையி லுள்ள பொய்யடிமை யில்லாத புலவருட் சேரற்பால ரென்றுங் கூறுப.*

*'சுருதி பஞ்சமம்' என்பதியாதென்பது 83–ஆம் பத்திற் "பொற்புடைய சாந்தோக்கியத்தில்" என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரைக்கண் உணரக்கிடக்கின்றது.*

*5. துய்ய = தூய்மையுடைய; பண்படியாப் பிறந்த பெயரெச்சம்.*
*பையுண்மனத்தினர் = அற்பமதியினர்.*

*6. மிருகேந்திராகமங் கூறுதலை – அதன், பரமோக்ஷநிராஸப்ரகரண வீற்றிலறிக.*

*7. இத் திருப்பாட்டின் பொருள், மேலை ஆகமத்தின் பஞ்சக்ருத்யப்ரகரணத்து 2–ஆஞ் சுலோகத்ததாம்.*

*நிடூதனம் – நிஷூதநம் என்னும் வடசொல்லின் விகாரம்; கொல்லுதலென்னும் பொருளது: அமரஸிம்ஹங் காண்க.*

**ஆ**த்து மாவிரண் டெனும்விட யத்தே யையப் பாடுளர் வெளிப்படை யாகத்
தோற்று பிண்டனை யேமுதன் முயல்விற் றோன்றச் செய்துகொண் டாற்பினர் வேறோர்
ஆத்து மாவிலை யுண்டெனு வறிய லாமென் றோதிலிவ் வண்டமு மதுபோல்
தோற்ற லாற்பெரி துண்ட தனருளைத் தொடர வேண்டுமு னென்மினொல் லுநரே.
(9)

**ஆ**விக் காவியு மறிவினுக் கறிவு மசைவுக் கசைவது மாயநங் குகனை
மேவிக் கூடிடற் கவன்றயை முனரே விளையு மேற்பின ராவியை யவனைத்
தாவற் றறிந்திட லாமிங னால்வர் சாற்று நடுக்களுஞ் சான்றத னானே
மாவித் தகவ ருணாசலப் பெயரான் மதர்வு நாதனைப் பிடிமினொல் லுநரே. (10)

# 93. ஒல்லுநர்

1. பல நெறிகளாலும் தகுதி மிகப் பெற்று விளங்கும் அன்பர்களே! மிகவும் சிறப்புற விளங்கிய வியாச முனிவர் செய்த பிரம்ம சூத்திரத்தைத் திருமறைத் தொகுப்புள் சேர்த்து, அரும்பெரும் ஞானப் பேறு வாய்த்த ஔவைப்பிராட்டியார் கூறியருளிய செய்யுள் இவ்வுலகத்தே நாம் காண இருத்தலாலும் புகழ்மிக்க அந்தச் சூத்திரத்திற்கு, அருட்பேறுடைய நீலகண்ட சிவாசாரியார் செய்த அழியாப் புகழுடைய மாபாடியம் இருத்தலாலும் முழுநிறைவு கொண்டு விளங்கும் சைவசமயச் செவ்விய முடிபுக்கு அந்தப் பிரம்மசூத்திரம் பொருத்தமுற விளங்குவதேயாகும்.

2. ஒல்லுநரே! புனிதத் தன்மை பொருந்திய பராசரரின் புத்திரராகிய வியாச முனிவர் செய்த புராணமும், பசுபதியாகிய சிவனருளால் சொல்லப்பட்டதேயாகும் என்று குற்றமற்ற கந்தபுராணம் கூறுவதாலும், அந்தக் கந்தபுராணமும், பல்வகை இனிய பகுதிகளோடு கூடியதாய்ப், புராணங்களுக்கெல்லாம் அதிக உயர்வுடையதாய், ஒரு இலட்சம் என்னும் எண்ணிக்கையுடைய பாட்டுக்களை உடையதாய், முனிவர்கள் ஆச்சரியப்படும் வகையில் இருத்தலாலும், கூறப்படும் அப்புராண நூல்களும் உறுதிப்பயன் தருபவையே யாகும்.

3. மங்களகரமான சிவபுண்ணிய மகிமை நிறைந்த சிவபுராண வசனங்கள் வேதங்களிலும் ஆகமங்களிலும் இடம் பெற்றிருப்பதாலும் அடியார்கள் புகழும் சமய குரவர் நால்வரின் திருமுறைகளில் புராணங்களின் சாரத்திரட்டு நன்கு வெளிப்படுவதாலும், இகழ்ச்சியற்ற நக்கீரனாரின் கோபப்பிரசாதம் எனும் திருப்பாட்டில் புராணங்களில் கூறப்பட்டுள்ள சரித்திரங்கள் இடம் பெற்றிருப்பதாலும், குற்றமற்ற சுருதியானது புராணத்தை ஐந்தாவது வேதம் எனக் கூறுவதாலும் கூறப்பட்ட புராணமானது மிகவும் உறுதிப்பயன் தருவதேயாகும்.

4. எம்மை ஆட்கொண்டு அருளும் குகப்பெருமானை வணங்கும் இன்பத்தில் இனிதே திளைத்திருக்கும் ஒல்லுநரே! திருஞானசம்பந்தர் முதலான நால்வரின் திருமுறைகள் பெரிதும்

*9. ‘ஆத்து’ என்பதற்குத் ‘தோற்று’ முதலியன இனவெதுகை.*

உறுதி பயப்பவை என்பதற்கு, அத்திருமுறைகளின் பாட்டுக்கள் சிவபெருமானின் திருச்செவியில் அமுதம் என நிறைந்து அனேக அற்புத மகிமைச் செயல்களை விளைவித்தமையே சான்று ஆகும். நிகழ்த்தப்பட்ட அம்மகிமைகளை உடையவர்கள் அவர்கள் என்பதற்கு, அத்திருமுறைப்பாக்கள் மறைந்தொழியாமல் முழுவதுமாக இன்றைக்கும் இங்கே நிலைத்துள்ளன என்னும் உயர்ந்த சான்றையும் நீங்கள் மனம் கொள்வீர்களாக.

5. ஒல்லுநரே! தெய்வத்தன்மை மிகவும் வாய்ந்து, சமயங்களுக் கெல்லாம் முடிமணியாகத் திகழும் சைவசமய விவேகம் என்பது இவ்வுலகில், தூய்மை மிகுந்த நெறிவாய்க்கப் பெற்றுள்ள பெரிய மார்க்கமாகத் துலங்குவதாலும், அத்தகைய சைவசமய சித்தாந்த நுட்பமானது அற்பமதியினரால்இன்ன தன்மையுடையது என உணர்ந்து பின்பற்ற இயலாத வகையில் மிகவும் பெரிது பட்டுள்ளதாலும், இவ்வுலகத்தில் இத்தகைய நூல்களும் சமய நெறி நுட்பங்களும் ஒழுக்கமும் ஞானமும் குறைந்துள்ள அறிவீனர்களுக்கு அயலாகவே விளங்கும்.

6. குகத்தியானம் செய்யும் நல்ல இதயம் வாய்த்துள்ள ஒல்லுநரே! மாறுபாடுற்றுச் சிதையாத, ஒப்பற்ற சைவ நன்னெறியில் ஒழுகிப் பரிபூரணப் பயனாகிய சித்தியை அடைந்துள்ளவன், மற்றைய புவனங்களையெல்லாம் ஆளும் சிவத்தலைவர்களுக்கு மேம்பட்டவனாய்த் தனக்குரிமையான அணிமா முதலான எண்வகைச் சித்திகளும் உடையவனாய்த் திகழ்வான்; இந்நெறிநின்று, மேலான முத்திநிலையை அடைந்தவன், மீண்டும் படைப்புக் காரியம் தொடங்கும் பொழுதும், "இறைவேறு; ஆன்மா வேறு'' எனும் பேதம் நீங்கப்பெற்று, சிவ ஐக்கியம் அடைந்து சிவமாகவே நன்கு இனிது இருப்பான். உறுதிவாய்ந்த இம்முடிபை மிருகேந்திர ஆகமமும் கூறுகின்றது.

7. ஒல்லுநரே! படைப்புக் காலத்தின் போதும், ஒடுக்குதலாகிய சம்மார காலத்தின் போதும், சிவபெருமானின் அருள்மயமான அனுக்கிரகத்துக்கு ஆட்பட்டோருள். மறைத்தலைச் செய்யும் ஆணவமலத்தின் பரிபாகத்துக்கு ஏற்ப, அதிகாரம் நீங்கிய, மேலான சிவபதமாகிய முத்தியையாவது, செம்மை பொருந்திய சிவத்தன்மை நிறைவாகிய முத்தியையாவது எவ்விதக் குறைவும் இன்றி அடைவார்கள். சம்மார காலத்துக்குப்பின் சிவன் எந்த ஆன்மாக்களுக்கு அனுக்கிரகம் புரிகின்றாரோ அந்த ஆன்மாக்கள் உடனே சிவத்துவம் விளங்கப் பெறுகின்றனர்.

8. ஒல்லுநரே! அழியாப் பேறுடைய சிவமே எனக் கூறத்தகுந்த பரமோட்ச நிலைபெற்றுள்ள அருட்செல்வர்கள், முற்றுத் தொழில் (சர்வ கர்த்ருத்வம்), முற்றறிவு (சர்வஞ்ஞுத்துவம்) எனப்படும் சிவத்துவம் வாய்க்கப் பெற்றுள்ளாரே எனினும், அவர்கள் சிவநிட்டையிலேயே முழுவதுமாக ஈடுபட்டுள்ள சிவநிட்டாபரர்களாகவிளங்கி, தம்மாற் செய்யப்படும் செயலனைத்தும் நீங்கப்பெற்றுள்ள நிட்கிரியர்களாக இருத்தலால், சிவபெருமானுக்குரிய ஐந்தொழில்களுள் எதனையும் செய்யாமல். தமக்கு வாய்த்துள்ள சிவானந்தம் ஒன்றையே துய்த்து, சிவபெருமானை ஒத்தே சிவப்பேரொளி கொண்டு விளங்குவார்கள்.

**9.** 'ஆன்மா இரண்டு'' என்னும் முடிவான கருத்தில் ஐயப்பாடு உடையவர்கள் "வெளிப்படையாக உடலெடுத்துத் தோன்றும் ஆன்மா, தன்னையே பிரதம சிருட்டியில் அவ்வாறு உடலோடு கூடியவனாகச் செய்துகொண்டால், தனக்கு அன்னியமாக வேறு ஒரு ஆன்மா இல்லையா உண்டா எனத் தெரிந்து கொள்ளலாம்" எனக் கூறுவரே ஆயின், ஆன்மாவுக்கு உடற்சேர்க்கை செய்யும் வேறோர் ஆன்மா நிச்சயமாக உண்டு எனப் புலனாகிறது. சர்வ அண்டமும் அவ்வாறே, கருத்தாவால் தோன்றுவதால், அதனைத் தோற்றுவிக்கும் பெரியபொருள் நிச்சயமாக உண்டு. ஒல்லுநரே! அத்தகைய பெரியபொருளின் திருவருளை முதற்கண் தொடரவேண்டும் எனக் கூறுவீர்களாக.

**10.** ஒல்லுநரே! உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் ஆகி, இயக்கத்திற்கு இயக்கமும் ஆகி விளங்கும் நம் குகப்பெருமானைப் பொருந்தி அவனோடு இரண்டறக் கலப்பதற்கு அவனது திருக்கருணையே முதன்முதலில் தானாகச் செயற்படுமாயின், பின்னர் ஆன்மாவையும் அவனையும் குறைவற அறிந்து கொள்ளலாம். இதற்கு சமய குரவர் நால்வரின் திருமொழிகளும் உரிய சான்றாகும். அதனால் பெரிய சிவஞான அனுபூதிமானாகிய அருணகிரிப் பெருமானின் உள்ளக் களிப்புக்கு மூல காரணனான தலைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள்.

# 94. திருத்திமிருமருட்சம்பு

சம்புபக்ஷமும், அணுபக்ஷமும்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருத்திமிரு மருட்சம்பு வெனுமகண்ட பரமசிவஞ் சீவர் மாட்டுக்
குருத்திமிருங் கருணையினாற் கொண்டவுரு வெல்லாமுங் குசலங் குன்றா
அருத்திமிருஞ் சம்புபக்ஷ மாமருளின் றொழிலைந்து மாற்று மோரைந்
துருத்திமிரு முயிர்களுமைந் திடங்களுமப் பக்ஷமுறு முபசா ரத்தால். (1)

*1. ''அருளின் றொழிலைந்து மாற்றுமோரைந் துருத்திமிரு முயிர்கள்'' என்றதை–*

பஞ்சக்ருத்யநியந்தாரம் பஞ்சப்ரஹ்மாத்மகம்ப்ருஹத் |
பஞ்சப்ரஹ்மோபஸம்ஹாரம் க்ருத்வாஸ்வாத்மநிஸம்ஸ்திதம் ||

*''(படைத்தற்றொழின் முதலிய) பஞ்சகிருத்திய நியமனகருத்தனும், பஞ்சப்பிரமசொருபனும், பெரியவுருவனும், பஞ்சப்பிரமரூப (பிரமன் முதலிய) பஞ்சகருத்தாக்களையுந் தன்கண்ணேயே உபசங்காரஞ்செய்து உறுதியாயிருப்பவனும் (அந்த ஈசானனே).'' என்றும்,*

பஞ்சப்ரஹ்மாத்மகாதீதோ பாஸதேஸ்வஸ்வதேஜஸா |

*''பஞ்சப்பிரமமூர்த்திகளுக்கு அதீதனாய்த் தனது சுவதேசசினால் விளங்கிக் கொண்டிருப் பவனும் (அவனே).'' என்றும் யஜுர்வேத பஞ்சப்ரஹ்மோபநிஷத் பகருமாற்றானறிக.*

*உயிர்களுள்வைத்துரைக்கப்படுகின்ற பிரமன் விட்டுணு முதலிய இப்பஞ்ச கருத்தாக்களுள் உருத்திரன் அணுருத்திரனெனவும், மகேசன் அணுமகேச னெனவும், சதாசிவன் அணுசதாசிவனெனவுஞ் சொல்லப்படுவரென்பதூஉம், அணுமகேசனே அனந்ததேவ னெனப்படுவனென்பதூஉந் தெரிந்துகொள்க. இவ்வைவர்பற்றிக் கடவுள் வணக்கத்து 3–ன் உரைப் பிரமாணங்களும், சைவசமயசரபத்தே சிவாதிக்கியவிளக்க வத்தியாயத் தெடுத்துக்காட்டப் பட்ட சுருதிகளும் ஈண்டுக் கருதிக்கொளத்தக்கன.*

*ஐந்திடங்கள் :– சிவதத்துவமெனுஞ் சுத்த தத்துவத்திலுள்ள சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவமென்பன.*

**தி**ரையறுக்கும் பொருட்டதனிற் கலந்துமலத் தொன்றாய திரோதை யென்னும்
உரைபொறுத்த வாதிசத்தி யெனுமருளுஞ் சம்புபக்ஷ முறும்பா சத்தால்
திரைபெருத்த வணுவென்னு முயிர்ப்போத மணுபக்ஷஞ் சேரு மங்ஙன்
புரைபெருத்த வேணைமலங் களையுமணு பக்ஷமெனப் புகல லாமால். (2)

**சி**வசத்தி ரூபமதா யுள்ளசிவ தத்துவமைந் தனையுந் தேற்றம்
அவிர்சுத்த சைதனிய மெனநூல்க ளறைவதுபோ லணுக்கட் கெல்லாஞ்
சிவமுத்தி யளவுமுருக் கரணநகர் போகமெனச் சிறந்து நிற்கும்
விவிதக்கட் டினையுமணு பக்ஷமென வுபசரித்து விளம்ப லாமால். (3)

## அணுவினுண்மை.

**இ**ன்னதிற மாகவருட் சம்புபக்ஷ மணுபக்ஷ மெண்ணி நோக்கார்
சின்னவரை யேனுமறி யொண்ணாவவ் வணுவினுக்குத் தெளிப ளிங்கு
வன்னமது காட்டியது வாய்நிற்ற னிகர்த்திந்தி ரியங்கண் மாட்டுப்
பின்னிநிற்குந் தன்னிலைமை யாமிருள்கா ணறிவொன்றே பெற்றி யாகும். (4)

**அ**றிவொன்றே பெற்றியென வுள்ளவுயி ரறிவிக்க வறிசித் தாய்த்தே
செறிகின்ற பருதியுங்கண் ணும்போலச் சிவசனிதி யிருக்கு மஃதைச்
செறிதுங்க சித்தாயு மசித்தாயு மவ்விரண்டுஞ் சேர்ந்த தாயும்
நெறிகொண்ட வறிவாளர் சொலத்துணியார் நாணாளு நெறியுள் ளோயே. (5)

**தீ**ப்போல வசத்தொடுசேர்ந் தஞ்ஞானி யாமிதுநித் திரையிற் காண்டி
காப்பாய சத்தொடுசேர்ந் துயர்சத்தா மிதுபரைசாக் கிரத்திற் காண்டி
பூப்போத முடையிதுதான் சீவவுரு வாகச்சத் தாகும் பொய்யாம்
ஆர்ப்புருவா யசத்தாகு மதனாலே சதசத்து மாநல் லோயே. (6)

---

*2. புரை = மிகை.*

*3. நூல்களறைவது – 42–ஆம் பத்திற் "சூக்கமான மோகினிக்கும்" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுமை யறியக்கிடக்கின்றது. இதுபற்றி ஐயமறவறிவுறுத்துதல், திட்பத்திற் கண்டுகொளலாம் *(கடவுள் வணக்கத்து 3–ன் உரை).*

*விவிதக்கட்டு = பலவகைப்பந்தம்; அவை, இங்குக்கூறப்பட்ட உரு. கரணம், நகர், போக மென்பன.*

*4. சின்னவரை = சிற்றளவு. "இறையணு வஞ்சஞ் சிறிது சின்னம்" என்பது **சே–திவாகரம்.** சினையென்னு மொழியு மிப்பொருளில் வந்ததேயாம்.*

*6. தீயானது, தன்னையடுத்த பொருள்களை விடாது சார்ந்து அவ்வந் நிறமும், மணமுமாம் புகை யாயெழுமாதலிற் சார்ந்ததன்வண்ணமாய் நிற்கு முயிரும், அந்தத் "தீப்போல அசத்தொடு சேர்ந் தஞ்ஞானியாம்" "சத்தொடு சேர்ந்து சத்தாம்" எனக் கூறப்படுவ தாயிற்று. தீ நிறமும் பேத மாதலைச் சிவப்பு, பச்சை முதலிய வர்ணவொளிகளா னறியலாம்.*

*"சதசத்துமாம்" என்னு நிச்சயம், **மிருகேந்த்ராகம** பரமோக்ஷ நிராஸப்ரகரணத்துங் கூறப்படுகின்றது.*

*ஆர்த்தல் = கட்டல் ; **சூ–நிகண்டு.***

விஞ்ஞானாகலர்.

**இ**த்தகைய வெண்ணிலுயிர் விஞ்ஞானர் பிரளயத்தார் சகல ரென்னா
முத்திறமா வாரவருள் விஞ்ஞானா கலரென்பார் மூல மொன்றாற்
பெத்தரென வுளரவருண் மேற்பரிபக் குவத்தெளிவு பெற்றா ரெண்மர்
நித்தியதத் துவமடைந்த ஞானமூர்த் திகளுமென நிகழ்த்து மேநூல். (7)

**அ**னந்தரருஞ் சூக்குமர்சி வோத்தமர்நல் லேகருத்தி ரப்பே ரார்சீர்
தினந்தருசீ கண்டரொரு நேத்திரனார் திரிமூர்த்தி சிகண்டி யென்பார்
முனந்தெரித்த வெண்மரறி யிவர்மந்தி ரேசுவரர் முடங்கில் லாத
கனந்தருமீ சுரதத்து வவாசிகள்வித் தேசரென்றுங் கருதிக் கொள்ளே. (8)

**கு**றைந்தமல பக்குவத்தார் மந்திரநா யகரேழு கோடி யாவர்
அறைந்தவிவர் சுத்தவித்தை தனில்வசிப்பா ரிவர்க்குமுன ரதிர்த்து ளோர்க்கும்
சிறந்தவதி காரமலந் தனைச்சிவமே யுளத்தெழுந்து செகுத்தே மாப்பு
நிறைந்தகதி கொடுக்குமென வறிதிபிர மணியத்தை நினைநெஞ் சுள்ளாய். (9)

**ம**ற்றொருதாழ் வுடையெண்ணில் விஞ்ஞானா கலர்வித்தை மாயை யென்றே
சொற்றவிரண் டனுக்குமிடை வசிப்பரவர்க் கிறைமுன்னர்த் துலக்கி யுள்ள
பொற்றலமந் திரர்மந்தி ரேசர்பத மளித்துப்பின் பூர்த்தி யீயும்
அற்றமினன் மாணாவப் பூர்த்திபெறற் கருணகிரி யரசைப் போற்றே. (10)

# 94. திருத்திமிருமருட்சம்பு

### சம்புபக்ஷமும் அணுபக்ஷமும்:

**1.** பேரொளி, பேரழகு முதலான பல்வகைப் பொலிவுகளும் மலிந்து பொங்கும் அருள்மயமான சம்பு எனப்படும் அகண்ட பரமசிவனார், உயிர்களிடம் கொண்டுள்ள பெருமை மலிந்த கருணையால் எடுத்துக்கொண்ட அனைத்து வடிவங்களும், மங்களப்பொலிவு குன்றாததாய், அருவநிலைக்கும் உரியதாய்க் கிளர்ந்து விளங்கும் சம்பு பக்ஷம் ஆகும். அந்தச் சிவனார் அருளால் ஐந்தொழிலையும் செய்யும் வடிவச்சிறப்பு மிக்க பிரம்மன் முதலான ஐந்து பேர்களும், சிவதத்துவப் பகுதியைச் சார்ந்துள்ள சுத்தவித்தை முதலான ஐந்து தத்துவநிலைகளும் உபசாரத்தால் சம்புபக்ஷம் என்னும் சிறப்பினைப் பொருந்தும்.

---

*7. மூலம் = ஆணவமலம்.*
*"**ஞானமூர்த்திகள்**" என்றது சாதாக்கிய தத்துவவாசிகளை. அவர்பெயர்கள் – பிரணவர், தேசேசர், ஈசர், காலர், அஞ்சு, தீர்த்தர், சுசிவர், சாதாக்கியர், சூக்குமர், காரணர் எனத் **திருவலங்கற்றிரட்டின்** முதலாங்கண்டத்தொரு பதிகத்தே "சீர்த்தியுள்ள பிரணவர்" என்றற் றொடக்கத்துத் திருச்செய்யுளில்வைத் தோதப்பட்டன.*

*8. முடங்கு = நோய்; டகரவெதுகை.*

*9. நம:, ஸ்வாஹா, ஸ்வதா, வௌஷட், வஷட், பட், ஹூம் என்னுமிவை, ஒன்று கோடியாக "ஏழுகோடி".*

*10. வித்தை = சுத்தவித்தையென்னுந் தத்துவம்.*

2. ஆணவமாகிய மறைப்புத் திரையை நீக்கும் பொருட்டு, அதனோடு கலந்து ஒன்றுபட்டு விளங்கும் திரோதசக்தி எனப்படும் ஆதிசக்தியாகிய அருட்சக்தியும் சம்புபக்ஷமே; பாசப்பிணிப்பு காரணமாக பெரும் மறைப்புக்கு உட்பட்டிருக்கும் ஆன்மா எனப்படும் சித்துப்பொருளும் சீவபோதமும் அணுபக்ஷம் ஆகும். அவ்வாறே மிகுதியாகப் பொருந்திப் பந்தப்படுத்தும் மற்ற கன்மம் முதலான மலங்களையும் அணுபக்ஷம் எனக் கூறலாம்.

3. சிவசக்தியின் வடிவமாகவே திகழும், சிவதத்துவப்பகுதிக்குரிய ஐந்து தத்துவங்களும் தெளிவுமிகுந்து விளங்கும் தூய சைதன்னியமே என ஆகம நூல்கள் கூறுவது போன்று, உயிர்கள் அனைத்திற்கும் அவை சிவப்பேறாகிய முத்திநிலையை அடையும் வரையில் தனு, கரணம், புவனம், போகம் என அந்தந்த நிலைகளுக்குரிய வகையில் சிறப்புறப் பொருந்தி நிற்கும் பல்வேறு பட்ட பந்தங்களையும் உபசார மாத்திரத்தால் அணுபக்ஷம் எனவே வகைப்படுத்திக் கூறலாம்.

## அணுவின் உண்மை

4. கூறப்பட்ட இந்த வகைத்திறத்தில் அருள்மயமான சம்புபக்ஷம், அணுபக்ஷம் என்னும் இரண்டின் இயல்பை எண்ணிப்பார்க்காதவர்களால் சிறிதளவேனும் அறிய இயலாமல் உள்ள அணு எனப்படும் ஆன்மாவின் இயல்பு யாதெனில், தெளிவான பளிங்கு தன்னை அடுத்துள்ள நிறத்தைக் காட்டி அந்த நிறமாகவே விளங்குதல் போன்று, ஆன்மாவும் இந்திரியங்களோடு பின்னி நின்று விளங்குவதாகிய இருள் தன்மையில் உள்ளதாகும். எனினும் அதன் சுபாவம் அறிவாக விளங்குவதேயாகும்.

5. அறிவாகிய ஒன்றே தனது இயல்பு என விளங்கும் உயிரானது அறிவிக்க அறிகின்ற சித்துப் பொருளாகும்; அது ஒளி செறிந்து விளங்கும் சூரியனும் கண்ணொளியும் போன்று சிவசன்னிதியில் இருக்கும். அதனை, உயர்வு மிகுந்த சித்துப்பொருள் என்றோ, அசித்துப்பொருள் என்றோ, சித்து–அசித்து எனும் இரண்டின் சேர்க்கை என்றோ, ஞான நன்னெறியில் நிற்கும் அறிவாளர்கள் கூறத் துணிய மாட்டார்கள். எப்பொழுதும் நன்னெறியில் ஒழுகும் மாணவக ! இவ்வுண்மையை உணர்ந்து கொள்.

6. தன்னை அடுத்த பொருளைச் சார்ந்து அதன் வண்ணமாக விளங்கும் தீயைப்போன்று, ஆன்மாவும் அசத்தோடு சேர்ந்து அஞ்ஞானி என விளங்கும் தன்மையை உனது நித்திரை என்னும் அவத்தையில் காண்க. காப்பதற்கு உரிய சத்தோடு சேர்ந்து சத்து எனவே ஆன்மா விளங்கும் தன்மையை பரைநிலைக்குரிய சாக்கிர அவத்தையில் காண்க. மலர்ந்து விளங்கும் ஞானம் வாய்த்துள்ள ஆன்மா சீவித்திருக்கும் வடிவாக நின்று சத்தாகும்; பொய்யாய் அழிந்துபோகும் வடிவாக நின்று அசத்தாகும். அதனால், ஆன்மா சதசத்து என விளங்குவதாகும். நல்லோய் ! இதனை அறிக.

## விஞ்ஞானாகலர்

7. இவ்வாறுள்ள எண்ணற்ற உயிர்கள் விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என முத்திறப்பட்டு விளங்கும். இந்த உயிர்களுள் விஞ்ஞானாகலர் என்பவர்கள் மூலமலம் எனப்படும் ஆணவமலம் ஒன்றால் மட்டும் பிணிக்கப்பட்டுள்ளவராவர். இவ்வகையினருள்

மிகவும் மேன்மையான பரிபக்குவமும் தெளிவான ஞானமும் பெற்றுள்ளோர் எண்மராவர்; நித்தியமான தத்துவமாகிய சாதாக்கியம் என்பதில் வாசம் செய்யும் பிரணவர் முதலான ஞானமூர்த்திகளும் விஞ்ஞானாகலர்களே என ஆகமநூல் கூறும்.

**8.** முன்னர்க் கூறப்பட்ட எண்மர்களாவார்: அனந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகருத்திரர், சீகண்டர், ஏகநேத்திரர், திரிமூர்த்தி, சிகண்டி என்போர், எனக் கூறுவர். இவர்களே மந்திரேசுவரர்கள் எனவும், பிணிப்பற்ற, பெருமைக்குரிய ஈசுவரதத்துவத்தில் உள்ளோர் எனவும், வித்தியேசுவரர்கள் எனவும் அறிந்து கொள்க.

**9.** சுப்பிரமணிய பரம்பொருளை தியானித்திருக்கும் உள்ளம் உடையோய்! விஞ்ஞானாகலருள் மற்றொரு வகையினரான குறைவான மலபரிபாகம் உடையோர் மந்திரநாயகர் என்போர். இவர்கள் ஏழு கோடியினர். கூறப்பட்ட இவர்கள் சுத்தவித்யா தத்துவத்தில் உள்ளோராவர். இவர்களுக்கும் முன்னர்க் கூறப்பட்ட மேலான மலபரிபாகம் உடையோர்க்கும் சிறந்துள்ள அதிகார மலம் என்பதை சிவபரம்பொருளே அன்னோர் உள்ளத்தே வெளிப்பட்டு முழுவதுமாக நீக்கி, சிவானந்தப் பேறாகிய நிறைவான முத்திப் பேற்றை வழங்கி அருளும்.

**10.** குறைவான மலபரிபாகம் வாய்த்தோருள் மற்றும் ஒரு வகையினரான எண்ணற்ற விஞ்ஞானாகலர்கள், சுத்தவித்யா தத்துவத்துக்கும் மாயை என்னும் தத்துவத்துக்கும் இடைப்பட்டுள்ள தானத்தில் வசிப்பவர்களாவர். இவர்களுக்கு, முன்னர்விளக்கப்பட்டுள்ள உயர்ந்த இடமாகிய சுத்தவித்யா தத்துவத்தில் மந்திரர், மந்திரேசுவரர் என்னும் பதங்கள் கொடுத்துப் பின்னர்க் காலகதியில் அவரவர் பக்குவ உயர்ச்சிக்கேற்ப நிறைவான கதியை, சிவனார் வழங்கி அருள்வார். ஐயப்பாடு நீங்கியுள்ள மாணவக! அத்தகைய நிறைவான கதியைப் பெறும் பொருட்டு அருணகிரிப்பெருமானின் உள்ளத்து தெய்வ அரசாக விளங்கிய குகப்பெருமானைப் போற்றுக.

# 95. கனகம்

## விஞ்ஞானாகலர்.

*பதினாறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**க**னகம் போற்சுடர் வடிவவிஞ் ஞானா கலர்கள் யாவரு மிருதிற மாவார்
கணித்து விளக்கில னாதியி லேயோர் கட்டு மட்டுமு ளாரொரு கூறே
வனவிஞ் ஞானம தானல யோகான் மாசி றுறவறத் தாற்சிவ தீக்கை
வழியி னாலிடை யேவினை மாயா மலங்க ணீங்கியொன் றுளரொரு கூறே
சினமி லாவிவர்க் குளமலத் தோடே திரோதை வைந்தவ மெனுமலங் களையுஞ்
சேர்க்கின் மும்மல மாமிவற் றுள்ளே செப்பு திரோதையொன் றேபர மேசன்
தனது தன்மையி லேசிறி தீனஞ் சாற்ற வுள்ளவித் தேசருக் குளது
தனகு நாதசுப் பிரமணி யத்தோர் தயவு வேண்டுநல் லோயறி வாயே. (1)

*1. விந்துவின் சம்பந்தம் “வைந்தவம்.” இது, சுத்தமாயையின் விருத்தியெனப்படும்.*

## பிரளயாகலர்.

**பி**ரள யாகலர் தமுளுயர் வாகப் பிறங்கு வோர்க்க னேச்சுர னென்னும்
பேரு ளோன்முத லாப்பதி னெட்டுப் பெயரின் னோரிடை மாயையி லுள்ளார்
கரவி லாக்குறை வுளர்சத ருத்ரர் கானற் றீயுருத் திரர்முத லாவார்
கருணைச் சதவுருத் திரர்பிர மாண்ட ககன வெளியினின் றுண்டையைக் காப்பர்
புரிவத் தீயுருத் திரர்முத லாவார் புவன நாயக ராயிருப் பார்முற்
புகன்ற சதவுருத் திரர்பதி னெண்மர் பொற்பு டம்பு கலாதிக ளாகும்
உரிமை சாரவிங் கோதிய வெவர்க்கு மொளிர்வித் தேசுரர்பதமளித் ததன்மேல்
ஓங்கு பூர்த்திநல் குவனெமை யாளு மொருவ னென்றுணர் குகனினை வுடையோய்.
(2)

**பெ**ரிய குறைவுடைப் பிரளய ரெண்ணில் பேரு ளாரவ ரிருவகை யவர்க்குப்
பிறங்கு புரம்புரி யட்டக மாகும் பிடிப்புற் றுடையிட மிசிரம தாகும்
வரிசை யாய்ச்சொன பிரளய ரெவரும் வகையி ரண்டென வாவரவ் வகைதான்
வலிக்கொண் ணாதவ னாதியிற் றானே மலமுங் கன்மமு முளரொரு வகையே
புரிவி னாற்பரி பாகம திடையே பொருந்தி மாயைகெட் டிரண்டுடை யவராய்ப்
புகல வுள்ளவ ரொருவகை யாவர் போத மேயவிவ் விருதிறத் தார்க்கும்
உரிய வல்லிரு மலத்தொடு திரோதை யொண்மை வைந்தவ மென்பன கூட்டி
ஓதி னான்மல மாமென வுணர்வா யோகை யங்குகப் பிரபுவைச் சூழ்வோய்.(3)

---

*2. பதினெட்டுப் பெயர் :– மத்திமப் பிரளயஞ் சம்பவிக்கு முன் அரிபிரமர்களுடன் குணதத்துவத்திலும், அந்தப் பிரளயகாலத்தில் அவ்விருவரையு மொடுக்கிக்கொண்டு அராகதத்துவத்திலு மிருக்கத்தக்க சீகண்டருத்திரர், அவரோடிருக்கத்தக்க வீரபத்திரர், பிரகிருதி மத்தகத்தி லிராநின்ற உருத்திரரெண்மர், கலைமத்தகத்தி லிராநின்ற உருத்திரரெண்ம ரெனப்படுவர்.*

*இடைமாயை = பிரகிருதி மாயைக்கும், சுத்தமாயைக்கும் இடையிலுள்ள அசுத்தமாயை; இது மாயையெனவும்படும்.*

*சதருத்ரர் – வடநூன்முடிபு; சதம் = நூறு.*

*கானற்றீயுருத்திரர் = ஒளியுடைத் தீயனைய மேனியுருத்திரர்.*

*கலாதி = கலை, நியதி, காலம், வித்தை, அராகமென்னும் மாயேயம். இங்கோதுமாறு **திருமந்திரத்தின்** கேவல சகல சுத்தம் 5–ல். "தாவிய மாயையிற் றங்கும் பிரளயர் – மேவிய மற்ற துடம்பாய்மிக்குள்ளது" என்றும், **சித்தாந்தப் பிரகாசிகை** யென்னும் புத்தகத்தில், "நூற்றுப்பதினெட்டு உருத்திரர் சரீரம் மாயேயம்" என்றும், சிவஞானசித்தியாரின் 1–ஆஞ் சூத்திரத்து 41–ற்கு ஞானப்பிரகாசர் வரைந்த வுரையில், "அநந்தருக்கு மஹாமாயா சரீரமுள்ளதுபோல ஸ்ரீகண்டருக்கும் அதிசுத்தமாய் மாயாசரீரமுண்டாம்" என்றும் வருதலிற் காணலாம். பிரளயாகலருக்கு மாயாமலமின்மை கூறப்பட; ஈண்டு மாயேயமாகிய கலாதிகளை யுடம்பாகச் சொல்லுவ தென்னை ? எனின், அறியாது கடாயினாய். கலாதியைந்தின் கலப்பிலெழும் புருட தத்துவத் தோடு கூடிப் பிரகிருதி குணாதி தத்துவங்களாற் சுகதுக்கங்களுறுஞ் சகலர்க்குரிய அப் புருடதத்துவ மவர்கட்கில்லாமையே மாயாமலநீக்கமா மென்க. அனந்தாதி வித்தியேசுரர்க்கு ஆணவமல வுபாதிவிதப்புக் கூறக் கூடாதது போலவே சீகண்டாதி யுருத்திரர்கட்குக் கன்மமலவுபாதிவிதப்புங் கூறக்கூடாது. அவர்கள் கன்மம், அதிகாரபுண்ணியமாகும். பிரளயாகலர் தேகம் சுத்தமாயை யென்று சின்னூல்களிற் படிக்கப்படுவது – "கலைக்குக் காரணமான மாயை நிட்களம்" என்று சுவாயம்புவம் முதலிய ஆகமங்களுட் கூறப்படுந் துணிவுபற்றியே யென்ப. மாயைக்குச் சுத்தத்தன்மையு முண்டென்பதைத் 99–ஆம் பத்தின் 6 ஆந் திருப்பாட்டா லறிக.*

## சகலர்.

**ச**கல ரென்பவர் நறும்பரி பாகஞ் சார்ந்து ளோரது சார்கில ரென்னாச்
சாற்று மிருதிற மாய்ப்பிர கிருதிச் சால்பு முதற்பிரு திவிவரை வதிவார்
புகலு மிவர்பிர மாவரி முதலாய்ப் புன்மைத் தாவரம் வரையிலு முளபல்
பூத மெனவியங் குவரய னரிதாம் புரியட் டகவுடம் புடையவ ராவர்
திகழுந் தேவரெட் டறிவினர் முதலாய்த் திளைக்கு நாற்றசத் தைம்பது குணமே
சேர்ந்து ளோர்வரை யும்பல ருள்ளார் சிறுத்த மானுடராறறி வுடையார்
நிகழின் னோர்களு ளொருபத முடையார் நெடிய மூக்கரி யானையின் காதர்
நீரி லுளர்நிரு வாணிக ளேனை நீரர் களுமுள ரோர்குகற் றொழுவோய். (4)

**வி**வித மானுடர் களுக்குமை யறிவு விலங்கு முதலொரு பொறியுயி ரீறாய்
விளம்பெல் லாவுயிர் களுக்குமுட் கருவின் மேவு வாசமோர் நாழிகை யாதி
துவித வைந்தும திவரைபற் பலவாந் தோற்ற மறிந்திட வேண்டி டினசரத்
தொகுதி யொழிந்தமற் றுளசரங் களிலே தொள்ளைக் காதண்டந் தோற்செவி சூற்பை
செவியி லாதன வியர்வையென் பதனைச் சேரு மெனவறி சகலரின் மூல
தேக மூவகை யாம்விவ ரங்கே டிளைக்கு மாயையின் காரண மொன்றாங்
கவியம் மாயையின் காரிய பஞ்ச கஞ்சு கத்துடம் பொன்றந்த மாயா
கலையின் பகுதி யிராசிய மொன்றாங் கலை கடந்ததைக் கருதுணர் வுடையோய். (5)

---

*4. பிரகிருதிச்சால்பு = பிரகிருதிகுண தத்துவம். புரியட்டகவுடம்பு = சூக்குமதேகம். இப்பத்தின் **6**–ஆந் திருப்பாட்டில் "ஒன்றேழாய கருவிகள். சூக்குமவுடம்பாம்" என வருதலு மிதுவே. **21**– ஆம் பத்தின் "ஓசையாதி யைந்து"என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டின் குறிப்புரையை நோக்கி விவரமறிக.*

*பிரமா அரி முதலியோரும் உயிர்களென்பது **இலிங்கபுராண** உத்தர காண்டத்து **8**–ஆம் அத்தியாயத்து **4**–ல் "மலரயன்மான் முதலாக மலர் பொதுளுந் தருவீறாய் வாய்த்து நின்ற – நிலைபெறுபல் லுயிர்" என வருவதிலும், **திருமந்திரத்தின்** கேவல சகல சுத்தம் **4**–ற் "சகலவவத்தையிற் சார்ந்தோர் சகலர் – புகலு மலமூ வகையும் புணர்ந்தோர் – நிகரின் மலரோன்மா னீடுபஃதேவர்கள் – நிகழ்நரர் கீட மந்தமு மாமே." என வருவதி லும், **94**–ஆம் பத்தில் வரு '**திருத்திமிருமருட்சம்பு**' என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரைப் பிரமாணங்களிலும் பெறலாம்; **சைவசமயசரபமுங்** காண்க.*

*நாற்றசத் தைம்பது குணம் = நானூற்றைம்பது குணம்; யாங்ஙன மெனின், – இராசசம், தாமசம், சாத்துவிகமென்னுங் குணமூன்றும் ஒன்பதாக்கப் படுமிடத்து, ஒரோவொன்றும் ஐம்பதாக **450**–ஆம் என்புழியென்க.*

*ஒருபதமுடையார் = ஒற்றைக்காலர் ; இவரைப்பற்றி–*

> *"உள்ள மிக்கார் குதிரைம் முகத்தா **ரொருகாலர்கள்***
> ***எள்க** லில்லா விமையோர்கள் சேருமிடம் ...... கேதாரமே"*

*எனத் திருஞானசம்பந்தசுவாமிகள் தமிழ்மறைக் கண்ணுங் கூறப்பட்டிருத்தல் காண்க.*

*5. ஒரு பொறியுயிர் = விருக்கம் முதலியன. ஈரறிவுயிர் முதலிய விவரம், **சீவயாதனா வியாசத்தினறியலாம்.***

*மூலதேகம் = காரண சரீரம்.*

*பஞ்சகஞ்சுகத்துடம்பு = அசுத்தமாயையுடைக் கலாதியைந்தின் கூட்டம். இஃது உள்ளந்தக் கரணமெனவும், உள்ளமெனவும்படும்.*

*பகுதியிராசியம் = பிரகிருதியின் அவ்வியத்த குணசரீரம்.*

**அ**திர்த்த பகுதியிற் றோன்றிய வொன்றே ழாய கருவிகள் சூக்கும வுடம்பாம்
அப்பகு திவரு தூலவைம் பூதத் தாம்வன் கருவிக டூலமெய் யாகும்
விதித்த வைந்துச ரீரமு மூன்றாய் விளங்கு மம்முறை யேமுத லுடம்பு
மேய வானந்த மயத்திரை யாகு மீளிச் சூக்கும மும்மயத் திரையாம்
உதித்த தூலம தனமயத் திரையா மோதிச் சகலருக் கெழிற்றுலை போலே
உபய வினையினொப் பாற்பரி பாக முறுமக் காலிறை குருவெனத் தோன்றித்
திதித்து மேதைவித் தேசுர ராதி திருக்க ளீந்துபின் பூரண மீயுந்
தெருளி லிவர்க்குள மும்மலத் தோடு திரோதை வைந்தவஞ் சேர்க்கினைந் தாமால்.
(6)

**மூ**ல வாணவ மலத்துடன் கலந்தோர் மூன்று வினைமலத் தோடுமற் றதுமாய்
மொழியு மலங்களின் காரியம் பெருக்கி மோக மாயணு வினையுண வியக்கிச்
சீல மாய்மல பாகமுண் டாக்குந் திரோதை யாவதை யருளென வறிதி
சிறந்த மாயையின் காரிய மாகத் திகழொ ரைந்துதத் தவமும யேயம்
கோல மோகினி மான்பர மெனவே கூறு மாயையின் காரண மூன்றுங்
கூட்டக் காலதத் துவமுத லனைத்துங் கூல மாயையென் மலமிவண் விரித்த
சால மலமொரைந் தனுட்டிரை யருளைச் சாரு நான்கனுட் பின்னைய விரண்டுஞ்
சாதி யொன்றென வாமத னானே தளைகண் மூன்றென வறிதிநல் லோயே.
(7)

---

6. *"ஒன்றேழாயகருவிகள்" என்றது, 4–ஆந் திருப்பாட்டிற்போந்த புரியட்டக வுடம்பே. காரணசரீரம் மூன்றுமே இங்கு "முதலுடம்பு" எனப்பட்டன. மீளி = வலிமை. மும்மயம் = பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் என்க. அனமயம் – அன்னமயம் என்பதன் விகாரம்.*

*உபயவினையொப்பு, (மல) பரிபாக மென்பவற்றின் வித்தாரம் – **சிவசூரியப்பிரகாசத்துள்ளன**. "வித்தேசுரராதி திருக்களீந்து பின் பூரணமீயும்" என்றதற்கு – "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" எனுந் திருவாக்கின்படி அருணேடிநிற்கும் அவரவ ராசை யிருந்தவாறு அதிகாரபதமுத்தியும், அஃதல்லாத பரமுத்தியும் இறையளித்தருளுமென்று பொருள் கொள்க. 2–ஆந் திருப்பாட்டில் "வித்தேசுரர் பதமளித்து அதன்மேற் பூர்த்தி நல்குவன்" என்றதற்கு மிதுவேபொருளெனக் கொள்க.*

7. *மூன்று வினைமலம் = ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தமென முத்திறப்படு கன்மமலம். இம் மலம்பற்றி அறியவேண்டுவ பலவும் மலைமகளென்னும் **61**–ஆம் பத்திலும், ஆணவமலம் பற்றி அறியவேண்டுவ பலவும் சிவத்திருவென்னும் **60**–ஆம் பத்திலும் விளக்கப்பட்டமையின் அவைகளை ஆசிரியர் இங்கு விளக்கினாரல்லரென்க. இன்னும் இம்மலங்களைப் பற்றிய விசாரணை மாணப்பெரிதா யிருத்தல் **சிவசூரியப்பிரகாசத்தா** லறியப்பாற்று.*

*திரோதைக்கு வேறுபல செயல்களுமுள. அவற்றை, இப்பத்தின் **9**–லும், ஆனந்தமான பொருளெனும் **8**–ஆம் பத்தின் **8**–லுங் கண்டுகொள்க. சிறந்த மாயை = சுத்தமாயை.*

*மாயேயமென்பது "மயேயம்" எனக் குறுகிற்று; இதுவே வைந்தவமென்னு மலம். மாயையின் காரியம் மாயேயமெனப்படும். இதனை, அசுத்தமாயையின் காரியமாகச் சிவஞான சித்தியாரின் 2– ஆஞ் சூத்திரத்து 87–ற் சொல்லி யிருப்ப; ஈண்டுச் சுத்தமாயையின் காரியமாகச் சொல்லுவதென்னை ? எனின், – அசுத்தமாயாகாரியமாகிய பிரவிருத்திப் பிரகாசத்தைச் செலுத்துஞ் சம்பந்தஞ் சுத்தமாயா காரியத்ததாகலின் அப்படிச் சொன்னதென்க. இவ்வாறே அச்சூத்திரத்து 87, 88–ஆஞ் செய்யுளுரைகளிற் **சிவாக்கிர யோகியரும்** பொருள்விரித்துள்ளார். இவ்வாறு பொருள் கொள்ளாக்கால், மாயையும் மாயேயமும் ஒன்றேயாகி மலம் நான்கெனவாம். அப்படியாகாமல், சுத்தமாயாகாரிய மென்னும் வைந்தவத்தைக்கூட்டி மலம் ஐந்தென்பது **சிவப்பிரகாசத்தின்** 2–ஆஞ் சூத்திரத்துப் 14–ல் "மாமாயைத் திரட்சியொன்று" என்றும், **திருவருட்பயனின்** அறியுநெறி 2–ல் அனாதியாயுள்ள "இருள் கருமம் மாயையிரண்டு" என்றும் வருவன வற்றிற்கும் பிறவற்றிற்கும் இயைந்த முடிபாம்.*

*கூலமாயை = பலபண்டமாயுள்ள மாயை; "பரதர் தந்த பல்வேறு கூலம்" என்பது மதுரைக்காஞ்சி. கூலம் – வடசொல் லுமாம். மலமோரைந்து – ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதையென்பன.*

பஞ்சகிருத்தியம், இருபத்தைந்துவகை.

**மு**ன்னர்க் கூறிய பரசிவன் றொழிலை
மொழியக் கேளது படைப்பளிப் பழிப்பு
மூடு திரையனுக் கிரகமென் றைந்தா
முதற்க ணுளதருண் மூன்றினு மிருந்தே
அன்னை யாயம னோன்மனி யீசி
யாதி பேதமுண் டாக்கலொன் றணுவாம்
ஆத்து மாக்களை மாயையின் கருப்ப
வறையி னீக்கிடு சிருட்டியொன் றமுக்காய்த்
துன்னும் பாசமொ ரைந்தையும் விரித்துத்
துலக்கு சிருட்டியொன் றரியமந் திரங்கள்
தொனிக்கும் பதம்வனம் புவனமெல் லாமுந்
தோன்ற விழைத்தலொன் றேழ்வகைப் பிறப்பும்
மின்ன நாடொறு மிழைத்தலொன் றெனவாம்
விளக்கி யுளவழி யேபடைப் பைந்தும்
வேண்டு வார்விருப் பறிந்தரு ளன்னோன்
விளைப்ப னென்றறி வாயுணர் வுடையோய். (8)

**ப**டைத்த வொழுங்கிலைந் துந்தரித் திருக்கப் பாது காக்குமொர் திதியுமைந் தாகும்
பாது காப்பொழித் தழித்தலு மைந்தாம் படர்ந்த வினைநனி யுழன்றவன் றூங்கிக்
கிடத்தல் போனசை யாற்றுய ருழந்த கிஞ்சி லுணர்வுயி ரிருந்திளைப் பாறக்
கிரியை செய்வது வேசொன வழிப்பாங் கிளருந் திரோதையை யினிச்சொலக் கேட்டி
அடைத்த வினைநுகர்ந் தொழிக்கவென் றுயிரை யவிர்க லாதிதத் துவங்களிற் செலுத்தல்
அஙன மறிவினை விளக்கிய வருளை யறியொ ணாவண மறைத்திட லுலகாஞ்
சடத்தை மெய்யெனக் காட்டுதல் சிவசை தன்னி யந்தனைப் பொய்செயல் கருமந்
தனையின் சுவையுற வூட்டுத லெனுமைந் தன்மை யாயிருந் திடுநெறி யுடையோய்.
(9)

**ஏ**க மலத்தினர்க் குயிரென வகத்தே யிருந்து மிருமலத் தார்க்கு முக்கணனாய்
எதிரி னின்றுமும் மலத்தினர்க் கெழின்மெய் யிலங்கு மானுட னாயெதி ரிருந்தும்
மோகந் தணந்தவிண் சுரர்புவி மாந்தர் முதன்மற் றவர்க்குரு மாறிமுன் னாயும்
மூல மனுச்செபந் தவமிகத் திகழு முகத்தி லேற்புறத் தோன்றியு மருள்செய்
பாக வனுக்கிர கம்மது மைந்தாம் பகர்ந்த தொழில்களெல் லாமயனாதி
பஞ்ச மூர்த்தியஞ் செழுத்தென நின்று பண்ண றன்மைய தாமவ னவளஃ
தாக நவில்பிர பஞ்சமுன் னிலையா மங்க மேயிலி யாயுமொண் மேனி
யால்வி யாபித்து நடத்துதல் படர்க்கை யாமண் ணாமலை யான்சிவ னாளே.
(10)

---

*8. ‘அருள்மூன்று’ என்றது, பரசிவ பராசத்தியிற் றோன்றிய இச்சை ஞானம், கிரியையென்னுஞ் சத்திகளை. ஏழ்வகைப் பிறப்பு :– தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்பன.*

# 95. கனகம்

**1. விஞ்ஞானாகலர்:** பொன்போன்று ஒளிரும் வடிவத்தை உடைய விஞ்ஞானாகலர் என்பார் இருவகைப்படுவர். நன்கு சிந்தித்து உரைக்குமிடத்து, தொடக்கத்தில் இயல்பாகவே ஆணவமலம் என்னும் மலப்பிணிப்பு ஒன்று மட்டும் உடையார் ஒரு வகையினர்; ஆற்றல்மிக்க விஞ்ஞான உணர்வாலும் நல்ல யோகத் திறத்தாலும், மாசற்ற துறவறத்தாலும், சிவதீக்கை நெறியாலும், தமக்கு முன்பு பொருந்தி இருந்த கன்மமலம், மாயாமலம் இரண்டும் நீங்கப்பெற்று ஆணவமலம் மட்டும் கொண்டிருப்பார் மற்றொரு வகையினர். சிறுமைத்தன்மை இல்லாத இன்னோர்க்கு, இவ்வாறுள்ள ஆணவம் என்னும் ஒரு மலத்தோடு, திரோதை, வைந்தவம் என்னும் இரண்டு மலங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், இவர்களுக்கும் மூன்று மலங்கள் உள்ளன எனவாகும். திரோதை, வைந்தவம் என்னும் இரண்டனுள் திரோதை எனப்படும் ஒன்று மட்டுமே, பரமேசுவரனின் நிலைக்குச் சற்றே குறைந்துள்ள நிலையை உடையவர் எனக் கூற உள்ள வித்தியேசுவரர்க்கு உள்ளது. ஆனந்தக் களிப்புடைய நாத நிலையில் உள்ள சுப்பிரமணியப் பரம்பொருளின் ஒப்பற்ற கருணையை விரும்பிநிற்கும் நல்லோய்! இந்த உண்மைத் தத்துவத்தை அறிவாயாக.

**2. பிரளயாகலர்:** பிரளயாகலர் எனப்படும் உயிர்வர்க்கத்தோருள், உயர்வான பக்குவம் வாய்க்கப் பெற்று விளங்குவோர் ககனேசுவர் முதலாக உள்ள பதினெண் உருத்திரர்கள் ஆவர். இவர்கள் இடைப்பட்ட மாயைத் தானத்தில் உள்ளவர்களாவர். குறைவான பக்குவம் வாய்க்கப் பெற்றுள்ள பிரளயாகலர் சதருத்திரர்கள், ஒளிமிக்க தீயைப் போன்ற உடலை உடைய ருத்திரர்கள் முதலானோர் ஆவர். கருணைமிக்க சதருத்திரர்கள், பிரம்மாண்டத்தின் எல்லைப்புறத்தே ஆகாய வெளியில் இருந்துகொண்டு பிரம்மாண்டத்தைக் காத்துக் கொண்டிருப்பர். பரிவுமிக்க தீப்போன்ற உருத்திரர்கள் புவனாதிபதிகளாக விளங்குவர். முன்னர்க் கூறப்பட்ட சதருத்திரர்களுக்கும், ககனேசுவரர் முதலான பதினெண்மர்க்கும் வாய்த்துள்ள பொலிவான தேகம் கலை முதலான ஐந்து தத்துவத் தொகுதியாய மாயேயம் என்பதாகும். அவ்வவர்க்குரிய உரிமையான நிலை பொருந்த இங்கே எடுத்துக் கூறப்பட்ட பிரளயாகலர் அனைவர்க்கும் எம்மை ஆட்கொள்ளும் முழுமுதற்பரம் பொருளாகிய ஒருவன் வித்தியேசுவர பதவி அளித்துப் பின்னர் நிறைவாய முத்திப் பேற்றை வழங்கி அருள்வான். குகபரம்பொருளை நினைத்திருப்போய்! இவ்வுண்மையை உணர்க.

3. மிகவும் குறைவான பக்குவம் வாய்க்கப் பெற்றுள்ள பிரளயாகலர் எண்ணற்றோர் உள்ளனர். இருவகைப்பட்டு விளங்கும் அவர்களுக்குப் பொருந்தி விளங்கும் தேகமானது புரியட்டகம் என்பதாகும். அவர்கள் பிடிப்போடு வசிக்கும்இடம் மிசிரமாயை ஆகும். நிரல்பட இங்கே கூறப்பட்ட பிரளயாகலர் அனைவரும் இருவகைப்பட்டு விளங்குவார்கள். கணித்துக் கூறமுடியாத அனாதி காலம்தொட்டே, இயல்பாகவே ஆணவமலம், கன்மமலம் என்னும் இரண்டுமலங்களும் உள்ளவர்கள் ஒருவகையினர். உரிய பயிற்சியால் இடையே பரிபக்குவம் வாய்க்கப்பெற்று, அதனால் மாயாமலம் நீங்கிநிற்க ஆணவம் கன்மம் என்னும் இரண்டும் உடையவர்களாகக் கூறப்படுவோர் மற்றொரு வகையினர். முதிர்ந்த ஞானம் பொருந்தியுள்ள இவ்விருவகைப்பட்ட பிரளயாகலர்க்கும், உரியவகையில் உள்ள ஆணவம் கன்மம் என்னும் இரண்டு மலங்களுடன், திரோதை, வைந்தவம் என உள்ள இரண்டையும் சேர்த்துக் கூறினால், பிரளயாகலர்க்கு உள்ளவை நான்கு மலங்கள் எனவாகும். ஆனந்தக் களிப்புடைய குகப்பெருமானைத் தியானித்திருப்போய்! இவ்வாறு பிரளயாகலரின் இயல்பை உணர்வாயாக.

**4. சகலர்:** சகலர் எனப்படும் உயிர்வர்க்கத்தோர் உயர்ந்த பரிபக்குவம் வாய்த்துள்ளோர், அத்தகைய பக்குவம் வாய்க்கப்பெறாதார் எனக் கூறப்படும் இருவகைப் பட்டவர்களாய், பிரகிருதியைச் சார்ந்த குணதத்துவம் முதல் பிருதிவி தத்துவம் வரை உள்ள புவனவெளிகளில் வசிப்போராவர். கூறப்படும் இவர்கள் பிரம்மன், திருமால் முதலாகத் தாவரம் ஈறாகக் கூறப்படும் பல்வகைப்பட்ட தோற்றங்களுக்கு உட்பட்டவராய்ப் போக்கு வரவு செய்துகொண்டிருப்பர். (போக்கு வரவு – இறப்பும் பிறப்பும்) இவர்களுள் பிரம்மனும் திருமாலும் புரியட்டக தேகம் உடையவர்களாவர். சகலர்களுள் தேவர்கள் எனப்படுவோர் எட்டு அறிவு வாய்க்கப் பெற்றுள்ளோர் முதல், ராசசம் முதலான குணங்களின் விருத்திகளாகப் பெருகியுள்ள நானூற்றைம்பது குணங்கள் வாய்த்துள்ளோர் வரைப் பலதிறப்பட்டு விளங்குவார்கள். சிறுமை நிலையுடைய மானுடர் ஆறறிவு வாய்க்கப் பெற்றுள்ளோர் ஆவர். குகப்பெருமானைத் தொழும் அன்பனே! விளங்கும் இம் மானுட வர்க்கத்துள் ஒற்றைக் கால் உடையோர், நீண்ட மூக்குடையோர், யானைக்காது உடையோர், நீர்வாழ்வோர், ஆடையற்றிருப்போர், மற்றும் பற்பல வினோத இயல்புகளை உடையோர் ஆகிய இவர்களும் உள்ளனர் என அறிக.

5. பல்வகைப்பட்ட மானுடர்களுக்கும், ஐயறிவு வாய்த்துள்ள விலங்கு முதல் ஓர் அறிவுஉடை உயிர் ஈறாகக் கூறப்படும் எல்லா உயிர்களுக்கும், கருப்பையுள் வாசம் செய்யும் காலம் ஒரு நாழிகை முதலாகப் பத்து மாதங்கள் வரை அவ்வவ்வுயிர்வகையின் தன்மைக் கேற்பப் பல்வேறுபட்டு அமையும் இவ்வுயிர்களின் பிறப்பு முறையை அறிய வேண்டின், 'அசையாதன' எனும் தொகுதி தவிர்த்து 'அசைவன' எனும் தொகுதிக்கு உரியவைகளில் துளைபட்ட செவி அமைப்பை உடையவை முட்டைகளிலிருந்தும், தோலால் அமைந்த செவியுறுப்பை உடையவை கருப்பையிலிருந்தும் செவியே இல்லாதவை வியர்வையிலிருந்தும் தோன்றும் உயிர்வகைளாகும் என அறிவாயாக. நிவிர்த்தி முதலான கலைகளைக் கடந்து ஒளிரும் பரம்பொருளாகிய குகனைக் கருதும் உணர்வுடையோய்! சகலவர்க்கத்து உயிர்களின் மூல தேகமானது மூவகைப்படும். இதன் விவரத்தைக் கேட்க! மாயைக் குரிய காரணதேகம் ஒன்று; கவிந்து சூழும் அம்மாயையின் காரியமாக விளங்கும் பஞ்ச கஞ்சுகமாகிய தேகம் ஒன்று; மாயைக்குரிய கலையில் தோன்றும் பிரகிருதியின் அவ்வியக்த குணசரீரம் ஒன்று. – ஆக மூன்று தேகம்.

6. கூறப்பட்ட பிரகிருதியில் தோன்றிய புத்தி முதலான எட்டுக் கருவிகளால் அமைவது சூக்கும உடம்பாகும்; அந்தப் பிரகிருதியிலிருந்து தோன்றும் ஐந்து தூல பூதங்களால் அமையும் வன்மையான கருவிகளால் அமைவது தூல உடம்பாகும். முறையாக கூறப்பட்ட காரணசரீரம் முதலானசரீரங்களும் மூன்றாக அமைந்து விளங்கும் முறையில். காரணசரீரமாகிய மூல தேகமானது (மூன்று காரணசரீரங்களும்) ஆனந்த மயகோசமாகும்; வலிமைமிக்க சூக்கும உடம்பானது பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் என விளங்கும்; தோன்றிய தூலதேகமானது அன்னமய கோசமாகும். கூறப்படும் இந்தச் சகல வர்க்கத்து உயிர்களுக்கு, துலாக்கோல் போன்று இருவினை ஒப்பு வாய்க்க, அதனால் பரிபக்குவம் அடையும் போது, இறைவன் குருவாக வெளிப்பட்டு மெய்ப்பொருள் உணர்த்திக் காத்து அருளி, ஞானவிலாசம் மிகுந்துள்ள வித்தியேசுவரர் முதலான அதிகார பத முத்திச் செல்வங்களை வழங்கி, இறுதியில் பரிபூரண நிறைவாகிய முக்திப்பேற்றைக் கொடுத்தருள்வான். தெளிவுநிலை இல்லாத இந்தச் சகலர்க்கு, ஆணவம் முதலான மூன்று மலங்களோடு திரோதை, வைந்தவம் எனும் இரண்டு மலங்களையும் சேர்த்துக் கணக்கிட்டால், அன்னோர்க்கு உள்ளவை ஐந்து மலங்கள் என ஆகும்.

7. மூலமலமாகிய ஆணவமலத்துடன் கலந்து, ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் எனும் மூன்று கன்ம மலம், மற்றுமுள்ள மாயாமலம் ஆகியவற்றின் காரியப்பாடுகளை தோற்றுவித்துப் பெருக்கி, உயிரானது மோகத்தின்வயப்பட்டுக் கன்மபலனை அனுபவிக்கச் செய்து, முறைப்படியே மலபரிபாகத்தை உண்டாக்கி வைப்பது திரோதை என்பதாகும். இதனை அருட்சக்தி என்றே அறிக. நல்ல மாணவனே! சுத்தமாயையின் காரியமாகத் திகழும் சுத்தவித்தை முதலான ஐந்து தத்துவங்களும் மாயேயம் எனப்படும். மோகினி, மான், பரம் (விந்து) எனக் கூறப்படும் மூன்று காரண மாயைகளும், அவ்வப்பயனை விளைவித்துக் கூட்டும் காலதத்துவம் முதலான அனைத்தும், பல்வகைப் பொருள் மயமாகக் காரியப்படும் மாயை எனப்படும் மலம் எனவே கருதப்படும். இங்கே விரித்துக் கூறப்பட்ட திரட்சியாகிய ஐந்து மலங்களுள் திரோதை என்பது அருட்சக்தியாகிய சிவசக்தியைச் சார்ந்தது; ஏனைய நான்கனுள் மாயை, வைந்தவம் எனப்படும் இரண்டும், ஒரே இனப்பட்டு நிற்கும். எனவே, ஆய்ந்து காணுங்கால் பாசமாகிய தளைகள் ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மூன்றே என அறிக.

8. ஞான உணர்வுடை யோய்! முன்னர்க் கூறப்பட்ட பரசிவனாரின் ஐந்தொழில் முறைமை பற்றிக் கூறக்கேள். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தும் சிவனார் செய்யும் செயல்களாகும். இவற்றுள் முதற்கண் உள்ள படைப்பு என்பது ஐவகைப்பட்டு விளங்கும். இச்சை, ஞானம், கிரியை எனும் மூன்று அருட்சக்திகளில் இடமாக நின்று அன்னையாகிய மனோன்மனி ஈசுவரி என உள்ள சக்தி பேதங்களை உண்டாக்குதல் ஒன்று; அணுக்கள் எனப்படும் உயிர்களை மாயையின் உதரத்திலிருந்து நீக்கி உடலெடுக்குமாறு செய்யும் படைப்பு ஒன்று; மலமெனப் பொருந்தும் ஐவகைப் பாசங்களையும் விரிவான அளவில் பெருக்குவித்துச் செயற்படச் செய்யும் படைப்பு ஒன்று; மந்திரங்கள், பதங்கள், எழுத்துக்கள், புவனங்கள் முதலாகிய அனைத்தும் தத்தம் காரணத்திலிருந்து வெளிப்பட்டு விளங்குமாறு செய்யும் படைப்பு ஒன்று – என இவ்வாறு ஐவகைப் படைப்பு நிகழும். வேண்டுவோரின் விருப்பம் அறிந்து வேண்டியாங்கும் அருளும் கருணை இறைவன் இங்கே விளக்கிக் கூறிய படியே ஐவகைப்பட்ட சிருட்டிச் செயல்களையும் செய்தருள்வான் என அறிக.

9. நன்னெறியில் நிற்போய்! அனைத்தையும் படைக்கப்பட்ட முறையிலேயே, நிலைநிற்கும் வகையில் காத்தலாகிய திதி என்பதும் ஐவகைப்படும்; நிலைத்துநிற்குமாறு காத்தலைத் தவிர்த்து, அனைத்தையும் முறைப்படி அழித்தலாகிய சம்மாரம் என்பதும் ஐவகைப்படும்; மேற்கொண்ட செயலை நன்றாகச் செய்து களைத்தவன், ஆழ்ந்து உறங்கிக் கிடத்தல் போன்று மோகத்தால் துன்பம் மிக அனுபவித்த சிற்றறிவுடைய உயிர்கள் செயலற்று இருந்து இளைப்பாறுவதற்குரிய செயலைச் செய்வதே, முற்கூறப்பட்ட அழித்தல் என்னும் செயலாகும்; ஊக்கப்பாடுமிக்க திரோதையின் செயற்பாட்டைப் பற்றிக் கூறக் கேள். செறிந்துள்ள வினைப்பயன்களை அனுபவித்துக் கழிப்பதற்காக, ஆன்மாக்களைக் கலை முதலான தத்துவங்களோடு கூட்டிச் செயற்படுத்தலும், அவ்வாறு ஆன்மாவின் அறிவை விளக்கம் செய்த இறைவனின் அருட்சக்தி இயல்பை ஆன்மா அறியாத வண்ணம் மறைத்தலும், சடமயமான உலகத்தை ஆன்மா மெய்யெனக் கருதுமாறு செய்தலும், நிலைத்துள்ள சிவசைதன்னியத்தைப் பொய்யெனக் காட்டலும், வினைப்பயனை இன்சுவை பொருந்த ஆன்மாவுக்கு ஊட்டுதலும் ஆகிய ஐந்து தன்மைகளாகத் திரோதானமானது செயற்பட்டு நிற்கும்.

**10.** அருணகிரிப் பெருமான் வணங்கிய சிவபரம்பொருளான குகப்பெருமானுக்கு ஆட்பட்டிருப்போய்! ஒருமலத்தினராகிய விஞ்ஞானாகலர்க்கு அவர்களின் உள்ளத்தே இருந்தும், இருமலத்தினராகிய பிரளாயகலர்க்கு முக்கண் வாய்ந்த தெய்வ வடிவத்துடன் எதிரில் நின்றும், மும்மலத்தினராகிய சகலர்க்கு, அழகிய மானுட வடிவம் தாங்கி எதிரில் இருந்தும், மோகம் முதலான குற்றங்கள் நீங்கப்பெற்றுள்ள விண்ணுலகத் தேவர்கள், மண்ணுலக மாந்தர்கள் முதலாக உள்ள ஏனையோர்க்கு உரியவகையில் வெவ்வேறு வடிவம் ஏற்று எதிர் இருந்தும், மூலமந்திர ஜபம், தவம் ஆகியவை மிகுதியாகத் திகழும் நிலையில் அவ்வந் நிலைக்கு ஏற்ற வகையில் தோன்றியும் இறைவன் அருள் செய்வதான, அனுக்கிரகம் என்பதும் ஐவகைப்பட்டு நிகழ்வதாகும். கூறப்பட்ட தொழில்கள் அனைத்தையும் பிரம்மன் முதலான ஐவராகவும், ஐந்து எழுத்தாகவும் விளங்கிச் செய்தல் தன்மை நிலையாம்; அவன், அவள், அது எனும் முக்கூறுபட்டதாகக் கூறப்படும் பிரபஞ்சகாரியம் முன்னிலை நிலையாம்; அங்கம் (உறுப்பு) என்பது இல்லாதவனாகவும், ஒளிபொருந்திய திருமேனியால் எங்கும் வியாபித்து நிறைந்தும் அனைத்தையும் இயக்கி நிற்றல் படர்க்கை நிலையாகும்.

# 96. ஓங்காரம்

உட்கருவி விளக்கம்.

*சுத்தமாயையின் சிறப்பும், அதன் தத்துவமைந்தும்*
*வெண்டளையான்வந்த இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.*

**ஓ**ங்கார மாதிமுப்பத் தொன்றாகி நித்தியமாய்த்
தீங்காரா வீசனுக்குச் செல்வமதி காரலயம்
ஓங்கிடனா யொன்றென்னும் பாசத்தார்க் கொள்ளுடம்பாய்
நீங்கா திரண்டனையு நிற்குமுதன் மாயையுடைப்
பாங்கான தோற்றம் பகரக்கேண் மேன்பரையால்
ஊங்குநா தம்பிந்து நோக்குயர்சா தாக்கியந்
தூங்காத வீச்சுவரஞ் சுத்தவித்தை யைந்துங்கோள்
வாங்கா ததிற்றோன்று மன்னியொன்றி லொன்றாயே. (1)

*1. ஓங்காரமாதி முப்பத்தொன்று :– பிரணவம், குடிலை, குண்டலி, பேரொளி, பிரமம், பரம், சிவம், மாமாயை, மாயை, மாயேயம், நாதம், விந்து, வைந்தவமென்னும் **13**–ம், சுத்தவித்தை முதலிய தத்துவம் **5**–ம், சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென்னும் வாக்கு **4**–ம், நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை யென்னுங் கலை **5**–ம், விஞ்ஞானாகலருடைய தனு, கரணம், புவனம், போகமென்னு **4**–ம் ஆக **31.** பிரணவம் முதலிய **13**–ம் பரியாய நாமங்களேயாம்.*

*போகமே ''செல்வம்'' எனப்பட்டது; வாழ்வாயிருத்தலின்.*

*'இரண்டனையு நீங்காது நிற்கும்' எனவியையும்.*

*விந்துவில் நாதந் தோன்றுமெனவுஞ் சின்னூல்கள் கூறும், அப்படிக் கூறலுஞ் சுத்தமாயைக்கே விந்து வெனும் பெயரிருத்தலிற் பொருந்தும்.*

**தோ**ன்றொழுங்கிற் றூயசிவஞ் சத்தி சதாசிவனார்
ஆன்ற மகேச்சுவர ரங்கிருத்ர ருந்தோன்றி
மான்ற லிலாவவற்றின் பால்வதிவார் மாமாயை
ஈன்றவிந்து தன்னிலைம்பத் தோரெழுத்து மெண்பத்தொன்
றூன்றுபத மேழ்கோடி யோங்குமனு மாமறையும்
மேன்றொனியா யேயுதிக்கு மேனுவன்ற மாமாயை
ஆன்றோராற் காணருவா யாறொடுபத் தாமொளிகள்
சான்ற கலைகளுமாத் தானிருக்கு நல்லோயே. (2)

*அசுத்தமாயையின் சிறப்பும், அதன்றத்துவமேழும்,*
*மூலப்பிரகிருதியின் றோற்றமும்.*

**நி**த்தியமா யம்பரனார் ஏேயப் பரிக்கிரக
சத்தியாய்ப் பேழ்ச்சகத்தின் காரணமாச் சாற்றவுள்ள
சுத்தமிலா மாயையுடைத் தோற்றங்கேள் வித்தேசர்
அத்தனா ராற்கால மார்நியதி வாட்கலையும்
ஒத்துதிக்கு மக்கலையி லோங்குவித்தை ராகமெனுந்
தத்துவங்க டாமுதிக்குஞ் சாற்றியவிவ் வைந்தினின்றும்
மெத்தெனவுண் டாம்புருடன் மேற்கலையி லங்கிருத்ரர்
சத்தியா லோர்பகுதி தானுதிக்கு நல்லோயே. (3)

---

**2.** *திரிமூர்த்திகளுளொருவராய உருத்திரர் காலாக்கினிருத்திரனெப்படுவர், அவரே இங்ஙனம் "அங்கிருத்ரர்" எனப்பட்டனர்;* ***அங்கி*** *= அக்கினி. பிரமாணம் – "மாபலமுடைய உருத்திரனென்னும் பெயரிய பகவானாகிய காலாக்கினிருத்திரர் சம்புவினதாணையினாற் சருவ பிரபஞ்சத்தையுஞ் சங்கரிக்கின்றனர்; இஃது அவாந்தரசங்காரம்." என்று* ***தக்ஷகாண்டங்*** *கூறுதலாம். இதன் வடமொழியும், வேறுபல பிரமாணங்களும் இந்நூற் கடவுள் வணக்கத்து 3–ன் உரையுழைக் காண்க. இவ்வுருத்திரர் சுத்தவித்தையில் வதிவாரென்றிங்ஙன முரைக்குமாற்றிற் கியையச் சிவப்பிரகாசத்தின் 2–ஆஞ் சூத்திரத்து 3–ற் "குடிலைதனின் மன்னுவரிவ்வகை ஐவர்" என்பதுங் கூறப்பட்டுளது.* ***ஞானப்பிரகாசர்,*** *சிவஞான சித்தியாரின் 1–ஆஞ் சூத்திரத்து 34–ன் உரையில், குணமத்தியத்திலும் பிரகிருதியக் கிரத்திலும் அராகாந்தத்திலு மிருக்கத்தக்க ஸ்ரீ கண்டருத்திரர் ஈசுரதத்துவத்திலு மிருப்பரென்று வரைந்தார். உருத்திர மூர்த்தி ஈசுர தத்துவத்தி லிருத்தல், மாப்பிரளய காலத்திலென்று சிலரெண்ணுகின்றனர். அந்தப் பிரளய காலத்திற் பிரமாவும் விட்டுணு முதலானவர்களும் விஞ்ஞானாகலத்தன்மை யடைவரென்று* ***சித்தாந்த சாராவளி*** *ஞானபாதம் 26–ல் உரைத்தமையும் இதனை யாதரிக்கின்றது.*

***மான்றல்*** *= மயக்கம்.*

*ஐம்பத்தோரெழுத்தும், எண்பத்தொரு பதமுஞ்* ***சதானந்தசாகரத்*** *தறியற்பாலன.*

*ஏழ்கோடி – ஏழு என்னுமெண்ணின் ஈற்றுயிர் கெட்டுப் புணர்ந்த சொல்; 'ஏழ்கடல்' என் புழிப்போல. ஏழ்கோடி மனு = நம: முதலியன; 94–ஆம் பத்தின் குறைந்த மலபக்குவத்தார் என்றற் றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரை காண்க.*

*ஆறொடு பத்தா மொளிகள்சான்ற கலைகள் = ஒளிகள் பெருகியுள்ள 16–கலைகள், அவையாவன:– மேதை, க்ஷமாக்யம், விஷம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதை, நாதாந்தை, சத்தி, வியாபினி, சமனை, உன்மனை, வியோமரூபை, அனந்தை, அனாதை, அனாசிரிதை யென்பன. இவற்றைப் பிராசாத கலைகளென்றுங் கூறுப.*

**3.** ***வித்தேசரத்தனார் =*** *அஷ்டவித்யேசுரருட் சிரேஷ்டரான அனந்தர். இத்திருப்பாட்டின்கணியம்பப்பட்ட காலம் முதலியவைந்தினின்றும் புருட தத்துவந் தோன்றுமென்பது,* ***பௌஷ்கராகமத்தும்*** *பெறப்படும்.*

*மூலப்பிரகிருதியின்றன்மையும், அதன்றத்துவம்*
*(சித்தம்முதலிய) இருபத்துநான்கும்.*

**அ**ப்பகுதி தானரும்பு நாற்ற மடக்கியதொத்
தொப்பியல்பு காட்டா தொடுக்கியகா லவ்வியத்தச்
செப்பணவுங் காட்டிடுகால் செய்யகுண தத்துவமாம்
முப்பரிசா மஃதின் முளைத்தன் மகத்தெனவாம்
இப்பரிசா யுள்ளவதி லேமூன்று மொத்தநிலை
துப்புடைய சித்தமதாந் தூச்சாத் துவிகமஙன்
உப்பிலது புத்தியதா மோங்கந்தப் புத்தியின்முக்
கப்புடைய வாங்காரந் தோன்றுமெனக் காணல்லோய். (4)

**ஆ**சற்ற தைசசமா மாங்காரத் தேயுணர்வாப்
பேசுசுத்த சாத்துவிகங் கூடிற் பெருமனமும்
மூசுற்ற சோத்தாதி யாமைந்து முன்றோன்றும்
ஏசற்ற ஞானசத்திக் கிவ்வைந்தும் பாத்தியமாங்
காசுற்ற புன்றொழில்வை காரியொடி ராசசந்தான்
நேசிக்கில் வாக்காதி யாமைந்து நீண்டுதிக்கும்
பாசத்தா லேகிரியைக் கிவ்வைந்தும் பாத்தியமாந்
தேசுக் குகபெருமான் செம்மாப்பிற் சேர்நல்லோய். (5)

**க**ள்ள வுருவுடைப்பூ தாதியகங் காரத்தே
உள்ளந் தனைமயக்குந் தாமசந்தா னுற்றிடுமேல்
விள்ளுஞ்சத் தாதியைந்து மேலவற்றிற் றாழிமண்போல்
தெள்ளிய காயங்கா றேயுவப்பு மண்ணைந்தும்
உள்ளபடி தோன்றிடுமுன் னோதியநா தந்தொடங்கி
மள்ளன்மா மண்வரைமுப் பத்தாறு மாணுடைமை
கொள்ளுட் கருவியெனக் கூறுமுன்னூன் மற்றுமுள்ள
தள்ளைப் புறக்கருவி யாறுபத்துஞ் சாற்றுதுங்கேள். (6)

---

*5. சோத்தாதி = சுரோத்திராதி என்பதன் விகாரம்; 'இந்தியம்' என்புழிப்போல.*
*இவ்வைந்து :– சுரோத்திரம், துவக்கு, சக்கு, சிகுவை, ஆக்கிராணமென்பன; இவை, ஞானேந்திரிய மெனப்படும்.*
*வைகாரி = வைகாரிகமென்னும் அகங்காரம்.*
*வாக்காதியாமைந்து :– வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமென்பன; இவை, கன்மேந்திரிய மெனப்படும்.*

*6. கள்ளம் = களங்கம்.*

*சத்தாதியைந்து :– சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்பன; இவை, பூதகாரண தன்மாத்திரை யெனப்படும்.*

*குடம்போலத் தன்மாத்திரைகளும், குடத்திற்பூசு மண்போல ஆகாசாதி பூதங்களுங் கொளக்கிடத்தலின் "தாழிமண்போல்" என்பது கூறப்பட்டது. இஃது அங்கியங்கபாவ மெனப்படு மென்ப.*

*தளை யெனற்பாலது "தள்ளை" என விரிக்கும் வழி விரிக்கப்பட்டது. தளை = தொடர்பு, பந்தம்.*

## புறக்கருவி விளக்கம்.

*சமானாதி வாயு 10-ம், குரோத முதலிய 5-ம், ஓடன் முதலிய 5-ம்*

**சூ**க்குமவவ் வாயுவினிற் றோன்றுஞ் சமானாதி
காக்கும் பிராணனீ றாயைந்துங் காக்குயிரே
ஆக்கைத் தனஞ்சயனீ றாயைந்தாய் மல்கிநிற்குஞ்
சூக்குமபூ தங்களைந்துந் தூலித்த பின்விண்கண்
மூர்க்கமத மாற்சரிய மோகமுலோ பந்தோன்றும்
ஊக்கமுறு வாயுவினா லோட னடைநிற்றல்
போக்கின் றிருத்தல் கிடத்தலுமே பூக்குமரோ
தீக்குள்ள கூற்றினையுஞ் செப்புதுங்கேள் சீருடையாய். (7)

*உண்டிமுதலிய 5-ம், தீர்த்தமுதலிய 5-ம்,*
*தோன்முதலிய 5-ம், நாடி 10-ம், ஏடணை 3-ம், வசனாதி 5-ம்*

**உ**ண்டியுறக் கம்பீதி யொண்டொடியார் சேர்க்கைமிடி
மண்டியசோம் பைந்தெனவம் மாத்தீக்கா மப்புவிற்குத்
தண்டீர்த்தஞ் சோரிமச்சை சத்தாகு மூளைவிந்தாம்
மண்டனக்குத் தோலெலும்பு வார்நரம்பூன் கேசமைந்தாம்
விண்டமண் ணிற்றானே மேனாடி யோர்பத்தும்
உண்டாமுன் சொற்றவிண்க ணோங்கிடுமூ வேடணைமுற்
கண்டகரு மேந்திரியங் கன்மவச னாதியைந்துங்
கொண்டுவரு மென்றுனது கூர்த்தபுத்தி யாலறியே. (8)

---

*7. சமானாதிபிராணனீறாயைந்து :– சமானன், வியானன், உதானன், அபானன், பிராண னென்பன.*

*காக்குயிரே = பிராணனே. தனஞ்சயனீ றாயைந்து :– நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயனென்பன;*

*இவை, பிராணவாயுவின் றோற்றமேயாகலின் உபப்பிராண னெனப்படும்.*

*மூர்க்கம் – குரோத மெனப்படும்.*

*8. நாடி யோர்பத்து :– சுழுமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புசை, பூடை, குகு, சங்கினியென்பன. நாடி = நரம்பு. 'விண்கண் மூவேடணை ஓங்கிடும்' எனக் கூட்டுக. மூவேடணை :– புத்திரன், அருத்தம், உலகமென்பன. ஏடணை = ஆசை. வசனாதியைந்து :– வசனம், கமனம், தானம், மலவிசர்க்கம், ஆனந்தமென்பன; இவை, கன்மேந்திரிய விடயங்களாகலின்,*

*"முற்கண்ட கருமேந்திரியம் கன்மவசனாதியைந்துங் கொண்டுவரும்" என்றாரென்க. 7,8–ஆந் திருப்பாட்டுக்களிற் போந்த குரோத முதலிய 5–ம், ஓடல் முதலிய 5–ம், உண்டி முதலிய 5–ம், தீர்த்தமுதலிய 5–ம், தோல் முதலிய 5–மாகிய இவ்விருபத்தைந்தும் பூதகாரிய மெனப்படும்.*

குணம், 3-ம், வாக்கு 4-ம், தத்துவ மென்னுஞ் சொற்பொருளும்

**மூ**லப் பகுதியுழை முக்குணமு முண்டாகும்
ஓலவாக் கோர்நான்கு மொள்விந்து விற்றோன்றுங்
கோலமுட னாறுபத்துங் கூறினாங் கூறியவை
ஆலவித்தி லால்கிளைத்தாற் போலா மவைகளுக்குத்
தாலமிசை நித்தமெனுந் தத்துவப்பேர் சார்ந்தவுண்மை
மேலறைந்த பூதலயத் தோடுசாம் விண்ணவர்க்கு
மாலழிவி லாவமர ரென்னுஞ்சொல் வாய்த்ததொக்குஞ்
சீலமுளோ யெல்லாஞ் செனித்தவழி யேயொடுங்கும். (9)

*தத்துவநேதி நிரல்*

**மு**ன்னுரைத்த வுட்கருவி முப்பத்தா றுட்சிலவுட்
பின்னுரைத்த வாறுபத்தும் பேசா தடங்குதலால்
துன்னுமுப்பத் தாறுமே சோதிக்கத் தக்கனவாந்
தன்னறிவா லிந்தியத்தைத் தானோக்கிற் பூதமுமுள்
உன்னுகர ணங்காணி னோங்கந்த விந்தியமும்
பின்னியவே ழுங்காணிற் பேய்க்கரண மோர்நான்கும்
மின்னுமைந்து நோக்கிடினவ் வீணேழு மெய்பார்க்கிற்
சொன்னவைந்து மில்லருணைப் பேரனன்பிற் றோய்பவனே. (10)

---

*9. முக்குணம் :– சாத்துவிகம், இராசசம், தாமச மென்பன.*

*‘வாக்கு நான்கும்’ இப்பத்தின் முதற்றிருப்பாட்டுக் குறிப்புரையிலேயே வந்துள. தாலம் = பூமி.*

*10. முன்னுரைத்த உட்கருவிமுப்பத்தாறு :– சுத்தமாயாதத்துவம் – 5, அசுத்த மாயா தத்துவம்–7, பிரகிருதி மாயாதத்துவம் – 24 என்பன. இவை, முறையே சிவதத்துவம், வித்தியாதத்துவம், ஆன்மதத்துவமென்றுஞ் சொல்லப் படும், பின்னுரைத்த ஆறு பத்து = புறக்கருவி – 90; அவை: வாயு – 10, பூதகாரியம் – 25, நாடி – 10, ஏடணை – 3, வசனாதி – 5, குணம் – 3, வாக்கு – 4 என்பன. இவ்விதமாகக் கருவி – 96 என்றல், தமிழ்மறைக்கு முடம்பாடேயாம். என்னை ?*

*“எண்பதும் பத்து மாறு மென்னுளே யிருந்து மன்னிக்*
*கண்பழக் கொன்று மின்றிக் கலக்கநா னலக்க ழிந்தேன்”*

*என்னுந் திருநாவுக்கரையர் திருவாக்கு, திருநனிபள்ளித் திருப்பதிகத்தே காணப்படுதலின்.*

*ஏழு = வித்தியாதத்துவமேழு. ஐந்து = சிவதத்துவமைந்து.*

*“பேய்” “வீண்” என்னுஞ் சொற்கள் இழித்துரைத்தற்கண் வந்தன; என்னை ? சிவயோக ஞானிகள், அக்கருவிகளும் அவலமெனக் கடந்து மீச்சென்று நிற்போ ராகலின், பேய் = நிலையலின்றி உழிதரு மாலைத்து.*

*மெய்பார்க்கின் = சிவசமவாயத் திருவருட் சத்தியைத் தரிசித்தால்.*

*ஐந்தும்இல் = ஐந்துமில்லை.*

# 96. ஓங்காரம்

## உட்கருவி விளக்கம்

**1. சுத்தமாயையின் சிறப்பும் அதன் தத்துவம் ஐந்தும்** பிரணவம் முதலாக போகம் ஈறாக உள்ள முப்பத்தொன்று தோற்றநிலைகளாகவும், நித்தியமாகவும், தீங்கு அணுகாத பரசிவத்துக்குரிய போகம், அதிகாரம், லயம் என்னும் தானங்களாகவும், ஒரு மலத்தினராகிய விஞ்ஞானாகலர்க்குப் பொருந்தும் ஒள்ளிய தேகமாகவும், கீழ் உள்ள மிசிரமாயை, அசுத்தமாயை என்னும் இரண்டையும் நீங்காததாகவும் நிலைத்துநிற்கும் முதன்மாயையாகிய சுத்தமாயையின் ஒழுங்கான தோற்ற முறையைக் கூறக் கேட்பாயாக. மேன்மைமிக்க பராசக்தியின் செயற்பாட்டால் நாதம், பிந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை எனப்படும் ஐந்துதத்துவங்களும் முறையே ஒன்றிலிருந்து மற்றொன்றாக எவ்விதக் குற்றமும் பொருந்தப் பெறாமல் தோன்றிநிற்கும்.

2. **நன்மைக்கு உரியோய்!** மேற்கூறப்பட்ட தத்துவங்கள் தோன்றும் முறைப்படியே சிவம் சக்தி, சதாசிவனார், மகேசுவரர், காலாக்னி ருத்திரர் எனும் ஐவரும் வெளிப்பட்டு, மயக்க நிலைக்கு இடம் கொடுக்காத அவ்வத் தத்துவங்களின் சார்பில் வசித்திருப்பர். சுத்தமாயை தோற்றுவித்த விந்து தத்துவத்திலிருந்து ஐம்பத்தோர் எழுத்துக்களும், எண்பத்தொன்று பதங்களும் ஏழு ஈற்றுமுடிபுகளை உடையனவாய் ஓங்கும் மகா மந்திரங்களும், உயர்வான தொனிமாத்திரையாக உதிக்கும். மேற்கூறப்பட்ட மகாமாயையாகிய சுத்த மாயை பரிபாகத் தகுதி நிறைந்தோரால் மட்டுமே உணர்தற்குரிய அருவாகவும், பதினாறு என்னும் எண்ணிக்கையில் அமைந்துள்ள ஒளிக்கூறுகள் நிறைந்த பிராசாத கலைகளாகவும் வெளிப்பட்டு நிற்கும்.

3. **அசுத்தமாயையின் சிறப்பும், அதன் தத்துவம் ஏழும் மூலப்பிரகிருதியின் தோற்றமும்:** நித்தியமாகவும், சிவபரம் பொருளின் நேயம்மிக்க பரிக்கிரக சக்தியாகவும், பெரிதுபட்டுள்ள புவனங்களின் தோற்றத்துக்குக் காரணமாகவும் கூறப்பட உள்ள அசுத்தமாயையின் தோற்ற முறையை, நன்மை நிலைக்கு உரியோய்! கேட்பாயாக! வித்யேசுவரர் எண்மருள் சிறப்புற்றுள்ளவரான அனந்தேசுவரர் என்பவரால் செயற்பாட்டுக்கு ஆளாகிய அசுத்த மாயையிலிருந்து காலம், நியதி, ஒளிமிக்க கலை என்னும் மூன்றும் முறையே தோன்றும். கலை எனும் தத்துவத்திலிருந்து வித்தை, அராகம் எனும் தத்துவங்கள் தோன்றும். கூறப்பட்ட காலம் முதலாகிய ஐந்தினின்றும் புருடதத்துவம் மெல்ல உருக்கொள்ளும். மேற்கூறப்பட்ட கலை என்னும் தத்துவத்திலிருந்து காலாக்னிருத்திரரின் சக்தியால் மூலப்பிரகிருதி என்பது தோன்றும்.

4. **மூலப்பிரகிருதியின் தன்மையும் அதன் தத்துவம் (சித்தம் முதலிய) இருபத்து நான்கும் :** கூறப்பட்ட அந்தப் பிரகிருதி தத்துவம் என்பது, அரும்பானது வாசனையைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதை ஒத்து, தனது நேரிய இயல்பை வெளிப்படக் காட்டாமல்

ஒடுக்கிக் கொண்டிருக்கும்போது அவ்வியக்தம் என்னும் பெயரைப் பெற்று நிற்கும். தனது நேர்பட உள்ள இயல்பை வெளிப்படத் தோற்றுவித்து நிற்கும் பொழுது குணதத்துவம் என்பதாக விளங்கும். நல்ல மாணவக! மூன்று தன்மைப்பட நிகழும் அந்தக் குணதத்துவத்தின் தோற்றநிலையே மகத் தத்துவம் என்பதாகும். இத்தகைய இயல்புடைய அக் குணதத்துவத்தில் சத்துவம், ராஜசம், தாமசம் எனும் மூன்றும் ஒன்றுக்கொன்று மிகாமல் ஒத்துள்ள நிலையே தூய்மையதான சித்தம் எனும் தத்துவமாகும். தூய சாத்துவிகம் என்பது மிகாமல் ஏனைய இரண்டும் மிகுதிப்பட்டு விளங்குவது புத்தி எனும் தத்துவமாகும். புத்தி தத்துவத்திலிருந்து மூன்று கூறுகளை உடைய ஆங்கார தத்துவம் தோன்றும் என அறிக. (மூன்று கூறுகள் தைசசம், வைகாரிகம், பூதாதி)

5. ஒளிவளம் பொருந்திய குகப்பெருமானின் கம்பீரமயமான திருவருட்பொலிவில் சேர்ந்திருக்கும் நல்லோய்! குற்றமற்ற தைசச ஆங்காரத்தோடு நல் உணர்வு மயமாக உள்ளதெனக் கூறப்படும் சாத்துவிகம் கூடிநிற்கும் பொழுது மனம் எனும் உட்கரணமும், மொய்த்துப் பொருந்தும் செவி, தோல், கண், நாக்கு, மூக்கு எனும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் முற்படத் தோன்றும். ஞானேந்திரியங்கள் ஐந்தும் இகழ்ச்சியற்ற ஞானசக்திக்கு உரிமைப்பட்டிருப்பவை ஆகும். குற்றம் பொருந்தும் அற்பத் தொழிலைத் தூண்டும் வைகாரிக ஆங்காரத்தோடு ராசச குணம் சேரும் பொழுது வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் எனப்படும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். பிணிப்புத் தன்மையால் இவ்வைந்து கன்மேந்திரியங்களும் கிரியாசக்திக்கு உரிமைப் பட்டிருப்பவை ஆகும்.

6. களங்கமுற்ற வடிவுடையதாகக் கருதப்படும் பூதாதி அகங்காரத்தோடு உள்ளத்தை மயக்கும் இயல்புடைய தாமச குணம் சேர்ந்து நிற்கும் பொழுது, கூறப்படும் சத்தம் முதலான ஐந்து தன்மாத்திரைகளும் குடம் போலவும், தெளிவான ஆகாயம், காற்று, தீ, நீர், மண் எனும் ஐம்பெரும் பூதங்களும் அக்குடத்திற் பூசப்படும் மண்போலவும் இயல்பாக உள்ள முறைமைப்படியே தோன்றும். முற்கூறப்பட்ட நாத தத்துவம் தொடங்கி, வளப்பமும் பெருமையும் வாய்ந்த மண் தத்துவம் வரை உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் மாட்சிமை கொண்டுள்ள உட்கருவிகளாகும் என முதல் நூலாகிய ஆகமம் கூறும். பந்தப்படுத்துவனவாக மற்றும் உள்ள புறக்கருவிகள் அறுபதையும் இப்பொழுது கூறுவோம். கேட்பாயாக.

7. **புறக் கருவி விளக்கம்: (சமானன் முதலாகிய வாயு 10; குரோதம் முதலிய 5; ஓடுதல் முதலிய 5.)** சூக்குமமான அந்த வாயு தத்துவத்திலிருந்து சமானன், வியானன், உதானன், அபானன், பிராணன் எனப்படும் ஐந்தும் தோன்றும். பிராணனே ஆக்கையைவிட்டு நீங்குதற்கரிய தனஞ்சயன் ஈறாக உள்ள ஐந்து உபப்பிராணன்களாகப் பெருகி விளங்கும். சூக்குமமாக விளங்கும் பூதங்கள் தூல நிலையை அடைந்த பிறகு, ஆகாயம் எனும் தத்துவத்திலிருந்து குரோதம், மதம், மாற்சரியம், மோகம், உலோபம் எனப்படும் ஐந்தும் தோன்றும்; எழுச்சியுடன் இயங்கும் வாயு தத்துவத்திலிருந்து ஓடுதல், நடத்தல், நிற்றல்,

இருத்தல், கிடத்தல் எனும் ஐந்தும் தோன்றும்; குகனின் அருட் செல்வம் உடையோய்! தீ எனும் தத்துவத்துக்குரிய கூறுகளையும் கூறுவோம். கேட்க.

8. **(உண்டி முதலிய 5; தீர்த்தம் முதலிய 5; தோல் முதலிய 5; நாடி 10; ஏடணை 3; வசனம் முதலாயின 5)** உணவு, உறக்கம், பீதி, பெண் சேர்க்கை; வறுமை மிக்குப் பொருந்தும் சோம்பல் – எனப்படும் ஐந்தும் தீ என்னும் தத்துவத்துக்குரிய கூறுகளாகும். நீர் என்னும் தத்துவத்துக்கு உரியனவாக நீர், இரத்தம், மச்சை, சத்தாக உள்ள மூளை, சுக்கிலம் எனப்படும் ஐந்தும் தோன்றும்; மண் என்னும் தத்துவத்துக்கு உரியனவாகத் தோல், எலும்பு, நரம்பு, மாமிசம், ரோமம் எனப்படும் ஐந்தும் தோன்றும். கூறப்பட்ட மண் தத்துவத்திலிருந்தே நாடிகள் பத்தும் தோன்றும். புத்திரன், பொருள், உலகம் எனும் மூன்று ஏடணைகளும் ஆகாய தத்துவத்தினின்று தோன்றி ஓங்கும். முற்காணப்பட்ட கன்மேந்திரிய விடயங்களாக வசனம், கமனம், தானம், மலவிசர்க்கம், ஆனந்தம் எனும் ஐந்தும் வெளிப்படும். இவற்றை உனது கூர்த்த அறிவுத்திறத்தால் அறிவாய்.

9. **(குணம் 3; வாக்கு 4; தத்துவம் என்பதன் பொருள்)** மூலப்பிரகிருதியிலிருந்து மூன்று குணங்களும் தோன்றும். ஓசை பொருந்தும் நான்கு வாக்குகளும் ஒளிமயமான சுத்தமாயையின் விந்துவிலிருந்து தோன்றும். இவ்வாறு உள்ள அறுபது புறக்கருவிகளையும் நிரல்படக் கூறினோம். கூறப்பட்ட அவை ஆலம்விதையிலிருந்து ஆலமரம் கிளைத்து வளர்ந்திருத்தல் போலாகும். அவைகளுக்கு, இந்நிலவுலகில் தத்துவம் எனும் பெயர் பொருந்தியுள்ளதன் உண்மைப்பொருள் யாதெனில், முன்னர்க் கூறப்பட்ட பூதங்களின் ஒடுக்க காலத்தில் இறந்து போகும் தேவர்களுக்கு "அழியாதவர்" என்னும் பொருளைக் கொண்டிருக்கும் அமரர் என்னும் பெயர் வாய்த்துள்ளது போலாகும். நன்னெறியொழுக்கம் உடையோய்! அனைத்தும் அவையவை தோன்றிய முறைப்படியே ஒடுங்கி நிற்கும்.

10. **(தத்துவங்களைக் கழித்தும் கடந்தும் நிற்கும் முறைமை)** அருணகிரிப் பெருமானின் பேரன்புத் திறத்தில் ஆழ்ந்து தோய்ந்து நிற்கும் அன்பனே! முற்கூறப்பட்ட உட்கருவிகள் முப்பத்தாறனுள் சிலவற்றில் பிற்கூறப்பட்ட அறுபது புறக்கருவிகளும் முழுவதுமாக எஞ்சுதலின்றி அடங்கி விளங்குவதால் குருவினிடம் சிவதீக்கை பெறுவோனுக்கு இவ்வாறு நெருங்கிப் பொருந்தியுள்ள முப்பத்தாறு உட்கருவிகளாகிய தத்துவங்களே தூய்மைப்படுத்தத் தக்கவையாகும். சீடன் தனது அறிவுத் திறத்தால் இந்திரியங்களின் தன்மையை ஆய்ந்து காணும் போது ஐம்பூதங்கள் இல்லை என ஆகும்; அந்தக்கரணமாகிய உட்கருவியைக் காணும்போது இந்திரியங்கள் இல்லை என ஆகும்; பின்னிப் பொருந்தும் வித்யா தத்துவங்கள் ஏழனையும் காணும் போது, அலைபாயும் அந்தக்கரணங்கள் நான்கும் இல்லை என ஆகும்; ஒளிவீசித் திகழும் சிவதத்துவங்கள் ஐந்தையும் காணும் போது, பயனற்றுள்ள வித்தியா தத்துவங்கள் ஏழும் இல்லை என ஆகும்; சிவசமவாயத் திருவருட் சக்தியைத் தரிசனம் செய்யும் போது. முற்கூறப்பட்ட சிவதத்துவம் ஐந்தும் இல்லை என ஆகும். (தத்துவங்களைக் கழித்தும் கடந்தும் நிற்கும் முறைமை இதுவே).

# 97. இரணியகருப்பன்

## பிரமாதி பஞ்சகருத்தாக்கள் வியாத்தி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**இ**ரணிய கருப்ப னென்பாற் கிருநில முதலாய் மூலம்
வரையிலும் வியாத்தி யாகு மாலுருத் திரன்ம கேசன்
பரசதா சிவனென் பார்க்கு முறைமையே பயிர்ப்பு மாயை
விரிவித்தை மகேசஞ் சாதாக் கியம்வரை வியாத்தி யாகும். (1)

## சுத்ததத்துவமைந்தின் றொழில்.

**நா**தம தறிவாய் நிற்கு நலவிந்து தொழிலாய் நிற்கும்
ஏதமி லாத சாதாக் கியமவை சமமாய் நிற்குங்
கோதிலீ சுவர ஞானங் குன்றியொன் றுயர நிற்குஞ்
சூதகா் மேவா வித்தை தொழில்குறைந் தறிவாய் நிற்கும். (2)

## வித்தியாதத்துவமேழின் றொழில்.

**கா**லமென் பதுதான் சென்ற காலவெல் லையுமாய் நாப்பட்
காலமாம் பலனு மாய்மற் றெய்துவ தாயுங் காட்டிஞ்
ஞாலநா னெனவே நிற்கு ஞாட்புடை நியதி தானும்
பாலமாள் வான்போற் கன்ம பலத்தையுள் ளளவு நாட்டும். (3)

**க**லைமலஞ் சிறிது நீக்கிக் காரிய மதனைத் தூண்டும்
மலைவிலா தோங்கு வித்தை மதிப்பொறி யறிவைத் தூண்டும்
அலைவுடை யராகங் கன்ம மருத்துமிச் சையினைத் தூண்டுஞ்
சொலுமிஙன் புருட னுண்ணுஞ் சூழிடை மாயை யாழ்த்தும். (4)

---

*1. பயிர்ப்புமாயை = அசுத்தமாயை. விரிவித்தை = சுத்தவித்தை. "முறைமையே" என்றதனால், மாலுக்கு அசுத்தமாயை வரையிலும், உருத்திரனுக்குச் சுத்தவித்தை வரையிலும், மகேசனுக்கு ஈசுரம்வரையிலும், சதாசிவனுக்குச் சாதாக்கியம் வரையிலும் வியாத்தியெனவறிக. இப்படியே, சித்தாந்தசாராவளியின் சரியாபாதத்து 39, 40–ஆஞ் சுலோகங்களிலும் வருதல் கண்ணுறலாம்.*

*2. அறிவு = ஞானசத்தி. தொழில் = கிரியாசத்தி. 3. பாலம் = பூமி.*

*4. "காரியம்" "அறிவு" "இச்சை" என்பன – சீவான்மாவின் கிரியாசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி. இவற்றுட்கிரியை அறிஞரைத் தொழுவதாகவும், ஞானம் பேரறிவாகவும், இச்சை அறிஞரோடு மருவுவதாகவுஞ் சீவன்முத்தி தசையிற் பிறங்கும்.*

*புருடன் = புருடதத்துவம்; இஃது உள்ளந்தக்கரணம்; தற்போதம், சிதசித்தான ஆன்மா வென்றுஞ் சொல்லப்படு மென்ப.*

## ஆன்மதத்துவம் 24-ல்
## அந்தக்கரண நான்கின் றொழில்.

**உ**ச்சித மாய சித்த மொன்றனை நினைக்கும் புத்தி
நிச்சயஞ் செயுமாங் கார நினைத்தது பிடித்தெ ழும்புங்
கிச்சென மனது பற்றுங் கிளக்கிய வாங்கா ரந்தான்
அச்சமி லாது மோக்க மளவுங்கால் பெருக்கி நிற்கும். (5)

**ப**லமனம் விகற்ப சங்கற் பங்களை யாற்றும் போழ்து
சலமென வாகும் பின்னே சார்ந்தவிந் தியவா யிற்கண்
உலவைபோ னுழைந்தப் பாங்க ருற்றபோழ் தசல மென்றாம்
அலையிது பிடித்த தைத்தா னகம்புத்தி வாங்கி யாயும். (6)

**கா**ண்டிறக் கரண நான்குங் கண்களைப் போன்றா விக்குப்
பூண்டவுட் கருவி யல்லாற் போதமே யல்ல வோரார்
சேண்டரு மறிவே யென்பார் தீழ்ப்பது வெனவோர்ந் தெங்கள்
ஆண்டவ னறிவான் மின்னு மறிவுவே றெனக்காண் மைந்தா. (7)

## ஞானேந்திரியமைந்தின் றொழில்.

**தி**னமுமே சோத்த மூர்த்தஞ் சிகுவைகண் ணாக்கி ராணம்
எனுமதி கருவி யைந்து மேதமில் வான மாதி
நினதவைம் பூதச் சார்பாய் நின்றுசேர் கருவி யுற்றுக்
கனையொலி பரிசங் காட்சி யறுசுவை வாசங் காணும். (8)

**ஞா**னவிந் திரிய மைந்து ணயனமொன் றேதா மத்தால்
ஈனமில் லாது வியாபித் தியாதொன்று கிரகித் தேகும்
ஏனைய நான்குந் தம்பா லெய்துறு பொருள்க ளைத்தாம்
ஊனமில் லாது வாங்கி யொடுங்குமென் றுணர்தி மன்னோ. (9)

## கன்மேந்திரியமைந்தின் றொழில்.

**ப**ந்தியாய் வாக்குப் பாதம் பாணியே பாயூ பத்தம்
ஐந்துமா காய மாதி யைந்திடை யிருந்து பேசும்
இந்தமண் ணடக்கு மேற்கு மிடுமலங் கழிக்கு மாட்டில்
விந்துவை விடுமென் றெண்ணாய் வியன்புகழ்க் கவித்தே வாளே. (10)

---

*6. மனத்தின் றொழில்பலவும், 2, 7–ஆம் பத்துக்களின் 7–ஆந் திருப்பாட்டுக்களி னினி துணரக் கிடக்கின்றன. தகராலயரகசியத்து "மனமே சனனமும்" என்றற்றொடக்கத்துத் திருவிருத்தமும், அதனுரையுஞ் சிந்திக்கற்பாலன.*

*8. சோத்தம் = செவி. மூர்த்தம் = உடம்பு. நினதவைம்பூதம் = ஒலியினை முதலாகவுடைய ஆகாசாதி ஐம்பூதம்; நினதம் = ஒலி; வடசொல்.*

*9. தாமம் = ஒளி; மகரவெதுகை.*

*10. பாயு + உபத்தம் = பாயூபத்தம்; வடமொழிச்சந்தி. பாயு = மலத்துவாரம். எண்ணாய் = எண்ணுவாய்; ஏவலொருமை முற்று.*

# 97. இரணியகருப்பன்

1. **(பிரமாதி பஞ்ச கருத்தாக்கள் வியாத்தி!):** இரணிய கருப்பன் எனப்படும் பிரம்மனுக்குரிய வியாப்தி நிலையாவது பிருதிவி தத்துவம் முதல் மூலப்பிரகிருதி தத்துவம் வரை; திருமாலுக்கு வியாப்திநிலை அசுத்தமாயை வரை; உருத்திரனுக்கு வியாப்திநிலை சுத்தவித்யா தத்துவம் வரை; மகேசனுக்கு வியாப்திநிலை ஈசுவரதத்துவம் வரை; மேலான சதாசிவப் பெருமானுக்கு வியாப்திநிலை சாதாக்கிய தத்துவம் வரை.

2. **சுத்த தத்துவம் ஐந்தின் தொழில்:** நாத தத்துவமானது ஞானசக்தி மயமாக நிற்கும்; நன்மை மிகும் விந்து தத்துவமானது கிரியாசக்தி மயமாக விளங்கும்; துன்பமற்றுள்ள சாதாக்கிய தத்துவமானது ஞானசக்தியும் கிரியாசக்தியும் சமப்பட்டுள்ள நிலையை உடையதாக விளங்கும்; குற்றமற்ற ஈசுவரதத்துவமானது ஞானசக்தி குறைந்தும் கிரியாசக்தி மிகுந்தும் உள்ள நிலையை உடையதாகப் பொலியும்; அழுக்கான உள்ளமுடையோரால் காண இயலாத அல்லது அணுக இயலாத சுத்தவித்யா தத்துவமானது கிரியா சக்தி குறைந்தும் ஞானசக்தி மிகுந்தும் உள்ள நிலையை உடையதாக விளங்கும்.

3. **வித்யா தத்துவம் ஏழின் தொழில்:** வித்யாதத்துவங்களுள் காலதத்துவம் என்பது, இறந்தகாலத்தின் எல்லையாகவும், நடுவண்நிற்கும் நிகழ்காலத்தில் விளையும் பயனாகவும் இனி வரக்கூடிய எதிர்கால மயமாகவும் காட்டும் இவ்வுலகமே தான்தான் எனப் புலப்படுத்தி நிற்கும். வலிமை மிக்க நியதிதத்துவம் என்பது, நிலவுலகை ஆளும் அரசன் இன்னார்க்கு இன்ன பயன் என வரையறுப்பது போன்று அவரவர்க்குரிய கன்மப்பயனை, அப்பயன் அனுபவிக்கப்பட்டுக் கழியும் வரை ஊட்டி நிற்கும்.

4. கலை என்னும் தத்துவமானது, ஆணவமல மறைப்பைச் சிறிதளவே நீக்கி, ஆன்மாவின் செயல்திறனைத் தூண்டி நிற்கும்; மருட்சியற ஓங்கும் வித்தை என்னும் தத்துவமானது ஆன்மாவின் ஞானசக்தியைத் தூண்டி நிற்கும்; அலைச்சலைக் கொண்டிருக்கும் அராக தத்துவம் கன்மப் பயனை ஊட்டுவதற்காக, ஆன்மாவின் இச்சாசக்தியைத் தூண்டும். காலம் முதலான ஐந்தனாலும் தோன்றும் புருடன் கன்மத்தை அனுபவிக்கும். இதற்கான சூழலில் மாயை என்னும் தத்துவமானது ஆன்மாவை அழுத்தி நிற்கும்.

5. **(ஆன்மதத்துவம் 24–இல், அந்தக்கரணம் நான்கின் தொழில்)** தகுதிமிக்க சித்தம் என்னும் தத்துவம் ஒன்றைப்பற்றி நினைக்கும்; புத்தி தத்துவம், நினைக்கப்படுவதை உறுதிசெய்யும்; ஆங்காரதத்துவம் நினைக்கப்பட்டதை உறுதியாகப் பற்றி மேலோங்கிச் செயற்படும்; மனம் என்னும் தத்துவமானது நினைக்கப்பட்டதைச் சிக்கெனப் பற்றும். கூறப்பட்ட ஆங்கார தத்துவமானது, சிறிதும் தணிதல் இன்றி, வீடு பேறு அடையும் காலம் வரையிலும் ஆன்மாவினிடத்தே காலூன்றி நிற்கும்.

6. மனமானது பல்வேறுவகைப்பட்ட சங்கற்பங்களையும் விகற்பங்களையும் செய்யும் பொழுது அசையும் ஊசலின் தன்மையைக் கொண்டிருக்கும்; பின்னர், ஆன்மாவுக்குப்

பொருந்தியுள்ள இந்திரிய வாயில்களுள் காற்றுப் போல் நுழைந்து, சங்கற்ப விகற்பம் நீங்கிய நிலையை அடையும் போது அசைவற்று நின்று அசலமாக விளங்கும். இவ்வாறு அலையும் மனமாகிய இது எதைப் பற்றுகின்றதோ அதைத்தான் புத்தி தத்துவமானது ஊன்றி ஆய்ந்து நிற்கும்.

7. ஒருபொருளின் திறத்தை ஆய்ந்து கண்டு உணரும் ஆற்றல் வாய்ந்த நான்கு கரணங்களும், ஆன்மாவுக்குக் கண்களைப் போன்றனவாய்ப் பொருந்தியுள்ள உட்கருவிகளே தவிர அவை சித்துப் பொருளல்ல; ஆய்ந்துணரா அறிவீனர்கள் உட்கரணங்கள் அறிவுப்பொருள்களே எனக் கூறுவர்; அவர்களின் கூற்று சாரமற்றது (உள்ளீடற்றது) என ஓர்ந்து உணர்ந்து, மைந்தனே! எங்கள் ஆண்டவனாகிய குகனின் ஞான ஆற்றலால் ஆன்மாவுக்குப் பொருந்தியுள்ள அறிவு வேறே உள்ளது எனக் காண்பாயாக.

8. **ஞானேந்திரியம் ஐந்தின் தொழில்:** செவி, உடல், நா, கண், மூக்கு எனப்படும் ஞான இந்திரியங்கள் ஐந்தும் எப்பொழுதும், தீங்கற்ற ஒலியை முதலாக உடைய ஆகாயம் முதலாக உள்ள ஐம்பூதங்களைச் சார்ந்துள்ளனவான கருவிகளோடு சேர்ந்து, முறையே உரத்தெழும் ஒலி, பரிசம், சுவை, காட்சி, மணம் ஆகியவற்றை அறியும்.

9. ஞானேந்திரியங்கள் ஐந்தனுள் கண் ஒன்றுமட்டுமே தனக்குரிய ஒளித்திறத்தால் புறத்தே குறைவற வியாபித்து, எந்த ஒரு பொருளையும் கிரகிக்கப் புறத்தே செல்லும். மற்றைய நான்கும் தம்மிடம் வந்து பொருந்தும் பொருள்களை மட்டுமே எவ்விதக் குறைவுமின்றிக் கிரகித்துக் கொண்டு தத்தம் தானங்களில் ஒடுங்கி நிற்கும் என நீ நன்கு உணர்வாயாக.

10. **கன்மேந்திரியங்கள் ஐந்தின் தொழில்:** வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என நிறல்பட உள்ள கன்மேந்திரியங்கள் ஐந்தும், ஆகாயம் முதலான ஐம்பூதங்களின் இடையே இருந்து, முறையே பேசுதல், நடத்தல், ஏற்றல், மலநீக்கம் செய்தல், மைதுனத்தின் போது விந்துவை வெளிவிடல் எனும் செயல்களைச் செய்யும். பெருமைக்குரிய திருப்புகழ்க் கவிஞரான அருணகிரிப் பெருமானின் இதய தெய்வத்துக்கு ஆட்பட்டிருப்போய்! கன்மேந்திரியங்களின் செயற்பாட்டை இவ்வாறு உணர்ந்துகொள்.

---

# 98. புகழ்பூத்தமந்திரநூல்

---

### *தன்மாத்திரையைந்தின் றொழில்.*

*தரவுகொச்சக்கலிப்பா.*

**பு**கழ்பூத்த மந்திரநூல் புகல்வதுபோ லொலிபரிசந்
திகழ்பூத்த வுருவிரசஞ் செறிகந்த மெனுமைந்துந்
தொகைபூத்த சுரோத்ராதி கட்கேது வாயிருக்குந்
தகைபூத்த வெம்பெரிய சாமியருட் டுணைகொண்டாய். (1)

## பூதமைந்தின் றொழிலும், அவற்றின் வடிவம் முதலியனவும்.

**வி**ண்ணினுக்கு வடிவுவட்டம் விளங்குநிறம் புகைகுணந்தான்
கண்ணகன்ற நிரந்தரமாங் கருமமது போக்குதலாம்
வண்ணவெழுத் ததுஹகர மன்னுசூர் சதாசிவனென்
றெண்ணியறி யெம்பெருமா னேசிலருட் டுணைகொண்டாய். (2)

**தி**றம்பெருகு வாயுவிற்குத் திகழ்வடிவ மறுகோணம்
நிறங்கருமை குணந்திரட்ட னிகழ்கருமம் விம்முதனல்
மறம்பெருகு மக்கரம்யவ் வாகுந்தே மகேசுரனென்
றறம்பெருகு மெம்மான்க ணன்புடையோ யறிகுதியால். (3)

**மு**ணங்குறநின் றெழுமனற்கு முக்கோண நிறஞ்செம்மை
குணஞ்சுடுகை வினையுலர்த்தல் குறித்திடுமக் கரம்ரகரம்
அணங்குகுண ருத்திரனென் றறிதியெமை யாண்டருளெண்
குணங்கிளருங் குகதேவைக் குரங்குமுணர் வுள்ளாயே. (4)

**ஈ**ரமுற்ற வப்புவினுக் கிருகோண நிறம்வெண்மை
கோரமுற்ற குணநெகிழ்ச்சி குன்றாத தொழில்வளைதல்
தீரமுற்ற வரிவகரந் தேவதைமா லெனவுனது
சோரமற்ற கூருணர்வாற் சோதித்துக் காண்மதலாய். (5)

**ந**ன்னிலமென் பதற்குருவ நாற்கோண நிறம்பொன்மை
மன்னுகுண மதுகடின மல்குதொழி றான்சுமத்தல்
சின்னவெழுத் ததுலகரந் தேவதைநான் முகப்பிரமன்
என்னவறி யெம்மானின் பெஞ்ஞான்று மேற்கவுளோய். (6)

## ஐம்பூதப் பாகுபாடு.

**ஐ**ந்தென்னும் பூதவகுப் பாவனகே ளுள்ளுடம்பில்
இந்திரிய வாதார மெனுமுறையிற் சூக்குமமாந்
தொந்தவுடல் வளர்த்திடஞ்செய் தொழின்முறையி லந்தரமாம்
உந்தியுல கப்பொருளா யோங்கொழுங்கிற் பாகியமாம். (7)

---

*3. அறிகுதி = அறிவாய்; ஏவலொருமைமுற்று; அறி – பகுதி, இ = விகுதி, கு–சாரியை, த்–எழுத்துப்பேறு.*

*4. முணங்கு = அடக்கம். குரங்கல் = வணங்கல்.*

**சங்கை நிவர்த்தி.**

**ஏ**சினிறம் விண்படிக மெனச்சருவ ஞானோத்தம்
பேசுமஃது மொக்குமுயர் பெற்றிமையால் வாயுவிற்கு
வீசுமுர னுள்ளதனான் விழிக்கெட்டா வுருவுளதென்
றாசங்கை நீத்தறியா யலகையுருப் போலுமெண்ணாய். (8)

**இ**டவிசும்பிற் குரியசத்த மென்னுந்தன் மாத்திரைதான்
படர்பூத நான்கினுமோர் பாங்காகக் காண்டலினாற்
படமான சிவிறியசைப் பால்வெளியிற் கால்வரலாற்
சடவருவ வல்விசும்பொன் றுண்டெனலுஞ் சத்தியமே. (9)

**பி**ருதிவிநீ ரனல்வாயுக் களினிறைந்த பெருவானும்
உருவாரண் டத்தினுளும் புறனுஞ்சூழ்ந் துளகண்டப்
பொருளாகு மல்லாது பூரணமன் றெனவறிவாய்
அருணகிரிக் கிறைவனென வவிர்குகனைப் படர்பவனே. (10)

# 98. புகழ்பூத்தமந்திரநூல்

**1. தன்மாத்திரை ஐந்தின் தொழில்:** தெய்வத் தகைமை மிக்குப் பொலிகின்ற எமது பெருங்கடவுளாகிய குகப் பெருமானின் திருவருள்துணையைக் கொண்டிருப்போய்! புகழ்மிகச் செறிந்துவிளங்கும் மந்திரமயமான ஆகமநூல் கூறுவது போன்று, சப்தம், பரிசம், விளக்கம் மிகுந்துள்ள ரூபம், ரசம், செறிகின்ற மணம் எனப்படும் ஐந்து தன்மாத்திரைகளும், தொகுப்பாக அமைவதில் பொலிவுற்றிருக்கும் செவி முதலான இந்திரியங்களின் செயற்பாட்டுக்குக் காரணமாக விளங்கி நிற்கும்.

**2. பூதங்கள் ஐந்தின் தொழிலும் அவற்றின் வடிவம் முதலியனவும்:** எம்பெருமானின் உயர்வான திருவருள் துணையைக் கொண்டிருப்போய்! ஐம்பெரும்பூதங்களுள் ஆகாயம் என்பதனுக்குரிய வடிவம் வட்டம்; நிறம், புகைநிறம்; குணம், இடமகன்று வியாபித்தும்

---

*8. அறியாய் = அறிவாய்; ஏவலொருமை முற்று.*

*எண்ணாய் = எண்ணுவாய்; ஏவலொருமை முற்று.*

*9. இத்திருப்பாட்டிழை ஆகாயத்தை அருவமென்றலின், அதற்கு மேலுள்ள 31–கருவிகளும், அவைகளின் காரணமாயைகளும் அருவமெனவே கொளக் கிடக்கின்றன. அருவத்தும் பலபேதஞ் சொல்ல லாமோ? எனின், – சொல்லலா மென்க; என்னை? ஆகாயம், திக்கு, காலமென்பன அருவமாயிருப்பினும் அவை, தம்முட்சிறிது தாழ்வுமுயர்வுமாக விருத்தல் போறலின். அருவ ஆகாயம், பிண்டத்தில் ஆங்கார விருத்தியை யனுசரித்து எல்லா நாடிகளிலு மிருக்கும்.*

*10. சத்ததன் மாத்திரையானது, யாண்டுள்ளதோ ஆண்டுவரையுமே ஆகாய பூதமுண்மையின் அது, "கண்டப்பொருளாகும்" எனப்பட்டதென்க.*

இடையீடு இன்றியும் இருத்தல்; செயல், இயக்கத்திற்கு இடம் கொடுத்தல்; எழுத்து, ஹகாரம்; பொருந்தியுள்ள அதிதெய்வம் சதாசிவன் என இவ்வாறு சிந்தித்து அறிவாயாக.

3. அறச்செயலாகிய அருட்செயல் பெருக்கமுற விளங்கும் எம்மானாகிய குகனிடம் பேரன்பு கொண்டிருப்போய்! ஆற்றல் மிகுந்த வாயு என்னும் பூதத்துக்கு விளங்குகின்ற வடிவம் அறுகோணம்; நிறம், கருமை, குணம், பொருள்களைத் திரட்டி நிற்றல்; செயல், விம்முதல்; வீர ஆற்றல் பெறுக உள்ள எழுத்து '**ய**'; அதிதெய்வம் மகேசுவரன் – என அறிக.

4. எம்மை ஆட்கொண்டு அருள்பவனும் எண்குணங்கள் நிறைந்து விளங்குபவனுமான குகதெய்வத்தை வணங்கிநிற்கும் நல்ல ஞான உணர்வு உடையோய்! முதலில் அடங்கிப் பின்னர் உயர்ந்து கிளரும் நெருப்பு எனும் பூதத்துக்கு வடிவம் முக்கோணம்; நிறம் செம்மை; குணம் சுடுதல்; செயல் உலர்த்துதல்; உரிய எழுத்து ரகரம்; அதிதெய்வம் குணருத்திரன் என அறிக.

5. அன்பிற்குரிய பிள்ளாய்! ஈரம் மிகுந்துள்ள நீர் என்னும் பூதத்துக்கு வடிவம் இருகோணம் (அதாவது, அரைவட்டம்). நிறம், வெண்மை; குணம், நெகிழ்ந்திருத்தல்; குன்றுதல் அடையாத செயல், வளைத்துச் சூழ்தல்; உறுதிப்பாடு உடைய எழுத்து வகரம், அதிதெய்வம் திருமால் என உனது ஒருமுகப்பட்ட கூர்த்த உணர்வால் அறிவாயாக.

6. எம்பெருமானின் ஆனந்தப் பேற்றையே எப்பொழுதும் பெற்று நிற்பதற்கு உள்ளோய்! நிலம் என்னும் பூதத்துக்கு உருவம் நாற்கோணம், நிறம் பொன்மை; குணம், கடினப்பட்டு இருத்தல்; தொழில், தரித்து இருத்தல் (அனைத்தையும் தாங்கி நிற்றல்); அடையாளமாகிய எழுத்து லகரம்; அதிதெய்வம் நான்முகப் பிரமன் – என அறிவாயாக.

7. ஐம்பூதப் பாகுபாடு (சூக்கும பூதம், ஆந்தரபூதம், பாகிய பூதம்) ஐம்பெரும் பூதங்களின் பாகுபாட்டு முறையைப் பற்றிக் கூறக்கேள்! உடம்பில் பொருந்தியுள்ள இந்திரியங்களுக்கு ஆதாரமாக விளங்கும் வகையில் செயற்படும் ஐம்பூதவகை, சூக்குமம் ஆகும்; பந்தப்பிணிப்பால் அமையும் உடலை வளர்த்து, கருவிகளின் செயற்பாட்டுக்குரிய சூழலை அமைத்துக் கொடுக்கும் செயல் முறையில் ஐம்பூதவகை, அகநிலையாகும் (ஆந்தரம்); உலகமாகவும் உலகத்துப் பொருள்களாகவும் பரிணாமப்பட்டு விளங்கும் முறையில் ஐம்பூதவகை புறநிலையாகும் (பாகியம்).

8. **சந்தேகம் தெளிதல்:** குற்றமற்ற ஆகாயத்தின் நிறம் படிகம் என்று சர்வஞானோத்தர ஆகமம் கூறும். அக்கூற்றும் ஏற்புடையதே. உயர்வான தன்மை யுடைமை காரணமாக வாயு என்னும் பூதத்துக்கு அதிவேகமாக வீசிச் செல்லும் வன்மை இருப்பதனால், அது கண்களுக்கும் புலனாகாத வடிவம் உடையதேயாம் என ஐயப்பாடு நீங்குமாறு, உறுதியாக அறிவாய். அந்த வடிவமானது பேயின் வடிவம் போன்றது எனக் கருதுக.

9. அனைத்துக்கும் இடம் கொடுக்கும் ஆகாயத்துக்குரிய சப்தம் என்னும் தன்மாத்திரை, மற்றுமுள்ள ஏனைய நான்கு பூதங்களிலும் ஒவ்வோர் பெற்றியில்

காணப்படுமாறு விளங்குவதாலும், படம் போன்று விளங்கும் விசிறியின் அசைவால், வெளிப்புறத்தே காற்று எழுவதாலும், அனைத்திடங்களிலும் சடமயமானதும் அருவமானதுமான ஆகாயம் உண்டு எனக் கூறுதலும் சத்தியமான உரையேயாகும்.

**10.** அருணகிரிப் பெருமானுக்குரிய முழுமுதற் பரம்பொருள் என விளங்கும் குகப்பெருமானைத் தியானிப்பவனே! மண், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு பூதங்களிலும் விரவி நிறைந்துள்ள பெரிய ஆகாயமும், உருவத்துடன் திகழும் அண்டத்தின் உள்ளும் புறம்பும் சூழ்ந்துள்ள, கண்டிதப் பொருளே ஆகும். இவ்வாறல்லது எங்கும் பரிபூரணமாக வியாபித்துள்ளதன்று, என ஆகாயத்தின் தன்மைபற்றி அறிந்துகொள்.

# 99. அறைமலிந்தபனுவல்

### *உட்கருவி 36-க்கும் அபிமான தேவதைகள்.*

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**றைமலிந்த பனுவலுரைத் துள்ள வாறே
யாறாறு கருவிகட்கு மபிமா னச்சூர்
பறைதுமுத லொலியாதி யோரைந் திற்கும்
பந்திமுறை யாய்த்தானே சிவனார் சத்தி
மிறைதணந்த சதாசிவனா ரனந்த தேவர்
விளங்குசுத்த வித்தியா தேவி யென்னா
மறைகளெலாம் புகழெந்தை யாய சுப்பி
ரமணியனை மறவாத மனத்தாய் காண்டி. (1)

**மா**யையென வுள்ளதற்கு மாயா தேவி
வளர்கால நியதிகட்குக் கால ருத்ரன்
தோயுமொளிக் கலைதனக்குக் கலைப்போர்த் தேவி
துலங்குவித்தை யென்பதற்கு வித்தைத் தேவி
மேயவரா கம்புருட னிரண்டி னுக்கு
மெய்யிலங்க ராகபக வானென் றெண்ணாய்
நோயணவா வெம்பெருமான் கருணை நேடு
நுணங்கியோர் நெறிச்செலுநன் னோக்க முள்ளாய். (2)

---

*1. ஒலியாதியோரைந்து = நாதம் முதலிய சுத்ததத்துவமைந்து.*
*மிறை = குற்றம், வருத்தம் ; சூ–நிகண்டு.*
*காண்டி = காண்பாய்; ஏவலொருமை.*

**சி**த்தமெனுங் குணத்திரயந் தனக்கு ருத்ரன்
றிருமகளின் கொழுநனயன் சிறந்த புத்திக்
குத்தமமார் புத்தியின்பே ருடைய சத்தி
யோங்ககங்கா ரந்தனக்குப் பீம நாதன்
தத்துமன மென்பதற்குத் தாமத் திங்கள்
சார்ந்தசுரோத் திராதிகட்கு முறையே மூவாச்
சுத்ததிக்கு ரூபமிடற் காற்று வெய்யோன்
றோயத்தே வசுவினிதே வதைகள் கண்டாய். (3)

**வா**க்காதி தொழிற்கருவி யோரைந் திற்கும்
வழிமுறையே யக்கினியா யிரநோக் குள்ளான்
நோக்கே றுபேந்திரன்மா மிருத்தெண் கண்ணா
னூனமிலா மாத்திரையைந் தினுக்கு நேரே
மாக்காமர் விண்ணீசன் வாயு வங்கி
வருணன்பூ தேவியென்றும் பூதங் கட்கு
நீக்காவவ் விண்ணீசன் முதலி னோரே
நிகழுவகைத் தேவதைக ளென்றுங் காண்டி. (4)

***சுத்த தத்துவமைந்துஞ் சுத்தமென்றும்,***
***பிரேரககாண்டமென்றும் பெயர்பெறு மென்பது.***

**பு**கன்றவைந்து தத்துவமும் தத்தந் தூய
புவனவெல்லை யடைந்தார்க்குச் சருவ ஞானம்
அகன்றசெயல் களைவிளக்கு வதனாற் சுத்த
மாமிந்த வைந்தையுங்கொண் டசுத்த மாயை
முகம்பிறந்த யாவையுந்தான் சிவனார் சத்தி
முடுக்கிநடத் திடுதலினாற் பிரேர கக்கூ
றுகம்புகழ்ப் பெறுமெனவு மறிதி தீர்த்த
னுடையவடிக் களிபெருக்கி யுயரு நல்லாய். (5)

*3. "முறையே" என்றமையிற் சுரோத்திரத்திற்குத் திக்குரூபியையும், துவக்கிற்குக் காற்றையும், சக்குவிற்கு வெய்யோனையும், சிகுவைக்குத் தோயத்தேவையும், ஆக்கிராணத்துக்கு அசுவினிதேவதைகளையும் கொள்க.*

*4. "வழிமுறையே" என்றமையின் வாக்கிற்கு அக்கினியையும், பாதத்திற்கு ஆயிர நோக்கிந்திரனையும், பாணிக்கு உபேந்திரனையும், பாயுவுக்கு மிருத்தியுவையும், உபத்தத்துக்கு எண்கட் பிரமனையுங் கொள்க.*

*இப்பத்தின் 1,2,3,4, – ஆந் திருப்பாட்டுக்களிற் போந்த அபிமான தேவதைகளின் பெயர்களுட் சில பொருந்தியும் பொருந்தாமலும் உபநிடதங்களுட் பிரதிபேதமாக வருதலைத் தகராலய ரகசியத்தில் "இந்நேர்மையில்" என்றற்றொடக்கத்துத் திருவிருத்தவுரை யுழைக் காண்க.*

**வித்தியாதத்துவமேழுஞ் சுத்தாசுத்த மென்றும்,**
**போககாண்டமென்றும் பெயர்பெறு மென்பது.**

**வி**த்தையெனு மோரேழு மறிவைக் கிஞ்சில்
விளக்குதற்குச் சாதனமா யிருக்கு மாற்றாற்
சுத்தமுஞ்சூக் குமரூபத் துவாரத் தாலே
சுகதுக்க மோகமய லளிக்கு மாற்றாற்
சுத்தமிலா வசுத்தமுமா மதனா னூல்கள்
சுத்தாசுத் தமெனவெடுத் துரைக்கும் பின்னுந்
தொத்துயிர்க்குப் போகமவை யருத்த னோக்கிச்
சுருங்காத போகக்கூ றெனவுங் கூறும். (6)

**ஆன்மதத்துவமிருபத்துநான்கும் அசுத்தமென்றும்,**
**போக்கியகாண்டமென்றும்,**
**மும்மாயைகளும் பரஞ் சூக்குமந் தூலமென்றும்**
**பெயர்பெறு மென்பது**

**அ**றுநான்குஞ் சிறிதறிவை விளக்கி னானு
மதிமோக மாதலினா னசுத்த மாகுந்
தொறுவான வுயிரெல்லாம் போக்கிய மென்னாச்
சொல்பொருள்கள் புசிக்கவுட னிற்ற லானும்
அறுநான்கும் போக்கியக்கூ றாகு மூன்றா
யறைந்துள்ள மாயைகளு முறைமை யாக
உறுநாமம் பரஞ்சூக்கந் தூல மாமென்
றுணர்திகுகப் பிரமமதற் காளா யுள்ளாய். (7)

**மாயையிலும் பிரகிருதியிலுந் தொழினடாத்துபவரும்,**
**முத்தொழின் மூர்த்திகளும்.**

**ஈ**சுரத்தி லிருக்குமனந் தேச ரென்பா
ரிடைமாயா காரியத்தை யிழைப்பா ரேழு
பேசுவித்தை தனிலிருக்கு மொருசீ கண்டர்
பேரசுத்தப் பகுதியின்முக் குணங்க ணன்றாய்க்

---

6. *தொத்துயிர் = அடிமையாகிய உயிர்; தொத்து = அடிமை; "தொழும்ப தொண்டு தொத்துத் தாதர்" என்பது* ***பி – நிகண்டு.***

7. *போக்கியம் = அனுபவிக்கப்படுபொருள். இது, மாயாகாரிய மெனப்படுமன்றிக் காரண மெனப்படாது.*

8. *ஏழுபேசுவித்தை = எழுவகையாகப் பேசப்படும் வித்தியாதத்துவ மாயை. இதன்கணிருக்குஞ் சீகண்டருத்திரற்கு வேறிருக்கைகளு முளவென்பது, 95–ஆம் பத்தின் 2–ன் குறிப்புரையிலும், 96–ஆம் பத்தின் 2–ன் குறிப்புரையிலும் காட்டியாயிற்று.*

கோசமறுத் துதிக்கவிரித் தாக்கல் காத்தல்
கோறலெனு முத்தொழிலு நடத்து வார்நல்
நேசமுற்ற விராசசநான் முகவன் சாத்து
விகநெடிய திருமாலு மவராய் நிற்பார். (8)

### வித்தியாதத்துவங்களைச் சுத்ததத்துவங்களும், சுத்ததத்துவங்களைப் பரனுடைய இச்சாஞானக் கிரியைகளுஞ் செலுத்துமென்பது.

**அ**ருவநடு மாயைதனை யாதி நாத
மாவதுமந் நாதமதை யறிவுங் காலம்
பெருகுகலை நியதிகளை யாதி விந்தும்
பெரியவதைக் கிரியையுங்கீ ழாய வித்தைக்
கருவியைமேல் வித்தையது மதனை மேதைக்
கவினறிவு மராகத்தை யனந்தர் சார்வும்
விரியதனை யிச்சையுமார் புருட னைத்தான்
வியன்சாதாக் கியமுமதைத் தொழிலு மோச்சும். (9)

### பதினெட்டுக் கருவிகளின்றி ஆன்மா ஈங்கெதனையு மறியமாட்டா தென்பது.

**கு**றையிகந்த வைந்துமிடை யேழு மந்தக்
கரணமொரு நான்குமைந்து பூதத் தொன்றும்
பொறியிலொன்று மாகியவிப் பதினெட் டின்றிப்
போதவுயி ரெதையுமறி யாதென் றோராக்
குறைவடைந்த மாக்களெல்லா நாமே காட்சி
கூர்ந்தறிவோ மெனும்பிதற்று முனரே சொற்ற
இறைவனருண் மூன்றுமறந் தெழுந்த தென்னா
வீண்டறிதி யருணகிரிக் களியுள் ளாயே. (10)

---

*9. இத்திருப்பாட்டிற்போந்த இச்சாஞானக் கிரியைகளுடைச் சிவன், முத்தொழின்மூர்த்திகளையும் ஆளுஞ் சதுர்த்த சத்த வாச்சியனாய் அணுமகேசனையும், அணுசதாசிவனையும் ஆளும் பதியாயுள்ளா னாகலின் அவனதிருக்கை யாண்டு முளதென்றே கூறப்படுமாயினும் "உமை யோடேய்ந்து சோமனெனவிருக்கும் ஈசுவரன் உன்மனாலோகத்திற்கு மேலாகவுள்ள எந்த அலௌகிக சோமலோகத்தில் வசிக்கின்றனனோ அது நித்தியம்" என்று சைவமஹாபுராண வாயுசங்கிதை கூறுமாற்றானே துவாதசாந்தத்தி லுள்ள சோமலோக மவனுக்கு நித்திய வாசத்தான மாயிருக்குமென்று கூறல் வேண்டும். இதுவேயுமன்றிப் பூலோக கைலாயமும், மேரு கைலாயமும் மேருவுக்கு வடபாலான மகா கைலாய பருவதமு மவனுக் கிருக்கையாயுள வென்றற்குரிய பிரமாணங்களைச் **சைவசமயசரபத்துக்** கைவல்லிய காண்டத்து 4–ஆம் அத்தியாயத்திற் கண்டுகொளலாம். **தகராலய ரகசியத்தின்** 2–ஆங் காண்டத்து 44, 55–ன் உரைகளு மீங்குக் கருதிக் கொளத்தக்கன. போந்த சோமலோகத்தைப் பற்றியுள்ள வடமொழிகள் **திட்பத்திற்** பிரமாணிக்கப் பட்டுள்ளன. (கடவுள்வணக்கத்து 3–ஆந் திருப்பாட்டுரை). அனந்தர்சார்வு = ஈசுரதத்துவம்.*

# 99. அறைமலிந்தபனுவல்

1. **உட்கருவி 36–க்கும் அபிமான தேவதைகள்:** வேதங்களெல்லாம் புகழ்ந்து துதிக்கும் எந்தையாகிய சுப்பிரமணியப் பெருமானை ஒருபோதும் மறவாத உள்ளம் உடையோய்! சொல்வளம் செறிந்துள்ள ஆகமங்கள் கூறியுள்ளவாறே முப்பத்தாறு தத்துவங்களுக்கும் உரிய அபிமான தேவதைகளைப் பற்றிக் கூறுவோம், கேட்பாயாக! நாத தத்துவம் முதலாக உள்ள சிவதத்துவங்கள் ஐந்தனுக்கும் வரிசைமுறையால் சிவன், சக்தி, குற்றமற்றுள்ள சதாசிவனார், அனந்த தேவர், சுத்தவித்யா தேவி எனும் ஐவரும் அபிமான தேவதைகள் என உணர்வாய்.

2. மலப்பிணிப்பு இயல்பாகவே அணுகாதிருக்கும் தூயோனாகிய எம்பெருமானின் கருணையை நாடிநிற்கும் நுண்ணிய ஞானப்பேறு வாய்த்தோர் சென்ற நன்னெறியிலேயே மாறாது ஒழுகி வரும் நல்ல நோக்கம் வாய்ந்துள்ளோய்! மாயை என்னும் தத்துவத்துக்கு மாயா தேவியும், காலம், நியதி என்னும் இரண்டு தத்துவங்களுக்கும் காலாக்னி ருத்திரரும், ஒளிபொருந்திய கலை எனும் தத்துவத்துக்குக் கலாதேவியும், விளங்கும் வித்யா தத்துவத்துக்கு வித்யா தேவியும் அராகம், புருடன் எனும் இரண்டு தத்துவங்களுக்கும் அராகதேவனும் அபிமான தேவதை களாவர் எனக் கருதுவாயாக.

3. சித்தம் எனப்படும் மூன்று குணங்களுக்கு ருத்திரன், திருமால், நான்முகன் எனும் மூவரும்; புத்தி தத்துவத்துக்கு புத்திசத்தியும், ஓங்கிநிற்கும் அகங்கார தத்துவத்துக்குப் பீமநாதனும், அலையும் மனம் எனும் தத்துவத்துக்கு ஸோம தேவனும் (சந்திரனும்), செவிக்கு திக்கு ரூபியும், தோலுக்கு வாயுதேவனும், கண்ணுக்கு சூரிய தேவனும் நாக்கிற்கு வருணனும் மூக்கிற்கு அசுவினி தேவதைகளும் அபிமான தேவதைகளாக விளங்குவார்கள் என்பதை அறிவாயாக.

4. வாக்கிற்கு அக்னிதேவனும், பாதத்துக்கு இந்திரனும், பாணிக்கு உபேந்திரனும், பாயுவுக்கு மிருத்யு தேவனும், உபத்தத்துக்கு எட்டுக் கண்கள் கொண்ட பிரம்மனும் அபிமான தேவதைகளாவர் என்றும், தன்மாத்திரைகள் ஐந்தனுள் சப்தத்துக்கு ககனேசனும், பரிசத்துக்கு வாயு தேவனும், ரூபத்துக்கு அங்கி தேவனும், ரசத்துக்கு வருணனும், கந்தத்துக்கு பூதேவியும் அபிமான தேவதைகளாவர் என்றும் இவ்வாறே ஆகாயம் முதலான ஐந்து பூதங்களுக்கும் ககனேசன் முதலான ஐவரே நிரலே நிற்கும் களிப்பு நிலைக்குரிய அபிமான தேவதைகள் என்றும் காண்பாயாக.

5. **சுத்த தத்துவம் ஐந்தும் சுத்தம் எனவும் பிரேரக காண்டம் எனவும் பெயர் பெறும் என்பது:** மிகவும் தூயோனாகிய குகப்பெருமானின் திருவடி இன்பத்தில் திளைத்து அவ்வின்பத்தை மேன்மேலும் பெருக்கிக் கொண்டு உயர்ந்து வரும் நல்லோய்! கூறப்பட்ட நாதம் முதலான தத்துவங்கள் ஐந்தும் தத்தமக்குரிய புவனப் பிரதேசங்களை அடையும் ஆன்மவர்க்கத்தினர்க்கு சருவஞானம், சருவ கர்த்திருத்துவம் முதலானவற்றை விளங்கச் செய்வதனால் அவை சுத்த தத்துவம் எனப்படும். நாதம் முதலான ஐந்தையும் கொண்டு

அசுத்தமாயைப் பரப்பில் தோன்றிய அனைத்தையும் சிவபரம்பொருளின் திருவருட் சக்தி திறம்பட நடத்திவைப்பதால் பிரேரககாண்டம் எனும் பெயரை, உலகம் புகழ இவ்வைந்தும் பெற்று நிற்கும் எனவும் அறிவாயாக.

6. **வித்யாதத்துவம் ஏழும் சுத்தாசுத்தம் எனவும் போககாண்டம் எனவும் பெயர் பெறும் என்பது:** ஆன்ம அறிவைச் சிறிதளவு விளக்குவதற்கு வித்யா தத்துவங்கள் ஏழும் நல்ல சாதனங்களாக இருத்தலால் சுத்தம் எனவும், தமது சூக்கும வடிவத்தால் சுகம், துக்கம், மோகம், மயக்கம் முதலானவற்றை ஆன்மாவுக்கு விளைவிப்பதால் அசுத்தம் எனவுமாக வித்யாதத்துவம் விளங்கும். அதனால் ஆகமநூல்கள் இவற்றைச் சுத்தாசுத்தம் எனும் பெயரிட்டுக் கூறும். மேலும் எப்பொழுதுமே தொழும்பு நிலைக்குரிய ஆன்மாக்களுக்கு உரிய போகங்களை ஊட்டுகின்ற காரணத்தால் இவற்றைச் போககாண்டம் என்றும் அந்நூல்கள் கூறும்.

7. **ஆன்மதத்துவம் 24–ம் அசுத்தம் எனவும் போக்கிய காண்டம் எனவும் பெயர் பெறும் என்பதும்; மூன்றுமாயைகளும் பரம், சூக்குமம், தூலம் என்றும் பெயர்பெறும் என்பதும்:** குகப்பிரம்ம பரம்பொருளுக்கு எப்பொழுதும் ஆட்பட்டிருப்போய்! ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்கும் ஆன்ம அறிவைச் சிறிதளவு விளக்கி நின்றாலும் அதிமோகத்தை விளைவிப்பவை ஆதலால் அவை அசுத்தம் எனப்படும்; தொகுதிப்பட்டு நிற்கும் உயிர்களுக்கெல்லாம் அவற்றுக்குரிய போக்கியமாகச் சொல்லப்படும் பொருள்களைத் துய்க்க உடன் இணைந்து விளங்குவதால், ஆன்மதத்துவம் இருபத்துநான்கும் போக்கிய காண்டம் என விளங்குவதாகும். மேலே மூன்றாகக் கூறப்பட்ட மாயைகளுள் சுத்தமாயையைப் பரம் என்றும் சுத்தாசுத்த மாயையைத் சூக்குமம் என்றும், அசுத்த மாயையைக் தூலம் என்றும் வேறு பெயர்களாலும் அறிவாயாக.

8. **மாயையிலும் பிரகிருதியிலும் தொழில்நடத்துபவரும்; முத்தொழில் மூர்த்திகளும்:** சுத்தமாயைக் குரிய ஈசுவர தத்துவத்தில் உள்ள அனந்தேசுவரர் என்பவர் இடைப்பட்டுள்ள ஈசுவர தத்துவத்தில் உள்ள அனந்தேசுவரர் என்பவர் இடைப்பட்டுள்ள சுத்தாசுத்த மாயைக்குரிய செயல்களைச் செய்வார்; ஏழுவகையாகப் பேசப்படும் வித்யாதத்துவ மாயையில் இருக்கும் சீகண்டர் அசுத்தமாயைக் குரிய முக்குணங்களும் நன்கு, சிக்கலற்று வெளிப்படும் வகையில் விரிவுறப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் செய்வார். நேசத்தன்மைக்குரிய ராசச குண நான்முகப் பிரம்மனும், சாத்துவிக குணத் திருமாலும் சீகண்டர் இயக்க இயங்கி, தியானபாவனையால் சீகண்டராகவே விளங்கி நிற்பர்.

9. **வித்யா தத்துவங்களைச் சுத்த தத்துவங்கள் இயக்கும்; சுத்த தத்துவங்களை மூன்று சிவசக்திகளும் செலுத்தும்:** அருவமாய் இடைப்பட்டுள்ள சுத்தா சுத்த மாயையின் ஏழுதத்துவங்களுள் மாயை என்பதை, சுத்தமாயையின் நாததத்துவம் செலுத்தும்; நாத தத்துவத்தைச் சிவனாரின் ஞானசக்தி இயக்கும்; காலம், நியதி, கலை ஆகிய தத்துவங்களை சுத்தமாயையின் விந்து தத்துவம் இயக்க, விந்து தத்துவத்தைச் சிவனாரின் கிரியா சக்தி

இயக்கும்; சுத்தாசுத்த மாயையின் வித்யா தத்துவத்தை, சுத்த மாயையின் வித்யா தத்துவம் இயக்க, இந்த சுத்த வித்யா தத்துவத்தைச் சிவனாரின் ஞானசக்தி இயக்கும்; அராகதத்துவத்தை, அனந்தருக்கு இருப்பிடமான ஈசுவர தத்துவம் செலுத்த, ஈசுவர தத்துவத்தை சிவனாரின் இச்சாசக்தி இயக்கும், புருடதத்துவத்தைச் சாதாக்கிய தத்துவம் இயக்க, சாதாக்கிய தத்துவத்தைச் சிவனாரின் கிரியாசக்தி இயக்கும்.

10. **பதினெண் கருவிகள் இன்றி ஆன்மா இங்கு எதனையும் அறியாது:** அருணகிரிப் பெருமானின் ஆனந்த அனுபவம் வாய்த்திருப்போய்! குற்றமற்றுள்ள சுத்த தத்துவங்கள் ஐந்து, வித்யா தத்துவங்கள் ஏழு, அந்தக் கரணங்கள் நான்கு, பூதங்களுள் ஒன்று, ஐம்பொறிகளுள் ஒன்று ஆகிய இந்த பதினெண் கருவிகளின் துணை இல்லாமல், சித்துப்பொருளான ஆன்மா எதையும் அறியாது என்னும் உண்மையை ஓர்ந்துணரா அறிவீனர்கள் எல்லாம் ''நாமே அறிவாக உள்ளோம்; நாமே கூர்ந்தறிவோம்' எனப் பிதற்றுவர். இந்தப் பிதற்றுரையும், முன்னர்க் கூறப்பட்ட இறைவனின் அருட்சக்திகள் மூன்றையும் மறந்ததால் எழுந்த ஒன்று என ஈண்டு நீ அறிவாயாக.

# 100. பூப்புகழ்ப்பிரமன்

***★சிவபேதமொன்பதிற் சகளத்திருமேனியை அதிகாரத்தானமென்பது.***

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**ப்புகழ்ப் பிரமன் விண்டு ருத்திரன் பொறிம கேச
னாப்புக னான்கு மாசி லரனுக்குச் சகள மேனி
ஆப்பறு மதிகா ரத்தின் றானமா யவிரு மென்று
மூப்புடைப் பனுவ லெல்லா மொழிவது மறிநன் னீரோய். (1)

***நிட்களசகளத் திருமேனியைப் போகத்தானமென்பதும், நிட்களத்திருமேனியை இலயத்தானமென்பதும்.***

**நி**கழொரு சதாசி வன்றா னிட்கள சகள மேனி
இகழ்வறு போகத் தான மென்னவாம் விந்து நாதந்
திகழரும் பரம சத்தி சிவமெனு நான்கு மேலோர்
புகழுநிட் களமொ டுக்கப் புடையென வாமுன் னோற்கே. (2)

* *கனகமென்னுந் 95–ஆம் பத்திற் கழறியவாறு பிரம, விட்டுணு, உருத்திரர் சீவர்களாயிருப்ப; ஈண்டவரைச் சிவபேத மென்பதென்னை ? எனின், – அகார உகார மகார மென்னும் பிரணவமாத்திரை கட்குரிய சிருட்டி திதி சங்கார சிவசத்திகள் அன்னோர்பாற் பதிந்து அத்தொழில்களைச் செய்தலின் அவர்கள் சம்புபக்ஷமாகக் கொளப்பட்டு அவ்வாறு கூறப்பட்டனரென்க. மகேசன் சதாசிவனென்பார் செய்தியுமிப்படியே.*

**அபரவிந்து அபரநாதமென்னு மிரண்டும்**
**பரவிந்து பரநாதங்களு ளடங்கு மென்பது.**

**ஈ**ங்கரும் பரம சத்தி சிவமென வியம்பி ரண்டும்
ஓங்கிய தூய மாயை யுழியுள பரவிந் தோசை
ஆங்கரு விகளே யச்சார் பபரவிந் துவுநா தம்மும்
நீங்குறா தடங்குங் கண்டாய் நிருமல குகற்காட் பட்டாய். (3)

**நிட்களாதீதம்.**

**ந**வந்தரு பேத மாக நவிலுமுக் கூறுந் தாண்டிச்
சிவந்தரு சிவந்தா னிற்குஞ் செறிந்துள வதையே சீவர்
அவந்தெறு மதீத தேவென் றரியசித் தாந்த நூல்கள்
நவின்றிடு மாணத் தேவே நாமடை குகேசன் கண்டாய். (4)

**முதலுறு பிரமாண்டப்பிரளயம்.**

**ச**துர்யுக நான்கைந் நூறு சார்ந்தநா ணிவிர்த்தி மேய
பொதுள்புவ னங்க ளோய்வைப் போதயன் புரிவா னஃதே
முதுபிர மாண்ட நாச மென்றுமவ் வயனாண் மூன்று
சதமறு பதுமொன் றாயிற் சமையென்றுஞ் சாற்று மேனூல். (5)

**இடையுறு பிராகிருதப்பிரளயம்.**

**அ**ச்சமை பரார்த்த மாயி னரும்பிர கிருதி யந்தம்
உச்சிதப் பதிட்டை யின்க ணுளபுவ னங்க ளோய்வை
அச்சுத னயர்வா னத்தைப் பிராகிரு தநாச மாமென்
றுச்சிநூ லோதுங் கண்டா யொருபரன் றனக்காட் பட்டாய். (6)

**கடையுறு பிரளயம் மூன்றனுண் மத்திமப்பிரளயம்.**

**ப**கருமற் றொருப ரார்த்த மாயவை பரார்த்த மாமேல்
இகலிரண் டனிலு முக்கூற் றீறெழுந் திடுமெவ் வாறேல்
அகலவித் தையின்வ ளாக மனைத்தையு மரன்றான் றேய்ப்பான்
மகிமைநூ லிதனை மைந்தா மத்திம நாச மென்னும். (7)

---

*5. சதுர்யுகம் நான்கைந்நூறு = 2000–சதுர்யுகம். ஒவ்வொரு சதுர்யுகத்துக்கும் மனிதவருடம் 4320000–ஆமென்ப. நிவிர்த்தி = நிவிர்த்தி கலை. சமை = வருடம்.*

*6. பதிட்டை – பிரதிட்டை என்பதன் விகாரம் = பிரதிட்டா கலை.*

*★ மத்திமப்பிரளயம், அவாந்தரசங்கார மெனவுமாம்.*

*7. வித்தை = வித்தியாகலை; இதன்கணுள்ள புவனங்கள் அராகதத்துவத் துளவென்ப. அரன் = உருத்திரனென்னுங் காலாக்கினிருத்திரன்.*

### மாப்பிரளயமும், பிரதம மாப்பிரளயமும்.

**சா**ந்தியின் புவன மெல்லாஞ் சாம்பிட வனந்தன் செய்வான்
சாந்தியா தீதை யின்பாற் றயங்குமேன் புவனம் யாவும்
ஓந்தகைச் சதாசி வன்றா னொடுக்குவா னிவையொ ழுங்காய்ப்
பேந்தரு மாசங் காரம் பிரதம மாத்தேய்ப் பென்றாம். (8)

### முதலுறு பிரளயமுந் தோற்றமுந் தினசங்காரந் தினசிருட்டி யெனவும், கடையுறுபிரளயம் மூன்றுந் தோற்றமும் மாசங்காரம் மாசிருட்டி யெனவும், இடையுறு பிரளயமுந் தோற்றமும் அவாந்தரசங்காரம் அவாந்தரசிருட்டியெனவும் பெயர் பெறூஉ மென்பது

**தெ**ரித்தமுன் னொடுக்கந் தோற்றந் தினமென வாகு மீற்றில்
விரித்தவோர் மூன்று தேய்ப்பும் விதித்தலு மாவென் றாகும்
பிரித்துமத் தியத்திற் சொற்ற பிரகிரு தியினோர் தேய்ப்பும்
உரித்துடைப் படைப்பு மங்க ணோங்கவாந் தரமென் றாகும். (9)

### பரார்த்த மிவ்வளவிற் றென்பது

**ஏ**கமே முதலாப் பப்பத் தெனவரு மிருப தாஞ்சார்த்
தோகமி றொகைப ரார்த்த மாமெனச் சொலுநூற் றோல்கள்
மாகதி யமுத வார்வாய் மடுத்தபொன் னருணைப் பேரான்
மோகமா வலித்த வெம்மான் முழுநிழற் காட்பட் டாயே. (10)

ஆக நூறுபத்தினும் போந்த திருப்பா - 1000
கடவுள்வணக்க முட்பட
**ஆகத்திருப்பா - 1003**

---

*8. பேம் = அச்சம்; "பீதியுருவுபேம்" என்பது சூ–நிகண்டு; மற்றை நிகண்டு களிலுமுண்டு.*

*10. ஏகமேமுதலாப் பப்பத்தெனவரு மிருபதாஞ்சார் – 1. ஏகம், 2. தசம், 3. சதம், 4. சகச்சிரம், 5. தசசகச்சிரம், 6. இலக்ஷம், 7. தசலக்ஷம், 8. கோடி, 9. தசகோடி, 10. பதுமம், 11. கருவம், 12. நிகருவம், 13. பிருந்தம், 14. மாபதுமம், 15. சங்கம், 16. மாசங்கம், 17. சமுத்திரம், 18. மாசமுத்திரம், 19. மத்தியம், 20. பரார்த்தம். இவ்விதமாகவே சித்தாந்தசாராவளி ஞான பாதத்து 25–ஆஞ் சுலோகத்திலுங் கண்ணுறலாம். பிரமாவின் ஆயுசுதான் பரம்: அதனிற்பாதியே பரார்த்த மென்றுங்கூறுப, பிரமாவின் ஒரு பகலையே கற்பமென்றுங் கழறுப.*

# 100. பூப்புகழ்ப்பிரமன்

**1. (சகளத்திருமேனி, அதிகாரத்தானம்)** நற்குணங்கள் நிறைந்துள்ளோய்! நிலவுலகம் புகழும் பிரமன், திருமால், ருத்திரன், ஞானம்மிக்க மகேசுவரன் எனக் கூறப்படும் நான்கும் குற்றமற்ற சிவபெருமானுக்குச் சகளத்திருமேனியாகப் பொலிந்து, பந்தப்பிணிப்பை அறுக்கவல்ல அதிகாரத் தானம் என விளங்கும் – இவ்வாறு காலத்தால் மூத்து முதல்நூல் என உள்ள ஆகமங்களெல்லாம் கூறுவதை, அறிவாயாக.

**2. (அரு உருவநிலை போகத்தானம்; அருவநிலை லயத்தானம்)** சுத்தமாயையில் சாதாக்கிய தத்துவத்தில் விளங்கும் சதாசிவனாரின் திருமேனி நிட்களசகள மேனியாகும்; இதுவே இகழப்படும் பந்தங்களை அறுக்கும் போகத்தானம் என விளங்கும், முன்னோனாகிய சிவபெருமானுக்கு விந்து, நாதம், அரிய பரமநிலைக்குரிய சக்தி, சிவம் எனப்படும் நான்கும் நிட்களத் திருமேனியாக விளங்கும்; இதுவே அவனுக்குரிய இலயத்தானம் எனவும் பொலியும்.

**3. (அபரவிந்து அபரநாதம் என்பவை பரவிந்து பரநாதம் என்பனவற்றுள் அடங்கும்)** இயல்பாகவே மலமற்று விளங்கும் குகப்பெருமானுக்கு ஆட்பட்டு இருப்போய்! இவண், உணர்தற்கரிய பரம சக்தி, பரசிவம் எனக் கூறப்படும் இரண்டும், உயர்ந்த தூய நிலையில் உள்ள சுத்தமாயையில் திகழும் பரவிந்து பரநாதம் எனப்படும் கருவிகளாகிய தத்துவநிலைகளே. இந்நிலைகளில் அபரவிந்து, அபரநாதம் எனும் இரண்டும் அழியாமல் அடங்கி நிற்கும் என உணர்வாய்.

**4. (நிட்கள நிலைக்கும் மேற்பட்டுள்ள அதீத நிலை)** ஒன்பது வகைப்பட்ட சிவபேதங்களைக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் அதிகாரத்தானம், போகத் தானம், லயத்தானம் என்னும் மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்டுள்ளதாய் விளங்கி, அனைத்துயிர்க்கும் தூய்மைநிலையான சிவப்பேற்றை வழங்கும் சிவபரம்பொருள் விளங்கும். இவ்வாறு அருட்செறிவுடன் விளங்கும் அப்பரம்பொருளையே, அரிய சித்தாந்த நூல்களாகிய ஆகமங்கள் 'அதீததெய்வம்' என்று கூறும். மாட்சிமை மிக்குள்ள அந்த அதீத தெய்வமே நாம் அடைவதற்குரிய குகபரம்பொருள் என உறுதியாக உணர்வாய்.

**5. (முதலில் நிகழும் பிரம்மாண்டப் பிரளயம்)** இரண்டாயிரம் சதுர்யுகங்கள் கழியும் கால எல்லையில், நிவிர்த்திகலையில் அடங்கிச் செறிந்துள்ள புவனங்களின் ஒடுக்கத்தை, தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரம்மன் செய்வான். நிவிர்த்திகலைக்குரிய புவனங்களுக்கு நேரும் ஒடுக்கமே முதற்கண் நிகழும் பிரம்மாண்டப் பிரளயம் என்றும், அந்தப் பிரமனின் நாள்கள் முன்னூற்று அறுபது சேருமாயின் அது பிரம்மவருடம் என்றும் சிவாகம நூல்கள் கூறும்.

6. **(இடையில் நிகழும்பிராகிருதப் பிரளயம்)** ஒப்பற்ற குகபரம்பொருளுக்கு ஆட்பட்டிருப்போய்! அத்தகைய பிரம்ம வருடங்கள் பரார்த்தம் என்னும் எண்ணளவு பொருந்த நிகழுமாயின், பிரகிருதி தத்துவம் வரை உள்ள தகுதி மிக்கதான பிரதிட்டாகலையில் இருக்கும் புவனங்களின் ஒடுக்கத்தைத் திருமால் செய்வார். இவ்வாறு நிகழும் ஒடுக்கத்தைப் பிராகிருதப் பிரளயம் என்று மிகவும் சிரேட்டமான நூல்களாகிய ஆகமநூல்கள் ஓதும் என அறிவாயாக.

7. **(இறுதியில் நிகழும் மூன்று பிரளயங்களும் மத்திமப்பிரளயம்)** கூறப்படும் மற்றொரு பரார்த்த காலம், பிராகிருதப் பிரளயத்திற்கு; இத்தகைய காலம் பரார்த்த எண்ணிக்கையில் கழியும் பொழுது முதற்பரார்த்தம், அடுத்துவரும் பரார்த்தம் எனும் இரண்டு காலங்களிலும் மூன்றுவகைப்பட்ட பிரளயங்கள் நிகழும். எவ்வாறு எனில், வித்யாகலையில் அடங்கியுள்ள புவனங்கள் அனைத்தையும் ருத்திரன், உரிய தானங்களில் ஒடுக்கி வைப்பான். மைந்தனே! ருத்திரன் நிகழ்த்தும் இந்த ஒடுக்கத்தைப் பெருமை சான்ற ஆகமநூல் மத்திமப் பிரளயம் எனக் கூறும்.

8. **(மகா பிரளயமும், பிரதம மகா பிரளயமும்)** சாந்திகலையில் உள்ள புவனங்கள் அனைத்தும் தத்தம் தானங்களில் ஒடுங்கி நிற்குமாறு அனந்தேசுவரர் செய்வார்; மேற்பட்டுள்ள சாந்தியாதீதை எனப்படும் கலையில் உள்ள புவனங்கள் அனைத்தையும் அவ்வவற்றுக்குரிய தானங்களில், பிரணவகலா மயனான சதாசிவனார் ஒடுக்கிவைப்பார். இவை முறையே, அச்சம் தரு மகாப்பிரளயம் என்றும் (சாந்திலயம்) பிரதம மகாப்பிரளயம் (சாந்தியாதீதலயம்) என்றும் கூறப்படும்.

9. முதற்கண் கூறப்பட்ட முதலுறு பிரளயம் தினசங்காரம் எனவும், முதலுறு படைப்பு தின சிருட்டி எனவும் கூறப்படும். இறுதிக்கண் விவரிக்கப்பட்ட மூவகை ஒடுக்கங்களும் மூவகைப் படைப்புகளும் முறையே மகாசங்காரம் என்றும் மகாசிருஷ்டி என்றும் கூறுப்படும். வகைப்படுத்தி இடையே கூறப்பட்ட பிரகிருதி தொடர்பான ஒடுக்கமும், அதற்குரிய படைப்பும் முறையே அவாந்தர சங்காரம் என்றும் அவாந்தர சிருட்டி என்றும் கூறப்படும்.

10. **பரார்த்தம் இன்னது என்பது:** மிகவும் உயர்ந்த சிவானந்த கதியாகிய அமுத ஒழுக்கை நான் வாய்மடுத்து உண்ட அழகிய இதயத்து அருணகிரிப் பெருமான் மிகவும் ஆர்வத்தோடு புகழ்ந்து பாடிய எம்மானாகிய குகப்பெருமானின் பரிபூரணமான திருவருளுக்கு ஆட்பட்டிருப்போய்! ஒன்று முதலாகப் பத்தின் மடங்காக வரும் எண்ணிக்கையில் இருபதாம் தானத்துக்குரிய, குறைவற்ற தொகையானது பரார்த்தம் என, ஆகம வசனங்கள் கூறும்.

# 101. புவனவோய்வு

**பிரளயகாலத்தில்**
**ஆன்மாக்கணிலைமையும், புவனபதிகணிலைமையும்.**

*கலிநிலைத்துறை.*

**பு**வன வோய்வினி லஙனங னேயுள்ள பூதக்
குவவி யாவையு மஙனங னேயுள்ள கோலப்
புவன நாயகர் சத்தியா லதிட்டித்துப் புரப்பார்
அவரு ளேநசை நீத்தவர் மேன்கதி யடைவார். (1)

**சுத்தமாயையிலுங் காலங்கலைக ளுளவென்பது.**

**ஏ**சு மாயையிற் காலதத் துவமுள தேய்ப்பத்
தேசு மாயைதன் னிலுமுள தாமினுந் தெரிக்கின்
ஓசை நாதவிந் திகைதீ பிகையுட னொளிசெய்
ஏசில் ரோசிகை மோசிகை யூர்த்துவை யெனவாம். (2)

**நாதகலைக ளைந்தனுள்**
**இந்திகை தீபிகை ரோசிகைகளின் றொழில்.**

**க**ரும வாவியி லெங்குமுண் டாம்பிர காசம்
பெருக வேபெரி தாச்செயு மிந்திகை பிறங்கும்
அரிய தீபிகை யதைமிகப் பெரிதென வாற்றும்
இருளில் ரோசிகை மிகமிகப் பெரிதென விழைக்கும். (3)

**மோசிகை ஊர்த்துவகைகளின் றொழில்.**

**அ**ருத்த மேனிவித் தேசுரர்க் கணைமலங் கிஞ்சம்
இருத்த லாலதைக் கழற்றிடு மோசிகை யிதனாற்
பெருத்த னுக்கிர கம்பெறு முயிரினைப் பிறவா
ஒருத்த னோடு சமம்பணு முயர்ந்தவூர்த் துவகை. (4)

**விந்துகலைக ளைந்தனுள்**
**நிவிர்த்தி பிரதிட்டை வித்தைகளின் றொழில்.**

**வி**ந்து வின்கலை களுணிவிர்த் தியென்பது மேற்கண்
வந்து ளார்க்கொரு சங்கற்ப விடுதியை வழங்கும்
நிந்தை தீர்பிர திட்டையவ் விடுதியை நிறுத்தும்
அந்த மேன்மையி லரியவித் தையறிவை விளக்கும். (5)

**சாந்தி சாந்தியதீதைகளின் றொழில்.**

**சு**த்த மாயவவ் வறிவடைந் தோர்க்கிருஞ் சுசிசெய்
வித்த ராக மவாப்பகை யாகிய விகற்ப
புத்தி யானதைத் தணித்திடுஞ் சாந்தியப் போது
சித்த மேதுமின் றலர்த்திடுஞ் சாந்தி யதீதை. (6)

**சும்மாவிருத்தலென்றல் இஃதென்பது.**

**இ**ந்த நீர்மையை யேசும்மா விருந்திட லெனவும்
அந்த மாதியி லவிர்பர வெளியுரு வாகப்
பந்த மோவ நிலாவுநிட் டையெனவும் பழுதில்
எந்தை நூல்க ளியம்பிடு மலர்முகத் தெழிலோய். (7)

**பஞ்சகலாபுவனம்**
**இருநூற்றிருபத்துநான்கின் பாகுபாடு.**

**இ**சைத்த வோர்நிவிர்த் தியிற்புவ னங்கணூற் றெட்டே
அசைக்கு மோர்பதிட் டையினக மைம்பதொ டாறே
பசைப்பைந் நாப்பணி லேழிரு பதுநய சாந்தி
மிசைப்பன் னெட்டிவை மேற்பதி னைந்தென மிளிரும். (8)

**அவற்றுள்; சுத்தபுவனம் 33, அசுத்தபுவனம் 191 - என்பது.**

**தி**ரண்ட வீரகா லாக்கினி ருத்திரர் திணைதொட்
டிருண்ட நோக்கறி யாவனா சிரிதவெல் லைவரை
இரண்டு நூற்றிரு பானொரு நான்கெனு மிவற்றுள்
இரண்டு கூறுசுத் தமும்பிற வசுத்தமு மெனவாம். (9)

**ஆறத்துவா விவரம்.**

**அ**த்து வாக்களு ளொன்றென வாகுமைங் கலைகள்
தத்து வம்பத மெழுத்துமந் திரஞ்சொன தலமாம்
அத்து வாக்களொ ரைந்திலும் விரவியுள் ளவெனாப்
புத்தி யாலுணர் புகழ்ப்புத னிறைநினைப் புளனே. (10)

---

*7. இங்கே, சும்மாவிருந்திடல் என்றது வாக்கடக்கத்திற்கேயன்றி மனவடக்கத்திற்குங் கொள்ளப்படும்; என்னை ? "சித்தமேதுமின்றலர்த்திடுஞ் சாந்தியதீதை" என்று கூறினமையின்.*

*8. இத்திருப்பாட்டின்கணுள்ள 108, 56, 27, 18, 15 – என்னும் புவனங்களின் பெயர் விவரங்கள்,* ***சதானந்தசாகரத்துரைத்தாம்;*** *ஆண்டுக் காண்க. இப்புவனங்களேயன்றி இன்னும் 12– புவனங்களுளவென்றுஞ் சிலர் மொழிப. அவை, இந்நூற்குடம்பாடாகா மிகையே.*

*9. திணை = நிலம்; புவனமென்னும் பொருள்பட நின்றது.*

*10. மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலையென்பனவற்றை ஒரோவொன்றாகக் கழித்துக்கொண்டு சிவபதஞ் சேறற்கு வழியா யிருத்தலின் அவை, அத்துவாவெனப் பட்டன. அத்துவா = வழி.*

# 101. புவனவோய்வு

1. **(பிரளய காலத்தில் ஆன்மாக்களின் நிலைமையும், புவனேசுவரர்களின் நிலையும்)** புவனங்கள் அவ்வத் தத்துவங்களில் ஒடுங்கி இருக்கும் பொழுது, அந்த அந்த இடங்களில் லயப்பட்டுள்ள உயிர்த்திரள்கள் அனைத்தையும் அங்கங்கே உருவம் கொண்டு இருக்கும் புவன அதிபதிகள், சிவசக்தியால் அதிட்டிக்கப்பட்டு உரியவகையில் காத்துக் கொண்டிருப்பார்கள்; புவன நாயகர்க்குள்ள அதிகார மலம் நீத்துள்ள உத்தமர்கள் மேன்மையான சிவகதியை அடைவார்கள்.

2. **(சுத்தமாயையிலும் காலமும் கலைகளும் உள்ளன)** அசுத்தமாயையில் காலதத்துவம் உள்ளது போன்றே, ஒளிமயமான சுத்தமாயையிலும் காலதத்துவம் உள்ளது. மற்றும் அசுத்தமாயையில் கலா தத்துவம் உள்ளது போன்று சுத்தமாயையிலும் நாதகலைகளும் விந்துகலைகளும் உண்டு. ஓசைமயமான நாதகலைகளாவன இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்துவை என்பனவாகும்.

3. **(இந்திகை, தீபிகை, ரோசிகை – இவற்றின் செயற்பாடு)** நாதகலைகள் ஐந்தனுள் இந்திகை என்பது கிரியாசக்தியை உடைய ஆன்மாவுக்கு, வியாபகமாகப் பொருந்தும் ஒளியானது மேலும் விருத்தியடைந்து பெருகி நிற்குமாறு செய்யும். உணர்தற்கரிய தீபிகை என்பது, அந்தப் பேரொளியை மேலும் பெருக்கம் அடையச் செய்யும்; இருளற்று ஒளிப்பிழம்பாக உள்ள ரோசிகை என்பது அவ்வொளியை மிகமிகப் பேரொளி உடையதாக்கும்.

4. **(மோசிகை, ஊர்த்துவகை – இவற்றின் தொழில்)** பொன்னிறத் தோற்றம் வாய்ந்த வித்தியேசுவரர்களுக்குச் சிறிதளவு அதிகார மலம் பொருந்தி இருத்தலால் மோசிகை என்னும் நாதகலை, அதனைக் கழற்றி நீக்கும்; அதிகார மலம் நீங்கிவிடுகின்ற காரணத்தால், பேரனுக்கிரகம் பெறத் தகுதி பெற்றுநிற்கும் ஆன்மாவைப் பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவனுக்கு நிகராகச் செய்துவைக்கும், ஊர்த்துவகை எனப்படும் நாதகலை.

5. **(விந்துகலைகள் ஐந்தனுள் நிவிர்த்தி, பிரதிட்டை வித்தை இவற்றின் தொழில்)** நிவிர்த்தி முதலாக உள்ள விந்துகலைகள் ஐந்துனுள், நிவிர்த்தி எனப்படும் விந்துகலை, சுத்தமாயைப் பரப்புக்கு வந்து சேர்ந்துள்ள ஆன்மாக்களுக்கு "சங்கற்ப நீக்கம்" (இன்னதை நாம் செய்ய வேண்டும் என ஆன்மா எண்ணுவதைத் தவிர்த்து நிற்பது) என்பதைச் செய்யும்; நிந்தையற்ற பிரதிட்டை என்னும் விந்துகலையானது, சங்கற்பநீக்கமாகிய அந்த உயர்ந்த பக்குவநிலையை நிலைப்படுத்தி நிற்கும். நிரந்தரமாக ஏற்பட்டுள்ள அந்த உயர்நிலையில் ஆன்மா இருக்கும் பொழுது, வித்தை எனும் விந்துகலையானது ஆன்மாவின் சர்வக்ஞத்துவத்தை விளக்கமுறுத்தும்.

**6. (சாந்தி, சாந்தியதீதை – ஆகிய விந்துகலைகளின் தொழில்)** தூய ஞானப்பெருக்கை அடைந்துள்ள ஆன்மாக்களுக்குப், பெரும் தூய்மையை அளிக்கும் சாந்தி எனும் விந்துகலையானது, பொருட்பற்று, அவா, பகை ஆகிய விகற்ப உணர்வுகளை எழுப்பும் புத்தி என்பதை நீக்கி நிற்கும்; அந்நிலையில், சாந்தியதீதை எனும் விந்துகலையானது, சித்தம் எனும் கருவியின் செயற்பாடு அறுபடுமாறு ஆன்மாவை விகாசப்படுத்தி நிற்கும். (மலர்ந்து விளங்கச் செய்யும்).

**7. (சும்மா இருத்தல் – என்பதன் உட்பொருள்)** திருவருள் ஒளியால் முகமலர்ச்சி பெற்று எழிலுடன் திகழ்வோய்! புத்தியும் சித்தமும் நீங்கப்பெற்றுள்ள இந்தத் தூய்மைமிக்க நிலையையே "சும்மா இருத்தல்" என்றும், தோற்றமும் ஈறும் இல்லாமல் அகண்டாகாரமாக விளங்கும் பராகாச வடிவாகிய பந்தங்கள் அனைத்தும் விலகிநிற்குமாறு நிகழும் பரநிட்டை எனவும் பழுதற்றனவாகிய, எந்தை சிவனாரால் அருளப்பட்டனவாகிய ஆகமநூல்கள் கூறும்.

**8. (ஐந்து கலைகளுக்கும் உரிய புவனங்கள் – 224 புவனங்களின் பாகுபாடு)** கூறப்பட்ட நிவிர்த்திகலையில் உள்ள புவனங்களின் எண்ணிக்கை நூற்றெட்டு. இயக்கிவைக்கும் பிரதிட்டா கலையில் உள்ள புவனங்கள் ஐம்பத்தாறு; பசுமை மிக்க, நடுவணதாகிய வித்யாகலையில் உள்ள புவனங்களின் எண்ணிக்கை இருபத்தேழு; சாந்திகலையில் உள்ள புவனங்களின் எண்ணிக்கை பதினெட்டு; சாந்தியதீத கலையில் உள்ள புவனங்கள் பதினைந்து எனவாகும்.

**9. (சுத்தபுவனம் 33; அசுத்த புவனம் 191)** வீரம் மிக்க காலாக்னி ருத்திரர்க்கு உரியதாய்த் திரண்டுள்ள காலாக்னிருத்ர புவனம் முதல், மறைப்புக்கு ஆட்பட்டிருப்போரால் உணர்தற்கரிய அனாசிருத புவனம் வரை உள்ள புவனங்கள் இருநூற்று இருபத்து நான்கு ஆகும். இவற்றுள், சாந்தியதீதை, சாந்தி எனும் இரண்டு கலைகளுக்கும் உரியவை சுத்த புவனங்களாகும்; ஏனைய மூன்று கலைகளைச் சார்ந்துள்ளவை அசுத்த புவனங்களாகும்.

**10. (ஆறு அத்துவா விவரம்)** திருப்புகழ் மகா கவிஞனாகிய அருணகிரிப் பெருமானின் இறைவனாகிய குகனைப் பற்றிய தியானபாவனையைக் கொண்டிருப்போய்! ஆறு அத்துவாக்களுள் ஒன்று எனத் திகழும் கலாத்துவா என்பதற்குரிய சாந்தியதீதை முதல் நிவிருத்தி வரை உள்ள ஐந்து கலைகளும் தத்துவாத்துவா, புவனாத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, மந்திராத்துவா எனப்படும் ஐந்து அத்துவாக்களிலும் கலந்து வியாபித்துள்ளன என்று உனது கூர்த்த அறிவுத் திறத்தால் உணர்வாயாக.

# 102. அமிழ்தமரர்

## அந்தாதி.

### வாக்குகளின் றொழில்.

*பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**மிழ்தமர ரிறைஞ்சுபிர மணியனது தண்ணளியா யறைதுங் கேண்மோ
ஐந்துகலை களினாலுங் காரியமாம் வாக்குகளி லமல சோதி
திமிரொலியின் வடிவாக நாபியடி சூக்குமைதான் சேர்ந்து நிற்குந்
தியக்கமுடைப் பிராணவடி வாகநினைப் பிடையெழுத்துச் செனிப்ப தற்கு
நிமிர்நினைவாய்க் கருக்கொடுநன் னாபியிற்பை சந்தியது நிலைத்து நிற்கும்
நிகழ்பிரா ணன்வடிவா யெழுத்துருவைப் புத்தியினி னிறீஇ யுள்ளே
இமிழொலியாய் நெஞ்சமிடற் றிடைவதியு மத்திமைமற் றொன்று தானன்
எனுங்காலும் பிராணனுமாய் வாய்நாவி னடியிருந்தைந் திடத்துந் தோன்றும்.
(1)

**தோ**ன்றுமிந்த வைகரியின் விருத்தியதே தொழிலிந்தி ரியத்தொன் றாகுஞ்
சொற்றவிந்த நான்கொழிந்த மூலமதிற் பிரணவத்தின் சொரூப மாயும்
ஆன்றவரல் லாதாரா லறிவரிதாய் நான்கினுக்கு மாதி யாயும்
அவிர்கின்ற பஞ்சமையென் றொருவாக்கு நாதவுரித் தாயுண் டோதை
சான்றவொரு வைகரிதொட் டரியசூக் குமையளவுஞ் சாற்று நான்குந்
தகுசுத்த வித்தைமுதல் விந்துவரை யுளநான்கின் சார்பி லேயெஞ்
ஞான்றுமுறை யேயருளா லியங்குமிவை கேவலத்தே நலிந்தோய்ந் தோனை
நனவினுக்குச் செலுத்திடவைந் தவத்தைகளாய்ப் பொருந்துமென நனிதேர்
வாயே. (2)

---

*1. இமிழொலி = யாழ் நரம்போசை போன்ற வொலி; "இமிழ்தல் விம்ம லிரட்டல்" என்பது **பி—நிகண்டு.***
*மற்றொன்று = வைகரி.*
*ஐந்திடம் :— நா, அண்ணம், அதரம், பல், மூக்கு என்பன.*

*2. பஞ்சமை துரியாதீதத்தினும், சூக்குமை துரியத்தினும், பைசந்தி சொப்பனத்தினும், மத்திமை சுழுத்தியினும், வைகரி சாக்கிரத்தினும் பொருந்துமாகலின் "ஐந்தவத்தைகளாய்ப் பொருந்தும் நனிதேர்வாய்" என்றறிவுறுத்தாரென்க. யாதானுமொரு பயன்கருதிப் பிரசங்கித்துப் பிதற்றித் திரிவார்க்கும் இவ்வவத்தைகள் நீங்கற்பாலனவோ? இதனை, நுண்ணுணர்வுடையாரே யுணரவல்லார். அடுத்த திருப்பாட்டின் பொருளையு முய்த்துணர்க.*

**தே**ர்ச்சியுளோர் நிட்டைதனி லிருக்குங்கால் வினைநுகர்வான் செலுத்த மெள்ளச்
சிம்புவது சூக்குமையின் மேனாத மித்தகைய திறமை வாய்ந்த
வேர்ச்சிலையைப் புறக்கருவி களிற்சேர்த்த காரணங்கேள் விபுல நாதம்
விந்துவெனு மிரண்டிலடங் கிடுதலினா லிவ்வாக்கு மேன்மை மாய
சார்ச்செழுமை யுடையவிரு மலத்தார்க்கு மொருமலமே சார்ந்து ளார்க்குந்
தளையாகு நீத்தன்றி யதிகார பதமிகந்து சாரார் மோக்கம்
நார்ச்செறிவு மலிந்தார்கட் கிதையூர்த்து வகையருளா னகர்த்து மந்த
ஞான்றவர்கண் மோனமடைந் தேகமிரண் டென்னாத நலஞ்சார் வாரால்.(3)

**முக்குணங்களின் விதப்பு.**

**வா**ரமுளோ யினிப்படிக வொளிச்சாத்து விகத்தினையும் வனப்பி னானே
வயங்குபன்ம ராகவொளி யிராசசத்தி னீர்மையையும் மாயம் பூத்த
கோரவிந்த்ர நீலவொளித் தாமசத்தி னீர்மையையுங் குயிலக் கேண்மோ
கோளறுசத் துவமேறில் லகுதைபிர காசமெனுங் குணங்க ளுண்டாம்
வீரவிரா சசமேறி லுபட்டம்ப கஞ்சலன மிரண்டு மின்னும்
வெகுளித்தா மசமேறிற் குருவருண கங்கணனி விரிந்து தோன்றும்
ஈரமுட னுரைத்தவிந்த வாறுடனும் பிரதான மெனுமோர் மூன்றும்
இணைந்திடிலோன் பானெனவா மிவையிருநான் கடங்குமிவை யியம்பு வேமால்.
(4)

**முக்குண வழிவரு பயன்.**

**மா**லணவாச் சாத்துவிகத் தாற்றருமம் பசுஞானம் வயிர முண்டாம்
வழுத்தியவம் மூன்றினுக்கு முறையாயே துறக்கமுநல் வளங்கள் சான்ற
கோலமுடைப் பதமோக்க மென்பதூஉம் பிரகிருதி லயப்பேர் கொள்வை
குண்டமதுங் கிடைக்குமிடை யிராசசத்தா லைச்சுரிய குணமொன் றுண்டாஞ்
சீலவத னாலாசைப் பிரவிருத்தி யைச்சுரியஞ் சிறக்கு மாறு
தெரிக்கிலட்ட சித்தியென வாமவற்றுட் டேகசித்தி மூன்றா முள்ளே
ஆலுமந்தக் கரணசித்தி யைந்தாமென் றறிந்திடுவை யதுட்டி யில்லா
அருட்பெருக்கை யெமொருபிரா னாயகுகப் பிரமமதை யகத்தில் வைத்தோய்.
(5)

---

*3. மெள்ள – மெல்லவென்பதன் மரூஉ.*
*சிம்புதல் – சிலம்புதலென்பதன் (எதுகைநோக்கிய) சிதைவு; ஒலித்தலெனும்பொருட்டு.*

*4. வாரம் = அன்பு. லகுதை = இலேசாயிருக்கை.*
*உபட்டம்பகம் = பற்று. குரு = கௌரவம். வருணகம் = அநியமம்.*
*பிரதானம் மூன்று = கூறிப்போந்த ஆறுக்குங்காரணமான சாத்துவிகாதி முக்குணங்கள்.*
*இருநான்கு:– ஐந்தாந்திருப்பாட்டிற் கூறப்பட்ட சாத்துவிகம், தருமம், பசுஞானம், வயிரம், இராசசம், ஐச்சுவரியம், ஆசைப் பிரவிருத்தியைச்சுவரியம், அட்டசித்தி யென்பன. வயிரம் = வைராக்கியம்.*

*5. அதுட்டி = அதுஷ்டி யென்னும் வடசொல்லின் விகாரம்; அசந்தோஷ மென்னும் பொருளது.*

## இராசசகுணசித்தியெட்டின் விவரமும் தாமசகுண விருத்தியும்

**வை**யநரர் விழியறியாப் பரமாணு வினுநுட்ப வடிவந் தாங்கி
வதிதருமோ ரணிமாவு மதிவேகி யாயளற்றில் வாரி நீரிற்
செய்யவடி யமிழாமற் செல்லுருவா மிலகிமாவுந் திருத்த மாய
தேகேந்தி ரியாதிகளால் வியாபியா யயனுலகங் காறுந் தேகம்
பையுளிலா துயருமகி மாவுமுடற் சித்தியெனப் பகர லாகும்
படர்மனத்தி னினைத்தவெலா மெதிரினல்கு பிராத்தியுநப் பாங்கு வீங்கு
தையலரெண் ணிலரையுண்டு செய்தியையு மனந்தவுருத் தாங்கி யேக
சமயத்திற் புல்லுபிரா காமியமு மினுமூன்றுந் தகுமுள் ளீடாம். (6)

**உ**ள்ளீடாய் விளம்புசித்தி தனிலந்த மூன்றனையு முரைக்கின் மாலின்
உந்திவந்த பிரமாதி கடவுளர்கண் ணினுமாணை யோச்சா நிற்கும்
வள்ளீசத் துவமொன்று மைந்தரையும் பகுதியையும் வசமாச் செய்து
மல்குமந்தப் பகுதியின்கீ ழாகுசிட்டி யையுமிழைக்கும் வசித்துவ மொன்று
தொள்ளாத பருவதத்தும் பாரமெனப் பிரசண்ட சுசனத் தானுந்
துவட்டவொணா திருக்குகிரி மாவெனுமொன் றாமுன்னர்ச் சொலிய மாய
அள்ளேறு தாமசத்தா லஞ்ஞான மதருமம்வை ராக்கிய மின்மை
ஐச்சுரிய மின்மையெனு நான்குகுண முண்டாமென் றறிதி மாதோ. (7)

## தாமசகுணவிருத்தி நான்கின்பயனும், அதருமபேதம் பத்தும்.

**மா**தவத்தி னுயர்ந்திடுவோ யஞ்ஞானத் தானரகு மருவுந் தீழ்ப்பு
மல்குமதன் மத்தாலே திரியக்கி யோனிகளில் வதிந்தி யாணர்ப்
போதமிறந் தேதோன்ற நேரிடும்வை ராகமிலாப் போலிச் சூழாற்
பூப்பந்த மிகுமைச்சு வரியமின்மை யானினைத்த புதுமை யாதும்

---

*6. மகிமா என்னுஞ்சித்தியே "விசுவரூபம்" எனப்படும்.*

*நப்பாங்கு – ந–சிறப்புப்பொருடரும் இடைச்சொல்.*

*7. சுசனம் – ச்வஸந: என்பதன் விகாரம்: காற்று எனும் பொருண்மைத்து.*

*துவட்டல் = அசைத்தல்.*

*அள் = வலிமை.*

*8. தீழ்ப்பு = தீட்பு என்பதன் விகாரம்; இழிவெனும்பொருட்டு; **40–**ஆம் பத்தில் 'ஏமவம்பலம்' என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரை கருதுக.*

*திரியக்கு = குறுக்குடம்புடைப் பசு பறவை முதலியன.*

*விகிர்தம் = பொய்; **சே–திவாகரம்.***

*நித்த முறையீனம் = நித்திய கருமானுட்டான லோபம்.*

மேதினிமே லெய்தாது மேனுவன்ற வதன்மமதை விரிக்கிற் பத்தாய்
விளங்குமவை சீவவதை பிறன்மனைவி தனைப்புல்லல் விகிர்தம் பேசல்
மோதமின்மை குருவில்லாள் கமனமசுத் தங்கோணன் மூர்க்க நித்த
முறையீனம் பிறர்புரிந்த தீங்கினுக்கவ் வாறுபுரி முரணா கும்மே. (8)

## அடக்கமும், ஒடுக்கமும்.

**ஆ**கியமுக் குணக்கூறும் பலபேதப் படினுநல வமல மோகம்
அதிதுக்க மெனுமூன்று ளடங்குமிவை கரணத்து ளடங்க லானே
பாகியமாம் புறக்கருவி களினிறுத்தப் பட்டவெனப் பணிப்பா ராய்ந்தோர்
பாழ்த்ததா மசவோய்வி லிராசசமே படருமந்தப் படர்ச்சி யோயில்
யோகிகளும் புகழவுள்ள சாத்துவிக மெழுமதுவு மோயிற் றூய
யோகாந்த நாதாந்தம் போதாந்த மாயவரு ளொளியைக் கூடித்
தேகியெனுஞ் சொல்லிறந்து சிவமணையும் பரமமுத்திச் செறிவுண் டாகுஞ்
சின்மயவச் சிவத்தினுடை யெண்குணமு மருவியங்குச் சேர்ந்தோ னிற்பான்.
(9)

## கீழாலவத்தையென்னுங்
## கேவலாவத்தையின் காரியம்.

**நி**ற்குநிலை யுணர்நலத்தோய் கருவிகளுங் காரணமு நிகள யாப்பாய்
நிகழ்த்தாண வாதிகளும் பாசமெனுஞ் சொலிலடங்கு நிகழ்பா லத்தில்
ஒற்கமிலாப் புருடதத்துவ மிந்திரிய முறுகரண முழலும் வாயு
உறுதன்மாத் திரைகள்வச னாதியெனு முப்பானைந் தோங்கல் பார்வை
நற்களையார் கண்டமிசை முற்சொலிய விந்திரிய ஞாட்பு நீக்கி
நவிலிருபத் தைந்துமுறல் கனாவிதய மதிற்பிராண னாடுஞ் சித்தந்
தற்புருட னொடுநிற்றல் சுழுத்தியுந்தி தனிலிரண்டு துரிய மூலத்
தானமதிற் புருடனிற்ற லதீதமறி சந்தமுனி யமிழ்தைச் சார்ந்தே. (10)

---

*9. கரணத்து ளடங்கலானே யென்றதிற் கரணம் = உள்ளந்தக்கரணம்.*

*10. பாலம் = நெற்றி.*

*பார்வை = சாக்கிராவத்தை; இவ்வவத்தை, கண்டு கேட்டு உண்டு உயிர்ப்பன வோங்காது மயங்குமமையத் துறுவதெனக் கொளப்படுமென்க.*

*இரண்டு:– புருடன், பிராணனென்பன.*

# 102. அமிழ்தமரர்

**1. (வாக்குகளின் தொழில்)** அமிழ்தத்தை உண்ணும் தேவர்கள் வணங்கித் துதிக்க உள்ள சுப்பிரமணியப் பெருமான் குளிர்ந்த அருள்திறத்தைப் பெற்றுள்ளோய்! மேலும் யாம் கூறும் மெய்ப்பொருளைக் கேள். நிவிர்த்தி முதலாக உள்ள ஐந்து கலைகளாலும் காரியப்படும் வாக்குகளுள், சூக்குமை (பரை) என்பது நிர்மலமான ஒளிமயமாகவும் ஒலிக்கின்ற நாதவடிவாகவும் நாபியின் அடிப்பகுதியைச் சார்ந்து விளங்கும்; விளக்கம் மிகுந்த பிராணனின் வடிவாகி, நினைப்புநிலையில் எழுத்துக்கள் பிறப்பதற்குரிய காரணநினைவாகிக் கருக்கொண்டு, நாபித் தானத்தில், பைசந்தி எனும் வாக்கு விளங்கும்; இயங்கும் பிராணனின் வடிவாகி, எழுத்தின் வடிவத்தைப் புத்தியின் உள்ளே வெளிப்படுத்தி, அகத்தே ஒலிக்கும் நாதமாய் மார்பிலும் கழுத்திலும் இடம்பெற்றிருப்பது மத்திமை எனும் வாக்காகும்; மற்றுமுள்ள வைகரி என்னும் வாக்கானது உதானன், பிராணன் எனப்படும் வாயுக்களாகி, நாக்கின் அடியில் இடம்பெற்றிருப்பதாய், நா, அண்ணம், உதடு, பல், மூக்கு எனும் ஐந்து இடங்களிலிருந்தும் வெளிப்படும்.

2. இவ்வாறு தோன்றும் வைகரிவாக்கின் விருத்தியாகத் திகழ்வதே, கன்மேந்திரியங்களுள் ஒன்றான வாக்கு எனத்திகழும். மேற்கூறப்பட்ட நாக்கின் அடி, மிடறு, நாபி, நாபியின் அடி எனும் நான்கு இடங்களையும் தவிர்த்து, அடுத்துள்ள மூலாதாரத்தில் பிரணவத்தின் வடிவாகவும், யோகப்பயிற்சியும் ஞானமுதிர்ச்சியும் வாய்த்துள்ளார் தவிர ஏனையோர்களால் அறிவதற்கு அரிதாகவும் சூக்குமை முதலான நான்கு வாக்குகளுக்கு மூலகாரணமாகவும் விளங்கும் பஞ்சமை எனப்படுவதாகிய ஒரு வாக்கு நாதகலைக்கு உரியதாக உள்ளது. ஒலி நிறைந்த வைகரி முதலாக உணர்தற்கரிய சூக்குமை ஈறாகக் கூறப்படும் நான்கு வகை வாக்குகளும் சுத்தவித்தை முதல் விந்து வரை உள்ள நான்கு தத்துவங்களையும் முறையே எப்பொழுதும் சார்ந்திருந்து, சிவசக்தியின் அருளால் இயக்கம் கொள்ளும். கேவலாவத்தையில் முடங்கி ஒய்ந்து ஆழ்ந்திருக்கும் ஆன்மாவை நனவு நிலைக்குக் கொண்டு வர பஞ்சமை முதல் வைகரி வரை உள்ள ஐந்து வாக்குகளும் துரியாதீதை முதலான ஐந்து அவத்தைகளாகப் பொருந்தும், என நன்றாக உணர்ந்து தெளிக.

3. ஞானயோகத்தில் தேர்ச்சி பெற்றுள்ளோர், நிட்டையில் ஆழ்ந்து இருக்கும்பொழுது, அவர்களை வினைப்பயனை அனுபவிக்கச் செய்வதற்காக, மெல்ல உள்ளிருந்து ஒலிப்பது சூக்குமைக்கு மேம்பட்டுள்ள பஞ்சமை ஆகும். இவ்வாறு செயற்பாட்டுத்திறம் வாய்ந்துள்ள மூலகாரண நாதங்களைப் புறக்கருவி அறுபது என்னும் தொகுதியுள் சேர்த்திருப்பதன் காரணத்தைக் கேட்பாயாக! இந்த வாக்கு என்பது பெருமைவாய்ந்த நாதம், விந்து என்னும் இரண்டனுள்ளும் அடங்கிநிற்பதால், மேன்மையான பரிபக்குவ வளம் வாய்த்துள்ள இருமலப் பிரளயாகலர்க்கும் ஒரு மல விஞ்ஞானாகலர்க்கும் இவ்வாக்கு தளையாகவே விளங்கும். இந்தத் தளையை நீத்தாலன்றி அன்னார் அதிகார முக்திநிலையையும் தாண்டிப் பர முத்தி நிலையை அடையமாட்டார்கள். அன்புச் செறிவு மிகுதியும் கொண்டுள்ள ஆன்மாக்களுக்கு இவ்வாக்கினை ஊர்த்துவகை என்னும் பரநாத கலையானது, அருளால் விலக்கி வைக்கும்.

அப்பொழுது அவர்கள் மௌனநிலையைப் பொருந்தி இரண்டென்றும் ஒன்றெனவும் கூறுதற்கியலாத அத்துவித நலத்தை அடைவார்கள்.

**4. (முக்குணங்களின் விதப்பு)** அன்புமிகக் கொண்டிருப்போய்! இனி, படிக ஒளி வாய்ந்த சாத்துவிக குணத்தைப் பற்றியும், வனப்புடன் விளங்கும் பதுமராக ஒளிவாய்ந்த ராசச குணத்தின் தன்மையைப் பற்றியும், மாயத்தன்மை, மிகுந்துள்ள கோரமான இந்திரநீல ஒளிவாய்ந்த தாமச குணத்தின் தன்மையைப் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கக் கேள். குற்றமற்ற சத்துவகுணம் மிகுந்து விளங்குமாயின் இலேசாக இருத்தல், பிரகாசம் எனப்படும் குணங்கள் உண்டாகும்; வீரத்துக்குரிய ராசசகுணம் மிகுந்து விளங்குமாயின் பற்று, சலனம் என்னும் இரண்டு குணங்களும் பிரகாசிக்கும்; வெகுளிக்குரிய தாமச குணம் மிகுந்து விளங்குமாயின் கௌரவம், நியமப் பிறழ்ச்சி எனும் இரண்டும் மிகவும் விரிவாகத் தோன்றும். கருணைகொண்டு இவ்வாறு உரைக்கப்பட்ட லகுதை முதலான ஆறுகுணங்களுடனும், இவ் ஆறுக்கும் காரணமாக சாத்துவிகம் முதலான மூன்று குணங்களும் சேர்ந்தால் குணங்கள் ஒன்பது என ஆகும். இவற்றுள் எட்டுக் குணங்களும் அடங்கும் இவற்றை இனிக் கூறுவோம்.

**5. (முக்குண வழிவரு பயன்)** மயக்க உணர்வு அணுகாத சாத்துவிக குணத்தால் தருமம், பசுஞானம், வைராக்கியம் எனும் மூன்றும் உண்டாகும். கூறப்பட்ட அந்த மூன்றுக்கும் முறையே சொர்க்கம், நல்ல வளப்பங்கள் நிறைந்த அழகுடைய பதமோக்கம், பிரகிருதி லயம் எனும் பெயரைக் கொண்டுள்ள வைகுண்டம் எனும் மூன்றும் உரிய பயன்களாகும். இடைப்பட்டுள்ள ராசச குணத்தால் ஐசுவரிய குணம் என ஒன்று தோன்றும்; சீலம் மிகுந்துள்ள அதனால் ஆசைப் பிரவிருத்தி ஐசுவரியம் என்பது தோன்றும். சிறப்புறக் கூறின், அதனால் அட்டசித்தி என்பது உண்டாகும். அட்டசித்திகளுள் மூன்று தேகசித்தி என்னும் வகையைச் சாரும்; அகத்தே செழிக்கும் அந்தக்கரணசித்தி எனும் வகையில் ஐந்து அடங்கும். மகிழ்ச்சியற்று இருத்தல் என்பது அறவே இல்லாததாகிய திருவருள் வெள்ளமாக விளங்குவதை, எமது ஒப்பற்ற பெருமானாகிய குகப்பிரம்மத்தை இதய தாமரையின் உள்ளே நாட்டி இருப்போய்! இவ்வாறு குணங்களின் பயனாகிய சித்திகளை நன்கு அறிவாயாக.

**6. (இராசச குண சித்தி எட்டின் விவரம்)** உலகத்திலுள்ள மானுடரின் கண்கள் காணாவண்ணம் பரமாணுவின் மிகநுண்ணிய வடிவம் தாங்கி இருத்தல் என்பதாகிய அணிமா; அதிக வேக ஆற்றல் வாய்ந்தவனாய் சேற்றிலும், ஆற்றுநீரிலும் கடல்நீரிலும் பாதங்கள் கீழே அமிழ்ந்துவிடாமல் செல்லக் கூடிய உருவம் தாங்கி இருக்கும் லகிமா; நன்கு செம்மைநிலை அடைந்துள்ள தேகம், இந்திரியங்கள் முதலானவற்றால் வியாபகத் தன்மை உடையவனாய் பிரம்ம லோகம் வரையிலும் தனது தேகம், எவ்வித ஊறும் வருத்தமும் இல்லாமல் உயர்ந்து இருத்தலாகிய மகிமா – இம்மூன்றும் உடற்சித்தி எனக் கூறத்தகும். மனத்தில் எண்ணிக்கொண்ட பொருள்கள் அனைத்தையும் கண்ணெதிரே தோன்றச் செய்தலாகிய பிராத்தி என்பதும், சிறப்புடன் விளங்குமாறு எண்ணற்ற மங்கையர்களைத் தோற்றுவித்து, ஏற்ற வகையில் எண்ணற்ற வடிவங்கள் தாங்கி ஒரே சமயத்தில் அவர்களைத் தழுவி இருத்தலாகிய பிராகாமியம் என்பதும், இனிக் கூறப்பட உள்ள மூன்றும் அந்தக்கரண சித்திகளாகும்.

**7. (அந்தக்கரண சித்தியும், தாமச குணவிருத்தியும்)** அந்தக்கரண சித்தி எனக் கூறப்படும் வகையில் எஞ்சியுள்ள மூன்றையும் கூறப்புகின், திருமாலின் நாபிக்கமலத்தில் உதித்த பிரம்மன் முதலான கடவுளர்களிடமும் தனது ஆணையைச் செலுத்தும் வண்மையான ஈசத்துவம் என ஒன்று; புருடர்களையும் (உயிர் வகைகளையும்), பிரகிருதியையும் தன் வசப்படுத்தி, செழித்திருக்கும் அந்தப் பிரகிருதிக்குக் கீழ்ப்பட்ட தத்துவநிலைகளில் பொருந்தக் கூடிய படைப்புத் தொழிலையும் செய்தல் எனும் வசித்துவம் ஒன்று, திடமான பெருமலையைக் காட்டிலும் பாரம் வாய்ந்து, அதிவேகச் சூரைக் காற்றாலும் அசைக்க முடியாமல் நிற்றல் என்பதாகிய கரிமா என ஒன்று – ஆகிய இம்மூன்றும் ஆம். முற்கூறப்பட்ட மாயவன்மை மிகப் பெற்றுள்ள தாமச குணத்தால் அஞ்ஞானம், அதர்மம், அவைராக்கியம், அனைசுவரியம் எனும் நான்கு குணங்களும் உண்டாகும் என அறிவாயாக.

**8. (தாமச குணவிருத்தி நான்கின்பயன் ; அதரும பேதம் பத்து)** பெரிய தவநெறியில் மேன்மேலும் உயர்ந்து நிற்போய்! தாமச குண விருத்தியான அஞ்ஞானத்தால் நரகம் பொருந்தும்; இழிநிலை பெருகும். அதர்மத்தால் விலங்கினங்களில் பிறவியெடுத்து, நன்குபொருந்தக் கூடிய ஞானம் என்பது அடியோடு இல்லாமலேயே தோன்ற நேரிடும். வைராக்கியம் அற்றுள்ள போலித்தனமான சிந்தனையால் பூமியில் பந்தப்பிணிப்புகள் மிகுந்து தோன்றும்; ஐசுவரியமற்றுள்ள நிலையான அனைசுவரிய குணவிருத்தியால், நினைக்கப்படும் புதிய நிலை யாதும் பூமியில் பொருந்தாது. மேற்கூறப்பட்ட அதர்ம குணத்தை விரிவுசெய்யின் பத்து என விளங்கும். அவை: உயிர்வதை; பிறன்மனைவியைத் தழுவல்; பொய்கூறல்; மகிழ்ச்சியின்மை, குருபத்தினியை மருவல், சுத்தமின்மை, தவறிழைத்தல்; மூர்க்கம்; நித்திய கருமங்களை அனுட்டிப்பதில் குறைவுபடுதல்; பிறர் செய்த தீமைக்கு எதிராகத் தானும் அவ்வாறே தீமை செய்வதாகிய பகையுணர்வு என்பனவாம்.

**9. (அடக்கமும் ஒடுக்கமும்)** இவ்வாறு கூறப்பட்டனவாகிய முக்குண விருத்திகளும் பற்பல வகைகளிலும் பேதப்பட்டு நின்றாலும் அவை அனைத்தும் நன்மைக்குரிய தூயநிலை, மோகநிலை, அதிதுக்கநிலை எனப்படும் மூன்றனுள் அடங்கிநிற்கும்; இவை உள்ளந்தக் கரணத்தில் அடங்கும். ஆதலால் அவை வெளியே நிகழ்வனவாகிய புறக்கருவிகளின் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன என உண்மைப்பொருளை ஆய்ந்தறியும் ஞானியர் உறுதிபடக் கூறுவர். மிகவும் இழிவாகிய தாமசகுணம் ஓய்ந்து அடங்கும்போது ராசச குணமே விஞ்சிப்படர்ந்து நிற்கும்; ராசசகுணப் படர்ச்சி ஓய்ந்து அடங்குமாயின் சிறந்த யோகியராலும் புகழப்பட உள்ள சாத்துவிக குணம் மேலோங்கி நிற்கும். சாத்துவிக எழுச்சியும் ஓய்ந்து அடங்குமாயின், தூய்மை நிலையவான யோகாந்தம், நாதாந்தம், போதாந்தம் எனப்படுவனவாகிய அருள் ஒளி நிலைகள் சேரப் பெற்று, தேகி (தேகத்தை உடையவன்) என்னும் சொல்லால் குறிக்கப்படும் பந்தநிலையைக் கடந்து மேம்பட்டு, சிவகுணங்கள் திரண்டிருக்கும் பரமுத்திநிலை செறிவுறப் பொருந்தும் நிலை உண்டாகும். அந்த உயர்நிலையை அடைந்தோன் சிவனுக்கு நிகராகவே, சின்மயமான சிவத்துக்குரிய எண்குணங்களும் குறைவறப் பொருந்தப் பெற்றவனாய் விளங்குவான்.

10. **(கீழால் அவத்தை ஆகிய கேவலாவத்தையின் காரியம்)** சந்தத்திருப்புகழ் பாடிய அருணகிரி முனீந்திரரின் அமிழ்தமயமான திருவருளைச் சார்ந்து நிற்கும் நிலையை நன்குணர்ந்துள்ள நலம் மிக்கோய்! கருவிகளும், அவற்றின் காரணங்களும், விலங்குக் கட்டாக (தளைக்கும் பந்தங்களாக)க் கூறப்படும் ஆணவம் முதலானவைகளும் பாசம் எனும் சொல்லில் அடங்கும். நெற்றித் தானத்தில் தளர்ச்சியற்ற புருடதத்துவம், ஒன்று, பத்து இந்திரியங்கள், நான்கு அந்தக் கரணங்கள், பத்து வாயுக்கள், ஐந்து தன்மாத்திரைகள், வசனம் முதலான ஐந்து எனப்படும் முப்பத்தைந்து கருவிகளும் செயற்பட்டு நிற்றல் சாக்கிர அவத்தை ஆகும்; கழுத்துத்தானத்தில், முற்கூறப்பட்டவைகளுள் வன்மையான இந்திரியங்கள் பத்து நீங்கலாக, எஞ்சியுள்ள இருபத்தைந்து கருவிகளும் செயற்பட்டு நிற்றல் சொப்பன அவத்தை ஆகும்; இதயத்தானத்தில் பிராணன், சித்தம், புருடன் எனும் மூன்றும் செயற்பட்டு நிற்றல் சுழுத்தி அவத்தை ஆகும்; உந்தித் தானத்தில் பிராணனும் புருடனும் ஆகிய இரண்டு கருவிகள் செயற்பட்டு நிற்றல் துரிய அவத்தை ஆகும்; மூலாதாரத் தானத்தில் புருடதத்துவம் மட்டும் செயற்பட்டிருத்தல் துரியாதீத அவத்தை ஆகும் – என இவ்வாறு கீழ்நிலைக்குரிய ஐந்து அவத்தைகளையும் அறிக.

---

# 103. உரைப்பொடி

---

### *மேலாலவத்தையென்னுஞ்*
### *சகலாவத்தை.*

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**உ**ரைப்பொடி மெழுக்கிடை யொளித்ததுபோ லொளியறு கேவலத் தமிழ்ந்தவுயிர்
நிரைப்படி சாக்கிர மடையுமவ ணிருமல மைந்துட னிடையாறுந்
தரைப்புவி முதலிய வைந்துமரோ சார்ந்து நிகழ்ந்திடு மிதைத்தானே
கரைப்பெரு முறைக்கணஞ் சகலமெனாக் கழறிடு மருணெறி நுண்ணியனே. (1)

### *சகலாவத்தையின்காரியமாகிய*
### *மத்தியாலவத்தை.*

**பி**ணங்கிய யாதொரு பழங்கணினாற் பிராண னடங்கிய மூர்ச்சையகம்
முணங்கிய சாக்கி ரதீதமுயிர் முளைப்பது சாக்கிர துரியமவண்
உணங்கிய நினைவெழு மிடஞ்சுழுத்தி யூகவி சாரமக் கனவங்னே
இணங்கிய விருவிழி நோக்காகு மிடநடுச் சாக்கிர சாக்கிரமே. (2)

---

*1. உரைப்பொடி = பொற்றுகள்.*
*சார்ந்து = கேவலாவத்தையின் காரியத்துள்ள சாக்கிரக் கருவிகள் 35–உடன் இங்கியம்பப்படு 16–கருவிகளுங்கூடி. இப்படிக்கூடவே இங்ஙனம், எல்லாக்கருவிகளு நிகழுமென்பதுணரக் கிடக்கின்றது.*
*கரை = சொல்; ''மாற்ற நுவற்சி செப்புரை கரை'' என்பது நன்னூல்.*

*2. பழங்கண் = துன்பம்.  முணங்கு = அடக்கம்.  உணங்கல் = புலர்தல்.*

## நின்மலாவத்தையென்னுஞ் சுத்தாவத்தையின் காரியம்.

**தீ**க்கைபெற் றேபொருண் மூன்றனையுந் தெரிந்திரு பதுமொரு சோடசமும்
நீக்கவி சாரணை புரிவதுவே நின்மல சாக்கிரங் கருவிகடாந்
தாக்கலு நீங்கலு மின்றிடையே தயங்குத னின்மல கனவதன்மேல்
வீக்கிய கருவிக ணீக்கிமல மேனியைக் காண்டலச் சுழுத்தியரோ. (3)

**ம**லமெனுங் கேவல நீங்கியவண் மன்னரு ளாற்றனை யருளினையே
பலமொடு கண்டருள் வசத்துறைதல் பவமறு நின்மல துரியமொரு
கிலமுமி லாச்சிவந் தனைக்கண்டு கிளரதன் மகிழ்ச்சியி லழுந்துவது
நலநிரு மலதுரி யாதீத நவிலிவை தூயன வாகுமரோ. (4)

## பரையோகமும், பரைபோகமும், பரையதீதமும்.

**அ**ருளினி லுறைவது நெகிழ்வதுமின் றந்தர மமர்வது பரையோகந்
துரிதமி லதனொரு பயனான சுகவொலி யனுபவம் பரைபோகந்
தெருளுடை யதுகடந் திடுநிலையே சிவமரு ணறிய பராதீதங்
கருளறு மஙனமொ ரைந்தவத்தை கண்டிடு மதனையுங் கழறுதுமால். (5)

## மேம்படு முத்தமாவத்தை யைந்து.

**மு**த்திற மாயவவ் வருட்பரைக்கு முதற்பொரு ளாகிய பரமசிவம்
அத்துவி தமெனவுள் ளிருந்திடுமோ வல்லது புறம்பென விருந்திடுமோ
எத்திற மாகமற் றிருந்திடுமோ வென்றெழு திகைப்பினில் வருமவத்தை
உத்தம சாக்கிர முதலைந்தா யுரைத்திடப் படுமனு பவித்தறியே. (6)

## சுகரூபமும், சுகாதீதமும்.

**அ**ப்பெருஞ் சாக்கி ரதீதமெனா வறைந்திடப் படுமொர் பராதீதத்
தொப்புறு வளிவெளி யொடுங்கிடல்போன் றொடுங்கிடப் பரசிவ சுகரூபஞ்
சுப்பிர மெனத்தரி சனமாகுந் துணிந்ததி லடங்கல் சுகாதீதம்
இப்படி யறிபவ ரெவ்வரையு மெங்குக தேவென விறைஞ்சுதுமே. (7)

---

*3. "விசாரணை புரி" யும் ஒழுங்கினை, ஓங்காரமென்னுந் 96–ஆம் பத்தின் ஈற்றுத் திருப்பாட்டிற் காண்க.*

*"மலமேனியைக்காண்டல்" என்னும் இந்நிலையிலே மாயாமல நீங்கிக் கன்மமலமு மடங்கினமையின் ஆணவந்தேய்ந்து திரோதையெனநிற்கு மென்பதுணரக் கிடக்கின்றது.*

*5. துரிதம் = கலக்கம்.*

*7. 5–ஆந் திருப்பாட்டிற் போந்த பராதீதமென்பதுதானே இங்கும் "பராதீதம்" என அனுவாதஞ் செய்துகொளப்பட்டது; கூறுவன கூறும்பொருட்டு.*

### நிற்குநிலையும், இடையூறும்.

**பா**வனை யிலட்சிய மிழந்துசும்மா பதைப்பற விருந்திடு மொருநிலைக்கே
தூவருட் சிவசுக ரூபமது தோன்றிடும் பதிபசு பாசமெனுங்
கோவணை பொருள்களு ளெதையேனுங் குறிக்கினு முண்டிலை யெனவெணினுஞ்
சீவசு பாவம துதிக்குமருஞ் சிவசுக நிட்டையு நொடிக்குளறும். (8)

### கடவுளை முன்னிட்ட தத்துவவிசாரமே முக்கியமென்பது.

**இ**ன்னணங் கருவி விசாரமிலா தியாதொரு குறிமனு வுரையினின்றால்
தன்னுடை நாயக மதையடையுந் தனிச்சிவம் வருவதின் றதனதனுக்
கென்னுற வுளதுகொ லதுவதுவே யெய்திடு மாகலி னிகலறுத்துச்
சொன்னதை மதியின ரெவ்விதத்துஞ் சோர்வற மருவிடத் துணிவரரோ. (9)

### அருள் ஒளியாய்நின்று காட்டுமென்பதும், அருளுஞ் சிவமும் அபின்னமென்பதும்.

**நி**கழு நபோமணி யொளிதனையே நெருங்கின னெடுவுருக் காட்டிடல்போல்
இகழ்வறு மருட்பரை தனையடைந்தோ னெழிலுரு வையுநனி காட்டுமஃதே
திகழ்பரம் பொருளையு மேற்காட்டுஞ் சிவமரு ளிரண்டையுங் கதிரொளியாய்ப்
புகழ்பெறு வோய்தெரிந் ததையடைதி புகழ்ப்புத னிறையருட் பெருக்காலே.(10)

# 103. உரைப்பொடி

1. **(மேலால் அவத்தை என்னும் சகலாவத்தை)** பொற்றுகள் மெழுகினால் ஆகிய அடையில் ஒளித்துள்ளது போன்று ஒளியற்றுள்ள கேவல நிலையில் அமிழ்ந்திருந்த ஆன்மா, ஒவ்வொரு தத்துவமும் நிரலே சேரும் முறையில் சாக்கிர அவத்தையைப் பொருந்தும். அப்பொழுது சுத்த தத்துவங்களாகிய கருவிகள் ஐந்தும், வித்யா தத்துவங்களுள் புருடன் எனும் தத்துவ நீங்கலாக உள்ள ஏனைய ஆறும், நிலம் முதல் ஆகாயம் வரையிலான பூததத்துவங்கள் ஐந்தும் ஆக உள்ள பதினாறு கருவிகளும், கேவலாவத்தையின் காரியத்துள்ள சாக்கிரக் கருவிகள் முப்பத்தைந்துடன் கூடிப் பொருந்தும். இவ்வாறு பொருந்துவதையே சொல்வளம் செறிந்த பெரு முறைகளாகிய ஆகமத்தொகுதிகள் சகலாவத்தை என விளங்கிநிற்கும். அருள்நெறியில் ஒழுகும் நுட்பமான ஞான உணர்வுடையோய்!

---

*8. ‘பாவனை யிலட்சிய மிழந்து பதைப்பறச் சும்மாவிருந்திடும்’ எனக்கூட்டுக.*
*கோவணை பொருள்கள் = கண்ணாற் காணப்பட்டபொருள்கள்; கோ=கண்.*
*10. நபோமணி = சூரியன்.*

**2. (சகலாவத்தையின் காரியமாகிய மத்தியால் அவத்தை)** மாறுபட்டுப் பொருந்தும் யாதானும் ஒரு துன்பமிகுதியால் பிராணன் அடங்கப்பெறும் மூர்ச்சை நிலை உள்ளம் ஒடுங்கப் பெற்றுள்ள சாக்கிராதீதம் ஆகும்; மூர்ச்சை நிலையிலிருந்து மீண்டு ஆன்மா எழுவது சாக்கிரதுரியம்; அந்நிலையில், வறண்டு மறைந்திருந்த நினைவு மீண்டும் தோன்றும் நிலை சாக்கிர சுழுத்தி, அப்பொழுது நிகழும் ஊகமும் விசாரமும் சாக்கிரக் கனவு; அந்நிலையில் இணைக்கொண்டுள்ள இருவிழிகளும் உற்று நோக்கும் நிலை மத்திய நிலைக்குரிய சாக்கிர சாக்கிரம் ஆகும்.

**3. (நின்மல அவத்தை என்னும் சுத்த அவத்தையின் காரியம்)** தகுந்த குருவிடம் முறைப்படி தீக்கை பெற்று, பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களையும் விசாரித்து அறிந்து, முப்பத்தாறு தத்துவங்களும் ஆன்மாவைப் பிணித்துள்ள நிலையை அறிந்து தத்துவ நீக்கத்துக்குரிய முறையை அலசி ஆய்ந்து நிற்பதே நின்மல சாக்கிரம்; கருவிகள் சேர்ந்து பிணைத்திருத்தலும் கருவிகள் நீங்கி நிற்றலும் இல்லாமல் இடைப்பட்டு விளங்குதல் நின்மல கனவு; அடுத்த நிலையில், பிணித்துள்ள கருவிகளை நீக்கி, அசுத்த உடலின் தன்மையைக் கண்டு நிற்றல் நின்மல சுழுத்தி.

4. மலமறைப்பு எனப்படும் கேவல நிலையிலிருந்து நீங்கி, நிலைபெற்றுள்ள அருட்சக்தியால் தன்னையும் அந்த அருட்சக்தியையும் கண்டு அருளின் வயப்பட்டு உரைதல் நின்மல துரியம்; யாதோர் ஊனமும் சிதைவும் இன்றி முழுமையுறப் பொலியும் சிவபரம் பொருளைக் கண்டு, அதனிடம் கிளர்ந்து ததும்பும் பேரானந்தப் பெருக்கில் அழுந்தி நிற்பது நலம்தரும் நின்மல துரியாதீதம். கூறப்பட்ட இவ்வைந்தும் தூய்மை உடையனவாகும்.

**5. (பரையோகம்; பரைபோகம்; பரை அதீதம்)** தன்னை நெறிப்படுத்தும் அருளில் ஆழ்ந்து நிற்பதும், ஆழ்மையிலிருந்து நெகிழ்ந்து நீங்கி மேல் நிற்பதும் இல்லாமல் இடைப்பட்டநிலையில் பொருந்தி இருப்பது பரையோகம் ஆகும்; கலக்கம் அற்றுள்ள அந்த அருட்சக்தியின் விளைவான, சுகம் தருவதான நாத அனுபவம் வாய்த்திருக்கும் நிலை பரைபோகம் ஆகும்; தெளிவார்ந்த அருளைக் கடந்திருக்கும் நிலையே, சிவபரம்பொருள் வழங்கும் சிறப்பார்ந்த பராதீத நிலை ஆகும். இருள் நீங்கி நிற்பதான அந்த நிலையிலும் ஐந்து அவத்தைகள் நிகழும். அவற்றைப் பற்றியும் இனிக் கூறுவோம்.

**6. (மேம்படும் உத்தம அவத்தைகள் ஐந்து)** முத்திறப்பட்டுள்ள அந்த அருட்பரைக்கு முதற்பொருளாகத் திகழும் சிவபரம் பொருள் அத்துவிதம் எனக் கூறத்தக்க நிலையில் உள்ளே இருக்குமோ, பாகியப்பொருள் என வெளியே இருந்திடுமோ, மற்று வேறு எவ்விதமாக விளங்கித்திகழுமோ என உண்டாகும் திகைப்புநிலையில் பொருந்தி அமையும் அவத்தைகள் உத்தம சாக்கிரம் முதல் உத்தம துரியாதீதம் வரை ஐந்தாகக் கூறப்படும். அவற்றை நீ உனது சுவானுபவத்தால் அறிவாயாக.

7. **(சுகரூபமும் சுகாதீதமும்)** கூறப்பட்ட பெருமைமிக்க உத்தம சாக்கிராதீதம் எனக் கூறப்படும் ஒப்பற்ற பராதீத நிலையில், சமமாக ஓடும் காற்று ஆகாயத்தில் ஒடுங்கி நிற்றல் போன்று அவத்தைகள் ஒடுங்கிநிற்கும் பொழுது, பரசிவத்தின் சுக ரூபம் (ஆனந்தவடிவம்) மிகவும் தெளிவாகவும் ஒளி நிறைந்ததாகவும் தரிசனப்படும். உள்ளத் தெளிவுடன், அந்தத் தரிசனநிலையில் அடங்கி நிற்றலே சுகாதீதம் ஆகும். இவ்வாறு அறியும் ஞானியர் அனைவரையும் "எம் குகப்பெருமானே இவர்'' எனும் பாவனைகொண்டு வணங்கி நிற்போம்.

8. **(நிற்கும் நிலையும் இடையூறும்)** தியானபாவனை, தியானத்துக்குரிய தியேயப்பொருள் இரண்டையும் இழந்து வறிதே பதைப்பற்று ஆழ்ந்து நிற்கும் ஓர் உயர்ந்த நிலையில்தான் தூய அருள்மயமான சிவசுக ரூபம் என்பது தலைப்படும். அப்பொழுது பதி, பசு, பாசம் எனும் மூன்றன் சார்பாகக் கண்ணாற் காணப்படும் பொருள்களுள் யாதொன்றனைக் கருதினாலோ, இவை உண்டோ, இல்லையோ என விசாரம் செய்தாலோ, சுகரூப தரிசனம் மறைந்து சீவ சுபாவமே முளைத்துத் தோன்றும்; அதனால் பெறுதற்கரிய சிவசுகரூப தரிசனைக்குரிய நிட்டையும் ஒருநொடியில் சிதறிப்போகும்.

9. **(கடவுளைமுன்னிட்ட தத்துவ விசாரமே முக்கியம்)** இவ்வாறு ஆன்மாவைப் பிணித்துள்ள தத்துவ, தாத்துவிகக் கருவிகளைப் பற்றிய ஆழ்ந்த விசாரம் இல்லாமல் யாதேனும் ஒரு வடிவம், ஒரு மந்திரம், ஒரு தோத்திரம் என்ற அளவில் மட்டும் நின்றுவிட்டால், தனக்குரிய ஆன்மநாயகனான குகத்தை அடைந்துநிற்கும் ஒப்பற்ற சிவப்பெருநிலை வாய்க்காது. அந்த அந்தத் தத்துவம், அல்லது குறி என்பதனுக்கு யாதொன்று தொடர்புபட்டுள்ளதோ, அதுவே பயனாகப் பொருந்திடும் ஆதலால் மாறுபாட்டுணர்வை அடியோடு நீக்கி இங்கே கூறப்பட்டதைக் கூர்த்த அறிவுடையார் எவ்வாற்றானும் சோர்வறப் பொருந்தி நிற்க (முழுமையாக ஏற்றுக்கொள்ள) மனம் துணிந்து நிற்பார்கள்.

10. **(அருள், ஒளியாய் நின்றுகாட்டும், அருளும் சிவமும் அபின்னம்)** உதித்து இயங்கும் சூரியனின் ஒளியை நெருங்கி நின்றால், சூரியனின் ஒளி, அவ்வாறு நெருங்கி நிற்போனின் நல்லதொரு நெடிய வடிவத்தைத் காட்டி நிற்பது போன்று, இகழ்ச்சியற்ற அருட்பரையானது, தன்னை அடைந்தவனின் சொரூபத்தை நன்கு தெளிவாகக் காட்டும்; அந்த அருட்பரையே பரம்பொருளின் வடிவத்தையும் அடுத்த நிலையில் காட்டிநிற்கும். புகழ்நிலை பெறுபவனே! திருப்புகழ் ஞானியராகிய அருணகிரிப் பெருமானின் இறைவனான குகப்பெருமானின் அருட்பெருக்கால் சிவம், அருள் எனும் இரண்டையும் சூரியனும் அதன் ஒளியும் போன்று அபின்னம் என அறிந்து, அந்த அருட்சிவத்தை அடைந்து நிற்க.

# 104. பொறி

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பொ**றிமு னூல்கள்பிர மத்தி லேபகுதி பூக்கு மென்னின்முதன் மாயையின்
மறுவி லாக்கலையி லவ்வி யத்தமது வருமெ னப்பொருள்கொ ளாயிடை
அறிவி லாதவவி யத்த மென்பதினு மதிக மோர்புருட னென்னினே
தறுக ணைந்தினு மெழுந்தி டும்புருட தத்து வம்மென வுணர்ந்துகொள். (1)

**ஓ**ல மாமறைகள் புருட தத்துவ முரைத்த லாலதனின் மூலமாங்
கால மாதிமுத லைந்து மைந்துடைய கார ணப்பொருளு மெண்ணினாற்
கோல வாகம மறைந்த வாறிடை குலாமொ ரேழுமுறு மேயிது
மேல திர்த்தபடி வேத சம்மத மெனத்தெ ளிந்திடுவர் விழுமியோர். (2)

**சு**த்த மானபிர மத்தின் மாயையது தோன்று மென்புழி விநாசமில்
சுத்த மாயையின் வியாப கத்திகல் சுருங்கி நிற்குமிடை மாயைதான்
பத்தி யாய்விரித லென்று காணவணொர் பகுதி தோன்றுமெனின் மூலமாம்
அத்த னைக்குமொரு பகுதி யென்னுமொழி யமைத லாலதுவு மாயையாம். (3)

**வ**ழுத்து நன்னடுவி னான டுக்கணுறு மாயை மேலமல மாயையொன்
றிழுக்கி லாமலுள தென்று காண்டலினொ ரேசி லைந்துசிவ தத்துவம்
அழுத்த வாகம மறைந்த வாமுதிய வார ணஞ்சொலலு முண்டிவை
ஒழுக்க மாகவது விளக்கு மேலிவ ணுறுங்கொ லோமறையெ னும்பெயர். (4)

---

*1. முதன்மாயையினால் என வுருபு விரிக்க. முதன்மாயை = சுத்தமாயை. இறைதியானமுள்ள வர்க்கன்றி யேனையோர்க்குக் காலம் முதலியவைந்து மடங்காவாகலின், "தறுகணைந்து" என்றாரென்க. தறுகண் = அஞ்சாத்தன்மை; "தடுமா றுளத்தன் தறுகணன்" என்றார் நன்னூலாரும்.*

*2. மறைகள் புருடதத்துவ முரைத்தலைப் பிரச்நம், பைங்கலம், சாரீரகம் முதலிய அநேகோப நிஷதங்களிற் கண்ணுறலாம்.*

*4. வேதார்த்தத்திற் கியைந்தது சிவாகமப்பொரு ளாகலின் அது, "நன்னடு" எனப்பட்ட தென்க.*

*"ஆரணஞ் சொலலு முண்டு" என்றதை –*

*"சிவம்சக்திஞ்சஸாதாக்யா மீசம்வித்யாக்யாமேவச!" என்னும் அதர்வணவேத **பிருஹஜ் ஜாபாலோபநிஷத்** வசனங்கொண்டு வற்புறுத்துக. இதன்மாட்டுச் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசம் (சுத்த) வித்தையென்னுஞ் சிவதத்துவ மைந்துமிருத்தல் காண்க. இவ்வைந்தும், **சுவேதாச்வதரம், நாரதபரிவ்ராஜக** மென்னும் உபநிஷதங்கண்மாட் டோதப்பட்ட காலம் முதலிய வித்தியாதத்துவமேழும், **பிரச்நோபநிஷத்தின்**மாட்டோதப்பட்ட பிருதிவி முதலிய ஆன்மதத்துவ மிருபத்துநாலும் ஒருபனிடதத்திற்றானே நிரலே கூறப்படாமையின் வேதம் மறைபொருளுடைத்தென்பார் "ஒழுக்கமாக அது விளக்குமேல் இவண் உறுங்கொலோ மறையெனும் பெயர்" என்றாரென்க. ஒழுக்கம் = முறை.*

*5. விசரம் – விஸரமென்னும் வடசொல்லின் விகாரம்; கூட்டமெனும் பொருட்டு. அவ்வியத்தம் ஆவரணமாகவும், 'மகத்துவ' மெனப்படும் மகத்தாகிய தத்துவம் விட்சேப மாகவுங் கொள்ளப்படும்; இக்கிரமம், பைங்கலோபநிஷத்திலும் மறியக்கிடக்கின்றது.*

**அ**சுசி யாயபிர தான மானென வதிர்க்க வுள்ளபிர கிருதியில்
விசர மற்றவொர் மகத்து வுங்குணம் விரித்தி டாதவவி யத்தமும்
உசித மாயுறுதி யாயி ருத்தலென வுச்சி மாயையிலு முண்டுகீழ்
அசுசி யிற்சொன விரண்டு மாவரண மடல்விட் சேபமென வாகுமால். (5)

**ஆ**ர ணம்பெரு மகத்து மேனிலவு மவ்வி யத்தநிலை தாண்டியோர்
பூர ணப்புருட னுண்டெ னிற்சொலிய போக காண்டமுறு புருடனன்
றீர மிக்குடைய சுத்த மாயையுடை யெல்லை தாண்டியவிர் கின்றமா
கார ணப்பரம புருட னென்றவனை யறிவர் கந்தனெறி கண்டுளார். (6)

**இ**ந்த வாறுநனி நோக்கும் வேலைநில மெனும்வி சேடமுத லாய்மகத்
தந்த முப்பதுமொ ராறு மோகசக மாகு மென்பரற வோரிதே
எந்தை தந்தமறை யந்த மற்றெவையு மிதிலி ழிந்தமுடி வாமெனா
அந்த வீசனறி யப்ப காதவுரை யாடு வேமென வறிந்துகொள். (7)

**த**க்க விந்தநெறி நிற்கு மைந்தசிவ சம்பு வாகுமொரு குகனையே
சொக்கி நாடியறி யாது ஞொள்குநிலை துங்க வங்கைமது வுண்டிடா
தக்கை யானது திருப்பி நக்குமதி யாகு மாலய னறிந்திடாச்
செக்கர் மேனியை யுளேய றிந்தனனெ னப்பர் வாக்குமிது தேர்ந்துபார். (8)

**ஞே**ய வீசனை யகத்தி னோக்குமொரு நேரி லாதுபுற னோக்குதல்
காய வெள்ளிடை தனைச்சு ருட்டவொர் கருத்தெ முப்புவது போலெனா
வாயு சங்கிதையு மோலி டும்பெரிய மறைக ளின்றுணிவும் வேறிலை
நீயு முன்குகனை நாடி முத்தியி னிறீஇ நிற்கமுயல் வாயரோ. (9)

**சா**ம வேதமொழி சவண முந்தலைமை சாற்றும் வேதமொழி மனனமும்
ஏம வீற்றுமொழி நிதித்தி யாசனமு மெசுவின் மாமொழி சமாதியும்
ஆமெ னப்புக லொழுங்கு மிந்தவரு ளாற்றி னுக்கயல தன்றென
நீம னத்திடை யுணர்ந்தண் ணாமலை நிருத்த னைச்சிவணி வாழியே. (10)

---

*7. சகம் – ஜகமென்னும் வடமொழி விகாரம்; ‘கம்’ அழிதற்பொருட்டாதலின், தோற்றக் கேடுகளுடைத் தென்பது பொருள்.*

*8. அப்பர்வாக்கு – “தேடிக் கண்டுகொண்டேன் றிரு மாலொடு நான்முகனுந் தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்.” என்னுந் திருப்பாசுரமே.*

*9. வாயுசங்கிதை ஓலிடுவதை, அதன் ஞானநிலைமையுரைத்த வத்தியாயத்தே “காலம்” என்றற் றொடக்கத்துச் செய்யுளிற் காண்க.*

*10. சவணம் – ச்ரவணமென்னும் வடமொழி விகாரம்; கேட்டலென்பது தமிழ். இத்திருப்பாட்டின் பொருள், சிவரகசியத்தின் 6–ஆம் அமிசத்து **ரிபு கீதை**யின் 28–ஆம் அத்தியாயம். –*

*“சுயமதுவாந் தத்வமசி யென்னும்வாக்யஞ் சொல்லுமுப தேசமகா வாக்ய மாகும்*
*இயலுமகம் பிரமாஸ்மி யென்னும்வாக்ய மிலகுமநு பூதிமகா வாக்ய மாகும்*
*மயன்மருவாப் பிரஞ்ஞானம் பிரமவாக்ய மனனத்தி னப்பியாச வாக்ய மாகும்*
*அயமான்மாப் பிரமமென வறையும்வாக்ய மதற்கெல்லாஞ் சம்மதமாம் வாக்ய மாமே.”*

*என்றுரைத்தலினும் பெறலாம். சம்மதம் = சரியெனத் தெளிதல்.*

# 104. பொறி

1. ஞானசாரம் மிகுந்துள்ள வேதநூல்கள் பிரம்மத்தினின்று பிரகிருதி தோன்றும் என்று கூறுமாயின், சுத்தமாயையினால், மறுவற்ற கலை என்னும் தத்துவத்திலிருந்து அவ்யக்தமாகிய பிரகிருதி தோன்றும் எனப்பொருள் கொள்க; அவ்வேத நூல்களிலேயே அறிவில்லாத (அசேதனமான) அவ்யக்தம் என்பதைக் காட்டிலும் புருடன் மேம்பட்டிருப்போன் எனக் கூறப்பட்டிருக்குமாயின், அங்கே குறிக்கப்படும் புருடன் ஆற்றல் மிக்க காலம் முதலான ஐந்து தத்துவங்களிலிருந்தும் தோன்றும் புருடதத்துவமே எனத் தெளிவாக உணர்ந்து கொள்க.

2. மந்திரநாத முழக்கம் மிகுந்துள்ள பெரிய வேதங்கள் புருடதத்துவத்தைப் பற்றிக் கூறுவதால், அந்தப் புருடதத்துவத் தோற்றத்திற்குக் காரணமான காலம் முதலான ஐந்து தத்துவங்களும், இவை தோன்றும் நிலைக்களமாகிய வலிமைமிக்க காரணப்பொருளாகிய (சுத்தாசுத்த) மாயை என்பதும் சேர்த்து எண்ணப்பட்டால் பொருட்பொலிவு மிகுந்துள்ள ஆகமங்கள் கூறியுள்ள வாறு, இடைப்பட்டு விளங்கும் வித்யாதத்துவப் பகுதிக்குரிய ஏழுதத்துவங்களும் குறிக்கப்பட்டுள்ளனவாகக் கொள்க. இது, மேலே கூறியுள்ளபடி வேதநூல்களுக்கும் உடன்பாடே என ஞானத்தில் முதிர்ந்துள்ள பெரியோர் தெளிவுற உணர்ந்து நிற்பர்.

3. தூய்மையான பிரம்மத்தினின்று மாயை தோன்றும் என வேதநூல்களில் கூறப்படும் இடத்தும், அழிவற்றதாய் உள்ள சுத்த மாயையின் வியாபகத்துள் தன் ஆற்றல் சுருங்கப் பெற்று அடங்கி இருக்கும் இடைமாயையாகிய சுத்தாசுத்தமாயை என்பது நிரல்படக் காலம் முதலான தத்துவங்களாக விரிவடைதல் எனப் பொருள் கொள்க. அதே வேதத்தில் பிரம்மத்தினின்று பிரகிருதி தோன்றும் எனக் கூறுப்பட்டிருப்பின், காரணப்பொருளாக உள்ள இடைமாயைக்கும் பிரகிருதி எனும் பெயரும் பொருந்தி யுள்ளதால், 'பிரம்மத்தினின்று பிரகிருதி தோன்றும்' என்று கூறுமிடத்தும் இடைமாயையே குறிக்கப்பட்டதாகக் கொள்க.

4. கூறப்பட்டுள்ள வேத–சிவாகம சமரச நியாயப்படி, இடையே உள்ள சுத்தாசுத்த மாயைக்கும் மேலே சுத்தமாயை எனும் ஒன்று எவ்விதக் குறைவுமின்றி உள்ளது என உணரப்படுதலால், குற்றமற்ற சிவதத்துவங்கள் ஐந்தையும், மெய்ப்பொருளைத் திடம்பட உரைக்கும் ஆகமங்களில் கூறியுள்ளது போன்றே பழைய வேத நூல்களிலும் கூறியுள்ளமையும் பெறப்படுதலுண்டு. வேதங்கள் குறிப்பாக இவ்வாறு இவற்றைப் புலப்படுத்தாமல் ஆகமத்தைப்போன்றே முறைப்படி இன்னதற்குப்பின் இது என விளக்கிக் கூறுமாயின் அதற்கு 'மறை' எனும் பெயர் பொருந்துமோ ?

5. அசுத்தமான பிரதானம் என்றும் 'மான்' என்றும் கூறவுள்ள பிரகிருதி மாயையில், வெளிப்படும் பொருளின் கூட்டமற்றுள்ள மகத்துவம் என்பதும், குணங்கள் விரிவடைந்து வெளிப்படாமல் அடங்கியுள்ள அவ்வியக்தம் என்பதும் பொருத்தமாகவும் உறுதியாகவும் விளங்கி நிற்றல் போன்று, மேலுள்ள சுத்தமாயையிலும் இவை உண்டு. கீழே உள்ள அசுத்த

மாயையில் உள்ளனவாகக் கூறப்படும் மகத்துவம், அவ்வியக்தம் எனும் இரண்டும் முறையே விட்சேபம் எனவும் ஆவரணம் எனவும் விளங்குவனவாகும்.

**6.** வேதமானது ‘‘பெரிதாயுள்ள மகத்து என்பதற்கும் மேலே உள்ள அவ்வியக்தம் என்பதையும் கடந்து பூரணத்துவம் சான்ற புருடன் உளன்’’ என்று கூறுமாயின், இங்கே கூறப்படும் புருடன் போககாண்டத்தில் பொருந்தும் புருடன் (புருடதத்துவம்) அன்று; அருட்பெருக்கை மிகுதியாக உடைய சுத்தமாயையின் எல்லையையும் கடந்து அகண்டாகார பூரணப் பொருளாய் விளங்கும் பரம மூலகாரணனாகிய பரமபுருடன் (சிவன்) என்பவனே அவ்வாறு வேதத்தில் கூறப்படுகின்றான் என கந்தப்பெருமானின் அருள்நெறி விலாசத்தை உணர்ந்துளோர் நன்கு அறிவார்கள்.

**7.** இவ்வாறு மிகவும் தெளிவு பொருந்த நோக்கி உணரும் பொழுது, அறநெறிப்பட்ட அறிஞர்கள் நிலம் எனப்படும் பூததத்துவம் முதல் மகத்து ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் மோக முறுத்தும் உலகு ஆகும் எனக்கூறுவர். இம் முடிபே எந்தையாய சிவனார் அருளிய வேதத்தின் முடிபும் ஆகமத்தின் முடிபும் ஆகும். (வேதாந்த சித்தாந்த சம்மதம் ஆகும்). மற்று வேறுபடக் கூறப்படும் எந்த முடிபுகளும், இம்முடிபுக்குக் கீழ்ப்பட்டு இழிந்துள்ளனவே ஆகும் என்று அந்த ஈசனே அறியுமாறு தகர்க்கப்படாத வகையில் உள்ள உறுதி வசனத்தைக் கூறுவோம் என அறிந்து கொள்க.

**8.** தகுதிசான்ற இந்தச் சமரச நெறியில் ஈடுபட்டிருக்கும் மைந்தனே! சிவசம்புப் பெருமானே எனத் திகழும் ஒப்பற்ற குகபரம் பொருளையே காதலால் மிகவும் மகிழ்ந்து தன் உள்ளத்துள்ளேயே நாடி அறியாமல் வாடித் தொய்ந்து நிற்கும் நிலையானது, உயர்வுடைய உள்ளங்கையில் இருக்கும் தேனை உண்ணாமல், அந்தக் கைகைத் திருப்பி புறங்கையை நக்கும் இழிவான மனப்போக்காகும். "திருமாலும் பிரம்மனும் தேடிக் கண்டு அறியாத செந்நிறத் திருமேனிச் சிவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்’’ எனவரும் அப்பர் திருவாக்கும் அகத்தே நாடி நிற்றலை உணர்த்தும். இதனை ஆய்ந்துபார்க்க.

**9.** ‘‘கருணைப்பெருக்குடைய ஈசனை அகத்தே நேடி உணரும் ஒரு நேரிய செயலை மேற்கொள்ளாமல் அவனைப் புறத்தே தேடி அலைதல் ஆகாயவெளியைப் பாய்போல் சுருட்டிக்கொள்ள ஒருவன் உள்ளம் கொள்வது போலாகும்" என வாயுசம்மிதையும் உரத்துக் கூறும். பெரிய வேதங்களின் முடிவான கோட்பாடும் இதனினும் வேறு இல்லை. நீயும் உனது குகப்பொருமானை உனது உள்ளத்துள்ளே ஊன்றிக் கண்டுணர்ந்து முத்திநிலையில் உன்னை நிறுவிக்கொண்டு நிலைத்திருக்க முயல்வாயாக.

**10.** சாமவேதக் கூற்று ‘‘கேட்டல்’’ (சிரவணம்) என்பதையும் முதன்மையாக உள்ள ருக்கு வேதத்தின் கூற்று ’சிந்தித்தல்’ (மனனம்) என்பதையும், இன்பநிலையைக் காட்டும் அதர்வண வேதக் கூற்று ‘தெளிதல்’ (நிதித்தியாசனம்) என்பதையும், யசுர்வேதக் கூற்று ‘நிட்டை’ (சமாதி) என்பதையும் புலப்படுத்திக் கூறும் ஒழுங்குமுறையும், இங்கே புலப்படுத்தப்பட்ட அருள்நெறிக்கு அயலாக உள்ளதன்று – இவ்வாறு உனது மனத்துள் தெளிவாக உணர்ந்து கொண்டு அருணகிரிப் பெருமான் துதித்த ஞானக் கூத்தனாகிய குகப்பெருமானைப் பொருந்தி வாழ்வாயாக.

# 105. திருமறை

**கலிவிருத்தம்.**

*தனதன தாத்தன தனன தனந்ததன.*

**தி**ருமறை யேத்துனை நினைகை சிறந்துலகின்
மருணெறி நோக்குபு மலைவி லிருந்தவெனைக்
கருணையி னாற்கடை சியின்மெய் கமழ்ந்துளவிவ்
வருணெறி சேர்த்தனை யமுத பரம்பொருளே. (1)

*தானன தத்தன தனன தனந்ததன.*

**மூ**டமி குத்திருண் முழுகி யிருந்தவெனைப்
பாடவி தித்துமெய் பதிய நினைந்ததுபோல்
தேடல றுத்தொரு சிவமடை யும்படியென்
தோடணை யுட்டுணர் நடைசெய் சுதந்திரனே. (2)

*தனதன தந்தன தனன தனந்ததன.*

**ந**னவினி யங்குமொர் நலன தொழிந்துவருங்
கனவினு நின்றிடி லுறுதி கலைந்திடுமேற்
சொனநல னின்றென வறிநர் சுகஞ்சததம்
எனதக முங்கொள லெவித நிரந்தரனே. (3)

*தனத்தன தாத்தன தனன தனந்ததன.*

**அ**வத்தைக ணீத்தறி யமல சிதம்பரமாப்
புவிப்புல நோக்கினு மெவர்கள் பொருந்துவரோ
அவர்க்கித மாற்றுந ரடியி லிருந்துதிருந்
துவக்கறு தூட்குமொர் துகளெ ளியன்றரமே. (4)

*தனதன தானனந் தனன தனந்ததன.*

**கி**ரியையு ஞானமுங் கிளரு மிரண்டடியாய்த்
திரிதரு தேசிகன் றிருவ டியன்புடையார்
அரியடி யானதென் றலையி லழுந்திடினும்
பெரியவொர் பாவனம் பெறுகு வலெங்குகனே. (5)

---

2. *தோடணை என்துணருள் எனக்கூட்டுக; இதழ்களோடுங்கூடிய வெனது இதயகமல மலருள் என்பது பொருள்; துணர் = மலர். நடை =நடனம்;* ***சூ–நிகண்டு.***
4. *துவக்கறு தூள் = பந்தமில்லாத துகள்; "கிட்டல் துவக்கம் கட்டுதலாகும்" என்பது* ***பி–நிகண்டு,*** *துவக்கு – முதனிலைத் தொழிற்பெயர். கட்டெனினும் பந்தமெனினு மொக்கும்.*
5. *அரியவடியென நிற்கற்பாலது "அரியடி" என நின்றது; தொகுத்தல்.*

*தானன தத்தன தனன தனாதனன.*

**ஏ**றுந டுக்கணி லிறைநி னைவாமமையம்
வேறுநி னைப்பெது நுழைய விடாதுசெயும்
பேறுடை யுத்தமர் பெருமை யெனானுவலக்
காறெங னொட்டுமெ னமல கலாவலனே. (6)

*தனதன தானன தனன தனத்ததன.*

**அ**ருண்முத லாமுனை யகில வுயிர்த்தொகைதாங்
கருதொரு பேறுறி னிழிவு கணித்தெதிரே
பொருநம னார்நகர் புதல்கண் முளைத்திடுமென்
றொருமுடி வோதவொர் தடையெ னுயிர்த்துணையே. (7)

*தானன தானன தனன தனத்ததன.*

**வா**ரியி னீர்முழு வதும ளிவிட்டிடினுஞ்
சீரிடு நீயொரு சிறிது நடுக்கமுறாய்
ஆரிய வாள்கெனு மளியின் வடித்திடுகண்
நீரினி லேநனை வுறுவை நிரப்பிலியே. (8)

*தனந்தன தானன தனன தனத்ததன.*

**வி**ரிந்துறு பூதிய முயிரை விடுத்தவுடன்
சரிந்தும ணாயழி தரமெ னவத்தவுனைப்
பிரிந்துழல் பாவிகள் பெருமை யெனக்கருதாத்
தெரிந்தக ணாரடை திருவு மெனக்குறுமோ. (9)

*தாந்தன தானன தனன தனத்ததனா*

**ஊ**ன்புதை வீழ்முன முனது மதர்ப்படைவான்
மீன்படு வாரிதி சுலவும் விழுப்புவிமேல்
நான்பர தேசியெ னவுள னயப்பையிடாய்
தேன்புகழ் பாடிய தெருள னுளப்பதியே. (10)

---

*6. காறெஙன் ஒட்டும் = அளவு எவ்வாற்றாற் பொருந்தும். காறு – அளவெனும் பொருள்பட நிற்கு மோரிடைச்சொல்.*

*7. புதல்கள் = புற்கள். "ஓர் தடையென்" என்றதில் ஒருதடையுமின்றென்னுந் தேற்றங் குறிப்பாகக் காணப்படுகின்றது.*

*8. ஆள்கெனும் – ஆள்கவெனும் என்பதன் விகாரம்.*

*9. உடம்பு உயிரைவிட்டு நீங்கி யொழியுமுன்னமேயே அது, மானுடராற் சிறுவரை யோம்பப்படுகிற தென்பதூஉம், பின்னர் உயிரை யோம்புந்திறன் றெய்வவுதவிக்கே யுண்டாகலின் அவ்வுதவியைத் தூலநீங்குமுன்னே தேடிக்கோடல் அறிவுடையார் செய்கையாமென்பதூஉம் இத்திருப்பாட்டுழை யுணரக் கிடக்கின்றனவென்க. கருதா = கருதி; செய்யா வென்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம்.*

# 105. திருமறை

1. அமுதமயமான பரம்பொருளே! இறையருட் செல்வப் பொலிவுடைய வேதங்கள் புகழ்ந்து கூறும் உன்னை நினைந்திருக்கும் செயலில் தேர்ச்சியுற்று இவ்வுலகினரின் மருட்சிமிக்க நெறியைக் கண்டு மலைத்துப் போயிருந்த என்னை உனது கருணையால் தடுத்தாட்கொண்டு, வேதத்தின் அந்தத்திலும் ஆகமத்தின் அந்தத்திலும் புலப்படுத்தப்பட்ட ஞானத்தின் நறுமணம் கமழ்ந்திருக்கும் இந்த அருள்நெறியில் சேர்த்துவைத்தாய்.

2. இயல்பாகவே தன்வயப்பட்டிருக்கும் ஆற்றல் உடைய பெருமானே! மூடத்தன்மை மிகுதியும் வாய்ந்தவனாகிய, அறியாமையாகிய இருளில் முழுகி இருந்த என்னை உனது புகழ் பாடுமாறு விதித்து சத்திய நெறியில் நான் ஊன்றி நடக்க நீ திருவுளம் கொண்டது போன்று, இனியும் உன்னைத் தேடி அலையும் அலைச்சலை நீக்கி ஒப்பற்ற சிவப்பேற்றை நான் அடையும் வண்ணம் எட்டு இதழ்களோடு கூடிய எனது இதய தாமரையுள் ஞான நடனம் செய்தருள்க.

3. இடையீடற்று எங்கும் பூரணமாக வியாபித்திருப்பவனே! நனவு நிலையில் செயற்பட்டிருக்கும் நலத்தையும் நீங்கப்பெற்று அடுத்துவரும் கனவு அவத்தையில் நின்றாலும், உறுதிப்பாடு குலைந்து போகுமாயின் ஞானநூல்களில் கூறப்பட்டுள்ள ஆனந்தப் பேறு வாய்க்காது என அறிபவர்கள் அடையக்கூடிய சுகநிலையை எப்பொழுதும் எனது உள்ளமானது பெற்றிருத்தல் என்பது எவ்வாறு?

4. அவத்தைகள் அனைத்தையும் கடந்து அறியக் கூடிய தூய ஞானப் பெருவெளிமயமாகவே அனைத்தையும் காணும் பரிபக்குவ நிலையை, இங்கே உள்ள வெளியுலகப் பொருள்களைக் காணும் போதும் எவர்கள் சிதையாமல் பெற்றுள்ளார்களோ, அவர்களுக்குப் பணிவிடை செய்வோரின் பாதங்களிலிருந்து உதிர்வதும், பந்தமற்றுள்ளதுமான சிறிய துகளுக்கும் ஒரு சிறிய துகளாக, எளியேனின் சிறுமைத் தகுதி உள்ளது.

5. எமக்குரிய குகப்பெருமானே! கிரியாசக்தி என்பது ஒரு திருவடி எனவும், ஞானசக்தி என்பது மற்றொரு திருவடி எனவும் சிறப்புறக் கொண்டு, இவ்வுலகில் உலவும் ஞான குருவின் திருவடிகளை வணங்கி நிற்கும் அன்புடையார்களின் அரிய திருவடியானது அடியேனின் தலையில் அழுந்தி நின்றாலும், நான் மிகப்பெரிய தூய்மை நிலையை அடைந்து ஒளிர்வேன்!

6. சகல கலைகளிலும் ஆற்றல் வாய்ந்துள்ள என் அமல நாயகனே! சிவஞான யோகப் பயிற்சியில் மேன்மேலும் பரிபக்குவம் வாய்ந்து உயர்ந்துள்ள நிலையில் வாய்க்கும் நடுநிலைத்தானத்தில் தியானபாவனை மேற்கொண்டிருக்கும் போழ்து, வேறு எந்த நினைப்பையும் இடையே ஊடறுத்து நுழையாத வண்ணம் தடுத்து நிற்கும் நற்பேறு வாய்த்துள்ள சிவஞானியரின் பெருமை என்னால் கூறப்படுவதற்குரியவகையில், அப்பெருமையின் அளவு எவ்வாறு பொருந்திநிற்கும்? (அன்னோர் பெருமை என்னால் புகழ்ந்து கூறும் அளவுக்கு உட்படுவதன்று).

7. என் உயிர்த்துணையாக ஒளிர்வோய்! அருட்செல்வ முதற்பரம்பொருளாக விளங்கும் உன்னை, அனைத்து உயிர்த் தொகுதிகளும் அன்புடன் நினைத்திருக்கும் அரிய பேற்றினைப் பெறுமாயின், அந்த அந்த உயிரின் குற்றத்தைக் கணித்து எதிர்நின்று போரிடும் யமதருமனின் நகரம் புற்கள் முளைக்கப்பெற்றுப் பாழாகிவிடும் எனும் ஒரு உறுதியான முடிவுக்கருத்தைக் கூற யாதேனும் ஒரு தடை உண்டோ?

8. உலகினர்க்கு வழங்கக் கூடிய எந்தப் பொருள் தொடர்பாகவும் வறுமைக்கு ஆட்படாதிருப்போய்! கடலின் நீர் முழுவதும் வறண்டு நின்றாலும், அவரவர்க்குரிய சீர்மைகளைக் கொடுக்கும் நீ, நீர் வறண்டு விட்டதே என ஒரு சிறிதும் நடுக்கம் கொள்ள வழி இல்லை. ஏனெனில் “சீரின் உயர்ந்தோய்! என்னை ஆட்கொள்க” என, நான் மனம் கசிந்து வடித்திடுகின்ற மிகுதியான கண் நீரில் நீ நனைந்து நிற்பாய். [கடல்நீர் முழுவதாலும் அபிடேகிக்கப்பட்டும் சிறிதும் நடுக்கமுறா (பெருநெருப்பாகிய) நீ, பக்தியால் வடிக்கும் கண்ணீரில் நனைவது பெருவியப்பு].

9. என் தலைவ! உன்னை ஒருசிறிதும் நினையாமல், உனது திருவருட் சார்பிலிருந்து பிரிந்து நின்று அலைந்து கொண்டிருக்கும் பாவிகளின் பெருமையானது, பற்பல கருவிகளாலும் விரிந்து பொருந்தும் இந்தப் பூத உடல், உயிர் நீங்கிய பிறகு, தனது கட்டுக் கோப்பான அமைப்புகளெல்லாம் விரைவில் சரியப்பெற்று மண்ணோடு மண்ணாகி அழியும் நிலைக்குச் சமமாகும். இவ்வாறு கருதி, மெய்ந்நெறித் தரம் தெரிந்துள்ள ஞானியர் அடைகின்ற திரு மிக்க நிலையும் எனக்கு வாய்க்குமோ?

10. தேன்போல இனிக்கும் திருப்புகழ் பாடிய தெளிவார்ந்த ஞானப் பேறு வாய்த்த அருணகிரிப்பெருமானின் உள்ளத்துள் வெளிப்பட்டிருந்த முழுமுதல் இறைவ! மீன்கள் மிகுந்துள்ள கடலால் சூழப்பட்டுள்ள இவ்வுலகில், இந்த ஊனுடல் சாய்ந்து கீழே விழுந்து விடுவதற்கு முன் உனது பூரண ஆனந்தக் களிப்புநிலையை அடையும் பொருட்டு, நான் பரதேசி போன்று அலைந்து கொண்டிருக்கிறேன். நான் இறந்துபடுவதற்குள் உனது களிப்புநிலையை எனக்கு ஈந்தருள்.

# 106. ஞாலம்

## *மாயா பாச நிட்டை.*

*அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

**ஞா**லம் புகழு மறுபத்து நான்கு கலையுட் கற்றதிற்கார்
போலக் கவியு நிட்டையுமைம் பொறிகெட் டிடச்செய் நிட்டையுமுட்
காலை யிழுக்கு நிட்டையுமுட் கரண மெருக்கு நிட்டையுமேன்
சீல மிலாத பாசமெனத் தெரிக்குஞ் சைவ சித்தாந்தம். (1)

## பசுபேத பசு நிட்டை.

**அ**ணிமா முதலெண் சித்திகளுக் காமெண் டிறத்து நிட்டையுமேன்
துணியெட் டொளியா நிட்டையுமுட் டோயொன் பானா நிட்டையுமெட்
டணிசேர் நிறமா யனுபவமா யலங்கு மிரண்டு நிட்டையுமால்
பணுமெண் ககன நிட்டைகளும் பசுநிட் டையெனப் பனுமணிநூல். (2)

## பாரமார்த்திக பதிநிட்டை.

**மூ**டி னானும் விழித்தானு மூவா முதலை யொருபடித்தாக்
கூடி யிருக்கக் காண்பதுவே குறையில் பதியி னிட்டையெனாக்
கோடித் திடுநற் பனுவலெலாங் கொற்றத் தனியே குயின்றவிதில்
ஆடி யடங்கத் திருவுளத்தெண் ணாயோ பேயா யலைவேனை. (3)

## சீவன்முத்தர் நீர்மை.

**ப**திமா விறுமாப் புடையவர்கள் பாரி லெதுசெய் திடினுமிழுக்
குதியா ததுதான் வறுத்தபர லுதகம் புகினு மங்குரியா
ததுபோ லெனவிற் பனரறைவா ராண்டு நடைதான் கடலுறைமீன்
எதிருப் பேறா துய்வதுபோ லிருக்கு மெனவு மிசைப்பாரே. (4)

## பாசஞானமும், பசுஞானமும்.

**பு**றமா மார்க்க மூவெட்டிற் பொருந்து மறிவு மேட்டறிவும்
மறலார் பாச மாமகத்தான் வழுத்து மூவெட் டுடையறிவும்
பிறழா துயர்சித் தாந்தவழிப் பேத மோரெட் டுடையறிவுந்
திறலார் போத முளைத்திடலாற் சீவ வறிவா மெனவறைவார். (5)

---

2. *எட்டொளி – பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், இரவி, மதி, சீவான் மாவென்பன.*

*ஒன்பான் = பூப்புகழ்ப் பிரமனென்னும் **100–**ஆம் பத்திற் பகரப் பட்ட பிரமன் முதலிய திருமேனியொன்பது மென்க.*

*எட்டணிசேர் நிறம் :– வெண்மை, செம்மை, பொன்மை, கறுப்பு, மிகுவெண்மை, நீலம், புகை, பன்னிறக்கலப் பென்பன.*

*எண் ககனம் – சீதாகாசம், நீலாகாசம், தூமாகாசம், அழலாகாசம், மின்னாகாசம், செவ்வாகாசம், வெள்ளாகாசம், தெள்ளாகாச மென்பன.*

3. *கூடியிருத்தல் = அனுபவத்தழுந்துதல்,*

5. *இத்திருப்பாட்டிற் சொல்லப்பட்ட புறமார்க்கமும் அகமார்க்கமு மெத்தனை யெத்தனை வகைப்படினும் அவையெல்லாம், பூதமுதல் நாதஇறுவாய்க் கிடந்த **36–**தத்துவங்களுளடங்கு மென்பது "பரம்" என்னும் **26–**ஆம் பத்தினாலேயே ஓர்ந்து கொள்ளலாம். ஈசுரஐக்கியவாதம், பாடாணமோக்க வாதம், சிவாத்துவிதத்துட் பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்த வாதம், ஈசுர அவிகாரவாதம், வாமசித்தாந்த நிமித்தகாரணபரிணாமவாதம், சைவபேத வாதமென்னும் **8–**ம் உயர்வுடைச் சிந்தாந்தவழிப் பேதமென்றும், இவைகளும் அகமார்க்க வகைகளும் (பதிஞானமெய்துமாறு) சீவபோதவொடுக்கம் பெற்றில வாகலிற்*

### பதிஞானம்.

இன்ன படியென் றாய்ந்திடவு மிழிபோ தத்தா லேதொடவுஞ்
சின்ன வரையு மமையாதாய்த் திகழும் பதிமுற் றறிவெனவே
இன்ன லறுநூ லியம்புமது வெந்த வணமோ வந்தவணம்
மன்னு வதுதா னதைமருவு மார்க்க மிதையும் பெறுவேனோ. (6)

விழிகண் டிடுநீ ருளதேனும் வெய்யோன் காட்டக் காணுமலாற்
பழிகொண் டுளதா னேயொன்றைப் பாரா தயலோர்க் குங்காட்டா
திழிவொன் றாவெய் யோனெவையு மினிது விளக்கு மிதுபோலப்
பழிகண் டுளவப் பசுஞானம் பதிஞா னத்திற் கிணையன்றே. (7)

### அடக்கிக்கொண் முறைமை.

இரும்பைக் காந்த மிழுப்பதுபோ லென்போ தத்தை யிழுத்தநனே
அரும்பப் புவரைக் கலப்பதுபோ லடக்கி யளாவி யவ்வுவர்நீர்
திரும்ப வுருக்காட் டாததுபோற் சீவ வுருவை நனிமறைத்துத்
துரும்பை யழிக்கு முவர்போலச் சுடருன் னறிவா யாக்காயோ. (8)

அங்கி யொளியை மேனிமிரா தடக்கும் பரிதி யொளிபோலப்
பங்க முடையென் னுயிரறிவைப் பாந்த வமிழ்த்து விழிநிலையை
மங்கத் தனது வயமாக்கு மாகப் பகலோ னொளிநேரத்
துங்க நினது வயமாக்கித் துலக்க நீதா னினையாயோ. (9)

---

*பசுஞானமென்றுஞ் சிலர் தெரிப்பரென்பார், “அகத்தால் வழுத்து மூவெட்டுடையறிவும், பிறழாதுயர் சித்தாந்தவழிப் பேதமோரெட் டுடையறிவும், திறலார் பாசம் முளைத்திடலாற் சீவவறிவாமெனவறைவார்” என்று கூறினாரென்க. போந்த வாதமனைத்தும் அனுட்டிக்கு மான்மாக்களும் அவற்றினைப் போதிக்கும் புத்தகங்களும் அவற்று எவ்வித முடிபுகளும் உளவோ? இலவோ? என்னுஞ்சங்கையில், அன்னணம் உள, இல; சிலவுள; அவை மறுக்கப்படூஉ மதரிற் கற்பனா கௌரவ மேற்படுமாறு கற்பித்துக்கொளப்பட்டன வென்றல் சித்திக்குமிடத்தும் இந்நூலாசிரியர்க்கு யாதொரு சம்பந்தமுமில்லையென்க; என்னை? “என அறைவார்” என்று கூறிவிட்டமையின். “போதம்” என்பது யாது? எத்தன்மைத்து? என்பனபற்றி விரித்து விளம்பப்பட்டவெல்லாம் தகராலயரகசியத்தே “சிற்பர சிதாகாசமுத்தி” என்றற்றொடக்கத்துச் செய்யுண்மாட்டு நன்கறியக் கிடக்கின்றன. மறல் = பிணக்கு. திறல் = வலி.*

6. *சின்னவரை = சிற்றளவு; 94–ஆம் பத்தில் இன்னதிறமாக என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரை காண்க.*

8. *அப்புவாகிய நீரும் உவராகிய வுப்பும் அணுவணுவாயுள வாதலிற் புணர்க்கை போலியென்பது சிலர்கூற்று. அன்னணங் கொள்ளினும் அவற்றை யொருசேர்த்து வைத்துக்கொண்டி ராநின்ற யாதானுமொரு சத்திக்கு அங்ஙனம் பூரணமுளதாதலின் அது, பயனில் கூற்றாம். இதுவேயுமன்றி, “சீருயர்ந்தவான்மா” என்னும் 46–ஆம் பத்தின் ஈற்றுத் திருப்பாட்டுப் பொருளினையு மிங்ஙனங் கருதிக் கொள்வதோடு பின்வரு “வேதம்” என்னும் 109–ஆம் பத்தின் பொருளினையுங் கவனித்தா லேற்புடைத்தெய்துமால்; இறைவன், யாண்டுங் கலந்துளனெனற்குக் கடனீரையும் உப்பையும் புராணமுனிவர் உவமானங் காட்டினதை “உலகமெலாம்” என்னும் 47–ஆம் பத்தின் 5–ஆந் திருப்பாட்டகத் துளதுங் கருதுக. இங்கெடுத்துக்கொண்ட அனுபவக்கலப்பு, “சுத்தாத்வைதம்” ஆகலின் இது பொருந்துமாறு, திட்பத்தா னுணர்ந்துகொளத் தக்கது (“முந்தைநாளிற் சாருவாகன்” என்றற் றொடக்கத்த திருப்பாட்டுரை).*

நினது போதத் தொளிகலந்து நிகழப் பணியென் வாக்குமனம்
நனவி லெழுந்து கறங்கிடினு நலியா வுனது வடிவாக்கி
அனுபோ கமுமவ் வனுபவியு மெனவே யியைந்து நடந்திடுமா
றெனையாள் பெரியோ யருணகிரிக் கிறையே குகனே யிழைத்தருளே. (10)

# 106. ஞாலம்

**1. மாயா பாச நிட்டை:** உலகம் புகழ்ந்து கூறும் அறுபத்து நான்கு கலைகளுள் பலவற்றை உள்ளமுறக் கற்று, கற்றனவற்றில் மேகம் போன்று நெஞ்சம் கவிந்துநிற்கும் நிட்டை, ஐம்பொறிகளும் தம் ஆற்றல் கெட்டு நிற்குமாறு செய்யும் நிட்டை, பிராணவாயுவை உள்ளே இழுத்துக் கும்பித்துநிற்கும் நிட்டை, அந்தக்கரணங்களின் ஆற்றலை அழிக்கச் செய்யும் நிட்டை – ஆகிய இவையனைத்தும் மேன்மையும் சீரிய முறைமைப்பாடும் இல்லாத பாசத்தொடர்பான நிட்டை வகைகளாகும் எனச் சைவசித்தாந்த நன்னெறி புலப்படுத்தும்.

**2. பசுபேத பசுநிட்டை :** அணிமா முதலான எண்வகைச் சித்திகளைப் பெறுவதற்காக மேற்கொள்ளப் படும் எண்வகை நிட்டைகள், பிருதிவி, நீர், தீ, காற்று, வெளி, சூரியன், சந்திரன், ஆன்மா எனும் எண்வகை ஒளிகள் தொடர்பான நிட்டை, அகமுகப்பட்ட பிரமன், திருமால், ருத்திரன், மகேசுவரன், சதாசிவம், சிவம், சக்தி, விந்து, நாதம் எனும் ஒன்பது சிவபேதங்கள் தொடர்பான நிட்டை, வெண்மை முதலான எண்வகை நிறங்களின் தொடர்பாகக் காட்டு, அனுபவம் என இருவகைகளாக நிகழும் நிட்டை, மயக்கமுறுத்தும் சீதாகாசம் முதல் தெள்ளாகாசம் வரை உள்ள எண்வகை வெளிகள் தொடர்பாக நிகழும் நிட்டை – ஆகிய இவையனைத்தும் பசுநிட்டை என பொருட்பொலிவார்ந்த ஆகமநூல் கூறும்.

**3. பாரமார்த்திகப் பதிநிட்டை:** கண்களை மூடிக்கொண்டிருந்தாலும் விழித்திருந்தாலும், அவற்றால் ஒருசிறிதும் பாதிப்புக்கு உட்படாமல், அழியா முதற்பொருளாகிய சிவத்தோடு ஒருதன்மைப்படவே கலந்து இருக்கும் அனுபவ நிலையைக் காண்பதே, குறைவில்லாத பதிநிட்டை ஆகும் என்று வேத ஆகம சாத்திரங்கள் முழங்கிக்கூறும். இணையற்ற உயர்ச்சி உள்ளதாய்த் தனியே கூறப்பட்ட இந்நிட்டை நிலையில் எனது இந்திரியச் சேட்டைகள் ஆடி ஓய்ந்து அடங்கி நிற்கும் வகையில், பேயாய் அலைகின்ற என்னையும் நினது திருவுள்ளத்தே நினைக்க மாட்டாயோ ?

**4. சீவன்முத்தர் தன்மை:** முழுமுதற்பொருளின் காம்பீர்யமான திருவருட்பொலிவு வாய்க்கப் பெற்றுள்ளவர்கள், இந்நிலவுலகில் எச்செயலைச் செய்தாலும், அன்னோர்க்கு வினைப்பயன் அணுகாது. வறுக்கப்பட்ட விதை நீர்ப்பாங்கான இடத்தில் விழுந்தாலும் முளைக்காது இருப்பது போன்று அன்னோர் செய்யும் செயல்களும், இனிவரக்கூடிய பயன்களை தோற்றுவிக்காத வகையில் விளங்கும் என ஞானவித்தகர் கூறுவர். அந்நிலையில் அவர்களின் செயற்பாடு, கடல்நீரில் உறைகின்ற மீன் உப்பு ஏறாமல் சீவித்திருப்பது போன்று இருக்கும் எனவும் அன்னோர் விளக்கிக் கூறுவர்.

**5. பாச ஞானமும் பசு ஞானமும்:** புறச்சமயங்களாக உள்ள இருபத்து நான்கினாலும் விளையும் அறிவும், நூலறிவும், பிணக்கம் கொண்டுள்ள பாச அறிவாகும்; அகச்சமயங்களாக

உள்ள இருபத்து நான்கினாலும் விளையும் அறிவும், நெறிபிறழாமல் உயர்ந்துள்ள சைவசித்தாந்தத்தைச் சார்ந்தனவாய்ப் பேதப்பட்டுள்ள ஈசுர ஐக்கிய வாதம் முதலான எண்வகை மார்க்கங்களாலும் விளையும் அறிவும் ஆகிய இவற்றால், ஆற்றல்மிக்க சீவபோதமே முளைத்து நிற்றலால், இவ்வாறு பெறும் அறிவு பசுஞானமாம் என்று அறிஞர் கூறுவர்.

**6. பதி ஞானம்:** இன்ன தன்மையை உடையது என்று ஆய்ந்து கூறவும், இழிந்த சீவபோதத்தால் சிறிதளவேனும் தொடமுடியாததாகவும் விளங்குவது பதி. அது முற்றறிவு மயமாகவே விளங்குவது என்று ஆன்மாவின் பாசத்துன்பத்தை அறுக்கும் ஆகமநூல் கூறும். சுட்டிக் கூறுதற்கரிய 'அது' எவ்வண்ணம் பொலிகின்றதோ அவ்வண்ணமாக நின்று அத்துவிதமாகப் பொலிவதுதான் அதனோடு பொருந்தி நிற்கும் நன்னெறியாகும். இவ்வாறு உள்ள இந்த நெறியில் ஒழுகும் பேற்றையும் நான் பெறுவேனோ!

7. கண்ணானது காணும் தன்மை உடையதே எனினும் அது சூரியனின் ஒளி காட்டக் காணுமே தவிர, சிறிய ஆற்றலே உடையது என்னும் இழிநிலை உடைய அக்கண் தானாகவே ஒருபொருளைக் காணாது, பிறர்க்கும் காட்டாது. இழிநிலையற்று உயர்ந்துள்ள சூரியன் எவற்றையும் இனிதே விளக்கப்படுத்திக் காட்டும். இதேபோன்று, ஆற்றலற்றது எனும் பழிகொண்டுள்ள அந்தப் பசுஞானமும் காட்டக் காண்பது. எனவே இது பதிஞானத்துக்கு நிகராக ஆகவே ஆகாது.

**8. அடக்கிக் கொள்ளும் முறைமை:** இரும்பைக் காந்தக்கல் தன்பால் இழுத்துக் கொள்வது போன்று என் சீவபோதத்தையும் உன்பால் இழுத்துக் கொண்டு, அந்நிலையில் நீர், உப்போடு கலந்து தன்னுள் அந்த உப்பை அடக்கிக் கொண்டு நிற்பது போன்று உன்னறிவினுள் அடக்கிக் கலந்துநின்று அந்த உப்பானது நீருள் அடங்கி மீளவும் தன் வடிவத்தைக் காட்டாது இருப்பது போன்று சீவ உருவத்தையும் நன்றாக மறைத்துக்கொண்டு, துரும்பை அழித்திடும் உப்பைப்போன்று விளங்கும் உனது பூரண ஞானமயமாகவே ஆக்கிக் கொள்ள மாட்டாயோ?

9. நெருப்பின் ஒளியை நன்கு பிரகாசிக்கச் செய்யாது தன் ஒளியால் அடக்கிநிற்கும் சூரியனின் ஒளியைப் போன்று சிறுமை என்னும் குற்றமுடைய எனது சீவபோதத்தை உன்னுள் பதுங்கி அடங்குமாறு அமிழ்த்திக் கொண்டு, கண்ணின் காட்சித்திறத்தை மங்கிநிற்குமாறு தனது வயப்படுத்திநிற்கும் ஆகாயவெளியில் உள்ள சூரியனின் ஒளியைப் போன்று, உயர்ச்சி பெற்றுள்ள நினது வயமாக முற்றிலும் ஆக்கிக் கொண்டு, எனது சீவ போதம் சிவபோதமாக விளங்குமாறு செய்ய நீயும் திருவுள்ளம் கொள்ள மாட்டாயோ?

10. என்னை ஆட்கொள்ளும் பெரியோய்! அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்த முழுமுதல் இறைவ! குகப்பெருமானே! நினது பூரண ஞானத்தின் ஒளி என் சீவபோதத்தில் கலந்துவிளங்குமாறு செய்து, என் வாக்கும் மனமும் சாக்கிர அவத்தையில் கிளர்ந்தெழுந்து காற்றாடி போன்று சுழன்றாலும் நலிவடையாத உனது வடிவாகவே என் வடிவத்தை ஆக்கி, அனுபவிப்பவனும் அனுபோகம் என்பதும் இரண்டற்றிருத்தல் போன்று நானும் உன்னுடன் அத்துவிதமாகக் கலந்து விளங்கிடுமாறு உனது திருவருளை வழங்கி நிற்பாயாக.

# 107. பரஞ்சோதி

### சரியையின் ஞானம்.

*கட்டளைக்கலிப்பா.*

**கூ**டல் சுலாந்தல மீதுகொல் லாமைவன் கரண பந்தனஞ் சாந்தமெய் பேசுதல்
படர கத்துட் டியானந் தவம்பரா பரன தேவலெல் லாமெனக் கோடலென்
றிடரி லாதுசொல் லெட்டு நிகழ்ந்திடி னீசற் கட்ட மகாமலர் சார்த்திய
தடம லர்ச்சியுண் டாமென வாற்றுமுன் றாசர் தாட்பொடி நான்பரஞ் சோதியே.(1)

### கிரியையின் ஞானம்.

**உ**டம்புக் கோயிலி னுண்மனத் தொண்டனா லுண்மை யென்னுந் துடைப்பு மெழுக்குமிட்
டடம்பு காவதி லாவியை லிங்கமா யாக்கி யுன்னைப் பதிட்டைசெய் தன்பெனுங்
குடம்பி றங்கற லாட்டியர்ச் சித்துரங் கூர்ந்த பத்திநெய் பால்பழ மூட்டுமோர்
திடம்பெ ருத்த விழுத்தவர் பேற்றினைத் தெரிக்க வல்லுந ரார்பரஞ் சோதியே.
(2)

### யோகத்தின் ஞானம்.

**நெ**ஞ்சுங் காலுந்துள் ளாமலி ருந்துமா னீத்த ஞான மயானந்த மாயருள்
அஞ்சி வத்தொட ளாந்திறங் கண்டுகொண் டயிலு மூணுறக் கத்தினு மந்நிலை
கொஞ்ச மும்பிற ழாதுநி றீஇடுங் கொள்கை யாளர் முதாலுனை நம்பியே
பஞ்சை யாய்ப்பர தேசத்தி னிற்குமென் பையு ணீக்கவெண் ணாய்பரஞ் சோதியே.
(3)

### ஞானத்தின் ஞானம் ஞானதரிசனம்.*

**இ**றைந டாத்து நமக்கொர் சுதந்திர மின்றெ னச்செயல் குன்ற விருந்துதன்
அறிவி னுக்கறி வானதைப் பற்றுபோழ் தவிருங் காலரு ணோதயம் போலுளே
கறையி லாவொளி மெல்லமெல் லக்கரங் காட்டு மத்தைத் திரோதையின் செய்கையென்
றறியு ஞானத்தின் காட்சிகண் டாரடை யாக்க மெற்குங் கொடாய்பரஞ் சோதியே.
(4)

---

*1. – இதன்கட் கூறப்பட்ட கரணபந்தனம் – வெளிக்கரணமாகிய இந்திரிய பந்தனமும், உட்கரண மாகிய மனாதிபந்தனமுமாகப் பகுக்கப்படுமாற்றான் இரண்டாம். விடயங்களிற் செல்லாது புரியுந் தடையே இங்குப் பந்தனமெனப்பட்டது.*

*அட்டமாமலர் = புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை யென்பன. வெள்ளெருக்கு வரையப்படுமாயின் வெண்கடம்பு கோடற்பாலதாம்.*

*2. அடம் = குறைவு; அடக்கமென்பதன் சிதைவெனக்கொளலாம்.*

*3. கொஞ்சம் = கிஞ்சித் என்னும் வடசொல்லின் விகாரம்.*

*★ இஞ்ஞானதரிசனத்திற்றானே ஆன்மதரிசனமு மடங்கிவிட்டது.*

*4. அவிருங்கால் அருணோதயம்போல் = விடியற்காலம் போலவும், அருணோதயம் போலவும்.*

### ஞானத்தினிற்கு நிலை.

**செ**ல்லு வார்க்கிரும் பூமிபுன் பூட்சிக்குச் சேத னன்பொற் சதாவுக்கு வாரிபோல்
எல்லின் ஞான முயிர்க்கொரு தஞ்சமா மென்று ணர்ந்ததைச் சிந்தித் ததன்கணே
வல்ல றாம லழுந்திடு கானெடு மாசுப் போதத்தை மூடிக் கிளர்ந்தெழு
நல்ல ஞானத்தி னிற்குமிக் காரடை நன்கெ னக்குங் கொடாய்பரஞ் சோதியே.(5)

### ஞானாதீதத்திற் பரைதரிசனம்.

**சொ**ன்ன ஞானந் தழைத்திடக் கற்குநூற் சொல்லைப் பல்பொழு தும்பயின் றாங்கொரு
வன்ன றைப்பட மாங்கலிங் கத்தினை மாறி மாறி யொலித்தென வாயிடை
மன்னி யேநன் கழுந்தும தீதத்தை மருவி யேயஃ திருந்துமில் லாமலும்
மின்னி நிற்கு மருட்பெருங் காட்சியோர் மேதை யெற்குங் கொடாய்பரஞ் சோதியே.
6

### பரையோகமும், பரைபோகமும், பரமானந்தமேலீடும்.

**அ**ருளின் காட்சியின் மேற்பரை யோகமு மதனின் போகமு மந்தமுந் தாண்டிமெய்ப்
பொருளிற் பம்பர மோய்ந்து கிடத்தல்போற் பொருந்து மேனிலை யாச்சொல வுள்ளவிப்
பெரிய கேடும் பெருத்த விழுப்பமும் பெற்று நானுய்ய வாற்றிந்த மார்க்கமே
குருகு மார்க்கமற் றுள்ள பிபீலிகைக் கூறென் பார்புக ழென்பரஞ் சோதியே. (7)

## உபாயநிட்டை

### உலகழிப்பு.

**உ**றழ்வு நிட்டையி லின்பத் தழுந்திட வொல்லா தங்கண் விழிப்புற் றிழிந்துளார்
அறிவ சேதன மாம்பிர பஞ்சமவ் வாண்ட வன்செயற் கண்ணுள வெங்கணும்
நறிய தேவனொர் ஞானம தேகுறை நலிவி லாதுள தென்றுல கைக்கெடுத்
திறைவன் ஞாலமென் றின்றதை நோக்குமோ ரியல்பு நல்லதன் றோபரஞ் சோதியே.
(8)

---

*5. பூட்சி = உடம்பு. சதா = மரக்கலம். வாரி = கடல்.*

*எல்லில் ஞானம் = இரவும் பகலுமில்லாத ஞானம்; எல்–இரவுக்கும் பகலுக்கும் பெயரென்பது **லகரவெதுகையிற்** பெறப்படும். இரவு = கேவலாவத்தை. பகல் = சகலா வத்தை.*

*6. வல் நறைப்படமாங் கலிங்கம் = வலிய அழுக்குப் படாமாகிய புடைவை; நறை = குற்றம் = அழுக்கு.*

*6, 7. – இத் திருப்பாட்டுக்களுழைப் பரைதரிசனமே "அருட்பெருங்காட்சி" என்றும், "அருளின் காட்சி" என்றுங் கூறப்பட்டது. இதன்மேலுறூஉம் பரையோகாதிகளை, 103–ஆம் பத்தின் 5–ஆந் திருப்பாட்டு முதலாகப் படித்துணர்ந்து கொள்க.*

*7. குருகு = பறவை; ரகரவெதுகை. பிபீலிகை = எறும்பு; வடசொல்.*

*8. இன்றி யென்னும் வினையெச்சம் உகர ஈறாய் நின்றது செய்யுளாகலின். "நோக்குமோ ரியல்பு" என்றவிது, நாரதபரிவ்ராஜ கோபநிஷத்தின் 9–ஆம் உபதேசத்தில்–*

*(ஸ்வரூபாநுஸந்தாநம் குர்வந் ஸர்வமநந்ய*
*புத்யாஸ்வஸ்மிந்நேவமுக்தோபவதி)*

**பிரமாண்டதானம்.**

**அ**ண்டம் யாவும் படைத்தளித் தோய்வுசெய் யாற்றலுள்ளவ னீயென் றுணர்ந்தடல்
கொண்ட யானென தோய்த்துமட் காரியங் குயிற்ற னீக்கிநின் பான்மன நாட்டுமா
அண்ட தானத்தை நல்லறச் சங்கிதை யறையு மன்னண மாற்றலு நன்றன்றோ
வண்டி லூர்ப்பிர யாணியைப் போலிஙன் வதிந்து லாத்தரு மென்பரஞ் சோதியே.
(9)

***சிவத்தலவாசமும், சிவவிரதமும்***

வினைக்கை நீக்கண்ட தானமொல் லாததேல் விளிவு நாளிற் சிவத்தலத் தேனுமுய்ந்
துனைக்கை கூப்புந ரோம்பியங் கேயுடம் புகுத்த லல்லது மாச்சிவ நோன்பினாற்
பனிக்கும் யாக்கை விடுத்தனன் றென்றுசெய் பத்தர்க் கும்பதி நீயெனைக் கூடிக்கா
நினைக்க மோக்கங் கொடுத்திடுங் கோப்பெயர் நின்ம லன்பர மேபரஞ் சோதியே.
(10)

# 107. பரஞ்சோதி

**1. சரியையில் ஞானம்**

ஒளிக்கும் ஒளியூட்டும் மூலகாரணப் பேரொளியே! கடல் சூழ்ந்த இந்நிலவுலகில் கொல்லாமை இந்திரிய நிக்கிரகம், மன அடக்கம், சாந்தம், உண்மை உரைத்தல், உள்ளத்துள் தியானபாவனை, தவம், அனைத்தும் இறைவன் கட்டளைப்படியே நடக்கும் எனும் உறுதி கொள்ளல் – என இவ்வாறு மாறுபாடின்றிக் கூறப்படும் எட்டையும் மேற்கொண்டிருப்பின், சிவபெருமானுக்கு மகிமைமிக்க எண்மலர்கள் அர்ப்பணித்தலால் நேரும் பெரிய வளப்பநிலை உண்டாகும் என்று கருதி, மேற்கூறப்பட்ட கொல்லாமை முதலான எட்டுச் செயல்களையும் மேற்கொண்டிருக்கும் அடியார்களின் திருவடித் துகளாக நான் உள்ளேன்.

**2. கிரியையில் ஞானம்**

பரஞ்சோதியே! தேகம் எனப்படும் ஆலயத்துள்ளே, மனமாகிய தொண்டனால் சத்திய நெறியாகிய துடைப்பு (குப்பையை அகற்றல்) சாண மெழுக்கு என்பவை இயற்றப்பட்டு

*8. "யாவற்றையும் அன்னியமென்பதொழித்துச் சொரூபானு சந்தானமுஞற்றிக் கொண்டு தன்கண்ணேயே முத்தியடைகின்றனன்" எனக்கூறப்பட்டிருத்தல் காண்க. இது தானே, **தேவிகாலோத்தரத்தும்** "வானம்போல வடிவிலதா யெங்கு மானதாகத் தியானம்" என வருவதாயிற்று. **சூதசங்கிதையின்** மானதயாகத்துப் 16–ஆம் யாப்பும், **தத்துவப்பிரகாசத்திற்** "கண்ட தோருருவை" என்றெழுசெய்யுளும் இவ்வுபாயமேயுணர்த்தி நிற்கின்றன. மேலை உபநிஷத்வசனக் கிரந்தவெழுத்துக்கள், திட்பத்தே (=3 – ஆம் பத்தின் முந்தைநாளிற் சாருவாகன் என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரையிற்) காட்டப்பட்டுள. அங்ஙனமே வேறெடுத்துக்காட்டுங் கண்ணுறலாம்.*

*9. அறச்சங்கிதை = தருமசங்கிதை; சைவபுராணத்தது; பாதாளலோக வர்ணனை யுரைத்த 31– ஆம் அத்தியாயம்.*

குறைவற்றுள்ள அக்கோயிலில் ஆன்மாவையே லிங்கவடிவமாக்கி அந்த லிங்கத்தில் பரம்பொருளாகிய உன்னைப் பிரதிட்டை செய்து, அன்பாகிய திருமஞ்சனநீரால் அபிடேகம் செய்தும் அர்ச்சனை செய்தும் திடமான பக்தி எனப்படும் நெய், பால், பழம் ஆகியவற்றை நிவேதனம் செய்தும் – இவ்வாறு பரிபூரணமாக சிவவழிபாட்டைச் செய்யும் உறுதிப்பாடு மிக்க சிறந்த தவச்செல்வர்களின் சிவபுண்ணியப் பேற்று வளத்தை இன்னதெனக் கணித்துக் கூறுவர் யார் ?

**3. யோகத்தில் ஞானம்**

மனமும் பிராணவாயுவும் சஞ்சலம் ஏதும் இல்லாமல் அடங்கப்பெற்றிருந்து, மயக்க உணர்வற்ற தூய ஞானானந்த மயமாக விளங்கி, அருள்மயமான சிவத்துடன் இரண்டற நிற்றலாகிய ஐக்கியநிலையை அனுபவித்து, உணவு கொள்ளும் நேரம், தூங்கும் நேரம் ஆகிய வற்றிலும் கூட, தமது தியான பாவனையிலிருந்து சிறிதளவேனும் பிறழாமல் தம்மை முறைப்படுத்தி நிறுத்திக் கொள்ளும் உயர்ந்த ஞானயோகக் கோட்பாடு உடையவர்களின் முழுமுதற் பரம்பொருளே! பரஞ்சோதியே! உன்னையே உறுதியாய் நம்பிக்கொண்டு, வறுமைமிக்கவனாய் அயல் தேசத்தில் உள்ள எனது துன்பங்களையெல்லாம் நீக்கி அருளத் திருவுளம் கொள்வாய்! (இங்கே அயல்தேச வாழ்க்கை என்பது, தனக்குரிய ஆன்ம சொரூபத்தில் நில்லாமல், பூத உடம்பு உடையவராக இருத்தல்).

**4. ஞானத்தில் ஞானம் – ஞானதரிசனம்**

பரஞ்சோதியே! அனைத்தையும் இறைவனே நடத்துவான்; நமக்கு ஒரு சுதந்திரமும் இல்லை என்ற கோட்பாட்டைக்கொண்டு, செயலற இருந்து, தன் அறிவுக்கு அறிவாக உள்ள பரம்பொருளை ஐக்கிய பாவனையால் விடாது பற்றிக் கொள்ளும் பொழுது, விடியற்காலம் போலவும், சூரிய உதயம் போலவும், களங்கமற்ற ஒளிச்சுடரானது தனது கதிர்களைப் பரப்பிநிற்கும். அதனைத் திரோதை எனப்படும் சக்தியின் செய்கை என உணரும் ஞானதரிசனப் பேறு பெற்றோர் அடைய உள்ள ஆக்கத்தை எனக்கும் வழங்கி அருள்வாய்!

**5. ஞானத்தில் நிற்கும்நிலை**

பரஞ்சோதியே! நடந்து செல்வார்க்கு பெரிய நிலமும், பூதமயமான உடம்புக்கு ஆன்மாவும், பொலிவுமிக்க மரக்கலத்துக்குக் கடலும் ஆதாரமாக விளங்குவது போன்று, ஆன்மாவுக்கு இரவும்பகலும் இல்லாத (கேவல அவத்தைக்கும் சகல அவத்தைக்கும் உட்பட்டிராத) ஞானமே ஆதாரமாகும் என்று நன்குணர்ந்து அத்தகைய ஞானப்பேற்றைச் சிந்தித்து அந்த ஞானத்தின்கண்ணே, குறைவுபடாமல் முழுமையாக அழுந்திநிற்கும் பொழுது, அழுக்குடைய சீவபோதத்தை மூடிக் கவிந்து கிளர்ந்து எழும், சிவஞானத்தின் முதிர்ச்சி நிலையில் நிற்கும் அருட்பேறுமிக்க மகாஞானியர் அடைய உள்ள மேலான சிவநிலையை எனக்கும் வழங்கி அருள்வாய்!

**6. ஞானாதீதத்தில் பரைதரிசனம்**

பரஞ்சோதியே! கூறப்பட்ட ஞானநிலை தழைத்து விளங்குமாறு, உரிய நூல்களைக் கற்று, அவ்வாறு கற்கும் நூல்களின் நுட்பக்கருத்துக்களைப் பல் முறையும் பலகாலும் பயின்று சிந்தித்து, வலிய அழுக்குப்படிந்துள்ள புடைவையாகிய ஆடையை மாறி மாறித் துவைத்து அழுக்கு நீக்குதல் போன்று, மன அழுக்கு நீங்கப்பெற்று, அந்நிலையில் நிலைபெற நன்கு அழுந்தி நிற்கும் அதீத நிலையைப் பொருந்தி, அந்த ஞானம் உள்ள தென்றும் இல்லதென்றும் சொல்ல முடியாத வகையில் பின்னிநிற்குமாறு திகழும் அருட்பெருங்காட்சியாகிய பரைதரிசனம் பெற்றோர் அடைய உள்ள ஞானப் பேரொளி நிலையை எனக்கும் வழங்கி அருள்க.

**7. பரையோகமும், பரைபோகமும்: பரமானந்தமேலீடும்**

அருளாளர் புகழ்ந்து கூற உள்ள என் பரஞ்சோதிப் பெருமானே! பரைதரிசன அனுபவம் பெற்றபின்னர் பரையோக அனுபவம் பெற்று, கடந்து, அதன்பின்னர்ப் பரைபோகம், போகாந்தம் ஆகிய அனுபவநிலைகளைக் மெய்ப்பொருளாகிய சிவத்தின்பால், பம்பரம் சுழற்சியற்று ஓய்ந்திருத்தல் போன்று அடங்கி நின்று ஓய்ந்து, பொருந்தும் உயர்ந்த உன்னதநிலை எனக்கூற உள்ள ஓய்வுநிலையாகிய இந்தப் பெரிய 'கேடு', பெரிய சிறப்பு நிலை ஆகியவற்றை சுவானுபவமாகப் பெற்று நான் உய்தி அடைய மேற்கொண்டிருக்கும் இந்த சைவசித்தாந்த ஞானமார்க்கம் என்பதே, பதங்க மார்க்கம் என இல்லாமல் பிபீலிகா மார்க்கம் என உள்ள நியாயத்தின்பாற்பட்டது என மூதறிவாளர் கூறுவர்.

**8. உபாயநிட்டை உலகழிப்பு**

பரஞ்சோதியே! ஞானநிட்டையில் அழுந்தும்போது தொடர்ந்து இன்பத்துள் ஆழ்ந்து நிற்க இயலாமல், சாக்கிர அவத்தைக்கு மீண்டும் வந்து விட்டால் அவ்வாறு வருவோரின் ஞானமானது "அசேதனமாகிய இப்பிரபஞ்சம் முழுவதும் ஆண்டவனின் செயற்பாட்டில் உள்ளதேயாம். நான் நோக்குமிடம் எங்கும் மேம்பட்ட பரசிவனாரின் ஞானவிலாசமே குறைவும் நலிவும் இல்லாமல் நிறைந்துள்ளது" எனும் கருத்தைக் கொண்டு புறவுலகத்தோற்றம் காணாமல், பொங்கித்ததும்பும் ஞானவிலாசத்தையே எங்கும் கண்டு அனுபவித்து, அசேதன உலகத் தோற்றக் காட்சியை அடியோடு நீக்கி, 'இறைவன்', ''ஞாலம்'' எனும் பேத உணர்வின்றி, உலகைக் காணும் ஞான நோக்கம் நன்மை தரத்தக்கதன்றோ!

**9. பிரமாண்டதானம்**

குற்றங்களை நீத்து, ஊர்தோறும் திரியும் வழிப்பிரயாணி போல் இங்கே அலைந்து வாழும் எளியேனின் பரஞ்சோதியே! அனைத்து அண்டங்களையும் சிருட்டிசெய்து, காத்துப் பிறகு ஒடுக்கி நிற்கும் ஆற்றல் உள்ளவன் நீ என்று உணர்ந்து, விடாப்பிடியாக நின்று வருத்தும் ஆற்றல்கொண்ட 'யான்' 'எனது' எனும் அகங்கார மமகாரங்களை நீத்து, உலகத்தொடர்பான செயல்களைச் செய்வதைத் தவிர்த்து, நின்னிடமே மனத்தை அர்ப்பணித்து நிற்பதாகிய பிரம்மாண்ட தானம் என்பதைப் பற்றிச் சைவபுராணத்து தருமசம்மிதை விளக்கிக் கூறும். அவ்வாறு பிரம்மாண்டதானம் செய்வதும் நன்மை தரத்தக்கதே அன்றோ!

**10. சிவத்தல வாசமும் சிவ விரதமும்**

நினைக்க மோக்ஷம் கொடுக்கும் அருணாசலம் எனும் தலத்துப்பெயர் பூண்டுள்ள நிர்மல முனீந்திரனாகிய அருணகிரிப் பெருமானுக்கு வாய்த்த பரம் பொருளே! பரஞ்சோதியே! வினையின் திரட்சியை நீக்கவல்ல பிரம்மாண்ட தானம் செய்ய இயலவில்லை எனில் வாழ்நாள் இறுதியில் யாதேனும் சிவத்தலத்தில் வசித்திருந்து உன்னைத் துதித்துக் கைகூப்பி வணங்கும் அடியார்களுக்குப் பணிவிடைசெய்து பூத உடலை இழத்தல்; அல்லது, பெருமைமிக்கதும். உரியதுமான சிவவிரதம் ஒன்றை அனுட்டித்து, அழியும் தன்மை உடைய இந்த உடலை விடுத்தல் – இதனைச் செய்வது நன்றென்று கருதி அங்ஙனமே ஆற்றும் பக்தர்கள் அனைவர்க்கும் முழுமுதற் பொருளாக விளங்கும் நீ என்னுடன் கலந்திருந்து காத்தருள்க.

# 108. பரம்பரன்

*கலிவிருத்தம்.*

**ப**ரம்பர னிலையெனும் பதடிக ளுரைகேட்
டுரங்குறைந் திருத்தலை யொழித்தன மெனுங்கீர்க்
கரங்களை யவருடை வாய்களிற் கடவுந்
தரங்கெழு கவிகளைத் தாழ்தலு முறையே. (1)

**ந**கத்துறை தூத்தவர் நாடுநஞ் சிவனை
நகத்தரை நாற்றிகை நபமெனு மறுமா
முகத்தினு நோக்கொரு மோதமுள் ளவர்வாய்
முகத்தினு நோக்கயிர்ப் போமன முசுவே. (2)

**தா**னைக்கு மானைக்கும் பூனைக்கு நடுச்சா
ராநிற்கெம் மானைச்ச தாநச்சு மகத்தார்
ஆனைச்சொன் னாவற்ற வாணிக்கை யறுத்தே
ஏனைச்சொன் னாவற்ற தோலிற்கு ளிருப்பார். (3)

**தா**னையின் முடியுமப் பூனையின் சமனும்
ஆனையி னடியுநன் றாயெழி னஙனே
ஆனையின் றிறனறப் பூனையின் றிறனாய்த்
தானையை யடையலாங் கோணையன் றகையால். (4)

*2. நகம் = மலை.*

*நோக்கயிர்ப்போ – நோக்கவயிர்ப்போ என்பதன் விகாரம். அயிர்ப்பு = ஐயம்.*

*3, 4–ஆந் திருப்பாட்டுக்கள், ஒன்றற்கொன்று சம்பந்தமாய்நின்று பொருடரூஉம் மா விசித்திர கவி (பெருமிறைக்கவி) என்பதுகருதி நூலாசிரியராலேயே செய்யப்பட்ட தனியுரை, இப்புத்தகத்தோடேயே சேர்க்கப்பட்டுள தென்க.*

**வா**னவர் பார்ப்பரு மதர்ப்பரம் பொருட்கு
நானொரு மாத்திரை நனிமிகுந் திருந்தும்
நானவன் பேற்றினை நணுகில னவனால்
ஊனமுற் றாற்பய னுறனிச முணர்வே. (5)

**நி**ரந்தர னேநினக் கதிகமிந் நிலம்யாம்
பொருந்திய வாழ்க்கைகள் போதுமென் பவரேழ்
கிரந்தியின் மீநிவந் தவனொரு கிருபை
அருந்திநின் றாடுவ ரதையடை யறிவே. (6)

**த**ப்பிலாப் பதஞ்சலி சாற்றறு விதத்துள்
ஒப்பினிற் சேருமிங் குரைக்குமத் துவிதம்
அப்பிரா மணனென லன்மையின் பொருளை
எப்படி யுணர்த்துமோ வப்படி யெனவாம். (7)

**இ**ந்தநற் பொருண்மையி னிவன்றர மிலதாய்
அந்தநற் பொருளென வழிவது மிலதாய்ப்
பந்தமில் பரமுத்த மெனுந்தரம் படர்ந்தாங்
கெந்தையெண் குணசுக மனுபவித் திருப்பான். (8)

**மூ**ன்றிற்கு முதலென மூன்றிற்கு நடுவென
மூன்றிற்கு மீறென மூன்றிற்கு ணிறைவெனத்
தோன்றிப்பஞ் சதையுற லிலதெனச் சொலுமென்
தோன்றற்கு ளுறைபவர் தோன்றற்கில் லிலையே. (9)

**நா**ன்கினி நடந்தொரு மூன்றினின் றவனுண்
பான்கிள ரிரண்டிருந் தொருமையிற் படுக்கும்
மேன்களி தரும்பொருள் வியன்புகழ்க் கவிக்கோன்
நான்கதி பெறும்படி நவின்றது மவனே. (10)

---

**6.** *ஏழ்கிரந்தி : – மகத்து, அகங்காரம், சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்பன;* ***சிந்தாந்தசாராவளியுரையும்*** *இவ்வாறே விளக்குகின்றது.*

*மீநிவந்து = மேலோங்கி: 'நிவந்துசென் னீத்தம்' என்றார்* ***மதுரைக் காஞ்சியினரும்.***

**7.** *– இத் திருப்பாட்டுப் பொருள்,* ***பரிபூரணானந்தபோதத்தில்*** *"இம்மூன்று மொருங்கு" என்றற் றொடக்கத்துத் தூக்கினுரையில் "அந்த 'அத்வைதம்' என்னுஞ்சொல்" என்று தொடங்கிச் செல்வுழி யினிதினினிதென வுணரக் கிடக்கின்றது.*

**9.** *பஞ்சதை = சாவு.*

# 108. பரம்பரன்

1. "மேலானவற்றுக்கெல்லாம் மேலாக உள்ள பரம்பொருள் இல்லை எனக்கூறும் பதடிகளின் வார்த்தைகளைக் கேட்டு, வலிமை குறைந்து சோர்வடைந்திருத்தலைத் தவிர்த்துவிட்டோம்'' என உணரப்படுவனவாகிய சொற்கள் எனப்படும் கைகளை, அந்தப் பதடிகளின் வாயில் அறைந்து நிற்கும், தகுதியும் உயர்ச்சியும் மிக்க அருட்கவிஞர்களை நாம் வணங்கி நிற்றலும் முறைப்பாடுடைய செயலே ஆகும்.

2. மனமாகிய குரங்கே! மலைக்குகைகளில் வாழும் தூய தவச்சீலர்கள் நாடிநிற்கும் நம் சிவபெருமானை, நிலப்பரப்பு (கீழ்நிலை), நான்கு திசைகள், ஆகாயம் (மேல்நிலை) எனப்படும் ஆறு இடங்களிலும் பரிபூரணமாக வியாபித்து விளங்கி ஒளிர்வதாகக் கண்டு ஒப்பற்ற இன்பம் கொண்டுள்ளவர்களின் திருவார்த்தை கேட்க, அன்னோரின் திருவாயையும், அவர்களின் அருள்நோக்கத்தைப் பெற அன்னோரின் திருமுகத்தையும் நோக்கி நிற்பதற்கும் ஐயப்பாடு கொள்வாயோ ?

3. பகுதி, நாகம், இந்தி என்னும் சொற்களில் நடுவில் நிற்கும் எழுத்துக்கள் சேர்வதால் அமையும் குகன் என்னும் சொல்லைத் தனது திருப்பெயராகக் கொண்டிருக்கும் எமது தலைவனை எப்பொழுதும் விரும்பிநிற்கும் உள்ளம் உடையவர்கள் நாகம் எனும் சொல்லின் நடுஎழுத்து நீங்க அமையும் 'நாம்' எனப்படும் பாச உணர்வை அறுத்துவிட்டு, ஏனைய பகுதி எனும் சொல்லின் நடு எழுத்து நீங்குவதால் அமையும் சொல்லாகிய 'பதி' என்பதால் குறிக்கப்படும் இறைவன் என்னும் பொருளின் கண்ணே நிச்சயமாகக் கலந்து இருப்பர். (இந்தி என்பதன் நடு எழுத்து நீங்க அமையும் 'இதி' என்னும் சொல் நிச்சயம் எனும் பொருளைத் தரும்)

4. அழிவற்று விளங்கும் ஞான ஆசிரியனின் கருணையால் அருள் என்னும் ஞான சூரியன் நன்றாக உதித்து எழுமாயின் அப்பொழுதே, ஆணவமலத்தின் மறைப்புச்செயல் முழுவதுமாகக் கெட்டுநிற்க, சீவன் முத்தத் தன்மையை அடைந்து, பின்னர்ப் பரமுத்தி அடைந்துள்ள நிலையில் தனக்குரிய கடவுளாகிய குகப்பெருமானை அடையலாம்.

5. என் உணர்வே மனமே தேவர்களாலும் நேருக்கு நேர் காண்பதற்கரியவனாய், பிற தெய்வங்களாலும் அடைய முடியாத பேரானந்தம் எனும் வடிவுடையவனாய் விளங்கும் பரம்பொருளாகிய சிவன் என்பதற்கும் மேலாக நான் ஒரு மாத்திரை அளவு நன்கு மிகப்பெற்றிருந்தாலும் (சீவன் என இருந்தாலும்), நான் அவனது அருளானந்த நற்குணப் பேறுகளைப் பெறவில்லை. அவன் திருவருளால் 'சீ' என்பது 'சி' என, ஒரு மாத்திரை குறைந்து விளங்குமாயின் ஆனந்தப் பேறாகிய பெரும்பயனை அடைதல் உண்மையே ஆகும்.

**6.** என் போத நிலையே! "இடையீடின்றி எங்கும் பரிபூரணமாக வியாபிக்க உள்ள என் சீவனே! உனக்கு இதுகாறும் ஏற்பட்டுள்ள இந்நிலவுலக வாழ்க்கை அதிகமானது. இதுவரை யாம் பொருந்தியுள்ள வாழ்க்கைநிலைகள் போதும்'' எனக் கருதி, ஞானயோக விசாரம் செய்பவர்கள் மகத்து, அகங்காரம், சத்தம், பரிசம், உரு, ரசம், கந்தம் எனப்படும் ஏழு முடிச்சுக்களையும் கடந்து மேலுயர்ந்து ஓங்கி குகப்பெருமானின் திருவருளாகிய அமுதத்தை உண்டு ஆனந்தக் கூத்தாடுவார்கள். அத்தகைய அமுதத்தை நீயும் அடைவாயாக.

**7.** எப்பொழுதும் பிழைபடக் கூறாத பதஞ்ஜலி முனிவர் நகரத்தின் வழிவந்த அகாரத்திற்கு விவரித்துக் கூறும் அறுவகைப்பட்ட பொருள்களுள், இங்கே உரைக்கப்படும் அத்துவிதம் என்பதில் வரும் 'அ' என்பது ஒப்பு எனும் பொருளைத் தருவதாகும். அப்பிராமணன் எனக் கூறுதல் (பிராமணன் அல்லன்) அன்மைப் பொருளை எப்படி உணர்த்துகிறதோ, அப்படியே அத்துவிதம் என்பதும் உணர்த்தும். (ஒப்பு, அன்மை எனப்படும்).

**8.** இவ்வாறு கூறப்படும் ஒப்பாகிய அன்மைப் பொருள்பட விளங்கும் அத்துவிதப் பேற்றில், இந்த ஆன்மா என்பதற்குரிய மலக் குற்றம் நீங்கப்பெற்றதாய், அந்த சிவபரம்பொருளே எனக் கூறுமாறு, அழிவடைவதும் இல்லாததாய், பந்தங்கள் அற்றுள்ள பரமுத்திநிலை என்னும் உயர்ச்சியை அடைந்து, அங்கே எந்தைக்குரிய எண்குணங்களின் நிறைவைப் பெற்றுப் பேரானந்தத்தை அனுபவித்து இருப்பான்.

**9.** விஞ்ஞானாகலர், பிரளாயாகலர், சகலர் என்னும் மூவகை உயிர்வர்க்கத்திற்கு முதற்பரம் பொருளாகவும், திரிமூர்த்தி வடிவநிலையில் வலப்பக்கம் பிரம்மனும் இடப்பக்கம் திருமாலும் விளங்க, நடுவில் உள்ள சிவமாகவும் (மும்மூர்த்திவடிவத்தில் நடுப்பொருளாகவும்) சகளம், சகளநிட்களம், நிட்களம் எனும் மூன்றினுக்கும் இறுதியில் விளங்கும், நிட்களமாகவும், சகளம், முதலான மூன்று நிலைகளிலும் நிறைந்து இருப்பவனாகவும், பிறப்பை அடைதல், இறப்பை அடைதல் ஆகியவை இல்லாதவனாகவும் திகழ்பவன் எனக் கூறப்படும் என் தோன்றலாகிய (தலைவனாகிய) குகப் பெருமானின் திருவருள் விலாச எல்லைக்குள் இருப்பவர்கள் இனிப்பிறவி எடுக்க வழிஇல்லை.

**10.** சரியை முதலான நான்கு நெறிகளில் நடந்து, கேவல அவத்தை, சகல அவத்தை, சுத்த அவத்தை எனும் மூன்றில் நின்று, அனுபவிப்பதற்காக மேன்மேல் கிளர்ந்து பெருகும் நல்வினை, தீவினை எனும் இரண்டில் இருந்து (அமர்ந்து), அத்துவிதப்பேறாகிய ஒன்றில் (ஒருமை நிலையிலை) படுத்து விளங்கும் (பொருந்தி விளங்கும்) ஒன்றே ஆன்மப்பொருள். அதற்குரிய மேன்மையான ஆனந்தநிலையை வழங்கி அருளும் பரம்பொருளே, பெருமைக்குரிய திருப்புகழ்க் கவிஞனாகிய அருணகிரிப் பெருமானின் அருளரசு. நான் நற்கதி அடையுமாறு எனக்கு ஒருமொழி உரைத்து அருளியவனும் அவனே.

# 109. வேதம்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**வே**த மீச னத்து வைத மென்னின் வீவிலாப்
பூத னோட ளாவி யோங்கு பூத நாதனென்
றேத நீத்த வர்த்த மேகொள் ளேசி லார்துரால்
காதும் வேதி யாவெற் கோகை காட்ட வேண்டுமே. (1)

**பொ**ருண்மை யாற்பல் பேத மும்பு ணர்கை யால்விடா
ஒருமை யாம பேத முஞ்சொல் லுண்மை நூல்களின்
அருமை யோர்கி லார்கு ழாத்தை நீங்கி னேனறாப்
பெருமை யோய்கொண் டாள வேண்டும் பேசும் வண்ணமே. (2)

**சீ**வன் றேவைச் சென்று சேரு மென்னிற் பூரணந்
தேவுக் கின்றென் றாகுந் தேவு சென்று கூடுமென்
றேவர் சாற்ற வுந்துண் டாக வில்லை யேயிவை
மேவு றாவத் துவைத மேயுண் டென்று மெய்ம்மையாய். (3)

**க**ண்ணி லான்கண் ணின்கட் சூரன் காந்தி சார்ந்துமேல்
எண்ணி நோக்கொ ணாது நேர வேதப் பந்தமும்
கண்ணின் மாசு தீர்ந்த காலங் காண்டல் போறபகா
விண்ணின் வீடு மாமென் பார்க்குன் வீடு தூரமோ. (4)

**தோ**ன்றல் வீத றொல்லை யென்று சூழு வார்களெஞ்
ஞான்று நாட பேத பூர்த்தி ஞான தெய்வமே
மூன்றை யீந்தொ ரெட்டு வாங்கு மோத மேயினார்
ஊன்றி நிற்கு மெல்லை தூர மோவெ னக்குமே. (5)

**அ**றத்து நூற்பி ராயச் சித்த மாற்ற மாட்டிலார்
மறத்தி னாற்று ரான்ம னானோ மென்று மாழ்கிநிற்
குறித்து நாடிற் றூய சீலங் கூர்வ ரென்னுநூற்
றிறத்தை யோர்ந்து ளார்க ணின்னைத் தேடி டார்களோ. (6)

1. *"ஈசன் அத்துவைதம்" என்னும் வேத வாக்கியம் – "சிவமத்வைதம் சதுர்த்தம்" என* ***மாண்டுக்யோபநிஷதாதிகளி****லும், "****ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம****" எனப் பைங்கலம், சுகரஹஸ்யம், துரியாதீதாவதூதம், கோபாலதாபிநி என்னும் உபநிஷதங்களிலும் வருதல் காண்க, அத்துவைதம் – தென்மொழி வழக்கு. துரால் = துக்கம்; பி–நிகண்டு.*

6. *அறத்து நூல் = ஸ்ம்ருதிகள்.*
*நூல் = சைவபுராண தருமசங்கிதை, இங்கறிவுறுத்தசெய்தி அதன் 32–ஆம் அத்தியாயத்துளது. (நரகலோகவர்ணனை).*

**இ**ழைத்த பாவம் வீட்டி மேவு மேம கேவலந்
தழைத்த காயந் தள்ளி யுந்தள் ளாது மாமெனாக்
குழைத்த பத்துக் கூறு மாறி ரண்டு முண்டுனால்
பிழைத்த வெற்கி யாது கூடும் பேறெ லாமுளோய். (7)

**கூ**ட கத்தி னாற்பி றங்கு கும்பி மேவினார்
மூட முற்ற தாவ ராதி மூர்த்த மாவரென்
றாடு மொட்ப நூல்கள் காண்ப ராரு மாருண
காட கத்தி லுள்ள நின்னைக் காமு றார்களோ. (8)

**நா**ன்ப சித்து வாட வுன்றன் ஞானப் பேருளந்
தான்ச கித்த தில்லை யாதோர் தாவி னாற்கண்ணீர்
நான்பி லிற்றி லேன்க லங்கி னாயென் றன்பினால்
ஏன்மு ழக்கொ ணாது சொல்வை யென்சு வாமியே. (9)

**நோ**யு றாநு னன்பர் வாழ வூங்கு வாழ்க்கையை
ஈயு மெந்தை யேயெந் நாளு மேக போகமாய்
நீயு நானு மாயென் றோனி னேய வாக்கியந்
தோயு மத்து வைத மேயத் தோய்வை யீதியே. (10)

# 109.வேதம்

**1.** வேதமானது ‘ஈசன் அத்துவைதம்’ எனக் கூறினால், அழிவில்லாத சீவனோடு இரண்டறக் கலந்து ஓங்கும் ஆன்மத்தலைவன் என அதற்குக் குற்றமற்ற நற்பொருளைக் கொள்ளும், புகழ்ச்சிக்குரிய ஞானியரின் துக்கங்களைப் போக்கும் வேதமயமானவனே! எளியேனுக்கு ஆனந்தப் பேற்றை வழங்கி அருள வேண்டும்.

**2.** பொருள் வகையால் பல்வகைப்பட்ட பேதநிலையும், புணர்ச்சி நிலையால், பிரியாதிருக்கும் ஒருமை எனப்படும் அபேதநிலையும் விளக்கிக்கூறும் உண்மைச்

---

*7. குழைத்தபத்து = **திருவாசகத்து**க் குழைத்த பத்து. “குழைத்த பத்துக் கூறுமாறிரண்டு முண்டு” என்பதுபற்றி, நூலாசிரியராலேயே செய்யப்பட்ட தனியுரை, இப்புத்தகத் தோடேயே சேர்க்கப்பட்டுளதென்க.*

*8. கும்பி=நரகம்; “நிரயமும் பவர்க்கமுங் கும்பி” என்பது **பி–நிகண்டு**.*

*நூல்கள்:– மேலைத் தருமசங்கிதையின் 32–ஆம் அத்தியாயமும், கடோபநிஷத்தின் 5–ஆம் வல்லியின் 7–ஆம் வசனமும், வேறு சிலவுமாம்.*

*ஆருணகாடகம் = சுக்லயஜுர் வேதத்தைச் சேர்ந்த ஆருணகாடகோபநிடதம்*

*10. நுன் = உன்; இச்சொல்லிலக்கணவமைதி, திட்பத்தில் (ஆனந்தபூர்த்தியுர மென்னும் 2–ஆம் பத்தில் 5–ன் உரை) ஓர்க.*

*‘ஏகபோகமாய் நீயு நானுமாய்’ என்றோன் = ‘அறுகுநுனி’ என்றற்றொடக் கத்துத் திருப்புகழில் அவ்வாறு கூறியருளிய ஆசிரியர் – அருணகிரிநாத முனீந்திரர்.*

சாத்திரங்களின் அருமைப்பாட்டை உணராத அஞ்ஞானிகளின் கூட்டத்தை நான் நீங்கியுள்ளேன். அழியாப் பெருமை உடையோய்! நூல்கள் கூறும் வண்ணம், எளியேனையும் ஆட்கொண்டு அருள வேண்டும்.

**3.** சீவான்மா சிவத்தைச் சென்று சேரும் எனக் கூறினால் சிவத்துக்குப் பூரணத்துவமான வியாபகம் இல்லை என ஆகும்; அங்ஙனமின்றி சிவனே சென்று சீவனைக் கூடி நிற்பான் என்று யாவரேனும் கூறுவதற்கும், அவன் கண்டிதப்பட்டு நிற்கவில்லை, எனவே சீவன் சிவனைச் சென்றடைதல், சிவன் சீவனைச் சென்றடைதல் என்னும் இந்த இரண்டும் பொருந்தாத அத்துவைத நிலையே மெய்ம்மையாய் எப்பொழுதும் உண்டு.

**4.** கண் இல்லாதவனின் கண்ணுள்ளே சூரியனின் ஒளி கலந்து நின்று விளங்கினாலும் அந்தக் கண்ணால் எதையும் காண முடியாதது போன்று உள்ள நிலை, குற்றம் சார்ந்த பந்தப்பட்டுள்ள நிலை. கண்ணில் உள்ள மாசு (படலம்) நீங்கிய பொழுது, சூரியனின் ஒளியால் காணும் திறன் வாய்த்திடுதல் போன்று உள்ளநிலை அகண்டாகாரமான ஞான வெளிமயமான வீடுபேற்று நிலை – என இவ்வாறு கருதுவோர்க்கு நீ அருளக் கூடிய வீடு என்பது அதிக தூரத்திலோ உள்ளது?

**5.** பிறத்தலும் இறத்தலும், நீங்காத் துன்பமே என்று கருதும் விவேக ஞானியர்கள் எப்பொழுதும் நாடி வணங்கும் அபேதமான, முழுநிறைவாய, ஞான தெய்வமே! மனம், வாக்கு, உடல் எனும் மூன்றையும் அர்ப்பணித்து உனது எண்குணங்களையும் வாங்கிக்கொள்ளும் உவகை பொருந்தப் பெற்றுள்ளவர்கள் அழியாது நிலைபெற்றுள்ள இடத்தின் எல்லையானது எனக்கு மிகவும் தூரத்தில் உள்ளதோ?

**6.** அறநூல்களாகிய மிருதி நூல்களில் விதிக்கப்பட்டுள்ள பிராயச் சித்தங்களைச் செய்யாதவர்கள், "நமது தீய வினைப்பயனால் நாம் துராத்மாக்களாக ஆகிவிட்டோமே என்று மனம் கலங்கித் துயருற்று, உன்னை இலட்சியமாகக் கொண்டு நாடி நின்றால், தூய்மையான ஒழுக்க நெறி வாய்க்கப் பெறுவார்கள்'' என்று தரும சம்மிதை கூறும் உறுதிக் கோட்பாட்டை உணர்ந்துள்ளவர்கள் உன்னைத் தேடி அடையாமல் இருப்பார்களோ?

**7.** வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்க அனைத்துப் பேறுகளும் சிறக்கப் பெற்றுள்ளோய்! இழைக்கப்பட்ட தீய செயல்களின் பயன் நற்செயல்களின் பயன் ஆகியவற்றை அனுபவித்து முழுமையாகக் கழித்து, அடைய உள்ள பேரின்பமயமான கைவல்யப் பேற்றை, பூதக் கூறுகள் தழைத்துள்ள உடலை நீத்தும் பெறலாம்; உடலை நீக்காமலும் பெறலாம் என்று திருவாசகக் குழைத்தபத்து எனும் திருப்பதிகம் கூறும் வண்ணம், விதேக முக்தி, சதேக முக்தி ஆகிய இரண்டும் உண்டு. நின் திருவருளால் உய்தி பெற்று இருக்கும் எளியேனுக்கு, இவ்விரண்டில் எது பொருந்தும்?

**8.** மேன்மேலும் பொருந்தும் பாவகாரிய விளைவால், கும்பிபாகம் முதலான நரகங்களைப் பொருந்தி இருப்பவர்கள், காலகதியில் ஓர் அறிவுடைய தாவரம் முதலான யோனிகளில் பிறவி எடுப்பார்கள் என்று உயர்ந்த ஞானநுட்பங்கள் பொருந்தியுள்ள நூல்கள்

கூறுவதைப் பயின்றுணர்பவர்கள், வேதாகம நூல்களாகிய காட்டினுள் விளங்கும் உன்னை மிகவும் விரும்பித் துதிக்கமாட்டார்களோ? (ஆருணகாடகம் என்பதற்கு ஆயிரம் இதழ்க் கமலம் என்றும் பொருள் கொள்ளலாம்).

**9.** என்னை ஆட்கொள்ளும் சுவாமியே! நான் பசித்து நின்று வாடிய போதெல்லாம்; உனது ஞானானந்த மயமான பேருள்ளம் ஒருசிறிதும் சகித்துக் கொண்டதில்லை. யாதேனும் ஒரு துன்பம் காரணமாக, நான் கண்ணீர் சிந்தினால் "அன்ப! நீ ஏன் கலங்கினாய்" என்று, என்மீதுள்ள அன்பால் ஏன் கூறக் கூடாது? கூறுக.

**10.** மலப்பிணிப்பாகிய நோய் அணுகப்பெறாத உன் அன்பர்கள் ஆனந்தமாய் வாழ, உச்சியுலக வாழ்க்கையாகிய கைவல்ய வாழ்க்கையை வழங்கியருளும் எந்தையே! எப்பொழுதும் ஏகபோகமாய் நீயும் நானுமாய் என்று பாடிய அருணகிரிப் பெருமானின் பேரன்புமயமான வாக்கியம் சீவனும் சிவனும் ஆகிய இரண்டும் கலந்து நிற்கும் அத்துவைதமே ஆகும். இரண்டறக் கலந்து விளங்கும் அந்தக் கலப்புநிலையை எனக்கு வழங்கி அருள்க.

---

# 110. தங்கவம்பலம்

---

*பதின்மூன்று சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த*
*தந்த தந்த தந்த தந்த தனதானா.*

**த**ங்க வம்ப லந்த யங்க நின்ற னந்த மண்டி லஞ்செய்
தந்தை யன்பு கொண்ட வின்ப வடியார்காள்
துங்க மங்கை பங்க னன்பொ டன்று தந்த பிண்ட முண்டு
சுந்த ரந்தெ ளிந்த தென்ற மொழியாலே
உங்க ளுண்டி கண்டி ருண்ட நெஞ்சர் நிந்தை தந்தி ரங்கி
லொன்று நெஞ்ச முங்க லின்றி யவர்பேழ்வாய்
பொங்க லின்ற டங்க நன்க றைந்தி டுங்க ளஞ்சொ டுங்கு
புந்தி மன்றி னந்து மென்று நவில்வீரே. (1)

---

*1. மண்டிலம் = கூத்து; "படிதம் மண்டிலந் தாண்டவம் பரதம்" என்பது பி – நிகண்டு.*

*சுந்தரந் தெளிந்த தென்ற மொழியினை – பெரியபுராணத்தில் ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணத்து **156, 159, 160**–ஆந் தூக்குக்களானறிக. சிவத்திருவாளர்க்கும் உண்டி யவசியமேயென இங்குணர்த்து நியாயம்,*

*'அச்சிவ னுண்ணின்ற வருளை யறிந்தவர்*
*உச்சியம் போதாக வுள்ளமர் கோவிற்குப்*
*பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்*
*திச்சைகெட் டேகாந்தத் தேறி யிருப்பரே.'*

*எனத் **திருமந்திரத்தும்** பெறப்படுஉமென்க.*

*நிந்தைதந் திரங்கல் = நிந்தித்து ஆரவாரஞ்செய்தல்.*

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.★*

**சதாக்கரம் (நூறெழுத்து).**

*கருவிளங்காய் கருவிளங்காய் கருவிளங்காய் கருவிளங்காய் புளிமா தேமா.*

*தனனதத்த தனனதத்த தனனதத்த தனனதத்த தனனா தந்த.*

**அ**ருமறைக்க வுணியனுற்ற கனவுமித்தை யெனமிழற்ற வமையா தங்கண்
உருளுமுத்த மருவுசத்தி முதலுரத்த விருதுபெற்ற வுரனா லிங்கண்
கருணையத்த னனவொழித்த கனவுரைக்கு முரைநிசச்சொ லெனவே நம்பும்
முருகொழித்து விடலொழித்து ளதையுமொப்பி நடமினித்தன் முதமே வன்பீர்.(2)

*புளிமாங்காய் கருவிளங்காய் காய் காய் மா மா.*

**ம**டமோட்டுங் கருணைதனை மறவேனெஞ் சுளவளவு மாற்றார் நூலைத்
தொடமாட்டே னவருரைக்கு முரைகேளே னனியாயத் தொடக்கர் கோட்குட்
படமாட்டே னருள்சுரந்து வினாயவொரு மொழிப்பயனிற் படரு நோக்கம்
விடமாட்டே னினிதளித்தி யெனதுகுகப் பிரமமென விளங்கெம் மானே. (3)

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*தனந்த தந்தன தனந்த தந்தன*
*தனந்த தானன தனந்தன.*

**இ**டங்கொள் கொங்கைய ரணங்கெ ழும்படி
யிருண்ட வேள்கணை தொடுஞ்செயல்
அடங்கி டும்படி யுயர்ந்த நம்புசெ
யனந்த மாகணை சிவந்தவேள்
விடும்பெ ருந்தொழின் மிகுந்த திங்கினி
மினுங்கு கேசனை யணைந்தவன்
இடம்பி றங்கியுய் குவன்சொ லென்பறை
யிளஞ்சொ லோசொலு முளங்களே. (4)

---

★ இவ்விருத்தத்தின்கணுள்ள காய்ச்சீர் ஒரோவொன்றும் இரண்டிரண்டு மாஞ்சீர்களாகப் பிரிக்கப்படின், பதின்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தமு மாம்.

2. சத்தி = குடை; **சூ–நிகண்டு.**

*முருகு=எழில்.*

4. அணங்கு=ஆசை; **பி–நிகண்டு.**

*கலாதிகளின் கூட்டத்துண்டாம் புருடதத்துவம் உள்ளமென்று மோதப்படும்; அஃதோடுங் கூடிநிற்கு மான்மாக்களை உளங்களே! என விளித்தாரென்க.*

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

தனதனந் தனனா தனதனந் தனனா
தனதனந் தனனா தனதனந் தனனா.

**அ**ணியிலங் கனகூ யையுமருஞ் சதிநா
ளயனியுஞ் சிவவா கையையடைந் தனரீ
துணர்வறைந் திடுகா லுடையசங் கிதைதா
னுரைதருஞ் சொனவா றினுமனந் தமினார்
அணவிநின் றதைநூல் களுநுவன் றிடுமீ
தறியுமன் புடையீர் வடமரந் தனிலே
துணிதுளங் கிடமே வியபரன் குருவே
துகளினங் குருதே வெனினலின் புறுவீர். (5)

*பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தீ**க்கையிற் றீவி ரஞ்சார் தரத்தனுக் குடனு டல்போந்
தீவிரன் றனக்கு மூர்ச்சை யாகுமந் தனக்குத் தேசு
தாக்குட னடுங்கு மந்த தரனுக்குச் சிலிர்க்குங் கேசஞ்
சாற்றிவை முறையே சத்தி யமசத்தி யம்வி சேடம்
ஓக்கிய சமய மோக்க முடனுந்தா மதித்து மாமீங்
கோதிய தீக்கை யேற்பா ரனைவர்க்குஞ் சிவமே தேவென்
றாக்கைபோ முனரே யோர்ந்தீ றற்றதா யகண்ட மாய
அருட்பெரும் பேற்றி னுக்கே யவாவுவீ ரடியார் காளோ. (6)

---

*5. நாளயனி – நளாயனி; சந்தநோக்கிய விகாரம்.*

*சிவவாகை = சிவதீக்கை, சிவதவம்: ''ஒழுக்க முதலாந் தவமுமறத் துறையும்.... வருவன வெல்லாம் வாகை யெனும்பெயர்'' என்பது* ***சே – திவாகரம்.***

*காலுடைய சங்கிதை = வாயுசங்கிதை; கால் = வாயு; இச்சங்கிதையின் **13**–ஆம் அத்தியாயத்தின்கண் இங்குணர்த்தியசெய்தி யுளது (குருதீக்கைப்பொதுவிதி). துணி = ஒளி; ணகரவெதுகை.*

*6. ஓங்கியவென்பது, 'ஓக்கிய' என எதுகைநோக்கி வலித்தல் விகாரப்பட்டது.*
*''முறையே'' என்றமையின், தீவிரதரத்தனுக்குச் சத்தியமும், தீவிரனுக்கு அசத்தியமும், மந்தனுக்கு விசேடமும், மந்ததரனுக்குச் சமயமுந் தீக்கையாமென்க. சத்தியமும் அசத்தியமு நிருவாணமெனப்படூஉமாகலிற் சமயம், விசேடம், நிருவாணமெனத் தீக்கை மூன்றேயாம். இவற்றுட் சமயதீக்கை பெற்றோர் சரியைநெறியைத் தலைப்படலும், விசேடதீக்கை பெற்றோர் கிரியைநெறியோடு யோகநெறியைத் தலைப்படலும், நிருவாணதீக்கை பெற்றோர் ஞானநெறியைத் தலைப்படலும் ஏற்புடைமையாம். நிருவாணவகை யிரண்டனுட் சத்தியம்போ லுடனே பயன்பயவாதது மற்றொன்றாகலின் அஃதசத்திய மெனப்பட்டது. கிளந்த வாறு சத்தியநிருவாண தீக்கையிற் சீடருக்கு உடம்புடனே போய்விடலானும், ஏனைய தீக்கைகளில் அவர்க்குடம்பு அவ்வாறு போகாமனின்று பிராரத்த வொழிவிற் போதலானும் ''மோக்கம் உடனுந் தாமதித்துமாம்'' என்றாசிரிய ருரைத்தாரென்க. தீக்கையான் முத்தி யெய்துமென்பது சத்திய நிருவாண மொன்றற்கே சாலுமென்பதூஉம், மற்றைத் தீக்கைகள்ஞானத்திற்கு நிமித்தமாமாற்றால் ஏதுவா மென்பதூஉம் இங்ஙனுணரக் கிடக்கின்றன. நல்லாசாரத்தோடு நல்லாசிரியன் வழி நிற்பாருள் யாவரேனுஞ் சமயதீக்கை செய்தல்கூடும்; விசேடமு நிருவாணமுஞ் சிவயோக சிவஞானமுடையாரே செய்தல்கூடும். இம்மேன்றீக் கைகளை, யாங்*

*எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.*

**ம**னவலி பெருக்கி மனவலி முருக்கி வைகல்ய நீத்தகை வல்யத்
தனகுசா லருணைப் பெயரினான் புகழ்ந்த சாமியா முனதருள் வாழ்க
அனுபவப் பொருளு மனுபவிப் பவனு மனுபவத் துண்டென வறிந்த
நினருமெய்ச் சீட கோடிகள் வாழ்க நிருமல வயவைவாழ்ந் திடவே. (7)

## ஆகத்திருப்பா - 1100

**குறிப்பு : நூற்சிறப்பு வெண்பா ஒன்றையும் சேர்த்து ஐந்தாவது மண்டலம்**

## திருப்பாடல்கள் 1101

---

6. *கன்மங்களானுஞ் செய்து மெனச் சிலர்பரம்பரை வியாபாரமாகவே செய்து பொருளேற்றுப் புசித்தல் அவர்களுடைய சீவனோபாயத்துள்ளனவேயாம். அக்கன்மம் விதிக்கும் இலிகிதங்களும் அப்பொருட்டாகவே யேற்பட்டனவா மென்றலை அவ்வியாபார குருக்களும் இனிதுணர்ந்து உண்மையனுபவ விசேட ஞானங்க ளுடையாரைத் தரிசித்து அவர் நெறிநின்றுய்தல், தாம்பெரீய பிறவிக்குப் பெறூஉம் பெரும்பேறாகும். ஒருவர் அஞ்ஞானி யாயிருத் தலினாற்றான் யாது பயன்! அவர் பிறர்க்குபதேசித்தலினாற்றான் யாது பயன்!! – "குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக் – குருடுங் குருடுங் குழிவிழு மாறே" என்னுந்* ***திருமந்திரமும்*** *ஈங்குக் கருதிக்கோடற்பாற்றன்றோ. "சிவயோகியினது திருட்டியே தீக்ஷையாயிருக்குமாறு அவரது திருவாக்குந் தீக்ஷையாகலின் அஃதொன்றனையே கொண்டு நிற்றல் விசேடத்தில் விசேடம்" எனச் சிவசூரியப்பிரகாசத்தில் யாமுரைத்த வுரையினைச் சுவைத்துப்பார்த்தல் ஆகூழுடையார் மாட்டேயாம். 107–ஆம் பத்தாய பரஞ்சோதிப் பத்திற்போந்த சரியையின்ஞானமே சமயதீக்கை, கிரியையின்ஞானமும் யோகத்தின் ஞானமுமே விசேடதீக்கை, ஞானத்தின் ஞானமே நிருவாண தீக்கையென்னு நிரலாக ஆசிரியன் புரிதலே யிந்நூற் குடம்பாடாம். சமயதீக்கையில் இறைவனது திருநாம மந்திரோபதேசமும், விசேடதீக்கையில் தனி ஓங்காரோபதேசமுஞ் சேர்த்துக் கோடற்பாலவாம். அனுட்டிப்பு முறை,* ***தகராலயரகசிய*** *வுரைகளிலும், பொன்னவையென்னும், 73–ஆம் பத்திலுங் கண்டு கொளலாம். சரியை முதலிய சோபான நான்கனுள், யாதேனுமொன்றில் ஒவ்வொருவரும் ஆயுள்காறு நிற்கவேண்டு மென்றல் சித்தாந்தமன்று; என்னை ? சாமுசித்தர்களுடைய குணம், முற்பிறப்பி லிழைத்து நின்றதை (விட்டகுறை தொட்டகுறையாயுளதை) யே பொருந்தும்; வைநயிகருமுளர்; இன்னோருடைய குணங்களே மந்ததரம் முதலிய பக்குவங்களுளொன்றாய் நிகழுமாகலின், இது பற்றிப் பெரிதும் விளக்கிநிற்பது,* ***பரிபூரணானந்த போதத்துப்*** *பிற்படலத்து 27–ன் உரையாகலின் அஃதுங் கருதுக. சமயதீக்கை பெற்றோர் உருத்திரபதமடைவர்; விசேடதீக்கைபெற்றோர் மகேசுரபதமடைவரென்று கதிபேதங்கழறுதல், ஒருபெருந்தெய்வ வழிபாட்டினையே மலைவறப் போதிக்கும் இந்நூற்கு ஒருசிறிது மங்கிகாரமன்று.*

7. *வைகல்யம் = குறைவு. இத்திருப்பாட்டிற்போந்த அனுபவம், சிவானந்த மேலீட்டின் கீழ்ப்பட்ட காட்சியனுபவமே யென்க; என்னை, "அறிந்த" என்றமையின்.*

# 110. தங்கவம்பலம்

1. பொன்மயமான சிற்றம்பலத்தில், அவ்வம்பலம் விளக்கமுறும் வண்ணம் எண்ணற்ற திருக்கூத்து வகைகளைச் செய்யும் சிவபெருமானிடம் அன்புகொண்டுள்ள இன்பநிலைக்குரிய அடியார்களே! உயர்ந்த மங்கையாகிய பார்வதியை இடப்பக்கத்தில் கொண்டுள்ள சிவபெருமான் அன்று அன்போடு ஈந்தருளிய சோறும் நீரும் உட்கொண்டு "என் உள்ளம் அழகாக இப்பொழுது தெளிவு பெற்றுள்ளது" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறிய கூற்று உண்டு. உங்களின் உணவுப் பொருளைக் கண்டு, பொறாமைப்படும் இருண்ட நெஞ்சத்தினர் உங்களை நிந்தித்து நிற்பின், ஒரு சிறிதும் மனவருத்தம் கொள்ளாமல், அவர்களது பெரிதாய்ப் பிளவுபட்டுள்ள வாய் மேலும் பழிப்புரையைக் கூறாமல் அடங்கி நிற்கும் வகையில், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் கூற்றை ஓதி நன்கு ஆணித்தரமாக விடைகூறி நில்லுங்கள் (சுந்தரரின் கூற்றால் விடை கூறுக).

2. நித்தியனாகிய குகப்பெருமானின் ஆனந்தநிலையைக் கொண்டிருக்கும் அன்பர்களே! வேதநெறிப்பட்ட கவுணியனாகிய திருஞானசம்பந்தர்க்கு பொருந்திய கனவுநிலையும் பொய் எனக் கூற ஒண்ணாது, முத்துக்கள் பொருந்திய குடை முதலாக அருள்வன்மை மிகுந்துள்ள பல விருதுகளையும் அவர் பெற்ற அந்த நிகழ்ச்சியின் திறத்தால் கருணைத் தலைவனாகிய கடவுள், நனவு நிலையில் மட்டுமன்றிக் கனவு நிலையில் உரைத்தருளிய உரையும் சத்திய வாக்கே என உறுதியாகக் கருதுவீர்களாக. இவ்வாறு உறுதியாக நம்பும் எழில் வாய்ந்த நிலையைத் தவிர்த்து நிற்றல் என்பதை நீத்துவிட்டு, உங்களிடம் இனி உள்ளதையும் அவனுக்கு அர்ப்பணித்து நடமின்! (இவ்வாறு சத்தியவாக்கே எனக் கருதுவதினின்று ஒரு போதும் நீங்கி நிற்காமல் என்பது கருத்து).

3. குகப்பிரமம் என விளங்கும் என் தலைவனே! அறியாமையை விரட்டி நிற்கும் நினது கருணைத் திறத்தை மறக்கமாட்டேன். எனது உறுதிப்பாடு மிக்க நெஞ்சம் உள்ள வரையிலும் அயல் நெறிப்பட்டுள்ளோரின் சாத்திரங்களைத் தொட்டும் பார்க்க மாட்டேன்; அன்னோர் உரைக்கும் வாசகங்களையும் கேட்கமாட்டேன், நியாயமற்றுள்ள வஞ்சனையாளர்களின் சூழ்ச்சிக்குள் நான் சிக்க மாட்டேன், அருள்மிகப் பெற்று நீ கூறியருளிய ஒருமொழியால் விளையும் அருட்பேற்றைச் சிந்தித்திருக்கும் தியானபாவனையை ஒரு போதும் விடமாட்டேன் என்னை இனிதே காத்தருள்க.

4. பெருத்துப்பரந்துள்ள மார்பகங்களை உடைய பெண்டிர்கள் பால் மயல் எழுமாறு கரிய நிறமுடைய மன்மதன் அம்பு தொடுத்து நிற்கும்செயலானது அடங்கி நிற்குமாறு, உயர்ந்த பெருங்கருணையை வழங்கும் செவ்வேள் பரமன் என்மீது எண்ணற்ற அருளம்புகளைத் தொடுத்து விடும் பெருஞ்செயலானது இப்பொழுது மேம்பட்டு நிகழ்கின்றது. பேரொளியுடன் விளங்கும் குகேசனை இனி அணைந்து அவனிடம் இரண்டறக் கலந்து விளங்கி உய்திபெறுவேன். இவ்வாறு கூறும் எனது கூற்று எளிமைப் பட்டிருக்கும் கூற்றோ? அன்புள்ளம் வாய்ந்தோரே, கூறுங்கள்.

5. அழகுடன் விளங்கும் அனுசூயையும் அரிய கற்புத்திறம் வாய்ந்த நளாயினியும் மிகவும் இனிதாகச் சிவப்பேற்றை அடைந்தனர். இதனை ஞானப் பொருள்களை விளக்கிக்கூறும் வாயுசம்மிதை தெளிவுபடுத்திக் கூறும். இங்கே கூறப்பட்டவாறு, மேலும் எண்ணற்ற பெண்டிர்கள் சிவநிலையைப் பொருந்தி விளங்கியதைப் பல புராண நூல்களும் விவரித்துக்கூறும். இவ்வுண்மைகளை அறியும் அன்புடையீர்! கல்லால மரத்தின் கீழே பேரொளி பிறங்கிட எழுந்தருளிய பரசிவத்தின் குருவாகிய குகப்பெருமானே மாசற்ற நமது குருதேவனாவன் என்று நீவிர் கருதினால் இன்பநிலையை அடைவீர்கள்.

6. சிவதீக்கை முறையில் தீவிரதரப் பக்குவம் பொருந்தியுள்ள சீடனுக்கு உடனேயே உடல்நீக்கம் நிகழும்; தீவிரமான பக்குவம் பெற்றுள்ள சீடனுக்கு மூர்ச்சித்திருக்கும் நிலை நிகழும். மந்தமான பக்குவம் பெற்றுள்ளவனுக்கு, பிரகாசம் பொருந்திய உடலானது நடுக்கம் கொள்ளும். மந்ததரமான பக்குவம் பெற்றுள்ளவனுக்கு உடல் சிலிர்க்கும் (மயிர்க்கூச்செறியும்). கூறப்பட்டுள்ள இவை முறையே சத்யோ நிர்வாண தீக்கை, அசத்யோ நிர்வாண தீக்கை, விசேடதீக்கை, சமயதீக்கை எனப்படும். இவற்றால் அடையப்படும் மோக்ஷமும் உடனே பெறப்படும் வீடுபேறு; காலம் கடந்து பெறப்படும் வீடுபேறு என இரண்டு வகைப்படும். அடியார் பெருமக்களே! கூறப்பட்ட சிவதீக்கையைப் பெறுவார் அனைவர்க்கும் சிவனே முழுமுதல் இறைவன் ஆவன் என்று, உடலை இழப்பதற்கு முன்னமேயே நன்கு உணர்ந்து, அழியாததாகவும், அகண்டாகாரமாகவும் திகழும் அருட்பெரும் பேற்றைப் பெறுவதற்கே நீங்கள் ஆர்வம் கொள்வீர்களாக.

7. அருள்நெறியைச் சார்ந்து மனத்தின் வன்மையைப் பெருக்கியும், இருள்நெறிப்பட்ட மனத்தின் வன்மையை அழித்தும், குறைவற்ற கைவல்யானந்தப் பெரும் பேற்றை அடைந்த அருணகிரிப் பெருமான் சந்தப்பாக்களால் புகழ்ந்து பாடிய தனிப்பெரும் கடவுளாம் உனது அருள் வாழ்க! அனுபவத்துக்குரிய பொருளும் அனுபவிப்பவனும் கைவல்யானந்த அனுபவ நிலையில் நிச்சயம் உண்டு என ஐயமற அறிந்துள்ள உனது அரிய பெரிய உண்மைச் சீடகோடிகள் வாழ்க! இவ்வாறு உணரவைத்த தூய்மைமிக்க நன்னெறி வாழ்க.

**குமரகுருபரன்றிருவடிவாழ்க**

திருச்சிற்றம்பலம்

**திருப்பாவும்**

**குறிப்புரையும், சற்குரு மானச சௌரப மாருதம்**

**என்னும் உரையும்,**

**முற்றுற்றன.**

## வேதமென்றற்றொடக்கத்து 109–ஆம் பத்தின் 7–ஆந் திருப்பாட்டிற்

## ‘‘குழைத்த பத்துக் கூறுமா றிரண்டுமுண்டு''

## என்பதுபற்றி நிகழ்பொருள்:–

## (ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளியது)

திருவாசகத்துக் குழைத்தபத்திற் ‘‘கண்ணார்நுதலோய்'' என்னுந் தொடக்கத்துத் திருத்தூக்கின்பொருளை யனுசரித்து வராநின்ற இத்திருப்பாட்டில், உடம்பு தள்ளியுந் தள்ளாமலு முத்தியுண்டாமென்பதில், தள்ளாதடைந்தமைக்குச் (சிதம்பர) சிதாகாசத்தில் அச்சிதாகாச மயமாய் மறைந்த திருவாதவூரடிகள், சிவச்சோதியைக்கியமான திருஞானசம்பந்தசுவாமிகள், சிவலிங்க ஐக்கியமான திருநாவுக்கரசுகள், வெண்களிறூர்ந்து வெள்ளியங்கிரிக் கெழுந்தருளிய சுந்தரமூர்த்திசுவாமிகள், திருமேனியைச் சிவலிங்கமாக நிறுத்திய திருவெண்காட்டடிகண் முதலிய மகான்மாக்கள் பலருஞ் சான்றாவர். இந்த முத்தி, பெரும்பான்மையுஞ் சைவத்திருவரு ணெறியிலேயே உண்டாகா நிற்கும். இஃதிந்நூற் "பொன்னினான்மறை" என்னும் 89–ஆம் பத்தின் 7–ஆந் திருப்பாட்டினும் விளக்கப்பட்டுளது.

தள்ளி யடைந்தமைக்கு ஏனாதிநாயனார், மெய்ப்பொருணாயனார், பெருமிழலைக் குறும்பநாயனார் முதலிய மேதாவியரும், ததீசிமுனிவர் முதலிய மகான்மாக்களுமாகிய பலருஞ் சான்றாவர். இங்ஙனம், தெய்வப் புலவராகிய திருவள்ளுவநாயனார் சரித்திர மொன்று முரைக்கப்படுகிறது.

இவ்விருதிறத்துள், தேகம் தள்ளாதடைந்ததேசாயுச்சியமாம்; தள்ளி யடைந்தது சாயுச்சியமன்று; இதுபோற் குமாரதேவர் சுத்தசாதகமுஞ் சொல்லுமெனின், – அது, சுக்ல யஜுர்வேத **முக்திகோபநிஷத்திலும், பைங்கலோபநிஷத்திலும்**

ஜீவந்முக்தபதம்த்யக்த்வா ஸ்வதேஹேகாலஸாத்க்ருதே |
விசத்யதேஹமுக்கதத்வம் பவநோஸ்பந்ததாமிவ ||

’தனதுடம்பு காலவயப்பட்டவுடன் சீவன்முத்தி தசையை நீங்கிக் காற்று அசைவற்ற தன்மையினை யடைதல்போல விதேகமுத்தித்துவத்தை யடைகிறான்" எனவும், மேலைப் **பைங்கலோபநிஷத்தின்** 4–ஆம் அத்தியாயத்தில்–

யத்ரயத்ரம்ருதோஜ்ஞாநீ யேநவாகேநம்ருத்யுநா |
யதாஸர்வகதம்வ்யோம தத்ரதத்ரலயம்கத: ||

"ஞானி எவ்வெவ்விடத்தி லெவ்வெவ்விதமாக மரணமடையினும் எங்கணும் பரவிய . ஆகாயம்போல அவ்வவ்விடத்திலேயே இலயமடைகின்றனன்'' எனவும் வரூஉம் பிரபலச்சுருதி வாக்கியங்கட்கு விரோதமாகும். அன்றியும், **சைவமஹாபுராண** கைலாச சங்கிதையின் தகன கனன விதியுரைத்த 12–ஆம் அத்தியாயத்தில் –

"இவ்விடத்திலேயே முத்தர்களான சன்னியாசிகள் பிராண வாயுக்களுடன் கூடியிருக்கும் காலத்தும் நேரிட்ட கட்டங்களைச் சகித்தவர்களாகலின் அவர்களுடைய தேகங்களை முறைப்படி செய்யாமையினாற் றுர்க்கதியொன்று மணுகுவதில்லை.'

என்றும், **திருமந்திரத்துச் சமாதிக்கிரியையில் –**

"புண்ணிய மாமவர் தம்மைப் புதைப்பது
நண்ணி யனல்கோக்கி னாட்டி லழிவாகு
மண்ணி லழியி லலங்கார பங்கமா
மண்ணுல கெல்லா மயங்குமனன் மண்டியே.

அந்தமின் ஞானி யருளை யடைந்தக்கா
லந்த வுடறான் குகைசெய் திருத்திடிற்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரு
மந்தர வின்ப வருள்பெறு வாரே.'

என்றும் வருவனவற்றிற்கும் விரோதமாம். **திருக்களிற்றுப்படியார்** 44–ஆம் வெண்பாவுரையில்

"தேகம் விட்டபொழுதே திருவடியி லிரண்டறச்சேரும், மீண்டும் தேக மெடுக்கமாட்டாது."

எனத் திருவாவடுதுறை யாதீனத்துச் சிவப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகளுந் தெரித்துள்ளார். இவ்வாறனேக நூற்பிரமாணங்களுள; விரிக்கிற்பெருகும்.

ஈண்டு விளக்கியவா றியம்பப்படுவனவெல்லாம், ஞானத்தின் ஞானமல்லாத கீழ்நிலைக்கதிக ளாகலினவை பூருவபக்கமாமெனின், – அன்னனவல்லஎன்க. என்னை **?** மேலே கூறிப்போந்த ததீசி முனிவர் ஞானியென்றும், அவருடம்பினைப் பலவாறு நிந்தித்தே கபாலங் கீண்டு கதியடைந்தன ரென்னும் இனிதுகொளப்படு பொருளிற் றிருவிளையாடற்புராணத்து இந்திரன் பழிதீர்த்த படலத்துழை –

"என்றனன் கரண மொன்றி யெழுகருத் தறிவை யீர்ப்ப
நின்றனன் பிரம நாடி நெறிகொடு கபாலங் கீண்டு
சென்றனன் விமான மேறிச் சேர்ந்தன னுலகை நோன்பால்
வென்றனன்."

எனவருவதும், முன்னர்க்கூறியுள்ள சுருதிகளும், திருமந்திராதி வாக்குக்களுந் திருவருண்ஞான சீவன்முத்தியினையும் மேலாம் விதேககைவல்லிய பரமுத்தியினையுமே செவ்வன் விளக்குகின்றனவாகலின். தூலமொருவின் முத்தியின்றென்பது –

'அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப் – படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுத்தன் முறை."

என்று பரமேசுவரனாகிய நடேசப்பெருமா னருளிச்செய்த திருவெண் பாட்டைப் பெறீஇய கொற்றவன்குடி – ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியருடைய திருவருட் சத்தியநிருவாண 'சக்ஷுதீக்ஷை' யினாற் றேகஞ் சாம்பராகிப்பரகதியடைந்த பெற்றான் சாம்பானென்னுஞ் சிவனடியாரது அற்புத சரித்திரத்திற்கும் மாறுகோளாகும். இஃதேயுமன்றி; சிவானுபவச் செல்வராயிருந்த ஸ்ரீமத் தாயுமானசுவாமிகண் முகவை நகரத்து இலக்குமிதீர்த்தக்கரையின் குணபாற்கண்ணதாய பூங்காவி னொருவில்வ மரத்தடிக்க ணடங்கியவாறுபோலனேக மகான்மாக்க ளடங்கிய சரிதங்களு மிவ்வகிலத்துள; அவைகட்கெல்லா முரணும் அக்கூற்று. மேதாவியாகிய அக் குமார தேவருடைய திருமேனியுஞ் சமாதி செய்யப்பட்டதே யெனற்கு விருத்தாசலத்தில் ஒரு கோயில் காணப்படுகின்றது. உண்மை யாதோ? கூறிப்போந்தவாறு தாயுமானா ரங்கணடங்கின ரென்பதற்கு, அவர் சிவமயமா மமையத்தில் அவர் மாணாக்கர்களுட்

**கோடிக்கரைஞானியார் –**

"துகளறு சாலி வருடமா யிரத்தைந் நூற்றொடெண் பத்தைந்து தொடரு
மிகுசுப கிருதாம் வருடந்தை மாதம் வெண்மதி வாரநாள் விசாக
மகிமைசேர் பூர ணதிதியி லருத்த மண்டல சமயநற் கங்கை
திகழ்கரை யதனிற் றாயுமா னவனார் சிவத்தினிற் கலந்தநற் றினமே.' என்றும்,

**அருளையசுவாமிகள் –**

''உலகினுக் கணியா மிராமநா தபுரத் துயர்நறை வாவியின் குணபான்
மலர்நிறை வனத்திற் சிவத்துறு நிட்டை மருவிமெய் யொருவிவே தாந்தத்
திலரிய பொருளாய் வானமாய் நிறையு மெந்தையே யெனதுபந் தமும்போய்
நிலையுற நினது திருவரு ளளிப்பாய் நின்மலா னந்தமே போற்றி.' என்றும்,

**சைதன்னியானந்தசுவாமிகள் –**

"கங்கைமுதற் புண்ணியதீர்த் தங்கட் கெல்லாங்
காசினியிற் றேவதா வாவி யென்னு
மங்களலட் சுமிதீர்த்தக் கரையின் கீழ்பால்
வளம்பெறுநந் தனவனப்பூங் காவிலென்றுந்
தங்குசதா நிட்டைபர ராச வுள்ளந்
தனினிலைத்து **வில்வமர நீழ லின்கட்**
டிங்களெனப் பூரணமாந் தாயு மான
சிவமேநின் பொற்கழலென் சிரமேற் கொள்வேன்."

என்றும் பாடியகவிகள் போதியசான்றாம். நிற்க, மோக்க மடையுமான்மாவுக்குத் தூலங் கழலக்கூடாதென்றல், தூலம்போனான் மேலாங் காரியமொன்று முஞற்றவொல்லாதென்னு நீர்மைகுறித்தெனின், – அஃதறிவு விளக்கமில்லாப் பிராகிரு தான்மாக்கள் பக்கமாதலன்றிச் சாமுசித்தரான விசேடான்மாக்கள் பக்கமாதலும் யாங்ஙனம்! இவரினுமுயர்ந்தார் சீவன்

முத்தராய ஞாதாக்களென்க. யாங்ஙனம் ? எனின், – திருமூலநாயனார், பரகாயப்பிரவேச சித்தியாற் றமதுடம்பைத் தணந்து வேறுடம்பு புக்கிருந்தனர்; அவ்வா றுடம்பு தணந்ததற்கும் வேறுடம்பு புகற்கு மிடையில் அவருடை யறிவுஞ்செயலுங் குன்றாதிருந்தே யவ்வணமாயினார்; இலவேல், அவ்வணமாகாரெனுமாற்றா னென்க. முதல்வன் புராணமாகிய **கந்தபுராண** தக்ஷகாண்டத்து வள்ளியம்மை திருமணப்படலத்தே தழன்மூழ்கிய வள்ளிப்பிராட்டியார், தமது புறவுடம்பு பொன்றலும் உள்ளுடம்புடன்போகி வள்ளிமலைப் பாங்கரிற்றெள்ளிதிற் றவஞ்செய்திருந்தன ரென்னுஞ்செய்தி பெறுதற்கு–

''பொள்ளே னத்தன் புறவுடல் பொன்றலும்
உள்ளி னுற்ற வுருவத் துடனெழீஇ
வள்ளி வெற்பின் மரம்பயில் சூழல்போய்த்
தெள்ளி திற்றவஞ் செய்திருந் தாளரோ.'

என்னுந் திருவிருத்தமு முளது. தூலம் விட்டபின்றைப் புரியட்டகத்திருந்தே பூதசாரவுடம் புண்டாமென்றலும் வேதாகம சம்மதமே. அப்பூதசாரம், சுத்தான் மாக்கட்கு மிக்க மேன்மைத்தாகவே யிருக்கவேண்டு மெனலுந் திறம்பாத் தீர்வையாம், ஆகவே, தூலந்தணப்பதனானே ஒருகுறைவு முண்டாக வேதுவின்றென்பாம். ஈண்டு, பூதசாரம்பெற்றார்க்குச் சாயுச்சியஞ் சொல்லலாமோ, எனின், – முன்னைய தூலத் திருக்கும்போழ்து சீவன்முத்தித் தன்மையானே தாமரையிலைத் தண்ணீர்புரைய வொட்டியு மொட்டாமலுமிருந்த தேய்ப்பப் பின்னருண்டாய தேவசரீரமாகிய பூதசாரவுடம்பிலு மதற்கு முயர்வுடையுடம்பிலு மேம்பாடாயிருந்து பிரளயாந்தத்திற் பிறவாப்பேறெனுஞ் சாயுச்சியமேயடைவர். பிரமாணம், இந்நூலகம் ''ஒல்லுநர்'' என்னும் **93**–ஆம் பத்தின் **7**–ஆந் திருப்பாட்டினறியலாம். அஞ்ஞானியைப்போற் செத்து அமங்கலப்பிண மாகாமே சிவயோகத்தாற் சாகாது செத்தடங்கு மங்கலான் மாவின் மங்கல சரீரம், கறையறு பூமியிற் கனனசமாதி செய்யப்பட்ட பின்றைச் சிலகாலவளவையிற் றிருவருளாற் சிவலிங்க வடிவாகு சித்தியும், அங்கிருந்தவாறே தேக மறையச் சிவசாயுச்சியமடைதல் அல்லதியாதொரு காரணத்தான்வெளிப்படு சித்தியு முளவென்றலும் பல சரிதங்களாலு முணரப்படும். இவ்வித ஏதுக்களால், உடம்பிழந்தவரெல்லா முலகிற் பிறப்பரென்றறுதிகூறற் கொல்லாதென்பதுறுதியாம். ஈங்கிவ்வாறுரைத்த கிரமங்களும் ஒருசாராரைச் சார்வனவன்றிப் பழுத்தபழம், தானே கொம்பரினின்று நழுவுமா றுடம்புவிட் டுடனே சாயுச்சியமடையு மகான்மாக்களைச் சார்வனவல்ல. என்னை ? மேலே காட்டப்பட்ட சுருதி யுத்தி அனுபவவாயிலாக நிலவு நியாயங்களுக் கிசையப் **பைங்கலோபநிஷத்** –

('வ.ந.நம்அரெசு – கநநம்சரேத்'

'நாபள அம்நாநிகாா ஷ்ணு நவிஷ்ணும்தொடிகக்ரியா ।
நாசௌளசம்நாக்நிகார்யஞ்ச நபிண்டம் நோதகக்ரியா ।'

‘[illegible] ।
ஜ்ஞாநாக்நிதக்ததேஹஸ்ய நசச்ராத்தம்நசக்ரியா ।’)

"ஞானாக்கினியினாற் றகிக்கப்பட்ட ஞானியுடம்புக்குத் தகனம் வேண்டா: புதைப்புவேண்டும்: அங்ஙனம் அபரக்கிரியைகளும் ஆகூசமுமில,'' என 4–ஆம் அத்தியாயத்திற் கூறுதலின் இச்சுருதிப்பொருளே இந்நூல், "கந்தசாமி'' என்னும் 81–ஆம் பத்தின் 8–ஆந் திருப்பாட்டினும் விளக்கப்பட்டுளது.

ஆயின், **திருவாசகத்து**க் கோயின் மூத்த திருப்பதிகத்து 8–ஆந் திருத்தூக்கிற் "செத்தே போனாற் சிரியாரோ'' என்று மணிவாசககசுவாமிகளருளிச்செய்த தென்னை ? எனின், – கூறுதும். பரமபதியாயுள்ள நீ குருமூர்த்தியா யெழுந்தருளிவந் தனுக்கிரகஞ் செய்யப்பெற்ற இவ்வடியானு முலகத்தாரொப்பச் சாவதெனின், உலகர் நகையாரோவென்று தலைவனது சிறப்புநோக்கித் தலைவன் பாலிற்றானே விண்ணப்பிக்கப்பட்டது அஃதெனவாம். குழைத்தபத்தில் –

"மண்மேல் யாக்கை விழுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ணா வெண்ணக் கடவேனோ வடிமை சால வழகுடைத்தே'

என வம்மணிவாசகப் பிரபு அருளிச்செய்ததை நோக்க, மண்மேலுடம்பு வீழாமல் இலயஞ்செய்து திருவடியடைதலைவிட்டு வீழ்ந்து திருவடியடைத லென்பதைத் தானோ நினது பிரசன்னானந்தத் திருவருட்டீக்கை பெற்றுள்ள யானுமெண்ணக்கடவே னென்னும் பொருள் கொளக்கிடக்கின்றது. இப்பொருளே, மேலே விளக்கப்பட்ட பிரமாணாதிகட்கெல்லா மொத்த முடிபாம். ஆகவே, திருவருட்பெருவலியா லுடம்பு நீக்கியு நீக்காமலும் வீடுபேறடையும்வகை யிரண்டனுள், நீக்காதடையுமொருவன்மை யுயர்வுடைத்தாகவே பெறப்படுமென்ப. இருதிறமுந் திருவருட் பாங்கிலேயே யுள. இவ்வுண்மைப்பாடு புலங்கொளவறியாது, யாதானுமொரு புத்தகத்தைப் படித்தன் மாத்திரையே, கேட்டன் மாத்திரையே தேக நீங்கினார்க்குச் சாயுச்சியமே யின்றெனச் சிலரும், தேகத்தோடு சாயுச்சியம் யாண்டுமின்றெனச் சிலரும் பேசத்துணிவது பெரியாரையிகழும் பெருங்குற்றமாம்.

சென்னை வாசியாயிருந்த ஒரு முதலியார் வாதிப்பின்மீதே இவ்வுரை இவ்வாறு விரித்துரைக்கப்பட்டது.

சென்னை

1899

# பரம்பரனென்றற்றொடக்கத்து 108-ஆம் பத்திலுள்ள பெருமிறைக்கவியுரை

**(ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளியது)**

கலிவிருத்தம்

தானைக்கு மானைக்கும் பூனைக்கு நடுச்சா
ராநிற்கெம் மானைச்ச தாநச்சு மகத்தார்
ஆனைச்சொன் னாவற்ற வாணிக்கை யறுத்தே
ஏனைச்சொன் னாவற்ற தோலிற்கு ளிருப்பார்.

**உரை**

குகனை யெப்பொழுதுமே விரும்பு நெஞ்சுடையார் நாமென்னும் பாசத்தை யறுத்துப் பிரபஞ்ச விகாரமொன்றுமில்லாத குகனென்னும் அப்பதிப்பொருளின்கண் ணிருப்பர்.

தானை = பகுதி. ஆனை = நாகம். "தானை பதாதி பதாகினி யூகம் – வானி யதிகம் பாடி **பகுதி** – சேனை நிதானந் **திரள்படை** யென்ப" என்று **சே–திவாகரமும்**, "தந்தியத்தி கடிவை கயமே – நாகஞ் சிந்துரந் தூங்கனிருமதம்" என்று பிங்கல நிகண்டுங் கூறுதலினறிக. ஆனை யானை யென்பதன் மரூஉ, பூனை = இந்தி; இது, உந்துருத்வீபீ – என்னும் வடசொல்லின் விகாரம்; எலிப்புலியென்பது பொருள். த்வீபீ = புலி; **அமரஸிம்ஹங்** காண்க. இங்கே விளக்கியவாறு பகுதி, நாகம், இந்தியென்னும் முச்சொற்களின் நடுவில் நிற்கின்ற வெழுத்துக்கள் 'குகந்' எனவாம். குகனை யெப்பொழுதும் விரும்பு நெஞ்சுடையாரென்பார் ‘‘தானைக்கு மானைக்கும் பூனைக்கு நடுச்சா ராநிற்கெம்மானைச் சதாநச்சு மகத்தார்" என்றாரென்க. சாராநிற்கு – வினைத்தொகை; சார்ந்து நிற்கின்ற வெனும்பொரு ளுடைத்து.

நா = நடு. வாணி = சொல். கை = சிறுமை. தோல் = சொல். "ஒத்தல் நாவோ டணவு வயங்கிடை – நலந்திகழ் கூழை நடுவென் றாகும்'' ‘‘**வார்த்தையுமோர்** கூத்தும் வாணி யாகும்'' "**சிறுமை** – கரமும் பிற்புறந் தாளுங்கையே" என்று **பிங்கலநிகண்டு** கூறுமாற்றானும், "தோலிபம் வனப்பு **வார்த்தை**" என்று லகரவெதுகை கூறுமாற்றானுமறிக. நாகமென்னுஞ் சொல்லின் நடுவெழுத்தொழிந்தசொல் நாம். ஏனைய பகுதி இந்தியென்னுஞ் சொற்களின் நடுவெழுத்தொழிந்த சொற்களிள் பதி, இதியெனவாம். பதி = பசுபதியாகிய பரம்பொருள். காரணம் நிச்சயமென்னும் பொருளை இங்ஙனந் தரவந்த வொருவட சொல்லே **இதி.** **"இதி ஹேதுப்ரகரண** ப்ரகாராதி ஸமாப்திக்ஷு ।'' என்று **அமரஸிம்ஹங்** கூறுமாற்றானும் அஃதறியக் கிடக்கின்றது. ஹேது = காரணம். முதல் ஈறென்னு மிடங்களில் இதியென்னும் அவ்யயம் வர்த்திக்கு மென்றும் போந்த ‘‘ஆதி'' ‘‘ஸமாப்த:'' என்பனகாட்டுதலின் அது முதலும் ஈறுமாகவுள்ள பிரபஞ்ச காரண காரியமாயையைக் குறிப்பானுணர்த்துதற் கெழுந்ததெனக் கோடலுமாம். பிரபஞ்சமாயை முதலும் ஈறுமாகவுளதென்பது 'ஸஹ்ருத்வை தத்ஸ்ருஜதி''

என்னும் வடமொழிச் **சிவஜ்ஞாநபோதத்து** முதற் சூத்திர வாக்கியத்தானும் அறியற் பாற்று. பதி, இதியென்னு மிவ்விரண்டனுட் பிரபஞ்ச விகாரமற்ற பதியே 'ஏனைச்சொன்னா வற்ற தோல்" எனப்பட்டது. ஏனைச்சொல் = இதி. நா = (மற்றொரு சொல்லாய பகுதியிற்) கு. இவ்விரண்டுமே அறுதல். ஏனைச்சொல் நா – உம்மைத் தொகை. இவ்வாற்றான் மேலே கூறியவாறு குகனை விரும்பு நெஞ்சுடையார் 'நாம்' என்னுஞ் சீவசுதந்திர பாசத்தையறுத்து, ஜகத்காரணப்ரபஞ்ச விகாரமொன்றுமின்றி யாண்டு மொரு தன்மையாயுள்ள குகனென்னும் அப்பதிப்பொருளின்கண் ணிருப்பார்களென் பார் ''ஆனைச்சொன் னாவற்ற வாணிக்கை யறுத்தே ஏனைச்சொன் னாவற்ற தோலிற்கு ளிருப்பார்'' என்றாரென்க. குகன் எனற்பாலது 'குகந்' எனவருதல் கூடுங் கொலோவெனின், – அறியாது கடாயினாய்; திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத் திருமாலைமாற்றில் னகரமும் நகரமும் பேதமின்றி யுபயோகிக்கப்பட்டிருத்தலின் மிறைக்கவியிற்கூடுமென்க. குகனெனும் இத்திருப்பெயரின் பொருள் ''★ பன்மதத் தொறு வெலாம்' +"உலகாகமல் கசரசரம்' என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுக்களி னுரைகளிலேயே விளக்கியுள்ளோம்; ஆண்டுக்காண்க. ஆன்மாக்களின் இதய கமலந்தோறு மிருந்துள்ள குகனே தாம் வழிபடுகடவு ளாகலின் ''எம்மானை'' என்றாரென்க. **(3)**

தானையின் முடியுமப் பூனையின் சமனும்
ஆனையி னடியுநன் றாயெழி னங்னே
ஆனையின் றிறனறப் பூனையின் றிறனாய்த்
தானையை யடையலாங் கோணையன் றகையால்.

அருளென்னு ஞானசூரியன் அழிவற்ற ஞானசாரியனது கிருபையால் நன்றாக வுதயமாயின் அப்பொழுதே ஆணவமலத்தினியல்பு கெடச் சீவன்முத்தத் தன்மையை யடைந்து பரமுத்தியிற்றன் கடவுளாகிய குகனை யடையலாம்.

சமனென்பதற்கு முன்னரும் பின்னரும் முடியும், அடியும் வருதலால் அடியையே ஈண்டு முதலாக வைத்துக்கோடல் வேண்டும். ஆனை = அத்தி; இதனடி யென்னு முதலெழுத்து – அ. "வெருகு விடருகம் பூசை பாக்கன் – மார்ச்சாலம் பூனை'' என்று சே– திவாகரங் கூறுமாற்றானே பூனை = வெருகு: இதன் சமனென்னு நடுவெழுத்து – ரு. தானை = திரள்; இதன் முடியென்னுங் கடையெழுத்து – ள். இம் மூன்றெழுத்துக்களும் 'அருள்' எனவாம். (இந்த) அருளாகிய ஞானபானு அழிவற்ற ஞானாசாரியனது கிருபையால் நன்றாகவுதயமாயினென்பார் "கோணையன் றகையால் தானையின் முடியுமப் பூனையின் சமனும் ஆனையினடியுநன் றாயெழின்'' என்றாரென்க. அஞ்ஞான்றே ஆணவமென்னும் யானையினியல்புகெடச் சீவன்முத்தத் தன்மை யென்னும் பூனையினியல்பையடைந்து பரமுத்தியிற் றன்கடவுளை யடையலாமென்றறி வுறுப்பார் ''அஙனே ஆனையின் றிறனறப் பூனையின் றிறனாய்த்தானையை யடையலாம்'' என்றாரென்க. தன் ஐயை யென்னுந் தொடர்

---

★ *கடவுள் வணக்கத்து 2 –ஆந்திருப்பாட்டு*

+ *2–ஆம் பத்தின் முதற்றிருப்பாட்டு*

முதனீண்டவழித் ‘‘தானையை’’ எனவாயிற்று. ஐ–கடவுள்; யகரவெதுகை காண்க. கோணை = அழிவின்மை; மேலையெது கையுடைச் **சூடாமணிநிகண்டு** காண்க. தகை = கிருபை யென்பதைத் ‘‘தகையென்ப தழகு பண்பு தயையொடு பெருமை நாற்பேர்" என்னுங் ககரவெதுகைக் கூற்றுழைக் காண்க. அஙன் – காலம் இடமாயிற்று. சுட்டு, வினாவாகிய இடைச்சொற்களை யொட்டி வரூஉம் ஙனம் என்பது இடத்தினையும், தன்மையினையு முணர்த்தும் பல பொருளொரு சொல்லாம். அங்ஙனம் என்பது அஙன் – என விகாரப்பட்டு நின்றது. ஏ–அசை.

ஞானாசாரியனது கிருபையால் அருண்முத்தி யடையலாமென்பதற்குரிய **சுருதி யாதி பிரமாணங்கள் 9**–ஆம் பத்தின் ‘ஓதி நூல் சாமிமொழி’ என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுக் குறிப்புரை வாயிலாக வறியலாம்.

ஆசு, மதுரம், சித்திரம், வித்தார மென்னுங் கவிக்கூறு நான்கனுட் சித்திரம் மிறையெனப்படும். வருத்தம் = மிறையாகலின் அதுகொண் டரிதிற்பாடப்படும் அது மிறைக்கவியாம். வன்செய்யு ளெனினுமாம். அத்தகைய இக்கவியேயன்றி எதுகை மோனை முதலிய நயம்பிழையாவெழில்வாய்ந்த பஃறிறத்த சித்திரமும், சித்திரத்துட் பல சித்திரமார்ந்த விசித்திரமுமுற்ற மிறைக்கவி பலவற்றையும் –

‘‘யாப்பி னிலக்கணமும் யாத்த விலக்கியமும்
யாப்பொலிபல் சித்திரமு நச்சியல்போய் –மூப்போ
தலங்கற் றிரட்டினிரண் டாங்கண்டம் பாருன்
விலங்கைத் தறித்து விடும்.’

என்னுங் **காசியாத்திரைத்** தூக்கின்படி இந்நூலாசிரியருடைய **திருவலங்கற்றிரட்டின்** 2– ஆங் கண்டத்தும், சஸ்திரபந்தந் தொடக்கமாய **பத்துப் பிரபந்தத்தும்**, 1266– திருப்பாடல்களடங்கிய **குமரகுருதாசசுவாமிகள்** பாட லென்பதினுங் கண்ணுறலாம். (4)

இந்த 3–4–ஆம் மிறைக்கவிகளிலுள்ள வன்மைகள் அடியில் வகுக்கப்படு மாறு 14–என்க.

## 3-ஆந் திருப்பாட்டு

(1) னை – ஈறாகும் ஒரோசையில் தானை, ஆனை, பூனையென்னு முக்கூற்றில் ஆறெழுத்துக்க ளெடுத்துக்கொள்ளப்பட்டன.

(2) இரண்டிரண்டாய அவ்வெழுத்துக்களின் சொற்கள் பகுதி, நாகம், இந்தியென்னுஞ் சொற்களைப் பயக்குமாற்றானே மும்மூன்றெழுத்துக்க ளாக்கப்பட்டன.

(30 அவற்றுட் பரமான்மாவின் திருநாமமென்னுங் குக னென்பது போதர நடு வெழுத்துக்கள் குறிக்கப்பட்டன. அவை – பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்,

சந்திரன், சூரியன், ஆன்மாவென யாவுமாம் அட்டமூர்த்தங்களின் நாப்பணிருந்து அவையற்றை யியக்குகின்றவனே குகனெனக் குறிப்பா னறிவுறுப்பனவாகவு மிருக்கின்றன. மேலிரு வன்மைகளும், பிறவுமில்லாமே இவ்வாறு மும்மூன்றெழுத்துக்களுள் நடுவெழுத்துக்களை மட்டுமெடுத்து ஒரு சொல்லாக்கிப் பொருள்கொண்டு பாடுதலை நடுவெழுத்தலங்கார மென்ப.

(4) இவ்வலங்காரம் ஆனை, பூனை, தானையென்னும் மூன்றினின்றும் விளைந்தது; பாட்டுமதுவே யாகலின் அம்மூன்றும் அத்தி, வெருகு, திரள் என்னுஞ் சொற்களைப்பயந்து அவையற்றின் முதல் இடை கடை யெழுத்துக்கள் அருளென்னுஞ் சொல்லைப் பயக்குமாறாகவு நிற்றலின் அவ்வலங்காரத்தி னுள்ளோரலங்காரமுமாம்.

(5) இது, பிறிதொருபாட்டிற்கு (தானையென்றற் றொடக்கத்து 4–ஆந் திருப்பாட்டிற்கு) வேறோராற்றாற் பொருண்முடிய நிற்றலு மோரலங்காரமாம்.

(6) அங்ஙனமே ஆனை முதலிய மூன்றற்குமுரிய சொற்கள் இரண்டெழுத்து முதற்பல வெழுத்துக்களிலு மிருப்ப அவற்றொன்றுமெடாமலும், மேன்முறையில் வழாது அத்திமுதல் மும்மூன்றாகவே யெடுத்துக்கொண்ட காரியப்பாட்டுழை மேலே யாக்கப்பட்ட பகுதி, நாகம், இந்தியென்பவற்றெதனையுமெடாமலும், அவையற்றின் நடுக்களையே ஒரு சொல்லாகக் கிரகித்துக் கொண்டவாறு கிரகித்துக் கொள்ளாமலும் முதல் இடை கடை நிற்பனவற்றைக் கிரகித்துக்கொண்டதும் ஓரழகே.

(7) பகுதி, நாகம், இந்தியென்பவற்றின் நடுவெழுத்துக்களொழிந்த ஏனைய வெழுத்துக்களும் வாளா நில்லாமே யேற்புடைப்பொருடந்து நிற்கின்றன.

(8) அவ்வாறு நிற்கும் பதி, நாம், இதி யென்பன முறையே பதி, பசு, பாச மென்னும் பொருளவாகலின், ''பதி பசு பாச விதிமுறை கிளக்கும் வாய்ந்த நூல்கள்'' எனச் சங்கற்பநிராகரணத்திற் சாற்றுற்றவாறு 'ஈச்வரப்ரோக்தாவளி' நிர்ணயமாய் நிற்றலுமறிக.

(9) 3–ஆம் அடிச்சொற்களை ஆனைச்சொல் – நா – வற்ற – ஆணிக்கை – அறுத்தே எனவெடுத்துக்கொண்டு அவ்வடிக்கும், ஏனைச்சொல் நா அற்ற தோலிற்குளிருப் பார் என்னும் 4–ஆம் அடிக்கும் "நாமென்றுரைக்கும் நாவினது செயலறும்படி உறுதியான உடலசைவைக்கெடுத்து, ஏனைய சொற்களும் வெளிப்படுமாறு நடுவேநிற்கு மனமுமிறந்த (அந்த) உடம்பினுட் பரமுத்தியெய்துங்காறு மிருப்பர்'' என மேலடிகளோடு பொருந்தப் பொருள்கொள்வுழி வாக்கு, காயம், மனமென்னுந் திரிகரணங்களும் வெளிப்படும். படுமாற்றானே உறுப்புப்பொருள் பயக்கத்தக்க நா, கை, தோலென்னுஞ் சொற்களைச் சிலேடையில் நிறீஇயினமையும் ஓரழகே. இங்ஙனம் கையென்பது காயத்தையும் நடுவெனும்பொருளைப் பயக்கத்தக்க நாவென்பது மனத்தையும் ஆகுபெயரா னுணர்த்தி நின்றனவென்க. தோலென்பது வாக்கினை யுணர்த்திற்று.

(10) அடிதோறுமுற்ற சீர்கள் – தேமாங்காய், தேமாங்காய், தேமாங்காய், புளிமா வென்னும் வாய்பாடுடைமையிற் பாட்டுமொரு வண்ணமாயிற்று.

# 4- ஆந் திருப்பாட்டு

(11) முத்திநிலை அருளானது மேலானவனிடத்திலிருந்து இறங்கவேண்டு மென்பதை அறிவுறுக்குங் குறிப்பாகவும் அட்டமூர்த்தங்களையு நடுவிருந் தியக்குவானது அத்துவித அருளின் வியாபகம் ஆதி மத்தி அந்தமெங்கணுமுளதென்பதை அறிவுறுக்குங் குறிப்பாகவுந் திரளென்பதற்காய தானையைப் பூருவத்திலும், வெருகென்பதற்காய பூனையை மத்தியத்திலும், அத்தியென்பதற்காய ஆனையை உத்தரத்திலும் வைத்தோதினாரென்க. அருள்நிற்குந் திரள் முதலிய மூன்றனிலுமுள்ள மற்ற வெழுத்துக்களும் வாளா நில்லாமே 'அருளென்ப கருணை சத்தி'' என்று ககரவெதுகை கழறுமாற்றானும் அருள் சத்தியென உருவாகவு முள்ளதென்பதை யுணர்த்துமாறு ''வெகுதிரத்தி'' என நிற்க அச்சொற்களை யெடுத்துக் கொண்டதும் வியக்கற்பாற்றே. ஸ்திரம் – வடசொல்; உறுதியெனும் பொருளுடைத்து.

(12) மும்மூன்றெழுத்துக்களை இருமுறை பயக்குமாறெடுத்துக்கொள்ளப்பட்ட தானை முதலிய மூன்றும் அவ்வளவி னில்லாமே ஈண்டேற்புடைப் பொருளுந்தந்து நிற்றலின், **ஸ்காந்த மஹாபுராண** சம்பவகாண்டத்து 35–ஆம் அத்தியாயத்து 21–ஆஞ் சுலோகம் – ''பரமேசுரீ ! மகா (தானை =) சேனைகளாய உயிர்த்திரள்கள் அந்தரங்க புத்தியோடு நமற்கரித்துக்கொண்டு அவனது சுவாதீனத்திலிருக்கின்ற காரணத்தால் உன்னுடைய திருமகன் மகாசேன னெனப்படுவோனாயினன்'' என்று சிவ பெருமான் கூறியருளினனெனும் பொருள் பயத்தலின் இப்பொருள் கருதியும், ஆன்மாவுக்கான்மாவெனப்படும் அந்தரியாமியே கடவுளாகலின் அது கருதியும் இக்கடவுளைத் தன்னுடைய கடவுளெனும்படி இரட்டுற மொழிதலென்னும் உத்தியிலே தானையென்பதியைந்தவாறும்; அந்தகார மேனியும் நானென்னுமதமுமுளது ஆணவமாகலின் அது கருதி அதனை யானையாகவும் கேவலமென்னு மிரவிலுஞ் சகல மென்னும் பகலிலும் பார்வையுடையவனாயிருத்தன் ஞானி யென்னுஞ் சீவன் முத்தன தியல் பாகலின் அது கருதி அதனைப் பூனையாகவும் உருவகஞ்செய்ய இயைந்தவாறும் பெரிதும் வியக்கற் பாலனவே.

(13) ஆற்றொழுக்குடைய முற்பாட்டுப்போலாது முதலினும் ஈற்றினு நிற்கு மொழிகள் தம்முட் பொருணோக்க முடையனவாகலின் இத்திருப்பாட்டுப் பூட்டுவிற் பொருள்கோளாம்.

(14) அடிதோறு மிரண்டாமெழுத்து ஒன்றத்தொடுக்கப்பட்ட நயப்பாடுடைத்தாகலின் ''ஒரெழுத்தொன்றினிடை'' என்னும் விதிப்படி இடையா கெதுகையாம்.

இப்பதினான்கும் – பண்டையார் வழக்கிற் பிரமாணமாக நிலவுகின்ற இருக்கு, யசு, சாமம், அதர்வணம், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம், புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதியென்னும் வித்தை பதினான்கென்பதையும்; இவை "பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபா சந்தெரித்தல்'' என்று **சிவப்பிரகாச**

மியம்புமாற்றாற் பதி பசு பாசமென்னும் முப்பொருள்களைப் பகுத்துக் கூறவந்தனவாகலின், அவ்வாறு கூறுஞ் சிவஞானபோதம் முதலிய **சித்தாந்தசாத்திரம்** பதினான்கென்பதையுங் குறிப்பாலுணர்த்த அமைத்தவாறு மாயின. அந்நூலெல்லாங் கூறும் பதி பசு பாசமென்பனவே இங்குமுள வெனவும், பலவேறு வகைப்பட்ட முத்திகளையெல்லாம் ''பழிசேர் முத்தி' எனக் கூறியொழித்த மேலைச் சிவப்பிரகாசத்திலே ''திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி திகழ் முத்தி'' என அந்தச் சித்தாந்தமுத்தி வெளிப்பட்டபடியே இங்கும் அஃதரு ளென்னுமாற்றாலினிது வெளிப்பட்டதெனவும் அமைந்திருத்தலுமறிக. இது வேயுமன்றி, பாட்டு நான்கடிச் செய்யுளாயினமை – சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சிய மாகிய கதி நான்கனுக்குமுரிய சரியை, கிரியை, யோகஞான மார்க்கங்களையும்; அத்திறவடிச் செய்யுளிரண்டேயாக, அவை சொல்லும் பொருளும் ஒன்றை யொன்று நீங்காமேயாக வமைக்கப்பட்டமை – பதி பசுவென விருதிறச் சித்துக்களுமுள, அவை யொன்றை யொன்று நீங்காத அத்துவைத நிச்சயத்துள்ளன வென்பதையும்; இரண்டும் பதினாறு பதினாறு சீர்களாய் நிற்கின்றமை

1. வேதநிந்தை சைவநிந்தை யென்பன பொறா நெஞ்சம்,
2. ஐம்புலன்கட் கேவல்செய்யா மதுகை,
3. பிறவி தீதெனாப் பேதையரோடு பகை,
4. நல்லறச் செல்வரோடு நட்பு,
5. நல்லன்பர்க் கில்லையெனாதுதவு மியல்பு,
6. மாதவத்தோர் வெறுக்கினு மவரை வணங்கு மகிழ்வு,
7. நறியவுபதேசத்தி லுறுதிகோடல்,
8. சிவனன்பர் தீதுபுரியினுமதனைச் சிவச்செயலாகக் கொள்ளுந்தெளிவு,
9. மனமும் வாக்குஞ் சிவனன்பர்மாட் டொருப்படல்,
10. கனவினுஞ் சிவனன்பர்க் கடிமையாங் கருத்து,
11. சிவனையன்றிப் பிறகடவுளை வழிபடா நிலை,
12. சிவனுடைய புகழ்களையே நாடோறு நவிறல்,
13. உலோகாயதம் முதலிய புறச்சமயங்களை யொழித்திடு திறன்,
14. பிறர்பொருள் விழையா வண்மை,
15. பரதாரம் விரும்பா நோன்பு,
16. யானெனதெனுஞ் செருக்குறாத் துறவு

என்னும் பதினாறு பேறுகளையும், இம்மார்க்கத்தை விரும்பிய அந்தப்பசுவுக்கு முத்தி நெறிகாட்டும் முருகப்பெருமானதுமந்திரம் ஆறெழுத்தாகலின் அதனைக் குறிப்பானறிவிப்பா னெடுத்துக்கொள்ளப்பட்டன விவையென்னும்படி தானை, ஆனை, பூனை, யெனவுள்ள வாறெழுத்துக்களால் ஏற்புடைப்பொருள் பெறீஇ நிற்கும் அந்த இரண்டு திருப்பாட்டுக்களுங்

"குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமு
மொற்று மெனவொரு நான்கொழித்துக் கற்றோ
ருயிரு முயிர்மெய்யு மோதினார் கொள்ளச்
செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு."

என்னும் விதியின்படி ஒற்றென்னு மெய்யெழுத்தொழித்து (100) நூறெழுத்தாயிருத்தலை நோக்க, யஜுர்வேத சதருத்ரீயஜபம் விசேடம், அது ஷடக்ஷர ஜபத்துக்கு வேறுறாதென்பதையுங் குறிப்பானறிவிக்க வமைந்தவாறு மறியக் கிடக்கின்றது. ஈண்டிப்படியெல்லா மமைவுறச்செய்தமை யெற்றுக் கென்னின், – அறியலுறு வார்க்குச் சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், விழுமியது பயத்தலென்னும் அழகு முதலியன வாய்ந்து சிறந்த மிறைக்கவியென்பது காட்டற்கே யென்க.

**பெருமிறைக்கவியுரை முற்றிற்று.**

சென்னை.

1913.

---

# பெருமிறைக்கவியுரைச் சுருக்கம்

## குகன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *3– ஆந் திருப்பாட்டின்* | **தானை** | | **ஆனை** | | **பூனை** |
| | பகுதி | | நாகம் | | இந்தி |
| | கு | + | க | + | ந் = குகன் |
| | பதி – பதி | | நாம் – பசு | | இதி – பாசம் |
| *4– ஆந் திருப்பாட்டின்* | திரள் | | அத்தி | | வெருகு |

## அருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *4– ஆந் திருப்பாட்டின்* | உத்தரத்து | அத்தி – | அடி | அ | (1) |
| | மத்தியத்து | வெருகு – | நடு | ரு | (2) |
| | பூர்வத்துத் | திரள் – | முடி | ள் | (3) |

## வெகுதிரத்தி

| | |
|---|---|
| (2) – ல் ஆதியும் அந்தமும் | வெகு |
| (3) – ல் ஆதியும் அந்தமும் | திர |
| (1) – ல் மத்தியும் அந்தமும் | த்தி |

# இரண்டாம் புத்தகம்

## திருப்பத்தகராதி


| திருப்பத் தெண். | திருப்பத்தின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| | **அ** | |
| 54 | அகண்டபரம் | 475 |
| 48 | அமிர்ததயா | 449 |
| 102 | அமிழ்தமரர் | 680 |
| 27 | அயலாவதுமென்னே | 355 |
| 45 | அலர்நான்முகனார் | 436 |
| 71 | அறியேன் | 538 |
| 99 | அறைமலிந்த பனுவல் | 665 |
| | **ஆ** | |
| 9 | ஆனந்தநடனசிவம் | 274 |
| 8 | ஆனந்தமானபொருள் | 266 |
| 41 | ஆனந்தவெயில் | 417 |
| 44 | ஆரணம் | 432 |
| | **இ** | |
| 97 | இரணியகருப்பன் | 658 |
| 62 | இறை | 507 |
| 7 | இன்பப்பிரவாகசிவம் | 258 |
| | **உ** | |
| 103 | உரைப்பொடி | 687 |
| 65 | உலகநோக்கினார் | 516 |
| 47 | உலகமெலாம் | 446 |
| | **எ** | |
| 31 | எம்பரன் | 372 |
| | **ஒ** | |
| 93 | ஒல்லுநர் | 634 |
| | **ஓ** | |
| 96 | ஓங்காரம் | 650 |
| | **க** | |
| 23 | கங்கையணிவேணி | 338 |
| 53 | கடல் | 472 |
| 39 | கதிசேர்மின் | 409 |
| 81 | கந்தசாமி | 578 |
| 57 | கருணைத்தேவு | 485 |
| 32 | கருத்து | 375 |
| 95 | கனகம் | 642 |
| | **கா** | |
| 68 | காங்கேயம் | 527 |
| | **கு** | |
| 14 | குகசம்பு | 302 |
| 29 | குகதேவு | 363 |
| 12 | குகப்பரமம் | 295 |
| 34 | குருமணி | 386 |
| | **ச** | |
| 22 | சதானந்தவுந்தி | 333 |
| 52 | சந்திரமௌலி | 468 |
| 37 | சருவேசுரபதி | 400 |
| 25 | சருவபூரணசயம்பு | 345 |
| | **சி** | |
| 90 | சிதம்பரசிவம் | 620 |
| 60 | சிவத்திரு | 496 |
| 30 | சிற்றுணர்வே | 366 |
| | **சீ** | |
| 46 | சீருயர்ந்தவான்மா | 440 |
| 74 | சீர்சான்றபஞ்சருத்திரம் | 550 |
| 43 | சீர்த்தியுடைத்தெள்ளறிவு | 427 |
| 86 | சீர்பூத்தவிராமரகசியம் | 601 |
| | **சு** | |
| 6 | சுப்பிரமணியப்பரமம் | 250 |
| 38 | சுப்பிரமணியவிலாசம் | 405 |
| 79 | சுருதிபணித்தபடி | 570 |
| | **சொ** | |
| 63 | சொல்லுவேனீதி | 510 |
| | **ஞா** | |
| 106 | ஞாலம் | 699 |
| 42 | ஞானதெய்வம் | 421 |
| | **த** | |
| 110 | தங்கவம்பலம் | 716 |
| 21 | தன்னையாள்சுவாமி | 330 |
| | **தி** | |
| 94 | திருத்திமிருமருட்சம்பு | 638 |

| திருப்பத் தெண். | திருப்பத்தின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 50 | திருநிறைந்தசிற்சத்தி | 457 |
| 87 | திருமலிந்தவிருக்கு | 604 |
| 105 | திருமறை | 696 |
| 16 | திருவருட்கடல் | 309 |
| 59 | திருவளரனந்தர் | 493 |
| | **து** | |
| 40 | துயர்தீர்வதெவ்வாறு | 413 |
| 78 | துறவு | 567 |
| | **தெ** | |
| 20 | தெய்வம் | 326 |
| | **தே** | |
| 64 | தேரிலூர் | 513 |
| | **தோ** | |
| 83 | தோலுயர்தயித்திரியம் | 588 |
| | **ந** | |
| 24 | நட்புக்குகந்தநாயகம் | 341 |
| | **நி** | |
| 75 | நிலத்திற்பன்மதசாத்திரம் | 555 |
| 19 | நினைத்தாலென் பிறப்பறுத்திடும் | 322 |
| 10 | நின்மலானந்தபரம் | 282 |
| | **நீ** | |
| 85 | நீர்வேந்தயன் | 597 |
| | **நெ** | |
| 58 | நெஞ்சம் | 490 |
| | **ப** | |
| 33 | பயின்றறிபவன் | 379 |
| 13 | பரசுப்பிரமணியவாழ்வு | 299 |
| 66 | பரஞ்சுடர் | 519 |
| 107 | பரஞ்சோதி | 704 |
| 28 | பரதேவதை | 358 |
| 5 | பரமபதி | 241 |
| 26 | பரம் | 351 |
| 108 | பரம்பரன் | 709 |
| 18 | பரம்பொருள் | 317 |
| 17 | பராபரம் | 314 |
| | **பு** | |
| 98 | புகழ்பூத்தமந்திரநூல் | 661 |
| 82 | புகழ்மருவுமறைகள் | 584 |

| திருப்பத் தெண். | திருப்பத்தின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| 76 | புயல்வாழ்தென்மலை | 558 |
| 77 | புவனமீது பன்மரபினார் | 561 |
| 101 | புவனவோய்வு | 676 |
| | **பூ** | |
| 51 | பூந்தொடையல் | 463 |
| 100 | பூப்புகழ்ப்பிரமன் | 671 |
| | **பெ** | |
| 15 | பெரியசாமி | 305 |
| 56 | பெரியசுப்பிரமணியம் | 481 |
| | **பே** | |
| 11 | பேசாவாழ்வு | 290 |
| | **பொ** | |
| 104 | பொறி | 692 |
| 55 | பொன் | 478 |
| 92 | பொன்மஞ்சள் | 631 |
| 73 | பொன்னவை | 546 |
| 89 | பொன்னினான்மறை | 616 |
| | **ம** | |
| 80 | மகியினேயமுளர் | 574 |
| 67 | மதியுங்கருளும் | 523 |
| 61 | மலைமகள் | 502 |
| | **மா** | |
| 70 | மாணிக்கவாசகர் | 535 |
| 36 | மாவிண் | 393 |
| | **மு** | |
| 84 | முத்தணிகொங்கை | 593 |
| | **மெ** | |
| 35 | மெய்யான் | 389 |
| | **வ** | |
| 49 | வண்மை | 453 |
| | **வி** | |
| 91 | வித்தவொளி | 624 |
| 72 | வியோமபிரான் | 542 |
| 88 | விலகுவர் | 612 |
| | **வே** | |
| 109 | வேதம் | 713 |
| 69 | வேதா | 531 |

# இரண்டாம் புத்தகம்

## திருப்பாட்டு முதற்குறிப்பகராதி


| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் | திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | அ | | 35 | 1 | அத்திச்சரும | 389 |
| 85 | 9 | அகமற்றவர் | 599 | 34 | 9 | அத்தியா | 387 |
| 72 | 8 | அகமன | 543 | 101 | 10 | அத்துவா | 677 |
| 48 | 6 | அகமெனு | 450 | 29 | 3 | அந்தக | 363 |
| 84 | 4 | அகலலை | 594 | 22 | 9 | அந்தநா | 335 |
| 65 | 10 | அகியு | 518 | 46 | 4 | அந்தமன | 441 |
| 60 | 8 | அகிலநி | 498 | 33 | 3 | அந்தமா | 379 |
| 6 | 5 | அக்கநெரி | 252 | 49 | 2 | அந்தமாவா | 453 |
| 57 | 5 | அக்கினி | 486 | 23 | 5 | அந்தமுறு | 339 |
| 106 | 9 | அங்கி | 701 | 48 | 5 | அந்தமெய் | 450 |
| 43 | 10 | அசிபத | 429 | 47 | 8 | அந்தவெழு | 447 |
| 104 | 5 | அசுசி | 693 | 61 | 3 | அந்தவொரு | 502 |
| 79 | 10 | அசுவமேத | 571 | 37 | 7 | அபாவத் | 401 |
| 11 | 9 | அசைத்தா | 292 | 96 | 4 | அப்பகுதி | 652 |
| 14 | 10 | அசைவறு | 303 | 103 | 7 | அப்பெருஞ் | 688 |
| 100 | 6 | அச்சமை | 672 | 73 | 6 | அப்பொழு | 547 |
| 33 | 2 | அச்சிவன் | 379 | 81 | 10 | அமருடை | 581 |
| 86 | 10 | அச்சுத | 602 | 80 | 3 | அமலஞா | 574 |
| 12 | 2 | அடியார் | 295 | 48 | 1 | அமிர்ததயா | 449 |
| 12 | 6 | அணிநாயக | 296 | 81 | 1 | அமிர்தம | 578 |
| 106 | 2 | அணிமா | 700 | 102 | 1 | அமிழ்தமர | 680 |
| 110 | 5 | அணியிலங் | 718 | 61 | 9 | அம்மனு | 504 |
| 43 | 6 | அணுவினு | 428 | 60 | 2 | அம்மல | 497 |
| 64 | 2 | அண்டகோடி | 513 | 49 | 9 | அயமென்றெ | 454 |
| 23 | 4 | அண்டமது | 339 | 56 | 9 | அயலெனு | 483 |
| 107 | 9 | அண்டம்யாவு | 706 | 88 | 6 | அயிருமி | 613 |
| 49 | 8 | அதர்வ | 454 | 77 | 4 | அரசராதி | 562 |
| 92 | 3 | அதனா | 631 | 53 | 5 | அரசருக் | 472 |
| 55 | 6 | அதிநுட்ப | 479 | 91 | 3 | அரிய | 624 |
| 95 | 6 | அதிர்த்த | 645 | 15 | 4 | அரியபுத்தி | 306 |
| 54 | 10 | அதுநா | 476 | 5 | 6 | அரியவிர | 243 |
| 48 | 4 | அத்தனென் | 450 | 45 | 6 | அருண்ஞா | 437 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 84 | 10 | அருணையம் | 595 |
| 105 | 7 | அருண்முத | 697 |
| 101 | 4 | அருத்த | 676 |
| 110 | 2 | அருமறைக் | 717 |
| 85 | 7 | அருமைச்சிவ | 598 |
| 99 | 9 | அருவநடு | 668 |
| 51 | 5 | அருவெனு | 464 |
| 28 | 9 | அருவென் | 360 |
| 103 | 5 | அருளினி | 688 |
| 76 | 2 | அருளின் | 558 |
| 107 | 7 | அருளின்காட்சி | 705 |
| 45 | 1 | அலர்நான் | 436 |
| 65 | 6 | அவனி | 517 |
| 14 | 3 | அவதிதருந் | 302 |
| 105 | 4 | அவத்தை | 696 |
| 87 | 8 | அவ்விமல | 609 |
| 70 | 9 | அழகிய | 536 |
| 19 | 7 | அழகென் | 323 |
| 52 | 9 | அளப்பறு | 469 |
| 18 | 4 | அளப்பி | 318 |
| 68 | 4 | அளவஞ்ச | 527 |
| 109 | 6 | அறத்து | 713 |
| 88 | 8 | அறிவறி | 614 |
| 81 | 8 | அறிவனலி | 580 |
| 36 | 4 | அறிவாய | 394 |
| 41 | 5 | அறிவாயசி | 418 |
| 91 | 8 | அறிவு | 626 |
| 10 | 8 | அறிவுநடை | 285 |
| 56 | 6 | அறிவுமங் | 482 |
| 48 | 2 | அறிவுளன் | 449 |
| 94 | 5 | அறிவொன் | 639 |
| 99 | 7 | அறுநான் | 667 |
| 99 | 1 | அறைமலிந்த | 665 |
| 75 | 6 | அற்பவித்தை | 556 |
| 36 | 5 | அற்பவுற | 395 |
| 19 | 8 | அனகம் | 323 |
| 94 | 8 | அனந்த | 640 |
| 15 | 3 | அனலிக் | 306 |
| 37 | 5 | அனன்மே | 401 |
| 45 | 2 | அனுமான | 436 |
| 20 | 7 | அன்பருக் | 327 |
| 53 | 3 | அன்பி | 472 |
| 26 | 8 | அன்புறு | 352 |
| 52 | 8 | அன்னிய | 469 |
| 20 | 8 | அன்னையா | 327 |
| | | **ஆ** | |
| 43 | 3 | ஆகமசித் | 427 |
| 32 | 10 | ஆகமத்தி | 377 |
| 23 | 7 | ஆகமுத | 339 |
| 102 | 9 | ஆகியமுக் | 683 |
| 83 | 10 | ஆக்கை | 591 |
| 96 | 5 | ஆசற்ற | 652 |
| 77 | 5 | ஆசிலத்து | 562 |
| 24 | 3 | ஆசிறற்பிர | 342 |
| 25 | 6 | ஆசைகொ | 346 |
| 10 | 1 | ஆடகந் | 282 |
| 23 | 2 | ஆடுகிலை | 338 |
| 64 | 7 | ஆட்டுக் | 514 |
| 81 | 2 | ஆட்டுனை | 578 |
| 16 | 7 | ஆணவ | 311 |
| 61 | 4 | ஆணவத்தா | 503 |
| 57 | 6 | ஆணவமா | 486 |
| 16 | 5 | ஆண்டைய | 310 |
| 50 | 9 | ஆதலாலி | 460 |
| 75 | 7 | ஆதலாலிவ | 556 |
| 46 | 8 | ஆதலின் | 442 |
| 84 | 3 | ஆதியோத் | 594 |
| 33 | 8 | ஆத்தன | 381 |
| 64 | 6 | ஆத்துமா | 514 |
| 93 | 9 | ஆத்துமாவி | 636 |
| 20 | 5 | ஆமய | 326 |
| 91 | 7 | ஆயுநிலை | 626 |
| 44 | 1 | ஆரண | 432 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 78 | 7 | ஆரணக் | 568 |
| 18 | 9 | ஆரணங் | 319 |
| 57 | 1 | ஆரணத்தி | 485 |
| 104 | 6 | ஆரணம் | 693 |
| 28 | 3 | ஆராரென | 358 |
| 16 | 3 | ஆரிய | 309 |
| 32 | 7 | ஆலவாய் | 376 |
| 93 | 10 | ஆவிக்காவி | 636 |
| 55 | 4 | ஆளாளென | 479 |
| 53 | 10 | ஆளுமன்ப | 473 |
| 91 | 4 | ஆற்றலு | 625 |
| 58 | 1 | ஆனையே | 490 |
| 82 | 9 | ஆன்மாவி | 585 |
| 51 | 3 | ஆன்மாவுக் | 463 |
| | | **இ** | |
| 12 | 7 | இகழ்பாவ | 296 |
| 79 | 4 | இசைத்த | 570 |
| 101 | 8 | இசைத்தவோ | 677 |
| 80 | 2 | இச்சை | 574 |
| 91 | 6 | இஞ்சி | 625 |
| 110 | 4 | இடங்கொள் | 717 |
| 65 | 8 | இடரி | 517 |
| 98 | 9 | இடவிசும் | 663 |
| 51 | 7 | இடைநீத் | 464 |
| 29 | 4 | இட்டமுற் | 363 |
| 25 | 10 | இதய | 347 |
| 89 | 3 | இதயதா | 617 |
| 80 | 4 | இதயம் | 574 |
| 7 | 7 | இதயார | 261 |
| 20 | 2 | இதரமொன் | 326 |
| 19 | 5 | இதவெங் | 322 |
| 28 | 2 | இதுகாறும | 358 |
| 79 | 7 | இதுவே | 571 |
| 44 | 10 | இதைவிடுத் | 434 |
| 8 | 4 | இத்தரையி | 267 |
| 94 | 7 | இத்தகைய | 640 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 17 | 8 | இத்தரு | 315 |
| 77 | 10 | இந்தச் | 563 |
| 79 | 6 | இந்தத் | 571 |
| 108 | 8 | இந்தநற்பொ | 710 |
| 44 | 9 | இந்தநற்றீர் | 434 |
| 50 | 4 | இந்தநன் | 457 |
| 87 | 10 | இந்தநிலை | 610 |
| 101 | 7 | இந்தநீர்மை | 677 |
| 85 | 10 | இந்தப்பிர | 599 |
| 104 | 7 | இந்தவாறு | 693 |
| 87 | 5 | இந்தவிதஞ் | 606 |
| 10 | 7 | இந்தனத் | 285 |
| 69 | 1 | இந்துவதி | 531 |
| 16 | 10 | இப்படி | 311 |
| 17 | 7 | இப்படிமற் | 314 |
| 42 | 7 | இப்பியின் | 423 |
| 7 | 3 | இப்பியூ | 259 |
| 73 | 4 | இயலுமுட் | 547 |
| 58 | 4 | இயற்கை | 491 |
| 97 | 1 | இரணிய | 658 |
| 24 | 2 | இரண்டு | 342 |
| 80 | 7 | இரதநெய் | 575 |
| 56 | 7 | இரவுமங் | 482 |
| 85 | 6 | இராமப் | 598 |
| 37 | 4 | இருகாரண | 401 |
| 63 | 2 | இருக்கிறே | 510 |
| 9 | 9 | இருபத்து | 278 |
| 57 | 7 | இருமலத் | 486 |
| 106 | 8 | இரும்பைக் | 701 |
| 33 | 10 | இருவகை | 382 |
| 9 | 3 | இருவினை | 275 |
| 5 | 2 | இருள்வலி | 242 |
| 31 | 9 | இல்லி | 373 |
| 92 | 4 | இவர்வுற் | 631 |
| 69 | 8 | இவ்வுகத்தின் | 532 |
| 81 | 5 | இழிவறு | 579 |
| 50 | 3 | இழுக்கி | 457 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 109 | 7 | இழைத்த | 714 |
| 107 | 4 | இறைந | 704 |
| 54 | 2 | இனிதாக | 475 |
| 13 | 7 | இனியசமாதி | 299 |
| 35 | 4 | இன்பமீ | 390 |
| 63 | 6 | இன்றயா | 510 |
| 53 | 9 | இன்றுநாளை | 473 |
| 77 | 6 | இன்னகூ | 562 |
| 103 | 9 | இன்னணங் | 689 |
| 44 | 3 | இன்னணம் | 433 |
| 106 | 6 | இன்னபடி | 701 |
| 94 | 4 | இன்னதிற | 639 |
| 69 | 6 | இன்னிதய | 532 |
| | | **ஈ** | |
| 100 | 3 | ஈங்கரும் | 672 |
| 15 | 10 | ஈசபோற்றி | 307 |
| 40 | 3 | ஈசனெங் | 414 |
| 37 | 9 | ஈசன்றனை | 402 |
| 99 | 8 | ஈசுரத்தி | 667 |
| 44 | 2 | ஈசுரன் | 432 |
| 13 | 5 | ஈச்சுரசா | 299 |
| 43 | 5 | ஈச்சுவர | 428 |
| 40 | 8 | ஈட்டுகன்ம | 414 |
| 55 | 2 | ஈரந்தரு | 479 |
| 98 | 5 | ஈரமுற்ற | 662 |
| | | **உ** | |
| 45 | 10 | உகளம் | 437 |
| 97 | 5 | உச்சித | 659 |
| 13 | 2 | உடம்பு | 299 |
| 107 | 2 | உடம்புக் | 704 |
| 65 | 5 | உணருமா | 517 |
| 45 | 9 | உணர்வாய | 437 |
| 30 | 3 | உணர்விலி | 367 |
| 22 | 3 | உணர்வுளார் | 334 |
| 53 | 4 | உண்டநீ | 472 |
| 96 | 8 | உண்டி | 653 |
| 75 | 9 | உண்மைச் | 556 |
| 22 | 10 | உண்மைநோ | 335 |
| 35 | 6 | உதகக் | 390 |
| 66 | 4 | உதயனின் | 520 |
| 8 | 7 | உதித்தொடுங் | 269 |
| 69 | 3 | உதிப்பிருக் | 531 |
| 61 | 7 | உதிப்பிறப் | 503 |
| 89 | 5 | உத்தமோ | 617 |
| 55 | 8 | உயரா | 479 |
| 48 | 10 | உயரிய | 451 |
| 16 | 9 | உயிரினை | 311 |
| 78 | 5 | உயிருடம் | 567 |
| 37 | 10 | உயிரோ | 402 |
| 38 | 5 | உயிரை | 406 |
| 41 | 8 | உயிர்கருப் | 418 |
| 65 | 9 | உயிர்களே | 517 |
| 67 | 2 | உயிர்நண் | 523 |
| 63 | 7 | உய்திபெற் | 511 |
| 35 | 2 | உரனில் | 389 |
| 16 | 6 | உரியவ | 310 |
| 86 | 7 | உருத்திராக்க | 602 |
| 73 | 10 | உருமன | 548 |
| 14 | 6 | உருவெளி | 303 |
| 103 | 1 | உரைப்பொடி | 687 |
| 28 | 1 | உரையான் | 358 |
| 33 | 1 | உரையுயர் | 379 |
| 16 | 1 | உலகடங் | 309 |
| 65 | 1 | உலகநோக் | 516 |
| 38 | 1 | உலகமா | 405 |
| 47 | 1 | உலகமெ | 446 |
| 42 | 1 | உலகமென் | 421 |
| 32 | 2 | உலகிலெம் | 375 |
| 67 | 7 | உலகிற் | 524 |
| 54 | 8 | உலையா | 476 |
| 39 | 10 | உள்ளிலோர் | 411 |
| 102 | 7 | உள்ளீடாய் | 682 |
| 107 | 8 | உறழ்வு | 705 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 37 | 2 | உறுகண் | 400 |
| 51 | 8 | உற்பூத | 465 |
| 28 | 4 | உனையே | 359 |
| 64 | 4 | உன்சுதந் | 514 |
| 11 | 4 | உன்னரு | 291 |
| 64 | 8 | உன்னைத் | 514 |
| 65 | 2 | உன்னைப் | 516 |
| 66 | 10 | உன்னையு | 520 |
| | | **ஊ** | |
| 41 | 4 | ஊர்ணநாபி | 418 |
| 22 | 7 | ஊனருந் | 335 |
| 105 | 10 | ஊன்புதை | 697 |
| 15 | 8 | ஊன்புரத் | 306 |
| | | **எ** | |
| 69 | 5 | எங்களுடை | 531 |
| 49 | 5 | எசுவின் | 454 |
| 41 | 3 | எசுர்வேத | 418 |
| 87 | 4 | எச்சுர | 605 |
| 9 | 2 | எடாத | 274 |
| 24 | 7 | எண்ணமறி | 342 |
| 73 | 8 | எண்ணமி | 547 |
| 28 | 6 | எண்ணாவொ | 359 |
| 27 | 7 | எண்ணிடு | 356 |
| 39 | 8 | எண்ணும் | 411 |
| 18 | 7 | எண்ணுவார் | 319 |
| 26 | 3 | எண்மை | 351 |
| 31 | 8 | எத்தனைதா | 373 |
| 74 | 8 | எந்தவிதம் | 552 |
| 28 | 5 | எந்தாயொ | 359 |
| 63 | 10 | எந்தையே | 511 |
| 40 | 10 | எந்தையா | 415 |
| 18 | 3 | எம்பிரா | 318 |
| 40 | 2 | எம்முள | 414 |
| 13 | 3 | எம்மூர்த்தி | 299 |
| 76 | 4 | எல்லா | 558 |
| 6 | 8 | எல்லாஞ் | 253 |
| 81 | 7 | எவனுயி | 580 |
| 5 | 7 | எவ்வுயிர்த் | 244 |
| 12 | 8 | எழிலா | 296 |
| 89 | 8 | எழுந்த | 618 |
| 66 | 3 | எளிதென | 520 |
| 71 | 5 | எளிமையு | 539 |
| 28 | 8 | எளியே | 360 |
| 54 | 7 | எளியேன் | 476 |
| 67 | 9 | எனலிட்ட | 524 |
| 14 | 4 | எனதொழில் | 302 |
| 10 | 3 | என்கருத் | 283 |
| 58 | 6 | என்பிரான் | 491 |
| 27 | 6 | என்புரி | 355 |
| 20 | 9 | என்றுமோர் | 327 |
| 74 | 9 | என்றுமொற்க | 552 |
| 24 | 10 | என்னது | 343 |
| 53 | 6 | என்னையா | 472 |
| 58 | 9 | என்னையென் | 491 |
| | | **ஏ** | |
| 59 | 3 | ஏகதேச | 493 |
| 95 | 10 | ஏகமலத் | 646 |
| 44 | 5 | ஏகமா | 433 |
| 100 | 10 | ஏகமே | 673 |
| 83 | 6 | ஏசறு | 589 |
| 13 | 8 | ஏசில்சித் | 300 |
| 98 | 8 | ஏசினிறம் | 663 |
| 101 | 2 | ஏசுமாயை | 676 |
| 25 | 9 | ஏதமற்ற | 347 |
| 40 | 1 | ஏமவம்பல | 413 |
| 26 | 5 | ஏர்மிருதி | 352 |
| 105 | 6 | ஏறுநடு | 697 |
| 92 | 2 | ஏனென்னி | 631 |
| | | **ஐ** | |
| 29 | 9 | ஐந்தனு | 364 |
| 98 | 7 | ஐந்தென் | 662 |
| 58 | 7 | ஐயனாகிய | 491 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| | | **ஒ** | |
| 92 | 9 | ஒப்பொன் | 632 |
| 72 | 10 | ஒள்ளிய | 544 |
| 46 | 9 | ஒற்றுமை | 442 |
| 43 | 8 | ஒன்றிரண் | 429 |
| 17 | 5 | ஒன்றுமறிந் | 314 |
| 52 | 3 | ஒன்றெனு | 468 |
| | | **ஓ** | |
| 62 | 7 | ஓகைமுத்தி | 508 |
| 80 | 9 | ஓங்கல் | 575 |
| 96 | 1 | ஓங்கார | 650 |
| 21 | 10 | ஓசையா | 331 |
| 9 | 4 | ஓதிநூல் | 275 |
| 83 | 9 | ஓதிமமு | 590 |
| 66 | 8 | ஓர்பொழு | 520 |
| 104 | 2 | ஓலமா | 692 |
| | | **க** | |
| 23 | 1 | கங்கையணி | 338 |
| 15 | 1 | கங்கைவார் | 305 |
| 27 | 10 | கசடுது | 356 |
| 54 | 6 | கசிவாய | 475 |
| 36 | 8 | கடசல | 395 |
| 6 | 1 | கடல்கோலு | 250 |
| 107 | 1 | கடல்சுலா | 704 |
| 53 | 1 | கடல்வளை | 472 |
| 51 | 6 | கட்டுடை | 464 |
| 41 | 10 | கட்டை | 419 |
| 42 | 6 | கண்டவண்ட | 422 |
| 59 | 5 | கண்டுயில் | 494 |
| 75 | 3 | கண்ணிருந் | 555 |
| 109 | 4 | கண்ணிலான் | 713 |
| 63 | 3 | கண்ணினா | 510 |
| 69 | 4 | கண்ணெதி | 531 |
| 82 | 3 | கதிவிளக்கு | 584 |
| 6 | 2 | கத்தாவை | 250 |
| 90 | 3 | கந்தபுரா | 620 |
| 39 | 3 | கமட | 409 |
| 86 | 2 | கரனென்னு | 601 |
| 56 | 10 | கரியவன் | 483 |
| 18 | 6 | கருணைச் | 318 |
| 48 | 3 | கருமநுக | 449 |
| 101 | 3 | கருமவாவி | 676 |
| 97 | 4 | கலைமல | 658 |
| 24 | 5 | கலையி | 342 |
| 75 | 4 | கல்லா | 555 |
| 50 | 8 | கல்விகேள்வி | 459 |
| 75 | 2 | கல்வியில் | 555 |
| 83 | 7 | கவலைக | 590 |
| 86 | 4 | கவுணியர் | 601 |
| 56 | 2 | கழைமுனிக் | 482 |
| 90 | 4 | கள்ளமின் | 621 |
| 96 | 6 | கள்ளவுரு | 652 |
| 24 | 9 | கள்ளற் | 343 |
| 55 | 7 | கள்ளார் | 479 |
| 99 | 10 | கறையிக | 668 |
| 75 | 10 | கற்றதாற் | 556 |
| 95 | 1 | கனகம் | 642 |
| 42 | 9 | கனவுநேர | 423 |
| 12 | 9 | கனிஞேய | 296 |
| 13 | 9 | கன்மமுயர் | 300 |
| | | **கா** | |
| 68 | 1 | காங்கேய | 527 |
| 62 | 3 | காசுகண் | 507 |
| 23 | 9 | காடுபுகு | 339 |
| 29 | 10 | காணற்குரிய | 364 |
| 28 | 7 | காணேனெ | 359 |
| 32 | 4 | காண்டல்கரு | 376 |
| 91 | 9 | காண்டல்பெரு | 627 |
| 97 | 7 | காண்டிறக் | 659 |
| 74 | 10 | காப்பை | 552 |
| 78 | 10 | காமமென்ற | 568 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 38 | 4 | காயநே | 406 |
| 65 | 3 | காயமெய் | 517 |
| 90 | 10 | காரிய | 621 |
| 97 | 3 | காலமென் | 658 |
| 62 | 8 | கான்ற | 508 |
| | | **கி** | |
| 21 | 4 | கிரண | 330 |
| 105 | 5 | கிரியையு | 696 |
| 68 | 3 | கிலமொன் | 527 |
| | | **கீ** | |
| 43 | 9 | கீதமறை | 429 |
| | | **கு** | |
| 48 | 8 | குகனையு | 450 |
| 49 | 4 | குணமா | 453 |
| 11 | 2 | குத்தியகத் | 291 |
| 73 | 2 | கும்பக | 547 |
| 49 | 6 | குயின்ற | 454 |
| 25 | 8 | குலந்தவ | 347 |
| 94 | 9 | குறைந்த | 640 |
| 79 | 9 | குற்றமொ | 571 |
| 74 | 6 | குன்றாத | 551 |
| | | **கூ** | |
| 109 | 8 | கூடகத்தி | 714 |
| 92 | 10 | கூட்டச் | 632 |
| 63 | 4 | கூறருங் | 510 |
| | | **கே** | |
| 7 | 4 | கேட்டல் | 259 |
| 17 | 9 | கேட்டனி | 315 |
| 8 | 10 | கேவலமெ | 270 |
| 59 | 7 | கேவலஞ்சக | 494 |
| 16 | 8 | கேவலவிரு | 311 |
| | | **கை** | |
| 79 | 3 | கைவல்லியப் | 570 |
| 82 | 10 | கைவல்லியோ | 585 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| | | **கொ** | |
| 36 | 7 | கொச்சை | 395 |
| 74 | 4 | கொள்ளுதியெ | 551 |
| 63 | 8 | கொள்ளுதியென | 511 |
| | | **கோ** | |
| 89 | 10 | கோணம் | 618 |
| 78 | 6 | கோணனெஞ் | 567 |
| 27 | 8 | கோளரி | 356 |
| 71 | 2 | கோளறு | 538 |
| | | **ச** | |
| 61 | 6 | சககரும | 503 |
| 38 | 9 | சகச | 406 |
| 37 | 1 | சகசீவ | 400 |
| 19 | 1 | சகமெங் | 322 |
| 95 | 4 | சகலரென் | 644 |
| 15 | 7 | சகுன | 306 |
| 29 | 8 | சக்கொளி | 364 |
| 21 | 9 | சடத்தை | 331 |
| 9 | 8 | சடமாக | 277 |
| 47 | 2 | சடமூலப் | 446 |
| 56 | 8 | சடசகத் | 482 |
| 70 | 4 | சண்டக | 535 |
| 85 | 5 | சதுரச்சரி | 598 |
| 33 | 9 | சதுர்த்த | 381 |
| 100 | 5 | சதுர்யுக | 672 |
| 41 | 9 | சத்தான | 418 |
| 10 | 4 | சத்திய | 283 |
| 27 | 2 | சத்தியமே | 355 |
| 64 | 10 | சந்ததத் | 514 |
| 81 | 9 | சந்தமு | 580 |
| 52 | 1 | சந்திர | 468 |
| 7 | 1 | சந்திரசடா | 258 |
| 89 | 7 | சமணசிங் | 617 |
| 77 | 9 | சம்புமெய் | 563 |
| 68 | 2 | சரதஞ் | 527 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் | திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 50 | 10 | சரதவை | 460 | 36 | 10 | சிவன்சீவ | 396 |
| 70 | 2 | சரியையி | 535 | 57 | 9 | சிவானுபவ | 487 |
| 38 | 2 | சருவசங் | 405 | 48 | 7 | சிற்றுணர் | 450 |
| 50 | 2 | சருவஞா | 457 | 23 | 8 | சின்னமதி | 339 |
| 68 | 9 | சருவேச | 528 | | | **சீ** | |
| 88 | 5 | சனனமு | 613 | 34 | 3 | சீரிய | 386 |
| 5 | 10 | சன்மநி | 246 | 27 | 1 | சீரியவந் | 355 |
| | | **சா** | | 46 | 1 | சீருயர்ந்த | 440 |
| 78 | 8 | சாகரப் | 568 | 74 | 1 | சீர்சான்ற | 550 |
| 90 | 8 | சாதக | 621 | 62 | 1 | சீர்சிறந் | 507 |
| 77 | 3 | சாதியொன் | 561 | 93 | 1 | சீர்த்தி | 634 |
| 100 | 8 | சாந்தியின் | 673 | 43 | 1 | சீர்த்தியு | 427 |
| 49 | 7 | சாமசாந் | 454 | 86 | 1 | சீர்பூத்த | 601 |
| 104 | 10 | சாமவேத | 693 | 6 | 4 | சீவகா | 251 |
| 80 | 5 | சார்பறுத் | 574 | 61 | 8 | சீவசுதந் | 504 |
| 25 | 5 | சார்பிழ | 346 | 46 | 10 | சீவபர | 443 |
| 59 | 2 | சாற்றிய | 493 | 7 | 2 | சீவபோத | 258 |
| 86 | 8 | சான்றோர் | 602 | 109 | 3 | சீவன் | 713 |
| | | **சி** | | | | **சு** | |
| 37 | 8 | சிட்டிக்கு | 402 | 82 | 5 | சுகத்தை | 584 |
| 13 | 6 | சித்தநிரோ | 299 | 93 | 3 | சுகுர்த | 635 |
| 99 | 3 | சித்தமெனுங் | 666 | 56 | 3 | சுசிரதத் | 482 |
| 15 | 2 | சிந்திற்கு | 305 | 15 | 5 | சுடரின் | 306 |
| 26 | 2 | சிந்துவை | 351 | 19 | 9 | சுடுநீற் | 323 |
| 14 | 9 | சிந்தை | 303 | 42 | 8 | சுட்டிறந் | 423 |
| 13 | 4 | சிரத்தை | 299 | 8 | 5 | சுதரிசனம் | 268 |
| 93 | 7 | சிருட்டி | 635 | 101 | 6 | சுத்தமாய | 677 |
| 85 | 3 | சிவகீதை | 598 | 104 | 3 | சுத்தமான | 692 |
| 94 | 3 | சிவசத்தி | 639 | 19 | 10 | சுபசுந்தரர் | 323 |
| 60 | 1 | சிவத்திரு | 496 | 43 | 4 | சுருதிதனி | 428 |
| 42 | 2 | சிவத்திலோ | 421 | 79 | 1 | சுருதிபணி | 570 |
| 84 | 6 | சிவமத் | 594 | 22 | 6 | சுருதியாகம | 334 |
| 92 | 5 | சிவமின் | 631 | 32 | 8 | சுருதியின்க | 376 |
| 87 | 3 | சிவலிங்க | 605 | 73 | 7 | சுலவலி | 547 |
| 82 | 8 | சிவனொரு | 585 | 34 | 10 | சுவேத | 387 |
| | | | | 62 | 2 | சுழலு | 507 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| | | **சூ** | |
| 21 | 3 | சூக்கமா | 330 |
| 42 | 3 | சூக்கமான | 422 |
| 96 | 7 | சூக்கும | 653 |
| 32 | 6 | சூதசங் | 376 |
| | | **செ** | |
| 26 | 6 | செத்துறு | 352 |
| 26 | 9 | செப்பிய | 352 |
| 107 | 5 | செல்லுவார் | 705 |
| | | **சொ** | |
| 39 | 7 | சொக்க | 410 |
| 24 | 1 | சொல்லும் | 341 |
| 63 | 1 | சொல்லுவே | 510 |
| 36 | 1 | சொல்லேறு | 393 |
| 87 | 9 | சொற்றவிலி | 609 |
| 60 | 10 | சொற்றிடு | 499 |
| 85 | 2 | சொனராக | 598 |
| 107 | 6 | சொன்ன | 705 |
| | | **சோ** | |
| 15 | 9 | சோகமென் | 307 |
| 70 | 5 | சோதனை | 535 |
| | | **ஞா** | |
| 106 | 1 | ஞாலம் | 699 |
| 30 | 10 | ஞானனெறி | 369 |
| 78 | 4 | ஞானமெ | 567 |
| 97 | 9 | ஞானவிந் | 659 |
| | | **ஞே** | |
| 104 | 9 | ஞேயவீச | 693 |
| | | **த** | |
| 70 | 3 | தகவுடை | 535 |
| 35 | 7 | தகுதித் | 390 |
| 52 | 2 | தகைச்சன | 468 |
| 104 | 8 | தக்கவிந் | 693 |
| 15 | 6 | தக்கனொத் | 306 |
| 110 | 1 | தங்கவம் | 716 |
| 26 | 10 | தத்துவம் | 352 |
| 24 | 8 | தந்தைதாய | 342 |
| 16 | 4 | தந்தைதாய் | 310 |
| 108 | 7 | தப்பிலா | 710 |
| 66 | 2 | தமனியன் | 519 |
| 34 | 5 | தமிழ்மறை | 386 |
| 40 | 9 | தம்பிரா | 415 |
| 86 | 6 | தம்மேலன் | 602 |
| 25 | 1 | தரணித | 345 |
| 11 | 8 | தரணிவதி | 292 |
| 62 | 10 | தருக்கு | 508 |
| 75 | 8 | தரையி | 556 |
| 71 | 8 | தவநிலை | 539 |
| 88 | 3 | தவநிறை | 613 |
| 9 | 6 | தவமகிமை | 276 |
| 83 | 2 | தவமரு | 588 |
| 54 | 9 | தவராசர் | 476 |
| 30 | 8 | தனதறி | 368 |
| 78 | 2 | தனது | 567 |
| 60 | 5 | தன்மை | 497 |
| 59 | 9 | தன்னது | 494 |
| 47 | 10 | தன்னுடை | 447 |
| | | **தா** | |
| 74 | 2 | தாயருளை | 550 |
| 52 | 10 | தாய்கருப் | 469 |
| 78 | 9 | தாலநச் | 568 |
| 24 | 6 | தாவிலரு | 342 |
| 31 | 5 | தானடுத்த | 372 |
| 108 | 3 | தானைக்கு | 709 |
| 108 | 4 | தானையின் | 709 |
| | | **தி** | |
| 29 | 1 | திங்களணிநர் | 363 |
| 93 | 8 | திடத்த | 635 |
| 10 | 9 | திமிரங் | 286 |
| 82 | 7 | தியானிக் | 585 |
| 101 | 9 | திரண்ட | 677 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 13 | 10 | திராவிட | 300 |
| 93 | 6 | திரிபுறா | 635 |
| 13 | 1 | திருஞான | 299 |
| 94 | 1 | திருத்திமிரு | 638 |
| 50 | 1 | திருநிறைந்தசி | 457 |
| 31 | 1 | திருநிறைந்தபா | 372 |
| 87 | 1 | திருமலிந்த | 604 |
| 105 | 1 | திருமறை | 696 |
| 56 | 1 | திருவருட் | 481 |
| 59 | 1 | திருவள | 493 |
| 5 | 1 | திருவாத | 241 |
| 76 | 3 | திருவார் | 558 |
| 34 | 4 | திருவிடை | 386 |
| 90 | 1 | திருவுநா | 620 |
| 54 | 1 | திருவே | 475 |
| 94 | 2 | திரையறு | 639 |
| 98 | 3 | திறம்பெரு | 662 |
| 34 | 1 | தினகர | 386 |
| 97 | 8 | தினமுமே | 659 |
| 90 | 9 | தினம்பிண | 621 |
| | | **தீ** | |
| 103 | 3 | தீக்கைபெற் | 688 |
| 110 | 6 | தீக்கையிற் | 718 |
| 94 | 6 | தீப்போல | 639 |
| 38 | 6 | தீயின் | 406 |
| | | **து** | |
| 41 | 6 | துணிவானம் | 418 |
| 8 | 2 | துணிவு | 266 |
| 59 | 4 | துயிலுறு | 493 |
| 88 | 10 | துறக்கவி | 614 |
| 92 | 7 | துனியேசு | 632 |
| 68 | 5 | துன்போட | 527 |
| | | **தூ** | |
| 92 | 8 | தூக்கா | 632 |
| 17 | 4 | தூங்கி | 314 |
| 89 | 4 | தூமிக் | 617 |
| 21 | 5 | தூலபூத | 330 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| | | **தெ** | |
| 93 | 5 | தெய்வச | 635 |
| 44 | 4 | தெய்வமே | 433 |
| 18 | 5 | தெய்வரத் | 318 |
| 100 | 9 | தெரித்த | 673 |
| 45 | 8 | தெருண்ஞா | 437 |
| 67 | 10 | தெருளூற் | 524 |
| 89 | 2 | தெளிவு | 617 |
| 76 | 9 | தெற்றங் | 559 |
| | | **தே** | |
| 77 | 2 | தேகமைந் | 561 |
| 71 | 1 | தேசிக | 538 |
| 67 | 3 | தேசுக் | 523 |
| 63 | 9 | தேட்கடுப் | 511 |
| 64 | 1 | தேரிலூ | 513 |
| 102 | 3 | தேர்ச்சி | 681 |
| 74 | 5 | தேவதைக | 551 |
| 53 | 8 | தேவரெவ் | 473 |
| 44 | 6 | தேவனை | 433 |
| 12 | 3 | தேவாதி | 295 |
| 53 | 2 | தேனினு | 472 |
| | | **தொ** | |
| 61 | 5 | தொண்டா | 503 |
| 68 | 7 | தொழுநா | 528 |
| | | **தோ** | |
| 7 | 8 | தோடுடைப் | 261 |
| 89 | 6 | தோணியூர் | 617 |
| 71 | 3 | தோலுமெ | 538 |
| 83 | 1 | தோலுயர் | 588 |
| 30 | 2 | தோலைவி | 366 |
| 109 | 5 | தோன்றல் | 713 |
| 41 | 7 | தோன்றிவ | 418 |
| 78 | 3 | தோன்று | 567 |
| 102 | 2 | தோன்றுமி | 680 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 21 | 7 | தோன்றும் | 331 |
| 96 | 2 | தோன்றொ | 651 |
| | | **ந** | |
| 108 | 2 | நகத்துறை | 709 |
| 91 | 10 | நச்சு | 627 |
| 88 | 4 | நடுவுடை | 613 |
| 74 | 3 | நட்புநய | 550 |
| 55 | 9 | நந்தா | 480 |
| 12 | 10 | நயமே | 296 |
| 31 | 4 | நயனமி | 372 |
| 69 | 9 | நலிவிலருஞ் | 532 |
| 55 | 3 | நல்லார் | 479 |
| 100 | 4 | நவந்தரு | 672 |
| 18 | 8 | நறுஞ்சு | 319 |
| 85 | 4 | நற்சைவ | 598 |
| 42 | 10 | நற்பரா | 424 |
| 81 | 6 | நற்பிரம | 579 |
| 20 | 6 | நனவினர் | 327 |
| 105 | 3 | நனவினி | 696 |
| 56 | 4 | நனிவி | 482 |
| 84 | 8 | நன்மகோ | 595 |
| 36 | 9 | நன்மணி | 396 |
| 11 | 10 | நன்றில்லே | 293 |
| 98 | 6 | நன்னில | 662 |
| 16 | 2 | நன்னெலை | 309 |
| | | **நா** | |
| 65 | 4 | நாகவள் | 517 |
| 20 | 4 | நாகுமூ | 326 |
| 57 | 8 | நாங்கடவு | 487 |
| 97 | 2 | நாதம | 658 |
| 23 | 6 | நாமமுரு | 339 |
| 30 | 5 | நாய்நரி | 367 |
| 30 | 7 | நாலுகு | 368 |
| 14 | 8 | நால்வர் | 303 |
| 29 | 7 | நாவினன் | 364 |
| 79 | 2 | நாவுக் | 570 |
| 59 | 8 | நானென | 494 |
| 68 | 10 | நானேய | 528 |
| 108 | 10 | நான்கினி | 710 |
| 79 | 8 | நான்கு | 571 |
| 109 | 9 | நான்பசி | 714 |
| | | **நி** | |
| 36 | 6 | நிகம | 395 |
| 103 | 10 | நிகழு | 689 |
| 100 | 2 | நிகழொரு | 671 |
| 57 | 10 | நிகழ்பக | 487 |
| 17 | 10 | நிட்டை | 315 |
| 66 | 9 | நிதனமு | 520 |
| 22 | 4 | நித்தமூ | 334 |
| 46 | 3 | நித்தியமா | 441 |
| 96 | 3 | நித்தியமாய | 651 |
| 59 | 6 | நித்திரை | 494 |
| 108 | 6 | நிரந்தர | 710 |
| 47 | 7 | நிர்க்குண | 447 |
| 75 | 1 | நிலத்திற் | 555 |
| 41 | 1 | நிலையமண் | 417 |
| 12 | 4 | நிலனாள் | 296 |
| 32 | 5 | நிறைந்த | 376 |
| 88 | 2 | நிறைமுக | 613 |
| 54 | 3 | நிறைவாய | 475 |
| 102 | 10 | நிற்குநிலை | 683 |
| 64 | 3 | நினதுநீக் | 513 |
| 106 | 10 | நினதுபோ | 702 |
| 73 | 9 | நினைவற | 548 |
| 17 | 2 | நின்பரிவா | 314 |
| 29 | 5 | நின்பரிவு | 363 |
| 6 | 7 | நின்பூர | 253 |
| 18 | 10 | நின்னைநா | 319 |
| 66 | 5 | நின்னையே | 520 |
| | | **நீ** | |
| 62 | 4 | நீக்கமின் | 507 |
| 46 | 2 | நீணிலத் | 440 |
| 84 | 9 | நீதநா | 595 |
| 17 | 6 | நீயெனை | 314 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 14 | 7 | நீயெனைநற் | 303 |
| 67 | 8 | நீயென் | 524 |
| 78 | 1 | நீரவஞ்சி | 567 |
| 85 | 1 | நீர்வேந் | 597 |
| 46 | 5 | நீலகண்ட | 441 |
| 86 | 9 | நீறுதிமிர் | 602 |
| | | **நூ** | |
| 22 | 5 | நூலிலே | 334 |
| | | **நெ** | |
| 107 | 3 | நெஞ்சுங் | 704 |
| 84 | 7 | நெட்டுடற் | 595 |
| | | **நே** | |
| 58 | 8 | நேசமாக | 491 |
| 39 | 9 | நேயமிக் | 411 |
| 85 | 8 | நேராயரி | 599 |
| | | **நோ** | |
| 10 | 5 | நோக்கின்ற | 284 |
| 109 | 10 | நோயுறா | 714 |
| | | **ப** | |
| 54 | 5 | பகமே | 475 |
| 100 | 7 | பகருமற் | 672 |
| 52 | 5 | பங்கய | 469 |
| 45 | 3 | பசிநூ | 436 |
| 51 | 4 | பசுஞான | 463 |
| 5 | 3 | பசுபா | 242 |
| 45 | 5 | பசுபாச | 437 |
| 82 | 4 | பசுவி | 584 |
| 19 | 3 | பசுவொன் | 322 |
| 9 | 5 | பச்சிலைக் | 276 |
| 34 | 8 | பஞ்சருத் | 387 |
| 35 | 5 | படிவ | 390 |
| 95 | 9 | படைத்த | 646 |
| 80 | 10 | பணய | 575 |
| 18 | 2 | பண்டைப் | 317 |
| 45 | 7 | பதிஞான | 437 |
| 57 | 4 | பதிபசுபா | 486 |
| 106 | 4 | பதிமா | 700 |
| 68 | 8 | பதியாய | 528 |
| 51 | 2 | பந்தத்து | 463 |
| 22 | 8 | பந்தவில் | 335 |
| 97 | 10 | பந்தியா | 659 |
| 72 | 4 | பயக்கட | 542 |
| 6 | 10 | பரமதா | 254 |
| 43 | 7 | பரமான் | 429 |
| 108 | 1 | பரம்பர | 709 |
| 49 | 3 | பரிதிக் | 453 |
| 88 | 1 | பரிதிய | 612 |
| 9 | 1 | பரிதியெ | 274 |
| 72 | 1 | பரிமுழக் | 542 |
| 97 | 6 | பலமனம் | 659 |
| 86 | 3 | பழுதற்ற | 601 |
| 40 | 4 | பள்ளி | 414 |
| 33 | 5 | பறைந்த | 380 |
| 72 | 5 | பற்றழி | 543 |
| 58 | 5 | பன்றியோ | 491 |
| 51 | 10 | பன்னிரண்டு | 465 |
| | | **பா** | |
| 37 | 3 | பாங்கே | 400 |
| 5 | 5 | பாசஞானத் | 243 |
| 71 | 9 | பாசமி | 539 |
| 39 | 6 | பாசம் | 410 |
| 83 | 8 | பாசவிரி | 590 |
| 30 | 6 | பாடையில் | 367 |
| 73 | 3 | பாண்டிலி | 547 |
| 84 | 5 | பாரலர் | 594 |
| 17 | 3 | பாரிமகா | 314 |
| 23 | 3 | பாவபுணி | 339 |
| 103 | 8 | பாவனை | 689 |
| 72 | 3 | பாற்கட | 542 |
| | | **பி** | |
| 71 | 10 | பிசியி | 539 |
| 103 | 2 | பிணங்கி | 687 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 31 | 2 | பிணமாகி | 372 |
| 89 | 9 | பிண்டத் | 618 |
| 38 | 3 | பிண்டமொன் | 406 |
| 7 | 10 | பிதாவவ்வை | 262 |
| 57 | 2 | பிரகிருதி | 485 |
| 40 | 6 | பிரமதத் | 414 |
| 82 | 2 | பிரமபத | 584 |
| 36 | 2 | பிரமமெ | 394 |
| 95 | 2 | பிரளயா | 643 |
| 72 | 7 | பிராணன | 543 |
| 48 | 9 | பிருகதா | 451 |
| 98 | 10 | பிருதிவிநீ | 663 |
| 19 | 4 | பிலவங் | 322 |
| 93 | 4 | பிள்ளையார் | 635 |
| 6 | 3 | பிறர்நயன | 251 |
| 38 | 8 | பிறவியந் | 406 |
| 47 | 6 | பின்னுமந் | 446 |
| 75 | 5 | பின்னுவார் | 555 |
| | | **பீ** | |
| 27 | 3 | பீதிவிளி | 355 |
| | | **பு** | |
| 66 | 6 | புகர்முக | 520 |
| 19 | 6 | புகழம் | 322 |
| 39 | 1 | புகழ்கிளர் | 409 |
| 76 | 8 | புகழ்கொ | 559 |
| 98 | 1 | புகழ்பூத்த | 661 |
| 82 | 1 | புகழ்மரு | 584 |
| 14 | 1 | புகழ்மலி | 302 |
| 99 | 5 | புகன்ற | 666 |
| 47 | 5 | புணரி | 446 |
| 52 | 4 | புண்ணிய | 468 |
| 7 | 9 | புண்ணியம் | 262 |
| 76 | 1 | புயல்வாழ் | 558 |
| 60 | 4 | புல்லிய | 497 |
| 77 | 1 | புவனமீது | 561 |
| 101 | 1 | புவனவோ | 676 |
| 31 | 3 | புவிதனி | 372 |
| 79 | 5 | புறப்பற் | 571 |
| 106 | 5 | புறமா | 700 |
| 93 | 2 | புனித | 634 |
| | | **பூ** | |
| 67 | 4 | பூசிக்குநர் | 523 |
| 35 | 9 | பூசிப்பார் | 391 |
| 69 | 2 | பூசுரப் | 531 |
| 30 | 4 | பூதமொ | 367 |
| 24 | 4 | பூதவெளி | 342 |
| 21 | 6 | பூதனா | 330 |
| 51 | 1 | பூந்தொடை | 463 |
| 100 | 1 | பூப்புகழ்ப் | 671 |
| 87 | 2 | பூமணம் | 604 |
| 17 | 1 | பூமிசை | 314 |
| 66 | 1 | பூமுடிப் | 519 |
| 5 | 8 | பூர்வகா | 244 |
| 21 | 8 | பூவிலே | 331 |
| 20 | 1 | பூவெலா | 326 |
| 30 | 1 | பூவெனு | 366 |
| | | **பெ** | |
| 62 | 6 | பெரியவி | 507 |
| 95 | 3 | பெரியகு | 643 |
| 39 | 2 | பெருத்த | 409 |
| 88 | 9 | பெருந்துயர் | 614 |
| 58 | 2 | பெருமை | 490 |
| 82 | 6 | பெருமையு | 585 |
| 84 | 2 | பெரும்பொ | 593 |
| 12 | 5 | பெருவா | 296 |
| 76 | 10 | பெற்றான் | 559 |
| | | **பே** | |
| 11 | 5 | பேடி | 291 |
| 83 | 5 | பேதக | 589 |
| 81 | 4 | பேமுயர் | 579 |
| 36 | 3 | பேரறி | 394 |
| 74 | 7 | பேறுடை | 551 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| | | **பை** | |
| 6 | 9 | பையண்ட | 254 |
| | | **பொ** | |
| 50 | 7 | பொதிய | 459 |
| 55 | 5 | பொய்யா | 479 |
| 28 | 10 | பொய்யாயு | 360 |
| 51 | 9 | பொய்யுலக | 465 |
| 69 | 10 | பொருணய | 532 |
| 109 | 2 | பொருண்மை | 713 |
| 11 | 3 | பொருபிணி | 291 |
| 22 | 1 | பொருளற் | 333 |
| 104 | 1 | பொறிமு | 692 |
| 37 | 6 | பொறியா | 401 |
| 19 | 2 | பொறைமிக் | 322 |
| 10 | 2 | பொறையடக் | 282 |
| 5 | 9 | பொற்கலச | 245 |
| 83 | 4 | பொற்பு | 589 |
| 8 | 1 | பொன்போ | 266 |
| 92 | 1 | பொன்மஞ் | 631 |
| 73 | 1 | பொன்னவை | 546 |
| 89 | 1 | பொன்னி | 616 |
| 21 | 1 | பொன்னுமீ | 330 |
| 11 | 1 | பொன்னுலகு | 290 |
| 26 | 1 | பொன்னுலக | 351 |
| 55 | 1 | பொன்னே | 478 |
| | | **போ** | |
| 21 | 2 | போககா | 330 |
| 47 | 4 | போதமிலா | 446 |
| 5 | 4 | போதல்வர | 243 |
| 90 | 6 | போனகான் | 621 |
| | | **ம** | |
| 80 | 1 | மகியி | 574 |
| 76 | 6 | மடஞாளி | 559 |
| 110 | 3 | மடமோட் | 717 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 56 | 5 | மணிமுடி | 482 |
| 32 | 1 | மண்ணில் | 375 |
| 9 | 7 | மண்ணின் | 277 |
| 41 | 2 | மண்ணுமறி | 417 |
| 90 | 7 | மதத்தினா | 621 |
| 67 | 1 | மதியுங் | 523 |
| 65 | 7 | மதுவுண் | 517 |
| 91 | 5 | மந்தமதி | 625 |
| 27 | 4 | மமதை | 355 |
| 87 | 6 | மருட்டறிவு | 609 |
| 39 | 5 | மருளி | 410 |
| 71 | 4 | மருளுடை | 539 |
| 10 | 10 | மலசத்தி | 286 |
| 38 | 7 | மலத்தி | 406 |
| 14 | 5 | மலமழி | 303 |
| 38 | 10 | மலமுடம் | 407 |
| 103 | 4 | மலமெனு | 688 |
| 61 | 1 | மலைமகளு | 502 |
| 31 | 10 | மறமெனு | 373 |
| 67 | 5 | மறலென் | 523 |
| 45 | 4 | மறைகூ | 436 |
| 33 | 7 | மறைபயின் | 380 |
| 31 | 7 | மறைப்பொரு | 373 |
| 86 | 5 | மறையாக | 602 |
| 43 | 2 | மறையினி | 427 |
| 32 | 9 | மறையின் | 376 |
| 94 | 10 | மற்றொரு | 640 |
| 72 | 2 | மனக்குசை | 542 |
| 72 | 9 | மனச்சுழ | 544 |
| 54 | 4 | மனமான | 475 |
| 66 | 7 | மனமெனு | 520 |
| 61 | 2 | மனம்வா | 502 |
| 110 | 7 | மனவலி | 719 |
| 81 | 3 | மனைமனை | 578 |
| 60 | 3 | மனைமுதல் | 497 |
| 64 | 5 | மன்பதை | 514 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| | | **மா** | |
| 91 | 2 | மாசறு | 624 |
| 50 | 5 | மாசிலிப் | 458 |
| 71 | 7 | மாணல | 539 |
| 70 | 1 | மாணிக்க | 535 |
| 102 | 8 | மாதவத்தி | 682 |
| 46 | 6 | மாதவப் | 442 |
| 20 | 10 | மாதவர் | 327 |
| 25 | 4 | மாமயக் | 346 |
| 26 | 4 | மாமறை | 351 |
| 70 | 6 | மாமை | 536 |
| 29 | 2 | மாயமென் | 363 |
| 8 | 6 | மாயாவி | 268 |
| 99 | 2 | மாயை | 665 |
| 57 | 3 | மாயையெனு | 485 |
| 102 | 5 | மாலண | 681 |
| 70 | 8 | மாழை | 536 |
| 60 | 7 | மாளிகை | 498 |
| 11 | 7 | மாறின்றி | 292 |
| 58 | 3 | மானிலத் | 491 |
| | | **மி** | |
| 80 | 8 | மித்திரக் | 575 |
| 70 | 7 | மிழற்று | 536 |
| 31 | 6 | மின்மினி | 373 |
| | | **மு** | |
| 80 | 6 | முடிவு | 575 |
| 35 | 10 | முடுகின்பா | 391 |
| 32 | 3 | முட்டி | 375 |
| 39 | 4 | முட்டை | 409 |
| 98 | 4 | முணங்குற | 662 |
| 33 | 4 | முதன்முறை | 380 |
| 84 | 1 | முத்தணி | 593 |
| 34 | 6 | முத்தமிழ் | 387 |
| 44 | 7 | முத்தியிற் | 433 |
| 40 | 5 | முத்தி வே | 414 |
| 103 | 6 | முத்திற | 688 |
| 42 | 5 | முத்தொழி | 422 |
| 90 | 5 | முறைகெட | 621 |
| 92 | 6 | முனநா | 631 |
| 95 | 8 | முன்னர்க் | 646 |
| 96 | 10 | முன்னுரைத் | 654 |
| 46 | 7 | முன்னூல் | 442 |
| 22 | 2 | முன்னை | 333 |
| | | **மூ** | |
| 105 | 2 | மூடமி | 696 |
| 106 | 3 | மூடினானும் | 700 |
| 96 | 9 | மூலப்பகு | 654 |
| 95 | 7 | மூலவாணவ | 645 |
| 76 | 7 | மூன்றா | 559 |
| 108 | 9 | மூன்றிற் | 710 |
| 25 | 3 | மூன்று | 345 |
| | | **மெ** | |
| 77 | 7 | மெய்ப்பி | 562 |
| 77 | 8 | மெய்ம்மை | 563 |
| 23 | 10 | மெய்யருள் | 340 |
| 8 | 8 | மெய்யன்பி | 269 |
| 69 | 7 | மெய்யிதய | 532 |
| 9 | 10 | மெய்யுடை | 278 |
| 27 | 5 | மெய்யென | 355 |
| | | **மே** | |
| 25 | 2 | மேதைகூறு | 345 |
| 58 | 10 | மேலுக்கு | 491 |
| 87 | 7 | மேற்கோளா | 609 |
| | | **மோ** | |
| 60 | 6 | மோகினி | 498 |
| 7 | 5 | மோட்டு | 260 |
| 33 | 6 | மோதமிக் | 380 |
| 20 | 3 | மோனமா | 326 |
| | | **யா** | |
| 53 | 7 | யாதுமுன் | 473 |
| 72 | 6 | யாதொரு | 543 |
| 52 | 7 | யாதொருந | 469 |
| | | **யோ** | |
| 40 | 7 | யோக | 414 |

| திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் | திருப்பத் தெண். | திருப் பாட் டெண். | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | **வ** | | 52 | 6 | வித்தைய | 469 |
| 14 | 2 | வசுதை | 302 | 64 | 9 | வித்தையே | 514 |
| 50 | 6 | வடவண் | 459 | 101 | 5 | விந்துவின் | 676 |
| 83 | 3 | வடிவமில் | 588 | 68 | 6 | வியனான | 528 |
| 49 | 1 | வண்மை | 453 | 47 | 9 | வியாபக | 447 |
| 60 | 9 | வயிந்தவ | 499 | 44 | 8 | விரத | 433 |
| 34 | 2 | வரமுயர் | 386 | 105 | 9 | விரிந்துறு | 697 |
| 25 | 7 | வருண | 347 | 42 | 4 | விரிபவஞ்ச | 422 |
| 8 | 9 | வலிய | 270 | 70 | 10 | வில்லிபுத் | 536 |
| 104 | 4 | வழுத்துநன் | 692 | 95 | 5 | விவித | 644 |
| 59 | 10 | வழுத்துமந் | 494 | 106 | 7 | விழிகண் | 701 |
| | | **வா** | | 76 | 5 | விழிபோ | 558 |
| 99 | 4 | வாக்காதி | 666 | 107 | 10 | வினைக்கை | 706 |
| 62 | 5 | வாடு | 507 | | | **வீ** | |
| 90 | 2 | வாயுசங் | 620 | 29 | 6 | வீடுதந் | 363 |
| 30 | 9 | வாயுவடை | 368 | 67 | 6 | வீடென்ற | 524 |
| 73 | 5 | வாயுவய | 547 | 11 | 6 | வீதலிலா | 292 |
| 102 | 4 | வாரமு | 681 | | | **வெ** | |
| 105 | 8 | வாரியி | 697 | 6 | 6 | வெகுசனத் | 252 |
| 12 | 1 | வார்சா | 295 | 8 | 3 | வெகுமுந் | 267 |
| 18 | 1 | வார்முந் | 317 | 35 | 8 | வெடிக்களு | 391 |
| 26 | 7 | வாலருளில் | 352 | 27 | 9 | வெந்தழி | 356 |
| 34 | 7 | வாலெசு | 387 | | | **வே** | |
| 63 | 5 | வாழ்வென | 510 | 62 | 9 | வேட்டன் | 508 |
| 47 | 3 | வானம | 446 | 7 | 6 | வேண்டா | 260 |
| 108 | 5 | வானவர் | 710 | 55 | 10 | வேண்டே | 480 |
| | | **வி** | | 35 | 3 | வேதஞ்சைவ | 390 |
| 10 | 6 | விகார | 284 | 49 | 10 | வேதமா | 454 |
| 61 | 10 | விஞ்ஞான | 504 | 109 | 1 | வேதமீச | 713 |
| 88 | 7 | விடுதலை | 613 | 71 | 6 | வோ்மல | 539 |
| 98 | 2 | விண்ணினு | 662 | | | **வை** | |
| 91 | 1 | வித்தவொளி | 624 | 102 | 6 | வையநரர் | 682 |
| 99 | 6 | வித்தை | 667 | | | | |


பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் திருவடி வாழ்க

சுபம்

திருச்சிற்றம்பலம்